WINMEEN.COM
LEARNING LEADS TO RULING




2021 செப்டம்பர் ○○○ 2021 அக்டோபர் ○○○ 2021 நவம்பர்

2021 டிசம்பர்

செப்டம்பர் 2021

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்









1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'குன்மிங் பிரகடனம்' என்பதுடன் தொடர்புடைய நாடு எது?

அ) சீனா ☑



ஆ) ஜப்பான்

இ) அமெரிக்கா

ஈ) தென் கொரியா

✓ அண்மையில் சீனா குன்மிங் பிரகடனத்தின் 'சுழிய வரைவை' ஐநா அவையில் சமர்ப்பித்தது. இந்த பிரகடனத்தில், "சுற்றுச்சூழல் நாகரிகம்" குறித்த முதன்மை சீனப் பொதுவுடைமைக் கட்சியின் கருத்து அடங்கும். கொள்கை வகுக்கும்போது பல்லுயிர் பாதுகாப்பில் கவனம் செலுத்தவும், மனித நலத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கவும் இந்த ஆவணம் அழைப்பு விடுக்கிறது. COP 15 பல்லுயிர் பேச்சுவார்த்தை ஆனது 2021 அக்டோபரில் நடைபெறவுள்ளது.

---

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'BH வரிசை' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ) ஜவுளி

ஆ) ஆட்டோமொபைல் ☑



இ) செயற்கை நுண்ணறிவு

ஈ) நிதி சேர்க்கை

✓ வாகன உரிமையாளர், மாநிலம்விட்டு மாநிலம் மாறும்போது மீண்டும் வாகனப்பதிவு செய்வதைத் தவிர்க்க, புதிய வாகனப்பதிவில் 'BH' எனத் தொடங்கும் பதிவு வரிசையை நடுவண் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் அறிமுகம் செய்துள்ளது.

✓ இந்த அறிவிப்பின்படி **BH–BH**arat Series வாகன பதிவு வசதி, தன்னார்வ அடிப்படையில் பாதுகாப்பு பணியாளர்கள், நடுவண், மாநில அரசு ஊழியர்கள், மத்திய, மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்கு பொருந்தும். இந்தப் பதிவின்கீழ் மோட்டார் வாகன வரி கூடுதலாக இருக்கும்.

---

3. எச்சங்கத்தால் முன்மொழியப்பட்ட கரிம எல்லை வரியை (Carbon Border Tax) BRICS நாடுகள் அண்மையில் எதிர்த்தன?

அ) EU ☑



ஆ) NATO

இ) OPEC

ஈ) G20

✓ BRICS நாடுகள் அதாவது பிரேசில், ரஷ்யா, சீனா & தென்னாப்பிரிக்கா ஆகியவை ஐரோப்பிய ஒன்றியத்தால் (EU) முன்மொழியப்பட்ட கரிம எல்லை வரிக்கு எதிராக இந்தியாவுடன் ஒன்றிணைந்துள்ளன. 27 உறுப்பினர்கள்கொண்ட EU, சமீபத்தில் கரிமசெறிவுடைய பொருட்களின் இறக்குமதிக்கு, 2026 முதல் எல்லைவரி விதிக்க முடிவுசெய்தது. BRICS நாடுகள் ஒன்றிணைந்து, புதுதில்லியில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்தன.

---

4. இந்தியாவின் தலைமையின் கீழ், கீழ்காணும் எந்த ஆண்டு பன்னாட்டு தினை ஆண்டாக கொண்டாடப்படவுள்ளது?

அ) 2022

ஆ) 2023 ☑



இ) 2024

ஈ) 2025

✓ மத்திய உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், உழவர்களுக்கான தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பிரச்சாரத்தைத் தொடங்கினார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சில் (ICAR) இப்பிரச்சாரத்தை ஏற்பாடுசெய்துள்ளது. இவ்வாண்டு உழவிற்கான பட்ஜெட் ₹1.23 இலட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

✓ 2023ஆம் ஆண்டு, இந்தியாவின் தலைமையின்கீழ், பன்னாட்டு தினை ஆண்டாக கொண்டாடப்படவுள்ளது.

---

5. சிறந்த புலிகள் பாதுகாப்பு நடைமுறைகளுக்கான உலகளாவிய உயரடுக்கு குறியீட்டைப் பெற்றுள்ள முதுமலை & ஆனைமலை புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாவட்டங்கள் எவை?

அ) நீலகிரி & கோயம்புத்தூர் ☑



ஆ) நீலகிரி & திருப்பூர்

இ) திருப்பூர் & ஈரோடு

ஈ) தென்காசி & தேனி

✓ கோயம்புத்தூர் அருகே பொள்ளாச்சியில் பாலக்காட்டு கணவாயின் தெற்கேயுள்ள 4000 சகிமீ பாதுகாக்கப்பட்ட பகுதியான ஆனைமலை புலிகள் காப்பகமும் நீலகிரியில் உள்ள முதுமலை புலிகள் காப்பகமும், மேற்குத்தொடர்ச்சி மலையின் உயிரிபன்முகத்தன்மைகொண்ட இடங்க –ளாக உள்ளன. இவையிரண்டும் புலிகள் பாதுகாப்பில் உலகளாவிய உயரடுக்கு குறியீட்டைப் பெற்றுள்ளன.

✓ இது CATS'இன், புலிகளை நிர்வகிப்பதற்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் தரங்களுக்கான பாதுகாப்புக் கருவியாகும். கேரளத்தின் பரம்பிக்குளம், கர்நாடகாவின் பந்திப்பூர் மற்றும் அஸ்ஸாமின் மானஸ், கசிரங்கா மற்றும் ஒராங் உள்ளிட்ட 14 இருப்புக்கள் மட்டுமே CATS'இன்கீழ் தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் அங்கீகாரத்திற்காக இறுதி செய்யப்பட்டன. கார்பெட், ராந்தம்போர் மற்றும் பந்தவ்கர் போன்ற புகழ்பெற்ற காப்பகங்களுக்கு இந்தத் தகுதி கிடைக்கப்பெறவில்லை.

---

6. ஜெர்மனிக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

அ) மன்பிரீத் வோரா



ஆ) அஜய் பிசாரியா

இ) ஹரிஷ் பர்வதனேனி ☑

ஈ) ஜாவேத் அஷ்ரப்

✓ கடந்த 1990ஆம் ஆண்டுப் பிரிவைச் சார்ந்த இந்திய வெளியுறவு சேவை அதிகாரியான ஹரிஷ் பர்வதனேனி, ஜெர்மனிக்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது தில்லியிலுள்ள MEA தலைமையகத்தில் கூடுதல் செயலாளராக பணியாற்றி வருகிறார்.

---

7. பெண்கள் சமத்துவ நாளாக கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட் 26 ☑



ஆ) ஆகஸ்ட் 27

இ) ஆகஸ்ட் 28

ஈ) ஆகஸ்ட் 29

✓ 101ஆவது ஆண்டு பெண்கள் சமத்துவ நாளை ஐக்கிய அமெரிக்க நாடுகள் கொண்டாடுகிறது. இந்த நாள் (ஆகஸ்ட்.26), பெரும்பாலும் அமெரிக்காவில் அரசியலமைப்பு உரிமையைப்பெறும் அமெரிக்கப் பெண்களைப் போற்றுவதற்காக கொண்டாடப்படுகிறது.

✓ அமெரிக்க காங்கிரஸ், 1971ஆம் ஆண்டில் ஆக.26ஆம் தேதியை "மகளிர் சமத்துவ நாள்" என நிறுவியது. அது கடந்த 1973'இல் அங்கீகரிக்கப்பட்டது. முழு சமத்துவத்தைப் பெறுவதற்கான பெண்களின் தொடர்ச்சியான போராட்டங்கள் நோக்கிய கவனத்தை இந்த நாள் ஈர்க்கிறது.

---

8. உலக வில்வித்தை இளையோர் சாம்பியன்ஷிப்பில், இந்தியா, எத்தனை தங்கப்பதக்கங்களை வென்றது?

அ) ஒன்று

ஆ) இரண்டு

இ) மூன்று ☑

ஈ) நான்கு

✓ வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியா மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது. உலக வில்வித்தை இளைஞுயோ சாம்பியன்ஷிப்பில் இந்திய அணி 15 பதக்கங்களை வென்றது. 2021 உலக வில்வித்தை இளையோர் சாம்பியன்ஷிப், போலந்தில் உள்ள வுரோக்லாவில் நடந்தது.

✓ 15 பதக்கங்களில், இந்தியா, 'காம்பவுண்ட் கேடட்' மகளிர் & ஆடவர் & கலப்பு அணி நிகழ்வுகளில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது. இறுதிப்போட்டியில், இந்திய மகளிர் அணி, துருக்கியை 228–216 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றது.

9. நாடுகளுக்கான உலகளாவிய கொரோனா வைரஸ் கண்டுபிடிப்பு தரவரிசையில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 20

ஆ) 32 ☑

இ) 42

ஈ) 62



- ✓ ஹெல்த் இன்னோவேஷன் எக்ஸ்சேஞ்ச், UNAIDS உடன் இணைந்து ஸ்டார்ட்அப் பிளிங்க் தயாரித்த அறிக்கையின்படி, நாடுகளுக்கான உலகளாவிய கொரோனா வைரஸ் கண்டுபிடிப்பு தரவரிசையில் இந்தியா ஆறு இடங்கள் சரிந்து 32ஆவது இடத்தில் உள்ளது.
- ✓ COVID தொற்றுநோயை எதிர்கொள்ள உருவாக்கப்பட்ட புதுமையான தீர்வுகளை அடிப்படையாகக் கொண்ட உலகின் முதல் 40 நாடுகள் மற்றும் 100 நகரங்களை இந்த அறிக்கை தன்னகத்தே கொண்டுள்ளது.

10.'AREAS' என்பது எந்த மத்திய அமைச்சகத்துடன் தொடர்புடைய ஒரு முன்னெடுப்பாகும்?

அ) மின்துறை அமைச்சகம்

ஆ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) உழவு & உழவர்கள் நல அமைச்சகம்



- ✓ மாநிலங்களின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சங்கம் (AREAS) என்பது புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் முன்னெடுப்பாகும். இது கடந்த 2014ஆம் ஆண்டில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் ஒரு சங்கமாக உருவாக்கப்பட்டது. மாநிலங்களின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சங்கமானது சமீபத்தில் தனது 7ஆவது நிறுவன தினத்தை கொண்டாடியது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வெள்ளி வென்றார் மாரியப்பன்: இந்தியாவுக்கு மேலும் 2 வெண்கலம்

டோக்கியோ பாராலிம்பிக்கில் ஆடவருக்கான உயரம் தாண்டுதலில் தமிழக வீரர் மாரியப்பன் தங்கவேலு (26) வெள்ளிப்பதக்கம் வென்றார். அதேபிரிவில் களம்கண்ட மற்றொரு இந்தியரான சரத்குமார் வெண்கலம் வெல்ல, துப்பாக்கி சுடுதலில் சிங்ராஜ் அதானாவும் வெண்கலப்பதக்கம் பெற்றார். இதனால் ஒரே நாளில் இந்தியாவுக்கு மூன்று பதக்கங்கள் கிடைத்தன. இதையடுத்து டோக்கியோ பாராலிம்பிக்கில் இதுவரை இந்தியாவுக்கு கிடைத்த பதக்கங்களின் எண்ணிக்கை பத்தாக உயர்ந்து உள்ளது. இதில் 2 தங்கம், 5 வெள்ளி, 3 வெண்கலம் அடக்கம்.

உயரம் தாண்டுதல்: ஆடவருக்கான உயரம் தாண்டுதல் 'டி42' பிரிவில் மாரியப்பன் 1.86 மீட்டர் உயரம் தாண்டி 2ஆம் இடம்பிடிக்க, சரத்குமார் 1.83 மீட்டர் உயரம் தாண்டி 3ஆம் இடம்பிடித்தார். ஏற்கெனவே ரியோ பாராலிம்பிக்கில் இதே பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற மாரியப்பனுக்கு, இது தொடர்ந்து 2ஆவது பாராலிம்பிக் பதக்கமாகும். சரத்குமாருக்கு இது முதல் பாராலிம்பிக் பதக்கம்.

துப்பாக்கி சுடுதல்: ஆடவர் (பி1) 10 மீட்டர் ஏர் பிஸ்டல் எஸ்ஹெச்1'இல் இந்தியாவின் சிங்ராஜ் அதானா (39) வெண்கலப்பதக்கம் வென்றார்.

---

2. உச்சநீதிமன்றத்தில் ஒரே நாளில் 9 நீதிபதிகள் பதவியேற்பு

உச்சநீதிமன்ற வரலாற்றில் முதல்முறையாக ஒரே நாளில் ஒன்பது புதிய நீதிபதிகள் பதவியேற்றுக்கொண்டனர். உச்சநீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட பி வி நாகரத்னா, ஹிமா கோலி, பேலா எம் திரிவேதி, அபய் ஸ்ரீநிவாஸ் ஓகா, விக்ரம் நாத், ஜிதேந்திர குமார் மகேஷ்வரி, சி டி இரவிகுமார், எம் எம் சுந்தரேஷ், பி எஸ் நரசிம்மா ஆகியோர் புதுதில்லியில் பதவியேற்றுக்கொண்டனர்.

அவர்களுக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என் வி ரமணா பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். உச்சநீதிமன்றத்தின் வரலாற்றில் ஒரே நாளில் 9 புதிய நீதிபதிகள் பதவியேற்றுக் கொள்வது இதுவே முதல் முறையாகும். புதிய நீதிபதிகளில் ஒருவரான விக்ரம் நாத், 2027ஆம் ஆண்டு பிப்ரவரியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாகச் செயல்பட வாய்ப்புள்ளது. அதே ஆண்டு செப்டம்பரில் அவர் ஓய்வுபெற்றபிறகு, நீதிபதி பி வி நாகரத்னா தலைமை நீதிபதியாவார். உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதி என்ற சிறப்பையும் அவர் பெறுவார்.

அதே ஆண்டு அக்டோபரில் நீதிபதி பி வி நாகரத்னா ஓய்வுபெறுவார். அவரைத் தொடர்ந்து, நீதிபதி பி எஸ் நரசிம்மா தலைமை நீதிபதியாகச் செயல்படுவார்.

4 பெண் நீதிபதிகள்:

புதிய நீதிபதிகள் பதவியேற்புமூலமாக உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 33ஆக அதிகரித்துள்ளது. ஒரு நீதிபதி பணியிடம் காலியாக உள்ளது. பணியில் உள்ள உச்சநீதிமன்ற பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 4ஆக அதிகரித்துள்ளது. ஏற்கெனவே பணியில் உள்ள நீதிபதி இந்திரா பானர்ஜி அடுத்த ஆண்டு செப்டம்பரில் ஓய்வுபெறுவார்.

---

3. ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 20.1% பொருளாதார வளர்ச்சி

நடப்பு 2021–22ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதலாவது காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 20.1 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த நிதியாண்டின் இதேகாலாண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது வளர்ச்சி இரட்டை இலக்க மதிப்பை அடைந்துள்ளது. கடந்த 2019–20ஆம் நிதியாண்டின் முதலாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பு ₹35.66 லட்சம் கோடியாக இருந்தது.

கரோனா தொற்று பரவல் காரணமாக கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் GDP மதிப்பு 24.4 சதவீதம் வீழ்ச்சி கண்டு ₹26.95 லட்சம் கோடியாகக் குறைந்தது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் ஜிடிபி மதிப்பு ₹32.38 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதாக தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பு கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 20.1% அதிகம் என்றபோதிலும், அதற்கு முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகும்.

இதன்மூலமாக, கரோனாதொற்றுபரவலால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் இன்னும் இயல்புநிலைக்குத் திரும்பாதது உறுதியாவதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த ஏப்ரல் மத்தியில் கரோனா தொற்றின் 2ஆவது அலை பரவியதால் மாநில அரசுகள் அமல்படுத்திய பொதுமுடக்கத்தால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டதாக NSO தெரிவித்துள்ளது. கரோனா பரவல் காரணமாக, பொருளாதாரம் சார்ந்த தரவுகளைச் சேகரிப்பதில் பிரச்னைகள் இருந்ததாகவும் என்எஸ்ஓ தெரிவித்துள்ளது.

நிதிப்பற்றாக்குறை: மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை கடந்த ஜூலை இறுதி நிலவரப்படி, ₹3.21 லட்சம் கோடியாக உள்ளதாக கணக்குகள் கட்டுப்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது. இது நடப்பு நிதியாண்டுக்கான நிதிப் பற்றாக்குறை இலக்கில் 21.3 சதவீதம் ஆகும். நடப்பு நிதியாண்டின் முதல் 4 மாதங்களில் மத்திய அரசின் மொத்த வருவாய் ₹6.83 லட்சம் கோடியாகவும், செலவினம் ₹10.04 லட்சம் கோடியாகவும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. BSF, ITBP படைப்பிரிவுகளுக்கு புதிய தலைவர்கள் பொறுப்பேற்பு

எல்லைப்பாதுகாப்புப்படை (BSF) பிரிவின் டிஜியாக பங்கஜ் குமார்சிங்கும், இந்தோ திபெத்திய எல்லை போலீஸ் (ITBP) பரிவின் டிஜியாக சஞ்சய் அரோராவும் பொறுப்பேற்றுக்கொண்டர். பங்கஜ் குமார் சிங், 1998 இராஜஸ்தான் பிரிவைச் சேர்ந்தவர். இவர் நாட்டின் 63 ஆயிரம் கி.மீ. தூர பாகிஸ்தான், வங்கதேச எல்லைகளை கண்காணிக்கும் எல்லைப் பாதுகாப்புப் படைப் பிரிவின் புதிய தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

இந்தப் படையில் 2.65 லட்சம் படை வீரர்கள் உள்ளனர். 1998 தமிழக பிரிவைச் சேர்ந்த சஞ்சய் அரோரா, நாட்டின் 3,488 கிமீ தூர சீனாவுடான எல்லையைப் பாதுகாக்கும் இந்தோ திபெத்திய எல்லை போலீஸ் படையின் தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.

இதற்கு முன்பு மத்திய துணை ராணுவப் படையின் (CRPF) சிறப்பு டிஜியாக அவர் பணியாற்றிவந்தார். தற்போது, 90,000 படை வீரர்களை கொண்ட ITBP'ஐன் டிஜி பொறுப்பை சஞ்சய் அரோரா ஏற்றுள்ளார். அவரது பணிக்காலம் 2025, ஜூலையில் முடிவடைகிறது. காவல் துறையில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ள ஐபிஎஸ் அதிகாரி பங்கஜ் குமார் சிங் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

1996ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் அவர் தொடுத்த வழக்கின்மூலம் தான் உளவுத்துறை இயக்குநர், சிபிஐ இயக்குநர், வெளியுறவுத்துறை

செயலர், ரா தலைவர், உள்துறை செயலர் ஆகியோருக்கு குறைந்தது 2 ஆண்டுகள் பதவிக்காலம் வழங்கும் முறை கொண்டுவரப்பட்டது.

---

5. 'இஸ்கான்' நிறுவனர் சுவாமி பிரபுபாதா பிறந்தநாள்; ₹125 நாணயத்தை வெளியிட்டார் பிரதமர் மோடி

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை (இஸ்கான்) நிறுவிய பக்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவின் 125ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நினைவு நாணயத்தை பிரதமர் மோடி தில்லியில் வெளியிட்டார். 'ஹரே கிருஷ்ணா இயக்கம்' என்று அழைக்கப்படும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை (இஸ்கான்) சுவாமி பிரபுபாதா நிறுவினார்.

உலகம் முழுவதும் கிருஷ்ண பக்தி இயக்கத்தை பரப்பிவரும் இஸ்கான், ஸ்ரீமத் பகவத் கீதை மற்றும் இதர இலக்கிய நூல்களை 89 மொழிகளில் அமைப்பு மொழிபெயர்த்துள்ளது.

---

6. சிலம்பொலி செல்லப்பன், தொ பரமசிவன் உள்ளிட்டோர் நூல்கள் நாட்டுடைமை: அமைச்சர் தங்கம் தென்னரசு

தமிழறிஞர்கள் சிலம்பொலி சு செல்லப்பன், முனைவர் தொ பரமசிவன் உள்பட 6 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படுவதாக தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்தார்.

சட்டப்பேரவையில் தமிழ்த்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்து அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்ட அறிவிப்புகள்: தமிழறிஞர்களான சிலம்பொலி சு செல்லப்பன், முனைவர் தொ பரமசிவன், புலவர் இளங்குமரனார், முருகேசபாகவதர், சங்கரவள்ளி நாயகம், புலவர் செ இராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்ப –ட்டு, பரிவுத்தொகை வழங்கப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ₹80 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

'தீராக் காதல் திருக்கு' என்ற பெயரில் ஊடகங்கள் வாயிலாகத் திருக்கு இன்றையத் தலைமுறையினரைச் சென்றடையும் வகையில் தொலைக்காட்சிகளுடன் இணைந்தும் இணைய வடிவிலும் அசைவூட்டும் படங்கள், விநாடி–வினா, குறும்படங்கள், நடனம் போன்ற கலை வடிவங்களோடு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இதற்காக சிறப்பு நிதியாக ₹2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்ப்பரப்புரை கழகம்: அயல்நாடு மற்றும் வெளிமாநிலங்களில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க தமிழ்ப் பரப்புரைக் கழகம் உருவாக்கப்படும்.

அகரம் முதல் சிகரம் வரை எனப் பல படிநிலைகளாகப் பாடங்கள் கற்பிக்கப்பட்டு சான்றிதழ் தேர்வும் நடத்தப்படும். இதற்காக ₹1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். பள்ளி மாணவர்கள் தங்களின் தமிழ்மொழி இலக்கியத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் திறனறித் தேர்வு நடத்தி ஆண்டுதோறும் 1,500 பேர் தெரிவு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு ஊக்கத்தொகையாக ₹1,500 வழங்கப்படும்.

சங்க இலக்கிய வாழ்வியலை எடுத்துரைக்கும் வகையில் புகழ்மிக்க ஓவியர்களைக் கொண்டு ஓவியங்கள் வரையப்பட்டு, எளிய விளக்க உரையுடன் உயர்தர அச்சு நூலாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ₹15 லட்சம் ஒதுக்கப்படும். தமிழறிஞர்கள், எழுத்தாளர்களின் பிறந்தநாளன்று இலக்கியக்கூட்டங்கள் நடத்திட ₹15 லட்சமளிக்கப்படும். புகழ்பெற்ற தலைவர்கள், தமிழறிஞர்களின் ஒலி, ஒளிப்பொழிவுகள் ஆவணமாக்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் ₹25 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். சங்க இலக்கியங்கள் சந்தி பிரிக்கப்பட்டு நூல்களாக அச்சிட் –டுக் குறைந்த விலையில் வெளியிட ₹10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழில் பெயரின் முதல் எழுத்து: தமிழில் பெயர் எழுதும்போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதும் நடைமுறையைப் பள்ளி, கல்லூரி மற்றும் அரசு ஆவணங்களில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களும் பொது பயன்பாடுகளில் இம்முறையைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும். வணிக நிறுவனங்களில் வழங்கப்படும் பற்றுச்சீட்டுகள் தமிழிலும் அச்சிட்டு வழங்கப்படவும், குடியிருப்பு அடுக்ககங்கள் மற்றும் வணிக வளாகங்களுக்குத் தமிழில் பெயர்சூட்ட ஊக்குவிக்கப்படவும் வழிமுறைகள் உருவாக்கப்படும் என்றார் அமைச்சர் தங்கம் தென்னரசு.

---

7. அகரத்தில் 13 அடுக்கு உறை கிணறு கண்டெடுப்பு

சிவகங்கை மாவட்டம், அகரத்தில் நடைபெற்று வரும் ஏழாம்கட்ட அகழாய்வில் 13 அடுக்கு உறை கிணறு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தமிழக தொல்லியல் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

கீழடி, அகரம், கொந்தகை, மணலூர் ஆகிய பகுதிகளில் ஏழாம்கட்ட அகழாய்வுப்பணிகள் கடந்த பிப்ரவரி மாதம் முதல் நடந்து வருகின்றன. இதில், சுடுமண் முத்திரை, காதணிகள், தந்தத்தினாலான பகடை, முதுமக்கள் தாழி, உருவ பொம்மை, கருப்பு, சிவப்பு பானை ஓடுகள், தமிழி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், பழங்கால மக்கள் பயன்படுத்திய புழங்குப் பொருள்கள் உள்ளிட்ட ஏராளமான தொல் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

---

1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'இந்தியா SIZE' ஆய்வுடன் தொடர்புடைய அமைச்சகம் எது?

அ) ஜவுளி அமைச்சகம் ☑

ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) பாதுகாப்பு அமைச்சகம்

✓ புது தில்லியில் அமைந்துள்ள தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப நிறுவனமானது (NIFT), நடுவண் ஜவுளி அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு நிறுவனம் ஆகும். அந்நிறுவனம், "இந்தியா SIZE" என்ற ஓர் ஆய்வை மேற்கொள்கிறது.

✓ இது, இந்திய மக்களுக்கான ஒரு விரிவான உடலளவு விளக்கப்படத்தை உருவாக்கும் ஒரு விரிவான உடற்கூற்றளவைசார் ஆய்வாகும். இந்தத் தரவுகளின்மூலம் இந்திய மக்களுக்கேற்ற பணிச்சூழலியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகளை உருவாக்க முடியும்.

---

2. பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனமான 'AFD'இன் ஆதரவுடன், பின்வரும் எந்த இந்திய மாநிலம், பல்லுயிர் பாதுகாப்புத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது?

அ) கர்நாடகா

ஆ) இராஜஸ்தான் ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கோவா

✓ இராஜஸ்தான் மாநிலத்தின் கிழக்கு மாவட்டங்களில் பிரெஞ்சு வளர்ச்சி நிறுவனமான Agence Francaise de Developpement (AFD) ஆதரவுடன் பல்லுயிர் பாதுகாப்புத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இராஜஸ்தான் வனவியல் மற்றும் உயிரிமேம்பாட்டுத் திட்டமானது ஏற்கனவே மாநில அரசின் ஒப்புதலைப் பெற்றிருந்தது. ஏறக்குறைய 1200 சுய-உதவிக் குழுக்களின் உதவியுடன், கிராமங்களில் சூழல்-சுற்றுலா மற்றும் பிற நிலையான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் ஒருபகுதியாக பரத்பூரில் ஒரு பல்லுயிர் பூங்காவும் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

---

3. இந்தியாவின் முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலை அமைக்கப்பட உள்ள இடம் எது?

அ) மும்பை

ஆ) சென்னை

இ) மதுரா ☑



ஈ) டிக்பாய்

✓ இந்திய அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனமும் எண்ணெய் நிறுவனமுமான IOCL, நாட்டின் முதல் பசுமை ஹைட்ரஜன் ஆலையை மதுராவில் அமைக்கவுள்ளது. மதுராவின் தாஜ் டிரபீசியம் மண்டலத்திற்கு அருகாமையில் இருப்பதால், அவ்விடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், நாட்டில் எண்ணெய் & எரிவாயு துறையில் பசுமை கைட்ரஜனை அறிமுகப்படுத்தவுள்ளது.

---

4. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற சத்தியன் ஞானசேகரனுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) டென்னிஸ்

ஆ) டேபிள் டென்னிஸ் ☑



இ) பூப்பந்து

ஈ) குத்துச்சண்டை

✓ ITTF செக் சர்வதேச ஓப்பனில், ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வெல்ல இந்திய டேபிள் டென்னிஸ் வீரர் சத்தியன் ஞானசேகரன் 4-0 என்ற புள்ளிக் கணக்கில் வெற்றிபெற்றார். 28 வயதான அவர், உலக தர வரிசையில் 39ஆவது இடத்தில் உள்ளார். கடந்த வாரம், புடாபெஸ்டில் நடந்த WTT'இல், கலப்பு இரட்டையர் பட்டத்தை வெல்வதற்காக அவர் மணிகா பத்ராவுடன் இணைந்து விளையாடினார்.

---

5. மலபார்-21 கடற்படை பயிற்சியில் எத்தனை நாடுகள் பங்கேற்கின்றன?

அ) 2

ஆ) 4 ☑

இ) 6



ஈ) 8

✓ இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் & ஆஸ்திரேலியாவின் கடற்படைகள் (QUAD) மலபார்-21 என்ற கடற்படைப் பயிற்சிகளில் பங்கேற்கின்றன. இந்த நான்கு நாடுகளும் கடந்த 2020 முதல் மலபார் பயிற்சியின் ஒரு பகுதியாக இருந்து வருகின்றன. இந்த ஆண்டின் மலபார் பயிற்சி பசிபிக் தீவான குவாமில் நடைபெறுகிறது. கடற்படைகளுக்கிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும், கடல்சார் பாதுகாப்பில் பொதுவான புரிதலை உருவாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

6. மொராக்கோவுடனான தூதரக உறவை துண்டித்துள்ள நாடு எது?

அ) அல்ஜீரியா ☑



ஆ) இந்தியா

இ) பிரான்ஸ்

ஈ) பாகிஸ்தான்

✓ அல்ஜீரியாவின் வெளியுறவு அமைச்சர் ராம்தேன் லாமாம்ரா தனது நாடு பகைமை நடவடிக்கைகளால் மொராக்கோவுடனான அரசியல் ரீதியான உறவுகளை முறித்துக்கொண்டதாக அறிவித்தார்.

✓ வட ஆப்பிரிக்க போட்டியாளர்களிடையே பலமாதங்களாக எழுந்த பதற்றத்தைத்தொடர்ந்து இம்முடிவெடுக்கப்பட்டுள்ளது. அல்ஜீரியாவிற்கும் மொராக்கோவிற்கும் இடையிலான எல்லை, 1994ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டுள்ளது. மொராக்கோ தனது நாட்டின் ஒருபகுதியாகக் கருதும் மேலை சகாராவுக்கு விடுதலைக்கோரும் பொலிசாரியோ இயக்கத்தை அல்ஜீரியா ஆதரித்து வருகிறது.

---

7. இந்திய கடலோர காவல்படையின் அடிப்படையில், 'விக்ரஹா' என்றால் என்ன?

அ) கடலோர ரோந்துக்கப்பல் ☑



ஆ) குரூஸ் ஏவுகணை

இ) கடலோர ஹெலிகாப்டர்

ஈ) கடலோர டிரோன்

✓ கடல் ரோந்துக் கப்பல்கள் வரிசையில் ஏழாவதான இந்திய கடலோரக் காவல்படை கப்பலான 'விக்ரஹா'வை ஆகஸ்ட்.28 அன்று இந்திய கடலோரக் காவல்படையில் மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் இணைத்து வைத்தார்.

✓ ஆந்திர பிரதேச மாநிலத்தில் உள்ள விசாகப்பட்டிணத்தை மையமாகக் கொண்டு செயல்படவிருக்கும் இந்தக்கப்பல், கடலோரக்காவல் படையின் கிழக்கு கடல்பகுதியில் பணியாற்றும். லார்சன் & டூப்ரோ ஷிப் பில்டிங் லிமிடெட் நிறுவனத்தால் இக்கப்பல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

---

8. காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான குழுவின் தலைமையிடம் உள்ள இடம் எது?

அ) சுவிச்சர்லாந்து ☑

ஆ) இந்தியா

இ) நியூயார்க்

ஈ) ஜெர்மனி

✓ காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கிடையிலான குழு (IPCC) சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்ட ஐநா அவையின் ஓர் அமைப்பாகும். பருவநிலை மாற்றம் குறித்த ஆறாவது மதிப்பீட்டு அறிக்கை (AR6) ஐபிசிசியால் "AR6 காலநிலை மாற்றம் 2021: இயற்பியல் அறிவியல் அடிப்படை" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டு உள்ளது. காலநிலை அமைப்புகள் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த சமீபத்திய கண்டுபிடிப்புகளை இந்த அறிக்கை அளிக்கிறது. உலக வெப்ப நிலை அடுத்த 2 தசாப்தங்களில் 1.5 டிகிரியை தாண்டும் என இந்த அறிக்கை கூறுகிறது.

9. எந்த இந்திய மாநிலத்தின் 17ஆவது ஆளுநராக இல கணேசன் பதவியேற்றார்?

அ) தெலுங்கானா

ஆ) மணிப்பூர் ☑

இ) அஸ்ஸாம்

ஈ) மேற்கு வங்கம்



✓ முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் இல கணேசன், மணிப்பூர் மாநிலத்தின் 17ஆவது ஆளுநராக இம்பாலில் பதவியேற்றார். மணிப்பூர் உயர்நீதிமன்ற தலைமைநீதிபதி பிவி சஞ்சய் குமார், இல கணேசனுக்கு பதவிப்பிரமாணமும் இரகசியக்காப்புப்பிரமாணமும் செய்துவைத்தார்.

---

10. எந்த மாநிலத்தில் கடல்சார் ஆய்வுகள் குறித்த புதிய திறன் நிறுவனத்தை அமைக்கவுள்ளதாக நடுவண் கப்பல் போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது?

அ) உத்தர பிரதேசம்

ஆ) இமாச்சல பிரதேசம்

இ) கேரளா

ஈ) அஸ்ஸாம் ☑



✓ மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால், சென்னை இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின்கீழ் அஸ்ஸாமில் உள்ள கௌகாத்தியில் கடல்சார் ஆய்வுக்கான திறன் நிறுவனத்தை நிறுவுவதாக அறிவித்தார்.

✓ கௌகாத்தியில் உள்ள பாண்டுவில் ஒரு புதிய 'கப்பல் பழுதுபார்க்கும் வசதியை' அமைப்பதற்காக இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையம் மற்றும் ஹூக்ளி கொச்சின் கப்பல் கட்டும் நிறுவனத்துக்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

✓ இதற்கான தொழில்நுட்ப ஆதரவை ஐஐடி மெட்ராஸ் வழங்கும். 2023 ஆகஸ்டுக்குள் இது முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்லிப்வே எனப்படும் இந்த வசதி அஸ்ஸாம் மாநில அரசால் வழங்கப்பட்ட 3.67 ஏக்கர் நிலத்தில் உருவாக்கப்படவுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. குடிசை மாற்று வாரியத்தின் பெயர் மாற்றம்:

குடிசைப்பகுதி மாற்று வாரியமானது இனி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமாக பெயர்மாற்றம் செய்யப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் குடிசை மாற்று வாரியம் 1970ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

---

2. தமிழ்வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை: வழிகாட்டுதல்களுடன் அரசாணை வெளியீடு

தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்குவதற்கான வழிகாட்டுதல்களை அரசு வெளியிட்டுள்ளது. இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது: பள்ளிப்படிப்பு, பட்டயப்படிப்பு, பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு என அனைத்தையும் முழுவதுமாக தமிழ் வழியில் படித்திருக்க வேண்டும். இதர மொழிகளை பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று, தேர்வுகளை மட்டும் தமிழில் எழுதியவர்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமை கிடையாது.

ஒன்றாம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை பள்ளிக்குச் செல்லாமல் நேரடியாக பத்தாம் வகுப்பு தேர்வினை எழுதி தேர்ச்சிபெற்ற தனித் தேர்வர்கள் மற்றும் பிற மாநிலங்களில் தமிழ் அல்லாமல் இதர மொழியினை பயிற்றுமொழியாக கொண்டு பயின்று பின்பு இந்த மாநிலத்தில் நேரடியாகச் சேரும் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்புகள் வரை தமிழ் வழியில் பயின்றவர்கள் இந்த முன்னுரிமைக்கு தகுதியுடையவர்கள் அல்லர்.

சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை சரிபார்த்த பின்னரே 20 சதவீத இடஒதுக்கீட்டின்கீழ் பணிநியமனம் செய்யப்படுவர். தமிழ் வழியில் கல்வி பயின்றற்கான சான்றிதழ்களில், மாணவர்களின் பெயர், பயின்ற பள்ளி, கல்லூரி, கல்வி நிறுவனங்களின் பெயர், முகவரி, வகுப்புகள், சான்றிதழ் வழங்கிய அதிகாரி ஆகிய விவரங்கள் அடங்கிய விரைவு தகவல் குறியீட்டினை (QR) இடம்பெறச்செய்வதுடன் அச்சான்றிதழ்களை இ-சேவை மையங்கள்மூலம் வழங்குவதற்கு பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகள் உரிய ஆணைகளை வெளியிடும்.

தமிழ் இலக்கியத்தில் கல்வித் தகுதித் தகுதி பெற்றவர்களை மட்டுமே பள்ளி மற்றும் கல்லூரிகளில் தமிழ் பாடத்துக்கான ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். தமிழ் பாடத்திலும் மாறுபட்ட வேறு ஒரு பாடத்திலும் பட்டம் பெற்றவர்களை தமிழ் ஆசிரியர்களாக நியமனம் செய்யக்கூடாது என்பதற்கான திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகள் நடவடிக்கை மேற்கொள்ளும்.

மேற்கண்ட சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள 20% முன்னுரிமை இட ஒதுக்கீடானது நேரடி பணி நியமனத்துக்கான ஒவ்வொரு தெரிவு நிலையிலும் (முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத்தேர்வு மற்றும் இதரநிலைகள்) பதவி வாரியாக பின்பற்றப்பட வேண்டும் என தலைமைச்செயலாளர் வெ இறையன்பு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. ஓராண்டில் 3,208 குழந்தைத் திருமணங்கள் நிறுத்தம்

தமிழ்நாட்டில் ஓராண்டில் மட்டும் 3,208 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக சமூகநலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டில் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு ஜூலை வரையில் 16,281 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த 2020ஆம் ஆண்டில் மட்டும் 3,208 குழந்தைத் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. குழந்தைத் திருமணத்தில் இருந்து மீட்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில், கடந்த நிதியாண்டில் 1,021 பெண் குழந்தைகளுக்கு மாதம் தலா ஆயிரம் ரூபாய் வீதம் மூன்று மாதங்கள் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

---

4. ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவின் தலைமைப் பொறுப்பு நிறைவு

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியாவின் தலைமைப் பொறுப்பு நிறைவடைந்துள்ளது. இதில், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட சில சர்வதேச விவகாரங்களில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் ஆகஸ்ட் மாதத்துக்கான தலைமைப் பொறுப்பை அந்த மாதம் 1ஆம் தேதி இந்தியா ஏற்றது. அதில், கடல்சார் பாதுகாப்பு, ஐநா அமைதிகாப்புப் படை, பயங்கரவாத எதிர்ப்பு ஆகிய தலைப்புகளில் முக்கியக் கூட்டங்களை இந்தியா நடத்தியது. இந்தியா தலைமையிலான கடைசிக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

வெளியுறவுத் துறைச் செயலர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், 3 முக்கிய தீர்மானங்களுக்கான நீட்டிப்புக்கும் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், லெபனான், மாலி, சோமாலியா ஆகிய நாடுகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஐநா அளித்து வரும் ஆதரவை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பான தீர்மானத்தில், ஆப்கானிஸ்தான் பிராந்தியமானது மற்ற நாடுகளை அச்சுறுத்துவதற்கோ, பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் அளிக்கவோ, பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி வழங்கவோ பயன்படுத்தப்படக் கூடாது.

ஆப்கானிஸ்தான் மக்கள் எந்நேரத்திலும் நாட்டைவிட்டு வெளியேறலாம் என்றும், அவர்களது பயணம் தடுக்கப்படமாட்டாது என்றும் தலிபான்கள் ஆகஸ்ட் 27ஆம் தேதி உறுதியளித்துள்ளனர். வாக்குறுதிகள் அனைத்தையும் தலிபான்கள் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட 13 நாடுகள் ஆதரவளித்தன. பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, ரஷியா ஆகியவை தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில், இந்தியா கடந்த ஜனவரி 1ஆம் தேதிமுதல் தற்காலிக உறுப்பினராக இருந்துவருகிறது. மொத்தம் 15 உறுப்பினர்க-ளைக் கொண்ட இந்தக் கவுன்சிலில், நிரந்தர உறுப்பினர்களான அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகளுடன் இந்தியா உள்ளிட்ட 10 நாடுகள் தற்காலிக உறுப்பினர்களாக உள்ளன.

இந்தியாவின் இரண்டு ஆண்டு தற்காலிக உறுப்பினர் பதவி, வரும் 2022ஆம் ஆண்டில் நிறைவடையும்.

---

5. லடாக் யூனியன் பிரதேச விலங்காக பனிச் சிறுத்தை அறிவிப்பு

லடாக் யூனியன் பிரதேச விலங்காக பனிச்சிறுத்தை, பறவையாக கருப்புக்கழுத்து கொக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை அந்த யூனியன் பிரதேச அரசு புதன்கிழமை வெளியிட்டது.

ஜம்மு-காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு கடந்த 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரத்து செய்தது. அந்த மாநிலத்தையும் ஜம்மு-காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாக மத்திய அரசு பிரித்தது. இந்த நிலையில், லடாக் யூனியன் பிரதேசத்துக்கான விலங்கு மற்றும் பறவை அறிவிக்கப்பட்டுள்ளன.

யூனியன் பிரதேசத்தின் வனம், சுற்றுச்சூழல் துறை தலைமைச்செயலர் பவண் கோத்வால் இது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார்.

முன்பு ஜம்மு-காஷ்மீர் மாநிலமாக இருந்தபோது மாநில விலங்காக காஷ்மீர் மான், பறவையாக கருப்புக் கழுத்து கொக்கு இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அந்த மாநிலம் இப்போது இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டதையடுத்து, தனக்கான விலங்கு மற்றும் பறவையை லடாக் யூனியன் பிரதேச நிர்'வாகம் அறிவித்துள்ளது.

இந்த விலங்கும், பறவையும் அரிய வகையைச்சேர்ந்தவையாகும். இதில் காஷ்மீர் மான், காஷ்மீர் பகுதியில் மட்டுமே காணப்படுகிறது. கருப்புக் கழுத்து கொக்கு கிழக்கு லடாக்கில் அதிகம் உள்ளது. பனிச்சிறுத்தைகள் லடாக் பகுதியில் 200 முதல் 300 வரையிலான எண்ணிக்கையில் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

---

6. ரஷியாவில் கூட்டு ராணுவப் பயிற்சி: இந்தியா பங்கேற்பு

ரஷியாவில் 17 நாடுகள் இணைந்து மேற்கொள்ளவுள்ள கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்தியா பங்கேற்கவுள்ளது. ரஷியாவில் உள்ள நீஸ்நி நகரில் செப்டம்பர் 3 முதல் 16ஆம் தேதி வரை 'சபாட்' கூட்டு ராணுவப் பயிற்சி நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில் இந்தியா, ரஷியா, சீனா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மியான்மர், மலேசியா, மங்கோலியா, ஆர்மீனியா, செர்பியா உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கவுள்ளன.

இந்தக் கூட்டுப் பயிற்சியில் இந்திய இராணுவ வீரர்கள் சுமார் 200 பேர் பங்கேற்கவுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் நாகா படைப்பிரி-வைச் சேர்ந்தவர்கள். இப்பயிற்சி பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளி-ல் கவனம் செலுத்தும். இதில் பங்கேற்கும் நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உறவையும், அவை ஒன்றிணைந்து செயல்படுவதையும் மேம்படுத்துவதுதான் இந்தப் பயிற்சியின் நோக்கம்.

---

1. NABARD'இன் முன்னெடுப்பான 'மை பேட் மை ரைட்' திட்டம் தொடங்கப்பட்ட மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) திரிபுரா ☑

இ) குஜராத்

ஈ) உத்தர பிரதேசம்



✓ மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திரிபுராவில் 'மை பேட் மை ரைட்' திட்டத்தை தொடங்கிவைத்தார். இந்தத் திட்டம் நபார்டு மற்றும் NAB அறக்கட்டளையின் ஒரு முன்னெடுப்பாகும்.

✓ கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு மானியங்கள், ஊதிய ஆதரவு மற்றும் உபகரணங்கள்மூலம் சிறந்த வாழ்வாதாரம் மற்றும் மாதவிடாய் சுகாதாரத்தை வழங்குதல் இதன் நோக்கமாகும். இம்முன்முயற்சியின் கீழ், ஒரு சானிட்டரி பேட் தயாரிக்கும் இயந்திரம், இரண்டு மாதத்திற்கு தேவையான மூலப்பொருட்கள், 50 நாட்களுக்கு ஊதியம், பேக்கேஜிங் பொருட்கள் மற்றும் 3 கட்டங்களாக ஐந்து நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. கிராமப்புற பெண்களிடையே மாதவிடாய் நலத்தை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

2. 'மேரா வதன் மேரா சமன்' என்பது எந்த மத்திய அமைச்சகத்தால் நடத்தப்படும் ஒரு திட்டமாகும்?

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஆ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

இ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ☑

ஈ) பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

✓ இந்திய விடுதலையின் 75 ஆண்டுகளைக் கொண்டாடும் 'அம்ரித் மகோத்சவத்தின்' ஒருபகுதியாக, புது தில்லியில், 'மேரா வதன் மேரா சமன்' முஷைராவை சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சியின்போது, நாட்டின் புகழ்பெற்ற கவிஞர்கள் தங்கள் கவிதை மற்றும் ஈரடிச்செய்யுள்களை வாசித்தனர். இந்நிகழ்ச்சிகளில், புகழ்பெற்ற மற்றும் வளர்ந்துவரும் கவிஞர்கள் "ஏக் பாரத்– ஷ்ரேஷ்தா பாரத்" குறித்த செய்தியை வழங்குவார்கள்.

---

3. 2021 ஆகஸ்ட் நிலவரப்படி, பிரதமர் ஜன் தன் யோஜனாவின்கீழ் உள்ள மொத்த வங்கிக்கணக்குகளின் எண்ணிக்கை என்ன?

அ) 32 கோடி

ஆ) 43 கோடி ☑

இ) 56 கோடி

ஈ) 67 கோடி

✓ பிரதமர் ஜன் தன் யோஜனாவின்கீழ் உள்ள மொத்த வங்கிக்கணக்குக –ளின் எண்ணிக்கை 2021 ஆகஸ்ட் மாத நிலவரப்படி 43 கோடியாக அதிகரித்துள்ளன. நிதி அமைச்சக தரவுகளின்படி, இந்தக் கணக்குகளில் உள்ள மொத்த வைப்புத்தொகையானது ₹1.46 லட்சம் கோடிக்கு மேல் உள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவடைந்து உள்ளது. 2014 ஆக.15 அன்று சுதந்திர தின உரையில், பிரதமர் மோடி அவர்களால் அறிவிக்கப்பட்ட இத்திட்டம், ஆக.28 அன்று தொடங்கப்பட்டது.

---

4. 'SACRED' என்பது முன்மொழியப்பட்ட வேலைவாய்ப்பகத்தின் பெயராகும். இது, பின்வரும் எந்தப் பிரிவு மக்களை குறிவைக்கிறது?

அ) திருநங்கைகள்

ஆ) மூத்த குடிமக்கள் ☑

இ) மாற்றுத்திறனாளி

ஈ) மத சிறுபான்மையினர்



✓ 'SACRED' என்ற முன்மொழியப்பட்ட வலைத்தளம், 'Senior Able Citizens for Re-Employment in Dignity' என்பதன் சுருக்கமாகும். மத்திய சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம், இதனை செயல்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்கிறது. இந்தப்பரிமாற்றகத்தின்மூலம், வேலைதேடும் மூத்த குடிமக்கள், அவர்களுக்குத் தேவையான பணிகளை அணுக ஒரு தளத்தைப்பெறுவார்கள். இதனை அமைப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைச்சர்களுக்கிடையிலான குழு, இதனைச் செயல்படுத்த ரூபாய் பத்து கோடியை அங்கீகரித்துள்ளது.

5. சமீபத்தில் மத்திய கிழக்கு பிராந்திய மாநாட்டை நடத்திய நாடு எது?

அ) ஐக்கிய அரபு அமீரகம்

ஆ) ஈரான்

இ) ஈராக் ☑

ஈ) பஹ்ரைன்



✓ ஈராக் சமீபத்தில் மத்திய கிழக்கு பிராந்திய மாநாட்டை நடத்தியது; இது பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பிரான்ஸ் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இக்கூட்டத்திற்கு ஈராக், சௌதி அரேபியாவுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின்போது, பிராந்திய தண்ணீர் நெருக்கடி, யேமனில் போர் மற்றும் லெபனானின் பொருளாதார நிலைமைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. பிராந்தியத்தில் ஈராக் மத்தியஸ்தம் வகிப்பதால் இச்சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

---

6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற S P சேதுராமன் சார்ந்த விளையாட்டு எது?

அ) மட்டைப்பந்து

ஆ) ஹாக்கி

இ) செஸ் ☑

ஈ) டென்னிஸ்



✓ இந்திய கிராண்ட்மாஸ்டர் S P சேதுராமன் பார்சிலோனா ஓப்பன் செஸ் போட்டி பட்டத்தை வென்றார். அதே நேரத்தில் கார்த்திகேயன் முரளி மூன்றாம் இடத்தைப் பிடித்தார். 9 சுற்றுகளில் 7.5 புள்ளிகளைச் சேர்த்த சேதுராமன் சிறந்த டை-பிரேக் மதிப்பெண்ணின் அடிப்படையில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். ரஷ்யாவின் டேனியல் யுபாவும் இதே புள்ளிகளுடன் முடித்தார். ஒன்பது சுற்றுகளில் தோல்வியடையாமல், 6 போட்டிகளில் வென்று மூன்று போட்டிகளில் டிரா செய்தார் சேதுராமன்.

7.நார்தன் நிலக்கரி வயல்கள் நிறுவனத்தின் (NCL) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) ஜார்க்கண்ட்

ஆ) மத்திய பிரதேசம் ☑

இ) குஜராத்

ஈ) ஒடிஸா

✓ அரசுக்குச்சொந்தமான மினிரத்னா பொதுத்துறை நிறுவனமான நார்தன் நிலக்கரி வயல்கள் நிறுவனமானது ₹3.5 கோடி மதிப்பில் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளது. இது இந்திய நிலக்கரி நிறுவனத்தின் துணைநிறுவனமாகும்.

✓ இந்த நிறுவனத்தின் தலைமையகம் மத்திய பிரதேச மாநிலத்தின் சிங்ரௌலியில் உள்ளது. நிறுவனத்தின் செயல்பாட்டு பகுதிகளிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள 500 இளையோருக்கு பயிற்சி அளிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இதன்கீழ் இளையோருக்கு நெகிழிப் பொறியியல் வர்த்தகத் துறையில் பயிற்சியளிக்கப்படும், ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ₹70,000 செலவாகும்.

---

8. அண்மைய போர்ப்ஸ் இந்தியா அறிக்கையின்படி, உலகிலேயே பொது இடங்களில் அதிக CCTV கேமராக்களைக் கொண்டுள்ள நகரம் எது?

அ) லண்டன்

ஆ) புது தில்லி ☑

இ) மெல்போர்ன்

ஈ) சென்னை



✓ உலகின் மிக அதிகமாக கண்காணிக்கப்பட்ட நகரங்கள் குறித்த போர்ப்ஸ் இந்தியாவின் சமீபத்திய அறிக்கையின்படி, தில்லி, ஒரு சதுர மைலுக்கு 1,826.6 CCTV கேமராக்களுடன் முதலிடத்தில் உள்ளது.

✓ தில்லிக்கு அடுத்தபடியாக இலண்டனில் 1,138 CCTV கேமராக்கள் உள்ளன. 609.9 சிசிடிவி கேமராக்களுடன் சென்னை மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்த அறிக்கையின்படி, மும்பை, ஒரு சதுர மைலுக்கு 157.4 CCTV கேமராக்களுடன் 18ஆவது இடத்தில் உள்ளது.

இந்த அறிக்கையில், முதல் 20 நகரங்களில், மூன்று இந்திய நகரங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

---

9. இராஜீவ் காந்தி கிசான் நியாய் யோஜனா என்பது எந்த இந்திய மாநிலத்தின் முயற்சியாகும்?

அ) தெலுங்கானா

ஆ) சத்தீஸ்கர் ☑

இ) அஸ்ஸாம்

ஈ) மேற்கு வங்கம்

✓ இராஜீவ் காந்தி கிசான் நியாய் யோஜனா (RGKNY) என்பது சத்தீஸ்கர் மாநிலத்தின் ஒரு முதன்மையான திட்டமாகும். RGKNY இன்கீழ், பயிர் உற்பத்திக்கு, மாநில அரசு, அதன் உழவர்களுக்கு உள்ளீட்டு உதவியை வழங்குகிறது. தற்போதைய கரீப் பருவத்தில் விதைக்கப்பட்ட பயிர்கள், வறட்சிபோன்ற சூழ்நிலைகளால் அழிவுக்குள்ளானால், ஓர் ஏக்கருக்கு ₹9,000 நிதியுதவி வழங்கப்படும்.

---

10. அண்மையில் காலமான புத்ததேவ் குஹா சார்ந்த துறை எது?

அ) விளையாட்டு வீரர்



ஆ) எழுத்தாளர் ☑

இ) அரசியல்வாதி

ஈ) தொழிலதிபர்

✓ மதுக்கரி உட்பட பல பிரபலமான புத்தகங்களை எழுதிய பிரபல வங்காள எழுத்தாளர் புத்ததேவ் குகா அண்மையில் காலமானார். அவர் தனது 85ஆம் வயதில் காலமானார். ஆனந்த புரஸ்கர் மற்றும் ஷரத் புரஸ்கர் உட்பட பல விருதுகளை அவர் வென்றுள்ளார். வங்காள இலக்கியத்தில் 'ரிவு மற்றும் ரிஜுடா' என்ற 2 பிரபலமான கற்பனை கதாபாத்திரங்களை உருவாக்கியவராவார் இவர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சென்னை அருகே சித்தமருத்துவப்பல்கலைக்கழகம்: அமைச்சர் மா சுப்பிரமணியன்

இந்தியாவிலேயே முதன்முறையாக சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் மா சுப்பிரமணியன் வெளியிட்ட அறிவிப்புகள்:

தமிழகத்தின் பழமையான மருத்துவ முறையான சித்த மருத்துவத்தைப் போற்றும் வகையில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சித்த மருத்துவத்துக்கு என தனிப்பல்கலைக்கழகம் (இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி, யோகா, இயற்கை மருத்துவம் உள்பட) சென்னைக்கு அருகில் ஏற்படுத்தப்படும்.

டாம்கால் நிறுவனம் உற்பத்தி செய்யும் சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருந்துகள் மக்களுக்கு எளிதாகக் கிடைக்கும் வகையில் தமிழக அரசின் கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக விற்பனை செய்யப்படும்.

முதியோர் நலனுக்காக நிறைவு வாழ்வு மையம் ₹3.25 கோடி செலவில் 100 சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தப்படும். சித்தமருத்துவத்தின் சிறப்பு சிகிச்சை முறையான காயகல்ப மருந்துகள் ஒற்றடம், நீராவிக் குளியல், தொக்கணம் நசியம் (ஆயில் மசாஜ்), திருமூலர் பிரணாயாமம், சித்தர் யோகம் போன்ற சிகிச்சைகள் இந்த முகாமில் அளிக்கப்படும். 120 சித்த, ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி, யோகா மற்றும் இயற்கை மருத்துவ மருந்தகங்கள் சுகாதார நலவாழ்வு மையங்களாக ₹32 கோடி செலவில் தரமுயர்த்தப்படும் என்றார்.

---

2. ₹218 கோடியில் நான்கு புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படும்: அமைச்சர் தா மோ அன்பரசன்

தமிழகத்தில் 4 இடங்களில் ₹218 கோடியில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் என்று ஊரகத் தொழில்துறை அமைச்சர் தா மோ அன்பரசன் அறிவித்தார். சட்டப்பேரவையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் தா மோ அன்பரசன் வெளியிட்ட அறிவிப்புகள்: சிட்கோ மூலம் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுத்திட திருச்சி மணப்பாறை, திருவள்ளூர் காவேரிராஜபுரம், செங்கல்பட்டு கொடூர், மதுரை சக்கிமங்கலம் ஆகிய 4 இடங்களில் மொத்தம் 394 ஏக்கர் பரப்பளவில் ₹218 கோடி மொத்த திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். இதன்மூலம் மொத்தம் சுமார் 7 ஆயிரம் நபர்கள் வேலைவாய்ப்பினை பெறுவர்.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள 10 கூட்டுறவு தேயிலைத்தொழிற்சாலைகள் நபார்டு வங்கியின் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கடன் உதவியுடன் ₹50 கோடியில் நவீனமயமாக்கப்படும்.

சிற்பப்பூங்கா: சிட்கோமூலம் செங்கல்பட்டு மாவட்டம் கடம்பாடியில் 19 ஏக்கரில் ₹23 கோடி திட்ட மதிப்பில் சிற்பக்கலைஞர்களின் மேம்பாட்டுக் –காக சிற்பக்கலைஞர் தொழிற்பூங்கா சுமார் 100 சிற்பக்கலைஞர்கள் மற்றும் இதர 1000 நபர்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்படும்.

கோயம்புத்தூர் சொலவம்பாளையம் கிராமத்தில் 42.42 ஏக்கரில் ₹18 கோடி திட்ட மதிப்பில் ₹9 கோடி தமிழக அரசு மானியத்துடன் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன்மூலம் சுமார் 1000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர். மாநிலத்தில் நலிவுற்று வரும் பாரம்பரிய குறு மற்றும் சிறு தொழில்களான உப்பு உற்பத்தி, வெள்ளிக் கொலுசு, வெள்ளி விளக்கு தயாரித்தல், பித்தளைப் பொருள்கள் மற்றும் பாத்திரப் பொருள்கள் உற்பத்தி, பூட்டு உற்பத்தி மற்றும் பட்டுசார்ந்த தொழில்கள் சிறப்புத்தொழில் வகையின் கீழ் கொண்டு வரப்பட்டு சிறப்பு முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

சேலம் கிழங்கு மாவு மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கத்தில் தற்போது உள்ள 4 கிடங்குகளில் ஏற்றி இறக்கும் பணிகளை எளிதாகக் கையாளுவதற்கு 1.30 லட்சம் சதுர அடி பரப்பளவில் கன்வேயா', சரக்கு மின்தூக்கி போன்றவற்றைப் பொருத்தி இயந்திரமயமாக்கல் மற்றும் விரிவுபடுத்துதல் பணிகள் ₹45 கோடியில் மேற்கொள்ளப்படும். மேலும், கிடங்குகளின் கொள்ளளவை அதிகமாக்கிட சுமார் 1.07 லட்சம் சதுர அடியில் புதிய சேமிப்புக் கிடங்கு ₹40 கோடி செலவில் கட்டுவற்கு பணிகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

---

3. பசுமைத் திட்டங்களில் முதலீடு: இந்தியா–பிரிட்டன் ஒப்பந்தம்

இந்தியாவின் பசுமைத் திட்டங்களில் 120 கோடி டாலர் (சுமார் ₹8,760 கோடி) முதலீடு செய்வதற்கான ஒப்பந்தம் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான 11ஆவது பொருளாதார மற்றும் நிதிப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

காணொலி முறையில் நடந்த இந்தப் பேச்சுவார்த்தையில், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் பிரிட்டன் நிதியமைச்சர் ரிஷி சுனக்கும் பங்கேற்றனர். அப்போது, இந்தியாவில் அரசு&தனியார் நிறுவனங்களின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி உள்ளிட்ட திட்டங்களுக்காக 120 கோடி டாலர் முதலீடு செய்ய இருநாடுகளும் ஒப்புக்கொண்டன.

இதில், பிரிட்டனின் மேம்பாட்டு நிதி அமைப்பான சிடிசி, இந்திய பசுமைத் திட்டங்களில் மேற்கொள்ளவிருக்கும் 100 கோடி டாலர், பசுமைத் தொழில்நுட்பங்களை உருவாக்கும் நிறுவனங்களில் இந்தியாவும் பிரிட்டனும் கூட்டாக மேற்கொள்ளும் முதலீடுகள், இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான 20 கோடி டாலர் கூட்டு முதலீடு ஆகியவையும் அடங்கும். இப்பேச்சுவார்த்தையின்போது, இரு நாட்டு நிதிச்சந்தைகளைப் பலப்படுத்துவதற்காக இணைந்து செயல்படு –வது குறித்து எதிர்கால வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின்போது ஆலோ –சிக்க இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

---

4. 75,000 ஹெக்டேரில் மூலிகை சாகுபடி: ஆயுஷ் அமைச்சகம் திட்டம்

நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் ஆனதை கொண்டாடும் அம்ருத் மஹோத்ஸவத்தின் ஒரு பகுதியாக இந்தியாவில் மருத்துவ தாவரங்கள் (மூலிகைகள்) பயிரிடுவதை ஊக்குவிப்பதற்காக தேசிய திட்டத்தை ஆயுஷ் அமைச்சகத்தின் தேசிய மருத்துவ தாவரங்கள் வாரியம் தொடங்கியுள்ளது. இதன்படி நாடு முழுவதும் அடுத்த ஓராண்டில் 75,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் மூலிகைகள் பயிரிடப்படும்.

உத்தர பிரதேசத்தின் சஹரன்பூர் மற்றும் மகாராஷ்டிரத்தின் புனேயில் இந்தத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

---

5. மாநில நல்லாசிரியர் விருதுக்கு 385 பேர் தேர்வு

தமிழகத்தில் நிகழ் கல்வியாண்டில் (2021–2022) மாநில நல்லாசிரியர் விருதுக்கு தேர்வுபெற்றுள்ள 385 ஆசிரியர்களின் பட்டியல் மாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குடியரசு முன்னாள் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்தநாளான செப்.5ஆம் தேதி பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ஆசிரியர் தின விழாவாக கொண்டாடப்பட்டு அந்த விழாவில் தொடக்க, நடுநிலை, உயர் நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் சிறப்பாகப் பணியாற்றும் ஆசிரியர்க –ளைத் தேர்வு செய்து அவர்களுக்கு மாநில நல்லாசிரியர் விருதான 'டாக்டர் ராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதுடன் ₹10 ஆயிரம், வெள்ளிப்பதக்கம் ஆகியவை வழங்கப்படும்.

1. ஆண்டுதோறும் தேசிய சிறு தொழில் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட்.30 ☑

ஆ) செப்டம்பர்.1

இ) செப்டம்பர்.3

ஈ) செப்டம்பர்.5



✓ தேசிய சிறுதொழில் நாள் என்பது நமது சமுதாயத்தில் உள்ள சிறு தொழில்களின் மதிப்பை அங்கீகரிக்கும் ஒரு கொண்டாட்டமாகும்.

✓ ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.30 அன்று, தேசிய சிறு தொழில் நாள் கொண்டாடுகிறது. 2000 ஆகஸ்ட்.30 அன்று, இந்தியாவில் உள்ள சிறு நிறுவனங்களுக்கு ஆதரவை வழங்குவதற்காக, இந்தத் துறைக்கான ஒரு விரிவான கொள்கைதொகுப்பு இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. உலகப்பொருளாதாரத்தில் MSMEகளின் பங்களிப்புபற்றிய விழிப்புணர் –வை அதிகரிப்பதற்காக ஐநா பொது அவை ஜூன்.27ஆம் தேதியை MSME நாளாக அறிவித்துள்ளது.

---

2. எந்த பொதுத்துறை வங்கியின் MD & CEOஆக சாந்திலால் ஜைன் நியமிக்கப்பட்டுள்ளார்?

அ) பஞ்சாப் நேஷனல் வங்கி

ஆ) இந்தியன் வங்கி ☑

இ) யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

ஈ) பாரத வங்கி



✓ சாந்தி லால் ஜைன், இந்தியன் வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச்செயலதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனத்திற்கு முன் அவர், பரோடா வங்கியின் நிர்வாக இயக்குநராக பணியாற்றினார். செப்.1 அன்று அவரது மூன்றாண்டுகால பதவிக்காலம் தொடங்கும்.

---

3. "ஆட்கடத்தலுக்கு உள்ளானவர்கள் குறித்த பன்னாட்டு நாள் – International Day of the Victims of Enforced Disappearances" அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட்.30 ☑

ஆ) செப்டம்பர்.1

இ) செப்டம்பர்.3

ஈ) செப்டம்பர்.5



✓ ஆண்டுதோறும் ஆக.30 அன்று உலகம் முழுவதும் "ஆட்கடத்தலுக்கு உள்ளானவர்கள் குறித்த பன்னாட்டு நாள்" அனுசரிக்கப்படுகிறது.

✓ ஆட்கடத்தலுக்கு உள்ளானவர்களை கௌரவிப்பதற்கும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்குமாக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. 2010 டிச.21 அன்று, ஐநா பொது அவை, அதிகாரப்பூர்வமாக இந்த நாளை அறிவித்தது. ஆட்கடத்தலுக்குள்ளானோரின் பாதுகாப்பிற்கு வழிவகுக்கும் சர்வதேச உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதை இந்நாள் வரவேற்கிறது.

---

4. வருவாய் வழக்குகளை ஒழுங்குபடுத்துவதற்கான தொழில்நுட்ப தளத்தை உருவாக்குதற்காக நடுவணரசு அமைத்துள்ள குழுவின் தலைவர் யார்?

அ) ஆஷிஷ் ஷிரதோன்கர் ☑

ஆ) ஆதிர் ரஞ்சன் சௌத்ரி

இ) DY சந்திரசூட்

ஈ) துஷார் மேத்தா



✓ ஆஷிஷ் ஷிரதோன்கர் தலைமையிலான மேல்முறையீட்டு தாக்கல் செயல்முறையை நெறிப்படுத்தும் ஒரு தொழில்நுட்ப தளத்தை உருவாக்குவதற்காக மத்திய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது.

✓ இந்தத்தளம் நேரடி மற்றும் மறைமுக வரிவிதிப்பு தொடர்பான அனைத்து செயல்முறைகளையும் உள்ளடக்கியது. ஆஷிஷ் ஷிராதோன்கர், தேசிய தகவல் மையத்தின் மின்னணு–நீதிமன்றத் திட்டத்திற்கும் தலைமை வகிக்கிறார். இந்தக்குழு தனது பணியை மூன்று மாதகாலத்திற்குள் முடிக்கவுள்ளது. வருவாய்த்துறை, CBDT & CBIT உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

---

5. அணுவாயுத சோதனைகளுக்கு எதிரான பன்னாட்டு நாள் – Intl., Day against Nuclear Tests அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) ஆகஸ்ட்.29 ☑

ஆ) ஆகஸ்ட்.30

இ) ஆகஸ்ட்.31

ஈ) செப்டம்பர்.01



✓ ஆண்டுதோறும் ஆக.29 அன்று உலகம் முழுவதும் அணு சோதனைக்கு எதிரான பன்னாட்டு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. அணுவாயுதங்களை பரிசோதிப்பதால் ஏற்படும் தீங்கு விளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், இதுபோன்ற சோதனைகளை முடிவுக்கு கொண்டு வருவதையும் இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ அணுவாற்றல் சோதனைகளுக்கு எதிரான பன்னாட்டு நாள் 2009 டிச.2 அன்று ஐநா பொதுச்சபையால் அதன் 64ஆவது அமர்வில் நிறுவப்பட்டது. நியூ மெக்ஸிகோவில் உள்ள பாலைவனத்தளத்தில், 'டிரினிட்டி' என்று அழைக்கப்படும் முதல் அணுசோதனை, அமெரிக்காவின் ராணுவத்தால் 1945 ஜூலை.16 அன்று நடத்தப்பட்டது.

---

6. ஒலிம்பிக்/பாராலிம்பிக் துப்பாக்கிச்சுடுதலில் இந்தியாவின் முதல் தங்கப்பதக்கத்தை வென்ற வீராங்கனை யார்?

அ) அவனி லேகாரா ☑

ஆ) இளவேனில் வாலறிவன்

இ) அபூர்வி சந்தேலா

ஈ) அஞ்சும் முத்கில்



✓ இந்திய பாராலிம்பிக் துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை அவனி லேகாரா, டோக்கியோ பாராலிம்பிக்கில் பெண்களுக்கான 10 மீட்டர் ஏர்–ரைபிள் துப்பாக்கிச்சுடுதலில் நாட்டின் முதல் தங்கப்பதக்கத்தை வென்றார்.

✓ நாட்டின் வரலாற்றில் பாராலிம்பிக் அல்லது ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்தியப் பெண் என்ற பெருமையைப் பெற்றார் இவர். இந்திய வட்டெறிதல் வீரர் யோகேஷ் கத்துனியா வெள்ளிப்பதக்கத்தை வென்றார். ஈட்டி எறிதல் போட்டியில் தேவேந்திர ஜஜாரியா மற்றும் சுந்தர் சிங் ஆகியோர் வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கங்களை வென்றனர்.

---

7. மேற்கு நைல் வைரஸ்தொற்று அதிகரிக்கலாம் என எச்சரிக்கை விடுத்துள்ள நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா ☑

இ) சீனா

ஈ) இங்கிலாந்து



✓ மிதவெப்பநிலையும் அதிக மழைப்பொழிவும் கொசுக்களுக்கு சாதகமான நிலைமைகளை உருவாக்குவதால், மேற்கு நைல் வைரஸ் (WNV) நோய்த் தொற்றுகள் அதிகரிக்கலாம் என ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

✓ இது கொசுக்களால் பரவும் ஒரு தொற்றுநோயாகும். இது பறவைகளிடம் இருந்து மனிதர்களுக்கு நோய்த்தொற்றுள்ள கியூலெக்ஸ் கொசுவால் பரவுகிறது. இது, மனிதர்களில் அபாயகரமான நரம்பியல் நோயினை உண்டாக்குகிறது. இது ஜிகா, டெங்கு மற்றும் மஞ்சள் காய்ச்சல் ஆகிய வைரஸ்களுடன் தொடர்புடையது.

---

8. தீபோர் பீல் வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) அஸ்ஸாம் ☑

ஆ) சிக்கிம்

இ) மத்திய பிரதேசம்

ஈ) இமாச்சல பிரதேசம்



✓ தீபோர் பீல் என்பது அஸ்ஸாமின் கௌவுகாத்தியில் அமைந்துள்ள ஒரு மிகப்பெரிய நன்னீராகும். இது அம்மாநிலத்தின் ஒரே ராம்சார் தளமும் முக்கியமான பறவைகள் வாழிடமும் ஆகும். சுற்றுச்சூழல், வனம் & கால நிலை மாற்ற அமைச்சகமானது கௌகாத்தியின் தென்மேற்கு விளிம்பில் உள்ள தீபோர் பீல் வனவுயிரி சரணாலயத்தின் சூழல்–உணர்திறன் மண்டலத்தை அறிவித்துள்ளது. இந்த ஈரநிலம், கோடையில் 30 சகிமீ வரை விரிவடைகிறது; மேலும் குளிர்காலத்தில் சுமார் 10 சகிமீ வரை சுருங்குகிறது.

9. காலாண்டு வீட்டு விலைக்குறியீட்டை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) தேசிய வீட்டு வசதி வங்கி

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ) NITI ஆயோக்

ஈ) தேசிய புள்ளியியல் அலுவலகம்

✓ பத்து முக்கிய நகரங்களின் வீட்டு பதிவு அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட பரிவர்த்தனை–நிலை தரவுகளின் அடிப்படையில் காலாண்டு வீட்டு விலைக் குறியீட்டை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடுகிறது. அகமதாபாத், பெங்களூரு, சென்னை, தில்லி, ஜெய்ப்பூர், கான்பூர், கொச்சி, கொல்கத்தா, லக்னோ மற்றும் மும்பை ஆகியவை அந்தப் பத்து நகரங்களாகும். RBI தரவுகளின்படி, அகில இந்திய வீட்டுவிலை குறியீட்டின் வளர்ச்சியானது இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் 2 சதவீதமாக குறைந்துள்ளது. இதன் வளர்ச்சி 8.8% (அகமதாபாத்) முதல் (–) 5.1 சதவிகிதம் (சென்னை) வரை இருந்தது.

10.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற சூப்பர்டெக் இரட்டைகோபுர வழக்குடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ) கேரளா

ஆ) உத்தர பிரதேசம் ☑

இ) கர்நாடகா

ஈ) மகாராஷ்டிரா

✓ நொய்டாவில் சூப்பர்டெக்கின் எமரால்ட் கோர்ட் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட 40 மாடிகளை கொண்ட இரட்டை கோபுரங்களை இடித்துத்தள்ள உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

✓ மாவட்ட அதிகாரிகளுடனான ஒப்பந்தத்துடன் கட்டட விதிமுறைகளை மீறியதற்காக மூன்றுமாதங்களுக்குள் கோபுரங்களை இடிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், இது சம்பந்தப்பட்ட குற்றவாளிகள்மீது விசாரணை மற்றும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வ.உ.சி. 150–ஆவது பிறந்த தினம்: சென்னை, கோவையில் சிலை

சுதந்திரப் போராட்டத்தில் தீரத்துடன் ஈடுபட்டு 'செக்கிழுத்த செம்மல்' என மக்களால் புகழப்படும் வ.உ.சிதம்பரனாரின் 150–ஆவது பிறந்த தினத்தை ஒட்டி 14 புதிய அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இந்த அறிவிப்பின்படி, வ.உ.சி.க்கு சென்னை, கோவை என இரண்டு இடங்களில் புதிதாக சிலை வைக்கப்பட உள்ளது. இதுகுறித்து, சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட 14 அறிவிப்புகள்:

வ.உ.சி.,யின் 150–ஆவது பிறந்த தினம் வரும் 5–ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, அரசு விழாவாக, அவரைப் பெருமைப்படுத்தும் வகையில் செயலாற்ற வேண்டுமென சட்டப் பேரவை உறுப்பினர் ஈஸ்வரன் கோரிக்கை விடுத்தார். வ.உ.சி.,யின் 150–ஆவது பிறந்த தினம் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என எனது சுதந்திர தின உரையிலேயே கூறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அவரது 150–ஆவது ஆண்டு பிறந்த தினம் வருவதால், 14 புதிய அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன. சென்னை காந்தி மண்டபத்தில் வ.உ.சிதம்பரனார், சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டுள்ள மண்டபம் பொலிவூட்டப்பட்டு அவரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்படும். தூத்துக்குடி மாநகரில் முதன்மைச் சாலையான மேலபெரிய காட்டன் சாலை இனி வ.உ.சிதம்பரனார் சாலை என அழைக்கப்படும்.

கோவை வ.உ.சி. பூங்கா: தனது வாழ்நாளின் முக்கிய நாள்களைக் கோவைச் சிறையிலேயே கழித்த வ.உ.சிதம்பரனாரின் முழு உருவச் சிலையானது, கோவை வ.உ.சி. பூங்காவில் அமைக்கப்படும். செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள ஓட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனார் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள அவரது மணிமண்டபமும் புனரமைக்கப்பட்டு அவ்விடங்களில் அவரது வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயன் பெறும் வகையில் ஒலி–ஒளி காட்சி அமைக்கப்படும். வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் திரைப்படத்தை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில், நவீன டிஜிட்டல் முறையில் வெளியிடப்படும். நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வ.உ.சிதம்பரனார் பெயரில் புதிய ஆய்விருக்கை அமைக்கப்படும். வ.உ.சி. எழுதியுள்ள அனைத்துப் புத்தகங்களும் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார், மகாகவி பாரதியார் படித்த பள்ளிகளுக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலை அரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் ரூ.1.05 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது

கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பான துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழர் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் அளிக்கப்படும். இந்த விருது ரூ.5 லட்சமும், பாராட்டுச் சான்றும் உள்ளடக்கியது. வ.உ.சிதம்பரனார் நவம்பர் 18–இல் மறைந்தார். இந்தத் தினம் தியாகத் திருநாளாக கடைப்பிடிக்கப்படும்.

அரசு கட்டடங்களுக்கு பெயர்:

இந்த ஆண்டு செப்டம்பர் 5–ஆம் தேதி முதல் அடுத்த ஆண்டு செப்டம்பர் 5–ஆம் தேதி வரை ஓராண்டில் தூத்துக்குடி, திருநெல்வேலியில் உருவாகும் அரசுக் கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் பெயர் சூட்டப்படும். அவரது தியாகத்தை பள்ளி, கல்லூரி மாணவர்கள் பயனைடையும் வகையில், போக்குவரத்துத் துறை சார்பில் பேருந்து ஒன்றில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் குறித்து புகைப்படக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்படும்.

நடமாடும் வ.உ.சி. வாழ்க்கை வரலாற்று கண்காட்சி கூடமானது, மாணவ–மாணவிகளின் பார்வைக்காக பயணிக்கும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் குறித்த இணைய வழிக் கருத்தரங்கு நடைபெறும். தமிழ் நிகர்நிலைக் கல்வி கழகத்தின் வாயிலாகக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியன இணையத்தில் மின்மயப்படுத்தி வெளியிடப்படும் என்று தனது அறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

---

2. யெஸ்.பாலபாரதியின் நூலுக்கு பால சாகித்திய புரஸ்கார் விருது

யெஸ்.பாலபாரதியின் "மரப்பாச்சி சொன்ன ரகசியம்' என்ற குழந்தைகள்" நூலுக்கு 2020–ஆம் ஆண்டுக்கான 'பால சாகித்திய புரஸ்கார்' ' விருது வழங்கப்பட்டுள்ளது. சாகித்திய அகாதெமியின் தலைவர் டாக்டர் சந்திரசேகர கம்பார் ஒப்புதலுடன் அகாதெமியின் செயலாளர் கே.ஸ்ரீனிவாசராவ் வெள்ளிக்கிழமை இதை அறிவித்துள்ளார். இந்த விருதுக்காக அமைக்கப்பட்ட மூன்று போர் கொண்ட நடுவர் குழு 'மரப்பாச்சி சொன்ன ரகசியம்' நூலை ஒருமனதாகத் தேர்வு செய்துள்ளதாக அகாதெமியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தக் குழுவில் எம்.கமலவேலன், டாக்டர் ருத்ர துளசிதாஸ், யூமா வாசுகி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

'இதை குழந்தைகளுக்கான நூல் என்று மட்டும் கருத முடியாது. பெற்றோரும் ஆசிரியர்களும் படிக்க வேண்டிய நூலாகக்கூட கருதலாம். குழந்தைகளின் வெகுளித்தனம், ஆர்வம், சிந்தனையைத் தூண்டக்கூடிய நூல்' என இந்நூல் குறித்த விமர்சனங்களும் வெளியாகியிருந்தன. 'பால சாகித்திய புரஸ்கார்' ' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இந்த நூல் ஆசிரியருக்கு கேடயமும், ரூ 50,000 ரொக்கப் பரிசும் அளிக்கப்படும்.

---

3. பாராலிம்பிக்கில் இந்தியா பதக்க வேட்டை : ஒரே நாளில் 2 தங்கம், ஒரு வெள்ளி, 1 வெண்கலம்

டோக்கியோ பாராலிம்பிக் போட்டியில் சனிக்கிழமை ஒரே நாளில் இந்தியாவுக்கு 2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் என 4 பதக்கங்கள் கிடைத்துள்ளன. இதையடுத்து இந்த பாராலிம்பிக்கில் இந்தியாவின் பதக்க எண்ணிக்கை 17–ஆக அதிகரித்துள்ளது. இதில் 4 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கலம் ஆகியவை அடங்கும். இந்திய போட்டியாளர்களுக்கு சனிக்கிழமை, துப்பாக்கி சுடுதலில் ஒரு தங்கம், ஒரு வெள்ளியும், பாட்மிண்டனில் ஒரு தங்கம், ஒரு வெண்கலமும் கிடைத்துள்ளது.

துப்பாக்கி சுடுதல்: துப்பாக்கி சுடுதலில் பி4 கலப்பு 50 மீட்டர் பிஸ்டல் எஸ்ஹெச்1 பிரிவில் இந்தியாவின் மணீஷ் நர்வால் (19) முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். அதே பிரிவில் களம் கண்ட மற்றொரு இந்தியரான சிங்ராஜ் அதானா (39) இரண்டாம் இடம் பிடித்து வெள்ளி வென்றார். இதில் நர்வால் தனது முதல் பாராலிம்பிக்கிலேயே தங்கம் வென்றுள்ளார். அதானா, இதே பாராலிம்பிக்கில் ஏற்கெனவே 10 மீட்டர் ஏர் பிஸ்டர் எஸ்ஹெச்1-இல் வெண்கலம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாட்மிண்டன்: பாட்மிண்டன் விளையாட்டில் ஆடவர் ஒற்றையர் எஸ்எல்3 பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத் (33) தங்கமும், மனோஜ் சர்கார் (31) வெண்கலமும் வென்றனர். இருவருக்குமே இது முதல் பாராலிம்பிக் பதக்கமாகும். அதிலும், டோக்கியோ பாராலிம்பிக்கில் தான் பாட்மிண்டன் போட்டி முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதில் சாம்பியனாகி வரலாறு படைத்திருக்கிறார் பிரமோத். பாட்மிண்டனில் மேலும் இரு இந்தியர்கள் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளதால், அதில் இந்தியாவுக்கு இன்னும் இரு பதக்கங்கள் உறுதியாகியுள்ளன.

---

4. ஃபேம் திட்டத்தின் கீழ் மின்சார பேருந்துகள்: கொள்முதலை கைவிட தமிழக அரசு முடிவு

மத்திய அரசின் ஃபேம் 2 திட்டத்தின் கீழ் மின்சார பேருந்து கொள்முதல் செய்வதைக் கைவிட முடிவு செய்யப்பட்டிருப்பதாக தமிழக போக்குவரத்துத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் பெட்ரோல், டீசல் வாகனங்களுக்கு மாற்றாக மின்சார வாகனங்கள் பயன்படுத்துவதின் முக்கியத்துவத்தை பல நாடுகள் உணர்ந்துள்ளன. இந்தியாவிலும் மின்சார வாகனங்களை ஊக்குவிக்க வேண்டும் என நீதி ஆயோக் அழுத்தமாக சொல்லி வருகிறது.

சொல்வது மட்டுமின்றி அதைச் செயல்படுத்துவதிலும் முனைப்பு காட்டும் விதமாக கடந்த ஆண்டு தமிழகத்தின் முக்கிய நகரங்களான கோவை, சேலம், திருப்பூர், ஈரோடு, வேலூர், திருச்சி, விழுப்புரம், தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் ஃபேம் 2 திட்டத்தின் கீழ் மின்சார பேருந்துகளை வழங்குவதாக மத்திய அரசு தெரிவித்தது. இதன்படி, பேருந்துகளின் நீளம் மற்றும் மின்னேற்ற கட்டமைப்பைப் பொருத்து ரூ.35 முதல் 55 லட்சம் வரை மானியம் வழங்கப்படும் என கூறப்பட்டிருந்தது. திட்டத்துக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வந்த நிலையில், திட்டத்தைக் கைவிட முடிவு செய்திருப்பதாக தமிழக போக்குவரத்துத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

காரணம் என்ன? இதற்கான காரணம் குறித்து அவர்கள் விளக்கிக் கூறுகையில், 'மத்திய அரசு வழங்கும் மானியத் தொகைக்கும் பேருந்தின் விலைக்கும் பெரியளவில் வித்தியாசம் உள்ளது. குறிப்பாக மின்கலன்களை மாற்றித் தருவதற்கான தெளிவான விளக்கங்களும் திட்டத்தில் தரப்படவில்லை. எனவே, ஒப்பந்தப்புள்ளி கோரி வெளியிட்ட அறிவிப்பை ரத்து செய்வதைத் தவிர வேறு வழியில்லை. மேலும், தனியார் மின்சார பேருந்து இயக்கும் நிறுவனத்தின் ஊழியர்களை வைத்து பேருந்துகளை இயக்கும் நிலை இருப்பதால் போக்குவரத்துக் கழக தொழிற்சங்கங்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இதையடுத்து அந்த திட்டம் கைவிடப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

விரைவில் மின்சார பேருந்துகள்: ஃபேம் 2 திட்டத்தின் கீழ் மின்சாரப் பேருந்துகளை கொள்முதல் செய்வதில் இருக்கும் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு முடிவை தமிழகம் கைவிட்டிருக்கும் நிலையில் கேரளம், கர்நாடகம், தெலங்கானா ஆகிய மாநிலங்களும் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது, கேஎஃப்டபிள்யூ வங்கியுடன் இணைந்து தமிழகம் கொள்முதல் செய்ய உள்ள 500 பேருந்துகளும் எப்போது வாங்கப்படும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது. இதன்படி, 80:20 என்னும் அடிப்படையில் கேஎஃப்டபிள்யூ மற்றும் தமிழகம் பேருந்தின் விலையை பகிர்ந்து கொள்ளும்.

கடந்த மாதம் தமிழக நிதியமைச்சர் வெளியிட்ட வெள்ளை அறிக்கையில், போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத்துறையில் கடன் மற்றும் நஷ்டம் அதிகளவு இருப்பதாக கூறப்பட்டுள்ள நிலையில், தமிழகத்தின் சுற்றுச்சூழல் நலன் கருதி விரைவில் மின்சார பேருந்துகள் வாங்கப்படும் எனவும், நிதிநெருக்கடி கருதி சரியான திட்டத்தில் தரமான மின்சாரப் பேருந்துகள் வாங்கப்படும் எனவும் போக்குவரத்துத் துறை உயரதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அட்டவணைக்காக.... (குறிப்பு டேப் பயன்படுத்தப்பட்டுள்ளது.) ஃபேம் 2 திட்டத்தின் கீழ் தமிழக நகரங்களுக்கு வழங்கப்பட இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை நகரம் பேருந்துகளின் எண்ணிக்கை கோவை 100 மதுரை 100 திருச்சி 100 சேலம் 50 திருப்பூர் 50 ஈரோடு 50 வேலூர் 50 தஞ்சாவூர் 25 பெட்டிச் செய்தி: மாறிவரும் காலநிலையில் மின்சார பேருந்தின் முக்கியத்துவம்: மின்சார பேருந்துகளின் முக்கியத்துவம் குறித்து சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறியதாவது: காற்றில் நுண்துகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருப்பது அனல் மின் நிலையங்கள் மற்றும் வாகன புகை. இவற்றைக் கட்டுக்குள் கொண்டு வந்தால் இந்திய மக்களின் ஆயுள்காலமும் 5 ஆண்டுகள் அதிகரிக்கக் கூடும். எனவே, பேருந்துகளில் வெளியேறும் புகையை முற்றிலுமாக ஒழிக்க மின்சார பேருந்து அவசியம் என்றனர்.

காற்றில் இருக்க வேண்டிய நுண்துகளின் அளவு: இந்திய தர நிர்ணய அளவீட்டின்படி 60 மைக்ரோகிராம் உலக சுகாதார நிறுவனத்தின் காற்று தர நிர்ணய அளவீட்டின்படி 25 மைக்ரோ கிராம் சென்னையின் பல பகுதிகளில்...: 60 முதல் 128 மைக்ரோ கிராம் வரையும், 176 முதல் 228 மைக்ரோ கிராம் வரையும் காற்றில் நுண்துகள்கள் உள்ளன.

---

5. பாட்மிண்டன்: வரலாற்று தங்கம் வென்றார் பிரமோத் பகத் மனோஜுக்கு வெண்கலம்; மேலும் இரு பதக்கங்கள் உறுதி

பாராலிம்பிக் பாட்மிண்டன் விளையாட்டில் ஆடவர் ஒற்றையர் எஸ்எல்3 பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத் (33) தங்கமும், மனோஜ் சர்கார் (31) வெண்கலமும் வென்றனர். பாராலிம்பிக் போட்டியில் முதல் முறையாக டோக்கியோ பாராலிம்பிக்கில் சேர்க்கப்பட்டுள்ள பாட்மிண்டன் போட்டியில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை பிரமோத் பெற்றுள்ளார். அவரோடு மனோஜும் பதக்கம் வென்றுள்ள நிலையில், அவர்கள் தவிர சுஹாஸ் யதிராஜ், கிருஷ்ணா நாகர் ஆகிய மேலும் இரு இந்தியர்களும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறி பதக்கத்தை உறுதி செய்துள்ளனர்.

எஸ்எல்3 பிரிவு: ஆடவர் ஒற்றையர் எஸ்எல்3 பிரிவின் அரையிறுதிகளில் நடப்பு உலக சாம்பியனான பிரமோத் பகத்தும், மனோஜ் சர்காரும் களம் கண்டனர். இதில் பிரமோத் தனது ஆட்டத்தில் ஜப்பானின் டாய்சுகே ஃபுஜிஹாராவை 21-11, 21-16 என்ற செட்களில் வென்று இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார். ஆனால் மனோஜ் சர்கார், இங்கிலாந்தின் டேனியல் பெத்தலிடம் 8-21, 10-21 என்ற செட்களில் வீழ்ந்தார். இறுதிச்சுற்றில் அந்த டேனியலை எதிர்கொண்ட பிரமோத் 21-14, 21-17 என்ற நேர் செட்களில் 45 நிமிஷத்தில் வென்று சாம்பியன் ஆனார்.

வெற்றிக்குப் பிறகு பேசிய பிரமோத், 'இந்தப் பதக்கம் எனக்கு மிகச் சிறப்பானதாகும். பாராலிம்பிக் பத்தக்கக் கனவு நனவாகியுள்ளது. பெத்தல் எனக்கு மிகவும் நெருக்கடி அளித்தார். ஆனால் நான் தன்நிலையிழக்காமல் நிதானமாக எனது பலம் கொண்டு விளையாடினேன். இரு ஆண்டுகளுக்கு முன்பு அவருடன் விளையாடியபோது தோல்வி கண்டேன். அதிலிருந்து நுட்பங்களைக் கற்று தற்போது வென்றுள்ளேன். இந்தப் பதக்கத்தை எனது பெற்றோருக்கும், எனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கும் சமர்ப்பிக்கிறேன். இந்தியாவை பெருமையடையச் செய்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்' என்றார். மறுபுறம், அரையிறுதியில் வீழ்ந்த மனோஜ் சர்கார், வெண்கலப் பதக்கத்துக்கான 'பிளே-ஆஃப்' சுற்றில், டாய்சுகே ஃபுஜிஹாராவை 22-20, 21-13 என்ற செட்களில் வென்று பதக்கத்தை கைப்பற்றினார்.

பிரமோத் பகத்: 4 வயதாக இருக்கும்போது போலியோ பாதிப்பு ஏற்பட்டதால் மாற்றுத்திறனாளி ஆனார். அண்டை வீட்டார் பாட்மிண்டன் விளையாடுவதைப் பார்த்து அதில் கவனம் செலுத்தத் தொடங்கிய பகத், 2006 முதல் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கினார். சர்வதேச அளவில் இதுவரை 45 பதக்கங்கள் வென்றுள்ளார். இதில் ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் வென்ற ஒரு தங்கம், ஒரு வெண்கலம், 4 உலக சாம்பியன்ஷிப் பதக்கங்கள் ஆகியவையும் அடங்கும். மனோஜ் சர்கார்: 1 வயதாக இருக்கும்போது போலியாவால் பாதிக்கப்பட்டார். 5 வயதிலிருந்து பாட்மிண்டன் விளையாட்டை தொடங்கிய மனோஜ், பின்னர் அதையே தீவிரமாக விளையாடத் தொடங்கினார். 2011 முதல் பாரா பாட்மிண்டன் போட்டிகளில் விளையாட ஆரம்பித்தார். 2016 ஆசிய சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றுள்ளார் மனோஜ்.

எஸ்எல்4 பிரிவு: ஆடவர் ஒற்றையர் எஸ்எல்4 அரையிறுதியில் இந்தியாவின் தருண் தில்லான், சுஹாஸ் யதிராஜ் ஆகியோர் போட்டியிட்டனர். இதில் சுஹாஸ் தனது ஆட்டத்தில் 21-9, 21-15 என்ற செட்களில் இந்தோனேசியாவின் ஃபிரெடி சேதியாவனை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறி பதக்கத்தை உறுதி செய்தார். அதில் அவர் பிரான்ஸின் லுகாஸ் மாஸுரை ஞாயிற்றுக்கிழமை சந்திக்கிறார். தருண்

தில்லான் தனது அரையிறுதியில் 16–21, 21–16, 18–21 என்ற செட்களில் அந்த லூகாஸ் மாஸுரிடம் தான் தோல்வி கண்டார். அடுத்ததாக, வெண்கலப் பதக்கத்துக்கான 'பிளே–ஆஃப்' சுற்றில் அவர் இந்தோனேசியாவின் சேதியாவனை சந்திக்கிறார். எஸ்ஹெச்6 பிரிவு: ஆடவர் ஒற்றையர் எஸ்ஹெச்6 பிரிவில் களம் கண்டுள்ள இந்தியரான கிருஷ்ணா நாகர் தனது அரையிறுதியில் 21–10, 21–11 என்ற செட்களில் இங்கிலாந்தின் கிறிஸ்டன் கூம்ப்ஸை தோற்கடித்தார். இறுதிச்சுற்றில் அவர் ஹாங்காங்கின் சு மான் காயை ஞாயிற்றுக்கிழமை எதிர்கொள்கிறார்.

கலப்பு இரட்டையர்: கலப்பு இரட்டையரில் எஸ்எல்3–எஸ்யு5 பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் பிரமோத் பகத்/பாலக் கோலி இணை 3–21, 15–21 என்ற செட்களில் இந்தோனேசியாவின் ஹேரி சுசான்டோ/லினி ராட்ரி ஆக்டிலா இணையிடம் வீழ்ந்தது. இதையடுத்து, பகத்/ கோலி கூட்டணி, வெண்கலப் பதக்கத்துக்கான 'பிளே–ஆஃப்' சுற்றில் ஜப்பானின் டாய்சுகே ஃபுஜிஹாரா/அகிகோ சுகினோ இணையை ஞாயிற்றுக்கிழமை எதிர்கொள்கிறது

1. டோக்கியோ பாராலிம்பிக்கில் பதக்கம் வென்ற மாரியப்பன் தங்க வேலு & சரத் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) பளு தூக்குதல்



ஆ) துப்பாக்கிச் சுடுதல்

இ) உயரந்தாண்டுதல் ☑

ஈ) ஈட்டி எறிதல்

✓ டோக்கியோ பாராலிம்பிக்கில் உயரந்தாண்டல் போட்டியில் மாரியப்பன் தங்கவேலு மற்றும் ஷரத் குமார் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை வென்றனர். மாரியப்பன் தங்கவேலு 2016 ரியோ பாராலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றிருந்தார். 1968 பாராலிம்பிக் பதிப்பிலிருந்து 2016 பாராலிம்பிக் வரை மொத்தம் 12 பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது.

---

2. தொழில்நுட்ப நிறுவனங்கள் மாற்று கட்டண முறைமைகளை வழங்குமாறு நிர்பந்திக்கும் உலகின் முதல் சட்டத்தை இயற்றிய நாடு எது?

அ) பிரான்ஸ்



ஆ) இத்தாலி

இ) தென் கொரியா ☑

ஈ) இந்தியா

✓ கூகுள் மற்றும் ஆப்பிள் போன்ற தொழில்நுட்ப நிறுவனங்களை தங்கள் செயலிக்கூடங்களில் மாற்று கட்டண முறைமைகளை வழங்குமாறு நிர்பந்திக்கும் உலகின் முதல் சட்டத்தை தென்கொரியா நிறைவேற்றி உள்ளது. இதற்கான அந்த நாட்டின் முதன்மை தொலைத்தொடர்பு சட்டமான 'தொலைத்தொடர்பு வணிகச்சட்டம்' திருத்தப்படவுள்ளது.

---

3. பன்னாட்டு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்த டேல் ஸ்டெய்ன் சார்ந்த நாடு எது?

அ) ஆஸ்திரேலியா



ஆ) தென்னாப்பிரிக்கா ☑

இ) நியூசிலாந்து

ஈ) மேற்கிந்திய தீவுகள்

✓ புகழ்பெற்ற தென்னாப்பிரிக்க வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன் சுமார் 16 ஆண்டுகளுக்குப்பிறகு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். ஸ்டெயின், கடந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெற்றபோது 439 விக்கெட்டுகளை வீழ்த்தி தென்னாப்பிரிக்காவின் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர் ஆனார். ஸ்டெய்ன், 2004 டிச.17 அன்று புரோட்டீஸ் அணிக்காக அறிமுகமானதிலிருந்து, தென்னாப்பிரிக் –காவுக்காக 93 டெஸ்ட், 125 ஒருநாள் மற்றும் 47 T20 பன்னாட்டு போட்டிகளில் விளையாடியுள்ளார்.

---

4. இந்திய உச்சநீதிமன்றத்தில், அனுமதிக்கப்பட்ட நீதியரசர்களின் எண்ணிக்கை என்ன?

அ) 18



ஆ) 25

இ) 34 ☑

ஈ) 45

✓ மூன்று பெண்கள் உட்பட ஒன்பது புதிய நீதிபதிகள் உச்சநீதிமன்ற நீதிபதிகளாக பதவியேற்றுக்செய்துகொண்டனர். இந்த நியமனத்தின் மூலம், இந்திய தலைமை நீதிபதி உட்பட, உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 33 பேராக உயர்ந்துள்ளது. உச்சநீதிமன்ற வரலாற்றில், ஒன்பது நீதிபதிகள் ஒரே நேரத்தில் பதவியேற்றது இதுவே முதல்முறை. ஒன்பது நீதிபதிகளில் ஒருவரான நீதிபதி நாகரத்னா, 2027 செப்டம்பரில் இந்தியாவின் முதல் பெண் தலைமை நீதிபதியாக ஆகவுள்ளார்.

---

5. சாகர் திட்டத்தின் ஒருபகுதியாக, 2021 ஆகஸ்ட்டில் INS ஜராவத் சென்றடைந்த நாடு எது?



அ) இலங்கை ஆ) ஆப்கானிஸ்தான்

இ) வியட்நாம் ☑ ஈ) மலேசியா

✓ இந்திய கடற்படை கப்பல் – INS ஜராவத் சமீபத்தில் மிஷன் சாகரின் ஒரு பகுதியாக வியட்நாமில் உள்ள ஹோ சி மின் துறைமுகத்தை அடைந்தது. இந்தக் கப்பல், COVID 19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காக 100 மெட்ரிக் டன் திரவ மருத்துவ ஆக்ஸிஜன் மற்றும் 300 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை கொண்டு சென்றது. "Security and Growth for All in the Region" என்பதன் சுருக்கந்தான் SAGAR. இதன்கீழ், துயர காலங்களில், இந்தியா தனது அண்டை நாடுகளுக்கு உதவிவருகிறது.

---

6. அண்மையில் உணவு அவசரநிலையை அறிவித்த இந்தியாவின் அண்டைநாடு எது?

அ) பாகிஸ்தான்



ஆ) இலங்கை ☑

இ) மியான்மர்

ஈ) பூட்டான்

✓ தீவு நாடான இலங்கை, உணவு அவசரநிலை மற்றும் பொருளாதார அவசரநிலை ஆகியவற்றை ஓர் அரசாணையின்கீழ் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு, உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் விலை நிர்ணயத்தில் கட்டுப்பாடுகளை விதிக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கிறது. அந்நிய செலாவணி நெருக்கடியால் இலங்கை பாதிக்கப்பட் –டுள்ளது, இதன்காரணமாக அதன் நாணயம் மதிப்பிழப்பை நோக்கிச் சென்றுள்ளது; இதன் விளைவாக, பணவீக்கம் ஏற்பட்டுள்ளது.

---

7. "இ–சோர்ஸ்" என்றவொரு இணையதளத்தை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?

அ) பிட்ஸ்



ஆ) ஐஐஎம்–ஏ

இ) ஐஐடி–எம் ☑

ஈ) இஸ்ரோ

✓ இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மெட்ராஸ் (IIT–M) "இ–சோர்ஸ்" என்ற இணையதளத்தை உருவாக்கிவருகிறது. இத்தளம் முறையான மற்றும் முறைசாரா துறையில் பங்கேற்பாளர்களை இணைப்பதன்மூலம் மின் –அனுக் கழிவுகளை கையாள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மின் மற்றும் மின்னணு உபகரணங்கள் பிரிவில், மின்னணுக் கழிவுகளை வாங்குபவர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் இடையில் இது ஒரு சந்தைத்தளமாக செயற்படும். இது மின்னணுக் கழிவுகளை மறுசுழற்சி செய்யவும் மறுபயன்பாட்டுக்கு உகந்தவாறு மாற்றவும் ஒரு சிறந்த வழியை வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

8. யேமன் அருகே ஏடன் வளைகுடாவில் பின்வரும் எந்த நாட்டுடன் இணைந்து, இந்திய கடற்படை, கூட்டுப்பயிற்சியை மேற்கொண்டு வருகிறது?

அ) ரஷ்யா



ஆ) ஜெர்மனி ☑

இ) பிரான்ஸ்

ஈ) இத்தாலி

✓ யேமன் அருகே ஏடன் வளைகுடாவில், இந்தியா மற்றும் ஜெர்மனியின் கடற்படையினர் கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டனர். இப்பயிற்சியில் உலங்கூர்தி தரையிறக்கம் மற்றும் தேடல் & பறிமுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திய கடற்படையின் போர்க்கப்பலான "INS திரிகண்ட்" ஏடன் வளைகுடாவில் ஜெர்மானிய கப்பலான "பேயர்ன்" உடன் பயிற்சிபெற்றது. INS திரிகண்ட், தற்போது ஏடன் வளைகுடாவில் கடற்கொள்ளை தடுப்பு ரோந்துப்பணிக்காக நிறுத்தப்பட்டுள்ளது.

---

9. சமீப செய்திகளில் இடம்பெற்ற Dr பிர்தௌசி காத்ரி மற்றும் முகமது அம்ஜத் சாகிப் ஆகியோர் பின்வரும் எந்த விருது பெற்றவர்கள்?

அ) புக்கர் பரிசு



ஆ) இராமன் மகசேசே விருது ☑

இ) புலிட்சர் விருது

ஈ) ஆபெல் பரிசு

- ✓ வங்கதேசத்தைச் சார்ந்த தடுப்பூசி ஆராய்ச்சியாளர் Dr பிர்தௌஸி காத்ரி மற்றும் பாகிஸ்தானைச் சார்ந்த முகமது அம்ஜத் சாகிப் ஆகியோர் இந்த ஆண்டுக்கான (2021) இராமன் மகசேசே விருது பெற்ற ஐந்து பேருள் உள்ளனர். கடந்த 1957இல் நிறுவப்பட்ட இந்த விருது ஆசியாவின் மிக உயரிய கௌரவம் மற்றும் ஆசியாவின் நோபல் பரிசாக கருதப்படுகிறது.
- ✓ பிலிப்பைன்ஸ் மீனவர் மற்றும் சமூக சுற்றுச்சூழல் ஆர்வலர் ராபர்டோ பாலன், மனிதாபிமானப் பணிக்காக அமெரிக்காவின் ஸ்டீவன் மன்சி & புலனாய்வு இதழியல் பணிக்காக இந்தோனேசியாவின் வாட்ச்டாக் ஆகியோர் இவ்விருதைப் பெற்ற பிற வெற்றியாளர்களாவர். சமூகத்திற்கு குறிப்பிடத்தக்க சேவையை வழங்கும் ஆசியாவில் உள்ள தனிநபர்கள் அல்லது அமைப்புகளுக்கு இவ்விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

---

10. மாநிலங்களவையின் புதிய பொதுச்செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

அ) M வெங்கையா



ஆ) Dr ராமச்சார்யுலு ☑

இ) உத்பல் குமார் சிங்

ஈ) தேஷ் தீபக் வர்மா

- ✓ மாநிலங்களவைத்தலைவரான M வெங்கையா, டாக்டர் பரசராம் பட்டாபி கேசவ ராமச்சார்யுலுவை மாநிலங்களவையின் புதிய பொதுச்செயலராக நியமித்தார். Dr ராமச்சார்யுலு, கடந்த 2018ஆம் ஆண்டு முதல் ராஜ்யசபா செயலகத்தில் செயலராக பணிபுரிந்துவருகிறார். அவர், நான்காண்டுகள் பதவியிலிருந்த பிறகு பதவி விலகிய தேஷ் தீபக் வர்மாவை தொடர்ந்து பதவியேற்றுள்ளார். மாநிலங்களவை செயலகத்தின்படி, பொதுச்செயலர் பதவியை அடைந்த முதல் மேலவை ஊழியர் ராமச்சார்யுலு ஆவார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கற்பித்தலில் புதுமை

தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற தமிழகம், புதுவையைச் சேர்ந்த ஆசிரியர்கள் நவீன தொழில்நுட்பங்கள்மூலம் கற்பித்தலில் புதுமையைப் புகுத்தியவர்கள் ஆவர். திருச்சி மாவட்டம், பிராட்டியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியை கே ஆஷா தேவி மாணவர்களுக்கு 10க்கும் மேற்பட்ட தனித்திறன் பயிற்சிகள் வழங்குவது, மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரித்தது போன்ற பல்வேறு செயல்பாடுகளில் சிறந்து விளங்கியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியை டி லலிதா ஆராய்ச்சி சார்ந்த கல்வியை, தொழில்நுட்–பங்களைப் பயன்படுத்தி கற்றுக்கொடுக்கும் செயல்முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளார். புதுச்சேரி மணப்பட்டு அரசு நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த அறிவியல் ஆசிரியர் வி ஜெயசுந்தர் கிராமப்புற மாணவர்களுக்குப் புதுமையான முறையில் கல்வி கற்பித்து வருகிறார்.

---

2. டோக்கியோ பாராலிம்பிக் போட்டிகள் நிறைவு; முதல்முறையாக 19 பதக்கங்களுடன் வரலாற்று சாதனை படைத்த இந்தியா

டோக்கியோ பாராலிம்பிக் போட்டிகள் நேற்றுடன் நிறைவடைந்தன. இப் போட்டியில் 5 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலத்துடன் முதல்முறையாக 19 பதக்கங்களைப்பெற்று இந்தியக்குழுவினர் சாதனை படைத்துள்ளனர்.

ஜப்பான் தலைநகரம் டோக்கியோவில் பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஆக.24ஆம்தேதி தொடங்கின. இதில் 162 நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டனர். இந்தியா சார்பில் 54 வீரர், வீராங்கனைகள் 9 விளையாட்டுகளில் பங்கேற்றனர். சுமார் 2 வாரகாலம் நடந்த பாராலிம்பிக், நேற்று நிறைவடைந்தது. நிறைவு விழா அணிவகுப்பில் இந்திய தேசியக்கொடியை துப்பாக்கிச் சுடுதலில் தங்கம் வென்ற வீராங்கனை அவனி லேகாரா ஏந்திச்சென்றார். அவருடன் இந்தியாசார்பில் 11 பேர் அணிவகுப்பில் பங்கேற்றனர்.

கடைசி நாளான நேற்று இந்தியா இரு பதக்கங்களை கைப்பற்றியது. ஆடவருக்கான பாட்மிண்டன் SH 6 ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் கிருஷ்ணா நாகர் 21–17, 16–21, 21–17 என்ற செட் கணக்கில் ஹாங்காங்கின் மான் ஹை சூவை வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றார். அதேவேளையில் SL 4 பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் சுஹாஸ் யதிராஜ் 21–15, 17–21, 15–21 என்ற செட் கணக்கில் போராடி பிரான்ஸின் லூகாஸ் மசூரிடம் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கம் பெற்றார். சுஹாஸ் யதிராஜ், உ பி மாநிலம் நொய்டா மாவட்ட நீதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் பாராலிம்பிக் தொடரில் இந்தியா ஒட்டுமொத்தமாக 5 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலத்துடன் 19 பதக்கங்கள் பெற்று பதக்கப் பட்டியலில் 24ஆவது இடம்பிடித்தது. பாராலிம்பிக் வரலாற்றில் 1968 முதல் இந்தியா பங்கேற்று வருகிறது. கடந்த 2016ஆம் ஆண்டு பாராலிம்பிக் வரை மொத்தமாக 12 பதக்கங்கள் மட்டுமே பெற்றிருந்தது. ஆனால், முதல்முறையாக டோக்கியோவில் இம்முறை 19 பதக்கங்கள் குவித்து வரலாற்று சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்பு அதிகபட்சமாக 1984ஆம் ஆண்டு நியூயார்க் பாராலிம்பிக் மற்றும் 2016ஆம் ஆண்டு ரியோ பாராலிம்பிக்கில் தலா 4 பதக்கங்கள் பெற்றிருந்ததே சாதனையாக இருந்தது. இதை முறியடித்து தற்போது முதல்முறையாக இரட்டை இலக்கத்தில் பதக்கங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர் இந்தியக்குழுவினர்.

இந்தியா சார்பில் துப்பாக்கி சுடுதலில் அவனி லேகாரா, பாட்மிண்டனில் பிரமோத் பகத், கிருஷ்ணா நாகர், ஈட்டி எறிதலில் சுமித் அண்டில், துப்பாக்கி சுடுதலில்மணீஷ் நார்வால் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர். டேபிள் டென்னிஸில் பவினாபென் படேல், துப்பாக்கிச் சுடுதலில் சிங்ராஜ் அதனா, வட்டு எறிதலில் யோகேஷ் கதுனியா, உயரம் தாண்டுதலில் நிஷாத் குமார், மாரியப்பன் தங்கவேலு, பிரவீன் குமார், ஈட்டி எறிதலில் தேவேந்திர ஜஜாரியா, பாட்மிண்டனில் சுஹாஸ் யதிராஜ் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் கைப்பற்றியுள்ளனர்.

மேலும், துப்பாக்கிச் சுடுதலில் அவனி லேகாரா, வில்வித்தையில் ஹர்விந்தர் சிங், உயரம் தாண்டுதலில் சரத் குமார், ஈட்டி எறிதலில் சுந்தர் சிங் குர்ஜார், பாட்மிண்டனில் மனோஜ் சர்கார், துப்பாக்கிச் சுடுதலில் சிங்ராஜ் அதனா ஆகியோர் வெண்கலப் பதக்கம் பெற்றனர்.

பதக்கப்பட்டியலில் 96 தங்கம், 60 வெள்ளி, 51 வெண்கலம் என மொத்தம் 207 பதக்கங்கள் குவித்து சீனா முதலிடம் பிடித்தது. 41 தங்கம், 38 வெள்ளி, 45 வெண்கலம் என 124 பதக்கங்களுடன் இங்கிலாந்து 2ஆம் இடமும், 37 தங்கம், 36 வெள்ளி, 31 வெண்கலம் என 104 பதக்கங்களுடன் அமெரிக்கா 3ஆம் இடமும் பிடித்தன.

---

3. பயணம்தான், பந்தயமல்ல

சமீபகாலமாக நாடுமுழுவதிலும் உள்ள தேசிய – மாநில நெடுஞ்சாலைக –ளில்தான் அதிக அளவில் விபத்துகள் அரங்கேறுகின்றன.

மத்திய அரசின் சாலைப்போக்குவரத்து – நெடுஞ்சாலை அமைச்சகம் வெளியிட்டுள்ள 2019ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரம் இதனை உறுதி செய்கிறது. நாடு முழுவதிலுமுள்ள அனைத்துச் சாலைகளின் நீளத்தில் 2.03 சதவீதம் தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளன. ஆனால் நம் நாட்டில் ஏற்படும் சாலை விபத்து உயிரழப்புகளில் 35.7% தேசிய நெடுஞ்சாலைக –ளில்தான் நிகழ்கின்றன.

நாட்டின் மொத்த சாலைகளில் 3.01 சதவீதமாக இருக்கும் மாநில நெடுஞ் –சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் 24.8% மரணங்கள் நிகழ்கின்றன. ஆனால், உள்ளூர், கிராமப்புற சாலைகளில் நேரிடும் உயிரழப்புகள் வெறும் 39 சதவீதம்தான் என்று கூறுகின்றது புள்ளிவிவரம்.

சாலை விபத்துகளில் 69 சதவீத விபத்துகள், வாகனங்களை மிதமிஞ்சிய வேகத்தில் ஓட்டுவதாலேயே நிகழ்கின்றன. சுமார் 6 சதவீத விபத்துகள் போக்குவரத்து விதிகளை மீறுவதால் நிகழ்கின்றன.

---

1. 'ZAPAD 2021' என்ற பெயரில் பன்னாட்டு இராணுவப்பயிற்சி நடைபெறுகிற நாடு எது?



அ) ரஷ்யா ☑

ஆ) சீனா

இ) இலங்கை

ஈ) இந்தியா

✓ செப்.3–16 வரை ரஷ்யாவின் நிஷ்னியில் நடைபெறும் 'ZAPAD–2021' என்ற பன்னாட்டு பயிற்சியில் இந்திய இராணுவம் பங்கேற்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது இந்த இரண்டு வாரகால இராணுவப்பயிற்சி. யூரேசியா மற்றும் தெற்காசியாவிலிருந்து 10க்கும் மேற்பட்ட நாடுகள் இப்பயிற்சியில் பங்கேற்கின்றன. இப்பயிற்சியில் சீனாவும் பாகிஸ்தானும் பார்வையாளர் –களாக பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய ராணுவத்தின் சார்பாக 200 பேர்கொண்ட ஒரு குழு இப்பயிற்சியில் பங்கேற்கிறது.

---

2. மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளவர் யார்?



அ) J B மோகபத்ரா ☑

ஆ) இராஜேஷ் தாமோர்

இ) பிரமோத் Y தேவிகர்

ஈ) தீபா ரசல்

✓ மூத்த அதிகாரியான J B மோகபத்ரா மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 1985–தொகுதி இந்திய வருவாய் சேவை அதிகாரியான மோகபத்ரா, தற்போது வருமான வரித்துறையின் கொள்கையை உருவாக்கும் குழுவில் உறுப்பினராக உள்ளார். அமைச்சரவை நியமனக்குழுவானது CBDT இன் தலைவராக மோகபத்ரா அவர்களை நியமிக்க ஒப்புதலளித்துள்ளது.

3.துளிர்நிறுவனங்கள் துறையை ஊக்குவிப்பதற்காக பொதுத்துறை –தனியார்துறை கூட்டாண்மையின் கீழ், 'புத்தாக்க திட்டம்' ஒன்றை தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) தெலுங்கானா



ஆ) பஞ்சாப் ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கேரளா

✓ துளிர் நிறுவனங்கள் துறையை மேம்படுத்துவதற்காக முதலமைச்சர் அமரீந்தர் சிங், பொதுத்துறை – தனியார்துறை கூட்டாண்மையின் கீழ், 'புத்தாக்க திட்டம்' (Innovation **M**ission–**IMP**unjab) ஒன்றை தொடங்கினார். துளிர் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு உலக முதலீட்டாளர்களையும் நிபுணர்களையும் கொண்டுவருவதை இது தனது நோக்கமாகக் கொண் –டுள்ளது. வலுவான அரசாங்க ஆதரவுடன் தனியார் துறையால் இந்தப் பணி விரைவுபடுத்தப்படும்.

---

4. நிதி அமைச்சகத்தின் சமீப தரவுகளின்படி, ஆகஸ்ட் மாதத்தில், எவ்வளவு GST வரி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது?

அ) ₹88,000 கோடி



ஆ) ₹98,000 கோடி

இ) ₹1,12,000 கோடி ☑

ஈ) ₹1,34,000 கோடி

✓ 2021 ஆகஸ்ட் மாதம் வசூலிக்கப்பட்ட மொத்த GST வருவாய் ₹1,12,020 கோடியாகும். 2021 ஆகஸ்ட் மாத GST வருவாய், கடந்தாண்டின் இதே கால GST வருவாயைவிட 30% அதிகம். இந்த மாதத்தில், உள்நாட்டு பரிவர்த்தனை வருவாய், கடந்த ஆண்டின் இதே மாதத்தைவிட, 27% அதிகம். கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாத GST வசூல் ₹1 இலட்சம் கோடி இலக்கை கடந்துள்ளது.

---

5. "Ubreathe Life" என்ற உலகின் முதல் 'தாவர அடிப்படையிலான' ஸ்மார்ட் வளிதூய்மையாக்கியை, கீழ்க்காணும் எந்த நிறுவனத்தின் துளிர் நிறுவனம் உருவாக்கியுள்ளது?

அ) ஐஐடி–மெட்ராஸ்

ஆ) ஐஐடி–ரோபர் ☑

இ) ஐஐஎஸ்சி

ஈ) என்ஐவி

✓ உலகின் முதல் 'தாவர அடிப்படையிலான' ஸ்மார்ட் வளிதூய்மையாக்கி ஒன்றை உருவாக்கியுள்ளதாக IIT ரோபரின் ஒரு துளிர் நிறுவனம் கூறியுள்ளது. "Ubreathe Life" என்று பெயரிடப்பட்ட இதனை, அர்பன் ஏர் ஆய்வகம் உருவாக்கியுள்ளது. இது, கட்டடங்களின் உட்புறங்களில், வளி சுத்திகரிப்பு செயல்முறையை மேம்படுத்துகிறது. 'நகர்ப்புற மூணாறு விளைவு' என்றவொரு தொழில்நுட்பம் இதில் பயன்படுத்தப்படுகிறது. 'பைட்டோரெமிடேஷன்' என்பது தாவரங்கள் காற்றிலிருந்து மாசுக்களை திறம்பட அகற்றும் ஒரு செயல்முறையாகும்.

---

6. 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் (முதல் டோஸ்) தடுப்பூசி செலுத்திய முதல் இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) இமாச்சல பிரதேசம் ☑

இ) இராஜஸ்தான்

ஈ) அஸ்ஸாம்

✓ பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முதல் தவணை COVID தடுப்பூசியை செலுத்திய நாட்டின் முதல் மாநிலமாக இமாச்சல பிரதேசம் மாறியுள்ளது. ஆகஸ்ட்.31 நிலவரப்படி, இந்தியா 50 கோடி 'முதல் டோஸ்' மற்றும் 15 கோடி 'இரண்டாவது டோஸ்' என்ற இலக்கை எட்டியுள்ளது. மொத்த செலுத்தப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை 65 கோடியை தாண்டியுள்ளது. ஆகஸ்ட் மாதத்தின் இரு நாட்களில், தலா ஒவ்வொரு நாளிலும் 1 கோடிக்கும் அதிகமான தடுப்பூசிகளை வழங்கி இந்தியா சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

---

7. UNEP இன்படி, எந்த வகை பெட்ரோல், உலகத்திலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது?

அ) ஈயஞ்சேர் பெட்ரோல் ☑



ஆ) மெழுகு பெட்ரோல்

இ) உயர் ஆக்டேன்கொண்ட பெட்ரோல்

ஈ) உயர் செடேன்கொண்ட பெட்ரோல்

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) அண்மையில் ஈயஞ்சேர் பெட்ரோலின் பயன்பாடு உலகிலிருந்து ஒழிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது. இது மனித உயிர்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதில் ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது; இது உலகளவில் 1.2 மில்லியன் முன்கூட்டிய மரணங்களைத் தடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✓ குறைந்த தரமுடைய பெட்ரோலின் ஆக்டேன் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக அதில் ஈயம் சேர்க்கப்படுகிறது. அந்த ஈயமானது எந்திர செயல்திறனை அதிகரிக்கவும் உதவுகிறது.

---

8. 'ஹரா பரா' என்ற பெயரில் டிரோன் அடிப்படையிலான காடு வளர்ப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) குஜராத்



ஆ) பஞ்சாப்

இ) மணிப்பூர்

ஈ) தெலுங்கானா ☑

✓ தெலுங்கானா மாநில அரசு அண்மையில் 'ஹரா பரா' என்ற பெயரிலான டிரோன் அடிப்படையிலான காடு வளர்ப்புத்திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்தத் திட்டத்தைத் தொடங்க, ஐதராபாத்தைச் சார்ந்த டிரோன் தொழில்நுட்ப துளிர் நிறுவனமான மருத் டிரோன்ஸுடன் தெலுங்கானா மாநில அரசு கூட்டுசேர்ந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், தெலுங்கானாவின் 33 மாவட்டங்களிலும் உள்ள காடுகளில் 12,000 ஹெக்டேர் பரப்பில் 50 இலட்சம் மரங்களை நடும்.

✓ 'Seedcopter' எனப்பெயரிடப்பட்ட இது, உள்ளூர் பெண்கள் மற்றும் நலச் சமூகங்களால் விதைபந்துகளைத் தயாரிப்பதை உள்ளடக்கியது; அவை, இலக்குவைக்கப்பட்ட பகுதிகளில் டிரோன்கள் வழியாக விதைக்கப்படும்.

9.சமீபத்தில் 'நாடோடி விழாவை' நடத்திய இந்திய மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் எது?

அ) லடாக் ☑



ஆ) சிக்கிம்

இ) அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

ஈ) கேரளா

- ✓ லடாக்கின் துணைநிலை ஆளுநர் R K மாத்தூர், சமீபத்தில் கிழக்கு லடாக்கின் சாங்தாங் பகுதியில் உள்ள கோர்சோக் புவில் இரண்டு நாள் நடைபெறும் லடாக் நாடோடி விழாவை தொடங்கிவைத்தார். இந்த விழா, லடாக் கலாச்சார அகாதமியால் லடாக் சுற்றுலாத்துறையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ✓ இது சாங்தாங் பிராந்தியத்தின் தனித்துவமான கலாச்சாரத்தை முன்னி –லைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சாங்தாங்கி என்பது லடாக்கை பூர்வீகமாகக்கொண்ட ஒரு காஷ்மீர் ஆட்டினமாகும். இதனை இப்பகுதியில் வாழும் நாடோடி இனக்குழுக்கள், அதிலிருந்து பெறப்படும் சிறந்த தரமான 'பஷ்மினா கம்பளி'க்காக வளர்க்கின்றனர்.

---

10. 'Eat Right Station' சான்றிதழ் என்பது கீழ்காணும் எந்த அமைப்பின் முன்னெடுப்பாகும்?

அ) FAO

ஆ) FSSAI ☑



இ) NABARD

ஈ) FCI

- ✓ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையமானது (FSSAI), ரயில் நிலையங்களுக்கு 'Eat Right Station' என்ற சான்றிதழை வழங்குகிறது. FSSAI உடன் இணைந்த ஒரு மூன்றாந்தரப்பு தணிக்கை நிறுவனம் 1 முதல் 5 வரையுள்ள மதிப்பீடுகளுடன் சான்றிதழை வழங்குகிறது.
- ✓ பயணிகளுக்கு உயர்தரமான, சத்தான உணவுகளை வழங்கி வருவதற்காக, இந்திய இரயில்வேயின் சண்டிகர் ரயில் நிலையத்துக்கு 'Eat Right Station' என்ற 5☆ தரச்சான்றிதழை FSSAI வழங்கியுள்ளது. உணவு மற்றும் சுகாதார நடவடிக்கைகளில் தரமான நடைமுறைகளை பின்பற்றும் ரயில் நிலையங்களுக்கு FSSAI இச்சான்றிதழை வழங்குகிறது. பயணிகளுக்கு பாதுகாப்பான மற்றும் நலமான உணவு கிடைப்பதை உறுதிசெய்ய, ரயில்வே நிலையங்களில் முன்மாதிரியான முயற்சிகளை இந்த 5☆ தரமதிப்பீடு குறிக்கிறது.
- ✓ சண்டிகர் ரயில் நிலையம், பயணிகளுக்கு உயர்தர, சத்தான உணவை வழங்கியதற்காக 5☆ 'Eat Right Station' சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த சான்றிதழ் FSSAI'இன் 'Eat Right India' இயக்கத்தின் ஒருபகுதியாகும்.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மின்னுற்பத்தி திட்டத்துக்கு ஆலோசனைபெற நடுவணரசு நிறுவனத் –துடன் முதல்வர் முன்னிலையில் ஒப்பந்தம்

சென்னை தலைமைச்செயலகத்தில் தமிழ்நாடு மின்னுற்பத்தி, பகிர்மான கழகத்துக்கும், இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்துக்கும் இடையே, தமிழ்நாட்டில் மின் உற்பத்தித் திறனை மேம்படுத்த புதிய திட்டங்கள், நவீன தொழில்நுட்ப முறைகளை கையாளுதல் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

₹1,32,500 கோடி நிதி தேவை

இத்திட்டங்களை செயல்படுத்த ₹1,32,500 கோடி நிதி தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம், மரபுசாரா எரிசக்தி துறையில் திறன் படைத்த நிறுவனங்கள் கையாளும் உத்திகளை ஆய்வுசெய்து ஆலோசனைகள் வழங்கும். மேலும், இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம், சந்தை ஆய்வு, திட்டமேம்படுத்துதல், ஒப்பந்தப் புள்ளிகள் மேலாண்மை, அமலாக்கம் ஆகியவை தொடர்பாக தனது மேம்பட்ட ஆலோசனைகளை தமிழ்நாடு மின்னுற்பத்தி, பகிர்மானக் கழகத்துக்கு வழங்கும்.

---

2. ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரிக்கு அகில இந்திய விருது

சென்னை மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரிக்கு அகில இந்திய அளவில் 2ஆவது இடத்திற்கான தூய்மை மற்றும் நேர்த்தி விருது வழங்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்கள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகள் தங்கள் கல்வி வளாகங்களை தூய்மை, பசுமை வளாகங்களாக மேம்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அகில இந்திய தொழில்நுட்பக் கழகம் விருதுகள் வழங்கி ஊக்குவித்து வருகின்றது.

நாடு முழுவதும் 326 கல்வி நிறுவனங்களில் சாய்ராம் பொறியியல் கல்லூரி 2ஆம் இடத்திற்கான விருதைப் பெற்றுள்ளது.

---

3. பெரியார் பிறந்த செப்.17ஆம் தேதி சமூகநீதி நாளாக அறிவிப்பு

'பெரியார்' ஈ வெ இராமசாமியின் பிறந்தநாள் (செப்.17) ஆண்டுதோறும் சமூகநீதி நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

---

4. காரைக்குடி CECRI ஆராய்ச்சியாளருக்கு இளம் விஞ்ஞானி விருது

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள மத்திய மின்வேதியியல் ஆய்வக (CECRI) ஆராய்ச்சியாளர் கிரிபாவுக்கு, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் கழகம் (CSIR) 2021ஆம் ஆண்டுக்கான இளம் விஞ்ஞானி விருதை அறிவித்துள்ளது. இரசாயன அறிவியல் துறையில் இவராற்றிய பங்களிப்பிற்காக இவ்விருது அளிக்கப்படுகிறது. இவ்விருது வரும் செப்.26 அன்று CSIR நிறுவன நாள் விழாவில் வழங்கப்படும்.

உணவுப் பொருள்கள் கெடுவதற்குமுன் அறிந்துகொள்ளவும், மனித உடலில் ஏற்படும் நோய்களை கண்டறிந்து கொள்ளும் வகையில் இரசாயனத்தைக்கொண்டு 'திரவ–திரவ இடைமுகம்' என்ற கண்டுபிடிப் –புக்காகவும் இவ்விருதை பெற்றுள்ளார்.

---

5. நிலவை 9,000 முறை சுற்றிவந்துள்ள 'சந்திரயான்–2'

நிலவை ஆய்வுசெய்வதற்காக இந்தியா சார்பில் அனுப்பப்பட்ட 'சந்திரயான்–2' விண்கலம், நிலவை 9,000'க்கும் அதிகமான முறை சுற்றிவந்துள்ளது என்று இந்திய விண்வெளி ஆய்வு மைய (ISRO) தலைவர் கே சிவன் கூறினார். தொடர்ந்து சிறப்பாக செயல்பட்டுவரும் விண்கலத்தின் படம்பிடிக்கும் கருவியும் அறிவியல் உபகரணங்களும் நிலவுகுறித்த அரிய தகவல்களை அளித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நிலவை சுற்றிவந்து ஆய்வு செய்துவரும் 'சந்திரயான்–2' வெற்றிகரமாக இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்வதை குறிக்கும் வகையில் 'நிலவு அறிவியல் பயிலரங்கம் 2021' என்ற தலைப்பிலான இரண்டு நாள் பயிலரங்கு ISRO சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

6. இந்தியா–ஆஸ்திரேலியா இணைந்து 'ஆஸ்இண்டெக்ஸ்' என்னும் கூட்டு இராணுவப்பயிற்சி

ஆஸ்திரேலியாவின், 'ராயல் ஆஸ்திரேலியன்' கடற்படை, இந்தியாவின் கடற்படையுடன் இணைந்து AUSINDEX என்னும் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபடவுள்ளன. இந்தப் பயிற்சி ஆஸ்திரேலியாவின் வடக்கு பிராந்திய கடற்பகுதியில் நடைபெறுகிறது. AUSINDEX கூட்டு இராணுவப் பயிற்சி 2015 முதல் நடந்து வருகிறது. கடந்த 2019'இல் நீர்மூழ்கி கப்பல் முறியடிப்பு பயிற்சியை இந்தியா இந்த ஒத்திகையின்போது பெற்றது குறிப்பிடத்தக்கது. அண்மையில் குவாமில் நடந்த மலபார்–21 பயிற்சியின் நீட்சியாக இந்தப் பயிற்சி மீண்டும் நடக்கிறது.

---

7. இந்தியாவில் ஈயத்தால் ஏற்படும் மாசைக் கட்டுப்படுத்த ஐஐடி மெட்ராஸ் மற்றும் ஐஐடி கான்பூர் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு

சென்னை ஐஐடி மற்றும் கான்பூர் ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் ஈய மாசுபாட்டைக் குறைக்க உதவும் கொள்கைகளையும் கருவிகளையும் கண்டறிய ஓர் ஆய்வு நடத்துகின்றனர். ஈய மாசுபாடு மக்களின் மன மற்றும் உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிப்பதுடன் சுற்றுச்சூழலையும் மாசுபடுத்தும் என்பதால் ஈயத்தை மறுசுழற்சி செய்வது குறித்த ஆய்வை இரு கல்விநிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இந்தியாவில் 27.5 கோடி சிறார்கள் உள்பட, உலகில் மூன்றில் ஒருபங்கு சிறார்கள் ஈயத்தால் பாதிக்கப்படுவதாக UNICEF அறிக்கை தெரிவிக்கிறது.

ஈயமாசுபாட்டாஸ் பாதிக்கப்படுவர் ரத்தத்தில் ஈயத்தின் அளவு அதிகமாகி, புத்திக்கூர்மை, கவனம் ஆகியவற்றைப் பாதிப்பதுடன், இரத்த சோகை, சிறுநீரகம் மற்றும் கல்லீரல் நோய்களும் ஏற்படுகின்றன.

ஈயத்தை மறுசுழற்சி செய்யும் தொழிலாளர்கள், முறையான வழியில் மறு சுழற்சி செய்ய பயிற்சியில்லாமல், ஈயம்–அமில பேட்டரிகளை உடைத்து, நிலத்திலும் சுற்றுப்புறங்களிலும் அமிலம் மற்றும் ஈயமாசை உருவாக்குகி –ன்றனர். மேலும், திறந்த உலைகளில் ஈயத்தை உருக்குவதால் விஷ வாயுக்கள் வெளியேறி காற்றில் கலக்கின்றன. இது, பல்வேறு தீங்கான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

செலவு குறைவான வழிமுறைகளைப் பின்பற்றும் முறைசாராச் செயல்முறைகளும் அதனால் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளும் வளரும் நாடுகளில் அதிகம் காணப்படுகின்றன.

இதைத்தடுக்க கடுமையான சட்ட விதிமுறைகள் இல்லாமையும், மாற்று முறைகள் அதிக செலவு உள்ளதும் தவறான வழிமுறைகள் தொடர்வதற் –கு காரணங்களாகக் கூறப்படுகின்றன. முறைசார்ந்த மறுசுழற்சித் துறையில் வரியைக் குறைத்தல் மற்றும் மறுசுழற்சி – மறு உற்பத்தித் துறைகளுக்கு மானியம் வழங்குதல்போன்ற கொள்கைகள் ஈய மாசுபாட்டைக் குறைக்க உதவும் என்று இந்த ஆய்வு பரிந்துரைத்தது. அதே சமயத்தில், முறை சார்ந்த ஈய மறு உற்பத்தித் துறைக்கு அதிக மானியம் வழங்கப்படுவது, முறைசாரா மறுசுழற்சித்துறை முடங்க வழி வகுக்கும் என்றும் அந்த அறிக்கை எச்சரிக்கிறது.

---

8. ஓவல் டெஸ்ட்: இந்தியா 157 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்டில் இந்தியா 157 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஐந்து ஆட்டங்கள்கொண்ட தொடரில் இந்தியா தற்போது 2–1 என்ற கணக்கில் முன்னிலையில் இருக்கிறது.

பும்ரா '100' விக்கெட்

இந்த ஆட்டத்தின்மூலம் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிவேகமாக 100 விக்கெட்டுகள் வீழ்த்திய இந்திய வேகப்பந்துவீச்சாளர் என்ற பெருமையை பும்ரா பெற்றார். அவர் தனது 24ஆவது ஆட்டத்தில் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். முன்னதாக கடந்த 1980'இல் இந்திய முன்னாள் கேப்டன் கபில் தேவ் 25 டெஸ்டுகளில் 100 விக்கெட்டுகள் எட்டியதே விரைவானதாக இருந்தது.

50 ஆண்டுகளில் முதல் வெற்றி

ஓவல் மைதானத்தில் நடைபெறும் டெஸ்டில் இங்கிலாந்தை இந்தியா வீழ்த்தியது, கடந்த 1971ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவே முதல்முறை ஆகும். அந்த ஆண்டில் அஜித் வடேகர் தலைமையிலான இந்திய அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றிருந்தது. அதன்பிறகு ஓவலில் விளையாடிய எட்டு ஆட்டங்களில் இந்தியா வென்றதில்லை. அதில் ஐந்து ஆட்டங்கள் டிரா ஆக, மூன்று ஆட்டங்களில் இங்கிலாந்து வென்றிருந்தது. தற்போது 50 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஓவலில் இங்கிலாந்தை வீழ்த்தியுள்ளது இந்தியா.

---

1. பத்திரிகையாளர் நலத்திட்டத்தின் தற்போதைய வழிகாட்டுதல்க –ளை ஆய்வுசெய்ய அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?



அ) அசோக் டாண்டன் ☑

ஆ) சசி சேகர் வேம்படி

இ) நீரஜா சேகர்

ஈ) அலோக் அகர்வால்

✓ பத்திரிகையாளர் நலத்திட்டத்தின் தற்போதைய வழிகாட்டுதல்களை மதிப்பாய்வு செய்வதற்காக பன்னிருவர்கொண்ட குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது. இக்குழுவுக்கு பிரசார் பாரதி வாரிய உறுப்பினர் அசோக் டாண்டன் தலைமைதாங்குகிறார். இக்குழு, மரணத்தின்போது வழங்கப் –படும் கருணைத்தொகை மற்றும் பத்திரிகையாளர் நலத்திட்டத்தின்கீழ் உள்ள பிற வழக்குகளின் திருத்தத்தின் அவசியத்தை ஆராயும்.

---

2. முதல் BRICS திரைப்பட தொழில்நுட்ப கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்த நாடு எது?



அ) ரஷ்யா


ஆ) பிரேசில்

இ) சீனா

ஈ) இந்தியா ☑

✓ இந்தியாவின் மத்திய தகவல் & ஒலிபரப்பு அமைச்சகமும் வெளியுறவு அமைச்சகமும் இணைந்து BRICS திரைப்பட தொழில்நுட்ப கருத்தரங்கத் –தை செப்.1–2 அன்று ஏற்பாடு செய்தது. மெய்நிகர் வடிவத்தில் FICCI உடன் இணைந்து இந்தக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. BRICS உச்சி மாநாட்டிற்கு முன்னதாக திட்டமிடப்பட்ட சிறப்பு நிகழ்வின் ஒருபகுதியாக இந்தியா முதல் பிரிக்ஸ் திரைப்பட தொழில்நுட்ப கருத்தரங்கை ஏற்பாடு செய்தது. இதன் கவனம் சேவைத்துறை மற்றும் திரைப்படத்துறையில் பணியாற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை அங்கீகரிப்பதில் உள்ளது.

3.கொரோனா வைரஸின் C.1.2 திரிபானது, பின்வரும் எந்த நாட்டில் முதன்முதலில் பதிவுசெய்யப்பட்டது?



அ) சீனா

ஆ) தென்னாப்பிரிக்கா ☑


இ) இந்தியா

ஈ) அமெரிக்கா

✓ கொரோனா வைரஸின் C.1.2 திரிபானது, தென்னாப்பிரிக்காவிலிருந்து முதன்முதலில் பதிவுசெய்யப்பட்டது. உலக நலவாழ்வு அமைப்பின்படி, இந்தத் திரிபு, தற்போதுவரை குறைந்தது ஆறுநாடுகளுக்கு பரவியுள்ளது. இந்திய அரசின் கூற்றுப்படி, இந்தியாவில் இதுவரை இந்தப் புதிய C.1.2 திரிபின் பாதிப்பு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஐநா அவையின் பொதுநல அமைப்பு, இப்புதிய C.1.2 வைரஸ் திரிபை கண்காணிப்பதாக அறிவித்துள்ளது.

---

4. 'நிஞ்சா' வெடிகுண்டு என்றழைக்கப்படுகிற R9X ஹெல்பையர் ஏவுகணையுடன் தொடர்புடைய நாடு எது?



அ) அமெரிக்கா ☑

ஆ) சீனா

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) இந்தியா

✓ ஆப்கானிஸ்தானில் நிகழ்த்தப்பட்ட டிரோன் தாக்குதலில் அமெரிக்கா ஒரு சிறப்புவகை ஏவுகணையைப் பயன்படுத்தியது. வெடித்துச் சிதறுவதற்கு பதிலாக கூர்மையான கத்திகளை அது ஏவுகிறது.

✓ ஹெல்பையர் ஏவுகணையைப் பயன்படுத்தி அமெரிக்கா தனது டிரோன் தாக்குதல்களை நடத்தியது. ஹெல்பையர் ஏவுகணையில் பல்வேறு வகைகள் உள்ளன. R9X ('நிஞ்சா' வெடிகுண்டு) என அழைக்கப்படும் இது, சுமார் 45 கிலோ கிராம் எடைகொண்டதாகும். உலங்கூர்திகள், வானூர்திகள் ஆகியவற்றிலிருந்து இந்த ஏவுகணையை ஏவமுடியும். இந்த ஏவுகணைகளின் தாக்கு தூரம் 500 மீட்டர் முதல் 11 கிமீ வரை உள்ளது. அமெரிக்கப் படைகள் தொடர்ச்சியாக இரண்டு டிரோன் தாக்குதல்களை நடத்தின.

---

5. சமீபத்தில், எந்த நாட்டின் பிரதமராக இஸ்மாயில் சப்ரி யாகோப் நியமிக்கப்பட்டார்?



அ) மலேசியா ☑

ஆ) ஆஸ்திரேலியா

இ) மியான்மர்

ஈ) இந்தோனேசியா

✓ மலேசிய அரசரானவர் இஸ்மாயில் சப்ரி யாகோப்பை மலேசிய நாட்டின் பிரதமராக நியமித்துள்ளார். முகைதீன் யாசினுக்குப் பதிலாக இஸ்மாயில் சப்ரி யாகோப் பிரதமராக நியமிக்கப்பட்டார். பொது சுகாதார அமைப்பை திறம்பட நிர்வகிக்க தவறியதால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை –யை இழந்ததை அசுத்து யாசின் பதவி விலகினார்.

✓ பிரதமராக நியமிப்பதற்கு முன் துணை பிரதமராக இருந்தார் இஸ்மாயில். இஸ்மாயில், 222'க்கு 114 என்ற பெரும்பான்மை ஆதரவைப் பெற்றார்.

---

6. சமீபத்தில், ஸ்ரீநகரின் தால் ஏரியில் உள்ள ஒரு படகு இல்லத்தில், ATM வசதியைத் திறந்த வங்கி எது?



அ) பாரத ஸ்டேட் வங்கி ☑

ஆ) HDFC வங்கி

இ) ஐசிஐசிஐ வங்கி

ஈ) இந்தியன் வங்கி

✓ பாரத ஸ்டேட் வங்கியானது (SBI) உள்ளூர்வாசிகள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ஸ்ரீநகரின் தால் ஏரியில் ஒரு படகு இல்லத்தில் ATM'ஐ திறந்துள்ளது. இம்மிதக்கும் ATM'ஐ SBI தலைவர் தினேஷ் கரே திறந்துவைத்தார். SBI, 2004'இல் கேரளாவில் தனது முதல் மிதக்கும் ATM'ஐ அறிமுகப்படுத்தியது. SBI'இன் இந்த மிதக்கும் ATM கேரள கப்பல் மற்றும் உள்நாட்டு நீர்வழி கழகத்திற்கு சொந்தமான ஜாங்கர் படகில் நிறுவப்பட்டது.

---

7. "பிரைட் ஸ்டார்" என்றவொரு பன்னாட்டு இராணுவப் பயிற்சியை நடத்துகிற நாடு எது?



அ) இந்தியா

ஆ) ஜப்பான்

இ) அமெரிக்கா

ஈ) எகிப்து ☑

✓ "பிரைட் ஸ்டார்" என்பது எகிப்தில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஒரு பன்னாட்டு இராணுவப் பயிற்சியாகும். இந்த ஆண்டு பயிற்சி, அமெரிக்கா உட்பட 21 நாடுகள் பங்கேற்கின்றன. எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, இதுபோன்ற பயிற்சி 1980'இலிருந்து நடத்தப்பட்டு வருகின்றது. கடைசியாக 2018'இல் இது நடத்தப்பட்டது. அதில் 16 நாடுகள் பங்கேற்றன.

---

8. 'பத்திரகார் கல்யாண் கோஷ்' என்பது பின்வரும் எம்மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிற பத்திரிகையாளர்களுக்கான திட்டமாகும்?

அ) உத்தர பிரதேசம்

ஆ) மகாராஷ்டிரா

இ) ஹரியானா

ஈ) சத்தீஸ்கர் ☑

✓ சத்தீஸ்கர் மாநில அரசு 'பத்திரகார் கல்யாண் கோஷ்' என்ற திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இந்தத்திட்டத்தின் கீழ், COVID'ஆல் உயிரிழந்த பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

✓ மேலும், இத்திட்டத்தின்கீழ், COVID தொற்றுநோய்க்கான சிகிச்சைக்காக பத்திரிகையாளர்களுக்கு ₹2 இலட்சம் வழங்கப்படுகிறது. மூத்த பத்திரி –கையாளர் சம்மன் நிதி திட்டத்தின்கீழ், மூத்த பத்திரிகையாளருக்கான மாதாந்திர ஓய்வூதியத்தை ₹5000'லிருந்து ₹10,000 ஆக உயர்த்த அரசு முடிவுசெய்துள்ளது.

---

9. 'சுகாதார அறிவியல் பல்கலைக்கழக மசோதா' நிறைவேற்றப்பட்டு உள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) கேரளா

இ) ஒடிஸா ☑

ஈ) கர்நாடகா

✓ ஒடிஸாவின் சட்டமன்றம் சமீபத்தில் சுகாதார அறிவியல் மசோதா–2021ஐ நிறைவேற்றியது. இந்த மசோதா, மாநிலத்தின் அனைத்து மருத்துவ மற்றும் துணை மருத்துவ நிறுவனங்களையும் ஒரே சுகாதார அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவர எண்ணுகிறது. தற்போது, அந்த மாநிலத்தின் பல்வேறு மருத்துவ & துணை மருத்துவ நிறுவனங்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

✓ இந்த மசோதா, பல்வேறு தரப்பினரின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

---

10. உலக அஞ்சல்தலை கண்காட்சியான 'Philanippon 2021' எங்கு நடைபெற்றது?

அ) சீனா

ஆ) மலேசியா

இ) தைவான்

ஈ) ஜப்பான் ☑

✓ 'Philanippon–2021' என்ற உலக அஞ்சல்தலை கண்காட்சியானது, சமீபத்–தில் ஜப்பானின் டோக்கியோ நகரத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வு, ஜப்பானில் அஞ்சல் சேவை தொடங்கப்பட்டதைக் குறிக்கும் வகையில் கடந்த 1971 முதல் ஒவ்வொரு பத்து ஆண்டுக்கும் ஒருமுறை ஜப்பானில் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு, ஜப்பான் தனது அஞ்சல் சேவையின் 150ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஜனவரி 2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

தமிழக அரசு ஊழியர்களுக்கு ஜனவரி 2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார். மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு அகவிலைப்படியை 17 சதவீதத்தில் இருந்து 28 சதவீதமாக உயர்த்தி கடந்த ஜூலை மாதம் முதல் வழங்கியுள்ளது. இதே அகவிலைப்படி உயர்வை அதே தேதியில் இருந்து தமிழக அரசும் வழங்கும் என ஊழியர்கள், ஆசிரியர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆனால், 2022ஆம் ஆண்டு ஏப்ரல் முதல்தான் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கரோனாவைக் காரணம் காட்டி ஏற்கெனவே 27 மாதங்களாக அகவிலைப்படி உயர்வு நிறுத்திவைக்கப்பட்டதால் அரசு ஊழியர்கள் கடும் பாதிப்பைச் சந்தித்து வருகின்றனர். அகவிலைப்படியை உடனே வழங்க வேண்டும் என்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர். அகவிலைப்படி உயர்வு வழங்குவதைத் தள்ளிவைக்கக் கூட்டாது என்றும், இதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர்.

இந்நிலையில் ஜனவரி 2022 முதல் அகவிலைப்படி உயர்வு அமல்படுத்தப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார். பட்ஜெட்டில் அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் அகவிலைப் படி உயர்வு அமலாகும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், ஜனவரி முதல் அமலாகும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனால் 16 லட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பயன் பெறுவார்கள் என்றும், அகவிலைப்படி மூன்று மாதம் முன்கூட்டியே வழங்கப்படுவதால், அரசுக்கு 1,620 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்றும் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். மத்திய அரசைப் போலவே தமிழக அரசும் அகவிலைப்படியை 28 சதவீதமாக உயர்த்தி வழங்கும் எனத் தெரிகிறது.

---

2. பத்திரிகையாளர்களுக்கு நலவாரியம்–விருது: அமைச்சர் மு பெ சாமிநாதன் அறிவிப்பு

பத்திரிகையாளர்களுக்கு நலவாரியம் மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரில் விருதளிக்கப்படும் என்று செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மு பெ சாமிநாதன் அறிவித்தார்.

செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கைமீது நடந்த விவாதங்களுக்கு பதிலளித்து அவர் வெளியிட்ட அறிவிப்புகள்:

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த பத்திரிகையாளர்கள் நலவாரியம் அமைக்கப்படும். இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களுக்கு முதல்வரின் பொதுநிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ₹3 இலட்சத்திலிருந்து ₹5 இலட்சமாக உயர்த்தப்படும்.

பத்திரிகையாளர்களின் பணிகளைமேம்படுத்த பயிற்சிகள் அளிக்கப்படும். இளம்பத்திரிகையாளர்கள் இதழியல் துறையில் உயர்கல்வி படிக்கவும், பயிற்சிபெறவும் நிதியுதவி அளிக்கப்படும். சிறந்த இதழியலாளருக்கு 'கலைஞர் எழுதுகோல் விருது' அளிக்கப்படும். இந்த விருது ₹5 இலட்சம் பரிசுத்தொகையுடன், பாராட்டுச்சான்றிதழ் அடங்கியது என அமைச்சர் மு பெ சாமிநாதன் அறிவித்தார்.

---

3. 2023'இல் இந்தியா தலைமையில் G20 மாநாடு

வரும் 2023ஆம் ஆண்டில் G20 நாடுகள் மாநாடு இந்தியா தலைமையில் நடைபெறவுள்ளது. அதற்கான இந்தியாவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த G20 மாநாடு இத்தாலி தலைமை–யில் வருகிற அக்.30–31ஆம் தேதி வரை நடைபெறவுள்ள நிலையில், 2023ஆம் ஆண்டு மாநாட்டுக்கு இந்தியா முதன்முறையாக தலைமை வகிக்கவுள்ளது. G20 கூட்டமைப்புக்கு வரும் 2024ஆம் ஆண்டு நவ.30 வரை இந்தியா தலைமை வகிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பை மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டது. அதில் கூறியிருப்பதாவது: G20 நாடுகள் கூட்டமைப்புக்கு வரும் 2022 டிச.1ஆம் தேதி முதல் இந்தியா தலைமை வகிக்கவுள்ளது. அதன்மூலம், 2023ஆம் ஆண்டில் முதன்முறையாக இந்தியா தலைமையில் அந்த கூட்டமைப்பின் மாநாடு நடைபெறவுள்ளது. அந்த மாநாட்டுக்கான இந்தியாவின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை G20 ஒருங்கிணைப்பு அதிகாரியாக மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு இருந்துவந்தார்.

G20 நாடுகள் கூட்டமைப்பில் 1999ஆம் ஆண்டு இந்தியா உறுப்பினர் ஆனது. இந்த கூட்டமைப்பில் கடந்த 2014ஆம் ஆண்டு முதல் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து நேரடியாகப் பங்கேற்று வருகிறார். இந்தியா, அமெரிக்கா, சீனா, ரஷியா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, கனடா, பிரேஸில், தென்னாப்பிரிக்கா, தென்கொரியா, ஆர்ஜென்டீனா, மெக்சிகோ, பிரான்ஸ், இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், துருக்கி, சௌதி அரேபியா, ஐரோப்பிய யூனியன் ஆகியவை G20 கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ளன.

---

4. பிரிட்டிஷ் அகாதெமி பரிசு: இறுதிப்பட்டியலில் இந்திய வம்சாவளி எழுத்தாளர்

2021ஆம் ஆண்டுக்கான பிரிட்டிஷ் அகாதெமி புத்தகப்பரிசுக்கான இறுதிப் பட்டியலில் இந்திய வம்சாவளி எழுத்தாளர் மகமூத் மம்தானியின் பெயர் இடம்பெற்றுள்ளது. இதுகுறித்து PTI செய்திநிறுவனம் தெரிவித்துள்ளதாவ–து: சர்வதேச கலாசாரப் புரிதலுக்கான பிரிட்டிஷ் அகாதெமி புத்தகப் பரிசுக்குத் தகுதியுடையவர்களின் இறுதிப்பட்டியல் வெளியிடப்பட்டது.

உலகம் முழுவதிலிருந்தும் தேர்வு செய்து இறுதி செய்யப்பட்ட அந்தப் பட்டியலில் 4 எழுத்தாளர்கள் இடம்பெற்றுள்ளனர். அவர்களில், இந்திய வம்சாவளி எழுத்தாளர் மகமூத் மம்தானியும் ஒருவர். 75 வயதான அவர், இந்தியாவைப் பூர்விகமாகக் கொண்டவர். மும்பையில் பிறந்தவர்.

இவரது 'நெய்தர் செட்லர் நார் நேட்டிவ்: தி மேக்கிங் அண்ட் அன்மேக்கிங் ஆப் பர்மனன்ட் மைனாரிட்டிஸ்' என்ற புத்தகம் பிரிட்டிஷ் அகாதெமி பரிசுக்கான இறுதிப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது. இறுதியில் மகமூத் மம்தானி தேர்ந்தெடுக்கப்பட்டால், அவருக்கு 25,000 பிரிட்டிஷ் பவுண்ட் (சுமார் ₹25 இலட்சம்) ரொக்கப்பரிசு வழங்கப்படும் என்று PTI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

1. "Atlas of Mortality and Economic Losses from Weather, Climate and Water Extremes" **என்றவொன்றை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) FAO ☑

ஆ) WMO

இ) WTO

ஈ) IMF

✓ உலக வானிலை அமைப்பானது (WMO) 'Atlas of Mortality and Economic Losses from Weather, Climate and Water Extremes'ஐ (1970–2019) வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, கடந்த ½ நூற்றாண்டில் தீவிர வானிலை, காலநிலை அல்லது நீரழுத்தத்தால் ஏற்படும் ஒவ்வொரு மூன்றாவது இறப்பும் (35 சதவீதம்) ஆப்பிரிக்காவில் நிகழ்ந்துள்ளது.

✓ உலக மக்கள்தொகையில் 17 சதவீதம் மட்டுமே ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் வானிலை, தட்பவெப்ப நிலை மற்றும் நீர்நிலைகளால் ஆப்பிரிக்காவில் நடந்த மொத்த இறப்புகளில் 89 சதவீத இறப்பிற்கு நான்கு வறட்சிகள் (1973 மற்றும் 1983 எத்தியோப்பியா, 1981 மொசாம்பிக் & 1983 சூடான்) காரணமாக இருந்தன. கிட்டத்தட்ட 99% இறப்புகள் ஆப்பிரிக்காவின் குறைந்த முதல் கீழ்–நடுத்தர வருவாய் கொண்ட நாடுகளில் நிகழ்ந்துள்ளன.

---

2. 2021 செப்டம்பரில் பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறையால் நடத்தப்படும் நிகழ்வின் பெயர் என்ன?

அ) ஷிக்ஷக் பர்வ் ☑



ஆ) ஷிக்ஷக் கால்

இ) ஷிக்ஷக் செப்டம்பர்

ஈ) வித்யா பர்வ்

✓ பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத்துறையானது சிக்ஷக் பர்வ்–2021'ஐ செப்.5 முதல் 20 வரை கொண்டாட முடிவுசெய்துள்ளது. குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் செப்டம்பர்.5 அன்று மெய்நிகர் முறையில் 44 விருதுகளை வழங்குகிறார்.

✓ தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் சிறப்பையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிப்பதற்காக ஆசிரியர்களுக்கான தேசிய விருதுகள் 1958ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

---

3. ஆண்டுதோறும் நடைபெறும் கிழக்குப் பொருளாதார மன்றத்தின் (EEF) கூட்டம் நடைபெறும் நாடு எது?

அ) சுவிச்சர்லாந்து

ஆ) ரஷ்யா ☑

இ) ஜப்பான்

ஈ) சிங்கப்பூர்

✓ கிழக்குப் பொருளாதார மன்றம் என்பது ரஷ்யாவின் விளாடிவோஸ்டாக் நகரில் நடைபெறும் வருடாந்திர சந்திப்பாகும். இது ரஷ்யாவின் வளம் நிறைந்த ஆனால் வளர்ச்சியடையாத தூரக்கிழக்குப்பகுதிகளில் அந்நிய முதலீடுகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2019ஆம் ஆண்டில், பிரதமர் மோடி, தூரக்கிழக்கிற்கு 1 பில்லியன் டாலர் கடனை அறிவித்தார். முன்மொழியப்பட்ட சென்னை–விளாடிவோஸ்டாக் கடல் வழிப்பாதை இருதரப்பு உறவுகளை ஒன்றாக ஊக்குவிக்கும்.

✓ மசகான் டாக்ஸ் லிமிடெட், ஸ்வெஸ்டாவில் உள்ள ரஷ்ய கப்பல்கட்டும் வசதியுடன் கூட்டுசேர்ந்து முக்கிய வணிகக் கப்பல்களை உருவாக்கும். ககன்யான் திட்டத்தின் மூலம் இந்தியாவும் ரஷ்யாவும் விண்வெளி ஆராய்ச்சியில் பங்குதாரர்களாக உள்ளன.

---

4. நெகிழி ஒப்பந்தத்தை வெளியிட்டுள்ள முதல் ஆசிய நாடு எது?

அ) தாய்லாந்து

ஆ) நேபாளம்

இ) இந்தியா ☑

ஈ) இலங்கை

✓ இயற்கைக்கான உலகளாவிய நிதியம் (WWF இந்தியா) மற்றும் இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு ஆகியவை இணைந்து நெகிழிக்கான ஒரு சுழற்சி அமைப்பை ஊக்குவிக்க ஒரு தளத்தை உருவாக்கியுள்ளன. புதிய தளம், 'இந்தியா நெகிழி ஒப்பந்தம்' என்று அழைக்கப்படுகிறது.

✓ இந்தியா, ஆண்டுக்கு 9.46 மில்லியன் டன் நெகிழிக்கழிவுகளை உருவாக்குகிறது; அதில் 40% சேகரிக்கப்படாமல் உள்ளது. நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து நெகிழியிலும் சரிபாதி பேக்கேஜிங்கில் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலானவை ஒற்றைப்பயன்பாட்டு நெகிழி ஆகும். நெகிழி பேக்கேஜிங்கைக் குறைத்தல், புதுமைப்படுத்துதல் மற்றும் மறு–ஆக்கம் செய்வதற்கான இலக்குகளை இது கொண்டுள்ளது.

---

5. பனிச்சிறுத்தை மற்றும் கருப்பு கழுத்து கொக்கு ஆகியவற்றை மாநில விலங்கு மற்றும் பறவையாக ஏற்றுக்கொண்ட மாநிலம் எது?

அ) தில்லி

ஆ) ஹரியானா

இ) பஞ்சாப்

ஈ) லடாக் ☑



✓ லடாக் யூனியன் பிரதேச விலங்காக பனிச் சிறுத்தை, பறவையாக கருப்புக் கழுத்து கொக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு இனங்களும் அழிவின் விளிம்பில் உள்ள இனங்களாகும். கருப்பு கழுத்து கொக்குகள் லடாக்கை பூர்வீகமாகக் கொண்டவை. அதே நேரத்தில், பனிச்சிறுத்தைகள் இந்த பகுதியில் அதிகம் காணப்படுகின்றன.

✓ IUCN'இன்படி, கருப்பு கழுத்து கொக்கு, "கிட்டத்தட்ட அருகிவிட்ட இனம்" ஆகும். பனிச்சிறுத்தை "அழிவாய்ப்பு நிலையிலுள்ள இனம்" ஆக உள்ளது. 2019 ஆகஸ்ட் வரை ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தின் மாநிலப் பறவையாக கருப்பு கழுத்து கொக்கு இருந்தது.

---

6. புதிய 'காலநிலை நிதி தலைமைத்துவ முன்னெடுப்பு – இந்தியா' கூட்டாண்மையானது எந்த நாட்டுடன் கையெழுத்திடப்பட்டது?

அ) அமெரிக்கா

ஆ) பிரான்ஸ்

இ) இங்கிலாந்து ☑

ஈ) ஆஸ்திரேலியா

✓ 11ஆவது இந்தியா–இங்கிலாந்து பொருளாதார & நிதி பேச்சுவார்த்தையில், இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் இங்கிலாந்து அதிபர் ரிஷி சுனக் ஆகியோர் சந்தித்துக் கொண்டனர். பசுமைத் திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆகியவற்றில் பொது மற்றும் தனியார் முதலீடுகளின் $1.2 பில்லியன் டாலர் தொகுப்பில் அவர்கள் இருவரும் கையெழுத்திட்டனர்.

---

7. இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் மற்றும் எறிகணை கண்காணிப்பு கப்பலின் பெயர் என்ன?

அ) அஜித்

ஆ) துருவ் ☑

இ) நரேன்

ஈ) ருத்ரா



✓ இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் & எறிகணை கண்காணிப்பு கப்பலான 'துருவ்' விசாகப்பட்டினத்திலிருந்து இந்திய கடற்படையில் இணைக்கப்படவுள்ளது. இந்தக் கப்பல் ஹிந்துஸ்தான் கப்பல்கட்டும் நிறுவனத்தால் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

✓ எதிரிநாட்டு நீர்மூழ்கிக்கப்பல்களை கண்டறிதலுக்காக 'INS துருவ்' கடல் படுக்கைகளை வரைபடமாக்க முடியும்.

---

8. SAGAR திட்டத்தின்கீழ், இந்திய கடற்படையின் கடல்ரோந்துக் கப்பலான INS சாவித்திரி, எந்த நாட்டில் உள்ள சாட்டோகிராம் துறைமுகத்திற்கு சென்றது?

அ) இலங்கை **ஆ) வங்காளதேசம் ☑**

இ) நேபாளம் ஈ) தாய்லாந்து



✓ இந்திய கடற்படையின் கடல் ரோந்து கப்பலான ஐஎன்எஸ் சாவித்ரி வங்காளதேசத்தின் சாட்டோகிராம் துறைமுகத்திற்கு சென்றடைந்தது.

COVID-19 தொற்றை கையாளுவதில் வங்கதேசத்தின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு ஆதரவாக இரண்டு 960 LPM மருத்துவ ஆக்ஸிஜனை அது எடுத்துச்சென்றது. இவை இந்தியாவில் DRDOஆல் உருவாக்கப்பட்-டு தயாரிக்கப்பட்டது. இந்தக் கப்பல் சட்டோகிராம் துறைமுகத்திலிருந்து புறப்படும் போது BN கப்பலுடன் கடல்சார் கூட்டுப்பயிற்சியில் பங்கேற்க திட்டமிட்டுள்ளது.

---

9. பாராலிம்பிக்ஸ் பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் இஆப அதிகாரி யார்?

அ) சுஹாஸ் யாதிராஜ் ☑



ஆ) தேவேந்திர ஜஜாரியா

இ) யோகேஷ் கதுனியா

ஈ) பாவினா படேல்

✓ நொய்டா மாவட்ட நீதிபதி சுஹாஸ் L யாதிராஜ், பாராலிம்பிக்கில் பதக்கம் வென்ற முதல் இஆப அதிகாரியாக என்ற வரலாறுச் சாதனையை படைத்தார். அவர் இந்தோனேசியாவின் ஃப்ரெடி செட்டியவானை SL 4-குரூப் ஏ'இல் தோற்கடித்தார். அவர் முன்பு 2017 மற்றும் 2019'இல் BWF துருக்கிய சாம்பியன்ஷிப்பில் பல பதக்கங்களை வென்றுள்ளார். அவர் 2020'இல் பிரேசிலில் தங்கப்பதக்கத்தையும் வென்றார்.

---

10. எந்த நிறுவனத்துடன் இணைந்து, இஸ்ரோ, விண்வெளியில் நுண்ணுயிரிகளை வளர்க்க ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளது?

அ) ஐஐடி-மெட்ராஸ்



ஆ) ஐஐடி-பம்பாய்

இ) ஐஐஎஸ்சி ☑

ஈ) டிஆர்டிஓ

✓ இந்திய அறிவியல் நிறுவனம் (IISc) மற்றும் இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் குழு இணைந்து விண்வெளியில் நுண்ணுயிரிகளை வளர்ப்பதற்கான ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளன. இந்தச் சாதனம் நுண்ணுயிர் மற்றும் பாக்டீரியா வளர்ச்சியைக்கண்காணிக்க எல்இடி மற்றும் போட்டோடியோட் உணரி கலவையைப் பயன்படுத்துகிறது.

✓ இந்தச் சாதனம் விண்வெளி வீரர்களால் இந்தியாவின் முதல் குழு விண்கலமான 'ககன்யான்' பயணத்தின் போது விண்வெளியில் உயிரியல் பரிசோதனைகளை மேற்கொள்ள பயன்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கவிஞர் புலமைப்பித்தன் காலமானார்

கவிஞரும், பாடலாசிரியருமான புலமைப்பித்தன் உடல்நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 08-09-2021 காலமானார். அவருக்கு வயது 85.

பிரபல திரைப்படப் பாடலாசிரியராக அறியப்பட்ட புலமைப்பித்தன் (85), தமிழக சட்ட மேலவையின் முன்னாள் துணைத் தலைவராகவும் இருந்தவர்.

---

2. ஜவுளி உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.10,683 கோடி திட்டம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

ஜவுளித் துறையில் ரூ.10,683 கோடி மதிப்பிலான உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்துக்கு (பிஎல்ஐ) பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டத்தால் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு பெரும் பயன் கிடைக்கும். தில்லியில் மத்திய அமைச்சரவைக் கூட்டம், பிரதமர் மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு முடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. கூட்டத்துக்குப் பிறகு, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் பியூஷ் கோயல் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

'தற்சார்பு இந்தியா' என்ற தொலைநோக்குப் பார்வையை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியாக, உள்நாட்டு உற்பத்தியையும், ஏற்றுமதியையும் அதிகரிக்கும் நோக்கில் 13 முக்கியத் துறைகளில் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டத்துக்கு (பிஎல்ஐ) மத்திய பட்ஜெட்டில் ரூ.1.97 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் ஒரு பகுதியாக, செயற்கை இழை மற்றும் தொழில்நுட்பத்துக்கான பிரத்யேக இழை சார்ந்த ஜவுளித் துறையில் உள்நாட்டு உற்பத்தி, ஏற்றுமதியை அதிகரிக்க அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.10,683 கோடி திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

13 துறைகளுக்கு பிஎல்ஐ திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதன் வாயிலாக இந்தியாவின் குறைந்தபட்ச உற்பத்தி அடுத்த 5 ஆண்டுகளில் சுமார் ரூ. 37.5 லட்சம் கோடியாகவும், இதே காலகட்டத்தில் குறைந்தபட்ச வேலைவாய்ப்பு சுமார் ஒரு கோடியாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெவ்வேறு ஊக்குவிப்புக் கட்டமைப்புடன் இரண்டுவிதமான முதலீடுகளுக்கு வாய்ப்புள்ளது. குறைந்தபட்சம் ரூ. 300 கோடி முதலீடு செய்ய விரும்பும் எந்த நபரும் திட்டத்தில் பங்கேற்க விண்ணப்பிக்கலாம். இரண்டாவதாக, குறைந்தபட்சம் ரூ. 100 கோடி முதலீடு செய்ய விருப்பமுள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். மேலும், விருப்பம் உள்ள மாவட்டங்கள், 3 மற்றும் 4-ஆம் நிலை நகரங்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் முதலீடு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதன்மூலம் பின்தங்கிய பகுதிகளுக்கும் தொழில் துறை சென்றடையும். இந்தத் திட்டத்தால் தமிழ்நாடு, குஜராத், உத்தர பிரதேசம், மகாராஷ்டிரம், பஞ்சாப், ஆந்திரம், தெலங்கானா, ஒடிஸா உள்ளிட்ட மாநிலங்களில் மாபெரும் மாற்றம் ஏற்படும் என்றார் அவர்.

---

3. அரசுத் துறைகளை எண்மமயமாக்க புதிய திட்டம்

அரசுத் துறைகளின் செயல்பாடுகளை படிப்படியாக எண்மமயமாக்க, 'எண்ம (டிஜிட்டல்) தமிழ்நாடு' என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என்று தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவித்தார். சட்டப் பேரவையில் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகளுக்கு பதிலளித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்புகள்:-

வெளிப்படையான நிர்வாகத்தை குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு மின்னாளுகையை படிப்படியாக அரசின் அனைத்து நிலைகளிலும் புகுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதை நோக்கமாகக் கொண்டு 'எண்ம தமிழ்நாடு' திட்டம் செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட மற்றும் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக எண்மமயமாக்கப்படும். தரவுகளை ஏற்படுத்தி அவற்றை பகுப்பாய்வு செய்து அதன்மூலம் கொள்கைகளை வகுக்க ஏதுவாக, தமிழக அரசின் கொள்கை முடிவுகளுக்கான ஆதரவு அமைப்பு செயல்படுத்தப்படும். தரவுகளின் அடிப்படையில் அமைந்த ஆளுகையை முதலமைச்சரின் தகவல் பலகை வழியாக வழங்கவும், பல்வேறு தரவுத்தளப் பயனாளிகளின் தகவல்களை ஒருங்கிணைந்த வகையில் காண்பதற்கும் இந்த அமைப்பு உதவும்.

எண்மமயமாக்கும் திட்டம்: தமிழக அரசுத் துறைகளின் அலுவலகச் செயல்பாடுகளை எண்மமயமாக்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்படும். இது விரைந்து முடிவெடுப்பதற்கான செயல்திறனை மேம்படுத்த உதவும். இது காகிதப் பயன்பாட்டைக் குறைக்கவும் உதவும். இந்தத் திட்டம் முதல்கட்டமாக தலைமைச் செயலகத்தில் இந்த ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும். இரண்டாவது கட்டமாக பிற அரசுத் துறை அலுவலகங்களில் அமல்படுத்தப்படும். இணையவழி வாணிபத்தின் வளர்ச்சி, வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில், தரவு மையங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. அடுத்த 4 ஆண்டுகளுக்குள் அதன் வளர்ச்சி விகிதம் 4 சதவீதத்துக்கும் மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு தரவு மையக் கொள்கை வெளியிடப்படும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆற்றல்மிக்க உலகளாவிய திறன் மையங்களை ஈர்க்கும் முக்கிய மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது.

இதன் மூலம் மாநிலத்தை உலகளாவிய திறன் மையங்களுக்கான முக்கிய முனையமாக மாற்றிடும் வகையில் திறன் மையக் கொள்கை வெளியிடப்படும்.

மெய்நிகர் அருங்காட்சியகம்: மெய்நிகர் அருங்காட்சியகம், தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் அமைக்கப்படும். இதன்மூலம் தமிழகத்தின் பாரம்பரியம், வரலாற்றுச் சின்னங்கள், கலைப் பொருள் குறித்த ஆவணங்களை மெய்நிகர் மூலமாக அறிந்திட முடியும். இந்த அருங்காட்சியகம் மூன்று ஆண்டுகளுக்குள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் உள்ள

புத்தகங்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றைக் கொண்ட மின்நூலகத்தை பார்வைக் குறைபாடு கொண்டவர்களும் எளிதாக வாசிக்க, உள்ளடக்கத் தமிழ் மின்நூலகமாக மாற்றப்படும். அரிய ஒலி–ஒளி ஆவணங்கள், ஒளிப்படங்கள், புகைப்படங்கள் ஆகியன மின்னுருவாக்கம் செய்யப்படும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உலகளாவிய நிறுவனங்களுடன் இணைந்து யூமாஜின் எனும் வருடாந்திர தொழில்நுட்பத் தலைமை உச்சி மாநாடு தமிழகத்தின் பல்வேறு சுற்றுலா நகரங்களில் நடத்தப்பட உள்ளது. முதலாவது மாநாடு சென்னையில் நடத்தப்படும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் அறிவித்தார்.

3–வது நிலை நகரங்களில் ஐ.டி. பூங்கா

தமிழகத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்தார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிவிப்பு: வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியை ஊக்குவிக்கவும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் படிப்படியாக அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்

---

4. இந்திய விமானப் படைக்கு புதிதாக 56 போக்குவரத்து விமானங்கள்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

இந்திய விமானப் படைக்கு புதிதாக 56 போக்குவரத்து விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது பயன்பாட்டில் இருக்கும் அவ்ரோ விமானங்களுக்கு மாற்றாக, சி–295 ரக விமானங்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. பிரதமர் மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்ட முடிவுகள் குறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

ஸ்பெயினில் உள்ள ஏர்பஸ் டிபன்ஸ் அண்ட் ஸ்பேஸ் நிறுவனத்திடம் இருந்து 16 விமானங்கள் கொள்முதல் செய்யப்படும். இந்த விமானங்கள் 48 மாதங்களில் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும். 40 விமானங்கள், டாடா நிறுவனம் தலைமையிலான கூட்டமைப்பு சார்பில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட உள்ளன. இந்த விமானங்கள், 10 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷியா–இந்தியா இடையே ஒப்பந்தம்:

புவி அறிவியல் துறையில் இந்தியா, ரஷியா இடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி, இந்திய புவியியல் ஆய்வு நிறுவனமும், ரஷியாவின் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி ராஸ்ஜியாலோஜியா நிறுவனமும் இணைந்து கனிம வள ஆராய்ச்சி, வான் புவி இயற்பியல் தரவுகளின் ஆய்வு, பிளாட்டினம் குழும கூறுகள் (பிஜிஇ) மற்றும் அரிய பூமிக் கூறுகளின் (ஆர்இஇ) ஆராய்ச்சி ஆகியவற்றில் ஒத்துழைப்புடன் செயல்படும்.

இந்தியா–அஜர்பைஜான் இடையே ஒப்பந்தம்:

இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனத்துக்கும், அஜர்பைஜான் குடியரசின் தணிக்கையாளர் மன்றத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தொழில்முறை கணக்கியல் பயிற்சி, தொழில் நெறிமுறைகள், கணக்கியல் சார்ந்த அறிவை மேம்படுத்துதல், தொழில்நுட்ப ஆராய்ச்சி, தொழில்முறை மற்றும் அறிவுசார் வளர்ச்சி ஆகிய துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பு ஏற்பட இந்த ஒப்பந்தம் உதவிகரமாக இருக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியா–போர்ச்சுகல் இடையே ஒப்பந்தம்:

போர்ச்சுகல் குடியரசில் இந்திய குடிமக்களைப் பணியில் அமர்த்துவதற்காக, இந்தியா– போர்ச்சுக்கல் அரசுகளுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

1.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற கர்பி அமைதி ஒப்பந்தத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ) ஹரியானா

ஆ) அஸ்ஸாம் ☑

இ) மேகாலயா

ஈ) மிசோரம்



✓ நடுவணரசு, அஸ்ஸாம் மாநில அரசு மற்றும் கர்பி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு இடையேயான "கர்பி அமைதி ஒப்பந்தத்தில்" இந்திய அரசு கையெழுத்திடவுள்ளது. வடகிழக்கு இந்தியாவில், குறிப்பாக அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள முக்கிய இனங்களில் கர்பிகள் ஒன்றாகும்.

✓ அஸ்ஸாம் மாநிலத்தில் கடந்த 1980'களிலிருந்து கர்பிகள் வன்முறை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் வரலாறு உள்ளது. சமீபத்தில், இக்குழுவின் 5 கிளர்ச்சிக் குழுக்களைச் சேர்ந்த 1040 பயங்கரவாதிகள் கௌத்தியில் நடந்த ஒரு நிகழ்வில் ஆயுதங்களுடன் சரணடைந்தனர்.

---

2. 'வதன் பிரேம் யோஜனா'வை தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம்

ஆ) குஜராத் ☑

இ) ஹரியானா

ஈ) பஞ்சாப்



✓ குஜராத் மாநில அரசு 'வதன் பிரேம் யோஜனா' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்கீழ் தங்கள் சொந்த கிராமத்தின் வளர்ச்சி –க்கு நன்கொடை அளிக்க விழையும் NRI குஜராத்திகளுக்கு மாநில அரசு நிதியுதவி அளிக்கும். இந்தத்திட்டத்தின்கீழ், கிராமப்புறங்களில் பள்ளிகள், வடிகால், விளையாட்டு வளாகம்போன்ற சமூக உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான நன்கொடைகளை அரசாங்கம் ஊக்குவிக்கிறது.

---

3. ஐரோப்பிய ஒன்றிய கவுன்சிலின் தலைமையை வகிக்கின்ற நாடு எது?

அ) பெல்ஜியம்

ஆ) ஸ்லோவேனியா ☑

இ) செக் குடியரசு

ஈ) டென்மார்க்



✓ ஸ்லோவேனியா தற்போது ஐரோப்பிய ஒன்றிய கவுன்சிலின் தலைமை பொறுப்பை வகித்துவருகிறது. வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கர், ஸ்லோவேனிய அதிபர் போரட் பாஹோரை சந்தித்து இந்தியா மற்றும் ஐரோப்பிய யூனியன் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விவாதித்தார்.

✓ ஸ்லோவேனியா, குரோஷியா மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுக்குச் சென்று இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தி, ஐரோப்பிய ஒன்றியத்துடன் இந்தியாவின் ஒத்துழைப்பை அவர் வலுப்படுத்த உள்ளார். ஸ்லோவேனியாவில் நடக்கும் 'Bled Strategic' கூட்டத்திலும் ஜெய்சங்கர் கலந்துகொள்வார்.

---

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "eNaira" என்ற டிஜிட்டல் நாணயத்துடன் தொடர்புடைய நாடு எது?

அ) நைஜீரியா ☑

ஆ) சூடான்

இ) நமீபியா

ஈ) எகிப்து



✓ நைஜீரியாவின் மத்திய வங்கி "eNaira" என்ற பெயரில் தனது சொந்த டிஜிட்டல் நாணயத்தை அறிமுகப்படுத்தும் திட்டத்தை அறிவித்தது. மத்திய வங்கி அதன்சொந்த கிரிப்டோகரன்சியை வெளியிட 'பிட் இங்க்' ஐ தொழினுட்பப்பங்காளியாக கொண்டிருக்கும். eNaira ஒரு பணப்பையாக செயல்படும்; அதில் வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிக்கணக்கில் உள்ள நிதியை வைத்திருக்க முடியும்.

---

5. கஜகஸ்தானில் நடைபெறும் இந்தியா – கஜகஸ்தான் கூட்டு இராணுவப் பயிற்சியின் பெயர் என்ன?

அ) இந்திரதனுஷ்–V

ஆ) KAZIND–21 ☑

இ) யுத் அபியாஸ்

ஈ) சம்பிரிதி IX



✓ KAZIND–21 என்பது இந்தியா–கஜகஸ்தான் கூட்டு இராணுவப்பயிற்சி ஆகும். இது கஜகஸ்தானில் நடக்கிறது. இந்த ஆண்டு நடைபெறுவது KAZIND'இன் 5ஆம் ஆண்டு இருதரப்பு கூட்டுப் பயிற்சியாகும். இந்தியா சார்பாக 90 படைவீரர்களும் கஜகஸ்தான் சார்பாக 120 துருப்புக்களும் பங்கேற்கின்றன. இப்பயிற்சி, 48 மணிநேர கூட்டு சரிபார்ப்பு பயிற்சியை உள்ளடக்கியது.

---

6. செப்டம்பர்.17'ஐ சமூக நீதி நாளாகக் கொண்டாட முடிவுசெய்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) மேற்கு வங்கம்

இ) கர்நாடகா

ஈ) கேரளா



✓ சீர்திருத்தவாதி ஈ வெ ராமசாமி பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர்.17 அன்று சமூக நீதி நாளாகக் கொண்டாட தமிழக அரசு முடிவுசெய்துள்ளது. பெரியார் (1879 செப்.17 – 1973 டிச.24), முதல் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டைப் பாதுகாத்தது) இயற்றுவதில் முக்கிய பங்கு வகித்தார்.

---

7. அண்மையில், ஆன்லைன் சூதாட்டம் அல்லது பந்தயத்தை தடை செய்ய முடிவுசெய்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ) மகாராஷ்டிரா

ஆ) கோவா

இ) கர்நாடகா ☑

ஈ) சிக்கிம்



✓ கர்நாடக மாநில அரசு ஆன்லைன் சூதாட்டம் அல்லது பந்தயத்தை தடை செய்ய முடிவுசெய்துள்ளது. மேலும் கர்நாடக காவலர் சட்டம், 1963'ஐ திருத்துவதும் இதிலடங்கும். சட்டம் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் J C மதுஸ்வாமி குறிப்பிட்டுள்ளபடி குதிரைப் பந்தயங்களுக்கு இந்தத் தடை பொருந்தாது. கர்நாடக உயர்நீதிமன்றம் ஆன்லைன் பந்தயம் குறித்து ஒரு நிலைப்பாட்டை எடுக்குமாறு அம்மாநில அரசை பலமுறை கேட்டுக் கொண்டதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

---

8. நிரந்தர வதிவிட சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே "குடியுரிமைச்சான்றிதழ்" வழங்க முடிவுசெய்துள்ள மாநில/யூனியன் பிரதேசம் எது?

அ) ஜம்மு காஷ்மீர்

ஆ) லடாக் ☑

இ) சிக்கிம்

ஈ) தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி



✓ 2021 செப்டம்பர்.4 அன்று நிறைவேற்றப்பட்ட லடாக் குடியுரிமைச்சான்று ஆணை–2021'இன்படி, லடாக் நிர்வாகமானது ஜ & கா போலல்லாமல் அப்பகுதியில் நிரந்தர வதிவிட சான்றிதழ் வைத்திருப்போர்க்கு மட்டுமே "குடியிருப்புச்சான்று" வழங்க முடிவுசெய்துள்ளது. இப்புதிய குடியுரிமைச் சட்டங்கள் அயல்மாநிலத்தவர்களும் அங்கு வேலைக்கு விண்ணப்பிக்க அனுமதி வழங்குகிறது.

---

9. யாருக்கு 7ஆவது யாமின் ஹசாரிகா வுமன் ஆப் சப்ஸ்டேன்ஸ் விருது வழங்கப்பட்டுள்ளது?

அ) சுதா மூர்த்தி ஆ) அருந்ததி ராய்

இ) கிரண் தேசாய் **ஈ) நமீதா கோகலே ☑**



✓ எழுத்தாளர் நமிதா கோகலேவுக்கு 7ஆவது யாமின் ஹசாரிகா வுமன் ஆப் சப்ஸ்டேன்ஸ் விருது வழங்கப்பட்டுள்ளது. பெண் தொழில் வல்லுநர்–களின் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விருது, 2015ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 1977'இல் தில்லி மற்றும் யூனியன் பிரதேசங்களை நிர்வகித்த மத்திய காவல் சேவையான DANIPS'க்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வடகிழக்கு இந்தியாவின் முதல் பெண் யாமின் ஹசாரிகாவை இவ்விருது கௌரவித்துள்ளது.

---

10. பெஹ்லர் ஆமை பாதுகாப்பு விருது யாருக்கு வழங்கப்பட்டது?

அ) ஜோசப் L கோல்ட்ஸ்டீன்

ஆ) ஷைலேந்திர சிங் ☑



இ) ரிச்சர்ட் டாக்கின்ஸ்

ஈ) பிரியம்பதா மொஹந்தி ஹெஜ்மாடி

✓ அழிவின் விளிம்பில் உள்ள 3 ஆமை இனங்களை மீட்டதற்காக இந்திய உயிரியலாளர் ஷைலேந்திர சிங், 'பெஹ்லர் ஆமை பாதுகாப்பு' விருது வழங்கப்பட்டது. ஆமை உயிர்வாழ் கூட்டணி, IUCN/SSC ஆமை மற்றும் நன்னீர் ஆமை நிபுணர் குழு, ஆமை பாதுகாப்பு நிதியம்போன்ற ஆமை பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள பல உலகளாவிய அமைப்புகளால் இந்த விருது வழங்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தின் புதிய ஆளுநராக ஆர் என் ரவி நியமனம்

தமிழகத்தின் புதிய ஆளுநராக ஆர் என் இரவியை நியமனம் செய்து குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டுள்ளார். தமிழ்நாடு ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித், பஞ்சாப் மாநிலத்தின் முழு நேர ஆளுநராக நியமனம் செய்யப்பட்டதை அடுத்து, நாகாலாந்து ஆளுநராகப் பொறுப்பு வகித்து வரும் ஆர் என் இரவி, தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உத்தரகண்ட் ஆளுநராக இருந்த பேபி இராணி மயூராவின் ராஜிநாமா கடிதத்தை குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் ஏற்றுக் கொண்டார். இதனையடுத்து உத்தரகண்ட் ஆளுநராக லெப்டினெண்ட் ஜெனரல் குர்மித் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். ஆர் என் ரவி வகித்துவந்த நாகாலாந்–து ஆளுநர் பொறுப்பினை அஸ்ஸாம் மாநில ஆளுநர் ஜெக்தீஷ் முகி கூடுதலாக கவனிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

---

2. தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேட இந்தியா – வெளிநாடுகளில் ஆய்வுகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதற்கான ஆய்வுகள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். சட்டப்பேரவையில் விதி 110–ன் கீழ் அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி, இந்திய துணைக் கண்டத்திலும், கடல் கடந்து பயணம் செய்து தமிழர்கள் வெற்றித்தடம் பதித்த வெளிநாடுகளிலும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தென் மாநிலங்கள்: முதல் கட்டமாக, சங்ககாலத் துறைமுகமான முசிறி, இப்போது பட்டணம் என்ற பெயரில் கேரளத்தில் அமைந்துள்ளது. சேர நாட்டின் தொன்மையையும், பண்பாட்டையும் அறிந்து கொள்ளும் வகையில் கேரள மாநிலத் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து அங்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படும். ஆந்திர மாநிலம் வேங்கி, கர்நாடக மாநிலம் தலைக்காடு, ஒடிஸா மாநிலம் பாலூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புடைய இடங்களிலும் ஆய்வுகள் மேற்கொள்ள உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ரோமப் பேரரசின் ஒருபகுதியாக விளங்கிய எகிப்து நாட்டிலுள்ள குசிர் அல் காதிம் மற்றும் பெர்னிகா, ஓமன் நாட்டின் கோர் ரோரி ஆகிய இடங்களில் பழந்தமிழகத்தோடு இருந்த வணிகத் தொடர்பை உறுதி செய்யும் வகையில் தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. அந்தப் பகுதிகளில் அந்தந்த நாட்டின் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். தென்கிழக்காசிய நாடுகளான இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, வியத்நாம் ஆகிய நாடுகளில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அந்தந்த நாட்டுத் தொல்லியல் வல்லுநர்கள் துணையுடன் உரிய அனுமதி பெற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ் நிலப்பரப்பு: யாதும் ஊரே யாவரும் கேளிர் என உலகுக்கு அறிவித்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி இனி உலகெங்கும் பயணம் செய்வோம். இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப் பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும். இதனை சான்றுகளின் அடிப்படையில், அறிவியல் வழிநின்று நிறுவுவதே அரசின் தலையாய கடமை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

---

3. பயங்கரவாதத்துக்கு எதிராக செயல் திட்டம்

உலகை அச்சுறுத்தி வரும் பயங்கரவாதத்துக்கு எதிரான செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்த பிரிக்ஸ் நாடுகள் உறுதியேற்றுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். பிரிக்ஸ் கூட்டமைப்பில் இந்தியா, பிரேஸில், ரஷியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. அக்கூட்டமைப்பின் 13–ஆவது மாநாடு இந்தியா தலைமையில் காணொலி வாயிலாக வியாழக்கிழமை நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு பிரதமர் மோடி தலைமை வகித்தார்.

சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், பிரேஸில் அதிபர் ஜெயிர் போல்சனேரோ, தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா ஆகியோர் மாநாட்டில் பங்கேற்றனர். ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் இடைக்கால அரசை அமைத்துள்ள சூழலில் நடைபெற்ற இந்த மாநாடு முக்கியத்துவம் பெற்றது.

மாநாட்டின் கரு: '15–ஆவது ஆண்டில் பிரிக்ஸ்: நீடித்த நிலையான ஒருமித்த ஒத்துழைப்பு' என்பதே இந்த மாநாட்டின் கருப்பொருளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

---

4. தேசிய நெடுஞ்சாலைகளில் போர் விமானங்களுக்கு அவசரகால இறங்குதளம்

ராஜஸ்தான் மாநிலம், பார்மரில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில், இந்திய விமானப் படையின் விமானங்கள் தரையிறங்குவதற்கு அமைக்கப்பட்டுள்ள இறங்குதளம் வியாழக்கிழமை திறக்கப்பட்டது. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி பங்கேற்று இறங்குதளத்தை திறந்து வைத்தனர். பார்மரில் உள்ள தேசிய நெடுஞ்சாலை என்எச்–925 முதல் முறையாக, அவசரகால தரையிறக்கத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ராஜ்நாத் சிங், நிதின் கட்கரி, முப்படைகளின் தலைமைத் தளபதி விபின் ராவத் ஆகியோருடன் ஹெர்குலிஸ் சி–130ஜே ரக போர் விமானம், இந்த இறங்குதளத்தில் தரையிறக்கம் செய்யப்பட்டு, ஒத்திகை நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஏ.என்.–32 ராணுவ போக்குவரத்து விமானம், எம்.ஐ.–17வி5 ஹெலிகாப்டர் ஆகியவையும் அந்த இறங்குதளத்தில் தரையிறங்கின.

தமிழகத்திலும்...

தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் 19 இடங்களில் நெடுஞ்சாலைகளில் போர் விமானங்கள் தரையிறங்குவதற்கு அவசரகால இறங்குதளம் அமைக்கப்படும் என்று அமைச்சர் நிதின் கட்கரி கூறினார்.

---

5. ஆதிதிராவிடர்–பழங்குடியினர் நலன் காக்க தனி ஆணையம்: மசோதாவை தாக்கல் செய்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்களைக் காக்க தனி ஆணையம் அமைப்பதற்கான சட்ட மசோதாவை முதல்வர் மு.க.ஸ்டாலின், வியாழக்கிழமை தாக்கல் செய்தார். இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ளதாவது:– தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் என்ற தனி அமைப்பை உருவாக்க மசோதா வழி செய்கிறது. இந்த ஆணையத்தின் தலைவராக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான விஷயங்களில் சிறந்த நிபுணத்துவம் கொண்ட ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி இருப்பார். ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலனுக்காக பணியாற்றியுள்ள ஒருவர் துணைத் தலைவராகச் செயல்படுவார்.

ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள், பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த ஒருவர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறையில் சிறந்த நிபுணத்துவம் கொண்ட ஒருவர் என மொத்தம் 5 பேர் உறுப்பினர்களாக இருப்பர். மகளிர் ஒருவரும்

உறுப்பினராக இருப்பார். அரசு கூடுதல் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளில் இருந்து ஒருவர் உறுப்பினர் செயலாளராக செயல்படுவார். தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர் ஆகியோர் மூன்று ஆண்டுகளுக்கு பொறுப்பில் இருப்பர். தலைவருக்கான வயது வரம்பு 70 ஆண்டுகள் வரையிலும், துணைத் தலைவர், உறுப்பினர்களுக்கான வயது வரம்பு 65 ஆண்டுகள் வரையிலும் இருக்கும்.

ஆணையச் செயல்பாடுகள்: பாதிக்கப்பட்ட ஒருவர் அல்லது அவரின் சார்பில் நபர் ஒருவரால் அளிக்கப்பட்ட மனுவின் புகாரை ஆணையம் விசாரிக்கும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் மற்றும் அவற்றில் வழங்கப்பட்ட உரிமைகள் மீறப்படுவதை கண்காணிக்கும் பணியில் ஈடுபடும். அரசு ஊழியர் ஒருவரால் உரிமை மீறலைத் தடுப்பதில் கவனக் குறைவு ஏற்பட்டால் அதன்மீதும் நடவடிக்கை எடுக்கும். ஒழுங்குமுறை நடவடிக்கைக்கு பரிந்துரை: அரசு ஊழியர் ஒருவர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்களைக் காப்பது தொடர்பான கடமைகளில் கவனக் குறைவாக இருந்தால் அதனை விசாரித்து ஒழுங்குமுறை நடவடிக்கைகளைத் தொடங்க அரசுக்குப் பரிந்துரை செய்யும்.

ஆணையத்தின் அதிகாரங்கள்: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்துக்கு, ஒரு உரிமையியல் நீதிமன்றத்துக்கான அதிகாரங்கள் அனைத்தும் வழங்கப்படும். எவர் ஒருவருக்கும் விசாரணைக்கான அழைப்பாணை விடுத்தல் மற்றும் அவரது வருகையை கட்டாயப்படுத்துதல் மற்றும் அவரை உறுதிமொழியின் பேரில் விசாரணை செய்தல், ஆவணம் எதையும் கண்டறிதல் மற்றும் முன்னிலைப்படுத்துமாறு கோருதல், உறுதிமொழி ஆவணங்களின் பேரில் சான்றினைப் பெறுதல், சாட்சிகள் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காக உரிய உத்தரவுகளை அளித்தல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களை பாதிக்கும் முக்கியமான கொள்கைகள் குறித்து ஆணையத்திடம் அரசு ஆலோசனை செய்யலாம் என மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

6. 'பொருநை – ஆற்றங்கரை நாகரிகம்' நூல் வெளியீடு

தென்னிந்தியாவின் நாகரிகத் தொட்டில் என அழைக்கப்படும் பொருநை ஆற்றங்கரை பெயரிலான புத்தகம் தமிழக அரசின் தொல்லியல் துறை சார்பில் சட்டப்பேரவையில் வியாழக்கிழமை வைக்கப்பட்டது. தமிழகச் சட்டப்பேரவையில் வியாழக்கிழமை முதல்வர் மு.க.ஸ்டாலின் 110–ஆவது விதியின் கீழ் தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி இந்தியாவிலும் கடல் கடந்து அயல்நாடுகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் அறிவித்தார்.

மேலும், ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் கிடைத்த அரிய பொருள்களைக் காட்சிப்படுத்தும் விதமாக திருநெல்வேலியில் நவீன வசதிகளும் பொருநை அருங்காட்சியம் அமைக்கப்படும் என அறிவித்தார். இந்த பொருநை நதியின் சிறப்பைக் குறிக்கும் வகையில் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் 76 பக்கங்களைக் கொண்ட பொருநை – ஆற்றங்கரை நாகரிகம் என்ற தலைப்பில் வண்ணப் புத்தகம் அச்சிடப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் பேரவையில் வைக்கப்பட்டது.

---

7. தென் தமிழக பொக்கிஷங்களை காட்சிப்படுத்த நெல்லையில் ரூ.15 கோடியில் நவீன அருங்காட்சியகம்

தென் தமிழகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட அரிய பொக்கிஷங்களை காட்சிப்படுத்த நெல்லையில் ரூ.15 கோடியில் நவீன அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். சட்டப் பேரவையில் விதி 110–ன் கீழ் வியாழக்கிழமை அவர் படித்தளித்த அறிக்கை:– தமிழ்நாடு தொல்லியல் துறையால் இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வின் போது ஆதிச்சநல்லூருக்கு அருகே சிவகளைப் பறம்புப் பகுதியில் முதுமக்கள் தாழி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இதிலிருந்த நெல்மணிகள் அமெரிக்க நாட்டின் மியாமி நகரத்தில் அமைந்திருக்கும் உலகப் புகழ்பெற்ற பீட்டா பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டன. இதன் ஆய்வு முடிவுகள் கிடைத்துள்ளன.

கி.மு.1,155–ஆம் ஆண்டு: முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகளின் காலம் கி.மு.1,155 எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தண்பொருநை என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3, 200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிசெய்ய முடிகிறது. இதனை அறிவிப்பில் அளவிட முடியாத பெருமிதமும், மனமகிழ்ச்சியும் கொள்கிறேன். பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்து கொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், இந்தியாவில் வேறெந்த மாநிலத்தை விடவும் அதிகளவு நிதியாக ரூ.5 கோடி நிகழ் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்த அரிய பொருள்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் ரூ.15 கோடியில் நவீன வசதிகளுடன் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

கீழடி நாகரிகம்: கீழடியில் தொடர்ந்து அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கு அண்மையில் சூரியன், நிலவு மற்றும் வடிவியல் குறியீடுகள் கொண்ட முத்திரைகளுடன் கூடிய வெள்ளிக் காசு கண்டெடுக்கப்பட்டது. அதை ஆய்வு செய்த தலைசிறந்த நாணயவியல் அறிஞரும், கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா பாசு மஜூம்தார், வெள்ளிமுத்திரைக் காசானது கி.மு.நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கருத்துத் தெரிவித்துள்ளார். ஏற்கெனவே, கரிம பகுப்பாய்வு முடிவுகளின்படி, கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தமிழி எழுத்துகளின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை வலுப்படுத்தும் விதமாக இப்போது பெறப்பட்ட இரண்டு கரிம மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளிலும் கீழடி நாகரிகம் கி.மு.ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் தெரிய வந்துள்ளது.

கொற்கையிலும் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அகழாய்வில் இப்போது கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற கங்கை சமவெளியைச் சேர்ந்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இதன்மூலம், கொற்கைத் துறைமுகமானது, கி.மு.ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே வெளிநாடுகளுடனும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பது உறுதியாகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

---

8. தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் சென்னை ஐ.ஐ.டி. முதலிடம்

2021–ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசையில் சென்னை ஐஐடி ஒட்டுமொத்தப் பிரிவிலும், பொறியியல் பிரிவிலும் தொடர்ந்து மூன்றாவது முறையாக முதலிடத்தைப் பெற்றுள்ளது. இதில், பல்வேறு பிரிவுகளில் தமிழகத்தைச் சேர்ந்த 10 கல்வி நிறுவனங்கள் (பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், தொழில்நுட்ப நிறுவனங்கள்) முதல் 10 இடங்களைப் பெற்றுள்ளன. நாடு முழுவதிலும் உள்ள கல்வி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்த தேசிய கல்வி நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு (என்ஐஆர்எஃப்) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் 2015–ஆம் ஆண்டுமுதல் கல்வி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்தி வருகிறது. இந்த நிலையில், 2021–ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலை மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வியாழக்கிழமை காணொலி வழியில் வெளியிட்டார். கல்வித் துறை இணையமைச்சர்கள் அன்னபூர்ணா தேவி, டாக்டர் சுபாஷ் சர்க்கார், டாக்டர் ராஜ்குமார் ரஞ்சன் சிங் ஆகியோரும் பங்கேற்று தரவரிசைப் பட்டியலை வெளியிட்டனர்.

ஒட்டுமொத்தப் பிரிவிலும், பொறியியலிலும் சென்னை ஐஐடி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தைப் பெற்றுள்ளது. பல்கலைக்கழகப் பிரிவிலும், ஆராய்ச்சி நிறுவனப் பிரிவிலும் பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவனம் (ஐஐஎஸ்) முதலிடம் பெற்றுள்ளது. பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் கோவை அமிர்தா விஷ்வ வித்யா பீடம் மூன்றாவது இடத்தையும், திருச்சி தேசிய தொழில்நுட்பக் கழகம் 9 –ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. மேலாண்மைப் பிரிவில்ஆமதாபாத் ஐஐஎம் முதலிடத்தில் வந்துள்ளது.

மருத்துவக் கல்லூரிகளில் தில்லி எய்ம்ஸ் முதலிடம்: கல்லூரிகள் பிரிவில் முதல், இரண்டாம் இடங்களை முறையே தில்லியின் மிரண்டா ஹவுஸ், லேடி ஸ்ரீராம் மகளிர் கல்லூரி பெற்றுள்ளன. மூன்றாம் இடத்தில் சென்னை லயோலா கல்லூரியும், ஆறாவது, ஏழாவது இடங்கள் முறையே கோவை பிஎஸ்ஜி, ஆர்.கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி ஆகியவை இடம்பெற்றுள்ளன. மருத்துவக் கல்லூரியில் நான்காவது முறையாக தில்லி எய்ம்ஸ் முதலிடத்தைப் பெற்றது. வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (சிஎம்சி) 3–ஆவது இடம் பெற்றுள்ளது. பல் மருத்துவத்தில் சென்னை சவிதா இன்ஸ்டிடியூட்

மருத்துவத் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

முதல்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆராய்ச்சி நிறுவனப் பிரிவில் பெங்களூரு ஐஐஎஸ் முதலிடமும், சென்னை ஐஐடி 2–ஆம் இடமும் பெற்றுள்ளன. மற்ற பிரிவுகளில் மருந்தியலில் தொடர்ந்து நான்காவது முறையாக ஜாமியா ஹம்தார்த்தும், கட்டடவியலில் ஐஐடி ரூர்கி, சட்டப் படிப்பில் தொடர்ந்து நான்காவது முறையாக பெங்களூரு தேசிய சட்டப் பள்ளி ஆகியவை முதலிடத்தில் உள்ளன. இந்தத் தரவரிசையில் பல்வேறு பிரிவுகளில் முதல் 10 இடங்களில் தமிழக நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், தமிழகத்தைச் சேர்ந்த 44 தொழில்நுட்ப நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் தரவரிசைப்பட்டியலில் இடம் பெற்று சாதனை படைத்துள்ளன.

---

9. இந்தியாவில் கார் தயாரிப்பு நிறுத்தம்: ஃபோர்டு அறிவிப்பு

அமெரிக்காவைச் சேர்ந்த ஃபோர்டு நிறுவனம் இந்திய ஆலைகளில் கார் உற்பத்தியை நிறுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. இதுகுறித்து அந்த நிறுவனம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளதாவது: இந்தியாவில் ஃபோர்டு நிறுவனத்துக்குச் சொந்தமாக உள்ள இரண்டு ஆலைகளில் கார் உற்பத்தி பணிகள் நிறுத்தப்படவுள்ளன. அதன்படி, சென்னை (தமிழ்நாடு), சனந்த் (குஜராத்) ஆகிய இடங்களில் ரூ.18,750 கோடி (250 கோடி டாலர்) மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட இரண்டு ஆலைகளில் தயாரிக்கப்படும் எக்கோஸ்போர்ட், ஃபிகோ, ஆஸ்பயர் உள்ளிட்ட கார்களின் விற்பனை நிறுத்தப்படும். அதற்கு பதிலாக, மஸ்தங் உள்ளிட்ட இறக்குமதி செய்யப்படும் கார்களின் விற்பனையை இந்தியாவில் தொடர நிறுவனம் முடிவெடுத்துள்ளது. மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்வதின் ஒரு பகுதியாகவே இந்த முடிவை ஃபோர்டு எடுத்துள்ளது.

சனந்த் ஆலையில் 2021 நான்காம் காலாண்டிலிருந்தும், சென்னை ஆலையில் 2022 இரண்டாவது காலாண்டிலிருந்தும் கார் தயாரிக்கும் பணிகள் முற்றிலும் கைவிடப்படும். இருப்பினும், சனந்த் ஆலையிலிருந்து என்ஜின்கள் தயாரிக்கப்பட்டு நிறுவனத்தின் சர்வதேச செயல்பாடுகளுக்காக ஏற்றுமதி செய்யப்படும் என ஃபோர்டு தெரிவித்துள்ளது. இந்தியாவில் 30 ஆண்டுகால செயல்பாட்டைக் கொண்ட ஃபோர்டு நிறுவனத்துக்கு கடந்த பத்தாண்டுகளில் மட்டும் ரூ.15,000 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. ஃபோர்டு நிறுவனத்தின் இந்த அதிரடி முடிவால் 4,000 பணியாளர்கள், விநியோகஸ்தர்கள் பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது

---

10. பாரதியார் நினைவு நாளான செப்.11 'மகாகவி நாள்' – முதல்வர் அறிவிப்பு

மகாகவி பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில், அவரது நினைவு நாளான செப்டம்பர் 11 ஆம் தேதி 'மகாகவி நாளாக' கொண்டாடப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மகாகவி பாரதியின் நூற்றாண்டு(1921–2021) நினைவு நாள் நாளை(செப்.11) அனுசரிக்கப்படுகிறது. இதையடுத்து, பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11 ஆம் தேதி 'மகாகவி நாளாக' அரசு சார்பில் கொண்டாடப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும் பாரதியின் பாடல்கள், கட்டுரைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகமாக 37 லட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படும். பாரதியின் நினைவு நாளில் மாநில அளவில் மாணவர்களுக்கு போட்டிகளை நடத்தி இளங்கவிஞர் விருது வழங்கப்படும் உள்ளிட்ட 16 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா அவன் பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானடா அதைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா" – என்று கவிமணி தேசிக விநாயகம் பாடினார். இப்படிக் கவிமணிகளையே பாடவைத்த பெரும்புலவன் பாரதியின் பெருமையைப் போற்றும் அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன். கடந்த ஆகஸ்ட் 15–ஆம் நாள் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்துவிட்டு உரையாற்றும்போது, மகாகவி பாரதியார் மறைந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டது, அவர் மறைந்த ஆண்டின் நூற்றாண்டு என்று இந்த ஆண்டைக் குறிப்பிட்டுக் காட்டினேன். நூறாண்டுகள் கழித்து மட்டுமன்று, ஆயிரமாண்டுகள் கழித்தும் உயிரோட்டமுள்ள கவிதைகளை, பாடல்களைத் தமிழ்ச் சமுதாயத்துக்கு விட்டுச் சென்றவர்தான் மகாகவி என்று போற்றப்பட்ட பாரதியார் அவர்கள்.

"பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவனொரு செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை! குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக் கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு; நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா; காடு கமழும் கற்பூரச் சொற்கோ; கற்பனை ஊற்றாம் கதையின் புதையல் திறம் பாட வந்த மறவன்; புதிய அறம் பாட வந்த அறிஞன்; நாட்டில் படரும் சாதிப் படைக்கு மருந்து! மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்; அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்; என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்" – என்று மகாகவியை வர்ணித்து எழுதியவர் தான் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். தேசப் பற்று – தெய்வப் பற்று – தமிழ்ப் பற்று – மானுடப்பற்று ஆகிய நான்கும் கலந்தவர்தான் பாரதியார். நாட்டு விடுதலைக்காகப் போராடியவராக மட்டுமே இருந்திருந்தால் அதற்காக மட்டுமே அவர் நினைவுகூரப்பட்டிருப்பார். அதையும் தாண்டி சமூக, பொருளாதார உரிமைகளுக்காகவும் எழுதியதால்தான் பாரதியார் கவிதை வரிகளாய் உலவி வருகிறார்.

பாரதியார் அவர்கள் வரகவியா, மகாகவியா, தேசியக் கவியா என்று விவாதம் நடந்து கொண்டிருந்த காலத்தில் 1947–ஆம் ஆண்டே பாரதியாரை 'மக்கள் கவி' என்று எழுதியும் பேசியும் தொடங்கியவர் பேரறிஞர் அண்ணா. ஒரு பக்கம் நிலப்பிரபுத்துவம் – இன்னொரு பக்கம் சனாதனம் – இந்த இரண்டுக்கும் இடையில் இருந்து புதுயுகத்தைப் படைக்க நினைத்தவர் பாரதி என்று அண்ணா எழுதினார்கள். அதனால்தான் கழக அரசு அமைந்து, கருணாநிதி முதலமைச்சரானபோது எட்டையபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டை அரசு சார்பில் விலைக்கு வாங்கி அதனை நினைவில்லம் ஆக்கினார்கள். அன்றைய அமைச்சர் சி.பா. ஆதித்தனார் தலைமையில் 12.5.1973 அன்று நடந்த விழாவில் பாரதியார் இல்லத்தை வரலாற்றுச் சின்னமாக அறிவித்து முன்னாள் முதல்வர் கருணாநிதி திறந்து வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக பாரதியார் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன். 1. மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11–ஆம் நாள், அரசின் சார்பில் இனி ஆண்டுதோறும் 'மகாகவி நாளாக' கடைபிடிக்கப்படும். இதனையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாநில அளவில் கவிதைப் போட்டி நடத்தி ' பாரதி இளங்கவிஞர் விருது' மாணவன் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் வழங்கப்படும். 2. பாரதியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் மற்றும் கட்டுரைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகமாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் சுமார் 37 லட்சம் பேருக்கு 10 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

3. மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவர்களில் முக்கியப் பங்காற்றிய பாரதி ஆய்வாளர்களான, மறைந்த பெ. தூரன், ரா.அ. பத்மநாபன், தொ. மு. சி. ரகுநாதன், இளசை மணியன் ஆகியோர்களின் நினைவாக அவர்தம் குடும்பத்தாருக்கும் மற்றும் மூத்த ஆய்வாளர் சீனி. விசுவநாதன், பேராசிரியர் ய. மணிகண்டன் ஆகியோருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், விருதும், பாராட்டுச் சான்றிதழும் அரசால் வழங்கி கவுரவிக்கப்படும். 4. பாரதியின் உருவச் சிலைகள், உருவம் பொறித்த கலைப்பொருட்களைப் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

5. பாரதியின் கையெழுத்துப் பிரதிகள் தேடித் தொகுக்கப்பட்டு, அவை வடிவம் மாறாமல் செம்பதிப்பாக வெளியிடப்படும். பாரதியின் வாழ்வை சிறுவர்கள் அறியும் வண்ணம் சித்திரக்கதை நூலாகவும், பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தேர்வு செய்து தமிழ்நாட்டின் புகழ்பெற்ற ஓவியர்களின் வண்ண ஓவியங்களுடன் நூல் ஒன்றாகவும் வெளியிடப்படும். மேலும் பாரதியாரின் படைப்புகள் மற்றும் பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிப்படும். 6. பாரதியாரின் நூல்கள் மற்றும் அவரைப் பற்றிய ஆய்வு நூல்கள் அனைத்தையும் தொகுத்து, எட்டையபுரம் மற்றும் திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் நினைவு இல்லங்களிலும், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரையில் அமைய உள்ள கலைஞர் நினைவு நூலகத்திலும் வைப்பதற்கு 'பாரதியியல்' என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும். 7. உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து பாரதி குறித்த நிகழ்வுகள் 'பாரெங்கும் பாரதி' என்ற தலைப்பில் நடத்தப்படும்.

8. திரைப்படங்களில் இடம்பெற்ற பாரதியாரின் பாடல்கள் மட்டுமே இடம்பெறும் இசைக்கச்சேரி 'திரையில் பாரதி' என்ற நிகழ்வாக நேரு

உள்விளையாட்டு அரங்கில் கொரோனா தொற்றுப் பரவல் முழுமையாக ஓய்ந்த பிறகு நடத்தப்படும். 9. பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு, சென்னை பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சியொன்று செய்தித்துறையின் சார்பில் நடத்தப்படும். 10. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதியார் பெயரில் ஆய்விருக்கை அமைக்கப்படும். 11. உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பாராமரிக்க அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்படும். 12. பாரதியார் படைப்புகளைக் குறும்படம் மற்றும் நாடக வடிவில் தயாரிக்க நிதியுதவி வழங்கி அவற்றை நவீன ஊடகங்களின் வழியாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

13. பாரதியாரின் உணர்வுமிக்க பாடல் வரிகளைப் பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள் போன்ற முக்கிய இடங்களில் எழுதியும் வரைந்தும் பரப்பப்படும். 14. பெண் கல்வியையும், பெண்களிடம் துணிச்சலையும் வலியுறுத்திய மகாகவி பாரதியின் பெயர், ஊரக வளர்ச்சித்துறையில் செயல்படுத்தப்படவுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாழ்வாதாரப் பூங்காவிற்கு 'மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா' எனப் பெயர் சூட்டப்படும். எழுத்தும் தெய்வம் – எழுதுகோலும் தெய்வம் என வாழ்ந்து புதுநெறி காட்டிய புலவன் பாரதியைப் போற்றுவோம்.

---

11. 'சன்சத்' தொலைக்காட்சியை செப்.15-இல் தொடக்கி வைக்கிறார் பிரதமர் மோடி

நாடாளுமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான 'சன்சத்' தொலைக்காட்சியை வரும் 15-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைக்கிறார். கூட்டத்தொடர் நடைபெறும்போது மக்களவை நடவடிக்கைகளை 'லோக் சபா' தொலைக்காட்சியும், மாநிலங்களவை நடவடிக்கைகளை 'ராஜ்ய சபா' தொலைக்காட்சியும் நேரடியாக ஒளிபரப்பி வருகின்றன. அத்தொலைக்காட்சிகளை ஒன்றாக இணைத்து 'சன்சத்' என்ற பெயரில் ஒரே தொலைக்காட்சியாக மாற்ற மத்திய அரசு முடிவெடுத்தது.

சன்சத் தொலைக்காட்சியை அதிகாரபூர்வமாகத் தொடக்கி வைப்பதற்கான நிகழ்ச்சி வரும் 15-ஆம் தேதி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறுகிறது. அதில் பிரதமர் மோடி பங்கேற்று தொலைக்காட்சியைத் தொடக்கி வைக்கிறார். குடியரசு துணைத் தலைவரும் மாநிலங்களவைத் தலைவருமான வெங்கையா நாயுடு, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர். நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் சமயங்களில் சன்சத் தொலைக்காட்சி இரு தொலைக்காட்சிகளாக செயல்படும் எனவும் இதன் மூலமாக மக்களவை, மாநிலங்களவை நடவடிக்கைகளை மக்கள் நேரடியாக அறிந்து கொள்ள முடியும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியும் ஜவுளித்துறையின் முன்னாள் செயலருமான ரவி கபூர், சன்சத் தொலைக்காட்சியின் தலைமை நிர்வாக அதிகாரியாக (சிஇஓ) நியமிக்கப்பட்டுள்ளார். காங்கிரஸ் மூத்த தலைவர் கரண் சிங், பொருளாதார நிபுணர் விவேக் தேப்ராய், நீதி ஆயோக் சிஇஓ அமிதாப் காந்த், வழக்குரைஞர் ஹேமந்த் பத்ரா, மத்திய நிதித்துறையின் முதன்மை பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ் சன்யால் உள்ளிட்டோர் கூட்டத்தொடர் நடைபெறாத சமயங்களில் சிறப்பு நிகழ்ச்சிகளை சன்சத் தொலைக்காட்சியில் தொகுத்து வழங்கவுள்ளனர்.

---

12. எரிசக்தித் துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியா–அமெரிக்கா முடிவு

எரிசக்தித் துறையில் நிலவி வரும் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் முடிவெடுத்துள்ளன. கடந்த ஏப்ரலில் நடைபெற்ற பருவநிலை மாநாட்டின்போது அமெரிக்கா–இந்தியா பருவநிலை மற்றும் தூய எரிசக்தி கொள்கை வடிவமைக்கப்பட்டது. அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் பிரதமர் நரேந்திர மோடியும் இணைந்து அக்கொள்கையை வெளியிட்டனர். அதன்படி, அமெரிக்கா–இந்தியா தூய எரிசக்தி ஒத்துழைப்பு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பின் கூட்டம் வியாழக்கிழமை காணொலி வாயிலாக நடைபெற்றது. கூட்டத்தில் மத்திய பெட்ரோலியம்–இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, அமெரிக்க எரிசக்தித் துறை அமைச்சர் ஜெனிஃபர் கிரான்ஹோம் ஆகியோர் பங்கேற்றனர்.

கூட்டம் குறித்து பெட்ரோலியத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'இந்தியா–அமெரிக்கா இடையே எரிசக்தித் துறையில் நிலவி வரும் ஒத்துழைப்பானது எரிசக்தி, எண்ணெய்–எரிவாயு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நீடித்த வளர்ச்சி ஆகிய 4 தூண்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டிருந்தது. தற்போது ஐந்தாவது தூணாக வளர்ச்சிகாணும் எரிபொருள்கள் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக தூய்மையான எரிசக்திப் பயன்பாட்டை ஊக்குவிப்பதில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் பலன்: உயிரிஎரிபொருள்கள் துறையில் ஒத்துழைப்புடன் செயல்படுவதற்கென இந்தியா–அமெரிக்கா உயிரிஎரிபொருள்கள் செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. எரிசக்தித் துறையில் மேலும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் கூட்டத்தின்போது அமைச்சர்கள் இருவரும் விவாதித்தனர்.

அணுசக்தித் துறையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நிலவி வரும் ஒத்துழைப்பு தொடர்பாக இருவரும் ஆய்வு செய்தனர். இந்தியாவின் எரிசக்தி சந்தை தொடர்ந்து விரிவடைந்து வருவதும், அமெரிக்காவில் எரிசக்தி சார்ந்த தொழில்நுட்பங்கள் வளர்ந்து வருவதும் இரு நாடுகளுக்கும் பலனளிக்கும் என்று அமைச்சர் ஹர்தீப் சிங் புரி கூட்டத்தின்போது தெரிவித்தார். உரிய ஒத்துழைப்பு: புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சார்ந்த திட்டங்களை அதிகரிப்பது தொடர்பாகக் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டது. 2030-ஆம் ஆண்டுக்குள் 450 ஜிகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்ததற்காக இந்தியாவை அமெரிக்கா பாராட்டியது. அந்த இலக்கை அடைவதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அமெரிக்கா உறுதியளித்தது.

எரிசக்தி தரவு மேலாண்மை, கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான தொழில்நுட்பங்கள், நிலக்கரி பயன்பாட்டைக் குறைத்தல், மின்சார விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்துதல் உள்ளிட்டவை குறித்தும் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

13. நிலவின் பரப்பில் சந்திரயான்–2 புதிய கண்டுபிடிப்புகள்

நிலவை ஆய்வு செய்து வரும் 'சந்திரயான்–2' விண்கலம் பல புதிய விஷயங்களைக் கண்டறிந்து, தகவல் அளித்து வருவதாக இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) தெரிவித்துள்ளது. நிலவின் பரப்பில் குரோமியம், மாங்கனீஸ் ஆகிய தாதுக்கள் படிமங்களாக இருப்பதை சந்திரயான்–2 கண்டறிந்திருப்பதோடு, நீரேற்றம் மற்றும் பனிக்கட்டி வடிவில் நீர் இருப்பதற்கான தெளிவான அறிகுறிகளையும் கண்டறிந்து அனுப்பியுள்ளது.

நிலவை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அனுப்பிய இந்த விண்கலம் இரண்டு ஆண்டுகளாக சிறப்பான முறையில் ஆய்வுப் பணியை மேற்கொண்டு வருகிறது. இதனைக் குறிக்கும் வகையில், 'நிலவு அறிவியல் பயிலரங்கம் 2021' என்ற தலைப்பிலான இரண்டு நாள் பயிலரங்கு இஸ்ரோ சார்பில் பெங்களூரு தலைமை அலுவலகத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்டது. இந்தப் பயிலரங்கில், சந்திரயான்–2 விண்கலத்தின் 'ஆர்பிட்டர்' இதுவரை அனுப்பியுள்ள தகவல்கள், ஆய்வு முடிவுகள் உள்ளிட்டவை குறித்த புள்ளி விவரங்கள், அறிவியல் ஆவணங்களை இஸ்ரோ தலைவர் கே.சிவன் வெளியிட்டார். அப்போது, 'விண்கலம் நிலவை இதுவரை 9,000-க்கும் அதிகமான முறை சுற்றிவந்துள்ளது. விண்கலம் அளிக்கும் தகவல்களும் ஆய்வு முடிவுகளும் மிகுந்த ஊக்கமளிக்கும் வகையில் உள்ளன' என்று சிவன் கூறினார். இந்த நிலையில், ஆர்பிட்டரின் கண்டுபிடிப்புகள் குறித்த மேலும் பல தகவல்களை இஸ்ரோ இப்போது வெளியிட்டுள்ளது.

நிலவை 100 கி.மீ. தொலைவில் இருந்தபடி சுற்றிவந்து ஆய்வு செய்து வரும் ஆர்பிட்டர் பகுதியில் எக்ஸ்ரே ஸ்பெக்டோமீட்டர் (கிளாஸ்), சூரிய சக்தியில் இயங்கும் எக்ஸ்ரே கண்காணிப்பு கருவி (எக்ஸ்.எஸ்.எம்), சுற்றுச்சூழல் ஆய்வு தொகுப்பு கருவி, ரேடார் கருவி, படம் பிடிக்கும் அகச் சிவப்பு ஸ்பெக்ட்ரோமீட்டர் (ஐஐஆர்எஸ்), டெரய்ன் படம்பிடிக்கும் கேமரா (டிஎம்சி2), மிகத் தெளிவாக படம்பிடிக்கும் உயர் தரத்துடன் கூடிய கேமரா (ஓஹெச்ஆர்சி), இரட்டை அதிர்வெண் ரேடியோ கருவி ஆகிய 8 விஞ்ஞான கருவிகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கருவிகள் அனைத்தும் நிலவு குறித்த பல புதிய, புதிரான தகவல்களை கண்டறிந்து வருகின்றன. குறிப்பாக, நிலவின் பரப்பில் நீரேற்றம் மற்றும் பனிக்கட்டி வடிவில் நீர் இருப்பதற்கான தெளிவான அறிகுறிகளை 'அகச் சிவப்பு ஸ்பெக்ட்ரோமீட்டர் (ஐஐஆர்எஸ்)' இதுவரை இல்லாத வகையில் கண்டறிந்து தகவல் அளித்துள்ளது.

நிலவின் மத்திய மற்றும் உயர் அட்சரேகைப் பகுதியில் புறகாற்று மண்டலத்தில் 'ஆர்கன்–40' வாயு இருப்பதை சந்திரயான்–2

சுற்றுச்சூழல் ஆய்வு தொகுப்பு கருவி கண்டறிந்துள்ளது. அதுபோல, நிலவின் பரப்பில் குரோமியம், மாங்கனீஸ் ஆகிய தாதுக்கள் படிமங்களாக இருப்பதை எக்ஸ்ரே ஸ்பெக்டோமீட்டர் (கிளாஸ்) கண்டறிந்துள்ளது. நிலவை சா்வதேச தரத்துக்கு படம் பிடித்து வரும் டிஎம்சி-2 கேமரா, நிலவின் பரப்பில் எரிமலை முகடுகள் இருப்பதை மிகத் தெளிவாக அடையாளம் கண்டுள்ளது. நிலவின் அயனி மண்டலத்தை ஆர்பிட்டரில் இடம்பெற்றிருக்கும் இரட்டை அதிர்வெண் ரேடியோ கருவி ஆய்வு செய்து தகவல் அளித்துள்ளது.

இந்த கண்டுபிடிப்புகள் குறித்த புள்ளி விவரங்கள் அனைத்தும் பொதுமக்களும் அறிந்துகொள்ளும் வகையில் 'பிரதான்' வலைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது. நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய சந்திரயான்-2 விண்கலத்தை கடந்த 2019 ஜூலை 22-ஆம் தேதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இஸ்ரோ அனுப்பியது. பல்வேறு கட்ட பயணத்துக்குப் பிறகு, சந்திரயான்-2 விண்கலம் வெற்றிகரமாக நிலவை நெருங்கியது. ஆனால், செப்டம்பர் 7-ஆம் தேதி, அதன் லேண்டர் கலன் திட்டமிட்டபடி நிலவில் தரையிறங்கவில்லை. திடீர் தொழில்நுட்பக் கோளாறால் லேண்டர் வேகமாகச் சென்று நிலவில் மோதி, செயலிழந்தது. அதேநேரம், விண்கலத்தின் மற்றொரு பகுதியான ஆர்பிட்டர், நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. ஆர்பிட்டர் கடந்த 2 ஆண்டுகளாக நிலவை சுற்றிவந்து தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

---

1. 'தி மார்னிங் கன்சல்ட்' நடத்திய ஆய்வில், எந்த நாட்டின் பிரதமர் முதலிடம் பிடித்துள்ளார்?

அ) ரஷ்யா

ஆ) ஆஸ்திரேலியா

இ) நியூசிலாந்து

ஈ) இந்தியா ☑



✓ 'தி மார்னிங் கன்சல்ட்' நடத்திய ஆய்வொன்றில், இந்தியப்பிரதமர் மோடி, 70% ஒப்புதல் மதிப்பீட்டைப்பெற்றுள்ளார். உலகளாவிய தலைவர்களின் ஒப்புதல் & மறுப்பு மதிப்பீட்டை இவ்வாய்வு கணக்கிடுகிறது. இந்தியாவில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் 70 சதவீதம் பேர் பிரதமர் மோடியின் தலைமையை அங்கீகரித்துள்ளனர்.

✓ அடுத்தபடியாக மெக்ஸிகோ அதிபர் லோபஸ் ஒபரடோர் 64% வாக்குகள், இத்தாலி பிரதமர் மாரியோ தெராகி 63% வாக்குகளுடன் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளனர். மொத்தம் 13 நாடுகளில் இந்த ஆய்வானது நடத்தப்பட்டது.

---

2. சமீப செய்திகளில் இடம்பெற்ற பஞ்சீர் பள்ளத்தாக்கு அமைந்துள்ள நாடு எது?

அ) இந்தியா

ஆ) பாகிஸ்தான்

இ) சீனா

ஈ) ஆப்கானிஸ்தான் ☑



✓ ஆப்கானிஸ்தானிலுள்ள பஞ்சீர் பள்ளத்தாக்கில், தலிபான் படைகளுக்கு எதிராக தேசிய எதிர்ப்பு முன்னணி (NRF) கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறது. போர்நிறுத்தத்திற்கு அழைப்புவிடுத்துள்ள NRF, தலிபான்கள் பஞ்சீரில் மேற்கொண்டு வரும் அவர்களது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என்றும் அது முன்மொழிந்துள்ளது. ஆப்கானிஸ்தானின் தலைநகர் உட்பட முக்கியபகுதிகள் தலிபான்களின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், பஞ்சீர் பள்ளத்தாக்கு இன்னமும் அவர்களின் கைகளுக்குச் செல்லவில்லை.

---

3. 2020 டோக்கியோ பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில், இந்திய அணி, எத்தனை பதக்கங்களைப் பெற்றுள்ளது?

அ) 6

ஆ) 17

இ) 19 ☑

ஈ) 21

✓ டோக்கியோ பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில், இந்திய அணி 5 தங்கம், 8 வெள்ளி மற்றும் 6 வெண்கலப் பதக்கங்களை உள்ளடக்கிய மொத்தம் 19 பதக்கங்களுடன் போட்டியை நிறைவுசெய்தது. மொத்தம் உள்ள 162 நாடுகளில் இந்தியா 24ஆவது இடத்திலும், பதக்கங்களின் எண்ணிக்கையில் 20ஆவது இடத்திலும் உள்ளது. இந்த ஆண்டு (2021), 9 விளையாட்டுப் பிரிவுகளில் பங்கேற்ற 54 பாரா-தடகள வீரர்களைக் கொண்ட மிகப்பெரிய குழுவை இந்தியா போட்டிக்கு அனுப்பியது.

---

4. பின்வரும் யாரின் நினைவுநாளை அனுசரிக்கும் விதமாக, செப்.5 அன்று ஐநா'இன் சர்வதேச தொண்டு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?

அ) 'சுவாமி' விவேகானந்தர்

ஆ) 'அன்னை' தெரசா ☑

இ) 'மகாத்மா' காந்தி

ஈ) 'கர்மவீரர்' காமராஜர்



✓ ஆண்டுதோறும் செப்.5ஆம் தேதியன்று சர்வதேச தொண்டு நாளாக அனுசரிக்கப்படுகிறது. 'அன்னை' தெரசாவின் நினைவுநாளையொட்டி இந்தநாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த நாள், செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கும்

✓ 2030'க்குள் SDG'களை அடைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதுதொடர்பான தீர்மானம், 2012ஆம் ஆண்டில் ஐநா பொது அவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐநா'இன் 44 உறுப்புநாடுகளால் இணைந்து இந்தத் தீர்மானம் வழங்கப்பட்டது.

5. 2015 நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட பாரம்பரிய இடங்கள் மற்றும் நலவாழ்வுத்துறை திட்டங்களை புனரமைப்பதற்காக, இந்தியா, எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ) சீனா

ஆ) பாகிஸ்தான்

இ) அமெரிக்கா

ஈ) நேபாளம் ☑



✓ இந்தியாவும் நேபாளமும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்தி-ட்டுள்ளன. அதன்கீழ் கடந்த 2015 பூகம்பத்தின்போது சேதமடைந்த 14 கலாச்சார பாரம்பரியம் மற்றும் 103 நலவாழ்வுத்துறை திட்டங்களை புனரமைப்பதற்காக இந்தியா நேபாளத்திற்கு உதவும். இந்தப்புனரமைப்பு-க்கான மொத்த செலவு 420 கோடி நேபாள ரூபாய் ஆகும்.

✓ இது பூகம்பத்திற்கு பிந்தைய இந்தியாவின் மறுசீரமைப்பு தொகுப்பின் ஒருபகுதியாகும். இதன்கீழ், இந்தியா, நேபாளத்திற்கு $250 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளது.

---

6. SIMBEX என்பது சிங்கப்பூருக்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான கடல்சார் கடற்படைப்பயிற்சியாகும்?

அ) அமெரிக்கா

ஆ) சீனா

இ) ரஷ்யா

ஈ) இந்தியா ☑



✓ சிங்கப்பூர்-இந்தியா கடல்சார் இருதரப்பு பயிற்சியின் (SIMBEX) 28ஆவது பதிப்பு தென்சீனக்கடலில் நடந்தது. COVID தொற்றுநோய் காரணமாக, இந்த ஆண்டு SIMBEX, 'கடல்சார்' பயிற்சியாக மட்டுமே நடத்தப்பட்டது. 'SIMBEX' என்பது இந்தியக் கடற்படையின் மிகப்பழமையான இருதரப்பு கடல்சார் பயிற்சியாகும்.

---

7. INSPIRE விருதுகள் – MANAK'ஐ நிறுவி வழங்கிவரும் நடுவண் அமைச்சகம் எது?

அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஆ) மின்னணு அமைச்சகம்

இ) உழவு அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

inspire awards-manak

✓ 'INSPIRE' விருதுகளுக்கான தேசிய அளவிலான கண்காட்சி மற்றும் திட்டப் போட்டி – MANAK (Million Minds Augmenting National Aspiration and Knowledge) அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் – மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் தொடங்கப்பட்டது. நாடு முழுவதுமுள்ள மாணவர்களின் கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்து-வது இதன் நோக்கமாகும்.

---

8. வானிலிருந்து ஏவக்கூடிய ஆளில்லா வான்வழி வாகனத்தை (ALUAV) உருவாக்குவதற்காக, இந்தியா, எந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்துள்ளது?

அ) அமெரிக்கா ☑

ஆ) பிரான்ஸ்

இ) ரஷ்யா

ஈ) ஜெர்மனி



✓ வானிலிருந்து ஏவக்கூடிய ஆளில்லா வான்வழி வாகனத்தை (ALUAV) உருவாக்குவதற்கான அமெரிக்க பாதுகாப்புத்துறையின் திட்ட ஒப்பந்தத்-தில் இந்திய பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. ALUAV'க்கான இந்தத் திட்ட ஒப்பந்தம், பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக முன்னெடுப்பின் ஒட்டுமொத்த கட்டமைப்பின்கீழ் உள்ளது.

✓ ALUAV முன்மாதிரியை இணைந்து உருவாக்கும் செயலில் வான்படை ஆராய்ச்சி ஆய்வகம், இந்திய வான்படை மற்றும் DRDO இடையேயான ஒத்துழைப்பும் இதிலடங்கும்.

---

9. சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்திர யாதவ், இந்தியாவின் முதல் செயல்பாட்டு பனிப்புகை கோபுரத்தை எந்நகரத்தில் திறந்தார்?

அ) தில்லி ☑



ஆ) வாரணாசி

இ) கொல்கத்தா

ஈ) லக்னோ

✓ நடுவண் சுற்றுச்சூழல், வனம் & காலநிலைமாற்ற அமைச்சர் பூபேந்திர யாதவ், இந்தியாவின் முதல் செயல்பாட்டு பனிப்புகை கோபுரத்தை தில்லி ஆனந்த் விகாரில் திறந்துவைத்தார். பனிப்புகை கோபுரம் என்பது வளிமாசைக் குறைப்பதற்காக பெரிய (அ) நடுத்தர அளவிலான காற்று தூய்மைப்படுத்திகளாக வடிவமைக்கப்பட்ட ஒரு கட்டமைப்பாகும். இந்தக் கோபுரத்தை, NBCC (இந்தியா) லிட்'ஐ திட்ட மேலாண் ஆலோசகராக வைத்துக்கொண்டு டாடா ப்ராஜெக்ட்ஸ் லிட் கட்டியுள்ளது.

---

10. PRANA தளத்தைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஆ) புவி அறிவியல் அமைச்சகம்

இ) சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ☑

✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்திர யாதவ், 2021 செப்.7 அன்று 'PRANA' என்ற இணையதளத்தைத் தொடங்கினார். தூயகாற்று மற்றும் நீலவானத்தை உறுதிசெய்வதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கு இணங்க தேசிய தூய்மைவளி திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக PRANA இணையதளம் பயன்படுத்தப்படும்.

✓ 'நீலவானிற்கான தூயவளி பன்னாட்டு நாளையொட்டி' மேன்மையுறா நகரங்களில் இது தொடங்கப்பட்டது. மேன்மையுறா நகரங்கள் என்பது 5 ஆண்டு காலப்பகுதியில் தேசிய வளி தரத்தை பூர்த்தி செய்யத் தவறிய நகரங்களாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பனாரஸ் பல்கலையில் பாரதியார் பெயரில் தமிழ் ஆய்வு இருக்கை: பிரதமர் மோடி

மகாகவி பாரதியார் நினைவுநூற்றாண்டை ஒட்டி சுப்ரமணிய பாரதியார் பெயரில் பனாரஸ் பல்கலைக்காகத்தில் தமிழ் ஆய்வு இருக்கை அமைக்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

---

2. சென்னை அம்பத்தூரில் ரூ.2,500 கோடியில் தகவல் தரவு மையம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை அம்பத்தூரில் ரூ.2,500 கோடியில் அமையவுள்ள தரவு மையத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை அடிக்கல் நாட்டினார். முதல்வரின் முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலி வழியாக புதிதாக அமையவுள்ள மையத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஜப்பான் நாட்டினை தலைமையமாகக் கொண்டு என்டிடி க்ளோபல் தரவு மைய நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் 20-க்கும் மேற்பட்ட நாடுகளில் 160 தகவல் தரவு மையங்களை நிறுவியுள்ளன. சென்னையிலும் தனது மையத்தை இந்த நிறுவனம் அமைக்க உள்ளது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:- தகவல் தரவு மையங்களை அமைத்துச் செயல்படுவதில் உலகளவில் ஒரு முன்னணி நிறுவனமாக என்டிடி செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனம் ரூ.2,500 கோடி முதலீடு செய்வதுடன், 700 பேருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையில் தகவல் தரவு மையம் மற்றும் கேபிள் இறங்குதளங்களை அமைத்திட உள்ளது. இந்தத் திட்டத்தில் 50 மெகாவாட் சூரிய மின்சக்தி பூங்காவும் நிறுவப்பட உள்ளது.

6 இடங்களில் சரக்குகளை கையாளும் முனையம்

சரக்குகளைக் கையாளும் வகையில் ஆறு இடங்களில் ரூ.2,000 கோடியில் முனையங்கள் அமைக்கப்பட உள்ளன. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசுக்கும், டிபி வேல்ார்டு குழுமம் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்டது. இதற்கான நிகழ்வு, சென்னையில் உள்ள முதல்வரின் முகாம் இல்லத்தில் நடந்தது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி: ஐக்கிய அரசு அமீரக நாடுகளைச் சோர்ந்த டிபி குழுமம், தூத்துக்குடி, திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ரூ.2,000 கோடி முதலீட்டில் கன்டெய்னர் முனையம், சிறு துறைமுகம், குளிர்பதனக் கிடங்கு, பல்பொருள் கிடங்குப் பூங்கா, நவீன வர்த்தகக் கிடங்கு மண்டலம் மற்றும் தகவல் தரவு மையம் போன்றவற்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இதற்காக தமிழக அரசுடன் அந்த நிறுவனம் சனிக்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

ரூ.2,000 கோடி முதலீட்டில் 4 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. சென்னை, திருவள்ளூர், தூத்துக்குடி, ஸ்ரீபெரும்புதூரில் கன்டெய்னர் முனையங்கள், கன்டெய்னர் சரக்கு நிலையங்கள், சுங்கக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள், உள்நாட்டுக் கிடங்கள் போன்ற பல உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்கெனவே நிறுவி உள்ளது குறிப்பிடத்தக்கது.

---

3. ரஷ்ய, ஆப்பிரிக்க சிகரங்களின் உச்சியை எட்டி சிஐஎஸ்எஃப் வீராங்கனை சாதனை

ரஷ்யா, ஆப்பிரிக்காவிலுள்ள இரண்டு சிகரங்களின் உச்சியை குறுகிய இடைவெளியில் அடைந்து மத்திய தொழிலக பாதுகாப்புப் படை வீராங்கனை (சிஐஎஸ்எஃப்) சாதனை படைத்துள்ளார். இதுதொடர்பாக தன்சானியாவிலுள்ள இந்திய தூதரக அதிகாரி பினயா பிரதான் சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், "சிஐஎஸ்எஃப் வீராங்கனை கீதா சாமோத்தா கடந்த ஆகஸ்ட் 13-ஆம் தேதி ரஷ்யாவிலுள்ள எல்பிரஸ் சிகரத்தின் உச்சியை அடைந்தார். அவர் ஆப்பிரிக்க கண்டத்தின் மிக உயர்ந்த சிகரமான கிளிமாஞ்சாரோ உச்சியை சனிக்கிழமை எட்டினார்.

இதன் மூலம் இரண்டு சிகரங்களின் உச்சியை குறுகிய கால இடைவெளியில் எட்டிய இந்தியர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்'' ' என்று தெரிவித்தார். ரஷ்யாவிலுள்ள எல்பிரஸ் சிகரம் கடல் மட்டத்திலிருந்து 5,642 மீட்டர் உயரம் கொண்டது. கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவிலுள்ள கிளிமாஞ்சாரோ சிகரம் 5,895 மீட்டர் உயரம் கொண்டது.

---

4. 'குவாலிஃபயர்' கையில் 'கோப்பை' : வரலாறு படைத்தார் எம்மா ராடுகானு

அமெரிக்காவில் நடைபெறும் யுஎஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்து வீராங்கனை எம்மா ராடுகானு (18) சாம்பியன் ஆனார். கிராண்ட்ஸ்லாம் போட்டியில் தகுதிச்சுற்று (குவாலிஃபயர்) வழியே முன்னேறி வந்து வாகை சூடிய முதல் போட்டியாளர் என்ற வரலாற்று சாதனையை அவர் எட்டியுள்ளார். நியூயார்க் நகரில் சனிக்கிழமை நள்ளிரவு (இந்திய நேரப்படி) நடைபெற்ற இறுதிச்சுற்றில் அவர், கனடா வீராங்கனை லெய்லா ஃபொர்னாண்டஸை 6-4, 6-3 என்ற நேர் செட்களில் 1 மணி நேரம் 51 நிமிஷங்களில் வீழ்த்தினார்.

அமெரிக்க ஓபன் வரலாற்றிலேயே 2-ஆவது முறையாக இறுதிச்சுற்றில் பதின் வயது போட்டியாளர்கள் இருவர் மோதினர் என்பதால், இந்த இறுதிச்சுற்றுக்கு ரசிகர்களிடையே பலத்த எதிர்பார்ப்பு இருந்தது. புத்தகப் பையுடன் பள்ளிக்கு வருவது போல் ராடுகானு, லெய்லா இருவருமே களத்துக்குள் நுழைந்தபோது ரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பி உற்சாக வரவேற்பு அளித்தனர். விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் இருவருமே தோர்ந்த முன்னணி வீராங்கனைகளை போல ஆடினர். பல ஷாட்கள் ரேலிக்களாகத் தொடர்ந்தன. முன்னதாக, காலிறுதிச்சுற்று வரையில் லெய்லா-ராடுகானு இருவருமே பெரிதாக கவனம் பெற்றிருக்கவில்லை. ஆனால், நவோமி ஒசாகாவை வீழ்த்தி கவனம் ஈர்த்தார் லெய்லா. மறுபுறம் சத்தமின்றி இதர போட்டியாளர்களை வீழ்த்தி இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய ராடுகானு, அதில் லெய்லாவையே வீழ்த்தி அனைவரையும் அசத்தினார்.

2-ஆவது கிராண்ட்ஸ்லாம்

தாம் களம் கண்ட 2-ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியிலேயே சாம்பியனாகியிருக்கிறார் ராடுகானு. இதற்கு முன் கடந்த விம்பிள்டனில் பங்கேற்ற அவர், அதில் 4-ஆவது சுற்றின்போது மூச்சுத்திணறல் ஏற்பட்டு பாதியில் விலகியிருந்தார்.

செட்டை இலக்காமல் சாம்பியன்

அமெரிக்க ஓபனில் இறுதிச்சுற்று வரை எந்த சுற்றிலுமே ஒரு செட்டை கூட இழக்காமல் சாம்பியன் ஆகிய 2-ஆவது வீராங்கனை ராடுகானு.

முன்னதாக அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 2014-இல் அவ்வாறு சாம்பியனாகியிருந்தார்.

18 வயதில் பட்டம்

கிராண்ட்ஸ்லாம் போட்டியில் சாம்பியன் ஆகியிருக்கும் 2-ஆவது இளம் வீராங்கனை (18) ராடுகானு. முதல் வீராங்கனையாக ரஷியாவின் மரியா ஷரபோவா உள்ளார். அவர் 2004-இல் தனது 17-ஆவது வயதில் விம்பிள்டனில் சாம்பியனானார்.

44 ஆண்டுகளுக்குப் பிறகு

இங்கிலாந்து கிராண்ட்ஸ்லாம் போட்டியில் 1977-க்குப் பிறகு சாம்பியனாகியிருக்கும் முதல் இங்கிலாந்து வீராங்கனை ராடுகானு. இதற்கு முன் 1977-இல் விம்பிள்டன் போட்டியில் அந்நாட்டைச் சோ்ந்த வின்ஜினியா வேட் சாம்பியனாகியிருந்தார். ராடுகானு சாம்பியன் ஆன இந்தப் போட்டியில் வின்ஜினியாவும் அவரது ஆட்டத்தை மைதானத்தில் இருந்து நேரடியாக கண்டு களித்தார். ஆட்டத்துக்குப் பிறகு ராடுகானுவை சந்தித்து ஆரத்தழுவி பாராட்டினார்.

---

5. லா லிகா: அட்லெடிகோ மாட்ரிட் வெற்றி

ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா கால்பந்து போட்டியில் அட்லெடிகோ மாட்ரிட் 2-1 என்ற கோல் கணக்கில் எஸ்பான்யோலை வீழ்த்தியது. அட்லெடிகோ மாட்ரிட் தரப்பில் யானிக் கராஸ்கோ (79-ஆவது நிமிஷம்), தாமஸ் லெமார் (90+9 நிமிஷம்) ஆகியோரும், எஸ்பான்யோல் தரப்பில் ரௌல் டி தாமஸும் (40-ஆவது நிமிஷம்) கோலடித்தனர். இதர ஆட்டங்களில் அத்லெடிக் கிளப் 2-0 என்ற கோல் கணக்கில் மல்லோர்காவை வென்றது. லெவான்டே - ராயோ வால்கேனோ அணிகள் மோதிய ஆட்டம் (1-1) டிரா ஆனது.

---

1. SBI'இன் முன்னாள் தலைவர் ரஜினிஷ் குமாரை பொருளாதார ஆலோசகராக நியமித்த மாநிலம் எது?

அ) மேற்கு வங்கம்

ஆ) ஒடிஸா

இ) ஆந்திர பிரதேசம் ☑

ஈ) அஸ்ஸாம்



✓ ஆந்திர பிரதேச மாநில அரசு தனது பொருளாதார ஆலோசகராக SBI'இன் முன்னாள் தலைவர் ரஜினிஷ் குமாரை நியமித்துள்ளது. அமைச்சரவை அந்தஸ்திலான இப்பதவியினை ஈராண்டுகாலம் அவர் வகிப்பார்.

---

2. 'பிஸினஸ் பிளாஸ்டர்ஸ்' திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) சிக்கிம்

ஆ) தில்லி ☑

இ) கர்நாடகா

ஈ) மகாராஷ்டிரா



✓ தில்லியின் துணை முதலமைச்சர் மணீஷ் சிசோடியா, 2021 செப்.7 அன்று 'பிசினஸ் பிளாஸ்டர்ஸ்' திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இந்தத் திட்டம், பள்ளி அளவில் இளம் தொழில்முனைவோரை உருவாக்குவதை நோக்கமாகக்கொண்டதாகும். இந்தத் திட்டம் அனைத்து தில்லி அரசுப் பள்ளிகளிலும் "தொழில் முனைவோர் மனநிலை பாடத்திட்டத்தின்" கீழ் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அவர்கள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு ₹2,000 தொடக்கப்பணம் வழங்கப்படும்.

---

3. 'புஜுர்கோன் கி பாத் – தேஷ் கே சாத்' திட்டத்தைத் தொடங்கி உள்ள அமைச்சகம் எது?

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஆ) கலாச்சார அமைச்சகம் ☑

இ) சுற்றுலா அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்



✓ நடுவண் கலாச்சாரத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி கங்காபுரம், 'புஜுர்கோன் கி பாத் – தேஷ் கே சாத்' திட்டத்தை மத்திய கலாச்சாரத் துறை இணையமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வாலுடன் இணைந்து புது தில்லியின் IGNCA'இல் தொடங்கிவைத்தார். இந்தத்திட்டம் இளையோர் மற்றும் விடுதலைக்கு முன்பு இந்தியாவில் சுமார் 18 ஆண்டுகள் வாழ்ந்த 95 வயது (அ) அதற்கு மேற்பட்ட வயதுடைய நபர்களுக்கிடையேயான தொடர்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

4. நாடாளுமன்ற அவைத்தலைவர்களின் 5ஆவது உலக மாநாடு நடைபெறும் நகரம் எது?

அ) பாரிஸ்

ஆ) புது தில்லி

இ) பெய்ஜிங்

ஈ) வியன்னா ☑



✓ செப்.7–8 ஆகிய தேதிகளில் வியன்னாவில் நாடாளுமன்ற அவைத் தலைவர்களின் ஐந்தாவது உலக மாநாடு நடைபெறுகிறது. ஆஸ்திரிய நாடாளுமன்றம், நாடாளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியம் & ஐநா அவையால் நடத்தப்படும் மாநாட்டில் பங்கேற்பதற்காக மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா வியன்னா சென்றடைந்தார்.

✓ நாடாளுமன்ற பரிமாணத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இம்மாநாடு தவறாமல் நடத்தப்படுகிறது.

---

5. சமீபத்தில், F1 டச்சு கிராண்ட் பிரிக்ஸை வென்றது யார்?

அ) லூயிஸ் ஹாமில்டன்

ஆ) மேக்ஸ் வெர்ஸ்டாபென் ☑

இ) சார்லஸ் லெக்லெர்க்

ஈ) ஜார்ஜ் ரஸ்ஸல்



✓ செப்.5, 2021 அன்று நெதர்லாந்தின் சாண்ட்வார்ட்டில் நடந்த F1 டச்சு கிராண்ட் பிரிக்ஸில் ரெட் புல் பந்தய ஓட்டுநர் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் வென்றார். மெர்சிடிஸ் பந்தய ஓட்டுநர்கள் லூயிஸ் ஹாமில்டன் மற்றும் வால்டெரி பொட்டாஸ் ஆகியோர் முறையே இரண்டு மற்றும் மூன்றாம் இடங்களைப் பிடித்தனர்.

---

6. உச்ச தணிக்கை நிறுவனங்களின் ஆசிய அமைப்பின் (ASOSAI) அவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?

அ) ஹூ காய்

ஆ) மிட்சுகிகோ கவாடோ

இ) G C முர்மு ☑

ஈ) சென் சூ



✓ 2024–2027ஆம் ஆண்டு வரை உச்ச தணிக்கை நிறுவனங்களின் ஆசிய அமைப்பின் (ASOSAI) அவையின் தலைவராக இந்தியாவின் கம்ப்ரோலர் & ஆடிட்டர் ஜெனரல் GC முர்மு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2024'இல் ASOSAI'இன் 16ஆவது அவையை நடத்தவுள்ளார்.

---

7. 'ஆத்ம நிர்பார் கிரிஷி யோஜனா' மற்றும் 'ஆத்ம நிர்பார் பக்வானி யோஜனா' திட்டங்களைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) சிக்கிம்

ஆ) அருணாச்சல பிரதேசம் ☑

இ) இமாச்சல பிரதேசம்

ஈ) அஸ்ஸாம்



✓ அருணாச்சல பிரதேச மாநில அரசானது ஆத்ம நிர்பார் கிரிஷி யோஜனா மற்றும் ஆத்ம நிர்பார் பக்வானி யோஜனா ஆகிய இரண்டு திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆத்ம நிர்பார் கிரிஷி யோஜனா ஒரு வேளாண் துறை திட்டமாகும். ஆத்ம நிர்பார் பக்வானி யோஜனா என்பது ஒரு தோட்டக்கலைத் திட்டமாகும். இந்த இரண்டு திட்டங்களுக்கும் சேர்த்து தலா ₹60 கோடி என மொத்தம் 120 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

---

8. G20'க்கான இந்தியாவின் ஷெர்பாவாக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) பியூஷ் கோயல் ☑

ஆ) அஷ்வினி வைஷ்ணவ்

இ) மன்சுக் மாண்டவியா

ஈ) சுப்ரமணியம் ஜெய்சங்கர்



✓ வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல், G20'க்கான இந்தியாவின் செர்பாவாக நியமிக்கப்பட்டுள்ளார். G20 என்பது உலகின் முக்கிய பொருளாதாரங்களை ஒன்றிணைக்கும் ஒரு செல்வாக்குமிக்க குழுவாகும். அடுத்த G20 உச்சிமாநாடு இத்தாலிய தலைமையின்கீழ், அக்.30–31, 2021 வரை நடைபெறவுள்ளது. இந்தியா, டிசம்பர்.1, 2022 முதல் G20 தலைமையை ஏற்று, முதல்முறையாக 2023'இல் G20 தலைவர்களின் உச்சிமாநாட்டையும் நடத்தும்.

9.பின்வரும் எம்மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலையில், அவசரகால தரையிறங்கும் வசதியை நடுவண் பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் திறந்து வைத்தார்?

அ) உத்தர பிரதேசம்

ஆ) இமாச்சல பிரதேசம்

இ) இராஜஸ்தான் ☑

ஈ) குஜராத்



✓ இந்திய வான்படைக்கான அவசரகால தரையிறங்கும் வசதியை இராஜ–ஸ்தானில் உள்ள பார்மருக்கு அருகில் இருக்கும் தேசிய நெடுஞ்சாலை 925A'இன் சட்டா–காந்தவ் தடத்தில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்கரி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். இந்திய வான் படையின் விமானங்களை அவசரமாக தரையிறக்க தேசிய நெடுஞ்சாலை பயன்படுத்தப்படுவது இதுவே முதல்முறை.

---

10. எந்த மாநிலத்தின் நீர்வழங்கல் உட்கட்டமைப்பை மேம்படுத்து –வதற்காக இந்திய அரசும் ஆசிய வளர்ச்சி வங்கியும் $112 மில்லியன் மதிப்பிலான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன?

அ) பீகார்

ஆ) இராஜஸ்தான்

இ) மேற்கு வங்கம்

ஈ) ஜார்க்கண்ட் ☑

✓ ஜார்க்கண்ட் மாநிலத்தில் நீர்வழங்கல் உட்கட்டமைப்பை மேம்படுத்துவ –தற்காக இந்திய அரசும் ஆசிய வளர்ச்சி வங்கியும் $112 மில்லியன் மதிப்பிலான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. ஜார்க்கண்ட் மாநிலத்தின் 4 நகரங்களில் சேவை விநியோகத்தை மேம்படுத்துவதற் –காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திறன்களை இந்தக் கடன் வலுப்படுத்தும்.

✓ இது இராஞ்சி மற்றும் ஜாம்ரி தெலையா, ஹுசைனாபாத் மற்றும் மேதினி நகர் ஆகிய 3 நகரங்களில் தொடர்ச்சியான, சுத்திகரிக்கப்பட்ட குழாய் நீர் விநியோகத்தை உறுதிசெய்யும். இந்த நகரங்கள் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தேசிய கல்வி நிறுவனங்கள் தரவரிசை: சவீதா பல் மருத்துவக் கல்லூரி மூன்றாமிடம்

தேசிய அளவில் சிறந்த கல்வி நிறுவனங்களின் பட்டியலில் (என்ஐஆர்எஃப்) பல் மருத்துவப் பிரிவில் சென்னை அருகில் உள்ள சவீதா பல் மருத்துவக் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்பு (என்ஐஆர்எஃப்) ஆண்டுதோறும் சிறந்த பல்கலைக்கழகம், கல்லூரிகளின் தேசிய தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது. அந்த வகையில் நிகழாண்டுக்கான தரவரிசைப் பட்டியல் கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

இதில் சென்னை அருகில் உள்ள சவீதா பல் மருத்துவக் கல்லூரி, சவீதா சட்டக் கல்லூரி ஆகியவை மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளன. மேலும் தேசிய அளவில் சவீதா பல் மருத்துவக் கல்லூரி 78.33 மதிப்பெண்களுடன் 3–ஆவது இடத்தையும், சவீதா சட்டக் கல்லூரி 55.19 மதிப்பெண்களுடன் 13–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. ஒட்டுமொத்தமாக சவீதா நிகர் நிலைப் பல்கலைக்கழகம் தேசிய அளவில் 29–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

---

2. செப்டம்பரில் கோவேக்ஸின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளிக்க வாய்ப்பு

இந்த மாதம் கோவேக்ஸின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல் அளிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் கோவிஷீல்ட், கோவேக்ஸின், ஸ்புட்னிக்–வி கரோனா தடுப்பூசிகளை அவசரகால அடிப்படையில் பயன்படுத்த மத்திய அரசு அனுமதியளித்துள்ளது. அதேவேளையில் அமெரிக்காவின் ஃபைஸர், ஜான்சன் & ஜான்சன், மாடர்னா, சீனாவின் சைனோஃபார்ம், பிரிட்டனின் கோவிஷீல்டு தடுப்பூசிகளை அவசரகால அடிப்படையில் பயன்படுத்த அனுமதியளித்துள்ள உலக சுகாதார அமைப்பு, இந்தியாவில் பாரத் பயோடெக் நிறுவனம் உருவாக்கிய கோவேக்ஸின் தடுப்பூசிக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கவில்லை.

அந்தத் தடுப்பூசிக்கு ஒப்புதல் அளிக்கத் தேவையான ஆவணங்களை உலக சுகாதார அமைப்பிடம் பாரத் பயோடெக் நிறுவனம் வழங்கியுள்ளதாக கடந்த ஜூலை மாதம் மத்திய அரசு தெரிவித்திருந்தது. இந்நிலையில் கோவேக்ஸின் தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு இந்த மாதம் உலக சுகாதார அமைப்பு அனுமதி அளிக்க வாய்ப்புள்ளது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

3. செப்.24–இல் க்வாட் கூட்டம்: பிரதமர் மோடி அமெரிக்கா பயணம்

க்வாட் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டம் அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் வரும் 24–ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதையொட்டி பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா பயணிக்கவுள்ளார். க்வாட் கூட்டமைப்பில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் முதல்முறையாக வரும் 24–ஆம் தேதி க்வாட் தலைவர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இந்திய பிரதமர் மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிஸன், ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

க்வாட் கூட்டமைப்பிலுள்ள நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவது, கரோனா தொற்று போன்ற பிரச்னைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பருவநிலை மாற்றம், கட்டுப்பாடற்ற இந்தோ–பசிபிக் பிராந்தியம், புதிய தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று வெள்ளை மாளிகை ஊடகப் பிரிவு செயலர் ஜென் சாகி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த முறை காணொலி வழியாக நடைபெற்ற இந்தக் கூட்டம் இம்முறை நேரில் நடைபெறவுள்ளதால் அதில் பங்கேற்க பிரதமர் மோடி அமெரிக்கா செல்லவுள்ளது உறுதியாகியுள்ளது.

---

4. தமிழ்ப் பல்கலை.யின் திறனாய்வு செம்மல் விருதுக்கு க. பஞ்சாங்கம் தேர்வு

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ந. சுப்புரெட்டியார் நூற்றாண்டு அறக்கட்டளை சார்பில் வழங்கப்படும் திறனாய்வுச் செம்மல் விருதுக்கு க. பஞ்சாங்கம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து தமிழ்ப் பல்கலைக்கழகம் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் நூற்றாண்டு அறக்கட்டளை சார்பில் திறனாய்வுச் செம்மல் விருது நிகழாண்டு முதல் வழங்கப்படவுள்ளது.

இவ்விருதுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள், பரிந்துரைகள் பெறப்பட்டன. இதில் 2021ஆம் ஆண்டுக்கான திறனாய்வுச் செம்மல் விருதுக்குத் தமிழின் முன்னோடி இலக்கியத் திறனாய்வாளரான புதுச்சேரியைச் சேர்ந்த பேராசிரியர் க. பஞ்சாங்கம் ஒருமனதாகத் தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கான பரிசு வழங்கும் நிகழ்வு செப்டம்பர் 27 ஆம் தேதி தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும். இதில், விருதுடன் ரூ. 25,000 தொகையும், சான்றிதழும் வழங்கப்படும்.

---

1. மன்னார் வளைகுடாவில் ஆற்றல் தீவை உருவாக்குவதற்காக, தமிழ்நாடு, எந்த நாட்டோடு கூட்டிணைந்துள்ளது?



அ) ஜெர்மனி

ஆ) டென்மார்க் ☑

இ) ஜப்பான்

ஈ) தென் கொரியா

✓ தமிழ்நாடும் டென்மார்க்கும் இலங்கையின் மேற்கு கடற்கரைக்கும் இந்தியாவின் தென்கிழக்கு முனைக்கும் இடையே அமைந்துள்ள மன்–னார் வளைகுடாவில் ஆற்றல் தீவொன்றை உருவாக்க திட்டமிட்டுள்ள–ன. பசுமை ஆற்றல் துறையில் தமிழ்நாடு தனது தடத்தை விரிவாக்க விழைவதால் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது.

✓ இந்த இலக்கை அடைய, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் $5–10 பில்லியன் நிதியை தமிழ்நாட்டில் டென்மார்க் முதலீடு செய்ய வாய்ப்பு உள்ளது. இந்த முதலீட்டின்மூலம், 4–10 GW ஆற்றலை உற்பத்தி செய்ய முடியும்.

---

2. எம்மாநிலத்தின் கிராமப்புற இணைப்பை விரிவுபடுத்துவதற்காக இந்திய அரசாங்கமும் ஆசிய வளர்ச்சி வங்கியும் $300 மில்லியன் டாலர் மதிப்பிலான கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன?



அ) அஸ்ஸாம்

ஆ) மகாராஷ்டிரா ☑

இ) ஒடிஸா

ஈ) ஜார்க்கண்ட்

✓ ஆசிய வளர்ச்சி வங்கியும் இந்திய அரசும் மகாராஷ்டிரா மாநிலத்தின் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் வகையில் கிராமப்புற இணைப்புகளை மேம்படுத்துவதற்காக கூடுதல் நிதியுதவியாக $300 மில்லியன் கடனொப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. தற்போதைய மகாராஷ்டிர கிராமப்புற இணைப்பு மேம்பாட்டு திட்டத்திற்கான கூடுதல் நிதி, 1100 கிராமப்புற சாலைகள் மற்றும் 230 பாலங்களை மேம்படுத்த உதவும்.

---

3. CII தேசிய ஆற்றல் தலைவர் மற்றும் சிறப்பு ஆற்றல் திறன் அலகு ஆகிய மதிப்புமிக்க விருதுகளை வென்றுள்ள இந்திய வானூர்தி நிலையம் எது?

அ) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சர்வதேச விமான நிலையம்

ஆ) தில்லி சர்வதேச விமான நிலைய லிட் ☑

இ) சென்னை சர்வதேச விமான நிலைய லிட்

ஈ) சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையம்

✓ இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) ஏற்பாடு செய்த 22ஆவது தேசிய விருது வழங்கும் விழாவில், தில்லி சர்வதேச விமான நிலைய லிட் CII 'தேசிய ஆற்றல் தலைவர்' மற்றும் 'சிறந்த ஆற்றல் திறன் அலகு' ஆகிய மதிப்புமிக்க விருதுகளை வென்றுள்ளது.

---

4. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டு திட்டங்களுக்கான புரிந்து உணர்வு ஒப்பந்தத்தில் இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம், பின்வரும் எந்த நிறுவனத்துடன் கையெழுத்திட்டது?

அ) தமிழ்நாடு மின்னுற்பத்தி மற்றும் விநியோகக் கழகம் ☑

ஆ) குஜராத் மாநில மின்சாரக் கழகம்

இ) மேற்கு வங்க மாநில மின்சார விநியோகக் கழகம்

ஈ) தெற்கு பீகார் மின் விநியோக நிறுவனம்

✓ இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிறுவனமானது தமிழ்நாடு மின்னுற்பத்தி & விநியோகக்கழகத்துடனான (TANGEDCO) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், IREDA, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டமேம்பாட்டுக்காக TANGEDCO'க்கு தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் ஆதரவையும் விரிவுபடுத்தும்.

✓ IREDA, TANGEDCO'க்கு நிதிசார் மாதிரிகளை உருவாக்குதல், சந்தை கருவியைப் புரிந்துகொள்வது, முன்மொழியப்பட்ட கடன் தேவைக்கான காப்பீட்டு சேவைகள், சந்தைக்கு முந்தைய கணக்கெடுப்புகள் மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களிடையே ஆர்வத்தைத் தூண்டுவதன் மூலம் கடன் திரட்டுவதில் உதவி செய்யும்.

---

5. அண்மையில், 2 நாள் நடைபெற்ற, 'நிலவு அறிவியல் பயிலரங்கம் 2021'ஐ தொடங்கிய நிறுவனம் எது?



அ) இஸ்ரோ ☑

ஆ) நாசா

இ) ஐஐஎஸ்சி

ஈ) பிர்லா கோளரங்கம்

✓ இந்திய விண்வெளி ஆய்வுமையமானது (இஸ்ரோ) சந்திரயான்–2 விண்கத்தின் ஈராண்டுகால செயல்பாட்டின் நிறைவை நினைவுகூரும் வகையில் 2 நாள் 'நிலவு அறிவியல் பயிலரங்கத்தைத்' தொடங்கியது.

✓ சந்திரயான்–2 ஆனது நிலவை 9,000'க்கும் மேற்பட்ட முறை சுற்றி முடித்துள்ளது. ISRO தலைவர், சந்திரயான்–2 தரவின் அடிப்படையில் ஆவணங்களையும், விண்கலத்தின் தரவுகளையும் வெளியிட்டார்.

---

6. இமயமலை வெற்றி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?



அ) செப்டம்பர் 9 ☑

ஆ) செப்டம்பர் 10

இ) செப்டம்பர் 11

ஈ) செப்டம்பர் 12

✓ 2021 செப்.9 அன்று நௌலா அறக்கட்டளையுடன் இணைந்து தேசிய தூய்மை கங்கை திட்டம், இமயமலை வெற்றி நாளை ஏற்பாடு செய்தது. "Contribution of Himalayas and our responsibilities" என்பது நடப்பு (2021) ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். இமயமலை வெற்றி நாளானது ஆண்டுதோறும் செப்டம்பர்.9ஆம் தேதி உத்தரகண்ட் மாநிலத்தில் கொண்டாடப்படுகிறது. இமயமலை சுற்றுச்சூழல் மற்றும் பிராந்தியத்தை பாதுகாக்கும் நோக்கத்துடன் இது கொண்டாடப்படுகிறது. கடந்த 2015ஆம் ஆண்டில் அப்போதைய முதல்வரால் அதிகாரப்பூர்வமாக இமயமலை வெற்றி நாள் அறிவிக்கப்பட்டது.

---

7. கரைநீங்குங்காற்று (Offshore Wind) குறித்த சிறப்பு மையத்தைத் தொடங்குவதற்காக, எந்த நாட்டோடு, இந்தியா, கூட்டுசேர்ந்துள்ளது?



அ) கனடா

ஆ) பிரான்ஸ்

இ) டென்மார்க் ☑

ஈ) ஜப்பான்

✓ மத்திய மின்சாரம் மற்றும் புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் R K சிங், டென்மார்க்கின் காலநிலை, எரிசக்தி மற்றும் பயன்பாட்டுத் துறை அமைச்சர் டான் ஜோர்கென்சனை புதுதில்லியில் சந்தித்தார். பசுமையை நோக்கிய ஆற்றல்மாற்றம் இந்தியாவின் கொள்கையின் ஒரு முக்கிய பகுதியாகும் என்பது சிறப்பிக்கப்பட்டது.

✓ 2030'க்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் உற்பத்தித்திறனை 450 GW அளவுக்கு அடைய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது. தற்போது, இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் 146 GW ஆக உள்ளது, மேலும் லடாக், அந்தமான் & நிக்கோபார் தீவு மற்றும் இலட்சத்தீவு தீவை எரிசக்தி மற்றும் போக்குவரவில் பசுமையாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இரு அமைச்சர்களும் கூட்டாக இணைந்து பசுமை உத்தி கூட்டாண்மையின்கீழ், 'கரைநீங்குங்காற்று குறித்த சிறப்பு மையத்தைத்' தொடங்கினர்.

---

8. ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன்–2021'ஐ தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) சிறுபான்மை விவகார அமைச்சகம்

ஈ) ஜல் சக்தி அமைச்சகம் ☑

✓ ஜல் சக்தி அமைச்சகத்தின் இணையமைச்சர், ஸ்ரீ பிரகலாத் சிங் பட்டேல், தூய்மை இந்தியா இயக்கம் (கிராமீன்) கட்டம் – II'இன்கீழ் 'ஸ்வச்

சர்வேக்ஷன் கிராமீன் – 2021'ஐ தொடங்கிவைத்தார். 2021 செப்டம்பர்.9 அன்று குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை ஏற்பாடு செய்த நிகழ்வில் இது தொடங்கப்பட்டது. 'ஸ்வச் சர்வேக்ஷன் கிராமீன் – 2021', நாடு முழுவதும் குடிநீர் & சுகாதாரத்துறையால் மேற்கொள்ளப்படும்.

---

9. புனைவுநாவலான பிரனேசிக்காக புனைகதைக்கான பெண்கள் பரிசை வென்றவர் யார்?

அ) J K ரோலிங்

ஆ) சுசன்னா கிளார்க் ☑

இ) சுதா மூர்த்தி

ஈ) மைக்கேல் ஒபாமா



✓ பிரிட்டிஷ் எழுத்தாளர் சுசன்னா கிளார்க் தனது மனதைவருடும் புனைவு நாவலான 'பிரனேசி'க்காக புகழ்பெற்ற பெண்கள் பரிசை வென்றார். 61 வயதான கிளார்க்கின் இந்நாவலுக்காக 30,000 பவுண்டுகள் ($41,000) பரிசு வழங்கப்பட்டது.

---

10. உலக தற்கொலை தடுப்பு நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) செப்டம்பர் 11

ஆ) செப்டம்பர் 10 ☑

இ) செப்டம்பர் 9

ஈ) செப்டம்பர் 12



✓ உலக தற்கொலை தடுப்பு நாளானது ஆண்டுதோறும் செப்.10 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. "Creating hope through action" என்பது நடப்பு (2021) ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். உலக தற்கொலை தடுப்பு நாள் என்பது ஆண்டுதோறும் செப்டம்பர்.10 அன்று ஒரு விழிப்புணர்வு நாளாக அனுசரிக்கப்படுகிறது. இந்தநாள், சர்வதேச தற்கொலை தடுப்பு சங்கத்தால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 15-09-2021 – 'பேரறிஞர்' அண்ணா அவர்களின் 113ஆவது பிறந்தநாள்.

---

2. வாகனங்களுக்கு 5 ஆண்டு 'பம்பர் டூ பம்பர்' காப்பீடு கட்டாயம் என்ற உத்தரவு வாபஸ்

'பம்பர் டூ பம்பர்' அடிப்படையில் வாகனங்களுக்கு ஐந்து ஆண்டுக்கான காப்பீடு கட்டாயம் என்ற உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் வாபஸ் பெற்றுள்ளது. சாலைவிபத்து மரணம்தொடர்பான வழக்கு ஒன்றில், 'பம்பர் டூ பம்பர்' அடிப்படையில் வாகனங்களுக்கு ஐந்து ஆண்டுக்கான காப்பீடு கட்டாயம் என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியிருந்தது. 'பம்பர் டூ பம்பர்' அடிப்படையில் வாகன உரிமையாளர், ஓட்டுநர், வாகனத்தில் பயணிக்கும் அனைவருக்கும் காப்பீடு செய்யப்படுகிறது.

செப்.1ஆம் தேதி முதல் விற்கப்படும் அனைத்து வாகனங்களுக்கும் 'பம்பர் டூ பம்பர்' அடிப்படையில் 5 ஆண்டு காப்பீடு கட்டாயம் என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியிருந்த நிலையில், தற்போதைய சூழ்நிலையில் அனைத்து வாகனங்களுக்கும் சாத்தியமில்லை என்று எதிர்தரப்பினர் கூறியதை அடுத்து, நீதிமன்றம் கூறிய உத்தரவு வாபஸ் பெறப்பட்டுள்ளது. பயணிகளின் பாதுகாப்பு கருதி உரிய சட்டதிருத்தங்கள்கொண்டு வரப்படும் என்று நம்புவதாக இந்த வழக்கினை விசாரித்த நீதிபதி வைத்தியநாதன் அமர்வு கூறியுள்ளது.

---

3. காவல்துறையில் 134 பேருக்கு அண்ணா பதக்கங்கள்: முக ஸ்டாலின் அறிவிப்பு

காவல் துறையில் 134 பேருக்கு நடப்பாண்டில் அண்ணா பதக்கங்கள் அளிக்கப்படும் என முதல்வர் முகஸ்டாலின் அறிவித்துள்ளார். இதுகுறித்து வெளியிட்ட அறிவிப்பு: தமிழ்நாட்டில் காவல், தீயணைப்பு, சிறைத்துறை, ஊர்க்காவல், விரல்ரேகை உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறப்பாகப் பணியாற்றும் காவலர்களைப்பாராட்டும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.15'இல் அண்ணா பிறந்த தினத்தின் போது முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு காவல்துறையில் இரண்டாம் நிலை காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 100 பணியாளர்கள், தீயணைப்புத் துறையில் எட்டு பேர், சிறைத் துறையில் 10 பேர், ஊர்க்காவல் படையில் 5 பேர், விரல்ரேகைப் பிரிவில் 2 பேர், தடய அறிவியல் துறையில் 2 பேருக்கும் பதக்கங்கள் அளிக்கப்படும். மேலும், மதுரையில் உள்ள சஞ்சய் டெக்ஸ்டைல் என்ற நிறுவனத்தில் நடந்த விபத்தில் தீயை அணைக்கப் போராடி உயிரைத் தியாகம் செய்த ஏழு தீயணைப்பு வீரர்களுக்கும் அண்ணா பதக்கங்கள் அளிக்கப்பட உள்ளன.

மொத்தமாக 134 பேருக்கு பதக்கங்கள் வழங்கப்படுகிறது. இந்தப் பதக்கங்கள் வேறொரு நாளில் அளிக்கப்படும்.

---

3. 'சன்சத் தொலைக்காட்சி' இன்று தொடக்கம்

நாடாளுமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வதற்கான 'சன்சத்' தொலைக்காட்சியை குடியரசு துணைத்தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் மோடி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா ஆகியோர் இணைந்து தொடக்கி வைக்கின்றனர். சர்வதேச ஜனநாயக தினமான செப்.15'இல் இந்த தொலைக்காட்சி சேனல் தொடங்கப்படுவதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கூட்டத்தொடர் நடைபெறும்போது மக்களவை நடவடிக்கைகளை 'லோக் சபா' தொலைக்காட்சியும், மாநிலங்களவை நடவடிக்கைகளை 'ராஜ்ய சபா' தொலைக்காட்சியும் நேரடியாக ஒளிபரப்பிவருகின்றன. அத்தொலை –க்காட்சிகளை ஒன்றாக இணைத்து 'சன்சத்' என்ற பெயரில் ஒரே தொ –லைக்காட்சியாக மாற்ற மத்திய அரசு கடந்த பிப்ரவரியில் முடிவெடுத்தது.

அதன்படி இப்போது சன்சத் தொலைக்காட்சி அதிகாரபூர்வமாகத்தொடக்கி வைக்கப்படுகிறது. இதன்மூலமாக மக்களவை, மாநிலங்களவை நடவடிக்கைகளை மக்கள் நேரடியாக அறிந்துகொள்ளமுடியும். இதுதவிர மற்ற நாள்களில் நாட்டின் ஜனநாயக அமைப்புகள், அரசு நிர்வாகம், திட்டங்கள், கொள்கைகள் அமல்படுத்தப்படும் விதம், இந்தியாவின் கலாசாரம், வரலாற்றுத் தொன்மை, நாட்டுநலன்சார்ந்த செயல்பாடுகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. யுஎஸ் ஓபன்: சக்கர நாற்காலியில் இரு சாதனையாளர்கள்: 'கோல்டன் ஸ்லாம்' பெற்றனர் குரூட், அல்காட்

யுஎஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஜோகோவிச் சாதனை படைப்பாரா என சர்வதேச விளையாட்டு ரசிகர்களும் ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்த நிலையில், அதே யுஎஸ் ஓபனில் சத்தமின்றி இருவர் சக்கரநாற்காலியில் இருந்தபடியே சாதனை படைத்திருக்கிறார்கள்.

US ஓபன் போட்டியில் ஆடவர், மகளிர் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவு போட்டிகளுடன், ஜூனியர் பிரிவு போட்டிகளும், சக்கர நாற்காலியுட –ன் விளையாடும் மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிகளும் நடப்பது வழக்கம். அந்த வகையில் இந்த முறை சக்கரநாற்காலி வீரர், வீராங்க –னைகளுக்காக நடத்தப்பட்ட போட்டியில் மகளிர்பிரிவில் நெதர்லாந்தின் டைடே டி குரூட் (24), ஆடவர் பிரிவில் ஆஸ்திரேலியாவின் டைலன் அல்காட் (30) சாம்பியனாகியுள்ளனர். சிறப்பு என்னவென்றால், இவர்கள் இருவமே இந்த சாம்பியன்ஷிப் பட்டம்மூலம் 'கோல்டன் ஸ்லாம்' சாதனையை எட்டியிருக்கிறார்கள்.

ஒரே டென்னிஸ் காலண்டரில் வரும் 4 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் சாம்பியனாகி, அதே ஆண்டில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியிலும் சாம்பியன் ஆவதே 'கோல்டன் ஸ்லாம்' எனப்படுகிறது.

குரூட் மற்றும் அல்காட் இருவருமே தற்போது அத்தகைய சாதனையை எட்டியிருக்கிறார்கள். நடப்பு காலண்டரில் ஏற்கெனவே ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன் ஆகியவற்றில் கோப்பை வென்றிருந்த இருவரும், பின்னர் டோக்கியோ பாராலிம்பிக்கிலும் தங்கம் வென்றிருந்த –னர். கடைசியாக தற்போது நடைபெற்ற யுஎஸ் ஓபனில் இருவருமே சாம்பியனாகி கோல்டன் ஸ்லாம் மைல் கல்லை எட்டியிருக்கிறார்கள்.

இதில் சக்கரநாற்காலி போட்டியாளர்களில் 'கோல்டன் ஸ்லாம்' வென்ற முதல் போட்டியாளர் என்ற பெருமையை குரூட் எட்ட, அவரைத் தொடர்ந்து அல்காட்டும் அதே சாதனையை படைத்தார்.

கிராண்ட்ஸ்லாமில் இதுவரை சாம்பியன் பட்டம்

டைடே டி குரூட்

ஆஸ்திரேலிய ஓபன் – 2018, 2019, 2021

பிரெஞ்சு ஓபன் – 2019, 2021

விம்பிள்டன் – 2017, 2018, 2021

US ஓபன் – 2018, 2019, 2020, 2021 (இரட்டையர் பிரிவில் 12 பட்டங்கள்)
(பாராலிம்பிக் – ஒரு வெள்ளி (2016), ஒரு தங்கம் (2021)

டைலன் அல்காட்

ஆஸ்திரேலிய ஓபன் – 2015, 2016, 2017, 2018, 2019, 2020, 2021

பிரெஞ்சு ஓபன் – 2019, 2020, 2021

விம்பிள்டன் – 2019, 2021

US ஓபன் – 2015, 2018, 2021 (இரட்டையர் பிரிவில் 8 பட்டங்கள்)
(பாராலிம்பிக் – இரு தங்கம் (2016, 2021)

---

5. ஓய்வு பெற்றார் மலிங்கா

இலங்கை கிரிக்கெட் வீரர் லசித் மலிங்கா (38), அனைத்து விதமான கிரிக்கெட்டிலும் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

வேகப்பந்துவீச்சாளரான அவர், உலகின் முன்னணி பேட்ஸ்மேன்கள் மிரளும் வகையில் யார்க்கர் பந்துகள் வீசுவதில் வல்லவராக இருந்தார். ஏற்கெனவே டெஸ்ட் மற்றும் ஒன்டே கிரிக்கெட்டிலிருந்து கடந்த ஜனவரி மாதம் ஓய்வு பெற்றிருந்த மலிங்கா, தற்போது டி20 கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் கடந்த 2004 ஜூலைமாதம் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்மூலம் களம்கண்ட மலிங்கா, கடைசியாக 2020 மார்ச்சில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான T20 தொடரில் விளையாடி –யிருந்தார். IPL கிரிக்கெட் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக அவர் விளையாடினார்.

---

1. அண்மையில் பதவி விலகிய ஆளுநர் பேபி இராணி மௌரியா, பின்வரும் எந்த மாநிலத்தின் ஆளுநராக இருந்தார்?



அ) உத்தர பிரதேசம்

ஆ) ஒடிஸா

இ) மணிப்பூர்

ஈ) உத்தரகாண்ட் ☑

✓ உத்தரகாண்ட் மாநில ஆளுநர் பேபி இராணி மௌரியா தனது பதவிக் காலம் முடிவதற்கு ஈராண்டுகளுக்கு முன்பே (2021 செப்டம்பர்.8) பதவி விலகியுள்ளார். அவர்தனது பதவிவிலகல் கடிதத்தை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்திடம் வழங்கினார். அவர், கடந்த 2018 ஆகஸ்ட்.26 அன்று உத்தரகாண்ட் மாநிலத்தின் ஆளுநராக பதவியேற்றார்.

---

2. புவி அறிவியல் துறையில் ஒத்துழைப்பு குறித்து இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?



அ) ஆஸ்திரேலியா

ஆ) பிரான்ஸ்

இ) ரஷ்யா ☑

ஈ) நியூசிலாந்து

✓ இந்திய புவியியல் ஆய்வு நிறுவனம் மற்றும் உருசிய கூட்டமைப்பு சட்டங்களின்கீழ் நிறுவப்பட்டுள்ள அரசுத்துறை நிறுவனமான ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனி ராஸ்ஜியாலோஜியா இடையே புவி அறிவியல் துறை –யில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

---

3. சில்சார் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக, அஸ்ஸாம் மாநில அரசு, எந்த அமைப்போடு கூட்டிணைந்துள்ளது?

அ) இந்திய நிலக்கரி நிறுவனம் ☑

Coal India Ltd

ஆ) NTPC லிட்

இ) AIIMS

ஈ) ICMR

✓ நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய நிலக்கரி நிறுவனம் (CIL) சில்சார் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் சுகாதார உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக அஸ்ஸாம் மாநில அரசின் நல வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தப் புதிய CSR முயற்சியில், CIL, ₹5 கோடி மதிப்பீட்டில், சில்சார் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ICU வசதி மற்றும் மருத்துவ வாயு குழாய் ஆகியவற்றை அமைக்கும்.

---

4. அண்மையில், ரிசர்வ் வங்கியால் உடனடி திருத்த நடவடிக்கை (Prompt Corrective Action) கட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்ட பொதுத் துறை வங்கி எது?

அ) யூனியன் பேங்க் ஆப் இந்தியா

ஆ) பஞ்சாப் & சிந்து வங்கி

இ) பேங்க் ஆப் இந்தியா

ஈ) UCO வங்கி ☑

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது பொதுத்துறை வங்கியான UCO வங்கியை நிதி மற்றும் கடன்விவரங்களை மேம்படுத்துவதற்கான உடனடி திருத்த நடவடிக்கை கட்டமைப்பிலிருந்து நீக்கியுள்ளது. இம்முடிவு, அவ்வங்கிக்கு கடன் வழங்குவதற்கு (குறிப்பாக பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு நிறுவனங்களுக்கு) அதிக சுதந்திரத்தை அளிக்கிறது.

---

5. கல்வியை ஆபத்திலிருந்துப் பாதுகாப்பதற்கான சர்வதேச நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) செப்டம்பர் 9 ☑ ஆ) செப்டம்பர் 10

இ) செப்டம்பர் 12 ஈ) செப்டம்பர் 15

✓ கல்வியை ஆபத்திலிருந்துப் பாதுகாப்பதற்கான சர்வதேச நாள் செப்9 அன்று உலகளவில் கடைபிடிக்கப்படுகிறது. ஆபத்திலிருந்து கல்வியைப் பாதுகாப்பதற்கான முதல் சர்வதேச நாள், 2020 செப்.9 அன்று அனுசரிக் –கப்பட்டது. இராணுவ மோதல்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் வாழும் குழந்தைகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்த விழிப்புணர்வை பரப்பவும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

6. அண்மையில், TATA AIA ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் விளம்பரத் தூதுவராக அறிவிக்கப்பட்டவர் யார்?

அ) பஜ்ரங் புனியா

ஆ) நீரஜ் சோப்ரா ☑

இ) லவ்லினா போர்கோஹெய்ன்

ஈ) PV சிந்து

✓ இந்திய தடகள வீரரும் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றவருமான நீரஜ் சோப்ராவை TATA AIA ஆயுள்காப்பீட்டு நிறுவனம் அதன் விளம்பரத் தூதுவராக அறிவித்துள்ளது. நீரஜ் சோப்ராவால் கையொப்பமிடப்பட்ட முதல் விளம்பரத் தூதுவ கூட்டாண்மையையும் இது குறிக்கிறது.

---

7. அண்மையில் இந்தியா, பின்வரும் எந்த நாட்டுடன் கடல்சார் விவகார பேச்சுவார்த்தையை நடத்தியது?



அ) ஆஸ்திரேலியா

ஆ) இங்கிலாந்து

இ) ஜப்பான் ☑

ஈ) பிரான்ஸ்

✓ 2021 செப்.9 அன்று இந்தியாவும் ஜப்பானும் தங்கள் ஆறாவது கடல்சார் விவகார பேச்சுவார்த்தையை மெய்நிகர் வடிவத்தில் நடத்தின. கடல்சார் பாதுகாப்புச்சூழல், பிராந்திய ஒத்துழைப்பு நடவடிக்கைகள் & இந்தோ– பசிபிக் பிராந்தியத்தில் இருநாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்கா –ன வாய்ப்புகள்பற்றிய ஆலோசனைகள் இதில் கலந்துரையாடப்பட்டன.

---

8. சமீபத்தில், குடிபெயர்ந்தோரின் பாதுகாவலர்களின் நான்காவது மாநாட்டில் சிறப்புரை வழங்கிய வெளியுறவு இணையமைச்சர் யார்?



அ) நித்யானந்த் ராய்

ஆ) V முரளீதரன் ☑

இ) அனுராக் தாக்கூர்

ஈ) பாபுல் சுப்ரியோ

✓ குடிபெயர்ந்தோரின் பாதுகாவலர்களின் நான்காவது மாநாடு செப்.10 அன்று நடைபெற்றது. கடந்த 1983ஆம் ஆண்டில் இதே தேதியில்தான் குடிபெயர்வுச்சட்டம் இயற்றப்பட்டது. இதன்சமயம், வெளியுறவு இணை அமைச்சர் V முரளீதரன் சிறப்புரை ஆற்றினார். அப்போது, புதிய இடங்கள் மற்றும் வாய்ப்புகள்பற்றி இளையோர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் தெரிவிப்பதில் குடிபெயர்ந்தோரின் பாதுகாவலர்கள் வகிக்கும் முக்கியப் பங்கு குறித்து அவர் சிறப்பித்துத் தெரிவித்தார்.

---

9. டிஜிட்டல் மக்கள்தொகை கடிகாரம் திறக்கப்பட்டுள்ள நகரம் எது?



அ) ஹைதராபாத்

ஆ) மும்பை

இ) நாக்பூர்

ஈ) தில்லி ☑

✓ மக்கள்தொகை, மனித முதலீடு மற்றும் நீடித்த வளர்ச்சி குறித்த கருத்தரங்கிற்கு, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை இணை அமைச்சர் டாக்டர் பாரதி பிரவீன் பவார் தலைமைதாங்கினார். தில்லி பல்கலையில் உள்ள பொருளாதார வளர்ச்சி மையத்தில், டிஜிட்டல் மக்கள்தொகை கடிகாரத்தை, அவர் திறந்து வைத்தார்.

✓ Dr தீபாஞ்சலி ஹலாய் மற்றும் Dr சுரேஷ் சர்மா எழுதிய 'அஸ்ஸாமில் குழந்தை மற்றும் குழந்தை இறப்பு – மக்கள்தொகை மற்றும் சமூக–பொருளாதார தொடர்புகள்' என்ற நூல், HMIS சிற்றேடு, மதிப்பீட்டு கையேடு ஆகியவற்றை மத்திய இணையமைச்சர் வெளியிட்டார்.

---

10. பஞ்சாபின் ஆளுநராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) R N இரவி

ஆ) பன்வாரிலால் புரோகித் ☑



இ) குர்மித் சிங்

ஈ) ஜெகதீப் தங்கர்

✓ பஞ்சாப் மாநிலத்தின் புதிய ஆளுநராக தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் நியமித்துள்ளார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தொலை தொடர்பு துறையில் முக்கிய சீர்திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

தொலை தொடர்பு துறையில் அமைப்பு மற்றும் செயல்முறை சீர்திருத்தங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்தது. இது வேலை வாய்ப்பை உருவாக்கி பாதுகாக்கும், ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிக்கும், நுகர்வோர் நலனை பாதுகாக்கும், பணப்புழக்கத்தை ஏற்படுத்தும், முதலீட்டை ஊக்குவிக்கும் மற்றும் தொலை தொடர்பு சேவை அளிப்பவர்கள் மீதான ஒழுங்குமுறை சுமையை குறைக்கும்.

கொரோனா சவால்களை எதிர்கொள்வதில் தொலை தொடர்பு துறையின் சிறப்பான செயல்பாடுகளின் பின்னணியில், ஆன்லைன் கல்வி, வீட்டிலிருந்தே பணியாற்றுதல், காணொலி காட்சி கூட்டம், சமூக ஊடகம் மூலம் தனிநபர்கள் இடையேயான தொடர்பு அதிகரிப்பு ஆகியவற்றால் இணையதள டேட்டா நுகர்வு மிகவும் அதிகரித்துள்ளதால், இந்த சீர்திருத்த நடவடிக்கைகள், பிராட் பேண்ட் மற்றும் தொலை தொடர்பின் ஊடுருவல் மற்றும் பரவலை மேலும் ஊக்குவிக்கும்.

வலுவான தொலை தொடர்பு என்ற பிரதமரின் தொலைநோக்கை, மத்திய அமைச்சரவையின் முடிவு வலுப்படுத்துகிறது. போட்டி மற்றும் நுகர்வோர் தேர்வு, அனைத்தும் உள்ளடங்கிய வளர்ச்சிக்கான அந்தியோதயா மற்றும் பின்தங்கிய பகுதிகளை முன்னுக்கு கொண்டு வருதல், ஆகியவற்றுடன் இணைக்கப்படாதவர்களை உலகளாவிய பிராட்பேண்ட் இணைக்கும். இந்த சீர்திருத்தம், 4ஜி பரவலை ஊக்குவிக்கும், பணப்புழக்கத்தை புகுத்தும், 5ஜி வலையமைப்புக்கான முதலீட்டு சூழலை ஏற்படுத்தும். தொலை தொடர்பு சேவை அளிப்பவர்களுக்கான 9 அமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் 5 செயல்பாட்டு சீர்திருத்தங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அமைப்பு சீர்திருத்தங்கள்:

1. சரிசெய்யப்பட்ட மொத்த வருவாய் சீரமைப்பு: தொலைதொடர்பு அல்லாத வருவாய் சரிசெய்யப்பட்ட மொத்த வருவாயின் வரையறையிலிருந்து விலக்கப்படும்.

2. வங்கி உத்திரவாதங்கள் சீரமைப்பு: உரிமம் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் மீதான வங்கி உத்திரவாத தேவைகள் 80 சதவீதம் குறைப்பு.

3. வட்டி விகிதங்கள் சீரமைப்பு / அபராதங்கள் நீக்கம்.

4. இனிமேல் நடைபெறும் ஏலங்களுக்கு வங்கி உத்திரவாதம் தேவையில்லை.

5. அலைக்கற்றை (ஸ்பெக்டரம்) ஏலம் எடுக்கும் காலம் 20 ஆண்டிலிருந்து 30 ஆண்டுகளாக அதிகரிப்பு.

6. எதிர்கால ஏலங்களில் பெறப்படும் அலைக்கற்றைகளை, 10 ஆண்டுகளுக்குப்பின் ஒப்படைக்கலாம்.

7. ஏலத்தில் பெறப்படும் அலைக்கற்றைக்கு அலைக்கற்றை பயன்பாட்டு கட்டணம் வசூலிக்கப்படாது.

8. அலைக்கற்றை பகிர்வு ஊக்குவிக்கப்படும்.

9. மூதலீட்டை ஊக்குவிக்க, தொலை தொடர்பு துறையில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி

செயல்பாட்டு சீர்திருத்தங்கள்:

1. அலைக்கற்றை ஏலம், ஒவ்வொரு நிதியாண்டில் கடைசி காலாண்டில் நடைபெறும்.

2. எளிதாக தொழில் செய்வது ஊக்குவிக்கப்படும்.

3. வாடிக்கையாளர்பற்றி அறியும் முறையில் சீர்திருத்தங்கள்: வாடிக்கையாளரின் சுய தகவல்களுக்கு அனுமதி.

4. வாடிக்கையாளர் விவரம் பற்றிய படிவங்கள் டிஜிட்டல் முறையில் சேமிக்கப்படும்.

---

2. ரஷியாவில் 'எஸ்சிஓ' நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சி: இந்தியா பங்கேற்பு

ரஷியாவில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு (எஸ்சிஓ) நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்தியா பங்கேற்றுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிரான கூட்டு ராணுவத் தாக்குதல் பயிற்சி ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. இதன் 6-ஆவது கட்டப் பயிற்சி செப்.13 -25ஆம் தேதி வரை ரஷியாவின் ஆரன்பெர்க் பகுதியில் நடைபெறுகிறது.

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் உறுப்பு நாடுகள் இடையேயான உறவை மேம்படுத்துவதும், பல்வேறு நாடுகளின் ராணுவ வீரர்களுக்குத் தலைமை தாங்கும் வகையில் ராணுவ தளபதிகளின் செயல்திறனை வலுப்படுத்துவதும் இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

இந்தியாவின் சார்பில் 38 இந்திய விமானப்படை வீரர்கள் உள்பட 200 ராணுவ வீரர்கள் இந்தப் பயிற்சியில் இடம்பெற்றுள்ளனர் என்று இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது. ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு நாடுகளின் ஆயுதப் படைகள் இடையே சிறந்த பயிற்சி முறைகளை பரிமாறிக்கொள்ள இப்பயிற்சி ஏதுவாக இருக்கும். 2001இல் உருவாக்கப்ப -ட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பில் (SCO) ரஷியா, சீனா, கிர்கி -ஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் முதலில் இடம்பெற்றிருந்தன. 2017இல் இந்தியா, பாகிஸ்தானும் நிரந்தர உறுப்பினர்களாக இணைந்தன.

---

3. இணைய குற்றங்கள்: 2020-இல் 11.8 சதவீதம் அதிகரிப்பு

இந்தியாவில் இணைய குற்றங்கள் (சைபர் கிரைம்) தொடர்பாக 2020-ஆம் ஆண்டில் 50,035 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதும், இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 11.8 சதவீதம் கூடுதல் என்பதும் தேசிய குற்றப் பதிவுத் துறை (என்சிஆர்பி) புள்ளிவிவரத்தின் மூலம் தெரியவந்துள்ளது. இவற்றில் 578 வழக்குகள், சமூக ஊடகங்களில் போலியான செய்திகளை வெளியிட்டது தொடர்பானவையாகும். 972 வழக்குகள் பெண்கள் மற்றும் குழந்தைகளை சமூக ஊடகங்கள் உள்ளிட்ட இணையவழியில் பின்தொடர்ந்து தொல்லை கொடுத்தல் தொடர்பானவை. போலியான சுயவிவரப் பதிவு தொடர்பாக 149 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இணையவழியில் தகவல் திருட்டு தொடர்பாக 98 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2020-இல் பதிவு செய்யப்பட்ட இணைய குற்ற வழக்குகளில், குற்றத்துக்கான நோக்கத்தைப் பொருத்தவரை 60.2 சதவீதம் மோசடி திட்டத்துடன் நடைபெற்றுள்ளன. அதாவது, 50,035 வழக்குகளில் 30,142 வழக்குகள் மோசடி திட்டத்துடன் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களாகும். இதற்கு அடுத்தபடியாக, 6.6 சதவீதம் (3,293 வழக்குகள்) பாலியல் அத்துமீறல் தொடர்பான வழக்குகள், மிரட்டி பணம் பறித்தல் தொடர்பாக 4.9 சதவீத (2,440 வழக்குகள்) வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக என்சிஆர்பி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வழக்குப் பதிவில் உ.பி. முதலிடம்:

அதிக இணைய குற்ற வழக்குகள் பதிவு செய்யப்படும் மாநிலங்களைப் பொருத்தவரை 11,097 வழக்குகளுடன் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தபடியாக கர்நாடகம் (10,741 வழக்குகள்), மகாராஷ்டிரம் (5,496), தெலங்கானா (5,024), அஸ்ஸாம் (3,530) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

கர்நாடகத்தில் அதிக குற்றங்கள்: அதே நேரம், இணைய குற்றங்கள் அதிகம் நடைபெறும் மாநிலங்களில் 16.2 சதவீத குற்றங்களுடன் கர்நாடகம் முதலிடம் வகிக்கிறது. அதற்கு அடுத்தபடியாக தெலங்கானா (13.4 சதவீதம்), அஸ்ஸாம் (10.1 சதவீதம்), உத்தர பிரதேசம் (4.8 சதவீதம்), மகாராஷ்டிரம் (4.4 சதவீதம்) ஆகிய மாநிலங்கள் உள்ளன.

தலைநகர் தில்லியில் 2020-ஆம் ஆண்டில் 168 இணைய குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குற்றங்களின் விகிதம் 0.8 சதவீதமாக உளளது என்றும் என்சிஆர்பி புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2019-ஆம் ஆண்டில் நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்ட இணைய குற்றங்களின் எண்ணிக்கை 44,735

ஆகும். 2018–ஆம் ஆண்டில் 27,248 இணைய குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

---

4. தடகள சாம்பியன்ஷிப்: பவித்ரா வெங்கடேஷ் வெற்றி

தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் கம்பு ஊன்றித் தாண்டுதல் போட்டியில் தமிழக வீராங்கனை பவித்ரா வெங்கடேஷ் முதலிடம் பிடித்தார். அவர் 3.90 மீ தாண்டி முதலிடம் பிடிக்க, ரயில்வே –சின் மரியா ஜெய்சன் (3.80 மீ), கிருஷ்ணா ராச்சன் (3.60 மீ) ஆகியோர் 2 மற்றும் 3–ஆம் இடங்களைப் பிடித்தனர்.

5,000 மீ ஓட்டத்தில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் முறையே ரயில்வே போட்டியாளர்கள் அபிஷேக் பால், பாருல் சௌதரி ஆகியோர் சாம்பியன் ஆகினர். அபிஷேக் 14 நிமிஷம் 16.35 நொடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடிக்க, சர்வீசஸ் வீரர்கள் தர்மேந்தர் (14:17.20) இரண்டாம் இடம், அஜய்குமார் (14:20.98) மூன்றாமிடம் பிடித்தனர். மகளிர் பிரிவில் பாருல் 15 நிமிஷம் 59.69 விநாடிகளில் இலக்கை எட்ட, மகாராஷ்டிரத்தி –ன் கோமல் சந்திரகாந்த் (16:01), சஞ்சீவனி பாபர் ஜாதவ் (16:19) ஆகியோ –ர் அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர்.

---

5. மாரியப்பனுக்கு 'மை ஸ்டாம்ப்' வழங்கி கௌரவித்த தபால்துறை

பாரா ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாரியப்பனுக்கு 'மை ஸ்டாம்ப்' கொடுத்து அஞ்சல் துறை கௌரவித்துள்ளது.

---

1. குஜராத்தின் முதலமைச்சராக பதவியேற்றவர் யார்?



அ) பூபேந்திர படேல் ☑

ஆ) ஆச்சார்யா தேவ்ரத்

இ) ஆனந்திபென் படேல்

ஈ) புஷ்கர் சிங் டாமி

✓ குஜராத் மாநில முதலமைச்சராக பூபேந்திர படேல் பதவியேற்றார். காந்தி நகரிலுள்ள ஆளுநர் மாளிகையில், ஆளுநர் ஆச்சார்யா தேவ்ரத் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். அவர் குஜராத் மாநிலத்தின் கட்லோடியா தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராவார். செப்.13 அன்று விஜய் ரூபானி தனது பதவியை ராஜினாமா செய்தபிறகு, பூபேந்திர படேல் குஜராத்தின் முதலமைச்சரானார்.

---

2. மத்திய நிலக்கரி வயல்கள் நிறுவனத்தின் திறந்தவெளி சுரங்கத்–தில் பணிபுரிந்த முதல் பெண் அகழ்வாய்வுப் பொறியாளர் யார்?

அ) அகன்க்ஷா குமாரி



ஆ) சிவாங்கி சிங்

இ) பாவனா காந்த்

ஈ) ஷிவானி மீனா ☑

✓ ஜோத்பூர் ஐஐடி'இன் முன்னாள் மாணவரான ஷிவானி மீனா, இந்திய நிலக்கரி நிறுவனத்தின் பிரிவான (CCL) மத்திய நிலக்கரி வயல்கள் நிறுவனத்தின் திறந்தவெளி சுரங்கத்தில் பணிபுரிந்த முதல் பெண் அகழ்வாய்வு பொறியாளர் ஆவார்.

✓ நிலக்கரி சுரங்கத்தின் முக்கிய நிறுவனங்களுள் ஒன்றான CCL'இன் ராஜ்ரப்பா திட்டத்தில் அவர் நியமிக்கப்படுவார். தற்போது வரை இந்தப் பதவியை ஆண்களே வகித்து வருகின்றனர். ஜார்க்கண்டில் உள்ள வடக்கு கரன்புரா பகுதியிலுள்ள CCL'இன் சூரியில் நிலத்தடி சுரங்கத்தில் பணிபுரியும் நிலக்கரி இந்தியாவின் முதல் பெண் சுரங்கப்பொறியாளராக அகன்க்ஷா குமாரி ஆனார்.

---

3. லெபனானின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) ஹசன் டையப்



ஆ) அஜீஸ் அகன்னூச்

இ) நஜிப் மிகடி ☑

ஈ) மைக்கேல் ஒளன்

✓ பேரழிவு தந்த பெய்ரூட் துறைமுக வெடிவிபத்தை தொடர்ந்து, முந்தைய நிர்வாகம் பதவி விலகிய ஓர் ஆண்டுக்குப் பிறகு லெபனானில் புதிய அரசாங்கம் அறிவிக்கப்பட்டது. லெபனானின் மிகப்பெரிய பணக்காரரான நஜிப் மிகடி பிரதமராகிறார். அவர் இதற்கு முன்பு இரண்டு முறை பிரதமர் பதவிவகித்துள்ளார்.

---

4. மொராக்கோவின் பிரதமராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) மௌலே ஹாபித் எலலாமி



ஆ) அஜீஸ் அகன்னூச் ☑

இ) நிசார் பரகா

ஈ) அஜீஸ் ரப்பா

✓ மொராக்கோ மன்னர் ஆறாம் முகமது, தேசிய விடுதலைப் பேரணியின் அஜீஸ் அகன்னோச்சை பிரதமராக நியமித்து, அவரை அரசாங்கத்தை அமைக்கவும் கூறினார். செப்டம்பர்.8 அன்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சி மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்தது. மொராக்கோ –வில், அரசியல்வாதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் மட்டுமே உள்ளன; முக்கிய முடிவுகள் அனைத்தும் மன்னரிடமே உள்ளன.

---

5. 'Human Rights and Terrorism in India' என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ) அஜித் தோவல்



ஆ) சுப்பிரமணியன் சுவாமி ☑

இ) பிபின் ராவத்

ஈ) சசி தரூர்

✓ கடந்த 1999ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானின் காந்தகாரில் கடத்தப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானப்பயணிகளுக்கு ஈடாக மூன்று பயங்கரவாதிகளை விடுவித்தது, இந்தியாவின் நவீனகால வரலாற்றில் பயங்கரவாதிகளிடம் "மோசமாக சரணடைதல்" என்று பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி கூறினார்.

✓ அரசியலமைப்பால் அனுமதிக்கப்பட்ட மற்றும் உச்சநீதிமன்றத்தால் நியாயப்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளுக்குள், பயங்கரவாதத்தை எவ்வாறு எதிர்த்துப் போராடுவது என்பதை விளக்கும் "Human Rights and Terrorism in India" என்ற நூலை அவர் வெளியிட்டுள்ளார்.

---

6. உத்தரகண்ட் மாநிலத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டு உள்ளவர் யார்?

அ) ஆச்சார்யா தேவ்ரத்



ஆ) பேபி ராணி மௌரியா

இ) பண்டாரு தத்தாத்ரேயா

ஈ) குர்மித் சிங் ☑

✓ ராணுவ துணைத்தலைவராக இருந்து ஓய்வுபெற்ற Lt.ஜெனரல் குர்மித் சிங், உத்தரகண்ட் மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்குமுன் அந்தப் பதவியை வகித்து வந்த பேபி இராணி மௌரியா பதவி விலகியதிலிருந்து அப்பதவி காலியாகவே இருந்தது.

---

7. மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்களுக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்காக, புதிதாக உருவாக்கப்பட்ட அரசாங்கக் குழுவின் தலைவர் யார்?

அ) பல்ராம் பார்கவா



ஆ) ரன்தீப் குலேரியா

இ) V G சோமனி ☑

ஈ) ககன்தீப் காங்

✓ மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்களுக்–கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்காக எட்டு உறுப்பினர்கள் கொண்ட குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது. இக்குழுவிற்கு இந்திய தலைமை மருந்துக்கட்டுப்பாட்டாளர் டாக்டர் V G சோமனி தலைமை தாங்குகிறார். 1940ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் ஒப்பனை சட்டமானது மருந்துகள், ஒப்பனை மற்றும் மருத்துவ சாதனங்களின் இறக்குமதி, உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்துகிறது. இந்தச் சட்டம் அவ்வப்போது திருத்தப்படுகிறது. கடைசியாக 2008'இல் இந்தச் சட்டம் திருத்தஞ்செய்யப்பட்டது.

---

8. 13ஆவது BRICS உச்சிமாநாட்டிற்கு தலைமைதாங்கியவர் யார்?

அ) ஜி ஜின்பிங்



ஆ) நரேந்திர மோடி ☑

இ) விளாடிமிர் புதின்

ஈ) சிரில் ராமபோசா

✓ 13ஆவது BRICS உச்சிமாநாட்டிற்கு பிரதமர் மோடி தலைமைவகித்தார். "BRICS@15: Intra BRICS Cooperation for Continuity, Consolidation and Consensus" என்பதை இந்த உச்சிமாநாட்டின் கருப்பொருளாக இந்தியா தேர்ந்தெடுத்தது. BRICS தலைவர்களான பிரேசில் அதிபர் ஜெய்ர் பொல்சனாரோ, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், சீன அதிபர் ஜி ஜின்பிங், தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா ஆகியோர் உச்சிமாநாட்டில் பங்கேற்றனர்.

✓ இந்தியாவின் BRICS தலைமை பொறுப்பின் போது பல்வேறு புதிய முன்முயற்சிகள் சாத்தியமாகின. BRICS டிஜிட்டல் நலவாழ்வு மாநாடு, பல்முனை சீர்திருத்தங்கள் குறித்த BRICS அமைச்சர்களின் முதல் கூட்டறிக்கை, BRICS பயங்கரவாத எதிர்ப்பு திட்டம், தொலைதூர திறனறி செயற்கைக்கோள்கள் துறையில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம், BRICS மெய்நிகர் தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், பசுமை சுற்றுலாவுக்கான BRICS கூட்டணி ஆகியவை இவற்றில் அடங்கும்.

---

9. 'bob World' என்ற பெயரில் தனது டிஜிட்டல் வங்கி தளத்தை தொடங்கியுள்ள வங்கி எது?

அ) இந்தியன் வங்கி

ஆ) பந்தன் வங்கி

இ) பரோடா வங்கி ☑

ஈ) பாசிம் பங்கா கிராமின் வங்கி

✓ அனைத்து வங்கியியல் சேவைகளையும் ஒரே கூரையின்கீழ் வழங்கும் நோக்கில் பரோடா வங்கி தனது டிஜிட்டல் வங்கி தளத்தை 'bob World' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. சேமிப்பு, முதலீடு, கடன் மற்றும் வாங்கு ஆகிய நான்கு முக்கிய தூண்களின்கீழ், வங்கித் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் பரந்த வசதியை இது வழங்கும்.

---

10. இந்திய ஏற்றுமதி–இறக்குமதி வங்கியின் (EXIM வங்கி) நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) ஹர்ஷ பூபேந்திர பங்காரி ☑



ஆ) டேவிட் ரஸ்கின்ஹா

இ) சக்திகாந்த தாஸ்

ஈ) நிருபேந்திர மிஸ்ரா

✓ இந்திய ஏற்றுமதி–இறக்குமதி வங்கியின் நிர்வாக இயக்குநராக ஹர்ஷ பூபேந்திர பங்காரியை அரசாங்கம் நியமித்துள்ளது. தற்போது EXIM வங்கியின் துணை நிர்வாக இயக்குநராக இருந்து வரும் பங்காரி, 3 ஆண்டு காலத்திற்கோ அல்லது அரசாங்கத்தின் அடுத்த உத்தரவு வரும் வரையோ இந்தப் பொறுப்பில் இருப்பார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி கோவில்களில் முழுநேர அன்னதானம் திட்டம்: முதல்வர் தொடக்கி வைத்தார்

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில், சமயபுரம் மாரியம்மன் கோவில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோவில் ஆகிய கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை முதல்வர் முக ஸ்டாலின் தலைமைச்செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக தொடக்கிவைத்தார்.

ஏற்கனவே, பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவில், திருவரங்கம் அரங்கநாதசுவாமி கோவில் ஆகியவற்றில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்பட்டுவருகிறது. தற்போதைய 3 கோவில்களையும் சேர்த்து மொத்தம் 5 கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் மொத்தம் 754 கோவில்களில் மதியம் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

---

2. அரசுப்பணிகளுக்கான நேரடி நியமன வயது 32ஆக உயர்வு

அரசுப்பணிகளுக்கான நேரடி நியமன வயது வரம்பை 32ஆக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது. சட்டப்பேரவையில் மனிதவள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கரோனா பெருந்தொற்று காரணமாக பணியாளர் தெரிவு முகமைகளால் நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் தாமதமானதால், நேரடி நியமன வயது உச்சவரம்பு இரண்டு ஆண்டுகள் உயர்த்தப்படும் என அறிவித்திருந்தார்.

அதன்படி அரசுப்பணிகளில் நேரடி நியமனத்துக்கான வயது வரம்பை 30லிருந்து 32ஆக உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. கருணை அடிப்படை பணி நியமன வயது உச்சவரம்பில் எந்தவித மாற்றம் இல்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு 4% இடஒதுக்கீடு:

மேலும் அரசு வேலைவாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான 4% இடஒதுக்கீட்டை உறுதிசெய்வதற்காக அனைத்துத் துறைகளிலும் கண்காணிப்பு அதிகாரிகளை நியமிக்கவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

---

3. 17–09–2021 – ஈ வெ ரா பெரியாரின் 143ஆவது பிறந்தநாள்.

---

4. எல்லோர்க்கும் எல்லாம்; சமூக நீதிக் கண்காணிப்புக் குழு அமைக்க முடிவு: முதல்வர் ஸ்டாலின்

சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி உள்ளது. ஆனால் முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காகத் தமிழ்நாடு அரசால் ஒரு கண்காணிப்புக் குழு அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூக நீதி அளவுகோல் முறையாக, முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை இக்குழு கண்காணிக்கும்; வழிகாட்டும்; செயல்படுத்தும். சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு இக்குழு பரிந்துரை செய்யும். இதற்கான விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். இதில் அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம்பெறுவார்கள்.

1916ஆம் ஆண்டு தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரால் தொடங்கப்பட்ட நீதிக்கட்சியானது அன்றைய சென்னை மாகாணத்தில் சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, ஒடுக்கப்பட்டோர் உரிமை, சுயாட்சிக் கருத்துகள் ஆகியவற்றுக்காகக் குரல் கொடுத்தது. 1920ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில் வென்ற நீதிக்கட்சி ஆட்சியானது இதனைப் பல்வேறு அரசாணைகள் மூலமாகச் செயல்படுத்தியது.

அதில் மிக மிக முக்கியமான அரசாணை வெளியிடப்பட்டு இன்றுடன் 100 ஆண்டுகள் ஆகின்றன. அதுதான் தமிழ்ச் சமுதாயத்தின் பல தலைமுறைகளை மாற்றிய சமூக நீதி அரசாணை ஆகும்.

16.9.1921 அன்று நீதிக்கட்சி ஆட்சியின் முதல்வரான பனகல் அரசர் காலத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. "அரசுப் பணிகளில் குறிப்பிட்ட வகுப்பினர் ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்குமானால் அது நாட்டுக்குப் பெரும் தீங்கை விளைவிக்கும். அனைத்துச் சமூகத்தினரும் ஏற்றம் பெறும் வகையில் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு பணியிடங்கள் வழங்கப்பட வேண்டும்" என்ற அடித்தளத்தில் அந்த அரசாணை வெளியிடப்பட்டது. இதுதான் சமூக நீதிக்கான அடித்தளம் ஆகும். அதிலிருந்துதான் சமூக நீதி வரலாற்றின் மாபெரும் பயணம் தொடங்கியது.

நூறு ஆண்டுகள் கழித்து செப்டம்பர் 16ஆம் நாளான இன்று வெள்ளுடை வேந்தர் தியாகராயர், சமுதாய சீர்திருத்த மருத்துவர்களான நடேசனார், TM நாயர், கடலூர் ஏ சுப்பராயலு, பனகல் அரசர், அமைச்சர் S முத்தையா, பி டி இராஜன் ஆகியோரை நினைத்துப் பார்க்கிறேன். இவர்கள் உள்ளிட்ட பெருமக்கள் அன்று தொடங்கிவைத்த சமூக நீதிப்புரட்சிதான் தமிழ்ச்சமுதாயத்தின் லட்சக்கணக்கானவர்கள் இல்லங்களில் விளக்கேற்றக் காரணமாக அமைந்தது. இந்த உத்தரவை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்ற தரவரிசைப் பட்டியலைப் போட்டுக் கொடுத்தார் அன்றைய அமைச்சர் எஸ் முத்தையா. அதனால்தான், "இனிப்பிறக்கும் பிள்ளைகளுக்கு முத்தையா என்று பெயர் சூட்டுங்கள்" என்றார் தந்தை பெரியார்.

---

1. 2021 – இத்தாலிய கிராண்ட் பிரிக்ஸை வென்றவர் யார்?

அ) மேக்ஸ் வெர்ஸ்டாபென்



ஆ) டேனியல் ரிச்சியார்டோ ☑


இ) லாண்டோ நோரிஸ்

ஈ) லூயிஸ் ஹாமில்டன்

✓ மொன்சாவில் நடைபெற்ற F1 கார் பந்தயத்தில், ஆஸ்திரேலியாவைச் சார்ந்த டேனியல் ரிச்சியார்டோ, 2021 – இத்தாலிய கிராண்ட் பிரிக்ஸை வென்றார். லாண்டோ நோரிஸ் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். F1 சாம்பியன் போட்டியாளர்களான மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் மற்றும் லூயிஸ் ஹாமில்டன் ஒருவருக்கொருவர் பந்தயத்திலிருந்து வெளியேறினர். வால்டேரி போட்டாஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

2.50'க்கும் மேற்பட்ட புற்றுநோய் வகைகளை கண்டறியும் உலகின் மிகப்பெரிய இரத்த பரிசோதனையை கண்டறிந்துள்ள நாடு எது?

அ) சீனா



ஆ) ரஷ்யா

இ) பிரான்ஸ்

ஈ) ஐக்கியப் பேரரசு ☑

✓ இங்கிலாந்தைச் சேர்ந்த NHS மருத்துவர்கள், இரத்த பரிசோதனைமூலம் தொடக்க நிலையிலேயே 50 வகையான புற்றுநோய்களை கண்டறியும் "Revolutionary" என்ற சோதனையை கண்டுபிடித்துள்ளனர். அறிகுறிக –ள் வெளிப்படுவதற்கு முன்பே ஐம்பது வகையான புற்றுநோய்களை இதன்மூலம் கண்டறியவியலும்.

---

3. சமீபத்தில் காலமான பிரபல எழுத்தாளர் அஜீஸ் ஹஜினி சார்ந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் எது?

அ) லடாக்



ஆ) ஜம்மு காஷ்மீர் ☑

இ) இமாச்சல பிரதேசம்

ஈ) உத்தரகாண்ட்

✓ ஜம்மு–காஷ்மீரின் பிரபல எழுத்தாளர் அஜீஸ் ஹஜினி அண்மையில் காலமானார். காஷ்மீர் எழுத்தாளர், கவிஞர், விமர்சகராவார் அவர். அவர் ஜம்மு காஷ்மீர் கலை, கலாச்சாரம் மற்றும் மொழிகளின் அகாதமியின் முதல் செயலாளராக பணியாற்றினார். 2013ஆம் ஆண்டில் அவரது 'தேஜ் பஜார்' மற்றும் 2016ஆம் ஆண்டில் 'கிடாப் ஆன் கானேவு'க்காக அவருக்கு சாகித்திய அகாதமி விருதும் வழங்கப்பட்டது.

4.அண்மையில், பின்வரும் எந்த நாட்டுடன், கடல்சார் விவகாரங்கள் குறித்த பேச்சுவார்த்தையை இந்தியா நடத்தியது?

அ) ஆஸ்திரேலியா



ஆ) இங்கிலாந்து

இ) ஜப்பான் ☑

ஈ) பிரான்ஸ்

✓ 2021 செப்.9 அன்று இந்தியாவும் ஜப்பானும் ஆறாவது கடல்சார் விவகார பேச்சுவார்த்தையை நடத்தின. இந்தப் பேச்சுவார்த்தையில் கடல்சார் பாதுகாப்பு சூழல், பிராந்திய ஒத்துழைப்பு நடவடிக்கைகள் & இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் 2 நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள்பற்றி விவாதிக்கப்பட்டன.

---

5. சுப்பிரமணிய பாரதியின் நினைவுநாளை 'மகாகவி நாள்' எனக் கொண்டாட முடிவுசெய்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑



ஆ) கேரளம்

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஒடிஸா

✓ கவிஞர் மற்றும் விடுதலைப் போராட்ட வீரரான சுப்பிரமணிய பாரதியின் நினைவு நாளை, செப்டம்பர்.11 அன்று 'மகாகவி நாள்' எனக்கொண்டாட தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது. அவரது படைப்புகள் தேசபக்தியை ஊட்டுபவையாக தமிழ் இலக்கியத்தில் அழியாத முத்திரையை பதித்தன.

✓ அரசுப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கவிதை போட்டியை நடத்தி, 'பாரதி இளங்கவி விருது'ம் ₹1 லட்சம் பணப் பரிசும் வழங்க, தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது. பெண்கள் வாழ்வாதார இயக்கத்திற்கு 'பாரதியார்' எனப் பெயர்சூட்டப்படவுள்ளது. இந்தத் திட்டம் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படவுள்ளது.

---

6. அண்மையில், ஆசியாவின் ஒலிம்பிக் கவுன்சிலின் இடைக்கால தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) ஷேக் அஹ்மத் அல்–பஹத் அல்–சபா



ஆ) தாமஸ் பாக்

இ) ரந்தீர் சிங் ☑

ஈ) ஜியானி இன்பான்டினோ

✓ ஜெனீவா நீதிமன்றத்தால் போலி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஷேக் அஹ்மத் அல்–ஃபஹத் அல்–சபா பதவி விலகியதை அடுத்து, ஆசியாவின் ஒலிம்பிக் கவுன்சிலின் இடைக்கால தலைவராக இந்திய விளையாட்டு நிர்வாகி ரந்தீர் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 1991 முதல் 2015 வரை 24 ஆண்டுகள் OCA'இன் பொதுச்செயலாளராக பணியாற்றினார். அவர், 1987 முதல் 2012 வரை இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் (IOA) பொதுச் செயலாளராகவும் பணியாற்றினார். 2001 முதல் 2014 வரை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் முழு நேர உறுப்பினராக இருந்தார்.

---

7. தினை உற்பத்தியை அதிகரிப்பதற்காக எந்த மாநிலத்தின் 14 மாவட்டங்கள் இந்திய தினை ஆராய்ச்சி நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்துள்ளன?

அ) தமிழ்நாடு

ஆ) மத்திய பிரதேசம்

இ) சத்தீஸ்கர் ☑

ஈ) ஜார்க்கண்ட்

✓ சத்தீஸ்கர் மாநிலத்தின் 14 மாவட்டங்கள், அந்தந்த பகுதிகளில் தினை உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஐதராபாத்தைச் சேர்ந்த இந்திய தினை ஆராய்ச்சி நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்ப –மிட்டுள்ளன. இந்தத் தினை, சத்தீஸ்கர் குறு வன உற்பத்தி கூட்டுறவு கூட்டமைப்பின் வான்தான் சங்கங்கள்மூலம் கொள்முதல் செய்யப்படும்.

✓ அவை பதப்படுத்தப்பட்டபின், மதிய உணவுதிட்டங்கள், பொது விநியோக முறை மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களில் பயன்படுத்தப்படும்.

---

8. தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) 2021'இல், சிறந்த கல்வி நிறுவனமாக தேர்வுசெய்யப்பட்டுள்ள உயர்கல்வி நிறுவனம் எது?

அ) ஐஐடி மெட்ராஸ் ☑



ஆ) ஐஐடி பம்பாய்

இ) அண்ணா பல்கலைக்கழகம்

ஈ) மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்

✓ மெட்ராஸ் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT–M) 2021'இல் சிறந்த உயர்கல்வி நிறுவனமாகத் தேர்வுசெய்யப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவனமும் (IISc) மற்றும் ஐஐடி பம்பாய் கல்வி நிறுவனமும் உள்ளன.

✓ தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பின் (NIRF) ஒருபகுதியாக, கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், தரவரிசைகளை அறிவித்தார். இது இந்திய நிறுவனங்களின் தரவரிசையாகும்.

---

9. எந்த நாட்டில், காற்றிலிருந்து CO_2'ஐப் பிரிக்கும் உலகின் மிகப் பெரிய ஆலை செயல்படத் தொடங்கியுள்ளது?

அ) ஐஸ்லாந்து ☑



ஆ) ஜெர்மனி

இ) இந்தியா

ஈ) ஜப்பான்

- ✓ காற்றில் இருந்து கரியமில வாயுவை உறிஞ்சி பாறையாக மாற்றும் உலகின் மிகப்பெரிய ஆலை ஐஸ்லாந்தில் இயங்கத் தொடங்கியது.
- ✓ 'எரிசக்தி' என்று பெயரிடப்பட்ட 'Orca' என்ற ஐஸ்லாந்திய சொல்லை நிறுவனத்தின் பெயராகக்கொண்ட இந்த ஆலை நான்கு அலகுகளைக் கொண்டுள்ளது. சுவிச்சர்லாந்தின் கிளைம்வொர்க்ஸ் & ஐஸ்லாந்தின் கார்ப்பிக்ஸ் ஆகியவற்றால் கட்டப்பட்ட இந்த ஆலை ஒவ்வொரு ஆண்டும் 4,000 டன் CO_2'ஐ காற்றிலிருந்து உறிஞ்சும்.

---

10. பாரத் பெட்ரோலிய நிறுவனத்தின் புதிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) அருண் குமார் சிங் ☑



ஆ) S வரதராஜன்

இ) அருண் சிங்

ஈ) K இளங்கோவன்

- ✓ 'மகாரத்னா' நிறுவனமும் பார்ச்சூன் குளோபல் 500'இல் இடம்பெற்று உள்ள நிறுவனமுமான BPCL அதன் தலைவராகவும் மற்றும் நிர்வாக இயக்குனராகவும் அருண் குமார் சிங்கை நியமிப்பதாக அறிவித்தது. செப். 7, 2021 அன்று அவர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நோயாளிகள் பாதுகாப்பு நாள்

நோயாளிகள் பாதுகாப்பு நாள் 17–09–2021 அன்று கடைபிடிக்கப்பட்டது. உலக நோயாளிகள் பாதுகாப்பு நாள் ஆண்டுதோறும் செப்டம்பர்.17ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், நடப்பாண்டில் "தாய் மற்றும் சேய் பாதுகாப்பு" என்ற கருப்பொருளின்கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

---

2. பனை மேம்பாட்டுத் திட்டம்

பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வகை செய்யும் பனை மேம்பாட்டுத் திட்டத்தை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்தி:

தமிழ்நாட்டில் பனைமரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, இப்போதுள்ள பனை மரங்களைப் பாதுகாப்பதுடன், கூடுதலாக பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி, நடப்பாண்டு முப்பது மாவட்டங்களில் 76 லட்சம் பனை விதைகளையும், ஒரு லட்சம் பனங் கன்றுகளையும் முழு மானியத்தில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. பனை மேம்பாட்டு இயக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்துக்கு ₹3 கோடி நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

---

3. பிரபல இயற்பியல் விஞ்ஞானி தாணு பத்மநாபன் மறைவு

பிரபல இயற்பியல் பேராசிரியரும் 'பத்மஸ்ரீ' விருதுபெற்ற விஞ்ஞானியுமான தாணு பத்மநாபன் (64) காலமானார்.

பத்மநாபனுக்கு மத்திய அரசு கடந்த 2007'இல் பத்மஸ்ரீ விருதை வழங்கி கௌரவித்தது. அண்மையில் அவருக்கு கேரள அறிவியல், தொழில்நுட்ப கவுன்சில் 'கேரள சாஸ்திர புரஸ்காரம்' என்னும் வாழ்நாள் சாதனை விருதையும் வழங்கி கௌரவித்தது.

---

4. சுற்றுச்சூழல் விதிமீறல்கள்: அதிகபட்சமாக தமிழகத்தில் 42,756 வழக்குகள்; 2019–ஐ காட்டிலும் 3 மடங்கு அதிகரிப்பு

சுற்றுச்சூழல் விதிமீறல் தொடர்பாக கடந்த 2020–இல் இந்திய அளவில் பதிவு செய்யப்பட்ட 61,767 வழக்குகளில் அதிகபட்சமாக 42,756 வழக்குகள் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது கடந்த 2019ஆம் ஆண்டைக் காட்டிலும் 3 மடங்கு அதிகரித்துள்ளதாக தேசிய குற்றப்பதிவு ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

இந்திய அளவில் நடைபெறும் குற்றங்கள் குறித்த புள்ளிவிவரத்தை தேசிய குற்றப்பதிவு ஆவணக் காப்பகம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. இதன்படி, கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த குற்றச்செயல்கள் குறித்த புள்ளிவிவரம் கடந்த சில நாள்களுக்கு முன்பு வெளியிடப்பட்டது.

அதில், இந்திய அளவில் கடந்த 2019ஆம் ஆண்டைக் காட்டிலும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை 28 சதவீதம் அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக இந்திய வனச் சட்டம், வனப் பாதுகாப்பு சட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம், நீர் மற்றும் காற்று பாதுகாப்பு சட்டம், வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டம், சிகரெட் மற்றும் புகையிலை தடுப்புச் சட்டம், ஒலி மாசு தடுப்புச்சட்டம், தேசிய பசுமைத்தீர்ப்பாயச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 2019'ஐக் காட்டிலும் 78.1% அதிகரித்துள்ள –து தெரியவந்துள்ளது.

தமிழகம் முதலிடம்: கரோனா தொற்று காரணமாக பிற குற்றச் செயல்கள் பெரிய அளவில் அதிகரிக்காத நிலையில், சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்குகள் மீதான குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளது.

சுற்றுச்சூழல் மாசு தொடர்பான சட்டங்களின்கீழ், 2020–இல் 61,767 வழக்குகள் நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில், தமிழகத்தில் மட்டும் இந்தச் சட்டத்தின்கீழ், 42,756 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 3 மடங்கு அதிகமாகும். தமிழகத்தை அடுத்து ராஜஸ்தானில் 9,543 வழக்குகளும், உத்தரப் பிரதேசத்தில் 2,981 வழக்குகளும், கேரளத்தில் 1,795 வழக்குகளும், உத்தரகண்டில் 1,271வழக்குகளும் அதிகபட்சமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. மிசோரம் மாநிலத்தில் சுற்றுச்சூழல் சட்டத்தின்கீழ் ஒரு வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

சிகரெட் மற்றும் புகையிலைச் சட்டத்தின்கீழ் மட்டும் நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்ட 49,710 வழக்குகளில் 42,731 வழக்குகள் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒலி மாசு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட 7,318 வழக்குகளில் அதிகபட்சமாக ராஜஸ்தான் மாநிலத்தில் 7,186 வழக்குகளும், மத்திய பிரதேசத்தில் 44 வழக்குகளும், தமிழகத்தில் 19 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 2020–இல் இந்திய வனச் சட்டம், வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தலா 3 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதே வேளையில் தேசிய பசுமைத் தீர்ப்பாயச் சட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986, காற்று, நீர் பாதுகாப்புச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் ஒரு வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என தேசிய குற்றப்பதிவு ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

---

5. 2020–இல் சிறார் திருமணங்கள் 50% அதிகரிப்பு

கடந்த ஆண்டில் சிறார் திருமணங்கள் சுமார் 50% அதிகரித்துள்ளதாக தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020–ஆம் ஆண்டில் நாடு முழுவதும் பதிவு செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகள் தொடர்பான விவரங்களை NCRP சமீபத்தில் வெளியிட்டது.

அதன்படி, சிறார் திருமணத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 785 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிகபட்சமாக கர்நாடகத்தில் 184 வழக்குகளும், அஸ்ஸாமில் 138 வழக்குகளும், மேற்கு வங்கத்தில் 98 வழக்குகளும், தமிழகத்தில் 77 வழக்குகளும், தெலங்கானாவில் 62 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சிறார் திருமணத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 2019–ஆம் ஆண்டில் 523 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதனுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை சுமார் 50 சதவீதம் அதிகமாகும்.

சிறார் திருமணத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 2018–ஆம் ஆண்டில் 501 வழக்குகளும், 2017–இல் 395 வழக்குகளும், 2016–இல் 326 வழக்குகளும், 2015–இல் 293 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன. கரோனா தொற்று பரவல் காரணமாக பலரது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது, கடந்த ஆண்டில் சிறார் திருமணங்கள் அதிகரிக்க முக்கியக் காரணமாக இருந்ததாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

---

6. ஐசிஏஓ பாதுகாப்புக் குழுவின் முதல் பெண் தலைவராக இந்தியர் தேர்வு

ஐநா சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பின் (ஐசிஏஓ) பாதுகாப்புக் குழுத் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஷெபாலி ஜுனேஜா தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஐநா'இன் ஐசிஏஓ அமைப்பு விமானப் போக்குவரத்து செயல்பாடுகள், அதன் உள்கட்டமைப்பு, சட்டவிரோத செயல்கள் தடுப்பு, எல்லை தாண்டிய போக்குவரத்தின் நடைமுறைகள் சார்ந்து இயங்கி வருகிறது. இந்த அமைப்பின் பாதுகாப்புக் குழுவுக்கு முதல் பெண்

தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஷெபாலி ஜுனேஜா தேர்வுசெய்யப்ப –ட்டார். கடந்த 1992–ஆம் ஆண்டின் இந்திய வருவாய் பணி பிரிவு அதிகாரியான இவர், மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணைச் செயலராக பணிபுரிந்துள்ளார். கடந்த 2019ஆம் ஆண்டு முதல் ஐசிஏஓவில் இந்திய பிரதிநிதியாக பணிபுரிந்துவந்தார். இவர் ஐசிஏஓவின் பாதுகாப்புக் குழுத் தலைவராகியுள்ளதன் மூலம் 12 ஆண்டுகளுக்குப் பிறகு அக்குழுவின் தலைமைப்பொறுப்பு இந்தியாவுக்கு கிடைத்துள்ளது.

---

7. தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் இமையம் உள்ளிட்ட 24 பேருக்கு சாகித்ய அகாதெமி விருது

தமிழகத்தைச் சேர்ந்த எழுத்தாளர் இமையம் உள்பட பல்வேறு இந்திய மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு சிறந்த இலக்கியத்துக்கான சாகித்திய அகாதெமி விருதும், ஒரு இலட்சம் பரிசுத்தொகையும், தாமிர பட்டயமும் தில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது. இலக்கிய உலகில் சிறந்த படைப்புகளுக்கான உயரிய விருதாக சாகித்ய அகாதெமி கருதப்படுகிறது. 2020ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது இந்த ஆண்டு பிப்ரவரியில் அறிவிக்கப்பட்டது. அதில் தமிழில் எழுத்தாளர் இமையம் மற்றும் ஹிந்தி, உருது, தெலுங்கு, கன்னடம் உள்பட 24 மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டது.

கடலூர் மாவட்டம் கழுதூரைச் சேர்ந்த முதுகலைப் பட்டம் பெற்ற எழுத்தாளர் இமையம் (இயற்பெயர் வெ அண்ணாமலை) எழுதிய 'செல்லாத பணம்' என்னும் நாவலுக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டது. இதேபோன்று, 23 இந்திய மொழிகளைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கும் சாகித்திய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டிருந்தது.

---


1. மதிப்புமிக்க பத்தாண்டுகால துபாய் கோல்டன் விசாவைப் பெற்ற உலகின் முதல் தொழிற்முறை கோல்ப் வீரர் யார்?

அ) டைகர் வூட்ஸ்

ஆ) ஜீவ் மில்கா சிங் ☑

இ) ரோரி மெக்லிராய்

ஈ) ஹிதேகி மத்சுயாமா



✓ ஐரோப்பிய சுற்றுப்பயணத்தில் நான்கு முறை வென்ற ஜீவ் மில்கா சிங், மதிப்புமிக்க பத்தாண்டுகால துபாய் கோல்டன் விசாவைப் பெற்ற உலகின் முதல் தொழிற்முறை கோல்ப் வீரராக மாறியுள்ளார். கோல்ப் விளையாட்டில் அவரது சாதனைகளைப் போற்றும் விதமாக அவருக்கு இந்த விசா வழங்கப்பட்டுள்ளது.

---

2. பின்வரும் எந்த நாட்டுடன், இந்தியா, பருவநிலை நடவடிக்கை & நிதி திரட்டல் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது?

அ) சீனா

ஆ) ரஷ்யா

இ) பிரான்ஸ்

ஈ) அமெரிக்கா ☑



✓ பருவநிலை நடவடிக்கை & நிதி திரட்டல் பேச்சுவார்த்தை தொடங்கியது. இப்பேச்சுவார்த்தை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலைத் துறை அமைச்சர் புபேந்தர் யாதவ், பருவநிலைக்கான அமெரிக்க அதிபரின் சிறப்பு தூதர் ஜான் கெர்ரி ஆகியோரால் தில்லியில் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது.

✓ இந்த பேச்சுவார்த்தை, பருவநிலை மற்றும் சுற்றுச்சூழலில், இந்தியா–அமெரிக்கா இடையிலான இருதரப்பு கூட்டுறவை வலுப்படுத்துகிறது.

---

3. நடப்பாண்டில் (2021) வரும் உலக தேங்காய் நாளுக்கான கருப் பொருள் என்ன?

அ) Building a Safe Inclusive Resilient and Sustainable Coconut Community Amid COVID–19 Pandemic & Beyond ☑

ஆ) Coconuts and Nutrition World

இ) Coconuts and COVID–19

ஈ) Coconuts in Asian and Pacific regions



✓ ஒவ்வோர் ஆண்டும் செப்.2 அன்று உலகம் முழுவதும் உலக தேங்காய் நாள் அனுசரிக்கப்படுகிறது. தேங்காயின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இது, ஆசிய மற்றும் பசிபிக் தேங்காய் சமூகம் நிறுவப்பட்ட நாளையும் நினைவுகூர்கிறது. நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருள் – "Building a Safe Inclusive Resilient and Sustainable Coconut Community Amid COVID–19 Pandemic & Beyond".

---

4. 'பன்னாட்டுத் தொண்டு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) செப்டம்பர்.5 ☑

ஆ) செப்டம்பர்.10

இ) செப்டம்பர்.15

ஈ) செப்டம்பர்.20



✓ ஆண்டுதோறும் செப்.5 அன்று உலகம் முழுவதும் சர்வதேச தொண்டு நாள் அனுசரிக்கப்படுகிறது. தன்னார்வ & கொடை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு மக்களையும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் ஊக்குவிப்பதே இந்நாளின் நோக்கமாகும். செப்.5–அன்னை தெரசாவின் நினைவுநாளையும் குறிக்கிறது. கொல்கத்தாவில் மேற்கொண்ட தொண்டுகளுக்காக அவர் அறியப்படுகிறார். கடந்த 1979ஆம் ஆண்டில், அமைதிக்கான 'நோபல்' பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

---

5. நடப்பாண்டில் (2021) வரும், ஓசோன் படலத்தைக் காப்பதற்கான பன்னாட்டு நாளுக்கான (ஓசோன் நாள்) கருப்பொருள் என்ன?

அ) Ozone for Life

ஆ) Ozone and COVID–19

இ) Ozone defending Humans

ஈ) Montreal Protocol – Keeping us, our food and vaccines cool ☑



✓ உலக ஓசோன் நாள் அல்லது 'ஓசோன் படலத்தை பாதுகாப்பதற்கான சர்வதேச நாள்', செப்.16 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. ஓசோன் படலத்தைக்காப்பதற்கான வியன்னா தீர்மானம் 1985 மார்ச்.22 அன்று 28 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது. "Montreal Protocol – Keeping us, our food and vaccines cool" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

6. பன்னாட்டு சம ஊதிய நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) செப்டம்பர்.15

ஆ) செப்டம்பர்.18 ☑

இ) செப்டம்பர்.20

ஈ) செப்டம்பர்.22



✓ செப்டம்பர்.18ஆம் தேதியை பன்னாட்டு சம ஊதிய நாளாக ஐநா அவை கொண்டாடுகிறது. இந்த நாள் முதன்முறையாக இவ்வாண்டு (2020) கொண்டாடப்பட்டது. பெண்கள் & சிறுமிகளுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக்கொண்டுவருதற்காக ஐநா அவை இந்நாளை அனுசரிக்கிறது. ஐநா அவையைப் பொறுத்தவரை, உலகின் அனைத்து பகுதிகளிலும் ஆண்களைவிட பெண்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது.

---

7. உலக அல்சைமர் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) செப்டம்பர்.20

ஆ) செப்டம்பர்.21 ☑

இ) செப்டம்பர்.22

ஈ) செப்டம்பர்.23



✓ அல்சைமர் என்பது ஞாபக மறதிக்கு வழிவகுக்கிற ஒரு நாட்பட்ட நோய் ஆகும். காலப்போக்கில் இதன் நிலை மிகமோசமடைந்து அன்றாட பணிகளைச் செய்வதுகூட கடினமாகிறது. கடந்த 1994ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் செப்.21 அன்று அல்சைமர் நாள் அனுசரிக்கப்படுகிறது. உலகெங்குமுள்ள தேசிய & உள்ளூர் அல்சைமர் சங்கங்கள், இந்நோய் குறித்த விழிப்புணர்வு திட்டங்களை அடைய உதவும் வகையில், ஆண்டுதோறும் அல்சைமர் மாதமாக செப்டம்பரை அனுசரிக்கின்றன.

---

8. 2021 – உலக முதலுதவி நாள் கடைபிடிக்கப்பட்ட தேதி எது?

அ) செப்டம்பர்.10

ஆ) செப்டம்பர்.11 ☑

இ) செப்டம்பர்.12

ஈ) செப்டம்பர்.13



✓ உலக முதலுதவி நாளானது ஆண்டுதோறும் செப்டம்பர் இரண்டாவது சனிக்கிழமையன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2021) செப்.11 அன்று இந்த நாள் கடைபிடிக்கப்பட்டது. முதலுதவி பயிற்சியில் மக்களை ஊக்குவிப்பதற்காக இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது; அது காயங்களைத் தடுக்கவும் மற்றும் முக்கியமான சூழ்நிலைகளில் உயிரைக் காக்கவும் உதவுகிறது. பன்னாட்டு செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறை சங்கங்களின்படி, 2021 உலக முதலுதவி நாளிற்கான கருப்பொருள், "First aid and road safety" ஆகும்.

---

9. சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) இக்பால் சிங் லால்புரா ☑

ஆ) அதிப் ரஷீத்

இ) P K பிஞ்சா

ஈ) ஜான் பார்லா



✓ முன்னாள் இகாப அதிகாரி இக்பால் சிங் லால்புரா, சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். குடியரசுத்தலைவரின் காவல் பதக்கம், சிறப்பாக சேவை புரிந்தமைக்கான காவல் பதக்கம், சிரோமணி சீக் சாஹித்கர் விருது, சீக்கிய அறிஞர் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை அவர் பெற்றுள்ளார். அவர் பஞ்சாபைச் சார்ந்தவராவார்.

---

10. இந்தியாவின் முதல் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட உயர் சாம்பல் நிலக்கரி வளிமயமாக்கல் அடிப்படையிலான மெத்தனால் உற்பத்தி ஆலை திறக்கப்பட்டுள்ள நகரம் எது?

அ) ஹைதராபாத் ☑

ஆ) சென்னை

இ) மங்களூரு

ஈ) பெங்களூரு



✓ இந்தியாவின் முதல் உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட உயர்–சாம்பல் நிலக்கரி வளிமயமாக்கல் அடிப்படையிலான மெத்தனால் உற்பத்தி ஆலை ஹைதராபாத் BHEL ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையத்தில் திறக்கப்பட்டது. NITI ஆயோக், PMO–இந்தியா மற்றும் மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் முயற்சியான இந்த ஆலைக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நிதியளித்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பொறியியல் கல்லூரிகளின் தரவரிசை வெளியீடு

சென்னை மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி தேசிய தரவரிசைப் பட்டியலில் 109–ஆவது இடத்தையும், தமிழ்நாட்டில் 7–ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. தேசிய அளவில் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த 10 பொறியியல் கல்லூரிகள் குறித்த விவரங்கள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. தேசிய அளவில் 45–ஆவது இடத்தைப் பெற்ற சென்னை SSN பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 1–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 53–ஆவது இடத்தைப் பெற்ற கோவை PSG பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 2–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

தேசிய அளவில் 71–ஆவது இடத்தைப் பெற்ற மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 3–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 78–ஆவது இடத்தைப் பிடித்துள்ள கோவை ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 4–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 90–ஆவது இடத்தைப் பெற்ற குமரகுரு பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 5–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 102–ஆவது இடத்தைப்பெற்றுள்ள கோவை CIT பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 6–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

தேசிய அளவில் 109–ஆவது இடத்தைப் பெற்ற சென்னை ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 7–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 110–ஆவது இடத்தைப் பெற்ற ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 8–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. தேசிய அளவில் 124–ஆவது இடத்தைப் பெற்ற சிவகாசி மெப்கோ பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 9–ஆவது இடத்தையும், தேசிய அளவில் 128–ஆவது இடத்தைப் பெற்ற கோவை அரசு பொறியியல் கல்லூரி தமிழக அளவில் 10–ஆவது இடத்தையும் பெற்றுள்ளன.

---

2. தேசிய தடகள சாம்பியன்ஷிப்: தமிழக வீரர் பிரவீணுக்கு தங்கம்

தேசிய ஓபன் தடகள சாம்பியன்ஷிப்பில் மும்முறை தாண்டுதலில் தமிழக வீரர் பிரவீண் சித்ரவேல் தங்கம் வென்றார். அவர் தனது முதல் முயற்சியிலேயே 16.88 மீ தூரம் தாண்டி முதலிடம் பிடித்தார். சர்வீசஸ் வீரர் அப்துல்லா அபுபக்கர் 16.84 மீ கடந்து வெள்ளியும், சகவீரர் கார்த்திக் உன்னிகிருஷ்ணன் 16.80 மீ கடந்து வெண்கலமும் வென்றனர்.

இந்திய வீரர்களில் இதுவரை சிறப்பாகச் செயல்பட்டவர்கள் வரிசையில், ரஞ்சித் மஹேஸ்வரி (17.30 மீ), அர்விந்தர் சிங் (17.17 மீ) ஆகியோரை அடுத்து பிரவீண் 3–ஆவது இடத்தில் இருக்கிறார்.

மகளிருக்கான 200 மீ ஓட்டத்தில் தமிழக வீராங்கனை அர்ச்சனா சுசீந்திரன், தில்லியின் தரன்ஜீத் கௌரை தோற்கடித்து முதலிடம் பிடித்தார். ஆடவர் 200 மீ ஓட்டத்தில் அஸ்ஸாம் வீரர் அமலன் போர்கோஹெய்ன் 20.75 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார். மகளிர் சங்கிலி குண்டு எறிதலில் மஞ்சு பாலா சிங் 64.42 மீ தூரம் எறிந்து முதலிடம் பிடித்தார். ரயில்வேயின் சரிதா ரோமித் சிங், ஜோதி ஜாக்கர் ராணா ஆகியோர் முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர். 10,000 மீ ஓட்டத்தில் சர்வீசஸ் வீரர் கார்த்திக் குமார், மகாரா–ஷ்டிர வீரர் சஞ்சீவனி பாபுராவ் ஜாதவ் ஆகியோர் முதலிடம் பிடித்தனர்.

---

1. பின்வரும் எந்த நகரத்தில், இராஜ மகேந்திர பிரதாப் சிங் பல்கலைக்கழகத்திற்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்?



அ) அலிகார் ☑

ஆ) மீரட்

இ) ஜெய்ப்பூர்

ஈ) வாரணாசி

✓ அலிகரில் ராஜா மகேந்திர பிரதாப் சிங் மாநிலப் பல்கலைக்கழகத்துக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். தலைசிறந்த விடுதலைப் போராட்ட வீரர், கல்வியாளர் மற்றும் சமூக சீர்திருத்தவாதியான ராஜா மகேந்திர பிரதாப் சிங்கின் நினைவாகவும், அவரை கௌரவிக்கும் வகையிலும், உபி மாநில அரசால் இப்பல்கலைக்கழகம் அமைக்கப்படுகிறது. அலிகார் பிரிவில் உள்ள 395 கல்லூரிகளுக்கு இப்பல்கலை அங்கீகாரமளிக்கும்.

---

2. பொறியாளர்கள் நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?



அ) செப்டம்பர்.14

ஆ) செப்டம்பர்.10

இ) செப்டம்பர்.15 ☑

ஈ) செப்டம்பர்.11

✓ சர் மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு செப்.15 அன்று பொறியாளர்கள் நாள் அனுசரிக்கப்பட்டது. இந்த நாள் பொறியியல் மற்றும் கல்வித்துறையில் சர் மோக்ஷகுண்டம் விஸ்வேஸ்வ –ரையாவின் பங்களிப்புகளைக் குறிக்கிறது. இந்தியா முழுவதும் அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்மின்திட்டங்களை அமைப்பதில் அவர் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தார்.

---

3. சமீபத்தில், மத்திய மறைமுக வரிகள் & சுங்கங்கள் வாரியத்தால் சுங்க விமான நிலையமாக அறிவிக்கப்பட்ட விமான நிலையம் எது?



அ) காங்க்ரா விமான நிலையம்

ஆ) பாக்கியோங் விமான நிலையம்

இ) சுவாமி விவேகானந்தா விமான நிலையம்

ஈ) குஷிநகர் விமான நிலையம் ☑

✓ மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்கநங்கள் வாரியமானது (CBIC), குஷிநகர் விமான நிலையத்தை, சுங்க விமான நிலையமாக அறிவித்து உள்ளது. இந்த அறிவிப்பு பௌத்த யாத்திரீகர்கள் உட்பட பன்னாட்டுப் பயணிகளின் போக்குவரத்துக்கு உதவும்.

---

4. ஹிந்தி திவாஸின்போது "உதான் திட்டத்தை" தொடங்கிய அமைப்பு எது?

அ) ஐஐடி கௌகாத்தி

ஆ) ஐஐடி பம்பாய் ☑

இ) ஐஐடி காந்திநகர்

ஈ) ஐஐடி தில்லி

✓ 2021 செப்.14 அன்று ஹிந்தி திவாஸ் நாளன்று ஐஐடி–பாம்பே தனது "உதான் திட்டத்தை" அறிமுகப்படுத்தியது. உயர்கல்வி நிறுவனங்களில் சேரும்போது பல மாணவர்கள் எதிர்கொள்ளும் மொழி ரீதியிலான தடையை உடைக்கும் நோக்கில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.

✓ இந்த "உதான் திட்டம்" பாடப்புத்தகங்கள் & பிற ஆய்வுப்பொருட்களை ஆங்கில மொழியிலிருந்து ஹிந்தி மற்றும் பிற இந்திய மொழிகளுக்கு மொழிபெயர்க்க உதவுகிறது.

---

5. 2021 – சுவாமி பிரம்மானந்த் விருது யாருக்கு வழங்கப்பட்டது?



அ) H C வர்மா

ஆ) அரவிந்த் கெஜ்ரிவால்

இ) ஆனந்த் மஹிந்திரா

ஈ) ஆனந்த் குமார் ☑

✓ ஐஐடி நுழைவுத் தேர்வுக்கு ஆதரவற்ற மாணவர்களைத் தயார்படுத்தும் "சூப்பர் 30" முயற்சியின்மூலம் கல்வித்துறைக்கு அவர் ஆற்றிவரும் பங்களிப்பிற்காக கணிதவியலாளர் ஆனந்த் குமாருக்கு 2021 – சுவாமி பிரம்மானந்த் விருது வழங்கப்பட்டது.

---

6. US ஓபன் பெண்கள் இரட்டையர் பட்டத்தை வென்றவர் யார்?



அ) கோகோ காஃப் மற்றும் கேட்டி மெக்னலி

ஆ) சமந்தா ஸ்டோசூர் மற்றும் ஜாங் ஷுவாய் ☑

இ) சமந்தா ஸ்டோசூர் மற்றும் எம்மா ரடுகானு

ஈ) பெங் சுவாய் மற்றும் வாங் கியாங்

✓ ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர் மற்றும் சீனாவின் ஜாங் ஷுவாய் ஆகியோர் தொடர்ச்சியாக 11ஆவது ஆட்டத்தில் வெற்றிபெற்று அமெரிக்க ஓபன் மகளிர் இரட்டையர் இறுதிப்போட்டியில் அமெரிக்க இளம்பெண்க –ளான கோகோ காப் மற்றும் கேட்டி மெக்னலி ஆகியோரை வீழ்த்தி வெற்றிபெற்றனர்.

7.எந்நாட்டின் கடற்படையுடன் இணைந்து, INS தபார், செங்கடலில் இராணுவப்பயிற்சியை நடத்தியது?



அ) சூடான் ☑

ஆ) எகிப்து

இ) எத்தியோப்பியா

ஈ) ஓமன்

✓ இந்திய கடற்படையும் சூடான் கடற்படையும் சூடான் கடலுக்கு அப்பால் செங்கடலில் இருதரப்பு கடற்பயிற்சியை மேற்கொண்டன. INS தபார் மற்றும் அல்மாஸ் & நிமர் ஆகிய இரண்டு சூடான் கடற்படை கப்பல்கள் இந்திய கடற்படையுடன் இணைந்து இந்தப் பயிற்சியில் பங்கேற்றன.

---

8. 2022 பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டியிலிருந்து சர்வதேச ஒலிம்பிக் குழுமத்தால் இடைநீக்கம் செய்யப்பட்ட நாடு எது?

அ) கியூபா

ஆ) வட கொரியா ☑

இ) வெனிசுலா

ஈ) பெரு

✓ COVID தொற்றுநோயைக்காரணங்காட்டி டோக்கியோ விளையாட்டுக்கு ஓர் அணியை அனுப்ப மறுத்ததற்காக, 2022ஆம் ஆண்டு பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக்கிலிருந்து, வட கொரியாவை பன்னாட்டு ஒலிம்பிக் குழுமம் முறையாக இடைநீக்கம் செய்துள்ளது.

---

9. மருத்துவ படிப்புகளின் சேர்க்கைக்கு NEET விலக்கு கோரும் மசோதாவை நிறைவேற்றிய மாநிலம் எது?



அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) மகாராஷ்டிரா

ஈ) ஒடிஸா

✓ NEET (தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு)'இலிருந்து மாநிலத்திற்கு நிரந்தர விலக்கு கோரும் மசோதாவை தமிழ்நாட்டின் சட்டசபை நிறைவேற்றியது. இம்மசோதா நிறைவேறியவுடன், மாணவர்கள் NEET அமல்படுத்தப்படுவதற்கு முன்பு இருந்ததுபோல், பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ இலங்கலை பட்டப்படிப்புக –ளில் சேர்க்கப்படுவார்கள்.

---

10. பின்வரும் எந்த நாட்டிடம், இந்தியா, டார்னியர் விமானத்தை ஒப்படைத்துள்ளது?



அ) சிங்கப்பூர்

ஆ) வியட்நாம்

இ) மொரிஷியஸ் ☑

ஈ) இலங்கை

- ✓ இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக விஷன் சாகர் திட்டத்தின் ஒருபகுதியாக, இந்தியா, மொரிஷியஸிடம் டார்னியர் இரக விமானத்தை ஒப்படைத்துள்ளது.
- ✓ "Security and Growth for All in the Region" என்பதன் சுருக்கந்தான் SAGAR. இதன்மூலம் இந்தியா தனது கடல்சார் அண்டை நாடுகளுடன் பாதுகாப்பு & பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த எண்ணுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. NEET தேர்வு நீடித்தால் தமிழகம் 75 ஆண்டுகாலம் பின்னோக்கி சென்றுவிடும்

நீட் தோ'வு குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையிலான குழுவின் ஆய்வறிக்கை மக்கள் நல்வாழ்வுத் துறை இணையப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. நீட் தோ'வு இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்தால் சுதந்திரத்துக்கு முன்பு இருந்த பின்னடவை தமிழகம் மீண்டும் சந்திக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தின் மருத்துவத் துறை மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படக் கூடும் என்றும், நகர்ப்புறங்கள், கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழைகளுக்கு மருத்துவக் கல்வி எட்டாக்கனியாகிவிடும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்தியும், புதிய சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தும் நீட் தோ'வு முறையை தமிழகத்தில் ரத்து செய்ய நடவடிக்கை வேண்டும் என்று நீதிபதி ராஜன் குழு பரிந்துரைத்துள்ளது. நாடு முழுதும், மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சோ'க்கைக்கு நீட் நுழைவுத் தோ'வு நடத்தப்படுகிறது. தமிழகத்தைப் பொருத்தவரை மாநில அரசு அத்தோ'வை ரத்து செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து வருகிறது.

அதன் தொடர்ச்சியாக நீட் தோ'வில் உள்ள பாதகங்களை ஆராய நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர், மருத்துவக் கல்வி இயக்குநர் உள்பட 9 போ' அடங்கிய உயர்நிலைக் குழு ஒன்றை அரசு அமைத்தது. இக்குழுவானது அதுதொடர்பான ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியதுடன், பொதுமக்களிடம் இருந்தும் கருத்துகளைக் கேட்டிருந்தது. அதன்படி, சுமார் 85 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்களுடைய கருத்துகளை தெரிவித்து இருந்தனர்.

அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கடந்த சில வாரங்களுக்கு முன்பு நீதிபதி ராஜன் குழு சமர்ப்பித்தது. இதற்கிடையே, சட்டப் பேரவையில் நீட் தோ'வுக்கு விலக்கு அளிக்கும் மசோதாவை நிறைவேற்றி, அதனை ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு தமிழக அரசு அனுப்பியுள்ளது. இந்நிலையில், ராஜன் குழுவின் ஆய்வறிக்கை மக்கள் நலத் துறை இணையப் பக்கத்தில் திங்கள்கிழமை வெளியிடப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

நீட் தோ'வின் சாதக, பாதகங்களை ஆய்வு செய்ததுடன் அதுதொடர்பாக பொது மக்களிடம் கருத்தறியப்பட்டது. அதற்காக விளம்பரம் வெளியிடப்பட்டு, முறையாகக் கருத்துகள் பெறப்பட்டன. மொத்தம் 86,342 பேரிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டன. அவற்றில், 85,953 கருத்துகள் மின்னஞ்சல் மூலமாகவும், 332 அஞ்சல் மூலமாகவும், 57 டிராப்-பாக்ஸ் மூலமாகவும் பெறப்பட்டன. அவற்றைப் பரிசீலித்தபோது அதில் 65,007 போ' நீட் தோ'வுக்கு எதிராகவும், 18,966 போ' ஆதரவாகவும் கருத்து தெரிவித்திருந்தனர். 1,453 போ' கருத்து தெரிவிக்க விரும்பவில்லை என்று குறிப்பிட்டிருந்தனர். அவர்கள் அளித்த ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை ஆய்வு செய்ததில் நீட் தோ'வு தமிழகத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உணர முடிகிறது.

இந்தத் தோ'வு முறை தொடர்ந்தால், மாநிலத்தின் சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலையும். சுதந்திரத்துக்கு முன்பு கிராமங்களிலும், சிறுநகரங்களிலும், அடிப்படை மருத்துவப் பயிற்சிகளை மட்டுமே கற்ற சுகாதார ஊழியர்கள் மருத்துவம் பார்த்து வந்தனர். அந்த நிலைக்குத்தான் தமிழகம் தள்ளப்படும். இதைத் தவிர்க்க தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு மருத்துவ இடங்களை மாநில அரசே நிரப்பலாம். அல்லது சட்ட மசோதாவை நிறைவேற்றி குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பலாம். அதைத் தொடர்ந்து பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சோ'க்க நடத்த வேண்டும் என்று அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. உத்தரகாண்ட் மாநிலத்தில் இந்தியா-நேபாளம் கூட்டு ராணுவ பயிற்சி

இந்தியா மற்றும் நேபாள நாட்டின் ராணுவம் கூட்டாக 15 நாட்கள் போர்ப் பயிற்சி பெறுகின்றன. இந்த பயிற்சி உத்தரகாண்ட் மாநிலம் பித்தோராகரில் நேற்று தொடங்கி உள்ளது. இதையொட்டி கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றன. அக்டோபர் 3-ந்தேதி வரை பயிற்சி நடக்கிறது. இந்த போர்ப்பயிற்சிக்கு சூர்யகிரண் என்று பெயரிடப்பட்டு உள்ளது. முன்னதாக கடந்த சனிக்கிழமை இந்த போர் பயிற்சிக்காக உத்தரகாண்ட் வந்திறங்கிய நேபாள ராணுவ குழுவினருக்கு இந்திய ராணுவ அணிவகுப்பு நடத்தி வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இதுகுறித்து இந்திய ராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இது இந்தியாவும், நேபாளமும் இணைந்து பங்குபெறும் 15-வது பயிற்சியாகும். இரு நாட்டு ராணுவ தடைப்படை குழுக்கள், தங்கள் பயங்கரவாத தடுப்பு யுத்திகள் மற்றும் பேரிடர் மீட்பு உத்திகள் பற்றிய பயிற்சிகளை பங்கிட்டு கொள்வதுடன், தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றன" என்று கூறப்பட்டு உள்ளது.

---

3. இந்திய, இந்தோனேசிய கடற்படை கூட்டுப் பயிற்சி தொடக்கம்

இந்திய, இந்தோனேசிய கடற்படைகள் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப் பயிற்சி திங்கள்கிழமை தொடங்கியது. கடந்த 2018-ஆம் ஆண்டு முதல் இந்தியா, இந்தோனேசியா கடற்படைகள் இணைந்து 'சமுத்திர சக்தி' என்ற பெயரில் கூட்டுப் பயிற்சி மேற்கொண்டு வருகின்றன. இந்தப் பயிற்சி 3-ஆவது முறையாக இந்தோனேசியாவின் ஜாவா, சுமத்ரா தீவுகளுக்கு இடையே உள்ள சுன்டா நீரிணைப் பகுதியில் திங்கள்கிழமை தொடங்கியது. இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படையின் ஷிவாலிக், கட்மத் போர்க்கப்பல்களும், கடற்பகுதியில் நீண்ட தூரம் உளவு பார்க்கும் பி81 விமானமும் பங்கேற்கின்றன.

இதுதொடர்பாக இந்திய கடற்படை செய்தித்தொடர்பாளரும் கமாண்டருமான விவேக் மத்வால் கூறுகையில், "கடல்சார் நடவடிக்கைகளில் இந்தியா, இந்தோனேசியா கடற்படைகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்துவதையும், பரஸ்பர புரிதல் மற்றும் கூட்டாக செயல்படுவதை மேம்படுத்துவதையும் 'சமுத்திர சக்தி' பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகள் சார்ந்த பொதுவான புரிதலை வளர்த்துக் கொள்ளவும், இருதரப்பிலுமுள்ள சிறந்த நடைமுறைகளை பகிர்ந்துகொள்ளவும் இந்தப் பயிற்சி உதவும்' ' என்று தெரிவித்தார்.

---

4. புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது: எஸ்.வி. சரஸ்வதிக்கு குடியரசுத் தலைவர் வழங்கினார்

ராணுவ செவிலியர் சேவை (எம்என்எஸ்) துணைத் தலைமை இயக்குநர் பிரிகேடியர் எஸ்.வி.சரஸ்வதிக்கு 2020-ஆம் ஆண்டுக்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கி கௌரவித்தார். ராணுவ செவிலியர் சேவையில் மகத்தான பங்களிப்புக்காக அவருக்கு செவிலியர்களுக்கான மிக உயர்ந்த விருது வழங்கப்பட்டுள்ளது. காணொலி வாயிலாக திங்கள்கிழமை நடைபெற்ற இந்த விழாவில் குடியரசுத் தலைவர், பிரிகேடியர் எஸ்.வி.சரஸ்வதிக்கு இந்த விருதை வழங்கினார்.

---

1. PM KUSUM திட்டத்தின்கீழ் ஆ.ஃப்-கிரிட் சோலார் பம்புகளை நிறுவுவதில், நாட்டிலேயே முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

அ) பீகார்

ஆ) இராஜஸ்தான்

இ) ஹரியானா ☑

ஈ) மத்திய பிரதேசம்

✓ 2020-21ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த 15,000 பம்புகளில் 14,418 பம்புகளை நிறுவி, பிரதான் மந்திரி கிசான் உர்ஜா சுரக்ஷா இவம் உத்தன் மகாபியான் (PM KUSUM) கீழ் ஆ.ஃப்-கிரிட் சோலார் பம்புகளை நிறுவுவதில் ஹரியானா நாட்டிலேயே முதலிடத்தைப் பிடித்துள்ளது.

---

2. தேசிய வன தியாகிகள் நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?

அ) செப்டம்பர்.14

ஆ) செப்டம்பர்.10

இ) செப்டம்பர்.15



ஈ) செப்டம்பர்.11 ☑

✓ செப்.11 அன்று தேசிய வன தியாகிகள் நாள் கொண்டாடப்படுகிறது. 2013 ஆம் ஆண்டில், சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் அறிவித்த பிறகு, இந்த நாள் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வந்தது. கடந்த 1730'இல் இதே தேதியில், பலரறியா கெஜார்லி படுகொலை நடந்ததைக் குறிக்கும் வகையில் இத்தேதி தேர்வு செய்யப்பட்டது இத்துயரச்சம்பவத்தின்போது, இராஜஸ்தானின் அப்போதைய மன்னர் மகாராஜா அபை சிங்கின் உத்தரவின் பேரில் மக்கள் கெஜார்லி மரங்களை வெட்டத்தொடங்கினர். இந்த மரங்கள், ராஜஸ்தானின் கெஜார்லி கிராமத்தில் உள்ள பிஷ்னோய் சமூகத்தைச் சேர்ந்த மக்களால் புனிதமாகக் கருதப்பட்டன.

---

3. 'இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள்' பற்றிய அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ) தேசிய மேம்பாட்டுக் கழகம்

ஆ) NITI ஆயோக் ☑

இ) புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ 'இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள்' பற்றிய அறிக்கையை, NITI ஆயோக் வெளியிட்டுள்ளது.

✓ சுகாதாரமான நகரங்களைத் திட்டமிடுதல், நகர்ப்புற நிலத்தின் உகந்த பயன்பாடு, மனிதவள திறன்களை அதிகரித்தல், நகர்ப்புற நிர்வாகத்தை வலுப்படுத்துதல், உள்ளூர் தலைமையை உருவாக்குதல், தனியார் துறையின் பங்கை மேம்படுத்துதல் மற்றும் நகர்ப்புற திட்டமிடல் கல்வி முறையை மேம்படுத்துதல் ஆகியவை உட்பட நகர்ப்புற திட்டமிடல் குறித்த பல அம்சங்களின் பரிந்துரைகள் இந்த அறிக்கையில் உள்ளன.

---

4. காவல்துறையினரின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை அறிந்துகொள்வதற்காக புதிய காவலாணையத்தை அமைக்க முடிவு செய்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) இமாச்சல பிரதேசம்

இ) குஜராத்

ஈ) மணிப்பூர்

✓ காவல்துறையினரின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை அறிந்து கொள்வதற்காக தமிழ்நாடு அரசு ஒரு புதிய காவல் ஆணையத்தை அமைக்கவுள்ளது. காவல்துறை மற்றும் பொதுமக்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதற்கான வழிகள், தேவையான திட்டங்கள் மற்றும் காவல்துறையினருக்கான புதிய பயிற்சித்திட்டங்களை பரிந்துரைப்பது இதன் பணியாகும்.

✓ பொதுமக்கள் தங்கள் குறைகளை காவல்துறையில் பதிவுசெய்வதற்காக ஒரு திறன்பேசி செயலியை வெளியிடுவதோடு மட்டுமல்லாமல், ஓர் ஆன்லைன் புகார் தாக்கல் பொறிமுறையும் உருவாக்கப்படும். வங்கிகள், வேலைவாய்ப்பு மற்றும் பிற இணையவழி குற்றங்கள் சம்பந்தப்பட்ட குற்றங்களைச் சமாளிக்க நிபுணர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

5. டிஜிட்டல் விவசாயத்தை முன்னெடுப்பதற்காக பின்வரும் எந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது?

அ) சிஸ்கோ

ஆ) நிஞ்சாகார்ட்

இ) ITC லிட்



ஈ) மேலே உள்ள அனைத்தும் ☑

✓ டிஜிட்டல் விவசாயத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக தனியார் நிறுவனங்களுடன் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் வேளாண் மற்றும் உழவர்கள் நல அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. இத்திட்டங்களின் அடிப்படையில், எப்பயிரை விளைவிக்கலாம், எந்த வகை விதையைப் பயன்படுத்தலாம், அதிக மகசூலைப் பெறுவதற்காக என்ன செயல் முறைகளைப் பின்பற்றலாம் உள்ளிட்டவை குறித்த விவரமான முடிவுகளை விவசாயிகள் எடுக்க இயலும்.

6.கதிரியக்கத்தரவைப்பெறக்கூடிய புவி கண்காணிப்பு செயற்கைக் கோளை விண்ணில் செலுத்திய நாடு எது?

அ) சீனா ☑

ஆ) இந்தியா

இ) ஜெர்மனி

ஈ) ஜப்பான்



✓ சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளை கண்காணிக்கும் மற்றும் அதன் இயற்கைவள கண்காணிப்பை அதிகரிக்கும் முயற்சியாக சீனா 24ஆவது காபென்-வரிசை புவி-கண்காணிப்பு செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது. லாங் மார்ச் 4C ஏவுகலத்தில், ஷான்ஸி மாகாணத்தில் உள்ள தையுவான் செயற்கைக்கோள் ஏவு மையத்தில் இருந்து இந்தச் செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது.

✓ விண்வெளி, நிறமாலை மற்றும் கதிரியக்கத் தரவைப் பெறும் திறன் கொண்ட அந்த விண்கலத்தில் சீனா ஏழு இமேஜர்கள் மற்றும் சென்சார்களை பொருத்தியுள்ளது.

---

7. எந்த வங்கியின் பங்குதாரராக ரேகா ஜெயின் நியமிக்கப்பட்டார்?

அ) இந்தியன் வங்கி

ஆ) பஞ்சாப் நேஷனல் வங்கி ☑

இ) HDFC வங்கி

ஈ) ஐசிஐசிஐ வங்கி

✓ ஆஷா பண்டார்கர், பங்குதாரர் இயக்குநராக இருந்து விலகிய பிறகு, ரேகா ஜெயினை தனது பங்குதாரர் இயக்குநராக பஞ்சாப் நேஷனல் வங்கி நியமித்துள்ளது. முன்னதாக, அவர் இந்திய தொலைத்தொடர்பு ஆலோசகர்கள் குழுவில், 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை ஒரு சுயாதீன இயக்குநராக பணியாற்றினார். ஜெயின், TCIL வாரியத்தின் தணிக்கை குழுவிற்கும் தலைமைதாங்கியுள்ளார்.

---

8. கோளரங்க புதுமை சவாலை தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ) மைகவ் இந்தியா ☑

ஆ) இஸ்ரோ

இ) NITI ஆயோக்

ஈ) பிர்லா கோளரங்கம்

✓ இந்திய துளிர்நிறுவனங்கள் & தொழினுட்ப தொழில்முனைவோருக்காக கோளரங்க புதுமை சவாலை மைகவ் கடந்த வாரம் தொடங்கியது. 2021 அக்.10 வரை இதற்காக பதிவுசெய்துகொள்ளலாம். நமது கோளரங்குகளு -க்கான அதிநவீன தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்காக புது நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப தொழில்முனைவோரிடமிருந்து விண்ணப்பங்களை இந்தச் சவால் வரவேற்கிறது.

---

9. சமீபத்தில், ஆசிய–பசிபிக் கட்டற்ற வர்த்தக குழுவில் சேருவதற்கு விண்ணப்பித்த நாடு எது?

அ) இந்தியா

ஆ) ஜப்பான்



இ) சீனா ☑

ஈ) சிங்கப்பூர்

✓ பன்னாட்டு அரசியலில் தனது செல்வாக்கை அதிகரிக்க 11 நாடுகளைக் கொண்ட ஆசிய–பசிபிக் கட்டற்ற வர்த்தகக் குழுவில் சேருவதற்கு சீனா விண்ணப்பித்துள்ளது. சீன வர்த்தக அமைச்சர் வாங் வென்டாவோ, நியூசிலாந்தின் வர்த்தக அமைச்சரிடம் டிரான்ஸ்–பசிபிக் பார்ட்னர்ஷிப் (CPTPP) அல்லது ஆசிய–பசிபிக் தடையற்ற வர்த்தகக் குழுவிற்கான விரிவான மற்றும் முன்னேற்ற ஒப்பந்தத்தின் பிரதிநிதியாக அந்த விண்ணப்பத்தை சமர்ப்பித்தார்.

✓ CPTPP என்பது ஆசியாவுடனான உறவை அதிகரிக்க அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவால் ஊக்குவிக்கப்பட்ட குழுவாகும். CPTPP ஆனது புருனே, ஆஸ்திரேலியா, கனடா, சிலி, ஜப்பான், மலேசியா, மெக்சிகோ, பெரு, சிங்கப்பூர், நியூசிலாந்து மற்றும் வியட்நாம் ஆகியவற்றை உள்ளடக்கியது.

---

10. 2021 – ஸ்வச்சதா பக்வாடா தொடங்கப்பட்ட இடம் எது?

அ) மர்மகோவா துறைமுக அறக்கட்டளை



ஆ) கொச்சி துறைமுக அறக்கட்டளை ☑

இ) ஜவஹர்லால் நேரு துறைமுக அறக்கட்டளை

ஈ) நவ ஷேவா சர்வதேச சரக்குகள் முனையம்

✓ 2021 செப்.16 அன்று, கொச்சின் துறைமுக அறக்கட்டளையில் 'ஸ்வச்சதா பக்வாடா–2021' தொடங்கப்பட்டது. அனைத்து துறைகளிலும் ஸ்வச்சதா உறுதிமொழி வழங்கப்பட்டது. இதன்போது, துறைமுகப் பகுதிகளில் 'ஷ்ரம்தான் தூய்மைப் பணிகள்' தொடங்கப்பட்டன. முன்மொழியப்பட்ட பக்வாடா நடவடிக்கைகளின் போது துறைமுகப் பகுதிக்குள் வேலை செய்யும் இடங்கள், அலுவலக வளாகங்கள் மற்றும் பொது இடங்களை தூய்மை செய்வது ஆகியவை அடங்கும்.

✓ 'ஸ்வச்சதா பக்வாடா' என்பது சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பிரச்சாரமாகும், இது தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்திய விமானப் படை புதிய தலைமைத் தளபதி விவேக் ராம் சௌதரி

இந்திய விமானப் படையின் புதிய தலைமைத் தளபதியாக விவேக் ராம் சௌதரி நியமிக்கப்படவுள்ளார் என்று நடுவண் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்திய வான்படைத்தலைமைத் தளபதி ஆர் கே எஸ் பதௌரியா செப்.30 ஓய்வு பெறுகிறார். இதையடுத்து விமானப்படையின் புதிய தலைமைத் தளபதியாக ஏர் மார்ஷல் விவேக் ராம் சௌதரியை நியமிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

2. பெங்களூரு–சென்னை எண்ணூர் அதிவேக விரைவுச்சாலை திட்டம்

பெங்களூரு–சென்னை எண்ணூர் 6 வழி விரைவுச்சாலை திட்டத்துக் –கான நில எடுப்புப்பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

பிற மாநிலங்களில் இருந்து, சென்னை–எண்ணூர் காமராஜர் மற்றும் காட்டுப்பள்ளி தனியார் துறைமுகங்களுக்கு சரக்கு வாகனங்கள் வேகமாக வருவதற்காக பாரத்மாலா பரியோஜனா திட்டம்மூலம் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம், ஆந்திர பிரதேச மாநிலம் சித்தூர் முதல், தமிழகத்தின் எல்லையான திருவள்ளூர் மாவட்டத்துக்கு உள்பட்ட தச்சூர் வரையில் 126.550 கிமீ தூரத்துக்கு, பெங்களூரு–சென்னை அதிவேக நெடுஞ்சாலை (6 வழிச்சாலை) அமைக்க திட்டமிடப்பட்டது.

இதில், ஆந்திர மாநிலத்தில் 75 கிமீ, தமிழக எல்லையான திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிப்பட்டு, ஊத்துக்கோட்டை, பொன்னேரி ஆகிய வட்டங்களில் 51.550 கிமீ தூரம் உள்ளது. இதற்கிடையே அமைய உள்ள இச்சாலைக்கு NH–716 என்று அழைக்கப்படுகிறது.

---

3. மதுரையும் மகாத்மாவும்! | மகாத்மா காந்தியின் மதுரை விஜயம் பற்றிய தலையங்கம்

சரியாக இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இதே செப்டம்பர் 22–ஆம் நாள். நமது தமிழகத்தின் மதுரை மாநகரில் அன்று நடந்த சம்பவம் ஒன்று, கடந்த நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளில் ஒன்றாக உலகத்தவரால் கொண்டாடப்படுகிறது. அதுவரை அஹிம்சையையும், அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலையையும் மட்டுமே தனது குறிக்கோளாகக் கொண்டிருந்த காந்தியடிகளை, அடித்தட்டு சாமானியர் குறித்தும் சிந்திக்க வைத்த சரித்திரத் திருப்பம் அந்த நாளில் மாநகர் மதுரையில் அரங்கேறியது.

ஐந்து தடவை மதுரை மாநகருக்கு விஜயம் செய்திருக்கிறார் அண்ணல் காந்தியடிகள். அவரது ஒவ்வொரு மதுரை விஜயமும் ஒவ்வொரு விதத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது என்பதுதான் ஆச்சரியம். அண்ணல் காந்தியடிகளுக்கு மட்டுமல்ல, சுவாமி விவேகானந்தர், பாலகங்காதர திலகர், அரவிந்த கோஷ், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் என்று ஏனைய பல தன்னிகரற்ற தலைமைப் பண்பாளர்களின் வாழ்க்கையிலும் தமிழகம் திருப்புமுனைத் திருத்தலமாக இருந்திருக்கிறது என்பதைத் தற்செயல் நிகழ்வாக ஒதுக்கிவிட முடியவில்லை. அந்த வகையில் பார்க்கும்போது, தமிழகம் காந்தியடிகளிடம் ஏற்படுத்திய தலைகீழ் மாற்றத்தை நாம் பெருமிதத்துடன் கொண்டாடக் கடமைப் பட்டிருக்கிறோம்.

மகாத்மா காந்தியின் இரண்டாவது மதுரை விஜயம்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க விஜயமாக அமைந்தது. 1921 செப்டம்பர் 21, 22 தேதிகளில் மதுரையில் தங்கியிருந்தார் அண்ணல். மதுரைக்கு ரயிலில் வந்து கொண்டிருக்கும்போதுதான் அண்ணலுக்கு அந்த மனமாற்றம் ஏற்பட்டது. அவரது சிந்தனையிலும் செயல்பாட்டிலும் சாமானியன் முன்னிலை பெற்றது அந்தப் பயணத்தின்போதுதான். மதுரையை நோக்கி விரைந்து கொண்டிருந்த அந்த ரயில், திண்டுக்கல்லைத் தாண்டிப் பயணித்துக் கொண்டிருந்தது. ரயில் பெட்டியில் அமர்ந்திருந்தார் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி. குஜராத்தியினருக்கே உரித்தான பாணியில் உடையணிந்து, தலையில் பெரிய தலைப்பாகையுடன் சக பயணிகளுடன் உரையாடிக் கொண்டும், ரயில் பெட்டிக்கு வெளியே எழில் கொஞ்சும் தமிழகத்தின் வயல்வெளிகளைக் கண்குளிரப் பார்த்துக் கொண்டும் பயணித்துக் கொண்டிருந்தார்.

வெறும் கோவணத்துணியுடன் வயலில் உழவர்கள் உழுது கொண்டிருக்கும் காட்சியைப் பார்த்த வண்ணம் பயணித்துக் கொண்டிருந்த மோகன்தாஸின் மனதில் புயலடிக்கிறது. அங்கே பலர் கோவணத்துணியுடன் உழுது கொண்டிருக்க, இங்கே தான் பல முழம் துணிகளால் போர்த்தப்பட்ட உடையணிந்து கொண்டிருப்பதை நினைத்துத் துணுக்குறுகிறது அந்த மாமனிதரின் மனம். தனக்கும் சாமானிய இந்தியனுக்கும் இடையே இருக்கும் இடைவெளியை அவர் புரிந்து கொள்கிறார். அடுத்த நிமிடமே, தனது உதவியாளரை அழைத்து நீண்டதொரு அறிக்கையை அந்த ரயில் பெட்டியில் அமர்ந்தபடியே எழுதுகிறார். இடி முழக்கத்துக்கு முன்னால் வரும் மின்னல் வெட்டுப்போல, அவரது ஆடை மாற்றத்துக்கு முன்னால், அந்த ரயில் பெட்டியில் மனமாற்றம் ஏற்பட்டு விடுகிறது.

மதுரைக்கு வந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, மேலமாசி வீதி 251 ஏ – இலக்க வீட்டில் தங்குகிறார். செப்டம்பர் 21–ஆம் தேதி இரவு தூங்கப் போவதற்கு முன்னால், அடுத்த நாள் அதிகாலையில் தான் மேற்கொள்ள இருக்கும் மாற்றத்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டார். செப்டம்பர் 22 அதிகாலையில் முழுக்க மழித்தத் தலையுடனும், நான்கு முழ வேட்டியுடன் மேலே ஒரு துணியை மட்டும் போர்த்திக் கொண்டு காட்சியளித்த அந்தக் கணமே மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி காற்றுடன் கரைந்து, அங்கே மகாத்மா காந்தி உருவெடுத்து விட்டார். "கடையனுக்கும் கடைத்தேற்றம்' இல்லாமல் அஹிம்சையும், சுதந்திரமும் அர்த்தமற்றவை என்பதை அவர் தனது செயலால் உணர்த்த முற்பட்டார். பொது வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் எளிமையின் அடையாளமாக இருந்தாக வேண்டும் என்று தீர்மானித்தார்.

"எனது வாழ்க்கையில் நீண்ட சிந்தனைக்குப் பிறகு நான் எடுத்த எந்தவொரு முடிவு குறித்தும் நான் வருத்தப்பட வேண்டிய அவசியம் ஏற்படவே இல்லை" என்பார் மகாத்மா காந்தி. அப்படி எடுத்த முடிவுகளில் முக்கியமான முடிவுதான் செப்டம்பர் 22, 1921–இல் மதுரையில் அவர் மேற்கொண்ட ஆடை மாற்றம். ""பொது வாழ்க்கையிலும், அரசியலிலும் மற்றவர்களுக்கு வழிகாட்ட முற்படுபவர்கள், தாங்களே முன்மாதிரியாக இருக்க வேண்டும். அடித்தட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பது போலவே அவர்களைப் போல வாழ்வதும் அவசியம். ஆடம்பரமும் படாடோபமும் அவர்களிடமிருந்து நம்மை அந்நியப்படுத்திவிடும்" –

இதுவும் அண்ணல் காந்தியடிகள் செயல்படுத்திக் காட்டிய அவரது சொற்கள்.

அண்ணல் காந்தியடிகளின் வாழ்க்கையில் மதுரை ஏற்படுத்திய மாற்றங்களின் அடிப்படையில்தான் அகில இந்திய அரசியலில் மாற்றங்கள் ஏற்பட்டன. எளிமை, நேர்மை, தியாகம், சமத்துவம் உள்ளிட்ட காந்தியத்தின் அடையாளம்தான் காந்தியார் அணிந்த ஆடை. இடுப்பை மறைக்க நான்கு முழம் வேட்டியும், மார்பை மறைக்க மேல் துண்டும் என்பது அவரது அரசியல் வாழ்க்கையின் அடையாளம். டால்ஸ்டாய், பெர்ட்ரண்ட் ரஸல், பெர்னார்டு ஷா, மார்ட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா என்று உலக ஆளுமைகள் அனைவரும் பேராளுமையாக ஏற்றுக்கொண்ட ஒரே இந்தியத் தலைவர் அண்ணல் காந்தியடிகள் மட்டும்தான். அரை நிர்வாண தரித்திர நாராயணர்கள் குறித்து அந்த மகாத்மாவை சிந்திக்க வைத்த பெருமை தமிழகத்துக்கு உண்டு. அதனால், காந்தியார் காட்டிய வழியை அரசியலிலும் வாழ்க்கையிலும் பின்பற்ற வேண்டிய கடமை நமக்கு உண்டு!

1. மீண்டும் பயன்படுத்தக்கூடிய GSLV Mk–III ஏவுகலத்தை உருவாக்குவதற்காக அதன் தொழில்நுட்பங்களில் பணியாற்றிவரும் அமைப்பு எது?

அ) ஸ்பேஸ் X



ஆ) இஸ்ரோ ☑

இ) வர்ஜின் கேலக்டிக்

ஈ) ROSCOSMOS

✓ இந்திய விண்வெளி ஆய்வு மையமானது (ISRO) GSLV MkIII ஏவுகலத்தை மீண்டும் பயன்படுத்தத் தேவையான தொழில்நுட்பத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்தப் புதிய நுட்பம், GSLV MkIII ஏவுகலத்தை செங்குத்தாக தரையிறக்க உதவும். இந்த நுட்பம் SpaceX பின்பற்றி வரும் நுட்பதுக்கு இணையாக இருக்கும். மீண்டும் பயன்படுத்தக்கூடிய GSLV MkIII டிரான்ஸ்மிட்டரின் உருவாக்கம், ISRO'இன் நிதியையும் சேமிக்க உதவும்.

---

2. சமீபத்தில், எந்த நாட்டுடனான பேரிடர் அபாயக் குறைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?

அ) ஜெர்மனி



ஆ) ஜப்பான்

இ) இத்தாலி ☑

ஈ) பெல்ஜியம்

✓ பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் மேலாண்மை துறையில் இந்தியா – இத்தாலி இடையே ஒத்துழைப்புடன் செயல்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் மேலாண்மை துறையில் ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இந்தியாவின் தேசிய பேரிடர் மேலாண் ஆணையம், இத்தாலியின் பொது பாதுகாப்புத் துறை இடையே கடந்த ஜூன் மாதம் கையெழுத்தானது.

✓ இருதரப்பின் பேரிடர் மேலாண்மை முறைகளால் இந்தியா மற்றும் இத்தாலி பயனடைய இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உதவும். பேரிடர் மேலாண் துறையில் தயார்நிலை, மீட்பு நடவடிக்கை, திறன் மேம்பாடு ஆகியவற்றை வலுப்படுத்த இந்த ஒப்பந்தம் உதவும்.

---

3. 'ஒரு கிராமப்பஞ்சாயத்து–ஒரு DIGI–பே சகி' என்ற பெயரில் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) உத்தர பிரதேசம்



ஆ) ஹரியானா

இ) அந்தமான் நிக்கோபார் தீவுகள்

ஈ) ஜம்மு & காஷ்மீர் ☑

✓ ஜம்மு–காஷ்மீரின் தொலைதூரப் பகுதிகளில் வீட்டுக்கு வீடு டிஜிட்டல் வங்கி மற்றும் நிதிச் சேவைகளை ஊக்குவிப்பதற்காக, துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா பாம்பூரில் உள்ள ஜம்மு மற்றும் காஷ்மீர் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் (JKEDI) 'ஒரு கிராமப் பஞ்சாயத்து–ஒரு DIGI–பே சகி' என்ற திட்டத்தைத் தொடங்கினார்.

---

4. 2021 – "Peaceful Mission" பயிற்சி நடைபெறுகிற நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) ரஷ்யா ☑

இ) ஐக்கிய இராச்சியம்

ஈ) ஆஸ்திரேலியா

✓ இந்திய வான்படையைச் சேர்ந்த 38 பணியாளர்கள் உட்பட 200 பேர் கொண்ட அனைத்து ஆயுதக் கூட்டுப் படைகளைக் கொண்ட இந்திய இராணுவக்குழு, அமைதி மிஷன் – 2021 பயிற்சியில் பங்கேற்கிறது. இந்தப் பயிற்சி 2021 செப்.13 முதல் 25 வரை தென்மேற்கு ரஷ்யாவின் ஓரன்பர்க் பிராந்தியத்தில் நடைபெறுகிறது. SCO "Peaceful Mission" என்பது ஒரு பன்முக மற்றும் கூட்டு பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சியாகும்.

✓ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உறுப்புநாடுகளுக்கிடையே 'ராணுவ ரீதியிலான உறவின்'கீழ் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

5. UNESCO'இன் நடப்பு 2021ஆம் ஆண்டுக்கான அரசர் செஜோங் எழுத்தறிவு பரிசை, இந்தியாவிலுள்ள எந்த அமைப்பு வென்றுள்ளது?

அ) தேசிய திறந்தநிலைப் பள்ளிக்கல்வி நிறுவனம் ☑

ஆ) அண்ணா பல்கலைக்கழகம்

இ) மெட்ராஸ் பல்கலைக்கழகம்

ஈ) IISc

✓ நொய்டாவில் உள்ள தேசிய திறந்தநிலைப் பள்ளிக்கல்வி நிறுவனம் ஆனது (NIOS), புகழ்பெற்ற UNESCO'இன் அரசர் செஜோங் எழுத்தறிவு பரிசு – 2021'ஐ வென்றுள்ளது. இந்த அமைப்பு, கல்வி அமைச்சகத்தால் நடத்தப்படுகிறது. கல்விக்கான புதுமையான அணுகுமுறைக்காக UNESCO'இன் உலகளாவிய அங்கீகாரத்தை இது பெற்றுள்ளது.

✓ UNESCO'இன் பன்னாட்டு எழுத்தறிவு விருதுகள் ஒரு குறிப்பிட்ட கருப் பொருளில் கவனஞ்செலுத்துகின்றன. நடப்பு 2021ஆம் ஆண்டு, "உள்ளட –க்கிய தொலைவு மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு கற்றல்" என்பதில் கவனஞ்செலுத்துகிறது. இந்த ஆண்டின் (2021) UNESCO பன்னாட்டு கல்வியறிவு பரிசுகள் NIOS உடன் இணைந்து கோட் டி ஐவரி, எகிப்து, குவாத்தமாலா, மெக்ஸிகோ மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவற்றுக்கும் வழங்கப்பட்டது.

---

6. "ஏக் பாஹல்" என்ற இந்திய அளவிலான சிறப்பு இயக்கத்தை தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் ☑

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) நிதி அமைச்சகம்

✓ வீடுகளுக்கேச் சென்று நீதி வழங்கும் "ஏக் பாஹல்" என்ற இந்திய அளவிலான சிறப்பு இயக்கத்தை மத்திய சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் தொடங்கியுள்ளது. தொலைநிலை–சட்டத்தின்கீழ் பதிவுகளை ஊக்குவிக் –கும் வகையில் இது தொடங்கப்பட்டது. நீதித்துறை மற்றும் NALSA இந்த இயக்கத்தை தொடங்கியது.

---

7. இந்தியாவில் உள்ள 112 முன்னேற விழையும் மாவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக கல்வி வழங்குவதற்காக, NITI ஆயோக், எந்த நிறுவனத்துடன் கூட்டிணைந்துள்ளது?

அ) அன்அகாடமி

ஆ) பைஜு ☑

இ) டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம்

ஈ) ஐஐடி கான்பூர்

✓ இந்தியாவின் 112 முன்னேற விழையும் மாவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு இலவச கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்காக NITI ஆயோக், BYJU உடன் கூட்டிணைந்துள்ளது. இந்தக் கூட்டாண்மையின் ஒருபகுதியாக, உயர்தர & தொழில்நுட்பம் சார்ந்த கற்றல் திட்டங்களை, BYJU's, மாணவர்களுக்கு இலவசமாக வழங்கும். இந்தத் திட்டம் ஒரு பிரத்யேக பணிக்குழுவை நிறுவும். அது அறிவு, கண்டுபிடிப்பு மற்றும் உத்திசார் ஆதரவின் அமைப்பை நிறுவுவதற்கு உதவும்.

8.எந்த நாட்டில் அமைந்துள்ள இந்திய உயராணையரகம் 57ஆவது இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நாளைக் கொண்டாடியது?

அ) ஆஸ்திரேலியா

ஆ) கத்தார்

இ) வங்காளதேசம் ☑

ஈ) தென் கொரியா

✓ 2021 செப்.16 அன்று, டாக்காவில் உள்ள இந்திய உயராணையரகம் 57 ஆவது இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நாளைக் கொண்டாடியது. இந்த நிகழ்வை வங்காளதேசத்தில் உள்ள இந்திய உயராணையர் விக்ரம் தொரைசாமி தொகுத்து வழங்கினார். இந்த நிகழ்வில், சுமார் 100 ITEC முன்னாள் மாணவர்கள் மற்றும் அனைத்து தரப்பு முக்கியஸ்தர்களும் பங்கேற்றனர்.

✓ ITEC என்பது இந்திய அரசின் முதன்மைத் திட்டமாகும். வளர்ந்து வரும் நாடுகளுக்கு வளர்ச்சி அனுபவத்தையும் பொருத்தமான தொழில் நுட்பத்தையும் வழங்குவதற்காக 1964'இல் இந்தியாவால் நிறுவப்பட்டது.

---

9. அண்மையில் தொடங்கப்பட்ட திட்டமொன்றின்கீழ் 50,000 இளையோருக்கு பயிற்சியளிக்க முடிவுசெய்துள்ள நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) இரயில்வே அமைச்சகம் ☑

இ) பிரசார் பாரதி

ஈ) நிதி அமைச்சகம்

✓ ரயில் கௌஷல் விகாஸ் யோஜனா திட்டத்தின் ஒருபகுதியாக, ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்னவால், செப்.17 அன்று 18 முதல் 35 வயது வரையிலான 50,000 இளையோருக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு இரயில்வே பயிற்சி நிறுவனங்களில் தொழில்தொடர்பான திறன்களைப் பயிற்றுவிப்பதற்கான ஒரு திட்டத்தை தொடங்கினார்.

---

10. SPIN (Strengthening the Potential of India) என்ற தனித்துவமான திட்டத்தைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ) காதி & கிராமப்புறத் தொழிலகங்கள் ஆணையம் ☑

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) தேசிய சிறுதொழில் கழகம்

ஈ) பாரத வங்கி

✓ காதி மற்றும் கிராமப்புறத் தொழிலகங்கள் ஆணையமானது (KVIC) SPIN (Strengthening the Potential of India) என்ற தனித்துவமான திட்டத்தைத் தொடங்கியுள்ளது. மேலும் 1100 விளிம்புநிலை குயவர்க்கு வலுவளிக்கும் நோக்கத்துடன், வாரணாசியில் SFURTI திட்டத்தின்கீழ் ஒரு மட்பாண்டத் தொகுதியையும் அமைத்துள்ளது.

✓ SPIN திட்டத்தின் பங்கேற்பாளர்களுக்கு மின்சாரத்தில் இயங்கும் 780 வனைசக்கரங்கள் வழங்கப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ₹2,120 கோடி முதலீட்டில் 41,695 பேருக்கு வேலை: அரசுடன் 24 நிறுவனங்கள் ஒப்பந்தம்

தமிழநாட்டில் 41,695 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ₹2,120 கோடியில் தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. சென்னையில் ஏற்றுமதியில் ஏற்றம் – முன்னணியில் தமிழ்நாடு என்ற தலைப்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தப் புதிய ஒப்பந்தங்கள் பரிமாறப்பட்டன.

---

2. இனி 'பேட்ஸ்மேன்' கிடையாது!

பாலின சமத்துவத்தை வலியுறுத்தும் விதமாக 'பேட்ஸ்மேன்' என்கிற கிரிக்கெட் சொல்லுக்கு மாற்றாக 'பேட்டர்' என்கிற சொல்லை அறிமுகப்படுத்தியுள்ளது எம்.சி.சி. கிரிக்கெட் விதிமுறைகளை வகுப்பதில் எம்.சி.சி. என்றழைக்கப்படும் மெரிலேபோன் கிரிக்கெட் கிளப் முக்கியப் பங்கு வகிக்கிறது. இது தரும் பரிந்துரைகளின் அடிப்படையில் கிரிக்கெட் விதிமுறைகளை அமல்படுத்தி வருகிறது ஐசிசி என்கிற சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்.

---

1. உலக நோயாளிகள் பாதுகாப்பு நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?

அ) செப்டம்பர் 15

ஆ) செப்டம்பர் 17 ☑

இ) செப்டம்பர் 20

ஈ) செப்டம்பர் 23

✓ உலகளாவிய நோயாளிகளின் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து ஊக்குவிப்பதற்காக உலக நோயாளிகள் பாதுகாப்பு நாள் செப்.17 அன்று உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. WHOஉம் அதன் பன்னாட்டு பங்காளர்களும் இந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். "Safe maternity and newborn care" என்பது நடப்பு 2021ஆம் ஆண்டு உலக நோயாளிகள் பாதுகாப்பு நாளுக்கான கருப்பொருளாகும்.

---

2. பன்னாட்டு சம ஊதிய நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?



அ) செப்டம்பர் 20

ஆ) செப்டம்பர் 18 ☑

இ) செப்டம்பர் 16

ஈ) செப்டம்பர் 14

✓ 2021 செப்.18 அன்று பன்னாட்டு சம ஊதிய நாள் கொண்டாடப்பட்டது. அனைத்து பிராந்தியங்களிலும், பெண்களின் ஊதியம் ஆண்களைவிட குறைவாக உள்ளது. மேலும் உலகளாவிய பாலின ஊதிய இடைவெளி 23% என மதிப்பிடப்பட்டுள்ளது. சம ஊதிய சர்வதேச கூட்டணியானது உலக தொழிலாளர் அமைப்பு, ஐநா பெண்கள் உள்ளிட்ட அமைப்புகளால் வழிநடத்தப்படுகிறது. எல்லா இடங்களிலும் ஆண்களுக்கும் மகளிர்க்கும் சமமான ஊதியத்தை அடைவதே இக்கூட்டணியின் குறிக்கோளாகும்.

---

3. அண்மையில, பெண்கள் 1500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில், தேசிய சாதனையை முறியடித்தவர் யார்?



அ) B ஐஸ்வர்யா

ஆ) பருல் சௌத்ரி

இ) ஹர்மிலன் கௌர் பெயின்ஸ் ☑

ஈ) சுசீலா சானு

✓ வாரங்கலில் உள்ள நேரு உள்ளரங்கத்தில் நடைபெற்ற அறுபதாவது தேசிய திறந்தநிலை தடகள சாம்பியன்ஷிப்பில், இரயில்வே அணியின் B ஐஸ்வர்யா 6.52 மீட்டர் தனிப்பட்ட மகளிர் நீளம் தாண்டுதலில் தங்கப் பதக்கம் வென்றார். ரயில்வேயின் பருல் சௌத்ரி பெண்கள் 3000 மீ ஸ்டீப்பிள் சேஸில் 9:51.01 என்ற தனிப்பட்ட சிறந்த நேரத்துடன் தங்கப் பதக்கம் வென்றார். பெண்கள் 1500 மீ ஓட்டப்பந்தயத்தில், ஹர்மிலன் கௌர் பெய்ன்ஸ் 4:05.39 வினாடிகளில் தங்கம் வென்றார். இதன்மூலம் 2002'இல் சுனிதா ராணியின் தேசிய சாதனையை அவர் முறியடித்தார்.

---

4. 'கட்லா' மீனை மாநில மீனாக அறிவித்துள்ள மாநிலம் எது?



அ) மேற்கு வங்கம்

ஆ) சிக்கிம் ☑

இ) ஒடிஸா

ஈ) அஸ்ஸாம்

✓ கட்லாவை மாநில மீனாக சிக்கிம் மாநில அரசு அறிவித்துள்ளது. கட்லா மீன் இனங்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அவற்றை மாநில மீனாக சிக்கிம் அறிவித்துள்ளது. '*Neolissochilus Hexagonolepis*' என்பது இந்த மீனின் அறிவியல் பெயராகும்.

---

5. உலக மூங்கில் நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?

அ) 15 செப்டம்பர்

ஆ) 18 செப்டம்பர் ☑

இ) 20 செப்டம்பர்

ஈ) 22 செப்டம்பர்

✓ ஆண்டுதோறும், செப்.18 அன்று உலக மூங்கில் நாள் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. மூங்கில் தொழில் & மூங்கில் தோட்டங்களின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கமாகும். இந்தச் சிறப்பு நாளை உலக மூங்கில் அமைப்பு (WBO) கொண்டாடுகிறது. அது இயற்கை வளங்கள் & முழு சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ "#PlantBamboo: It is time to Plant Bamboo" என்பது 2021 உலக மூங்கில் நாளிற்கான செய்தியாகும். மேலும், "#PlantBamboo" என்ற புதிய ஹேஷ் டேகையும் WBO அறிமுகப்படுத்தியது.

---

6. பன்னாட்டு சிவப்புப் பாண்டா நாள் கொண்டாடப்பட்ட தேதி எது?



அ) 15 செப்டம்பர்

ஆ) 18 செப்டம்பர் ☑

இ) 20 செப்டம்பர்

ஈ) 22 செப்டம்பர்

✓ ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதம் மூன்றாவது சனிக்கிழமையன்று, சிவப்புப் பாண்டாக்களின் பாதுகாப்பிற்கான பொது விழிப்புணர்வு மற்றும் ஆதரவை அதிகரிக்கும் நோக்கில் பன்னாட்டு சிவப்புப் பாண்டா நாள் கொண்டாடப்படுகிறது. நடப்பு 2021ஆம் ஆண்டில், செப்.18 அன்று இந்த நாள் அனுசரிக்கப்பட்டது. இந்த நாள், கடந்த 2010'இல் ரெட் பாண்டா நெட்வொர்க்கால் தொடங்கப்பட்டது. 2010 செப்.18 அன்று, முதன்முதலாக பன்னாட்டு சிவப்புப் பாண்டா நாள் கொண்டாடப்பட்டது.

---

7. திறன் சுற்றுச்சூழலமைப்பில் அளப்பரிய பங்காற்றியமைக்காக, எத்தனை பயிற்சியாளர்களுக்கு 2021 கௌசாலாச்சார்யா விருதுகள் வழங்கப்பட்டுள்ளன?



அ) 31

ஆ) 41 ☑

இ) 51

ஈ) 61

✓ மத்திய கல்வியமைச்சரும், திறன் மேம்பாட்டமைச்சருமான தர்மேந்திர பிரதன், திறன் சுற்றுச்சூழலமைப்பிற்கு அளப்பரிய பங்காற்றியமைக்காக 41 தகுதிவாய்ந்த பயிற்சியாளர்களுக்கு 2021 கௌசலாச்சார்யா விருதை வழங்கினார். இந்த 41 பயிற்சியாளர்களும் ஸ்கில் இந்தியா டைரக்டரேட் ஜெனரல் ஆப் டிரெய்னிங், அப்ரண்டிஸ்ஷிப், பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா, ஜன் ஷிக்சான் சன்ஸ்தான் மற்றும் தொழில் முனைவோர்போன்ற பல்வேறு முயற்சிகள் & பயிற்சி திட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

---

8. அண்மையில் புவிசார் குறியீடு (GI) பெற்ற சிரராகோங் மிளகாய் மற்றும் தமெங்லாங் ஆரஞ்சு ஆகியவை சார்ந்த மாநிலம் எது?



அ) அஸ்ஸாம்

ஆ) நாகாலாந்து

இ) மணிப்பூர் ☑

ஈ) மேகாலயா

✓ பொதுவாக மணிப்பூர் மாநிலத்தில் காணப்படும் சிரகோங் மிளகாய் மற்றும் தமெங்லாங் ஆரஞ்சுப்பழம் ஆகியவற்றுக்கு சமீபத்தில் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. இதனை மணிப்பூர் மாநில முதலமைச்சர் N பைரன் சிங் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

9.அண்மையில் வெளியிடப்பட்ட 2022 – பெய்ஜிங் ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் குளிர்கால விளையாட்டுப்போட்டிக்கான அதிகாரப்பூர்வ குறிக்கோள் என்ன?



அ) Together for a Shared Future ☑

ஆ) Together We Stand for Peace

இ) United by Emotion

ஈ) Great Athletes. Great Performances

✓ அண்மையில், "Together for a Shared Future" என்பது 2022 – பெய்ஜிங் குளிர்கால ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிக்கான அதிகாரப்பூர்வ குறிக்கோளாக அதன் அமைப்புக் குழுவால் அறிவிக்கப்பட்டது. சீனாவின்

பெய்ஜிங்கில், 2022 பிப்.4–20 வரை குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன.

---

10. அண்மையில் நிறுத்தப்பட்ட 'எளிதாக வணிகம் புரிவது' குறித்த அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

ஆ) உலக வங்கி ☑

இ) ஆசிய வளர்ச்சி வங்கி

ஈ) ஐநா வளர்ச்சித் திட்டம்

✓ உலக வங்கி குழுமத்தால் வெளியிடப்படும் 'எளிதாக வணிகம் புரிவது' குறித்த அறிக்கைகள் நிறுத்தப்படவுள்ளன. பல்வேறு நாடுகளில் நிலவும் வணிகம் மற்றும் முதலீட்டுச் சூழலை மதிப்பிடுவதற்கான ஒரு புதிய முறை கொண்டுவரப்படும் என உலக வங்கி கூறியுள்ளது. முன்னாள் வங்கி ஊழியர்கள் மற்றும் வாரிய உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட நெறி முறை விஷயங்களில் உள்ள முறைகேடுகளை களைந்த பிறகு, உலக வங்கி, உலக நாடுகளில் நிலவும் வணிகம் மற்றும் முதலீட்டுச் சூழலை மதிப்பிடுவதற்கான ஒரு புதிய முறையைக் கொண்டு வரும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகள் எண்ணிக்கை விரைவில் அதிகரிக்க வாய்ப்பு

தமிழகத்தில் 312 கிமீ தூரம் நீளமுள்ள நான்கு வழித்தடங்களை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் பராமரிப்புப் பணிகளுக்காக ஒப்படைக்க மாநில நெடுஞ்சாலைத்துறை முடிவுசெய்துள்ளது. இதனால் அங்கு ஆறு சுங்கச்சாவடிகள் புதிதாக அமைக்கப்படும். இதையடுத்து, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளின் எண்ணிக்கை 54ஆக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதன்படி, வேலூர் – விழுப்புரம் (121 கிமீ), கடலூர் – சேலம் (92 கிமீ), அவினாசி – அவினாசி பாளையம் (33 கிமீ), பெரம்பலூர் – தஞ்சாவூர் (66 கிமீ) ஆகிய சாலைகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைப்பதற்கான நிர்வாகப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும், பெரம்பலூர் – தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் சுங்கச்சாவடி அமைத்து கட்டணம் வசூலிப்பதற்கான உத்தரவும் மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

---

2. ₹7,523 கோடியில் 118 நவீன அர்ஜுன் பீரங்கிகள் தயாரிப்பு: ஆவடி கனரக வாகன தொழிற்சாலையுடன் ஒப்பந்தம்

சென்னை அருகே உள்ள ஆவடியில் ₹7,523 கோடியில் 118 அதிநவீன எம்பிடி எம்கே–1ஏ அர்ஜுன் பீரங்கிகளைத் தயாரிக்க ஆவடி கனரக வாக தொழிற்சாலையுடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் இந்த அதிநவீன பீரங்கிகள் இந்திய ராணுவத்தின் தாக்குதல் பலத்தை மேலும் வலுவாக்கும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பின் விவரம்:

இந்திய ராணுவத்தில் போர் டாங்கிகளில் பிரதானமாக உள்ள அர்ஜுன் எம்பிடியில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து மேலும் பல நவீன தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தி எம்பிடி எம்கே–1ஏ அர்ஜுன் பீரங்கிகள் இரண்டே ஆண்டுகளில் 2012–இல் ஆவடி கனரக தொழிற்சாலை உருவாக்கி சாதனை படைத்தது. பின்னர் 2015 வரையில் 7000 கிமீ தூரத்துக்கும் அதிகமாக பீரங்கிகளில் வெடி பொருள்களுடன் இணைத்து சோதனை நடத்தப்பட்டது.

இந்த நவீன அர்ஜுன் பீரங்கி கூடுதல் தூரத்தில் உள்ள இலக்குகள் மீது துல்லியத் தாக்குதல் நடத்தும் திறன் உள்பட 72 புதிய தொழில்நுட்ப அம்சங்கள் உடையது. மலைப்பகுதிகள் உள்பட அனைத்து பகுதிகளில் செல்லும் வகையிலும், கூடுதல் பாதுகாப்பு அம்சத்துடனும் இரவிலும்–பகலிலும் தாக்குதல் நடத்தும் வகையிலும் நவீன தொழில்நுட்பம் இதில் உள்ளது. ஆவடி கனரக வாக தொழிற்சாலையில் ₹7,523 கோடியில் 118 அதிநவீன எம்பிடி எம்கே–1ஏ அர்ஜுன் பீரங்கிகளை தயாரிக்க மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்மூலம் பாதுகாப்புத் துறையில் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் ஊக்குவிக்கப்படுவதுடன், 'தற்சார்பு பாரதம்' திட்டத்தின் முன்னோடியாகவும் இது திகழ்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்திய இராணுவத்தின் முப்படைகளுக்கும் அனைத்து வகையிலான நவீன தொழில்நுட்ப பயிற்சி உபகரணங்கள் வாங்க முடிவு செய்துள்ளதாகவும் இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

3. மாநில ஏற்றுமதி அபிவிருத்திக் குழு அமைப்பு

மாநிலத்தில் ஏற்றுமதி அபிவிருத்தியை ஊக்குவிக்கவும், கண்காணிக்கவும் தலைமைச் செயலாளர் தலைமையில் தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் 6 முக்கிய துறைகளின் செயலர்கள் இடம்பெற்றுள்ளனர். மேலும், ஏற்றுமதி அபிவிருத்திக்கான கூட்டமைப் –பைச் சேர்ந்த ஆறு பேரும் இடம்பெறவுள்ளனர். 'ஏற்றுமதியில் ஏற்றம்–முன்னணியில் தமிழ்நாடு' என்ற தலைப்பில் தொழிற்துறை கருத்தரங்கு சென்னையில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற முதல்வர் மு க ஸ்டாலின், ஏற்றுமதி அபிவிருத்திக்கென தனிக்குழுவை தமிழக அரசு அமைக்கும் என அறிவித்தார். மேலும், தமிழ்நாடு ஏற்றுமதி அபிவிருத்தி கொள்கை 2021–ஐயும் அவர் வெளியிட்டார். இந்தக் கொள்கையில் மாநில ஏற்றுமதி அபிவிருத்திக் குழு குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளன.

குழுவில் யார் யார்? : தமிழ்நாடு மாநில ஏற்றுமதி அபிவிருத்தி குழுவின் தலைவராக, தலைமைச் செயலாளர் செயல்படுவார். மாநில நிதித்துறை செயலாளர், தொழிற்துறை செயலர், கைத்தறி–கைத்திறன்கள் மற்றும் துணிநூல் துறை செயலாளர், வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத் துறை செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்கள் நலத்துறை செயலாளர், சிறு, குறு & நடுத்தரத் தொழில்கள் துறை செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர்.

தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர், மத்திய அரசின் அயல்நாட்டு வர்த்தகத் துறை கூடுதல் இயக்குநர் ஆகியோர் குழுவின் இணை ஒருங்கிணைப் –பாளர்களாக இருப்பர்.

இந்தக் குழுவானது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஏற்றுமதி அபிவிருத்தி தொடர்பான முன்னேற்றங்கள், நடவடிக்கைகளை ஆய்வு செய்யும். இந்தக் கூட்டத்துக்கு வேறு எந்தத் துறைகளையோ அல்லது முகமைகளையோ அழைக்கும் அதிகாரம் குழுவின் தலைவரான தலைமைச் செயலாளருக்கு உள்ளது.

இதேபோன்று, தொழில் துறை முதன்மைச் செயலாளர் தலைமையில் துணைக்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி தொடர்பாக மத்திய அரசுடன் இணைந்து பணியாற்றுவது, ஏற்றுமதி தொடர்பான பிரச்னைகள், குறைகளை அணுகி அதற்குத் தீர்வுகாண்பது, ஏற்றுமதி தொடர்பான பணிகளைச் செய்யும் அமைப்புகளுக்கு போதிய ஆதார உதவிகளைச் செய்வது போன்றவற்றை தொழில்துறை செயலாளர் தலைமையிலான குழு ஒருங்கிணைக்கும்.

மாவட்ட அளவிலான குழு: தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் ஏற்றுமதி அபிவிருத்தி குழுக்கள் அமைக்கப்படும். இந்தக் குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைவர்களாக இருப்பர். 38 மாவட்டங்களிலும் ஏற்றுமதிக்கு உகந்த சூழல் கொண்ட பொருள்களை அடையாளம் கண்டு அதனை ஏற்றுமதி செய்வதற்கான மாவட்ட அளவிலான திட்டங்கள் அந்தக் குழுக்கள் மூலமாக வகுக்கப்படும் என மாநில ஏற்றுமதி அபிவிருத்தி கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. 'ஆக்கஸ்' கூட்டமைப்பில் இந்தியா இணைத்துக் கொள்ளப்பட மாட்டாது

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை வலுப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள 'ஆக்கஸ்' கூட்டமைப்பில் இந்தியாவும் ஜப்பானும் இணைத்துக் கொள்ளப்படாது என்று அமெரிக்கா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தைத் தடுக்கும் நோக்கில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து க்வாட் நாற்கரக் கூட்டமைப்பை அமைத்துள்ளன. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, ராஜீய ஸ்திரத்தன்மை ஆகியவற்றை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டு அக்கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது.

அதே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 'ஆக்கஸ்' கூட்டமைப்பை ஆஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் கடந்த 15–ஆம் தேதி அமைத்தன. அதன்படி, இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் முக்கிய நாடாகத் திகழும் ஆஸ்திரேலியாவுக்கு அணுசக்தியால் இயங்கும்

நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டுவதற்கான தொழில்நுட்பங்களை பிரிட்டனும் அமெரிக்காவும் இணைந்து வழங்கவுள்ளன. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தை மையமாகக் கொண்டு அமெரிக்காவுடன் மற்றொரு கூட்டணியை அமைப்பது தொடர்பாக இந்தியாவிடம் விளக்கமளிக்கப்பட்டதாக ஆஸ்திரேலியா தெரிவித்திருந்தது.

இந்நிலையில், அமெரிக்க வெள்ளை மாளிகை தகவல்–தொடர்புத் துறை அமைச்சர் ஜென் சாகி செய்தியாளர்களிடம் கூறுகையில், "இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் நிலைத்தன்மை நிலவ வேண்டும் என்று பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் விரும்புகின்றன.

அந்நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இணைந்து செயல்படுவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது. வெறும் அடையாளத்துக்காக மட்டும் 'ஆக்கஸ்' கூட்டமைப்பு ஏற்படுத்தப்படவில்லை. அந்தப் பதிய கூட்டமைப்பில் இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட வேறெந்த நாடுகளும் இணைத்துக் கொள்ளப்பட மாட்டாது. இந்தியா, ஜப்பான் இடம் பெற்றுள்ள க்வாட் கூட்டமைப்பு தொடர்கிறது. ஆக்கஸ் குறித்து பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானிடமும் அதிபர் ஜோ பைடன் தெரிவித்திருப்பார் என நினைக்கிறேன்" என்றார்.

---

5. மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறன் குறியீடு: முதல் 500 இடங்களில் 12 இந்திய கல்வி நிறுவனங்கள்

உலக அளவில் மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் கல்வி நிறுவனங்களுக்கான பட்டியலின் முதல் 500 இடங்களில் 12 இந்திய கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. பிரிட்டனைச் சேர்ந்த குவாக்குவரெல்லி சைமண்ட்ஸ் (க்யூஎஸ்) என்ற நிறுவனம், உலக அளவில் உயர்கல்வி நிறுவனங்களை ஆய்வு செய்து வருகிறது. மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தும் கல்வி நிறுவனங்கள் குறித்த பட்டியலை க்யூஎஸ் நிறுவனம் அண்மையில் வெளியிட்டது.

உலகின் தலைசிறந்த 500 நிறுவனங்கள் அடங்கிய அந்தப் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 12 கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (ஐஐடி) இந்திய அளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. தில்லி ஐஐடி, சென்னை ஐஐடி, கரக்பூர் ஐஐடி, கான்பூர் ஐஐடி, ரூர்கி ஐஐடி ஆகியவையும் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

பல்கலைக்கழகங்களில் தில்லி பல்கலை, மும்பை பல்கலைக்கழகம், கொல்கத்தா பல்கலை ஆகியவை இடம்பெற்றுள்ளன. பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனமும் (ஐஐஎஸ்சி) பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

தனியார் பல்கலைகளில் ஓ பி ஜிண்டால் குளோபல் பல்கலைக்கழகம், பிட்ஸ் பிலானி ஆகியவை இடம்பெற்றுள்ளன. இந்தக் குறியீடு தொடர்பாக க்யூஎஸ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 'கரோனா தொற்றின் தாக்கத்திலிருந்து உலக நாடுகள் மீண்டுவரும் நிலையில், மாணவர்க–ளின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவது முன்னெப்போதும் இல்லாத வகையில் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகிறது.

பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்து கல்வி நிறுவனங்களும் நவீன பணியிடத்துக்கு ஏற்ப மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்ப–டுத்தியுள்ளன. வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதில் பல்கலை–கள் எவ்வாறு செயல்பட்டு வருகின்றன என்பதை மாணவர்களும் முறையாக அறிந்துகொள்ளவேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

6. தொழில் தொடங்குவதற்கு உகந்த நகரங்களின் பட்டியல்: 23ஆவது இடத்துக்கு முன்னேறியது பெங்களூரு

உலக அளவில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற சிறந்த சூழல் அமைந்துள்ள நகரங்களின் வருடாந்திரப் பட்டியலில் பெங்களூரு 23ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இதன் மூலம், கடந்த ஆண்டைவிட அந்தப் பட்டியலில் பெங்களூரு 3 இடங்கள் முன்னேறியுள்ளது. சர்வதேச அளவில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற பல்வேறு சூழல்களின் அடிப்படையில் நகரங்களின் பட்டியலை அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோவைச் சேர்ந்த 'ஸ்டார்ட்டப் ஜினோம்' அமைப்பு ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான அந்தப் பட்டியலில் புது தில்லி 36–ஆவது இடத்தில் உள்ளது. மும்பை நகரம் வளர்ந்து வரும் சூழல் அமைப்புகளைக் கொண்ட நகரங்களின் பட்டியலில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தில் உள்ளது. தொழில்முனைவுக்கான சிறந்த சூழலைக் கொண்ட நகரங்களின் பட்டியலில் பெங்களூரு முன்னேறியிருப்பதற்கு, அந்த நகரில் முதலீடுகளின் வளர்ச்சி முக்கிய பங்காற்றியிருக்கிறது. குறிப்பாக, உணவு விநியோக நிறுவனமான ஸ்விகி இந்த நகரில் 130 கோடி டாலர் (சுமார் ₹9,594 கோடி) முதலீடு செய்துள்ளது. சமூக ஊடக நிறுவனமான ஷேர்சாட் பெங்களூருவில் 50.2 கோடி டாலர் (சுமார் ₹3,706 கோடி) முதலீடு செய்துள்ளது. கல்வி தொழில்நுட்ப நிறுவனமான பைஜூ இந்த நகரில் 46 கோடி டாலர் (சுமார் ₹3,396 கோடி) முதலீடு செய்துள்ளது.

இப்பட்டியலில் தில்லியின் தொழில்முனைவுச் சூழல் வளர்ச்சியடைந்து வருவதாக பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவில் புதிதாகத் தொடங்கப்பட்ட நிறுவனங்கள் 1,210 கோடி டாலரை (சுமார் ₹89,275 கோடி) முதலீடாகப் பெற்றுள்ளதாக இந்தப் பட்டியல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்திலுள்ள சிலிகான் பள்ளத்தா–க்கு முதலிடத்தில் உள்ளது என PTI செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

7. ஒடிஸாவில் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை

FIH ஆடவர் ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை போட்டி ஒடிஸாவில் நடைபெறவுள்ளது. இதற்கான அறிவிப்பை மாநில முதல்வர் நவீன் பட்நாயக் வெளியிட்டார். அத்துடன் போட்டிக்கான லச்சினை மற்றும் கோப்பையும் அறிமுகம் செய்யப்பட்டன.

இந்தப் போட்டியை நடத்துவதற்காக ஒடிஸா, உத்தர பிரதேச மாநிலங்கள் விருப்பம் தெரிவித்திருந்த நிலையில், இந்த முறை அந்த வாய்ப்பு ஒடிஸாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. உத்தர பிரதேசத்தில் 2016–இல் நடைபெற்ற கடந்த சீசனில் இந்தியா சாம்பியனாகியிருந்தது.

தற்போது எதிர்வரும் உலகக் கோப்பை போட்டி நவம்பர் 24 முதல் டிச.5 வரை ஒடிஸாவின் புவனேசுவரத்தில் உள்ள கலிங்கா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, தென் கொரியா, மலேசியா, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா, எகிப்து, பெல்ஜியம், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாந்து, ஸ்பெயின், அமெரிக்கா, கனடா, சிலி, ஆர்ஜென்டீனா ஆகிய 16 நாடுகளின் அணிகள் பங்கேற்கின்றன.

கரோனா சூழல் காரணமாக பயணக்கட்டுப்பாடு இருப்பதால் இந்தப் போட்டியில் ஆஸ்திரேலியா பங்கேற்கவில்லை. ஒடிஸாவில் ஏற்கெனவே 2018 உலகக் கோப்பை போட்டி, 2017 FIH உலக லீக், 2014 சாம்பியன்ஸ் டிராபி போட்டி ஆகியவை நடைபெற்றுள்ளது நினைவு கூரத்தக்கது.

---

8. உலகளவில் தூய்மைக் கடற்கரையாக புதுச்சேரி சின்ன வீராம்பட்டினம் தேர்வு

உலகளவில் தூய்மை கடற்கரைப் பகுதிகளில் ஒன்றாக புதுச்சேரி சின்ன வீராம்பட்டினம் 'ஈடன் கடற்கரை' தேர்வு செய்யப்பட்டது. டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்பானது, உலகளவில் பாதுகாப்பு, தூய்மையான கடற்கரைகளைத் தேர்ந்தெடுத்து, 'நீலக்கொடி கடற்கரை' என்ற அங்கீகாரத்தை வழங்கி வருகிறது. அந்த வகையில், புதுச்சேரி சின்ன வீராம்பட்டினம் 'ஈடன் கடற்கரை'க்கு, நீலக்கொடி அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன்மூலம், இந்தியாவில் நீலக்கொடி அங்கீகாரம் பெற்ற கடற்கரைகளின் எண்ணிக்கை 10ஆக உயர்ந்தது.

புதுச்சேரி கிழக்குக் கடற்கரைச் சாலை அருகே அமைந்துள்ள சின்ன வீராம்பட்டினம் கடற்கரை, 2 கிமீ தொலைவுக்கு மணல் பரப்பைக் கொண்டுள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டு சுற்றுலாத்துறைமூலம் சீரமைக்கப்பட்டு, 800 மீ தொலைவு மணல் பரப்பில் சுற்றுலாப் பயணிகளுக்காக பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குடிநீர் வசதி, கழிப்பறைகள், பூங்கா, குடில்கள், ஓய்வு அறைகள் போன்றவை இங்குள்ளன. நெகிழிக்கு தடை, கடலில் குளிப்பவர்கள் மூழ்கினால் மீட்பதற்கு குழுக்கள் எனப் பல்வேறு வசதிகளை இந்தக் கடற்கரை கொண்டுள்ளது.

---

1. ஆண்டுதோறும் 'கிரைம் இந்தியா' அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ☑

ஆ) NITI ஆயோக்

இ) போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம்

ஈ) மத்திய புலனாய்வு வாரியம்

✓ தேசிய குற்ற ஆவணக்காப்பகத்தால் ஆண்டுதோறும் 'கிரைம் இந்தியா' என்ற அறிக்கை வெளியிடப்படுகிறது. கடந்த 2020ஆம் ஆண்டிற்கான அறிக்கை சமீபத்தில் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி, இந்தியா, 2020'இல், "சாலை விபத்துக்கள் தொடர்பான அலட்சியம் காரணமாக 1.20 இலட்சம் இறப்புகளைப்" பதிவுசெய்துள்ளது.

✓ 2020ஆம் ஆண்டில், வகுப்புவாத கலவரங்கள் முந்தைய ஆண்டைவிட 96% அதிகரித்துள்ளது. அரசுக்கு எதிரான குற்றங்கள், 2019ஐவிட 27% சரிவடைந்துள்ளன. இந்தப்பிரிவில் உயர்வைப் பதிவு செய்த ஒரே பெரிய மாநிலமாக உத்தர பிரதேச மாநிலம் உள்ளது.

---

2. துளிர் நிறுவனங்களை ஆதரிப்பதற்காக தெற்காசியாவின் மிகப் பெரிய தயாரிப்பு மேம்பாட்டு மையமான 'Digital Hub'ஐ திறந்துள்ள மாநிலம் எது?

அ) கேரளா ☑

ஆ) கர்நாடகா

இ) உத்தரகண்ட்

ஈ) உத்தர பிரதேசம்

✓ கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் சமீபத்தில் காணொலிக் காட்சிமூலம் 200 துளிர் நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் டிஜிட்டல் மையத்தை திறந்துவைத்தார். தெற்காசியாவின் மிகப்பெரிய தயாரிப்பு மேம்பாட்டு மையமான இது, கொச்சி கலமசேரியில் உள்ள தொழில்நுட்ப புத்தாக்க மண்டலத்தில் உள்ளது. கேரளா ஸ்டார்ட்அப் மிஷன் (KSUM) இத்திட்டத்தை செயல்படுத்த வழிவகுக்கிறது.

---

3. பாதுகாப்புப் பயிற்சியான 'சமுத்திர சக்தி'யில் பங்கேற்ற இரண்டு நாடுகள் எவை?

அ) இந்தியா மற்றும் இந்தோனேசியா ☑



ஆ) இந்தியா மற்றும் நேபாளம்

இ) இந்தியா மற்றும் சீனா

ஈ) இந்தியா மற்றும் பூடான்

✓ ஜகார்த்தாவில் செப்.20–22 வரை நடந்த இருதரப்பு கடல் பயிற்சியான 'சமுத்திர சக்தி'யில் இந்திய & இந்தோனேசிய கடற்படை பங்கேற்றது.

✓ இருதரப்பு உறவை வலுப்படுத்துதல், இருநாட்டு கடற்படைகளுக்கு இடையேயான கடல்சார் செயல்பாடுகளில் பரஸ்பர புரிதல் மற்றும் இயங்குதிறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை இந்தப் பயிற்சி தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியக் கடற்படை கப்பல்கள் ஷிவலிக் மற்றும் கத்மட் மற்றும் கடற்புற கண்காணிப்பு விமானம் P8I ஆகியவை இந்தப் பயிற்சியில் பங்கேற்றன.

---

4. சமீபத்தில், செஸ்ஸில் இந்தியாவின் 70ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆனவர் யார்?

அ) தனியா சச்தேவ்



ஆ) சூர்யா சேகர் கங்குலி

இ) பத்மினி ரூட்

ஈ) ராஜா ரித்விக் ☑

✓ தெலுங்கானா மாநிலத்தைச் சார்ந்த ராஜா ரித்விக், ஹங்கேரியின் புடா பெஸ்டில் நடைபெற்ற வெசெர்கெப்ஸோ ஜிஎம் செஸ் சாம்பியன்ஷிப்பில் ELO 2500 மதிப்பெண்களைக்கடந்து இந்தியாவின் 70ஆவது கிராண்ட் மாஸ்டராக ஆனார். செக்கோஸ்லோவாக்கியாவைச் சேர்ந்த FIDE மாஸ்டர் பென்னெக் வக்லாவை வீழ்த்திய பிறகு, அவர் 4 புள்ளிகளைப் பெற்றார்.

---

5. பஞ்சாபின் 16ஆவது முதலமைச்சராக பதவியேற்றவர் யார்?

அ) சுக்ஜிந்தர் சிங் ரந்தாவா



ஆ) அருணா சௌத்ரி

இ) சரண்ஜித் சிங் சன்னி ☑

ஈ) அசோக் கெலாட்

✓ பஞ்சாப் மாநிலத்தின் 16ஆவது முதலமைச்சராக சரண்ஜித் சிங் சன்னி பதவியேற்றார். பஞ்சாபில் ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து இப்பதவியை வகிக்கும் முதல் நபர் இவராவார். பஞ்சாப் ஆளுநரான பன்வாரிலால் புரோகித் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

---

6. 'சூர்யா கிரண்' என்ற இராணுவப் பயிற்சியில், எந்த நாட்டுடன் இணைந்து இந்தியா பங்கேற்கிறது?

அ) வங்காளதேசம்



ஆ) இலங்கை

இ) நேபாளம் ☑

ஈ) இந்தோனேசியா

✓ இந்தியாவும் நேபாளமும் செப்.20 அன்று உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள பித்தோர்கரில் 15 நாள் நடைபெறும் இராணுவப் பயிற்சியைத் தொடங்கின. 15ஆவது இந்தியா–நேபாள இராணுவப் பயிற்சிக்கு 'சூர்யா கிரண்' எனப்பெயரிடப்பட்டுள்ளது. இரு ராணுவத்தினருக்கும் இடையே செயல்பாட்டை அதிகரிக்கும் நோக்கோடு இது நடத்தப்படுகிறது.

---

7. ஒலி தயாரிப்பு, திரைப்பட தயாரிப்பு மற்றும் கிராபிக் டிசைனிங் குறித்து மாணவர்களுக்கு பயிற்சியளிக்க 'இசைப்பேருந்து' என்ற ஒன்றைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) கர்நாடகா



ஆ) கேரளா

இ) தில்லி ☑

ஈ) மத்திய பிரதேசம்

✓ தில்லி அரசானது 'இசைப்பேருந்தை' அறிமுகப்படுத்தியுள்ளது. இது மாணவர்களுக்கு ஒலி தயாரிப்பு, திரைப்படத் தயாரிப்பு மற்றும் கிராபிக் வடிவமைப்பு ஆகியவற்றைப் பயிற்றுவிக்கும். இது இந்தியாவின் முதல் 'நடமாடும் இசை வகுப்பறை மற்றும் ஒலிப்பதிவுக் கூடம்' ஆகும். தில்லி மாநிலப் பள்ளியின் குழந்தைகள் மத்தியில் இசை மீதான ஆர்வத்தைத் தூண்டுவதை நோக்கமாகக்கொண்டு, நிகழ்த்துக்கலை மற்றும் காட்சிக் கலைக்கான சிறப்புப் பள்ளியில் இது தொடங்கப்பட்டது.

---

8. FSSAI'இன் மூன்றாவது மாநில உணவுப் பாதுகாப்பு குறியீட்டில், பெரிய மாநிலங்களுள் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) குஜராத் ☑

இ) கேரளா

ஈ) கர்நாடகா

✓ உணவுப் பாதுகாப்பின் 5 அளவுருக்களில் மாநிலங்களின் செயல்பாடுக –ளை அளவிடும், உணவுப்பாதுகாப்பு & தரநிர்ணய ஆணையத்தின் (FSSAI) 3ஆவது மாநில உணவுப் பாதுகாப்பு குறியீட்டை (SFSI) மத்திய சுகாதாரம் & குடும்பநல அமைச்சர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்.

✓ இந்த ஆண்டு, பெரிய மாநிலங்களில், குஜராத் முதலிடத்தில் உள்ளது, அதற்கு அடுத்தபடியாக கேரளா மற்றும் தமிழ்நாடு உள்ளன. சிறிய மாநிலங்களில், கோவா முதலிடத்திலும், மேகாலயா மற்றும் மணிப்பூர் மாநிலங்கள் அதற்கு அடுத்ததாகவும் உள்ளன. யூனியன் பிரதேசங்களில், ஜம்மு & காஷ்மீர், அந்தமான் & நிக்கோபார் தீவுகள் மற்றும் புது தில்லி முன்னணியில் உள்ளன.

✓ நடமாடும் பரிசோதனை நிலையங்களின் எண்ணிக்கையை 109 ஆக உயர்த்தி நாட்டில் உணவுப் பாதுகாப்பு சூழலியலை உறுதிப்படுத்தும் வகையில், 19 வாகனங்களை அவர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

---

9. உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 2021–உலகளாவிய புத்தாக்கக் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 40

ஆ) 46 ☑

இ) 35

ஈ) 31



✓ 2021 செப்.20 அன்று, உலகளாவிய புத்தாக்கக் குறியீட்டின் 2021 பதிப்பு உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பால் (WIPO) வெளியிடப்பட்டது. 2021 பதிப்பானது 81 வெவ்வேறு குறிகாட்டிகளின் அடிப்படையில், 132 பொருளாதாரங்களை தரவரிசைப்படுத்தியுள்ளது.

✓ சுவிச்சர்லாந்து, சுவீடன், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகியவை இப்புத்தாக்க தரவரிசையில் தொடர்ந்து முன்னணியில் உள்ளன. 2021 ஆம் ஆண்டில் முதன்முறையாக இதில் முதல் ஐந்து இடங்களுள் தென் கொரியா இடம்பெற்றுள்ளது. முதல் 15 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ள ஆசியப்பொருளாதாரங்கள்: சிங்கப்பூர் (8), சீனா (12), ஜப்பான் (13) மற்றும் ஹாங்காங் (14). இந்தப் பட்டியலில் இந்தியா 46ஆவது இடத்திலுள்ளது.

---

10. செப்டம்பர்.20–26 வரை 'வணிக்ய சப்தா'வை கொண்டாடுகிற அமைச்சகம் எது?

அ) வணிக அமைச்சகம் ☑

ஆ) நிதி அமைச்சகம்

இ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்

सत्यमेव जयते
Ministry of Commerce & Industry
Government of India

✓ விடுதலையின் அம்ருத் மகோத்ஸவத்தைக் கொண்டாடும் வகையில் வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் வர்த்தகத்துறை, இந்த மாதம் 20 முதல் 26ஆம் தேதி வரை நாடு முழுவதும் வணிகம் மற்றும் வர்த்தக வார நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

✓ இதன் சமயம் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு மற்றும் தொழிற்பூங்கா மதிப்பீட்டு அமைப்பு தளங்கள் ஆகியவை தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையால் தொடங்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. குஜராத் சட்டப்பேரவைக்கு முதல் பெண் சபாநாயகராக நிமாபென் ஆச்சார்யா தேர்வாகிறார்

குஜராத் சட்டப்பேரவை சபாநாயகராக இருந்து வந்த ராஜேந்திர திரிவேதி, மாநில பாஜக அரசின் புதிய அமைச்சரவையில் அமைச்சராக பதவி ஏற்றார். இந்நிலையில், குஜராத் சட்டப்பேவையின் மழைக்காலக் கூட்டத் தொடர் வரும் 27–ம் தேதி கூடுகிறது. காலியாக உள்ள சபாநாயகர் பதவிக்கு பெண் எம்எல்ஏ நிமாபென் ஆச்சார்யா பெயரை பாஜக அறிவித்தது.

சபாநாயகர் பதவிக்கு நிமாபென் ஆச்சார்யா சார்பிலும், துணை சபாநாயகர் பதவிக்கு பாஜக எம்எல்ஏ ஜேதா பர்வத் சார்பிலும் சட்டப்பேரவை செயலாளரிடம் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியாக உள்ள காங்கிரஸும் சபாநாயகர் பதவிக்கு நிமாபென்னை ஆதரித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பரேஷ் தனானியும் நிமாபென்னுக்கு ஆதரவு அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எனவே, முதல் பெண் சபாநாயகராக நிமாபென் ஆச்சார்யா தேர்ந்தெடுக்கப்படுவது உறுதியாகிவிட்டது. அதேநேரம், துணை சபாநாயகர் பதவிக்கு காங்கிரஸ் கட்சி தனது எம்எல்ஏ அனில் ஜோஷியாராவை நிறுத்தி உள்ளது. இதனால், துணை சபாநாயகர் பதவிக்கு போட்டி ஏற்பட்டுள்ளது.

---

2. டிஎன்பிஎல் புதிய வலைதளம் தொடக்கம்: நிலைப்புத் திறன் அறிக்கை நூல் வெளியீடு

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் (TNPL) தனது 41–வது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தை மெய்நிகர் முறையில் நடத்தியது. அப்போது புதிதாக உருவாக்கப்பட்ட டிஎன்பிஎல் வலைதளம் (https://www.tnpl.com/) தொடங்கிவைக்கப்பட்டது; நிலைப்புத்திறன் அறிக்கை நூலும் வெளியிடப்பட்டது.

டிஎன்பிஎல் தொடக்கத்திலிருந்தே 'கழிவிலிருந்து கொழிக்கும் செல்வம்' என்ற கோட்பாட்டில் இயங்குகின்ற நிறுவனமாகும். கரும்பின் கழிவான சக்கைதான் டிஎன்பிஎல் தயாரிக்கும் காகிதத்தின் முதன்மையான மூலப்பொருள். கைவிடப்பட்ட சுமார் 1,87,680 ஏக்கர் தரிசு நிலங்களை மரக்கூழ் செய்வதற்கான பசுமை நிலங்களாக டிஎன்பிஎல் மாற்றி இருக்கிறது. இந்தியாவிலேயே தன் உற்பத்தி கழிவிலிருந்து உயர் தரமான சிமெண்ட் செய்யும் ஒரே காகித நிறுவனம் டிஎன்பிஎல் ஆகும்.

நேர்மறையான எதிர்காலத்தை எதிர்கொள்ள இந்திய காகித உற்பத்தி தொழில் கூடங்களில் முதன்முறையாக உலக அளவில் பின்பற்றுகிற நிலைப்புத்திறன் அறிக்கையை டிஎன்பிஎல் வெளிக்கொணர்ந்துள்ளது. டிஎன்பிஎல் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜீவ் ரஞ்சன், நிதித் துறை செயலர் கிருஷ்ணன், கூடுதல் அரசு முதன்மைச் செயலர் ஆகியோரின் முன்னிலையில் 'Circular Economy – The Roots Of Our Business' (சுழல் வட்ட பொருளாதாரம் எங்கள் வணிகத்தின் வேர்கள்) என்ற நூல் வெளியிடப்பட்டது.

---

3. தமிழகத்தில் ரூ.100 கோடியில் நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டம்: மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அனுமதி

தமிழகத்தில் நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டத்தை செயல்படுத்த, மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. மத்திய அரசின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் கிராமங்களில் லட்சக்கணக்கானோர் பயனடைந்து வருகின்றனர். இந்நிலையில், நகரங்களில் உள்ள ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில், தமிழக அரசு சார்பில் தற்போது 'நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்புத் திட்டம்' அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், வடிகால்கள், சாலைகள், கட்டிடங்களை அமைத்தல், பராமரித்தல், நீர்நிலைகளைப் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த திட்டத்தை பரிசோதனை அடிப்படையில் செயல்படுத்த ₹100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

---

4. ரூ.20,000 கோடியில் 56 ராணுவ விமானங்கள் கொள்முதல்: ஏர்பஸ் – மத்திய அரசு இடையே ஒப்பந்தம் கையெழுத்து

இந்திய விமானப் படைக்கு ரூ.20,000 கோடியில் 56 ராணுவத்துக்கான சரக்கு விமானங்கள் கொள்முதல் செய்வதற்கு ஏர்பஸ் டிஃபன்ஸ் அண்ட் ஸ்பேஸ் நிறுவனத்துக்கும் மத்திய அரசுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. விமானப் படையில் தற்போது பயன்பாட்டில் உள்ள ஏவ்ரோ–748 ரக விமானங்களுக்குப் பதிலாக, சி–295 ரக ராணுவ சரக்குப் போக்குவரத்து விமானங்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவைக் கூட்டம் இரண்டு வாரங்களுக்கு முன்பு நடைபெற்றது. அக்கூட்டத்தில் போர்விமானங்கள் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் நெதா'லாந்தை தலைமையிடமாகக்கொண்ட ஏர்பஸ் நிறுவனத்திடம் இருந்து 56 ராணுவ விமானங்கள் கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுதொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஏர்பஸ் நிறுவனத்தின் ஸ்பெயினில் உள்ள தொழிற்சாலையில் இருந்து அடுத்த 4 ஆண்டுகளில் 16 விமானங்கள் இந்தியாவை வந்தடையும். எஞ்சியுள்ள 40 விமானங்கள், இந்தியாவில் உள்ள டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம் நிறுவனத்துக்குச் சொந்தமான தொழிற்சாலையில் தயாரிக்கப்படும். இதுதொடர்பாக ஏர்'பஸ் நிறுவனத்து –க்கும் டாடா நிறுவனத்துக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

---

5. அமெரிக்காவில் மீட்கப்பட்ட 157 தொல்பொருட்களுடன் தாயகம் திரும்பும் பிரதமர் மோடி

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக கடத்தப்பட்ட, திருடப்பட்ட நம்நாட்டின் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையும் உலகிற்கு வெளிப்படுத்தும் 157 தொல்பொருட்கள் அமெரிக்க அரசால் மீட்கப்பட்டுள்ளன. அந்தப் பொருட்களுடன் பிரதமர் மோடி தாயகம் திரும்புகிறார். 157 கலைப் பொருட்களில் 71 பொருட்கள் கைவினைப் பொருட்கள், இந்து மதத்தின் கலைகளை விளக்கும் 60 சிலைகள், பவுத்த மதத்தை விளக்கும்16 சிலைகள், ஜைன மதத்தை விவரிக்கும் 9 சிலைகள் மீட்கப்பட்டு தாயகம் கொண்டு வரப்படுகின்றன.

12 நூற்றாண்டைச் சேர்ந்த வெண்கலத்தில் செய்யப்பட்ட கடவுள் நடராஜர் சிலை, 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த 8.5 செமீ நீளமுள்ள ரேவாந்தா சிலை உள்ளிட்ட மிகப் தொன்மையான சிலைகள் இதில்

அடங்கும். இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட கலைப் பொருட்களை மீட்க பிரதமர் மோடி தலைமையிலான அரசு தொடர்ந்து முயற்சிகளை எடுத்துவருகிறது.

மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகையில் கடந்த 1976ம் ஆண்டுமுதல் 2013ம் ஆண்டுவரை உலகளவில் இந்தியா சார்பில் 13 தொன்மையான பொருட்கள் மட்டுமே மீட்கப்பட்டன.

ஆனால், 2014ஆம் ஆண்டு பிரதமர் மோடி ஆட்சிக்கு வந்தபின், இதுவரை 200க்கும் மேற்பட்ட இந்தியாவின் பாரம்பரியத்தையும், கலாச்சாரத்தையு –ம் விளக்கும் கலைப்பொருட்கள் பல்வேறு நாடுகளிலிருந்து மீட்கப்பட்டு இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அதிலும் 2004 முதல் 2014 ஆம் ஆண்டுவரை ஒரு தொன்மையான சிலை மட்டுமே மீட்கப்பட்டது" எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 40 ஆண்டுகளில் மீட்கப்பட்டதைவிட அதிகமான தொன்மையான பொருட்களை உலகளவில் இருந்து மோடி அரசு மீட்டுள்ளது. தற்போது அமெரிக்காவுக்கு பிரதமர் மோடியின் பயனத்தின் போது, 11ஆம் நூற்றாண்டு முதல் 14ஆம் நூற்றாண்டுவரையிலான சிலைகள், கிமு காலத்து செம்புச் சிலைகள், டெரகோட்டா சிலைகள் உள்ளிட்ட கலைப் பொக்கிஷங்கள் திரும்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன. அச்சிலைகளில் பல உலோகச்சிலை, கற்சிலை, டெரகோட்டா சிலை போன்றவை அடங்கும்.

---

6. வங்கக்கடலில் உருவானது 'குலாப்' புயல்

மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலமாக மாறி, 'குலாப்' புயலாக வலுப்பெற்றுள்ளது. இது வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா இடையே கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'குலாப்' என்னும் பெயரை பாகிஸ்தான் வழங்கியுள்ளது.

---

7. அமெரிக்க மாகாணங்களில் 'ஹிந்து பாரம்பரிய மாதம்' கொண்டாட்டம்

அமெரிக்காவில் டெக்சாஸ், ஜெர்ஸி, ஒஹையோ உள்ளிட்ட பல மாகாணங்களில் அக்டோபர் மாதமானது ஹிந்து பாரம்பரிய மாதமாகக் கொண்டாடப்படவுள்ளது. அமெரிக்காவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹிந்துக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அங்கு ஹிந்துக்களின் பண்டிகைகள் சிறப்பாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

இந்நிலையில், ஆயுதபூஜை, தீபாவளி உள்ளிட்ட பல ஹிந்து பண்டிகைக –ள் கொண்டாடப்படும் அக்டோபர் மாதத்தை இந்து பாரம்பரிய மாதமாகக் கொண்டாட டெக்சாஸ், புளோரிடா, ஜெர்ஸி, ஒஹையோ, மாசசூசெட்ஸ் உள்ளிட்ட மாகாணங்கள் தீர்மானத்தை இயற்றியுள்ளன.

டெக்சாஸ் மாகாணத்தின் தீர்மானத்தில், 'நம்பிக்கை, சேவை, கொள்கைப்பகிர்வு உள்ளிட்டவற்றின் ஒளிவிளக்காக ஹிந்துக்கள் திகழ்ந்து வருகின்றனர். உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கான நபர்கள் ஹிந்து நம்பிக்கைகளைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

ஹிந்துத்துவமானது தனது தனிப்பட்ட கலாசாரம், வரலாறு காரணமாக மாகாணத்துக்கும் அமெரிக்க நாட்டுக்கும் முக்கியப் பங்களிப்பை வழங்கியுள்ளது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்டோபர் மாதம் முழுவதும் கலாசார நிகழ்ச்சிகள், கருத்தரங்கங்கள், மாநாடுகள், ஆடை அலங்கார நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை நடைபெறும் என்று அமெரிக்காவில் உள்ள ஹிந்து அமைப்புகள் தெரிவித்துள்ளன. கரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகளை முறையாகப் பின்பற்றி நேரடியாகவும் காணொலி வாயிலாகவும் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

8. உலக வில்வித்தை: இந்தியாவுக்கு இரு வெள்ளி

அமெரிக்காவில் நடைபெறும் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் காம்பவுண்ட் விளையாட்டில் மகளிர் அணி, கலப்பு அணி ஆகிய இரு பிரிவுகளில் இந்தியா 2ஆம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றது. இரு பிரிவுகளின் இறுதிச்சுற்றிலுமே இந்தியாவிடம் இருந்து கொலம்பியா தங்கத்தை தட்டிப் பறித்தது.

உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா இதற்கு முந்தைய சீசன்களில் 8 வெள்ளி, 2 வெண்கலம் என 10 பதக்கங்களை வென்றுள்ளது. இதில் தங்கம் வெல்வதற்கான இந்தியாவின் போராட்டம் தொடர்கிறது. உலக சாம்பியன்ஷிப்பின் காம்பவுண்ட் பிரிவில் கொலம்பியாவின் ஆதிக்கம் தொடர்கிறது. இத்துடன் இப்பிரிவில் அந்த அணிக்கு மொத்தமாக 4 தங்கங்கள் கிடைத்துள்ளன.

9. செப்.25 – உலக மருந்தாளுநர் நாள்.

---

10. தமிழகத்தில் மாமல்லபுரம், ஏற்காடு, காஞ்சி, குமரி, குற்றாலம், தஞ்சை உட்பட தேசிய கல்விச் சுற்றுலாவுக்காக 100 நகரங்கள் பட்டியல் வெளியீடு

ஒரே பாரதம், உன்னத பாரதம் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் கல்விச் சுற்றுலாவுக்கு 100 நகரங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதில் தமிழகத்தில் உள்ள மாமல்லபுரம், ஏற்காடு உட்பட 6 இடங்கள் இடம்பெற்றுள்ளன. தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்காக 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற திட்டம் மத்திய அரசால் 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தேசிய கல்விச் சுற்றுலாவுக்கு தகுதியான 100 நகரங்கள் பட்டியலை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

---

11. பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியை முழுமையாக மீட்டு பறவைகள் சரணாலயமாக மாற்ற உயர் நீதிமன்றம் உத்தரவு

பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியை ஆக்கிரமிப்புகளில் இருந்து முழுமையாக மீட்டு பறவைகள் சரணாலயமாகவும், அரிய தாவரம், விலங்கினங்களின் சுற்றுச்சூழலியல் வாழ்விடமாகவும் மாற்றும் சாத்தியக்கூறுகளை ஆராய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

---

12. ஆவடி கனரக வாகன தொழிற்சாலையில் ரூ.7,523 கோடியில் 118 அர்ஜுன் எம்கே–1ஏ பீரங்கிகள் தயாரிப்பு: பணி ஆணை வழங்கியது பாதுகாப்புத் துறை

ஆவடியில் உள்ள கனரக வாகன தொழிற்சாலையில், ரூ.7,523 கோடி மதிப்பில் 118 அர்ஜுன் எம்கே–1ஏ பீரங்கி வாகனங்களைத் தயாரித்து வழங்குவதற்கான பணி ஆணையை பாதுகாப்புத் துறை அமைச்சகம் வழங்கியுள்ளது. நவீன பீரங்கி வாகனமான எம்கே–1ஏ, அர்ஜுன் பீரங்கி வாகனத்தின் புதிய வகையாகும். எம்கே–1வகை பீரங்கி வாகனத்துடன் ஒப்பிடும்போது 72 புதிய அம்சங்கள் மற்றும் உள்நாட்டு உபகரணங்களும், எம்கே–1ஏ பீரங்கி வாகனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தப் பீரங்கி வாகனம், அனைத்து வகையான நிலப்பரப்புகளிலும் எளிதாக செல்லும் திறன் பெற்றது. அதோடு, பகலிலும், இரவிலும், துல்லியமாக இலக்கை தாக்கும் திறன் படைத்தது. இந்த பீரங்கி வாகனத்தை, பல மேம்பட்ட வசதிகளுடன் ராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இதனால் இந்த பீரங்கி வாகனம், உலகத் தரத்துக்கு இணையாக இருக்கும்.

இந்நிலையில், அர்ஜுன் எம்கே–1ஏ பீரங்கிகளைத் தயாரிக்கும் பணி ஆவடி கனரக தொழிற்சாலைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், குறு, சிறு தொழில்நிறுவனங்கள் உட்பட 200 இந்திய நிறுவனங்களுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்கும்.

அத்துடன், 8000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த வாகனத் –தை, போர்வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுநிறுவனம் (சிவிஆர்டிஇ), டிஆர்டிஓ'இன் இதர ஆய்வகங்களுடன் இணைந்து 2 ஆண்டுக்குள் உருவாக்கியது குறிப்பிடத்தக்கது. இத்தகவல் பாதுகாப்புத் துறை பத்திரிகை தகவல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

---

13. கோவளம் கடற்கரை பகுதியில் திரவக் கழிவுகள் 100 சதவீதம் மறுசுழற்சி: அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தகவல்

சிவ.வீ.மெய்யநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி சுமார் 1,076 கிமீ நீளம் கொண்டது. இதில் செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் கடற்கரைக்கு இந்தியாவின் 9–வது நீலக்கொடி கடற்கரைசான்றிதழை டென்மார்க் நாட்டைச்சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்பு வழங்கியுள்ளது. இந்த அமைப்புஉலகளவில் பாதுகாப்பு, துய்மையான கடற்கரைகளைத் தேர்ந்தெடுத்து இந்த அங்கீகாரத்தை வழங்கி வருகிறது.

கோவளம் கடற்கரையில் பசுங்கொடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பார்வையாளர்களைக் கவர 37 வசதிகள் உள்ளன. இதில் பாதுகாப்பான நீச்சல் மண்டலம், உடைமாற்றுப் பகுதி, சாய்ந்திருக்கும் மூங்கில் நாற்காலிகள், நிழற்குடைகள், வெளிப்புற உடற்பயிற்சி உபகரணங்கள், குழந்தைகள் விளையாடும் பகுதி, மூங்கிலால் செய்யப்பட்ட குப்பைத் தொட்டிகள், கழிப்பறை மற்றும் 7 நிலை சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்வழங்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன. மணலை சுத்தம்

செய்யும் இயந்திரத்தைப் பயன்படுத்தி கடற்கரை மணலும் தொடர்ந்து சுத்தம் செய்யப்படுகிறது.

கடற்கரையின் நீராடும் மண்டலத்தில் பாதுகாப்பாக நீந்தக்கூடிய மாற்றுத் திறனாளிகளுக்கான ஆம்பிபியஸ் வீல் நாற்காலியும் உள்ளது. கடற்கரையில் குளிப்பதற்கான காலம் ஜனவரி 15 முதல் செப்டம்பர் 15 வரை அடையாளம் காணப்பட்டுள்ளது.

பார்வையாளர்களின் பாதுகாப்புக்காக 4 கண்காணிப்பு சிசிடிவிகேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. எந்த அவசர அழைப்புக்கும் உயிர்காக்கும் காவலர்கள் கண்காணிப்பு கோபுரத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும், அங்கு உடனடி மருத்துவ கவனிப்பும் பார்வையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. 60 எல்இடி ஒளிரும்தெரு விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள கடற்கரை, காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையாளர்களுக்காக திறந்திருக்கும். குளியல் மண்டலத்தில் தூய்மையான நிலையில் நீர் பராமரிக்கப்படுகிறது.

இந்த கடற்கரை, ஒரு பூஜ்ஜிய திரவ கழிவு மேலாண்மை கடற்கரையாக உள்ளது. இங்கு உருவாகும் திரவக் கழிவுகள் சுத்திகரிக்கப்பட்டு 100 சதவீதம் மீண்டும்பயன்படுத்தப்படுகிறது. அவற்றைவெளியில் விட்டு மாசுபடுத்தப்படுவதில்லை. அங்கு இதில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், 40 கிலோவாட் சூரிய மின் நிலையம் மற்றும் நாளொன்றுக்கு 50 கிலோ செயலாக்க திறன் கொண்ட தானியங்கி உரம் தயாரிக்கும் இயந்திரம் கொண்ட திடக்கழிவு மேலாண்மை அலகும் உள்ளது.

1. இந்தியாவின் முதல் யூரோ பசுமைப் பத்திரத்தை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ) NTPC

ஆ) பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ☑

இ) AIIMS

ஈ) TANGEDCO

✓ மின்துறையில் முன்னணி வங்கிசாரா நிதி நிறுவனமான, பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட் தனது முதல் யூரோ 300 மில்லியன், 7 ஆண்டு யூரோ பசுமைப் பத்திரத்தை வெளியிட்டது.

✓ இதன்மூலம் பெறப்பட்ட 1.841 சதவீத விலை, யூரோ சந்தையில் இந்திய வெளியீட்டு நிறுவனத்தால், பெறப்பட்ட மிகக்குறைந்த வகூல். இது, இந்திய வங்கி சாரா நிதி நிறுவனம் வெளியிட்ட முதல் யூரோ பத்திரம் மற்றும் 2017ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவிலிருந்து வெளியிடப்பட்ட முதல் யூரோ பசுமைப் பத்திரம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பத்திர வெளியீட்டின்போது, ஆசிய மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 82 முதலீட்டு நிறுவனங்கள் பங்கேற்றன. இது 2.65 மடங்கு மிகையானது.

---

2. 2021'க்கான உலகளாவிய விருதுகளில் யூரோமணி வழங்கிய 'உலகின் சிறந்த வங்கி – 2021' பட்டத்தை வென்ற வங்கி எது?

அ) SBI வங்கி

ஆ) DBS வங்கி ☑

இ) ஐசிஐசிஐ வங்கி

ஈ) ஆக்சிஸ் வங்கி

✓ இங்கிலாந்தைச் சார்ந்த நிதியியல் வெளியீடான 'யூரோமணி' அதன் உலகளாவிய விருதுகள் – 2021'இல், DBS'ஐ 'உலகின் சிறந்த வங்கி 2021' என்ற பட்டத்துடன் கௌரவித்துள்ளது. மூன்று ஆண்டுகளில், DBS வங்கி இந்தப் பட்டத்தை வெல்வது இது இரண்டாவது முறையாகும். DBS வங்கி 'உலகின் சிறந்த டிஜிட்டல் வங்கி 2021' என அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் இரு பட்டங்களையும் ஒரே நேரத்தில் வைத்திருக்கும் உலகின் முதல் வங்கியாக இது உள்ளது.

---

3. பாரத மிகுமின் நிறுவனமானது (BHEL) இந்தியாவின் மிகப்பெரிய மிதவை சோலார் PV ஆலையை எம்மாநிலத்தில் தொடங்கியுள்ளது?

அ) ஆந்திர பிரதேசம் ☑

ஆ) மகாராஷ்டிரா

இ) பீகார்

ஈ) கர்நாடகா

✓ இந்தியாவின் மிகப்பெரிய மிதவை சூரிய ஒளிமின்னழுத்த அமைப்பு (PV) ஆலையானது ஆந்திர பிரதேச மாநிலத்தில் உள்ள NTPC சிம்மாத்ரியில் பாரத மிகுமின் நிறுவனம் தொடக்கியுள்ளது. இந்த 25 MW திட்டம், 100 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தூய மின்சாரத்தை உருவாக்குவது மட்டுமல்லாமல், நீர் ஆவியாவதையும் குறைக்கும்.

---

4. "சுற்றுச்சூழல் உணர்திறன், காலநிலை தகவமைப்பு மற்றும் சமூக உள்ளடக்கங்கொண்ட நகர்ப்புற ஆற்றங்கரை திட்டமிடல் & மேம்பாட்டுக்கான வழிகாட்டல் குறிப்பை" அறிமுகப்படுத்தியுள்ள அமைப்பு எது?

அ) தேசிய தூய்மை கங்கை திட்டம் ☑



ஆ) ஜல் சக்தி அமைச்சகம்

இ) நமாமி கங்கே

ஈ) துறைமுகங்கள், கப்பல் & நீர்வழிகள் அமைச்சகம்

✓ தேசிய தூய்மைகங்கை திட்டம் "சுற்றுச்சூழல் உணர்திறன், காலநிலை தகவமைப்பு & சமூக உள்ளடக்கங்கொண்ட நகர்ப்புற ஆற்றங்கரை திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுக்கான வழிகாட்டல் குறிப்பை" வெளியிட்டு உள்ளது. இது 'கனெக்ட் கரோ'இல் வெளியிடப்பட்டது. இந்தியாவின் உலக வள நிறுவனம் இதனை ஏற்பாடு செய்தது.

---

5. APEDA சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?

அ) 1970

ஆ) 1980

இ) 1985 ☑

ஈ) 1995

✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையச் சட்டமானது (APEDA சட்டம்) கடந்த 1985ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

✓ வணிக நுண்ணறிவு மற்றும் புள்ளியியல் இயக்குநரகத்தின் சமீபத்திய மதிப்பீட்டின்படி, APEDA தயாரிப்புகளின் ஏற்றுமதி ஏப்ரல் முதல் ஆகஸ்ட் 2021 வரை 21.8% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

---

6. "ஆதார் அடிப்படையிலான e-KYC", "சுய KYC" மற்றும் "OTP அடிப்படையிலான மாற்றம்" ஆகியவை இந்திய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட எந்தச் சீர்திருத்தங்களின் ஒருபகுதியாகும்?

அ) LPG சீர்திருத்தங்கள்



ஆ) மின் துறை சீர்திருத்தங்கள்

இ) MSME சீர்திருத்தங்கள்

ஈ) தொலைத்தொடர்பு சீர்திருத்தங்கள் ☑

✓ உலகத்தரம் வாய்ந்த இணைய / டெலி-இணைப்பை வழங்குவதற்கும், KYC செயல்முறைகளை எளிமையாக்குவதற்குமாக இந்திய அரசாங்கம் தொலைத்தொடர்பு துறையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இவற்றில் "ஆதார் அடிப்படையிலான e-KYC", "சுய-KYC" ஆகியவை சிம் கார்டுகளை வீட்டுக்கேச் சென்று வழங்குதல் மற்றும் "OTP அடிப்ப -டையில் மொபைல் இணைப்பை பிரீபெய்டிலிருந்து போஸ்ட்பெய்டுக்கு மாற்றுவது" ஆகியவை அடங்கும்.

7.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, "VR சௌதாரி" என்பவருடன் தொடர்புடைய அமைப்பு எது?

அ) இஸ்ரோ



ஆ) இந்திய விமானப்படை ☑

இ) ஓஎன்ஜிசி

ஈ) இந்தியன் ஆயில்

✓ இந்திய வான்படையின் தற்போதைய துணைத்தலைவர் VR சௌதாரி, இந்திய வான்படையின் அடுத்த தலைமை மார்ஷலாக இந்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் செப்.30 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெறும் ஏர் சீப் மார்ஷல் ஆர் கே எஸ் பதௌரியாவுக்குப் பின் இப்பதவிக்கு வருவார். VR சௌத்ரி, 1982 டிசம்பரில் ஐஏஎஃப்'இல் பணி நியமனம் செய்யப்பட்டார். பல்வேறு அளவிலான விமானங்களில் 3,800 மணி நேரங்களுக்கு மேல் அவர் பறந்துள்ளார்.

---

8. ஆசாத் கா அம்ரித் மகோத்சவத்தை நினைவுகூரும் வகையில், 'Sailing regattas and Sail parade' என்றவொன்றை நடத்தவுள்ள அமைப்பு எது?

அ) இந்திய இராணுவம்



ஆ) இந்திய கடற்படை ☑

இ) இந்திய கப்பல் கழகம்

ஈ) இந்திய அகழ்வு நிறுவனம்

✓ சுதந்திர இந்தியாவின் வைரவிழா கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, கடற்படையின், 3 கட்டுப்பாட்டு மையங்களின் தலைமையிடங்களில் பாய்மரப் படகுப்போட்டிகள் மற்றும் அணிவகுப்புகளை நடத்த இந்தியக் கடற்படையின், பாய்மரப் படகுச் சங்கம் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் உள்ளூர் மக்களிடையே பாய்மரப் படகு விளையாட்டுகள் பிரபலப்படுத்த -ப்படும். முதல் நிகழ்ச்சியை, கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படையின் படகு வீரர்கள் பயிற்சி மையம், எர்ணாகுளம் கால்வாயில் செப்டம்பர் 23ஆம் தேதி நடத்துகிறது. இந்தியக் கடற்படையின் 75 வீரர்கள், இதில் கலந்துகொண்டு, தங்கள் திறமையை வெளிப்படுத்துவர்.

---

9. UGCஉடன் இணைந்து "அனைத்தும் உள்ளடங்கிய நிர்வாகத்தை உறுதி செய்வது: ஒவ்வொருவரையும் உருவாக்குவது தான் முக்கியமான விஷயம்" என்ற தலைப்பிலான வலையரங்கத்தை ஏற்பாடு செய்துள்ள அமைச்சகம் எது?

அ) நிதி அமைச்சகம்



ஆ) சமூக நீதி அமைச்சகம்

இ) மகளிர் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) கல்வி அமைச்சகம் ☑

- ✓ அனைவருக்கும் தரமான கல்வியை வழங்கும் தொலைநோக்கின் ஒரு பகுதியாக, "அனைத்தும் உள்ளடங்கிய நிர்வாகத்தை உறுதி செய்வது: ஒவ்வொருவரையும் உருவாக்குவதுதான் முக்கியமான விஷயம்" என்ற தலைப்பிலான இணையக் கருத்தரங்கை மத்திய கல்வி அமைச்சகமும், பல்கலைக்கழக மானியக்குழுவும் நடத்தின. இந்த இணையக் கருத்து அரங்கில் மத்திய பழங்குடியினர் விவகாரத்துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.
- ✓ இந்த இணையக் கருத்தரங்கு அனைத்து கல்வி நிறுவனங்களின் தலைவர்களை ஒரே தளத்தில் கொண்டுவரும் வாய்ப்பை ஏற்படுத்தியது. இதற்கு லக்னோவில் உள்ள பாபாசாகிப் பிம்ராவ் அம்பேத்கர் பல்கலைக் கழகமும் ஆதரவு தெரிவித்தது.

---

10. விண்வெளி ஆய்வு தொடர்பான செய்திகளில் இடம்பெறுகிற VIPER'இல் I என்பது எதைக் குறிப்பிடுகிறது?

அ) Intelligence



ஆ) Investigating ☑

இ) Interesting

ஈ) Information

- ✓ அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA, சந்திரனுக்கு VIPER (Volaterles Investigating Polar Exploration Rover) என்ற ஒரு நடமாடும் ரோபோ அமைப்பை அனுப்பவுள்ளதாக அறிவித்துள்ளது. இது 2023ஆம் ஆண்டில், ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் ஒரு பகுதியாக அனுப்பப்படவுள்ளது. மேலும் இது நிலவின் மேற்பரப்பில் மற்றும் அதற்குக் கீழே பனி மற்றும் பிற வளங்களைத் தேடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ சந்திரனின் தென் துருவமானது நமது சூரிய மண்டலத்தின் குளிரான பகுதிகளுள் ஒன்றாகும். இதுவரை அது ஆராயப்படாமலேயே உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மங்கள்யான் விண்கலத்தின் 7 ஆண்டுகள் நிறைவு: இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல்

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்யும் மங்கள்யான் விண்கலம், வெற்றிகரமாக 7–வது ஆண்டை நிறைவு செய்துள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: மங்கள்யான் திட்டத்தில் அனைத்துவித அம்சங்களும் எதிர்பார்த்ததைவிட சாதகமாகவே அமைந்துள்ளன. இதில் கிடைக்கப் பெற்ற அனுபவங்கள்தான் நமது எதிர்கால திட்டங்களுக்கு பெரிதும் உதவிகரமாக இருக்கின்றன.

மங்கள்யானின் 5 ஆய்வு சாதனங்கள் தொடர்ந்து தகவல்களை அனுப்பி வருகின்றன. இதன்மூலம் செவ்வாய் கிரகத்தின் பருவநிலை மாறுபாடுகள், வளிமண்டல சூழல்கள் குறித்து பல்வேறு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தற்போதைய நிலவரப்படி விண்கலத்தின் ஆய்வுக் காலம் மேலும் ஓராண்டுக்கு நீடிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். வழக்கமாக தொலைத்தொடர்பு மற்றும் கண்காணிப்பு செயற்கைக் கோள்கள்தான் 7 முதல் 9 ஆண்டுகள் வரை செயல்படும். ஆனால், ஒரு விண்கலத்தையும் 7 ஆண்டுகளுக்கு மேலாக இயங்க வைக்க முடியும் என்பதை மங்கள்யான் நிரூபணம் செய்திருப்பது நமக்கு பெருமிதமான தருணமாகும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

---

2. தமிழக ஏற்றுமதி வளர்ச்சிக்கு மத்திய அரசு உதவி செய்யும்:

மத்திய அரசின் வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் சார்பில் வர்த்தக வார விழாவின் நிறைவுநாள் நிகழ்ச்சி சென்னை தாம்பரம் மெப்ஸ் வளாகத்தில் உள்ள சிடிஎஸ் கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இதில், மத்திய மீன்வளம், கால்நடை, தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது: உள்ளூர் தொழில்களை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசு சுயசார்பு பாரதம் என்ற சிறப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

கால்நடை, கடல்சார் பொருட்கள் ஏற்றுமதிக்கு இந்தியாவுக்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்திய வேளாண் ஏற்றுமதியில் 17–18 சதவீதம் வரை கடல்சார் பொருட்கள் ஏற்றுமதியின் பங்களிப்பு ஆகும். கடல்சார் பொருட்கள் ஏற்றுமதிக்கு மத்திய அரசு 50 சதவீதம் மானியம் அளிக்கிறது. கால்நடை உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி, கால்நடை நோய்கள் கட்டுப்பாட்டு திட்டம் எனபல்வேறு திட்டங்கள் கால்நடை துறை வளர்ச்சிக்காக செயல்படுத்தப்படுகின்றன. ஒரு லட்சம் கால்நடைகள் கொண்ட பகுதியில் நடமாடும் கால்நடை மருத்துவ கிளினிக் (மொபைல் கிளினிக்) இயக்க மத்திய அரசு உதவுகிறது.

இந்திய அளவிலான ஏற்றுமதியில் தமிழகம் 3–வது இடத்தில் உள்ளது. சென்னையில் இருந்து கார், உதிரிபாகங்களும், நாமக்கல் பகுதியில் கால்நடை சார்ந்தபொருட்களும், தூத்துக்குடியில் இருந்து கடல்சார் பொருட்களும் அதிக அளவில் ஏற்றுமதியாகின்றன. தமிழகத்தின் ஏற்றுமதி மேம்பாட்டுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்துதரும்.

கிராமப் பொருளாதாரம்

வளரும் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டுக்கு மத்திய அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. கிராமப்புறங்களில் இருந்து பொருட்களை ஏற்றுமதி செய்யும்போது கிராம பொருளாதாரம் வளரும். அதன்மூலம் கிராமங்கள் வளர்ச்சி அடைவதோடு வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

'மேட் இன் இந்தியா' என்று பெருமையாக கூறிக்கொள்ளும் வகையில் இந்தியாவில் இருந்து சிறப்புமிக்க பொருட்கள் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை உருவாக வேண்டும். நாட்டிலேயே முதல்முறையாக தமிழகத்தில் கடல்பாசி பூங்கா அமைக்கப்பட உள்ளது. இதன்மூலம், மீனவ பெண்கள், மகளிர் சுயஉதவிக் குழுவினர், விவசாய உற்பத்தியாளர் குழுவினர் பெரி தும் பயனடைவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

---

3. நாக நதியை மீட்ட தமிழக பெண்கள் – பிரதமர் மோடி

மனதின் குரல் வானொலி உரையில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது: நாடு முழுவதும் நதிகளை மீட்க, தூய்மைப்படுத்த அரசும் தன்னார்வ தொண்டு அமைப்புகளும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. இதற்கு உதாரணமாக தமிழகத்தின் வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த மாவட்டங்களின் நீர் ஆதாரமான நாகநதி பல ஆண்டுகளுக்கு முன்பே வறண்டுவிட்டது. அப்பகுதி பெண்கள் ஒன்றிணைந்து நாகநதியை மீட்கும் பணியில் இறங்கினர். அவர்கள் மக்களை ஒன்று திரட்டினர், கால்வாய்களை தோண்டினர். தடுப்பணைகளை உருவாக்கினர், மறுசெறிவு குளங்களை வெட்டினர். இதன்விளைவாக இன்று நாகநதியில் தண்ணீர் ததும்பி ஓடுகிறது.

தேசத்தந்தை காந்தியடிகள் சபர்மதி நதிக்கரையில் ஆசிரமத்தை அமைத்தார். 10 ஆண்டுகளுக்கு முன்பே சபர்மதி நதி வறண்டுவிட்டது. ஓராண்டில் 7 மாதங்கள் வரை நதியில் தண்ணீர் இருக்காது. இதன்பிறகு நர்மதையும், சபர்மதியும் இணைக்கப்பட்டன, இன்று சபர்மதியில் தண்ணீர் நிறைந்திருக்கிறது. தமிழக பெண்களைப் போன்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் நதிகளை மீட்கும் பணி நடந்து வருகிறது. நம்முடைய துறவிகள் நதிகள் மீட்பு, மரக்கன்று நடுதல் உள்ளிட்ட சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நாக நிதியை மீட்கும் திட்டம் கடந்த 2014–ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. வாழும் கலை அமைப்பின் முயற்சியால் தொடங்கப்பட்ட இந்த நதி மீட்பு திட்டத்தில் 20,000–க்கும் மேற்பட்ட பெண்கள் ஆர்வத்தோடு ஈடுபட்டு 3,500–க்கும் மேற்பட்ட மீள் கிணறு, மறுசெறிவு குளங்களை வெட்டினர். 250 தடுப்பணைகள் கட்டப்பட்டன. 5 ஆண்டு உழைப்பின் பலனாக நாகநதி மீண்டும் உயிர் பெற்றது.

---

4. தமிழக அரசுப் பள்ளிகளுக்கு 100% குடிநீர் இணைப்பு: மத்திய அமைச்சர் பாராட்டு

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு 100 சதவீத குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதற்கு மத்திய அமைச்சர் பிரகலாத் சிங் படேல் பாராட்டு தெரிவித்தார். தமிழகத்தில் 2 நாள்கள் சுற்றுப்பயணமாக ஞாயிற்றுக்கிழமை சென்னை வந்த மத்திய உணவு பதப்படுத்துதல் துறை மற்றும் ஜல் சக்தி இணை அமைச்சர் பிரகலாத் சிங் படேலை தமிழக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். அப்போது ஊரக பகுதிகளில் தூய்மை பாரத இயக்கம் மற்றும் ஜல் ஜீவன் இயக்கத்தின் முன்னேற்றம் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அப்போது மத்திய அமைச்சர் கூறியதாவது: ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 12,525 ஊராட்சிகளைச் சார்ந்த 79,395 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள சுமார் 1 கோடியே 27 லட்சம் வீடுகளில் இதுவரை 46.33 லட்சம் வீடுகளுக்கு குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் அரசுப்பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசுக்கட்டடங்களுக்கு 100 சதவீதம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதற்கு எனது பாராட்டுக்கள். மேலும் இக்குடிநீர் இணைப்புகளை உரிய முறையில் பராமரித்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

மக்களின் சுகாதார வாழ்வுக்கு வழிவகுக்கும் வகையில் தமிழகத்தின் ஊரக பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள், திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கத்தை முற்றிலும் ஒழித்திட தனி நபர் கழிப்பறைகள் மற்றும் சமுதாய வளாகங்கள் கட்டி மக்களைப் பயன்படுத்த ஊக்குவித்தல் போன்ற செயல்பாடுகள் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் ரூ.366.58 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஊரக பகுதிகளில் திட மற்றும் திரவக்கழிவுகளை திறம்பட மேலாண்மை செய்திட ஏதுவாக பற்பல முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் பாராட்டுக்குரியது. அதே நேரம், மக்களிடையே சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், நெகிழி கழிவுகள் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

---

5. எண்ம சுகாதாரத் திட்டம்: வரலாற்றுச் சிறப்பு மிக்க திட்டத்தை தொடக்கி வைத்தார் பிரதமர்

பிரதமரின் எண்ம (டிஜிட்டல்) சுகாதார இயக்கம் இன்று தொடங்கியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த முன்முயற்சியை இன்று காலை 11 மணிக்கு காணொலிக் காட்சி வாயிலாக தொடக்கிவைத்து பிரதமர் உரையாற்றினார். தேசிய எண்ம சுகாதார இயக்கத்தின் மாதிரி திட்டத்தை கடந்த 2020 ஆகஸ்ட் 15-இல் செங்கோட்டை கொத்தளத்தில் உரையாற்றுகையில் பிரதமர் அறிவித்தார். தற்போது 6 யூனியன் பிரதேசங்களில் இந்த மாதிரித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. ஆயுஷ்மான் பாரத் – பிரதமரின் மக்கள் ஆரோக்கிய திட்டத்தின் மூன்றாவது ஆண்டை கொண்டாடும் வேளையில், நாடு தழுவிய பிரதமரின் எண்ம சுகாதார இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில் மத்திய சுகாதார அமைச்சர் மாண்டவியா உள்ளிட்டோர் பங்கேற்க இருக்கின்றனர்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு நபருக்கும் சுகாதார அடையாள அட்டை அளிக்கப்படும். மக்களின் மருத்துவ சிகிச்சைக்கான ஆவணமாக செயல்படும் இந்த அடையாள அட்டையுடன் தனிநபர் பெற்ற மருத்துவ சிகிச்சைகள் உள்பட மருத்துவம் சார்ந்த அனைத்து தகவல்களும் இணைக்கப்படுவதுடன் செல்லிடப்பேசி செயலி உதவியுடன் அவற்றைத் தெரிந்து கொள்ள முடியும். மற்றொரு முக்கிய அம்சமான சுகாதார தொழில்சார் நிபுணர்களின் பதிவேடு மற்றும் சுகாதார வசதிகளின் பதிவுகள், நவீன மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளின் மருத்துவர்கள் குறித்த தகவல்கள் அடங்கிய களஞ்சியமாக செயல்படும். மருத்துவர்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ சேவைகளை வழங்குபவர்கள் உள்ளிட்டோர் எளிதான பணியை மேற்கொள்வதை இது உறுதி செய்யும்.

அதேவேளையில் பாதுகாப்பு, ரகசியத்தன்மை மற்றும் மருத்துவம் சம்பந்தமான தனிநபர் தகவல்களின் தனியுரிமை உறுதி செய்யப்படும். மக்களின் அனுமதி பெற்று அவர்களது மருத்துவ ஆவணங்களை அணுகுவதற்கும் பரிமாற்றம் செய்வதற்கும் இந்த இயக்கம் வழிவகை செய்யும்.

6. ஆஸ்ட்ரவா ஓபன் டென்னிஸ் சானியா ஜோடி சாம்பியன்

செக் குடியரசு நாட்டில் நடந்த ஆஸ்ட்ரவா ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா, சீனாவின் ஷுவாய் ஸாங் ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது. இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் கிறிஸ்டியன் கெய்ட்லின் – எரின் ரவுட்லைப் (நியூசி.) ஜோடியுடன் மோதிய சானியா ஜோடி 6-3, 6-2 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை முத்தமிட்டது. இப்போட்டி 1 மணி, 4 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது. நடப்பு சீசனில் சானியா வென்ற முதல் சாம்பியன் பட்டம் இது. முன்னதாக, கடந்த மாதம் கிறிஸ்டினா மெகேலுடன் இணைந்து விளையாடிய கிளீவ்லேண்ட் ஓபனில் அவர் பைனல் வரை முன்னேறி 2வது இடம் பிடித்திருந்தார்.

---

7. எஸ்டோனியா வீராங்கனை அனெட் கோன்டாவெய்ட்

ஆஸ்ட்ரவா ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவில் எஸ்டோனியா வீராங்கனை அனெட் கோன்டாவெய்ட் (25 வயது, 30வது ரேங்க்) சாம்பியன் பட்டம் வென்றார். பைனலில் கிரீஸ் நாட்டின் மரியா சாக்கரியுடன் (26 வயது, 12வது ரேங்க்) நேற்று மோதிய கோன்டாவெய்ட் 6-2, 7-5 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை முத்தமிட்டார். இப்போட்டி 1 மணி, 32 நிமிடத்துக்கு நீடித்தது.

---

8. டி20 கிரிக்கெட்டில் 10 ஆயிரம் ரன்கள்: கோலி சாதனை!

ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு கேப்டன் விராட் கோலி டி20 கிரிக்கெட்டில் 10,000 ரன்கள் என்ற புதிய சாதனையைப் படைத்துள்ளார். ஐபிஎல்-இன் இன்றைய (ஞாயிற்றுக்கிழமை) இரண்டாவது ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, மும்பை இந்தியன்ஸ் அணிகள் விளையாடி வருகின்றன. முதலில் பேட் செய்த பெங்களூரு நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ரன்கள் எடுத்துள்ளது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கோலி 51 ரன்கள் எடுத்தார். இதில், ஜாஸ்பிரித் பும்ரா பந்தை சிக்ஸருக்கு பறக்கவிட்டு 13 ரன்களைக் கடக்கும்போது டி20 கிரிக்கெட்டில் கோலி 10,000 ரன்கள் என்ற சாதனையைப் படைத்தார். இந்த சாதனையை 314-வது டி20 ஆட்டத்தில் அவர் படைத்துள்ளார்.

---

1. இரஸ்கின் பாண்ட், வினோத் குமார் சுக்லா உள்ளிட்ட அறுவர், அண்மையில் எந்தப் பெல்லோஷிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்?



அ) சாகித்ய அகாதமி பெல்லோஷிப் ☑

ஆ) ஞானபீட விருது

இ) வியாஸ் சம்மான்

ஈ) டாக்டர் B C ராய் விருது

✓ ஆங்கில எழுத்தாளர் இரஸ்கின் பாண்ட், ஹிந்தி எழுத்தாளர் வினோத் குமார் சுக்லா உள்ளிட்ட ஆறு பேர் சாகித்ய அகாதமி பெல்லோஷிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். சாகித்ய அகாதமியின் பொது கவுன்சில் அதன் உயரிய கௌரவமான பெல்லோஷிப்பை அறிவித்ததாக தேசிய எழுத்துக்–கள் அகாதமி கூறியது. சிர்ஷெண்டு முகோபாத்யாய் (பெங்காலி), எம் லீலாவதி (மலையாளம்), Dr பால்சந்திர நெமேட் (மராத்தி), Dr தேஜ்வந்த் சிங் கில் (பஞ்சாபி), சுவாமி இராமபத்ராச்சார்யா (சமற்கிருதம்), இந்திரா பார்த்தசாரதி (தமிழ்) ஆகியோர் பெல்லோஷிப் பெற்ற மற்றவர்களாவர்.

---

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பங்கஜ் அத்வானியுடன் தொடர்புடைய விளையாட்டு எது?



அ) பளு தூக்குதல்

ஆ) ஸ்னூக்கர் ☑

இ) டென்னிஸ்

ஈ) டேபிள்–டென்னிஸ்

✓ கத்தாரின் தோகாவில் நடைபெற்ற ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பை ஈரானின் அமீர் சர்கோசை 6–3 என்ற கணக்கில் வீழ்த்தி இந்தியாவின் பங்கஜ் அத்வானி வென்றார். அவர் கடந்த 2019ஆம் ஆண்டில் பட்டத்தை வென்றார். ஆனால், 2017ஆம் ஆண்டில் இரண்டாமிடத்தைப் பிடித்தார். 2019ஆம் ஆண்டில், அனைத்து வகையான பில்லியர்ட்ஸ், ஸ்னூக்கர், 6 ரெட்ஸ் மற்றும் 10 ரெட்ஸ் ஆகியவற்றில் பட்டங்களை வென்ற உலகின் ஒரே வீரராக பங்கஜ் அத்வானி ஆனார்.

---

3. அண்மையில் எந்தத் தளத்தில், அமைப்புசாரா தொழிலாளர்கள் குறித்த இந்தியாவின் முதல் தேசிய தரவுத்தளத்தை, தொழிலாளர் அமைச்சகம் வெளியிட்டது?



அ) இ–ஷ்ராம் இணையதளம் ☑

ஆ) சமாதான் இணையதளம்

இ) ஆத்ம நிர்பார் பாரத் இணையதளம்

ஈ) மேற்கூறியவை எதுவுமில்லை

✓ இ–ஷ்ராம் இணையதளமானது அமைப்புசாரா தொழிலாளர்கள் குறித்த இந்தியாவின் முதல் தேசிய தரவுத்தளமாகும். அமைப்புசாரா தொழிலாளர்–களின் பதிவு செயல்முறையை முடிக்குமாறு உச்சநீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்து இந்தத் தளம் நடைமுறைக்கு வந்தது. இ–ஷ்ராம் தளத்தில், 1 கோடிக்கும் மேலானோர் பதிவு செய்துள்ளனர். அப் பதிவுகளில் 68% பொது சேவை மையங்கள்மூலம் செய்யப்பட்டன.

---

4. எதன் ஆராய்ச்சியாளர்கள் மழைத்துளிகளிலிருந்து மின்சாரத்தை உருவாக்கக்கூடிய ஒரு சாதனத்தை வடிவமைத்துள்ளனர்?



அ) ஐஐடி மெட்ராஸ்

ஆ) ஐஐடி பம்பாய்

இ) ஐஐடி தில்லி ☑

ஈ) ஐஐடி பெங்களூர்

✓ தில்லியில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழக ஆராய்ச்சியாளர்கள் நீர் துளிகள், மழைத்துளிகள், நீரோட்டங்கள் மற்றும் கடல் அலைகளில் இருந்தும் மின்சாரத்தை உருவாக்கக்கூடிய ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளனர். இந்தச் சாதனம் மின்னியல் தூண்டல் மற்றும் டிரைபோ–எலக்ட்ரிக் விளைவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது.

✓ இது "திரவ–திட இடைமுகம் டிரைபோஎலக்ட்ரிக் நானோ ஜெனரேட்டர்" என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சாதனம் நானோகாம்போசிட் பாலிமர் மற்றும் ஒரு தொடர்பு மின்முனையால் ஆனது.

5.CBSE / NCERT பாடத்திட்டத்தில் மாற்றஞ்செய்வதற்காக சமீபத்தில் அமைக்கப்பட்ட 12 பேர்கொண்ட குழுவின் தலைவர் யார்?



அ) அமித் ஷா

ஆ) கஸ்தூரிரங்கன் ☑

இ) பிமல் ஜலான்

ஈ) இஞ்செட்டி ஸ்ரீனிவாஸ்

✓ CBSE/NCERT பாடத்திட்டத்தில் மாற்றங்களுக்கான வழிகாட்டுதல்களை வகுப்பதற்காக, இந்திய அரசு, கஸ்தூரிரங்கன் தலைமையில் 12 பேர் கொண்ட தேசிய வழிநடத்துதல் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவுக்கு மூன்றாண்டுகள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

✓ தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு எனப்படும் இந்த ஆவணம் கடைசியாக 2005'இல் தயாரிக்கப்பட்டது. கஸ்தூரிரங்கன், இஸ்ரோவின் முன்னாள் தலைவரும் தேசிய கல்விக் கொள்கை–2020'ஐ உருவாக்கிய குழுவின் தலைவராகவும் இருந்தார்.

---

6. அண்மையில் மத கட்டமைப்புகள் (பாதுகாப்பு) மசோதா, 2021'ஐ நிறைவேற்றிய மாநிலம் எது?



அ) ஒடிஸா

ஆ) கர்நாடகா ☑

இ) மகாராஷ்டிரா

ஈ) கேரளா

✓ கர்நாடக மாநில சட்டசபையானது சமீபத்தில் கர்நாடக மத கட்டமைப்புக–ள் (பாதுகாப்பு) மசோதா, 2021'ஐ நிறைவேற்றியது. பொது இடங்களில் மத நிர்மாணங்களை பாதுகாக்கும் நோக்கில், முதலமைச்சர் பசவராஜ் பொம்மையால் இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. மசோதாவின்படி, "கோவில், தேவாலயம், மசூதி, குருத்வாரா, பௌத்த விகாரம், மஜார் போன்றவை, சட்டத்தின் அதிகாரம் இல்லாமல் பொதுவெளி இடத்தில் கட்டப்பட்டிருந்தாலும் அவை மத கட்டமைப்பு எனப்படும்".

---

7. விலங்கு–மனித மோதலை ஒழிப்பதற்காக, எந்த விலங்குகளுக்கு 'ரேடியோ காலர்'களை பொருத்த ஒடிஸா வனத்துறை திட்டமிட்டு உள்ளது?



அ) புலிகள்

ஆ) யானைகள் ☑

இ) மான்

ஈ) சொம்புமூக்கு முதலை

✓ ஒடிசா மாநிலத்தின் வனத்துறையினர், மாநிலத்தின் 7 யானைகளுக்கு 'ரேடியோ காலர்'களை பொருத்தவும், அவற்றின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும், மனிதக் குடியிருப்புகளுக்குள் அவை நுழைவதைத் தடுக்கவும் திட்டமிட்டுள்ளனர். இது விலங்கு – மனித மோதலை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இதற்காக சந்தக வனவுயிரி சரணாலயத்தின் மூன்று யானைகளும், சிமிலிபால் புலிகள் காப்பகத்தின் 4 யானைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளன. இக்கருவியில் GPS கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் யானைகளின் இருப்பிடத்தை நிகழ்நேரத்தில் கண்காணிக்க முடியும்.

---

8. "Transforming Food Systems for Rural Prosperity" என்றவோர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) UNESCO

ஆ) FAO

இ) IFAD ☑

ஈ) NABARD

✓ "கிராமப்புற செழிப்புக்கேற்றவாறு உணவு அமைப்புகளை மாற்றுவது" என்றவோர் அறிக்கையை ஐநா'இன் சிறப்பு நிறுவனமான வேளாண் வளர்ச்சிக்கான சர்வதேச நிதியம் (IFAD) வெளியிட்டது. இவ்வமைப்பின் தலைமையகம் ரோம், இத்தாலியில் உள்ளது. இந்த அறிக்கை விவசாயம் மற்றும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் அரசின் முதலீடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

---

9. 'நீலக்கொடி' சான்றிதழை வழங்குகிற நிறுவனம் எது?

அ) UNESCO

ஆ) UNICEF



இ) சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை ☑

ஈ) UNFCCC

✓ டென்மார்க்கின் சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளை என்பது தற்சமயம்வரை 77 உறுப்புநாடுகளைக்கொண்ட சுற்றுச்சூழல் அமைப்பு ஆகும். இந்த அமைப்பு, 'நீலக்கொடி' சான்றிதழை வழங்குகிறது. இந்தச் சான்றிதழ் கடற்கரைகளின் சூழல் குறித்த தகவல்களை வழங்குகிறது.

✓ சமீபத்தில் இந்த அறக்கட்டளை, இந்தியாவில் அமைந்துள்ள மேலும் இரு கடற்கரைகளுக்கு 'நீலக்கொடி' சான்றிதழை வழங்கியது. தமிழ்நாட்டின் கோவளம் மற்றும் புதுச்சேரியில் ஈடன் ஆகியன அவ்விரு கடற்கரைகள் ஆகும். இதன்மூலம், இந்தியாவில் 'நீலக்கொடி' சான்றுபெற்ற கடற்கரை –களின் எண்ணிக்கை பத்தாக உயர்ந்துள்ளது.

---

10. பொருளியல் கூட்டுறவு & வளர்ச்சிக்கான அமைப்பின் (OECD) தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) துபாய்

ஆ) தாவோஸ்

இ) பாரிஸ் ☑

ஈ) ஜெனீவா

✓ பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (OECD) என்பது பொருளியல் முன்னேற்றம் மற்றும் உலக வர்த்தகத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக்கொண்ட அரசாங்கங்களுக்கிடையேயான பொருளாதார அமைப்பாகும். இது பிரான்சின் பாரிஸை தலைமையிடமாகக் கொண்டு உள்ளது. இது 36 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

✓ அண்மையில், அமெரிக்க அதிபர், OECD'க்கான அமெரிக்காவின் அடுத்த தூதுவராக மூத்த இந்திய–அமெரிக்க அரசியல் வல்லுநர் மனிசா சிங்கை நியமித்தார். பல்வேறு குறிப்பிடத்தக்க பதவிகளில் பணியாற்றியுள்ள அவர், தற்போது பொருளாதாரம் மற்றும் வணிக விவகாரங்களுக்கான உதவி செயலாளராக பணியாற்றி வருகிறார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் இருந்து முதல்முறையாக – 'போயிங்' நிறுவனத்துக்கு பாகங்கள் தயாரிக்க ஒப்பந்தம்

தமிழகத்தில் முதல்முறையாக போயிங் விமான நிறுவனத்துக்கு முக்கிய பாகங்கள் தயாரித்து வழங்குவதற்கான ஒப்பந்தம் முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் வழங்கப்பட்டது. இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு சேலத்தில் உள்ள ஏரோஸ்பேஸ் இன்ஜினீயர்ஸ் நிறுவனம், உலகளாவிய விண்வெளி நிறுவனத்தின் தயாரிப்புகளுக்கான முக்கிய விமான பாகங்கள் தயாரித்து வழங்க நீண்டகால ஒப்பந்தத்தை போயிங் இந்தியா நிறுவனத்திடம் இருந்து பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தம் தமிழகத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தரம், துல்லியம் மற்றும் கூட்டு கலாச்சாரத்தின் அர்ப்பணிப்புக்கான சான்றாகும். ஏரோஸ்பேஸ் இன்ஜினீயரிங் நிறுவனம் – போயிங் இடையிலான ஒத்துழைப்பு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். இது சேலம், ஓசூர் உள்ளிட்ட தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் வழித்தடத்தில் உள்ள வளர்ந்து வரும் விண்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்களுக்கு உத்வேகத்தை அளிக்கும்.

ரூ.150 கோடி முதலீடு

ஏரோஸ்பேஸ் இன்ஜினீயர்ஸ் நிறுவனம், ஓசூரில் ரூ.150 கோடி முதலீட்டில் சிவில் ஏரோஸ்பேஸ் உற்பத்திக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய உற்பத்தி வசதியை அடுத்த 24 மாதங்களில் ஏற்படுத்த உள்ளது. மேலும், தற்போது சேலத்தில் உள்ள உற்பத்திக் கூடத்தை50 ஆயிரம் சதுர அடி பரப்பில் விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் 1,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். இது, தமிழக முதல்வரின் தொலைநோக்குப் பார்வையான 'தமிழகத்தில் தயாரிக்கப்பட்டது' (Made in TamilNadu) என்பதன் ஒருபடியாக அமையும்.

---

2. பாதுகாப்புத் துறையில் தொழில்நுட்பங்களை கொண்டுவரும் டிஆர்டிஓ.வின் சென்னை 'புதுமை ஆராய்ச்சி மையம்'

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமான டிஆர்டிஓ, நாட்டின் பாதுகாப்புத் தேவைகளையும் ஆராய்ச்சிப் போக்கையும் இணைக்கும் நோக்கில், 'புதுமை ஆராய்ச்சி மையம்' (ஆர்.ஐ.சி) செயல்பட்டு வருகிறது. இம் மையம்சென்னை ஐஐடி ஆராய்ச்சி பூங்காவில், கடந்த 2012–ம் ஆண்டு நிறுவப்பட்டது. கல்வியாளர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றை இணைக்கும் தொடர்புக் கண்ணியாக இருப்பதும், பாதுகாப்புத் துறையில் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை அடையாளம் கண்டு, அவற்றில் ஆராய்ச்சி மேற்கொண்டு, அவற்றை எளிதாக்கி பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதுமே இந்த மையத்தின் முக்கிய நோக்கம்.

எலக்ட்ரானிக்ஸ், மைக்ரோ எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டேஷன் சிஸ்டம்ஸ் (EMECS), கடற்படைஅமைப்பு, கடற்படை தொழில்நுட்பங்கள் (NSNT), மேம்பட்ட வாகனதொழில்நுட்பங்கள் (AVT) போன்றவற்றில் இந்த ஆராய்ச்சி மையம் மேற்கொண்டிருக்கும் ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும் புதுமையாக உள்ளன. இந்த ஆராய்ச்சி மையத்தின் வெற்றிக்கு, சமீபத்தில் ஹைதராபாத்தில் தொடங்கப்பட்ட மற்றொரு மையமே சான்று. கடந்த 5 ஆண்டுகளாக இந்தஆராய்ச்சி மையத்தின் இயக்குநராகப் பணியாற்றிவரும் வி.நடராஜன், இந்த தலைமுறை மாணவர்களுக்கு வழிகாட்டுபவராகத் திகழ்கிறார்.

விண்வெளியில் காஸ்மிக் கதிர்வீச்சு பாதிப்பைத் தடுக்கும் விண்வெளி கலங்களின் மீதான மேற்பூச்சு, எல்லையில் எதிரிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்படும் ஆளில்லா குட்டி விமானம், கடலில் எதிரிகளின் ஊடுருவலைக் கண்காணிக்க உதவும் சோனார் தொழில்நுட்பம் போன்றஆராய்ச்சிகள் அவருடைய தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள குக்கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, படித்த அவர், இன்றுஎட்டியிருக்கும் உயரம் அளப்பரியது. கடினமாக உழைத்தால் தடைகளை மீறி சாதிக்கலாம் என்பதை அந்த உயரம் உணர்த்துகிறது.

இந்த ஆராய்ச்சி மையம் விண்வெளி, மென்பொருள் மேம்பாடு, நானோ பொருட்கள் உற்பத்தி ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. இம்மையத்தின் விஞ்ஞானிகள் சென்னை ஐஐடியில் துணைபேராசிரியர்களாகவும் பணியாற்றுவதன் மூலம், மாணவர்களுக்கு ஆராய்ச்சிகளின் மேல் ஈர்ப்பையும் பிடிப்பையும் ஏற்படுத்துகின்றனர். ஆராய்ச்சிகளில் தனிப்பட்ட நபர்களை அல்லாமல், ஒட்டுமொத்த கல்வி நிறுவனத்தையே இந்த ஆராய்ச்சி மையம் பங்கேற்க வைத்திருக்கிறது. இதனால் மாணவர்கள், ஆசிரியர்கள் மாறினாலும், ஆராய்ச்சி தடையின்றி தொடர்வது உறுதிசெய்யப்படுகிறது.

---

3. பாலிசி கையேடு அச்சிட்டு டெலிவரி செய்ய – இந்திய தபால் துறையுடன் எல்ஐசி நிறுவனம் ஒப்பந்தம்

பாலிசி கையேடுகளை அச்சிட்டு சம்பந்தப்பட்ட நபர்களிடம் சேர்க்கும் வகையில் எல்ஐசி நிறுவனமும் இந்திய தபால் துறையும் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. இதுதொடர்பாக எல்ஐசி (ஆயுள் காப்பீட்டு கழகம்)வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

எல்ஐசியின் பாலிசி கையேடுகளை (புக்லெட்) அச்சிட்டு, சம்பந்தப்பட்ட பாலிசிதாரர்களின் முகவரியில் கொண்டு சேர்க்கும் வகையில் இந்திய தபால் துறையுடன் 'பிரின்ட் டு போஸ்ட் சொல்யூஷன்' என்ற ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தம்மும்பையில் உள்ள எல்ஐசி தலைமையகத்தில் எல்ஐசி, அஞ்சல் துறை உயர் அதிகாரிகள் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது.

---

4. சேதி தெரியுமா?

செப்.19: திருக்குறளை இந்தியில் மொழிபெயர்த்த டி.இ.எஸ். ராகவன், தாகூரின் 'கோரா' நாவலைத் தமிழில் மொழிபெயர்த்த கா.செல்லப்பன் ஆகியோர் 2020–ஆம் ஆண்டு மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

செப்.20: பஞ்சாப் மாநிலத்தின் புதிய முதல்வராக சரண்ஜித் சிங் சன்னி பொறுப்பேற்றார். முன்னதாக உட்கட்சிப் பிரச்சினை காரணமாக கேப்டன் அம்ரீந்தர் சிங் முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார்.

செப்.21: ஜப்பானைச் சேர்ந்த 107 வயதான இரட்டைச் சகோதரிகள் உமேமோ சுமிம்மா, கவுமே கோடமா ஆகியோர் உலகின் மிக வயதான இரட்டையர்கள் என்று கின்னஸ் அமைப்பு அங்கீகரித்துள்ளது.

செப்.21: கனடா நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்கவைத்தது. ஜஸ்டின் ட்ரூடோ 2015 முதல் அந்நாட்டுப் பிரதமராக இருந்துவருகிறார்.

செப்.22: சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாக மதுரையில் மகாத்மா காந்தி கோட், சூட் அணிவதைத் துறந்து, அரையாடைக்கு மாறிய நிகழ்வின் நூற்றாண்டு நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

செப்.22: தமிழகத்தில் காலியாக இருந்த இரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான இடைத் தேர்தலில் திமுக வேட்பாளர்கள் கனிமொழி, ராஜேஷ்குமார் ஆகியோர் போட்டியின்றித் தேர்வா யினர். புதுச்சேரியில் முதன் முறையாக பாஜகவைச் சேர்ந்த செல்வகணபதி மாநிலங்களவை எம்.பி.யானார்.

செப்.23: தமிழகத்தின் கோவளம், புதுச்சேரியின் ஏடென் ஆகிய கடற்கரைகள் உலகப் புகழ்பெற்ற நீலக்கொடிச் சான்றிதழைப் பெற்றன. இதன் மூலம் இந்தியாவில் இச்சான்றிதழைப் பெற்ற கடற்கரைகளின் எண்ணிக்கை பத்தாக உயர்ந்தது.

செப்.23: தோகாவில் நடைபெற்ற ஸ்னூக்கர் உலகக் கோப்பை சாம்பியன் பட்டத்தை இந்தியாவின் பங்கஜ் அத்வானி வென்றார். இது அவர் வெல்லும் 24-ஆவது பட்டமாகும்.

செப்.24: பெருளாதாரத்தில் பின்தங்கிய உயர் வகுப்பினருக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க, உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.

செப்.25: இந்திய விமானப் படையின் தளபதி பதவுரியா ஓய்வுபெற உள்ள நிலையில், புதிய தளபதியாக விவேக் ராம் சவுத்ரி நியமிக்கப் பட்டுள்ளார்.

---

5. அறியப்படாத சுற்றுலா இடங்களைப் பிரபலப்படுத்த 'தமிழ்நாட்டைக் கண்டு மகிழ்வோம்' நிகழ்ச்சி

உலக சுற்றுலாத் தினத்தை முன்னிட்டு சென்னை தீவுத்திடலில், 'தமிழ்நாட்டைக் கண்டு மகிழ்வோம்' என்ற நிகழ்ச்சியை, சுற்றுலாத்துறை அமைச்சர் மதிவேந்தன் திங்கள்கிழமை தொடக்கி வைத்தார். சமூக வலைதள ஆர்வலர்கள் மூலம் தமிழகத்தில் அறியப்படாத சுற்றுலாத்தலங்களை மக்களுக்கு தெரியப்படுத்தும் முயற்சியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை இறங்கியுள்ளது

அந்த வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பேருந்து மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு 10 போர் கொண்ட சமூக ஊடகவியலாளர்கள் (நர்ஸ்ரீண்ஹப் ஙங்க்ண்ஹ ஐய்ச்ப்ன்ங்ய்ஸ்ரீங்ழ்ள் பங்ஹம்) பயணம் மேற்கொள்கின்றனர். இதற்கான வாகனத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் மதிவேந்தன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதையடுத்து அமைச்சர் மதிவேந்தன் செய்தியாளர்களிடம் கூறியது: 'சமூக வலைதளங்களில் சுற்றுலாத்துறையில் ஆர்வமுள்ள 10 போர் கொண்ட குழு, தமிழ்நாடு முழுவதும் அறியப்படாத ஒவ்வொரு சுற்றுலாத் தலங்களுக்கும் சென்று அந்த இடத்தின் வரலாற்றை புகைப்படங்கள், விடியோக்கள் மூலமாக தங்களின் சமூக வலைதள பக்கங்களில் பகிர உள்ளனர்'.

செப். 27 முதல் அக்டோபர் 6- ஆம் தேதி வரை இந்தக் குழு பயணம் மேற்கொள்ளவுள்ளனர். மக்கள் அறியாத சுற்றுலாத்தலங்களை வெளிக்கொண்டு வரும் முயற்சியே இந்த பயணத்தின் நோக்கமாகும். கரோனாவால் சுற்றுலாத்தலங்கள் நலிவடைந்துள்ளதால், அதனை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் கீழடியை சுற்றுலாத் தலமாக மாற்றுவதற்கு முதல்வர் நிதி அறிவித்திருக்கிறார். அதற்கானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றுலாத்துறைக்கென உள்ள செயலியை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார். இந்தநிகழ்ச்சியில், சுற்றுலாத் துறையின் முதன்மைச் செயலாளர் சந்திரமோகன், இயக்குநர் சந்தீப் நந்தூரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

6. 100-ஆவது நாளில் மின்னகம்: 3.50 லட்சம் புகார்களுக்கு தீர்வு

மின்னகம் தொடங்கப்பட்டு 100 நாள்களை எட்டிய நிலையில், 3.50 லட்சம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார். சென்னை, அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைமை அலுவலகத்தில், மின்னகம் திறந்து வைக்கப்பட்டு திங்கள்கிழமையுடன் நூறு நாள்கள் நிறைவடைந்துள்ளன. இதையொட்டி மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி நேரடியாக மின்னகத்தை திங்கள்கிழமை ஆய்வு செய்தார். மின்னகம் சிறப்பாக செயல்பட துறை சார்ந்த அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு அவர் ஆலோசனைகளை வழங்கினார்.

99 சதவீதம் புகார்களுக்குத் தீர்வு: பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது: தமிழகத்தில் உள்ள மின் நுகர்வோர் 24 மணி நேரமும் தங்களுடைய புகார்களைத் தெரிவிப்பதற்கு ஏதுவாக மின்னகத்தை (94987 94987) முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜூன் 20-ஆம் தேதி தொடக்கி வைத்தார். அன்று முதல் திங்கள்கிழமை வரை 3.53 லட்சம் புகார்கள் வரப்பெற்றுள்ளன. இதில் 3.50 லட்சம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. அதாவது, 99 சதவீதம் புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இதுதவிர இதுவரை 14.69 லட்சம் புகார்கள் மின் கட்டணம் தொடர்பாக வரப்பெற்றுள்ளன. மின்னகத்துக்கு மட்டும் 44,767 புகார்கள் வந்தன. இவை அனைத்துக்கும் தீர்வு காணப்பட்டுள்ளன.

4 மாதங்களுக்குள் 8,905 மின்மாற்றிகள்: கடந்த ஆட்சியில் மின் பராமரிப்புப் பணிகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற நிலையில், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் எந்த இடத்தில் மின் அழுத்தம் அதிகம், குறைவு என்பதை அறிய 8,905 இடங்கள் கணக்கெடுக்கப்பட்டன. இதுவரை 2 ஆயிரம் மின்மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளன. 4 மாத காலத்துக்குள் திட்டமிட்டபடி புதிய மின்மாற்றிகள் பொருத்தப்படும்.

பருவமழை - 1 லட்சம் மின்கம்பங்கள் தயார்: இந்த பருவமழையைப் பொருத்தவரை, தடையற்ற மின் விநியோகம் வழங்க முதல்வர் அறிவுறுத்தியுள்ளார். அவ்வாறு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்காக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் கையிருப்பில் உள்ளன. தேவையான உபகரணங்களும் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன. எந்த இடங்களில் இடர்பாடு வருகிறதோ அதை உடனடியாக நிவர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு அந்தந்த மாவட்டங்களில் ஆட்சியர்களுடன் சேர்ந்து மின்வாரிய அதிகாரிகள் ஒன்றிணைந்து பணி செய்ய உள்ளனர்.

தமிழகத்தில் மொத்தம் உள்ள 3 லட்சத்து 63,000 மின்மாற்றிகளில் ஏற்படும் பழுதை மின்வாரியம் அறியும் வண்ணம் டிடி மீட்டர் அமைக்கும் பணிகள், ரூ.1270 கோடி மதிப்பீட்டில் நடைபெற இருக்கின்றன. அனைத்து மின்இணைப்புதாரர்களுக்கும் அவர்களே அவர்களுடைய மின்அளவீட்டை பார்த்துக் கொள்ளும் வகையில் ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணிகளும் டிடி மீட்டர் பொருத்தும் பணி நிறைவடைந்தவுடன் தொடங்கப்படும். விரைவில் மின்வாரியத்தில் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். கொருக்குப்பேட்டை சாலையில் 500 மீட்டருக்குள் 7 டாஸ்மாக் மதுபான கடைகள் அமைந்துள்ள விவகாரம் குறித்து அறிக்கைகள் வரப்பெற்றுள்ளன. புதன்கிழமை அறிக்கையின்படி கடைகள் அகற்றப்படும் என்றார் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி.

---

7. அமெரிக்க கடற்படையில் முதல் முறை:சீக்கிய அதிகாரிக்கு தலைப்பாகை அணிய அனுமதி

அமெரிக்க கடற்படையில் பணியாற்றும் 26 வயது சீக்கிய அதிகாரிக்கு தலைப்பாகை அணிய சில கட்டுப்பாடுகளுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 246 ஆண்டு வரலாற்றைக் கொண்ட கடற்படையில் இந்த சிறப்பு அனுமதியைப் பெறும் முதல் நபர் இவர் ஆவார். இது தொடர்பாக 'நியூயார்க் டைம்ஸ்' வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டிருப்பது: அமெரிக்க கடற்படையில் பணிபுரியும் சீக்கியரான சுக்பீர் தூர் கடந்த ஐந்து ஆண்டுகளாக காலையில் சீருடை அணிவது வழக்கம். இந்நிலையில் சீக்கியர் என்ற முறையில் தலைப்பாகை அணியும் அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து அவர் கடந்த வியாழக்கிழமை தலைப்பாகையும் அணிந்து கொண்டார்.

அமெரிக்க கடற்படையின் 246 ஆண்டு வரலாற்றில் இதுவரை இதுபோன்ற சிறப்பு அனுமதிகள் அளிக்கப்பட்டதில்லை. எனினும், அண்மையில் கேப்டனாக பதவி உயர்வு அளிக்கப்பட்ட பின், தலைப்பாகை அணிய அனுமதி கிடையாது என்ற நிலையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய தூர் முடிவு செய்தார். அவருக்கு ஜூன் மாதம் அளிக்கப்பட்ட பதிலில் அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவே தெரிவிக்கப்பட்டது. அப்படையின் தளபதி அளித்த பதிலில் 'இவ்வாறு ஒரு தனிநபர் தனது மத அடையாளத்தை வெளிப்படுத்துவதை அனுமதிப்பது கடற்படையில் ஒழுக்கத்தையும் அர்ப்பணிப்பு உணர்வையும் சீர்குலைத்து விடும். படைகள் மீதான நாட்டின் நம்பிக்கையையும் அது சீரழித்து விடும். தாக்குதல் திறனையும் அது குறைத்து விடும்' என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், சுக்பீர் தூர் தலைப்பாகை அணிவதற்கு கடந்த வியாழக்கிழமை சில கட்டுப்பாடுகளுடன் அனுமதி அளிக்கப்பட்டது. அதாவது வழக்கமான பணியிடங்களில் அவர் தலைப்பாகை அணியலாம். ஆனால் போர் நடக்கும் ஒரு பகுதியில் பணிபுரியும்போதோ, ராணுவ விழா

போன்றவற்றில் பங்கேற்கும்போதோ அவா' தலைப்பாகை அணியக் கூடாது. இந்த விவகாரம் தொடா'பாக சுக்பீர்' தூா' கூறுகையில் 'தலைப்பாகை அணியும் உரிமையைப் பெற்றிருக்கும் விவகாரத்தில் நீண்ட தூரத்தைக் கடந்து வந்துள்ளோம். இன்னும் நிறைய தூரம் செல்லவேண்டியுள்ளது. கட்டுப்பாடுகளுடன் தலைப்பாகை அணிய அனுமதி அளித்திருப்பதை எதிா'த்து மேல்முறையீடு செய்துள்ளேன். முழுமையான அனுமதி கிடைக்காவிட்டால் கடற்படையை எதிா'த்து வழக்கு தொடா'வேன்' என்று தெரிவித்தாா'. இதனிடையே, அமெரிக்க ராணுவம், விமானப்படையில் பணியாற்றும் சுமாா' 100 சீக்கியா'கள் முழுமையாக தாடி வைத்தும் தலைப்பாகை அணிந்தும் பணியாற்றுகின்றனா'.

---

8. புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் தேங்காய் நீர் பிரசாதம் வழங்கும் திட்டம் துவக்கம்

இந்தியாவிலேயே முதன்முறையாக பிரசித்திபெற்ற புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் பக்தர்களுக்கு தேங்காய் தண்ணீர் பிரசாதமாக வழங்கும் கருவியை மத்திய இணை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் தொடங்கி வைத்தார்.

தஞ்சாவூர் அருகே புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் உடைக்கப்படும் தேங்காயிலிருந்து வெளியாகும் தண்ணீர் வீணாவதை தடுக்கும் விதமாக, இந்திய உணவு பதன தொழில்நுட்ப கழகம் சார்பில், வீணாகும் தேங்காய் தண்ணீரை பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கும் நவீன கருவி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதனை மத்திய உணவு பதப்படுத்துதல் மற்றும் தொழிற்சாலைகள் மற்றும் நீர்வளத்துறை துறை மத்திய இணை அமைச்சர் பிரகலாத் சிங் பட்டேல் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்திய உணவு பயிர் பதன கழக இயக்குனர் அனந்த ராமகிருஷ்ணன், கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே, இந்து சமய அறநிலையத் துறை உதவி கமிஷனர் கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோவிலில் நேர்த்திக்கடனாக உடைக்கப்படும் தேங்காயில் இருந்து வெளியேறும் தண்ணீரை சுத்திகரித்து பக்தர்களுக்கு வழங்கப்படும். இந்தியாவிலேயே முதல்முறையாக இந்தக் கருவி புன்னைநல்லூர் மாரியம்மன் கோவிலில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ஏழு லட்சம் ரூபாய். இதில், தேங்காய் தண்ணீரை சுத்திகரித்து, 50 லிட்டர் வரை நீரை சேமித்து வைத்து பக்தர்களுக்கு வழங்கப்படும் என இந்திய உணவு பதன கழகம் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

9. 'ஆகாஷ் பிரைம்' ஏவுகணை சோதனை வெற்றி

நிலத்திலிருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் 'ஆகாஷ் பிரைம்' ஏவுகணை சோதனை ஒடிசாவில் வெற்றி பெற்றது. ஒடிசாவின் சந்திப்பூரில் பரிசோதனைக்காக ஏவப்பட்ட ஏவுகணை வெற்றிகரமாக இலக்கைத் தாக்கி அழித்ததாக மத்திய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. 'ஆகாஷ் பிரைம்' ஏவுகணை ஆளில்லா விமானங்களைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டது. இந்த ஏவுகணையை மேம்படுத்தியபின், விமானத்தில் இருந்து பரிசோதிக்க மத்திய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

---

1. 2020ஆம் ஆண்டுக்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது பெற்ற பிரிக் S V சரஸ்வதியுடன் தொடர்புடையது எது?

அ) அரசியல்வாதி



ஆ) செவிலியர் ☑

இ) காவல்

ஈ) அறிவியலாளர்

✓ இராணுவ செவிலியர் சேவைகளின் துணை இயக்குநர் ஜெனரல் – பிரிக் S V சரஸ்வதிக்கு தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது – 2020 வழங்கப்பட்டுள்ளது. தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது என்பது தன்னலமற்ற சேவைக்காக செவிலியர்களுக்கு வழங்கப்படும் ஒரு மிகவுயர்ந்த தேசிய விருதாகும்.

✓ படையினர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு நர்சிங்கில் அவர் செய்த குறிப்பிடத்தக்க சேவைக்காக, அவருக்கு பொது அதிகாரி கமாண்டிங்–இன்–சீஃப் பாராட்டு (2005), ஐக்கிய நாடுகள் பதக்கம் (MONOC) (2007) மற்றும் இராணுவத் தலைவர் பாராட்டு (2015) ஆகியன வழங்கப்பட்டது.

---

2. 2021ஆம் ஆண்டின் "Freedom on the Net" அறிக்கையில், முதல் இடத்தில் உள்ள நாடு எது?

அ) நோர்வே

ஆ) ஐஸ்லாந்து ☑

இ) ஜெர்மனி

ஈ) பின்லாந்து

✓ ஆண்டுதோறும் வெளியிடப்படும் "இணையத்தில் சுதந்திரம்" அறிக்கை அமெரிக்க சிந்தனைக்குழுவான பிரீடம் ஹவுஸால் வெளியிடப்பட்டது. இவ்வாண்டுக்கான (2021) அறிக்கையின்படி, ஐஸ்லாந்து தரவரிசையில் முதலிடத்தைப்பிடித்தது.

✓ எஸ்டோனியா மற்றும் இணைய அணுகலை மனித உரிமையாக அறிவித்த உலகின் முதல் நாடான கோஸ்டாரிகா ஆகியவை இரண்டாம் இடத்தைப் பிடித்தன. மியான்மர் மற்றும் பெலாரஸில் நிகழ்ந்த இணைய முடக்கம், தொடர்ச்சியாக 11ஆவது ஆண்டாக ஆன்லைன் உரிமைகள் உலகளவில் குறைந்துவிட்டதைக் காட்டுகிறது.

---

3. 'இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள்' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) ப்ளூம்பெர்க் இந்தியா

ஆ) NITI ஆயோக் ☑

இ) உலக வங்கி

ஈ) யுனிசெஃப்

✓ இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை NITI ஆயோக் சமீபத்தில் வெளியிட்டது. இந்த அறிக்கைக்கு, "இந்தியாவில் நகர்ப்புற திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள்" என்று பெயரிடப்பட்டது.

✓ இந்த அறிக்கை NITI ஆயோக், சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் மற்றும் நகர்ப்புற மற்றும் பிராந்திய திட்டமிடல் துறையில் நிபுணர்களுடன் கலந்தாலோசித்து உருவாக்கப்பட்டுள்ளது. இது 9 மாத காலப்பகுதியில் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் முடிவை அளிக்கிறது. இந்தியாவில், நகர்ப்புற திட்டமிடல் திறன் மதிப்புச் சங்கிலியில் உள்ள தடைகளைத் தீர்க்க இந்த அறிக்கை பல்வேறு பரிந்துரைகளைத் தருகிறது.

---

4. உலக காண்டாமிருக நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) செப்டம்பர் 22 ☑



ஆ) செப்டம்பர் 23

இ) செப்டம்பர் 24

ஈ) செப்டம்பர் 25

✓ காண்டாமிருகம் அழிவின் விளிம்பிலுள்ள ஓர் உயிரினமாகும். அவற்றை காப்பதற்கான முயற்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்ட, உலக காண்டாமிருக நாள், கடந்த 2010ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் செப்.22 அன்று கொண்டாடப்படுகிறது. இந்திய காண்டாமிருகம் என்றும் அழைக்கப்படும் ஒற்றைக்கொம்பு காண்டாமிருகத்தை IUCN அழிவாய்ப்பு நிலையிலுள்ள இனமாக பட்டியலிடுகிறது.

---

5. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'நீலப்புரட்சி'யுடன் தொடர்புடைய தயாரிப்பு எது?

அ) நறுமணப் பயிர்கள் ☑



ஆ) தோட்டக்கலை பயிர்கள்

இ) பால் பொருட்கள்

ஈ) கோழிப் பொருட்கள்

✓ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சரான ஜிதேந்திர சிங், விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக ஜம்மு – காஷ்மீருக்கான ஒருங்கிணைந்த நறுமணப்பால் தொழில்முனைவு திட்டத்தை முன்மொழிந்தார்.

✓ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் CSIRமூலம் ஏற்கனவே தொடங்கப்பட்ட அரோமா இயக்கத்துடன் இவற்றைத்திறம்பட ஒருங்கிணைக்க முடியும் என்று பரிந்துரைத்தார். "லாவெண்டர் அல்லது நீலப்புரட்சி" என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது "அரோமா இயக்கம்" ஐரோப்பாவைச் சேர்ந்த பயிரை ஜம்மு – காஷ்மீரின் டோடா, கிஷ்ட்வார் மற்றும் ரஜோரி மாவட்டங்களில் CSIR–IIIM அறிமுகப்படுத்தியுள்ளன.

---

6. மாற்றுத்திறனாளிகளுக்கு தேர்தல் தொடர்பான உரிமைகளை உறுதிசெய்வதற்கான சட்ட ஆணையை வழங்குகிற சட்டம் எது?

அ) மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1951

ஆ) மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 ☑

இ) தேர்தல் விதிகளின் நடத்தை, 1961

ஈ) தேர்தல் சட்டங்கள் (திருத்தம்) சட்டம், 2003

✓ மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016 ஆனது மாற்றுத்திறன் கொண்டவர்கள் அனைத்து வாக்குச்சாவடிகளையும் அணுகுவதை உறுதிசெய்வதற்கான சட்ட ஆணையை வழங்குகிறது. தேர்தல் செயல்முறை தொடர்பான அனைத்து தகவல்களும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியவை மற்றும் பயன்படுத்தக்கூடியவையாகும்.

✓ இந்திய தேர்தல் ஆணையமானது சமீபத்தில் 'அணுகக்கூடிய தேர்தல்கள்–ள் 2021' பற்றிய ஒரு மெய்நிகர் தேசிய மாநாட்டை ஏற்பாடு செய்தது. நம்நாட்டில் சுமார் 77.4 லட்சம் மாற்றுத்திறனாளிகள் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களாக உள்ளனர்.

---

7. எந்த நாட்டோடு இணைந்து, 'ரேபிட் டிரைடென்ட் – 2021' என்ற இராணுவப் பயிற்சியை NATO தொடங்கியுள்ளது?

அ) உக்ரைன் ☑



ஆ) சூடான்

இ) நார்வே

ஈ) தான்சானியா

✓ 2021 செப்டம்பர் 20 அன்று உக்ரைன், அமெரிக்கா மற்றும் பிற நேட்டோ படைகளுடன் கூட்டு இராணுவப் பயிற்சிகளைத் தொடங்கியது. அதே வேளையில், அண்டை நாடுகளான ரஷ்யாவும் பெலாரஸும் மிகப்பெரிய அளவிலான பயிற்சிகளை நடத்தின, இது மேற்குலகின் விழிப்புணர்வை தூண்டும் விதமாக உள்ளது. இந்தப் பயிற்சி அக்டோபர்.1 வரை தொடரும்.

---

8. ஜஸ்டின் ட்ரூடோ, 3ஆவது முறையாக எந்த நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?

அ) ஆஸ்திரேலியா



ஆ) நியூசிலாந்து

இ) ஜெர்மனி

ஈ) கனடா ☑

✓ கனடாவின் லிபரல் கட்சித்தலைவரான ஜஸ்டின் ட்ரூடோ மூன்றாவது முறையாக அந்த நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 2015 முதல் ஆட்சியில் இருந்து வருகிறார். 6 ஆண்டுகளில் 3 தேர்தல்களில் அவர் வெற்றிபெற்றுள்ளார்.

---

9. விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் (CEPA) குறித்து எந்த நாட்டுடன் இந்தியா முறையாக பேச்சுவார்த்தை நடத்தியது?

அ) அமெரிக்கா

ஆ) சீனா

இ) பிரேசில்



ஈ) UAE ☑

- ✓ ஐக்கிய அரபு அமீரகமானது (UAE) 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் 3ஆவது பெரிய வர்த்தக பங்காளியாக உள்ளது. வர்த்தக மதிப்பு தற்போது $59 பில்லியன் டாலர்களாக உள்ளது.
- ✓ UAE, அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியாவின் 2ஆவது பெரிய ஏற்றுமதி இடமாக உள்ளது. சமீபத்தில், இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆகியவை ஒரு விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தையை முறையாக தொடங்கின.

10.பின்வரும் எந்த நோக்கத்தை அடைய "முதலீட்டாளர்கள் மற்றும் வணிகங்களுக்கான தேசிய ஒற்றைச்சாளர அமைப்பு" தொடங்கப்ப –ட்டுள்ளது?

அ) ஒப்புதல் மற்றும் அனுமதிக்கான ஒற்றைச்சாளரம் ☑

ஆ) வரி தள்ளுபடி கோருதல்

இ) GST தரவு உள்ளீடு



ஈ) குறைதீர்பு

- ✓ இந்திய அரசு சமீபத்தில் "முதலீட்டாளர்கள் மற்றும் வணிகங்களுக்கான தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை" அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ முதலீட்டாளர்களுக்கான ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளை வழங்கும் ஒரே இடமாக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு திகழும். 18 மத்திய துறைகள் மற்றும் 9 மாநிலங்களுக்கான ஒப்புதல்களை இந்தத் தளம் தற்போது வழங்கிவரும் நிலையில், இன்னுமொரு 14 மத்திய துறைகள் மற்றும் 5 மாநிலங்கள் 2021 டிசம்பருக்குள் இணைக்கப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவராக எஸ்.கே. ஹல்தர் நியமனம்:

காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் முழு நேர தலைவராக, மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவராக உள்ள எஸ்.கே. ஹல்தர் நியமிக்கப்பட்டுள்ளார். கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையம் அமைக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து மத்திய அரசு கடந்த 2018 ஜூன்.1 அன்று காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவரே இந்த ஆணையத்தின் தற்காலிக ஆணையராக செயல்பட்டு வந்தார். இதனால் கடந்த 2018ஆம் ஆண்டு டிசம்பரில் தமிழக அரசு காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு முழு நேர தலைவரை நியமிக்குமாறு உச்சநீதிமன்றத்தில் முறையிட்டது.

மத்திய நீர்வள ஆணையத்தின் தலைவரான எஸ் கே ஹல்தர் கடந்த ஜனவரியில் காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையத்தின் இடைக்கால தலைவராக நியமனம் செய்யப்பட்டார். இவரது பதவிக்காலம் வரும் 30 ஆம் தேதியுடன் நிறைவடைவதால் காவிரி மேலாண் ஆணையத்துக்கு முழு நேரத் தலைவரை நியமிப்பது தொடர்பாக மத்திய அரசு பரிசீலித்து வந்தது. இந்நிலையில் நேற்று மத்திய பணியாளர் மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், "காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் முழு நேர தலைவராக சவுமித்ரா குமார் ஹல்தர் நியமிக்கப்படுகிறார். 5 ஆண்டுகளுக்கு அல்லது அடுத்த உத்தரவு வரும் வரை இவர் தலைவராக செயல்படுவார்.

இவர்வரும் நவ.30 பணியில் இருந்து ஓய்வுபெற்றாலும், ஆணையத்தின் தலைவராக நீடிப்பார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

2. பூச்சித் தொல்லை, பருவநிலை மாற்றத்தை தாங்கி வளரும் – நெல், கோதுமை, தானியம் உட்பட 35 புதிய பயிர் வகைகள் அறிமுகம் : பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்

பூச்சித் தொல்லை, பருவநிலை மாற்றத்தை தாங்கி வளரும், ஊட் டச்சத்து நிறைந்த நெல், கோதுமை, சிறுதானியங்கள் உள்ளிட்ட 35 புதிய பயிர் வகைகளை பிரதமர் நரேந்திர மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். பூச்சித் தொல்லை, பருவ நிலையை தாங்கி வளரும், ஊட்டச் சத்து நிறைந்த 35 புதிய பயிர் வகைகளை இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஏஆர்) உருவாக்கியுள்ளது. நெல், கோதுமை, சோயாபீன், சோளம் உள்ளிட்ட இந்த பயிர் வகைகளின் அறிமுக விழா காணொலி வாயி லாக நேற்று நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று புதிய பயிர்களை நாட்டுக்கு அர்ப்பணித்தார். அப்போது அவர் பேசியதாவது:

பருவநிலை மாற்றம், புதிய வகை பூச்சிகள், புதிய நோய்கள், தொற்று நோய்கள் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகின்றன. இதன் காரணமாக மனிதர்கள், கால்நடைகள், பயிர்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த சவால்களை எதிர்கொள்ள அறிவியல் ஆராய்ச்சி அவசியமாகிறது.

அறிவியல், அரசு, சமூகம் இணைந்து செயல்பட்டால் மட்டுமே இத்தகைய சவால்களை சமாளிக்க முடியும். நாடு முழுவதும் பூச்சிகளால் பயிர் சாகுபடி கடுமையாக பாதிக்கப் படுகிறது. பல்வேறு மாநிலங்களில் வெட்டுக்கிளி தீராத பிரச்சினையாக நீடிக்கிறது. இதன்காரணமாக விவ சாயிகள் பேரிழப்பை சந்திக்கின்றனர். இதை தடுக்க விவசாயிகளும் விஞ்ஞானிக –ளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

கடந்த 7 ஆண்டுகளாக வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பங் கள் புகுத்தப்பட்டு வருகின்றன. அதேநேரம் நமது பழங்கால வேளாண் மரபுகளும் கண்டிப்புடன் பின்பற்றப்படுகின்றன.

அந்த வகையில் பூச்சிகளை எதிர்த்து, பருவநிலை மாற்றங் களை தாங்கி வளரும் 35 புதிய பயிர் வகைகள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளன. இவை விவசாயி களுக்கு அதிக மகசூலை அளிக்கும். அதிக ஊட்டச்சத்து நிறைந்த உணவு தானியங்களாகவும் இருக்கும். வேளாண்மையில் புதுமைகளை கடைபிடிக்க விவசாயிகள் தயங்கக்கூடாது.

தேவைக்கு ஏற்ற பயிர் வகைகளை விளைவித்து, அவற்றை மதிப்பு கூட்டி விற்பனை செய்ய வேண்டும். பல ஆண்டுகளாக கிடப்பில் போடப்பட்டிருந்த 100 பாசன திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம்.

இதுவரை 11 கோடி மண் வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 2 கோடி கிசான் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள் ளன. குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. வானிலை நிலவரம் குறித்து விவசாயி களுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்படுகிறது. விவசாயி களுக்கு வங்கிக் கடன் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

புதிய நெல் வகைகள் காணொலி நிகழ்ச்சியின்போது, ராய்பூரில் உள்ள தேசிய உயிர் வாழ்வு நெருக்கடி மேலாண்மை நிறுவனத்தில் புதிதாக கட்டப் பட்ட வளாகத்தை பிரதமர் திறந்து வைத்தார். வேளாண் பல்கலைக்கழகங்களுக்கான பசுமை வளாக விருதையும் அவர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் பேசும்போது, "விவசாயிகள் சொந்த காலில் நிற்க வேண்டும் என்பதற்காக பி எம் கிசான் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது" என்றார். இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் இயக்குநர் ஏ கே சிங் பேசும்போது, "இந்த நெல் வகைகளுக்கு குறைந்த அளவு தண்ணீர் போதுமானது. ஊட்டச்சத்து நிறைந்த அதிக மகசூல் கிடைக்கும்" என்றார்.

---

3. ஈரோடு தமிழன்பன் உள்ளிட்ட 10 அறிஞர்களுக்கு – 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்' அறிவிப்பு :

ஈரோடு தமிழன்பன் உள்ளிட்ட 10 தமிழ் அறிஞர்களுக்கு 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகள்' அறிவிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்ட அறிவிப்பு: மத்திய செம்மொழித் தமிழாய்வுநிறுவனத்தில் முன்னாள் முதல்வர் கருணாநிதி, தனது சொந்த நிதியிலிருந்து ரூ. ஒரு கோடி வழங்கி,'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழாய்வு அறக்கட் டளை' யை நிறுவினார்.

ரூ.10 லட்சம் பரிசுத் தொகை அதன்படி, தொல்லியல், கல்வெட்டியல், நாணயவியல், இலக்கியம், மொழியியல், படைப்பிலக்கியம், இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு, நுண்கலைகள் உள்ளிட்டவையில் சிறந்த பங்களிப்பை வழங்கிய அறிஞர்களுக்கு ஆண்டுதோறும் 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' வழங்கப்படுகிறது. அதனுடன், இந்தியாவிலேயே அதிக தொகையாக ரூ.10 லட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும், கருணாநிதியின் உருவச்சிலையும் வழங்கப்படும். முதல்முறையாக, பின்லாந்து நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா–வுக்கு 2010–ம் ஆண்டு ஜூன் 23–ம் தேதி கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் வழங்கப்பட்டது

இந்நிலையில், 'கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது' 2010முதல் 2019–ம் ஆண்டு வரை 10 ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது. இதைத் தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலினால் அமைக்கப்பட்ட விருது தேர்வுக் குழுவினரால் 10 ஆண்டுகளுக்கும் சேர்த்து 10 அறிஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 2020, 2021, 2022–ம்ஆண்டுகளுக்கான 'கருணாநிதிசெம்மொழித் தமிழ் விருது' களுக்கான முன்மொழிவுகளைப் பெறவிளம்பரம் வெளியிட ஆட்சிக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்குரிய விருது,மாநில அளவிலான தமிழ்மொழி சார்ந்த விழாவில் விரைவில் வழங்கப்படவுள்ளது. மேலும் 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

---

4. காஞ்சிபுரம் மாவட்டம் – ஓரகடத்தில் ரூ.450 கோடியில் : மருத்துவ சாதனங்கள் உற்பத்தி பூங்கா : முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்

காஞ்சிபுரம் மாவட்டம் ஓரகடத்தில் ரூ.450 கோடியில் மருத்துவ சாதனங்கள் உற்பத்திப் பூங்கா அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் தொழிற்பூங்காக்களும், குறிப்பிட்ட தொழில்களுக்கான சிறப்புப் பூங்காக்களும் சிப்காட் நிறுவ னம் மூலம் அமைக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், இந்த நிதியாண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம் ஓரகடத்தில் சிப்காட் நிறுவனம் மூலம் மருத்துவ சாதனங்கள் உற்பத்திப் பூங்கா அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்தப் பூங்காவில், உட்கட்ட மைப்பு வசதிகள் ஏற்படுத்த நிதியுதவி வேண்டி, மத்திய அரசின் மருந்தியல் துறைக்கு தமிழக அரசு சார்பில் கருத்துரு அனுப்பப்பட்டது. தமிழக அரசின் இந்தக் கோரிக்கையை ஏற்று, தற்போது தேசிய அளவில் நான்கு மருத்துவ சாதனங்கள் உற்பத்திப் பூங்காக்களை அமைக்க, மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அரசு நிதியுதவி

இமாச்சலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசத்தை தொடர்ந்து, தமிழகத்தில் காஞ்சிபுரம் மாவட்டம் ஓரகடத்தில் மருத்துவ சாதனங்கள் உற்பத்திப் பூங்கா அமையும். இங்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற் படுத்த, அதிகபட்சமாக ரூ.100 கோடி நிதியுதவியை மத்திய அரசு வழங்கும்.

ஓரகடம் சிப்காட் தொழிற் பூங்காவில் 350 ஏக்கர் பரப்பில், சுமார் ரூ.450 கோடி திட்ட மதிப்பில், அடிப்படைக் கட்டமைப்புகள், ஆய்வுக் கூடங்கள், முன்னோடி மாதிரி மையம், திறன் மேம்பாட்டு மையம் முதலியவற்றை உள்ளடக்கி, ஒரே குடையின்கீழ் பல்வேறு வசதிகள் கொண்ட பூங்காவாக இது அமையும். மருத்துவத் துறையின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், வெண்டிலேட்டர்கள், பி.பி. திரைகள் , பேஸ்மேக்கர்கள், அறுவைசிகிச்சை உபகரணங்கள், கண் மற்றும் பல் உள்வைப்புகள் உள்ளிட்டவற்றைத் தயாரிக்கும் தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் பூங்கா அமையும்.

10 ஆயிரம் பேருக்கு வேலை இது ரூ.3,500 கோடி முதலீடுகளை ஈர்ப்பதுடன், 10,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை வழங்கும். மருத்துவ சாதனங்கள் உற்பத்திக்கென பிரத்தியேகமாக அமைக்கப்படும் இந்தப் பூங்கா, சர்வதேச தரத்தில், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிப்காட் நிறுவனத்தால் உருவாக்கப்படும். மேலும், மருத்துவ சாதனங்கள் உற்பத்தியிலும் உலக அளவில் முக்கியமான உற்பத்தி மையமாக இது உருவாகும். இவ்வாறு முதல்வர் தெரிவித் துள்ளார்.

---

5. சென்னை எழும்பூரில் தமிழ்நாடு காவல் அருங்காட்சியகம் : முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்து பார்வையிட்டார்

சென்னை எழும்பூரில் தமிழ்நாடு காவல் அருங்காட்சியகத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார். சென்னை எழும்பூரில் உள்ளபாரம்பரியம் மிக்க பழைய காவல்ஆணையரக அலுவலகம், தமிழ்நாடு காவல் அருங்காட்சியகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 24 ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் 2 தளங்களாக உள்ள இக்கட்டிடத்தின் தரைதளத்தில் காவல் துறையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், சீருடைகள், வாத்திய இசைக் கருவிகள், காவல் துறையின் சாதனைகள், மீட்டெடுக்கப்பட்ட சிலைகள், கள்ளநோட்டு அச்சடிக்கும் இயந்திரம், வெடிகுண்டுகள், குண்டுகளை கண்டெடுக்க உதவும் கருவிகள்,மாதிரி சிறைச்சாலை ஆகியவையும், முதல் தளத்தில் பல்வேறு வகையான துப்பாக்கிகள், வாள்மற்றும் தோட்டாக்களும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலும், காவல் துறையில் சிறப்பாக பணி செய்தவர்களுக்கு வழங்கப்படும் பதக்கங்கள், முக்கிய வரலாற்று ஆவணங்கள், காவல் துறை தொடர்பாக அக்காலத்தில் இயற்றப்பட்ட அதிமுக்கிய அறிவிப்புகள், ஆங்கிலேயர் காலத்து காவல்துறையினர் பயன்படுத்திய ஆயுதங்கள், தமிழக காவல் துறையின் தொடக்க கால சீருடைகள், பெல்ட்,மோப்ப நாய் படைகளின் புகைப்படங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தித் தொகுப்புகள், காவல் ஆணையர் அலுவலக அறையில் இருந்த பழமையான பொருட்கள், அணிவகுப்பு சின்னங்கள், கம்பியில்லா தொலைதொடர்பு கருவிகள், காவல் துறை சேவை பதக்கங்கள், கலைப்பொருட்கள் ஆகியவையும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்த காவல் அருங்காட்சியகத்தை முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்து வைத்து பார்வையிட்டார். அருங்காட்சியகத்தை பார்வையிட வந்த பள்ளி மாணவ, மாணவிகளிடம் முதல்வர் கலந்துரையாடி, இனிப்புகளை வழங்கினார். பொதுமக்கள் நாளை (செப்.30)வரை கட்டணமின்றி அருங்காட்சியகத்தைப் பார்வையிடலாம். அக்.1–ம் தேதி முதல் குறைந்த அளவில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படும். இந்த நிகழ்ச்சியில், அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, உள்துறை செயலர் எஸ்.கே.பிரபாகர், டிஜிபி சைலேந்திர பாபு, சென்னை பெருநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால்,தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் ஏ.கே.விஸ்வநாதன், தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியக இயக்குநர் அ.அமல்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

6. மூத்த குடிமக்களுக்கான நாட்டின் முதல் இலவச உதவி எண் : 14567

மூத்த குடிமக்களுக்கான நாட்டின் முதல் இலவச உதவி எண் : 14567 வெளியிடப்பட்டுள்ளது. இது மூத்த குடிமக்களுக்குத் தேவையான தகவல்களையும், வழிகாட்டுதல்களையும் இலவசமாக வழங்குகிறது. 2050ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 20 சதவீதம் பேர் அதாவது 300 மில்லியனுக்கும் மேற்பட்டோர் மூத்த குடிமக்களாக இருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளுக்கான தேவை அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் சந்திக்கும் பிரச்னைகளையும், சவால்களையும் நிவர்த்தி செய்வதற்கு நாடு முழுவதுமான இலவச உதவி மைய எண் – 14567ஐ வெளியிட்டுள்ளது. இது முதியோர் உதவி எண் என அழைக்கப்படுகிறது. ஓய்வூதிய விஷயங்கள், சட்ட விஷயங்கள், உணர்வுப்பூர்வமான ஆதரவு போன்ற தகவல்களும், வழிகாட்டுதல்களும் இந்த உதவி எண் மூலம் இலவசமாக வழங்கப்படுகின்றன. துஷ்பிரயோக பிரச்சினைகள் இருந்தாலும், இந்த உதவி மையம் தலையிடுகிறது. வீடுகள் இன்றி தவிக்கும் முதியோரையும் இந்த உதவி மையம் மீட்கிறது.

அனைத்து குடிமக்களுக்கும் தேவையான தகவல்களையும், அன்றாட பிரச்னைகளுக்கான வழிகாட்டுதல்களையும் வழங்குவதே இந்த முதியோர் உதவி எண்ணின் நோக்கமாகும். .டாடா அறக்கட்டளை அமைப்பின் முயற்சியில், விஜயவாஹினி அறக்கட்டளையுடன் இணைந்து தெலங்கானா அரசு ஒத்துழைப்புடன் ஐதராபாத்தில் உள்ள முதியோர்களுக்கு உதவ கடந்த 2017ஆம் ஆண்டு இந்த முதியோர் உதவி மைய எண் தொடங்கப்பட்டது. இன்று, இந்த முதியோர் உதவி எண்ணை நாடு முழுவதும் செயல்படுத்த டாடா அறக்கட்டளையும், என்எஸ்இ அறக்கட்டளையும் மத்திய அரசுடன் தொழில்நுட்பப் பங்குதாரராக இணைந்துள்ளது.

---

7. லட்சுமி தேவி உருவம் பொறித்ததங்கக் கட்டிகளை வெளியிடுகிறது பிரிட்டன்

ஹிந்து கடவுளான லட்சுமி தேவி உருவம் பொறித்த தங்கக் கட்டிகளை பிரிட்டன் ராயல் நாணய வாா்ப்பகம் வெளியிட இருக்கிறது. தீபாவளிப் பண்டிகையின்போது இந்த தங்கக் கட்டிகள் விற்பனைக்கு வரவுள்ளன. ராயல் நாணய வாா்ப்பகம் பிரிட்டன் அரசு நிறுவனமாகும். அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு தங்கக் கட்டிகளை ஏற்றுமதி செய்யும் இந்த நிறுவனம் 1,100 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படும் பாரம்பரியத்தைக் கொண்டது. பிரிட்டன் அரசு நாணய வாா்ப்பகம் ஹிந்து கடவுள் உருவம் பொறித்த தங்கக் கட்டிகள் வெளியிடுவது இதுவே முதல்முறையாகும். பிரிட்டன் கார்டிஃப் நகரில் உள்ள ஸ்வாமி நாரயண் கோயிலுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு இந்த பிரத்யேக தங்கக் கட்டிகளை பிரிட்டன் ராயல் நாணய வாா்ப்பகம் வெளியிட இருக்கிறது.

இதனை பிரிட்டன் ராயல் மிண்ட் வடிவமைப்பாளர் எம்மா நோபிள் வடிவமைத்துள்ளார். லட்சுமி உருவம் பொறித்த ஒவ்வொரு தங்கக்கட்டியும் 20 கிராம் எடை கொண்டவை. இதன் விலை உள்ளூரில் ஒரு தங்கக் கட்டிக்கு 1,080 பவுண்ட் (சுமார் ரூ.1.08 லட்சம்) நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பல தரப்பட்ட நாடுகளின் கலாசாரத்தை கௌரவிக்கும் வகையிலும், கலாசார ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் இந்த தங்கக் கட்டிகளை வெளியிடுவதாக பிரிட்டன் ராயல் நாணய வாரியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த வாரியத்தின் நாணயங்கள் பிரிவு இயக்குநர் ஆண்ட்ரூ டிக்கி கூறுகையில், 'தீபாவளிப் பண்டிகையின்போது தங்கத்தைப் பரிசளிப்பது பாரம்பரியமாகவும், உயர்ந்ததாகவும் கருதப்படுகிறது. இந்த ஆண்டு அழகு மற்றும் பாரம்பரியத்துடன் தங்கக் கட்டியை வெளியிடத் தீர்மானித்தோம். அதில் ஹிந்துக்களின் செல்வக் கடவுள் இடம் பெறுவதும் சரியான தேர்வாக இருக்கும் என முடிவு செய்தோம். இதனை எங்கள் வலைதளம் வழியாக வாங்க முடியும். இந்த நாணயம் 'ஓம்' என்ற பிரணவச் சொல் பொறித்து வடிவமைக்கப்பட்ட பிரத்யேகப் பெட்டியில் வைத்து வழங்கப்படும்' என்றார்.

---

8. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு 3 தேசிய விருதுகள்

தேசிய உயர்கல்வித் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் நடத்திய போட்டிகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துக்கு பசுமை மற்றும் தூய்மையான வளாகம் உள்பட 3 தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய அளவில் தோட்டக்கலை, வனவியல் மற்றும் மத்திய, மாநில வேளாண் பல்கலைக்கழகங்களுக்கு தேசிய உயர்கல்வித் திட்டத்தின் கீழ் பசுமை மற்றும் தூய்மை வளாக போட்டி இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் சார்பில் 2020 அக்டோபரில் நடத்தப்பட்டது. இதில் வீணாக தூக்கி எரியப்படும் பொருள்களை மறுசுழற்சி செய்து கையாளுதல், தினசரி மின் தேவைகளுக்கு புதுப்பிக்கல்ல ஆற்றல் மூலங்களை பயன்படுத்துதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களை வாங்குதல் ஆகியவற்றில் பல்கலைக்கழகங்களின் ஈடுபாடு ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டது.

மேலும் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள தோட்டத்தின் பரப்பளவு, கழிவு மேலாண்மை, நீர்ப் பாதுகாப்பு, ஆற்றல் சேமிப்பு நடைமுறைகள், பாடங்கள், திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுற்றுச்சூழல் அக்கறை குறித்த பட்டறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கல்வி நிறுவனங்கள் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதில் மாநில மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பங்கேற்று 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதற்கு ரொக்கப் பரிசாக ரூ.8 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. தவிர தேசிய அளவில் நடைபெற்ற வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் முதுகலை படிப்பிற்கான ஊக்கத்தொகைக்கான போட்டித் தேர்வில் தேசிய அளவில் தோட்டக்கலை வனவியல் பிரிவு, வேளாண் பொறியியல் துறையில் அதிக மாணவர்கள் தேர்ச்சி பெற்று இரண்டு துறை மாணவர்களும் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளனர். 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்ச்சிப் பெற்று சாதனைப் படைத்துள்ளனர்.

இந்நிலையில், புதுதில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் மற்றும் மாநில வேளாண் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர் கூட்டத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துக்கான தேசிய விருதுகளை துணைவேந்தர் நீ.குமாரிடம், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத் தலைவர் திரிலோச்சன் மொஹபத்ரா வழங்கினார். முன்னதாக பசுமை மற்றும் தூய்மையான வளாக விருதுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தேர்வு செய்யப்பட்ட விவரத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார் என்று பல்கலைக்கழக நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

9. இயற்கை சீற்றங்களின்போது உதவ 350 மாவட்டங்களில் பேரிடர் நண்பர் குழு: அமித்ஷா அறிவிப்பு

இயற்கை பேரிடர்களின்போது உடனடியாக சென்று முதல் கட்ட மீட்பு பணிகளில் ஈடுபடுவதற்காக, நாடு முழுவதும் 350 மாவட்டங்களில் 'பேரிடர் நண்பர்கள் குழு' வை ஒன்றிய அரசு ஏற்படுத்த உள்ளது. டெல்லியில் நேற்று நடைபெற்ற தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் 17வது தொடக்க விழாவில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசியதாவது: நாட்டில் எந்த இடத்தில் இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டாலும், முதல் ஆளாக சென்று பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காகவும், உதவிகள் செய்வதற்காகவும் நாடு முழுவதும் 350 மாவட்டங்களில், 'பேரிடர் நண்பர்கள் குழு' அமைக்கப்படும். இவர்களுக்கு 'ஆப்த மித்ரா' திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படும். கொரோனாவை எதிர்த்து மற்ற நாடுகளை விட, 130 கோடி மக்கள்தொகையை கொண்ட இந்தியா சிறந்த முறையில் போராடியது.

பெருந்தொற்று காலத்தில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பணி பாராட்டுக்குரியது. கொரோனா காலத்தில் சில பகுதிகளில் புயல் பாதிப்பு ஏற்பட்டது. அந்த நேரத்தில் சிறந்த திட்டமிடுதல் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் ஒரு ஆக்சிஜன் உற்பத்தி ஆலை கூட சேதமாகவில்லை. அதே போன்று மருத்துவமனையில் மின் தடையும் ஏற்படவில்லை. 'ஆப்த மித்ரா' திட்டத்தை சோதனை முயற்சியாக 25 மாநிலங்களில் உள்ள 30 மாவட்டங்களில் வெற்றிகரமாக நிறைவேற்றி உள்ளோம். இதனால், இந்த திட்டம் மேலும் விரிவுப்படுத்தப்படுகிறது. இயற்கை பேரிடர்களின் போது மக்களை உடனடியாக காப்பாற்றுவது தொடர்பாக அந்தந்த பகுதிகளை சேர்ந்த மக்களுக்கே இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கப்படும். பேரிடர் காலங்களில் ஒருவர் கூட உயிரிழக்க கூடாது என்பதே ஒன்றிய அரசின் இலக்கு. இவ்வாறு அவர் கூறினார்.

---

1. எந்த அபாயகரமான இரசாயனத்தை சேமிப்பதற்கான விதிகளை இந்தியா சமீபத்தில் தளர்த்தியது?

அ) சோடியம் குளோரைடு

ஆ) நைட்ரிக் அமிலம்

இ) கந்தக அமிலம்



ஈ) அம்மோனியம் நைட்ரேட் & கால்சியம் கார்பைடு ☑

✓ மேம்பட்ட பாதுகாப்பிற்காக, அம்மோனியம் நைட்ரேட் மற்றும் கால்சியம் கார்பைடு சேமிப்பு மற்றும் கையாளுதல் தொடர்பான விதிகளை இந்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) திருத்தியுள்ளது மற்றும் தளர்த்தியுள்ளது. துறைமுகத்தில் 3,000 டன் அம்மோனியம் நைட்ரேட்டை ஆறு ஆண்டுகள் சேமித்து வைத்ததன் காரணமாக ஏற்பட்ட கொடிய பெய்ரூட் (லெபனானின் தலைநகரம்) வெடி விபத்தின் பின்னணியில் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

2. 2025–26ஆம் நிதியாண்டு வரை நிலையான நிதியுதவி தரும் விதமாக, இந்தியாவில், ₹30,000 கோடி கடன் வழங்க முடிவுசெய்து உள்ள வங்கி எது?

அ) பாரத ஸ்டேட் வங்கி

ஆ) ஆக்சிஸ் வங்கி ☑

இ) ஐசிஐசிஐ வங்கி

ஈ) யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

✓ இந்தியாவின் முன்னணி தனியார் துறை வங்கியான ஆக்சிஸ் வங்கி, நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு ஏற்ப, 2025–26ஆம் நிதியாண்டு வரை நிலையான நிதியுதவி வழங்கும் விதமாக ₹30,000 கோடி கடன் வழங்க ஆக்ஸிஸ் வங்கி முடிவுசெய்துள்ளது.


✓ இந்த உறுதிப்பாடு, 2030ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய உதவுவதை நோக்கமாகக்கொண்டு உள்ளது. நேர்மறையான சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையான சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மொத்தக் கடன் வழங்கவும் ஆக்ஸிஸ் வங்கி திட்டமிட்டுள்ளது.

---

3. 'உலக அல்சைமர் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) செப்டம்பர் 20

ஆ) செப்டம்பர் 21 ☑



இ) செப்டம்பர் 22

ஈ) செப்டம்பர் 23

✓ ஆண்டுதோறும் செப்.21 அன்று உலக அல்சைமர் தினமாக கடைபிடிக்க –ப்படுகிறது. இந்த நாள் அல்சைமர் நோய், அதன் காரணங்கள், அறிகுறிகள் மற்றும் அதை கையாளும் முறைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அல்சைமர் நோய் என்பது மூளையின் நினைவாற்றல் மற்றும் அறிவாற்றல் திறன்களை குறைக்கின்ற ஒரு நோயாகும். முதியோர்களில் பொதுவாக காணப்படும் ஞாபக மறதி நோய்க்கு இது காரணமாகும்.

---

4. சமீப செய்திகளில் இடம்பெற்ற NDEAR மற்றும் NETF என்பது எந்த மத்திய அமைச்சகத்துடன் தொடர்புடைய முன்னெடுப்புகளாகும்?

அ) மின்துறை அமைச்சகம்

ஆ) கல்வி அமைச்சகம் ☑

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ "டிஜிட்டல் கல்விமூலம் தரமான கல்வியை அனைத்து இடங்களிலும் கிடைக்கச் செய்வது" குறித்த கூட்டத்தை மத்திய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் நடத்தினார். ஒருங்கிணைந்த டிஜிட்டல் சூழலியலை உருவாக்க செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மற்றும் இணையத்தை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

✓ ஸ்வயம் பிரபா போன்ற முன்முயற்சிகளை வலுப்படுத்தவும், தேசிய டிஜிட்டல் கல்வி கட்டமைப்பு மற்றும் தேசிய கல்வி தொழில்நுட்ப மன்றம் உள்ளிட்டவற்றை ஒருங்கிணைக்கவும் அவர் வலியுறுத்தினார். அவை 2020 தேசிய கல்வி கொள்கையில் அறிவிக்கப்பட்டது.

5. G24 அரசாங்கங்களுக்கு இடையேயான சங்கத்தின் தலைமை நிலையம் அமைந்துள்ள இடம் எது?

அ) வாஷிங்டன் டிசி ☑

ஆ) ஜெனீவா

இ) பாரிஸ்

ஈ) ரோம்

✓ சர்வதேச செலவாணி விவகாரங்கள் மற்றும் மேம்பாடு குறித்த 24 அரசாங்கங்களுக்கிடையிலான குழுவானது கடந்த 1971இல் பெருவின் லிமாவில் நிறுவப்பட்டது. இது வாஷிங்டன் டிசியை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. G77இன் ஓர் அத்தியாயமான இது வளரும் நாடுகளை செலவாணி மற்றும் மேம்பாட்டு நிதி சிக்கல்களில் ஒருங்கிணைக்கிறது.

✓ இந்தியா, மற்ற 24 (G24) உறுப்பு நாடுகளுடன் சேர்ந்து, சமநிலை வரி போன்ற நடவடிக்கைகளை திரும்பப்பெறுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உள்ளது. முன்மொழியப்பட்ட உலகளாவிய டிஜிட்டல் வரி ஒப்பந்தமானது 100 முன்னணி நிறுவனங்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. அது வளரும் நாடுகளுக்கு போதுமான வருவாய்க்கு வழிவகுக்காது என்று இந்தியா கவலை கொண்டுள்ளது.

---

6. 'டூயிங் பிசினஸ்' அறிக்கை என்பது எந்நிறுவனத்தின் முதன்மை வெளியீடாகும்?

அ) IMF

ஆ) உலக வங்கி ☑



இ) WTO

ஈ) NITI ஆயோக்

✓ 'டூயிங் பிசினஸ்' அறிக்கை உலக வங்கியின் முதன்மை வெளியீடாகும். 2018 மற்றும் 2020ஆம் ஆண்டின் அறிக்கைகளில் தரவு முறைகேடுகள் கண்டறியப்பட்டதை அடுத்து, இந்த அறிக்கையின் எதிர்கால வெளியீடுக –ளை உலக வங்கி நிறுத்தியுள்ளது. சர்வதேச செலவாணி நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜார்ஜீவாவும் இதில் ஈடுபட்டதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

---

7. ADBஇன் சமீபத்திய மதிப்பீட்டின்படி, 2020–21 நிதியாண்டுக்கான இந்தியாவின் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி விகிதம் என்ன?

அ) 14%

ஆ) 12%

இ) 10% ☑

ஈ) 8%

✓ ஆசிய வளர்ச்சி வங்கியானது (ADB) இந்தியாவின் 2020–21ஆம் நிதி ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக் கணிப்பை 10% ஆக குறைத்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் 11% எனக் கணிக்கப்பட்டு இருந்தது. 2ஆவது COVID அலை காரணமாக ஏற்படும் இடையூறுகளே விகிதக் குறைப்புக்குக் காரணமாகும்.

✓ 2021–22ஆம் நிதியாண்டுக்கான வளர்ச்சிக்கணிப்பானது முந்தைய 7 சதவீதத்திலிருந்து 7.5%ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2ஆவது அலையின் சீர்குலைவுகள் சேவைகள், உள்நாட்டு நுகர்வு மற்றும் நகர்ப்புற முறை சாரா துறையை மோசமாக பாதித்துள்ளது. 2020–21 நிதியாண்டின் கடைசி மூன்று காலாண்டுகளில் பொருளாதாரம் மீண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

8. இந்தியாவின் அதிக உயரத்தில் அமைந்துள்ள கல்வியமைப்பான SECMOL, அமைந்துள்ள மாநிலம் / UT எது?

அ) சிக்கிம்

ஆ) லடாக் ☑



இ) உத்தரகாண்ட்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ லடாக்கின் மாணவர்களின் கல்வி மற்றும் கலாசார இயக்கம் (SECMOL) லடாக் யூனியன் பிரதேசத்தில் லைட் பிடிலிட்டி (LiFi) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய இணைப்பு பெற்ற முதல் நிறுவனமாக மாறி உள்ளது. SECMOL என்பது இந்தியாவின் அதிவுயரத்தில் அமைந்துள்ள

கல்விநிறுவனமாகும். LiFi அமைப்புகள் அதிவேக தரவு இணைப்புகளை வழங்குகின்றன.

---

9. ACO01 என்ற பெயரில் மின்சார வாகனங்களுக்கான உள்நாட்டு மின்னேற்றியை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?

அ) DRDO

ஆ) ISRO

இ) ARAI ☑

ஈ) CSIR

✓ இந்திய தானியங்கி ஆராய்ச்சி சங்கம் (ARAI) ACO01 எனப்பெயரிடப்பட்ட மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றியை உள்நாட்டிலேயே வடி–வமைத்து உருவாக்கியுள்ளது. பாரத் எலக்ட்ரானிக்ஸ்மூலம் இது பெரிய அளவில் உற்பத்தி செய்யப்படவுள்ளது. தற்போது மின்சார வாகனங்களு–க்கான பெரும்பாலான மின்னேற்றி கூறுகள் இறக்குமதி செய்யப்படுகி–ன்றன. இக்கூறுகளின் உள்நாட்டு உற்பத்தி, இந்தியாவில் மின்சார வாகனப் போக்குவரத்தை அதிகரிக்கும்.

---

10. "டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் சிறந்த பயன்பாடு" பிரிவின்கீழ், 2021'இன் கொள்முதல் விருதுகளில் 'சிறப்பு CIPS' விருது பெற்றுள்ள இந்தியாவின் தொழில்நுட்ப முன்னெடுப்பு எது?

அ) SDG டாஷ்போர்டு

ஆ) GeM ☑

இ) சாம்பியன்ஸ் போர்டல்

ஈ) GST போர்டல்

✓ இந்திய அரசின் மின்னணு சந்தைத்தள (GeM) முன்னெடுப்பு, "டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் சிறந்த பயன்பாடு" பிரிவின்கீழ், 2021'இன் கொள் முதல் விருதுகளில் சிறப்பு CIPS விருது பெற்றுள்ளது.

✓ இந்த விருது வழங்கும் விழா இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்றது. GeM என்பது இந்திய அரசாங்கத்தால் பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதற்கான ஓர் அர்ப்பணிக்கப்பட்ட இணையவழிச் சந்தையாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அரசு மற்றும் உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு – 'பிஎம்–போஜன்' என்ற பெயரில் மதிய உணவு: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பிஎம்–போஜன் என்ற பெயரில் மதிய உணவு திட்டத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள் ளது. தற்போது பள்ளிகளில் நடை முறையில் இருக்கும் தேசிய மதிய உணவு திட்டத்துக்கு பதிலாக இந்த திட்டம் செயல்படுத்தப்படும். இந்த திட்டத்துக்கு அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.1 லட்சத்து 30,795 கோடி செலவிடப்படும். இத்திட்டம் மூலம் பள்ளி மாணவர்களுக்கு ஒருவேளை சூடான உணவு வழங்கப்படும்.

பிஎம்–போஜன் திட்டம் தொடர் பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: நாடு முழுவதும் 11.2 லட்சத்துக்கும் மேற்பட்ட பள்ளிகளில் 1 முதல் 8–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு பிஎம்–போஜன் திட்டம் செயல்படுத்தப்படும். இதன்மூலம் 11.8 கோடி மாணவர்கள் பயனடைவர். 2021–22 நிதியாண்டு முதல் 2025–26 வரையிலான 5 வருட காலத்துக்கு இத்திட்டத்துக்கு மத்திய அரசு ரூ.54,061 கோடியே 73 லட்சம் செலவிடும். இது தவிர உணவு தானியத்துக்கான கூடுதல் செலவாக ரூ.45 ஆயிரம் கோடியை மத்திய அரசு ஏற்கும்.

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.31,733 கோடியே 17 லட்சம் செலவு ஏற்படும். எனவே, இந்த திட்டத்தின் மொத்த பட்ஜெட் ரூ.1 லட்சத்து 30,794 கோடியே 90 லட்சமாக இருக்கும். அரசு மற்றும் அரசு தொடக்கப்பள்ளிகளில் இயங்கும் மழலையர் வகுப்புகள் மற்றும் அங்கன்வாடிகள் தற்போதுஇத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இந்த வகுப்புகளுக்கும் இத்திட்டம் பின்னர் விரிவுபடுத்தப்படும். பள்ளிகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் ஏற்படுத்தவும் அரசு ஊக்குவிக்கும். இவ்வாறு மத்திய அரசின் அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

---

2. குஜராத் கடற்பகுதியில் புதிய புயல் 'ஷாகீன்'

குஜராத் கடற்பகுதியில் 'ஷாகீன்' என்ற புதிய புயல் நாளை (அக்.1) காலைக்குள் உருவாகி பாகிஸ்தானை நோக்கி செல்லக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் உருவான 'குலாப்' புயலானது, கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆந்திர பிரதேசத்தில் கரையை கடந்தது. இப்புயலில் எச்சங்கள் தெலங்கானா, மகாராஷ்டிரா முழுவதும் நகர்ந்து, நேற்று தெற்கு குஜராத் மீதிருந்தன. இந்நிலையில் வியாழக்கிழமை காலையில் இவை காற்றழுத்த தாழ்வுமண்டலமாக மாறி, மேற்கு, வடமேற்கு திசையில் நகரும். பிறகு இது வெள்ளிக்கிழமை (அக்.1) காலைக்குள் வட அரபிக் கடலில் புயலாக உருவெடுக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இப்புயலுக்கு கத்தார் நாடு அளித்த பரிந்துரையின்படி 'ஷாகீன்' என பெயரிடப்பட்டுள்ளது. இப்புயல் பாகிஸ்தான் நோக்கி செல்லக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்தியாவுக்கு நேரடி அச்சுறுத்தல் இல்லை. என்றாலும் இந்தியா மற்றும் அதன் அண்டை நாடுகளின் மீனவர்கள் அக்டோபர் 2 வரை கடலுக்கு செல்ல வேண்டாம் என எச்சரிக்கப் பட்டுள்ளது. மேலும், இன்று முதல் 3 நாட்களுக்கு மகாராஷ்டிரா, குஜராத் கடற்பகுதி கொந்தளிப்புடன் காணப்படும். 55 முதல் 65 கி.மீ. வரையிலான வேகத்தில் காற்று வீசக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 'தவுக்தே' புயலுக்குப் பிறகு அரபிக் கடலில் உருவாகும் இரண்டாவது புயல் இதுவாகும்.

இதனிடையே குஜராத்தின் பல்வேறு இடங்களில் கடந்த 2 நாட்களாக கனமழை பெய்தது. வடக்கு கொங்கன், குஜராத் கட்ச், சவுராஷ்டிரா ஆகிய பகுதிகளில் இன்று அதிக கன மழைக்கு வாய்ப்புள்ளதால் 'ரெட் அலர்ட்' விடுக்கப்பட்டுள்ளது.

---

3. சிங்காரச் சென்னை 2.0 திட்டம்; ரூ.500 கோடி ஒதுக்கீடு: அரசாணை வெளியீடு

சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அரசாணை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக, சென்னை மாநகராட்சி இன்று (செப். 29) வெளியிட்ட செய்திக்குறிப்பு: "தமிழக முதல்வர், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் சரியான முன்னேற்றம் இல்லாததால் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், சர்வதேச தரத்துக்கு உயர்த்தவும் சிங்காரச் சென்னை 2.0 திட்டம் செயல்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, 2021–22ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையில் சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தைச் செயல்படுத்த ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் 24.08.2021 அன்று தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் சரியான முன்னேற்றம் இல்லாததால் இக்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், சென்னை மாநகரக் கட்டமைப்பை சர்வதேச தரத்துக்கு உயர்த்தவும், சிங்காரச் சென்னை 2.0 என்னும் புதிய திட்டம் இவ்வரசால் தீட்டப்பட்டு இவ்வாண்டு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் வேறு பல திட்டங்களை இணைத்து பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அறிவித்தார்.

---

4. மதுரவாயல்– துறைமுகம் இடையே 2 அடுக்கில் பறக்கும் சாலை திட்டம்

நாட்டில் முதல் முறையாக 2 அடுக்கு சாலையாக அமையவுள்ள மதுரவாயல்– துறைமுகம் பறக்கும் சாலைக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி 3 மாதங்களில் நிறைவடையும். திட்ட அறிக்கை கிடைத்ததும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் நிதி முதலீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று நெடுஞ்சாலைத் துறை செயலர் தீரஜ் குமார் தெரிவித்துள்ளார்.

---

5. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் – நெல் விற்பனைக்கு பதிவு செய்ய புதிய செயலி :

திருவள்ளூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் விற்பனைக்கு பதிவு செய்ய e–DPC என்ற புதிய செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு சொர்ணவாரிபருவத்தில், அரசு உத்தரவின்படி, இதுவரை 48 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இந்நிலையில், எதிர்வரும் கொள்முதல் பருவம் 2021–22–ல் விவசாயிகள் நேரடிநெல் கொள்முதல் நிலையங்களில் தேவையின்றிநீண்ட நேரம் காத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டும் எளிதில் பதிவுசெய்து உடனடியாக விற்பனைசெய்யவும் ஏதுவாக தமிழக அரசு e–DPC என்ற புதியசெயலியை அறிமுகம் செய்துள்ளது.

இச்செயலியை www.tncsc.tn.gov.in மற்றும் www.tncsc–edpc.in என்ற இணைய தளங்களில் காணலாம். இச்செயலியில் விவசாயிகள் தங்கள் பெயர், ஆதார் எண், புல எண் மற்றும் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்களை பதிவேற்றம் செய்து, கொள்முதல் செய்ய வேண்டிய தேதியை முன்பதிவு செய்து கொள்ளலாம். இந்த செயலியில் விவசாயிகள் வரும் அக்டோபர் 1–ம் தேதி பதிவேற்றம் செய்யலாம்.

---

6. 17 மருத்துவ சிகிச்சைகளை உள்ளடக்கிய கலைஞரின் – வரும்முன் காப்போம் திட்டம் தொடக்கம் : பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்

வாழப்பாடியில் நேற்று கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தை 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தில் இணைக்கவும், ஓராண்டில் 1,250 முகாம்கள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், 'கலைஞரின் வரும்முன் காப்போம் மருத்துவ முகாம் திட்ட' தொடக்கவிழா சேலம் மாவட்டம் வாழப்பாடியில் நேற்று நடந்தது. விழாவுக்கு தலைமை வகித்து முகாமை தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், பயனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் வரவேற்று பேசும்போது, "முதல்வர் ஸ்டாலின், இத்திட்டத்தில் இருதயம், மகப்பேறு, எலும்பு சிகிச்சை, பல், கண் என 17 மருத்துவப் பிரிவுகளை உள்ளடக்கி, கலைஞர் வருமுன் காப்போம் திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டார். இதன்படி கிராமம் தொடங்கி, நகரம் வரை ஓராண்டில், 1,250 முகாம்கள் நடத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் முகாம்கள் மூலம்மக்களுக்கு நோய்களை கண்டறிந்து மருந்து, மாத்திரை வழங்கப்படும். சிகிச்சை தேவைப்படுவோர் அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர். வரும்முன் காப்போம் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்துடன் இணைக்கப்படும்" என்றார்.

---

7. 60 வயது முதியோர் வேலை தேட புதிய இணையதளம் தொடக்கம்: மத்திய சமூக நீதித் துறை அறிமுகம்

அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியோர் மீண்டும் வேலைவாய்ப்பை தேட, புதிய இணையதளத்தை மத்திய சமூக நீதித் துறை அமைச்சகம் நாளை அறிமுகம் செய்கிறது. இந்தியாவில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கடந்த 1951–ம் ஆண்டு 2 கோடியாக இருந்த முதியோரின் எண்ணிக்கை, கடந்த 2001–ம்ஆண்டு 7.6 கோடியாக உயர்ந்தது. கடந்த 2011–ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின் படிஇந்த எண்ணிக்கை 10.4 கோடியாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், 60 வயதைக் கடந்த முதியோர் பலர் பல்வேறு காரணங்களால் மீண்டும் வேலை செய்ய விருப்பப்படுகின்றனர். அதை கருத்தில் கொண்டு மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை அமைச்சகம் முதல் முறையாக புதிய இணையதளத்தை அறிமுகம் செய்கிறது. நாட்டில் 60 வயது அல்லதுஅதற்கு மேற்பட்ட முதியோருக்கு மீண்டும் கவுரவமான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதே இதன் நோக்கம். இதற்காக 'சீனியர் ஏபுள் சிட்டிசன் பார் ரீ–எம்ப்ளாய்மென்ட் இன் டிக்னிட்டி (சேக்ரட்) போர்ட்டல்' என்ற பெயரில்மத்திய அமைச்சகம் இணையதளத்தை அறிமுகம் செய்கிறது. இது நாளை முதல் செயல்பாட்டுக்கு வருகிறது. மீண்டும் வேலை செய்ய விரும்பும் முதியோர் இதில் பதிவு செய்து கொள்ளலாம்.

---

8. ஹாசனில் முதல் முறையாக கோயிலுக்குள் நுழைந்த தலித் மக்கள்: உரிமையை பெற்றது மகிழ்ச்சி அளிப்பதாக பேட்டி

கர்நாடக மாநிலம் கொப்பலில் கோயிலில் நுழைந்த 4 வயது தலித் குழந்தைக்கு கடந்த வாரம் ரூ. 25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. அதேபோல குல்பர்காவில் கோயிலுக்குள் நுழைந்த தலித் இளைஞருக்கு ரூ. 5 லட்சம் அபராதம் விதிக்கப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதேபோல ஹாசன் மாவட்டத்தின் தின்டகூரு உள்ளிட்ட பிற இடங்களிலும் தலித் மக்களை ஆதிக்க சாதியினர் கோயிலுக்குள் நுழைய விடாமல் தடுப்பதாக அதிகாரியிடம் புகார் அளிக்கப்பட்டது.

இதையடுத்து சென்னராயபட்டணா வட்டாட்சியர் ஜே.பி.மாருதி அனைத்து சாதியினரையும் அழைத்து தின்டகூருவில் கூட்டம் நடத்தினார். இதை பெரும்பாலான சாதியினர் புறக்கணித்தனர். இதையடுத்து நேற்று முன்தினம் அதிகாரிகள் மற்றும் போலீஸார் முன்னிலையில் தலித் மக்கள் தின்டகூரு கோயிலுக்குள் நுழைந்து சிறப்பு பூஜை செய்து வழிபட்டனர். இதைத் தொடர்ந்து தின்டகூருவை சுற்றியுள்ள சோமேஷ்வரா கோயில், மஹாலட்சுமி கோயில், கேசவா கோயில் ஆகியவற்றிலும் நேற்று போலீஸார் முன்னிலையில் தலித் மக்கள் கோயிலுக்குள் நுழைந்து வழிபாடு நடத்தினர்

இதுகுறித்து 75 வயது திம்மையாகூறும்போது, "நான் இதேகிராமத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் இதுவரை கோயிலுக்குள் சென்றதில்லை. திருவிழா நாட்களில் கோயிலுக்கு வெளியே நின்று வணங்குவேன். என் அப்பா, தாத்தாவும் இந்த கோயிலுக்குள் நுழைந்ததில்லை. முதல் முறையாக கோயிலுக்குள் பூஜை செய்தது மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றார். பீர் ஆர்மி அமைப்பின் நிர்வாகி சந்தோஷ் கூறும்போது, "ஹாசன் மாவட்டத்தில் பல நூற்றாண்டுகளாக தலித் மக்களுக்கு மறுக்கப் பட்டிருந்த ஆலய நுழைவு உரிமைபெற்றது பெரிய சாதனை ஆகும். இதற்காக நீண்ட காலமாக தலித் மக்கள் போராடி வந்துள்ளனர்.

ஏராளமானோர் பல்வேறு இன்னல்களை அனுபவித்துள்ளனர். தற்போது கோயிலுக்கு சென்று பூஜை செய்ததை விட, அதற்கான உரிமையை பெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார். தலித் மக்களின் ஆலய நுழைவை தொடர்ந்து தின்டகூருவை சுற்றியுள்ள கிராமங்களில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.ஹாசன் மாவட்டம் தின்டகூருவில் உள்ள மல்லேஸ்வரா கோயிலுக்குள் சென்று வழிபட்ட தலித் மக்கள்.

---

9. இந்தியாவின் அதிவேக பைக் பந்தய வீராங்கனை கல்யாணி

இந்தியாவின் அதிவேக மோட்டார் சைக்கிள் பந்தய வீராங்கனை என்ற சாதனையைப் படைத்துள்ளார்27 வயதான கல்யாணி பொடேகர். சமீபத்தில் என்சிஆரின் புத்தா இன்டர்நேஷனல் சர்க்யூட்டில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் பந்தயத்தில், 2.08 நிமிடங்களில் இலக்கை கடந்து அசத்தினார் கல்யாணி பொடேகர். இதன் மூலம் இந்தியாவின் அதிவேக மோட்டார் சைக்கிள் பந்தய வீராங்கனை என்ற சாதனையைப் படைத்திருந்தார் கல்யாணி பொடேகர். இதற்குமுன்னர் கல்யாணி 2.16 நிமிடங்களில் பந்தய தூரத்தை கடந்திருந்தார். இந்த சாதனையை தற்போது டுகாட்டி பனிகல் வி 4 சூப்பர் பைக் மூலம் முறியடித்து புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இதுகுறித்து கல்யாணி பொடேகர் கூறும்போது, "மோட்டார் சைக்கிள்கள், ஓட்டப்பந்தயம், வேகம் இவை அனைத்தும் என்னை கவர்ந்தது. மற்ற குழந்தைகள் சைக்கிளில் மிதிப்பது எப்படி என்று கற்றுக் கொண்டிருந்த வயதில், நான் 9 வயதிலேயே துல்லியமாக இருக்க கனரக இயந்திரங்களை இயக்கிக் கொண்டிருந்தேன். என் கால்கள் சரியாக தரையை தொடாத நிலையில் அப்பாவின் ஆர்எக்ஸ் 100 பைக்கை ஓட்டத் தொடங்கினேன். எனது அப்பா பின்னால் அமர்ந்து கொண்டு கியர்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என கற்றுக்கொடுத்தார்.

நான் வளர்ந்தவுடன், பைக்பந்தயத்தில் பங்கேற்க விரும்பினேன். பின்னர் 2017 ல், நான் கலிபோர்னியா சூப்பர்பைக் பள்ளியில் பயிற்சி பெற்றேன், பைக்கை நான் நன்றாக நிர்வகிக்க மற்றும் சவாரி செய்ய முடிந்தாலும், என் கால்கள் தரையை எட்டாததால் தெளிவற்ற காரணத்தைக் கூறி, ஒரு குறிப்பிட்ட பிராண்ட் மோட்டார் சைக்கிளை சவாரி செய்ய எனக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஒரு வருடம் கழித்து, அதே பைக்கில் நான் சென்றபோது எனக்குவாய்ப்பு வழங்க மறுத்த அதே நபர் என்னுடன் செல்ஃபி எடுத்தார். எனது அத்தைகூட இந்த பைக்கிற்கு எப்படி பெட்ரோல் நிரப்புவாய்? அதனால் நீ வேலைக்குச் செல் என ஏளனமாக கூறுவார். அவர்களது கருத்துகளை எடுத்துக் கொண்டு அவர்கள் மீதே அடியெடுத்து வைத்து முன்னேறிச் செல்ல வேண்டும்" என்றார்.

கல்யாணி பொடேகர் பல்வேறு சாதனைகள் படைத்துள்ளார். உலகின் உயரமான பந்தயமான ரைடிடி ஹிமாலயா, இந்திய மோட்டார்ஸ்போர்ட்ஸ் கிளப் ஆதரவளிக்கும் இந்திய தேசிய ரேசிங் சாம்பியன்ஷிப் ஆகியவற்றில் கல்யாணிகலந்து கொண்டுள்ளார்.

---

10. பள்ளி மாணவா'களுக்கு பிரதமா' ஊட்டச்சத்து திட்டம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்; 11.80 கோடி போ' பலனடைவா'

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவா'களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்க வகை செய்யும் 'பிரதமா' ஊட்டச்சத்து திட்டத்துக்கு' (பிஎம்–போஷண்) மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் வழங்கியது. நாடு முழுவதுமுள்ள 11.20 லட்சம் பள்ளிகளில் பயிலும் சுமா' 11.80 கோடி மாணவா'கள் இத்திட்டத்தின் வாயிலாகப் பலனடைவா' என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமா' நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. அக்கூட்டத்தில் 'பிரதமரின் போஷண் சக்தி நிர்மாண்' (பிஎம்–போஷண்) திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. அத்திட்டத்தின்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவா'களுக்கு 2021–2022–ஆம் நிதியாண்டு முதல் 2025–2026–ஆம் நிதியாண்டு வரை சூடான மதிய உணவு வழங்கப்படவுள்ளது. இதே நோக்கில் ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டு வரும் மதிய உணவுத் திட்டமானது பிஎம்–போஷண் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிக்கு முந்தைய வகுப்புகளில் படிக்கும் மாணவா'கள், பால்வாடி மையங்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படவுள்ளது

புதிய திட்டத்தில் மேலும் பல அம்சங்கள் இடம்பெற்றுள்ளதாக மத்திய தகவல்–தொடர்புத் துறை அமைச்சர்' அனுராக் தாக்குர்' செய்தியாளர்'களிடம் தெரிவித்தார்'. ரூ.1.3 லட்சம் கோடி செலவு: திட்டம் தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், 'பிஎம்–போஷண் திட்டத்துக்கு 2025–26–ஆம் நிதியாண்டு வரை ரூ.5,4061.73 கோடியை மத்திய அரசும், ரூ.31,733.17 கோடியை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளும் செலவு செய்யவுள்ளன. உணவு தானியங்களுக்கான சுமா' ரூ.45,000 கோடி கூடுதல் செலவை மத்திய அரசு ஏற்கும். ஒட்டுமொத்தமாக இத்திட்டத்தின் பட்ஜெட் மதிப்பு ரூ.1,30,794.90 கோடியாக உள்ளது. பிஎம்–போஷண் திட்டத்தின் மூலமாக நாடு முழுவதும் 11.20 லட்சம் பள்ளிகளில் பயிலும் 11.80 கோடி மாணவா'கள் பலனடைவா'.

உள்ளூர்' பொருளாதாரம் மேம்படும்: பண்டிகை காலங்களில் மாணவா'களுக்கு சிறப்பு உணவு வழங்குவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மாணவா'களுக்கு இயற்கை மற்றும் தோட்டங்கள் தொடர்பான அனுபவத்தை வழங்குவதற்காக பள்ளிகளில் ஊட்டச்சத்து தோட்டங்கள் வளர்க்கப்படும். ரத்தசோகை அதிகமாகக் காணப்படும் மாவட்டங்களில் உள்ள மாணவா'களுக்குக் கூடுதல் ஊட்டச்சத்துப் பொருள்கள் வழங்கப்படும். இத்திட்டத்தை அமல்படுத்துவதில் விவசாய உற்பத்தியாளர்' அமைப்புகள், பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் ஈடுபடுத்தப்படும். இத்திட்டத்துக்கு உள்ளூர்' பாரம்பரிய உணவுப் பொருள்களைப் பயன்படுத்துவதால் உள்ளூர்' பொருளாதாரம் மேம்படும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இசிஜிசி நிறுவனத்தைப் பங்குச் சந்தையில் பட்டியலிட ஒப்புதல்: பொதுத் துறை நிறுவனமான ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனத்தை (இசிஜிசி) பங்குச் சந்தையில் பட்டியலிட மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. இந்த நடவடிக்கை மூலமாக 5 ஆண்டுகளில் ரூ.4,400 கோடி வரை முதலீடுகளை ஈர்க்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக மத்திய அமைச்சர்' பியூஷ் கோயல் செய்தியாளர்'களிடம் கூறுகையில், "அடுத்த நிதியாண்டில் இசிஜிசி நிறுவனம் பங்குச் சந்தையில் பட்டியலிடப்படும். எவ்வளவு பங்குகளை வெளியிடுவது என்பது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும். அதன்மூலம் கிடைக்கும் முதலீட்டுத் தொகையானது, ஏற்றுமதி நிறுவனங்களுக்குக் கடன்களை வழங்கப் பயன்படுத்தப்படும். 2025–26–ஆம் நிதியாண்டுக்குள் இசிஜிசி நிறுவனத்தின் கடன் வழங்கும் மதிப்பை ரூ.1 லட்சம் கோடியிலிருந்து ரூ.2.03 லட்சம் கோடியாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது' ' என்றார்'.

என்இஜஇ திட்டத்துக்கு ரூ.1,650 கோடி: தேசிய ஏற்றுமதி காப்பீட்டுக் கணக்கு (என்இஜஇ) திட்டத்துக்கு 5 ஆண்டுக்குள் ரூ.1,650 கோடியை வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதன்மூலம் ரூ.33,000 கோடி மதிப்பிலான ஏற்றுமதி திட்டங்கள் ஊக்குவிக்கப்படும் என்றும், சுமார்' 2.6 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. இரட்டை ரயில் பாதைகளுக்கு ஒப்புதல்: குஜராத்தின் ராஜ்கோட்– கனாலஸ், மத்திய பிரதேசத்தின் நிமச்–ரத்லம் இடையேயான ரயில் வழித்தடத்தை இரட்டிப்பாக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், 'ராஜ்கோட்– கனாலஸ் இடையேயான 111.20 கி.மீ. வழித்தடத்தை இரட்டிப்பாக்கும் திட்டத்துக்காக ரூ. 1,168.13 கோடியை செலவிட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழித்தடத்தைப் பல்வேறு நிறுவனங்கள் தங்கள் சரக்குகளை எடுத்துச் செல்லப் பயன்படுத்தி வருகின்றன. எதிர்காலத்தில் இந்த வழித்தடத்தில் நிலக்கரி, சிமென்ட், உரங்கள், உணவு தானியங்கள் உள்ளிட்டவை அதிக அளவில் கொண்டு செல்லப்படும். சுற்றுலா மேம்படும்: நிமச–ரத்லம் இடையேயான 132.92 கி.மீ தூரத்துக்கு ரூ.1,184.67 கோடி செலவில் இரட்டை ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது. இந்த வழித்தடத்தில் மின் நிலையங்கள், சிமென்ட் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளதால் சரக்குப் போக்குவரத்து அதிகரிக்கும்; பயணிகள் ரயில் போக்குவரத்து அதிகரித்து சுற்றுலாத் துறையும் மேம்படும். இரு திட்டங்களும் 4 ஆண்டுகளில் நிறைவடையும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

11. இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ.43 லட்சம் கோடியாக அதிகரிப்பு

இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் நடப்பாண்டு மார்ச் இறுதி நிலவரப்படி ரூ.43 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இதுகுறித்து மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் நடப்பு 2021–ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதி நிலவரப்படி 57,000 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமார்' ரூ.43 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது. இதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது வெளிநாட்டுக் கடன் அளவானது கரோனா நெருக்கடிக்கு இடையிலும் 2.1 சதவீதம் மட்டுமே மிதமான அளவில் அதிகரித்துள்ளது. கடந்த 2020–ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20.6 சதவீதமாக இருந்த வெளிநாட்டுக் கடன் நடப்பாண்டு மார்ச்சில் 21.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதே காலகட்டத்தில் இந்தக் கடனுக்கான ஒதுக்கீட்டு விகிதம் 85.6 சதவீதத்திலிருந்து 101.2 சதவீதமாக உயர்ந்துள்ளது.

வழக்கமாக வெளிநாட்டுக் கடனில் டாலர் சார்ந்த கடனே அதிக அளவில் உள்ளது. மொத்தக் கடனில் இதன் பங்களிப்பு 52.1 சதவீதமாகும். இதைத் தொடர்ந்து இந்திய ரூபாய் (33.3 சதவீதம்), யென் (5.8 சதவீதம்), எஸ்டிஆர்' (4.4 சதவீதம்), யூரோ (3.5 சதவீதம்) ஆகியவை உள்ளதாக நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

12. 38–ஆவது 'பிரகதி' கூட்டம்: ரூ.50,000 கோடி திட்டங்களை ஆய்வு செய்தார் பிரதமா' மோடி

38–ஆவது 'பிரகதி' கூட்டம் பிரதமா' நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் ரூ.50,000 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டும் வரும் பல்வேறு திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மத்திய மற்றும் மாநில அரசுகளின் செயல்திறனை மதிப்பிடுவது, அரசின் திட்டங்களை உரிய நேரத்தில் செயல்படுத்துதல் ஆகியவையே 'பிரகதி' என்று அழைக்கப்படுகிறது. கடந்த 2015–இல் இந்த பிரகதி திட்டம் தொடங்கப்பட்டது. புதன்கிழமை நடைபெற்ற பிரகதி கூட்டத்தில் 8 திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இவற்றில் நான்கு ரயில்வே அமைச்சக திட்டங்கள், 2 மின் அமைச்சக திட்டங்களாகும். இது தவிர சாலைப் போக்குவரத்து அமைச்சகம், விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் தலா ஒரு திட்டமும் ஆய்வு செய்யப்பட்டன. ஒடிஸா, ஆந்திரம், பிகார்', ஜார்க்கண்ட், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ஹரியாணா ஆகிய 7 மாநிலங்களில் நடைபெறும் இந்த திட்டங்களின் மொத்த மதிப்பு ரூ.50,000 கோடியாகும். இதற்கு முன்பு நடைபெற்ற 37 பிரகதி கூட்டங்களில், ரூ.14.39 லட்சம் கோடி மதிப்பிலான 297 திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

---

13. ஐ.நா. பொதுச் சபையில் உலக நாடுகள் உரக்கச் சொன்னது என்ன?

ஐ.நா. பொதுச் சபையின் 76–ஆவது ஆண்டுக் கூட்டத்தில் பொது விவாதம் செப். 21–ஆம் தேதி தொடங்கி செப். 27–ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் 100–க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் நேரில் பங்கேற்று உரையாற்றினர். சுமார் 60 நாடுகளைச் சேர்ந்த தலைவர்களின் பதிவு செய்யப்பட்ட விடியோ உரை காணொலி

முறையில் ஒளிபரப்பப்பட்டது. கரோனா பெருந்தொற்றிலிருந்து உலகம் சிறிது சிறிதாக மீண்டு வரும் நிலையில் நேரடியாக நடத்தப்பட்ட இக்கூட்டம் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. இதில், உலக நாடுகளின் தலைவர்கள் தங்கள் உரையில் முக்கியமாக வலியுறுத்திய கருத்துகள்...

இந்தியா

இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் நேரடியாகப் பங்கேற்று உரையாற்றினார். சர்வதேச தடுப்பூசி நிறுவனங்கள் இந்தியாவில் கரோனா தடுப்பூசி உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார். பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் நாடுகளுக்கு அதனாலேயே ஆபத்து ஏற்படும் என பாகிஸ்தானை மறைமுகமாக மோடி குறிப்பிட்டார். இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் விரிவாக்க நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் சீனாவை மறைமுகமாகச் சாடிய மோடி, பெருங்கடல்கள் பகிரப்பட்ட பாரம்பரியம். அவற்றை நாடுகளின் விரிவாக்க நடவடிக்கையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்றார். பிற நாடுகளுக்கு எதிரான பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஆப்கன் பயன்படுத்தப்படக் கூடாது என்பதை உறுதி செய்ய சர்வதேச சமூகத்துக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

அமெரிக்கா

சீனாவின் பெயரைக் குறிப்பிடாமல், அந்நாட்டுடன் அதிகரித்து வரும் பதற்றம் குறித்த கவலையை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஒப்புக்கொண்டார். அதேவேளையில், "நாங்கள் புதிய பனிப் போரையோ அல்லது பிளவுபட்ட உலகத்தையோ விரும்பவில்லை' என்றார். ஆப்கனிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியது குறித்து, "இடைவிடாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்துள்ளோம். உலகம் முழுவதும் மக்களை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளில் எங்களது திறனை முதலீடு செய்யும் புதிய சகாப்தத்தை தொடங்கியுள்ளோம்' என்றார்.

பிரிட்டன்

பருவநிலை மாற்றம் குறித்த பிரச்னைக்கு பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் முக்கியத்துவம் அளித்தார். அவர் தனது உரையில், "தொழில்புரட்சிக்கு முந்தைய நிலையைவிட உலகின் வெப்பநிலை உயர்வை 1.5 டிகிரி செல்சியஸாக கட்டுப்படுத்துவதற்கான மாற்றங்களை உலகம் இப்போது நடைமுறைப்படுத்த வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரீஸன் தனது பதிவு செய்யப்பட்ட உரையில், சர்வதேச கூட்டணியின் மதிப்பை வலியுறுத்தினார். அமெரிக்கா– பிரிட்டன்– ஆஸ்திரேலியா இடையிலான "ஆக்கஸ்' கூட்டணிக்கு பிரான்ஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் அவர் இக்கருத்தைக் கூறினார்.

சீனா

அமெரிக்காவுடன் அதிகரித்து வரும் பதற்றத்தை மறைமுகமாக தனது பதிவு செய்யப்பட்ட உரையில் குறிப்பிட்டார் சீன அதிபர் ஷி ஜின்பிங். "நாடுகளுக்கு இடையிலான சச்சரவுகள் பேச்சுவார்த்தை மூலம் கையாளப்பட வேண்டும். ஒரு நாட்டின் வெற்றியானது மற்றொரு நாட்டின் தோல்வியாக கருதப்படக் கூடாது. மோதலையும், ஒரு குறிப்பிட்ட நாட்டை தனிமைப்படுத்துவதையும் உலகத் தலைவர்கள் தவிர்க்க வேண்டும்' என்றார் அவர்.

பாகிஸ்தான்

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் பதிவு செய்யப்பட்ட உரையில், "ஆப்கானிஸ்தானின் இன்றைய நிலைக்கு பாகிஸ்தான் காரணம் என அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பிய யூனியனிலிருந்தும் அரசியல்வாதிகள் குற்றம்சாட்டுகின்றனர். இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பின்னர் பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் கூட்டணியில் இணைந்ததையடுத்து, ஆப்கானிஸ்தான் தவிர அதிகம் பாதிக்கப்பட்டது பாகிஸ்தான்' என்றார்.

இலங்கை

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதை ஐ.நா. மனித உரிமைகள் பிரிவு தலைவர் மிஷெல் பாச்சலெட் அண்மையில் கண்டித்திருந்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில், ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பேசிய அதிபர் கோத்தபய ராஜபட்ச, "இலங்கையில் தமிழர்களுக்கு நீடித்த அமைதியை அடைய உள்நாட்டு அமைப்புகள் மூலம் முயற்சிப்பது அவசியம்' என்றார். "அமைதியை அடைவது என்பது தொடர்ச்சியான செயல்முறை ஆகும். உள்நாட்டு அமைப்புகளுக்கு இதற்கு போதிய வாய்ப்பளிக்க வேண்டும். இந்த அமைப்புகள் செய்யும் பணியை வெளி அமைப்புகள் மாற்றியமைக்கக் கூடாது' என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பெரிஸ் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

வங்கதேசம்

வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா தனது உரையில், தடுப்பூசி சமநிலை, கரோனா தொற்றிலிருந்து நிலையான மீட்பு, பருவநிலை சவால்கள் உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தினார். தங்கள் நாட்டில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கயா அகதிகள் தம் சொந்த நாடான மியான்மருக்கு திரும்ப சர்வதேச சமூகம் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அவர் அழைப்பு விடுத்தார்.

ஜப்பான்

ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா தனது உரையில், "கரோனா நோய்த்தொற்றால் உலகம் அளவிட முடியாத துயரத்தை எதிர்கொண்டாலும், டோக்கியோ ஒலிம்பிக் போட்டியானது மக்களிடையே உலகளாவிய ஒற்றுமையின் அடையாளமாக நிரூபிக்கப்பட்டது. ஒலிம்பிக் போட்டியை நடத்துவதில் பல்வேறு கருத்துகள் இருந்தாலும் எங்களது கடமையை நிறைவேற்றினோம்' எனப் பெருமிதம் கொண்டார்.

ரஷியா, பிரான்ஸ்

ரஷியா சார்பில் அதன் வெளியுறவுத் துறை அமைச்சர் செர்ஜி வி லாவ்ரோவ் கலந்துகொண்டார். "ஐ.நா. சாசனத்தின் நோக்கங்கள், கோட்பாடுகளை நிலைநாட்ட புதிய ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு அவர் அழைப்பு விடுத்தார். பிரான்ஸ் சார்பில் வெளியுறவு அமைச்சர் ஜான் ஈவ் லெட்ரியன் பங்கேற்று, கரோனா, பருவநிலை மாற்றம், நாடுகள் இடையிலான சச்சரவுகள் போன்றவற்றுக்கு தீர்வு காண பலதரப்பு ஒத்துழைப்பை வலியுறுத்தினார்.

பிரேஸில் ஏன் முதலில்?

ஐ.நா. பொதுச் சபையின் ஆண்டு கூட்டத்தில் முதலில் உரையாற்றும் வாய்ப்பு பிரேஸிலுக்கு வழங்கப்படுவது பாரம்பரியமாக உள்ளது. பிரேஸிலுக்கு ஏன் அந்த வாய்ப்பு வழங்கப்படுவது என்பது குறித்து இரு கருத்துகள் உள்ளன. 1. ஐ.நா. சபை 1945–இல் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் அதன் ஆண்டுக் கூட்டத்தில் முதலில் உரையாற்ற எந்த நாடும் தயாராக இல்லை. பிரேஸில்தான் முதலில் உரையாற்ற தாமாக முன்வந்தது. அதுமுதல் பிரேஸிலுக்கு அந்த வாய்ப்பு கிடைத்து வருகிறது. 2. பிரேஸில் பிரதிநிதி ஓஸ்வால்டோ அரன்கா ஐ.நா. பொதுச் சபையின் முதல் சிறப்புக் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். பொதுச் சபையின் இரண்டாவது கூட்டத்துக்கும் அவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் பிரேஸிலுக்கு முதல் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

அக்டோபர் 2021

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்









1. FSSAI'இன்படி, தொழிற்துறையில் உற்பத்தி செய்யப்படும் மாறுபக்க கொழுப்பை (trans-fat) எம்மதிப்பிற்கு மட்டுப்படுத்த வேண்டும்?

அ) 10%

ஆ) 5%

இ) 2% ☑

ஈ) 1%



✓ இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையமானது (FSSAI) தொழிற்துறையில் உற்பத்தி செய்யப்படும் மாறுபக்க கொழுப்புகள் 2%'க்கும் குறைவாக இருக்க வேண்டும் என்றும் 2022'க்குள் மாறுபக்க கொழுப்பற்ற நாடாக மாறவேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது.

✓ அண்மையில் சோதிக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட உணவு மாதிரிகளுள் 1.34 சதவீத மாதிரிகளில் மட்டுமே மாறுபக்க கொழுப்புகள் பரிந்துரைக்கப்-பட்ட அளவுக்கு மேலிருந்தது. இது இந்தியா மாறுபக்க கொழுப்புகளற்ற நாடாக மாறுகிறது என்பதைக் காட்டுகிறது.

---

2. "Climate Indicators and Sustainable Development: Demonstrating the Interconnections" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ) UNFCCC

ஆ) UNICEF

இ) NITI ஆயோக்

ஈ) WMO ☑

✓ உலக வானிலை அமைப்பானது (WMO) "Climate Indicators and Sustainable Development: Demonstrating the Interconnections" என்ற தலைப்பிலான ஓரறிக்கையை வெளியிட்டுள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு உடனடி நடவடிக்கை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தை இவ்வறிக்கை வலியுறுத்துகிறது.

✓ புவி வெப்பத்தை 2 டிகிரி செல்சியசுக்கும் குறைவாகக் குறைப்பதையும் இது கூறுகிறது. WMO என்பது ஐநா'இன் சிறப்பு நிறுவனமாகும். அது, சுவிச்சர்லாந்தின் ஜெனீவாவை தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

---

3. பின்வரும் திட்டங்களுள் எது, இந்தியாவில், அனைவருக்கும் சுகாதார காப்பீட்டை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது?

அ) PM JDY

ஆ) PM JJBY

இ) PM JAY ☑

ஈ) PM FBY

✓ PM ஜன் ஆரோக்கியா யோஜனா (PM-JAY) என்பது இந்திய அரசின் முதன்மைத் திட்டமாகும். அது அனைவருக்கும் சுகாதாரக் காப்பீட்டை அடைவதை நோக்கமாகக்கொண்டு கடந்த 2018 செப்டம்பர்.23 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டம் 3ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்து உள்ளது. இத்திட்டத்தின்கீழ், 10 கோடிக்கும் மேற்பட்ட ஏழைக்குடும்பங்க-ளுக்கு 2ஆம் மற்றும் 3ஆம் நிலை மருத்துவமனைகளில் ஆண்டுக்கு ஒரு குடும்பத்திற்கு ₹5 லட்சம் வரை சுகாதாரக்காப்பீடு வழங்கப்படுகிறது

---

4. "Fed to Fail? The Crisis of Children's Diets in Early Life" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ) NITI ஆயோக்

ஆ) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

இ) UNICEF ☑

ஈ) உலக வங்கி

✓ ஐநா குழந்தைகள் நிதியமானது (UNICEF) "Fed to Fail? The Crisis of Children's Diets in Early Life" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. அறிக்கையின்படி, 6-23 மாத வயதுடைய குழந்தைகளில் பாதி பேருக்கு மட்டுமே ஒருநாளுக்கு பரிந்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச உணவு வழங்கப்படுகிறது. மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே அவர்கள் வளரத்தேவையான குறைந்தபட்ச உணவுகளை உட்கொள்கின்றனர். COVID-19 தொற்றுநோய் நிலைமையை மோசமாக்கலாம் என்றும் அது வெளிப்படுத்தியது.

5. நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் குறித்து இந்தியா தனது முதல் கூட்டுப் பணிக்குழுக் கூட்டத்தை எந்த நாட்டோடு நடத்தியது?

அ) இங்கிலாந்து

ஆ) ரஷ்யா

இ) ஆஸ்திரேலியா ☑

ஈ) ஜப்பான்



✓ காணொலிக்காட்சிமூலம் நிலக்கரி மற்றும் சுரங்கங்கள் குறித்த இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின் முதல் கூட்டுப்பணிக்குழுக் கூட்டம் நடந்தது.

✓ அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்தியா-ஆஸ்திரேலியா ஆற்றல் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக இது நடைபெற்றது. இவ்விவாதங்கள் இந்திய நிலக்கரி வளங்கள், உத்திசார் கனிமங்கள்-தேவை மற்றும் விநியோக சூழல் மற்றும் ஆஸ்திரேலியாவுடனான ஈடுபாடுகளில் கவனம் செலுத்தின. தூய நிலக்கரி தொழில்நுட்பம், மேற்பரப்பு நிலக்கரி வாயு உருவாக்கம், நிலக்கரி படுக்கை மீத்தேன், தீயணைக்கும் தொழில்நுட்பத்தைப் பகிர்வது, நிலக்கரி அடிப்படையிலான ஹைட்ரஜன் போன்றவற்றைப் பற்றியும் அவர்கள் விவாதித்தனர்.

---

6. 2021 உலக கொடுக்கும் குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 14 ☑

ஆ) 26

இ) 45

ஈ) 82



✓ Charities Aid Foundation ஆனது உலக கொடுக்கும் குறியீட்டை (WGI) வெளியிடுகிறது. 2021 பதிப்பின்படி, இந்தியா, உலகின் முதல் 20 தாராள குணங்கொண்ட நாடுகளில் 14ஆவது இடத்தில் உள்ளது. COVID-19 தொற்றுநோய் உலகின் தொண்டு போக்குகளை வீழ்த்தியுள்ளது.

✓ COVID காரணமான முடக்கங்களால் இக்குறியீட்டில் பல மேற்கத்திய நாடுகள் சரியாக செயல்படவில்லை. அமெரிக்கா, கனடா, அயர்லாந்து, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகியவை மிகவுயர்ந்த தரநிலையில் இருந்து சரிந்துள்ளன.

---

7. சமீப செய்திகளில் இடம்பெற்ற குன் சிகரம் அமைந்துள்ள மாநிலம் / UT எது?

அ) லடாக் ☑

ஆ) சிக்கிம்

இ) இமாச்சல பிரதேசம்

ஈ) பீகார்



✓ குன் சிகரம் என்பது நன் குன் மலைப்பகுதியின் ஒருபகுதியாகும். இது கிழக்கு இமயமலைத்தொடரில் 23,219 அடி உயரத்திலுள்ள 2ஆவது மிக உயர்ந்த சிகரமாகும். இந்தச் சிகரம் லடாக்கின் கார்கில், சுரு பள்ளத்தாக்குக்கு அருகில் அமைந்துள்ளது.

✓ அருணாச்சலப் பிரதேசத்தின் தீராங்கில் உள்ள தேசிய மலையேறுதல் மற்றும் அதனுடன் இணைந்த விளையாட்டு நிறுவனத்தில் (NIMAS) ஓர் அணியை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இணைத்து வைத்தார். இந்தக்குழு 2021 ஜூலை 15, முதல் 2021 ஆகஸ்ட்.10 வரை மவுன்ட் குன் மலைப்பாதை பயணத்தை நிறைவு செய்தது. NIMAS என்பது பாதுகாப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஒரு முதன்மையான மலையேற்ற நிறுவனம் ஆகும்.

---

8. சமீபத்தில் எந்த மாநிலத்தில், KVIC, 'துசார் பட்டு நூல் உற்பத்தி மையத்தை' நிறுவியுள்ளது?

அ) குஜராத்

ஆ) கர்நாடகா

இ) ஒடிசா ☑

ஈ) மேற்கு வங்கம்



✓ காதி மற்றும் கிராமப்புறத் தொழிலகங்கள் ஆணையமானது (KVIC) கட்டாக் மாவட்டத்தில் உள்ள சௌத்வாரில் ஒடிசாவின் முதல் துசார் பட்டு நூல் உற்பத்தி மையத்தை நிறுவியுள்ளது.

- ✓ துசார் பட்டானது சிறந்த பட்டு வகைகளில் ஒன்றாகும். இது கரடுமுரடான மற்றும் நுண்ணிய நெசவுக்கு பெயர்பெற்றது. ஒடிசாவின் மொத்த காதி துணி உற்பத்தியில் பட்டின் சதவீதம் 75 ஆகும்.
- ✓ ₹75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பட்டு நூல் உற்பத்தி மையம் ஆண்டுக்கு 94 இலட்சம் மதிப்புடைய 200 கிலோ பட்டு நூலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

---

9. இந்திய துளிர் நிறுவனம் மற்றும் தொழில்முனைவோருக்காக 'கோளரங்க புதுமை சவாலை' தொடங்கியுள்ள அமைச்சகம் எது?

அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஆ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

இ) ஜல் சக்தி அமைச்சகம்

ஈ) MSME அமைச்சகம்

- ✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் உள்ள மைகௌ இந்தியா, இந்திய துளிர் நிறுவனம் மற்றும் தொழில்நுட்ப தொழில்முனைவோருக்கான கோளரங்க புதுமை சவாலை அறிமுகம் செய்துள்ளது. ஆக்மென்ட் ரியாலிட்டி (AR), விர்ச்சுவல் ரியாலிட்டி (VR) & மெர்ஜ்ட் ரியாலிட்டி (MR) போன்ற அண்மைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஓர் உள்நாட்டு கோளரங்க அமைப்பு மென்பொருளை உருவாக்குவதற்கு தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் இந்திய துளிர் நிறுவனங்களை ஊக்குவிப்பதை இந்தச் சவால் நோக்கமாகக் கொண்டுள்ளது. விண்ணப்பதாரர்கள், துளிர் நிறுவனங்கள், இந்திய நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் அல்லது அணிகளாக இருக்கலாம்.

---

10. யாருக்கு 2021ஆம் ஆண்டுக்கான உலகளாவிய கோல்கீப்பர் விருது வழங்கப்பட்டுள்ளது?

அ) நரேந்திர மோடி



ஆ) பம்சைல் மிலம்போ–ங்குகா ☑

இ) லேமா கோபோவி

ஈ) எல்லன் ஜான்சன் சர்லீப்

- ✓ பில் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையானது 2021ஆம் ஆண்டின் உலகளாவிய கோல்கீப்பர் விருதை, ஐநா அவையின் முன்னாள் பொதுச் செயலாளரும் ஐநா பெண்கள் அமைப்பின் நிர்வாக இயக்குநரான பம்சைல் மிலம்போ–ங்குகாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ வங்காளதேசத்தைச் சேர்ந்த பைரூஸ் பைசா பீதர், நலவாழ்வை ஊக்கு –விக்கும் பணிக்காக 2021 சேஞ்ச்மேக்கர் விருதுக்கு தேர்வு செய்யப்பட் –டுள்ளார். 2021ஆம் ஆண்டின் முன்னேற்ற விருது கொலம்பியாவின் ஜெனிபர் கோல்பாசுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டுக்கான பரப்புரை விருது, பாலின சமத்துவத்தை ஊக்குவிக்கும் பணிக்காக லைபீரியாவின் சத்தா ஷெரிப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அக்.1 – உலக முதியோர் தினம்

---

2. நேபாளத்தில் நடைபெற்ற தடகள போட்டியில் 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்ற பூங்கோதை

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் உள்ள பொக்ராவில் அனைத்து விளையாட்டுகள் தெற்காசிய கூட்டமைப்பு சார்பில் போட்டிகள் நடைபெற்றது. இதில்இந்தியா, நேபாளம், பூடான், இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இந்தியாவில் இருந்து 130 பேர் கொண்ட அணி பல்வேறு போட்டிகளில் பங்கேற்றது. இதில் மகளிருக்கான 5 ஆயிரம்மீட்டர் தொடர் ஓட்டத்தில் தமிழகத்தின் கோவை மாவட்டம் சூலூர்பட்டணத்தைச் சேர்ந்த பூங்கோதை தங்கப்பதக்கம் வென்றார்.

---

3. மாணவர்களின் வீடுகளுக்கே சென்று பாடம் கற்பிக்கும் 'மக்கள் பள்ளி திட்டம்' – பள்ளிக்கல்வித்துறை நடவடிக்கை

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவா'களின் கற்றல் இடைவெளியைக் குறைப்பதற்காக 'மக்கள் பள்ளி' என்ற திட்டம் வரும் அக்.18–ஆம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. கரோனா பரவல் காரணமாக தமிழகத்தில் அனைத்து வகை பள்ளிகளும் மூடப்பட்டன. இந்நிலையில் 9 ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரையிலான மாணவா'களுக்கு மட்டும் கடந்த செப்.1–ஆம் முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. மாணவா'களின் நலன் கருதி தற்போதுவரை புத்தாக்கப் பயிற்சிகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இதற்கிடையே ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவா'களுக்கு வரும் நவ.1–ஆம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்படவுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளை பள்ளிக் கல்வித்துறை கடந்த சில நாள்களாக மேற்கொண்டு வருகிறது. இந்தநிலையில் கரோனா பெருந்தொற்று காரணமாக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவா'களின் கற்றல் இடைவெளி அல்லது கற்றல் இழப்பைக் குறைப்பதற்கு தினசரி ஒன்றிலிருந்து ஒன்றரை மணி நேரம் குறைதீர் கற்றல் செயல்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் 'மக்கள் பள்ளி' என்ற திட்டத்தை தமிழக பள்ளிக் கல்வித்துறை வரும் அக்.18–ஆம் தேதி முதல் தொடங்கவுள்ளது.

எந்தெந்த மாவட்டங்களில்...

இது குறித்து பள்ளிக் கல்வித்துறை உயரதிகாரிகள் கூறியது: கிராமப்புற மாணவா'களின் நலன் கருதி இந்தத் திட்டம் முதல் கட்டமாக கிருஷ்ணகிரி, நீலகிரி, விழுப்புரம், கடலூர், திருச்சி, திண்டுக்கல், காஞ்சிபுரம், தஞ்சாவூர் ஆகிய 8 மாவட்டங்களில் மட்டும் சோதனை முறையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவா'களுக்கு பள்ளி நேரத்துக்குப் பிறகு அவா'கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள அரசுக்குச் சொந்தமான இடங்களில் தன்னார்வலா'கள் மூலம் செயல்முறைக் கற்பித்தல் வகுப்புகள் நடைபெறும். இதைத் தொடர்ந்து பள்ளியில் நடத்தப்பட்ட பாடங்களுக்கு திருப்புதல் நடைபெறும்.

சான்றிதழ், பரிசுகள் வழங்கப்படும்: ஒரு தன்னார்வலர் குறைந்தபட்சம் 15 முதல் 20 வரையிலான மாணவா'களுக்கு வகுப்பெடுப்பார். இந்தத் திட்டத்தில் சிறப்பாக செயல்படும் தன்னார்வலர்களுக்கும், திறமையை வெளிப்படுத்தும் மாணவா'களுக்கும் அரசின் சார்பில் பாராட்டுச் சான்றிதழ், பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இந்த திட்டம் சிறப்பாக செயல்பட அந்தந்த கிராம ஊராட்சி நிர்வாகிகளின் ஒத்துழைப்பும் அவசியமாகும். 'மக்கள் பள்ளி' திட்டம் விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என அவா'கள் தெரிவித்தனர்.

கிராம சபைக் கூட்டத்தில்...

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கிராமசபைக் கூட்டங்கள் அக்.2–ஆம் தேதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அப்போது, பள்ளிக் கல்வி சார்ந்து விவாதிக்கப்படவுள்ள கூட்டப் பொருளோடு, 'மக்கள் பள்ளி' திட்டம் குறித்தும் விவாதிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிடம் பள்ளிக் கல்வித்துறை கேட்டுக் கொண்டுள்ளது. இந்தக் கூட்டங்களில் முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர், வட்டாரக் கல்வி அலுவலர், தலைமை ஆசிரியர்கள் என அனைத்து நிலை கல்வி அலுவலர்களும் கலந்து கொண்டு 'மக்கள் பள்ளி' திட்டத்துக்கான ஆலோசனைகளை வழங்க வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

---

4. சென்னை மெட்ரோ திட்டத்துக்கு ஏஜஐபி வங்கி ரூ.2,600 கோடி கடனுதவி

சென்னை மெட்ரோ ரயில் திட்டப் பணிகளுக்காக சுமார் ரூ.2,600 கோடியை ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி (ஏஜஐபி) கடனாக வழங்கியுள்ளது. இதன்மூலமாக இந்தியாவுக்கு அந்த வங்கி வழங்கியுள்ள கடன் சுமார் ரூ.47,000 கோடியாக அதிகரித்துள்ளது. சீன தலைநகர் பெய்ஜிங்கை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது ஆசிய–பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகக் கடன்களை வழங்கி வருகிறது. அந்த வங்கியில் சீனா 26.06 சதவீத பங்குகளை வைத்துள்ளது; இந்தியா 7.5 சதவீத பங்குகளை வைத்துள்ளது.

சென்னையில் மெட்ரோ ரயிலின் 2–ஆம் கட்டப் பணிகள் தொடங்கியுள்ளன. அதற்காக ரூ.2,600 கோடியை ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி கடனாக வழங்கியுள்ளது. இது தொடர்பாக அந்த வங்கியின் துணைத் தலைவர் டி.ஜே.பாண்டியன் பிடிஐ செய்தி நிறுவனத்திடம் வியாழக்கிழமை கூறுகையில், "இந்தியாவில்

மொத்தமாக 28 திட்டங்களுக்கு ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கி ரூ.47,000 கோடி கடன் வழங்கியுள்ளது. போக்குவரத்து, எரிசக்தித் துறைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அதிக அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது. ஏஐஜிபி வங்கியின் மூலம் அதிக கடன் பெற்று பலனடைந்துள்ள நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கரோனா தொற்றை எதிர்கொள்வதற்காக சுமார் ரூ.13,000 கோடியை இந்தியாவுக்கு ஏஐஜிபி வழங்கியுள்ளது.

பெங்களூரு மெட்ரோ ரயில் திட்டம், ஆந்திர நகர்ப்புற குடிநீர்த் திட்டம், கேரள திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், மும்பை நகர்ப்புற போக்குவரத்துத் திட்டத்தின் 3-ஆம் கட்டம், தில்லி-மீரட் புகர் போக்குவரத்துத் திட்டம் உள்ளிட்டவற்றுக்கும் ஏஐஜிபி கடன் வழங்கியுள்ளது. ஏஐஜிபி வங்கியின் கடனுதவி மூலமாக சென்னை மெட்ரோ ரயில் திட்டம் விரைவில் மேற்கொள்ளப்படும். இது வர்த்தகத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் அதிகரிக்கும்' ' என்றார்.

---

5. இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 7% -க்கு மேல் இருக்கும்: தலைமைப் பொருளாதார ஆலோசகர்

அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 7 சதவீதத்துக்கு மேல் இருக்கும் என்று தலைமைப் பொருளாதார ஆலோசகர் கே.வி.சுப்பிரமணியன் தெரிவித்தார். சர்வதேச அளவில் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையை, இந்தியாவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் சரியான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள முடியும். இதன்மூலம் சர்வதேச அளவிலான பொருளாதார மேம்பாட்டில் இந்தியா பங்களிக்கும் என்றும் அவர் கூறினார். வாஷிங்டனில் இந்தியாவின் பொருளாதார வாய்ப்புகள் தொடர்பான மாநாடு நடைபெற்றது. அமெரிக்க பெரு நிறுவனங்கள் பங்கேற்ற இந்த மாநாட்டில் கே.வி.சுப்பிரமணியன் பங்கேற்று பேசியதாவது:

கரோனா பெருந்தொற்று பிரச்னை ஏற்படுவதற்கு முன்பிருந்து இப்போது வரை அடிப்படைப் பொருளாதாரக் கட்டமைப்புகள் எப்போதும் வலுவாகவே உள்ளன. சில நிதி சார்ந்த பிரச்னைகள் மட்டும் இந்தியாவில் இருந்து வந்தன. அடுத்த 10 ஆண்டுகள் ஒருங்கிணைந்த வளர்ச்சியில் இந்தியாவுக்கான காலகட்டமாக இருக்கும். 2023-ஆம் நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதம் முதல் 7 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும். எனவே, 10 ஆண்டுகளில் இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 7 சதவீதத்துக்கு மேல்தான் இருக்கும்.

இந்தியாவில் அமைப்புரீதியாக பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன. புதிய வேளாண் சட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. கடந்த 18 முதல் 20 மாதங்களில் பல்வேறு பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒரே நாடாக இந்தியா உள்ளது. இந்தியாவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களால் அடித்தட்டு மக்களுக்கும் போதிய வருவாய் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. எனவே, பொருள்கள், சேவைகளுக்கான தேவைகள் பரவலாக அதிகரித்து வருகின்றன. நாட்டில் பொருளாதார சமநிலையின்மை குறைந்து வருகிறது என்றார்.

---

6. தென்மேற்கு பருவமழை: தமிழகத்தில் இயல்பை விட 17 சதவீதம் அதிகம்

நிகழாண்டில் தென்மேற்கு பருவமழை காலமான, கடந்த ஜூன் முதல் செப்டம்பர் வரை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 393.2 மி.மீ. மழை பெய்துள்ளது. இது சராசரி அளவைவிட 17 சதவீதம் அதிகம் ஆகும். பெரம்பலூரில் இயல்பை விட மிக அதிக மழையும், கோயம்புத்தூர், தேனி, திருப்பத்தூர், தூத்துக்குடி உள்ளிட 14 மாவட்டங்களில் இயல்பை விட அதிக மழையும் பெய்துள்ளது.

தென் மேற்கு பருவமழை: நமது நாட்டில் ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்கு பருவமழை காலமும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்கு பருவமழை காலமும் ஆகும். நாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் அதிக மழையை கொடுக்கும் தென்மேற்கு பருவமழை நிகழாண்டில் ஜூன் 3-ஆம் தேதி கேரளத்தில் தொடங்கியது. இது, படிப்படியாக விரிவடைந்து பல்வேறு மாநிலங்களிலும் மழையைக் கொடுக்க தொடங்கியது.

தமிழகம் மற்றும் அதையொட்டிய பகுதிகளில் ஜூன் 5-ஆம் தேதி பருவமழை தொடங்கியது. வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, தென்மேற்கு பருவக்காற்று, வெப்பச்சலனம் காரணமாக, தமிழகத்துக்கு அவ்வப்போது மழை கிடைத்து வந்தது. குறிப்பாக, பருவக்காற்று காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை பகுதியை ஒட்டிய மாவட்டங்களில் பரவலாக மழை கிடைத்தது. இதுபோல, வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, வெப்பச்சலனம் காரணமாக, உள்மாவட்டங்களிலும் மிதமானது முதல் பலத்தமழை வரை பெய்து வந்தது. இதற்கிடையில், தென் மேற்கு பருவமழை காலமான ஜூன் 1- ஆம் தேதி முதல் செப்டம்பர் 30-ஆம் வரையிலான காலக்கட்டத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 393.4 மி.மீ. மழை பெய்துள்ளது. இந்த காலக்கட்டத்தில் இயல்பாக 336.1 மி.மீ. மழை பெய்வது வழக்கம். இது சராசரியை விட 17 சதவீதம் அதிகமாகும்.

மிக அதிக மழை: தென்மேற்கு பருவமழை காலத்தில் பெரம்பலூரில் 68 சதவீதம் அதிக மழை பெய்துள்ளது. பெரம்பலூரில் இந்த காலக்கட்டத்தில் இயல்பான மழை அளவு 278.7 மி.மீ. ஆகும். ஆனால், நிகழாண்டில் 468.7 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

அதிகமழை: கோயம்புத்தூர், கடலூர், கரூர், நீலகிரி, ராணிப்பேட்டை, சேலம், தேனி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, வேலூர், விழுப்புரம் ஆகிய 14 மாவட்டங்களில் இயல்பை விட அதிக மழை பெய்துள்ளது. தேனியில் இயல்பை விட 52 சதவீதமும், திருப்பத்தூரில் 51 சதவீதமும், கோயம்புத்தூரில் 50 சதவீதமும் இயல்பை விட அதிகமழை பெய்துள்ளது.

இயல்பான மழை: அரியலூர், சென்னை, தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருப்பூர், திருவள்ளூர், திருவாரூர் உள்பட 23 மாவட்டங்களில் இயல்பான மழை பெய்துள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டலத்தலைவர் எஸ்.பாலச்சந்திரன் கூறியது: தென்மேற்கு பருவமழை காலம் (ஜூன் 1 முதல் செப்.30 வரையிலான கணக்கிட்டு காலம்) வியாழக்கிழமையுடன் நிறைவடைந்தது. அதேநேரத்தில், பருவமழை திரும்பப்பெறுவது காலதாமதம் ஏற்படும். குஜராத் கடலோரத்தில் காணப்படும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், பிகார் பகுதியில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்தத்தாழ்வுப்பகுதி ஆகிய காரணங்களால், தென்மேற்கு பருவமழை தொடர்கிறது. வட இந்தியாவையொட்டிய பகுதிகளில் அக்டோபர் 6-ஆம் தேதி தென் மேற்கு பருவமழை விலக சாத்தியக்கூறுகள் உள்ளன. அதன்பிறகே, தென் இந்திய பகுதிகளில் இருந்து விலகி, வடகிழக்கு பருவமழை தொடங்கும் என்றார் அவர்.

---

7. வேளாண் ரசாயன உற்பத்தியில் இந்தியாவுக்கு 4-ஆவது இடம்: தோமர்

உலக அளவில் வேளாண் ரசாயன உற்பத்தியில் இந்தியா 4-ஆவது இடத்தில் உள்ளதாக வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் வியாழக்கிழமை தெரிவித்தார். க்ராப்லைஃப் இந்தியா அமைப்பின் 41-ஆவது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்ற தோமர் இதுகுறித்து மேலும் பேசியது: மத்திய அரசு எண்ம (டிஜிட்டல்) வேளாண் இயக்கத்தை தொடங்கியுள்ளதுடன், பண்ணைத் துறையில் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. வேளாண் ரசாயன உற்பத்தியை பொருத்தமட்டில் இந்தியா உலகளவில் 4-ஆவது இடத்தில் உள்ளது. மேலும், இந்த துறையில் சாதனை வளர்ச்சியை எட்டுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன.

வேளாண் ரசாயனம் உள்ளிட்ட 12 முக்கிய துறைகளை உள்ளடக்கிய சர்வதேச விநியோகச் சங்கிலியில் இந்தியா மிக முக்கியமான பங்கை வகிக்கிறது. கண்டுபிடிப்பு, வேகமான பதிவு நடைமுறை அமைப்பு, ஆரம்பகால பயிர் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் எண்ம மயமாக்கல் திட்டங்களின் உதவியுடன் ரசாயனத் துறையில் முதலிடம் வகிக்க அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன என்றார் அவர்.

---

8. சிவ நாடார், மல்லிகா ஸ்ரீநிவாசனுக்கு விருது: அமெரிக்க-இந்திய தொழில் கூட்டமைப்பு

இந்தியாவைச் சேர்ந்த தொழிலதிபர்கள் சிவ நாடார், மல்லிகா ஸ்ரீநிவாசன் ஆகியோர் அமெரிக்க-இந்திய தொழில் கூட்டமைப்பு விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து அமெரிக்க இந்திய தொழில் கவுன்சில் (யுஎஸ்ஐபிசி) வியாழக்கிழமை வெளியிட்டுள்ள

அறிவிப்பில் கூறியிருப்பதாவது: ஹெச்சிஎல் டெக்னாலஜீஸ் நிறுவனர் சிவ நாடார், டாஃபே நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மல்லிகா ஸ்ரீநிவாசன் ஆகியோர் 'உலகளாவிய தலைமை விருது 2021'-க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அக்டோபர் 6-7-ஆம் தேதிகளில் நடைபெறும் 'இந்தியா சிந்தனைகள்' உச்சி மாநாட்டில் இந்த விருது வழங்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சிவ நாடாரின் தலைமையின் கீழ் ஹெச்சிஎல் நிறுவனமானது ஒரு தகவல் தொழில்நுட்ப சேவையிலிருந்து அதிநவீன தொழில்நுட்பத்தின் உலகளாவிய நிறுவனமாக மாறியுள்ளது. விவசாயத்தில் புதுமையைப் புகுத்தும் டாஃபே நிறுவனத்தின் தலைவர் மல்லிகா ஸ்ரீநிவாசனின் அர்ப்பணிப்பு இந்தியாவில் கிராமப்புற சமுதாயத்தில் வாய்ப்புகளை ஏற்படுத்த உதவியது' என யுஎஸ்ஐபிசி தலைவர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார். 2007-ஆம் ஆண்டுமுதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் இந்த விருது டாடா குழும தலைவர் என்.சந்திரசேகரன், லாக்ஹீட் மார்ட்டின் தலைமைச் செயல் அதிகாரி ஜிம் டெய்ஸ்லெட், கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, நாஸ்டாக் தலைவர் அடீனா ஃபிரீட்மன் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

9. தூய்மை இந்தியா இயக்கம், அடல் இந்தியா 2.0: இன்று தொடங்கி வைக்கிறார் பிரதமர் மோடி

நகரமயமாக்குதலில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் நடவடிக்கையாக ரூ.4.28 லட்சம் கோடி மதிப்பில் புதுப்பித்தல், நகர்ப்புற மாற்றத்துக்கான அடல் இயக்கம் (அம்ருத்), தூய்மை இந்தியா இயக்கம் ஆகியவற்றின் இரண்டாம் கட்ட திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை (அக்டோபர் 1) தொடங்கிவைக்கிறார். 2030 -ஆம் ஆண்டுக்குள் நகரங்களில் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு இந்தத் திட்டங்கள் உதவிகரமாக இருக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தில்லியில் டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் இன்று பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கும் இந்த நிகழ்ச்சியில், மத்திய வீட்டுவசதி, நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப்சிங் புரி, இணையமைச்சர் கௌசல் கிஷோர் மற்றும் தமிழக உள்ளாட்சி, நகர்புறத் துறை அமைச்சர் கே.என் நேரு மற்றும் பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர். பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க, அனைவருக்கும் 'குடிநீர் கிடைத்தல்' , 'கழிவுகள் இல்லாத' நகரங்களாக மாற்றும் லட்சியத்தை நிறைவேற்றும் வகையில், இந்த இரு இயக்கங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள விவரங்கள் வருமாறு:

இரண்டாம் பதிப்பு அம்ருத் 2.0 : 4,700 நகர்ப்புற உள்ளாட்சிகளில் 100 சதவீதம் அளவிற்கு அனைத்து வீடுகளுக்கும் 2.68 கோடி குடிநீர் இணைப்புகளை வழங்குவது, அடல் இயக்கத்தில் (அம்ருத்) உள்ள 500 நகரங்களில் சுமார் 2.64 கோடி கழிவுநீர் இணைப்புகளை வழங்கி 100 சதவீதம் கழிவுநீர் வசதிகளை உருவாக்குவது ஆகியவை இரண்டாம் பதிப்பு 2.0 இயக்கத்தின் நோக்கமாகும். இந்த இரு திட்டங்கள் மூலம் நகர்ப்புறங்களில் வசிக்கும் 10.50 கோடி மக்கள் பயனடைவர். மேலும், நிலத்தடி நீர், நீர் வளங்களின் பாதுகாப்பு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை இந்த இயக்கம் ஊக்குவிக்கும். நவீன சர்வதேச தொழில்நுட்பங்கள், திறன்கள்ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கான நீர் மேலாண்மைக்கு இந்த இயக்கம் ஆதரவளிக்கும். நகரங்கள் இடையே வளர்ச்சிக்கான போட்டியை ஊக்குவிப்பதற்காக குடிநீர் ஆய்வு நடத்தப்படும். இது போன்ற பணிகளுக்காக சுமார் ரூ.2.87 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கம் 2.0: அடல் இயக்கத்தின் கீழ் கொண்டு வரப்படாத நகரங்கள் மற்றும் ஒரு லட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை உள்ள நகர்ப்புற பகுதிகளில் 'கழிவுகள் இல்லாத' நிலையை ஏற்படுத்துவதே நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கம் இரண்டாம் பதிப்பின் நோக்கமாகும். இந்த நகரங்களில் கழிவு நீர் மேலாண்மையை உறுதிசெய்வது, திறந்தவெளியில் மலம் கழிக்காத நிலையை (ஓடிஎஃப்+) உருவாக்குவதும் முக்கியப் பணியாக இருக்கும். மேலும், இந்த நகரங்களில் திடக் கழிவுகளின் ஆதாரங்கள் மூன்று வகையில் தரம் பிரிக்கப்படுக்கப்படுகிறது. குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி ஆகிய மூன்று வகைகள் இந்த நகரங்களில் பின்பற்றப்படும். அனைத்து விதமான திடக் கழிவுகளையும் அறிவியல் ரீதியாக அகற்றி பயனுள்ள திடக்கழிவு மேலாண்மைக்கு இந்த இயக்கம் கவனம் செலுத்தும். இதற்காக சுமார் ரூ.1.41 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தூய்மை இந்தியா-அடல் இயக்க தாக்கங்கள்: கடந்த ஏழு ஆண்டுகளில் நகர்ப்புற தோற்றங்களை மேம்படுத்துவதில் தூய்மை இந்தியா – அடல் இயக்கம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளன. மக்களுக்குத் தண்ணீர் விநியோகம் மற்றும் துப்புரவு ஆகிய அடிப்படை சேவைகள் வழங்குவதை இந்த இரண்டு முக்கிய இயக்கங்கள் மேம்படுத்தி உள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பலவற்றில் திறந்தவெளியில் மலம் கழிக்கும் நிலை இல்லாததாக அறிவிக்கப்பட்டுள்ளது. 70 சதவீதம் திடக் கழிவுகள் அறிவியல் ரீதியாக தற்போது அப்புறப்படுத்தப்படுகின்றன. 1.1 கோடி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகளும், 85 லட்சம் கழிவுநீரை வெளியேற்றுவதற்கான இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சுமார் 4 கோடிக்கும் அதிகமான மக்கள் பயனடைந்துள்ளனர்.

---

1. எந்தத் தெற்கு பசிபிக் பெருங்கடல் நாடு சமீபத்தில் காலநிலை மாற்றம் குறித்து பன்னாட்டு நீதிமன்றத்தை நாடியது?

அ) பிஜி

ஆ) ஆஸ்திரேலியா



இ) வனுவாட்டு ☑

ஈ) பப்புவா நியூ கினி

✓ தென் பசிபிக் பெருங்கடல் நாடான 80 தீவுகளைக் கொண்ட வனுவாட்டு, சமீபத்தில் காலநிலை மாற்றத்தின் விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறையினரின் உரிமைகள் குறித்த கருத்தை வெளியிட பன்னாட்டு நீதிமன்றத்தை நாடியுள்ளது. இந்தத் தீவு நாடுகளில் கடல் மட்டம் மற்றும் வழக்கமான புயல்களை அதிகரித்து வருகின்றன. வனுவாட்டு சுமார் 280,000 மக்கள்தொகையைக் கொண்டுள்ளது. ஐநா பொதுச்சபை (UNGA) மூலம் இந்த முயற்சியை வனுவாட்டு அமைக்கவுள்ளது.

---

2. இந்தியாவில், "டிஜிட்டல் ஸ்கை" தளத்தை இயக்குகிற நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி



இ) சிவில் வான்போக்குவரத்து இயக்குநரகம் ☑

ஈ) தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ "டிஜிட்டல் ஸ்கை" தளம் இந்தியாவில் சிவில் ஏவியேஷன் இயக்குநரகம் மூலம் இயக்கப்படுகிறது. சமீபத்தில், உள்நாட்டு விமானப்போக்குவரத்து அமைச்சகம், இந்தியாவில் டிரோன் நடவடிக்கைகளுக்காக பிரத்யேகமா –க ஒரு வான்வெளி வரைபடத்தை வெளியிட்டது. இந்த வரைபடத்தை "டிஜிட்டல் ஸ்கை" தளத்தைப் பயன்படுத்தி அணுகலாம். இந்த வரைபடத் –தின்படி, டிரோன் செயல்பாடுகளுக்காக வான்வெளி பச்சை, சிவப்பு மற்றும் மஞ்சள் மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

---

3. வங்கிகளுடனான வைப்பு குறித்த அறிக்கையை, அவ்வப்போது வெளியிடப்படுகிற அமைப்பு எது?

அ) டிஜிசிஜிசி



ஆ) ஆர் பி ஐ ☑

இ) நிதி அமைச்சகம்

ஈ) ஐபிஏ

✓ வங்கிகளுடனான வைப்பு குறித்த அறிக்கை இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டது. இது, 2019–20ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், 2020–21ஆம் நிதியாண்டில், வங்கி வைப்பு, ஆண்டுக்கு 11.9% அதிகரித்துள்ளது என்று கூறுகிறது. இதற்கு காரணம் CASA (நடப்பு கணக்கு – சேமிப்புக் கணக்கு வைப்பு) வளர்ச்சியாகும். மகாராஷ்டிரா, உத்தர பிரதேசம், கர்நாடகா ஆகியவை இந்தியாவின் மொத்த வங்கி வைப்புத் தொகையில் 1/3 பங்கு என அறிக்கை கூறுகிறது.

---

4. PFRDA'ஆல் எந்தத் தேதியில் தேசிய ஓய்வூதிய அமைப்பு திவாஸ் அனுசரிக்கப்படுகிறது?

அ) அக்டோபர்.1 ☑

ஆ) அக்டோபர்.2

இ) அக்டோபர்.3

ஈ) அக்டோபர்.4

✓ ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது (PFRDA) அக்.1ஆம் தேதியை தேசிய ஓய்வூதிய அமைப்பு திவாஸாக கொண்டாட முன்மொழிந்துள்ளது. இது ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியத் திட்டத்தை ஊக்குவிப்பதற்கான PFRDA'இன் ஒருபகுதியாகும்.

✓ #npsdiwas என்ற தலைப்பில் ஒரு பரப்புரை சமூக ஊடகங்களில் விளம்ப –ரப்படுத்தப்படுகிறது. PFRDA என்பது மத்திய நிதியமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறை அமைப்பாகும். அதன் தற்போதைய தலைவர் சுப்ரதிம் பாண்டியோபாத்யாய் ஆவார்.

---

5. முதல் இமாலய திரைப்பட விழாவை நடத்திய இந்திய மாநிலம் / UT எது?

அ) லடாக் ☑

ஆ) உத்தரகாண்ட்

இ) சிக்கிம்

ஈ) ஜம்மு காஷ்மீர்

✓ முதலாவது இமாலய திரைப்பட விழாவை லடாக் யூனியன் பிரதேசத்தில் உள்ள லே நகரத்தில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் அனுராக் தாக்கூர் தொடங்கிவைத்தார். இந்தியாவின் 75 ஆண்டுகள் சுதந்திரத்தை கொண்டாடும் விடுதலையின் அம்ரித் மகோத்சவத்தின் ஒரு பகுதியாக செப்.24 முதல் 28 வரை இந்த ஐந்து நாள் திரைப்பட விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

✓ இந்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் திரைப்பட விழாக்கள் இயக்குநரகத்துடன் இணைந்து லடாக் யூனியன் பிரதேச நிர்வாகம் இதை நடத்துகிறது. இது லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டு கவுன்சிலுடன் இணைந்து நடத்தப்படுகிறது.

---

6. பிரீடம் ஹவுஸால் தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாக இணைய சுதந்திரத்திற்கான மோசமான சூழல் உள்ள நாடாக அறிவிக்கப்பட்டு உள்ள நாடு எது?

அ) சீனா ☑

ஆ) வட கொரியா

இ) சிரியா

ஈ) ஈராக்

✓ அமெரிக்காவைச்சார்ந்த இலாப நோக்கற்ற நிறுவனமான பிரீடம் ஹவுஸ் சமீபத்தில் இணைய சுதந்திரம், டிஜிட்டல் உரிமைகள், தகவல் சுதந்திரம் மற்றும் இணைய அணுகல் உரிமை ஆகியவை அடங்கிய அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, இணைய சுதந்திரமானது உலகளவில் தொடர்ச்சியாக 11ஆவது ஆண்டாக குறைந்துள்ளது.

✓ மியான்மர், பெலாரஸ் & உகாண்டாவில் மிகப்பெரிய சேதம் நிகழ்த்தும் விளைவுகள் காணப்பட்டன. தொடர்ச்சியாக 7ஆம் ஆண்டாக இணைய சுதந்திரத்திற்கான மோசமான சூழல் உடைய நாடாக சீன நாடு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

---

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற அபிஷேக் வர்மாவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) டென்னிஸ்

ஆ) பூப்பந்து



இ) வில்வித்தை ☑

ஈ) மட்டைப்பந்து

✓ மும்முறை உலகக்கோப்பையில் தங்கப்பதக்கம் வென்ற இந்தியாவின் 'காம்பவுண்ட்' வில்வித்தை வீரர் அபிஷேக் வர்மா உலக வில்வித்தை விளையாட்டு வீரர்களின் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உலக வில்வித்தை சாம்பியனான ரஷ்யாவின் நடாலியா அவ்தீவா மற்றும் இந்தியாவின் அபிஷேக் வர்மா ஆகியோர் நான்கு ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

✓ 32 வயதான அபிஷேக் வர்மா, 'அர்ஜுனா' விருது பெற்றவராவார். இந்த ஆண்டு தொடக்கத்தில் போலந்து (2015) மற்றும் பாரிஸில் நடந்த உலகக்கோப்பையில் அவர் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளார்.

---

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஜோதி சுரேகா வென்னம் உடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) டென்னிஸ்

ஆ) ஸ்குவாஷ்



இ) வில்வித்தை ☑

ஈ) துப்பாக்கிச்சுடுதல்

✓ யாங்டனில் நடைபெற்று வரும் உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்கள் 'காம்பவுண்ட்' பிரிவு போட்டியில் ஜோதி சுரேகா வென்னம் வெள்ளி வென்றுள்ளார். இறுதிப்போட்டியில், உலகின் 3ஆம் நிலையிலுள்ள கொலம்பியாவின் சாரா லோபஸால் அவர்

தோற்கடிக்கப்பட்டார். முன்னதாக, உலக சாம்பியன்ஷிப்பில், இந்திய பெண்கள் மற்றும் கலப்பு கூட்டு அணிகள் வெள்ளிகளை வென்றன. இந்திய பெண்கள் அணியில் ஜோதி, முஸ்கான் கிரார் மற்றும் பிரியா குர்ஜார் ஆகியோர் அடங்குவர்.

---

9. நியூயார்க்கில் நடைபெற்ற தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான உச்சிமாநாட்டில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?

அ) நரேந்திர மோடி

ஆ) அனுராக் தாக்கூர் ☑

இ) பியூஷ் கோயல்

ஈ) நிர்மலா சீதாராமன்



✓ ஐநா பொதுச்சபை கூட்டத்தையொட்டி நியூயார்க்கில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான உச்சிமாநாட்டில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் அனுராக் தாக்கூர் உரையாற்றினார். 'தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான சர்வதேச கூட்டணி' நியூயார்க்கில் கடந்த 2019ஆம் ஆண்டு செப்.26 அன்று தொடங்கப்பட்டது. இது கருத்து மற்றும் கருத்து சுதந்திரம் மற்றும் இலவச, பன்மை மற்றும் நம்பகமான தகவல்களுக்கான அணுகலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கூட்டாண்மையில் இன்றுவரை 43 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

---

10. வங்காள விரிகுடாவில் உருவான 3ஆவது செப்டம்பர் புயலின் சூறாவளியின் பெயர் என்ன?

அ) கிசா

ஆ) குலாப் ☑

இ) ஜீனா

ஈ) குணா



✓ குலாப் சூறாவளி, ஆந்திர பிரதேச மாநிலத்தில் கரையைக் கடந்தது. ஆந்திரா மற்றும் ஒடிசா இடையேயான நிலப்பரப்பை அது தாக்கியது. யாஸ் புயல், ஒடிசா மற்றும் மேற்கு வங்க மாநிலம் முழுவதும் அழிவை ஏற்படுத்திய நான்கு மாதங்களுக்குப் பிறகு, தெற்கு ஒடிசா மற்றும் வடக்கு ஆந்திர பிரதேச கடற்கரையில் மற்றொரு சூறாவளி உருவானது.

✓ 21ஆம் நூற்றாண்டில், இரண்டு வெப்பமண்டல சூறாவளிகள் – தயே (2018) மற்றும் பியார் (2005) – வங்காள விரிகுடாவில் இருந்து இந்திய கிழக்கு கடற்கரையில் கரையை கடந்தது. செப்டம்பர் மாதத்தில் கரையைக் கடந்த 'குலாப்' புயல் இதுபோன்ற மூன்றாவது புயலாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அக்.1 – தன்னார்வ இரத்த தான நாள்

கருப்பொருள்: உயிர்க்காக்கும் உதிரதானம்.

---

2. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் பொற்கிழி விருது அறிவிப்பு

சென்னை புத்தகக் கண்காட்சியை நடத்தும் பபாசி வழங்கும் 2021ஆம் ஆண்டிற்கான முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் பொற்கிழி விருது வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பபாசி வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

2007–ல் 30ஆவது சென்னை புத்தகக் காட்சியை துவக்கிவைத்த, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தம் சொந்த நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயை பபாசியிடம் வழங்கி, ஆண்டுதோறும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 4 தமிழ் எழுத்தாளர்களுக்கும் ஒரு பிறமொழி எழுத்தாளருக்கும் ஒரு ஆங்கில மொழி எழுத்தாளருக்கும் தலா ஒரு லட்சம் வீதம் பொற்கிழியும், விருதும் வழங்கக் கூறினார்கள். அதற்காக பபாசியால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளையில் இருந்து, கவிதை, புனைவிலக்கியம், உரைநடை, நாடகம் ஆகியவற்றில் சிறந்த 4 தமிழ் எழுத்தாளர்களுக்கும், ஆங்கிலம் மற்றும் பிற இந்திய மொழிகளில் எழுதும் சிறந்த 2 பேருக்கும் ஆண்டுதோறும் விருது மற்றும் ₹1 லட்சம் பணமும் அளித்துக் கவுரவித்து வருகிறது. அதன்படி 2007ல் இருந்து இதுவரை 84 எழுத்தாளர்களுக்கு 84 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான விருதாளர்களை அதற்காக அமைக்கப்பெற்ற குழு தேர்வு செய்துள்ளது. தேர்வுபெற்ற விருதாளர்கள் பட்டியலை பபாசியின் தலைவர் ஆர் எஸ் சண்முகம் அவர்கள் அறிவித்துள்ளார். கொரோனா காரணமாக நடைபெறாமல் நின்றுவிட்ட 2020ம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவும் 2021ஆம் ஆண்டுக்கான விழாவுடன் இணைந்து நடைபெறும். விழா குறித்த தேதி மற்றும் நேரம் விரைவில் அறிவிக்கப்படும் என்று பபாசி தலைவர் அறிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு விருது பெறும் விருதாளர்கள்:

1. அபி – கவிதை

2. இராசேந்திர சோழன் – புனைவிலக்கியம்

3. எஸ் ராமகிருஷ்ணன் – உரைநடை

4. வெளி ரங்கராஜன் – நாடகம்

5. மருதநாயகம் – ஆங்கிலம்

6. நதித் சாகியா – பிற இந்திய மொழி (காஷ்மீரி)

---

3. 3,200 ஆண்டுகளுக்கு முந்தைய பொருநை நாகரிகம்; ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கையில் அகழாய்வு நிறைவு: 2,000'க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுப்பு

ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும்கொற்கையில், 3,200 ஆண்டுகளுக்கு முந்தைய 'பொருநைநாகரிகத்தை' வெளிக்கொணர்ந்த அகழாய்வுப் பணிகள் நிறைவடைந்தன. இதில், 2,000–க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தமிழக தொல்லியல் துறை சார்பில், தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி கரையில் உள்ள ஆதிச்சநல்லூர், சிவகளையில் 2–ம் கட்டமாகவும், பாண்டியர்களின் துறைமுக நகரான கொற்கையில் முதல் கட்டமாகவும் கடந்த 7 மாதங்களாக அகழாய்வுப் பணி நடைபெற்றது. நேற்று முன்தினம் பணி நிறைவுபெற்றது. ஆதிச்சநல்லூரில் 10–க்கும் மேற்பட்ட இடங்களில் குழிகள் தோண்டப்பட்டு, அகழாய்வுநடைபெற்றது. இதில், 500–க்கும் மேற்பட்ட பழங்காலப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கொற்கையில் 1,000–க்கும் மேற்பட்ட பொருட்கள் கிடைத்தன. குறிப்பாக, 9 அடுக்குகள் கொண்ட திரவப்பொருட்களை வடிகட்டும் குழாய், சங்க இலக்கியத்தில் கூறப்படும் 29 அடுக்குகள் கொண்ட செங்கல் கட்டுமான அமைப்பு, இரண்டடுக்கு கொள்கலன், சங்கு அறுக்கும் தொழிற்கூடம், தமிழ் பிராமி எழுத்துகள், குறியீடுகள், சங்குகள், சங்கு வளையல்கள், வண்ண பாசிமணிகள், பானைகள், ரோம் மற்றும் சீன நாட்டுப் பானை ஓடுகள், சுடுமண் உருவபொம்மைகள் எனஏராளமான பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிவகளையில் பரம்பு, பேட்மா நகரம், மூலக்கரை ஆகிய 3 இடங்களில் 18 குழிகளும், பராக்கிரமபாண்டி திரடு, ஆவாரங்காடு திரடு, பொட்டல் திரடு, செக்கடி ஆகிய நான்கு இடங்களில் வாழ்விடப் பகுதிகளை கண்டறிவதற்காக 8 குழிகளும் அமைக்கப்பட்டன. பரம்பு பகுதியில் 400'க்கும் மேற்பட்ட பொருட்களும், வாழ்விடப் பகுதிகளில் 300'க்கும் மேற்பட்ட பொருட்கள் & 48 முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குழந்தைகள் விளையாடும் வட்ட சில்கள், பெண்கள் அணியும் காதணிகள், சதுரங்க காய்கள், நூல் நூற்கப் பயன்படும் தக்களி, சுடுமண்ணால் செய்யப்பட்ட முத்திரைகள், சுடுமண் பந்து, சுடுமண்சக்கரம், நுண்கற்கால கருவிகள், பட்டை தீட்டும் கற்கள், எலும்புகளால் ஆன கூர்முனைக் கருவிகள், அம்மி குழவி, கண்ணாடி வளையல்கள், சங்கு வளையல்கள், பாசிமணிகள், சீன நாட்டு நாணயம், காப்பர் குழாய், சீன பானை ஓடுகள், வாள், கத்தி என ஏராளமான பொருட்கள் கிடைத்தன. ஆவாரங்காடு திரட்டில் சுடாத செங்கல்லால் அமைக்கப்பட்ட கட்டுமானம், பராக்கிரமபாண்டி திரட்டில் செங்கல்லால் கட்டப்பட்ட கழிவுநீர் வடிகால் என பல முக்கியத்துவம் வாய்ந்த தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மூலக்கரை பகுதியில் கல்வட்டங்கள் கிடைத்தன.

சிவகளையில் கிடைத்த முதுமக்கள் தாழியில் இருந்து எடுக்கப்பட்ட நெல்மணிகளை ஆய்வு மேற்கொண்டதில், அவற்றின் வயது 3,200 ஆண்டுகள் என்றும், தாமிரபரணிக்கரை 'பொருநை நாகரிகத்தின்' வயது 3,200 ஆண்டுகள் என்றும், தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார். இதை பெருமைப்படுத்தும் விதமாக திருநெல்வேலியில் ₹15 கோடி மதிப்பில் 'பொருநைஅருங்காட்சியகம்' அமைக்கப்படும். அங்கு, ஆதிச்ச நல்லூர், சிவகளை மற்றும் கொற்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் காட்சிப்படுத்தப்படும் என்றும் முதல்வர்

அறிவித்தார். சிவகளையில் மூன்றாம் கட்ட அகழாய்வும், கொற்கையில் கடல்சார் ஆய்வும் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ளன.

---

4. செப்டம்பரில் ₹1.17 லட்சம் கோடி GST வசூல்: 5 மாதங்களில இல்லாத உயர்வு

கடந்த செப்டம்பர் மாதத்தில் ஒட்டுமொத்த GST வருவாயாக ₹1,17,010 கோடி வசூலாகி உள்ளது. இது கடந்த 5 மாதங்களில் இல்லாத அதிக வசூலாகும். தொடர்ந்து 3 மாதங்களாக ஒரு லட்சம் கோடிக்கு மேல் GST வசூலாகியுள்ளது. இது தொடர்பாக நிதியமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

செப்டம்பர் மாதத்தில் மொத்தம் ₹1,17,010 கோடி GST வசூலாகி உள்ளது. இதில் மத்திய GSTயாக ₹20,578 கோடி, மாநில GSTயாக ₹26,767 கோடி, ஒருங்கிணைந்த GST ஆக ₹60,911 கோடி (இறக்குமதி பொருள்கள் மீது வசூலிக்கப்பட்ட ₹29,555 கோடி உள்பட) & கூடுதல் (செஸ்) வரியாக ₹8,754 கோடியும் (இறக்குமதி பொருள்களுக்கா –க வசூலிக்கப்பட்ட ₹623 கோடி உள்பட) வசூலாகியுள்ளது.

செப்டம்பர் மாத வருவாய் கடந்த ஆண்டு இதே காலத்தில் கிடைத்த GST வருவாயைவிட 23% அதிகமாகும். கடந்தாண்டு இதேமாதத்தில் கிடைத்ததைவிட, இந்த மாதத்தில் பொருள்கள்மூலம் கிடைக்கும் வருவாய் 30% அதிகம் & உள்நாட்டு பரிவர்த்தனைமூலம் கிடைக்கும் வருவாய் (சேவை இறக்குமதி உள்பட) 20% அதிகமாகும். செப்டம்பர் 2019–இல் ₹91,916 கோடி வருவாய் கிடைத்த நிலையில் 2020 செப்டம்பரிலேயே அதைவிட 4% அதிக வருவாய் கிடைத்தது.

நடப்பாண்டின் இரண்டாவது காலாண்டில், மாதாந்திர மொத்த GST வசூல் சராசரி ₹1.15 லட்சம் கோடி. இது ஆண்டின் முதல் காலாண்டில் கிடைத்த மாதாந்திர வசூலான ₹1.10 லட்சம் கோடியைவிட 5% அதிகமாகும். இது நாட்டின் பொருளாதாரம் வேகமாக எழுச்சி பெற்றுவருவதை தெளிவாக உணர்த்துகிறது.

பொருளாதார வளர்ச்சியுடன், வரி ஏய்ப்பு தடுப்பு நடவடிக்கைகள், குறிப்பாக போலி ரசீது தயாரிப்பவர்களுக்கு எதிரான நடவடிக்கை GST வசூல் அதிகரிப்புக்கு காரணமாகியுள்ளது. வருவாய்க்கான இந்தச் சாதகமான போக்கு தொடர்வதுடன் ஆண்டின் இரண்டாவது அரை ஆண்டில் கூடுதல் வருவாய் கிடைக்கச் செய்யும். மாநிலங்களின் GST வருவாய்ப் பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கான இழப்பீடாக ₹22 ஆயிரம் கோடியையும் மத்திய அரசு விடுவித்துள்ளது.

தமிழ்நாட்டின் GST வருவாய் கடந்த ஆண்டு செப்டம்பரில் ₹6,454 கோடி இருந்த நிலையில் இந்த ஆண்டு செப்டம்பரில் 21% அதிகரித்து ₹7,842 கோடி வசூலாகியுள்ளது என மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

5. தமிழகத்துக்கு ₹1,112 கோடி கடன்: உலக வங்கி ஒப்புதல்

தமிழகத்துக்கு ₹1,112 கோடி கடன் வழங்க உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை நகரை பருவநிலை மாற்றங்களுக்கு உகந்த அதிக பசுமை நிறைந்ததாகவும், வாழ்வதற்குத் தகுதியுள்ள வகையிலும் உலகத் தரத்திலான நகரமாக உருவாக்கும் தமிழக அரசின் திட்டத்துக்கு உதவும் வகையிலும் இந்தக் கடனை வழங்க ஒப்புதல் அளித்திருப்பதாக உலக வங்கி அதன் செயல் இயக்குநர்கள் குழுவிடம் தெரிவித்தது.

இதுதவிர, மேகாலய மாநிலத்தில் சுகாதார சேவைகளைத் தரம் உயர்த்தவும், கரோனா பாதிப்பு உள்ளிட்ட அவசரகால மருத்துவத் தேவைகளைக் கையாளும் வகையில் மாநிலத்தின் திறனை மேம்படுத்தும் வகையிலான திட்டத்துக்காக அந்த மாநிலத்துக்கு ₹296 கோடி கடன் வழங்கவும் உலக வங்கி ஒப்புதல் அளித்திருக்கிறது.

இதுதொடர்பாக உலக வங்கி தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது: சுமார் ஒரு கோடி மக்கள்தொகையுடன் இந்தியாவில் நான்காவது அதிக மக்கள்தொகை கொண்ட மாநகரமாக சென்னை உள்ளது. மாநிலத்தின் பொருளாதார மையமாக விளங்கும் சென்னை, இயற்கைப்பேரிடர், பருவநிலைமாற்ற பாதிப்புகளால் அதிகம் பாதிப்புறக்கூடிய நகரமாகவும் உள்ளது.

இத்தகைய சூழலில் 'சென்னை நகர கூட்டுறவு: நிலைத்த நகர்ப்புற சேவைகள் திட்டம்' என்ற திட்டத்தின்கீழ் ₹1,112 கோடி கடன் வழங்க ஒப்புதல் அளித்திருப்பது, நகரின் சேவைத் துறைகளின் நிதி நிலையை மேம்படுத்த உதவும் என்பதோடு, குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்றுதல், போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய 4 முக்கிய நகர்ப்புற சேவைகளின் தரத்தை மேம்படுத்தவும் உதவும். மேகாலயத்துக்கு வழங்கப்பட இருக்கும் கடன்மூலம், அந்த மாநிலத்தில் உள்ள 11 மாவட்டங்களும் பயன்பெறும். அதோடு, மாநிலத்தின் ஆரம்ப சுகாதார மையம் மற்றும் இரண்டாம் நிலை சுகாதார மைய ஊழியர்கள், அவர்களுடைய மேலாண்மைத் திறன் மற்றும் சிகிச்சையளிக்கும் திறன் ஆகியவற்றை மேம்படுத்திக்கொள்ளவும் உதவும். குறிப்பாக, மாநில மருத்துவ சுகாதார சேவைகளை பெண்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள இந்தத் திட்டம் உதவும்.

மேகாலயத்தில் 5 வயதுக்குள்பட்ட இறப்பு விகிதம் 2019–20–ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 40 உயிரிழப்புகள் என்ற விகிதத்தில் இருந்தது. இது முந்தைய 2015–16–ஆம் ஆண்டு கணக்கெடுப்பைக் காட்டிலும் சற்று கூடுதலாகும். இந்த விவகாரத்தில் மாநிலத்தின் ஒருசில மாவட்டங்கள் சிறப்பாக செயல்பட்டபோதும், கிராமப்புறங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும் இடையேயான வேறுபாடு தொடர்கிறது.

பெரும்பாலான சுகாதாரக் குறியீடுகளில் நகர்ப்புறங்கள் சிறப்பாக செயல்படுகின்றன. அதே நேரம், தொற்றும் தன்மை அல்லாத உயர் ரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இதய நோய் மற்றும் புற்றுநோய் பாதிப்புகள் மேகலாயத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று உலக வங்கி செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

6. பாதுகாப்பு தொழில்துறைக்கான கூட்டு செயற்குழு: இந்தியா – அமெரிக்கா முடிவு

இந்தியா மற்றும் அமெரிக்க பாதுகாப்புத் தொழில்துறைகள் தொடர்பான கூட்டு செயற்குழுவை அமைக்க இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன. இதுகுறித்து பாதுகாப்புத் துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்ததாவ –து: கடந்த ஐந்து நாள்களாக தில்லியில் நடைபெற்று வந்த இந்திய – அமெரிக்க தொழில்துறை பாதுகாப்பு மாநாடு நிறைவடைந்தது.

பாதுகாப்பு தொடர்பான தளவாடங்கள் மற்றும் மென்பொருள்களை உருவாக்கி வரும் இருநாட்டு நிறுவனங்கள், தங்களிடையே முக்கியத்து –வம் வாய்ந்த இரகசியத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான வரையறைகளை உருவாக்கும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

பாதுகாப்பு உற்பத்தியில இந்திய தனியார் நிறுவனங்களும் ஈடுபட்டு வரும் நிலையில், அவர்களிடம் ராணுவ ரகசியத் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கான நெறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று முன்னணி அமெரிக்க பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்கள் வலியுறுத்தி வந்தன. அதனை நிறைவு செய்வதற்காக நடத்தப்பட்ட இந்த மாநாட்டில், இதுதொடர்பான கூட்டு செயற்குழுவை அமைக்க கொள்கை ரீதியில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

அந்தக் குழு அவ்வப்போது சந்தித்து, அதிநவீன தொழில்நுட்பங்களை பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்கள் தங்களிடையே பரிமாறிக் கொள்வதற்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் நிர்ணயிக்கும் என்று பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

7. ஜல் ஜீவன் செயலி: பிரதமர் மோடி இன்று அறிமுகம்

ஜல் ஜீவன் செயலியை பிரதமர் நரேந்திர மோடி தொடக்கிவைத்தார். இதன்மூலம் இந்தியாவில் செயல்படுத்தப்படும் குடிநீர் விநியோகத் திட்டம் மேலும் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுவதுடன், அதன் மூலம் பயனடைபவர்களுக்கும் போதிய விழிப்புணர்வு கிடைக்கும்.

ஜல் ஜீவன் இயக்க கிராம பஞ்சாயத்துகள் மற்றும் பானி சமிதிகளுடன் (நீர் வழங்கும் குழுக்கள்) காணொலி முறையில் கலந்துரையாடுகிறர். மேலும், உலகின் எந்தப் பகுதியில் இருக்கும் தனிநபர்களும் நிறுவனங்களும் இந்தியாவில் குடிநீர் விநியோகத் திட்டத்துக்கு நிதியதவி அளிக்கும் ராஷ்ட்ரீய ஜல் ஜீவன் கோஷ் திட்டத்தையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார். பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தமான தண்ணீரை குழாய் மூலம் வழங்க 2019 ஆகஸ்ட் 15–இல் ஜல் ஜீவன் இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது 3.23 கோடி (17%) கிராமப்புற வீடுகளுக்கு மட்டுமே குழாய் வழி குடிநீர் இணைப்பு வழங்கப்படுகிறது.

கடந்த ஈராண்டுகளில், கரோனா தொற்றுநோய் நெருக்கடி இருந்த போதிலும் சுமார் 8.26 கோடி (43%) கிராமப்புற குடும்பங்கள் தங்கள் வீடுகளில் குழாய் வழி தண்ணீர் விநியோகத்தைப் பெற்றுள்ளன.

---

8. ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: மானு பாக்கருக்கு தங்கம்; இஷா, கேன்மேட், ருத்ராங்ஷுக்கு வெள்ளி

ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய நட்சத்திர வீராங்கனை மானு பாக்கர் தங்கம் வென்றார்.

இஷா சிங், கேன்மட் செகான், ஆடவர் பிரிவில் ருத்ராங்ஷ் பட்டீல் ஆகியோர் வெள்ளி வென்றனர். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்பட்ட இளம் வீராங்கனை மானு பாக்கர் எந்தப் பதக்கமும் வெல்லாமல் ஏமாற்றத்தை தந்தார். இது இந்திய தரப்புக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் பெரு நாட்டு தலைநகர் லீமாவில் நடைபெற்ற ஜூனியர் உலகக் கோப்பையில் மகளிர் 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் தங்கப்பதக்கம் வென்றார். மற்றொரு வீராங்கனையான இஷா சிங் 240 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார். ஆடவர் 10 மீ ஏர் ரைபிள் பிரிவில் 250 புள்ளிகளை குவித்து வெள்ளி வென்றார் ருத்ராங்ஷ் சிங்.

அமெரிக்க வீரர் வில்லியம் ஷானர் தங்கம் வென்றார். மகளிர் 10 மீ ஏர் ரைபிள் பிரிவில் ரமிதா 229.1 புள்ளிகள் உடன் வெண்கலம் வென்றார். மகளிர் ஸ்கீட் பிரிவில் நட்சத்திர இளம் வீராங்கனை கேன்மட் செகான் வெள்ளி வென்றார், பர்த் மகிஜா, தனுஷ் ஆகியோர் முறையே 7, 8ஆம் இடங்களைப் பெற்றனர்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு பிறகு நடைபெறும் இப்போட்டியில் 32 நாடுகளைச் சேர்ந்த 370 பேர் பங்கேற்றுள்ளனர்.

---

9. ஆசிய டேபிள் டென்னிஸ்: இந்தியாவுக்கு வெண்கலம்

ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலம் வென்று வரலாறு படைத்தது இந்திய ஆடவர் அணி. கத்தார் நாட்டு தலைநகர் தோகாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆடவர் பிரிவு அரையிறுதி ஆட்டம் நடைபெற்றது. இதில் வலுவான கொரியாவுடன் மோதியது இந்தியா. இதில் இந்திய அணி 0–3 என்ற புள்ளிக்கணக்கில் தோல்வியடைந்தது. எனினும் அரையிறுதிக்கு தகுதிபெற்ற நிலையில் வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது.

இந்திய வீரர் சத்யன் 5–11, 12–10, 8–11, 5–11 என்ற கேம் கணக்கில் கொரியவீரர் ஹூஜின் ஜங்கிடம் தோல்வியடைந்தார். மற்றொரு வீரரான சரத் கமல் 7–11, 15–13, 8–11, 11–6, 1–9 என்ற கேம் கணக்கில் கொரியாவின் லீ சாங்ஸுவிடம் தோல்வியடைந்தார். ஹர்மீத் தேசாய் 11–4, 9–11, 8–11, 11–6, 13–11 என்ற கேம் கணக்கில் சியுங்மின் சோவிடம் தோல்வியடைந்தார். முன்னதாக காலிறுதியில் ஈரான் அணியை 3–1 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது இந்தியா.

கடந்த 1976ஆம் ஆண்டுக்கு பின் ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா வெல்லும் இரண்டாவது பதக்கம் இதுவாகும்.

மகளிர் அணி 5ஆம் இடம்: 5 முதல் 10 இடங்களுக்கான போட்டியில் இந்திய மகளிர் அணி 3–1 என்ற புள்ளிக்கணக்கில் தாய்லாந்து அணியை வீழ்த்தி 5–ஆம் இடத்தைப் பெற்றது. சுதிர்தா முகர்ஜி, ஸ்ரீஜா அகுலா, ஆகியோர் ஒற்றையர் ஆட்டங்களில் வென்றனர். அர்ச்சனா கமத் போராடி தோல்வியடைந்தார்.

---

10. முதியோர் நல மருத்துவர் VS நடராஜனுக்கு தேசிய விருது

முதியோர் நல மருத்துவ சேவைகளை சிறப்புற மேற்கொண்டு வருவதற்–காக முதியோர் நல மருத்துவ நிபுணர் டாக்டர் வி எஸ் நடராஜனுக்கு தேசிய விருது வழங்கப்பட்டது. தில்லியில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு 'வயோஷ்ரேஷ்தா சமான்' என்ற அவ்விருதை வி எஸ் நடராஜனுக்கு வழங்கி கௌரவித்தார்.

மத்திய அரசின் சமூக நீதித்துறை மற்றும் அதிகாரம் அளித்தல் துறை சார்பில் ஒவ்வோர் ஆண்டும் உலக முதியோர் தினமான அக்.1ஆம் தேதி முதியோர் நலனுக்கு சிறப்பான சேவையாற்றுபவர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அதன்படி நிகழாண்டில் 13 தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. அதில், முதியோர் நல சிகிச்சைகளை விரிவாக மேற்கொண்டமைக்காக வி எஸ் நடராஜன் முதியோர் நல அறக்கட்டளைக்கும் விருது வழங்கப்பட்டது.

'வருமுன் காப்போம்' என்ற தலைப்பில் பல சொற்பொழிவுகள் மற்றும் முதியோர் நல மருத்துவ முகாம்களை நடத்தியதுடன், சுமார் 1,853 முதியோர்களுக்கு இலவசமாக நிமோனியா தடுப்பூசியும் அந்த அறக்கட்டளை சார்பில் செலுத்தப்பட்டுள்ளது.

---

11. மகிளா சக்தி கேந்திரா திட்டம் திரும்பப்பெறப்பட்டது புதிய இரண்டு திட்டங்கள் அறிமுகம்: சமூகநலத்துறை இயக்குநர் சுற்றறிக்கை

மகிளா சக்தி கேந்திரா திட்டம் திரும்பப் பெறப்பட்டு அதற்கு பதிலாக சம்பல் மற்றும் சமர்த்தியா என்ற புதிய இரண்டு திட்டங்கள் அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக சமூகநலத்துறை இயக்குநர் டி ரத்னா அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர்களுக்கு அவரனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: மகிளா சக்தி கேந்திரா திட்டம் செப்.30ஆம் தேதி வரை மட்டுமே நீட்டிக்கப்பட்டது. இந்த திட்டம் திரும்பப்பெறப்பட்டு அதற்கு பதிலாக புதிய திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதுகுறித்து 31.8.2021 அன்று அகமதாபாத்தில் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

இதில், மகிளா சக்தி கேந்திரா திட்டத்தை இரண்டாக பிரித்து பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் திட்டங்களை கொண்ட சம்பல் திட்டம் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் திடங்களை கொண்ட சமர்த்தியா திட்டம் என்ற இரண்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. மகிளா சக்தி கேந்திரா திட்டத்திற்கு பதிலாக பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் சமர்த்தியா திட்டம் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு 2024ம் ஆண்டு வரை அமலில் இருக்கும். மேலும், கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட புதிய திட்டத்தின் முக்கிய கூறுகளாக, பெண்களை மேம்படுத்துவதற்கான தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான மையங்கள் அமைக்க வேண்டும்.

சுகாதாரம், பாலினம் மற்றும் ஊட்டச்சத்து, நிதி, கல்வியறிவு, திறன் மேம்பாடு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும். நிர்வாகப் பணிக்கான ஊழியர்களை திட்டங்களை செயல்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும். மற்ற அமைச்சகங்கள் மற்றும் துறைகளின் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். வன்முறை மற்றும் துயரங்களை எதிர்கொள்ளும் பெண்களுக்கு குறைதீர்ப்பை விரைவுபடுத்துவது உள்ளிட்ட பல்வேறு புதிய திட்டங்கள் இதன்மூலம் செயல்பாட்டிற்கு வரும்.

மகிளா சக்தி கேந்திரா குழுவின் ஆட்சேர்ப்பு அதிகாரி என்ற வகையில் கலெக்டர்கள் அவரவர் மாவட்டங்களில் உள்ள இந்த குழுவின் ஊழியர்களை அவர்களது பணியில் இருந்து உடனே விடுவிக்க வேண்டும். மேலும், அதற்கான கோப்புகள் மற்றும் ஆவணங்களை அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

---

12. 2021 அக்.2 – 'மகாத்மா' காந்தியடிகளின் 153ஆவது பிறந்தநாள்.

---

13. உலக விண்வெளி வாரம்

ஒவ்வோர் ஆண்டும் அக்.4 முதல் 10ஆம் தேதி வரை உலக விண்வெளி வாரம் கொண்டாடப்படுகிறது.

---

14. காந்தி பிறந்தநாளையொட்டி – லடாக்கில் பறக்கவிடப்பட்ட உலகின் மிகப்பெரிய தேசியக்கொடி:

மகாத்மா காந்தி பிறந்தநாளை ஒட்டி, முழுக்க முழுக்க கதர் துணியால் நெய்யப்பட்ட உலகிலேயே மிகப்பெரிய அளவிலான தேசியக் கொடி லடாக்கில் நேற்று பறக்கவிடப்பட்டது. தேசத் தந்தை மகாத்மா காந்தியின் 153ஆவது பிறந்தநாள் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, இந்திய இராணுவத்தின் பொறியாளர்களால் கதர் துணியால் நெய்யப்பட்ட மிகப்பெரிய தேசியக்கொடி, லடாக்கின் லே பகுதியில் பறக்கவிடப்பட்டது.

225 மீ நீளமும், 150 மீ அகலமும் கொண்ட இக்கொடிதான், உலகின் மிகப் பெரிய தேசியக்கொடியாகும். இக்கொடியின் மொத்த எடை 1000 கிலோ.

லடாக் துணைநிலை ஆளுநர் ஆர் கே மாத்தூர் இந்த தேசியக் கொடியை திறந்து வைத்தார். இந்திய இராணுவத்தலைமை தளபதி மனோஜ் முகுந்த் நரவனே முன்னிலையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

---

15. மத்திய அரசின் 'ஜல் ஜீவன்' திட்டத்தின்மூலம் எனது சகோதரிகளுக்கு தேவையான குடிநீர் கிடைத்துள்ளது: வெள்ளேரி ஊராட்சி மன்றத் தலைவருடனான கலந்துரையாடலில் பிரதமர் மோடி பெருமிதம்

'ஜல் ஜீவன்' திட்டத்தின்மூலம் எனது சகோதரிகளுக்கு அவர்கள் வெகு காலமாக எதிர்பார்த்திருந்த, தேவையான குடிநீர் கிடைத்துள்ளது என பிரதமர் மோடி பெருமையுடன் தெரிவித்தார். மத்திய அரசின் 'ஜல் ஜீவன்' திட்டத்தின்கீழ், இந்தியாவில் 100% குடிநீர் இணைப்பு கொடுத்துள்ள 5

ஊராட்சிகளைத் தேர்வு செய்து, அந்த கிராம மக்களிடம் காணொலிக் காட்சி வாயிலாக பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட ஐந்து ஊராட்சிகளில், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை அடுத்த வெள்ளேரி ஊராட்சியும் அடங்கும். மத்திய அரசின் 'ஜல் ஜீவன்' திட்டத்தின்கீழ் வெள்ளேரி ஊராட்சியில் உள்ள 412 வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டு, 100 சதவீதம் குடிநீர் தேவையை பூர்த்திசெய்த ஊராட்சியாக திகழ்கிறது.

---

16. இலட்சத்தீவில் 'மகாத்மா' காந்தியின் முதல் சிலை: இராஜ்நாத் சிங் திறந்துவைத்தார்

இலட்சத்தீவில் 'மகாத்மா' காந்தியின் முதல்சிலையை பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் திறந்துவைத்தார். இதுவே நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களை நினைவுகூரும் விதமாக லட்சத்தீவில் திறக்கப்பட்ட முதல் சிலையாகும். இரு நாள் பயணமாக பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலட்சத்தீவு சென்றார்.

---

17. இலங்கை இந்திய ராணுவம் கூட்டுப் பயிற்சி

இந்தியா இலங்கை ராணுவங்களுக்கு இடையேயான கூட்டுப் பயிற்சி, இலங்கை அம்பாறை பகுதியில் உள்ள போர்ப் பயிற்சிப் பள்ளியில் அக்.4 முதல் 15 வரையில் நடைபெறவுள்ளது.

இருநாட்டு ராணுவங்கள் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்துவதுட –ன், இருதரப்பு போர் ஆயத்த நிலையை வலுப்படுத்துவதோடு, தீவிரவாத மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் சிறந்த அணுகுமுறையை பரிமாறிக் கொள்வதே இந்தக் கூட்டுப் பயிற்சியின் நோக்கமாகும்.

சர்வதேச பயங்கரவாத எதிர்ப்புச் சூழலில் இருநாட்டு ராணுவத்தினருக்கு இடையே இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, 7ஆவது மித்ரா சக்தி கூட்டுப் பயிற்சி 2019'இல் மகாராஷ்டிர மாநிலம் புனேயில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

---

18. அலிபாக் வெள்ளை வெங்காயத்துக்கு புவிசார் குறியீடு

மகாராஷ்டிர, ராய்கட் மாவட்டத்தில் உள்ள புகழ்பெற்ற அலிபாக் வெள்ளை வெங்காயத்துக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வெள்ளை வெங்காயத்தின் வர்த்தகம் அதிகரிக்கக்கூடும் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறுகையில், 'மருத்துவ குணம்கொண்ட வெள்ளை வெங்காயம் இருதய நோய்களுக்கும் உடலில் கொழுப்புச் சத்தைக் கட்டுப்படுத்துவதிலும் இன்சுலின் சுரக்க வைப்பதிலும் பயன்படுவதாக 1883ஆம் ஆண்டு அரசு குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அலிபாக் வெள்ளை வெங்காயத்துக்கு புவிசார் குறியீடு பெறுவதற்காக மாநில வேளாண் துறையும் கொங்கண் வேளாண் பல்கலைக்கழகமும் விண்ணப்பத்தை 2019, ஜனவரி 15ஆம் தேதி சமர்ப்பித்தன. வெள்ளை வெங்காயம் பயிரிடுவதால் ஏக்கருக்கு சுமார் ₹2 இலட்சம் வருவாய் கிடைக்கும்' என்றனர்.

---

1. லாஸ்கர்–டிபேக்கி விருதுடன் தொடர்புடைய துறை எது?

அ) இலக்கியம்

ஆ) விளையாட்டு

இ) அறிவியல் ☑

ஈ) சமூக சேவை

✓ மனித நலத்தை மேம்படுத்துதற்கு உதவிய உயிரியல் மற்றும் மருத்துவ கண்டுபிடிப்புகள் அறிவியலாளர்களை கௌரவிப்பதற்காக மேரி மற்றும் ஆல்பர்ட் லாஸ்கர் ஆகியோர் 1945ஆம் ஆண்டில் லாஸ்கர் விருதுகளை நிறுவினர். இந்த ஆண்டு, கேடலின் கரிகோ மற்றும் மருத்துவர் ட்ரூ வெய்ஸ்மேன் ஆகிய இரு அறிவியலாளர்களுக்கு, COVID–19 mRNA தடுப்பூசிகளில் பயன்படுத்தப்படும் முக்கிய தொழில்நுட்பத்தை உருவாக்–கியதற்காக $250,000 மதிப்பிலான லாஸ்கர்–டிபேக்கி மருத்துவ ஆராய்ச்சி விருது வழங்கப்பட்டுள்ளது.

✓ பைசர்–பயோஎன்டெக் மற்றும் மாடர்னா COVID–19 தடுப்பூசிகளில் அடிப்படைகளாக மெசஞ்சர் RNA (mRNA) பயன்படுத்தப்படுகிறது.

---

2. அண்மையில் 4 ஆண்டுகளை நிறைவு செய்த சௌபாக்கியா திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) எரிசக்தி அமைச்சகம் ☑

இ) விவசாயம் & விவசாயிகள் நல அமைச்சகம்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ பிரதம அமைச்சர் சகஜ் பிஜிலி ஹர் கர் யோஜனா – சௌபாக்யா என்பது உலகின் மிகப்பெரிய வீட்டு மின்மயமாக்கல் திட்டங்களுள் ஒன்றாகும். இது பிரதமர் மோடியால் 2017 செப்டம்பர்.25 அன்று அறிவிக்கப்பட்டது. நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்குதல் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள அனைத்து மின் இணைப்பு இல்லாத வீடுகளுக்கும் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை வீடுகளுக்கும் மின்–இணைப்பு வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

✓ சௌபாக்யா தொடங்கப்பட்டதிலிருந்து, 2021 மார்ச் வரை 2.82 கோடி வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

3. அல்டிமேட் லடாக் சைக்கிள் ஓட்டுதல் சவாலின் இரண்டாவது பதிப்பை ஏற்பாடு செய்துள்ள அமைப்பு எது?

அ) இந்திய இராணுவம்

ஆ) இந்திய கடற்படை

இ) லடாக் காவல்துறை ☑

ஈ) இந்தியன் ஆயில்

✓ விடுதலையின் அம்ருத் மகோத்சவம் மற்றும் பிட் இந்தியா இயக்கத்தின் ஒருபகுதியாக, அல்டிமேட் லடாக் மிதிவண்டி சவாலின் 2ஆவது பதிப்பை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு, இளையோர் நலத்துறை மற்றும் விளையாட்டு அமைச்சர் அனுராக்சிங் தாக்கூர் கொடியசைத்துத் துவக்கி வைத்தார். சைக்கிளிங் பெடரேஷன் ஆப் இந்தியாவுடன் இணைந்து லடாக் காவல்துறை இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

---

4. தமிழ்நாட்டில் உள்ள பின்வரும் எந்த ரயில் நிலையம், முழுவதும் சூரிய ஆற்றலால் இயங்கும் ரயில் நிலையமாக மாறியுள்ளது?

அ) சென்னை சென்ட்ரல் ☑

ஆ) சேலம் சந்திப்பு

இ) விருத்தாசலம் சந்திப்பு

ஈ) திருநெல்வேலி சந்திப்பு

✓ இந்திய இரயில்வேயின் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம், டாக்டர் எம் ஜி இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம், முழு சூரிய சக்தியால் இயங்கும் தமிழ்நாட்டின் முதல் இரயில் நிலையமாக மாறியுள்ளது. இந்த நிலையம் அதன் அனைத்து ஆற்றல் தேவைகளையும், அதன் கூரையில் நிறுவப்பட்ட சோலார் பேனல்கள்மூலம் பூர்த்திசெய்கிறது. இந்நிலையம், 1.5 MW உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது.

---

5. 'தேசிய கூட்டுறவு மாநாடு' ஏற்பாடு செய்யப்பட்ட நகரம் எது?

அ) மும்பை

ஆ) புது தில்லி ☑

இ) வாரணாசி

ஈ) காந்தி நகர்



✓ மத்திய உள்துறை அமைச்சரும் கூட்டுறவு அமைச்சருமான அமித் ஷா, புது தில்லியில் நடைபெற்ற, 'தேசிய கூட்டுறவு மாநாட்டில்' (சேகரிதா சம்மேளன்) தலைமை விருந்தினராக கலந்துகொண்டார்.

✓ மத்திய அரசு, விரைவில் ஒரு புதிய கூட்டுறவு கொள்கையை அறிமுகப்ப–டுத்தி, கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவதற்காக மாநிலங்களுடன் இணைந்து செயல்படும் என்றும் அவர் அறிவித்தார். கூட்டுறவு பொது சேவை மையங்கள், தேசிய தரவுத்தளம் மற்றும் தேசிய கூட்டுறவு பல்கலைக்கழகம் ஆகியவற்றை அமைப்பதில் தற்போது அரசாங்கம் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

---

6. QUAD தலைவர்களின் முதல் உச்சிமாநாட்டை நடத்திய நகரம் எது?

அ) வாஷிங்டன் ☑

ஆ) தாவோஸ்

இ) மெல்போர்ன்

ஈ) புது தில்லி



✓ QUAD தலைவர்களின் முதல் நேரடிச்சந்திப்பானது சமீபத்தில் அமெரிக்க அதிபர் ஜோ பிடனால் வாஷிங்டன் டிசியில் நடத்தப்பெற்றது. இந்தச் சந்திப்புக்காக இந்தியப் பிரதமர் மோடி மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்காட் மோரிசன் மற்றும் ஜப்பானைச் சேர்ந்த யோஷிஹிட் சுகா ஆகியோர் அந்நகரத்திற்கு சென்றனர். 2017ஆம் ஆண்டில், இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள், QUAD கூட்டணியை அமைத்தன.

---

7. 2021–உலக மருந்தாளுநர் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Leaving No one behind

ஆ) Pharmacy: Always Trusted for Your Health ☑

இ) Pharmacists are our Saviours

ஈ) Sustainable Pharmacy

✓ உலக மருந்தாளுநர் நாளானது மருந்தாளுநர்களின் பங்கை அங்கீகரிக்–கும் நோக்கில் செப்டம்பர்.25ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.

✓ இந்நாளை, சர்வதேச மருந்தியல் கூட்டமைப்பு (FIP) நிறுவியது. 1912'இல் FIP நிறுவப்பட்டதும் இதே நாளில்தான். FIP என்பது மருந்தாளுநர்கள் மற்றும் மருந்து அறிவியலாளர்களின் தேசிய சங்கங்களின் கூட்டமைப்பு ஆகும். "Pharmacy: Always Trusted for Your Health" என்பது 2021 உலக மருந்தாளுநர் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

8. வங்கபந்து–பாபு டிஜிட்டல் கண்காட்சி தொடங்கப்பட்ட நாடு எது?

அ) இந்தியா

ஆ) வங்காளதேசம் ☑

இ) இலங்கை

ஈ) நேபாளம்



✓ வங்கபந்து–பாபு டிஜிட்டல் கண்காட்சியானது சமீபத்தில் வங்கதேசத்தின் டாகாவில் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டது. வங்கதேசத்தின் தேசத்தின் தந்தையான வங்கபந்து ஷேக் முஜிபுர் இரஹ்மான் மற்றும் மகாத்மா காந்தியின் வாழ்க்கையை இந்தக் கண்காட்சி காட்டுகிறது.

✓ இக்கண்காட்சி, வங்கபந்து நூற்றாண்டு மற்றும் 'மகாத்மா' காந்தியின் 150 ஆண்டுகள் பிறந்தநாள் நிறைவு மற்றும் இந்தியா–வங்கதேச இருதரப்பு உறவுகளின் பொன்விழா ஆகியவற்றிய நினைவுகூரும் விதமாக இரு அரசுகளால் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது.

---

9. சமீபத்தில் அறிவிக்கப்பட்ட 'AUKUS' என்ற பாதுகாப்பு கூட்டணி உள்ளடக்கிய நாடுகளின் எண்ணிக்கை என்ன?

அ) மூன்று ☑



ஆ) நான்கு

இ) ஐந்து

ஈ) பத்து

✓ 2021 செப் மாதத்தில், அமெரிக்க அதிபர் ஜோ பிடன், ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் மற்றும் பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர் இணைந்து முத்தரப்பு பாதுகாப்பு கூட்டணியான 'AUKUS'ஐ அறிவித்தனர். இந்தியா அல்லது ஜப்பானை இம்முத்தரப்பு கூட்டணியில் சேர்ப்பதை அமெரிக்கா விரும்பவில்லை. இந்த கூட்டணி இந்தோ–பசிபிக் பகுதியில் சீனாவை எதிர்கொள்ளும் ஒரு முயற்சியாக பார்க்கப்படுகிறது.

✓ இது, அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் முதல்முறையாக அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும் தொழில்நுட்பத்தை ஆஸ்திரேலிய நாட்டுக்கு வழங்க அனுமதிக்கும்.

---

10. பன்னாட்டு துளிர்மையங்களின் தரவரிசையில், வளர்ந்துவரும் சூழலமைப்பில் முதலிடத்திலுள்ள இந்திய நகரம் எது?

அ) மும்பை ☑



ஆ) பெங்களூரு

இ) சென்னை

ஈ) திருவனந்தபுரம்

✓ பன்னாட்டு துளிர்மையங்களின் தரவரிசையில், வளர்ந்துவரும் சூழல் அமைப்பில் மும்பை தனது முதலிடத்தை தக்கவைத்துக்கொண்டது. இத் தரவரிசை, ஸ்டார்ட்அப் ஜெனோமின் வருடாந்திர உலகளாவிய துளிர் நிறுவன சூழலறிக்கை – 2021'க்காக தொகுக்கப்பட்டுள்ளது. லண்டன், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக நியூயார்க்குடன் இணைந்து 2ஆம் இடத்தைப் பகிர்ந்துகொண்டது.

✓ உலக அளவில் பெங்களூரு 23ஆவது இடத்திலும், தில்லி 36ஆவது இடத்திலும் உள்ளது. சிலிக்கான் பள்ளத்தாக்குக்கு வெளியே ஒரு தொழில்நுட்ப துளிர்மையத்தை அமைப்பதற்கு இலண்டனைச் சிறந்த இடமாக இந்த அறிக்கை கூறியுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. புவி கண்காணிப்புக்காக இந்த ஆண்டு இறுதிக்குள் 3 செயற்கைக் கோள்களை ஏவ இஸ்ரோ திட்டம்

புவி கண்காணிப்புக்காக இந்த ஆண்டு இறுதிக்குள் 3 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) புவி கண்காணிப்பு தொடர்பாக பல்வேறு கட்ட ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, நடப்பு ஆண்டின் இறுதி காலாண்டில் இஓஎஸ்–4 (ரிசாட்–1ஏ) மற்றும் இஓஎஸ்–6 (ஓசோன் சாட்–3) ஆகிய 2 செயற்கைக் கோள்களை PSLV ரக ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, முதல் சிறிய வகை ராக்கெட் (எஸ்எஸ்எல்வி) மூலமாக இஓஎஸ்–2 என்ற மைக்ரோசாட் செயற்கைக் கோளும் செலுத்தப்பட உள்ளது. எஸ்எஸ்எல்வி ராக்கெட்டில் ஏவப்படும் செயற்கைக் கோளின் செயல்பாடு தகுதிகுறித்து பல்வேறு கட்ட சோதனைகள் நிறைவு பெற்றுள்ளன. இந்த 3 செயற்கைக் கோள்களும் விவசாயம், உள்நாட்டு விவகாரங்கள், புவி அறிவியல், சுற்றுச்சூழல், வனம் உள்ளிட்ட துறைகள் சார்ந்த கண்காணிப்புக்கு பயன்படுத்தப்பட உள்ளன. இவை இந்தியாவின் நிலப்பரப்பு மற்றும் அதன் எல்லைப் பகுதிகளை துல்லியமாக கண்காணிக்கும். தெற்காசிய கடல் பகுதிகளில் கப்பல்கள், போர் விமானங்கள் ஊடுருவல் உள்ளதா என எதிரிகளின் நடமாட்டத்தை கணித்துக் கூறும். பேரிடர் மேலாண்மை, விவசாயம், காடுகள் பாதுகாப்புக்கு பயன்படும்.

---

2. எண்ணிம சுகாதார அட்டை: புரிந்துகொள்வது எப்படி?

சமீபத்தில், 'ஆயுஷ்மான் பாரத் எண்ணிம இயக்க'த்தைப் பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். இதன்படி, இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் 'எண்ணிம சுகாதார அட்டை' இலவசமாக வழங்கப்பட இருக்கிறது. நாட்டில் சுகாதார வசதிகளை வலுப்படுத்தும் இயக்கத்தின் நீட்சி இது. ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் சுகாதாரப் பதிவை எண்ணிம முறையில் பாதுகாக்கும் இப்புதுக்கருவியை எப்படிப் புரிந்துகொள்வது?

'எண்ணிம சுகாதார அட்டை'யானது ஆதார் அட்டை போலவே தனித் தன்மை உடையது. பயனாளி இந்த அட்டையில் 14 இலக்க எண்ணைப் பெறுவார். இந்த எண், சுகாதாரத் துறையினருக்கு அவரை அடையாளம் காட்டும். இதில் அவருடைய உடல்நலம் தொடர்பான, உண்மையான தகவல்கள் பதிவுசெய்யப்படும்.

எந்த நோய்க்கு, எப்போது, எந்த மருத்துவமனையில், என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது, என்னென்ன பரிசோதனைகள் செய்யப்பட்டன, என்னென்ன மருந்துகள் வழங்கப்பட்டன, பிற உடல்நலப் பிரச்சினைகள் உண்டா என்பது போன்ற தகவல்கள் இதில் இருக்கும். இதன் மூலம், அவருடைய மருத்துவ வரலாற்றை முழுமையாக அறிய முடியும்.

இந்த அட்டையைக் கைபேசி எண் அல்லது ஆதார் எண் மூலம் உருவாக்கலாம். ndhm.gov.in எனும் இணையதளத்துக்குச் சென்று இதைப் பெற முடியும். இந்த அட்டையைச் சுயமாக உருவாக்க இயலாதவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனை, ஆரம்ப சுகாதார மையம், சுகாதாரம் மற்றும் குடும்பநல மையம் அல்லது பதிவுபெற்ற சுகாதார அதிகாரி மூலமும் உருவாக்கிக்கொள்ளலாம்.

தகவல்களை உள்ளிடும் முறை

எண்ணிம சுகாதார அட்டையில், பயனாளியின் மருத்துவத் தகவல்களை உள்ளிடுவதற்கு, முதலில் இந்தியாவில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், மருத்துவகங்கள், மருத்துவர்கள் ஆகியோர் பதிவுசெய்யப்படுவார்கள். இதைத் தொடர்ந்து, பயனாளி 'NDHM ஹெல்த் ரெக்கார்ட்ஸ் செயலியை'ப்பதிவிறக்கம் செய்ய வேண்டும். பயனாளியின் 14 இலக்க எண் மற்றும் கடவுச்சொல் மூலம் இதனுள் நுழையலாம்.

இந்தச் செயலியில் பயனாளி சிகிச்சை பெற்ற மருத்துவமனையை இணைத்தால், அங்குள்ள பயனாளியின் உடல்நலம் தொடர்பான தகவல்கள், அவரது கைபேசி செயலிக்கு வந்துவிடும். மருத்துவமனைக்–கான 'QR' குறியீட்டை ஸ்கேன் செய்தும் அந்தந்த மருத்துவமனையை இணைக்க முடியும்.

அடுத்தடுத்துப் பெறும் சிகிச்சை, நோயறிதல், சோதனை விவரங்கள், பிற தகவல்கள் ஆகியவற்றையும் இந்தச் செயலியில் உள்ளிடலாம். நாடெங்கிலும் உள்ள மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் எந்தவொரு மருத்துவமனையும் பயனாளியின் சுகாதார அட்டை மூலம், அவரது உடல்நலத் தகவல்களைப் பார்க்க முடியும். இதற்குப் பயனாளியின் ஒப்புதல் பெறுவது அவசியம். பயனாளி எப்போது வேண்டுமானாலும் சுகாதாரப் பதிவை நிறுத்தவோ நீக்கவோ முடியும். அவரது தகவல்கள் பகிரப்பட்ட விவரத்தையும் அறிய முடியும்.

என்னென்ன நன்மைகள்?

எண்ணிம சுகாதார அட்டையில் மிகப் பெரிய நன்மை என்னவென்றால், இதுவரை தனியொரு மருத்துவமனையில் அல்லது மருத்துவமனைக் குழுவில் மட்டுமே பதிவுசெய்யப்பட்ட பயனாளியின் சுகாதாரத் தகவல்களை இனிமேல் நாட்டின் எல்லா மருத்துவக் கட்டமைப்புகளிலும் ஒரே நேரத்தில் பகிர்ந்துகொள்ள முடியும். பயனாளி முதல்முறையாக அதைப் பயன்படுத்திய பிறகு, மறுமுறை அதே மருத்துவரிடம் வந்தாலும், வேறு மருத்துவரிடம் சென்றாலும், முந்தைய சிகிச்சைகள், மருந்துச் சீட்டுகள் மற்றும் சோதனை விவரங்களை அவருடன் எடுத்துச் செல்லத் தேவையில்லை. இந்தியாவில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்குச் சிகிச்சைக்குச் சென்றாலும், பயனாளியின் கடந்த கால சுகாதாரத் தகவல்களை இந்தத் தனித்துவமான அட்டை மூலம் தெரிந்துகொண்டு சிகிச்சை அளிப்பது எளிதாகும். மேலும், மருத்துவ ஆவணம் தொலைந்துவிட்டால் கவலையில்லை.

பழைய சோதனை அறிக்கைகள் இல்லையென்றால், எல்லாச் சோதனைகளையும் மறுபடியும் மேற்கொள்ள வேண்டியதில்லை. பிற நோயாளிகளின் ஒப்புதலுடன் பயனாளிக்குத் தெரிந்த ஒருவரின் உடல்நலப் பதிவுகளையும் அவருடைய அட்டையில் நிர்வகிக்கலாம். இது நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தும். காகிதத் தேவையைக் குறைக்கும். கோப்புகள் வைக்கும் இடம் சுருங்கிவிடும். போலி மருத்துவர்களை இனம்கண்டுவிடும். எதிர்காலத்தில் பொதுச் சுகாதார முன்னேற்றத்துக்குத் தேவையான முன்திட்ட வரைவைத் தயாரித்து, நிதி ஒதுக்கீடு செய்வதும் அத்திட்டத்தைச் செயல்படுத்துவதும் மேம்படும்.

பிரச்சினைகள் இல்லையா?

இந்த அட்டையின் தகவல் பாதுகாப்பு தொடர்பில் பயனாளிகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சம்தான் முதல் பிரச்சினை. கடந்த காலத்தில் ஆதார்

அட்டைத் தகவல்கள் திருடப்பட்ட நிகழ்வுகளை முன்வைத்து, நாட்டில் சைபர் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது என்றே வல்லுநர்கள் கவலைப்படுகின்றனர். மேலும், 'சர்வதேச ஆராய்ச்சியாளர்கள், காப்பீட்டு நிறுவனங்கள், மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள் போன்றவற்றுக்குத் திருடப்பட்ட சுகாதாரத் தகவல்கள் உதவலாம்.

தகவல்களைப் பதிவிடும்போது, மனிதத்தவறுகள் ஏற்படலாம்; தகவல்கள் விட்டுப்போகலாம்; வேண்டுமென்றே மாற்றப்படலாம். இவற்றைக் கண்காணிப்பது யார் என்ற கேள்விக்கு இதில் விடையில்லை. நோய் குறித்த இந்தப் பின்னணிகள், அந்த நபரின் நோயையும் சிகிச்சையையும் மாற்றிவிடலாம். இது அவரது உடல்நலனுக்கு ஆபத்தை வரவழைக்கலா –ம்' என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

சமீபத்தில், 'இந்தியாவில் தகவல் பாதுகாப்புக்கெனத் தனிச்சட்டம் இல்லை. 'தகவல் பாதுகாப்பு மசோதா – 2019' மட்டுமே உள்ளது. தனிச் சட்டம் இயற்றினால் மட்டுமே தகவல் தொடர்பில் தவறிழைப்பவர்களுக்கு அபராதம் அல்லது தண்டனை வழங்க முடியும்' என்கிறார் பிரபல இணையப் பாதுகாப்பு நிபுணர் பவன் துக்கல்.

அடுத்து, நாட்டில் கிராமப்புறம், கடலோரம் மற்றும் மலைவாழிடங்களில் திறன்பேசி மற்றும் இணைய வசதிகள் குறைவாகவே இருக்கும். அங்குள்ளவர்களுக்கு இந்த அட்டையின் தொழில்நுட்பத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் குறைவு. மொழி ஒரு தடையாக இருக்கும். இவை இத்திட்டத்துக்குப் பெரிய சவாலாக இருக்கும். எனவே, எண்ணிம சுகாதார அட்டையை அனைவரும் பயன்படுத்த வேண்டுமென்றால், கிராமம் தொடங்கி எல்லா அரசு மருத்துவமனைகளிலும் இணையம் சார்ந்த மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும்.

தகவல்களை உள்ளிடுபவர்கள் மற்றும் அவற்றைச் சரிபார்த்துக் கையாளும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். முன்திட்டமிடுதல் மூலம் சுகாதாரத் துறைக்குத் தேவையான நிதி ஒதுக்கி, மாநிலங்களுக்குப் பகிர்வது முக்கியம். இந்த அட்டை, இந்திய சுகாதாரத் துறையை மேம்படுத்தும் புரட்சிகர இயக்க சக்தியாக இருக்கும் என்ற பிரதமரின் அறைகூவல் உண்மையாக வேண்டுமானால், இவை அனைத்தும் அவசியமான அடிப்படைகள்.

---

3. உலக நாடுகளின் மருந்தகம் இந்தியா: உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி புகழாரம்

உலக நாடுகளின் மருந்தகமாக இந்தியா உருவெடுத்து வருகிறது என்று உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சவுமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

நான்கு மிகப்பெரிய சாதனைகளை இந்தியா படைத்திருக்கிறது. போலியோவை அறவே ஒழித்துள்ளது. பேறுகால உயிரிழப்பை கணிசமாக குறைத்துள்ளது. இதேபோல குழந்தைகள் உயிரிழப்பையும் குறைத்திருக்கிறது. நான்காவதாக உலக நாடுகளின் மருந்தகமாக இந்தியா உருவெடுத்து வருகிறது. நாடு சுதந்திரம் அடைந்த 75 ஆண்டுகளில் இந்தியா செய்த மாபெரும் சாதனைகளில் இதுவும் ஒன்றாகும்.

கரோனா பெருந்தொற்றால் உலக நாடுகளில் அத்தியாவசிய சுகாதார சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்த பெருந்தொற்றால் சர்வதேச அளவில் காசநோய், தொற்று அல்லாதநோய்கள், குழந்தைகள் பராமரிப்பில் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

எனவே வரும் மாதங்களில் எந்தெந்த சுகாதார துறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். அப்போதுதான் கரோனா பெருந்தொற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும். அதோடு அடிப்படை சுகாதார சேவைகளையும் தங்கு தடையின்றி மேற்கொள்ள முடியும்.

யுனிசெப் அறிக்கையின்படி இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடு மிகப்பெரிய பிரச்சினையாக நீடிக்கிறது. ஊட்டச்சத்து குறைபாட்டால் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. பெருந்தொற்றால் எழுந்துள்ள அசாதாரண சூழ்நிலையால் ஏராளமான குடும்பங்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே தள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினை மேலும் அதிகமாகி உள்ளது. குழந்தைகள் உயிரிழப்பு மட்டுமன்றி காசநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்பட ஊட்டச்சத்து குறைபாடு மிக முக்கிய காரணியாக உள்ளது. இந்த நேரத்தில் ஊட்டச்சத்து பிரச்சினையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறு சவுமியா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

4. இதயநோய் மருத்துவர் பினாய் ஜானுக்கு சாதனையாளர் விருது

மருத்துவத்துறையில் சாதனை நிகழ்த்திய மருத்துவர்களுக்கான சாதனையாளர் விருது சென்னை நவீன இதய மருத்துவச் சிகிச்சை (இன்டர்வென்ஷனல் கார்டியாலஜி) மருத்துவர் பினாய் ஜானுக்கு வழங்கப்பட்டுள்ளது. தில்லியில் அண்மையில் நடைபெற்ற விழாவில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 20'க்கும் மேற்பட்ட மருத்துவத் துறையில் சாதனை புரிந்த மருத்துவர்களுக்கு சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. இதய பொது மருத்துவச் சிகிச்சை பிரிவுக்கும், இதய அறுவை சிகிச்சை பிரிவுக்கும் இடையிலான நவீன இதய மருத்துவச் சிகிச்சையில் நீண்டகால அனுபவமிக்க மருத்துவர் பினாய் ஜான், மத்திய இணை அமைச்சர் பாஹன் சிங் குலாஸ்தி, முன்னாள் மக்களவை உறுப்பினர் ஜெயப்பிரதா ஆகியோரிடமிருந்து சாதனையாளர் விருதைப் பெற்றுக்கொண்டார்.

---

5. காஞ்சிபுரம் நெசவாளர்கள் 5 பேருக்கு தேசிய விருதுகள்

சிறந்த முறையில் பட்டுச்சேலையை வடிவமைத்தமைக்காக காஞ்சிபுரத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் 5 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ள –னர். இவர்களுக்கு தேசிய விருதுகளை மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. காஞ்சிபுரம் நகரீஸ்வரர் கோயில் தெருவில் மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் நெசவாளர் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையம் ஆண்டுதோறும் பட்டுச்சேலைகளில் சிறந்த வடிவமைப்பாளர்களை தேர்வுசெய்து, மத்திய அரசின் விருதுக்கு பரிந்துரை செய்கிறது.

2018–ஆம் ஆண்டுக்கான நெசவாளர்களுக்கே உரிய மத்திய அரசின் உயரிய விருதான சந்த் கபீர் விருதும், 2019–ஆம் ஆண்டுக்கான தேசிய விருது 4 நெசவாளர்களுக்கும் கிடைத்துள்ளது. இதன்மூலம் சிறந்த நெசவாளருக்கான தேசிய விருதுகளை காஞ்சிபுரத்தைச் சேர்ந்த 5 பேர் பெற்று தமிழகத்துக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

---

6. உலக மகளிர் அணி செஸ் சாம்பியன்சிப்: முதல்முறையாக இந்தியாவுக்கு பதக்கம்

ஸ்பெயினில் நடைபெற்ற பிடே உலக மகளிர் அணிகள் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்றில் இந்தியா 0–2 என்ற கணக்கில் ரஷியாவிடம் தோற்று வெள்ளி பெற்றது. இந்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு கிடைத்த முதல் பதக்கம் இதுவாகும்.

இறுதிச்சுற்றில் நடைபெற்ற ஆட்டங்களில் டி ஹரிகா – கோரியாச்கினா, ஆர் வைசாலி – அலெக்ஸாண்ட்ரா கோஸ்டெனியுக் ஆகியோர் மோதிய ஆட்டங்கள் டிரா ஆகின. தானியா சச்தேவ் – காடெரினா லாக்னோ, மேரி ஆன் கோம்ஸ் – போலினா ஷுவாலோவா ஆகியோர் மோதிய ஆட்டங்களில் இந்தியர்கள் தோல்விகண்டனர். அதேபோல், மற்றொரு ஆட்டத்தில் ஹரிகா – கோரியாச்கினாவை வீழ்த்த, மேரி ஆன் கோம்ஸ் – அலினா காஷ்லின்ஸ்கயா ஆகியோர் மோதிய ஆட்டம் டிரா ஆனது. பக்தி குல்கர்னி – லாக்னோவிடம் தோல்விகண்டார்.

---

1. சமீபத்தில் தில்லி அரசு அறிமுகப்படுத்திய சுற்றுலா செயலியின் பெயர் என்ன?

அ) எனது தில்லி

ஆ) தேகோ மேரி தில்லி ☑

இ) தில்லி சுற்றுப்பயணம்

ஈ) ஹமாரா தில்லி



✓ தில்லி அரசானது அண்மையில் 'தேகோ மேரி தில்லி' என்ற செயலியை அறிமுகப்படுத்தியது. இது தில்லி அரசின் சுற்றுலாத் துறையால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டதாகும். இந்தச் செயலி, தில்லியில் உள்ள அனைத்து சுற்றுலா தொடர்பான தகவல்களையும் வழங்கும். தில்லியில் உள்ள அனைத்து முக்கிய சுற்றுலாத்தலங்களுக்கான நுழைவுச் சீட்டுகளையும் இதில் பெற முடியும்.

---

2. காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வறிக்கையானது நாட்டின் எத்தனை துறைகளின் வேலைவாய்ப்பு மற்றும் அது தொடர்புடைய மாறிகளை வழங்குகிறது?

அ) 3

ஆ) 9 ☑

இ) 15

ஈ) 23



✓ தொழிலாளர் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட காலாண்டு அடிப்படையிலான அகில இந்திய வேலைவாய்ப்பு ஆய்வின் ஒருபகுதியாக, காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வின் (2021 ஏப்ரல் முதல் ஜூன் வரை) முதல் காலாண்டுக்கான அறிக்கையை மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சர் புபேந்தர் யாதவ் வெளியிட்டார்.

✓ முடிவுகளை அறிவித்த அமைச்சர் புபேந்தர் யாதவ், தேர்வு செய்யப்பட்ட 9 துறைகளில் முதற்கட்ட ஆய்வின்படி மதிப்பிடப்பட்டுள்ள மொத்த வேலை வாய்ப்பு 3 கோடியே 8 இலட்சம் என்றும், இது 6ஆவது பொருளாதார கணக்கெடுப்பு (2013–14) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2 கோடியே 37 இலட்சத்தை விட 29% அதிகம் என்றும் கூறினார்.

---

3. தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் அசல் கால அளவு என்ன?

அ) 2014– 2019

ஆ) 2015–2020 ☑

இ) 2016–2021

ஈ) 2017–2022



✓ 2015–20 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையின் காலத்தை மார்ச் 2022 வரை நீட்டிக்க இந்திய அரசு முன்மொழிந்துள்ளது. இந்தக் கொள்கை முதலில் மார்ச் 31, 2020 அன்று முடிவடைவதாக இருந்தது. இந்தக் கொள்கை, முதலில் 2021 மார்ச் வரையிலும் 2021 செப் வரையிலும் நீட்டிக்கப்பட்டது. மூன்றாவது முறையாக, தற்போது மீண்டும் நீட்டிக்க முன்மொழியப்பட்டது. இதை வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்தார்.

4.சமீப செய்திகளில் இடம்பெற்ற "ஆகாஷ் பிரைம்" என்றால் என்ன?

அ) AIR'இன் புதிய ஒலிபரப்பு நிலையம்

ஆ) BSNL வழங்கும் புதிய அகலக்கற்றை சேவை

இ) ஆகாஷ் ஏவுகணையின் புதிய பதிப்பு ☑

ஈ) இஸ்ரோவின் வழிசெலுத்தல் செயற்கைக்கோள்



✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) சமீபத்தில் ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் 'ஆகாஷ் பிரைம்' ஏவுகணையை பரிசோதித்தது.

✓ ஆகாஷ் ஏவுகணையின் இந்த மேம்படுத்தப்பட்ட பதிப்பு டிஆர்டிஓவால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.

---

5. 'தேசிய பயோடிக் ஸ்ட்ரெஸ் டோலரன்ஸ் நிறுவனம்' அமைந்து உள்ள இடம் எது?

அ) மும்பை

ஆ) புனே

இ) அகமதாபாத்

ஈ) ராய்பூர் ☑



✓ நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் பயோடிக் ஸ்ட்ரெஸ் டொலரன்ஸ் என்பது ஐசிஏஆரின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி பல்கலைக்கழகமாக ராய்ப்பூரில் அமைந்துள்ளது. இந்த நிறுவனம் கடந்த 2012'இல் உருவாக்கப்பட்டது.

✓ ராய்பூரில் உள்ள இந்நிறுவனத்தின் புதிய வளாகத்தை பிரதமர் மோடி நாட்டிற்கு அர்ப்பணித்தை அடுத்து இந்த நிறுவனம் சமீப செய்திகளில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் போது, பிரதம மந்திரி, 35 காலநிலை நெகிழ்திறனுடன் கூடிய பயிர் வகைகளையும் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

---

6. மருத்துவமனை அடிப்படையிலான புற்றுநோய் பதிவேடுகளின் அறிக்கை, 2021'ஐ வெளியிட்ட நிறுவனம் எது?

அ) ஐஎம்ஏ

ஆ) ஐசிஎம்ஆர் ☑

இ) NITI ஆயோக்

ஈ) எய்ம்ஸ்



✓ இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலானது (ஐசிஎம்ஆர்) "இந்தியாவில் புற்றுநோய்களின் கிளினிகோபோதாலஜிக்கல் புரொபைல்: மருத்துவ மனை அடிப்படையிலான புற்றுநோய் பதிவேடுகளின் அறிக்கை–2021" வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, அனைத்து புற்றுநோய் பாதிப்புகளின் விகிதமும் பெண்களைவிட (47.4%) ஆண்களில் (52.4%) அதிகமாக உள்ளது.

✓ பெண்களைப் பாதிக்கும் புற்றுநோய்களுள் மார்பக புற்றுநோய் முதல் இடத்தில் உள்ளது. குழந்தைப்பருவ (0–14 வயது) புற்றுநோய்கள் 7.9% அளவுக்கு உள்ளது. தலை மற்றும் கழுத்துப்பகுதி புற்றுநோய்கள் ஆண்களுக்கு ஏற்படும் புற்றுநோய் பாதிப்புகளுள் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்காக (31.2%) உள்ளது.

---

7. '2021 உலகளாவிய துளிர்நிறுவன சூழலறிக்கையின்'படி, மலிவு திறமையுள்ள 5ஆவது ஆசிய சூழலமைப்பாக உருவான இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா ☑

இ) கர்நாடகா

ஈ) மகாராஷ்டிரா



✓ 2021 உலகளாவிய துளிர் நிறுவன சூழலறிக்கையில் மலிவு திறமை உள்ள ஐந்தாவது ஆசிய சூழலமைப்பாக கேரளா உருவெடுத்துள்ளது. இந்த அறிக்கை, ஸ்டார்ட் அப் ஜெனோம் மற்றும் உலகளாவிய தொழில் முனைவோர் நெட்வொர்க்கால் தயாரிக்கப்பட்டது. இந்த 2021 அறிக்கை, செயல்திறன், நிதி, இணைப்பு, சந்தை வரம்பு, வள ஈர்ப்பு, அனுபவம் & திறமை ஆகிய 7 அளவுருக்களின் அடிப்படையில், உலகெங்கிலும் உள்ள 140 சூழலமைப்புகளை தரவரிசைப்படுத்துகிறது.

---

8. வட இந்திய மாநிலத்தின் முதல் மற்றும் மிகப்பெரிய பனைப் பூங்காவை (palmetum) திறந்து வைத்துள்ள மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம்

ஆ) உத்தரகாண்ட் ☑

இ) மத்திய பிரதேசம்

ஈ) பீகார்



✓ உத்தரகாண்ட் வனத்துறையானது அம்மாநிலத்தின் முதல் பனைப் பூங்காவை நைனிடாலில் அமைந்துள்ள ஹல்த்வானி மக்களுக்கு அர்ப்பணித்தது. இது, வட இந்தியாவிலேயே மிகப்பெரிய பனைப்பூங்கா ஆகும். இங்கு 110'க்கும் மேற்பட்ட பனைமர வகைகள் உள்ளன. இது, CAMPA திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டதாகும்.

✓ உத்தரகண்டை பூர்வீகமாகக் கொண்ட டிராச்சிகார்பஸ் தகில் (தகில் பனை) என்ற பனை இனமும் இங்கு உள்ளது.

9.'ஹுனர்பாஸ்' விருதுகளுடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑

ஆ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

இ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகம்

- ✓ 'ஹுனர்பாஸ்' விருதுகள் நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின்கீழ் ஹைதராபாத்தில் உள்ள தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (NIRD&PR) அமைப்பால் நிறுவப்பட்டதாகும்.
- ✓ NIRD&PR ஆனது விடுதலையின் 75ஆம் ஆண்டுக் கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக அந்தியோதயா நாள் அன்று 75 மாற்றுத்திறனாளிகளுக்–கு விருதுகளை வழங்கியது. இந்த நாள், 2021 செப்.25 அன்று பண்டிட் தீனதயாள் உபாத்யாயாவின் பிறந்தநாளாகும்.
- ✓ தீனதயாள் உபாத்யாயா கிராம கௌசல்யா யோஜனா மற்றும் கிராமப்புற சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் திட்டங்கள்மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

10.எம்மாநிலத்தில், உலகின் அதிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னேற்ற நிலையம் உள்ளது?

அ) இமாச்சல பிரதேசம் ☑



ஆ) பீகார்

இ) உத்தரகாண்ட்

ஈ) பஞ்சாப்

- ✓ இமாச்சல பிரதேச மாநிலத்தின் ஸ்பிட்டி மாவட்டத்தில் அமைந்துள்ள காசா, உலகின் அதிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்னேற்ற நிலையத்தைக் கொண்டுள்ளது. இந்நிலையம் 'Go Ego' என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ளது. இந்த நிலையம், சராசரி கடல் மட்டத்திலிருந்து 500 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சோதனை ஓட்டமாக, இரண்டு மின்சார ஸ்கூட்டர்கள் இந்த நிலையத்தில் மின்னேற்றம் செய்யப்பட்டன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. காஞ்சிபுரம் நெசவாளர்கள் 6 பேருக்கு தேசிய விருது: உயரிய விருதான 'சந்த் கபீர்' விருதை ஒருவர் பெறுகிறார்

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் 6 பேருக்கு 4 தேசிய விருது கிடைத்துள்ளது. நெசவாளர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான 'சந்த் கபீர்' விருதையும் ஒரு நெசவாளர் பெறுகிறார். மத்திய அரசு, நெசவாளர்களுக்கு வழங்கும் மிக உயரிய விருது 'சந்த் கபீர்' விருதாகும். 2018–ம் ஆண்டுக்கான 'சந்த் கபீர்' விருது இந்திய அளவில் 10 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் காஞ்சிபுரம் மேட்டுப்பாளையம் தெருவைச் சேர்ந்த நெசவாளர் கிருஷ்ணமூர்த்தி பெயரும் இடம் பெற்றுள்ளது. நிறைய நெசவாளர்களுக்கு பயிற்சி அளித்தது, வழக்கமான சேலைகளுக்கு மாற்றாக 114 வடிவமைப்புகளை சேர்த்து சேலை நெய்தது ஆகிய காரணங்களுக்காக இவருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் 2019–ம் ஆண்டுக்கான தேசிய விருது 20 பேருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. இதில் 6 பேர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர்கள். காஞ்சிபுரம் தர்மலிங்கம் நகரைச் சேர்ந்த சரளா – கணபதி தம்பதி மற்றும் பிள்ளையார்பாளையத்தைச் சேர்ந்த காமாட்சி – ஹரி தம்பதி இணைந்தும், கணிகண்டீஸ்வர் கோயில் தெருவைச் சேர்ந்த ராம்குமாரி, ராயன்குட்டை பிள்ளை தெருவைச் சேர்ந்த ஹரி ஆகியோர் தனித்தனியாகவும் தேசிய விருதை பெறுகின்றனர். காஞ்சிபுரத்தைச் சேர்ந்த 6 நெசவாளர்கள் 4 தேசிய விருதுகளை பெறுகின்றனர். சிறந்த வடிவமைப்பு, சிறந்த தொழில் நுட்பங்களை கைத்தறியில் பயன்படுத்தியது, சிறந்த வண்ணங்கள் ஆகிய காரணங்களுக்காக இவர்களுக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் தேசிய சிறப்புச் சான்றிதழை காஞ்சிபுரம் திருக்காலிமேடு பகுதியைச் சேர்ந்த கோவிந்தராஜ், சீனுவாசன் ஆகியோர் இணைந்து பெறு கின்றனர். தேசிய விருதுகளுக்கான தகுதிகளின் அடிப்படையிலேயே இவர் களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

---

2. காவல் துறையின் அதிரடி நடவடிக்கைகள் சட்டம் ஒழுங்கைப் பலப்படுத்தட்டும்

கொலைக் குற்றப் பின்னணி உள்ளவர்களை முற்றுகையிட்டு, அவர்களிடம் உள்ள ஆயுதங்களைக் கைப்பற்றிவரும் தமிழ்நாடு காவல் துறையின் தொடர் நடவடிக்கைகள், சட்டம் ஒழுங்கு தொடர்பில் மாநில அரசு தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியிருப்பதன் வெளிப்பாடுகளாகத் தெரிகின்றன.

கடந்த செப்டம்பர் 23 அன்று இரவு தொடங்கி, அடுத்த சில நாட்களில் தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடத்தப்பட்ட 'ஆபரேஷன் டிஸ்ஆர்ம்' நடவடிக்கையில், பழைய கொலைக் குற்றவாளிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களில் 3,325 குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டுள் –ளதாகக் காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. காஞ்சிபுரத்தில் பட்டுப் பூங்கா ஓரிரு மாதங்களில் திறப்பு; தறி இயந்திரங்கள் செயல்பாட்டுக்கு வந்தன; பெண்களுக்கு 66 % வேலைவாய்ப்பு

காஞ்சிபுரத்தை அடுத்த கீழ்கதிர்பூர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பட்டுப் பூங்கா உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின்பு திறக்கப்பட உள்ளது. அங்கு நிறுவப்பட்டுள்ள கைத்தறி இயந்திரங்கள் தற்போது முதல்கட்டமாக செயல்பாட்டுக்கு வந்துள்ள நிலையில், இங்கு 66% பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பட்டுக்குப் புகழ்பெற்ற காஞ்சிபுரத்தில் ரூ.83.33 கோடியில் பட்டுப் பூங்கா அமைக்கப்படும் என்று கடந்த 2012–ம் ஆண்டு தமிழக அரசு அறிவித்தது. இதற்காக அரசு, ரூ.14 கோடி மதிப்புள்ள 75 ஏக்கர் நிலம், மானியத் தொகையாக ரூ.7.54 கோடியையும் ஒதுக்கியது. மற்ற தொகை தனியார் மூலம் முதலீடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு இதற்கான பணிகள் விரைவாக நடைபெறவில்லை. காஞ்சிபுரத்தை அடுத்த கீழ்கதிர்பூர் கிராமத்தில் பட்டுப் பூங்கா அமைக்கும் பணிகள் அப்படியே கிடப்பில் போட்டப்பட்டன. கடந்தஆண்டு இதற்கான பணிகள் ஓரளவுக்கு நடைபெற்றன. திமுக ஆட்சி பொறுப்பேற்றதும் இந்தப் பட்டுப் பூங்காவை செயல்பாட்டுக்கு கொண்டு வர பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

முதல்கட்டமாக தறி நெய்வதற்கான கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு தறி இயந்திரங்கள் பொருத்தப்பட்டு துணி நெய்யும் பணிகள் தொடங்கியுள்ளன. பல்வேறு தனியார் நிறுவனங்கள் தறி நெய்வதற்கான கைத்தறி இயந்திரங்களை பொருத்தி வருகின்றன. இந்தப் பட்டுப் பூங்காவில் கைத்தறிக்கு என தனிப் பிரிவும், சாயப்பட்டறைகள், விற்பனைப் பிரிவுகள் உட்பட பல அமைக்கப்பட உள்ளன. இங்கு 66 சதவீதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சாயமிடுதல் நடைபெறும்போது நீர் மறுசுழற்சி முறையில் பயன்படுத்தப்பட உள்ளன.

இங்கு மொத்தம் 2,160 கைத்தறி இயந்திரங்கள் அமைக்கப்பட உள்ளன. நெசவாளர்களுக்கு 700 குடியிருப்புகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தம் 82 யூனிட்டுகளாக இவை இயங்க உள்ளன. பட்டு கைத்தறி நெசவுக்காக 22 யூனிட்டுகளும், காட்டன் கைத்தறி துணிகள் நெசவு செய்ய 30 யூனிட்டுகளும் ஒதுக்கப்பட உள்ளன. மற்ற 30 யூனிட்டுகளில் சாயமிடுதல் உள்ளிட்ட கைத்தறிச் சார்ந்த இதரப் பணிகள் நடைபெற உள்ளன.

---

4. சேதி தெரியுமா?

செப்.24: பள்ளிக் கல்விக்கான புதிய பாடத்திட்டத்தை வகுக்க கே.கஸ்தூரி ரங்கன் தலைமையில் 12 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு நியமித்துள்ளது.

செப்.25: உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநராக உள்ள எத்தியோப்பியாவைச் சேர்ந்த டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸை, அந்தப் பதவிக்கு இரண்டாவது முறையாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பரிந்துரைத்துள்ளன.

செப்.26: இந்தியாவின் முதல் விளையாட்டுத் துறை நடுவண் தீர்ப்பாயம் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

செப்.26: செக் குடியரசில் நடைபெற்ற ஆஸ்ட்ராவா ஒபன் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா–சீனாவின் ஷுவாய் ஜங் இணை பட்டம் வென்றது.

செப்.27: அமெரிக்காவின் டகோடா மாகாணத்தில் உள்ள யாங்டன் நகரில் நடந்த 2021 உலக வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வில்வித்தை அணி 3 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

செப்.27: ஆயுஷ்மான் பாரத் என்கிற தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டத்தைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். ஒவ்வொரு குடிமகனுக்கும் சுகாதார அடையாள அட்டையையும் பதிவேட்டையும் உள்ளடக்கியது இத்திட்டம்.

செப்.28: சென்னை எழும்பூரில் உள்ள பழைய காவல் ஆணையரகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு காவல் துறை அருங்காட்சியகம் பொதுமக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டது.

செப்.28: டி20 கிரிக்கெட் போட்டிகளில் 10 ஆயிரம் ரன்களைக் குவித்த முதல் இந்திய வீரர் என்கிற பெருமையை விராட் கோலி பெற்றார்.

செப்.29: காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தின் முழு நேரத் தலைவராக சுமித்ரா குமார் ஹல்தார் என்பவரை மத்திய அரசு நியமித்துள்ளது.

அக்.1: போலீஸ், அதிகாரிகளின் கொடுமைகள் குறித்து சாமானியர்கள் அளிக்கும் புகார்களை விசாரிக்க உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிகள் தலைமையில் சிறப்பு விசாரணைக் குழு அமைக்க உச்ச நீதிமன்றம் ஆதரவாக இருக்கும் என்று தலைமை நீதிபதி என்.வி.ரமணா தெரிவித்துள்ளார்.

---

5. மருத்துவம்: அமெரிக்க விஞ்ஞானிகள் இருவருக்கு நோபல்

மனிதா்கள் வெப்பநிலையையும் தொடுதலையும் உணா்ந்து கொள்வதற்கான உணா்விகளை (ரிசப்டா்ஸ்) கண்டறிந்ததற்காக அமெரிக்காவைச் சோ்ந்த இரு விஞ்ஞானிகளுக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடா்பான அறிவிப்பை திங்கள்கிழமை வெளியிட்ட நோபல் குழுவின் பொதுச் செயலா் தாமஸ் பெல்மன் கூறுகையில், "கண்களின் பாா்க்கும் செயல்பாடு, காதுகளின் கேட்கும் தன்மை, தோலின் உணரும் செயல்பாடு ஆகியவை தொடா்பான 'சொமேடோசென்சேஷன்' என்ற பிரிவில் டேவிட் ஜூலியஸும் ஆா்டம் படாபூடியனும் ஆய்வுகளை மேற்கொண்டனா். அந்த ஆய்வுகள் இயற்கையின் ரகசியத்தை அறிவதற்கு உதவின. மனிதா்கள் உயிா் வாழ்வதற்கு உணா்வுகள் மிகவும் அவசியமானவை. எனவே, அவா்களின் கண்டுபிடிப்பானது முக்கியமானதாகவும் உயா்ந்ததாகவும் உள்ளது.

மிளகாயில் காணப்படும் 'கேப்சைசின்' என்ற வேதிப்பொருளைப் பயன்படுத்தி வெப்பத்தை உணா்வதற்காகத் தோலில் உள்ள நரம்பு உணா்வியை டேவிட் ஜூலியஸ் கண்டறிந்தாா். தொடுதலை உணா்ந்து கொள்வதற்காக உடலில் உள்ள செல்லில் காணப்படும் உணா்வியை ஆா்டம் படாபூடியன் கண்டறிந்தாா்'' ' என்றாா். சமமான பரிசுத் தொகை: நோபல் பரிசாக தங்கப் பதக்கத்துடன் சுமாா் ரூ.8.40 கோடி பரிசுத்தொகையும் அளிக்கப்படும். அந்தப் பரிசுத்தொகையானது இரு விஞ்ஞானிகளுக்கும் சமமாகப் பகிா்ந்தளிக்கப்படவுள்ளது. கடந்த ஆண்டு இரு விஞ்ஞானிகளும் நரம்பியலுக்கான 'கவ்லி' விருதைப் பகிா்ந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

முக்கியத்துவம்: நோபல் குழுவின் உறுப்பினா்களில் ஒருவரான பேட்ரிக் என்ஃபோா்ஸ் கூறுகையில், "கோடைக்காலத்தின் காலை வேளையில் ஒரு தோட்டத்தில் காலணிகளின்றி நடந்து சென்றால், சூரியனின் இதமான வெயிலையும், காலை நேரத்தின் குளுமையையும், சில்லென்ற காற்றையும், காலுக்கடியில் படா்ந்திருக்கும் சிறுபுற்களின் மெல்லிய அமைப்புகளையும் உணர முடியும். அத்தகைய உணா்வுகளைப் பற்றிய ஆய்வே 'சொமேடோசென்சேஷன்' என்பது. அத்தகைய உணா்வுகள் தொடா்பான விவரங்கள், தோலில் இருந்து தொடா்ந்து உடலின் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அந்த உணா்வுகள் சில பணிகளை சிரமமின்றியும் அதிகம் யோசிக்காமலும் செய்ய அத்தியாவசியமாக உள்ளன' ' என்றாா். இந்தக் கண்டுபிடிப்புகள் வாயிலாக ரத்த நாளங்களில் அழுத்தம் ஏற்படுவதற்கான சிகிச்சைகளை உருவாக்குவது, மருந்துகள் தயாரிப்பது உள்ளிட்டவை எளிதாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நோபல்–மருத்துவம்

டேவிட் ஜூலியஸ் (65) அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள கலிஃபோா்னியா பல்கலைக்கழக விஞ்ஞானியான டேவிட் ஜூலியஸ், மிளகாயில் உள்ள வேதிப்பொருள் தோலில் ஏற்படுத்தும் எரிச்சலை உணரும் 'டிஆா்பிவி1' என்ற உணா்வியைக் கண்டறிந்தாா். வெப்பநிலையைப் பொருத்து அந்த உணா்வியில் உருவாக்கப்படும் அயனிகள், வெப்பத்தை உணா்த்துகின்றன என்பதை அவா் கண்டறிந்தாா்.

ஆா்டம் படாபூடியன் (54)

லெபனானில் பிறந்து அமெரிக்காவின் கலிஃபோா்னியா மாகாணம், லாஹோல்லா நகரத்தில் உள்ள கல்வி ஆய்வு நிலையத்தில் விஞ்ஞானியாக உள்ள ஆா்டம் படாபூடியன், தொடுதலை உணா்ந்து கொள்ளும் 'பியஸ்01', 'பியஸ்02' ஆகிய உணா்விகளைக் கண்டறிந்தாா். தொடுவதன் மூலமாக தோலில் ஏற்படும் அழுத்த மாறுபாட்டை செல்லில் உள்ள ஜீன்கள் எவ்வாறு உணா்ந்து மூளைக்குத் தகவலை அனுப்புகின்றன என்பதில் தீவிர ஆராய்ச்சிகளை அவா் மேற்கொண்டாா்.

---

6. புதிய நகர்ப்புற இந்தியா மாநாடு: பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்

உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் 'ஆசாதி75 – புதிய நகர்ப்புற இந்தியா' மாநாடு மற்றும் கண்காட்சியை பிரதமர் நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார். அங்குள்ள 75 மாவட்டங்களில் உள்ள 75,000 பயனாளிகளுக்கு பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா – நகர்ப்புற (PMAY –U) வீடுகள் திட்டத்தை பிரதமர் மோடி டிஜிட்டல் முறையில் திறந்து வைக்கிறார். அதன்பின், இந்த திட்டத்தின் பயனாளிகளுடன் உரையாடுகிறார். ஸ்மார்ட் சிட்டி மற்றும் அம்ருத் திட்டத்தின் கீழ், 75 நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டவுள்ளார். ஃபேம்–2 திட்டத்தின் கீழ் லக்னோ, கான்பூர், வாரணாசி, பிரயாக்ராஜ், கோரக்பூர், ஜான்சி, காஜியாபாத் ஆகிய நகரங்களுக்கு 75 பேருந்துகளின் இயக்கத்தை அவர் தொடக்கி வைக்கவுள்ளார்.

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகத்தின் 75 திட்டங்கள் அடங்கிய சிறு புத்தகத்தையும் அவர் வெளியிடுகிறார். இந்த நிகழ்ச்சிகளில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், உத்தரப் பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், அந்த மாநில முதல் மந்திரி யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

---

7. இந்திய–இலங்கை கூட்டு ராணுவ பயிற்சி தொடங்கியது

இந்தியா இலங்கை ராணுவங்களுக்கு இடையேயான கூட்டுப் பயிற்சி 'மித்ர சக்தி' , இலங்கை அம்பாறை பகுதியில் உள்ள போர்ப் பயிற்சிப் பள்ளியில் திங்கள்கிழமை (அக். 4) தொடங்கியது. வரும் 15–ஆம் தேதி வரையில் நடைபெற உள்ள இந்தக் கூட்டுப் பயிற்சியில் இந்தியாவின் சார்பில் 120 ராணுவ வீரர்களைக் கொண்ட அணி இலங்கை ராணுவ பட்டாலியனுடன் இணைந்து போர்ப் பயிற்சியில் ஈடுபடுகிறது. இதற்கு கலோனல் பிரகாஷ் குமார் தலைமை தாங்குகிறார். இரு நாட்டு ராணுவங்கள் இடையே நெருங்கிய உறவை ஏற்படுத்துவதுடன், இருதரப்பு போர் ஆயத்த நிலையை வலுப்படுத்துவதோடு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் சிறந்த அணுகுமுறையை பரிமாறிக் கொள்வதே இந்த கூட்டுப் பயிற்சியின் நோக்கமாகும் என்று இலங்கை ராணுவம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, 7–வது மித்ர சக்தி கூட்டுப் பயிற்சி 2019–ல் மகாராஷ்டிர மாநிலம் புணேயில் நடைபெற்றது. இலங்கையில் கடந்த 2019, ஏப்ரலில் நடைபெற்ற தொடர் வெடிகுண்டு தாக்குதலில் 300–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து இந்தியா– இலங்கையும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பை அதிகரித்து வருகின்றன.

---

8. ஈரோட்டில் சாலைக்கு திருப்பூர் குமரன் பெயர்

ஈரோட்டில் உள்ள சாலைக்கு, திருப்பூர் குமரன் சாலை எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதற்கான பெயர் பலகையை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின், திங்கள்கிழமை திறந்து வைத்தார்.

---

9. 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நியாண்டர்தால் மனிதர்கள் வசித்த குகை கண்டுபிடிப்பு

பல லட்சம் ஆண்டு பரிணாம வளர்ச்சியில் பல்வேறு உயிரினங்கள் அடியோடு அழிந்து போய் விட்டது. அப்படி அழிந்த இனம்தான் நியாண்டர்தால் மனிதர்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆதிகாலத்தில் வாழ்ந்த இந்த நியாண்டர்தால் மனிதர்கள் பூமியில் வாழ்ந்தனர். 40,000 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த ஒரு குகை ஒன்று

பிரிட்டன் ஜிப்ரால்டர் பகுதியில் உள்ள 'வான்கார்ட் குகை' பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கு கிடைத்த தொல் பொருள்கள் மூலம் ' பண்டைய காலத்தில் வாழ்ந்த நியாண்டர்தால் எனும் மனித இனம் வாழ்ந்திருப்பதற்கான சான்றுகள் கிடைக்கலாம்' என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜிப்ரால்டர் தேசிய அருங்காட்சியகத்தின் இயக்குனர் கிளைவ் ஃபின்லேசன் தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்ட போது இந்த குகை பகுதியை கண்டுபிடித்தனர். '43 அடி நீளம் கொண்ட இக்குகையின் உள்ளே விசித்திரமான பொருள்கள் தொங்குவதை பார்த்தனர். குகை அறையின் மேற்பரப்பில் கழுதைப்புலிகள் மற்றும் கழுகுகளின் எச்சங்களையும், கடல் நத்தையையும் 4 வயது நியாண்டர்தால் மனித பல் ஒன்றையும்' கண்டுபிடித்தனர். இது கோர்ஹாமின் குகை வளாகம் என்று அழைக்கப்படுகிறது, சுமார் 40,000 ஆண்டுகளுக்கு முன்பு நியாண்டர்தால்கள் அழிந்துபோவதற்கு முன்பு வாழ்ந்த கடைசி இடங்களில் ஒன்றாக இந்த குகை இருந்திருக்கலாம் என தெரிவிக்கின்றனர்.

1. காது கேளாதோரின் பன்னாட்டு வாரமானது ஒவ்வோர் ஆண்டும் எந்த மாதத்தில் கடைபிடிக்கப்படுகிறது?



அ) செப்டம்பர் ☑

ஆ) ஆகஸ்ட்

இ) ஜூலை

ஈ) ஜூன்

✓ பன்னாட்டு காதுகேளாதோர் வாரமானது செப்டம்பர் கடைசி வாரத்தில் அனுசரிக்கப்படுகிறது. காது சர்வதேச கேளாதோர் வாரத்திற்கான இந்த ஆண்டின் (2021) கருப்பொருள் "Celebrating Thriving Deaf Communities" ஆகும். இந்த வாரம் "Nothing about us, without us!" என்ற முக்கிய கொள்கையின்கீழ் வருகிறது. உலக காதுகேளாதோர் கூட்டமைப்பு, 1951 ஆம் ஆண்டில் இத்தாலியின் ரோம் நகரில் நிறுவப்பட்டது. இந்த சர்வதேச அமைப்பு, செப்டம்பர் கடைசி வாரத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமையை சர்வதேச காதுகேளாதோர் நாளாக அறிவித்தது. பின்னர், அதனை ஒரு வாரமாக நீட்டித்து அறிவித்தது.

---

2. சர்வதேச அணுசக்தி முகமையின் வெளியக தணிக்கையாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் யார்?



அ) வினோத் ராய்

ஆ) சஷி காந்த் சர்மா

இ) ராஜீவ் மெஹ்ரிஷி

ஈ) ஜி சி முர்மு ☑

✓ இந்தியாவின் கன்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரலான ஜி சி முர்மு பன்னாட்டு அணுசக்தி முகமையின் (IAEA) வெளியக தணிக்கையாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். IAEA என்பது ஒரு மதிப்புமிக்க பன்னாட்டு நிறுவனமாகும். இது அமைதியான அணுவாற்றல் பயன்பாட்டை ஊக்கு –விக்கிறது. மத்திய வெளியுறவு அமைச்சகத்தின்படி, அவரது வேட்புமனு IAEA பொது மாநாட்டின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றது. அவரது பதவிக்காலம் 2022 முதல் 2027 வரை ஆறு ஆண்டுகள் இருக்கும்.

---

3. "Seafarers: at the core of shipping's future" என்பது செப்டம்பர்.30 அன்று கொண்டாடப்படும் எந்த நாளின் கருப்பொருளாகும்?



அ) உலக கடற்படையினர் நாள்

ஆ) உலக கடல்சார் நாள் ☑

இ) உலக பெருங்கடலியல் நாள்

ஈ) உலக மீன்வள நாள்

✓ பன்னாட்டு கடல்சார் அமைப்பு என்பது ஐநா அவையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும். அது கப்பல்போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகிறது. அதன் தலைமையகம் லண்டனில் அமைந்துள்ளது. உலக கடல்சார் நாளானது ஒவ்வோர் ஆண்டும் செப்.30 அன்று கொண்டாடப்படுகிறது.

✓ COVID தொற்றால் கஷ்டங்களை எதிர்கொள்ளும் கடற்படையினருக்காக, IMO, 2021'ஐ அவர்களுக்கான ஓர் ஆண்டாக அறிவித்துள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான உலக கடல்சார் நாளின் கருப்பொருள், "Seafarers: at the core of shipping's future" என்பதாகும். கடல்சார் சமூகத்தை ஒன்றிணை –ப்பதற்காக, கடல்சார் நினைவுச்சின்னம் உட்பட IMO கட்டடம் உள்ளிட்ட –வை உலக கடல்சார் நாளன்று நீல நிறத்தில் ஒளியூட்டப்படும்.

---

4. இந்தியாவில் 'எதிர்கால பொறியாளர் திட்டத்தை'த் தொடங்கி உள்ள நிறுவனம் எது?



அ) கூகிள்

ஆ) அமேசான் ☑

இ) மைக்ரோசாப்ட்

ஈ) பேஸ்புக்

✓ மின்னணு வணிக நிறுவனமான அமேசான் இந்தியா, இந்தியாவில் 'அமேசான் எதிர்கால பொறியாளர்' திட்டத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தது. இது, அந்த நிறுவனத்தின் உலகளாவிய கணினி அறிவியல் கல்வித்திட்டமாகும். அந்நிறுவனத்தின் கூற்றுப்படி, இத்திட்டம் தரமான கணினி அறிவியல் கல்வி மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு தொழிற்துறை வாய்ப்புகளை அணுக உதவும்.

---

5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற தங்கப்பரிமாற்றம் மற்றும் சமூகப் பங்குச்சந்தை ஆகியவற்றை அங்கீகரித்த நிறுவனம் எது?

அ) RBI

ஆ) SEBI ☑

இ) ECGC

ஈ) NSDL

✓ SEBI'இன் வாரியம் சமீபத்தில் ஒரு 'தங்கப்பரிமாற்றம்' மற்றும் 'சமூகப் பங்குச்சந்தை' ஆகியவற்றை நிறுவுவதற்கான திட்டத்தை அறிவித்தது. தங்கப்பரிமாற்றத்தில், உலோகமானது மின்னணு தங்க பற்றுச் சீட்டுகள் வடிவில் வணிகம்செய்யப்படும் & அவை பத்திரங்களாக அறிவிக்கப்படும்.

✓ தற்போதுள்ள மற்றும் புதியதாக அங்கீகரிக்கப்பட்ட எந்த பங்குச்சந்தையும் மின்னணு தங்க பற்றுச் சீட்டுகள் வடிவில் வர்த்தகத்தைத் தொடங்கலாம்.

---

6. வெறிநாய்க்கடி நோயை எந்த ஆண்டுக்குள் ஒழிப்பதற்காக, ஒரு தேசிய செயல் திட்டத்தை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது?



அ) 2025

ஆ) 2027

இ) 2030 ☑

ஈ) 2032

✓ உலக ரேபிஸ் நாளாக செப்.28 அன்று, 2030ஆம் ஆண்டுக்குள் நாய் மூலம் பரவும் ரேபிஸ் நோயை ஒழிப்பதற்கான தேசிய செயல் திட்டத்தை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் தொடங்கிவைத்தது.

✓ இது மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் ஆலோசனையுடன் தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையத்தால் வரைவு செய்யப்பட்டது. இத்திட்டம் ஐந்து முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டதாகும் – அரசியல் விருப்பம், நிலையான நிதி, இடைநிலை திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் மறுஆய்வு, சமூக திட்டமிடல் மற்றும் செயல்பாட்டு ஆராய்ச்சி.

---

7. இந்தியன் வங்கியின் முன்னாள் MD & CEOஆன பத்மஜா சந்துரு, எந்த நிறுவனத்தின் புதிய MD & CEOஆக நியமிக்கப்பட்டுள்ளார்?



அ) SEBI MF

ஆ) NSDL ☑

இ) SBI

ஈ) LIC

✓ பத்மஜா சுந்துரு தேசியப் பத்திரங்கள் வைப்புத்தொகையின் (NSDL) நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயலதிகாரியாக (MD & CEO) நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 2018 செப்டம்பர் மற்றும் 2021 ஆகஸ்ட்டுக்கு இடையில் இந்தியன் வங்கியின் MD & CEOஆக பணியாற்றியுள்ளார். அவரது நியமனம் NSDL'இன் பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. NSDL'இன் முந்தைய MD & CEOஆக GV நாகேஸ்வர ராவ் இருந்தார்.

---

8. எந்த நாட்டின் அண்மைய பொதுத்தேர்தலில் 48 சதவீத பெண் வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர்?



அ) ஜெர்மனி

ஆ) இத்தாலி

இ) ஐஸ்லாந்து ☑

ஈ) பின்லாந்து

✓ வெற்றிபெற்ற வேட்பாளர்களில் 48% பெண்கள் என்பதால், ஐஸ்லாந்தில் பொதுத்தேர்தல் முடிவுகள் அந்நாட்டிற்கு ஒரு சிறப்பு நிகழ்வாக உள்ளது. 63 இடங்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில், 30 இடங்களை பெண் வேட்பாளர்கள் வென்றுள்ளனர். பின்லாந்தில் 47% பெண் வேட்பாளர்க –ள் வென்றுள்ளனர். சுவீடன் நாடாளுமன்றம் 465 பெண் உறுப்பினர்க –ளைக் கொண்டுள்ளது.

---

9. உலகின் மிகப்பழமையான குடியரசுகளுள் ஒன்றான எந்த நாடு, சமீபத்தில், கருக்கலைப்பை சட்டப்பூர்வமாக்க வாக்களித்தது?

அ) இத்தாலி



ஆ) ஸ்பெயின்

இ) சான் மரினோ ☑

ஈ) சுவிச்சர்லாந்து

✓ சான் மரினோ குடியரசில் பன்னிரண்டு வார கர்ப்பத்தை கருக்கலைக்க அனுமதிப்பதற்கான ஒரு வாக்கெடுப்பு சமீபத்தில் நடத்தப்பட்டது. மொத்த வாக்காளர்களில் கிட்டத்தட்ட 77% பேர் இந்தக் கருத்தை ஆதரித்தனர் மற்றும் கருக்கலைப்பை அனுமதிக்க விரும்பினர். இன்றுவரை, சான் மரினோ குடியரசில், கர்ப்பத்தை களைப்பது என்பது சட்டவிரோதமானது ஆகும். அதனை மீறி முயற்சி செய்வோருக்கு மூவாண்டுகள் சிறைத் தண்டனையும், கலைப்பவருக்கு ஆறாண்டு சிறையும் விதிக்கப்பட்டது.

---

10. 2022 ஸ்வச் சர்வேக்ஷனில் கீழ்காணும் எந்தப் புதிய குறிகாட்டி (indicator) இணைக்கப்பட்டுள்ளது?

அ) மக்களின் மகிழ்ச்சி

ஆ) பணிச்சூழல்கள் & தூய்மைப்பணியாளர்களின் வாழ்வாதாரம் ☑

இ) மருத்துவர்களின் நலன்

ஈ) சேரிகளின் நிலை மற்றும் மறுவடிவமைப்பு

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது நகர்ப்புற தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் நடத்தப்பட்ட ஏழாவது தூய்மை ஆய்வை வெளியிட்டுள்ளது. இதன் தற்போதைய பதிப்பில், தொற்றுகாலத்தின்போது தூய்மைப் பணியாளர்களின் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக, 'பணிச்சூழல்கள் & தூய்மைப்பணியாளர்களின் வாழ்வாதாரம்' குறித்த குறிப்பிட்ட குறிகாட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வள்ளலார் பிறந்த நாள்: தனிப்பெருங்கருணை நாளாக முதல்வர் அறிவிப்பு

வள்ளலார் பிறந்த நாள் இனி தனிப்பெருங்கருணை நாளாக கடைபிடிக்கப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளார். தமிழகம் முழுவதும் வள்ளலார் பிறந்த நாளான இன்று(அக்.5) பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நிலையில் முதல்வர் ஸ்டாலின் இன்று வெளியிட்ட அறிவிப்பில், "அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் கடலூர் மாவட்டம் சிதம்பரத்திலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள மருதூரில் 05.10.1823–இல் பிறந்தார். கருணை ஒன்றையே வாழ்க்கைநெறியாகக் கொண்டு வாழ்ந்தார். அனைத்து நம்பிக்கைகளிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதை குறிக்கும் வண்ணம் இவர் சமரச சுத்த சன்மார்க்கத்தை நிறுவினார். இவர் வடலூரில் சத்தியஞான சபையை எழுப்பினார். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பாடிய இவர், மக்களின் பசித்துயர் போக்க சத்தியதர்ம சாலையை நிறுவினார். அவர் ஏற்றிய அடுப்பு இன்றுவரை அணையாமல் தொடர்ந்து எரிந்த வண்ணம் பசியோடு இருக்கும் மக்களின் வயிற்றை நிரப்புகிறது.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநடைகளை எழுதினார். இவர் பாடிய பாடல்களின் திரட்டு திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. இது 6 திருமுறைகளாக பகுக்கப்பட்டுள்ளது. திருவருட்பா ஆறாம் திருமுறையில், எந்தச் சமயத்தின் நிலைப்பாட்டையும் எல்லா மதநெறிகளையும் சம்மதம் ஆக்கி கொள்கிறேன் என்றார். சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் நிறுவிய அவர், சத்திய தருமச்சாலையையும், சித்தி வளாகத்தையும் உருவாக்கினார். பசிப்பிணி நீக்கும் மருத்துவராக வாழ்ந்து காட்டினார். அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி! தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி! என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டு ஒளி இன்றும் அறியாமையை நீக்கி அன்பை ஊட்டி வருகிறது. அவர் பிறந்தநாளான அக்டோபர் ஐந்தாம் நாள் இனி ஆண்டுதோறும் "தனிப்பெருங்கருணை நாள்" எனக் கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

---

2. இயற்பியலுக்கான நோபல் பரிசு மூவருக்குப் பகிர்ந்தளிப்பு

2021ஆம் ஆண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு விஞ்ஞானிகள் மூவருக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயிலும், மற்ற பரிசுகள் ஸ்டாக்ஹோமிலும் அறிவிக்கப்படும். அந்த வகையில் இயற்பியலுக்கான நோபல் பரிசு இன்று (செவ்வாய்க்கிழமை) அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இயற்பியலுக்கான நோபல் பரிசு ஜப்பானைச் சேர்ந்த சுயுகுரோ மனாபே, ஜெர்மனியைச் சேர்ந்த கிளாஸ் ஹசில்மேன், இத்தாலியைச் சேர்ந்த ஜார்ஜியோ பாரிசி ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில், சுயுகுரோ மனாபே, கிளாஸ் ஹசில்மேன் ஆகியோருக்குப் புவியின் காலநிலை மாறுபாட்டை அளவிடுதல் மற்றும் புவி வெப்பமடைதலைக் கணித்தல் போன்ற ஆய்வுக்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. அணுவிலிருந்து கிரக அளவுகள் வரை அவற்றின் அமைப்புகளின் மாறுபாடு மற்றும் ஏற்ற இறக்கங்களின் இடைவெளியைக் கண்டறிந்ததற்காக ஜார்ஜியோ பாரிசிக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, 2021ஆம் ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் ஜூலியஸ், ஆர்டம் பட்டாஹவுடியன் ஆகிய இரு விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

3. ஊரக சுயாட்சி ஏன் முக்கியமானது?

புதிய மாவட்டங்களிலும் பிரிக்கப்பட்ட மாவட்டங்களிலும் உள்ள ஊரகப் பகுதிகளில் இன்றும் வருகிற 9–ம் தேதியும் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற உள்ளன. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை நடத்த உச்ச நீதிமன்றம் மேலும் நான்கு மாதங்களுக்கு அவகாசம் அளித்துள்ளது என்றபோதும் அதற்காக மாநிலத் தேர்தல் ஆணையம் கூறிய காரணங்கள் மிகவும் மோசமாக உள்ளதாகவும் கருத்து தெரிவித்துள்ளது. உள்ளாட்சி அமைப்பிலும் நிர்வாகத்திலும் இந்தியாவுக்கே முன்னோடியாகக் கொள்ளப்பட்ட தமிழ்நாடு, இன்று அது குறித்து அக்கறையும் ஆர்வமும் இல்லாமல் போய்விட்டது வரலாற்றின் முரண்நகை.

தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகள் பற்றிய மிகப் பெரும் ஆய்வை நடத்தியவர் காந்தியச் சிந்தனையாளரான தரம்பால். அறுபதுகளில் அனைத்திந்திய பஞ்சாயத் பரிஷத் அமைப்பின் ஆய்வுத் துறை இயக்குநராக அவர் நியமிக்கப்பட்டிருந்தார். காலனிய காலகட்டத்திலிருந்து தமிழ்நாடு தொடர்பான அரசு ஆவணங்களைப் பார்வையிட்டும் ஊர் ஊராகச் சென்று நேரடிக் கள ஆய்வுகளை நடத்தியும் தனது ஆய்வறிக்கையை அவர் சமர்ப்பித்தார். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள ஓலைச் சுவடிகள் வரைக்கும் அவர் பார்வையிட்டு, உள்ளாட்சி அமைப்புகள் பற்றிய வரலாற்றுத் தகவல்களைத் திரட்டினார்.

அவரது முடிவுகளின்படி, ஏற்கெனவே இங்கு நெடுங்காலமாக சிறப்பாகச் செயல்பட்டுவந்த ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பிரிட்டிஷ் ஆட்சிக்கால நில வருவாய் அமைப்பால் சீர்குலைக்கப்பட்டன. காலனிய அதிகார எந்திரம் உள்ளூர்ச் சமூகங்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளவில்லை. சுதந்திர இந்தியாவிலும் அந்த நிலை தொடராமல், சுயாட்சி பெற்ற உள்ளாட்சி அமைப்புகள் மறுவுருவாக்கம் செய்யப்பட வேண்டும் என்பது அவரது பிரதான பரிந்துரை.

கிராமப்புறக் குடியாட்சி

பஞ்சாயத்து என்கிற வார்த்தைக்கு உரிமையியல், குற்றவியல் பிரச்சினைகளைக் கிராம அளவில் பேசித் தீர்த்துக்கொள்வதற்கான ஒரு அமைப்பு என்றுதான் பொதுவாகப் பொருள்கொள்ளப்படுகிறது. அவை பின்பற்றிய வழக்கங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தன என்றாலும் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் நிர்வாகரீதியிலும் அரசியல்ரீதியிலும் தன்னைச் சுயாட்சி பெற்ற பகுதியாகக் கருதிவந்திருப்பதை இத்தகைய அமைப்புகளின் வரலாற்றிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. சார்லஸ் மெட்காப் போன்ற பிரிட்டிஷ் அதிகாரிகள் பஞ்சாயத்து அமைப்பைக் கிராமப்புறக் குடியாட்சி என்றே அழைத்துவந்துள்ளனர்.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு உள்ளாட்சி அமைப்புகளே தங்களது நில நிர்வாகத்தையும் கவனித்துக்கொண்டன என்கிறார் தரம்பால். நிலங்கள் தொடர்பான ஆவணங்கள் கர்ணம் என்று அழைக்கப்படுபவர்களின் பொறுப்பில் இருந்தன. வடஇந்தியாவில் இவர்கள் பத்வாரி (Patwari) என்று அழைக்கப்பட்டனர். கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டில் வந்த பிறகு, மதராஸ் மாகாணத்தில் இருந்த அனைத்து நிலங்களும் தங்களது

விவசாய வருமானத்தில் சரிபாதியை வரியாகச் செலுத்த வேண்டியிருந்தது. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தங்களது ஆளுகையை இழந்து, வரி வசூலிக்கும் முகவாண்மைகளாக மட்டுமே சுருங்கிப் போயின.

ஆட்சியர்களின் கட்டுப்பாடு

சென்னை மாகாணத்துக்கு உட்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1880, 1907, 1946 ஆகிய ஆண்டுகளில் முழுமையான மறுபரிசீலனைக்கு ஆளாகியுள்ளன. 1880-களில் ஏற்கெனவே இருந்த திட்டங்களைத் தீவிரப்படுத்தவும் புதிய திட்டங்களைச் செயல்படுத்தவும் மாவட்ட அளவில் கூடுதல் நிதியாதாரங்கள் உருவாக்கப்பட்டன. மைய அரசின் வழக்கமான அரசு எந்திரத்திலிருந்து விடுபட்டு, மாவட்ட ஆட்சியர்கள் சூழலுக்கேற்பச் சுயமாக முடிவெடுத்துக்கொள்ள வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. 1884-ல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி, சென்னை மாகாணத்தில் மாவட்ட, வட்ட, கிராம அளவில் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஊரகப் பகுதிகளில் சாலை வசதிகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் ஆகியவை பெருமளவில் தொடங்கப்பட்டது இந்தக் காலகட்டத்தில்தான். ஆனாலும்கூட, உள்ளாட்சி அமைப்பின் அதிகாரங்கள் பெரிதும் மாவட்ட ஆட்சியர்களால் கட்டுப்படுத்தப்படும் நிலை இருந்தது. 1907-ல் நியமிக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்துக்கான ராயல் கமிஷன், உள்ளாட்சி நிர்வாகத்தின் மீதும் கவனம் செலுத்தியது. அப்போது உள்ளாட்சி அமைப்புகள் குறித்துப் பெறப்பட்ட கருத்துகள் 1920 வரையிலும் விவாதிக்கப்பட்டன. 1920-ல் இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்கான விரிவான விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளும் அதிகரித்தன. 1946-ல் இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கான விவாதங்களின்போதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான முக்கியத்துவம் குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட்டது.

பல்வந்த் ராய் பரிந்துரை

சுதந்திர இந்தியாவில் 1958-ல் மதராஸ் பஞ்சாயத்துகள் சட்டம் இயற்றப்பட்டது. எனினும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களையும் அந்தச் சட்டம் கொண்டிருந்தது. உள்ளாட்சி அமைப்பின் ஒவ்வொரு நோக்கத்தையும் எட்டுவதற்கு அச்சட்டம் முன்பிருந்த பிரிட்டிஷ் நடைமுறைகளைப் பின்பற்றியதே குழப்பங்களுக்குக் காரணமாயிற்று என்கிறார் தரம்பால். தவிர, உள்ளாட்சி அமைப்புகளின் மொத்தச் செலவினங்களும் குறைவாகவே இருந்தன. எனினும், 1958-ல் இயற்றப்பட்ட பஞ்சாயத்து சட்டம்தான், சென்னை மாநிலத்தில் உள்ள எல்லாக் குடிசைகளையும் உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர உதவியது.

அதற்கு முன்னால், மாநிலத்தின் பாதிப் பரப்பளவு மட்டுமே கிராமப் பஞ்சாயத்துகளைப் பெற்றிருந்தது. 1957-ல் அளிக்கப்பட்ட பல்வந்த் ராய் மேத்தா கமிட்டியின் பரிந்துரைகளை ஏற்று இயற்றப்பட்ட சட்டம் அது. அரசு மேற்கொள்ளும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாலேயே நிர்வகிக்கப்பட வேண்டும் என்பது அந்த கமிட்டியின் முக்கியப் பரிந்துரை. 73 மற்றும் 74-ம் அரசமைப்புச் சட்டத் திருத்தங்களுக்குப் பிறகு இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டுப் பெண்களுக்கும் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கும் இடஒதுக்கீடு உறுதிசெய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடுகளும் அதிகரித்துவருகின்றன

உள்ளாட்சி அமைப்புகள் இன்று அரசமைப்போடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. எனவே, அரசமைப்பில் நிகழும் அத்தனை தவறுகளும் உள்ளாட்சி அமைப்பிலும் பிரதிபலிக்கக்கூடும். மத்திய மாநில அளவில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களின் வெற்றி என்பது ஒவ்வொரு நிலையிலும் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்வதால் மட்டுமே சாத்தியம். அந்தப் பொறுப்பேற்பு, உள்ளாட்சி அமைப்புகளின் நியாயமான நிர்வாகத்தாலேயே சாத்தியமாகும்.

ஒருவேளை, உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகம் சரிவர இயங்கவில்லை என்றால், அது அமைப்பின் தவறால் அல்ல, அவ்வமைப்பின் பணிகளைப் பற்றிய அறியாமையின் காரணமாகத்தான் என்கிறார் தரம்பால். உள்ளாட்சி குறித்த விழிப்புணர்வால் மட்டுமே அந்த அமைப்புகளின் சுயாட்சியை மீட்டெடுக்க முடியும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு தமிழ்நாட்டுக் கிராமங்கள் சமுதாயங்களாகவும் மகமைகளாகவும் தங்களைத் தாங்களே நிர்வகித்துக்கொண்டன. அந்நியர்களிடம் இழந்த அந்த உரிமையைச் சுதந்திர இந்தியா திரும்பவும் கிராமங்களின் கைகளிலேயே திரும்பக் கொடுத்திருக்கிறது.

---

4. இந்தியா-ஜப்பான் கடற்படைகள் கூட்டுப் பயிற்சி இன்று தொடக்கம்

இந்தியா-ஜப்பான் கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி புதன்கிழமை தொடங்கவுள்ளது. அரபிக் கடலில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி அக்.8-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதுதொடா்பாக இந்திய பாதுகாப்புப் படை வெளியிட்ட அறிக்கையில், "இந்தியா-ஜப்பான் கடற்படைகளின் கடல்சாா் கூட்டுப் பயிற்சி (ஜிமெக்ஸ்) 5-ஆவது முறையாக நடைபெறவுள்ளது. இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் கொச்சி, தேக் கப்பல்கள் பங்கேற்கின்றன. ஜப்பான் கடற்படை சாா்பில் ககா, முராசேம் கப்பல்கள் கலந்து கொள்கின்றன. அத்துடன் கடற்படையின் பி8ஐ, டாா்னியா் வகை ரோந்து விமானங்கள், மிக் 29கே ரக போா் விமானங்களும் பயிற்சியில் ஈடுபடவுள்ளன. ஆயுதப்பயிற்சி, நீா்மூழ்கி கப்பல்களுக்கு எதிரான போரிடும் முறைகள் உள்ளிட்டவற்றில் இருநாட்டு கடற்படைகளும் ஈடுபடும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

5. ஜூனியா் துப்பாக்கி சுடுதல்: உலக சாதனையுடன் தங்கம் வென்றாா் ஐஷ்வரி பிரதாப்

ஐஎஸ்எஸ்எஃப் ஜூனியா் உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஐஷ்வரி பிரதாப் சிங் தோமா் உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றாா். பெருவில் நடைபெறும் இப்போட்டியில் ஆடவா் 50 மீட்டா் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் பிரிவின் களம் கண்ட ஐஷ்வரி பிரதாப் சிங் தோமா், இறுதிச்சுற்றில் 463.4 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தாா். அவா் இந்தப் புள்ளிகளை வென்ன் மூலம் ஜூனியா் பிரிவில் புதிய உலக சாதனை படைத்து தங்கத்தை தனதாக்கினாா். பிரான்ஸ் வீரா் லூகாஸ் கிரைஸஸ் 456.5 புள்ளிகளுடன் வெள்ளியும், அமெரிக்காவின் காவின் பாா்னிக் 446.6 புள்ளிகளுடன் வெண்கலமும் வென்றனா்.

முன்னதாக தகுதிச்சுற்றிலும் ஐஷ்வரி பிரதாப் 1,185 புள்ளிகள் பெற்று முந்தைய உலக சாதனையை சமன் செய்ததுடன், முதல் நபராக இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றிருந்தாா். இதர இந்தியா்களான சன்ஸ்காா் ஹவேலியா 1,160 புள்ளிகளுடன் 11-ஆவது இடமும், பங்கஜ் முகேஜா 1,157 புள்ளிகளுடன் 15-ஆவது இடமும், சா்தாஜ் திவானா 1,157 புள்ளிகளுடன் 16-ஆவது இடமும், குா்மான் சிங் 1,153 புள்ளிகளுடன் 22-ஆவது இடமும் பிடித்து தகுதிச்சுற்றுடன் வெளியேறினா். இளம் வீராங்கனை அசத்தல்: அதேபோல், மகளிருக்கான 25 மீட்டா் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் நாம்யா கபூா் தங்கமும், மானு பாக்கா் வெண்கலமும் வென்றனா்.

இதில் 14 வயது இளம் வீராங்கனையான நாம்யா, 19 வயது அனுபவ வீராங்கனையான மானுவை பின்னுக்குத்தள்ளி தங்கம் வென்று ஆச்சா்யமளித்தாா். அவா்கள் களம் கண்ட பிரிவின் இறுதிச்சுற்றில் நாம்யா கபூா் 36 புள்ளிகளுடன் முதலிடம் பிடிக்க, பிரான்ஸின் கேமிலி ஜெடா்ஸெஜெவ்ஸ்கி 33 புள்ளிகளுடன் 2-ஆம் இடத்தையும், மானு பாக்கா் 31 புள்ளிகளுடன் 3-ஆம் இடத்தையும் பிடித்தனா். மற்றொரு இந்திய வீராங்கனை ரிதம் சங்வான் 4-ஆம் இடம் பிடிக்க, இப்பிரிவில் இந்தியாவின் ஆதிக்கமே இருந்தது. இப்போட்டியில் ஏற்கெனவே வேறு 3 பிரிவுகளில் தங்கம் வென்ற மானு பாக்கருக்கு இந்த வெண்கலம் 4-ஆவது பதக்கமாகும். முன்னதாக இப்பிரிவின் தகுதிச்சுற்றில் நாம்யா 580 புள்ளிகளுடன் 6-ஆம் இடம் பிடிக்க, மானு பாக்கா் 587 புள்ளிகளுடன் முதலிடமும், ரிதம் சங்வான் 586 புள்ளிகளுடன் 2-ஆம் இடமும் பிடித்திருந்தனா்.

முதலிடத்தில் இந்தியா: 8 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலம் என 17 பதக்கங்கள் வென்றுள்ள இந்தியா, பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறது. அமெரிக்கா 4 தங்கம் உள்பட 12 பதக்கங்களுடன் 2-ஆம் இடத்திலும், இத்தாலி 2 தங்கம் உள்பட 6 பதக்கங்களுடன் 3-ஆம் இடத்திலும் உள்ளன.

---

6. முதல் முறையாக விண்வெளியில் சினிமா படப்பிடிப்பு நடத்தும் ரஷியா..!

சர்வதேச விண்வெளி மையத்தில் வைத்து படப்பிடிப்பு நடத்த உள்ளதாக ரஷியா அறிவித்துள்ளது. இதற்காக, ரஷியா ஒரு நடிகை மற்றும் ஒரு திரைப்பட இயக்குநரை வெகு விரைவில் விண்வெளிக்கு அனுப்ப தயாராகி வருகிறது.ஏற்கனவே இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஹாலிவுட் படம் ஒன்று விண்வெளியில் வைத்து படமாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த முயற்சி இன்னும் தொடங்கப்படவில்லை. முன்னதாக புகழ்பெற்ற ஹாலிவுட் திரைப்படமான 'மிஷன் இம்பாசிபில்' பட கதாநாயகன் டாம் குரூஸ், நாசா மற்றும் எலான் மஸ்க்கின் ஸ்பேஸ்-எக்ஸ் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த திட்டம் குறித்து அறிவித்திருந்தார். நடிகை யூலியா பெரிசில்ட் (37 வயது) மற்றும் திரைப்பட இயக்குநர் வ்ஷென்கோ (38 வயது) ஆகியோர் பழைய

சோவியத்–கசகஸ்தானில் உள்ள பைகோனர் காஸ்மோட்ரோமில் இருந்து வெகுவிரைவில் விண்வெளிக்கு பயணம் செய்ய உள்ளனர்.

மூத்த விண்வெளி வீரர் ஆண்டன் ஷ்காப்லெரோவ் இப்பயணத்துக்கு தலைமை தாங்குகிறார்.அவர்கள் மூவரும் சோயுஸ் எம் எஸ்–19 விண்கலத்தில் 12 நாள் பயணமாக செல்ல உள்ளனர்.அவர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் வைத்து படப்பிடிப்பு நடத்த உள்ளனர். "தி சேலஞ்ச்" என்று அந்த படத்திற்கு தலைப்பு வைக்கப்பட்டுள்ளது.படத்தின் பட்ஜெட் மற்றும் கதைக்களம் போன்ற விஷயங்கள் வெளியிடப்படாமல் இருந்த நிலையில், தற்போது ரஷியாவின் விண்வெளி நிறுவனமான 'ராஸ்காஸ்மோஸ்' அவற்றை வெளியிட்டுள்ளது.அதன்படி படத்தின் கதையாக, பெண் அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவர் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சென்று அங்கு ஆபத்தில் சிக்கியுள்ள விண்வெளி வீரரை பாதுகாக்க உள்ளார். இவ்வாறு படத்தின் கதை அமைக்கப்பட்டுள்ளது.

1. நெசவாளர் சேவைகள் மற்றும் வடிவமைப்பு வள மையம் அமைக்கப்படவுள்ள மாநிலம் / UT எது?

அ) ஜம்மு & காஷ்மீர்



ஆ) இமாச்சல பிரதேசம் ☑

இ) சிக்கிம்

ஈ) மேற்கு வங்கம்

✓ இமாச்சல பிரதேசத்தின் குல்லு மாவட்டத்தில், "நெசவாளர் சேவைகள் மற்றும் வடிவமைப்பு வள மையம்" அமைக்கப்படவுள்ளதாக நடுவண் வர்த்தகம், தொழில் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அறிவித்தார். இந்த மையம், அம்மாநிலத்தின் ஈர்க்கத்தக்க கைவினைப் பொருட்களை ஊக்குவிக்கவும், சர்வதேச சந்தையில் அப்பொருட்களை ஏற்றுமதி செய்யவும் சிறந்த தளத்தை வழங்கும். 2021 செப்.27 அன்று இமாச்சல பிரதேசத்தின் பொன்விழா ஆண்டை நினைவுகூரும் வகையி –ல் 'சேவா & சமர்பன்' திட்டத்தின்கீழ் இது ஏற்பாடு செய்யப்பட்டது.

---

2. "My Life in Full: Work, Family and Our Future" என்பது யாரின் நினைவுக்குறிப்பாகும்?

அ) ஜெப் பெசோஸ்



ஆ) ஆண்டி ஜாஸி

இ) இந்திரா நூயி ☑

ஈ) கிரண் மஜும்தார் ஷா

✓ "My Life in Full: Work, Family and Our Future" என்பது 65 வயதான முன்னாள் பெப்சிகோ தலைமைச் செயல் அதிகாரி இந்திரா நூயியின் நினைவுக்குறிப்பு ஆகும். இது போர்ட்போலியோ புத்தகங்களால் 2021 செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்படும். இது குழந்தைப் பருவத்திலிருந்து உலகின் மிக சக்திவாய்ந்த பெண்களில் ஒருவராக மாறும் வரை அவரது வாழ்க்கையை விவரிக்கிறது. இந்திரா நூயி, பெப்சிகோவின் தலைமைச் செயல் அதிகாரியாக பன்னிரண்டு ஆண்டுகள் பணியாற்றினார்.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற லூசி திட்டத்துடன் தொடர்புடைய விண்வெளி நிறுவனம் எது?

அ) இஸ்ரோ



ஆ) நாசா ☑

இ) புளூ ஆர்ஜின்

ஈ) ஸ்பேஸ் எக்ஸ்

✓ லூசி திட்டம் என்பது அமெரிக்காவின் நாசாவின், வியாழனின் டிரோஜன் விண்கற்களை ஆய்வுசெய்வதற்கான ஒரு திட்டப்பணியாகும். இது 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு சூரிய மண்டலத்தின் உருவாக்கம் பற்றிய புதிய நுண்ணறிவுகளை வழங்க அமைக்கப்பட்டுள்ளது.

✓ மனித உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய நுண்ணறிவுக –ளை வழங்கிய ஒரு பழங்கால புதைபடிவத்தின் பெயர் இந்த ஆய்வுக்கு சூட்டப்பட்டுள்ளது. இது அக்டோபர்.16 அன்று புளோரிடாவில் உள்ள கேப் கனாவெரல் விண்வெளி படை நிலையத்திலிருந்து ஏவப்படவுள்ளது.

---

4. இந்தியாவில், 'படைப்பாளி கல்வி திட்டத்தை'த் தொடங்கியுள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?

அ) கூகிள்

ஆ) அமேசான்

இ) மைக்ரோசாப்ட்

ஈ) பேஸ்புக் ☑

✓ பேஸ்புக் தனது மிகப்பெரிய 'படைப்பாளி கல்வி மற்றும் செயல்படுத்தும் திட்டத்தை' இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. "Born on Instagram" என பெயரிடப்பட்ட இத்திட்டத்தில் படைப்பாளர்களை ஊக்குவித்தல், கல்வி கற்பது மற்றும் செயல்படுத்துவதை இலக்காகக் கொண்ட மின்னணு கற்றல் படிப்பு அடங்கும். இத்திட்டம் முதலில் 2019'இல் தொடங்கப்பட்டது.

---

5. இந்திய ரிசர்வ் வங்கியுடன் தொடர்புடைய PCA கட்டமைப்பில் 'P' என்பது எதைக் குறிக்கிறது?

அ) Public

ஆ) Private

இ) Prompt ☑

ஈ) Priority

✓ Prompt Corrective Action (PCA) என்பது ரிசர்வ் வங்கியின் பலவீனமான வங்கிகளின் கண்காணிப்பு பட்டியலைக் குறிக்கிறது. அத்தகைய வங்கிகள் மற்றவர்களுக்கு கடன் கொடுப்பது போன்ற கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி விதிக்கிறது.

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI), சமீபத்தில், இந்திய வெளிநாட்டு வங்கியை PCA கட்டமைப்பிலிருந்து நீக்கியது. அவ்வங்கி, கடந்த 2015'இல் PCA கட்டமைப்பின்கீழ் வைக்கப்பட்டது. வெளியிடப்பட்ட 2020–21 நிதியியல் முடிவுகளின் அடிப்படையில், அவ்வங்கி PCA அளவுருவை மீறவில்லை என்பதை நிதி மேற்பார்வை வாரியம் கண்டறிந்தது.

---

6. 2020 மார்ச் மாத நிலவரப்படி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிப்புறக் கடன் வீதம் என்ன?

அ) 1.11%



ஆ) 11.1%

இ) 21.1% ☑

ஈ) 41.1%

✓ இந்தியாவின் வெளிப்புறக் கடன் பற்றிய மத்திய நிதி அமைச்சகத்தின் நிலை அறிக்கையின்படி, 2020 மார்ச் மாத நிலவரப்படி, இந்தியாவின் வெளிப்புறக் கடன் மற்றும் GDP விகிதம் 20.6%'இலிருந்து 21.1%ஆக அதிகரித்துள்ளது. 2021 மார்ச் மாத இறுதிப்படி இந்தியாவின் வெளிப்புறக் கடன் 2.1% உயர்ந்து $570 பில்லியன் டாலராக உள்ளது. வெளிப்புறக் கடன் விகிதத்திற்கான ஒதுக்கீடு அதே காலகட்டத்தில் 85.6%'இலிருந்து 101.2%ஆக அதிகரித்துள்ளது.

---

7. 'Ease of Logistics' வலைதளத்தைத் தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) MSME அமைச்சகம்



ஆ) வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் ☑

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம்

✓ இந்திய ஏற்றுமதி அமைப்புகளின் கூட்டமைப்பு (FIEO) என்பது 1965ஆம் ஆண்டில் வர்த்தக அமைச்சகம் மற்றும் தனியார் வர்த்தகம் மற்றும் தொழில் அமைப்புகளால் அமைக்கப்பட்ட வர்த்தக ஊக்குவிப்பு அமைப்பு ஆகும். மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சரான பியூஷ் கோயல், அண்மையில், 'ஈஸ் ஆப் லாஜிஸ்டிக்ஸ்' என்ற வலைதளத்தைத் தொடங்கினார். இந்தப் புதிய தளம், ஏற்றுமதியாளர்களுக்கும் லாஜிஸ்டிக் சேவை வழங்குநர்களுக்கும் இடையே ஓர் இணைப்பாக இருக்கும்.

---

8. பிரான்ஸ் நாட்டுடன் பல பில்லியன் மதிப்புள்ள யூரோ பாதுகாப்பு ஒப்பந்தத்தை அறிவித்துள்ள நாடு எது?

அ) கிரேக்கம் ☑



ஆ) துருக்கி

இ) இத்தாலி

ஈ) ஸ்பெயின்

✓ பிரான்ஸும் கிரேக்கமும் பல பில்லியன் மதிப்புடைய யூரோ பாதுகாப்பு ஒப்பந்தத்தை அறிவித்துள்ளன. இதில் 3 பிரெஞ்சு போர்க்கப்பல்களை வாங்கும் கிரேக்கத்தின் முடிவும் அடங்கும். கிழக்கு மத்திய தரை கடலில் துருக்கியுடனான பதட்டங்களுக்கு இடையே கிரீஸ் தனது பாதுகாப்புத் திறனை அதிகரிக்கும் முடிவை எடுத்துள்ளது. அதிபர் இம்மானுவேல் மக்ரோன் மற்றும் கிரேக்க பிரதமர் கிரியகோஸ் மிட்சோடகிஸ் ஆகியோர் பாரிஸில் உத்திசார் பாதுகாப்பு கூட்டாண்மையை அறிவித்தனர். கிரீஸ் ஏற்கனவே 18 பிரெஞ்சு ரபேல் போர் விமானங்களை வாங்கியுள்ளது.

---

9. பின்வரும் எந்நகரத்தில் CIPET: பெட்ரோ இரசாயன தொழில்நுட்ப நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது?

அ) காந்தி நகர்



ஆ) ஜெய்ப்பூர் ☑

இ) சென்னை

ஈ) ஹைதராபாத்

✓ பிரதமர் மோடி, காணொலிக்காட்சிமூலம் ஜெய்ப்பூரில் அமைந்துள்ள CIPET: பெட்ரோ இரசாயன தொழில்நுட்ப நிறுவனத்தை தொடங்கிவைத்தார். மத்திய பெட்ரோகெமிக்கல்ஸ் எஞ்சினியரிங் & டெக்னாலஜி நிறுவனம் ஆனது முன்னர் மத்திய பிளாஸ்டிக் எஞ்சினியரிங் & டெக்னாலஜி நிறுவனம் என அழைக்கப்பட்டது. அது, சென்னையில், கடந்த 1968'இல் ஐநா வளர்ச்சித்திட்டத்தின் உதவியுடன் இந்தியாவில் நிறுவப்பட்டது.

---

10. தேசிய ஏற்றுமதி காப்பீட்டு கணக்கு திட்டத்தை எந்த ஆண்டு வரை தொடர அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?

அ) 2022–23



ஆ) 2023–24

இ) 2024–25

ஈ) 2025–26 ☑

✓ தேசிய ஏற்றுமதி காப்பீட்டு கணக்கு திட்டத்தை தொடர அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. 2021–2022 நிதியாண்டு முதல் 2025–2026 வரை ஐந்து ஆண்டுகளில் ₹1,650 கோடி மானிய நிதி உதவியை அரசாங்கம் அறிவித்துள்ளது. பட்டியலிடா CPSEஆன ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனத்தை (ECCG) பங்குச்சந்தையில் பட்டியலிடுவதற்கும் அமைச்சர –வை ஒப்புதலளித்தது. 2021–22 நிதியாண்டில் தொடங்கி, 5 ஆண்டுக –ளில், ₹4,400 கோடி அளவுக்கு ECCG'இல் முதலீடு செய்யப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. புலம்பெயர் தமிழர் நல வாரியம் உருவாக்கப்படும்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன்களைக் காக்க புலம்பெயர் தமிழர் நல வாரியம் தோற்றுவிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இதுகுறித்து, புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:– புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர் நலன் காக்க, புலம்பெயர் தமிழர் நலவாரியம் அமைக்கப்படும். அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் பிரதிநிதிகள் 13 நபர்களைக் கொண்டு இந்த வாரியம் ஏற்படுத்தப்படும். ரூ.5 கோடி புலம்பெயர் தமிழர் நலநிதி என மாநில அரசின் முன்பணத்தைக் கொண்டு வாரியம் உருவாக்கப்படும்.

என்னென்ன திட்டங்கள்?: மூலதனச் செலவினமாக ரூ.1.40 கோடியும், நலத் திட்டங்கள் மற்றும் நிர்வாகச் செலவினங்களுக்காக ரூ.3 கோடியும் ஆண்டுதோறும் ஒதுக்கப்படும். புலம்பெயர் தமிழர் குறித்த தரவு தளம் ஏற்படுத்தப்படும். வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம், மருத்துவ காப்பீடு திட்டம், அடையாள அட்டையுடன் வழங்கப்படும். வெளிநாடுகளுக்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின் போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி மற்றும் திருமண உதவித் தொகைகள் அளிக்கப்படும்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காக தமிழர்கள் புலம்பெயரும் போது, பயண புத்தாக்கப் பயிற்சி சென்னை மட்டுமின்றி, இனி ராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை, விழுப்புரம் மாவட்டங்களிலும் நடத்தப்படும். வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு ஆலோசனை வழங்க வசதியாக கட்டணமில்லாத தொலைபேசி வசதி மற்றும் இணையதளம், செல்லிடப்பேசி செயலி அமைத்துத் தரப்படும். வெளிநாடுகளில் புலம்பயர்ந்துள்ள தமிழர்களுக்கு என தனியாக சட்ட உதவி மையம் அமைக்கப்படும். கரோனா தொற்று காரணமாக சுமார் ஏழு லட்சம் தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். அவர்களில் பலர் வேலை இழந்துள்ளனர். அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் தமிழ்நாடு திரும்பியோருக்கு சிறு தொழில்கள் தொடங்கிட அதிகபட்சமாக ரூ.2.5 லட்சம் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படும். இதற்கென ரூ.6 கோடி ஒதுக்கப்படும்.

வெளிநாடு வாழ் தமிழர்களில் பெரும்பாலானோர் தங்களது சேமிப்பை தாய்நாட்டில் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்ய ஆர்வத்துடன் உள்ளனர். இதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, அவர்களது முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்.

எனது கிராமம் திட்டம்: புலம்பெயர்ந்த தமிழர்கள், தாம் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தவும், ஊர் மக்களின் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யவும் எனது கிராமம் திட்டம் உருவாக்கப்படும். இதில், பள்ளி, மருத்துவமனை, நூலகம் போன்ற கட்டடங்களை கட்டித் தரவும், சீரமைத்திடவும் புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். இதற்கான அனைத்து ஒருங்கிணைப்பும் அரசின் தரப்பில் எளிய முறையில் செய்து தரப்படும்.

கல்வி, வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே நிரந்தரமாக குடியுரிமை பெற்றுள்ள தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் கற்கும் ஆர்வம் உருவாக்கப்படும். தமிழ் மொழியை கற்றிட ஏதுவாகவும், தமிழ் பரப்புரைக் கழகம் மற்றும் தமிழ் இணைய கல்விக் கழகம் மூலமாக குழந்தைகளுக்கு தமிழ் கற்றுக் கொடுக்கப்படும். மேலும், அங்குள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ் பயிற்றுவிப்பதற்காக ஊக்கத் தொகை மற்றும் தமிழ் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சியும் வழங்கப்படும்.

புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும். இந்தச் சங்கங்களின் மூலமாக நமது கலை, இலக்கியம், பண்பாடு பரிமாற்றங்கள் நடைபெறும். இதற்காக ரூ.4 கோடி ஒதுக்கப்படும்.

வெளிநாட்டில் உள்ள தமிழர் நலனைப் பேணிட, நலவாரியம், அதுசார்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூ.20 கோடி ஒதுக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

பெட்டிச் செய்தி....ஜனவரி 12 உலகத் தமிழர் நாள்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12–ஆம் தேதி, புலம்பெயர் உலகத் தமிழர் நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும், வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12–ஆம் தேதி, புலம்பெயர்ந்த உலகத் தமிழர் நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்று தனது அறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

---

2. இந்தியாவில் 7 இடங்களில் ரூ.4,445 கோடியில் ஜவுளி பூங்கா: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

வேலை வாய்ப்பை அளிக்கும் ஜவுளித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் ரூ.4,445 கோடி முதலீட்டில் 7 மெகா ஜவுளிப் பூங்காக் களை அமைக்க பிரதமர் தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்பு தல் வழங்கப்பட்டுள்ளது. இத்தகவலை மத்திய அமைச்சர் பியுஷ் கோயல் தெரிவித்தார்.

இந்தியாவில் ஜவுளித் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 'பி.எம்.மித்ரா' திட்டத்தின்கீழ் 7 மெகா ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை பூங்கா அமைக்கப்படும் என கடந்த பட்ஜெட்டில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். இந்திய ஜவுளித் தொழிலை சர்வதேச அளவில் போட்டியிடும் வகையில் மேம்படுத்துவது இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

அத்துடன் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பது, வேலைவாய்ப்பை உருவாக்குவது, ஏற்றுமதியை அதிகரித்து, அந்நியச் செலா வணியை ஈட்டுவது, சர்வதேச தரத்திலான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்து, அதன்மூலம் வெளிநாட்டு சந்தையில் போட்டியிடும் வகையில் இந்திய தயாரிப்பு களை உருவாக்குவது போன்ற அம்சங்கள் இத்திட்டத்தின் நோக்கங்களாக இருக்கும் என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடந்தது. இதில், 'பிஎம் மித்ரா' திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் மத்திய அமைச்சர் பியுஷ் கோயல் கூறியதாவது:

நாட்டின் 7 இடங்களில் 'பிஎம் மித்ரா' திட்டத்தின்கீழ் மெகா ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைப் பூங்கா அமைக்க மத்திய அமைச் சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.4,445 கோடி செலவிடப்படும். தனியார் முதலீடுகளும் அனுமதிக்கப்படும். இதன்மூலம் ஜவுளி உற்பத்தி அதிகரித்து ஏற்றுமதி வளர்ச்சி ஏற்படும். மேலும், லட்சக்கணக்கான வேலை வாய்ப்புகளும் உருவாகும்.

பெரிய அளவில் அமைக்கப்படும் இந்த ஜவுளிப் பூங்காக்கள், அந்நிய முதலீடு களை பெருமளவில் ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2021–22 நிதி ஆண்டில் ஜவுளி ஏற்றுமதி மூலம் 4,400 கோடி டாலர் திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் 10 ஆயிரம் கோடி டாலர் அளவுக்கு ஜவுளி ஏற்றுமதியை எட்ட இலக்கு நிர்ண யிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பியுஷ் கோயல் தெரிவித்தார்.

ரயில்வே ஊழியருக்கு 78 நாள் ஊதியம் போனஸ்

புதுடெல்லி: ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாள் ஊதியத்தை போனஸாக வழங்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையின்போது ரயில்வே ஊழியர்களுக்கு போனஸ் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ரயில்வே ஊழியர்களுக்கு 78 நாள் ஊதியம் போனஸாக வழங்கப்படுகிறது.

இது தொடர்பாக அமைக்கப்பட்ட குழு, 72 நாள் ஊதியத்தை போனஸாக அளிக்கலாம் என மத்திய அரசுக்கு பரிந்துரைத்திருந்தது. இந்நிலையில், நேற்று நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கப்பட்டது. பிரதமரும் அமைச்சரவைக் குழுவினரும் 78 நாள் ஊதியத்தை ரயில்வே ஊழியர்களுக்கு போனஸாக அளிக்க ஒப்புதல் அளித்தனர்.

இத்தகவலை செய்தியாளர்களிடம் மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர் தெரிவித்தார். ரயில்வே ஊழியர்களுக்கு போனஸ் வழங்குவதன் மூலம் அரசுக்கு ரூ.1,985 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

---

3. பருவநிலை மாற்றமும் இயற்பியல் நோபலும்

இரண்டு, நான்கு, ஆறு என இப்படியே இரண்டின் மடங்கில் கூட்டிக்கொண்டே செல்கிறோம், இந்தத் தொடரில் 1,000–க்கு அடுத்து எந்த எண் வரும் என்று கேட்டால், 1,002 என்று எளிதாகக் கணிக்க முடியும். இதுவே ஒன்றிலிருந்து ஒன்பது வரை எண்களைக் கொடுத்து, நம் மனப்போக்கில் மாறிமாறி எண்களைச் சொல்லச் சொன்னால், நம் இஷ்டத்துக்கு 2, 9, 7, 5, 1, 4 என்று சொல்லிக்கொண்டே போவோம். இதே போக்கில் போனால், ஒருவர் அடுத்து என்ன எண்களைச் சொல்லுவார் கணிக்க முடியுமா? இப்படி உலகில் பல விஷயங்கள் தற்போக்காகத்தான் நடைபெறுகின்றன. இதனாலேயே அறிவியல் ஆய்வுகளும் கணிப்புகளும் நேரடியானவையாக இருப்பதில்லை.

கூட்டமாகப் பறக்கும் பறவைகள் அடுத்து எந்தத் திசையில் திரும்பும்? வளிமண்டலத்தில் ஏற்படும் சிறுசிறு மாற்றங்களால் நூறாண்டுகள் கழித்துக் கடலின் வெப்பநிலை என்னவாக இருக்கும்? இப்படித் தன் போக்கில் நடக்கும் விஷயங்களைக் கணிக்க முடியாது என்று நாம் நினைத்தாலும், முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள், இந்த ஆண்டு இயற்பியலில் நோபல் பரிசு வென்ற விஞ்ஞானிகளான சுகுரோ மனாபே (Syukuro Manabe), கிளவுஸ் ஹாஸல்மான் (Klauss Hasselmann), ஜார்ஜோ பரீசி (Giorgio Parisi) ஆகிய மூவரும். மிகவும் சிக்கலான விஷயங்களில்கூட அடிப்படையில் ஓர் ஒழுங்கு இருக்கிறது, வடிவுரு இருக்கிறது என்னும் புரிதலைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே "சிக்கலான இயற்பியல் அமைப்புகளைப் புரிந்துகொள்வதற்குத் திறவுகோலாக இருந்த ஆய்வுப் பங்களிப்புகளுக்காக" இந்த ஆண்டுக்கான இயற்பியல் நோபல் பரிசு வழங்கப்பட்டிருக்கிறது.

இரவில் வெப்பம் எப்படி?

சூரியனிலிருந்து வரும் கதிர்களால் பூமிக்கு வெப்பம் கிடைக்கிறது. அப்படியென்றால், சூரியன் மறைந்த பின்பு வெப்பம் இல்லாமல் பூமி குளிர்நிலைக்குச் சென்றுவிட வேண்டும் இல்லையா? ஆனால், இரவிலும் குறிப்பிட்ட அளவு வெப்பம் நிலவுகிறது. அதனால்தானே நாம் உறைந்துபோகாமல் இருக்கிறோம். இது ஏன் என்று சிந்தித்த ஃபூரியர், பூமியில் இருக்கும் வளிமண்டலம் வெப்பத்தைத் தக்க வைக்கிறது என்று 200 ஆண்டுகளுக்கு முன்பு கண்டறிந்தார்.

ஜப்பானைச் சேர்ந்த இயற்பியலாளரான மனாபே இரண்டாம் உலகப் போரினால் சிதைந்த டோக்கியோ நகரிலிருந்து 1950–களில் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து, ஆய்வுப் பணிகளை மேற்கொண்டவர். வளிமண்டலம்தான் வெப்பத்தைத் தக்கவைக்கிறது என்றாலும், அதில் எந்த வாயு எவ்வளவு வெப்பத்தைத் தக்கவைக்கிறது என்கிற கேள்வி அவருக்கு எழுந்தது. வளிமண்டலத்தில் பல வாயு மூலக்கூறுகள், பல்வேறு அடுக்குகள் இருப்பதால், இது மிகுந்த சிக்கலான கேள்வி. எனினும் தன் அசாத்திய உழைப்பால், இதற்கான விடையை மனாபே கண்டறிந்தார். காற்றில் இருக்கும் ஆக்ஸிஜனும் நைட்ரஜனும் வெப்பநிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஆனால், வளிமண்டலத்தில் இருக்கும் கரியமில வாயுவின் அளவு இரட்டிப்பானால் வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் அளவுக்கு அதிகரிக்கிறது என்று துல்லியமாகக் கணக்கிட்டுச் சொன்னது, 1960–களில் இவர் கண்டுபிடித்த பருவநிலை மாதிரி. அதற்குப் பின், தினசரி மாறும் வானிலையையும், பொதுவான பருவநிலையையும் இணைக்கும் பணியில் ஈடுபட்டவர் ஜெர்மனியைச் சேர்ந்த பருவநிலையாளர் ஹாஸல்மான்.

மனிதரே காரணம்

ஒரு நாயைக் கூட்டிக்கொண்டு நீங்கள் சாலையில் நடந்துபோனால், அது முன்னே செல்லும், பின்னால் இழுக்கும், காலைச் சுற்றும். இதுபோன்ற சிறுசிறு மாற்றங்களைக் கொண்டதுதான் வானிலை. ஆனால், நீங்களோ சீராக நடந்துபோய் இலக்கை அடைந்துவிடுவீர்கள். இதுதான் பருவநிலை. இன்றளவும் ஒரு வாரம், பத்து நாட்களுக்கு மேல் வானிலை எப்படியிருக்கும் என்று துல்லியமாகக் கணிக்க முடியாது. ஆனால், 50 ஆண்டுகள் கழித்துப் பருவநிலை எப்படியிருக்கும் என்று சொல்ல முடிகிறது.

நாள்தோறும் விரைவாக மாறும் வானிலையால், கடலில் சிறிய மாறுபாடு உண்டாகும் என்பதை 1980–களில் தன் கணக்கீட்டு மாதிரிகளின் அடிப்படையில் ஹாஸல்மான் நிரூபித்தார். மேலும், பருவநிலையில் மனிதச் செயல்பாடுகளால் ஏற்படும் மாற்றங்களைக் கணக்கிட்டுச் சொன்னார். பசுங்குடில் விளைவால் புவி வெப்பமடைகிறது என்பதை அறுதியிட்டுச் சொன்னவை, இன்றளவும் பயன்பாட்டில் உள்ள இவருடைய மாதிரிகள். 1980–களில் ஒழுங்கற்ற பொருட்களில் மறைந்திருக்கும் வடிவுருக்களைக் கண்டுபிடித்தவர் இத்தாலியைச் சேர்ந்த ஜார்ஜோ பரீசி.

காந்தத் தன்மையின் ரகசியம்

தற்சுழற்சிக் கண்ணாடி (spin glass) என்று சொல்லப்படும் பொருட்களில் காந்தத் தன்மை கொண்ட அணுக்கள் இருக்கும். அருகில் உள்ள அணுக்களின் தன்மையால் தங்களின் காந்த அமைப்பை இவை மாற்றிக்கொண்டே இருக்க வேண்டிவரும். இருப்பினும், அவற்றில் ஓர் அடிப்படை உருமாதிரி இருப்பதைக் கண்டுபிடித்து, எப்படி அணுக்களின் காந்தத்தன்மை அமையும் என்னும் சிக்கலைத் தீர்த்துவைத்தவர் பரீசி. மேலும், இதன் அடிப்படையில், பறவைக் கூட்டம் முதற்கொண்டு கோள்கள் வரை பல்வேறு சிக்கலான அமைப்புகள் சார்ந்து விடையளித்தவர் பரீசி.

பருவநிலை மாற்றத்துக்கு அங்கீகாரம்

நோபல் பரிசுத் தொகையின் ஒரு பாதியை மனாபேவும் ஹாஸல்மானும் பிரித்துக்கொள்ள, மறுபாதி பரீசிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பரீசியின் கண்டுபிடிப்புகள் மற்றவற்றிலிருந்து மாறுபட்டவை போலத் தோன்றினாலும் மூவரும் சிக்கலான, சீரற்ற இயற்பியல் அமைப்புகளைப் புரிந்துகொள்ளும் வழிமுறைகளைக் கொடுத்திருக்கிறார்கள். நோபல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது அரிய கண்டுபிடிப்பாக இருக்க வேண்டும் என்பதைத் தாண்டி, ஒரு கண்டுபிடிப்பால் உலகம் எந்த அளவுக்குப் பயனடைந்திருக்கிறது என்பதும் முதன்மையாகக் கொள்ளப்படுவதுண்டு. அப்படிப் பார்க்கையில் இவர்களின் பணி பல்வேறு துறை ஆய்வாளர்களுக்கு ஒளிவிளக்காகத் திகழ்கிறது.

பருவநிலை மாற்றம் குறித்த ஆய்வுகளுக்கு நோபல் பரிசு வழங்கியதன் மூலம், உலகத் தலைவர்களுக்கு ஒரு செய்தியை உணர்த்துகிறீர்களா என்று தேர்வுக் குழுவினரை நோக்கிக் கேள்வி எழுப்பப்பட்டது. "ஆமாம், புவி வெப்பமாதல் என்பது வெறும் வார்த்தை விளையாட்டல்ல, அறிவியல்பூர்வமானது என்று உரக்கச் சொல்லியிருக்கிறோம்' ' என்று அதற்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இது ஒன்று போதாதா இந்த ஆண்டு நோபல் பரிசின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்

---

4. செம்மொழி தமிழாய்வு நிறுவனம் சார்பில் 23 மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் 'மணிமேகலை' காப்பியம்

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான 'மணிமேகலை' காப்பியத்தை சீனம், ஜப்பனீஸ், கொரியன், சிங்களம் உள்ளிட்ட 23 மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியை மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று 'மணிமேகலை' . சிலப்பதிகார காப்பியத்தின் கதாபாத்திரங் களான மாதவி, கோவலனுக்குப் பிறந்த மணிமேகலையைப் பற்றிக்கூறும் இலக்கியமாகும்.

பவுத்த மதத்தை தழுவிய மணிமேகலையின் வாழ்க்கை குறிப்பு மற்றும் பவுத்த மதத்தின் அறநெறிகளை 30 அத்தியாயங்கள், 4,861 அகவல் அடிகளாக இந்தக் காப்பியத்தை 'சீத்தலைச் சாத்தனார்' இயற்றியுள்ளார்.

பாலி, சம்ஸ்கிருதம், தமிழ்உள்ளிட்ட பிற இந்திய மொழிகளில் இயற்றப்பட்ட பவுத்த மத நூல்கள் பல்வேறு காரணங்களால் அழிந்தபோதிலும், மணிமேகலை காப்பியம் மட்டுமே அழிவில் இருந்து தப்பியது. அதன்படி, பவுத்த மதக் கருத்துகளை எடுத்துரைக்கும் தலைசிறந்த நூலாகவும், மிகவும் தொன்மையான தாகவும் இது கருதப்படுகிறது.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த 'மணிமேகலை' காப்பியம் தற்போது மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தால் 15 வெளிநாட்டு மொழிகளிலும், பாலி, லடாக்கி, இந்தி, தெலுங்கு உள்ளிட்ட 8 இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவன இயக்குநர் இரா.சந்திரசேகரன், 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறியதாவது: உலகிலேயே பவுத்த மதக் காப்பியமாக மணிமேகலை மட்டுமே எஞ்சியுள்ளதாக, பவுத்த மதத் தலைவர் தலாய் லாமா பல ஆண்டுகளுக்கு முன்பு சர்வதேச மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

அதில், பவுத்த மத அறநெறிகள், அதுகுறித்த அரிய தகவல்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, பவுத்த மதத்தைப் பின்பற்றும் நாடுகளில் மணிமேகலை காப்பியத்தை கொண்டுசெல்ல மத்திய தமிழாய்வு நிறுவனம் நடவடிக்கை எடுத்தது.

அதன்படி, மலேசியா (மலாய்),கம்போடியா (கெமர்), இந்தோனேசியா (இந்தோனேசியா), லாவோஸ் (லாவோ), மியான்மர் (பர்மீஸ்), சீனா (மாண்டரின் – சீனம்), திபெத்திய மொழி, தாய்லாந்து (தாய்), வியட்நாம் (வியட்நாமிஸ்), ஜப்பான் (ஜப்பனீஸ்), மங்கோலியா (மங்கோலியன்), வடகொரியா, தென்கொரியா (கொரியன்), பூடான் (தி.ஃசொங்கா), இலங்கை (சிங்களம்), நேபாளம் (நேபாளி) ஆகிய நாடுகளின் 15 மொழிகள், பாலி, லடாக்கி, சீக்கியம் உள்ளிட்ட 3 இந்திய மொழிகள் என மொத்தம் 18 மொழிகளில் மணிமேகலை காப்பியம் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது.

இதற்காக சம்பந்தப்பட்ட நாடுகளின் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் தமிழ் பேராசிரியர்கள், அறிஞர்கள் பணியில் அமர்த்தப்பட் டுள்ளனர். இக்காப்பியத்தை ஒரு மொழியில் மொழிபெயர்க்க ரூ.2.5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பு பணிகள் விரைவில் நிறைவு பெற உள்ளன.

பின்னர், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பில் அவை நூல்களாக வெளியிடப்படும். இதன்மூலம், சர்வதேச அளவில் தமிழ் காப்பியம் சிறப்புமிக்க தகுதியை பெறும். அதேபோல, இந்தி, கன்னடம், மலையாளம், சம்ஸ்கிருதம், தெலுங்கு ஆகிய 5 மொழிகளிலும் மணிமேகலை மொழி பெயர்க்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

---

5. ராணுவ மைதானத்தின் ஒரு பகுதிக்கு 'ஆரோக்கிய ராஜீவ்' பெயர்: தொடர்ந்து 2 முறை ஒலிம்பிக்கில் பங்கேற்ற திருச்சி வீரருக்கு உதகையில் கவுரவம்

திருச்சி மாவட்டம் லால்குடி அருகே வழுதியூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஆரோக்கிய ராஜீவ்(30). உதகை வெலிங்டனில் உள்ள இந்திய ராணுவத்தின் மெட்ராஸ் ரெஜிமெண்டில் சுபேதாராக பணிபுரிந்து வரும் இவர், தேசிய அளவிலான போட்டிகளில் மட்டுமின்றி சர்வதேச தடகளப் போட்டிகளிலும் சாதனை படைத்து வருகிறார்.

2014 ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெண்கலம், 2018 ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கம், ஒரு வெள்ளி வென்றார். 2016 ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்றார். 2021 டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்கள், கலப்பு 4X400 தொடர் ஓட்டம் என 2 பிரிவுகளில் இந்தியா சார்பில் பங்கேற்றார்.

இப்போட்டிகளில் இந்தியா பதக்கம் வெல்ல முடியவில்லை. எனினும்முகமது அனஸ் யஹியா, நோநிர்மல் டாம், ஆரோக்கிய ராஜீவ்,அமோஜ் ஜேக்கப் ஆகிய வீரர்கள்இடம்பெற்ற ஆண்கள் பிரிவு அணியினர் 4X400 தொடர் ஓட்டத்தில் குறைந்த நிமிடங்களில் (3:00:25) பந்தய தூரத்தைக் கடந்து ஆசிய அளவில் சாதனை படைத்தனர்.

இந்நிலையில், இவர் பணிபுரிந்துவரும் வெலிங்டன் மெட்ராஸ் ரெஜிமெண்ட் வளாகத்தில் உள்ள தங்கராஜ் மைதானத்தின் ஒரு பகுதிக்கு (பார்வையாளர் மாடம்) ஆரோக்கிய ராஜீவ் பெயரைச் சூட்டி கவுரவப்படுத்தியுள்ளது இந்திய ராணுவம். இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ள ஆரோக்கிய ராஜீவ், வெலிங்டன் ராணுவ மைதானத்தில் தனது பெயர் சூட்டப்பட்ட பகுதிக்கு முன்பு நின்று புகைப்படம் எடுத்து 'பெரிதாக தோல்வியடையத் துணிந்தவர்களால் மட்டுமே, எப்போதும் பெரியளவில் சாதிக்க முடியும்' என்ற வாசகத்துடன் அதனை சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார்.

இதுகுறித்து 'இந்து தமிழ்' நாளிதழிடம் ஆரோக்கிய ராஜீவ் கூறியதாவது: நான் பயிற்சி பெறும் மைதானத்தின் ஒரு பகுதிக்கு எனது பெயர் சூட்டப்பட்டிருப்பது எனக்கு கிடைத்த அங்கீகாரங்களில் மிகப்பெரிய ஒன்றாக கருதுகிறேன். 2016 ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற அடுத்த ஆண்டில், இந்தியஅரசு எனக்கு அர்ஜுனா விருது கொடுத்தது. அதன் பின்பு 2021–ல்2–வது முறையாக ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று திரும்பியுள்ள நிலையில், இந்திய ராணுவ வரலாற்றில் இடம்பெறும் வகையில் தற்போது இந்த அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் கிடைத்துள்ள உற்சாகம், என்னை இன்னும்வேகமாக ஓட வைக்கும். எனவே,நிச்சயம் மேலும் மேலும் வெற்றிகளை குவிப்பேன் என்றார்.

ஒலிம்பிக்கில் பங்கேற்ற, அர்ஜுனா விருதுபெற்ற உதகையைச்சேர்ந்த கால்பந்து வீரர் தங்கராசுவின் பெயர், வெலிங்டன் மைதானத்துக்கு ஏற்கெனவே சூட்டப்பட்டுஉள்ளது குறிப்பிடத்தக்கது.

---

6. விபத்தில் சிக்கியவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்பவர்களுக்கு ரொக்கப் பரிசு: மத்திய அரசு அறிவிப்பு

சாலை விபத்தில் சிக்கியவர்களை அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றால் அவர்கள் உயிர் பிழைக்கும் வாய்ப்புகள் அதிகம். இதை மருத்துவத் துறையில் 'கோல்டன் ஹவர்' என்று சொல்கின்றனர்.

ஆனால் சாலை விபத்துகளில் சிக்கியவர்களை சரியான நேரத்தில் அழைத்துச் செல்ல முடியாததால் பலர் உயிரிழக்கின்றனர். மேலும் காயம் அடைந்தவர்களை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வதால் வழக்கு, போலீஸ் விசாரணை என பல்வேறு தொல்லைகள் வரும் என பயப்படுகின்றனர்.

இந்நிலையில் சாலை விபத்தில் சிக்கியவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் நபர்களுக்கு ரொக்கப் பரிசு தருவதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

சாலை விபத்தில் சிக்கியவர்களை அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உயிரைக் காப்பாற்ற உதவும் நல்ல உள்ளம் கொண்ட நபர்களுக்கு ரூ.5 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இதற்காக உள்ளூர் போலீஸ் நிலையத்தில் இருந்தோ அல்லது மருத்துவமனையில் இருந்தோ அவர்கள் ரசீதைப் பெற்று வரவேண்டும். மாவட்ட அளவிலான குழுக்கள் இதை பரிசீலனை செய்து மாதம்தோறும் இந்த பரிசுகள் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்துக்காக ஒவ்வொரு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கு தலா ரூ.5 லட்சத்தை மத்திய அரசு வழங்கும். இந்த நிதியிலிருந்து ரொக்கப் பரிசுகள் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும். உள்துறை முதன்மை செயலர் தலைமையில் மாநில கண் காணிப்புக் குழு, இந்தத் திட்டத்தை கண்காணித்து அமல்படுத்தும். இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு நபர், ஓராண்டில் 5 முறை பரிசுகளை பெற முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.–பிடிஐ

---

7. கிராமப் பொருளாதாரத்தை வலிமைப்படுத்தும் – இ–சொத்து அட்டை திட்டம் நாடு முழுவதும் அமல் : பயனாளிகளுடனான கலந்துரையாடலில் பிரதமர் நரேந்திர மோடி தகவல்

சோதனை முறையில் அமல்படுத்தப்பட்ட இ–சொத்து அட்டை திட்டம் கிராமப் பொருளாதாரத்தை வலிமைப்படுத்தி உள்ளதாகவும் இது நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இ–சொத்து அட்டை (ஸ்வமித்வா) திட்டத்தை சோதனை முறையில் கடந்த ஆண்டு ஏப்ரல் 24–ம் தேதி பிரதமர் மோடி அறிமுகம் செய்தார். கிராமப்புறங்களில் சொத்து உரிமையை தெளிவாக நிறுவுவதுதான் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம். இதன்படி, ஆளில்லா குட்டி விமானங்கள் மூலம் (ட்ரோன்) நிலப்பரப்பை அளவிட்டு வரைபடம் உருவாக்கப்பட்டு நில உரிமையாளர்களுக்கு மின்னணு சொத்துஅட்டை வழங்கப்படும். அதில் சம்பந்தப்பட்ட நபருக்கு சொந்தமான சொத்து விவரங்கள் அனைத்தும் இடம்பெற்றிருக்கும். இந்ததிட்டத்தின் மூலம் சமூக–பொருளாதார நிலை மேம்படுவதுடன் கிராமங்கள் தன்னிறைவு பெறும் என மத்திய அரசு கருதுகிறது.

22 லட்சம் சொத்து அட்டை

இந்நிலையில், மத்திய பிரதேசமாநிலம் ஹர்தா மாவட்டத்தில் காணொலி மூலம் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஸ்வமித்வா திட்டத்தின் கீழ் 1.7 லட்சம் பேருக்கு இ–சொத்து அட்டையை பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார். பின்னர் பயனாளிகளுடன் அவர் கலந்துரையாடினார். அப்போது அவர் கூறியதாவது:

ஸ்வமித்வா திட்டம் மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, உத்தராகண்ட், ராஜஸ்தான், ஹரியாணா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் சோதனை அடிப்படையில் அமல்படுத்தப்பட்டது. இதன்படி இதுவரை 22 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு சொத்து அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் மத்திய பிரதேசத்தில் மட்டும் 3 ஆயிரம் கிராமங்களுக்குட்பட்ட 1.7 லட்சம் குடும்பங்களுக்கு இ–சொத்து அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இந்த சொத்து அட்டைகளைப் பயன்படுத்தி வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் பெற்றுக் கொள்ளலாம். இதன்மூலம், அதிக வட்டி வசூலிக்கும் தனியாரிடமிருந்து கடன் வாங்குவதை கிராம மக்கள் தவிர்க்க முடியும். இதுபோன்ற காரணங்களால் இந்த திட்டம் அமல்படுத்தப்பட்ட பகுதிகளில் கிராமப் பொருளாதாரம் வலுவடைந்துள்ளது.

இந்த திட்டம் கிராமங்களின் வளர்ச்சியில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும். வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டுள்ள இந்த திட்டம்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும். கிராம சுயாட்சிக்கு எடுத்துக்காட்டாக இந்த திட்டம் விளங்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.– பிடிஐ

---

8. வேதியியலுக்கான நோபல் பரிசு: இரு விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்தளிப்பு

2021ஆம் ஆண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசு இரு விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்தளிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயிலும், மற்ற பரிசுகள் ஸ்டாக்ஹோமிலும் அறிவிக்கப்படும்.

அந்த வகையில் வேதியியலுக்கான நோபல் பரிசு இன்று (புதன்கிழமை) அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஜெர்மனியைச் சேர்ந்த பெஞ்சமின் லிஸ்ட், பிரிட்டனைச் சேர்ந்த டேவிட் மெக்மில்லன் ஆகியோருக்கு இவ்வாண்டின் வேதியியலுக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக நோபல் கமிட்டி தரப்பில் அறிவிக்கப்பட்டது,

இரு விஞ்ஞானிகளும் வேதியியல் மூலக்கூறு கட்டுமானத்திற்கான புதிய மற்றும் தனித்துவமான வினையூக்கி (asymmetric organocatalysis) கருவியை உருவாக்கியதற்காக நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

வேதியியலில் இருவித வினையூக்கிகளே (உலோகங்கள் மற்றும் நொதிகள்) உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் நீண்டகாலமாக நினைத்துவந்த சூழலில், இவர்களின் இந்தக் கண்டுபிடிப்பு புதிய மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு உதவிகரமாக அமைந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

9. ஊரக உள்ளாட்சித் தோ'தல்: 74 சதவீத வாக்குப்பதிவு

தமிழகத்தில் ஊரக உள்ளாட்சித் தோ'தல் நடைபெற்ற 9 மாவட்டங்களில் புதன்கிழமை நடைபெற்ற முதல்கட்ட வாக்குப் பதிவில் 74.37 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் 78 மாவட்ட ஊராட்சி உறுப்பினர'கள், 755 ஒன்றியக் குழு உறுப்பினர'கள், 1,577 கிராம ஊராட்சித் தலைவர'கள், 12,252 கிராம ஊராட்சி உறுப்பினர'கள் பதவிக்கான முதல்கட்ட வாக்குப் பதிவு புதன்கிழமை (அக்.6) நடைபெற்றது. 41 லட்சத்து 94 ஆயிரம் வாக்காளர'கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இணையதளம் வழியே கண்காணிப்பு: வாக்குப் பதிவு அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்யவும், அசம்பாவிதங்களைத் தவிர்'க்கவும் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. வாக்குப் பதிவை சென்னையில் உள்ள மாநிலத் தோ'தல் ஆணையர' அலுவலகத்தில் இருந்து ஆணையர' வெ.பழனிகுமார', செயலர' சுந்தரவல்லி ஆகியோர' இணையதளம் வழியே கண்காணித்தனர'. இதையடுத்து ஆணையர' வெ.பழனிகுமார' செய்தியாளர'களிடம் கூறியது: 9 மாவட்டங்களில் முதல்கட்ட வாக்குப் பதிவுக்காக 7,921 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. இவற்றில் 12 ஆயிரத்து 318 கண்காணிப்பு கேமராக்களும், 1,132 வாக்குச் சாவடிகளில் விடியோ பதிவும், சென்னையில் இருந்து வாக்குப் பதிவை நேரடியாகக் கண்காணிக்க 1,123 ஆன்லைன் கேமராக்களும் பொருத்தப்பட்டிருந்தன. 9 தோ'தல் பார'வையாளர'கள், 129 பறக்கும் படைகள், 1,168 நுண் பார'வையாளர'கள், 74 வட்டாரப் பார'வையாளர'கள், 1 லட்சத்து 17 ஆயிரம் தோ'தல் பணியாளர'கள், 39,408 போலீஸார' தோ'தல் பணியில் ஈடுபட்டுத்தப்பட்டனர'. அசம்பாவிதம் இன்றி அமைதியாக தோ'தல் நடைபெற்றது.

765 வழக்குகள் பதிவு: தோ'தல் நடத்தை விதிகளை மீறியது தொடர'பாக 9 மாவட்டங்களில் 765 போ' மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூ. 97 லட்சத்து 98 ஆயிரம் ரொக்கமும், 34 லட்சம் மது பாட்டில்களும், 14.48 கிலோ சந்தனக் கட்டைகளும், 1,551 பட்டுப் புடவைகள், 1,341 துண்டுகள், 100 மின் விசிறிகள், 250 பித்தளை விளக்குகள், 600 குங்குமச் சிமிழ்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றார'.

விறுவிறு வாக்குப் பதிவு: புதன்கிழமை காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு நடைபெற்றது. பிற்பகல் வரை பெரும்பாலான மாவட்டங்களில் வாக்குப் பதிவு மந்தமாக நடைபெற்றது. அதன்பிறகு மாலை 6 மணி வரை வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. கரோனாவுக்கு சிகிச்சை பெறுவோர' வாக்களிக்கும் வகையில் கடைசி ஒரு மணி நேரம் அதாவது மாலை 5 மணி முதல் 6 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. மாலை 6 மணிக்குள் வாக்களிக்க வந்தவர'களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வாக்களிக்க அனுமதி அளிக்கப்பட்டது. முகக்கவசம் அணிந்து வந்தவர'கள் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்பட்டதுடன், வாக்காளர'களுக்கு கையுறை இலவசமாக வழங்கப்பட்டன. புதன்கிழமை காலை 9 மணி நிலவரப்படி, 7.72 சதவீத வாக்குகளும், மாலை 4 மணி நிலவரப்படி சுமார' 50 சதவீத வாக்குகளும், வாக்குப் பதிவு முடிவடைந்தபோது சராசரியாக 74.37 சதவீத வாக்குகளும் பதிவானதாக மாநிலத் தோ'தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

---

10. மாசில்லா சுவாசம் எப்போது?

ஒவ்வோர' ஆண்டும் காற்று மாசு உலகளவில் 70 லட்சம் முன்கூட்டிய இறப்புகளை ஏற்படுத்துவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. காற்று மாசால் குழந்தைகளுக்கு நுரையீரல் வளர்ச்சியும் இயக்கமும் குறைகிறது; சுவாச நோய்த்தொற்றும் ஆஸ்துமாவும் ஏற்படுகிறது.

உலக சுகாதார அமைப்பானது காற்று மாசு தொடர்பான மாற்றப்பட்ட தர விதிகளை கடந்த மாதம் வெளியிட்டது. அதன்படி, காற்றில் காணப்படும் பிஎம்2.5 எனப்படும் நுண் துகள்களின் அதிகபட்ச சுவாசிக்கத்தக்க அளவு ஒரு கனமீட்டருக்கு 15 மைக்ரான்களாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 2005–ஆம் ஆண்டு இந்த அளவு 25 மைக்ரான்களாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

10 மைக்ரான் விட்டம் அல்லது அதற்கு குறைவான நுண் துகள்கள் பிஎம்10 எனவும், 2.5 மைக்ரான் விட்டம் அல்லது அதற்கு குறைவான நுண் துகள்கள் பிஎம்2.5 எனவும் அழைக்கப்படுகின்றன. இந்த இரு அளவிலான நுண் துகள்களும் மனிதர்களின் நுரையீரலுக்குள்

ஊடுருவும் திறன் கொண்டவை. அதிலும் பிஎம்2.5 நுண் துகளானது ரத்த ஓட்டத்தில் கலந்து இதய மற்றும் சுவாச உறுப்புகளைப் பாதித்து, பிற உறுப்புகளையும் பாதிக்கிறது.

போக்குவரத்து, எரிசக்தி, வீடுகள், தொழிற்சாலைகள், விவசாயம் உள்ளிட்ட துறைகளில் எரிபொருள் எரிக்கப்படும்போது இந்த நுண்துகள்கள் வெளியாகின்றன.

இந்தியாவில் தேசிய சுற்றுப்புற காற்று தரநிலைகளின்படி (சஅஅணந), பிஎம்2.5 அளவானது அதிகபட்சம் 60 மைக்ரான்களாக இருக்க வேண்டுமென 2009-இல் நிர்ணயிக்கப்பட்டது. 2021-இல் இந்தியாவின் பெரிய நகரங்கள் பல, உலக சுகாதார நிறுவனத்தின் 2005-ஆம் ஆண்டு தர நிர்ணய அளவைத் தாண்டியுள்ளன.

புதிய விதிகளின்படி பார்த்தால் இந்த நகரங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காற்று மாசு காரணமாக அதிகரிக்கும் உயிரிழப்பும் இந்தியாவில் அதிகரித்துள்ளது.

காற்று மாசானது அனைத்து நாடுகளிலும் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்றாலும் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம்கொண்ட நாடுகளில் பாதிப்பு அதிகமாக உள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் புதிய காற்றுத் தர வழிகாட்டுதல்கள் ஆதாரத்தின் அடிப்படையிலானது. அனைத்து உயிர்கள் தொடர்புடைய காற்றின் தரத்தை உயர்த்த இது வழிகாட்டும்.

அனைத்து நாடுகளும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் போராட வேண்டும் – டெட்ரோஸ் அதானோம், உலக சுகாதார அமைப்பின் இயக்குநர்.

புதிய தரவிதிகள்

உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய காற்று மாசு தரவிதியானது 24 மணி நேரத்தில் பிஎம்2.5 நுண் துகள்களின் சுவாசிக்கத்தக்க அளவு 15 மைக்ரான்களாக இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் அனுமதிக்கப்பட்ட அளவானது 60 மைக்ரான்களாக உள்ளது.

நகரங்களில் காற்றின் தரம்

2021 ஜன. 1-ஆம் தேதி முதல் செப். 27-ஆம் தேதி வரை, உலக சுகாதார நிறுவனத்தின் புதிய அறிவிப்பின்படி நகரங்களில் காணப்பட்ட நுண்துகள்களின் விவரம், காற்றில் பிஎம்2.5 நுண் துகள்களின் அனுமதிக்கப்பட்ட அளவான 15 மைக்ரான்கள், 25-மைக்ரான்களுக்கு மேல் 60 மைக்ரான்கள் வரை, இந்தியாவின் தரநிலையான 60 மைக்ரான்களுக்கு மேல் வரை காணப்பட்ட சராசரி நாள்கள் குறித்த அட்டவணை:

நகரங்கள் >15 25-60 >60

1 தில்லி 0 32 68

2 பாட்னா 1 37 44

3 லக்னௌ 4 47 31

4 கொல்கத்தா 11 39 29

5 ஜெய்ப்பூர் 4 62 23

6 ஆமதாபாத் 0 70 23

7 ஹைதராபாத் 43 38 8

8 மும்பை 16 47 7

9 கோவை 0 86 6

10 சென்னை வேளச்சேரி 53 29 2

11 பெங்களூரு 34 40 1

12 திருவனந்தபுரம் 11 39 0.4.

15 மைக்ரான்கள் வரை காணப்பட்ட சராசரி நாள்கள்

25 மைக்ரான்களுக்கு மேல் 60-க்குள் காணப்பட்ட சராசரி நாள்கள்

60 மைக்ரான்களுக்கு மேல் காணப்பட்ட சராசரி நாள்கள்

---

11. 2025-இல் பெட்ரோலுடன் 20% எத்தனால் கலக்கப்படும்: இந்தியன் ஆயில் அதிகாரி தகவல்

நாடு முழுவதும் வரும் 2025-ஆம் ஆண்டில் பெட்ரோலுடன் 20 சதவீதம் அளவுக்கு எத்தனால் கலக்கப்படும். பெட்ரோல், டீசலில் எத்தனால் கலப்பதால் பயனாளருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்தியன் ஆயில் நிறுவன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநர் எஸ்.எஸ்.வி.ராமகுமார் தெரிவித்துள்ளார்.

இந்தியன் ஆயில் நிறுவன விரிவாக்கம் குறித்தும், மாற்று எரிசக்தி குறித்தும் விளக்கமளிப்பதற்காக இந்தியன் ஆயில் நிறுவன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு இயக்குநர் எஸ்.எஸ்.வி.ராமகுமார் சென்னையில் புதன்கிழமை செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியது: பெட்ரோல், டீசல் ஆகியவற்றுடன் எத்தனால் கலப்பதால் என்ஜின் செயல்பாட்டில் எந்த பாதிப்பும் ஏற்படாது. பெட்ரோல், டீசல் என்ஜினில் எரியும் திறனோடு எத்தனால் சேர்ந்தால் அதிக அளவு ஆக்டான்ஸ் கிடைக்கும். எனவே பெட்ரோல், டீசலில் எத்தனால் கலப்பதால் எவ்வித இழப்பும் பயனாளருக்கு ஏற்படாது.

தற்போது 10 சதவீதம் அளவுக்கு பெட்ரோலில் எத்தனால் கலக்கப்படும் நிலையில், 2025- ஆம் ஆண்டு முதல் 20 சதவீதம் எத்தனால் கலக்கப்படும். சிஎன்ஜி (இசஎ) வாயு தயாரிக்கும், விநியோகிக்கும் நிலையங்களை நாடு முழுவதும் இந்தியன் ஆயில் நிறுவனம் நிறுவவுள்ளது. இதன் மூலம் 5,000 தொழில் முனைவோருக்கு வாய்ப்புக் கிடைக்கும். இந்த சிஎன்ஜி வாயுவுடன் ஹைட்ரஜன் வாயுவை கலப்பதால் அதி திறன் கொண்ட சிஎன்ஜி வாயு கிடைப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. எனவே அவற்றை உற்பத்தி, விநியோகம் செய்வது குறித்து பாதுகாப்பு நடவடிக்கைக்காக உச்ச நீதி மன்றத்தை அணுகியுள்ளோம். அதன் அனுமதி கிடைத்தவுடன் சிஎன்ஜி வாயுவுடன் ஹைட்ரஜன் வாயு கலந்து விநியோகம் செய்யப்படும்.

இந்தியாவில் 90 சதவீத மக்கள் சமையல் எரிவாயுவைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் 50 சதவீதத்துக்கும் குறைவான உற்பத்திதான் இந்தியாவில் நடக்கிறது. எனவே இந்தியா, பெரும்பாலான எரிவாயுவுக்கு இறக்குமதியை நம்பியே உள்ளது. இதற்கு முன்பு சலுகை விலையில் சமையல் எரிவாயு (கடஎ) விநியோகம் செய்யப்பட்டது. தற்போது அரசின் கொள்கையின் படி, சர்வதேச சந்தை விலையை பொறுத்து விற்கப்படுகிறது. இதனால் விலை மாறுதல் ஏற்படுகிறது என்றார் எஸ்.எஸ்.வி.ராம்குமார்.

---

12. விவசாயியும் விவசாயமும்

இந்திய கிராமப்புற குடும்பத்தின் வருமானத்தில் நான்கில் மூன்று பங்கு விவசாயத்திலிருந்து வந்தது. இது 1970-இல். ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு 2020- ஆம் ஆண்டில் இது மூன்றில் ஒரு பங்கிற்கும் கீழே குறைந்துள்ளது.

தற்போது பெரும்பாலான விவசாயக் குடும்பங்கள் விவசாயத்தினைக் கைவிட்டு வேறு தொழில்கள் மூலம் சம்பாதிக்கின்றன. 2011-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரம், ஒவ்வொரு நாளும் 2,000 விவசாயிகள் விவசாயத்தைக் கைவிடுகின்றனர் என்று கூறுகிறது.

காலநிலை மாற்றம் விவசாயத்தினை கடுமையாக பாதிக்கிறது. காலநிலை மாற்ற பாதிப்புகளால் விவசாயிகளின் வருமானம் 25 சதவீதம் வரை குறையும் என்கிறது அரசாங்க தரவு. காலநிலை மாற்றம், விவசாயம் அதிகம் நடைபெறும் இந்தியாவின் நூறு ஏழை மாவட்டங்களில் கடுமையான பாதிப்பினை ஏற்படுத்துகிறது.

இதுபோன்ற காலநிலை மாற்ற பாதிப்புகள் ஆண்டுக்கு 700 கோடி ரூபாய் வரை இழப்பை ஏற்படுத்துகின்றன. உலகின் அதிக மக்களை பாதிக்கும் இரண்டாவது மிக மோசமான பாதிப்பான வறட்சி, 30 கோடி இந்திய மானாவாரி விவசாயிகளைக் கடுமையாக பாதிக்கிறது.

1950-இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 51 சதவீதமாக இருந்த விவசாயத்தின் பங்களிப்பு, தற்போது 16 சதவீதமாக குறைந்துள்ளது. அதேவேளையில், 1951-ஆம் ஆண்டில் ஏழு கோடி குடும்பங்கள் விவசாயத்தை நம்பியிருந்த நிலையில், தற்போது அது 12 கோடி குடும்பங்களாக உயர்ந்துள்ளது.

உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் இந்தியப் பொருளாதாரமும் ஒன்று என்ற தரவு விவசாயிக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தவில்லை. ஏனெனில் நமது நாட்டின் ஒவ்வொரு இரண்டாவது விவசாயியும் கடன் வாங்குகிறார்.

இந்திய விவசாயி சராசரியாக மாதம் 6,426 ரூபாய் சம்பாதித்து 6,223 ரூபாயை செலவிடுகிறார். 15% இந்திய விவசாயிகள் மட்டுமே வருமானத்தில் 91%-ஐ சம்பாதிக்கின்றனர். இது வருமான சமத்துவமின்மைக்கு காரணமாக அமைகிறது.

ஒரு ஹெக்டோ் நிலத்தில் பயிரிடப்படும் கோதுமையிலிருந்து 7,639 ரூபாய் மட்டுமே ஒரு விவசாயி சம்பாதிக்கிறாா். கோதுமைக்கான உற்பத்திச் செலவு 32,644 ரூபாய். ஒரு ஹெக்டேருக்கான நஷ்டம் 25,005 ரூபாய். இது பெரும் இழப்பு என்கிறது ஒரு ஆய்வு.

விவசாயக் குடும்பங்கள், கிராமப்புறங்களில் விவசாய நிலம் வைத்திருப்பவா்களின் 2019-ஆம் ஆண்டுக்கான நிலை மதிப்பீட்டு அறிக்கை செப்டம்பா் 10, 2021 அன்று வெளியிடப்பட்டது. பாதிக்கும் மேற்பட்ட இந்திய விவசாய குடும்பங்கள் கடனில் உள்ளதாகவும், சராசரியாக அவா்களின் கடன்தொகை 74,121 ரூபாய் என்றும் இவ்வறிக்கை கூறுகிறது.

2013-ஆம் ஆண்டிற்கான நிலை மதிப்பீட்டுக் கணக்கீட்டுடன் ஒப்பிடும்போது 2019-ஆம் ஆண்டில் கடனில் தவிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 51.9%-லிருந்து 50.2%-ஆக சற்று குறைந்துள்ளது. இருப்பினும் கடன்பெற்ற குடும்பங்களின் கடன்தொகை 47,000 ரூபாயிலிருந்து 74,121 ரூபாயாக அதிகரித்துள்ளது.

69.6% விவசாயிகள் வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசு சாா்ந்த நிறுவனங்களிலிருந்தும் 20.5% விவசாயிகள் தனியாா் நிதி நிறுவனங்களில் இருந்தும் கடன் பெற்றதாக தேசிய புள்ளியியல் அலுவலகத் தரவு கூறுகிறது. விவசாயிகள் வாங்கிய மொத்தக் கடனில் 57.5 சதவீதம் மட்டுமே விவசாய நோக்கங்களுக்காக வாங்கப்பட்டது என்கிறது இத்தரவு.

28 இந்திய மாநிலங்களில் அதிக கடன் பெற்றுள்ள விவசாயக் குடும்பங்கள் கொண்ட ஆந்திர மாநிலத்தில் 93.2 சதவீத விவசாயக் குடும்பங்கள் கடனில் உள்ளன என்றும், அவற்றின் சராசரி கடன் தொகை 2.45 லட்சம் என்றும் 2019-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு கூறுகிறது.

இதற்கு அடுத்தபடியாக விவசாய கடன் பெற்ற 91.7% குடும்பங்களைக் கொண்ட தெலங்கானா மாநிலத்தின் சராசரி கடன் தொகை 1.52 லட்சமாகவும் 69.9% குடும்பங்களைக் கொண்ட கேரள மாநிலத்தின் சராசரி கடன் தொகை 2.42 லட்சமாகவும் இருப்பதாக இக்கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

ஹரியாணா, பஞ்சாப், கா்நாடகம், ராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் கடன் பெற்ற விவசாயக் குடும்பங்கள் சராசரியாக ஒவ்வொன்றும் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் கடன் பெற்றுள்ளது. மொத்தத்தில் 11 மாநிலங்களில் இந்தத் கடன் தொகை தேசிய சராசரியான 74,121 ரூபாயை விட அதிகமாக உள்ளது.

ஒரு விவசாயக் குடும்பம் பயிா் சாகுபடி, விளைபொருட்கள் வணிகம் மட்டுமல்லாது விவசாயக் கூலி, கால்நடைகள் வளா்த்தல், உரம் – பூச்சிமருந்துகள் போன்ற விவசாயம் தொடா்பான பொருட்களின் வணிகம் ஆகியவற்றின் மூலமாக வருமானம் ஈட்டலாம். 2013-ஆம் ஆண்டில் 6,426 ரூபாயாக இருந்த விவசாயக் குடும்பங்களின் சராசரி வருமானம் 2019-ஆம் ஆண்டில் 10,218 ரூபாயாக அதாவது 57% அதிகரித்துள்ளது என்றும் ஆண்டு வளா்ச்சி விகிதம் 7.8% என்றும் தரவு கூறுகிறது.

இந்த வருமான அதிகரிப்பு, விவசாயத் தொழிலுக்கான ஊதியத்தாலும் கால்நடை வளா்ப்பாலும் உருவானது. 2018-19 ஆண்டில் விவசாய கூலி, பயிா் சாகுபடி, கால்நடை வளா்ப்பு, விவசாய சம்பந்தப்பட்ட பொருட்கள், வணிகம் வேளாண்துறை மொத்த வருமானத்தில் முறையே 40%, 38%, 16%, 6% பங்குகளைக் கொண்டிருந்தன. இதுவே 2012-13 ஆண்டில் முறையே 32%, 48%, 12%, 8% என இருந்தது.

இத்தரவுகள் விவசாயக் குடும்பங்கள் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியை விவசாய சாகுபடி மூலமாக சம்பாதிக்கவில்லை என்பதைத் தெளிவாக்குகின்றன. மொத்த சராசரி வருமானத்தில் அதிக பங்கு (ரூ. 4,063) ஊதியத்திற்கான வருமானம்.

வேளாண் துறையில் ஒரு தொழிலாக சுருங்கி வரும் விவசாயம் விவசாயிகளின் பெரும் வருமான ஆதாரமாக இல்லை என்பது உண்மையில் வருத்தம் தரும் செய்தி. கரோனா தீநுண்மியின் தாக்கம் உச்சம் பெற்ற காலத்தில் விவசாயிகளின் உழைப்பு காரணமாக இந்தியாவில் வேளாண் துறை மட்டுமே வளா்ச்சிபெற்றது.

தன்னிறைவு உணவு உற்பத்தி கொண்ட நாடாக இந்தியா இருக்கிறது. அதற்குக் காரணமான விவசாயி தன்னிறைவு கொள்ள வேண்டுமானால் அவன் கடனின்றி வாழ வேண்டும். அதற்கு ஆவன செய்யட்டும் அரசு.

---

13. பிரதமரின் பாரதிய மக்கள் மருந்தகங்களின் இலக்கு நிறைவு

வறுமைக்கோட்டுக்குள் இருக்கும் மக்கள் பயன் பெறும் வகையிலான பிரதமரின் பாரதிய மக்கள் மருந்தகம் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் திறக்கப்பட்டுவிட்டதாக மத்திய ரசாயனம், உரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி 8,300 மக்கள் மருந்தகங்கள் இதுவரை திறக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண நோய்கள் முதல் நீடித்த நோய்கள் வரையிலான அலோபதி மருந்துகள், வெளிச் சந்தைகளில் அதிக விலையில் விற்கப்படுகின்றன. இந்த மருந்துகள் பொதுமக்களுக்கு மலிவான விலையில் கிடைக்க மத்திய அரசு கொண்டுவந்துள்ள திட்டம்தான் "பிரதம மந்திரி பாரதிய மக்கள் மருந்தக திட்டம் (பிஎம்பிஜேபி)' ஆகும். இந்தத் திட்டத்தை இந்திய மருந்துகள், மருத்துவ சாதனங்கள் பணியகம் (பிஎம்பிஜ) பொறுப்பேற்று நாடு முழுவதும் மலிவு விலையில் முக்கிய மருந்துகளை விற்பனை செய்யும் வகையில், பிரதம மந்திரி பாரதிய மக்கள் மருந்தகங்களைத் திறந்து வருகிறது.

இந்த மருந்தகங்கள் மூலம் சுமார் 1,451 மருந்துகள், 240 மருத்துவ சாதனங்கள் மலிவான விலையில் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த 2020, மார்ச் வரை 696 மாவட்டங்களில் 6,068 மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டன. நிகழ் 2021-22-ஆம் நிதியாண்டில் 8,300 மக்கள் மருந்தகங்கள் திறக்கத் திட்டமிடப்பட்டு அக்டோபர் 5-ஆம் தேதி வரை 8,355 மருந்தகங்கள் திறக்கப்பட்டுவிட்டதாக ரசாயனத் துறை தெரிவித்துள்ளது. மேலும், 2024-ஆம் ஆண்டுக்குள் 10,000 மக்கள் மருந்தகங்களைத் திறக்கவும் மத்திய ரசாயனத் துறை திட்டமிட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழகத்தில்... தற்போது நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் (725) மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டுவிட்டன. தமிழகத்தில் இதுவரை சுமார் 827 மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டு நாட்டிலேயே சிறப்பாகச் செயல்படுவதாகவும் மத்திய ரசாயனத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் அனைத்து மக்கள் மருந்தகங்களும் விநியோகச் சங்கிலியால் இணைக்கப்பட்டு நிகழ்நேர அடிப்படையில் மருந்து விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது.

2020-21- ஆம் ஆண்டில் மக்கள் மருந்தகங்கள் மூலம் ரூ.665.83 கோடிக்கு விற்பனை நடந்துள்ளது. இதன்மூலம் பொதுமக்கள் ரூ. 4,000 கோடி வரை சேமிக்க முடிந்துள்ளது என்று அமைச்சகம் கூறியுள்ளது.

---

14. சர்வதேச ஆக்கி சம்மேளனத்தின் அனைத்து விருதுகளையும் அள்ளியது இந்தியா

சர்வதேச ஆக்கி சம்மேளனம் சார்பில் ஆண்டுதோறும் சிறந்த வீரர், வீராங்கனை உள்பட பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர், வீராங்கனை உள்ளிட்ட விருதுக்கான பட்டியல் ஏற்கனவே வெளியிடப்பட்டு இருந்தது. இதில் இருந்து ஒவ்வொரு பிரிவிலும் ஒருவரை விருதுக்கு தேர்வு செய்ய 'ஆன்-லைன்' மூலம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் தேசிய ஆக்கி அணிகளின் கேப்டன்கள், பயிற்சியாளர்கள், ரசிகர்கள் மற்றும் வீரர்கள், ஊடகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அளிக்கும் வாக்குகளின் சதவீதத்தை அடிப்படையாக கொண்டு விருதுக்கு தேர்வாகி இருக்கும் வீரர், வீராங்கனைகளின் பெயரை சர்வதேச ஆக்கி சம்மேளனம் நேற்று அறிவித்தது.

இதன்படி அனைத்து பிரிவுகளின் விருதுகளையும் இந்தியா கைப்பற்றியது. டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலப்பதக்கம் வென்று சாதனை படைத்த இந்திய அணியில் அதிக கோல்கள் அடித்த ஹர்மன்பிரீத் சிங் 52.11 சதவீத வாக்குகளுடன் சிறந்த வீரர் விருதுக்கும், டோக்கியோ ஒலிம்பிக்கில் 4-வது இடம் பெற்ற இந்திய பெண்கள் அணியில் அதிக கோல்கள் போட்ட குர்ஜித் கவுர் 46.63 சதவீத வாக்குகளுடன் சிறந்த வீராங்கனை விருதுக்கும் தேர்வாகி இருக்கிறார்கள்.

சிறந்த கோல்கீப்பர் விருதுக்கு இந்திய அணியை சேர்ந்த ஸ்ரீஜேஷ் (ஆண்கள்), சவிதா புனியா (பெண்கள்) ஆகியோரும், வளர்ந்து வரும் நட்சத்திர விருதுக்கு ஷர்மிளா தேவி (பெண்கள்), விவேக் சாகர் பிரசாத் (ஆண்கள்) ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்திய ஆண்கள் அணியின் பயிற்சியாளர் கிரகாம் ரீட், பெண்கள் அணியின் பயிற்சியாளர்

ஜோர்ட் மர்ஜினே ஆகியோர் சிறந்த பயிற்சியாளர்களாக தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றனர்.

சிறந்த வீரர்கள் தேர்வுக்கு பெல்ஜியம் ஆக்கி சம்மேளனம் அதிருப்தி தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த சம்மேளனம் வெளியிட்டு இருக்கும் டுவிட்டர் பதிவில், 'ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற பெல்ஜியம் அணியை சேர்ந்த வீரர்கள் பட்டியலில் இருந்தும் ஒருவர் கூட விருதுக்கு தேர்வாகாதது விருதுக்கான வாக்கெடுப்பு முறையின் தோல்வியை எடுத்துக்காட்டுகிறது. வருங்காலத்தில் விருது தேர்வுக்கான முறை நியாயமானதாக இருக்கும் வகையில் மாற்றி அமைக்க நாங்கள் சர்வதேச ஆக்கி சம்மேளனத்துடன் இணைந்து பணியாற்றுவோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு சர்வதேச ஆக்கி சம்மேளனம் அளித்த விளக்கத்தில் 'விருதுக்கு தேர்வானவர்கள், 3 பிரிவினரும் அளித்த வாக்குகளில் முதலிடத்தை பெற்றுள்ளனர். தேவைப்பட்டால் விருது வழங்கும் நடைமுறையில் மாற்றம் செய்ய வேண்டியது குறித்து மறுபரிசீலனை செய்வோம். தேசிய சம்மேளன பிரதிநிதிகள் முழுமையாக வாக்களிக்காதது ஏன்? என்பது குறித்து கவனம் செலுத்தப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

15. உலகின் முதல் மலேரியா தடுப்பூசி: ஆப்பிரிக்க குழந்தைகள் பெறுகிறார்கள்

உலகின் முதல் மலேரியா தடுப்பூசி, ஆப்பிரிக்க குழந்தைகளுக்குச் செலுத்தப்படவுள்ளது. மலேரியா காய்ச்சலைத் தடுப்பதற்காக மாஸ்குயிரிக்ஸ் என்ற தடுப்பூசியை கிளாக்ஸோ ஸ்மித்கிளைன் நிறுவனம் கடந்த 1987-இல் உருவாக்கியது. அந்த தடுப்பூசியின் செயல்திறன் குறைவாக இருந்ததால், அதை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, கடந்த 2019-இல் இருந்து கானா, கென்யா, மாலவி ஆகிய நாடுகளில் 8 லட்சத்துக்கும் மேற்பட்ட சிறார்களுக்கு மலேரியா தடுப்பூசி செலுத்தப்பட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆராய்ச்சியில் கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் இந்த தடுப்பூசியை பயன்படுத்துவதற்கு உலக சுதாகார அமைப்பு புதன்கிழமை ஒப்புதல் அளித்தது. முதல் முறையாக, ஆப்ரிக்காவைச் சோ்ந்த சிறுவா்கள், மலேரியா தடுப்பூசியை செலுத்திக்கொள்ள இருக்கிறாா்கள். 'இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம்' என்று உலக சுகாதார அமைப்பின் இயக்குநா் டெட்ரோஸ் அதானோம் கூறினாா். மலேரியாவைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மந்தமாகியிருந்த நிலையில், தடுப்பூசி வந்திருப்பது அதிகாரிகள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

---

1. உணவு இழப்பு மற்றும் சேதம் குறித்த சர்வதேச விழிப்புணர்வு நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?



அ) செப்டம்பர்.29 ☑

ஆ) செப்டம்பர்.30

இ) அக்டோபர்.1

ஈ) அக்டோபர்.2

✓ செப்.29 அன்று உணவுவிழப்பு மற்றும் சேதம் குறித்த இரண்டாவது சர்வதேச விழிப்புணர்வு நாளை உலகம் கொண்டாடுகிறது. சமீபத்தில் நடைபெற்ற ஐநா உணவமைப்பு உச்சிமாநாட்டில் "உணவு ஒருபோதும் வீணாகாது" என்ற கூட்டணியை UNEP அறிமுகப்படுத்தியது.

✓ "Stop Food Loss and Waste; For the People; For the Planet" என்பது இந்த ஆண்டின் (2021) கருப்பொருளாகும். உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களில் சுமார் 14% அறுவடை மற்றும் சில்லறை விற்பனையின் போது வீணாகின்றது. அதே நேரத்தில், உலகளாவிய உணவு உற்பத்தி –யில் 17% வரை பல்வேறு நிலைகளில் வீணாகின்றது. உலக இருதய நாளானது செப்டம்பர்.29 அன்று கொண்டாடப்படுகிறது. "'Use Heart to Connect" என்பது இந்த ஆண்டின் கருப்பொருள் ஆகும்.

2.'இனிப்புப்புரட்சி' என்ற NBHM திட்டத்துடன் தொடர்புடையது எது?



அ) கரும்பு

ஆ) தேன் ☑

இ) பழங்கள்

ஈ) பனை

✓ தேசிய தேனீ வளர்ப்பு மற்றும் தேன் இயக்கமானது (NBHM), மூன்று ஆண்டுகளுக்கு (2020–21 முதல் 2022–23 வரை) அறிவித்துள்ளது. இது, 'இனிப்புப்புரட்சி' என்ற இலக்கை அடைவதற்காக நாட்டில் அறிவியல் பூர்வமான முறையில் தேனீ வளர்ப்பை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இது தேசிய தேனீ வாரியம் (NBB) மூலம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமர், சமீபத்தில், 'தேசிய தேனீ வாரியத்தின்' ஒத்துழைப்புடன் குஜராத் கூட்டுறவு பால் சந்தை கூட்டமை –ப்பின் தயாரிப்பான 'அமுல் தேன்' என்பதை வெளியிட்டார்.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற புமியோ கிஷிடா, எந்த நாட்டின் அடுத்த பிரதமராவார்?



அ) ஜப்பான் ☑

ஆ) வட கொரியா

இ) தாய்லாந்து

ஈ) வியட்நாம்

✓ ஜப்பானின் முன்னாள் வெளியுறவு அமைச்சரான புமியோ கிஷிடா, யோஷிஹைட் சுகாவுக்கு மாற்றாக பிரதமராகவுள்ளார். அவர், ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றுள்ளார். COVID தொற்று, வரலாறு காணாத பொது சுகாதார நெருக்கடி மற்றும் சீனாவின் எல்லைமீறிய அரசியல் அச்சுறுத்தல் ஆகியவற்றால் நிலை குலைந்த பொருளாதாரத்தை ஜப்பான் எதிர்கொண்டுள்ளது.

---

4. 'Independent Engineer'மூலம் "தகராறு தவிர்ப்பு வழிமுறையை" அங்கீகரித்துள்ள மத்திய அமைச்சகம் எது?

GOVERNMENT OF INDIA
MINISTRY OF POWER

அ) எரிசக்தி அமைச்சகம் ☑

ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

இ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் அண்மையில் "இன்டிபென்டன்ட் எஞ்சினியர்" வழிமுறையிலான "தகராறு தவிர்ப்பு வழிமுறையை" அங்கீகரித்தார். முதலாளி மற்றும் ஒப்பந்தக்காரருக்கு இடையேயான தொடக்க நிலை தகராறுகளுக்கு, நீர்மின் துறையில் தற்போதுள்ள தீர்வு காண்முறைகள் பலனளிக்கவில்லை என நீர்மின் திட்டங்களை செயல்படுத்துகின்ற CPSE'கள் குரல் எழுப்பின.

---

5. அவசரகால கடனளிப்பு உத்தரவாத திட்டத்துடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?



அ) MSME அமைச்சகம்

ஆ) நிதி அமைச்சகம் ☑

இ) வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

ஈ) ஜவுளி அமைச்சகம்

✓ மத்திய நிதி அமைச்சகமானது அவசரகால கடனளிப்பு உத்தரவாதத் திட்டத்தின் செல்லுபடிகாலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கோ (மார்ச் 31, 2022) அல்லது ஒட்டுமொத்த உச்சவரம்பு 4.5 இலட்சம் கோடியை எட்டும் வரையோ நீட்டித்துள்ளது. இத்திட்டம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதிப்பற்றாக்குறையை சமாளிக்கவும், ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2021 செப். 24 நிலவரப்படி, 2.86 இலட்சம் கோடிக்கு மேல் இக்கடன் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

---

6. தேசிய மதிய உணவு திட்டத்தின் புதிய பெயர் என்ன?



அ) PM மதிய உணவுத் திட்டம்

ஆ) PM போஷான் ☑

இ) PM போஜன்

ஈ) PM ஆகார்

✓ தேசிய மதிய உணவுத்திட்டத்திற்கு 'PM போஷான்' திட்டம் என்று பெயர் மாற்றஞ்செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதில் உழவர்கள் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் பெண்கள் சுயஉதவிக் குழுக்களின் பங்களிப்பும் புதிய அம்சங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

✓ நாடு முழுவதுமுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு சூடான சமைத்த உணவை வழங்கும் 'பள்ளிகளில் PM போஷான்' திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இது பால்வாடி பள்ளி மாணவர்களையும் உள்ளடக்கும்.

---

7. மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) குஜராத்

✓ மத்திய மீன்வள தொழில்நுட்ப நிறுவனம் (CIFT) 1957'இல் கொச்சினில் அமைக்கப்பட்டது. மீன்பிடித்தல் மற்றும் மீன் பதப்படுத்துதல் தொடர்பான அனைத்து துறைகளிலும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும் முதல் மற்றும் ஒரே தேசிய மையம் இதுவாகும். CIFT ஆனது இறால் ஓடுகளிலிருந்து உரத்தையும் செல்லப்பிராணிகளுக்கான உணவையும் உருவாக்கி உள்ளது. ஆண்டிமைக்ரோபியல் ஊக்கிகளுடன் தனிப்பயனாக்கப்பட்ட உரமான 'போலியர் ஸ்பிரே' பயிர்விளைச்சலை அதிகரிக்கின்றது.

---

8. ஏறத்தாழ இந்தியாவின் ஏற்றுமதியில், MSME'களின் பங்களிப்பு மட்டும் எவ்வளவாக உள்ளது?



அ) 30

ஆ) 40 ☑

இ) 50

ஈ) 60

✓ இந்தியாவில் 63 மில்லியனுக்கும் அதிகமான MSME'கள் உள்ளன. அவை, இந்தியாவின் ஏற்றுமதியில் கிட்டத்தட்ட 40 சதவீதமும் நாட்டின் உற்பத்தி GDP'இல் 6.11 சதவீதமும் ஆகும். சேவைத்துறையின்மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு MSME'கள் 24.63 சதவீத அளவிற்கு பங்களிப்பு செய்கின்றன. இந்திய MSME அமைச்சர் நாராயண் ராணே, இந்திய SME மன்றத்தின் இந்திய ஏற்றுமதி முயற்சி மற்றும் இந்திய ஏற்றுமதிகள்–2021 வலைதளத்தைத் தொடங்கி வைத்தார்.

✓ இந்த நிதியாண்டில் இந்தியா தனது ஏற்றுமதி இலக்கை 400 பில்லியன் அமெரிக்க டாலராக நிர்ணயித்துள்ளது. MSME'கள், 2027'க்குள் அதை $1 டிரில்லியன் டாலராக உயர்த்தும் என அமைச்சர் கூறினார்.

---

9. இந்தியாவின் எந்த மாநிலத்திலிருந்து 'தூய்மை இந்தியா திட்டம்' தொடங்கப்பட்டது?

அ) பீகார்



ஆ) உத்தர பிரதேசம் ☑

இ) குஜராத்

ஈ) மேற்கு வங்கம்

✓ மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு, இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், உத்தரபிரதேசத்தின் மோதிலால் நேரு தேசிய தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து ஒரு மாத காலம் நடக்கும் 'தூய்மை இந்தியா திட்டத்தை' தொடங்கினார். ஆசாதி கா அம்ருத் மகோத்சவத்தின் ஒருபகுதியாக இது தொடங்கப்பட்டுள்ளது.

✓ விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், மக்களை ஊக்குவிப்பதும், குறிப்பாக நாடு முழுவதும் 'ஒற்றை பயன்பாடுகொண்ட நெகிழி' கழிவுகளை சுத்தம் செய்வதில் அவர்களை ஈடுபடுத்துவதும் இந்தத் தூய்மை இயக்கத்தின் நோக்கமாகும். அக்டோபர்.31 வரை இந்த இயக்கம் தொடரும்.

10.சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'Hwasong-8' என்பது எந்நாட்டின் புதிய ஹைப்பர்சோனிக் ஏவுகணையாகும்?

அ) சீனா



ஆ) ஜப்பான்

இ) இஸ்ரேல்

ஈ) வட கொரியா ☑

✓ 'ஹ்வாசாங்-8' என்ற புதிய ஹைப்பர்சோனிக் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்ததாக வட கொரியா கூறியுள்ளது.

✓ ஏவுகணைகளை எரிபொருள் நிரப்பி பின்னர் களத்திற்கு அனுப்புவதற்கு இத்தொழில்நுட்பம் அனுமதிக்கிறது. இந்தச் சோதனையை நடத்தி பல நாட்களுக்குப் பிறகு, வடகொரியா புதிய விமானந்தாக்கி ஏவுகணையை சோதனை செய்ததாகக் கூறியது. கடந்த ஒரு மாதத்திற்குள் வட கொரியா மேற்கொள்ளும் 4ஆவது ஆயுதசோதனையாகும் இது. தற்காப்புக்காக தனக்கு ஆயுதங்கள் தேவை என்றும் வட கொரியா கூறியுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கன்னியாகுமரி கிராம்புக்கு புவிசார் குறியீடு

கன்னியாகுமரி மாவட்ட மலைப்பகுதிகளில் விளையும் கிராம்புக்கு 'கன்னியாகுமரி கிராம்பு' என புவிசார் குறையீடு வழங்கப்பட்டுள்ளது.

நறுமணப் பயிரான கிராம்பு தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலையின் சரிவு பகுதிகளில் அதிகம் பயிரிடப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளான மாறாமலை, கரும்பாறை, வேளிமலை, மகேந்திரகிரி பகுதிகளில் 750 ஹெக்டேர் பரப்பளவில் கிராம்பு பயிரிடப்பட்டுஉள்ளது. இது, தமிழகத்தில் கிராம்பு பயிரிடப்படும் மொத்த பரப்பில் 73 சதவீதமாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலவும் மிதமான வெப்பநிலை காரணமாக, கிராம்பில் உள்ள வாசனை திரவியங்கள் குறைந்த அளவிலேயே ஆவியாகி, அடர்த்தியான வாசனை எண்ணெய் கிடைக்கிறது. இங்குள்ள கிராம்பு மரத்தின் மொட்டுகள், உதிர்ந்த இலைகள் மற்றும் தண்டுகளும் வாசனை எண்ணெய் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவிலேயே, கன்னியாகுமரி மாவட்ட மலைப்பகுதிகளில் விளையும் கிராம்பு தரத்தில் முதலிடத்தில் உள்ளது. இதனால், குமரி மாவட்ட நிர்வாகத்தின் உதவியுடன், மாறாமலை தோட்ட விவசாயிகள் சங்கம், கரும்பாறை மலைத்தோட்ட விவசாயிகள் சங்கத்தினரால் 'கன்னியாகுமரி கிராம்பு' என புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தாமொழியில் உற்பத்தியாகும் நெட்டை ரக தென்னைக்கு இதற்குமுன் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. இதுபோக, மார்த்தாண்டம் தேன், நேந்திரன் வாழை, மட்டி வாழை ஆகியவற்றுக்கு புவிசார் குறியீடு கேட்டுள்ளனர். இந்நிலையில், கன்னியாகுமரி கிராம்பு புவிசார் குறியீடை பெற்றிருப்பது வேளாண் ஆர்வலர்கள் மற்றும் மலைத்தோட்ட விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

---

2. பளிச் பத்து 99: இந்திய விமானப்படை

இந்திய விமானப்படை கடந்த 1932ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் தேதி தொடங்கப்பட்டது.

முதலில் வெறும் 25 வீரர்களைக் கொண்டு இந்திய விமானப் படை தொடங்கப்பட்டது.

ஆரம்ப காலகட்டத்தில் 'ராயல் இந்தியன் ஏர் போர்ஸ்' என்ற பெயரில் விமானப்படை அழைக்கப்பட்டது. விடுதலைக்குப் பிறகு அதிலிருந்து ராயல் என்ற வார்த்தை நீக்கப்பட்டது.

இந்திய வான்படை உலகில் 7ஆவது வலிமையான விமானப்படையாக உள்ளது.

1933ஆம் ஆண்டுமுதல் இதுவரை இந்திய வான்படையின் இலச்சினை 4 முறை மாற்றப்பட்டுள்ளது.

வான்படைக்கு இந்தியாவின் பல்வேறு இடங்களில் அறுபது தளங்கள் உள்ளன.

இந்திய விமானப் படையில் முதல் பெண் ஏர் மார்ஷலாக பத்மாவதி பந்தோபாத்யாய நியமிக்கப்பட்டார்.

இந்தியாவுக்கு வெளியில் தஜிகிஸ்தானில், இந்திய விமானப் படைக்கு ஒரு தளம் உள்ளது.

உத்தராகண்ட் மாநிலத்தில் வெள்ளம் ஏற்பட்டபோது 20 ஆயிரம் பேரை மீட்டு விமானப் படை சாதனை படைத்துள்ளது.

இந்திய வான்படையின் அருங்காட்சியகம் தில்லியில் அமைந்துள்ளது.

---

3. தான்சானியா எழுத்தாளருக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு

தான்சானியா எழுத்தாளர் அப்துல்ரசாக் குர்னாவுக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் இதுவரை 10 நாவல்களையும் ஏராளமான சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

தான்சானியாவின் சான்சபா தீவைச் சேர்ந்த இவர் கடந்த 1960ஆம் ஆண்டில் அகதியாக பிரிட்டனில் குடியேறினார். இதன் காரணமாக இவரது படைப்புகளில் அகதிகள் அனுபவிக்கும் இன்னல்கள், காலனி ஆதிக்கம் உள்ளிட்ட சிக்கல்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. இதற்காக இவர் நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக நோபல் அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

---

4. மாநிலங்களுக்கு ஜிஎஸ்டி இழப்பீடு ₹40,000 கோடி

சரக்கு-சேவை வரி (GST) இழப்பீடாக மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் ₹40,000 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது. அதில், தமிழகத்துக்கு ₹2,036.53 கோடி வழங்கப்பட்டுள்ளது.

சரக்கு-சேவை வரியை மத்திய அரசு கடந்த 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடு முழுவதும் அமல்படுத்தியது. ஜிஎஸ்டி அமலாக்கத்தின் காரணமாக மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் நோக்கில் 5 ஆண்டுகளுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது.

அதன்படி, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுக்கான ஜிஎஸ்டி இழப்பீட்டுத் தொகையை மத்திய அரசு ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இந்நிலையில், நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டில் ₹2.59 இலட்சம் கோடியை ஜிஎஸ்டி இழப்பீடாக வழங்க கடந்த மே மாதம் நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அந்த இழப்பீட்டுத் தொகையில் ₹1 லட்சம் கோடியை ஜிஎஸ்டி வருவாய் மூலமாக வழங்கவும், மீதமுள்ள ₹1.59 லட்சம் கோடியைக் கடனாகப் பெற்று வழங்கவும் மத்திய அரசு முடிவெடுத்தது. அதனடிப்படையில், முதல் தவணையாக ₹75,000 கோடியைக் கடனாகப் பெற்று மாநிலங்க -ளுக்கும் சட்டப்பேரவையைக் கொண்ட யூனியன் பிரதேசங்களுக்கும் மத்திய அரசு கடந்த ஜூலையில் வழங்கியிருந்தது.

தற்போது மேலும் ₹40,000 கோடியை ஜிஎஸ்டி இழப்பீடாக மத்திய அரசு வியாழக்கிழமை விடுவித்துள்ளது. அதிகபட்சமாக கர்நாடகத்துக்கு ₹4,555.84 கோடியும், மகாராஷ்டிரத்துக்கு ₹3,467.25 கோடியும், குஜராத்துக்கு ₹3,280.58 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்துக்கு ₹2,036.53 கோடியும், கேரளத்துக்கு ₹2,198.55 கோடியும், புதுவைக்கு ₹275.73 கோடியும் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இழப்பீடாக ஒட்டுமொத்தமாக ₹1.15 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது. மீதமுள்ள தொகையானது படிப்படியாக விடுவிக்கப்படும் என்றும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் ₹1.10 லட்சம் கோடியைக் கடனாகப் பெற்று ஜிஎஸ்டி இழப்பீடாக மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

5. கணித அறிவியல் பேராசிரியருக்கு 'சாந்தி ஸ்வரூப் பட்நாகர்' விருது

சென்னை கணித அறிவியல் நிறுவனத்தில் கோட்பாட்டு கணினி அறிவியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் சாகேத் சௌரவுக்கு கணித அறிவியலுக்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான 'சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது 2021' வழங்கப்பட்டுள்ளது.

---

6. ரஷியாவிடம் எஸ்–400 ஏவுகணை கொள்முதல்: அமெரிக்காவுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை; அரிந்தம் பாக்சி

ரஷியாவிடம் இருந்து எஸ்–400 ரக ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வது தொடர்பாக அமெரிக்காவுடன் இந்தியா தொடர்ந்து விவாதித்து வருகிறது என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி தெரிவித்தார்.

அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி, ரஷியாவிடம் இருந்து 4 எஸ்–400 ரக ஏவுகணைகளை ₹37,414 கோடியில் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கடந்த 2018'இல் கையெழுத்திட்டது. முதல் தவணையாக ₹5,986 கோடியை ரஷியாவுக்கு கடந்த 2019'இல் இந்தியா அளித்தது. இதற்கிடையே, ரஷியாவிடம் இருந்து எஸ்–400 ரக ஏவுகணைகளைக் கொள்முதல் செய்ததற்காக துருக்கி மீது அமெரிக்கா பொருளாதாரத்தடை விதித்தது. அதேபோன்று இந்தியா மீதும் அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்கக் கூடும் என்ற அச்சம் நிலவியது.

இந்நிலையில், 3 நாள் பயணமாக இந்தியா வந்த அமெரிக்க வெளியுறவு துறை இணையமைச்சர் வெண்டி ஷெர்மன், இந்திய வெளியுறவு துறைச் செயலர் ஹர்ஷ்வர்தன் ஷ்ரிங்லாவை சந்தித்துப்பேசினார். அப்போது, ரஷியாவிடம் இருந்து எஸ்–400 ரக ஏவுகணைகளை இந்தியா கொள்முதல் செய்வதற்கு வெண்டி ஷெர்மன் ஆட்சேபம் தெரிவித்தார். இருப்பினும், இந்த விவகாரத்தில் சுமுக உடன்பாடு எட்டப்படும் என்று இருவரும் நம்பிக்கை தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து, எஸ்–400 ரக ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வதற்கு இந்தியாவுக்குத் தடை விதிப்பது தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோபைடன், வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன் ஆகியோர் முடிவு செய்வார்கள் என்று வெண்டி ஷெர்மன் கூறினார்.

---

7. ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல்: 4ஆவது தங்கம் வென்றார் மானு பாக்கர்

ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை மானு பாக்கர் 4ஆவது தங்கம் வென்றார்.

பெரு நாட்டின் தலைநகர் லிமாவில் ISSF ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி நடைபெற்று வருகிறது. நடைபெற்ற மகளிர் அணி 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் மானு பாக்கர், நாமியா கபூர், ரிதம் சங்வான் ஆகியோர் அடங்கிய இந்திய அணி 16–4 என்ற புள்ளிக்கணக்கில் அமெரிக்க அணியை இறுதிச்சுற்றில் வென்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது. இப்போட்டியில் மானு பாக்கர் பெறும் நான்காவது தங்கம் இதுவாகும். அதே நேரம் 14 வயதே ஆன நாமியா கபூர் இரண்டாவது தங்கப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

ஆடவர் 25 மீ ரேபிட் பையர் பிரிவில் இந்தியாவின் ஆதர்ஷ் சிங் 40 புள்ளிகளுக்கு 28 புள்ளிகளை குவித்து வெள்ளி கைப்பற்றினார். இரட்டையரான உதய்வீர்–விஜய்வீர் தோல்வியடைந்தனர். 50மீ ரைபிள் புரோன் கலப்பு அணி பிரிவில் இந்தியா தோல்வியைத் தழுவியது.

பதக்கப்பட்டியலில் ஒன்பது தங்கம், ஏழு வெள்ளி, 3 வெண்கலத்துடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது. ஐந்து தங்கத்துடன் அமெரிக்க அணி இரண்டாமிடத்தில் உள்ளது.

---

8. தமிழ்நாடு ஒலிம்பிக் சங்க தலைவராக ஐசரி கணேஷ் போட்டியின்றி தேர்வு

தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் 2021–2025ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்தல் நடந்தது. சென்னை ஐகோர்ட்டு ஓய்வுபெற்ற நீதிபதி கே மோகன்ராம் மேற்பார்வையில் இந்தத் தேர்தல் நடைபெற்றது. இதில் அனைத்து நிர்வாகிகளும் போட்டியின்றி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். N இராமச்சந்திரன் செயல் தலைவராகவும், வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனரும், இந்திய தேக்வாண்டோ சம்மேளன தலைவருமான ஐசரி கே கணேஷ் தலைவராகவும், ஆதவ் அர்ஜூனா பொதுச்செயலாளராகவும், செந்தில் வி தியாகராஜன் பொருளாளராகவும், சோலை M ராஜா, TV சீத்தாராமராவ், M ராமசுப்பிரமணி, VVR ராஜ்சத்யன், சைரஸ் போஞ்சா, S பாலசுப்பிரமணியன் ஆகியோர் துணைத்தலைவரா–கவும், பாலாஜி மரதபா, A சரவணன் ஆகியோர் இணைசெயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

1. 'பிரசாசன் கான் கே சங்' என்பது எந்த இந்திய மாநிலம் / UT'இன் முன்னெடுப்பாகும்?

அ) குஜராத்

ஆ) பஞ்சாப்



இ) இராஜஸ்தான் ☑

ஈ) ஹரியானா

✓ இராஜஸ்தான் மாநில அரசு 'பிரசாசன் காவ் கே சங்' என்ற பெயரில் ஒரு முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது. அம்மாநிலத்திலுள்ள தொலைதூர கிராம மக்களுக்காக இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

✓ இதன்மூலம் உள்ளூர் நிர்வாகத்தின் 22 துறைகளை அவர்கள் எளிமை –யாக அணுக முடியும். இதன்கீழ், கிராமங்களில் வாரநாட்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களின் கண்காணிப்பில் முகாம்கள் நடைபெறும். நிலப் பத்திரங்கள் மற்றும் பல்வேறு சான்றிதழ்களை வழங்குவது தொடர்பான சேவைகளும் செய்யப்படும்.

---

2. UNESCO'ஆல் அங்கீகரிக்கப்பட்ட நடன மற்றும் இசை விழாவான 'நட சங்கீர்த்தனா' நடைபெறுகிற மாநிலம் எது?

அ) அஸ்ஸாம்



ஆ) மணிப்பூர் ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) பஞ்சாப்

✓ UNESCO'ஆல் அங்கீகரிக்கப்பட்ட நடன மற்றும் இசை விழாவான 'நட சங்கீர்த்தனா'வை மணிப்பூர் ஏற்பாடு செய்கிறது. இந்த ஆண்டுக்கான, 3 நாள் விழா, சமீபத்தில் தலைநகர் இம்பாலிலிருந்து தொடங்கப்பட்டது.

✓ பாக்யசந்திராவின் ஆட்சியில் நடா சங்கீர்த்தன் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் தனித்துவத்திற்காக, 2013'இல், UNESCO'ஆல் தொட்டுணரமுடியா கலாச்சார பாரம்பரியமாக இது அங்கீகரிக்கப்பட்டது.

---

3. தேசிய திபெத்திய காட்டெருமை ஆராய்ச்சி மையம் அமைந்துள்ள மாநிலம் / UT எது?

அ) லடாக்



ஆ) அருணாச்சல பிரதேசம் ☑

இ) சிக்கிம்

ஈ) உத்தரகாண்ட்

✓ விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி (நபார்டு) திபெத்திய காட்டெருமைக்கான கடன் திட்டத்திற்கு ஒப்புதலளித்துள்ளது. இந்தத் திட்டம் அருணாச்சல பிரதேச மாநிலத்தின் டைராங்கில் உள்ள தேசிய திபெத்திய காட்டெருமை ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட் –டது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின்கீழ் இந்த ஆராய்ச்சி மையம் செயல்படுகிறது. திபெத்திய காட்டெருமைகள் பொதுவாக 'மலை கால்நடைகள்' என்று குறிப்பிடப்படுகின்றன.

✓ முன்னதாக, காலநிலை மாற்றத்தின் தாக்கத்திற்கு எதிராக இமயமலை காட்டெருமைகளை காப்பீடு செய்யும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

---

4. 2021 – யிடான் பரிசு பெற்ற இந்தியர் யார்?

அ) டாக்டர் ருக்மணி பானர்ஜி ☑



ஆ) சாந்தனு மிஸ்ரா

இ) ரிப்பன் கபூர்

ஈ) அன்ஷு குப்தா

✓ யிடான் பரிசு என்பது கல்வி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை வழங்கிய தனிநபர்கள் அல்லது குழுக்களை அங்கீகரிக்கும் ஒரு கல்விசார் விருது ஆகும். யிடான் பரிசு அறக்கட்டளை இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் ருக்மணி பானர்ஜி மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் எரிக் ஹனுசேக் ஆகியோருக்கு மதிப்புமிக்க யிடான் பரிசை வழங்கியுள்ளது. 2016'இல் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ஒன்பது பேருக்கு யிடான் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

✓ பிரதம் கல்வி அறக்கட்டளையின் தலைமைச் செயல் அதிகாரியான Dr ருக்மணி பானர்ஜி, கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதற்கான அவரது பணிக்காக கௌரவிக்கப்படுகிறார்.

5.சமீப செய்திகளில் இடம்பெற்ற டிஜிசக்ஷம் திட்டத்தைத் தொடங்கிய மத்திய அமைச்சகம் எது?



அ) MSME அமைச்சகம்

ஆ) நிதி அமைச்சகம்

இ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑

ஈ) ஜவுளி அமைச்சகம்

✓ மத்திய தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சரான பூபேந்திர யாதவ், மைக்ரோசாப்ட் இந்தியாவுடன் இணைந்து 'டிஜிசக்ஷம்' திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 'டிஜிசக்ஷம்' திட்டத்தின்மூலம், பதிவுசெய்யப்பட்ட 10 மில்லியன் வேலைதேடுவோர், தேசிய தொழில் சேவை வலைதளத் –தில் கணினி மற்றும் கணினி அறிவியல் பயிற்சி உள்ளிட்ட பயிற்சியை பெறமுடியும். நிரலாக்க மொழிகள், தரவு பகுப்பாய்வு, மென்பொருள் வளர் –ச்சிபோன்ற பாடங்களில் பயிற்சி அளிப்பதன்மூலம் முதலாம் ஆண்டில் 3,00,000 வேலை தேடுவோரை இது பயிற்றுவிக்கும்.

---

6. இந்திய அரசின் தலைமை நீரியலாளராக பொறுப்பேற்றவர் யார்?

அ) ஆதிர் அரோரா ☑



ஆ) வினய் பத்வார்

இ) கௌரவ் ஆர்யா

ஈ) R K மாத்தூர்

✓ வைஸ் அட்மிரல் ஆதிர் அரோரா, NM இந்திய அரசாங்கத்தின் தலைமை நீரியலாளராக பொறுப்பேற்றார். இந்த மாதத்தில், துணைவேந்தர் வினய் பத்வார், AVSM, NM ஓய்வுறுவதை அடுத்து ஆதிர் பொறுப்பேற்பார். வங்கதேசத்துடனான நிரந்தர தீர்பாயத்தில் இந்தியாவை பிரதிநிதித்து –வப்படுத்துவது உட்பட கடல் எல்லை அம்சங்களுக்கு ஆதிர் அரோரா பொறுப்பேற்றார். 3ஆவது இந்திய–மொரிஷியஸ் நீரியல் ஒத்துழைப்பு கூட்டத்திற்கும் அவர் இணைத்தலைவராக இருந்தார்.

---

7. உலகளாவிய நிதிநிலைப்புத்தன்மை அரையாண்டறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) உலக வங்கி



ஆ) IMF ☑

இ) ADB

ஈ) புதிய வளர்ச்சி வங்கி

✓ உலகளாவிய நிதி நிலைப்புத்தன்மை அறிக்கை என்பது பன்னாட்டுச் செலவாணி நிதியத்தின் அரையாண்டறிக்கையாகும். இது உலக நிதிச் சந்தைகளின் நிலைப்புத்தன்மை குறித்த விரிவான மதிப்பாய்வை அளிக்கிறது. சமீபத்திய உலகளாவிய நிதிநிலைப்புத்தன்மை அறிக்கையில், IMF, கிரிப்டோகரன்சிக்கு ஒரு பிரத்யேக அத்தியாயத்தை அர்ப்பணித்துள்ளது. அதன்கீழ், கிரிப்டோ சூழலின் விரைவான வளர்ச்சி புதிய வாய்ப்புகளை அளிக்கிறது என IMF குறிப்பிடுகிறது. நிதிநிலைப்புத் தன்மை சவால்களைப்பற்றியும் அது எச்சரிக்கை செய்துள்ளது.

---

8. ஆஸ்திரேலியாவில் சதமடித்த முதல் இந்திய பெண் கிரிக்கெட் வீராங்கனை யார்?

அ) ஸ்மிருதி மந்தனா ☑



ஆ) மிதாலி ராஜ்

இ) ஷபாலி வர்மா

ஈ) பூனம் ரௌத்

✓ ஆஸ்திரேலியாவில் சதமடித்த முதல் இந்திய பெண் என்ற பெருமையை பெற்று இந்திய கிரிக்கெட் வீராங்கனை ஸ்மிருதி மந்தனா புதிய சாதனை படைத்துள்ளார். 1991ஆம் ஆண்டு மெல்போர்ன் டெஸ்டின் இரண்டாவது இன்னிங்சில் 58 ரன்கள் எடுத்ததே இதற்கு முன்பிருந்த சாதனையாகும். மந்தனா, 216 பந்துகளில் 22 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 127 ரன்கள் எடுத்தார்.

---

9. சமீப செய்திகளில் இடம்பெற்ற மானு பாக்கருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) ஓடுதல்

ஆ) நீச்சல்

இ) மல்யுத்தம்



ஈ) துப்பாக்கிச்சுடுதல் ☑

✓ பெருவின் லிமாவில் நடைபெற்ற ISSF ஜூனியர் உலக சாம்பியன்ஷிப் போட்டியில், இந்திய துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனை மானு பாக்கர் முதலிடம் பிடித்துள்ளார். சரப்ஜோத் சிங்குடனான கலப்பணி போட்டியில் & தனிநபர் கைத்துப்பாக்கி நிகழ்விலும் அவர் தங்கம் வென்றார். அவரது பங்களிப்பு, இந்தியா, சாம்பியன்ஷிப் பதக்கப்பட்டியலில் முதலிடம் பெற உதவியது.

10.சமீப செய்திகளில் இடம்பெற்ற எடையூர் மற்றும் குட்டியாத்தூர் ஆகிய ஊர்கள் சார்ந்த மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) ஆந்திர பிரதேசம்



இ) கேரளா ☑

ஈ) கர்நாடகா

✓ கேரள மாநிலத்தின் எடையூர் மிளகாய் மற்றும் குட்டியாத்தூர் மாம்பழம் ஆகியவற்றுக்கு அண்மையில் புவிசார் குறியீடு கிடைத்துள்ளன. புவிசார் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட புவிப்பரப்பில் நிலைபெறும் பொருட்களி –ன் மீது பயன்படுத்தப்படும் ஒரு அடையாளமாகும்.

✓ சரக்குகளின் புவிசார் குறியீடுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999 'இன்கீழ் இது கட்டுப்படுத்தப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 2021ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு: இரு பத்திரிகையாளர்களுக்கு அறிவிப்பு

2021ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு பத்திரிகையாளர்கள் மரியா ரெஸ்ஸா மற்றும் டிமிட்ரி முரடோவ் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமைதிக்கான நோபல் பரிசு மட்டும் நார்வேயிலும், மற்ற பரிசுகள் ஸ்டாக்ஹோமிலும் அறிவிக்கப்படும்.

கருத்து சுதந்திரத்தை பாதுகாக்க தைரியமான போராட்டத்தை முன்னெடுத்த பிலிப்பைன்ஸ்யைச் சேர்ந்த பத்திரிகையாளர் மரியா ரெஸ்ஸாவுக்கும், ரஷ்யாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் டிமிட்ரி முரடோவுக்கும் விருது பகிர்ந்து வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

2. 68 ஆண்டுக்கு பிறகு மீண்டும் டாடா கையில் ஏர் இந்தியா: மத்திய அரசுக்கு ₹2,700 கோடி வருமானம்

ஏர் இந்தியா ஏல விற்பனையில் டாடா சன்ஸ் நிறுவனத்தை வெற்றியாளராக மத்திய அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. கடந்த 2018ஆம் ஆண்டிலிருந்து ஏர் இந்தியா நிறுவனத்தை தனியாருக்கு விற்கும் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுவருகிறது. சமீபத்திய ஏலத்தில் டாடா சன்ஸ் நிறுவனமும், ஸ்பைஸ்ஜெட் நிறுவனத்தின் தலைவர் அஜய் சிங்கும் போட்டியிட்டனர். இதில் டாடா சன்ஸ் வெற்றி பெற்றுள்ளது.

அஜய் சிங் ₹15,100 கோடிக்கு விண்ணப்பித்த நிலையில் ₹18,000 கோடிக்கு விண்ணப்பித்த டாடா சன்ஸ் ஏலத்தில் வெற்றியாளராக அறிவிக்கப்படுவதாக முதலீடுகள் மற்றும் பொது சொத்துகள் நிர்வாக துறையின் செயலர் துஹின் காந்தா பாண்டே கூறினார். இதில் ₹2,700 கோடி அரசுக்கு பணமாகக் கிடைக்கும். மீதமுள்ள ₹15,300 கோடி ஏர் இந்தியாவின் கடனுக்காக டாடா சன்ஸ் பொறுப்பேற்றுக் கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனையின் மூலம் ஏர் இந்தியாவின் 100 சதவீத பங்குகள், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ்ஸின் 100 சதவீத பங்குகள் மற்றும் ஏர் இந்தியா சாட்ஸில் 50 சதவீத பங்குகள் டாடா சன்ஸ் குழுமத்துக்கு சொந்தமாகும்.

ஜேஆர்டி டாடா தொடங்கிய ஏர் இந்தியா 68 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் டாடா குழுமத்துக்கே சொந்தமாகியிருப்பது மிகவும் பெருமித மிக்க தருணமாகும்.

ஓராண்டுக்கு ஏர் இந்தியாவின் 51 சதவீத பங்கை டாடா சன்ஸ் நிர்வகித்து வர வேண்டும். மேலும் ஓராண்டுக்குப் பிறகே பங்குகளை விற்பனை செய்ய வேண்டும். ஏர் இந்தியாவின் ஊழியர்களையும் ஓராண்டுக்கு பணியிலிருந்து நீக்கக் கூடாது போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஏர் இந்தியாவின் மொத்த கடன் ₹65,562 கோடியாக உள்ளது. இந்த விற்பனைக்கு பிறகு ₹46,262 கோடி கடன் ஏர் இந்தியா அசெட் ஹோல்டிங் லிமிடெட் நிறுவனத்துக்கு மாற்றப்படும். 1932'இல் ஜேஆர்டி டாடாவால் தொடங்கப்பட்ட நிறுவனத்தை 1953'இல் நாட்டுடைமையாக் –கியது. ஏர் இந்தியாவிடம் தற்போது மொத்தமாக 141 விமானங்கள் உள்ளன. ஏர் இந்தியா 42 நாடுகளுக்கு விமான சேவைகளை வழங்கி வருகிறது. ஏர் இந்தியா மற்றும் ஏஐஎக்ஸ்எல் இரண்டிலும் சேர்த்து 13,500 பணியாளர்கள் உள்ளனர்.

---

3. அக்டோபர்.9 – உலக பறவைகள் நாள்

---

4. பருவநிலை மாற்றம் தொடர்பான ஆராய்ச்சி – எம் எஸ் சுவாமிநாதன் அறக்கட்டளையுடன்ஐ.நா. அமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம்:

இந்தியாவில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான ஆராய்ச்சியை மேற்கொள்ள MS சுவாமிநாதன் அறக்கட்டளை மற்றும் ஐநா மன்றத்தின் உலக உணவு பாதுகாப்பு திட்டம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இதுதொடர்பாக MS சுவாமிநாதன் அறக்கட்டளை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இந்தியாவில் பருவநிலை மாற்றத்தால் வேளாண்மை, உணவு உற்பத்தியில் பாதிப்பு, ஊட்டச்சத்து கிடைக்காத நிலை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் சமுதாயத்தை கட்டமைப்பது தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட, ஐநா மன்றத்தின் உலக உணவு பாதுகாப்பு திட்டம் மற்றும் MS சுவாமிநாதன் அறக்கட்டளை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

---

5. மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்க மு க ஸ்டாலின் தலைமையில் ஒருங்கிணைப்பு குழு

தமிழகத்தில் மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க முதல்வர் முக ஸ்டாலின் தலைமையில் மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊரக வளர்ச்சித் துறை செயலர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மத்திய அரசின் திட்டங்கள் மாவட்ட அளவில் நடைமுறைப்படுத்தப்படுவ –தைக் கண்காணிக்க, மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, முதல்வரை தலைவராக கொண்டு மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு உள்ளது. இக்குழுவில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை செயலர் உறுப்பினர் – செயலராகவும் உள்ளனர்.

மேலும், பல்வேறு அரசுத்துறை செயலர்கள், துறைத் தலைவர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனபிரதிநிதிகள், மாநில அளவிலான வங்கியாளர் குழுவின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்புக் குழுமற்றும் கண்காணிப்புக் குழுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பொறுத்து திட்டங்கள் செயல்படுத்தப்படும் நிலையை மதிப்பாய்வு செய்தல், பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதில் மாநில அரசால் ஈடுபடுத்தப்ப –ட்டுள்ள மனிதவளங்களின் செயல்திறனை வரிசைபடுத்தி மதிப்பாய்வு செய்தல், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள தடைகளை நிவர்த்தி செய்து அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் வடிவமைப்புகளை மேம்படுத்த அல்லதுநடுநிலைப்படுத்த உரிய திருத்தங்களைச்செய்ய பரிந்துரைகளை வழங்குதல் ஆகியன இக்குழுவின் பணிகளாகும்.

மேலும், வளர்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிதி நிலையை மதிப்பாய்வு செய்தல், பல்வேறு திட்டங்களை சரியான நேரத்தில் செயல்படுத்துவதில் உள்ள தடைகளை மறு ஆய்வுசெய்தல், திட்டங்களை

செயல்படுத்துவதில் பெறப்பட்ட புகார்கள், முறைகேடுகள், பயனாளிகளி –ன் தவறான தேர்வு, முறைகேடான நிதி, திசைதிருப்புதல் போன்ற புகார்களை பின்தொடர்ந்து நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தல் ஆகிய பணிகளையும் இக்குழு மேற்கொள்ளும்.

பல்வேறு திட்டங்களின்கீழ் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து உரிய வழிகாட்டுதல்களை வழங்குதல், மத்திய துறை திட்டங்கள், சம்பந்தப்பட்ட மத்திய நிறுவனங்கள் முறையா –க செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களை அடையாளம் காணுதல், மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின்கீழ் கண்காணிக்கப்படும் திட்டங்கள் தொடர்பான நிகழ்வுகளை மத்திய வளர்ச்சி அமைச்சகத்தின் பார்வைக்கு கொண்டு செல்லுதல் உள்ளிட்ட பணிகளையும் இந்தக் குழு மேற்கொள்ளும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

6. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாக இருக்கும்: உலக வங்கி

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2021–22ஆம் நிதியாண்டில் 8.3 சதவீதமாக இருக்கும் என உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தெற்காசிய பிராந்தியத்துக்கான தலைமை பொருளாதார நிபுணர் ஹன்ஸ் டிம்மர் பிடிஐ செய்தியாளர்களிடம் கூறியதாவது: பொது முதலீடு அதிகரிப்பு, உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஊக்கத்தொகை போன்ற காரணங்களால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நிகழ் நிதியாண்டில் 8.3 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

இது கரோனா இரண்டாவது அலையால் ஏற்பட்ட சுகாதார நெருக்கடிக்கு முன்பு நாங்கள் கணித்ததைவிடக் குறைவானது. இருப்பினும் இது நல்ல செய்தி என்றார். முன்னதாக, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நிகழ் நிதியாண்டில் 7.5 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாக இருக்கும் என, மார்ச் 31ஆம் தேதி வெளியிடப்பட்ட தெற்காசி பொருளாதார அறிக்கையில் உலக வங்கி தெரிவித்திருந்தது.

---

7. பதவி விலகினார் மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் கே வி சுப்பிரமணியன்

மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகரான கே வி சுப்பிரமணியன் பதவி விலகலை அறிவித்தார்.

கடந்த மூன்றாண்டுகளாக அவர் இப்பதிவியில் இருந்துவந்த நிலையில் தனது பதவிக்காலம் முடிந்ததால் பதவியை ராஜினாமா செய்தார். இதனை மத்திய அரசும் உறுதி செய்துள்ளது. மீண்டும் ஆராய்ச்சிப் படிப்புகளைத் தொடர்வதால் பதவி விலகியதாக அவர் தெரிவித்துள்ளார்.

KV சுப்பிரமணியன் தலைமை பொருளாதார ஆலோசகராக கடந்த 2017 டிசம்பரில் பதவியேற்றார், இவர் பதவியேற்றிய 5 மாதத்தில் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகரான அரவிந்த் சுப்பிரமணியன் பதவி விலகினார். தற்போது அரவிந்த் சுப்பிரமணியன் தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆலோசனை குழுவில் முக்கிய பங்கு வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

8. ஐஎம்பிஎஸ் அளவு ₹5 லட்சமாக உயர்வு: இன்டர்நெட் இல்லாமல் டிஜிட்டல் பரிமாற்றம்: ரிசர்வ் வங்கி அறிவிப்பு

நாட்டில் டிஜிட்டல் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் உடனடி பேமெண்ட் சேவையான ஐஎம்பிஎஸ் பரிமாற்றத்தின் அளவு ₹2 லட்சத்திலிருந்து ₹5 லட்சமாக உயர்த்தப்படும் என இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ரிசர்வ் வங்கி நிதிக் கொள்கை அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. நிதிக் கொள்கை குறித்து முடிவு எடுக்கும் 6 பேர் கொண்ட நிதிக் கொள்கைக் குழு நடப்பு நிதியாண்டு தொடங்கியபின் 3ஆவது முறையாக மும்பையில் கூடி விவாதித்தது. 2020ஆம் ஆண்டு மே 22ஆம் தேதி வட்டி வீதம் வரலாற்றில் இல்லாத அளவு குறைக்கப்பட்டது. அதன்பின் கடந்த ஓராண்டாக வட்டி வீதம் குறைக்கப்படவில்லை.

ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தலைமையிலான நிதிக் கொள்கைக்குழு தொடர்ந்து 8ஆவது முறையாக வட்டி வீதத்தில் மாற்றம் இல்லாமல் அறிவித்துள்ளது. இதனால் கடனுக்கான வட்டிவீதம் தொடர்ந்து 4 சதவீதமாகவே நீடிக்கிறது. வங்கிகளுக்கான இறுதிநிலை கடன்வசதி வட்டி வீதம் 4.5 சதவீதமாகவும், ரிசர்வ் ரெப்போ ரேட் 3.35 சதவீதமாகவும் நீடிக்கிறது. இந்தக் கூட்டத்துக்குப் பின் ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் கூறியதாவது:

பொருளாதாரம் மீண்டு வரும் நிலையில் வங்கிகளுக்கான குறுகிய கால கடன் வட்டி விகிதங்களில் மாற்றம் செய்யவில்லை. நிதிக்குழு உறுப்பினர்களில் 6 பேரில் 5 பேர் வட்டிவீத மாற்றத்துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2021– 2022 நிதியாண்டில் 9.5% ஆக இருக்கும். 2ஆவது காலாண்டில் 7.9 சதவீதமாகவும், 3ஆவது காலாண்டில் 6.8 சதவீதாகவும், 4ஆவது காலாண்டில் 6.1 சதவீதாகவும் இருக்கும். 2022–23ஆம் நிதி ஆண்டுக்கான GDP வளர்ச்சி 17.2 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நுகர்வோர் பணவீக்கம் 5.1 சதவீதமாக இருந்தது. நாட்டில் டிஜிட்டல் பணப்பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் ஐஎம்பிஎஸ் பரிமாற்றத்தின் அளவை ₹2 லட்சத்திலிருந்து ₹5 லட்சமாக உயர்த்தப்பட உள்ளது. இப்போது ஐஎம்பிஎஸ் மூலம் நாள்தோறும் அதிகபட்சமாக ₹2லட்சம் வரைமட்டுமே பரிமாற்றம் செய்ய முடியும், இனிமேல் ₹ 5 லட்சம்வரை பரிமாற்றம் செய்யலாம்.

இதன்மூலம் இன்டர்நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் செயலி, வங்கி கிளைகள், ஏடிஎம், எஸ்எம்எஸ், ஐபிஆர்எஸ் ஆகியவைமூலம் பரிமாற்றம் அதிகரிக்கும். தற்போது ஆர்டிஜிஎஸ், நெப்ட் மற்றும் ஐஎம்பிஎஸ் சேவை 24 மணிநேரமும் செயல்பட்டு வருகிறது. ஆன்லைன்மூலம் மட்டுமே டிஜிட்டல் பரிமாற்றம் செய்யப்பட்டு வரும் நிலையில் இனிமேல், ஆப் லைன் மூலமும் பரிமாற்றம் செய்யும் முறையை விரைவில் ரிசர்வ் வங்கி அறிமுகம் செய்ய உள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டு ஆக.6ஆம் தேதி இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு பரிசோதனை முயற்சிகள் நடந்தன. இதில் இன்டர்நெட் இணைப்பின் சக்தி குறைவாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் டிஜிட்டல் பரிமாற்றம் செய்யமுடியும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு நகரங்களில் கடந்த 2020 செப்டம்பர் முதல் 2021 ஜூன் வரையில் ஆஃப் லைனில் டிஜிட்டல் பரிமாற்றம் செய்து பரிசோதிக்கப்பட்டது. இதில் வெற்றிகரமாக 2.41 லட்சம் பரிமாற்றத்தில் ₹1.16 கோடி மதிப்புக்கு டிஜிட்டல்பரிமாற்றம் செய்யப்பட்டது.

பரிசோதனை முயற்சியில் வெற்றிகரமான முடிவுகள் கிடைத்ததால், விரைவில் ஆப் லைன் பரிமாற்றத்துக்கான விதிகள் வகுக்கப்பட்டு அறிவிக்கப்படும். இவ்வாறு சக்திகாந்த தாஸ் தெரிவித்தார்.

---

9. தமிழக காவல்துறையில் முதல் முறையாக நிர்வாக வசதிக்காக உளவுத்துறை SP பதவி 2ஆக பிரிப்பு: உள்துறை செயலாளர் பிரபாகர் உத்தரவு

உளவுத்துறைக்கு தற்போது கூடுதல் டிஜிபியாக டேவிட்சன் தேவாசீர்வாதம் உள்ளார். உள்நாட்டு பாதுகாப்பு பிரிவு ஐஜியாக ஈஸ்வரமூர்த்தி உள்ளார். உளவுப் பிரிவு டிஐஜியாக ஆசியம்மாள், எஸ்பியாக அரவிந்தன் உள்ளனர்.

ஆசியம்மாள் நிர்வாகப் பிரிவுகளை கவனித்து வருகிறார். அரவிந்தன், உளவு தகவல்களை ஒருங்கிணைத்தல், அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் சாராத இயக்கங்களின் நடவடிக்கைகள் கண்காணிப்பு, சமூக வலைதங்கள் கண்காணிப்பு ஆகிய பணிகளை கவனித்து வந்தார். மாநில உளவுப்பிரிவில் தற்போது ஒரு SP, 2 ASP'கள், 12 DSP'கள், 85 இன்ஸ்பெக்டர்கள் மற்றும் தலைமை காவலர், காவலர்கள் என 609 பேர் தமிழகம் முழுவதும் பணியாற்றி வருகின்றனர்.

அதேநேரம் மாநிலம் முழுவதும் தற்போது குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. மக்கள் தொகையும் அதிகரித்து வருகின்றன. இதனால், மாநில உளவுப் பிரிவு எஸ்பியின் பணிகளை 2ஆக பிரிப்பது என்று முடிவு செய்யப்பட்டு அரசுக்கு பரிந்துரை அனுப்பப்பட்டது.

காவல் துறையின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட தமிழக அரசு, மாநில உளவுத்துறையில் உள்ள எஸ்பி பதவிகளை 2ஆக பிரித்து அரசாணை வெளியிட்டுள்ளது. அதில், ஒருங்கிணைந்த குற்ற வழக்குகளை கண்காணிக்கும் பிரிவு எஸ்பி பதவியை உளவுப் பிரிவு பதவியாக மாற்றி உத்தரவிட்டுள்ளது. இதனால் ஒருங்கிணைந்த குற்ற வழக்குகளை கண்காணிக்கும் பிரிவு எஸ்பியான சரவணன், உளவுப் பிரிவு பிரிவுக்கு தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். உளவுத்துறைக்கு தற்போது 2 எஸ்பிக்கள் உள்ளதால் இருவருக்குமான பணிகளை உள்துறை செயலாளர் பிரபாகர் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார். அதில் தற்போது எஸ்பி சரவணன், ஒருங்கிணைந்த சென்னை மாநகரம் மற்றும் அரசியல் கட்சிகள், அரசியல் மற்றும் அரசியல் சாராத இயக்கங்கள் கண்காணித்தல், சமூக வலைதளங்கள் என 9 பிரிவுகளை கவனிப்பார்.

அதேபோல், காவல் கட்டுப்பாட்டு அறை, வடக்கு மண்டலம், தெற்கு மண்டலம், மேற்கு மண்டலம், மத்திய மண்டலம், போட்டோகிராபி பிரிவுகளில் உள்ள நிகழ்வுகளை கண்காணிப்பாளர் அரவிந்தன் கவனிப்பார் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

---

10. பாடலாசிரியரும் கவிஞருமான பிறைசூடன் காலமானார்

தமிழ் திரைப்பட பாடலாசிரியரும் கவிஞருமான பிறைசூடன் அக்.8 அன்று காலமானார். திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தில் 1956ஆம் ஆண்டு பிப்.6ஆம் தேதி பிறந்த கவிஞர் பிறைசூடன், 1985ஆம் ஆண்டு வெளியான சிறை திரைப்படத்தில் ராசாத்தி ரோசாப்பூவே என்ற பாடல் மூலம் மெல்லிசை மன்னர் MS விஸ்வநாதனால் திரைத்துறைக்கு பாடலாசிரியராக அறிமுகப்படுத்தப்பட்டார்.

கிட்டத்தட்ட தமிழில் இதுவரை 400'க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்பாடல்களையும், ஐந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்திப்பாடல்களையும் இவர் எழுதியுள்ளார்.

---

11. அக்டோபர்.9 – உலக மனநல நாள்.

---

12. செவ்வாய் கிரகத்தில் நீர்நிலை இருந்ததற்கான கூடுதல் ஆதாரம்: ஆற்றுப்படுகையின் துல்லிய புகைப்படம் மூலம் நாசா உறுதி!!

செவ்வாய் கிரகத்தில் உள்ள ஆற்றுப்படுகையின் துல்லிய புகைப் படத்தை நாசா வெளியிட்டுள்ளது. பெர்சவரன்ஸ் ரோவர்மூலம் கிடைத்து உள்ள இப்புகைப்படம் செவ்வாயில் நீர்நிலை இருந்ததற்கான ஆதாரத் –தை வலுப்படுத்தியுள்ளது. செவ்வாய் கிரகத்தை பற்றி ஆய்வுசெய்வதற்கு கடந்த பிப்ரவரியில் பெர்சவரன்ஸ் ரோவர் என்ற பெயரில் விண்கலத்தை நாசா அனுப்பியது. சுமார் ஏழு வாரங்கள் பணம் செய்து செவ்வாயை அடைந்த பெர்சவரன்ஸ் பல்வேறு புகைப்படங்களை அனுப்பி வருகிறது.

இந்த நிலையில் 'ezero' என்ற பள்ளத்தாக்கில் இருந்து தற்போது அனுப்பி உள்ள ஆற்றுப் படுகையின் துல்லிய புகைப்படங்கள் செவ்வாயில் நீர்நிலைகள் இருந்ததற்கான ஆதாரத்தை வலுப்படுத்தியுள்ளன. இந்த புகைப்படங்கள் புதையுண்ட ஏரி உருவாக்கிய ஆற்றுப்படுகையாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஆற்றுப்படுகையின் கீழே உள்ள 3 அடுக்குகளின் வடிவங்கள் நீர் தொடர்ந்து ஓடியதை உறுதிப்படுத்தியுள்ளன. இதனால் சுமார் 370 கோடி ஆண்டுகளுக்கு முன்பு செவ்வாயில் நீர் சுழற்சி இருந்திருக்கலாம் என்றும் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய் கிரகத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஆற்றுப்படுகையின் புகைப் படங்கள் புவி எல்லையை ஒட்டி இருப்பதாக நாசா கூறியுள்ளது. ஆற்றுப் படுகையை கடந்து புதையுண்ட ஏரியின் கரையை மற்றும் பள்ளத் தாக்கின் விளிம்புகளை ரோவர் புகைப்படங்களாக எடுத்து அனுப்ப உள்ளது. அதன் முடிவில் செவ்வாய் குறித்து கூடுதல் தகவல்கள் கிடைக்கும் என்று நாசா விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

---

1. எந்த மாநிலத்தின் நகர்ப்புற வெள்ளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்காக $251 மில்லியன் டாலர் கடனுதவி செய்ய ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது?

அ) தமிழ்நாடு ☑



ஆ) ஆந்திர பிரதேசம்

இ) கர்நாடகா

ஈ) கேரளா

✓ சென்னை – கொசஸ்தலையாறு ஆற்றுப்படுகையில் நகர்ப்புற வெள்ளப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்காக $251 மில்லியன் டாலர் கடனுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் இப்பகுதியில் காலநிலை–நெகிழ்திறனுடன் கூடிய நகர்ப்புற வெள்ளப் பாதுகாப்பு உட்கட்டமைப்பை நிறுவும். இது 588 கிமீ நீள புதிய மழைநீர் வடிகால்களை அமைக்கும். மேலும், 175 கிமீ மழைநீர் வடிகால்களை மறுசீரமைக்கும் அல்லது மாற்றியமைக்கும். சென்னையின் விரைவான நகரமயமாக்கல், அதனை பரவலான வெள்ளத்தால் பாதிக்கக்கூடியதாக ஆக்கியுள்ளது.

---

2. 'டிஜிட்டல் பொருளாதார அறிக்கை–2021' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) IMF



ஆ) உலக வங்கி

இ) UNCTAD ☑

ஈ) WTO

✓ டிஜிட்டல் பொருளாதார அறிக்கை–2021'ஐ ஐநா'இன் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு (UNCTAD) வெளியிட்டது. இந்த அறிக்கை வளர்ந்து வரும் எல்லைதாண்டிய தரவுப்பாய்வுகளின் தாக்கங்களை ஆராய்கிறது. தரவுப்பாய்வுகளிலிருந்து ஆதாயங்களை சமமாக வழங்குவதை உறுதி செய்வதற்காக தரவு மற்றும் தரவுப் பாய்வுகளை நிர்வகிப்பதற்கான புதுமையான அணுகுமுறைகளையும் இந்த அறிக்கை வரவேற்கிறது.

---

3. "மாவட்ட மருத்துவமனைகளின் செயல்திறனில் சிறந்த நடைமு–றைகள்" என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) எய்ம்ஸ்

ஆ) NITI ஆயோக் ☑

இ) ஐஎம்ஏ

ஈ) உலக வங்கி

✓ NITI ஆயோக் சமீபத்தில் 'மாவட்ட மருத்துவமனைகளின் செயல்திறனில் சிறந்த நடைமுறைகள்' என்ற தலைப்பில் இந்தியாவின் மாவட்ட மருத்துவமனைகளின் செயல்திறன் குறித்த மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கை சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் மற்றும் WHO இந்தியாவுடன் இணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது.

✓ இந்த மதிப்பீட்டு கட்டமைப்பில், 10 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் இடம்பெற்றன. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களி–லும் உள்ள மொத்த 707 மாவட்ட மருத்துவமனைகள் மதிப்பீட்டில் பங்கேற்றன. 2017–18ஆம் ஆண்டிற்கான சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பின் தரவு இதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டது. 24 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 75 மாவட்ட மருத்துவமனைகள் சிறந்த செயல்திறன் கொண்டவையாக உள்ளன.

---

4. 'சாச்சா சௌத்ரி' என்பது இந்தியாவில் எத்திட்டத்தின் முகப்பமாக (mascot) அறிவிக்கப்பட்டுள்ளது?

அ) தூய்மை இந்தியா 2.0

ஆ) சௌபாக்யா

இ) நமாமி கங்கே திட்டம் ☑

ஈ) பிரதமர் உஜ்வாலா யோஜனா

✓ நமாமி கங்கே திட்டத்தின் முகப்பமாக பிரபல காமிக் புத்தக கதாபாத்திரமான 'சாச்சா சௌத்ரி' அறிவிக்கப்பட்டுள்ளதாக தேசிய தூய்மை கங்கை இயக்கம் அறிவித்தது. கங்கை மற்றும் பிற ஆறுகளை தூய்மைப்படுத்துவதுபற்றி குழந்தைகள் மற்றும் இளையோருக்கு உணர்த்துவதற்கு இந்தப் பாத்திரம் பயன்படுத்தப்படும்.

✓ 'கங்கா கி பாத், சாச்சா சௌத்ரி கே சாத்' என்பது நமாமி கங்கே பணியின் பொதுச்செயல்பாடுகளின்கீழ் ஒரு பொது ஈடுபாட்டு நடவடிக்கையாகும்.

---

5. "பால ரக்ஷா கிட்" என்பது எந்த அமைப்பால் உருவாக்கப்பட்ட ஒரு நோயெதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் மருந்தாகும்?

அ) AIIMS



ஆ) IIT பாம்பே

இ) AIIA ☑

ஈ) DRDO

✓ அனைத்து இந்திய ஆயுர்வேத நிறுவனமானது (AIIA), மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின்கீழ், "பால ரக்ஷா கிட்" என்ற குழந்தைகளுக்கான நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் மருந்தை உருவாக்கியுள்ளது. இதை 16 வயது வரையுள்ள குழந்தைகள் உட்கொள்ளலாம். COVID நோய்க்கான தடுப்பூசி கிடைக்கும் வரை குழந்தைகள் இதை பயன்படுத்தலாம். தேசிய ஆயுர்வேத நாளன்று (நவ.2) 10,000 பால ரக்ஷா மருந்துகள் இலவசமாக விநியோகிக்கப்படும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

---

6. "அத்தியாவசிய மருந்துகளின் மாதிரி பட்டியலை" வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) AIIMS

ஆ) IMA

இ) WHO ☑

ஈ) FAO

✓ உலக நலவாழ்வு அமைப்பானது அண்மையில், "குழந்தைகளுக்கான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகளின் மாதிரி பட்டியல்களின்" அண்மைய பதிப்பை வெளியிட்டது. இப்புதிய பட்டியலில் நீரழிவு & புற்றுநோய் சிகிச்சைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

✓ புகைபிடிப்பதை நிறுத்த விரும்பும் மக்களுக்கு உதவும் புதிய மருந்துகள் மற்றும் தீவிர பாக்டீரியா மற்றும் பூஞ்சை தொற்றுகளுக்கு சிகிச்சை அளிக்க புதிய நுண்ணுயிர் எதிர்ப்பிகள் ஆகியவை இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

---

7. மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தால் மனநல விழிப்புணர்வு பிரச்சார வாரம் எப்போது அனுசரிக்கப்பட்டது?

அ) அக்.1 முதல் அக்.5, 2021 வரை



ஆ) அக்.2 முதல் அக்.7, 2021 வரை

இ) அக்.10 முதல் அக்.17, 2021 வரை

ஈ) அக்.5 முதல் அக்.10, 2021 வரை ☑

✓ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது அக்.5–10, 2021 வரை மனநல விழிப்புணர்வு பிரச்சார வாரமாக கடைபிடித்தது. இது, அக். 10 உலக மனநல நாளின் ஒருபகுதியாக அனுசரிக்கப்படுகிறது. இந்த முன்னெடுப்பின் ஒருபகுதியாக, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சர் மான்சுக் மாண்டவியா, UNICEF'இன் உலக குழந்தைகள் அறிக்கையையும் வெளியிட்டார்.

---

8. பின்வரும் எந்த இந்திய நகரத்தில் "ஆசாதி@75 – புதிய நகர்ப்புற இந்தியா" என்ற மாநாடு தொடங்கப்பட்டது?

அ) மும்பை

ஆ) புது தில்லி

இ) வாரணாசி

ஈ) லக்னோ ☑

✓ இந்தியப் பிரதமர் மோடி, "ஆசாதி@75 – புதிய நகர்ப்புற இந்தியா" என்ற ஒரு நகர்ப்புற மாநாடு & கண்காட்சியை லக்னோவில் தொடங்கினார். இதன் தொடக்க நிகழ்வின்போது, பிரதமர், உத்தரப்பிரதேச மாநிலத்தின் 75 மாவட்டங்களில் அமைந்துள்ள 75,000 பயனாளிகளுக்கு, பிரதமர் ஆவாஸ் யோஜனா–நகர்ப்புற (PMAY–U) வீடுகளின் சாவியை டிஜிட்டல் முறையில் வழங்கினார்.

---

9. தேசிய சாலை பாதுகாப்பு வாரியத்தின் தலைமையகம் உள்ள இந்திய நகரம் எது?

அ) மும்பை

ஆ) புது தில்லி ☑

இ) ஔரங்காபாத்

ஈ) கொல்கத்தா



✓ சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் தேசிய சாலை பாதுகாப்பு வாரியத்தை நிறுவுவதற்கான அறிவிப்பை அறிவித்துள்ளது. சாலை பாதுகாப்பு, புதுமைகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது, போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுக்கு வாரியம் பொறுப்பாகும். வாரியத்தின் தலைமை அலுவலகம் தேசிய தலைநகர் பகுதியில் இருக்க வேண்டும்.

✓ இந்தியாவில் மற்ற இடங்களில் அலுவலகங்களை வாரியம் நிறுவலாம். மத்திய அரசால் நியமிக்கப்பட வேண்டிய தலைவர் மற்றும் 3 பேருக்கு குறையாமல் 7 பேருக்கு மிகாமல் உறுப்பினர்கள் வாரியத்தில் இருக்க வேண்டும்.

---

10. விரிவான கைவினைப் பொருட்கள் குழும மேம்பாட்டுத் திட்டம் என்பது பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்தின் திட்டமாகும்?

அ) MSME அமைச்சகம்

ஆ) ஜவுளி அமைச்சகம் ☑

இ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ விரிவான கைவினைப் பொருட்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தை ₹160 கோடி மதிப்பீட்டில் தொடர ஜவுளி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. 2026 மார்ச் வரை இத்திட்டம் தொடரும். கைவினைஞர்களுக்கு உட்கட்டமைப்பு ஆதரவு, சந்தை அணுகல், வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு ஆதரவு போன்றவை இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஆதிச்சநல்லூரில் அகழாய்வுப் பணிகள்: 17 ஆண்டுகளுக்குப் பிறகு தொடக்கம்

தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் 17 ஆண்டுகளுக்கு பிறகு மத்திய தொல்லியல் துறை சார்பில் நடைபெறும் அகழாய்வுப் பணிகளை கனிமொழி எம்பி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார்.

தாமிரவருணி என்றழைக்கப்படும் பொருநை நதிக்கரையோரங்களில் உள்ள ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய பகுதிகளில் நடந்து வரும் அகழாய்வுப் பணிகளில் சேகரிக்கப்படும் பழங்கால பொருள்கள் மூலம் பண்பாடு, நாகரிகம், வணிகம் ஆகியவற்றில் தமிழர்கள் சிறந்து விளங்கியவர்கள் என்பதற்கான சான்றுகள் கிடைத்து வருகின்றன.

குறிப்பாக, ஆதிச்சநல்லூர் தொல்லியல் களம் என்பது நாட்டிலேயே முதல் முதலாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் களமாகும். இங்கு, முதன்முறையாக ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஜாகோர் கடந்த 1876'இல் அகழாய்வுகள் மேற்கொண்டார். பின்னர் கடந்த 1896, 1904ஆம் ஆண்டில் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

அக்காலக்கட்டத்தில் அலெக்சாண்டர் ரெயா என்பவர் ஆயிரக்கணக்கான தொல்பொருள்களை கண்டெடுத்துள்ளார். இதில், முதுமக்கள் தாழிகள், மண்பாண்டங்கள், இரும்புக்கருவிகள், ஆயுதங்கள், வெண்கலப்பொருள்கள், பழங்கால மனிதர்களின் எலும்புகள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அதன்பின்னர், 2004'இல் ஆதிச்சநல்லூரில் தொல்லியல் அலுவலரர் சத்தியமூர்த்தி தலைமையில் மத்திய தொல்லியல்துறை சார்பில் அகழ் ஆய்வுப்பணிகள் நடைபெற்றன. இதன் ஆய்வு முடிவுகள் வரலாற்று ஆர்வலர்களின் பல்வேறு சட்டப் போராட்டங்களுக்கு பிறகு கடந்த மே மாதம் வெளியிடப்பட்டது. எனினும் முழுமையான ஆய்வு முடிவுகளை வெளியிட வேண்டும்.

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டு வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் உள்ள பழங்கால பொருள்களை கொண்டுவர வேண்டும் எனவும் வரலாற்று ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனரர்.

சுமார் 114 ஏக்கர் பரப்பளவிலுள்ள ஆதிச்சநல்லூர் அகழாய்வு தளத்தில் பாறைகள் நிறைந்த மலைச் சரிவுகளில் குழி தோண்டப்பட்டு சுட்ட களிமண்ணினால் ஆன தாழிகள் புதைக்கப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ் எழுத்துகளுடன் கூடிய பல தாழிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழக தொல்லியல்துறை சார்பில் 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் அகழாய்வுப் பணிகள் நடைபெற்றன.

இதற்கிடையில் ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என 2020இல் நிதிநிலை அறிக்கையில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார். அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு அருங்காட்சியகம் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

---

2. ஆட்டிசம் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பயிற்சி திருவள்ளூர் கோலப்பன்சேரியில் 'சங்கல்ப்' சிறப்பு குழந்தைகள் பள்ளி – முதல்வர் முக ஸ்டாலின் திறந்து வைத்தார்

திருவள்ளூர் மாவட்டம் கோலப்பன்சேரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'சங்கல்ப்' சிறப்புகுழந்தைகளுக்கான பள்ளியை முதல்வர் முக ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி அருகில் கோலப்பன்சேரியில் அமைக்கப்பட்டுள்ள 'சங்கல்ப்' சிறப்பு குழந்தைகளுக்கான பள்ளியை, சென்னை தலைமைச் செயலகத்தில், காணொலி வாயிலாக முதல்வர் முக ஸ்டாலின் திறந்து வைத்தார். 'சங்கல்ப்' பள்ளி 20 ஆண்டுகளாக சிறப்பு குழந்தைகளின் மேம்பாட்டுக்காக செயல்பட்டு வருகிறது.

கற்றல் குறைபாடுள்ள குழந்தைகள், ஆட்டிசம் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கும் வகையில், இப்புதிய 'சங்கல்ப்' பள்ளி தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பள்ளியில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பிசியோதெரபி சிகிச்சை, பேச்சுப்பயிற்சி சிகிச்சை போன்ற சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்படும். மேலும், அக்குழந்தைகள் சுயமாக வாழ்வை நடத்தும் வகையில் தொழிற்கல்வி பயிற்சி மூலம் நகை தயாரிப்பு, பரிசுப் பொருட்கள் தயாரிப்பு, நெசவுத் தொழில், டேட்டா என்ட்ரி, சோப்பு தயாரிப்பு, மசாலா பொருட்கள் தயாரிப்பு, முகக்கவசம் தயாரிப்பு போன்ற பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

3. அக்டோபர்.10 – உலக மனநல நாள்

கருப்பொருள்: சமத்துவமற்ற உலகில் மனநலம் பேணுதல்.

---

4. இந்தியா–டென்மார்க் நான்கு ஒப்பந்தங்கள்: சுகாதாரம், வேளாண் துறைகளில் உறவை வலுப்படுத்த முடிவு

சுகாதாரம், வேளாண்மை, நீர்மேலாண்மை, பருவநிலை மாற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளிடையே –யான உறவை மேலும் விரிவுபடுத்த இந்தியாவும், டென்மார்க்கும் முடிவு செய்துள்ளன. இந்தியா வந்துள்ள அந்நாட்டு பிரதமர் மெட்டே பிரட்ரிக்சென் தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியுடன் மேற்கொண்ட ஆலோசனையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

புதிய 4 ஒப்பந்தங்கள் என்னென்ன?

இந்தியா – டென்மார்க் இடையே கையெழுத்தான 4 ஒப்பந்தங்களில், நிலத்தடி நீர் வளங்கள் மற்றும் நீர்நிலைகளை வரைபடமாக்குவது குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஐதராபாதில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் – தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் டென்மார்க் ஆர்ஹஸ் பல்கலைக்கழகம் மற்றும் கிரீன்லாந்தின் புவியியல் ஆய்வு அமைப்பு ஆகியவை இடையே கையெழுத்தானது.

பாரம்பரிய அறிவு எண்ம (டிஜிட்டல்) நூலக அணுகல் குறித்த ஒப்பந்தம் CISR மற்றும் டென்மார்க் காப்புரிமை மற்றும் டிரேட்மார்க் அலுவலகம் இடையே கையெழுத்தானது. கோடைக் காலங்களில் இயற்கை குளிர் பதன சீர்மிகு மையத்தை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகம், டான்போஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் இடையே கையெழுத்தானது.

திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பது தொடர்பாக இந்தியா–டென்மார்க் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகங்கள் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. அதில் திறன் மேம்பாடு மற்றும்

தொழில்முனைவு அமைச்சக செயலாளர் ராஜேஷ் அகர்வால், டென்மார்க் தூதர் ப்ரெடி ஸ்வானே ஆகியோர் கையெழுத்திட்டனர்.

---

5. ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: 30 பதக்கங்களுடன் இந்தியா முதலிடம்

ISSF ஜூனியர் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்திய அணி 13 தங்கம், 11 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தம் முப்பது பதக்கங்களுடன் முதலிடம் பெற்றுள்ளது.

பெரு நாட்டின் தலைநகர் லிமாவில் நடைபெறும் இந்தப் போட்டியின் ஒரு பகுதியாக ஆடவர் 25 மீ ரேபிட் பையர் பிஸ்டல் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் அனிஷ் பன்வலா, ஆதர்ஷ் சிங், விஜயவீர் சித்து ஆகியோர் அடங்கிய அணி 10–2 என்ற புள்ளிக்கணக்கில் ஜெர்மனியின் பேபியன், பெலிக்ஸ், டோபியாஸ் அணியை வீழ்த்தி தங்கம் வென்றது.

மேலும் ஜூனியர் டபுள் டிராப் பிரிவில் இந்தியாவின் மான்வி சோனி (105), சக வீராங்கனைகள் ஏஷ்யா (90) ஹிடாஷா (76) ஆகியோர் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலங்களை வென்றனர். ஆடவர் டபுள் டிராப் பிரிவில் வினய் பிரதாப் சிங் 120 புள்ளிகளுடன் தங்கப் பதக்கத்தையும், சேஜா ப்ரீத் சிங் 114 புள்ளிகளுடன் வெள்ளியையும், மயங்க் ஷோகின் 111 புள்ளிகளுடன் வெண்கலத்தையும் வென்றனர்.

கலப்பு 50 மீ ரைபிள் 3 பிரிவில் இந்தியாவின் ஆயுஷி பொடர், பிரதாப் சிங் டோமர் வெள்ளிப்பதக்கம் வென்றனர். 25 மீ ரேபிட் பையர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் ரிதம் சங்வான், விஜய்வீர் சித்து 9–1 என்ற புள்ளிக் கணக்கில் தாய்லாந்து அணியை வென்று தங்கம் வென்றனர். மேலும் இதே பிரிவில் தேஜஸ்வினி–அனிஷ் இணை வெண்கலம் வென்றது.

ஒட்டுமொத்தமாக 13 தங்கம் உள்பட 30 பதக்கங்களுடன் இந்தியா முதலிடத்தைப் பிடித்தது. அமெரிக்கா இரண்டாம் இடத்தைப் பெற்றது.

---

6. நாடாளுமன்ற நிலைக்குழுக்களில் மாற்றம்: பணியாளர், சட்ட விவகார குழுவின் தலைவராக சுஷில் மோடி நியமனம்

தேசநலன்சார்ந்த விஷயங்கள், சர்ச்சைக்குரிய மசோதாக்கள் போன்றவ–ற்றை ஆய்வுசெய்து ஒன்றிய அரசுக்கு தகுந்த பரிந்துரைகளை வழங்கும் முக்கிய பணியை நாடாளுமன்ற நிலைக்குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. வழக்கமாக ஆண்டுதோறும் செப்டம்பர்மாதம் இக்குழுக்கள் மாற்றி அமைக்கப்படும். அதன்படி, 24 நாடாளுமன்ற நிலைக்குழுக்களில் மாற்றம் செய்து மாநிலங்களவை தலைமைச் செயலகம் அறிக்கை வெளியிட்டது. இதில், பணியாளர், சட்டத்துறை நிலைக்குழுவின் தலைவராக சுஷில்குமார் மோடி நியமிக்கப்பட்டுள்ளார்.

இது அரசியல் கட்சிகளின் நிதி தொடர்பான அறிக்கை அளிக்கும் முக்கிய குழுவாகும். பீகார் மாநில முன்னாள் துணை முதல்வரான சுஷில் குமாருக்கு அமைச்சரவையில் இடம்தரப்படாததால், முக்கியமான இக்குழுவின் தலைவர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

7. மாநகராட்சி உற்பத்தி செய்யும் இயற்கை உரத்தை – 'உரம்' என்ற பிராண்டில் விற்பனை:

சென்னை மாநகராட்சி உற்பத்தி செய்யும் இயற்கை உரம், சுமார் 1,750 டன் அளவில் கையிருப்பில் உள்ளது. அதை 'உரம்' என்ற பிராண்ட் பெயரில் விற்பனை செய்ய மாநகராட்சி நிர்வாகம் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

உள்ளாட்சி அமைப்புகள் முறையாக திடக்கழிவு மேலாண்மை செய்வதற்காக மத்திய அரசு, தூய்மை இந்தியா இயக்கத்தை தொடங்கி, அதன்மூலம் நிதி ஒதுக்கி வருகிறது. சென்னையில் தினமும் சராசரியாக 5,200 டன் குப்பைகள் உருவாகின்றன. இதுநாள் வரை அவை அனைத்தும் அப்படியே கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வந்தன. அதனால் அப்பகுதிகளில் கடும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்பட்டன.

இதனிடையே தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சிக்கு போதிய நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. அதன்மூலம் மக்கும் குப்பை, மக்காத குப்பை என வகை பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பை –கள் இயற்கை உரமாகவும், உயிரி எரிவாயு தயாரிக்கவும் பயன்படுத்தப் –பட்டு வருகிறது.

மக்காத குப்பைகளில் உள்ள உலோகங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மறு சுழற்சிக்கு கொண்டு செல்லப்படுகின்றன. மாநகராட்சியின் இத்தகைய நடவடிக்கைகளால் குப்பை கொட்டும் வளாகங்களுக்கு செல்லும் குப்பைகளின் அளவு தினமும் 1,000 டன்னுக்கு மேல் குறைந்துள்ளது. மேலும், மாநகராட்சி தயாரிக்கும் இயற்கை உரங்களுக்கு பிராண்ட் பெயர் உருவாக்கி, அதை விவசாயிகளுக்கு விற்க வேளாண் துறையில் அனுபவம் பெற்ற மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி திட்டமிட்டுள்ளார்.

இது தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:

மாநகராட்சி சார்பில் 160 அமைவிடங்களில் செயல்படும் 208 மையங்களில், மக்கும் குப்பைகளில் இருந்து இயற்கை உரம் தயாரிக்கு –ம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இயற்கை உரம் தயாரிக்கும் திட்டத்தில் தினமும் 583 டன் குப்பைகள் இயற்கை உரமாக மாற்றப்படு –கின்றன. இவை மாநகராட்சி பூங்காக்கள் மற்றும் மாநகரப் பகுதியில் மரக்கன்றுகள் நடவும், நகர்ப்புற அடர் வனங்கள் அமைக்கவும் பயன்படு –த்தப்பட்டு வருகின்றன.

தற்போது மாநகராட்சியிடம் 1,750 டன் இயற்கை உரங்கள் கையிருப்பில் உள்ளன. இவற்றை வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விற்க மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி ஏற்பாடு செய்துள்ளார். அவரது அறிவுறுத்தலின்பேரில் மாநகராட்சியின் இயற்கை உரத்துக்கு 'உரம்' என்ற பிராண்ட் பெயர் வைக்கப்பட்டு, எழுத் –துருவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மாநகராட்சி உற்பத்தி செய்யும் இயற்கை உரம் இந்தப் பெயரில்தான் விற்பனை செய்யப்பட உள்ளது. இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

---

8. இந்தியாவில் பிறந்து பாகிஸ்தான் அணு ஆயுதத்தின் தந்தையாக மாறிய அப்துல் காதிர் கான் காலமானார்

இந்தியாவில் பிறந்து, பாகிஸ்தானுக்கு குடிபெயரந்து அந்நாட்டின் "அணு ஆயுதத்தின் தந்தை" எனப் போற்றப்பட்ட அப்துல் காதிர் கான் (85) காலமானார்.

---

9. முத்திரை பதிக்காத முத்ரா திட்டம்!

கடந்த 2015ஆம் ஆண்டு மத்திய அரசு 'முத்ரா' (சிறு தொழில்கள் மேம்பாடு – கடனளிப்பு நிறுவனம்) தொடங்கியபோது நாட்டில் வேலைவாய்ப்பில்லாமல் இருந்த இளைஞர்கள் தங்கள் வாழ்வுக்கான ஒளி விளக்கு ஏற்றப்பட்டுள்ளதாகக் கருதினர். 'பிரதமர் முத்ரா' திட்டம் மிகப்பெரிய வெற்றி என்று மத்திய அரசு மகிழ்ச்சியுடன் கூறுகிறது.

இத்திட்டம் 31 கோடி பேருக்கு உதவியுள்ளதாகவும் (இந்த எண்ணிக்கை ஏறக்குறைய அமெரிக்க மக்கள்தொகைக்கு இணையானது; கனடா மக்கள்தொகையைவிட எட்டு மடங்கு அதிகம்) இத்திட்டத்தில் ₹15.86 இலட்சம் கோடி கடன் அளிக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது. இந்தத் தொகை நியூஸிலாந்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு (ஜிடிபி) இணையானது. இது தவிர உலகின் வெவ்வேறு 160 நாடுகளின் ஜிடிபி–யைவிட அதிகமானது. இக்கடன் அனைத்தும் 2015 ஏப்ரல் முதல் 2021 செப்.10ஆம் தேதி வரை (சுமார் ஆறு ஆண்டுகளில்) அளிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறம், நகர்ப்புறங்களில் சிறிய அளவில் தொழில், வர்த்தகம் நடத்துவோருக்கு அதிக கெடுபிடிகள் இல்லாமல் ₹10 இலட்சம் வரை கடன் அளிக்கப்படும் என்பதே 'முத்ரா' திட்டத்தின் அடிப்படை. எவ்வித அடமானமும் இன்றி இந்தக் கடன் வழங்கப்படுகிறது.

இதில் சிஷு பிரிவின் கீழ் ₹50,000 வரை, கிஷோர் பிரிவின்கீழ் ₹50,000 முதல் ₹5,00,000 இலட்சம் வரை, தருண் பிரிவின் கீழ் ₹5,00,000 முதல் ₹10,00,000 இலட்சம் வரை என மூன்று வகை திட்டங்கள் இதில் உள்ளன. இதில் சிஷு கடன் திட்டத்துக்கு ஒரு பக்கம் மட்டுமே விண்ணப்பம் இருக்கும். மற்ற இரு கடன் திட்டங்களுக்கும் மூன்று பக்கங்கள் மட்டுமே கடன் விண்ணப்பம். இதன் மூலம் கடன் நடைமுறை மிகவும் எளிமையாக்கப்பட்டது.

இத்திட்டம் மிகப்பெரிய வெற்றி என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டு உள்ளது. ஆனால், உண்மையான களநிலவரம் அதனுடன் ஒத்துப் போகிறா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு முன்பு முத்ரா திட்டத்தின் தேவை பற்றியும் அது உருவாக்கப்பட்ட விதம் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். கடந்த 2015 மார்ச் மாதத்தில், நிறுவனங்க –ள் சட்டம் 2013'இன்கீழ் முத்ரா ஒரு நிறுவனமாக தொடங்கப்பட்டது. மேலும், இது இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கியின் (சிட்பி) துணை நிறுவனமாகும். தொடர்ந்து 2015 ஏப்ரல் 7ஆம் தேதி இந்திய ரிசர்வ் வங்கியிடம் வங்கி சாராநிதி நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது.

அதற்கு அடுத்த நாளில் (2015 ஏப்ரல் 8) பிரதமர் மோடி 'பிரதமர் முத்ரா' திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதன் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ₹1,000 கோடி என்றும் செயல்பாட்டு மூலதனம் ₹750 கோடி என்று அறிவிப்பு வெளியானது. முத்ரா ஒரு மறுநிதியளிப்பு நிறுவனம் என்பதால் அது நேரடியாகக் கடன் வழங்காது. அதே நேரத்தில் வங்கிகள், பிற கடனளிப்பு நிறுவனங்கள் மூலம் கடன் வழங்க உதவுகிறது. மேலும், தெளிவாக விளக்குவதென்றால் வங்கிகள் சிறு தொழில்களுக்குக் கடன் அளிக்கின்றன. அதற்கான நிதியை வங்கிகளுக்கு முத்ரா அளிக்கிறது.

வங்கிகள்மூலம் கடனளித்து சிறு தொழில்களை மேம்படுத்த வேண்டும்; சிறு தொழில்களுக்கு வங்கிக் கடன் கிடைப்பதை எளிதாக்க வேண்டும் என்பவையே முத்ரா திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும்.

பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள், கிராப்புற வங்கிகள், சிறுகடன் வங்கிகள், உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகள், சிறுகடன் நிறுவனங்கள், வங்கி சாரா கடன் நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்தும் முத்ரா திட்டத்தின்கீழ் கடன் வழங்குகின்றன.

இந்தியப் பொருளாதாரத்தில் சிறுதொழில்கள் முக்கியப் பங்கு வகிப்பதால் அவற்றுக்குத் தேவையான நிதியாதாரத்தை, கடன் மூலம் அளிக்க முத்ரா கடன் திட்டம் போன்றவை அவசியம் என்று அறியப்படுகிறது. ஏனெனில், நாட்டில் வேளாண்மைத் துறைக்கு அடுத்து சிறு, குறு தொழில்களே பொருளாதாரக் கட்டமைப்பின் முக்கியப் படிநிலையாக உள்ளன. சிறு, குறு தொழில்கள் 11 கோடிக்கு மேற்பட்டோருக்கு நேரடியாகப் பணி வாய்ப்பு அளிக்கின்றன. மேலும், அதன் இதர படிநிலைகள் மூலம் மேலும் சுமார் 11 கோடி பேர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். 55 கோடி மக்களின் வாழ்க்கைக்கு உதவுவதாக உள்ளது. மேலும், சிறு, குறு தொழில் புரிபவர்களில் 97 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர்களாக உள்ளனர்.

நாட்டின் மொத்த மதிப்பு சேர்க்கையில் (GVA) சிறு, குறு நிறுவனங்களின் பங்களிப்பு மட்டும் 33 சதவீதமாகும். நாட்டின் ஏற்றுமதியில் சிறு, குறு நிறுவன உற்பத்திப் பொருள்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. 2018–19 நிதியாண்டில் நாட்டின் ஏற்றுமதியில் சிறு, குறு நிறுவனங்களின் பங்களிப்பு 48.10 சதவீதம் என அரசின் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

குறுந்தொழில் நிறுவனங்களில் 54 சதவீதம் கிராமப்புறங்களில்தான் செயல்படுகின்றன. உற்பத்தி, உற்பத்திக்கு தயார்படுத்துதல், வர்த்தகம், வியாபாரிகளுக்கான சேவைகளை அளித்தல், பழங்கள், காய்கறி விற்பனையாளர், இயந்திரப்பணியாளர்கள், கைவினைக் கலைஞர்கள், குடிசைத்தொழில்கள், தெருவோர வியாபாரிகள் உள்ளிட்டோர் இந்த 54 சதவீதத்தில் அடங்குவர். இவற்றில் பல தொழில்கள் ஒருவரால் மட்டுமே, ஓரிடத்தில் மட்டுமே நடத்தப்படுபவையாக இருக்கும்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தபோதும் சிறுதொழிகளுக்கு கடனுதவி முறையாகக் கிடைப்பதில்லை என்பதே உண்மை. சிறுதொழில்கள் செய்வோர் கடன் வழங்கும் தனிநபர்களை நம்பியே உள்ளனர். இத் துறையின் அளவுக்கு ஏற்ப வங்கிக் கடன் வழங்கப்படுவதில்லை.

'இந்தியாவில் சிறு, குறு தொழில்களுக்கான மொத்த கடன் தேவை ₹3.7 இலட்சம் கோடியாக உள்ளது. ஆனால், ₹1.45 இலட்சம் கோடி வரை மட்டுமே வங்கி போன்ற அமைப்புகள் மூலம் கடன் அளிக்கப்படுகின்றன. சிறு, குறு நிறுவனங்களுக்கு ₹2 இலட்சம் முதல் 2.5 இலட்சம் கோடி வரை கடன் கிடைக்காத நிலை உள்ளது.

மேலும், இப்போது நமது பொருளாதாரக் கொள்கைகள் சிறு, குறு தொழில்களுக்கு தேவையான கடன்களைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தவில்லை. இந்த விவகாரத்தில் நவீன அணுகுமுறை தேவை. இல்லையென்றால் தேவையான வளர்ச்சியை நாம் எட்டமுடியாது' என ரிசர்வ் வங்கியின் நிபுணர் குழு (யுகே சின்ஹா குழு–2019) கூறியுள்ளது.

சிறு, குறு நிறுவனங்கள் தரப்பிலும் பிரச்னை உள்ளது. அவர்கள் நிறுவனங்களைப் பதிவு செய்வதுமில்லை, முறையாக கணக்கு விவரங்களைப் பேணுவதுமில்லை. இதன் காரணமாகவே வங்கிகள் அவர்களுக்குக் கடனளிக்கத் தயங்குகின்றன. இப்பிரச்னைகளுக்கெல்–லாம் தீர்வாக இருக்கும் என்றே முத்ரா திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

ஆனால், இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது தொடர்பாக தரப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் நிச்சயமாக கிராம, நகர்ப்புறங்களில் சிறு தொழில் நடத்தும் சாமானியர்களுக்கு திருப்தி அளிப்பதாக இல்லை. அதாவது, உணவு பரிமாறியதற்கு ஆதாரம் உள்ளது. ஆனால், அது எந்த அளவுக்கு அவர் உண்ணக் கூடியதாக, போதுமானதாக இருந்தது என்பதே கேள்வி.

சிறுதொழில் செய்வோர் போதுமான அளவு குறைந்த வட்டியில் கடன் பெற முடியவில்லை. எவ்வித அடமானமும் இல்லாமல் கடன் பெற முடியும் என்ற இந்தத் திட்டம் போதுமான அளவு விளப்பரப்படுத்தப்படவுமில்லை.

அரசு கூறும் புள்ளிவிவரங்கள் எப்போதும் முரண்பாடாகவே உள்ளன. முத்ரா திட்டத்தில் 31,02,82,823 பேருக்கு ₹15,86,081.69 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி சராசரியாக ஒரு நபருக்கு ₹51,117 வழங்கப்பட்டுள்ளது.

அப்படியென்றால் பெரும்பாலானவர்களுக்கு ₹50,000 வரையிலான சிஷு பிரிவில் மட்டும்தான் கடன் கிடைத்துள்ளது. ₹10 இலட்சம் வரை கடன் பெறுவது என்பது பலருக்கு எட்டாக்கனியாகவே உள்ளது.

இரண்டாவதாக, முத்ரா திட்டத்துக்கு முன்பும் குறுந்தொழில்களுக்கு வங்கிகள் கடன் வழங்கியே வந்தன. எனவே, அவர்கள் விவசாயம் அல்லாத அனைத்துக் கடன்களையும் முத்ரா திட்டக் கடன்கள் என்ற பெயரிலேயே முத்திரை குத்தலாம். இதுவே, இந்த புள்ளிவிவரத்தில் எதிரொலித்துள்ளது. மூன்றாவதாக, வங்கிகள் முத்ரா கடன்களுக்கும் அடமானம் கோரியதாக பரவலாக புகார்கள் உள்ளன.

இதன் மூலம் முத்ரா என்பது பிணையில்லாக் கடன் திட்டம் என்பது பொய்த்துப் போனது. மேலும், முத்ரா கடனுக்கு எவ்விதக் குறிப்பிட்ட வட்டி விகிதமும் பரிந்துரைக்கப்படவில்லை. வழக்கம்போல RBI விதிகளுக்கு உட்பட்ட நியாயமான வட்டி விகிதத்தைப் பின்பற்ற வேண்டும் என்றே வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. எனவே, முத்ரா திட்டத்தில் குறைவான வட்டி விகிதம் என்பதும் சாத்தியமில்லாமல் போனது.

இவை அனைத்தையும் ஆய்வு செய்து பார்க்கும்போது, முத்ரா திட்டத்தில் கிடைத்த பலன்கள் என்று அரசால் கூறப்படுவது மிகவும் மிகைப்படுத்தப்–பட்டவை என்பது தெளிவாகிறது. முத்ரா திட்டத்தை மதிப்பாய்வு செய்ய வேண்டிய நேரம் இது. குறுந் தொழில்களுக்குக் கடன் கிடைப்பதில் உள்ள பிரச்னைகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு அவை தீர்க்கப்பட வேண்டும். அதைவிடுத்து, 'முத்ரா' போன்று பெயரளவில் மட்டுமே புதிய திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவது அரைத்த மாவையே அரைப்பத–ற்கு ஒப்பாகுமே தவிர, பிரச்னைக்கு சரியான தீர்வாக அமையாது.

1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'பண்டோரா பேப்பர்ஸ்' என்றால் என்ன?

அ) இத்தாலியில் தயாரிக்கப்பட்ட தாள்

ஆ) சுற்றுச்சூழலுக்குகந்த தாள்

இ) வெளிப்படுத்தப்படாத சொத்து மற்றும் வரி தவிர்ப்பை வெளிப்படுத்தும் ஆவணங்கள் ☑

ஈ) பிட்காயின் தொடர்பான ஆவணங்கள்

✓ 'பண்டோரா ஆவணங்கள்' என்பது உலகெங்கும் உள்ள பிரபலங்களால் மறைக்கப்பட்ட செல்வம், வரி ஏய்ப்பு & பணமோசடி பற்றிய ஆவணங்கள் ஆகும். இதுதொடர்பான தகவல்கள், பன்னாட்டு புலனாய்வு இதழியலாள –ர்கள் கூட்டமைப்பால் பெறப்பட்டது. மேலும், 140'க்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்கள் பணமோசடி செய்பவர்களின் வசம் உள்ளன.

---

2. தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனத்தின் MD யார்?

அ) PM நாயர் ☑



ஆ) அஜித் தோவல்

இ) உர்ஜித் படேல்

ஈ) UK சின்ஹா

✓ பாரத ஸ்டேட் வங்கியின் சொத்து நிபுணரான PM நாயர், தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்நிறுவனம் சமீபத்தில் தனது செயல்பாடுகளைத் தொடங்க ரிசர்வ் வங்கியின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. "பேட் பேங்க்" / NARCL'ஐ அமைப்பதற்கான முடிவு 2021–22 மத்திய வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

---

3. "சுவாமித்வா" திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) விவசாய அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) வீட்டுவசதி & நகர்ப்புற அமைச்சகம்

ஈ) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ☑

✓ "SVAMITVA – Survey of Villages Abadi and Mapping with Improvised Technology in Village Areas" என்பது பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ், ட்ரோன்களைப் பயன்படுத்தி நிலப் பரப்புகளை வரைபடமாக்குவதன்மூலம் கிராமத்தினர் வசிக்கும் பகுதிக –ளில் சொத்தின் தெளிவான உரிமை நிலை நிறுத்தப்படுகிறது.

✓ சமீபத்தில், இந்தத் திட்டத்தின்கீழ், மத்திய பிரதேச மாநிலத்தின் 1,71,000 பயனாளிகளுக்கு பிரதமர் மின்–சொத்து அட்டைகளை விநியோகித்தார்.

---

4. 2021–22ஆம் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட "மித்ரா" திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?

அ) பாதுகாப்பு

ஆ) ஜவுளி ☑



இ) ஆட்டோமொபைல்

ஈ) மருந்து

✓ PM Mega Integrated Textile Region and Apparel (MITRA) என்பது 2021–22 மத்திய வரவுசெலவுத் திட்டத்தில் ஜவுளித்துறையின் வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். ₹4,445 கோடி மதிப்பீட்டில் 7 மெகா ஜவுளிப்பூங்காக்களை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பூங்காக்கள் 21 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5.சமீபத்தில் புவிசார் குறியீடு பெற்ற இந்திய உணவான 'மிகிதானா' சார்ந்த மாநிலம் எது?

அ) மேற்கு வங்கம் ☑



ஆ) இராஜஸ்தான்

இ) ஹரியானா

ஈ) பஞ்சாப்

✓ 'மிகிதானா' என்பது மே வங்க மாநிலத்தின் ஒரு இனிப்பு வகையாகும். அண்மையில் இதற்கு GI (புவிசார் குறியீடு) கிடைக்கப்பெற்றது. பர்தமானில் செய்யப்பட்ட மிகிதானாவின் முதல் சரக்கு பஹ்ரைனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதை அடுத்து இது சமீப செய்திகளில் இடம்பெற்றது.

6.வடகிழக்கு மாநிலங்களின் சமையலெண்ணெய்கள்–எண்ணெய் பனை தேசிய இயக்கம் குறித்த வணிக உச்சிமாநாடு நடந்த இடம் எது?

அ) கௌகாத்தி ☑



ஆ) அகர்தலா

இ) இடாநகர்

ஈ) கேங்டாக்

✓ வடகிழக்கு மாநிலங்களின் சமையலெண்ணெய் – எண்ணெய் பனை தேசிய இயக்கம் குறித்த வணிக உச்சிமாநாடு சமீபத்தில் கௌகாத்தியில் நடைபெற்றது. இதற்கு மத்திய உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தலைமை வகித்தார்.

✓ சமையலெண்ணெய் – எண்ணெய் பனை மீதான தேசிய இயக்கமான –து 2025–26ஆம் ஆண்டுக்குள் மொத்தம் 6.5 இலட்சம் ஹெக்டேர்கள் கூடுதல் பரப்பளவில் எண்ணெய் பனை பயிரிடப்படுவதற்கான ஒரு மத்திய நிதியுதவி திட்டமாகும்.

---

7. இயற்கை மற்றும் மக்களுக்கான உயர்ந்த இலட்சிய கூட்டணி, அதிகாரப்பூர்வமாக எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது?

அ) 1984

ஆ) 1992

இ) 2000

ஈ) 2021 ☑

✓ இயற்கை மற்றும் மக்களுக்கான உயர்ந்த இலட்சிய கூட்டணி என்பது அரசாங்கங்களுக்கு இடையேயான ஒரு குழுவாகும். இக்குழு பிரான்ஸ் மற்றும் கோஸ்டாரிகாவுடன் இணைந்து செயல்படுகிறது. 2030'க்குள் புவியின் 30% நிலத்தையும் அதன் 30% பெருங்கடல்களையும் பாதுகாக்க ஓர் உறுதியை ஏற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

✓ இக்கூட்டணி, அதிகாரப்பூர்வமாக, கடந்த 2021'ஆம் ஆண்டில் நடந்த 'ஒன் பிளானட்' உச்சிமாநாட்டில் தொடங்கப்பட்டது. தற்போது சுமார் 70 உறுப்பினர்கள் இதிலுள்ளனர். புது தில்லியில் பிரெஞ்சு மற்றும் இந்திய அரசுகளுக்கு இடையே நடந்த விழாவில், இந்தியா, அதிகாரப்பூர்வமாக இக்கூட்டணியில் இணைந்தது.

---

8. 'இந்திய வான்படை நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) அக்டோபர்.2

ஆ) அக்டோபர்.4

இ) அக்டோபர்.5

ஈ) அக்டோபர்.8 ☑

✓ ஆண்டுதோறும் அக்டோபர் 8 அன்று, இந்திய வான்படை நாளை நாடு கொண்டாடுகிறது. இந்த ஆண்டு, இந்திய வான்படை நாளின் 89ஆவது ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. 1932ஆம் ஆண்டு இதே நாளில் இந்திய வான்படை (IAF) நிறுவப்பட்டது. இதன் முதல் செயற்பாட்டுப்படை 1933 ஏப்ரலில் நிறுவப்பட்டது. இந்த நாள், இந்திய விமானப்படைபற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, "பாரதிய வாயு சேனா" என்றும் அழைக்கப்படுகிறது.

---

9. ரிசர்வ் வங்கியின் அக்டோபர் மாத பணவியல் கொள்கைக்குழு கூட்டத்திற்குப் பிறகு, ரெப்போ விகிதம் என்ன?

அ) 4.5 %

ஆ) 4.25%

இ) 4.00% ☑

ஈ) 3.75%

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் பணவியல் கொள்கைக்குழுவானது ரெப்போ விகிதத்தை தொடர்ச்சியாக 8ஆவது முறையாக 4 சதவீதமாக மாற்றாமல்

வைத்துள்ளது. தலைகீழ் ரெப்போ விகிதம் 3.5 சதவீதமாக அப்படியே உள்ளது. 2021–22 நிதியாண்டின் GDP வளர்ச்சி முன்கணிப்பை 9.5 சதவீதமாக இருக்கும் என RBI கூறியுள்ளது.

---

10. நடப்பாண்டு (2021) உலக அஞ்சல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Innovate to recover ☑



ஆ) Post to Connect

இ) Communication during Covid

ஈ) Post across the World

✓ கடந்த 1874ஆம் ஆண்டு உலக அஞ்சல் தொழிற்சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு நாளை முன்னிட்டு ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 9ஆம் தேதி அன்று உலக அஞ்சல் நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியா, 1876 முதல் உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தில் உறுப்பினராக உள்ளது. "Innovate to recover" என்பது நடப்பு 2021ஆம் ஆண்டுக்கான கருப்பொருளாகும். மக்களின் வாழ்வில் அஞ்சல் துறையின் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே உலக அஞ்சல் நாளின் நோக்கமாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பொருளாதாரம்: அமெரிக்கா'கள் மூவருக்கு நோபல் பரிசு

நிகழாண்டு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சோ'ந்த பொருளாதார வல்லுநர'கள் டேவிட் கார'ட், ஜோஷுவாடி ஆங்கிரிஸ்ட், குயிடோ டபிள்யு இம்பென்ஸ் ஆகிய மூவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரிசுத் தொகையின் ஒரு பாதி டேவிட் கார'டிக்கும், மற்றொரு பாதி மற்ற இருவருக்கும் பகிர'ந்தளிக்கப்படும்.

குறைந்தபட்ச ஊதியம், குடியேற்றம், கல்வி ஆகியவற்றின் தொழிலாள' சந்தை விளைவுகள் தொடர'பாக முன்னோடி ஆராய்ச்சியை மேற்கொண்டதற்காகவும், அறிவியல்பூர'வமான ஆய்வுகளை மேற்கொள்ள இயலாமல் போகும் சூழலில், இதுபோன்ற ஆய்வுகளிலிருந்து முடிவுகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்ததற்காகவும் அவர'களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நோபல் தோ'வுக் குழுவினர' தெரிவித்ததாவது: நோபல் பரிசுக்குத் தோ'ந்தெடுக்கப்பட்டுள்ள மூவரும் பொருளாதார அறிவியலில் முற்றிலும் மறுவடிவமைக்கப்பட்ட அனுபவரீதியான பணிகளை மேற்கொண்டுள்ளனர'. சமூகத்தின் மையக் கேள்விகள் குறித்த டேவிட் கார'டின் ஆய்வும், ஆங்கிரிஸ்ட், இம்பென்ஸின் காரணிகள் அடிப்படையிலான பரிசோதனைகளும் அறிவின் வளமான ஆதாரம் எனக் காண்பிக்கின்றன. சமூகத்துக்கு சிறந்த பலனைத் தரக்கூடிய முக்கியமான கேள்விகளுக்குப் பதிலளிக்கும் திறனையும் மேம்படுத்தியுள்ளன.

அமெரிக்காவின் நியூ ஜோ'சி, கிழக்கு பென்சில்வேனியா ஆகிய இடங்களில் உள்ள உணவகங்களில் பணியாற்றுவோருக்கு குறைந்தபட்ச ஊதியத்தை உயர'த்துவதால் ஏற்படும் விளைவுகளை அறிவதற்காக டேவிட் கார'ட் ஆய்வுப் பணியில் ஈடுபட்டார'. அவரும், அவருடன் ஆய்வுப் பணியில் ஈடுபட்ட மறைந்த ஆலன் குரூகெரும் குறைந்தபட்ச ஊதிய அதிகரிப்பானது வேலைவாய்ப்பில் பாதிப்பை ஏற்படுத்தாது எனக் கண்டறிந்தனர'. குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரிப்பது வேலைவாய்ப்பைக் குறைக்கும் என்ற வழக்கமான கண்ணோட்டத்தை அது மாற்றியமைத்தது. மேலும், வெளிநாடுகளிலிருந்து குடியேறுபவர'களால் பூர'விக தொழிலாள'களின் ஊதியம் குறையும் என்ற கருத்தையும் டேவிட் கார'டின் ஆய்வு மாற்றியமைத்தது. புதிதாகக் குடியேறுபவர'கள் மூலம் பூர'விக தொழிலாள'களின் வருவாய் உயரக்கூடும் என அவர' கண்டறிந்தார'.

அறிவியல் முறைகளின்படி ஆய்வு மேற்கொள்ள இயலாத நிலையிலும்கூட காரணம் மற்றும் விளைவு குறித்து பொருளாதார வல்லுநர'கள் உறுதியான முடிவெடுக்க உதவும் வகையிலான வழிமுறைகளைக் கண்டறிந்ததற்காக ஆங்கிரிஸ்ட், இம்பென்ஸுக்கு நோபல் பரிசுத் தொகையின் ஒரு பாதி பகிர'ந்தளிக்கப்படுகிறது எனத் தெரிவித்துள்ளனர'.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம் ஆகியவற்றுக்கான நோபல் பரிசுகள் வழங்கும் முறை வேதியியலாள' ஆல்ஃபிரட் நோபலின் உயிலின்படி தொடங்கப்பட்டது. பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு மட்டும் அவரது நினைவாக ஸ்வீடன் மத்திய வங்கியால் 1968–இல் தொடங்கப்பட்டது.

டேவிட் கார'ட் (65): கனடாவில் பிறந்த டேவிட் கார'ட், கலிஃபோர'னியா (பெர'க்லி) பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத் துறைப் பேராசிரியராகப் பணிபுரிகிறார'. தேசிய பொருளாதார ஆராய்ச்சிப் பிரிவின் தொழிலாள' திட்ட இயக்குநராகவும் உள்ளார'.

ஜோஷுவாடி ஆங்கிரிஸ்ட் (61): இஸ்ரேல் அமெரிக்கரான இவர', மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் (எம்ஐடி) பொருளாதார பேராசிரியராகப் பணிபுரிகிறார'.

குயிடோ டபிள்யு இம்பென்ஸ் (58): நெதர'லாந்தில் பிறந்த குயிடோ டபிள்யு இம்பென்ஸ், ஸ்டான்ஃபோர'டு பல்கலைக்கழகத்தில் பொருளாதார பேராசிரியராகப் பணிபுரிகிறார'.

---

2. தமிழகத்தில் காசநோய் குணப்படுத்தும் விகிதம் 86 சதவீதமாக உயர'வு

தமிழகத்தில் காசநோயாளிகளை குணப்படுத்தும் விகிதம் 86 சதவீதமாக அதிகரித்துள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய காசநோய் மையத்தின் இணை மேற்பார'வை குழுவுடன் இணைந்து உலக சுகாதார அமைப்பின் தேசிய திட்ட ஒருங்கிணைப்பாள' ரஞ்சனி ராமச்சந்திரன் தலைமையிலான குழுவின' கடந்த 7–ஆம் தேதி முதல் 11–ஆம் தேதி வரை தென் சென்னை, திருவள்ளூர' மாவட்டங்களில் காசநோய் ஒழிப்பு திட்ட செயல்பாடுகள் தொடர'பான ஆய்வுகளை மேற்கொண்டனர'. அதுதொடர'பான ஆய்வு அறிக்கையை தலைமைச் செயலகத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர' மா.சுப்பிரமணியனை சந்தித்து அவர'கள் செவ்வாய்க்கிழமை வழங்கினர'.

அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:

இந்தியாவில் காசநோய் அச்சுறுத்தலை முற்றிலும் வேரறுக்கும் நோக்கில் திருத்தியமைக்கப்பட்ட தேசிய காசநோய் தடுப்புத் திட்டமானது 2020–ஆம் ஆண்டு முதல் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. 2025–ஆம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் பொருட்டு, நோய் கண்டறிதல் – சிகிச்சை – மருத்துவக் கட்டமைப்பு – நோய்த் தடுப்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து மாநில அரசு செயல்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் தமிழகத்திலேயே முதன்மை மாவட்டமாக திருவள்ளூர' மாவட்டம் திகழ்ந்து வருகிறது. அங்கு காசநோய் தடுப்புத் திட்டங்கள் சிறப்புற மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநில அளவில் எடுத்துக் கொண்டால் புதிதாகக் கண்டறியப்பட்ட காசநோயாளிகளை குணப்படுத்தும் விகிதம் 86 சதவீதத்தை எட்டியுள்ளது. கூட்டு மருந்து எதிர'ப்புக் காசநோய் திட்ட மேலாண்மையின் கீழ், உரிய நோயாளிகளை கண்டறிந்து தரமான சிகிச்சை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அனைத்து ஹெச்ஐவி நோயாளிகளுக்கும் காசநோய் பரிசோதனையும், அனைத்து காசநோயாளிகளுக்கும் ஹெச்ஐவி பரிசோதனையும் தமிழகத்தில் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழகம் முழுவதும் 39,222 காச நோயாளிகளுக்கு தேவைப்படும் காசநோய் மருந்துகள் காசநோய் களப்பணியாளர'கள் மூலம் அவர'களின் இருப்பிடங்களுக்கே சென்று வழங்கப்பட்டுள்ளது. சிகிச்சை நெறிமுறைகளின்படி அவர'களது வீட்டிலேயே சளி மாதிரி எடுக்கப்பட்டும், தேவைப்படுபவர'களுக்கு நடமாடும் ஊடுகதிர' கருவிகளை அவர'களின் இருப்பிடங்களுக்கே அனுப்பி ஊடுகதிர' படம் எடுக்கப்பட்டும் வருகிறது.

அதுமட்டுமல்லாது, மருந்துகளை உரிய வகையில் உட்கொள்வது, பக்கவிளைவுகள், காசநோயின் தன்மை போன்றவைகள் குறித்த ஆலோசனைகள் தொலைபேசி வாயிலாக வழங்கப்படுகின்றன. இணையதளம் மூலமாக அனைத்து மருந்தகங்களிலும் காசநோய் மருந்து விநியோகம் குறித்த தகவல் பெறுவதன் மூலம் தனியார' அமைப்புகளிலும் காசநோய் சிகிச்சைகளை தொடர'ந்து கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2021 ஆகஸ்ட் மாதம் முதல் காசநோய் கண்டறியும் முகாம்கள் மூலம் 42,797 பரிசோதனைகள் செய்யப்பட்டு 465 காசநோய் நோயாளிகள் அடையாளம்

காணப்பட்டுள்ளனா' என்று அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

3. கிர்கிஸ்தான் மேம்பாட்டுக்கு ரூ.1507 கோடி இந்தியா கடனுதவி

கிர்கிஸ்தான் நாட்டின் மேம்பாட்டு திட்டங்களுக்காக ரூ.1507 கோடி கடனுதவி அளிப்பதாக இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய ஆசிய நாடுகளுடனான உறவை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், கிர்கிஸ்தான், கஜகஸ்தான் மற்றும் ஆர்மீனியா ஆகிய நாடுகளுக்கு ஒன்றிய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இரண்டு நாள் பயணமாக நேற்று முன்தினம் அமைச்சர் ஜெய்சங்கர் கிர்கிஸ்தான் சென்றார்.

இதனை தொடர்ந்து அந்நாட்டு வெளியுறவு துறை அமைச்சர் ருஸ்லான் கசாக் பேவை நேற்று அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது இந்திய மாணவர்கள் பயணத்திற்கான பாரபட்சமற்ற விசா நடைமுறை உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது. இரு நாடுகளுக்குமான ராணுவம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும் மதிப்பாய்வு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து கிர்கிஸ்தான் நாட்டின் மேம்பாட்டு திட்ட பணிகளுக்காக இந்தியா ரூ.1507 கோடி கடன் உதவி வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

4. இன்று ஜி20 தலைவா'கள் மாநாடு: பிரதமா' மோடி பங்கேற்பு

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடா'பாக விவாதிப்பதற்காக ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் தலைவா'கள் மாநாடு செவ்வாய்க்கிழமை (அக்.12) நடைபெறுகிறது. இதில் பிரதமா' நரேந்திர மோடி காணொலி முறையில் பங்கேற்க இருக்கிறா'.

இது தொடா'பாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் மேலும் கூறியிருப்பதாவது:

ஆப்கானிஸ்தானில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது, மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்க பரிசீலிப்பது, சா'வதேச பாதுகாப்பு, பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடா'பாக இந்த ஜி20 மாநாட்டில் விவாதிக்கப்பட இருக்கிறது.

இப்போதைய ஜி20 மாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் இத்தாலியின் அழைப்பை ஏற்று பிரதமா' மோடியும் இந்த மாநாட்டில் பங்கேற்கிறா'. சா'வதேச அளவில் முக்கிய விஷயங்களில் ஒருமித்த கருத்தை எட்டுவதில் ஜி20 கூட்டமைப்பு முக்கியப் பங்கு வகித்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆப்கானிஸ்தான் தொடா'பாக விவாதித்த ஜி20 வெளியுறவு அமைச்சா'கள் மாநாட்டில் எஸ்.ஜெய்சங்கா' பங்கேற்றா' என்பது குறிப்பிடத்தக்கது.

---

5. 'போக்ஸோவில் பதிவான 99% வழக்குகள் சிறுமிகளுக்கு எதிரானவை

கடந்த ஆண்டு போக்ஸோ சட்டத்தின் கீழ் பதிவான 99 சதவீதத்துக்கும் அதிகமான வழக்குகள் சிறுமிகளுக்கு எதிரானவையாக உள்ளன.

இதுதொடா'பாக மத்திய அரசின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி, 'சிறா'களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சட்டமான போக்ஸோவின் கீழ் கடந்த ஆண்டு மொத்தம் 28,327 வழக்குகள் பதிவாகி உள்ளன. இதில் 28,058 வழக்குகள் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் தொடா'பானவை. இதில் 14,092 வழக்குகள் 16 முதல் 18 வயதுக்குள்ள சிறுமிகள் தொடா'புடையவை. 10,949 வழக்குகள் 12 முதல் 16 வயதுக்குள்ளானவா'கள் தொடா'பானவை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புள்ளி விவரங்களை ஆய்வு செய்து 'கிரை' எனும் குழந்தைகள் உரிமைகளுக்கான அமைப்பின் திட்ட ஆய்வாளா' பிரீத்தி மஹாரா, சா'வதேச பெண் குழந்தைகள் தினமான திங்களன்று கூறியதாவது:

சமூகத்தில் பாலியல் வன்கொடுமைகளுக்கு சிறுமிகள்தான் தொடா'ந்து இரையாகி வருவது இந்த புள்ளி விவரங்கள் தெளிவு படுத்துகின்றன.

சிறுமிகளுக்கு பாதுகாப்பு மட்டுமன்றி கல்வி, சமூகப் பாதுகாப்பு, வறுமை போன்றவையும் அவா'களுக்கு அதிகாரமளிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. கரோனா கால கட்டத்தில் இந்த அம்சங்கள் அவா'களுக்கு எதிராக இருந்தன. இதனால் அவா'களின் கல்வி தடைபட்டு, குழந்தை திருமணத்துக்கு ஆளாகும் நிலை அதிகரித்தது. வன்முறைக்கும் பாலியல் துன்புறுத்தலுக்கும் உள்ளாகும் நிலையும் அதிகமாகியது.

பெண் குழந்தைகளின் கல்வியையும் பாதுகாப்பையும் வலுப்படுத்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்த பல்வேறு வளா'ச்சி நடவடிக்கைகள் கரோனா பெருந்தொற்றால் சரிந்துவிட்டன. கல்வி பயில்வதில் இருந்து பெண் குழந்தைகள் விலகுவதும், அவா'களின் பாதுகாப்பு கேள்விக்குறியாவதும் அதிகரித்துவிட்டது. பதின்ம வயதில் உள்ள சிறுமிகள் மனிதாபிமானமற்ற நெருக்கடியில் பல்வேறு பாதுகாப்பு சவால்களை எதிா'கொள்கின்றனா'. ஆகையால், அவா'களைப் பாதுகாக்க உடனடி மற்றும் நீண்ட கால திட்டங்களை முழுமையாக அமல்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்' என்றா'.

---

6. சேதி தெரியுமா?

செப்.30 – அக்.3: இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா மகளிர் அணிகள் இடையே முதன் முறையாக பிங்க் பந்து பகலிரவு டெஸ்ட் போட்டி கோல்ட்கோஸ்ட் நகரில் நடைபெற்றது.

அக்.1: 2012 தேர்தலில் சட்டவிரோதமாக நிதி அளித்த புகாரில் பிரான்ஸ் முன்னாள் அதிபர் நிகோலஸ் சர்கோசிக்கு அந்நாட்டு நீதிமன்றம் ஓராண்டு சிறைத் தண்டனை வழங்கியது.

அக்.2: காதித் துணியால் நெய்யப்பட்ட உலகின் மிகப் பெரிய இந்திய தேசியக் கொடி லடாக் யூனியன் பிரதேசத்தில் உள்ள லே பகுதியில் பறக்கவிடப்பட்டது.

அக்.4: 2021–ம் ஆண்டுக்கான மருத்துவ நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் ஜூலியஸ் மற்றும் ஆர்டெம் பட்டாபுடியான் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

அக்.5: கருணை ஒன்றையே வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்த வள்ளலார் பிறந்த அக்டோபர் 5 இனி 'தனிப்பெருங் கருணை' நாளாகக் கொண்டாடப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அக்.5: இயற்பியலுக்கான நோபல் பரிசு ஜப்பானின் சியுகுரோ மனாபே, ஜெர்மனியின் கிளாஸ் ஹாசல்மேன் மற்றும் இத்தாலியின் ஜார்ஜியோ பாரிசி ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

அக். 6: வேதியியலுக்கான நோபல் பரிசு ஜெர்மனியின் பெஞ்சமின் லிஸ்ட் மற்றும் பிரிட்டனின் டேவிட் டபுள்யு.சி மேக்மில்லன் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

அக்.7: இந்தியப் பணக்காரர்களின் பட்டியலில் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரிஸ் நிறுவனத் தலைவர் முகேஷ் அம்பானி தொடர்ந்து பத்தாம் முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளார். இரண்டாமிடத்தில் அதானி குழுமத் தலைவர் கவுதம் அதானி உள்ளார்.

அக்.8: ஏர் இந்தியா நிறுவனத்தை ரூ.18 ஆயிரம் கோடிக்கு டாடா சன்ஸ் துணை நிறுவனமான தலேஸ் பிரைவேட் லிமிடெட் வாங்கியுள்ளதாக மத்திய அரசு அறிவித்தது. டாடா நிறுவனம் தொடங்கிய ஏர் இந்தியாவை 1953–ல் மத்திய அரசு நாட்டுடமையாக்கியது.

---

1. சமீப செய்திகளில் இடம்பெற்ற, குரு காசிதாஸ் தேசிய பூங்கா & தமோர் பிங்லா வனவுயிரி சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) மேற்கு வங்கம்



ஆ) ஒடிசா

இ) சத்தீஸ்கர் ☑


ஈ) பீகார்

✓ சத்தீஸ்கர் மாநில அரசானது குரு காசிதாஸ் தேசிய பூங்கா & தமோர் பிங்லா வனவுயிரி சரணாலயம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதிகளை புலிகள் காப்பகமாக அறிவிக்கவுள்ளது. தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம், சத்தீஸ்கர் மாநில அரசின் இந்த முன்மொழிவை அங்கீகரித்துள்ளது. மத்திய பிரதேசம் மற்றும் ஜார்கண்ட் மாநிலத்தின் எல்லையில், வடக்குப் பகுதியில் இந்தப் புதிய காப்பகம் அமைந்துள்ளது.

---

2. சமீப செய்திகளில் இடம்பெற்ற ஈர்ப்பிலாவெளி அணு கடிகாரத்துட–ன் தொடர்புடைய விண்வெளி ஆய்வு முகமை எது?

அ) இஸ்ரோ



ஆ) நாசா ☑

இ) வர்ஜின் கேலக்டிக்

ஈ) ஸ்பேஸ் எக்ஸ்

✓ நாசாவின் ஈர்ப்பிலா விண்வெளி அணு கடிகாரமானது தனது பணியை வெற்றிகரமாக முடித்துள்ளது. இக்கடிகாரம் தெற்கு கலிபோர்னியாவில் உள்ள நாசாவின் ஜெட் உந்துவிசை ஆய்வகத்தால் கட்டப்பட்டதாகும்.

✓ ஈர்ப்பிலா விண்வெளி அணு கடிகாரம் என்பது மிகத்துல்லியமான பாதரச அயனி அணு கடிகாரமாகும். 2019 ஜூன் 25 அன்று பாதுகாப்புத் துறை விண்வெளி சோதனைத் திட்டம்–2 திட்டத்தில் இது தொடங்கப்பட்டது. புவி சுற்றுப்பாதையில் அதன் ஓராண்டு முதன்மைப் பணியை நிறைவு செய்த பின்னர், மேலும் தரவுகளைச் சேகரிப்பதற்காக, NASA இந்தப் பணியை விரிவுபடுத்தியது.

---

3. துறைமுகம் தொடர்பான தகவல்களில் வெளிப்படைத்தன்மை –யை ஊக்குவிக்கும் நோக்கில் மத்திய கப்பல் அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட செயலியின் பெயர் என்ன?

அ) AtmaNirbhar Port



ஆ) MyPort ☑

இ) Bharat Port


ஈ) Port in Hand

✓ துறைமுகநடவடிக்கைகளை கண்காணிக்கும் 'மை போர்ட்' செயலியை மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது. இச் செயலி, துறைமுக நடவடிக்கைகள் அனைத்தையும் டிஜிட்டல்மூலம் கண்காணிக்கிறது. வெளிப்படைத்தன்மையையும் மற்றும் தகவல்களை எளிதாக பெறுவதையும் இந்தச் செயலி ஊக்குவிக்கிறது. கப்பல் நிறுத்தம், கொள்கலன் நிலவரம், கட்டணம், துறைமுகத்தின் விடுமுறை நாட்கள் போன்ற தகவல்களையும் இந்தச்செயலியில் 24 ம. நேரமும் பெறலாம்.

---

4. அண்மையில் இந்தியாவுக்கு வந்த மெட்டே பிரடெரிக்சன், எந்த நாட்டின் பிரதமராவார்?

அ) பின்லாந்து



ஆ) டென்மார்க் ☑

இ) பிரான்ஸ்

ஈ) ஆஸ்திரேலியா

✓ ஹைதராபாத் மாளிகையில் பிரதமர் மோடியும் டேனிஷ் பிரதமர் மெட்டே பிரடெரிக்சனும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர். மூன்று நாள் பயணமாக இந்தியா வந்த பிரடெரிக்சன், ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மற்றும் பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். முன்னதாக, பிரடெரிக்சன், வெளியுறவு அமைச்சர் எஸ் ஜெய்சங்கரை சந்தித்தார். 200'க்கும் மேற்பட்ட டேனிய நிறுவனங்கள் இந்தியாவில் உள்ளன மற்றும் சுமார் 60 இந்திய நிறுவனங்கள் டென்மார்க்கில் உள்ளன.

---

5. அடல் பிரகதி வழித்தடம் என்பது எந்த இந்திய மாநிலம் / UT'இல் அமைக்கப்படவுள்ள ஒரு விரைவு சாலை திட்டமாகும்?

அ) குஜராத்



ஆ) மத்திய பிரதேசம் ☑

இ) உத்தரகண்ட்

ஈ) உத்தர பிரதேசம்

✓ அடல் பிரகதி வழித்தடத்திற்காக கையகப்படுத்தப்படும் தனியார் நிலத்திற்கு ஈடாக அரசு நிலம் வழங்கும் திட்டத்திற்கு மத்திய பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இது பாரத்மாலா திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் 313 கிமீ நீள 4 வழித்தட விரைவு சாலை திட்டமாகும். முன்மொழியப்பட்டுள்ள இந்த அடல் பிரகதி பாதை, மத்திய பிரதேசத்தின் ஷியோபூர், மொரேனா மற்றும் பிந்த் மாவட்டங்கள் வழியாக செல்லும். இத்திட்டத்திற்காக, மபி மாநில அரசு நிலத்தை இலவசமாக வழங்குகிறது.

---

6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஜிம் கார்பெட் தேசிய பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?

அ) உத்தரகண்ட் ☑



ஆ) பீகார்

இ) மேற்கு வங்கம்

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ ஜிம் கார்பெட் தேசிய பூங்காவானது உத்தரகண்டில் உள்ள உலகப்புகழ் பெற்ற புலிகள் காப்பகமாகும். மத்திய வன மற்றும் சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் அஷ்வினி குமார் சௌபே, எதிர்காலத்தில் ராம்கங்கா தேசிய பூங்கா என இந்தத் தேசிய பூங்கா பெயர் மாற்றஞ்செய்யப்படலாம் என அறிவித்தார். இது இந்தியாவின் முதல் தேசிய பூங்காவாகும். சுமார் 521 கிமீ பரப்பளவில் இது பரவி அமைந்துள்ளது. இது வங்கப்புலிகள், சிறுத்தைகள் மற்றும் காட்டு யானைகளுக்கு பெயர் பெற்றதாகும்.

---

7. போர்ப்ஸ் செல்வந்தர்களின் பட்டியலில் தொடர்ந்து 14ஆவது ஆண்டாக முதலிடம் பிடித்த இந்தியர் யார்?

அ) கௌதம் அதானி



ஆ) முகேஷ் அம்பானி ☑

இ) இரஜினிகாந்த்

ஈ) உதயநிதி ஸ்டாலின்

✓ ரிலையன்ஸ் தொழிற்துறைகளின் தலைவர் முகேஷ் அம்பானி, போர்ப்ஸ் செல்வந்தர்கள் பட்டியலில் தொடர்ந்து 14ஆவது ஆண்டாக முதலிடம் பிடித்துள்ளார். இந்தப் பட்டியலின்படி, அவரின் மொத்த சொத்து மதிப்பு $92 பில்லியன் டாலர்களாகும். 2021ஆம் ஆண்டில் மட்டும் அவர் தனது நிகர சொத்து மதிப்பில் 4 பில்லியன் டாலர்களைச் சேர்த்துள்ளார்.

✓ $74.8 பில்லியன் டாலர் செல்வத்துடன் கௌதம் அதானி, இந்தியாவின் 2ஆவது பணக்காரராக உள்ளார். HCL'இன் சிவ் நாடார் $31 பில்லியன் டாலர் செல்வத்துடன் இப்பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளார். அவென்யூஸ் சூப்பர்–மார்ட் நிறுவனர் ராதாகிருஷ்ணன் டாமனி மற்றும் சீரம் இன்ஸ்டிடியூட்டின் தலைவர் சைரஸ் பூனாவல்லா நான்காவது மற்றும் ஐந்தாவது இடங்களில் உள்ளனர்.

---

8. 'Shifting Gears: Digitization and Services–Led Development' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ) IMF

ஆ) உலக வங்கி ☑

இ) NITI ஆயோக்

ஈ) UNEP

✓ உலக வங்கியானது சமீபத்தில் 'Shifting Gears: Digitization & Services–Led Development' என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 8.3% அளவுக்கு வளர்ச்சியுறும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, வாஷிங்டனில் அடுத்த வாரம் தொடங்கும் உலக வங்கியின் ஆண்டுக்கூட்டங்களுக்கு முன்னதாக வெளியிடப்பட்ட தெற்காசிய பொருளாதாரம் குறித்த அறிக்கையாகும்.

---

9. ரிசர்வ் வங்கியின் 4ஆம் ஒழுங்குமுறை பயிற்சிக்கூட்டமைப்பின் கருப்பொருள் என்ன?

அ) MSME கடனளித்தல்



ஆ) சில்லறை வணிக கடனளித்தல்

இ) பன்னாட்டு வங்கி

ஈ) நிதிசார் மோசடிகள் ☑

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ், ரிசர்வ் வங்கியின் 4ஆவது ஒழுங்குமுறை பயிற்சிக்கூட்டமைப்பு, "நிதிசார் மோசடிகளில்" தனது கவனத்தைச் செலுத்தும் என்று அறிவித்துள்ளார். "மோசடிகள் நிகழ்வதற்கும் கண்டறிதலுக்கும் இடையிலான பின்னடைவைக் குறைத்தல்" & "நிர்வாக அமைப்பை வலுப்படுத்துதல்" ஆகியவற்றில் முக்கிய கவனஞ்செலுத்தப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

---

10. ஏர் இந்தியா நிறுவனத்தை கையகப்படுத்தும் முயற்சியில், எந்த இந்திய நிறுவனம் வெற்றிபெற்றது?

அ) டாடா சன்ஸ் ☑

ஆ) ரிலையன்ஸ் தொழிற்துறைகள் நிறுவனம்

இ) அதானி குழுமம்

ஈ) மஹிந்திரா குழுமம்

✓ ஏர் இந்தியாவை நிறுவனத்தை கையாகப்படுத்தும் முயற்சியில் டாடா சன்ஸ் வெற்றிபெற்றுள்ளது. ஏர் இந்தியா நிறுவனத்தில் உள்ள இந்திய அரசின் 100% பங்குகளையும் டாடா வாங்கியுள்ளது. இதில் ₹2,700 கோடி அரசுக்கு பணமாகக் கிடைக்கும். மீதமுள்ள ₹15,300 கோடி ஏர் இந்தியாவின் கடனுக்காக டாடா சன்ஸ் பொறுப்பேற்றுக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏர் இந்தியாவின் மொத்த கடன் ₹65,562 கோடியாக உள்ளது. கடந்த 1932ஆம் ஆண்டில் JRD டாடாவால் தொடங்கப்பட்ட நிறுவனத்தை 1953'இல் நாட்டுடைமையாக்கியது.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 4 புதிய நீதிபதிகள்: பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது

சென்னை உயர் நீதிமன்றத்தில் 4 பேரை புதிய நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியுடன் சேர்த்து மொத்தம் உள்ள நீதிபதி பணியிடங்களின் எண்ணிக்கை 75. சமீபத்தில் குஜராத் உயர் நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாக பணி யாற்றி வந்த நீதிபதி பரேஷ் ரவிசங்கர் உபாத்யா சென்னை உயர் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு பொறுப்பேற்றுக்கொண்டார். அவருடன் சேர்த்து மொத்தம் 56 நீதிபதிகள் தற்போது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் பதவி வகித்து வருகின்றனர்.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களாக பணியாற்றிவரும் • மதி சுந்தரம், டி பரத சக்ரவர்த்தி, ஆர் விஜயகுமார், முகமது ஷபி ஆகிய நால்வரையும் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகளாக நியமிக்க உச்சநீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது. அதன்படி மத்திய அரசின் பரிந்துரையை ஏற்று இந்த நால்வரையும் சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகளாக நியமித்து குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் உத்தரவிட்டுள்ளார். இவர்கள் 4 பேருக்கும் தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி விரைவில் பதவிப்பிரமாணம் செய்து வைப்பார். இவர்களுடன் சேர்த்து சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது.

ஏற்கெனவே கடந்தாண்டு டிசம்பரில் நீதிபதிகள் ஜி சந்திரசேகரன், ஏ ஏ நக்கீரன், வி சிவஞானம், ஜி இளங்கோவன், எஸ் ஆனந்தி, எஸ் கண்ணம்மாள், எஸ் சத்திகுமார் சுகுமார குரூப், கே முரளி சங்கர், ஆர் என் மஞ்சுளா, டி வி தமிழ்ச்செல்வி ஆகிய 10 பேர் ஒரே நேரத்தில் உயர் நீதிமன்ற நீதிபதிகளாக பதவியேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது வழக்கறிஞராக பணியாற்றிவந்த ஸ்ரீமதி சுந்தரம் நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதால், உயர்நீதிமன்றத்தில் உள்ள பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.

---

2. பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா: முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு க ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தானது.

முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் அக்.12 அன்று தலைமைச் செயலகத்திலிருந்தும், காணொலிக்காட்சி வாயிலாக புது தில்லியில் இருந்து மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி, மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால் மற்றும் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை இணை அமைச்சர் ஜெனரல் வி கே சிங் ஆகியோர் முன்னிலையிலும், தமிழக அரசின் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் National Highway Logistics Management Ltd., சென்னை துறைமுகம் ஆகியவை இணைந்து, பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், திருவள்ளூர் மாவட்டம், மப்பேட்டில் ₹1,200 கோடி முதலீட்டில் 'பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா' தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழகத்தில் அமையும் முதலாவது பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்காவாக இது அமைந்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், 158 ஏக்கர் பரப்பளவில் ₹1,200 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.

---

3. மலபார் கூட்டு கடற்படை பயிற்சி: இரண்டாம் கட்டம் தொடக்கம்

க்வாட் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் மலபார் கூட்டு கடற் படை பயிற்சி தொடங்கியது. க்வாட் கூட்டமைப்பில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. இந்த நாடுகளின் கடற்படைகள் இணைந்து மேற்கொள்ளும் மலபார் கூட்டுப் பயிற்சியின் முதல் கட்டம் மேற்கு பசிபிக்கில் உள்ள குவாம் கடற்பகுதியில் ஆகஸ்ட் 26 முதல் 29ஆம் தேதி வரை நடைபெற்றது. இந்தப்பயிற்சியின் இரண்டாம் கட்டம் வங்கக்கடல் பகுதியில் தொடங்கியது.

4 நாள்கள் நடைபெறும் இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் ரன்விஜய், ஐஎன்எஸ் சத்புரா போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல், கடற்பகுதியில் நீண்டதூரம் ரோந்துப்பணிகளை மேற்கொள்ளும் பி81 விமானங்கள் ஈடுபட்டுள்ளன. அமெரிக்கா தரப்பில் அணுசக்தியால் இயங்கும் விமானந்தாங்கிக் கப்பல் USS கார்ல் வின்சன், ஏவுகணை தாங்கி USS லேக் சாம்லேன், யுஎஸ்எஸ் ஸ்டாக்டேல் போர்க்கப்பல்கள் பங்கேற்றுள்ளன. ஜப்பான் சார்பில் ஹெலிகாப்டர் தாங்கி ஜேஎஸ் காகா, ஜேஎஸ் முராசமே போர்க்கப்பல்கள், ஆஸ்திரேலியா தரப்பில் எச்எம்ஏஎஸ் பலாரட், எச்எம்ஏஎஸ் சிரியஸ் போர்க்கப்பல்கள் பங்கேற்றுள்ளன.

மலபார் பயிற்சியின் இரண்டாம் கட்டத்தில் சிக்கலான பயிற்சிகள் மேற் கொள்ளப்படவுள்ளதாக இந்திய கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் தனது ராணுவ ஆதிக்கத்தை சீனா அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், மலபார் பயிற்சி நடைபெறுகிறது.

இந்தோ–பசிபிக் பிராந்தியம் சுதந்திரமாக இருப்பதை உறுதி செய்ய இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அவற்றுடன் ஒத்த கருத்துடைய நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

---

4. தமிழக அஞ்சல் துறை சார்பில் மூன்று சிறப்பு அஞ்சல் உறை வெளியீடு

தமிழக அஞ்சல் துறை சார்பில், கரோனா தடுப்பூசி குறித்த ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் வரைந்த ஓவியங்களில் 2 சிறப்பு அஞ்சல் உறைகளும், சுதந்திரப் போராட்ட வீராங்கனை கேப்டன் லஷ்மி சாஹலை கௌரவிக்கும் வகையில், சிறப்பு அஞ்சல் உறையும் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய அஞ்சல் வாரத்தை முன்னிட்டு, அஞ்சல்துறை சிறப்பு தபால்தலை சேகரிப்பை பள்ளி மாணவர்கள் மத்தியில் ஊக்கப்படுத்தும் விதமாக, கரோனா தடுப்பூசி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஓவியப் போட்டியை நடத்தியது. அதில் வெற்றி பெற்ற மாணவர்கள் வரைந்த ஓவியங்களில் இரண்டு சிறப்பு அஞ்சல் உறைகளும், சுதந்திரப் போராட்ட வீராங்கனை கேப்டன் லஷ்மி சாஹலை கௌரவிக்கும் வகையில், சிறப்பு அஞ்சல் உறையும் வெளியிடப்பட்டுள்ளது.

---

5. வருவாய்த் துறையின் திட்டங்களை அறிய பிரத்யேக இணையதளம்: முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கி வைத்தார்

வருவாய்த் துறையின் திட்டங்கள், அரசாணைகள் உள்ளிட்டவற்றை அறிவதற்கான பிரத்யேக இணையதளத்தை முதல்வர் மு க ஸ்டாலின், தொடக்கி வைத்தார். மேலும், கிராம நிர்வாக அலுவலர்கள், துணை ஆட்சியர்கள் மாவட்ட மாறுதல் பெறுவதற்கென பிரத்யேக இணையதளத் –தை முதல்வர் முக ஸ்டாலின் தொடக்கி வைத்தார். மேலும், வருவாய் நிர்வாக ஆணையரகத்துக்கென பிரத்யேக இணையதளத்தையும் அவர் தொடங்கி வைத்தார். இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

மாநில அரசால் அறிவிக்கப்படும் வருவாய்த் துறையின் சமூக பாதுகாப்பு திட்டங்கள், முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டங்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்குப் பயன்படும் சான்றிதழ்கள் வழங்கும் திட்டங்கள் போன்றவை வருவாய் நிர்வாக ஆணையரகம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டங்கள் குறித்த விவரங்கள் மற்றும் பயன்கள் மக்களை மக்கள் எளிதில் தெரிந்துகொள்ள வருவாய் நிர்வாக ஆணையரகத்தால் பிரத்யேக இணையதளம் (www.cra.tn.gov.in) தொடங்கப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில் வருவாய்த்துறை தொடர்பான அரசு திட்டங்களி –ன் விவரங்கள், அரசாணைகள், பொதுமக்களின் பயன்பாட்டுக்கென பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் தங்களது இருப் –பிடத்திலிருந்தபடியே அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் பயன்கள் குறித்து அறிந்து கொள்ளலாம். தமிழக அரசின் குடிமைப் பணியின்கீழ் பணிபுரியும் அலுவலர்களின் நிர்வாகதேவைகளை பூர்த்தி செய்ய துணை ஆட்சியர்களுக்கான பிரத்யேக (www.cra.tn.gov.in/tnscs) இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அரசு விதிகள், சட்டங்கள், அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் உத்தரவுகள், வழிகாட்டு நெறிமுறைகள், சுற்றறிக்கைகள், பணிமாறுதல், பணி நியமனங்கள் குறித்த விவரங்கள் அறிந்துகொள்ளலாம்.

வருவாய்த் துறையின் திட்டங்களை கிராமங்கள்வரை கொண்டுசேர்க்க கூடிய பணியை செய்பவர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள். அவர்களின் பணியிட மாறுதல்கள் தொடர்பான கோரிக்கைகளைப் பரிசீலித்து செயல்படுத்தும் வகையில் தனி இணையதளம் (www.cra.tn.gov.in/vaotransfer) உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாறுதல்களை தாமதம் இல்லாமல் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்த முடியும். இந்த மூன்று புதிய இணையதளங்களையும் முதல்வர் முக ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

1. இந்தியாவில் பிறந்த டாக்டர். அப்துல் காதர் கான் அண்மையில் காலமானார். அவர், எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?



அ) அணு மற்றும் அணு அறிவியல் ☑

ஆ) மட்டைப்பந்து

இ) அரசியல்

ஈ) வேளாண்மை

✓ பாகிஸ்தானின் 'அணுவாயுதத்திட்டத்தின் தந்தை' என்றழைக்கப்படும் இந்தியாவில் பிறந்த Dr அப்துல் காதர் கான் சமீபத்தில் பாகிஸ்தானில் காலமானார். அவர் 1936ஆம் ஆண்டு போபாலில் பிறந்தார். 1947ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் பிரிவினையின்போது பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தார்.

2.சர்வதேச பெண்குழந்தைகள் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) அக்டோபர்.10

ஆ) அக்டோபர்.11 ☑

இ) அக்டோபர்.14

ஈ) அக்டோபர்.15

✓ ஆண்–பெண் சமத்துவ பாதிப்புகளை முன்னிலைப்படுத்துவதற்காக சர்வதேச பெண் குழந்தைகள் நாள் ஆண்டுதோறும் அக்டோபர்.11 அன்று அனுசரிக்கப்படுகிறது. 2011'இல், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை, பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிறுத்துவதற்காக அக்.11'ஐ சர்வதேச பெண் குழந்தைகளின் நாளாக அறிவித்தது.

✓ இந்த ஆண்டு, பலதரப்பட்ட பணிகளில் உள்ள பாலின டிஜிட்டல் பிளவை நீக்க உலகை ஐநா வலியுறுத்துகிறது.

---

3. பாரத்பே நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்திய வங்கியாளர் யார்?



அ) அருந்ததி பட்டாச்சார்யா

ஆ) ரஜினிஷ் குமார் ☑

இ) சந்தா கோச்சார்

ஈ) உர்ஜித் படேல்

✓ பாரத வங்கியின் முன்னாள் தலைவரான ரஜினிஷ் குமார், பின்டெக் நிறுவனமான பாரத்பே நிறுவனத்தின் தலைவராக சேர்ந்துள்ளார். 2020 அக்டோபரில் 40 ஆண்டுகால சேவைக்குப் பிறகு ரஜினிஷ் குமார் ஓய்வுபெற்றார். அவர் முன்னர், வங்கி நிறுவனமான HSBC'இன் ஆசிய பிரிவின் நிர்வாகமற்ற இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

---

4. கீழ்காணும் எந்த இடைப்பட்ட காலத்திற்கு, இந்திய உயிரியல் பூங்காக்களுக்கான தொலைநோக்கு திட்டத்தை மத்திய வனம் & சுற்றுச்சூழல் அமைச்சர் வெளியிட்டார்?



அ) 2021–2031 ☑

ஆ) 2021–2025

இ) 2022–2032

ஈ) 2022–2026

✓ மத்திய வனவுயிரிச்சாலை ஆணையத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட மற்றும் குஜராத்தின் சர்தார் படேல் உயிரியல் பூங்காவில் நடத்தப்பட்ட உயிரியல் பூங்கா இயக்குநர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்களுக்கான தேசிய மாநாட்டில் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் முதன்மை வெளியீடுகளை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் வெளியிட்டார்.

✓ முதலில், இந்திய உயிரியல் பூங்காக்களை உலக தரத்திற்கு மேம்படுத்த –வும், மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்தை வலுப்படுத்தவும் தொலை நோக்குத்திட்டம் (2021–2031) வெளியிடப்பட்டது. இது வனவுயிரி பராமரி –ப்பு, ஆராய்ச்சி&பார்வையாளர் அனுபவங்களில் கவனஞ்செலுத்துகிறது. 2ஆவதாக, பணியாளர் மற்றும் பார்வையாளர்களுக்கான வளாகத்தில், WASH வசதிகளை உருவாக்குவதற்கும் பராமரிப்பதற்குமான உயிரியல் பூங்காக்களுக்கான WASH கையேடு வெளியிடப்பட்டது. CZA அமைத்த 'பிராணி மித்ரா' விருதுகளையும் அவர் வழங்கினார்.

---

5. இந்திய விண்வெளி சங்கத்தின் (ISPA) தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) அனில் பட் ☑

ஆ) அமித் ஷா

இ) அஜித் தோவல்

ஈ) ராஜ்நாத் சிங்

✓ பிரதமர் சமீபத்தில் இந்திய விண்வெளி சங்கத்தை (ISPA) தொடங்கினார். இது விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் நிறுவனங்களின் தொழில் சங்கமாகும். இதன் நிறுவன உறுப்பினர்களுள் லார்சன் அண்ட் டூப்ரோ, நெல்கோ (டாடா குழுமம்), ஒன்வெப், பார்தி ஏர்டெல், மேப் மை இந்தியா, வால்சந்த்நகர் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் அனந்த் டெக்னாலஜி லிமிடெட் ஆகியவை அடங்கும். கோத்ரெஜ், ஹியூஸ் இந்தியா உள்ளிட்டவை மற்ற முக்கிய உறுப்பினர்களாக உள்ளனர். லெப்டினன்ட் ஜெனரல் அனில் பட் (ஓய்வு), இச்சங்கத்தின் பொது இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

6. '6S பரப்புரை' என்ற பெயரிலான பரப்புரையைத் தொடங்கியுள்ள பொதுத்துறை வங்கி எது?

அ) பாரத வங்கி

ஆ) பஞ்சாப் தேசிய வங்கி ☑

இ) கனரா வங்கி

ஈ) பரோடா வங்கி

✓ நாட்டின் இரண்டாவது பெரிய பொதுத்துறை வங்கியான பஞ்சாப் தேசிய வங்கி, ஸ்வபிமான், சம்ருத்தி, சம்பார்க் மற்றும் ஷிகர், சங்கல்プ் மற்றும் ஸ்வாகத் போன்ற பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய '6S பரப்புரை திட்டத்தை'த் தொடங்கியுள்ளது. நாட்டில் நிதியியல் சேவைகளை மேம்ப –டுத்துவதற்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தை முன்னெடுப்பதே இதன் நோக்கமாகும். கடன் வளர்ச்சி, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் வங்கி உந்துதல், குறிப்பாக வேளாண் துறைக்கான கடனுதவி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

7. எந்த நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்காக, $200 மில்லியன் டாலர் கடன் வழங்குவதற்கு இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது?



அ) நேபாளம்

ஆ) தஜிகிஸ்தான்

இ) கிர்கிஸ்தான் ☑

ஈ) இந்தோனேசியா

✓ பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு உறவுகளை மேம்படுத்து–வதற்காக வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் முன்னணி கிர்கிஸ்தான் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அந்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்காக, $200 மில்லியன் டாலர் கடன் வழங்குதற்கு இந்தியா ஒப்புக்கொண்டது. 3 மத்திய ஆசிய நாடுகளுடனான இருதரப்பு உறவை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், S ஜெய்சங்கர் தனது நான்கு நாள் பயணமாக கிர்கிஸ்தான், கஜகஸ்தான் & ஆர்மீனியாவுக்குச் செல்கிறார்.

---

8. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற பிளாங்க் சிகரம் என்பது எந்த மலைத்தொடரின் மிகவுயர்ந்த சிகரமாகும்?



அ) இமயமலை

ஆ) ஆல்ப்ஸ் ☑

இ) ஆண்டிஸ்

ஈ) எவரெஸ்ட் மலை சிகரம்

✓ பிளாங்க் சிகரமானது ஆல்ப்ஸ் மற்றும் மேற்கு ஐரோப்பாவின் மிக உயரமான சிகரமாகும். பிளாங்க் சிகரம், கடந்த இருபது ஆண்டுகளில் 2 மீ அளவுக்கு குறைந்துள்ளது. அண்மையில், வல்லுநர்கள் மற்றும் மலை வழிகாட்டிகள் உள்ளிட்ட அளவீட்டாளர்கள் அந்தச் சிகரத்தினை அளந்து அதன் புதிய அளவீடுகளை அறிவித்தனர். இது கடல்மட்டத்திலிருந்து 4,807.81 மீ உயரத்தில் உள்ளது. 2007'இல், அதிகபட்சமாக 4,810.9 மீட்டராக இதன் உயரம் இருந்தது.

---

9. சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) செப்டம்பர்.30 ☑

ஆ) அக்டோபர்.1

இ) அக்டோபர்.2

ஈ) அக்டோபர்.3



✓ ஆண்டுதோறும் செப்டம்பர்.30 அன்று சர்வதேச மொழிபெயர்ப்பு நாள் கொண்டாடப்படுகிறது. மொழிபெயர்ப்பாளர்களின் தந்தையாகக் கருதப்படும் பைபிள் மொழிபெயர்ப்பாளர் புனித ஜெரோம் நினைவாக இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது. கடந்த 2017'இல் ஐநா பொதுச்சபையால் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாடுகளை இணைப்ப –திலும் அமைதியை மேம்படுத்துவதிலும் மொழி வல்லுநர்கள் வகிக்கும் பங்கை அங்கீகரிப்பதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

---

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற டேவிட் ஜூலியஸ் மற்றும் ஆர்டெம் படபூட்டியன் ஆகியோர் வென்ற பரிசு / பதக்கம் எது?

அ) மேன்புக்கர் பரிசு

ஆ) ஆபெல் பரிசு

இ) நோபல் பரிசு ☑

ஈ) பீல்ட்ஸ் பதக்கம்



✓ 2021 உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசு, டேவிட் ஜூலியஸ் மற்றும் ஆர்டெம் படபூட்டியன் ஆகியோருக்கு கூட்டாக அறிவி –க்கப்பட்டுள்ளது. வெப்பநிலை மற்றும் தொடுதலுக்கான ஏற்பிகளைக் கண்டுபிடித்ததற்காக அவர்கள் இந்த விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள –னர். இது உயிர்வாழ்வதற்குத் தேவையான வெப்பம், குளிர் மற்றும் தொடுதலை உணரும் திறனை அளிக்கிறது.

✓ டேவிட் ஜூலியசு, சான்பிரான்சிசுகோவின் கலிபோர்னியா பல்கலையில் மருத்துவப்பள்ளியில் பேராசிரியராக உள்ளார். ஆர்டெம் படபூட்டியன், ஹோவர்ட் ஹியூஸ் மருத்துவ நிறுவனத்தில் நரம்பியல் துறையில் பேராசிரியராக உள்ளார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. புவிசார் குறியீடு பெற்ற – திருப்புவனம் பட்டுக்கு சிறப்பு அஞ்சல் உறை வெளியீடு:

புவிசார் குறியீடு பெற்ற திருப்புவனம் பட்டுக்கு சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம் திருப்புவனம் பட்டுச்சேலைக்கு கடந்த 2019'இல் புவிசார் குறியீடு கிடைத்தது. இதன் தொடர்ச்சியாக, 75ஆவது ஆண்டு சுதந்திர நாள் விழா கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, புவிசார் குறியீடு பெற்ற பொருட்களுக்கு சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டு வருகிறது.

அதன்படி, புவிசார் குறியீடு பெற்ற திருப்புவனம் பட்டுக்கு ₹25'க்கான சிறப்பு அஞ்சல் உறை வெளியிடப்பட்டது.

---

1. சமீபத்தில் குரோஷியாவுடன் இந்தியா எந்த துறையில் ஒப்பந்தம் செய்து கொண்டது?



அ) இந்திய பாரம்பரிய மருத்துவம் ☑

ஆ) விளையாட்டு

இ) டிஜிட்டல் கல்வி

ஈ) பாதுகாப்பு

✓ இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஆராய்ச்சி & மேம்பாட்டுக்காக மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம், குரோஷியா அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம் (AIIA) இந்திய சார்பாக கையெழுத்திட்டது. குரோஷியா தனது சுற்றுலாத் தொகுப்புகளுடன் இந்திய ஆயுர்வேதம் & யோகாவையும் சேர்க்க முன்வந்துள்ளது.

---

2. இந்தியா உட்பட 136 நாடுகளின் குழு, பெரு நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச உலகளாவிய வரி விகிதத்தை எத்தனை சதவீதத்தில் நிர்ணயித்துள்ளது?



அ) 5%

ஆ) 10%

இ) 15% ☑

ஈ) 20%

✓ இந்தியா உட்பட 136 நாடுகளின் குழுமம், பெரிய நிறுவனங்களுக்கு குறைந்தபட்ச உலகளாவிய வரியை 15% ஆக நிர்ணயித்துள்ளது.

✓ இந்த நாடுகள் முதலீட்டை ஈர்ப்பதற்காக குறைந்தபட்ச வரி விகிதத்தை நிர்ணயக்கிறது. மேலும், பன்னாட்டு நிறுவனங்களுக்கு குறைந்த அளவில் நாடுகள் வரி விதிப்பதை இது தடுக்கிறது. அமெரிக்கா உட்பட பல நாடுகளால், இந்த நடவடிக்கை ஒரு சமநிலை நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது. மேலும் இந்த விகிதம், பல நாடுகளில் கார்ப்பரேட் வரி விகிதத்தைவிட 23.5% குறைவாக உள்ளது.

---

3. துருக்கிய கிராண்ட் பிரிக்ஸ்-2021'ஐ வென்ற பந்தய ஓட்டுநர் யார்?



அ) லூயிஸ் ஹாமில்டன்

ஆ) வால்டேரி போட்டாஸ் ☑

இ) மேக்ஸ் வெர்ஸ்டாபென்

ஈ) செர்ஜியோ பெரஸ்

✓ பின்னிஷ் பந்தய ஓட்டுநர் வால்டேரி பொட்டாஸ் துருக்கிய கிராண்ட் பிரிக்ஸ்-2021'இல் வெற்றிபெற்றார். மற்றொரு பந்தய ஓட்டுநர் மேக்ஸ் வெர்ஸ்டாபென் இரண்டாமிடத்திலும், செர்ஜியோ பெரெஸ் மூன்றாவது இடத்திலும் இருந்தார். முன்னணி ஓட்டுனர் லூயிஸ் ஹாமில்டன் 5ஆம் இடத்தில் பந்தயத்தை நிறைவுசெய்தார், சார்லஸ் லெக்லெர்க் நான்காம் இடத்தைப் பிடித்தார். 32 வயதான ஓட்டுநர் பொட்டாஸ் 2017 முதல் 2021 வரை பத்து பந்தயங்களில் வெற்றி பெற்றுள்ளார்.

---

4. டெலிமேடிக்ஸ் மேம்பாட்டு மையத்தின் (C-DOT) தலைமையகம் எங்குள்ளது?

அ) நியூயார்க்

ஆ) புது தில்லி ☑

இ) கொழும்பு

ஈ) ரோம்

✓ டெலிமேடிக்ஸ் மேம்பாட்டு மையமென்பது இந்திய அரசுக்கு சொந்தமான தொலைத்தொடர்பு தொழில்நுட்ப மேம்பாட்டு மையமாகும். இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. 5G மற்றும் பிற எதிர்கால தொழில்நுட்பங்களைவிட 50 மடங்கு வேகமானதாகக் கூறப்படும் 6G தொழில்நுட்பங்களில் பணியாற்ற C-DOT கேட்கப்பட்டுள்ளது. யூனியன் டெலிகாம் செயலாளர் சமீபத்தில் C-DOT'இன் குவாண்டம் தொடர்பு ஆய்வகத்தைத் திறந்து வைத்து, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குவாண்டம் கீ டிஸ்ட்ரிபியூஷன் (QKD) தீர்வைத் தொடங்கினார்.

---

5. ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு-2021'இல் இந்தியாவின் நிலை என்ன?



அ) 90 ☑

ஆ) 82

இ) 70

ஈ) 65

✓ உலகின் மிகவும் பயணத்திற்கு ஏற்ற கடவுச்சீட்டுகளை பட்டியலிடும் ஹென்லி கடவுச்சீட்டு குறியீட்டில், இந்தியாவின் தரவரிசை கடந்த ஆண்டிலிருந்து 6 இடங்கள் சறுக்கி 90ஆவது இடத்தில் உள்ளது.

✓ ஒரு நாட்டின் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள் எத்தனை வெளிநாடுக-ளுக்கு விசா இல்லாமல் செல்லமுடியும் என்பதை கணக்கிட்டு அதன் அடிப்படையில் இப்பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு வான் போக்குவரத்து சங்கம் வழங்கிய தரவுகளின் பகுப்பாய்வினடிப்படையில் இந்தத் தரவரிசை அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குறியீட்டில் ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளன. தென்கொரியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்தைப் பகிர்ந்துள்ளன.

---

6. 2021 – பன்னாட்டு முதியோர் நாளின் கருப்பொருள் என்ன?



அ) Digital Equity for All Ages ☑

ஆ) Respect and Love for Elders

இ) Empathy and Equity

ஈ) Fair Treatment to all Elders

✓ 'பன்னாட்டு முதியோர் நாளானது' ஒவ்வோர் ஆண்டும் அக்.1 அன்று கொண்டாடப்படுகிறது. முதியோருக்கான நலவாழ்வு வசதிகள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதே இந்த நாளின் நோக்கமாகும். 1990 டிச.14 அன்று, ஐநா பொதுச்சபை அக்டோபர்.1'ஐ சர்வதேச முதியோர் நாளாக அறிவித்தது. "Digital Equity for All Ages" என்பது நடப்பு 2021ஆம் ஆண்டில் வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

7. எந்த மாநிலத்தின் மாநில தேர்தல் ஆணையம், இந்தியாவின் முதல், "திறன்பேசிமூலமாக வாக்களித்தல்" முறையை சோதனை செய்யவுள்ளது?



அ) ஆந்திர பிரதேசம்

ஆ) தெலுங்கானா ☑

இ) கர்நாடகா

ஈ) கேரளா

✓ தெலுங்கானா மாநில தேர்தல் ஆணையமானது திறன்பேசிகளைப் பயன்படுத்தி சோதனை வாக்கெடுப்பை நடத்தவுள்ளது. இதற்கு மாநில அரசிடம் அனுமதி கிடைத்துள்ளது. 2021 அக்டோபர்.20 அன்று கம்மம் மாவட்டத்தில் இந்தச் சோதனை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இது திறன்பேசிகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் நாட்டின் முதல் மின்னணு வாக்குப்பதிவு ஆகும்.

---

8. மலபார் பயிற்சியுடன் தொடர்புடைய இந்திய ஆயுதப்படை எது?



அ) இந்திய இராணுவம்

ஆ) இந்திய கடற்படை ☑

இ) இந்திய கடலோர காவல்படை

ஈ) தேசிய பாதுகாப்புப் படை

✓ மலபார் பயிற்சி என்பது இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவின் கடற்படைகளின் ஒரு கடல்சார் பயிற்சியாகும். மலபார் பயிற்சியின் இரண்டாம் கட்டம், 2021 அக்டோபர் 12-15 வரை வங்காள விரிகுடாவில் நடத்தப்பட்டது. INS ரான்விஜய், INS சாத்புரா, P8I கடல் ரோந்து வானூர்தி மற்றும் நீர்மூழ்கிக்கப்பல் ஆகியவை இப்பயிற்சியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தின.

---

9. சமீப செய்திகளில் இடம்பெற்ற சுனில் சேத்ரியுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) மட்டைப்பந்து

ஆ) கால்பந்து ☑

இ) கைப்பந்து

ஈ) கபடி



✓ இந்திய கால்பந்து வீரரும் இந்திய தேசிய கால்பந்து அணியின் அணித் தலைவருமான சுனில் சேத்ரி அண்மையில் தனது 77ஆவது சர்வதேச கோலை நேபாளத்திற்கு எதிரான ஆட்டத்தில் SAFF சாம்பியன்ஷிப்பில் அடித்தார். இதன்மூலம் அவர், முன்னாள் பிரேசிலிய கால்பந்து வீரரான பீலேவின் கோலை சமன்செய்துள்ளார். இந்தியாவுக்கான அவரது 123 ஆவது போட்டியில், அவர் இந்தச் சாதனையை படைத்துள்ளார்.

---

10. பிரதமர் கதிசக்தி திட்டத்திற்கான உத்தேச நிதி செலவு என்ன?

அ) ₹100 கோடி

ஆ) ₹1 இலட்சம் கோடி

இ) ₹10 இலட்சம் கோடி

ஈ) ₹100 இலட்சம் கோடி ☑



✓ 75ஆம் சுதந்திரநாள் உரையில், பிரதமர், உட்கட்டமைப்பு மேம்பாட்டை இலக்காகக்கொண்டு மொத்தமாக ₹100 இலட்சம் கோடி நிதி செலவில் 'PM கதிசக்தி மாஸ்டர் திட்டத்தை' அறிவித்தார். இத்திட்டம் 1000'க்கும் மேற்பட்ட தொழிற்துறை குழுமங்களுக்கு மாதிரி இணைப்பை வழங்க முன்மொழியப்பட்டது. மேலும் தற்போதுள்ள பாரத்மாலா, சாகர்மாலா, உடான்போன்ற திட்டங்களின்கீழ் திட்டங்களை உள்ளடக்கியது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1.பொன்னேரி, திருநின்றவூர் உட்பட 19 பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரமுயர்த்தி அரசாணை

தமிழகத்தில் 19 பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழக அரசு வெளியிட்ட அரசாணை: தமிழ்நாடு சட்டப்பேரவையில் 2021-22ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை மானியக்கோரிக்கையின் போது, 2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நகர்ப்புற மக்கள் தொகை 48.45% ஆகும். 2021ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புற மக்கள்தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது.

தற்போது நகர்ப்புற உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் நகர்ப்புறத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புறமாக மாறி வருகின்ற இந்த பகுதிகளிலும் இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கத்தில் உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகின்றன. அதன்படி, நாகர்கோவில் மாநகராட்சிக்கு அருகாமையில் அமைந்துள்ள தெங்கம்புதூர் பேரூராட்சி, ஆளூர் பேரூராட்சி, புத்தேரி ஊராட்சி, திருப்பதி சாரம் ஊராட்சி, பீமநகரி ஊராட்சி, தேரேகால் புதூர் ஊராட்சி, மேல சங்கரன்குழி ஊராட்சி, கணியாகுளம் ஊராட்சி ஆகியவை முழுமையாகவும், தர்மபுரம் ஊராட்சி, ராஜக்கமங்கலம் ஊராட்சி ஆகியவை பகுதியாகவும் இணைப்படுகிறது.

இதேபோல், திருவள்ளூர் மாவட்டம் – பொன்னேரி, திருநின்றவூர், கடலூர் மாவட்டம்– திட்டக்குடி, வடலூர், தஞ்சாவூர் மாவட்டம்– அதிராம்பட்டினம், தூத்துக்குடி மாவட்டம்– திருச்செந்தூர், கோவை மாவட்டம்– கருமத்தம்பட்டி, காரமடை, கூடலூர், மதுக்கரை, கரூர் மாவட்டம்– பள்ளப்பட்டி, திருப்பூர் மாவட்டம்– திருமுருகன்பூண்டி ஆகிய 12 பேரூராட்சிகள் நகராட்சிகளாக அமைத்துருவாக்கப்படும். சிவகங்கை மாவட்டம்– மானாமதுரை, திருச்சி மாவட்டம்– முசிறி, இலால்குடி, சேலம் மாவட்டம்– தாரமங்கலம், இடங்கணசாலை ஆகிய 5 பேரூராட்சிகள் நகராட்சிகளாக அமைத்துருவாக்கப்படும். மேலும், கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோடு, கரூர் மாவட்டம் புகளூர் ஆகிய 2 பேரூராட்சிகள் நகராட்சிகளாக அமைத்துருவாக்கப்படும். கும்பகோணம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு கும்பகோணம் நகராட்சிக்கு அருகாமையில் அமைந்துள்ள தராசுராம் முதல்நிலை பேரூராட்சியை கும்பகோணம் நகராட்சியுடன் இணைக்கப்படலாம் என உத்தேச முடிவு மேற்கொண்டு ஆணையிடுகிறது. இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

---

2. தேசிய புட்சால் போட்டியில் – தமிழக அணிக்கு சாம்பியன் பட்டம்:

15 வயதுக்கு உட்பட்டோருக்கான தேசிய புட்சால் சாம்பியன்ஷிப் போட்டி தருமபுரியில் சமீபத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற தமிழக அணி, லீக் சுற்றில் மும்பை, ஆந்திரா, புதுச்சேரி, கேரளா, புனேஆகிய அணிகளை தோற்கடித்து அரை இறுதிக்கு தகுதி பெற்றது.

அரை இறுதியில் தமிழக அணி, கர்நாடகாவை 3–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. தொடர்ந்துஇறுதிப் போட்டியில் மகாராஷ்டிராவை 2–1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து தமிழக அணி சாம்பியன்ஷிப் பட்டம் வென்றது. தமிழக அணியின் கோல் கீப்பர்ராகுல் கண்ணன் தொடரின் சிறந்தகோல் கீப்பராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்துடன் தமிழக அணியைச் சேர்ந்த 5 வீரர்கள், இந்திய புட்சால் அணிக்காக தேர்ந்தெடுக் –கப்பட்டுள்ளனர். இந்த அணி அடுத்த மாதம் பராகுவேயில் நடைபெற உள்ள 15 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கோப்பையில் கலந்து கொண்டு விளையாடுகிறது.

---

3. செல்வ வள மேலாண் திட்ட சேவை: இந்தியன் வங்கி அறிமுகம்

இந்தியன் வங்கி, தனது வாடிக்கையாளர்களுக்கு புதிதாக மின்னணு செல்வவள மேலாண்மை திட்டங்கள் வழங்கும் சேவையை அறிமுகப்படுத்தி உள்ளது. இதற்காக, பிஸ்டம் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில், இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் முன்னிலையில், இந்தியன் வங்கியின் பொதுமோளர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஏற்கனவே உள்ள மியூச்சுவல் ஃபண்ட் முதலீடு மற்றும் இ–என்பிஎஸ் மட்டுமின்றி புதியமின்னணு திட்டங்களான மியூச்சுவல் ஃபண்ட் அறிவுரை திட்டம், மின்னணு தங்கம், மின்னணு வரித்தாக்கல் சேவைகளும் வழங்கப்படும்.

---

4. நீதிமன்றங்களில் இனி பச்சை நிற லீகல் சைஸ் பேப்பருக்கு வேலையில்லை; வெள்ளை நிற ஏ4 பேப்பரில் மனுக்களை தாக்கல் செய்தால் போதும்: உயர் நீதிமன்ற பதிவுத் துறை உத்தரவு

நீதிமன்றங்களில் இனி மனுக்களை தாக்கல் செய்ய பச்சை நிற லீகல் சைஸ் பேப்பரை தேடி அலைய வேண்டியதில்லை. வெள்ளை நிறஏ4 பேப்பரில் மனுக்களை தாக்கல்செய்தால் போதும் என உயர் நீதிமன்ற பதிவுத் துறை உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றம், உயர் நீதிமன்ற மதுரை கிளை உள்ளிட்ட தமிழகம், புதுச்சேரியில் உள்ள அனைத்து கீழமை நீதிமன்றங்களிலும் பிரமாண பத்திரங்கள், பிராதுகள், ஆவணங்கள், உத்தரவுநகல்கள், வக்காலத்து நாமா மற்றும் பதில் மனுக்களை தாக்கல் செய்ய 100 ஜிஎஸ்எம் தரம் கொண்ட பச்சை நிற ஃபுல்–ஸ்கேப் லீகல் சைஸ் பேப்பர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது.

பொதுவாக நீதிபதிகள் படிப்பதற்காக தாக்கல் செய்யப்படும் பிரமாணப் பத்திரங்கள், மனுக்கள்மற்றும் ஆவணங்கள் அனைத்தும்பச்சை நிற லீகல் சைஸ் பேப்பர்களிலும், பிரதிவாதிகளுக்கான மனுக்கள் வெள்ளை நிற பேப்பர்களிலும் தாக்கல் செய்யப்படுவது வழக்கம். தற்போது இந்த நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதன்படி உரிமையியல் நடைமுறை சட்டம் – 1908, பிரிவு 122–ன்கீழ் உரிமையியல் விதிகளுக்கான தொழில் நெறி பயிற்சி மற்றும் சுற்றறிக்கைக்கான உத்தரவுகள் – விதி 6–ல் சில திருத்தங்களை தமிழக அரசின் அனுமதியுடன் சென்னை உயர் நீதிமன்றம் கொண்டுவந்துள்ளது. இந்த திருத்தங்கள் குறித்த அறிவிப்பாணை தமிழக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி உயர் நீதிமன்ற தலைமை பதிவாளர் பி தனபால் அனைத்து நீதிமன்றங்களுக்கும் பிறப்பித்த உத்தரவில், 'நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் அனைத்து பிராதுகள், எழுத்துப்பூர்வமான வாதங்கள், மனுக்கள், பிரமாணப் பத்திரங்கள், மேல்முறையீட்டு மனுக்கள் இனி 75 ஜிஎஸ்எம் கொண்ட வெள்ளை நிற ஏ4 பேப்பரில் தாக்கல் செய்தால் போதும். முன்பக்கம் மற்றும் பின்புற பக்கங்களில் மனுக்களை தாக்கல் செய்யும்போது அதற்கான பக்கங்களை நம்பர்களில் குறிப்பிட வேண்டும். மேல்முறையீட்டு மற்றும் அசல் வழக்குகளுக்கான ஆவணங்களை தாக்கல் செய்யும்போது ஏ4 சைஸ் பேப்பரில் மேல்புறம் மற்றும்

அடிப்பக்கத்தில் இருந்து 2.5 செமீ அளவுக்கும், இடது புறத்தில் 3 செமீ அளவுக்கும், வலது புறத்தில் 2.5 செமீ அளவுக்கும் மார்ஜின் விட வேண்டும்' என்று அறிவுறுத்தியுள்ளார்.

---

5. 22 நாட்கள் தேடுதல் வேட்டைக்குப் பின்னர் – மயங்கிய நிலையில் பிடிபட்டது 'டி23' புலி: மயக்க ஊசிசெலுத்தி வனத்துறையினர் பிடித்தனர்

நீலகிரி மாவட்டத்தில் 4 பேரை கொன்ற ஆட்கொல்லி புலியை 22 நாட்கள் தேடுதல் வேட்டைக்குப் பின்னர் நேற்று மயக்க ஊசி செலுத்தி வனத்துறையினர் உயிருடன் பிடித்தனர்.

நீலகிரி மாவட்டம் மசின குடியின்கவுரி, தேவன் எஸ்டேட் பகுதியில் குஞ்சு கிருஷ்ணன், சந்திரன், சிங்காரா வனப்பகுதியில் பசுவன் ஆகியோர் டி.23 என வனத்துறையினரால் அழைக்கப்படும் புலியால்அடித்துக் கொல்லப்பட்டனர். இதைஅடுத்து, புலியை சுட்டுக் கொல்ல வேண்டும் என்று பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். புலியை மயக்க ஊசி செலுத்தி பிடிக்க வனத்துறையினர் திட்டமிட்டனர்.

22 நாட்களாக புலியை பிடிக்க வனத்துறையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் இரவு புலியைப் பார்த்த வனத்துறையினர், புலிக்கு இரு முறை மயக்க ஊசி செலுத்தினர். ஆனால், புலி அடர்ந்த புதருக்குள் பதுங்கி தப்பியது. இந்நிலையில், நேற்று மதியம் மாயார் வனத்தில் கூற்றுப்பாறை பகுதியில் நடமாடிய புலியை வனத்துறையினர் மயக்க ஊசி செலுத்தி உயிருடன் பிடித்தனர்.

---

6. பாகிஸ்தான், வங்கதேசத்தைவிட மோசம்: உலக பட்டினிக் குறியீட்டில் இந்தியா 101 இடத்துக்குச் சரிந்தது

2021ஆம் ஆண்டுக்கான உலக பட்டினிக் குறியீட்டில் 116 நாடுகளில் இந்தியா 101ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. அண்டை நாடுகளான பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம் ஆகியவற்றைவிட இந்தியாவில் பட்டினியால் வாடுவார் அதிகரித்துள்ளனர். கடந்த 2020ஆம் ஆண்டு 107 நாடுகளுக்கான பட்டியலில், 94ஆவது இடத்தில் இருந்த இந்தியா, 116 நாடுகளுக்கான பட்டியலில் 2021ஆம் ஆண்டில் 101ஆவது இடத்துக்கு பின்தங்கியுள்ளது.

ஊட்டச்சத்து குறைபாடு, 5வயதுக்கு கீழ் உள்ள குழந்தைகள் சத்துணவு குறைபாட்டால் தங்கள் உயர்த்துக்கு ஏற்ற எடை இல்லாமல் இருத்தல், வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமல் இருத்தல், 5வயதுக்கு உட்பட்ட குழந்தை உயிரிழப்புகள் ஆகிய காரணிகளை அடிப்படையாக வைத்து உலக பட்டினி குறியீடு கணக்கிடப்படுகிறது.

உலகளவில் பட்டினிச் சாவு, சரிவிகித சத்துணவு மக்களுக்குக் கிடைப்பது ஆகியவற்றைக் கண்டறிந்து அறிக்ைக வெளியிடப்பட்டுள்ளது. ஐயர்லாந்தைச் சேர்ந்த கன்சர்ன் வேர்ல்ட்வைட் அமைப்பு மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த வெல்ட் ஹங்கர் ஹில்ப் ஆகிய அமைப்பும் சேர்ந்து தயாரித்த அறிக்கையில், இந்தியாவில் பட்டினியின் அளவு அபாயக்கட்டத்தில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அதேசமயம், சீனா, பிரேசில், குவைத் உள்ளிட்ட 18 நாடுகளில் பட்டினிக் குறியீடு என்பது 5-க்கும் குறைவாகவே இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது கடந்த 1998-2002ம் ஆண்டு இந்தியாவில் 5 வயதுக்குள் இருக்கும் குழந்தைகள் சத்துணவு குறைபாட்டால் தங்கள் உயரத்துக்கு ஏற்ற எடை இல்லாமல் இருத்தல் சதவீதம் 17.1 ஆக இருந்த நிலையில் 2016 முதல் 2020ம் ஆண்டில் இது 17.3 ஆகஅதிகரித்துள்ளது.

கரோனா வைரஸ் பரவலால் இந்தியாவில் உள்ள மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும், இந்தியாவில் உள்ள குழந்தைகள் சத்துணவுக் குறைபாடு பிரச்சினைகளால் மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ளனர். குழந்தைகளுக்கு சத்துணவு, சரிவிகித உணவு வழங்குவதிலும், உலக பட்டினிக் குறியீட்டிலும் இந்தியாவின் அண்டை நாடுகளான நேபாளம் 76வது இடம், வங்கதேசம் (76), மியான்மர் (71), பாகிஸ்தான் (92) ஆகிய இடங்களில் உள்ளனர்.

இருப்பினும் இந்தியாவைவிட முன்னேறியிருந்தாலும், சத்துணவு, சரிவிகித உணவுகளை வழங்குவதில் இன்னும் முன்னேற்றம் தேவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், இந்தியாவில் 5 வயதுக்குள் இருக்கும் குழந்தைகள் உயிரிழப்பு பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது. ஆனால், சத்துணவு, சரிவிகித உணவு உணவு கிடைப்பதில்தான் இன்னும் சிக்கல் நீடிக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டினிக்கு எதிராக உலக நாடுகள் போராடும் பாதையில் 47 நாடுகள் 2030ம் ஆண்டுக்குள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய முடியாது. குறைந்த அளவு பட்டினிக் குறியீட்டை எட்டமுடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான உணவுப் பாதுகாப்பு பல்வேறு முனைகளில் இருந்து தாக்குதலுக்கு ஆளாகிறது. உள்நாட்டுக் குழப்பம், பிரச்சினைகள், பருவநிலை மாறுபாடு, பொருளாதார, சுகாதார சிக்கல்கள், கரோனா வைரஸ் போன்றவற்றால் பட்டினிக் குறியீட்டின் அளவை அதிகரிக்கிறது. அதுமட்டுமல்லாமல் நாடுகளுக்கு இடையே வளர்ச்சியில் வேறுபாடு, உள்நாட்டில் பிராந்தியங்களில் சமநிலையின்மை, மாவட்டங்கள், சமூகங்களிடையே சமத்துவமின்மை போன்றவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் பட்டினிக் குறியீடு அதிகரித்துள்ளது.

இந்தியாவை விட மோசமாக 15 நாடுகள் உள்ளன. பப்புவா நியூ கினியா (102), ஆப்கானிஸ்தான் (103), நைஜிரியா (103) காங்கோ (105), மொசாம்பிக் (106), சியா லியோன் (106), தைமூர் லெஸ்டி (108), ஹெய்தி (109), லைபீரியா (110), மடகாஸ்கர் (111), காங்கோ ஜனநாயகக் குடியரசு (112), சாட் (113), மத்திய ஆப்ரிக்க குடியரசு (114), ஏமன் (115), சோமாலியா (116) நாடுகள் உள்ளன.

---

7. ஐ.நா. மனித உரிமை கவுன்சிலுக்கு இந்தியா மீண்டும் தேர்வு

ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் 2022-24ஆம் ஆண்டுகளுக்கான உறுப்பினர் பதவிக்கு இந்தியா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 3 ஆண்டுகள் பதவிக் காலம் கொண்ட ஐ.நா. மனித உரிமை கவுன்சில் உறுப்பினர் பொறுப்புக்கான தேர்வு 76ஆவது ஐ.நா. பொது சபைக் கூட்டத்தில் நடைபெற்றது.

2022-2024ஆம் ஆண்டு வரை நீடிக்கவிருக்கும் அந்தப் பொறுப்புக்கு 18 புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், பெருவாரியான வாக்குகள் பெற்று இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது. 193 உறுப்பினர்களைக்கொண்ட ஐ.நா. பொது சபையில், இந்தியாவுக்கு ஆதரவாக 184 வாக்குகள் பதிவாகின.

---

8. அண்ணா மேலாண்மை நிலையம் இனி நிர்வாகப் பணியாளர் கல்லூரி என அழைக்கப்படும்

அண்ணா மேலாண்மை நிலையம், இனி அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி என்ற பெயரில் அழைக்கப்படும் என தலைமைச் செயலாளர் வெ இறையன்பு அறிவித்துள்ளார். தலைமைச் செயலாளரும், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் இயக்குநருமான வெ இறையன்பு, வெளியிட்ட அறிவிப்பு:

அண்ணா மேலாண்மை நிலையத்தில் இளநிலை உதவியாளர்கள் முதல் இந்திய ஆட்சிப் பணியாளர்கள் வரை அனைவருக்குமான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அவ்வப்போது துறை அலுவலர்களுக்கு அலுவலக நடைமுறை, தகவல் பெறும் உரிமைச் சட்டம், ஒழுங்கு நடவடிக்கை விதிகள், மன அழுத்த மேலாண்மை, குழு மேலாண்மை, ஓய்வுக்கு முந்தைய ஆலோசனை, நேர மேலாண்மை, பேரிடர் மேலாண்மை, தலைமைப்பண்புகள் போன்ற பல தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஆதிதிராவிட மாணவர் விடுதியின் காப்பாளர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் அலுவலக நடைமுறைகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அரசுத் துறைகள் நீதிமன்ற வழக்குகளை உரிய முறையில் அணுகுவதற்கு வழக்குகள் மேலாண்மை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

பெயர் மாற்றம்: இந்த நிறுவனம் இதுவரை, 'அண்ணா மேலாண்மை நிலையம்' என்றே அழைக்கப்பட்டு வந்தது. 'மேலாண்மை நிலையம்' என்று அழைக்கப்படுவதால், இந்த நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து தெளிவின்மை ஏற்பட்டது. நிர்வாகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிறுவனம்தான் என்பதைக் கருத்தில் கொண்டு இதன் பெயர், 'அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி' என்று அழைக்கப்படும். இதற்கான அரசு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தனது அறிவிப்பில் தலைமைச் செயலாளர் வெ இறையன்பு தெரிவித்துள்ளார்.

---

9. 2021 அக்.16 – உலக உணவு நாள்

கருப்பொருள்: Safe Food Now for a Healthy Tomorrow

---

10. இந்தியா-ரஷியா இடையே எஃகு, நிலக்கரித் துறை ஒப்பந்தம்

இந்தியா-ரஷியா இடையே எஃகு தயாரிப்பு, நிலக்கரி துறையில் முக்கிய ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

ரஷிய எரிசக்தி வார நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இரு நாள் பயணமாக மத்திய எஃகு துறை அமைச்சர் ராம் சந்திர பிரசாத் சிங் மாஸ்கோ சென்றுள்ளார். அங்கு அந்நாட்டு எரிசக்தி துறை அமைச்சர் நிகோலாய் சுல்கிநோவை அவர் சந்தித்து பேசினார்.

அப்போது எஃகு தயாரிப்பில் பயன்படுத்தப்படும் கோகிங் நிலக்கரி, அதன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் ஒத்துழைப்பு தொடர்பாக முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்மூலம் கூட்டு திட்டங்கள், எஃகு தயாரிப்பு நிலக்கரியில் வர்த்தக செயல்பாடுகள், இந்தியாவிற்கு நல்ல தரமான கோகிங் நிலக்கரியை நீண்டகாலத்திற்கு விநியோகம் செய்வது, கோகிங் நிலக்கரியின் சேமிப்பு வசதிகள், போக்குவரத்து தளவாட மேம்பாடு, நிலக்கரி உற்பத்தி மேலாண்மையில் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளுதல், சுரங்க தொழில்நுட்பங்கள் & பயிற்சிகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்த வகை செய்யப்பட்டு உள்ளது.

---

11. கும்பகோணம் மாநகராட்சியாகிறது: தமிழகத்தில் புதிதாக 19 நகராட்சிகள் உதயம்

தமிழகத்தில் புதிதாக 19 நகராட்சிகளை உருவாக்குவதற்கான உத்தரவுகளை நகராட்சி நிர்வாகத்துறை வெளியிட்டது. இந்த உத்தரவுகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா பிறப்பித்தார். கும்பகோணம் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படுகிறது. தமிழகத்தில் தற்போது 15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகள் என மொத்தம் 664 நகர்ப்புற உள்ளாட்சிகள் உள்ளன.

மக்கள் தொகையின் அளவு, பரப்பளவு ஆகியவற்றுக்கு ஏற்ப பேரூராட்சிகள் நகராட்சியாகவும், நகராட்சிகள் மாநகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தாத காரணத்தால், தனி அலுவலர்களின்மூலமாக தீர்மானங்கள் பெறப்பட்டு அரசுக்கு வரப்பெறப்படுகின்றன.

அந்த வகையில் தமிழகத்தில் ஒரு சில பேரூராட்சிகளை ஒன்றிணைத்தும், சில பேரூராட்சிகள் முழுமையாக நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அதன் விவரம்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல்லங்கோடு மற்றும் ஏழுதேசம் ஆகிய இரண்டு பேரூராட்சிகள் இணைக்கப்பட்டு கொல்லங்கோடு நகராட்சியாக தரமுயர்த்தப்படுகிறது. இதேபோன்று, கரூர் மாவட்டத்தில் புஞ்சை புகளூர் மற்றும் தமிழ்நாடு காகித ஆலை புகளூர் ஆகிய பேரூராட்சிகள் இணைக்கப்பட்டு புகளூர் நகராட்சியாக தரம் உயர்த்தப்ப–டுகிறது. இதேபோன்று, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, திருச்சி மாவட்டம் முசிறி, லால்குடி, சேலம் மாவட்டம் தாரமங்கலம், இடங்கணசாலை, திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர், பொன்னேரி, கடலூர் மாவட்டம் திட்டக்குடி, வடலூர், தஞ்சாவூர் மாவட்டம் அதிராம்பட்டி–னம், தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர், கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி, காரமடை, கூடலூர், மதுக்கரை, கரூர் மாவட்டம் பள்ளப் பட்டி, திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டி ஆகிய பேரூராட்சிகள் நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படுகின்றன.

தேர்தல் எப்போது? உத்தேச நகராட்சிகளின் வார்டு எல்லைகளை வரையறை செய்த பிறகு சம்பந்தப்பட்ட நகராட்சிகளுக்கு அடுத்த சாதாரண தேர்தல் நடத்தப்படும்.

கும்பகோணம் மாநகராட்சி: தமிழகத்தின் 16ஆவது மாநகராட்சியாக கும்பகோணம் நகராட்சி, தரமுயர்த்தப்படுகிறது. கும்பகோணம் நகராட்சி மற்றும் தாராசுரம் பேரூராட்சிப் பகுதிகளை உள்ளடக்கிய உத்தேச கும்பகோணம் மாநகராட்சிக்கான வார்டுகள் வரையறை செய்யப்பட்டு, அடுத்த சாதாரணத் தேர்தல் நடத்தப்படும். இதன் அடிப்படையில் கும்பகோணம் மாநகராட்சி அமைத்து உருவாக்கப்படும்.

நாகர்கோவில் மாநகராட்சி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த மாநகராட்சிப் பகுதியுடன் கன்னியாகுமரி மாவட்டத்தின் தெங்கம்புதூர், ஆளூர் பேரூராட்சிகள் முழுமையாக இணைக்கப்படுகின்றன என்று தனது உத்தரவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா தெரிவித்துள்ளார்.

எண்ணிக்கை எவ்வளவு: அரசின் உத்தரவு காரணமாக, தமிழகத்தில் நகராட்சிகளின் எண்ணிக்கை 139 ஆக அதிகரிக்கும். மாநகராட்சிகளின் எண்ணிக்கை 15–லிருந்து 16ஆக உயரும்.

புதிய நகராட்சிகள் விவரம்:

1. கொல்லங்கோடு, 2. புகளூர், 3. மானாமதுரை, 4. முசிறி, 5. லால்குடி, 6. தாரமங்கலம், 7. இடங்கணசாலை, 8. திருநின்றவூர், 9. பொன்னேரி, 10. திட்டக்குடி, 11. வடலூர், 12. அதிராம்பட்டினம், 13. திருச்செந்தூர், 14. கருமத்தம்பட்டி, 15. காரமடை, 16. கூடலூர், 17. மதுக்கரை, 18. பள்ளப்பட்டி, 19. திருமுருகன்பூண்டி.

புதிய மாநகராட்சி: கும்பகோணம்.

---

12. சென்னை சாம்பியன்: கொல்கத்தாவை வீழ்த்தியது

ஐபிஎல் போட்டியின் 14ஆவது சீசன் இறுதி ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் 27 ரன்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸை வீழ்த்தி சாம்பியன் ஆனது. சென்னை கோப்பை வெல்வது இது 4ஆவது முறையாகும். இதற்குமுன் 2010, 2011, 2018 ஆகிய ஆண்டுகளில் சென்னை சாம்பியனாகியுள்ளது. கடந்த சீசனில் மிகமோசமான வகையில் தோற்ற நிலையில், அதிலிருந்து மீண்டு தற்போது சாம்பியனாகி சாதித்திருக்கிறது சென்னை.

டூ பிளெஸ்ஸிஸ் ஆட்டநாயகன் ஆனார். இந்த ஆட்டம், டி20 பாரர்மட்டில் கேப்டனாக எம் எஸ் தோனியின் 300ஆவது ஆட்டமாகும். இதன்மூலம் கிரிக்கெட் உலகில் கேப்டனாக 300 டி20 ஆட்டங்களில் களம் கண்ட ஒரே வீரர் என்ற சாதனையை தோனி எட்டியுள்ளார். ஐபிஎல் போட்டியின் 14 சீசன்களில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை 12 சீசன்களில் 214 ஆட்டங்களில் வழி நடத்தியிருக்கிறார் தோனி. அது தவிர ஒரு சீசனில் ரைசிங் புனே சூப்பர் ஜயன்ட்ஸ் அணிக்கு 14 ஆட்டங்களில் தலைமை தாங்கியிருக்கிறார். லீக் போட்டிகள் தவிர்த்து, இந்திய அணியை 72 டி20 ஆட்டங்களில் வழி நடத்தியிருக்கிறார் தோனி. இதில் 6 டி20 உலகக்கோப்பை போட்டிகளும் அடங்கும்.

---

13. நாட்டின் ஏற்றுமதி 23% அதிகரிப்பு: வரலாற்று உச்சத்தில் வர்த்தக பற்றாக்குறை

இந்தியாவின் ஏற்றுமதி கடந்த செப்டம்பர் மாதத்தில் 22.63 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. இந்த நிலையில், நாட்டின் வர்த்தக பற்றாக்குறை இதுவரை இல்லாத வரலாற்று உச்சத்தை பதிவு செய்துள்ளது கவலைக்குரிய அம்சமாக மாறியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறியுள்ளதாவது:

நாட்டின் ஏற்றுமதி நடப்பாண்டு செப்டம்பரில் 22.63 சதவீதம் அதிகரித்து 3,379 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமாரர் ₹2.53 லட்சம் கோடி) வளர்ச்சி கண்டுள்ளது.

வரலாற்று உச்சம்: அதேசமயம், கச்சா எண்ணெய் மற்றும் தங்கம் இறக்குமதி வெகுவாக அதிகரித்ததையடுத்து நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறையானது அந்த மாதத்தில் இதுவரை இல்லாத வரலாற்று உச்சமாக முதன் முறையாக 2,259 கோடி டாலரை (₹1.69 லட்சம் கோடி) எட்டியுள்ளது. இதற்கு முன்பு வர்த்தக பற்றாக்குறையானது 2012 அக்டோபரில் 2,020 கோடி டாலரைத் தொட்டதே அதிகபட்ச அளவாக கருதப்பட்டு வந்தது. செப்டம்பரில் இறக்குமதியானது 5,639 கோடி டாலராக இருந்தது. இது, கடந்தாண்டு இதே மாத இறக்குமதியுடன் ஒப்பிடுகையில் 84.77 சதவீதம் அதிகமாகும்.

தங்கம் இறக்குமதி விறுவிறு: நடப்பாண்டு செப்டம்பரில் தங்கம் இறக்குமதி 511 கோடி டாலராக கணிசமாக அதிகரித்துள்ளது. இதன் இறக்குமதி கடந்தாண்டு செப்டம்பரில் 60.1 கோடி டாலர் அளவுக்கே இருந்தது. 2021 ஏப்ரல் முதல் செப் வரையிலான ஆறு மாத காலத்தில் தங்கத்தின் இறக்குமதி 680 கோடி டாலரிலிருந்து 2,400 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

கச்சா எண்ணெய் இறக்குமதி உயர்வு: இதேபோன்று, கச்சா எண்ணெய் இறக்குமதியும் கடந்த செப்டம்பரில் 1,744 கோடி டாலராக கணிசமாக அதிகரித்துள்ளது. அதேசமயம், 2020 செப்டம்பரில் இதன் இறக்குமதி 583 கோடி டாலராக மட்டுமே காணப்பட்டது. அதன்படி, 2021 ஏப்ரல்–செப் காலகட்டத்தில் நாட்டின் கச்சா எண்ணெய் இறக்குமதியானது 3,201 கோடி டாலரிலிருந்து 7,299 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

நிலக்கரி: அதேபோன்று, நிலக்கரி இறக்குமதியும் கடந்த செப்டம்பரில் 119 கோடி டாலரிலிருந்து 218 கோடி டாலராக அதிகரித்துள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டு காலத்தில் நிலக்கரி இறக்குமதி ஒட்டுமொத்த அளவில் 1,193 கோடி டாலரை எட்டியுள்ளது. இது, 2020–21 ஆம் நிதியாண்டின் இதே காலகட்டத்தில் 670 கோடி டாலராக இருந்தது.

2021 ஏப்ரல்–செப்டம்பரில் இறக்குமதி கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் 3,201 கோடி டாலரிலிருந்து 7,299 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

சாதக வளர்ச்சி: நடப்பாண்டு செப் மாதத்தில், காபி, முந்திரி, பெட்ரோலிய பொருள்கள், கைத்தறி, பொறியியல், ரசாயனம், நூல்/ துணி வகைகள், நவரத்தினங்கள்–ஆபரணங்கள், பிளாஸ்டிக் & கடல் உணவுப் பொருள் துறைகளின் ஏற்றுமதி நேர்மறை வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. 2021 ஏப்ரல்–செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில் நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 19,789 கோடி டாலரைத் தொட்டுள்ளது. இது, முந்தைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியான 12,562 கோடி டாலருடன் ஒப்பிடுகையில் 57.53 சதவீதம் அதிகம் என்பது கவனிக்கத்தக்கது

இறக்குமதி: அதேபோன்று, இதே காலகட்டத்தில் நாட்டின் இறக்குமதியும் 15,194 கோடி டாலரிலிருந்து 81.67 சதவீதம் அதிகரித்து 27,600 கோடி டாலரை எட்டியுள்ளது. ஏற்றுமதியை காட்டிலும் இறக்குமதி அதிகரித்த –தையடுத்து நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்தில் நாட்டின் வர்த்தக பற்றாக்குறை 2,631 கோடி டாலரிலிருந்து 7,813 கோடி டாலராக உயர்ந்துள்ளது என மத்திய அரசு புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

---

14. தெற்காசிய கால்பந்து: 8ஆவது முறையாக இந்தியா சாம்பியன்

5 அணிகள் இடையிலான 13ஆவது தெற்காசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி மாலத்தீவில் நடந்தது. இதில் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி, நேபாளத்தை எதிர்கொண்டது. பந்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதிலும், ஷாட் அடிப்பதிலும் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி 3–0 என்ற கோல்கணக்கில் நேபாளத்தை வீழ்த்தி சாம்பியன் கோப்பை –யை கைப்பற்றியது. இந்திய கேப்டன் சுனில் சேத்ரி 49ஆவது நிமிடத்தில் முதலாவது கோல் அடித்தார்.

மொத்தத்தில் இது அவரது 80ஆவது சர்வதேச கோலாகும். இதன்மூலம் அதிக கோல் அடித்தவர்களின் பட்டியலில் 5ஆவது இடத்தில் உள்ள அர்ஜென்டினாவின் லயோனல் மெஸ்சியை (80 கோல்) சமன் செய்தார்.

சேத்ரியை தொடர்ந்து சுரேஷ் வாங்ஜாம் (50ஆவது நிமிடம்), சஹால் சமாத் (90ஆவது நிமிடம்) ஆகியோரும் கோல் போட்டு அசத்தினர். 1993ஆம் ஆண்டு முதல் நடந்து வரும் இந்த போட்டியில் இந்திய அணி இந்தக் கோப்பையை வெல்வது இது 8ஆவது முறையாகும்.

---

1. தேசிய தன்னார்வ குருதிக்கொடை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) அக்டோபர்.1 ☑

ஆ) அக்டோபர்.2

இ) அக்டோபர்.3

ஈ) அக்டோபர்.4

✓ தேசிய தன்னார்வ குருதிக்கொடை நாளானது ஒவ்வோர் ஆண்டும் அக்.1 அன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது குருதிக்கொடை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், தன்னார்வ குருதிக் கொடையை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ "Give Blood and keep the world beating" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும். நம் நாட்டிற்கு ஒவ்வோறர் ஆண்டும் சுமார் 1.45 கோடி யூனிட் இரத்தம் தேவைப்படுகிறது. நாடு முழுவதும் 3500 உரிமம் பெற்ற இரத்த வங்கிகள்மூலம் இந்த இரத்தம் சேகரிக்கப்படுகிறது.

---

2. நிலையான நிதி குறித்து, பன்னாட்டு நிதிச் சேவை மையங்கள் ஆணையத்தால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் யார்?



அ) உர்ஜித் படேல்

ஆ) C K மிஸ்ரா ☑

இ) அபிஜித் பானர்ஜி


ஈ) ஜீன் ட்ரோஸ்

✓ பன்னாட்டு நிதிச் சேவை மையங்கள் ஆணையமானது (IFSCA) முன்னாள் சுற்றுச்சூழல் & வனச்செயலர் C K மிஸ்ரா தலைமையில் ஒரு நிபுணர் குழுவை அமைத்து, உலகத்தரம்வாய்ந்த நிலையான நிதி மையத்தை IFSCA'இல் உருவாக்கவுள்ளது. IFSCA, கடந்த ஆண்டு ஏப்ரலில், IFSC அதிகாரச் சட்டம், 2019'இன்கீழ் நிறுவப்பட்டது. இது GIFT நகரமான காந்திநகரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

✓ IFSCA என்பது இந்தியாவிலுள்ள பன்னாட்டு நிதிச்சேவை மையத்தின் (IFSC) நிதி தயாரிப்புகள், நிதிச்சேவைகள் மற்றும் நிதி நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் அதனை ஒழுங்குபடுத்தும் ஓர் அதிகாரமாகும்.

---

3. குலாப் புயலைத் தொடர்ந்து ஓமானைத் தாக்கிய புயலின் பெயர் என்ன?



அ) ஷாஹீன் ☑

ஆ) பகித்

இ) குல்முகர்

ஈ) தேஸ்

✓ வெப்பமண்டல புயலான ஷாஹீன் ஓமான் கடற்கரையை தாக்கியது. இப்புயல் குலாப் புயலின் ஒரு வழித்தோன்றலாகும். அது, 2021 செப்டம்பர் மாதத்தின் பிற்பகுதியில் இந்தியாவின் கீழைக்கடற்கரையில் பேரழிவை ஏற்படுத்தியது. குஜராத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக இருந்த குலாப் புயல், புதிய ஷாஹீன் புயலாக உருமாறியது.

---

4. 'நல்ல சமாரியன்' என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) நிதி அமைச்சகம்

ஆ) சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம் ☑

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்

✓ இந்திய அரசின் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், 'நல்ல சமாரியன்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சாலை விபத்தில் பாதிக்கப்பட்டோரை, "பொன்னான மணிநேரத்திற்குள்" மருத்துவமனைக்குக் கொண்டு சென்று அவரது உயிரைக்காப்பாற்றும் எவரும் ₹5000/– ரொக்கம் மற்றும் சான்றிதழுட –ன் கௌரவிக்கப்படுவார்கள். மேலும், இந்தத் திட்டத்தின்கீழ் தனிநபர் ஒருவருக்கு, ஓர் ஆண்டுக்கு, அதிகபட்சம் 5 முறை இது வழங்கப்படும்.

---

5. "Keeping cybercriminals out: #JustOneClick" என்பது எந்த அமைப்பால் நடத்தப்படுகிற ஓர் இணையவழி பாதுகாப்புப் பிரச்சாரமாகும்?

அ) NASSCOM

ஆ) RBI

இ) இந்திய தரவு பாதுகாப்பு கவுன்சில்

ஈ) இன்டர்போல் ☑

✓ அக்.4–22 வரை "Keeping cybercriminals out: #JustOneClick" என்ற இணையவழி பாதுகாப்புப் பிரச்சாரத்தை இன்டர்போல் நடத்துகிறது; இது, சமூக ஊடகங்களில் நடத்தப்படுகிறது. இந்தப் பிரச்சாரத்தின் நோக்கம், இணைய அச்சுறுத்தல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, மக்கள் தங்கள் கணினிகள், வலையமைப்புகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை சைபர் குற்றவாளிகளிடமிருந்து பாதுகாக்க உதவுவதாகும்.

---

6. அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மரியா ரெஸ்ஸா & டிமிட்ரி முரடோவ் ஆகியோர் சார்ந்த தொழில் எது?



அ) அரசியல்

ஆ) பத்திரிகை ☑

இ) பாதுகாப்பு

ஈ) சமூக சேவை

✓ மரியா ரெஸ்ஸா மற்றும் டிமிட்ரி முரடோவ் ஆகியோர் பிலிப்பைன்ஸ் & ரஷ்யாவில் கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மேற்கொண்ட முயற்சிகளுக்காக 2021ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு தேர்வுசெய்யப்பட்டுள்ளனர்.

✓ ஒரு பிலிப்பினோ – அமெரிக்க பத்திரிகையாளரும் எழுத்தாளருமான மரியா ரெஸ்ஸா, ராப்ளர் என்ற ஊடக நிறுவனத்தின் இணை நிறுவனர் ஆவார். டிமிட்ரி முரடோவ் என்பார் ஒரு ரஷ்ய பத்திரிகையாளர் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளர் ஆவார்.

---

7. குழந்தைகளுக்கான (2–18 வயது) எந்தத்தடுப்பூசிக்கு, COVID–19 பற்றிய நிபுணர் குழு, அவசர பயன்பாட்டு ஒப்புதலை வழங்கியது?



அ) கோவிஷீல்ட்

ஆ) கோவாக்சின் ☑

இ) ஸ்புட்னிக்

ஈ) பைசர்

✓ 2 முதல் 18 வயது வரையிலான சிறார்களுக்கு கோவாக்சின் தடுப்பூசி செலுத்துவதற்கு நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது. ஐதராபாத்தை சார்ந்த பாரத் பயோடெக் நிறுவனம் 18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கான கோவக்ஸின் கட்டம்–2 மற்றும் கட்டம்–3 சோதனைகளை முடித்து, அதன் சோதனைத் தரவை இந்திய மருந்துகள் மற்றும் கட்டுப்பாட்டு இயக்குநரகத்திடம் (DCGI) சமர்ப்பித்தது.

✓ பரிசோதிக்கப்பட்ட வயதுக் குழுக்கள்: 12–18 வயதுடையவர்கள்; 6–12 வயதுடையவர்கள் மற்றும் 2–6 வயதுடையவர்கள்.

---

8. சமீப செய்திகளில் இடம்பெற்ற CRISP–M கருவி, எந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில், காலநிலை தகவலை உட்பொதிக்கிறது?



அ) MGNREGS ☑

ஆ) பிரதமர் ஆவாஸ் யோஜனா

இ) சௌபாக்யா

ஈ) பிரதமர் உஜ்வாலா யோஜனா

✓ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் புவிசார் தகவல் அமைப்பு சார்ந்த நீர்நிலை திட்டமிடலுக்கான பருவநிலை தகவல்களை ஒருங்கிணைப்பதற்கான காலநிலை தகவல் அமைப்பு மற்றும் திட்டமிடல் உபகரணம் அறிமுகப்படுத்தப்பட்டது.

✓ மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங் மற்றும் இங்கிலாந்து வெளிநாட்டு, காமன்வெல்த் மற்றும் வளர்ச்சி அலுவலகத்தின் தெற்காசிய மற்றும் காமன்வெல்த் இணையமைச்சர் லார்ட் தாரிக் அகமது ஆகியோர் இணைந்து காணொலி நிகழ்ச்சி ஒன்றில் இதை தொடங்கிவைத்தனர்.

---

9. மத்திய உள்துறை அமைச்சகமானது அண்மையில் எந்த மத்திய ஆயுதமேந்திய காவல்படையின் அதிகாரங்களை மேம்படுத்தியது?

அ) ITBP

ஆ) BSF ☑

இ) CRPF

ஈ) CISF

- ✓ மத்திய உள்துறை அமைச்சகமானது அஸ்ஸாம், மேற்கு வங்கம் மற்றும் பஞ்சாபில் உள்ள பன்னாட்டு எல்லையிலிருந்து 50 கிலோமீட்டருக்குள் கைது செய்யவும், தேடவும், கைப்பற்றவும் எல்லைப் பாதுகாப்புப் படைக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.
- ✓ BSF என்பது நடுவணரசின்கீழ் உள்ள ஒரு மத்திய ஆயுதமேந்திய காவல்படையாகும். இந்த அதிகாரம், புதிதாக உருவாக்கப்பட்ட ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களுக்கும் பொருந்தும். இதற்கு முன்னர்வரை, BSF'இன் வரம்பு, குஜராத்தில் உள்ள பன்னாட்டு எல்லையிலிருந்து 80 கிமீ வரையும் இராஜஸ்தான், பஞ்சாப், மே வங்கம் மற்றும் அஸ்ஸாமில் 15 கிமீ வரையும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

---

10. உலக எஃகு சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்தியர் யார்?

அ) சஜ்ஜன் ஜிண்டால் ☑



ஆ) ஆதித்யா மிட்டல்

இ) அனிர்பன் தாஸ்குப்தா

ஈ) கௌதம் அதானி

- ✓ JSW ஸ்டீலின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான சஜ்ஜன் ஜிண்டால், 2021-22 காலத்திற்கு உலக எஃகு சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்மூலம் இந்தச் சங்கத்தின் தலைவராக பணியாற்றிய இந்தியாவின் முதல் பிரதிநிதியாகவும் ஜிண்டால் ஆனார். இவருக்கு முன் யூ யோங் அச்சங்கத்தின் தலைவராக இருந்தார். இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள், உலகின் எஃகு உற்பத்தியில் சுமார் 85 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். கடந்த 1967'இல் நிறுவப்பட்ட இதன் தலைமையகம் பிரஸ்ஸல்ஸில் அமைந்துள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இ-ஷ்ரம் இணையதளத்தில் – 4 கோடி அமைப்புசாரா தொழிலாளர்கள் பதிவு:

கரோனா காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் முடங்கியதில் அமைப்புசாரா தொழிலாளர்கள் அதிக பாதிப்புக்குள்ளாயினர்.

ஆனால் இவர்கள் குறித்த முறையான புள்ளிவிவரங்கள் இல்லாததால் அவர்களுக்கு நலத்திட்டங்களை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. இதை அடுத்து அமைப்புசாரா தொழிலாளர்களின் விவரங்களை திரட்டவும், அவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்தவும் மத்திய அரசு இ-ஷ்ரம் திட்டத்தை ஆகஸ்ட் 26ஆம் தேதி அறிமுகப்படுத்தியது.

இதற்கென பிரத்யேக இணையதளம் தொடங்கப்பட்டு தொழிலாளர்கள் தங்களின் விவரங்களை பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த இணையதளம் தொடங்கப்பட்டு 2 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் 4.15 கோடி தொழிலாளர்கள்இதுவரை இ-ஷ்ரம் இணையதளத்தில் பதிவு செய்துள்ளதாக மத்திய தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்பு துறை அமைச்சர் பூபேந்திர யாதவ் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறும்போது, "இ-ஷ்ரம் இணையதளத்தில் பதிவு செய்து உள்ள அமைப்புசாரா தொழிலாளர்கள் தங்களுக்கான நலத்திட்ட உதவி-களை எளிதில் நேரடியாகப் பெற முடியும். இதுவரை பதிவு செய்துள்ள 4.15 கோடி தொழிலாளர்களில் 50.6% பேர் பெண்கள். அதிகமான தொழி-லாளர்கள் வேளாண் & கட்டுமானத்துறை சார்ந்தவர்களாக உள்ளனர்.

மேலும் பதிவானவர்களில் 65.68 சதவீதத்தினர் 16-40 வயதினராவர். 34.32 சதவீதத்தினர் 40 வயதுக்கு மேலானவர்கள் ஆவர்" என்றார்.

---

2. இந்தியாவில் தொழில் தொடங்குவதற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளவும்

இந்தியாவில் தொழில் தொடங்குவதற்குள்ள வாய்ப்புகளை இஸ்ரேல் நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் கேட்டுக்கொண்டார்.

வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் ஐந்து நாள் பயணமாக இஸ்ரேல் சென்றுள்ளார். அங்கு அந்நாட்டின் முக்கிய தொழில் நிறுவனத் தலைவர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

இந்தியாவில் மிகப்பெரிய மாற்றத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்-டு வருகின்றன. அதுதொடர்பான அனைத்து புள்ளிகளையும் இணைத்தால், உலகப்பொருளாதாரத்தில் அதிக போட்டித்தன்மையுள்ள வலுவான இடத்தை நோக்கி இந்தியா முன்னேறிச் செல்வது குறித்த பார்வை இஸ்ரேல் தொழில் நிறுவனங்களுக்கு புலப்படும். அந்த வலுவான இடம்மூலம்தான் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் தொடர்ந்து மாற்றங்கள் நிகழ்ந்து வரும் நிலையில், கரோனா தொற்று பரவத் தொடங்கிய இந்த 2 ஆண்டு காலத்தில் மாற்றத்துக்கான நடவடிக்கை துரிதமாகியுள்ளது. எனவே இஸ்ரேலில் பாதுகாப்புத் துறை சார்ந்து இயங்கி வரும் நிறுவனங்கள் உள்பட அனைத்து நிறுவனங்களும் இந்தியாவில் தொழில் தொடங்குவ-தற்கு உகந்த விதத்தில் உள்ள கொள்கைகளை பயன்படுத்தி அங்கு முதலீடு செய்ய வேண்டும். இந்தியாவில் மிகப்பெரிய அளவில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் உற்பத்தி சார்ந்த ஊக்கத்தொகை திட்டமும் ஒன்று. இந்தியாவு-க்கு புதிய உற்பத்தி திறன்களை கொண்டு வந்து சேர்ப்பவர்களை ஈர்த்து, அவர்களுக்கு உரிய முறையில் ஊக்கத்தொகை அளிப்பதே அந்த திட்டத்தின் நோக்கம். இதுவரை 13 துறைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்-டுள்ளன. அவற்றில் பேட்டரி உற்பத்தி, மின்னணு போன்றவை இஸ்ரேல் நிறுவனங்களுக்கு ஆர்வமுள்ள துறைகளாகும்.

இந்தியாவில் புதிதாக இயற்றப்பட்டுள்ள மூன்று வேளாண் சட்டங்கள் வேளாண்மையை நிலையான வளர்ச்சி கொண்டதாக்குகின்றன. அச் சட்டங்கள் வேளாண்மைத் துறையில் மிகப்பெரிய அளவில் தொழில்க-ளைத் தொடங்கவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் அடித்தளம் இடுகின்றன. இதுபோன்ற மாற்றங்கள் வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தியில் அதிக முதலீடுகளை ஊக்குவிக்கும் என இந்தியா கருதுகிறது. இந்தியாவில் தற்போது எண்மம், சுகாதாரம், நீர், உழவு, பாதுகாப்புத் துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று தெரிவித்தார். வெளியுறவு அமைச்சராக S ஜெய்சங்கர் இஸ்ரேல் சென்றுள்ளது இதுவே முதல்முறை.

---

3. 'ஈரான் எரிவாயு உற்பத்தியில் இந்தியாவுக்கான உரிமை தொடரும்'

ஈரானின் ஃபர்ஸாத்-பி எரிவாயு வயலில் உற்பத்திப் பணிகள் உள்நாட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டாலும், அந்தப் பணியில் 30 சதவீத உரிமை இந்திய எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்புக்கு இப்போதும் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அந்த அமைப்பைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறியதாவது:

ஃபர்ஸாத்-பி பகுதியில் எரிவாயு இருப்பதை ஓஎன்ஜிசி தலைமையிலான இந்திய எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்புதான் கண்டறிந்தது. எனவே, அந்தப் பகுதியில் எரிவாயு உற்பத்தி செய்ய கூட்டமைப்பு இயல்பாகவே விரும்புகிறது. இதுதொடர்பான செயல்திட்டத்தையும் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ளது. எனினும், எரிவாயு உற்பத்திக்கான ஒப்பந்தத்தை உள்நாட்டு நிறுவனத்துக்கு ஈரான் அரசு வழங்கியுள்ளது.

இதன்விளைவாக, இந்தத் திட்டம் இந்தியாவின் கைகளிலிருந்து முழுமையாக நழுவிவிடவில்லை. அடிப்படை ஒப்பந்தத்தின் கீழும் அசல் உரிமத்தின் அடிப்படையிலும் ஃபர்ஸாத்-பி எரிவாயு உற்பத்தியில் இந்தியாவுக்கு 30 சதவீதம் உரிமை உள்ளது.

எரிவாயு உற்பத்தித் திட்டத்தை எந்த நிறுவனம் செயல்படுத்தினாலும், அதில் இந்திய எண்ணெய் நிறுவனங்களின் கூட்டமைப்புக்கு 30% உரிமை உள்ளதாக அடிப்படை ஒப்பந்தத்தில் தெளிவாக தெரிவிக்கப்பட்டு உள்ளது என்றார் அவர்.

4.2023ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து 4 வீரர்களை விண்வெளிக்கு அனுப்ப திட்டம் – இஸ்ரோ அதிகாரி தகவல்

துபாயில் நடந்து வரும் எக்ஸ்போ 2020 கண்காட்சி வளாகத்தில் நேற்று விண்வெளி வார நிகழ்ச்சிகள் தொடங்கின. இதில் பல்வேறு நாட்டு அரங்குகளில் அந்தந்த நாடுகளின் விண்வெளி தொழில்நுட்பங்கள் மற்றும் வளர்ச்சித்திட்டங்கள் குறித்த சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தது.

இந்திய அரங்கிலும் விண்வெளி வார நிகழ்ச்சிகள் நேற்று தொடங்கியது. இதில் முதல் நாளில் நடைபெற்ற கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக இஸ்ரோவின் அறிவியல் செயலாளர் டாக்டர் ஆர் உமாமகேஷ்வரன் கலந்துகொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

கடந்த ஆண்டில் ஏற்பட்ட கொரோனா பெருந்தொற்று காரணமாக அடுத்த ஆண்டில் (2022) விண்வெளிக்கு இந்திய வீரர்களை அனுப்பும் திட்டம் தற்போது தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மற்றதொழில்களை போலல்லாமல் விண்வெளித்துறையில் கட்டுமானங்கள் மற்றும் கருவிகளை தயாரிக்க நேரடியாக களத்தில் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இதனை வீட்டிலிருந்து செய்ய முடியாத நிலை உருவானதால், இஸ்ரோ சார்பில் பல்வேறு உதிரி பாகங்கள் மற்றும் தொழில்நுட்ப கருவிகளை தொடர்ந்து தயாரிக்க இயலவில்லை. நமது பிரதமர் மோடி அடுத்த ஆண்டு (2022) ஆகஸ்டில் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தில் ஆர்வமாக இருந்தார்.

ஆனால் தற்போது அதனை நாங்கள் தவறவிட்டு விட்டோம். எனவே வருகிற 2023ஆம் ஆண்டில் இந்திய விண்வெளி வீரர்களை விண்ணுக்கு அனுப்ப முயற்சி செய்து வருகிறோம். மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இந்த திட்டத்தில் ககன்யான் என்ற விண்கலம் முழுக்க முழுக்க இந்தியாவிலேயே உருவாக்கப்பட்டு அதன் மூலம் 4 இந்திய விண்வெளி வீரர்களை 2023ஆம் ஆண்டு விண்ணுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியா சார்பில் மனிதர்கள் அல்லாத விண்கலன்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டமானது 2 கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளது. ஒன்று வருகிற டிசம்பர் மாதத்திலும், மற்றொன்றை அடுத்த ஆண்டிலும் விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் விண்வெளி திட்டங்களில் அடுத்ததாக சந்திரயான்–3 என்ற விண்கலம் அடுத்த ஆண்டு நிலவுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டு உள்ளது. அதேபோல் வீனஸ் கிரகத்தை (வெள்ளி) 4 ஆண்டுகளுக்கு அதன் சுற்றுவட்டப்பாதையில் சுற்றி வந்து ஆய்வு செய்யும் 'சுக்ராயன்–1 ஆர்பிட்டர் விண்கலம்' வருகிற 2024ஆம் ஆண்டு விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

---

5. அக்.17 – சர்வதேச வறுமை ஒழிப்பு தினம்

கருப்பொருள்: Building forward together: Ending Persistent Poverty, Respecting all People and our Planet (ஒன்றாக முன்னேறுதல், தொடர்ந்து கொண்டிருக்கும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல், நமது கிரகத்தையும் அனைத்து மக்களையும் மதித்தல்).

---

6. அக்.13 – சர்வதேச பேரிடர் அபாய குறைப்பு தினம்

கருப்பொருள்: International cooperation for developing countries to reduce their disaster risk and disaster losses (வளரும் நாடுகளின் பேரிடர் அபாயம் மற்றும் பேரிடர் இழப்புகளைக் குறைப்பதற்கான சர்வதேச ஒத்துழைப்பு)

---

1. சமீப செய்திகளில் இடம்பெற்ற "நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு" என்பதுடன் தொடர்புடையது எது?



அ) நெகிழிக்கழிவு மேலாண்மை ☑

ஆ) ஆட்டோமொபைல் உற்பத்தி

இ) இறைச்சி உற்பத்தி

ஈ) வேளாண் ஏற்றுமதி

✓ மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமானது நெகிழிக்கழிவு மேலாண்மை விதிகள்–2016'இன்கீழ் "நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு – Extended Producer Responsibility"ஐ ஒழுங்குபடுத்துவதற்கான வரைவு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இது, திடமான நெகிழிப்பொதியல் என 3 வகை நெகிழிகளை உள்ளடக்கியுள்ளது: ஒற்றை அடுக்கு / பல அடுக்கு நெகிழிகளின் நெகிழ்வான நெகிழிப் பொதியல். இந்த வரைவின்படி, உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களால் நிர்வகிக்கப்பட வேண்டிய கழிவுகளின் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.

---

2. 'உலகின் கைத்தூய்மை' என்ற அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ) WHO மற்றும் UNICEF ☑

ஆ) NITI ஆயோக்

இ) பெல் & மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை

ஈ) இந்திய மருத்துவ சங்கம்

✓ உலக நலவாழ்வு நிறுவனமும் (WHO) மற்றும் UNICEFஉம் இணைந்து 2021ஆம் ஆண்டு 'உலகின் கைத்தூய்மை' அறிக்கையை வெளியிட்டன. இந்த அறிக்கையின்படி, உலகம் ஒவ்வோர் ஆண்டும் ஒரு நபருக்கு $1'க்கும் குறைவான தொகையை கைத்தூய்மையில் முதலீடு செய்தால், உலகின் 46 குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள அனைத்து வீடுகளும் 2030'க்குள் கைத்தூய்மை வசதிகளைக் கொண்டிருக்கும்.

✓ வீட்டில் சோப்புகொண்டு கையைக் கழுவுவதை ஊக்குவிப்பதற்காக, இந்த நாடுகளின் அரசாங்கங்கள் தங்களது சுகாதார செலவில் 2.5% அளவுக்கு செலவிடுகின்றன.

---

3. இந்திய இரயில்வேயால் நடத்தப்படும் இந்திய வேலையில்லாத இளையோருக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் பெயர் என்ன?

அ) சிறந்த இந்தியா சிறந்த உலகம்

ஆ) திறன் இந்தியா

இ) ரயில் திருவிழா

ஈ) இரயில் கௌஷல் விகாஸ் யோஜனா ☑

✓ இரயில் கௌஷல் விகாஸ் யோஜனா என்பது 18–35 வயதுடைய வேலையில்லா இளையோருக்கு இந்திய இரயில்வேயால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் ஒரு தொழில்நுட்ப திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆகும். இத்திட்டம் அவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனை –வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ சமீபத்தில், இரயில் கௌஷல் விகாஸ் யோஜனாவின்கீழ் முதல் பிரிவில் வெற்றிபெற்ற பயிற்சியாளர்களுக்கு சுய வேலைவாய்ப்பு கருவிகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்திய ரயில்வேயின் உற்பத்தி அலகான பனாரஸ் லோகோமோட்டிவ் வொர்க்ஸ் அதன் முதல் தொகுதி பயிற்சியாளர்களுக்கு வெற்றிகரமாக பயிற்சியை நடத்தியது.

---

4. "தி நேவல் இன்டராக்ஷன்–2021" என்பது எவ்விரு நாடுகளுக்கு இடையேயான கூட்டு கடற்படைப் பயிற்சியாகும்?



அ) இந்தியா மற்றும் அமெரிக்கா

ஆ) இந்தியா மற்றும் சீனா

இ) சீனா மற்றும் ரஷ்யா ☑

ஈ) ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா

✓ சீனா & ரஷ்யாவின் கடற்படைப் படைகள் "தி நேவல் இன்டராக்ஷன் – 2021" கூட்டு கடற்படைப் பயிற்சியைத் தொடங்கியுள்ளன. இந்தப் பயிற்சி இருநாட்டின் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதோடு கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை கூட்டாக சமாளிக்கும் திறனை வளர்த்துக்கொள்கிறது. இப்பயிற்சி ஜப்பான் கடலில் உள்ள ரஷ்யாவின் பீட்டர் தி கிரேட் வளைகுடாவில் நடக்கிறது.

5. 2021–உலகப் பார்வை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?



அ) Love Your Eyes ☑

ஆ) Donate Eyes; Donate Life

இ) Eye Health matters

ஈ) Sight First

✓ உலக பார்வை நாளானது ஆண்டுதோறும் அக்டோபர் இரண்டாவது வியாழனன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு (2021) அக்டோபர். 14 அன்று இந்த நாள் கடைபிடிக்கப்படுகிறது. இது குருட்டுத்தன்மை மற்றும் பார்வை குறைபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஒரு உலகளாவிய நிகழ்வாகும். இது முதலில் பன்னாட்டு அரிமா சங்கத்தின் 'Sight First' பிரச்சாரத்தால் கடந்த 2000'இல் தொடங்கப்பட்டது.

✓ "உங்கள் கண்களை நேசியுங்கள்" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

6. இந்தியா–அமெரிக்க பொருளாதார மற்றும் நிதிக் கூட்டாண்மை உரையாடலின் எட்டாவது அமைச்சர்கள் கூட்டம் சமீபத்தில் எங்கு நடைபெற்றது?



அ) புது தில்லி

ஆ) வாஷிங்டன் DC ☑

இ) புனே

ஈ) நியூயார்க்

✓ இந்தியா–அமெரிக்கா பொருளாதார & நிதிக் கூட்டாண்மைக்கான அமைச்சர்கள் அளவிலான எட்டாவது கூட்டம் வாஷிங்டன் டிசி'இல் நடைபெற்றது. மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் அமெரிக்க கருவூல செயலாளர் டாக்டர் ஜானெட் யெல்லென் இதற்குத் தலைமையேற்றனர்.

✓ பரந்த பொருளாதாரக் கண்ணோட்டம், COVID–19 பெருந்தொற்றில் இருந்து மீட்சி, நிதி ஒழுங்குமுறை, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, பலதரப்பு ஈடுபாடு, பருவநிலை நிதி, பண மோசடி எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

---

7. விண்வெளியில் எடுக்கப்பட்ட உலகின் முதல் திரைப்படமான 'தி சேலஞ்ச்' சார்ந்த நாடு எது?



அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா ☑

இ) சீனா

ஈ) இஸ்ரேல்

✓ விண்வெளியில் எடுக்கப்பட்ட உலகின் முதல் திரைப்படம் "தி சேலஞ்ச்". கஜகஸ்தானில் உள்ள பைகோனூர் ஏவுதளத்திலிருந்து சோயூஸ் MS – 19 ஏவுகலம்மூலம் படக்குழு விண்வெளிக்குச்சென்றது. அங்கு 12 நாட்கள் படப்பிடிப்பு நடத்தியபின், இயக்குனர் கிளிம் ஷிபென் கோவும், நடிகை யூலியா பெரெஸில்ட்டும் பூமிக்கு திரும்பினர்.

---

8. UCO வங்கியின் MD & CEOஆன A K கோயல், அண்மையில் எந்த அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?



அ) பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா

ஆ) IBPS

இ) இந்திய வங்கிகள் சங்கம் ☑

ஈ) RBI சேவை வாரியம்

✓ UCO வங்கியின் தற்போதைய நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான AK கோயல், 2021–22ஆம் ஆண்டிற்கான இந்திய வங்கிகள் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2021 அக்.14 அன்று நடந்த அமைப்பின் நிர்வாக குழுக்கூட்டத்தில் இதற்கான தேர்தல் நடைபெற்றது. அவர் யூனியன் வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ராஜ்கிரண் ராய் ஜியைத் தொடர்ந்து இப்பதவிக்கு வந்துள்ளார்.

---


9. சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 'ஹாமில்டன் பொருள்' என்பதுடன் தொடர்புடைய எது?

அ) இயற்பியல்

ஆ) விண்வெளி அறிவியல் ☑

இ) தீநுண்மவியல்

ஈ) பொருளாதாரம்



✓ NASA/ESA ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியால் எடுக்கப்பட்ட படங்களிலிருந்து, திமோதி ஹாமில்டன் தலைமையிலான வானியலாள –ர்கள் குழு, அசாதாரண ஈர்ப்பு லென்சிங் கட்டமைப்பை கண்டறிந்து உள்ளது. 'ஹாமில்டனின் பொருள்' என அது பெயரிடப்பட்டுள்ளது.

---

10. சமீப செய்திகளில் இடம்பெற்ற *Amoria thorae* என்பது பின்வரும் எந்த வகை சார்ந்த ஒரு புதிய உயிரினமாகும்?

அ) கடல் நத்தை ☑

ஆ) ஆமை

இ) சிலந்தி

ஈ) நண்டு



✓ *Amoria* என்பது கடல் வயிற்றுக்காலிகளின் (கடல் நத்தைகள் மற்றும் கடலட்டைகள்) ஓர் இனமாகும். இந்த வேட்டையாடும் உயிரினங்கள் ஆஸ்திரேலியாவின் முழு கடற்கரையைச்சுற்றியும் (கடற்கரை மற்றும் கடல்நீரில்) காணப்படுகின்றன. இதன் சில இனங்கள் தெற்கு இந்தோ –னேசியா வரை பரவியுள்ளன. *Amoria thorae* எனப் பெயரிடப்பட்ட இந்த இனம் மிகவும் அரிதானது ஆகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சேதி தெரியுமா?

அக்.8: அமைதிக்கான நோபல் பரிசு பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர் மரியா ரெஸா, ரஷ்ய பத்திரிகையாளர் திமித்ரி முராத.ஃப் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

அக்.8: தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் தலைவராக ஜசரி கணேஷ் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், இந்தச் சங்கத்தில் 15 ஆண்டுகள் துணைத் தலைவராக இருந்தார்.

அக்.9: புலம்பெயர்ந்த தமிழர்களுக்கான நல வாரியம் அமைக்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்தது. இது, 'புலம்பெயர் தமிழர் நல வாரியம்' என அழைக்கப்படும்.

அக்.10: 2022ஆம் ஆண்டில் பிரிட்டனின் பர்மிங்காம் நகரில் நடைபெற உள்ள காமன்வெல்த் ஹாக்கிப் போட்டியிலிருந்து விலகுவதாக ஹாக்கி இந்தியா அமைப்பு அறிவித்தது.

அக்.13: தமிழகத்தில் நவம்பர் 1 முதல்ஒன்பதாவதற்குக் கீழ் உள்ள வகுப்பு களைத் திறக்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. வாரத்தில் 7 நாட்களும் வழிபாட்டுத் தலங்களை திறக்கவும் தமிழக அரசு உத்தரவிட்டது.

அக்.14: 'டி23' என்று பெயரிடப்பட்ட புலியை 23 நாட்கள் தேடுதலுக்குப் பிறகு முதுமலை புலிகள் காப்பகப் பகுதியில் உயிருடன் வனத்துறைப் பிடித்தது.

அக்.13: சர்வதேசக் கால்பந்துப் போட்டிகளில் அதிக கோல்கள் அடித்திருந்தவர்களின் பட்டியலில் பீலேவின் (77 கோல்) சாதனையை இந்தியாவின் சுனில் சேத்ரி முறியடித்தார். 79 கோல் அடித்திருக்கும் சுனில் சேத்ரி 3ஆம் இடத்தில் உள்ளார்.

அக்.15: துபாயில் நடைபெற்ற ஐபிஎல் இறுதிப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, கொல்கத்தா நைட் ரைட்டர்ஸ் அணியை 27 ரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்துக் கோப்பையை வென்றது. இது சென்னை அணி வெல்லும் 4–வது கோப்பை.

பிரபல பாடலாசிரியரும் கவிஞருமான பிறைசூடன் (அக்.8), புகழ்பெற்ற மலையாள நடிகர் நெடுமுடி வேணு (அக்.11), பழம்பெரும் தமிழ்த் திரைப்பட நடிகர் ஸ்ரீகாந்த் (அக்.12) ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள்.

---

2. கதைப்போமா அறிவியல் 5: நோபல் நாயகர்கள்!

அக்டோபர் வந்தாலே அறிவியல் ஆராய்ச்சி சமூகத்திற்கு பரபரப்பு தொற்றிக் கொள்வது வழக்கம். நோபல் அமைப்பு அந்த வருடத்திற்கான விருது பெற்றவர்கள் யார் என்பதை முதல் இரண்டு வாரங்களில் அறிவிப்பதை வழக்கமாக வைத்திருப்பதால் வரும் பரபரப்பு அது.

வேதியியல் பொறியாளராகவும், தொழில்முனைவருமாக இருந்த ஆல்ப்.ஃரட் நோபல் 1896ல் இறப்பதற்கு முன்னால் எழுதி வைத்த உயிலில், வாழ்நாள் முழுக்க தான் சேர்த்த சொத்துக்களை வைத்து குறிப்பிட்ட துறைகளில் சிறப்பாக பணியாற்றவர்களுக்கு வருடந்தோறும் கொடுக்கப்பட வேண்டும் என எழுதிவைத்துவிட்டுப் போக நோபல் அமைப்பு தொடங்கப்பட்டது. வெடிகுண்டுகளில் பயன்படுத்தப்படும் டெனமைட்டை கண்டறிந்தவர் நோபல் என்பது கிளைச் செய்தி. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து ஆறு துறைகளில் இந்தப் பரிசு வழங்கப்படுகிறது.

இயற்பியல், வேதியியல், மருத்துவம் என மூன்று அறிவியல் துறைகளுக்கும், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் அமைதி என மற்ற துறைகளுக்குமாக பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வருடமும் அதிக பட்சம் மூன்று பேர் ஒரு துறைக்கான விருதை பகிர்ந்துகொள்ளலாம். 975 பேர் இதுவரை நோபல் பரிசு வென்றிருக்கிறார்கள் என்றாலும் அதில் 58 பேர் மட்டுமே பெண்கள் என்பது கவனத்துடன் உற்று நோக்க வேண்டிய புள்ளியியல் தகவல். இது அறிவியல் தொடர் என்பதால், அறிவியல் துறைகளுக்கான இந்த வருட பரிசு வெற்றியாளர்களின் ஆராய்ச்சி பணிகளைப் பார்த்துவிடலாம்.

இயற்பியல்

இத்தாலி, ஜெர்மனி மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த மூவர் இந்த வருட பரிசை பகிர்ந்து கொள்கிறார்கள். மூவருமே கோட்பாடு இயற்பியலாளர்கள் (Theoretical physicists). அதென்ன கோட்பாடு இயற்பியல் என்ற கேள்வி எழலாம். நம்மைச் சுற்றியிருக்கும் நிகழ்வுகளை விளக்குவதுதான் இயற்பியலின் அடிப்படை நோக்கம். குளிப்பதற்காக தொட்டியில் அமர்ந்த ஆர்கிமிடீஸ் தன் எடைக்கேற்ற தண்ணீர் வெளியேறியதைப் பார்த்து, அதிலிருந்து மிதவை (Buoyancy) என்பதைக் கணித வழியாக செய்த வரையறை மூலமாகத்தான் கப்பல் போக்குவரத்து என்பது தொடங்கியது. ஆப்பிள் மரத்தில் கீழ் அமர்ந்திருக்கையில் தலையில் ஆப்பிள் விழுந்ததில் இருந்து தொடங்கிய சிந்தனைதான், நியூட்டனின் புவியீர்ப்பு விசை பற்றிய கணித வடிவாக மாறியது. ஆர்கிமிடீஸ், நியூட்டன் போன்றவர்கள் நேரடி இயற்பியலாளர்கள்.

ஆனால், அறிவியல் ஆராய்ச்சிகளில் இப்படி நேரடியாகவே பணி புரிவது கடினம். இதைத் தீர்க்க, பெறப்படும் தகவல்களைக் கொண்டு மாதிரிகளை (Model) உருவாக்கி, அந்த மாதிரிகள் மாற்றங்களுக்கு எப்படி உட்படும் என்பதை கணித வடிவில் கொண்டுவரும் முறைமையை கோட்பாடு இயற்பியல் என சொல்லலாம். இந்த வருடம் நோபல் பரிசு வென்ற – க்ளாஸ் ஹேசல்மன், ஜியார்ஜியோ பரீசி மற்றும் சியக்கூரோ மனாபி – ஆகிய மூவரின் ஆராய்ச்சி முயற்சிகள் இன்றைய காலத்திற்கு ஏற்ற சூழலியலின் அடிப்படை அறிவியல் சம்பந்தப்பட்டது. கடலுக்கு கீழ் இருக்கும் பனிப்பாறைகள் உருகும் தன்மை முதல் பறவைகள் ஒன்றாக பறப்பதன் பின்னிருக்கும் காரணிகள் வரை ஆழமாகச் செல்கின்றன இவர்களது ஆராய்ச்சிகள். இந்த வருட இயற்பியல் வெற்றியாளர்கள் பற்றிய நோபல் அமைப்பின் அறிக்கை – https://www.nobelprize.org/prizes/physics/2021/press–release/

வேதியியல்

பெஞ்சமின் லிஸ்ட் மற்றும் டேவிட் மேக்மில்லன் என்ற இரண்டு ஆராய்ச்சியாளர்கள் வேதியியலுக்கான பரிசை சரிசமமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள். இருவருக்கும் நேரடியான அறிமுகம் இல்லை என்றாலும், தனித்தனியாக மேற்கொண்ட இவர்களது ஆராய்ச்சிகளில் இருந்து பெறப்பட்ட புதுமையான கண்டுபிடிப்பிற்குத்தான் நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. வினையூக்கம் (Catalysis) என்பது நம் உடலில் தொடங்கி நம்மைச் சுற்றி நடக்கும் பல நிகழ்வுகளின் அடிப்படை. உதாரணத்திற்கு, நாம் உண்ணும் உணவை நம் உடல் நொதிகள் (Enzymes) மூலம் வேதிமாற்றம் செய்து சத்துக்களை எடுத்துக்கொள்கிறது. நீங்கள் கையில் வைத்திருக்கும் அலைபேசியின் உள்ளிருக்கும் பேட்டரி உலோகத்தால் ஆன மூலக்கூறுகளால் கட்டப்பட்டது.

அடிப்படையில் இது வரை, நொதிகள் மற்றும் உலோகம் என்ற இரண்டு மட்டுமே வினையூக்கம் செய்ய பயன்படும் என்றுதான் வேதியியல் ஆராய்ச்சி உலகம் நினைத்திருந்தது.

மேற்கண்ட இரண்டு ஆராய்ச்சியாளர்களும் இதற்கு மாற்றாக இயங்கும் வினையூக்கியை கண்டறிந்திருக்கிறார்கள். கரிம வினையூக்கம் (Organocatalysis) எனப்படும் இந்த முறைமை கரிம அணுக்களை (Carbon atoms) பயன்படுத்துகிறது. ஆக்சிஜன், நைட்ரஜன் என பலவற்றுடன் கரிமம் எப்போதும் இணைய விரும்பும் கரிமத்தின் தன்மை இதற்கு அடிப்படை. இந்த கண்டுபிடிப்பு புதிய மருந்து ஆராய்ச்சிகளுக்கு வெகுவாக பயன்படுவதோடு, மாசு உண்டாக்காத விதத்தில் வினையூக்கத்தை பயன்படுத்தலாம் என்பது கூடுதல் முக்கியத்துவம் பெறுகிறது. இவர்களது ஆராய்ச்சிகளைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள, நோபல் வெளியிட்டிருக்கும் அறிக்கைக்கு செல்லுங்கள் – https://www.nobelprize.org/prizes/chemistry/2021/press-release/

மருத்துவம்

வேதியியல் போலவே மருத்துவத்திற்கான நோபல் பரிசை இருவர் பகிர்ந்து கொள்கிறார்கள். இருவரும் அமெரிக்கர்கள். நரம்பியல் ஆராய்ச்சியாளரான ஆர்டம் பாட்டபூடியன், உடல்கூறு நிபணரான டேவிட் ஜூலியஸ் இருவரது ஆராய்ச்சிகளும் தொடுதலின் அறிவியல் சார்ந்தவை. சூடாக இருக்கும் தட்டின் மீது கையை வைத்தால், தோல் சென்சாராக மாறி, மூளையில் இருக்கும் நியூரான்களுக்கு தகவல் அனுப்பி கையை இழுத்துக் கொள்வதற்கு இடையில் நடக்கும் தகவல் பரிமாற்றம் படித்தறிய பிரமிப்பூட்டுவது. நாம் அறிந்து நடக்கும் இந்த நிகழ்வுகளைத் தாண்டி அனிச்சையாக உடலுக்குள் இப்படி பல்லாயிரம் நிகழ்வுகள் நடந்து கொண்டேயிருக்கின்றன. இதை முழுக்க புரிந்து கொள்வதன் மூலம், நோய் காரணிகளை மட்டுமல்லாமல், சிறந்த வகையில் வலி மேலாண்மை செய்வதற்கும் இவர்களின் ஆராய்ச்சிகள் உதவிகரமாக இருக்கும் என்பதால் இந்த பரிசு. நோபல் அமைப்பு வெளியிட்டிருக்கும் அறிக்கை இதோ – https://www.nobelprize.org/prizes/medicine/2021/prize-announcement/

---

3. ஒசூரில் நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம்: காணொலியில் முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

மீன்வளம், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் ரூ.19 கோடியே 5லட்சத்தில் கட்டப்பட்டுள்ள நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம், மீன்வளத் துறை கட்டிடங்களை காணொலி காட்சி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

நாட்டு கோழிக்குஞ்சு உற்பத்தியை அதிகரிக்கவும், கிராமங்களில் இத்தொழிலை ஊக்குவித்து தொழில் முனைவோரை உருவாக்கவும், பயிற்சி அளிக்கவும் ஓசூரில்உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில் ரூ.6 கோடியே 74 லட்சத்து 87 ஆயிரத்து 500 மதிப்பீட்டில் குஞ்சுபொரிப்பகத்துடன் கூடிய நாட்டுக்கோழி இனப்பெருக்க வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. இதைசென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் முதல்வர் ஸ்டாலின் நேற்று திறந்துவைத்தார்.

இந்த வளாகத்தில் 5,100 வளரும்கோழிகள், 9,150 முட்டையிடும் கோழிகளைப் பராமரிக்க முடியும். வாரத்துக்கு 20 ஆயிரம் வீதம் ஆண்டுக்கு 10 லட்சம் கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட உள்ளது.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காட்டில் நபார்டு திட்ட நிதியில் ரூ.8 கோடியே 80 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள மீன்வளர்ப்பு தொழில்நுட்ப தொழில்சார் கல்வி நிலைய கட்டிடத்தையும் முதல்வர் ஸ்டாலின் திறந்துவைத்தார். மீன்வளர்ப்பு தொழில் நிறுவனத்துக்கு தேவையான 2-ம் நிலை தொழில்நுட்ப உதவியாளர்களை உருவாக்குவது இதன் நோக்கமாகும். மேலும், திருச்சி ஜீயபுரத்தில் ரூ.3 கோடியே 50 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மைய கட்டிடத்தையும் முதல்வர் திறந்துவைத்தார். விலைஉயர்ந்த நன்னீர் அலங்கார மீன்களை வளர்ப்பவர்களுக்கு சிறந்த தரமான சினை மீன்களை உற்பத்தி செய்வது இம்மையத்தின் நோக்கமாகும்.

---

4. கற்றல் இடைவெளியை குறைக்க 'இல்லம் தேடி கல்வி' புதிய திட்டம் அறிமுகம்

பள்ளிக் குழந்தைகளின் கற்றல் இடைவெளியை குறைக்கும் பொருட்டு 'இல்லம் தேடி கல்வி' என்ற புதிய திட்டம் காஞ்சிபுரம், விழுப்புரம் உட்பட 12 மாவட்டங்களில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளதாக பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்தார்.

கரோனா காரணமாக பள்ளிகள் நீண்ட காலமாக மூடப்பட்டதால் பள்ளிக் குழந்தைகளின் கற்றல் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஒன்று முதல் 8-ம் வகுப்பு வரையிலான குழந்தைகளின் கற்றல் இடைவெளியைக் குறைக்கும் நோக்கில் பள்ளிக்கல்வித் துறை 'இல்லம் தேடி கல்வி' என்ற புதிய திட்டத்தை கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நீலகிரி, தஞ்சாவூர், திருச்சி, விழுப்புரம் ஆகிய 12 மாவட்டங்களில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த திட்டத்தின்படி, தன்னார்வலர்கள் மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக் குழந்தைகளுக்கு மாலை நேரத்தில் ஆடல், பாடல், பொம்மலாட்டம் மூலம் பாடம் மற்றும் பாடம் சார்ந்த விஷயங்கள் சொல்லிக் கொடுக்கப்படும்.

அதேபோல், இந்தத் திட்டத்தில் இணைந்து தன்னார்வலர்களாக பணியாற்ற illamthedikalvi.tnschools.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவு மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த புதிய இணையதளத்தையும், விழிப்புணர்வு வாகன பிரசாரத்தையும் சென்னை டிபிஐ வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ் தொடங்கி வைத்தார்.

வயதுவரம்பு தளர்வு

பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலர் காகர்லா உஷா கூறும்போது, "ஆசிரியர் பணிக்கு வயது வரம்பு 5 ஆண்டுகள் தளர்த்தப்பட உள்ளது. வெகு விரைவில் அரசாணை வெளியாகும்" என்று குறிப்பிட்டார். இந்நிலையில், இதுதொடர்பான அரசாணை நேற்று வெளியானது.

---

5. தமிழக அரசு, ஐரோப்பிய தமிழர்கள் நிதியால் கொலோன் பல்கலை. தமிழ் பிரிவு நீட்டிப்பு

மூடும் நிலையில் இருந்த தமிழ்ப் பிரிவை 2023-ம் ஆண்டு வரை நீட்டிப்பதாக கொலோன் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

ஜெர்மனியில் உள்ள கொலோன் பல்கலைக்கழகத்தின் இந்தியவியல் மற்றும் தமிழ்க் கல்விப் பிரிவில் தமிழுக்கானக் கல்வி கடந்த 58 ஆண்டுகளாக போதிக்கப்படுகிறது. ஆனால், நிதி நெருக்கடியால் கடந்த நவம்பர் 2020 முதல் தமிழ்ப் பிரிவை மூடுவதாக கொலோன் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்தது. அதன்பின், தமிழ்ப் பிரிவை காக்க ஜெர்மனி வாழ் தமிழர்கள் மற்றும் ஐரோப்பியத் தமிழர் கூட்டமைப்பு முயற்சி எடுத்தது. இதற்காக, தமிழக அரசிடமும் நிதி உதவி கேட்கப்பட்டிருந்தது.

இதற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு ரூ.1.25 கோடியும், ஐரோப்பியத் தமிழர் கூட்டமைப்பு சார்பில் ரூ.23 லட்சமும் நிதி வழங்கப்பட்டது. இதையடுத்து, கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பிரிவை மார்ச் 2023-ம் ஆண்டு வரை நீட்டிப்பதாக பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

---

6. கொரோனா தடுப்பூசி: உத்தரகாண்ட் மாநிலம் சாதனை – பிரதமர் மோடி பாராட்டு

உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முழுமையாக முதல் டோஸ் கொரோனா தடுப்பு ஊசி செலுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே ஹிமாச்சல் பிரதேஷ், கோவா உள்ளிட்ட மாநிலங்கள் தங்கள் மாநிலத்தில் உள்ள தகுதியுள்ள அனைவருக்கும் முதல் டோஸ் தடுப்பூசி செலுத்தி முடித்துள்ளனர். இதுகுறித்து ட்விட்டரில் பதிவிட்டுள்ள பிரதமர் மோடி தேவ பூமியில் வாழும் மக்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார். கொரோனாவுக்கு எதிரான தேசத்தின் போரில் உத்தரகாண்டின், சாதனை மிக முக்கியமானது என குறிப்பிட்டுள்ளார். பெருந்தொற்றுக்கு எதிரான போரில் இந்தியாவின் தடுப்பூசி திட்டம் மிக சிறப்பானதாக திகழப் போகிறது என்கிற நம்பிக்கை தமக்கு இருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி பதிவிட்டுள்ளார்.

---

7. இந்திய கடற்படைக்கு போயிங் 11-ஆவது பி-81 போர் விமானம்

அமெரிக்க விமானத் தயாரிப்பு நிறுவனமான போயிங்கிடமிருந்து 11-ஆவது பி-81 நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு போர் விமானத்தை இந்திய கடற்படை பெற்றுக்கொண்டது.

கடந்த 2009-ஆம் ஆண்டு போயிங் நிறுவனத்திடம் இருந்து 8 பி-81 விமானங்களை வாங்க பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டது. அந்த விமானங்கள் இந்திய கடற்படையிடம்

ஒப்படைக்கப்பட்ட நிலையில், மேலும் 4 பி–81 விமானங்களை வாங்க 2016–ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின்படி மூன்றாவது பி–81 விமானம் இந்திய கடற்படையிடம் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை 11 பி–81 விமானங்களை இந்திய கடற்படையிடம் போயிங் ஒப்படைத்துள்ளது. மேலும் ஒரு விமானம் வழங்கப்பட வேண்டியுள்ளது. நீர்மூழ்கிக் கப்பல்களை எதிர்க்கும் போர்த் திறன்களைக் கொண்ட பி–81 விமானங்கள் கடல்சார் உளவுப் பணியிலும் ஈடுபடுத்தப்படுகின்றன. அத்துடன் பேரிடர் காலங்களில் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் உதவவும் பயன்படுத்தப்படுகின்றன.

---

8. நோரி, பதோசா முதல் முறை சாம்பியன்

அமெரிக்காவில் நடைபெற்ற பிஎன்பி பாரிபாஸ் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்தின் கேமரூன் நோரி, மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் பௌலா பதோசா ஆகியோர் சாம்பியன் ஆகினர்.

இப்போட்டியில் இவர்கள் இருவரும் சாம்பியன் ஆனது இது முதல் முறையாகும். அதேபோல் அவர்கள் இதுவரை வென்ற பட்டங்களிலே இதுதான் மிகப்பெரிதும் கூட.

கரோனா சூழல் காரணமாக தாமதமாக நடத்தப்பட்ட இந்தப் போட்டியை பல நட்சத்திர போட்டியாளர்கள் தவிர்த்து விட, போட்டியில் பங்கேற்ற இதர முக்கிய வீரர், வீராங்கனைகளும் தோற்கடிக்கப்பட்டனர். இதனால் சர்வதேச தரவரிசையில் முதல் 25 இடங்களில் இல்லாத இருவர் சாம்பியன் ஆகியிருக்கின்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் போட்டித்தரவரிசையில் 21–ஆம் இடத்திலிருந்த கேமரூன் நோரி 3–6, 6–4, 6–1 என்ற செட்களில் 29–ஆம் இடத்திலிருந்த ஜார்ஜியாவின் நிகோலஸ் பாசிலாஷ்விலியை தோற்கடித்தார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் போட்டித்தரவரிசையில் 21–ஆம் இடத்திலிருந்த பௌலா பதோசா 7–6 (7/5), 2–6, 7–6 (7/2) என்ற செட்களில் 27–ஆவது இடத்திலிருந்த பெலாரஸின் விக்டோரியா அஸரென்காவை வீழ்த்தினார்.

பிஎன்பி பாரிபாஸ் ஓபன் போட்டியில் முதல் முறையாக களம் காணும் சீசனிலேயே சாம்பியன் ஆன 3–ஆவது வீராங்கனை என்ற பெருமையை பதோசா பெற்றுள்ளார். முன்னதாக அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் (1999), கனடாவின் பியான்கா ஆண்ட்ரிஸ்கு (2019) ஆகியோர் இவ்வாறு பட்டம் வென்றனர்.

உலகத்தரவரிசையில் 26–ஆவது இடத்தில் இருக்கும்போது இப்போட்டி –யில் சாம்பியன் ஆகியிருக்கும் 4–ஆவது வீரர் நோரி. முன்னதாக குரோஷியாவின் இவான் ஜுபிசிச் (2019), ஸ்பெயின் வீரர் அலெக்ஸ் காரெட்ஜா (2000), அமெரிக்காவின் ஜிம் கொரியர் (1991) ஆகியோர் அவ்வாறு சாம்பியன் ஆகியிருந்தனர்.

₹9 கோடி பரிசு

சாம்பியன் ஆகியிருக்கும் நோரி மற்றும் பதோசாவுக்கு தலா ரூ.9 கோடி ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

---

9. அமெரிக்காவின் முதல் கருப்பின வெளியுறவு அமைச்சர் காலமானார்

அமெரிக்காவின் முதல் கருப்பின வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்த காலின் பவெல் (84) திங்கள்கிழமை காலமானார். அவரின் மறைவுக்கு முன்னாள் அதிபர் ஜார்ஜ் டபிள்யு புஷ் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர், பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்டோருக்கு பாதுகாப்பு சார்ந்த ஆலோசனைகளை வழங்கும் அமைப்பின் தலைவராக கடந்த 1989ஆம் ஆண்டு காலின் பவெல் பொறுப்பேற்றார். 1991ஆம் ஆண்டு பனாமாவிலும் குவைத்திலும் இருந்து இராக் ராணுவத்தை வெளியேற் –றும் பணிகள் அவரின் மேற்பார்வையில் நடைபெற்றது. இதனால் அவர் மீது நன்மதிப்பு ஏற்பட்டது.

எனினும் இராக்குக்கு எதிராக அமெரிக்க போர் தொடுத்தது தொடர்பாக 2003–ஆம் ஆண்டு ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் விளக்கமளித்த பவெல், பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை சதாம் ஹுசேன் ரகசியமாக பதுக்கி வைத்திருந்ததாக தவறான தகவலை தெரிவித்தார். இது அவரின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியது.

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரை அமெரிக்க வெளியுறவு அமைச்சராக அவர் பதவி வகித்தார். இவரே அந்நாட்டின் முதல் கருப்பின வெளியுறவு அமைச்சர்.

---

10. மாஸ்கோவில் நேட்டோ அலுவலகங்கள் மூடப்படும்: ரஷியா அறிவிப்பு

மாஸ்கோவில் உள்ள நேட்டோ அலுவலகங்கள் மூடப்படும் என ரஷியா அறிவித்துள்ளது.

ரஷிய தலைநகர் மாஸ்கோவில் NATO கூட்டமைப்பின் அலுவலகங்கள் உள்ளன. நேட்டோ நாடுகளுடனான உயர்நிலை கூட்டங்களுக்காக அந்த அலுவலகங்களில் ரஷியா சார்பில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர். அவர்களில் 8 பேரை நோட்டோ கடந்த வாரம் நீக்கியது. அவர்கள் ரஷியாவின் உளவுத்துறை அதிகாரிகளாக ரகசியமாக செயல்பட்டதால் நீக்கியதாக நேட்டோ தெரிவித்தது.

---

1. சமீபத்தில் "மகாரத்னா" அந்தஸ்து கிடைக்கப்பெற்ற பொதுத்துறை நிறுவனம் எது?

அ) பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ☑

ஆ) இந்திய விமான நிலையங்கள் ஆணையம்

இ) பாரத் டைனமிக்ஸ் லிட்

ஈ) BEML லிட்

✓ பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷனுக்கு (PFC) மத்திய அரசு "மகரத்னா" அந்தஸ்தை வழங்கியுள்ளது. ஓஎன்ஜிசி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், SAIL போன்ற உயரடுக்கு குழுவில் சேர்ந்து, இவ்வந்தஸ்தைப் பெறும் 11 ஆவது பொதுத்துறை நிறுவனம் PFC மாறியுள்ளது. 3 ஆண்டுகளுக்கு ₹5,000 கோடிக்கு மேல் நிகர இலாபத்தை பதிவு செய்த ஒரு நிறுவனத்–திற்கு "மகரத்னா" அந்தஸ்து வழங்கப்படுகிறது.

---

2. 2021 – உலக கீல்வாத நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Don't Delay, Connect Today: Time2Work ☑

ஆ) Leaving No one behind

இ) Misdiagnosis in Arthritis

ஈ) 25 years of Arthritis Day

✓ வாத மற்றும் தசைக்கூட்டு நோய்களின் இருப்பு மற்றும் தாக்கம் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.12 அன்று உலக கீல்வாத நாள் கடைபிடிக்கப்படுகிறது. இந்த நாள், முதன்முதலில் கடந்த 1996'இல் அனுசரிக்கப்பட்டது. "Don't Delay, Connect Today: Time2Work" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

3.மத்திய உள்துறை அமைச்சகமானது கூர்கா பிரதிநிதிகள் மற்றும் எந்த மாநில அரசுடன் முத்தரப்பு பேச்சுவார்த்தையை தொடங்கியது?

அ) ஒடிஸா

ஆ) மேற்கு வங்கம் ☑

இ) அஸ்ஸாம்

ஈ) ஜார்க்கண்ட்



✓ மத்திய உள்துறை அமைச்சகமானது டார்ஜிலிங் குன்றுகள், டெர்ராய் மற்றும் தூர்ஸ் பிராந்தியத்தின் கூர்கா பிரதிநிதிகள் மற்றும் மே. வங்க மாநில அரசாங்கத்துடன் முத்தரப்பு பேச்சுவார்த்தையைத் தொடங்கியது.

✓ வட வங்கப் பிராந்தியத்தில் மாநில அந்தஸ்து கோரிக்கைக்கு தீர்வு காணும் நோக்கத்தில் இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது. மேற்கு வங்க மாநில அரசாங்க அதிகாரிகளுடனான இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை, 2021 நவம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

---

4. 'செந்நாய்' என்றும் அழைக்கப்படுகிற விலங்கினம் எது?

அ) ஆசிய காட்டு நாய் ☑

ஆ) கழுதைப்புலி

இ) தென்னாப்பிரிக்க ஓநாய்

ஈ) ஆப்பிரிக்க யானை



✓ 'செந்நாய்' (Cuon alpinus) என்பது மத்திய, தெற்கு, கிழக்கு & தென்கிழக்கு ஆசியாவை பூர்வீகமாகக் கொண்ட ஒரு விலங்கு ஆகும். ஆசிய காட்டு நாய், இந்திய காட்டு நாய், விசில் நாய், சிவப்பு நாய் மற்றும் மலை ஓநாய் ஆகியவை இவ்வினங்களுக்கான பிறபெயர்களாகும். இது வனவுயிரிச் (பாதுகாப்பு) சட்டம், 1972'இன்கீழ் உள்ள அட்டவணை–II இனமாகும்.

✓ சமீபத்திய ஆய்வில், 114 முன்னுரிமைகொண்ட வட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அங்கு செந்நாய் அல்லது ஆசிய காட்டு நாயின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக வாழ்விடங்களை ஒருங்கிணைக்–க முடியும். இவ்விலங்குகள் இந்தியா முழுவதும் காணப்படுகின்றன.

---

5. புதிய நோய்க்கிருமிகளின் தோற்றுவாய் (SAGO) குறித்த அறிவியல் ஆலோசனைக் குழுவை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?

அ) UNICEF

ஆ) உலக நலவாழ்வு நிறுவனம் ☑

இ) உணவு & உழவு அமைப்பு

ஈ) ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம்

✓ உலக நலவாழ்வு அமைப்பின் தலைமை இயக்குநர் புதிய நோய்க்கிருமி–களின் தோற்றுவாய் (SAGO) குறித்த WHO அறிவியல் ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளார். வளர்ந்துவரும் & மீண்டும் தோன்றுகின்ற நோய்க்கிருமிகள்பற்றிய தொழில்நுட்ப மற்றும் அறிவியல் பரிசீலனைகள் குறித்து SAGO, செயலகத்திற்கு ஆலோசனை வழங்கும். ஓர் இந்திய தொற்றுநோயியல் நிபுணரான Dr இராமன் கங்காகேட்கர், COVID–19 தொற்றுநோயின் தோற்றுவாயை தீர்மானிப்பதற்கான உலக நலவாழ்வு அமைப்பின் அறிவியல் ஆலோசனைக்குழுவின் ஒருபகுதியாக இருப்பார்.

---

6. மலபார் தொடர் பயிற்சிகளானது இந்தியாவிற்கும் எந்நாட்டிற்கும் இடையிலான இருதரப்பு கடற்படை பயிற்சியாக, கடந்த 1992ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது?

அ) அமெரிக்கா ☑

ஆ) பிரான்ஸ்

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்



✓ மலபார் தொடர்பயிற்சிகள் என்பது இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே ஆண்டுதோறும் நடத்தப்படும் இருதரப்பு கடற்படை பயிற்சியாக கடந்த 1992'இல் தொடங்கியது. ஜப்பானிய கடல்சார் சுய பாதுகாப்பு படை, இராயல் ஆஸ்திரேலியா கடற்படை மற்றும் அமெரிக்க கடற்படை உடன் பலதரப்பு கடல்சார் பயிற்சியான மலபாரின் இரண்டாம் பகுதியில் இந்திய கடற்படை பங்கேற்கும்.

✓ வங்காள விரிகுடாவில் 2021 அக்.12–15 வரை இப்பயிற்சி நடைபெறும். பிலிப்பைன்ஸ் கடற்பகுதியில் 2021 ஆகஸ்ட்.26–29 வரை முதல் கட்ட பயிற்சி நடைபெற்றது.

---

7. 'Fiscal Monitor' அறிக்கையை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) உலக வங்கி

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி

இ) பன்னாட்டுச் செலவாணி நிதியம் ☑

ஈ) உலக வர்த்தக அமைப்பு

✓ பன்னாட்டுச் செலவாணி நிதியத்தின் 'Fiscal Monitor' அறிக்கையின்படி, உலகளாவிய கடன் $226 டிரில்லியன் டாலர் என்ற புதிய உச்சத்திற்கு உயர்ந்துள்ளது. 2020ஆம் ஆண்டில் உலகளாவிய கடன் குவிப்பில், மேம்பட்ட பொருளாதாரங்களும் சீனாவும் 90 சதவீதத்திற்கும் மேலாக பங்களித்தன. இந்தியாவின் கடன், 2016ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 68.9 சதவீதத்திலிருந்தது.

✓ அது, 2020ஆம் ஆண்டில் 89.6 சதவீதமாக அதிகரித்துள்ளது. அது, 2021 ஆம் 90.6 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

8. 2021'இல் வெளியிடப்பட்ட அரசாங்கத்தின் சமீப அறிவிப்பின்படி, கருக்கலைப்பிற்கான அதிகபட்ச கால வரம்பு என்ன?

அ) 12 வாரங்கள்

ஆ) 18 வாரங்கள்

இ) 20 வாரங்கள்

ஈ) 24 வாரங்கள் ☑



✓ அரசாங்கத்தின் புதிய விதிகளின்படி, இந்தியாவில் கர்ப்பத்தை கலைப்ப–தற்கான அதிகபட்ச காலவரம்பு 24 வாரங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வரம்பு, முன்பு 20 வாரங்களாக இருந்தது.

✓ கர்ப்ப (திருத்தம்) விதிகள், 2021'இன்கீழ், பாலியல் வன்கொடுமை, பாலி–யல் வன்புணர்வு அல்லது தகாத உடலுறவு, 18 வயதெய்தா சிறார்கள் உள்ளிட்ட பெண்கள், கர்ப்ப காலத்தில் மணநிலை மாறும் பெண்கள் (கைம்பெண் & மணமுறிவு) மற்றும் உடல் குறைபாடுகள் உள்ளவர்கள் இந்தப் புதிய வரம்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

9.சமீப செய்திகளில் இடம்பெற்ற சேலா சுரங்கப்பாதை அமைந்துள்ள மாநிலம் எது?

அ) உத்தரகாண்ட்



ஆ) சிக்கிம்

இ) அருணாச்சல பிரதேசம் ☑

ஈ) அஸ்ஸாம்

✓ பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் சமீபத்தில் அருணாச்சல பிரதேசத்தில் உள்ள சேலா சுரங்கப்பாதையின் இறுதிக்கட்டத்தை மெய்நிகராக வெளிக்காட்டினார். சுரங்கப்பாதையின் கட்டுமானம் 2022 ஜூனுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

✓ சேலா சுரங்கப்பாதை உலகின் மிகப்பெரிய இருவழிச்சுரங்கப்பாதையாக 13,000 அடிக்கும் மேலான உயரத்தில் வீற்றிருக்கும் என்று எதிர்பார்க்க –ப்படுகிறது. இதன் கட்டுமானம் எல்லைப்புறச்சாலைகள் அமைப்பால் (BRO) மேற்கொள்ளப்படுகிறது. இந்தச் சுரங்கப்பாதை சேலா கணவாய் வழியாக செல்கிறது. அருணாச்சல பிரதேச மாநிலம் வழியாக சீன எல்லைக்கான தூரத்தை 10 கிமீ வரை இது குறைக்கும்.

---

10. 'WHO தலைமை இயக்குநர்' விருதுபெற்ற ஹென்றிட்டா லாக்ஸ் சார்ந்த நாடு எது?

அ) அமெரிக்கா ☑



ஆ) ஆஸ்திரேலியா

இ) இந்தியா

ஈ) ஜெர்மனி

✓ உலக நலவாழ்வு அமைப்பின் தலைவர், காலஞ்சென்ற ஹென்றிட்டா லாக்சிற்கு 'WHO'இன் தலைமை இயக்குநர் விருது வழங்கி கௌரவித் –தார். அமெரிக்கப் பெண்மணியான லாக்சிற்கு தெரியாமல், 1950'களில் அவரிடமிருந்து புற்றுநோய் செல்கள் பெறப்பட்டன. கொரோனா வைரஸ் பற்றிய ஆராய்ச்சி உட்பட பரந்த அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு அந்தச் செல்கள் ஓர் அடித்தளத்தை வழங்கின. ஹென்றிட்டா லாக்ஸின் முதல் 2 எழுத்துகளிலிருந்து பெறப்பட்ட 'HeLa' செல்கள், மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசிகளின் உருவாக்கத்திற்கு உதவின.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மகப்பேறு நிதியுதவி கிடைப்பதில் தாமதமா? – '104'ஐ தொடர்பு கொள்ளலாம்: பொது சுகாதார இயக்குநர் தகவல்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால் '104' மருத்துவ சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம் என்று பொது சுகாதாரத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட வீடியோ பதிவில் கூறியதாவது:

மத்திய, மாநில நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தில் தற்போது ₹18,000 வழங்கப்படுகிறது. 5 தவணைகளாக இந்த நிதி வழங்கப்படும்.

19 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இதை பெற தகுதியுடையவர்கள். இலங்கைத் தமிழர்கள் முழுமையாகவும், வெளி மாநிலத்தவர்கள் 2 தவணையில் பெற்றும்பயனடையலாம். ஆரோக்கியமான குழந்தை பிறப்புக்காக, ஆண்டுக்கு ₹950 கோடியை அரசு வழங்குகிறது. இதில் ₹10 இலட்சம் பேர் பயனடைகின்றனர். ஆனாலும், முறையாக நிதியுதவி கிடைக்கவில்லை என 100'க்கும் மேற்பட்ட புகார்கள் மாதந்தோறும் வருகின்றன. நிதியுதவி பெற முடியாதவர்கள், அந்தந்த ஆரம்ப சுகாதார நிலைய அதிகாரிகளிடம் இதுபற்றி தெரிவிக்கலாம்.

---

2. மத்திய கிழக்கு, ஆசிய விவகாரங்கள்: 4 நாடுகள் பேச்சுவார்த்தை

அமெரிக்கா, இஸ்ரேல், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், மத்திய கிழக்கு, ஆசிய விவகாரங்கள் குறித்து வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

இஸ்ரேலில் அமைச்சர் ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். சுற்றுப்பயணத்தின் 2ஆவது நாளில் நான்கு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு காணொலி வாயிலாக நடைபெற்றது. அதில் அமைச்சர் ஜெய்சங்கர், அமெரிக்க அமைச்சர் ஆன்டனி பிளிங்கன், இஸ்ரேல் அமைச்சர் யாயிர் லபீட், ஐக்கிய அரபு அமீரக அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் ஜயீத் அல் நயன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தப் பேச்சுவார்த்தை குறித்து அமைச்சர் ஜெய்சங்கர் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'பொருளாதார வளர்ச்சி, சர்வதேச விவகாரங்கள் ஆகியவற்றில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்குப் பேச்சுவார்த்தையின்போது ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்பேச்சுவார்த்தை சார்ந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும் ஒப்புக்கொள் –ளப்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒத்துழைப்பு மேம்பாடு: பேச்சுவார்த்தை தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் வெளியிட்ட அறிக்கையில், 'மத்திய கிழக்கு, ஆசிய விவகாரங்களில் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக வெளியுறவு அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினார்.

வர்த்தகம், பருவநிலைமாற்றத்தை எதிர்கொள்வது, எரிசக்தி ஒத்துழைப்பு, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தினர். அறிவியல்–தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றில் நான்கு தரப்பு நாடுகளின் மக்களுக்கு இடையேயான நல்லுறவை வளர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் விவா –தித்தனர். கரோனா தொற்று பரவலைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தில் ஒத்துழைத்து செயல்படுவது தொடர்பாகவும் அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய விமானப்படை வீரர்களுடன் சந்திப்பு

இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, கிரீஸ், இஸ்ரேல் ஆகிய 8 நாடுகளின் விமானப் படைகள் பங்கேற்கும் 'புளூ ஃப்ளாக்' (நீலக்கொடி) கூட்டுப் பயிற்சி ஜெருசலேம் நகரில் நடைபெற்று வருகிறது. அதில் இந்திய விமானப் படையைச் சேர்ந்த 85 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். அவர்களை அமைச்சர் ஜெய்ங்கர் சந்தித்துப்பேசினார்.

'மிராஜ் 2000' போர் விமானங்கள் உள்ளிட்டவையும் இந்தியா சார்பில் கூட்டுப்பயிற்சியில் பங்கேற்றுள்ளன. இக்கூட்டுப் பயிற்சியானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

---

3. உலகளாவிய உணவுப் பாதுகாப்பு குறியீடு: இந்தியாவுக்கு 71ஆவது இடம்

உலகளாவிய உணவுப் பாதுகாப்பு குறியீட்டில் இந்தியா 71ஆவது இடம் பிடித்துள்ளது. மலிவாக உணவு கிடைக்கும் நாடுகளில் இந்தியாவை பாகிஸ்தான் பின்னுக்குத் தள்ளியுள்ளது.

பிரிட்டனின் தி எகனாமிஸ்ட் ஊடகக் குழுமத்தைச் சேர்ந்த அமைப்பு உணவின் தரம், பாதுகாப்பு, மலிவான விலை உள்ளிட்டவற்றின் அடிப்படையில் 113 நாடுகளில் உணவு பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டது. அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, உணவுப் பாதுகாப்பு குறியீட்டில் இந்தியா 71ஆம் இடத்தில் இடம்பெற்றுள்ளது. சீனா 34ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 75ஆவது இடத்தில் பாகிஸ்தான், 77ஆவது இடத்தில் இலங்கை, 79ஆவது இடத்தில் நேபாளம், 84ஆவது இடத்தில் வங்கதேசம் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

மலிவாக உணவு கிடைக்கும் நாடுகளின் பிரிவில், இந்தியாவை பாகிஸ்தான் பின்னுக்குத் தள்ளியுள்ளது. அந்தப் பிரிவில் பாகிஸ்தான் 52.6 புள்ளிகளையும் இந்தியா 50.2 புள்ளிகளையும் பெற்றுள்ளன.

எனினும் உணவு உற்பத்திக்காக இயற்கை வளங்களை பாதுகாப்பது, உணவு எளிதாகக் கிடைப்பது, அதன் தரம், பாதுகாப்பு ஆகியவற்றில் பாகிஸ்தான், நேபாளம், வங்கதேசம், இலங்கை நாடுகளை இந்தியா விஞ்சியுள்ளது. 2030ஆம் ஆண்டுக்குள் பட்டினி என்பதே இல்லாத நிலை என்ற ஐநா'ன் இலக்கை எட்டுவதில் உள்ள அமைப்பு ரீதியிலான இடைவெளிகள், அந்த இலக்கை எட்டுவதற்கு துரிதப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்தும் நோக்கில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுதொர்பான ஆய்வின்போது உலகளாவிய உணவுப் பாதுகாப்பு தொடர்ந்து 2ஆவது ஆண்டாகக் குறைந்துள்ளது தெரியவந்துள்ளது. ஐநா'இன் பட்டினி என்பதே இல்லாத நிலையை உருவாக்கும் இலக்கில் தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக முன்னேற்றம் ஏற்பட்டு வந்த நிலையில், தற்போது பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

---

4. கீழடியில் 8ஆம் கட்ட அகழாய்வு குறித்து இன்னும்முடிவு எடுக்கவில்லை: அமைச்சர் தங்கம் தென்னரசு

கீழடியில் 8ஆம் கட்ட அகழாய்வு நடத்துவது குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை என தமிழக தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

அகழாய்வில் கண்டறியப்பட்ட உறைகிணற்றில் மீன் சின்னம்

கீழடியில் நடைபெற்ற 7ஆம் கட்ட அகழாய்வில் பல அடுக்குகள் கொண்ட கை வேலைப்பாடுகளால் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்ட சுடுமண் உறைகிணறு கண்டறியப்பட்டது. இந்த உறைகிணற்றில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது தற்போது தெரியவந்துள்ளது. அந்த உறை கிணற்றின் விளிம்பு பகுதியில் கழுத்துக்கு கீழ் வால் மட்டுமே தெரியும்படி அந்த மீன் சின்னம் காணப்படுகிறது. அமைச்சர் தங்கம் தென்னரசு தனது முகநூல் பக்கத்தில் மீன் சின்னம் பொறிக்கப்பட்ட சுடுமண் உறை கிணற்றின் நிழற்படத்தை பதிவிட்டு, கீழடியில் முதன்முறையாக மீன் சின்னம் பொறிக்கப்பட்ட உறைகிணறு கிடைத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

1. பாக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுகளை கண்காணிப்பதற்காக, உயிரி தொழினுட்ப துறையால் தொடங்கப்பட்டுள்ள கூட்டமைப்பின் பெயரென்ன?

அ) பாரத் ஹெல்த்

ஆ) ஒன் ஹெல்த் ☑

இ) COVID வாரியர்

ஈ) ஹெல்த் ஹீரோஸ்

✓ தொற்றுநோய்களை எதிர்கொள்வதில் ஒரே மாதிரியான சுகாதார முயற்சிகளின் முக்கியத்துவத்தை COVID பெருந்தொற்று வலியுறுத்தியது.

✓ இவ்வவசரத்தேவையை கருத்தில்கொண்டு, COVID-19'க்கும் பின்பான நாட்டின் முதல் 'ஒன் ஹெல்த்' கூட்டமைப்பை இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிரி தொழில்நுட்பத் துறையால் தொடங்கப்பட்டுள்ளது. நாட்டில் முக்கிய பாக்டீரியா, வைரஸ் மற்றும் இதர தொற்றுகளை கண்காணித்து, அவற்றின் போக்கை புரிந்துகொண்டு, அவற்றை எதிர்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை பரிந்துரைப்பதே இந்தக் கூட்டமைப்பின் நோக்கமாகும்.

✓ ஹைதரபாத்தில் உள்ள உயிரி தொழில்நுட்பத் துறை – விலங்குகள் உயிரி தொழில்நுட்பத்திற்கான தேசிய நிறுவனம் தலைமையிலான இந்தக் கூட்டமைப்பில் 27 அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

---

2. சமீப செய்திகளில் இடம்பெற்ற தவாங் கந்தன் நம்க்யல் லாட்ஸே (தவாங் மடாலயம்) அமைந்துள்ள நாடு எது?

அ) இந்தியா ☑



ஆ) நேபாளம்

இ) தாய்லாந்து

ஈ) தென் கொரியா

✓ திபெத்திய பௌத்தத்தின் இரண்டாவது பெரிய மடமான தவாங் கந்தன் நம்க்யல் லாட்சே (தவாங் மடாலயம்) ஆனது அருணாச்சல பிரதேசத்தின் தவாங் மாவட்டத்தில் அமைந்துள்ளது. துணைக் குடியரசுத்தலைவர் M வெங்கையா, சமீபத்தில் அருணாச்சல பிரதேச மாநிலத்திற்கு சென்றதற்-கு சீனாவின் ஆட்சேபனையை இந்தியா கடுமையாக நிராகரித்தது.

✓ அருணாச்சல பிரதேசத்திற்கு இந்தியத்தலைவர்கள் வருகைதருவதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அது தெற்கு திபெத்தின் ஒருபகுதி ஆகும். தவாங், இந்தியாவின் வடகிழக்கு பிராந்தியத்திற்கு ஓர் உத்தி சார் நுழைவை வழங்குகிறது. திபெத்துக்கும் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கி-ற்கும் இடையிலான வழித்தடத்தில் இது ஒரு முக்கியப்புள்ளியாகும்.

---

3. பின்வரும் எந்த ஆயுதப்படைக்கு, குடியரசுத்தலைவரின் தத்ரக்ஷக் பதக்கம் வழங்கப்படுகிறது?

அ) கடலோர காவல்படை ☑

ஆ) எல்லைப் பாதுகாப்பு படை

இ) இந்திய கடற்படை

ஈ) மத்திய சேமக்காவல் படை

✓ இந்திய கடலோர காவல்படையின் வீரர்களுக்கு குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், குடியரசுத்தலைவரின் தத்ரக்ஷக் பதக்கம் மற்றும் தத்ராக்ஷக் பதக்கத்தை வழங்கினார். 1990 ஜனவரி 26 முதல் ஒவ்வோர் ஆண்டும் குடியரசு நாள் மற்றும் சுதந்திர நாளன்று இந்திய கடலோர காவல்படை வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

---

4. "தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய பங்களிப்புக்கான லோகப்ரியா கோபிநாத் போர்டோலோய் விருது", எந்த மாநிலத்தால் வழங்கப்படுகிறது?

அ) தமிழ்நாடு



ஆ) மகாராஷ்டிரா

இ) ஒடிஸா

ஈ) அஸ்ஸாம் ☑

✓ 'லோகப்ரியா கோபிநாத் போர்டோலோய் விருது' என்பது தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய பங்களிப்புக்காக அசாம் மாநில அரசால் வழங்கப்படும் மிகவுயரிய குடிமக்கள் விருது ஆகும்.

✓ விடுதலைப்போராளியான கோபிநாத் போர்டோலோய், சுதந்திரத்திற்குப் பிறகு அஸ்ஸாமின் முதல் முதலமைச்சராக இருந்தார். இந்த விருது ₹5 இலட்சம் ரொக்கப்பரிசு, சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த ஆண்டுக்கான விருதை துணைக்குடியரசுத்தலைவர் M வெங்கையா வழங்கினார்.

---

5. அபி அகமது, எந்த நாட்டின் பிரதமராக பதவியேற்றார்?

அ) இஸ்ரேல்



ஆ) ஈரான்

இ) எத்தியோப்பியா ☑

ஈ) வெனிசுலா

✓ அபி அகமது, மீண்டும் எத்தியோப்பியாவின் பிரதமராக பதவியேற்றார். டிக்ரேயின் வடக்கு பகுதியில் நிகழ்ந்து வரும் நீண்ட மோதல்கள் உட்பட நிறைய சவால்களை அவ்வரசாங்கம் எதிர்கொள்கிறது. அபி அகமதின் பிராஸ்பர்டி கட்சி, இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அண்டை நாடான எரித்ரியாவுடனான உறவை மீட்டெடுத்ததற்காக, 2019ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அபி அகமதுக்கு வழங்கப்பட்டது.

6.40ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியை நடத்தவுள்ள நகரம் எது?

அ) மும்பை



ஆ) புது தில்லி ☑

இ) வாரணாசி

ஈ) அகமதாபாத்

✓ இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பானது (ITPO) நவம்பர் 14 முதல் 27 வரை புது தில்லி பிரகதி மைதானத்தில் 40ஆவது இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியை நடத்தவுள்ளது. பொருளாதாரம், ஏற்றுமதி திறன், உட்கட்டமைப்பு விநியோகச் சங்கிலி, தேவை மற்றும் துடிப்பான மக்கள் தொகை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் 'ஆத்மநிர்பார் பாரத்' என்ற கருப்பொருளின்கீழ் இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது.

✓ இந்த நிகழ்வு "ஆசாதிகா அம்ருத் மகோத்சவின்" ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

7. உலக வாழ்விட நாள் கடைபிடிக்கப்படுகிற தேதி எது?

அ) அக்டோபர் முதல் திங்கள் ☑



ஆ) அக்டோபர் முதல் ஞாயிறு

இ) செப்டம்பர் கடைசி ஞாயிறு

ஈ) செப்டம்பர் கடைசி சனிக்கிழமை

✓ ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதத்தின் முதல் திங்கட்கிழமை, ஐநா அவையால், "உலக வாழ்விட நாள்" என அனுசரிக்கப்படுகிறது.

✓ அனைவருக்கும் போதுமான தங்குமிடத்தை வலியுறுத்தி இந்நாள் அனு-சரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, அக்டோபர்.4 அன்று அனுசரிக்கப்பட்டது. "Accelerating urban action for a carbon-free world" என்பது இந்த ஆண்டு (2021) உலக வாழ்விட நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

8. 'அஜெயா வாரியர்' என்ற பாதுகாப்புப் பயிற்சி, இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடத்தப்படுகிறது?

அ) இங்கிலாந்து ☑



ஆ) பிரான்ஸ்

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்

✓ இந்தியாவும் பிரிட்டனும் உத்தரகண்டின் சௌபாத்தியாவில் 2 வாரகால இராணுவப் பயிற்சியான 'அஜெயா வாரியரை' தொடங்கின. இது, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்-படுத்துவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இந்திய இராணுவத்தின் கூற்றுப்படி, 'அஜெயா வாரியர்' பயிற்சியின் இப்பதிப்பானது, இயங்குதிற-ன் மற்றும் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்கிறது.

---

9. புவிசார் குறியீடு (GI) பெற்றுள்ள கருப்பூர் கலம்காரி ஓவியங்கள் மற்றும் கள்ளக்குறிச்சி மரச்சிற்ப வேலைப்பாடுகள் சார்ந்த மாநிலம் எது?



அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஹரியானா

✓ தமிழ்நாட்டைச்சார்ந்த கருப்பூர் கலம்காரி ஓவியங்கள் & கள்ளக்குறிச்சி மரச்சிற்ப வேலைப்பாடுகட்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. குறிப்பிட்ட புவிசார் தோற்றங்கொண்ட தயாரிப்பு –களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது. அது அந்தத் தயாரிப்புக்கு முக்கியத்துவத்தை சேர்க்கிறது. இது பொருட்களுக்கான புவிசார் குறியீ –டுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

---

10. மரணதண்டனைக்கு எதிரான உலக நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) அக்டோபர்.8

ஆ) அக்டோபர்.10 ☑

இ) அக்டோபர்.12

ஈ) அக்டோபர்.14

✓ அக்.10 அன்று மரணதண்டனைக்கு எதிரான உலக நாள் அனுசரிக்கப்ப –டுகிறது. இந்த ஆண்டு (2021) உலகெங்கிலுமுள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஆரோக்கியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதில் இதன் கருப்பொருள் கவனஞ்செலுத்துகிறது. பன்னாட்டு மன்னிப்பு அவையின் 2020–மரணதண்டனை அறிக்கையின்படி, உலகின் 2/3 பங்கு நாடுகள், சட்டம் அல்லது நடைமுறையின்மூலம் மரணதண்டனையை ரத்துசெய்துள்ளன. 108'க்கும் மேற்பட்ட நாடுகள் அனைத்து விதமான குற்றங்களுக்கும் மரணதண்டனையை முற்றிலும் இரத்துசெய்துள்ளன. இவ்வறிக்கையின்படி, குறைந்தது கடந்த 2020ஆம் ஆண்டில் மட்டும் 483 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. முதல்கட்டமாக 6,429 கிராமப் பஞ்சாயத்துகளில் – பாரத்நெட் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்: அமைச்சர் முன்னிலையில் கையெழுத்தானது

பாரத்நெட் திட்டத்தை முதல்கட்டமாக 6,429 கிராம பஞ்சாயத்துகளில் செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

நாட்டிலுள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளுக்கு அதிவேக அலைக் கற்றைமூலம் இணைய சேவை வழங்க பாரத்நெட் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. தமிழகத்தில் 12,525 கிராம பஞ்சாயத்துகளுக்கு இணையச்சேவை வழங்க ₹1815.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.

அதன்படி, தகவல் தொழில்நுட்பத்துறையின் தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (பைபர்நெட் கழகம்) பாரத்நெட் திட்ட –தைச் செயல்படுத்துவதற்காக A, B, C, D என்ற நான்கு தொகுப்புகளாக மாநிலத்தைப் பிரித்துள்ளது.

இந்நிலையில், C தொகுப்பில் உள்ள நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, நாமக்கல், கரூர், கோவை, திருப்பூர், திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள 3,326 கிராம பஞ்சாயத்துகளும் D தொகுப்பில் கன்னியாகுமரி, நெல்லை, தென்காசி, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள 3,103 கிராம பஞ்சாயத்துகளுக்கும் பாரத்நெட் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இதற்காக L&T, ஐடிஐ, பிஇசிஐஎல் ஆகிய நிறுவனங்களுடன் பைபர்நெட் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

---

2. குஷி நகர் விமான நிலையத்தை தொடங்கி வைத்தார் பிரதமர்:

உத்தரப் பிரதேச மாநிலத்தில் குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை பிரதமர் மோடி திறந்துவைத்து பேசியதாவது:

ஏர் இந்தியா – டாடா நிறுவனம் இடையிலான ஒப்பந்தம் இத்துறையில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டுவரும், விமானப் போக்குவரத்தில் இது முக்கிய மைல்கல்லாக அமையும். இந்த நடவடிக்கையானது விமான போக்குவரத்துத் துறைக்கு புதிய புத்துணர்வை அளிக்கும்.

இந்தப் புதிய விமான நிலையம் தொடங்கப்பட்டதன்மூலம் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், கடை உரிமையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர் தொழிலதிபர்கள் உள்ளிட்டோர் பயனடைவர். இந்தப் பகுதியில் தொழில்வளம் பெருக இது உதவியாக இருக்கும். சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு இது வழிவகுக்கும். இதன்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அடுத்த 4 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் 200 விமான நிலையங்கள், ஹெலிகாப்டர் இறங்குதளங்கள் மற்றும் தண்ணீரில் ஹெலிகாப்டர் இறங்கும் வசதிகளை உருவாக்குவதே அரசின் இலக்கு.

குஷிநகர் பகுதிதான் மகான் கவுதம புத்தர் மகாபரிநிர்வாண நிலை (உயிர்நீத்தல்) எட்டிய இடமாகும். புத்தமதத்தைப் பின்பற்றுவோருக்கு இப்பகுதி மிகவும் முக்கியமான புனித தலமாகும். உலகெங்கும் உள்ள புத்த மதத்தினர் இறுதியில் இப்பகுதியை வந்து தரிசிக்க இந்த சர்வதேச விமான நிலையம் உறு துணையாக இருக்கும் என்றார்.

குஷிநகர் சர்வதேச விமான நிலையத்துக்கு முதலாவது விமானமாக லங்கன் ஏர்லைன்ஸ் விமானம் வந்ததாக இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சர் நமல் ராஜபக்ஸ தெரிவித்தார். இந்த சர்வதேச விமான நிலையம் ₹260 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

---

3. அருணாச்சல் எல்லையில் பீரங்கிகளைக் குவித்த இந்தியா

சீனா உடனான அருணாச்சல் எல்லைப் பகுதியில் பீரங்கிகளை மத்திய அரசு குவித்துள்ளது. இந்தியா–சீனா இடையே நீண்டகாலமாக எல்லைப் பிரச்னை நிலவிவருகிறது. இருதரப்பினரிடையே அவ்வப்போது பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தாலும் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகின்றது. இந்நிலையில் கடந்த வாரம் அருணாச்சலப் பிரதேசத்திற்கு அரசுமுறைப் பயணமாக துணைக் குடியரசுத் தலைவர் வெங்கய்யா சென்றிருந்தார். இடாநகரில் உள்ள சட்டப்பேரவையிலும் அவர் உரையாற்றினார். இதற்கு சீனா கடுமையான எதிர்ப்பு தெரிவித்தது.

சீனாவின் இந்தக் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த இந்திய வெளியுறவுத் துறை அந்நாட்டின் வெளியுறவுத் துறையின் கருத்தை நிராகரிப்பதாக கண்டனம் தெரிவித்தது.

இந்நிலையில் அருணாச்சலப் பிரதேசத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப்பகுதியான தாவங் பகுதியில் இந்திய ராணுவம் பீரங்கிகளைக் குவித்துள்ளது. இதனால் இருதரப்பு எல்லைப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரை சீனா–இந்தியா இடையே 13 கட்டப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

---

4. மெரீனாவில் மூழ்குவதைத் தடுக்க தனி பிரிவு தொடக்கம்

சென்னை: சென்னை மெரீனா கடற்கரையில் மூழ்குதல் தடுப்புப் பிரிவு புதன்கிழமை தொடங்கப்பட்டது.

இது குறித்த விவரம்:

சென்னை மெரீனா கடற்கரையில் பொதுமக்களின் உயிரைப் பாதுகாக்க 'பல்வகை குழு அடங்கிய மூழ்குதல் தடுப்புப்பிரிவு' தொடங்கப்பட்டது.

மீட்புக்கு 3 திட்டங்கள்:

சம்பவத்துக்கு முன், சம்பவத்தின் போது, சம்பவத்துக்கு பின் என தடுப்புக் குழுவானது மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நிலையிலும் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

'சம்பவத்துக்கு முன்' திட்டத்தில் கடலில் இறங்குவதற்கு தடை விதித்தல், கடற்கரையில் அறிவிப்புப் பலகைகள் வைத்தல், சமூக ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், உயிர்காக்கும் உபகரணங்களைத் தயார் நிலையில் வைத்திருத்தல், கடற்கரையில் ஒலிபெருக்கிமூலம் எச்சரிக்கை செய்தல் ஆகிய பணிகளில் இந்தப் பிரிவு ஈடுபடும்.

'சம்பவத்தின்போது' என்ற நிலையில், உடனடியாக மீட்புக் குழுவினர் தக்க இயந்திரங்கள், உபகரணங்களுடன் மீட்புப்பணியில் ஈடுபட்டு பாதிக்கப்பட்டவர்களை மீட்பர். 'சம்பவத்துக்கு பின்' என்ற நிலையில் மீட்புக்குழுவினரால் மீட்கப்பட்டவர்களுக்கு தயார்நிலையில் வைக்கப்பட –டுள்ள மருத்துவக் குழுவினர் உடனடியாக முதலுதவி சிகிச்சையளித்து காப்பாற்றுவர். இந்தத் தடுப்புப் பிரிவில் காவல்துறை, கடலோரப் பாதுகாப்புக் குழுமம், தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர், மீனவர்கள்,

முதலுதவிக் குழுவினர் ஆகியோர் இடம்பெறுகிறார்கள். மீட்புப்பணிக்காக கட்டுமரம், உயிர்காக்கும் உடைகள், அதிவேக படகுகள், மிதவைப் படகுகள், கயிறுகள் போன்ற பல்வேறு இயந்திரங்கள், உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடல் அலைகளின் தன்மை ஆய்வு:

கடல் அலைகளின் தன்மை, அலைகளில் தீவிரம் ஏற்படும் நாள்கள், ஆபத்து நிறைந்த ஆழமான பகுதிகள் போன்றவற்றை பற்றி ஒரு விரிவான ஆராய்ச்சியை தேசிய பெருங்கடல் தொழில்நுட்ப நிறுவனம், கடல்சார் பல்கலைக்கழகத்தின் வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள்மூலம் மேற்கொண்டு அறிக்கை பெறப்படவுள்ளது. இந்த ஆய்வறிக்கையின் அடிப்படையில் காவல்துறை அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளது.

---

5. கரோனா தடுப்பூசிகளுக்கு பரஸ்பர அங்கீகாரம்: 11 நாடுகளுடன் இந்தியா ஒப்பந்தம்

கரோனா தடுப்பூசிகளுக்கு பரஸ்பர அங்கீகாரம் அளிக்கும் வகையில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட 11 நாடுகளுடன் இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இதன்மூலம், தடுப்பூசியை முழுமையாக செலுத்திக்கொண்ட பயணிகள் எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி இந்த நாடுகளுக்கு சென்றுவர முடியும்.

இந்தத் தகவலை தெரிவித்த மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம், அதன் அடிப்படையில் இந்தியா வரும் சர்வதேச பயணிகளுக்கான புதிய வழிகாட்டுதலையும் வெளியிட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக இதுவரை வெளியிடப்பட்ட அனைத்து வழிகாட்டுதலுக்கும் மாற்றாக இந்தப் புதிய வழிகாட்டுதல் செயல்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய வழிகாட்டுதலின்படி, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, நேபாளம், பெலாரஸ், லெபனான், ஆர்மீனியா, உக்ரைன், பெல்ஜியம், ஹங்கேரி, செர்பியா ஆகிய 11 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் அந்தந்த நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது உலக சுகாதார அமைப்பு சார்பில் அங்கீகரிக்க –ப்பட்ட கரோனா தடுப்பூசிகளை முழுமையாக (அனைத்து தவணைக –ளையும்) செலுத்தியிருக்கும் நிலையில், எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி விமான நிலையத்திலிருந்து செல்ல முடியும். அதாவது, கரோனா பரிசோதனைக்கு உட்படவோ அல்லது வீட்டு தனிமைப்படுத்தலில் இருக்கவோ தேவையில்லை.

அதே நேரம், கரோனா பாதிப்பு இல்லை என்பதற்கான விரைவுப் பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், இந்தியா வந்திறங்கிய நாளிலிருந்து 14 நாள்களுக்கு தாங்களாகவே உடல் நிலையை சுய கண்காணிப்பு செய்துகொள்ள வேண்டும்.

அதுபோல, தடுப்பூசி செலுத்தாத அல்லது முழு தவணைகளையும் செலுத்திக் கொள்ளாத சர்வதேச பயணிகள் விமான நிலையத்தில் கரோனா பரிசோதனைக்கு இரத்த மாதிரிகளை அளிப்பது உள்ளிட்ட கட்டுப்பாடுகளுக்கு உள்படுத்தப்பட்ட பின்னரே விமான நிலையத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவர். மேலும், அவர்கள் முதல் 7 நாள்கள் கட்டாய வீட்டுத் தனிப்படுத்தலில் இருக்க வேண்டும். பின்னர், 8ஆம் நாளில் அவர்களுக்கு மறுபரிசோதனை மேற்கொள்ளப்ப –டும். அப்போது, அவர்களுக்கு கரோனா பாதிப்பு இல்லை என்று முடிவு வந்தால், அடுத்த 7 நாள்களுக்கு அவர்களின் உடல்நிலையை சுய கண்காணிப்பு செய்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமின்றி, தென்னாப்பிரிக்கா, பிரேஸில், வங்கதேசம், போட்ஸ்வானா, சீனா, மோரீஷஸ், நியூசிலாந்து, ஜிம்பாப்வே உள்ளிட்ட கரோனா பாதிப்பு அதிகமுள்ள நாடுகளிலிருந்து வரும் பயணிகள் கூடுதல் கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வேண்டியது புதிய வழிகாட்டுதலில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

---

6. இந்தியா – பிரேஸிலில் உயர் வெப்பத்தால் அதிக உயிரிழப்புகள்: லான்செட் அறிக்கை

உயர் வெப்பநிலை தாக்கத்தால் ஏற்படும் உயிரிழப்புகள் உலக அளவில் இந்தியா, பிரேஸில் நாடுகளில் மிக அதிக அளவில் பதிவாகியிருப்பது லான்செட் அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

உலக வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து வருவது தொடர்பான 'சுகாதாரமான எதிர்காலத்துக்கான சிவப்புக் குறியீடு' என்ற தலைப்பில் 2021ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கையை லான்செட் ஆய்வு நிறுவனம் அண்மையில் வெளியிட்டது. அதில் கூறியிருப்பதாவது:

உயர் வெப்பத்தால் ஏற்கெனவே பல்வேறு உடல் பாதிப்புகள் ஏற்பட்டு வருவதோடு, உணவு மற்றும் தண்ணீர் பாதுகாப்பு இல்லாத நிலையை சமூகம் சந்திக்கும் நிலை உருவாகியுள்ளது.

மேலும், இந்த ஆய்வில் உயர் வெப்ப தாக்கம் காரணமாக 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களின் உயிரிழப்பு விகிதம் அதிகரித்திருப்பதும் தெரியவந்துள்ளது. வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக கடந்த 2019ஆம் ஆண்டு முன்னெப்போதும் இல்லாத அளவில் 3,45,000 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இது கடந்த 2000–05ஆம் ஆண்டு சராசரியைவிட 80.6 சதவீதம் கூடுதலாகும். மேலும், 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் வெப்பம்சார்ந்த உயிரிழப்புகள் உலகிலேயே இந்தியா மற்றும் பிரேஸிலில் மிக அதிகமாக பதிவாகியுள்ளது.

1986–2005 ஆண்டுகளில் பதிவான சராசரியைவிட கடந்த 2020ஆம் ஆண்டு அதிக நாள்கள் வெப்ப அலை தாக்கம் பதிவானது. அதன் காரணமாக கடந்த ஆண்டில் 65 வயதுக்கு மேற்பட்ட 31 லட்சத்துக்கும் அதிகமான முதியவர்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். குறிப்பாக, சீனா, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், இந்தோனேசியா நாடுகளைச் சேர்ந்த மூத்த குடிமக்கள் மிக அதிக அளவில் பாதிக்கப்பட்டனர். மேலும், உயர் வெப்பநிலை நேரடி உடல் பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு மக்களின் பணித்திறனையும் பாதிக்கும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டிலிருந்து வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து வருவதன் காரணமாக, கடந்த 2020ஆம் ஆண்டு உலகம் முழுவதும் 29,500 கோடி பணி நேரம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது ஒரு தொழிலாளி –க்கு 88 மணி நேர பணித்திறன் குறைந்ததற்கு சமமானதாகும். இதில், குறிப்பாக பாகிஸ்தான், வங்கதேசம், இந்தியா ஆகிய நாடுகள் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளன. உலக சராசரி பாதிப்பில் 3 மடங்கு பாதிப்பை இந்த மூன்று நாடுகளும் ஒட்டுமொத்தமாகச் சந்தித்துள்ளன.

அதுபோல, உயர் வெப்பநிலை காரணமாக உலக அளவில் 19 சதவீத நிலப்பரப்பு மிகக்கடுமையான வறட்சியை சந்தித்துள்ளது என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. நடப்பாண்டில் (2021) வரும் கிராமப்புற பெண்களுக்கான உலக நாளின் கருப்பொருள் என்ன?

அ) Rural women cultivating good food for all ☑



ஆ) Gender Equality

இ) Empowering Rural Women

ஈ) Good Village; Good Country

✓ ஆண்டுதோறும் அக்.15 அன்று 'கிராமப்புற பெண்களுக்கான உலக நாள்' கொண்டாடப்படுகிறது. இந்த நாள் பாலின சமத்துவம் மற்றும் கிராமப் புறங்களில் பெண்களை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்துகிறது. இந்த ஆண்டுக்கான கருப்பொருள், "Rural women cultivating good food for all" என்பதாகும். ஐநா பொது அவை, கடந்த 2007 டிச.18 அன்று இந்நாளை நிறுவியது. ஐநா சபையின் அறிக்கையின்படி, வளரும் நாடுகளில் உள்ள மொத்த வேளாண் தொழிலாளர் படையில் 40 சதவீதம், பெண்களையும் உள்ளடக்கியது.

---

2. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற LORROS என்பது பின்வரும் எதனுடன் தொடர்புடைய ஓர் அமைப்பாகும்?

அ) வேளாண்மை



ஆ) கண்காணிப்பு ☑

இ) செயற்கை நுண்ணறிவு

ஈ) நிதி

✓ Long Range Reconnaissance and Observation System என்பதன் சுருக்கந்தான் LORROS. இது நீண்ட தொலைவு கண்காணிப்பு அமைப்பைக் குறிக்கிறது; இது, நீண்ட தூர பகல்நேர மற்றும் இரவு நேர கண்காணிப்பை வழங்குவதற்கான உணரி அமைப்பாகும். இது இந்திய இராணுவம் போன்ற தேசிய பாதுகாப்புப் படையினரால் ஊடுருவலை எதிர்கொள்ள பயன்படுத்தப்படுகிறது.

---

3. G சத்தியன், ஹர்மீத் தேசாய் மற்றும் A சரத் கமல் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) டேபிள் டென்னிஸ் ☑



ஆ) டென்னிஸ்

இ) துப்பாக்கிச்சுடுதல்

ஈ) குத்துச்சண்டை

✓ கத்தாரின் தோகாவில் நடைபெற்ற ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய ஆடவர் டேபிள் டென்னிஸ் அணி (சத்தியன், ஹர்மீத் தேசாய் மற்றும் சரத் கமல்) ஆகியோர் வெண்கலம் வென்றுள்ளது. அந்த அணி அரையிறுதியில் 0–3 புள்ளிகளுடன் தென்கொரியாவிடம் தோற்றது. இதில், இந்திய மகளிர் அணி 5ஆவது இடத்தைப் பிடித்தது.

---

4. பன்னாட்டு அகிம்சை நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) அக்டோபர் 1

ஆ) அக்டோபர் 2 ☑



இ) அக்டோபர் 4

ஈ) அக்டோபர் 5

✓ இந்தியாவின் 'தேசத்தந்தை' மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாள், ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர்.2 அன்று பன்னாட்டு அகிம்சை நாளாக அனுசரிக்கப்படுகிறது. கல்வி மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்வுமூலம் அகிம்சையை பரப்புவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இந்நாள் அனுசரிக்கப்ப –டுகிறது. 2004ஆம் ஆண்டில், நோபல் பரிசு பெற்ற ஈரானியர் ஷிரின் எபாடி, இந்த நினைவேந்தல் யோசனையை முன்மொழிந்தார்.

---

5. காஷ்மீர் வால்நட்டுகளின் முதல் சரக்கைப் பெறவுள்ள மாநிலம் எது?

அ) மகாராஷ்டிரா



ஆ) கர்நாடகா ☑

இ) கேரளா

ஈ) பஞ்சாப்

✓ இறக்குமதியை குறைக்கும் முயற்சியாக, வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு (ODOP) திட்டத்தின்கீழ் காஷ்மீரின் புத்காம் மாவட்டத்திலிருந்து பெங்களூருக்கு 2,000 கிலோ வால்நட் அனுப்பிவைக்கப்பட்டது.

✓ இந்தியாவில் வால்நட் உற்பத்தியில் 90% காஷ்மீரில் நடைபெறுகிறது. ODOP திட்டத்தின்கீழ் காஷ்மீரில் உற்பத்தியாகும் வால்நட்டை பிற இடங்களுக்கு அனுப்பும் முயற்சியில் மத்திய வர்த்தக & தொழில்துறை அமைச்சகம் முயற்சி மேற்கொண்டது. இதையடுத்து காஷ்மீரில் புத்காம் மாவட்டத்திலிருந்து, 2000 கி வால்நட் பெங்களூருக்கு அனுப்பப்பட்டது. இது முதல் தரமானது, சுவை மற்றும் ஊட்டச்சத்துமிக்கது.

---

6. இந்தியாவின் முதல் இ–மீன் சந்தை செயலியான 'பிஷ்வாலே' தொடங்கப்பட்டுள்ள மாநிலம் / UT எது?

அ) மேற்கு வங்கம்

ஆ) ஆந்திர பிரதேசம்

இ) அஸ்ஸாம் ☑

ஈ) கேரளா

✓ அஸ்ஸாம் மாநில மீன்வள அமைச்சகம் சமீபத்தில் ஒரு செயலியை அறிமுகப்படுத்தியது. அது இந்தியாவின் முதல் மின்னணு–மீன் சந்தை செயலியான 'பிஷ்வாலே' ஆகும். வாங்குபவர்கள் மற்றும் விற்பவர்கள் இருவரும் ஆர்டர் கொடுக்க மற்றும் மீன், மீன் வளர்ப்பு உபகரணங்கள் மற்றும் மருந்து, மீன் தீவனம் மற்றும் மீன் குஞ்சுகளை ஆன்லைனில் விற்க இச்செயலி உதவும். நன்னீர் மற்றும் உவர்நீர் உறைந்த மீன், உலர்மீன் மற்றும் பதப்படுத்தப்பட்ட மீன்பொருட்கள்போன்ற பொருட்கள் விற்கப்படும். இச்செயலியை மாநில மீன்வளத்துறையுடன் இணைந்து, அக்வா புளூ குளோபல் மீன் வளர்ப்பு தீர்வுகள் உருவாக்கியுள்ளது.

7.இந்தியாவில் 'மாதாந்திர பொருளாதார' ஆய்வினை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) இந்திய ரிசர்வ் வங்கி



ஆ) நிதி அமைச்சகம் ☑

இ) ASSOCHAM

ஈ) FICCI

✓ நிதி அமைச்சகத்தின் 'மாதாந்திர பொருளாதார மதிப்பாய்வின்படி', பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளும் விரைவான மீட்புக்கான பாதையில் உள்ளன. செப் மாதத்தில், பொருளாதார நடவடிக்கைகள் மேலும் வேகமடைந்து வருவதாகவும் நிதி அமைச்சர் கூறினார். 2021–22 நிதியாண்டில் தொடர்ச்சியாக 6ஆம் மாதமாக இந்தியப்பொருட்களின் ஏற்றுமதி 30 பில்லியன் டாலர்களைத் தாண்டியது. 2021 செப்டம்பர்.10 உடன் முடிவடையும் 15 வாரங்களில் வங்கிக்கடனின் வளர்ச்சி விகிதம் 6.7 சதவீதமாக இருந்தது; இது, முந்தைய ஆண்டின் இதே காலத்தில் 5.3 சதவீதமாக இருந்தது.

---

8. உலகின் முதல் தானியங்கி, ஓட்டுநரில்லா இரயிலை அறிமுகம் செய்துள்ள நாடு எது?

அ) ஜெர்மனி ☑



ஆ) ரஷ்யா

இ) நெதர்லாந்து

ஈ) சுவீடன்

✓ ஜெர்மன் இரயில் ஆபரேட்டர் டாய்ச் பான் மற்றும் சீமென்ஸ் குழுமம் இணைந்து உலகின் முதல் தானியங்கி, ஓட்டுநரில்லா இரயிலை ஹாம்பர்க் நகரத்தில் அறிமுகப்படுத்தினர். இந்தத் திட்டம் 60 மில்லியன் யூரோ (70 மில்லியன் டாலர்) மதிப்புடைய ஹாம்பர்க்கின் விரைவான

✓ நகர்ப்புற இரயிலமைப்பு நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒருபகுதியாகும். இந்தத் திட்டம் 30% அதிக பயணிகளை அந்நாட்டுக்கு வரவழைக்கும். இதன்மூலம், 30 சதவீதத்திற்கும் அதிகமான ஆற்றலை சேமிக்க முடியும்.

---

9. IMF'இன் சமீபத்திய உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்–கையின்படி, 2021–22'க்கான இந்தியாவின் வளர்ச்சிக் கணிப்பு என்ன?

அ) 7.5 %

ஆ) 9.5 % ☑

இ) 10.0 %

ஈ) 12.0 %

✓ பன்னாட்டுச் செலவாணி நிதியம் தனது சமீபத்திய உலகப் பொருளாதார கண்ணோட்ட அறிக்கையில், 2021–22ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் வளர்ச்சிக் கணிப்பை 9.5%ஆக வைத்துள்ளது. மேலும், இந்தியாவின் பொருளாதாரம் 2022–23 நிதியாண்டில் 8.5% வளர்ச்சியடையும் என்று கணித்துள்ளது. உலகளாவிய வளர்ச்சித் திட்டத்தை 6%'லிருந்து 5.9% ஆக IMF குறைத்துள்ளது. முன்னேறிய பொருளாதாரங்களில் விநியோக இடையூறுகள் மற்றும் வளரும் நாடுகளில் தொற்றுநோய் தாக்கம் மோசமடைவதே இதற்கான காரணங்களாக கூறப்பட்டுள்ளன.

---

10. "U Fill" என்னும் தொழில்நுட்ப தீர்வை அறிமுகப்படுத்தியுள்ள நிறுவனம் எது?

அ) இந்தியன் ஆயில்

ஆ) NTPC

இ) BPCL ☑

ஈ) டாடா பவர்



✓ பாரத் பெட்ரோலிய நிறுவனமானது (BPCL) எரிபொருள் விற்பனை நிலையங்களில் தானியங்கி எரிபொருள் தொழில்நுட்பமான 'U Fill'ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இத்தொழில்நுட்பம், வாகனத்தில் எரிபொருளை நிரப்பும்போது மனிதத்தலையீட்டை அகற்றி வாடிக்கையாளர் அனுபவத்–தை மேம்படுத்தும் எனக்கூறப்படுகிறது. இந்நிறுவனம் 65 நகரங்களில் இத்தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ராணுவ தளவாட ஏற்றுமதியில் 25 முன்னணி நாடுகள் பட்டியலில் இந்தியா: அமைச்சர் ராஜ்நாத் சிங் தகவல்

ராணுவ தளவாடங்கள் ஏற்றுமதி செய்யும் 25 முன்னணி நாடுகள் பட்டியலில் இந்தியாவும் இடம்பெற்றுள்ளதாக மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி மையம் 2020–ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் இவ்விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறினார். இந்த மையத்தின் பட்டியலில் இந்தியா முதல் முறையாக இடம்பெற்றுள்ளது மிகவும் மகிழ்ச்சியான விஷயம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ராணுவ தளவாட ஏற்றுமதி என்பது நமது பாதுகாப்பு திறன்அதிகரித்துள்ளது மற்றும் சர்வதேச தரத்துக்கு இணையான பொருட்களை தயாரிக்கும் திறனை இந்தியா பெற்றுள்ளது என்பதைக் காட்டுவதாகும். ராணுவ தளவாட ஏற்றுமதியை ஊக்குவிக்க பல நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

விமானப்படை பாதுகாப்பு தளவாட ஏற்றுமதிமூலம் ₹35 ஆயிரம் கோடி ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கு 2024–25–க்குள் எட்டப்படும் என்றும் அமைச்சர் ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார். வளர்ந்த நாடுகள் மட்டுமே ராணுவதளவாட ஏற்றுமதியில் முன்னணியில் இருந்த நிலையில், இந்தியாவும் அதில் சேர்ந்துள்ளது.

---

2. கரோனா தடுப்பூசி போடும் பணி தொடங்கி 9 மாதத்தில் – 100 கோடி டோஸ் செலுத்தி இந்தியா சாதனை: பிரதமர் மோடிக்கு உலக சுகாதார நிறுவனம் வாழ்த்து

திட்டம் தொடங்கப்பட்ட 9 மாதங்களில் 100 கோடிக்கும் மேற்பட்ட கரோனா தடுப்பூசி டோஸ்களை செலுத்தி இந்தியா சாதனை படைத்துள்ளது. இதற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு உலக சுகாதார நிறுவனம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கரோனா தடுப்பூசி போடும் பணி கடந்த ஜனவரி 16–ம் தேதி தொடங்கியது. ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் கோவிஷீல்டு தடுப்பூசியும், பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவேக்சின் தடுப்பூசியும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டன. முதல்கட்டமாக, சுகாதாரப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசிகள் செலுத்தப்–பட்டன. பின்னர், முன்களப் பணியாளர்களுக்கும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசி திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, கடந்த மே 1ஆம் தேதி முதல் 18 வயதை கடந்த அனைவருக்கும் தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. தொடக்கத்தில், தடுப்பூசி தொடர்பான அச்சம் காரணமாக, அதை செலுத்திக் கொள்வோரின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே இருந்தது.

இதையடுத்து, தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்களை மத்திய, மாநில அரசுகள் தீவிரமாக முன்னெடுத்தன. இதன் பயனாக, கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்வோரின் எண்ணிக்கை கணிசமாக உயரத் தொடங்கியது. நாட்டில் முதல் 10 கோடி தடுப்பூசி டோஸ்களை செலுத்த 85 நாட்கள் தேவைப்பட்டது. ஆனால், அடுத்த 10 கோடி டோஸ் களை 45 நாட்களிலேயே இந்தியாவால் செலுத்த முடிந்தது. இவ்வாறு அடுத் தடுத்த 10 கோடி தடுப்பூசி டோஸ் இலக்குகளை மிகக் குறுகிய நாட்களிலேயே மத்திய, மாநில அரசுகள் அடைந்தன.

அதன்படி, கடந்த ஆகஸ்ட் 6–ம் தேதி 50 கோடி டோஸ்களை செலுத்தி மிகப்பெரிய மைல்கல்லை இந்தியா தொட்டது. டிசம்பர் இறுதிக்குள் 100 கோடி டோஸ்கள் என்ற இலக்கினை மத் திய அரசு நிர்ணயித்தது. நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரந்தோறும் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன. அவ்வப்போது நாடு தழுவிய அளவில் சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன.

இந்நிலையில், நேற்று (அக்.21) 100 கோடி தடுப்பூசி டோஸ்களை கடந்து மிகப்பெரிய சாதனையை இந்தியா படைத்திருக்கிறது. நிர்ணயிக் கப்பட்ட இலக்கை 2 மாதங்களுக்கு முன்பாகவே இந்தியா எட்டியிருப்பது உலக நாடுகள் அனைத்தையும் ஆச் சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அமெ ரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் போன்ற தொழில்நுட்பத்தில் அசுர வளர்ச்சி அடைந்த நாடுகள்கூட, தங்கள் மக்களுக்கு இவ்வளவு வேகமாக தடுப்பூசிகளை செலுத்த முடியவில்லை என கூறப்படுகிறது.

இதனிடையே, நாட்டிலேயே அதிக அளவில் கரோனா தடுப்பூசி செலுத்திய மாநிலமாக உத்தர பிரதேசம் திகழ்கிறது. இதற்கு அடுத்தடுத்த இடங்களில் மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், குஜராத், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

---

3. கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்கின்றன

கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி ஆகிய நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கான அவசரச் சட்டத்தை தமிழக அரசு பிறப்பித்துள்ளது. இதன்மூலம், தமிழகத்தில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 20–ஆக உயர்கிறது.

தமிழகத்தில் மொத்தம் 15 மாநகராட்சிகள் உள்ளன. கும்பகோணத்தை மாநகராட்சியாக தரம் உயர்த்துவதற்கு பரிந்துரைகள் ஏற்கப்பட்டு அதற்கான உத்தரவு அரசால் அண்மையில் பிறப்பிக்கப்பட்டது. இதனால் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 16–ஆக உயர்ந்தது.

4 நகராட்சிகள்: தற்போது நகராட்சிகளாக உள்ள கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி ஆகியவற்றையும் மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்துவதற்கான பணிகளை மாநில அரசு தொடங்கியது. இதற்கான பரிந்துரைகள் நகராட்சி தனி அதிகாரிகள் மூலமாக நகராட்சி நிர்வாகத் துறைக்கு வரப்பெற்றது. இந்தப் பரிந்துரைகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்தப் பரிந்துரைகளை ஏற்று கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி ஆகிய நான்கு நகராட்சிகளை மாநகராட்சிகளாக தரமுயர்த்துவதற்கான அவசர சட்டத்தை, தமிழக சட்டத் துறை செயலாளர் (சட்டம்) சி கோபி ரவிகுமார், பிறப்பித்தார். இதையடுத்து, நான்கு நகராட்சிகளும் மாநகராட்சிகளாக தரம் உயர்த்துவதற்கான உத்தரவு அரசிதழில் வெளியிடப்படும். இந்த உத்தரவு அரசிதழில் வெளியிடப்பட்டவுடன் அது நடைமுறைக்கு வரும்.

சட்டம் இயற்றப்படும்: சட்டப்பேரவை கூட்டத்தொடர் முடித்து வைக்கப்பட்–டதால், அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. பேரவைக் கூட்டத் தொடரில் இதற்கான சட்ட மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிறைவே–ற்றப்படும். தமிழகத்தில் கும்பகோணம் மாநராட்சி உத்தரவுடன் சேர்த்து, 16 மாநகராட்சிகளும், 121 நகராட்சிகளும், 528 பேரூராட்சிகளும் என மொத்தம் 664 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன.

இப்போது நான்கு நகராட்சிகள் தரம் உயர்த்தப்பட்டதால், தமிழகத்தில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 20ஆக உயர்ந்துள்ளது.

சென்னை, கோவை, திண்டுக்கல், ஈரோடு, நாகர்கோவில், மதுரை, சேலம், தஞ்சாவூர், ஆவடி, தூத்துக்குடி, திருச்சி, திருநெல்வேலி, திருப்பூர், வேலூர், ஒசூர் ஆகிய மாநகராட்சிகள் உள்ளன. அவற்றுடன் கும்பகோ –ணம், கடலூர், காஞ்சிபுரம், கரூர், சிவகாசி ஆகிய 5 நகராட்சிகளையும் மாநகராட்சிகளாக தரம் உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

---

4. சுற்றுலா வளர்ச்சிக்கென தனித்த கொள்கை: இரண்டு இடங்களில் ஹெலிகாப்டர் சுற்றுலா: தமிழக அரசு அறிவிப்பு

தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென தனித்த கொள்கை வெளியிடப்படு –ம் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. மேலும், ஹெலிகாப்டர் சுற்றுலா –வை ஏற்படுத்துவதற்கான நிலங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து, சுற்றுலாத்துறை வெளியிட்ட செய்தி:

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தங்கும் விடுதிகள் உள்ளன. இந்த விடுதிகள் முன்னணி இணையதள பயண நிறுவனங்களில் இடம்பெறச் செய்யப்பட்டன. இதன்மூலம் கடந்த மாதத்தில் மட்டும் 137 முன்பதிவுகள் பெறப்பட்டன. கன்னியாகுமரியில் அமைந்துள்ள திருவள் –ளுவர் சிலையை சுற்றுலாப் பயணிகள் இரவிலும் கண்டுகளிக்கும் விதமாக லேசர் தொழில்நுட்ப உதவியுடன் ஒளியூட்டம் செய்வதற்கு நடவ –டிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பிச்சாவரம் படகு குழாம் பகுதியில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஹெலிகாப்டர் சுற்றுலா: முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைக்கும் விதமாக கொடைக்கானல், ராமேசுவரம் ஆகிய இடங்களில் ஹெலிகாப்ட –ர் சுற்றுலா தொடங்கப்பட உள்ளன. இதற்காக ஹெலிகாப்டர் இறங்கு தளம் அமைக்க ராமேசுவரத்தில் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கொடைக்கானலில் ஆய்வுப் பணிகள் நடைபெறவுள்ளன. அணைக்கட்டு பகுதிகளில் படகு சவாரி, உணவகம் போன்றவற்றை ஏற்படுத்த திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்கு வரும் பயணிகளை ஈர்க்க பார்வையாளர் மாடம் உள்ளிட்ட பிற வசதிகளை ஏற்படுத்த பெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலாத் துறையில் அந்நிய செலாவணியை ஈட்டுதல் உள்பட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது, பிரபலம் அடையாத தலங்களை மேம்படுத்துவது ஆகிய அம்சங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சுற்றுலாத் துறையின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

5. உள்நாட்டில் உருவாக்கப்பட்ட முதல் ராக்கெட்டை விண்ணில் ஏவியது, தென்கொரியா

தென் கொரியாவில் முதன்முதலாக உள்நாட்டில் நூரி என்ற ராக்கெட்டை அங்குள்ள கொரியா விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் விஞ்ஞானிகளும், என்ஜினீயர்களும் உருவாக்கினர். இந்த ராக்கெட் 47 மீட்டர் (154 அடி) நீளம் கொண்டது. இந்த ராக்கெட் 1.6 பில்லியன் டாலர் மதிப்பில் (சுமார் ₹12 ஆயிரம் கோடி) உருவாக்கப்பட்டது. இந்த ராக்கெட், சியோலில் இருந்து 310 மைல் தொலைவில் உள்ள கோஹுங் என்ற இடத்தில் உள்ள நாரோ விண்வெளி மையத்தில் இருந்து நேற்று விண்ணில் செலுத்தப்பட்டது.

1990–களின் முற்பகுதியில் இருந்து தனது செயற்கைக்கோள்களை ஏவுவதற்கு தென்கொரியா பிற நாடுகளை நம்பி வந்தது.

10ஆவது நாடு

இந்தநிலையில் இப்போதுதான் தனது சொந்த தொழில்நுட்பத்தில் விண்வெளிக்கு செயற்கைக்கோளை அனுப்பும் 10ஆவது நாடாக மாறுவதற்கு தென் கொரியா முயற்சிக்கிறது. அடுத்த ஆண்டு மே மாதம் மற்றொரு ராக்கெட்டையும் விண்ணில் ஏவி சோதிக்க தென்கொரியா முடிவு செய்துள்ளது. தென்கொரியா கடைசியாக 2013ஆம் ஆண்டு ஒரு ராக்கெட்டை விண்ணில் செலுத்தியது. ஆனால் இது ரஷிய தொழில் நுட்பத்தில் உருவானது ஆகும்.

1.சமீபத்தில் கொம்பாசு என்ற வெப்பமண்டல புயலால் பாதிக்கப்பட்ட நாடு எது?



அ) பிலிப்பைன்ஸ் ☑

ஆ) அமெரிக்கா

இ) இந்தோனேசியா

ஈ) ஜெர்மனி

✓ 'கொம்பாசு' என்ற வெப்பமண்டல புயல் பிலிப்பைன்ஸை தாக்கியதில் குறைந்தது 19 பேர் பலியாகினர். இப்புயல் ஆசிய–பசிபிக் தீவுகளின் வட முனையைக்கடந்தபோது நிலச்சரிவுகள் மற்றும் திடீர் வெள்ளத்தை ஏற்படுத்தியது. 'கொம்பாசு', சீனத் தீவான ஹைனான் மாகாணத்தில் நிலச்சரிவை ஏற்படுத்திய பின் வெப்பமண்டலப்புயலாக மாறியது. இது ஹாங்காங் மற்றும் வியட்நாமையும் கடந்து சேதங்களை ஏற்படுத்தியது.

---

2. விண்வெளிக்குச் சென்றவர்களுள் மிகவும் வயதானவரான நடிகர் வில்லியம் ஷாட்னர், எந்த முகமையின் ஏவுகலத்தில் பயணம் செய்தார்?



அ) விர்ஜின் கேலக்டிக்

ஆ) புளூ ஆர்ஜின் ☑

இ) ஸ்பேஸ் எக்ஸ்

ஈ) யுனைடெட் லாஞ்கூட்டணி

✓ நடிகர் வில்லியம் ஷாட்னர், புளூ ஆர்ஜின் ஏவுகலத்தில் துணை–சுற்றுப் பாதைக்கான பயணத்தில் பறந்து டெக்சாஸ் பாலைவனத்தில் தரை இறங்கினார். இதன்மூலம் விண்வெளிக்குச் சென்றவர்களுள் மிகவும் வயதான நபராக (90 வயது) ஆனார் நடிகர் வில்லியம் ஷாட்னர்.

✓ முழுவதும் தானியங்கு தன்மைகொண்ட நியூ ஷெப்பர்ட் விண்கலத்தில் பயணித்த நான்கு பயணிகளுள் ஷாட்னரும் ஒருவர். அவர்கள், பூமியில் இருந்து சுமார் 100 கிமீ உயரத்தில் உள்ள கர்மன் கோடு எனப்படும் பன்னாட்டளவில் அங்கீகரிக்கப்பட்ட விண்வெளி எல்லைவரை பயணம் செய்தனர்.

---

3. Dr APJ அப்துல் கலாம் பிரேரனா மையமானது பின்வரும் எந்த நகரத்தில் அமைந்துள்ள கடற்படை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தில் திறக்கப்பட்டது?



அ) கொச்சி

ஆ) விசாகப்பட்டினம் ☑

இ) சென்னை

ஈ) புவனேஷ்வர்

✓ முன்னாள் குடியரசுத்தலைவர் 'பாரத இரத்னா' Dr APJ அப்துல் கலாமின் 90ஆவது பிறந்தநாளை முன்னிட்டும், நாட்டின் 75ஆவது ஆண்டு விடுதலையைக் கொண்டாடும் விடுதலையின் அம்ரித் மகோத்சவத்தை குறிக்கும் விதமாகவும், விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகத்தில் அக்டோபர் 15 அன்று 'டாக்டர் ஏபிஜே அப்துல்கலாம் பிரேரனா மையம்' திறக்கப்பட்டது.

✓ கடற்படை அறிவியல்மற்றும்தொழினுட்ப ஆய்வகத்தின் தயாரிப்புகளான வருணாஸ்திரா, டோர்பேடோ அட்வான்ஸ்ட் லைட் மற்றும் மாரீச் டெகாய் ஆகியவை வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்டன.

---

4. "Our Future is at Hand – Let's Move Forward Together" என்பது அக்.15 அன்று அனுசரிக்கப்பட்ட எந்தச் சிறப்பு நாளின் கருப்பொருள் ஆகும்?



அ) உலக கை கழுவும் நாள் ☑

ஆ) உலக விலங்குவழி நோய்கள் நாள்

இ) உலக ஊட்டச்சத்துக் குறைபாடு நாள்

ஈ) உலக சுகாதார நாள்

✓ சுகாதாரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவத –ற்காக, 2021ஆம் ஆண்டின் உலக கை கழுவுதல் நாள் அக்.15 அன்று அனுசரிக்கப்படுகிறது. "Our Future is at Hand – Let's Move Forward Together" என்பது 2021ஆம் ஆண்டிற்கான கருப்பொருளாகும். உலக கை கழுவுதல் கூட்டாண்மைமூலம் இந்த நாள் நிறுவப்பட்டது.

5.சமீபசெய்திகளில் இடம்பெற்ற பிரக்ஞானந்தாவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?



அ) மட்டைப்பந்து

ஆ) சதுரங்கம் ☑

இ) கால்பந்து

ஈ) கைப்பந்து

✓ பிரக்ஞானந்தா, இந்திய சதுரங்க வீரரும் நாட்டின் இளம் கிராண்ட்மாஸ்ட –ர்களில் ஒருவருமாவார். சமீபத்தில், அவர் அமெரிக்க வீரரான கிறிஸ் –டோபர் யூவை வென்றதன்மூலம் ஜூலியஸ் பேர் கேலஞ்சர்ஸ் செஸ் சுற்றுப்பயணத்தை வென்றார். இந்த வெற்றியின்மூலம், பிரக்ஞானந்தா $12,500 பரிசுத்தொகையையும், 2022ஆம் ஆண்டு மெல்ட்வாட்டர் சாம்பி –யன்ஸ் சுற்றுப்பயணத்தில், செஸ் சாம்பியன்களின் உயரடுக்கு அணி உடன் விளையாடும் உரிமையையும் வென்றுள்ளார்.

---

6. அரசுக்கு இடையேயான ஓர் இராணுவ கூட்டணியான, "கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பில்", எத்தனை முழுநேர உறுப்பினர்கள் உள்ளனர்?



அ) 17

ஆ) 13

இ) 11

ஈ) 6 ☑

✓ கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு (Collective Security Treaty Organisation – CSTO) என்பது 6 முழுநேர உறுப்பினர்கள் (ஆர்மேனியா, பெலாரஸ், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான்) மற்றும் 2 உறுப்பினரல்லாத பார்வையாளர்களைக் கொண்ட (ஆப்கானிஸ்தான் & செர்பியா) ஓர் அரசுகளுக்கிடையேயான இராணுவக் கூட்டணியாகும்.

✓ சமீபத்தில், CSTO, அக்.22–23 வரை தஜிகிஸ்தானில், ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகில் இராணுவ ஒத்திகையை நடத்த முன்வந்துள்ளது.

---

7. NATO'இன் தலைமையகம் எங்குள்ளது?



அ) பெல்ஜியம் ☑

ஆ) அமெரிக்கா

இ) ரஷ்யா

ஈ) பிரான்ஸ்

✓ வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (North Atlantic Treaty Organisation – NATO) என்பது 30 உறுப்புநாடுகளைக்கொண்ட அரசுகளுக்கிடையே –யான ஒரு இராணுவக் கூட்டணியாகும். இதில் 28 ஐரோப்பிய நாடுகள் மற்றும் 2 வட அமெரிக்க நாடுகள் உள்ளன. NATO'இன் தலைமையகம் பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் உள்ளது.

✓ சமீபத்தில், நேட்டோவுக்கான தனது திட்டங்களை இடைநிறுத்துவதாக –வும், மாஸ்கோவில் உள்ள நேட்டோவின் இராணுவ தொடர்பு மற்றும் தகவல் அலுவலகங்கள் மூடப்படும் என்றும் ரஷ்யா அறிவித்தது.

---

8. எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் நீர்பற்றிய குழுமம் நடத்திய ஆய்வின்படி, மின்சமையலில் முதலிடத்திலுள்ள மாநிலம்/UT எது?



அ) தில்லி மற்றும் ஹரியானா

ஆ) மகாராஷ்டிரா மற்றும் கோவா

இ) மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசம்

ஈ) தில்லி மற்றும் தமிழ்நாடு ☑

✓ எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் நீர்பற்றிய குழுமத்தின் ஆய்வறிக்கையின் படி, தில்லி மற்றும் தமிழ்நாட்டில் உள்ள 17 சதவீத குடும்பங்கள், சில வகையான மின்சமையல் முறைகளைப் பயன்படுத்துகின்றன.

✓ இவ்வீதம் தெலுங்கானாவில் 15% மற்றும் கேரள மாநிலத்தில் 12% ஆகும். ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் குழுமமானது பொதுவாக CEEW என அழைக்கப்படுகிறது. இது, தில்லியை தளமாகக் கொண்ட ஒரு இலாப நோக்கற்ற கொள்கை ஆராய்ச்சி நிறுவனமாகும்.

---

9. வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர், எந்த நாட்டில் உள்ள "பூதன் சோலையில்" ஒரு தகட்டினை திறந்துவைத்தார்?

அ) அமெரிக்கா

ஆ) இங்கிலாந்து

இ) பிரான்ஸ்



ஈ) இஸ்ரேல் ☑

✓ இந்திய வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர், இஸ்ரேலின் ஜெருசலேம் வனப்பகுதியில் "பூதன் சோலை" என்ற தகட்டை திறந்து வைத்தார். இது, 1958'இல் ஜெயப்பிரகாஷ் நாராயணின் இஸ்ரேல் வருகையையும், 1960'இல் இஸ்ரேலின் வகுப்புவாத மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் சமூகக்கட்டமைப்பை ஆய்வுசெய்வதற்காக இஸ்ரேலுக்கு வருகைதந்த 27 பேர்கொண்ட சர்வோதயா குழுவின் வருகையையும் அங்கீகரிக்கின்றது.

---

10. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற பாம்பன் இரயில்வே பாலம் அமைந்துள்ள மாவட்டம் எது?

அ) இராமநாதபுரம் ☑



ஆ) தூத்துக்குடி

இ) சிவகங்கை

ஈ) புதுக்கோட்டை

✓ இராமேஸ்வரத்தை தமிழ்நாட்டின் நிலப்பரப்புடன் இணைக்கும் புதிய 2.05 கிமீ பாம்பன் ரயில் பாலத்தை மண்டபத்தில் அமைக்கும் பணியை இந்திய இரயில்வே தொடங்கியது. இந்தப் பாலம், அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல் செயல்பாட்டுக்கு வரும் என இரயில்வே அமைச்சகம் அறிவித்துள்ளது. வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள இராமேஸ்வரம் தீவை பிரதான நிலப்பரப்புடன் இணைக்கும் இப்புதிய 2 கிமீ நீள பாலம், தற்போதுள்ள 104 ஆண்டுகள் பழமையான பாலத்திற்கு பதிலாக அமைக்கப்படுகிறது. இது, 63 மீட்டர் நீளத்தைக் கொண்டிருக்கும். சிறிய கப்பல்கள் கடக்க வசதியாக செங்குத்தாக இது உயர்த்தப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மேம்படுத்தப்பட்ட கணினி விசைப்பலகைக்கு கீழடி பெயர்

தமிழக அரசின் மேம்படுத்தப்பட்ட கணினி விசைப்பலகைக்கு கீழடி என பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட புதிய வசதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:–

தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் ஏற்கெனவே கணினி விசைப் பலகை, தமிழிணையம்–ஒருங்குறி மாற்றி ஆகிய இரு தமிழ் மென்பொருள்கள் பயன்பாட்டில் உள்ளன. இவை பல புதிய வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு கீழடி–தமிழிணைய விசைப்பலகை மற்றும் தமிழி–தமிழிணைய ஒருங்குறி மாற்றி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கீழடி–விசைப் பலகை மென்பொருளானது, தமிழ் 99 விசைப் பலகை, ஒலிபெயர்ப்பு விசைப் பலகை, பழைய தட்டச்சு விசைப் பலகை ஆகிய மூன்று விதமான கணினி விசைப் பலகைகளின் அமைப்பில் செயல்படும். தமிழிணைய ஒருங்குறி மாற்றி மென்பொருளானது, பிற தமிழ் எழுத்துருக்களில் தட்டச்சு செய்யப்பட்டவைகளை தமிழ் ஒருங்குறிக்கு மாற்றும் தன்மை கொண்டது. தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள்களை கட்டணம் ஏதுமின்றி தமிழ் இணையக் கல்விக் கழக இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம். மேம்படுத்தப்பட்ட புதிய வசதிகளை தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.

---

2. எண்ம சுகாதார இயக்கம்: ஒரு பார்வை

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, 'எண்ம சுகாதார அடையாள அட்டை' திட்டத்தை அண்மையில் தொடங்கி வைத்தார். ஒருவர் நோயாளியாக சிகிக்சை பெறும்போது அவரின் நோய் குறித்த மருத்துவ வரலாறு, அவர் எடுத்துக்கொண்ட சிகிச்சைகள், சோதனைகள் ஆகியவை தரவுத்தளத்தில் எண்ம முறையில் பதிவு செய்து சேமிக்கப்படும். நாடு முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்கள் இதை அணுக முடியும்.

தேசிய எண்ம சுகாதார இயக்கம் இந்திய நாட்டின் சுகாதாரம், நோய்களின் கண்காணிப்பிற்கு ஒரு நல்ல தரவுத்தளமாக இருக்கும். இது இந்தியாவின் சுகாதாரக் கட்டமைப்பிலும், பொது சுகாதார ஆய்விலும் பெரும் புரட்சியை ஏற்படுத்தும். நோய், அதற்கு வழங்கப்பட்ட சிகிச்சை பற்றி தெரிந்து கொள்ளவும் நோய்ப் பரவலுக்கும் சமூகதிற்கும் உள்ள தொடர்புகளைப் புரிந்துகொள்ளவும் இது உதவும்.

தேசிய எண்ம சுகாதார இயக்கம், ஒரு குறிப்பிட்ட நோய்க்கு வெவ்வேறு மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றிருந்தாலும் ஒரு முறை மட்டுமே எந்தவொரு நோயறிதல் பரிசோதனையையும் மேற்கொள்ள வேண்டும் எனத் தெளிவாக கூறுகிறது.

இது மருத்துவர்களுக்குப் பிடித்த ஆய்வகங்களுக்கு நோயாளிகள் செல்ல கட்டாயப்படுத்தப்படுவதையும், குறிப்பிட்ட நோய்க்கு ஒரே பரிசோதனையினை மீண்டும் செய்வதையும் தவிர்க்கிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுகாதாரத்திற்கான மொத்த செலவான 3.6% இல், பொதுத்துறை செலவு வெறும் 1% மட்டுமே. இது எண்ம சுகாதார அமைப்புகளைக் கொண்ட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவு.

உலகின் சிறந்த சுகாதார அமைப்புகளில் முதலிடத்தில் உள்ள கனடாவிலும், எட்டாவது இடத்தில் உள்ள ஆஸ்திரேலியாவிலும் சுகாதாரத்துக்கான பொதுத்துறை செலவு முறையே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதம், 6.3 சதவீதம் ஆகும்.

இந்தியாவில் தேசிய எண்ம சுகாதார இயக்கத்திற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது மிகச்சிறிய சுகாதார வரவு செலவுத் திட்டம். தற்போதைய சுகாதார வரவு செலவு தடைகளையும், பொது சுகாதார உள்கட்டமைப்பையும் மாற்றியமைக்காமல் இவ்வியக்கம் அனைவருக்கும் சுகாதாரத்தை எவ்வாறு வழங்கும் என்று இத்துறை வல்லுநர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்திய அரசின் புள்ளிவிவரம் – திட்ட அமலாக்க அமைச்சகம், 2017–18–ஆம் ஆண்டில் வெளியிட்ட சுகாதாரத்திற்கான கணக்கீடு நம் நாட்டில் வழங்கப்படும் சிகிச்சையில் 66% தனியார் மருத்துவமனைகளால் வழங்கப்படுவதாகக் கூறுகிறது. மூன்றில் இருபங்கு கொண்ட தனியார் சுகாதாரத் துறையை தேசிய எண்ம சுகாதார இயக்கத்தின் கீழ் கொண்டு வருவது மிகப்பெரும் சவால்.

மருத்துவ வள பற்றாக்குறை கொண்ட நமது இந்திய சுகாதார உள்கட்டமைப்பு பிரத்யேக அடையாள எண் (ஹெல்த் ஐடி), மின்னணு மருத்துவர் (டிஜி டாக்டர்), சுகாதார வசதி பதிவு, தனிநபர் மருத்துவப் பதிவுகள், மின் மருந்தகம் (இ–பார்மசி) மற்றும் தொலை மருத்துவம் (டெலிமெடிசின்) ஆகிய ஆறு முக்கிய எண்ம அமைப்புகளைக் கொண்ட தேசிய எண்ம சுகாதார இயக்கத்தினை தற்போதைய நிலையில் நிர்வகிப்பது சிரமமே.

தனியார் மருத்துவத்துறையினரின் எதிர்ப்பால் பல மாநிலங்களில், சிகிச்சை கட்டணங்களை நிர்ணயிக்கும் மருத்துவ நிறுவனங்கள் பதிவு ஒழுங்குமுறை சட்டத்தினை செயல்படுத்த முடியாத சூழல் உள்ளது. இந்நிலையில் மத்திய அரசால் உருவாக்கப்பட்ட தேசிய எண்ம சுகாதார இயக்கத்தை செயல்படுத்துவதில் மாநில அரசுகள் பிரச்னைகளை எதிர்கொள்ளலாம்.

தொலைமருத்துவ சேவை மூலம் கணினி வழி ஒரு நோயாளியுடன் கலந்தாலோசிக்க குறைந்தபட்ச இணைய வேகம் ஒரு வினாடிக்கு 2 மெகா பிட்கள் (2 எம்பிபிஎஸ்) தேவை. 159 இணைய சேவை வழங்குநர்களால் இந்தியாவில் வழங்கப்படும் அகன்ற அலைக்கற்றையின் (பிராட்பேண்ட்) ஊடுருவல் 2% க்கும் குறைவு என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது.

குறைந்த அளவு இணைய வசதியும், சுகாதாரக் கட்டமைப்பும் கொண்ட இந்திய கிராமங்களில் சுகாதாரத்துறையின் செயல்பாடுகளை முழுமையாக மாற்றும் திறன் கொண்ட தொழில்நுட்ப அடிப்படையிலான தேசிய எண்ம சுகாதார திட்டத்தை செயல்படுத்துவது தற்போதைய சூழலில் கடினம்.

அரசு மருத்துவமனைகளிலும் மருந்தகங்களிலும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதி மிகக் குறைவாக உள்ளது என்றும், இந்தியாவின் பொது சுகாதார வசதிக்கான வன்பொருள், மென்பொருள் தேவைக்கான முதலீட்டு தேவை அதிகம் என்றும் 2018–ஆம் ஆண்டில்

வெளியான 'எலக்ட்ரானிக் ஹெல்த் ரெக்கார்ட்ஸ்' என்ற இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிக்கை கூறுகிறது.

தேசிய எண்ம சுகாதார இயக்கத்தின் அடித்தளமான மின்னணு சுகாதார பதிவேட்டினை சா'வதேச நோய் வகைப்பாடு (இன்டர்'நேஷனல் கிளாஸிஃபிகேஷன் ஆஃப் டிஸிஸ் – ஐசிடி)–10–இன் அடிப்படையில் நிர்'வகித்தல் சுகாதாரப் பணியாளர்'களுக்கு சவாலாக இருக்கக்கூடும்.

உலகெங்கிலும் தரவு தனியுரிமை மீறல்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவரும் சூழலில், இந்திய சுகாதாரப் பதிவுகளைக் காப்பதற்கான திட்டங்கள் மிக அவசியம். தரவுப் பாதுகாப்பை, தனியுரிமை மீறல்களைத் தவிர்க்க இந்திய தேசிய எண்ம சுகாதார இயக்கம் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டும்.

நோயாளியின் நோய் குறித்த ரகசியத்தன்மையை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே மருத்துவ நெறிமுறைகளின் முக்கிய கூறு. தனியார் மருத்துவத் துறையில் பதிவுசெய்யப்பட்ட தகவல்களின் நம்பகத்தன்மையை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பதும் மிகப்பெரிய கேள்வியாகும்.

இந்திய பொது சுகாதாரக் கட்டமைப்பினை மேம்படுத்தி, சவால்களை எதிர்'கொண்டு வெற்றி பெற்றால் தேசிய எண்ம சுகாதார இயக்கத்தை செயல்படுத்துவது எளிதில் சாத்தியமாகும்.

---

3. உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணிக்க தனி இணையதளம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்

உள்கட்டமைப்புத் திட்டங்களைக் கண்காணித்து வளர்'ச்சிகளை ஆய்வு செய்வதற்கென உருவாக்கப்பட்டுள்ள தனி இணையதளத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின், வெள்ளிக்கிழமை தொடக்கி வைத்தார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

தமிழகத்தில் ரூ.1 லட்சம் கோடிக்கான 200 முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்'நிலைக் குழுவின் மூலமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களின் வளர்'ச்சிகளை ஆய்வு செய்து அவற்றை தொடர்'ந்து கண்காணிக்க 'இ–முன்னேற்றம்' என்ற இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த இணையதளத்தில், ஒவ்வொரு திட்டம் குறித்த விவரங்களும் இடம்பெற்றுள்ளன.

மேலும், பணி ஒப்பந்தமான நாள், தொடங்கப்பட்ட தினம், நடைபெறும் இடம், நிதி நிலைமை, மாதாந்திர அடிப்படையில் திட்டத்தின் வளர்'ச்சி, நிதிநிலைமையின் வரையறை, பணிவளர்'ச்சி குறித்த புகைப்படம் ஆகியன இடம்பெற்றிருக்கும். இந்த இணையதளத்தின் மூலம் முக்கிய அரசுத் துறைகளின் செயல்பாடுகளை கண்காணித்திடவும் முடியும். துறைத் தலைமை அலுவலகங்கள் அவ்வப்போது திட்டங்களின் வளர்'ச்சியைத் தெரிவிக்கவும், நெருக்கடியான விஷயங்கள் மற்றும் தாமதத்துக்கான காரணங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைத் தெரிவிக்கவும் வசதியாக இணையதளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப நண்பன்: தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் தகவல் தொழில்நுட்ப நண்பன் இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் தொழில்கள் குறித்த கருத்துக் கேட்புத்தளமாக இது விளங்கும். மேலும், மாநிலத்தில் உள்ள அனைத்து தொழில்நுட்பம் சார்ந்த குழுமங்கள் நேரடியாக இதில் இணைந்து கொள்கைகளை உருவாக்கிடவும் அவர்'களது பங்களிப்பை அளிக்கவும் உதவும்.

தகவல் தொழில்நுட்பவியல் துறையால் வெளியிடப்படும் அனைத்து கொள்கைகள், அரசு உத்தரவுகள், ஒப்பந்தப் புள்ளிகள் ஆகியவற்றையும் பார்'வையிட முடியும். தகவல் தொழில்நுட்பவியல் துறை எதிர்'நோக்கும் முக்கிய பிரச்னைகள், இப்போதைய கொள்கைகள் குறித்து கருத்துகளைப் பதிவிடவும், அதற்குரிய தீர்'வுகளைப் பெற்றிடவும் வழி செய்யப்படும். இது எளிதாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் இருப்பதால் வர்'த்தகத்தைப் பெருக்க பெரிதும் துணைபுரியும் என்று அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. ஏவுகணை சோதனைக்கு வான் இலக்காக பயன்படும் விமானம் வெற்றிகர சோதனை

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்'டிஓ) சார்'பில் உருவாக்கப்பட்ட அதிவேக 'அப்யாஸ்' இலக்கு விமானம் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. வான் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகளின் சோதனையின்போது இலக்காக இந்த விமானம் பயன்படுத்தப்படும்.

ஒடிஸா மாநிலம், சண்டிபூர் அருகே வங்காள விரிகுடா கடல் பகுதியில் டிஆர்'டிஓ–வின் ஒருங்கிணைந்த ஏவுகணை சோதனைத் தளத்தில் (ஐடிஆர்) இந்த இலக்கு விமானத்தின் சோதனை வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது. அப்யாஸ் சோதனை வெற்றி பெற்றதைத் தொடர்'ந்து டிஆர்'டிஓ அதிகாரிகளுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்தார்.

இதுகுறித்து டிஆர்'டிஓ அதிகாரிகள் கூறியதாவது: பெங்களூருவில் உள்ள டிஆர்'டிஓ அமைப்பின் விமான மேம்பாட்டுப் பிரிவு (ஏடிஇ) மூலமாக இந்த இலக்கு விமானம் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது. இந்த இலக்கு விமானம் வேகமாகச் செல்லும் வகையில் உந்துதல் அளிப்பதற்காக அதில் இரட்டை பூஸ்டர்'கள் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளன. மேலும், இலக்கு விமானம் நீண்ட தூரம் மற்றும் நீடித்த வேகத்தில் செல்ல வேண்டும் என்பதற்காக அதில் கேஸ் டர்'பைன் என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, இதை கட்டுப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுவதற்காக கட்டுப்பாட்டு கணினியுடன் கூடிய வழிகாட்டுதல் தொழில்நுட்பமும் இந்த இயந்திரத்தில் இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இச்சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், மேலும் மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனை தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்தபடி ரேடார் மற்றும் எல்க்ட்ரோ ஆப்டிகல் கண்காணிப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு தொலையுணர்'வு மற்றும் சென்சார் கணிப்பு தொழிநுட்பங்கள் உதவியுடன் மடிக்கணினி மூலமாக கண்காணிக்கப்பட்டது. இந்தச் சோதனை வெற்றியடைந்துள்ளது என்று அவர்'கள் கூறினர்.

---

5. நீர்'மூழ்கிக் கப்பலைத் தாக்கும் ஏவுகணைகள்: அமெரிக்காவுடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம்

அமெரிக்காவிடம் இருந்து ரூ.423 கோடி செலவில் எம்.கே.–54 ரக நீர்'மூழ்கிக் கப்பலைத் தாக்கும் ஏவுகணைகளை இந்தியா கொள்முதல் செய்கிறது. இதுதொடர்'பான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

இந்த தகவலை பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்'பாளர் தனது ட்'விட்டர் பக்கத்தில் வெள்ளிக்கிழமை வெளியிட்டார்.

இந்த ஏவுகணைகள், இந்திய கடற்படையில் உள்ள பி–81 ரக கண்காணிப்பு விமானத்தில் பயன்படுத்தக்கூடியவை. இவை நீர்'மூழ்கிக் கப்பல்களைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை.

இந்திய கடற்படையிடம் படையிடம் தற்போது 11 'பி–81' ரக கண்காணிப்பு விமானங்கள் உள்ளன. இந்த விமானங்கள் அமெரிக்காவின் ஏரோஸ்பேஸ் நிறுவனத்திடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டவையாகும்.

---

6. ரூ.4,445 கோடியில் 7 மெகா ஜவுளிப் பூங்காக்கள்: மத்திய அரசு அறிவிப்பு

மத்திய அரசின் 'பிம்–மித்ரா' திட்டத்தின் கீழ் ரூ. 4,445 கோடியில் 7 மெகா ஜவுளிப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய ஜவுளித் துறை அமைச்சகம் கடந்த வியாழக்கிழமை இந்த அறிவிக்கையை வெளியிட்டது. ஒவ்வொரு ஜவுளிப் பூங்காவிலும் ஒரு லட்சம் நேரடி வேலைவாய்ப்புகள் மற்றும் 2 லட்சம் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நேக்கத்தில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும் மத்திய அரசு சார்'பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய ஜவுளித் துறை அமைச்சக அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

2021–22 மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மத்திய அரசின் ஒப்புதலுடன் இந்த 7 ஜவுளிப் பூங்காக்களை அமைப்பதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆயத்த ஆடை உற்பத்திக்குத் தேவையான நூற்பு ஆலை, நெசவு, சாய ஆலை, பிரின்டிங் என அனைத்தும் ஒரே இடத்தில் அமையும் வாய்ப்பை இந்த பூங்காக்கள் ஏற்படுத்தித் தரும். இந்த பூங்காக்களில் உலகத் தரத்திலான உள்கட்டமைப்புகள் வசதிகள் இடம்பெறுபோது, உள்நாட்டு

முதலீடுகள் மட்டுமின்றி வெளிநாட்டு நேரடி முதலீடும் அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும்.

இந்தப் பூங்காவை தொடங்குவதற்காக, ஜவுளித் துறை சார்ந்த வசதிகளுடன் கூடி தொடர்ச்சியாக அமையப்பெற்றிருக்கும் 1,000 ஏக்கருக்கும் அதிகமான எந்தவித வில்லங்கமும் இல்லாத இடவசதியை தயார் நிலையில் பெற்றிருக்கும் மாநிலங்களிடமிருந்து பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன. இந்த ஜவுளி பூங்காவை அமைக்கும் மாநிலத்துக்கு மத்திய அரசின் மேம்பாட்டு மூலதன ஆதரவாக மொத்த திட்டச் செலவில் 30 சதவீதம் அளிக்கப்படும். அதோடு, இந்தப் பூங்காக்களில் ஜவுளி உற்பத்தி நிறுவனங்கள் விரைந்து ஆரம்பிக்கப்படுவதை ஊக்குவிக்கும் வகையில் 'போட்டித்தன்மை ஊக்குவிப்பு ஆதரவு (சிஜஎஸ்) நிதியாக பி.எம். மித்ரா ஜவுளி பூங்காக்களுக்கு தலா ரூ.300 கோடி வழங்கப்படும்.

இந்தத் திட்டம் அதிக முதலீடுகளை ஈர்க்கும் என்பதோடு, அதிக அளவில் வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தரும்.

தமிழகம், பஞ்சாப், ஒடிஸா, ஆந்திரம், குஜராத், ராஜஸ்தான், அஸ்ஸாம், கர்நாடகம், மத்திய பிரதேசம், தெலங்கானா ஆகிய மாநிலங்கள் ஆர்வம் தெரிவித்துள்ளன என்று அமைச்சகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

7. இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா–பிரிட்டன் ஒப்புதல்

இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியாவும் பிரிட்டனும் ஒப்புக்கொண்டுள்ளன.

இரண்டு நாள் பயணமாக இந்தியா வந்துள்ள பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் எலிசபெத் டிரஸ் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இடையேயான பேச்சுவார்த்தையின்போது இதற்கான உடன்பாடு ஏற்பட்டது. ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்தும் இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஆலோசிக்கப்பட்டது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்த பேச்சுவார்த்தையின்போது, கடந்த மே மாதம் இரு நாட்டு பிரதமர்களிடையேயான காணொலி வழி மாநாட்டின் போது இரு நாடுகளிடையேயான புதிய வர்த்தகம், பாதுகாப்பு, பருவநிலை மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட துறைகளிலான ஒத்துழைப்புக்காக அறிமுகம் செய்யப்பட்ட 'லட்சியத் திட்டம் 2030' திட்ட செயல்பாடு குறித்து இரு வெளியுறவு அமைச்சர்களும் ஆய்வு செய்தனர். பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.

இந்தோ–பசிபிக் மற்றும் மேற்கு ஆசிய பிராந்தியங்களில் இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் இணைய, விண்வெளி பயங்கரவாதங்கள் போன்ற வளர்ந்துவரும் சவால்களை எதிர்கொள்வதில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இந்த பேச்சுவார்த்தையின்போது ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆப்கானிஸ்தானில் முழு அளவில் பாதுகாப்பான மற்றும் தடையற்ற மனிதாபிமன உதவிகளுக்கு அனுமதிக்கப்படுவது மற்றும் ஆப்கன் நாடு பயங்கரவாதிகளுக்கு தஞ்சம் கொடுக்கவோ அல்லது மற்ற நாடுகள் மீது பயங்கரவாத தாக்குதல் நடத்துவதற்கோ பயன்படுத்தப்படக் கூடாது என்பது குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.

இரு நாடுகளிடையேயான திட்டங்கள் மற்றும் நிபுணர்களிடையேயான ஆலோசனைகளை விரைவுபடுத்தும் விதமாக இந்தியா – பிரிட்டன் இடையே புதிதாக 1.5 பேச்சுவார்த்தை திட்டத்தை அறிமுகம் செய்வதற்கும் உடன்பாடு ஏற்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, 'ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் வரும் அக்டோபர் 31 முதல் நவம்பர் 12–ஆம் தேதி வரை நடைபெற உள்ள 'கோப் 26' என்ற 2021 ஐக்கிய நாடுகள் பருவநிலை மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்க வரவுள்ளதை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம் என்று கூறிய டிரஸ், 'இந்த மாநாடு தொடர்பாக நிபுணத்துவத்தை பகிர்ந்துகொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு ஒத்துழைப்புகளை இரு நாடுகளும் மேற்கொள்வது அவசியம்' என்று குறிப்பிட்டார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எலிசபெத் டிரஸ் தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், 'இந்தியா, பிரிட்டன் போன்ற நாடுகள் எதிர்காலத்துக்கான நமது பகிரப்பட்ட திட்டங்கள் மீது ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

---

8. மானூர் ஒன்றியக்குழு தலைவராக 22 வயது பெண் என்ஜினீயர் தேர்வு

நெல்லை மாவட்டம் மானூர் யூனியனில் உள்ள 25 ஊராட்சி ஒன்றிய வார்டுகளில் நடந்த தேர்தலில் தி.மு.க.வைச் சேர்ந்த 16 பேரும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த 3 பேரும், அ.ம.மு.க., பா.ஜ.க.வைச் சேர்ந்த தலா ஒருவரும், சுயேச்சைகள் 4 பேரும் ஒன்றிய கவுன்சிலர்களாக வெற்றி பெற்றனர்.

இதில் 19–வது வார்டில் தி.மு.க.வை சேர்ந்த 22 வயதான பெண் என்ஜினீயர் ஸ்ரீலேகா வெற்றி பெற்றார். இவருடைய தந்தை அன்பழகன், மானூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளராக உள்ளார்.

போட்டியின்றி தேர்வு

இந்த நிலையில் மானூர் யூனியன் அலுவலகத்தில் நேற்று தலைவர், துணை தலைவர் பதவிகளுக்கான முறைமுக தேர்தல் நடந்தது. இளம் வயதிலேயே ஒன்றிய கவுன்சிலராக வென்ற ஸ்ரீலேகா, மானூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் பதவிக்கு வேட்புமனு தாக்கல் செய்து இருந்தார். அவரை எதிர்த்து தலைவர் பதவிக்கு வேறு யாரும் வேட்புமனு தாக்கல் செய்யாததால், ஸ்ரீலேகா போட்டியின்றி தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

பின்னர் அவர் கூறுகையில், அடிப்படை வசதிகளை மேம்படுத்த பாடுபடுவேன் என்றார்.

விக்கிரவாண்டியில்...

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி ஒன்றியக்குழு தலைவராக தி.மு.க.வை சேர்ந்த 21 வயதான கல்லூரி மாணவி சங்கீதா அரசி போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். அவர் நடப்பு கல்வி ஆண்டு இறுதியில் தான் பி.எஸ்.சி. கணிதம் படித்து முடித்தார்.

---

9. அரசு உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கான வலைதளங்கள், தமிழ் மென்பொருட்கள்: முதல்வர் தொடங்கி வைத்தார்

தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் உருவாக்கப்பட்டுள்ள வலைதளங்கள் மற்றும் மென்பொருட்களைத் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இதுகுறித்துத் தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

"தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (22.10.2021) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள "இ–முன்னேற்றம்" மற்றும் "தகவல் தொழில்நுட்ப நண்பன்" ஆகிய இரண்டு வலைத்தளங்களையும், "கீழடி– தமிழிணைய விசைப்பலகை" மற்றும் "தமிழி – தமிழிணைய ஒருங்குறி மாற்றி" ஆகிய இரு தமிழ் மென்பொருள்களையும் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு, சுமார் ஒரு லட்சம் கோடிக்கான 200 முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இத்திட்டங்களின் வளர்ச்சிகளை மீளாய்வு செய்து அவற்றைக் கண்காணிப்பதற்காக "இ–முன்னேற்றம்" என்ற வலைத்தளம் (https://emunnetram.tn.gov.in/) தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு திட்டம் குறித்த விவரங்களான பணி ஒப்பந்தமான நாள், தொடங்கப்பட்ட நாள், நடைபெறும் இடம், நிதி நிலைமை, மாதாந்திர அடிப்படையில் திட்டத்தின் வளர்ச்சி, நிதிநிலைமையின் வரையறை, பணிவளர்ச்சியின் தொடர் புகைப்படம் போன்றவை இடம் பெற்றிருக்கும். மேலும், முக்கிய அரசுத் துறைகளின் செயல்பாடுகளை இதன் வழியே கண்காணித்திடவும் இயலும். துறைத்தலைமை அலுவலகங்கள் அவ்வப்போது திட்டங்களின் வளர்ச்சியினைத் தெரிவிப்பதற்கும், நெருக்கடியான பொருண்மைகள் மற்றும் தாமதத்திற்கான காரணங்கள் ஏதேனும் இருப்பின், அவற்றைத் தெரிவிப்பதற்கும் ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளின் ஏற்றுமதி ஆண்டுதோறும் 10 சதவீதம் என்ற அளவில் வளர்ந்து வருகிறது. இது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தமிழ்நாடு மின்னாளுமை முகமையால்

உருவாக்கப்பட்டுள்ள "தகவல் தொழில்நுட்ப நண்பன்" என்ற வலைத்தளம், தகவல் தொழில்நுட்பவியல் தொழில்கள் குறித்த கருத்துக்கேட்புத் தளமாக விளங்குவதுடன், மாநிலத்தில் உள்ள அனைத்து தொழில்நுட்பம் சார்ந்த குழுமங்கள் நேரடியாக இதில் இணைந்து கொள்கைகளை உருவாக்கிடவும் அவர்களின் பங்களிப்பினை நல்கிடவும் உதவும்.

இத்தளத்தின் வாயிலாக உள்நுழையும் குழுமங்கள், தகவல் தொழில்நுட்பவியல் துறையால் வெளியிடப்படும் அனைத்து கொள்கைகள், அரசாணைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை எளிதில் பார்வையிட இயலும். மேலும், எதிர்நோக்கும் முக்கியப் பிரச்சினைகள் மற்றும் தற்போதைய கொள்கைகள் குறித்து தமது கருத்துரைகளைப் பதிவிடும் வசதியும், அதற்குத்தக்க தீர்வுகளைப் பெற்றிடவும், தகவல்களை மின்னஞ்சல் வழியாகப் பெற்றிடவும் உதவும்.

இதன்மூலம் குழுமங்களின் கொள்கைகள், திட்டங்களின் வரைமுறைகள் மற்றும் மிக வேகமான வளர்ச்சிக்கு வித்திடும் திட்டங்கள் போன்றவற்றைக் கண்காணிக்க முடியும். மேலும், இது எளிதாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் உள்ளதால் வர்த்தகத்தைப் பெருக்கப் பெரிதும் துணைபுரியும்.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள "கணினி விசைப்பலகை" மற்றும் "தமிழிணையம்–ஒருங்குறி மாற்றி" ஆகிய இரு தமிழ் மென்பொருள்களையும் பல புதிய வசதிகளுடன் மேம்படுத்தி, "கீழடி– தமிழிணைய விசைப்பலகை" மற்றும் "தமிழி– தமிழிணைய ஒருங்குறி மாற்றி" (Keezhadi – Keyboard and Tamizhi – Unicode Converter) எனப் பெயர் மாற்றம் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

கீழடி– விசைப்பலகை மென்பொருளானது, தமிழ்' 99 விசைப்பலகை (Tamil'99 Keyboard), ஒலிபெயர்ப்பு விசைப்பலகை (Phonetic Keyboard), பழைய தட்டச்சு விசைப்பலகை (Old Typewriter Keyboard) ஆகிய மூன்று விதமான கணினி விசைப்பலகைகளின் அமைப்பில் செயல்படும்.

தமிழி–தமிழிணைய ஒருங்குறி மாற்றி மென்பொருளானது, வானவில் மற்றும் பிற தமிழ் எழுத்துருக்களில் (Fonts) தட்டச்சு செய்யப்பட்ட .doc, .docx, .rtf, .xls, .xlsx, .ods, .ppt, .pptx போன்ற அமைப்புகளில் உள்ள உரைநடை (Text), கோப்பு (File) மற்றும் கோப்புறை (Folder) ஆவணங்களை "தமிழ் ஒருங்குறி"க்கு மாற்றும் தன்மையுடையது.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள இம்மென்பொருட்களைக் கட்டணமின்றி தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்திலிருந்து (www.tamilvu.org/unicode) பதிவிறக்கம் செய்திட இயலும்". இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

10. நியாயவிலைக் கடைகளில் பனைவெல்லம் விற்பனை: தொடக்கி வைத்தார் ஸ்டாலின்

தமிழகத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளில் பனைவெல்லம் விற்பனை செய்யும் திட்டத்தை தொடக்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்.

நியாய விலை கடைகள் மூலம் பனை வெல்லம் விற்பனை செய்யும் திட்டம் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, பனைத் தொழிலில் ஈடுபட்டு வரும் பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு "கற்பகம்" என்ற பெயரில் நியாய விலை கடைகள் மூலம் பனை வெல்லம் விற்பனை செய்யும் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

பல்பொருள் அங்காடிகளில் கரும்பனை எனும் பெயரில் பனைவெல்லம் விற்பனை செய்யும் திட்டத்தையும் முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பொருட்களை கொள்முதல் செய்திட புதிய கைபேசி செயலி வணிகக் களத்தில் ஏற்பட்டு வரும் அபரிமிதமான மின்னணு தொழில் நுட்ப வளர்ச்சியினை கருத்தில் கொண்டு இளம் தலைமுறையினர் எளிதில் இணையதள சேவையினை பயன்படுத்தி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பொருட்களை கொள்முதல் செய்திட டிஎன்காதி (tnkhadi) எனும் செல்லிடப்பேசி செயலியை முதல்வர் ஸ்டாலின் அறிமுகப்படுத்தினார்.

பனை வெல்லம் மற்றும் பனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையம் இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஊராட்சி ஒன்றியம் சாயல்குடியில் "இராமநாதபுரம் – சிவகங்கை" மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு விற்பனை சம்மேளனத்திற்கு சொந்தமான இடத்தில், பனைத் தொழிலை மேம்படுத்திடும் நோக்கில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் ரூ.53.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பனை வெல்லம் மற்றும் பனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையத்தை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்கள்.

துணிநூல் துறை என்ற புதிய துறை உருவாக்கம்

2021–22ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தவாறு, கைத்தறி மற்றும் துணிநூல் துறையினைப் பிரித்து, தனியாக துணிநூல் துறை என்ற துறை உருவாக்கப்பட்டு, முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

சிறந்த நெசவாளர்கள் விருது

புதிய மற்றும் கண்கவர் வடிவமைப்புகளை புகுத்துதல் மற்றும் தற்போதைய சந்தையில் அதிக தேவையுள்ள பட்டு, கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசால் சிறந்த நெசவாளர் விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், மாநில அளவிலான தேர்வுக்குழு மூலம் தெரிவு செய்யப்பட்ட 6 கைத்தறி நெசவாளர்களுக்கு முதல் பரிசாக 1 இலட்சம் ரூபாய், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாய் மற்றும் மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய் முறையே பட்டு மற்றும் பருத்தி ஆகிய இரண்டு இரகங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2020–21ஆம் ஆண்டிற்கான பட்டு இரகத்திற்கான சிறந்த நெசவாளர் விருதிற்கான முதல் பரிசு கே.ஜி. கண்ணன், இரண்டாம் பரிசு வி. சரவணன், மூன்றாம் பரிசு கே. சுமதி, பருத்தி இரகத்திற்கான சிறந்த நெசவாளர் விருதிற்கான முதல் பரிசு இ.ஆர். நாகலம்மாள், இரண்டாம் பரிசுஎஸ். ரவி, மூன்றாம் பரிசு என். நெடுஞ்சேரலாதன் ஆகியோருக்கு முதல்வர் இன்று பரிசுத் தொகைக்கான காசோலைகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி, பாராட்டினார்.

சிறந்த ஏற்றுமதியாளர் விருது

கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டு சந்தையில் கைத்தறி துணி விற்பனையினை மேம்படுத்தவும் தமிழ்நாடு அரசு சிறந்த கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 2020–21ஆம் ஆண்டிற்கான சிறந்த ஏற்றுமதியாளர் விருதிற்கான முதல் பரிசு சென்னை – திருவாளர் அம்பாடி எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கும், இரண்டாம் பரிசு ஈரோடு – சென்னிமலை தொழிலியல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் மற்றும் மூன்றாம் பரிசு ஈரோடு – திருவாளர் ஃபைவ் பி வென்சர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் முதல்வர் வழங்கி, பாராட்டினார்.

காஞ்சிபுரம் – தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தின் பங்கு ஈவுத் தொகை காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சரிகை ஆலை, பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1974–ஆம் ஆண்டு முதல் வணிக ரீதியிலான உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது . இந்நிறுவனம் ஐஎஸ்ஓ:9001:2015 தரச்சான்று பெற்ற, மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.

இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவைப்படும் 60 சதவீத சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகின்றது.

காஞ்சிபுரம் – தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தின் 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஈவுத் தொகையான 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை முதல்வரிடம் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி அவர்கள் வழங்கினார்.

---

11. ஆஸ்கா் விருதுக்கு தமிழ் திரைப்படமான 'கூழாங்கல்' பரிந்துரை

ஆஸ்கா் விருதுக்கு பரிந்துரைக்க இந்தியா சாா்பில் தமிழ் திரைப்படமான 'கூழாங்கல்' தோ்வு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மாா்ச் 27–ஆம் தேதி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் 94–ஆவது ஆஸ்கா் விருதுகள் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. அதில் சிறந்த வெளிநாட்டு படம் பிரிவில் இந்தியா சாா்பில் பரிந்துரைக்க தமிழ் திரைப்படங்களான 'கூழாங்கல்' , 'மண்டேலா' , மலையாளத் திரைப்படமான 'நாயாட்டு' , ஹிந்தி திரைப்படங்களான 'சா'தா'

உத்தம்' , 'ஷோ'ஷா' உள்பட 14 திரைப்படங்களை இந்திய திரைப்பட சம்மேளனம் பரிசீலித்தது. இதில் 'கூழாங்கல்' திரைப்படத்தை பரிந்துரைக்க அந்த சம்மேளனம் முடிவு செய்தது.

மதுவுக்கு அடிமையான தந்தையின் துன்புறுத்தலால் வீட்டைவிட்டு வெளியேறிய தாயை, தந்தையுடன் தேடிச் செல்லும் சிறுவனை கதைக்களமாக கொண்ட இந்த திரைப்படத்தை வினோத்ராஜ் இயக்கியுள்ளார். விக்னேஷ் சிவன், நயன்தாரா இணைந்து தயாரித்துள்ளனர். யுவன்சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

ஏற்கெனவே நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் நடைபெற்ற 50-ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் (ஐஎஃப்எஃப்ஆர்) 'கூழாங்கல்' திரைப்படத்துக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை எந்தவொரு இந்திய திரைப்படமும் ஆஸ்கர் விருது பெற்றதில்லை. அந்த விருதுக்கான சிறந்த சர்வதேச திரைப்பட பிரிவின் இறுதிப் பட்டியலில் கடைசியாக ஹிந்தி நடிகர் ஆமிர் கான் நடித்த 'லகான்' திரைப்படம் 2001-ஆம் ஆண்டில் இடம்பெற்றது. அதற்கு முன்பு 1958-ஆம் ஆண்டு 'மதர் இந்தியா' , 1989-ஆம் ஆண்டு 'சலாம் பாம்பே' திரைப்படங்கள் ஆஸ்கர் விருதின் இறுதிப் பட்டியலில் இடம்பெற்றன.

ஏ.ஆர்.ரஹ்மான், ரோஹிணி ஹத்தங்கடி உள்ளிட்டோர் பெற்ற ஆஸ்கர் விருதுகள் வெளிநாட்டு தயாரிப்புகளாக போட்டியிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. வங்கமொழி இயக்குநர் சத்யஜித் ரேக்கு வாழ்நாள் சாதனைக்காக சிறப்பு ஆஸ்கர் விருது அளிக்கப்பட்டது.

---

12. சமூக நீதிக் கண்காணிப்புக் குழு தலைவராக சுப.வீரபாண்டியன் நியமனம்: உறுப்பினர்களையும் நியமித்து முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவுக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக, தமிழக அரசு இன்று (அக். 23) வெளியிட்ட செய்திக்குறிப்பு:

"சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக தமிழக அரசால் 'சமூகநீதிக் கண்காணிப்புக் குழு' அமைக்கப்படும் எனவும், இக்கண்காணிப்புக் குழு, கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும், வழிகாட்டும், செயல்படுத்தும் பணிகளை மேற்கொள்வதோடு, இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரை செய்யும் எனவும், இக்குழுவில் அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம் பெறுவார்கள் எனவும், சமூகநீதி அரசாணையின் நூற்றாண்டு நாளினையொட்டி தமிழக முதல்வர் ஏற்கெனவே அறிவித்துள்ளார். அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, கீழ்க்காணும் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்து, 'சமூகநீதிக் கண்காணிப்புக் குழுவினை' அமைத்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

1. பேராசிரியர் சுப. வீரபாண்டியன் – தலைவர்

2. முனைவர் கே. தனவேல், ஐஏஎஸ் (ஓய்வு) – உறுப்பினர்

3. பேராசிரியர் முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ் – உறுப்பினர்

4. கவிஞர் மனுஷ்யபுத்திரன் – உறுப்பினர்

5. ஏ.ஜெய்சன் – உறுப்பினர்

6. பேராசிரியர் முனைவர் ஆர். ராஜேந்திரன் – உறுப்பினர்

7. கோ. கருணாநிதி – உறுப்பினர்

சமூகநீதி கண்காணிப்புக் குழுவானது, சமூகநீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து, அவை முழுமையாக பின்பற்றப்படாவிட்டால், உரிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசுக்கு அவ்வப்போது தமது பரிந்துரைகளை வழங்கும். இக்குழுவில் சமூகச் சீர்திருத்தத் துறை முதன்மைச் செயலாளர் உறுப்பினர்-செயலாளராக அங்கம் வகிப்பார்.

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர் பற்றிய விவரங்கள்

* சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் சுப. வீரபாண்டியன், சிறுவயது தொடங்கி, சாதி ஒழிப்பு, ஆதிக்க எதிர்ப்பு, தாய்மொழிப் பற்று, பெண் விடுதலை, பகுத்தறிவு முதலான கருத்துகளைத் தமிழகம் முழுவதும் பரப்பி, அரை நூற்றாண்டுக்கும் மேலாக சமூகநலன் குறித்து, பேசியும் எழுதியும் வருபவர்.

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளவர்களைப் பொறுத்தவரையில்

* முனைவர் கே.தனவேல் ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் ஆவார். மத்திய அரசிலும், மாநில அரசிலும் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் பணியாற்றிய நீண்ட அனுபவம் கொண்டவர்.

* பேராசிரியர் முனைவர் சுவாமிநாதன் தேவதாஸ் கடந்த 40 ஆண்டுகளாக பல்வேறு பொதுத் துறை நிறுவனங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் தன்னாட்சி பெற்ற நிறுவனங்களில் பணிபுரிந்த நீண்ட அனுபவம் பெற்றவர்; மேலும் பெரியார் மணியம்மை நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் இணைத் துணைவேந்தராகப் பணிபுரிந்தவர்.

* கவிஞர் மனுஷ்யபுத்திரன் வரலாறு மற்றும் ஊடகத்துறையில் இரண்டு முதுகலை பட்டங்கள் பெற்றவர். இந்தியாவின் உயரிய தேசிய விருதுகளில் ஒன்றான சன்ஸ்கிருதி சம்மான் விருதினைப் பெற்றவர். 'இந்தியா டுடே' இவரை தமிழகத்தின் செல்வாக்குமிக்க 10 மனிதர்களில் ஒருவராக இரண்டாண்டுகள் தொடர்ச்சியாக தேர்ந்தெடுத்ததும், 'ஆனந்தவிகடன்' தமிழகத்தின் 'டாப் 10' மனிதர்களில் ஒருவராக தேர்வு செய்ததும் குறிப்பிடத்தக்கது.

* ஜெய்சன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் பற்றி நன்கு அறிந்தவர் மற்றும் அதில் நீண்ட அனுபவம் கொண்டவர்.

* பேராசிரியர் முனைவர் ஆர். ராஜேந்திரன் கடந்த 36 ஆண்டுகளாகக் கல்விப் பணியாற்றியவர். பொருளாதாரத்தில் நிபுணத்துவம் பெற்றவர்.

* திரு. கோ. கருணாநிதி அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்று, சமூகநீதியை பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று அறிமுகம் செய்தவர்".

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

13. தூய்மையான எரிசக்தியை வலுப்படுத்த மின்துறையின் புதிய விதிமுறைகள்

பருவநிலை மாற்றத்திற்கான உறுதிப்பாட்டை பூர்த்தி செய்ய நிலைத்த தூய்மையான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் எரிசக்தியை வலுப்படுத்த மத்திய எரிசக்தித் துறை அமைச்சகம் மின் உற்பத்தியாளர்களுக்கு புதிய விதிகளை அறிவித்துள்ளது.

இது குறித்து மத்திய எரிசக்தி துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மின்சாரத் துறையில் முதலீட்டாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்கள் ஆகியோர், மின்சார சட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றம், புதுப்பிக்கத்தக்க மின்சாரம் மற்றும் இதனுடன் தொடர்புடைய விஷயங்கள் காரணமாக தங்கள் முதலீடுகளை சரியான நேரத்தில் மீட்டெடுப்பது பற்றி கவலைப்பட்டனர். இதையொட்டி, மின்சார நுகர்வோர்கள் மற்றும் இதர பங்குதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மின்துறைச் சட்டம் 2003-ன் கீழ் மின்துறை அமைச்சகம் கீழ்கண்ட விதிமுறைகளை அறிவித்துள்ளது. மின்சார (சட்டம் மாற்றம் காரணமாக செலவினங்களை சரியான நேரத்தில் மீட்பது) விதிமுறைகள் 2021; மின்சார (புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதார மின் உற்பத்தியை அதிகரிப்பது) விதிமுறைகள் 2021 ஆகியவையாகும்.

மின்துறையில் முதலீடு, பெரும்பாலும் சரியான நேரத்தில் செலவினங்களை மீட்பதில் சார்ந்துள்ளது. தற்போது சட்டங்கள் நிறைவேற கால‌தாமதம் ஆகிறது. இது இந்தத் துறையின் நம்பகத் தன்மையைப் பாதிக்கிறது. மேலும், முதலீட்டாளர்களும் நிதி ரீதியாக நெருக்கடியைச் சந்திக்கின்றனர். இதனால், அரசு புதிய விதிமுறைகளை கொண்டு வந்துள்ளது. இதன் மூலம் நாட்டில் முதலீட்டுக்கான உகந்த சூழல் ஏற்படும். உலகம் முழுவதும் எரிசக்தித் துறையில் மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. எரிசக்தி மாற்றத்தைக் கொண்டுவர இந்தியாவும் உறுதி அளித்துள்ளது.

வருகின்ற 2022-ஆம் ஆண்டுக்குள் 175 ஜிகாவாட், 2030-ஆம் ஆண்டுக்குள் 450 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை அமைப்பதற்கான உறுதிப்பாட்டை இந்தியா அறிவித்துள்ளது. இந்த விதிமுறைகள் தூய்மையான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் இலக்குகளை அடைய உதவும். நுகர்வோருக்கு பசுமை எரிசக்திக் கிடைப்பதையும் இந்த அரசு உறுதி செய்யும். எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான

சூழலை உருவாக்கி பாதுகாப்பை உறுதி செய்யும். சட்டத்தில் மாற்றம் செய்யப்படும் போது, அதனால் ஏற்படும் தாக்கத்தை சரி செய்ய மாதாந்திர மின் கட்டணத்தில் சரி செய்யக் கூடிய கணக்கிடுவதற்கான வழிமுறைகளும் வழங்கப்படுள்ளது. ஏதேனும் வணிகக் கருத்தில், மின் உற்பத்தி அல்லது விநியோகத்தை கட்டுப்படுத்துதல் அல்லது ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படக்கூடாது.

மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு நிறுவனம், இடைத்தரகராக இருந்து மின் கொள்முதல் செய்ய அனுமதிக்கப்படும். மின் உற்பத்தி நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், மின்சாரக் கட்டமைப்பில் ஏதேனும் தொழில்நுட்பத் தடைகள் ஏற்பட்டால் அல்லது மின் தொகுப்பு பாதுகாப்புக் காரணங்களுக்காக மட்டுமே குறைக்கப்படலாம் அல்லது கட்டுப்படுத்தப்படலாம். மின்சாரம் குறைப்பு அல்லது ஒழுங்குபடுத்தலுக்கு, இந்திய மின் தொகுப்பு குறியீட்டின் விதிகள் பின்பற்றப்பட வேண்டும் போன்ற பல விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

---

14. செயற்கை கருத்தரிப்பு மூலம் இந்தியாவின் முதல் எருமை பிறப்பு

செயற்கை கருத்தரிப்பு (ஐவிஎஃப்) முறையின் மூலம் இந்தியாவின் முதல் 'பான்னி' வகை எருமைக் கன்று பிறந்துள்ளது. இதன் மூலம், நாட்டின் கால்நடை செயற்கை இனப்பெருக்க தொழில்நுட்ப முறை அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது.

குஜராத்தின் சோம்நாத் மாவட்டத்தில் இருக்கும் தனேஜில் அமைந்துள்ள சுசீலா அக்ரோ ஃபார்ம்ஸைச் சேர்ந்த வினய் எல்.வாலா என்ற விவசாயியின் வீட்டில் இது நிகழ்ந்துள்ளது.

2020, டிசம்பர் 15–ஆம் தேதி குஜராத்தின் கட்ச் பகுதிக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடி, பண்ணி எருமை வகை குறித்துப் பேசியிருந்தார். அதற்கு மறுநாளே, 'பான்னி' வகை எருமைகளின் ஐவிஎஃப் கருத்தரித்தல் முயற்சிக்கு திட்டமிடப்பட்டது.

வினய் எல்.வாலாவின் சுசீலா அக்ரோ ஃபார்ம்ஸை சேர்ந்த 3 பண்ணி எருமைகளை ஐவிஎஃப் கருத்தரித்தல் முயற்சிக்கு உட்படுத்த விஞ்ஞானிகள் திட்டமிட்டனர். பல்வேறு கட்டங்களுக்குப் பிறகு முதல் எருமைக் கன்று தற்போது பிறந்துள்ளது.

எருமைகளின் செயற்கைக் கருத்தரிப்பு முறையில் மிகப்பெரிய சாத்தியக்கூறுகளை அரசு மற்றும் விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். இதன் மூலம் கால்நடைகளின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

1. பருத்தி பொருளாதாரத்தில் நிலைத்தன்மை மற்றும் மதிப்பு கூட்டலுக்காக, இந்தியா, எந்த நாட்டோடு கைகோர்த்துள்ளது?

அ) பிரான்ஸ்



ஆ) ஜெர்மனி ☑

இ) டென்மார்க்

ஈ) பின்லாந்து

✓ ஜெர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான மத்திய அமைச்சகம், விவசாயம் & விவசாயிகள் நல அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் ஜவுளிஅமைச்சகத்துடன் கூட்டிணைந்துள்ளது. 'பருத்திப் பொருளாதாரத்தில் நிலைத்தன்மை மற்றும் மதிப்பு கூட்டப்பட்டது' என்ற இந்தோ–ஜெர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின் அமலாக்க ஒப்பந்தத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

✓ இந்தியாவில் நிலையான பருத்தி உற்பத்தியிலிருந்து மதிப்பு கூட்டலை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 4 பெரிய பருத்தி உற்பத்தி மாநிலங்களில் (தமிழ்நாடு, மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் மத்திய பிரதேசம்) இது கவனம் செலுத்துகின்றது.

---

2. சமீபத்தில் உத்தரபிரதேசத்தில் தொடங்கப்பட்ட, "நதிநீர் வளர்ப்பு திட்டமானது" எந்தத் திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது?

அ) PM கிரிஷி சஞ்சய் யோஜனா



ஆ) PM மத்ஸ்ய சம்பதா யோஜனா ☑

இ) ஒரு சொட்டு அதிக பயிர்

ஈ) PM பசல் பீமா யோஜனா

✓ "மீன்வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு & பால்வள அமைச்சகத்தின்கீழ் பிரதமர் மத்ஸ்ய சம்பதா யோஜனாவின்கீழ் ஒரு சிறப்பு நடவடிக்கையாக வடிவமைக்கப்பட்ட "ஆற்றுநீர் பண்ணை திட்டம்", மீன் உற்பத்தியை பெருக்குவதையும் மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத்திட்டத்தை உத்தரபிரதேச மாநிலம் கர் முக்தேஷ்வர் பிரிஜ்காட்டில் மத்திய அமைச்சர் ஸ்ரீ பர்ஷோத்தம் ரூபாலா தொடங்கிவைத்தார்.

---

3. நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையின் பொருளாதார பிரிவின் தலைவர் யார்?

அ) இந்தியப் பிரதமர்



ஆ) நிதி அமைச்சர்

இ) நிதி செயலாளர்

ஈ) தலைமைப் பொருளாதார ஆலோசகர் ☑

✓ தலைமைப்பொருளாதார ஆலோசகர் நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையின் பொருளாதார பிரிவின் தலைவர் ஆவார். கடந்த 2018 டிசம்பரில் இருந்து இந்தியாவின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக இருந்த கே வி சுப்ரமணியன், அந்தப் பதவியில் இருந்து விலகி, கல்வித்துறைக்குத் திரும்பியுள்ளார். FY19, FY20 & FY21'க்கான பொருளாதார ஆய்வுகளை வெளியிடுவதில் அவர் முக்கியபங்கு வகித்தார்.

---

4. உலக மனநல நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) அக்டோபர் 10 ☑

ஆ) அக்டோபர் 15

இ) அக்டோபர் 17

ஈ) அக்டோபர் 20

✓ ஒவ்வோர் ஆண்டும், அக்.10ஆம் தேதி உலக மனநல நாளாக உலக சுகாதார அமைப்பால் அனுசரிக்கப்படுகிறது. மனநலப் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அது தொடர்பாக ஆதரவைத் திரட்டவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு அக்டோபர் 10 அன்று, "Mental health care for all: let's make it a reality" என்ற கருப் பொருளின்கீழ் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

5. பன்னாட்டு எரிசக்தி முகமையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) ஜெனீவா **ஆ) பாரிஸ் ☑**

இ) தோகா ஈ) காத்மாண்டு

✓ பன்னாட்டு எரிசக்தி முகமை என்பது 1974ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். இது பிரான்சின் பாரிஸை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. இது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டமைப்பின் (OECD) கட்டமைப்பில் நிறுவப்பட்டது. IEA தனது முழுநேர உறுப்பினராக இந்தியாவை அழைத்துள்ளது. இந்த மன்றத்தில் முழுநேர உறுப்பினராக இருக்கும் பட்சத்தில், இந்தியா, 90 நாட்களுக்கு எண்ணெய் இருப்புக்களை பராமரிக்க வேண்டும்.

---

6. மொத்த விலை குறியீட்டிற்கு கூடுதலாக, பொருளாதார ஆலோசக–ர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட பிறிதொரு தரவு எது?

அ) நுகர்வோர் விலைக் குறியீடு (அகில இந்தியா)

ஆ) நுகர்வோர் விலைக் குறியீடு (நகர்ப்புறம்)

இ) முக்கிய தொழில்கள் உற்பத்தியின் மாதாந்திர குறியீடு ☑

ஈ) உணவு பணவீக்கம்

✓ பொருளாதார ஆலோசகர் அலுவலகம் என்பது மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின்கீழ் உள்ள தொழிற்துறை மற்றும் உள் நாட்டு வணிக ஊக்குவிப்பு துறையுடன் இணைக்கப்பட்ட அலுவலகம் ஆகும். மாதாந்திர மொத்த விற்பனை விலை குறியீடுகளைத் தொகுத்தல் மற்றும் வெளியிடுதல் மற்றும் முக்கிய தொழில்துறை உற்பத்தியின் மாதாந்திர குறியீட்டைத் தொகுத்தல் மற்றும் வெளியிடுதல் ஆகியவை இவ்வலுவலகத்தின் முக்கிய செயல்பாடு ஆகும்.

✓ மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம், 2021 செப்டம்பரில் ஆறு மாதங்களில் இல்லாத அளவிற்கு 10.66%ஆக குறைந்துள்ளது.

---

7. இளவரசர் வில்லியமின் முதல் எர்த்ஷாட் பரிசை வென்ற இந்திய தொழிலதிபர் யார்?

அ) ரத்தன் டாடா



ஆ) அனில் அம்பானி

இ) வித்யுத் மோகன் ☑

ஈ) தீபிந்தர் கோயல்

✓ இந்திய தொழிலதிபரான வித்யுத் மோகன், வேளாண் கழிவுகளை மறு–சுழற்சிசெய்து, விற்கக்கூடிய உயிரித் தயாரிப்புகளாக மாற்றியதற்காக, இளவரசர் வில்லியமின் முதல் எர்த்ஷாட் பரிசை, "எங்கள் காற்றை தூய்மைப்படுத்து" பிரிவின்கீழ் வென்றுள்ளார். இந்தப் பரிசு, 'சுற்றுச்சூழல் ஆஸ்கர்' என்றும் அழைக்கப்படுகிறது. பூமியைக் காப்பாற்ற பாடுபடும் கண்டுபிடிப்பாளர்களுக்கு இப்பரிசு வழங்கப்படுகிறது.

8.உற்பத்தி இடைவெளி அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) WEF

ஆ) UNEP ☑

இ) FAO

ஈ) NITI ஆயோக்

✓ ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP), முன்னணி ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து 2021 – உற்பத்தி இடைவெளி அறிக்கையை வெளியிட்டது. அரசாங்கத்தின் நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் திட்டமிட்ட உற்பத்தி மற்றும் பாரிஸ் ஒப்பந்த வரம்புகளை பூர்த்தி செய்யும் உலகளாவிய உற்பத்தி நிலைகளு–க்கு இடையிலான இடைவெளியை இவ்வறிக்கை அளவிடுகிறது.

✓ புதிய அறிக்கையின்படி, புவி வெப்பமடைதலை 1.5 டிகிரி செல்சியஸாகக் கட்டுப்படுத்த, 2030ஆம் ஆண்டில் நிலையான அளவைவிட 2 மடங்கு அதிகமாக புதைபடிவ எரிபொருட்களை உற்பத்தி செய்ய அரசாங்கங்கள் திட்டமிட்டுள்ளன.

---

9. இராணுவ பொறியாளர் சேவைகளுக்கான 'வலைத்தள அடிப்ப–டையிலான திட்ட கண்காணிப்பு வலைத்தளத்தை' உருவாக்கிய நிறுவனம் எது?

அ) DRDO

ஆ) BISAG–G ☑

இ) CDAC

ஈ) NIELIT

- ✓ இராணுவப் பொறியாளர் சேவைகளுக்கான திட்ட கண்காணிப்பு இணையதளத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தில்லியில் தொடங்கிவைத்தார். டிஜிட்டல் இந்தியா திட்டப்படி இந்த இணையதளத்–தை விண்வெளிப் பயன்பாடுகள் மற்றும் புவி தகவல்களுக்கான பாஸ்கராச்சார்யா தேசிய மையம் (BISAG–G) உருவாக்கியது.
- ✓ புதிதாகத் தொடங்கப்பட்ட இந்த ஒருங்கிணைந்த தளம், இராணுவப் பொறியாளர் சேவைகள் அமல்படுத்திய முதல் திட்ட மேலாண்மை – நிர்வாகம் ஆகும். இதன்மூலம் இராணுவத் திட்டப்பணிகளை ஆரம்பம் முதல் முடிவு வரை அவ்வப்போது கண்காணிக்க முடியும்.

10.பின்வரும் எம்மாநிலத்துடன் இணைந்து, கலாச்சார அமைச்சகம், அபிதம்ம நாளை ஏற்பாடு செய்கிறது?

அ) பீகார்



ஆ) உத்தர பிரதேசம் ☑

இ) சிக்கிம்

ஈ) மேகாலயா

- ✓ கலாச்சார அமைச்சகம், பன்னாட்டு பௌத்த கூட்டமைப்பு ஆகியவை உத்தர பிரதேச மாநில அரசுடன் இணைந்து அபிதம்ம நாளை அஸ்வின் பூர்ணிமா நன்னாளில் ஏற்பாடு செய்கிறது. பிரதமர் நரேந்திர மோடியும் மகாபரிநிர்வாண கோவிலில் அபிதம்ம நாளின் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இலங்கை, தாய்லாந்து, மியான்மர், தென்கொரியா, நேபாளம், பூடான், கம்போடியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற துறவிகள் மற்றும் பல நாடுகளின் தூதுவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அக்.24 – உலக போலியோ விழிப்புணர்வு நாள்

---

2. இந்திய கடற்படையின் முதல் பயிற்சிப் பிரிவு இலங்கை பயணம்

இந்திய கடற்படையில் முதல் பயிற்சிப் பிரிவில் உள்ள கப்பல்களான சுஜாதா, மகர், சர்துல், சுதர்ஷினி, தாரங்கினி மற்றும் கடலோர பாதுகாப்புப் படைக் கப்பல் விக்ரம் ஆகியவை ஞாயிற்றுக்கிழமை (அக். 24) முதல் 28–ஆம் தேதி வரை இலங்கைக்கு 4 நாள் பயணம் மேற்கொண்டுள்ளன.

வெளிநாட்டில் கடற்படை அதிகாரிகளின் 100 மற்றும் 101–ஆவது ஒருங்கிணைந்த பயிற்சிக்காக இந்தக் கப்பல்கள் சென்றுள்ளன.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள பல்வேறு நாடுகளின் சமூக–அரசியல் மற்றும் கடல்சார் அம்சங்களை தெரியப்படுத்துவதன் மூலம் இளம் அதிகாரிகளின் அனுபவங்களை விரிவுபடுத்துவதை இந்தப் பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம் வெளிநாடுகளுடன் நட்புறவு மேம்படும்.

இந்திய கடற்படையின் தெற்கு கட்டுப்பாட்டு மைய தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் ஏ.கே.சாவ்லா தலைமையில் இந்தக் கப்பல்கள் பயிற்சிக்கு செல்கின்றன. வெளிநாடுகளைச் சேர்ந்த கடற்படையினருக்கு கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இந்திய கடற்படை பயிற்சி அளித்து வருகிறது. தற்போதுவரை இலங்கையைச் சேர்ந்த கடற்படை அதிகாரிகள் மற்றும் வீரர்கள், இந்திய கடற்படையின் தெற்கு கட்டுப்பாட்டு மையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்திய கடற்படையின் மகர் மற்றும் சர்துல் ஆகிய கப்பல்கள் 101–ஆவது பயிற்சிப் பிரிவினருடன் கொழும்பு செல்கின்றன. சுஜாதா, சுதர்ஷினி, தாராங்கினி மற்றும் கடலோர பாதுகாப்புப் படைக் கப்பல் விக்ரம் ஆகியவை 100–ஆவது பயிற்சிப் பிரிவினருடன் திருகோணமலை செல்கின்றன. இருநாட்டு கடற்படைகளின் செயல்திறனை அதிகரிக்கும் வகையில், பலவித பயிற்சிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. பயிற்சியில் ஈடுபடும் அனைவருக்கும் இரண்டு தவணை கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன மற்றும் கரோனா பரிசோதனைகளும் செய்யப்பட்டுள்ளன.

---

3. 2014–க்குப் பிறகு கங்கை நதியின்தரம் உயர்வு: என்எம்சிஜி தகவல்

2014–ஆம் ஆண்டுக்குப் பிறகு கங்கை நதி நீரின் தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது என்று தேசிய கங்கை தூய்மை இயக்கத்தின் (என்எம்ஜிசி) இயக்குநர் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

கடந்த 2014–இல் கங்கை நதியில் 53 இடங்களில் அதன் தரம் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. அதில், 32 இடங்களில் குளிப்பதற்கு உகந்த தரத்தில் தண்ணீர் இருந்தது. தண்ணீரில் கரைந்திருக்கும் ஆக்சிஜனின் அளவை வைத்து அதன் தரம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

அதைத் தொடர்ந்து, 2021–ஆம் ஆண்டில் கண்காணிப்பு இடங்களின் எண்ணிக்கை 97–ஆக அதிகரிக்கப்பட்டது. அவற்றில் 68 இடங்களில் குளிப்பதற்கு உகந்த தரத்தில் தண்ணீர் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கடந்த 2014–இல் இருந்து 2021–ஆம் ஆண்டுக்குள் கங்கை நதியில் தண்ணீரின் தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

கங்கை நதி நீரின் தரத்தை உயர்த்த கங்கையும், அதன் கிளை ஆறுகளும் பாயும் நகரங்களில் நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நவீனப்படுத்தியது, சடலங்களை எரிக்கும் இடங்கள் கட்டுவது, ஆற்றங்கரைகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துவது, நீரின் மேற்பரப்பில் தேங்கும் குப்பைகளை அகற்றுவது, நதியில் கலக்கும் நீரின் வழியாக குப்பைகள் வந்து சேர்வதைத் தடுப்பது, அரண்கள் கட்டுவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகளின் மூலமாக, நீரின் தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. இன்னும் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட இருப்பதால், கங்கை நீரின் தரம் மேலும் அதிகரிக்கும் என்றார் அவர்.

கங்கை நதியைத் தூய்மைப்படுத்துவதற்காக, தேசிய கங்கை தூய்மை இயக்கத்தை மத்திய அரசு ரூ.20,000 கோடியில் கடந்த 2015–ஆம் ஆண்டு தொடங்கியது.

1.சமீப செய்திகளில் இடம்பெற்ற *Allium negianum* கண்டுபிடிக்கப்பட்ட இந்திய மாநிலம்/UT எது?

அ) அஸ்ஸாம்



ஆ) உத்தரகாண்ட் ☑

இ) அருணாச்சல பிரதேசம்

ஈ) கோவா

✓ 2019ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் மாநிலத்தில் *Allium negianum* என்ற தாவரமானது கண்டுபிடிக்கப்பட்டதாக, PhytoKeys இதழில் வெளியிடப்பட்–டது. இது, அல்லியத்தின் புதிய இனமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

✓ அல்லியம் என்பது உலகளவில் வெங்காயம் மற்றும் பூண்டுபோன்ற 1,100 இனங்களை உள்ளடக்கிய ஓர் இனமாகும். இது உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள சாமோலி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இது கடல் மட்டத்திலிருந்து 3,000 முதல் 4,800 மீ உயரத்தில் வளர்கிறது. *Allium negianum* என்ற அறிவியல் பெயர், ஆய்வாளர் மற்றும் அல்லியம் சேகரிப்பாளரான மறைந்த டாக்டர் குல்தீப் சிங் நேகியைப் போற்றுகிறது.

---

2. 2021 அக்டோபர் நிலவரப்படி, T20 சர்வதேச கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டை வீழ்த்தியவர் யார்?

அ) R அஸ்வின்



ஆ) ஜஸ்பிரித் பும்ரா

இ) ஷகிப் அல் ஹசன் ☑

ஈ) டிம் சௌத்தி

✓ வங்காளதேச வீரர் ஷகிப் அல் ஹசன் சர்வதேச T20 கிரிக்கெட்டில் லசித் மலிங்காவின் விக்கெட்டுகளை முறியடித்ததன்மூலம் அதிக விக்கெட்டுக–ளை (107ஆவது) வீழ்த்தினார். ஷாகிப், 89 T20 சர்வதேச போட்டிகளில் விளையாடி 108 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இவ்வடிவத்தில், 100 விக்கெட்டுகள் மற்றும் 1000+ ரன்களை எடுத்த ஒரே கிரிக்கெட் வீரர். 99 விக்கெட்டுகளுடன் நியூசிலாந்தின் டிம் சௌத்தி 3ஆவது இடத்திலுள்ளார்.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற நெச்சிபு சுரங்கப்பாதை அமைந்து உள்ள மாநிலம் எது?

அ) அருணாச்சல பிரதேசம் ☑



ஆ) உத்தரகாண்ட்

இ) சிக்கிம்

ஈ) பீகார்

✓ அருணாச்சல பிரதேசத்தில் உள்ள நெச்சிபு கணவாய் அருகே 500 மீ நீள சுரங்கவழியை எல்லைப்புறச்சாலைகள் அமைப்பு அமைத்து வருகிறது. இது சீன எல்லைக்கருகே, முன்னோக்கி தளத்தை நோக்கிச்செல்லும் வாகனங்களின் பயணநேரத்தைக் குறைப்பதை நோக்கமாகக்கொண்–டுள்ளது. நெச்சிபு சுரங்கப்பாதை 5,600 அடி உயரத்தில் BRO'வின் வர்டக் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது.

---

4. ஆயுர்வேத மூலிகைகளுக்கான பிரத்தியேக வனப்பகுதியான 'ஆயுஷ் வனம்' திறக்கப்பட்டுள்ள மாநிலம்/UT எது?

அ) இராஜஸ்தான்



ஆ) குஜராத் ☑

இ) பஞ்சாப்

ஈ) சண்டிகர்

✓ மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை மற்றும் ஆயுஷ் அமைச்சரான சர்பானந்தா சோனோவால், குஜராத்தின் காந்திதாமில் ஆயுர்வேத மூலிகைகளுக்கான பிரத்தியேக வனமான 'ஆயுஷ் வனத்தைத்' திறந்துவைத்தார்.

✓ தீனதயாள் துறைமுக அறக்கட்டளை வழங்கிய 30 ஏக்கர் நிலத்தில் 'ஆயுஷ் வனம்' அமைக்கப்பட்டது. நகர்ப்புறத்தில் பசுமையை மேம்படுத்த –வும், கட்ச் பகுதியில் மரங்களின் அடர்த்தியை அதிகரிக்கவும் மரக்கன்று நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

---

5. சமீப செய்திகளில் இடம்பெற்ற தல்பியோட் இடுகாடு அமைந்து உள்ள நாடு எது?

அ) ரஷ்யா



ஆ) இஸ்ரேல் ☑

இ) இத்தாலி

ஈ) அமெரிக்கா

✓ வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் தனது 5 நாள் இஸ்ரேல் பயணத்தி –ன்போது, தல்பியோட் இடுகாட்டுக்குச் சென்றதை அடுத்து இவ்விடம் சமீப செய்திகளில் இடம்பெற்றது. ஜெருசலேமில் உள்ள தல்பியோட்டில் அமைந்துள்ள இது, முதல் உலகப்போரின்போது தங்கள் இன்னுயிரை தியாகஞ்செய்த இந்தியவீரர்களின் இடுகாடு ஆகும். இஸ்ரேல் முழுவதும் ஜெருசலேம், ராம்லே மற்றும் ஹைபாவில் உள்ள இடுகாடுகளில் சுமார் 900 இந்திய வீரர்கள் புதைக்கப்பட்டுள்ளனர். இந்திய இராணுவம், ஒவ்வோர் ஆண்டும் செப்.23'ஐ ஹைபா நாளாக நினைவுகூருகிறது.

---

6. ICC எலைட் பேனல் மேட்ச் ரெப்ரியுமான எந்த இந்திய கிரிக்கெட் வீரர், மேரிலெபோன் கிரிக்கெட் கிளப்பின் வாழ்நாள் உறுப்பினர் தகுதியைப் பெற்றுள்ளார்?

அ) ஹர்பஜன் சிங்



ஆ) ஜவகல் ஸ்ரீநாத் ☑

இ) ராகுல் டிராவிட்

ஈ) VVS லட்சுமணன்

✓ இந்தியாவின் ஹர்பஜன் சிங் மற்றும் ஜவகல் ஸ்ரீநாத் ஆகியோர் மெரிலிபோன் கிரிக்கெட் கிளப்பின் வாழ்நாள் உறுப்பினர் தகுதியைப் பெற்றுள்ளனர். இந்த ஆண்டு 16 கிரிக்கெட் வீரர்களுக்கு இந்தத் தகுதி கொடுக்கப்பட்டது. ஹர்பஜன், டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவின் 3ஆவது அதிக விக்கெட்டுகள் (417 விக்கெட்டுகள்) வீழ்த்திய வீரராவார். மேலும், 700'க்கும் மேற்பட்ட சர்வதேச விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

✓ ஸ்ரீநாத், தற்போது ICC எலைட் பேனல் போட்டி நடுவராக உள்ளார். 315 ஒருநாள் விக்கெட்டுகளையும், 236 டெஸ்ட் விக்கெட்டுகளையும் வீழ்த்தி –ய வேகப்பந்து வீச்சாளராவார்.

---

7. 'ஆதார் ஹேக்கத்தான் – 2021'ஐ நடத்தவுள்ள அமைப்பு எது?

அ) NITI Aayog



ஆ) NRDC

இ) UIDAI ☑

ஈ) RBI

✓ இந்திய தனித்துவ அடையாள ஆணையமானது (UIDAI) 2021 'ஆதார் ஹேக்கத்தானை' நடத்தவுள்ளது. மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையின்படி, ஆதார் ஹேக்கத்தான்–2021 2 தலைப்புகளை மையமாகக் கொண்டது. "பதிவு மற்றும் புதுப்பித்தலை" மையமாகக்கொண்டு முதல் கருப்பொருள் அமைந்துள்ளது.

✓ முகவரியைப் புதுப்பிக்கும் போது குடியிருப்பாளர்கள் எதிர்கொள்ளும் சில நிஜ வாழ்க்கையின் சவால்களை இது உள்ளடக்கியதாக இருக்கும். ஹேக்கத்தானின் 2ஆவது கருப்பொருள் UIDAI வழங்கும் "அடையாளம் மற்றும் அங்கீகாரம்" தீர்வை மையமாகக் கொண்டுள்ளது. இந்தக்கருப் பொருளின்கீழ், ஆதார் எண் அல்லது அந்த தனிநபரின் இதர தனிப்பட்ட தகவலையும் பகிராமல் அடையாளத்தை நிரூபிக்க புதுமையான தீர்வுகளை UIDAI கோருகிறது.

---

8. 'தேசிய சாலை பாதுகாப்பு வாரியத்தின்' தலைமையகம் உள்ள இந்திய நகரம் எது?

அ) மும்பை



ஆ) புது தில்லி ☑

இ) ஔரங்காபாத்

ஈ) கொல்கத்தா

✓ சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமானது தேசிய சாலைப் பாதுகாப்பு வாரியத்தின் கட்டமைப்பை அறிவித்துள்ளது. சாலைப் பாதுகாப்பு, புதுமைகள் மற்றும் புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக்


கொள்வது, போக்குவரத்து மற்றும் மோட்டார் வாகனங்களை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றுக்கு வாரியம் பொறுப்பாகும்.

✓ இவ்வாரியத்தின் தலைமை அலுவலகம் தேசிய தலைநகர பகுதியில் இருக்கவேண்டும். இந்தியாவில் மற்ற இடங்களில் அலுவலகங்களை வாரியம் நிறுவலாம். மத்திய அரசால் நியமிக்கப்பட வேண்டிய தலைவர் மற்றும் மூவருக்கு குறையாமல் எழுவருக்கு மிகாமல் உறுப்பினர்கள் வாரியத்தில் இருக்கவேண்டும்.

---

9. 2021ஆம் ஆண்டிற்கான வேதியியலுக்கான நோபல் பரிசு, மூலக் கூறுகளை உருவாக்குவதற்கான பின்வரும் எந்தப் புதிய வழியை உருவாக்கியதற்காக வழங்கப்பட்டுள்ளது?

அ) சமச்சீரற்ற ஆர்கனோகாடலிசிஸ் ☑



ஆ) மாற்றப்பட்ட DNA'க்கள்

இ) மாற்றப்பட்ட mRNA'க்கள்

ஈ) இவற்றில் ஏதுமில்லை

✓ 2021ஆம் ஆண்டிற்கான வேதியியலுக்கான நோபல் பரிசு, பெஞ்சமின் லிஸ்ட் மற்றும் டேவிட் டபிள்யூசி மேக்மில்லனுக்கு வழங்கப்பட்டுள்ளது. மூலக்கூறுகளை உருவாக்குதற்கான "சமச்சீரற்ற ஆர்கனோகாடலிசிஸ்" எனப்படும் புதிய வழியை உருவாக்கியதற்காக இப்பரிசு வழங்கப்பட்டு உள்ளது. நோபல் பரிசுக்குழுவின்படி, லிஸ்ட் & மேக்மில்லன் ஆகியோர் சுயாதீனமாக ஒரு புதிய வினையூக்க வழியை உருவாக்கினர்.

---

10. 2021 – உலக பருத்தி நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) There's more to cotton than you think ☑

ஆ) Sustainable Cotton

இ) e-commerce in Cotton

ஈ) White Gold: Cotton

✓ பன்னாட்டு பருத்தி ஆலோசனைக் குழு (ICAC) மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO) ஆகியவை இணைந்து உலக பருத்தி நாளை நிறுவின. இது, கடந்த 2019ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அக்.7 அன்று கொண்டாடப்படுகிறது. "There's more to cotton than you think" என்பத் நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கானக் கருப்பொருளாகும்.

✓ பருத்தியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை பரப்புவது இந்த நாளின் நோக்கமாகும். உலகில் உள்ள பருத்திப் பொருளாதாரங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் இது வலியுறுத்துகிறது. 2019ஆம் ஆண்டில், ஜெனிவாவில், முதல் உலக பருத்தி நாள் கொண்டாடப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 5 ஆண்டுகளில் பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி 334% அதிகரிப்பு

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்புத் தளவாடங்கள் ஏற்றுமதி 334% அதிகரித்துள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு சார்பில் குஜராத் தலைநகர் காந்திநகரில் அடுத்த ஆண்டு மார்ச் 11-13ஆம் தேதி வரை பாதுகாப்பு கண்காட்சி நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியை பிரபலப்படுத்தும் நோக்கில் பல நாடுகளுக்கான தூதர்களை அமைச்சர் ராஜ்நாத்சிங் சந்தித்துப்பேசினார். அப்போது அவர் கூறியதாவது:

கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்புத் தளவாடங்கள் ஏற்றுமதி 334% அதிகரித்துள்ளது. 75'க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு போர்த் தளவாடங்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருகிறது. அதிக தரம், போட்டியிடும் திறன் ஆகியவற்றின் காரணமாக இந்திய போர்த் தளவாடங்கள் அதிக அளவில் ஏற்றுமதியாகின்றன.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பாதுகாப்பு கண்காட்சி, போர்த் தளவாடங்கள் உற்பத்தியில் காணப்படும் நவீன தொழில்நுட்பங்களை வெளிப்படுத்தும். பாதுகாப்பு ஆராய்ச்சி-மேம்பாட்டில் இந்தியா படைத்துள்ள சாதனைகளையும் எதிர்கால வாய்ப்புகளையும் வெளிப்படுத்தும் வகையில் அந்தக் கண்காட்சி இருக்கும். குறுகிய காலகட்டத்தில் பாதுகாப்புத் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீன தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த கொள்கைகள் ஆகியவற்றையும் கண்காட்சி எடுத்துரைக்கும். பாதுகாப்பு கண்காட்சியில் பங்கேற்கும் நாடுகளுடனான இந்தியாவின் நல்லுறவு மேம்படும் என்பதால், கண்காட்சியில் பங்கேற்க நாடுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

பாதுகாப்பு உற்பத்திசார்ந்த விவகாரங்களில் மற்ற நாடுகளுக்குப் போதிய ஒத்துழைப்பை நல்கி ஒருங்கிணைந்து பணியாற்ற இந்தியா தயாராக உள்ளது. கலாசாரம், கலை, உணவுப் பழக்கவழக்கம் உள்ளிட்டவற்றில் குஜராத் சிறந்து விளங்கி வருகிறது. அங்கு நடைபெறவுள்ள பாதுகாப்பு கண்காட்சியில் பங்கேற்கும் நாடுகளுக்கு சிறந்த வாய்ப்புகள் உருவாகும்.

சுதந்திரத்தின் 75ஆவது ஆண்டை இந்தியா கொண்டாடி வரும் சூழலில், பாதுகாப்புக் கண்காட்சியை சிறப்புடன் நடத்துவதற்கான நடவடிக்கை -களை அனைத்துநாடுகளுடனும் இணைந்து இந்தியா மேற்கொள்ளும் என்றார் அவர்.

---

2. பசுமைஇல்ல வாயுக்கள்வெளியேற்றம் புதிய உச்சம்: ஐ.நா. அமைப்பு அறிக்கை

வெப்பமயமாதல் உள்ளிட்ட பருவநிலை மாற்றத்துக்கு முக்கியக் காரணியாக விளங்கும் பசுமைஇல்ல வாயுக்கள் வெளியேற்றம் கடந்த ஆண்டு புதிய உச்சத்தைத் தொட்டதாக ஐ.நா.வின் உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக உலக வானிலை அமைப்பின் ஆண்டறிக்கையை வெளியிட்டு அதன் பொதுச்செயலர் பெட்டரி டாலஸ் கூறியதாவது:

முக்கியமான பசுமை இல்ல வாயுவான கார்பன் டைஆக்ஸைடின் (கரிய -மிலவாயு) வெளியேற்றமானது உலக சராசரி அளவானது 10 இலட்சத்து -க்கு 413.2 பாகங்கள் என்ற புதிய உச்சத்தை 2020'இல் எட்டியது. பொதுமுடக்கம் உள்ளிட்ட கரோனா கட்டுப்பாடுகளால் புதைபடிவ எரிபொருள்களிலிருந்து வெளியாகும் கார்பன் டைஆக்ஸைடின் வெளி -யேற்றம் குறைந்தபோதும், இந்த உச்சமானது கடந்த 10 ஆண்டுகளில் அதிகமாகும். இதன்மூலம் வெப்பமயமாதல் அதிகரிக்கும். அமேசான் மழைக்காடுகள் அழிப்பும் இதற்கு ஒரு முக்கியமான காரணம் ஆகும்.

இதற்கு முன்னர் 2015'இல் 10 இலட்சத்துக்கு 400 பாகங்கள் என்ற அளவை எட்டியிருந்தது. இது, நமது அன்றாட வாழ்க்கை, நமது குழந்தை -களின் எதிர்காலத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியுள் -ளது. மனிதர்களால் வெளியேற்றப்படும் கரியமிலவாயுவானது எண்ணெய், வாயு போன்ற புதைபடிவ எரிபொருள்களை எரிப்பதால் அல்லது சிமெண்ட் உற்பத்தி செய்வதிலிருந்து ஏற்படுகிறது. பருவ நிலையில் மூன்றில் இரு பங்கு மாற்றத்தை இது ஏற்படுகிறது.

கரோனா தொற்றால் கடந்த ஆண்டு தொழில்கள் முடங்கி, பொருளாதார தேக்கநிலை ஏற்பட்டு தற்காலிகமாக கரியமிலவாயு வெளியேற்றம் குறைந்திருந்தாலும், பசுமைஇல்ல வாயுக்கள் வெளியேற்றத்தில் அது வெளிப்படையான எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்காட்லாந்தில் ஐ.நா.வின் பருவநிலை மாற்ற மாநாடு அக்.31-ஆம் தேதி தொடங்கி நவம்பர்.12 வரை நடைபெறவுள்ள நிலையில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

---

1. இந்தியாவில் உள்ள 51 புலிகள் காப்பகங்களிலும் அக்.2ஆம் தேதி தொடங்கிய புலிப்பேரணியின் கருப்பொருள் என்ன?

அ) Amrut Bharat

ஆ) India for Tigers – A Rally on Wheels ☑

இ) Atma Nirbhar Tigers

ஈ) Tiger on Wheels



✓ மத்திய சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் யாதவ், "India for Tigers – A Rally on Wheels" என்ற கருப்பொருளின்கீழ், நாட்டில் உள்ள 51 காப்பகங்களில் ஒரு பேரணியைத் தொடங்கினார். 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இது தொடங்கப்பட்டுள்ளது.

---

2. 'The State of Climate Services 2021: Water' என்ற பெயரிலான அறிக்கையை வெளியிட்டுள்ள அமைப்பு எது?

அ) WMO ☑

ஆ) FAO

இ) NITI ஆயோக்

ஈ) NABARD

✓ உலக வானிலை அமைப்பானது (WMO) சமீபத்தில் 'The State of Climate Services 2021: Water' என்ற தலைப்பிலான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

✓ இந்த அறிக்கை உலக வானிலை அமைப்பால் ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் இருபதுக்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்கள், மேம்பாட்டு முகமைகள் மற்றும் அறிவியல் நிறுவனங்களின் உள்ளீடுகளை உள்ளடக்கியது. இவ்வறிக்கையின்படி, 2018ஆம் ஆண்டில் உலகளவில் சுமார் 3.6 பில்லியன் மக்களுக்கு ஓர் ஆண்டில் ஒருமாதகாலத்திற்கு போதுமான அளவு தண்ணீர் கிடைப்பதில்லை. இந்த நிலை, 2050ஆம் ஆண்டில், ஐந்து பில்லியனைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'Mosquirix' என்பது எந்த நோய்க்கு எதிராக WHO'ஆல் அங்கீகரிக்கப்பட்ட முதல் தடுப்பூசியாகும்?

அ) டெங்கு

ஆ) மலேரியா ☑

இ) ஜிகா

ஈ) மேற்கு நைல் வைரஸ்



✓ உலக நலவாழ்வு அமைப்பானது குழந்தைகளுக்கான முதல் மலேரியா தடுப்பூசியைப் பயன்படுத்த பரிந்துரைத்துள்ளது. WHO குழு RTS, S/AS01 மலேரியா அல்லது Mosquirix – பிரித்தானிய மருந்து தயாரிப்பாளரான கிளாக்ஸோஸ்மித்கிளைன் உருவாக்கிய தடுப்பூசியை அங்கீகரித்தது. உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி (WHO), மலேரியா, ஒவ்வோர் ஆண்டும் சுமார் 500,000 மக்களைக் கொல்கிறது; அவர்களுள் பாதி பேர் ஆப்பிரிக்காவில் உள்ள சிறார்களாவர்.

---

4. சமீபத்தில் புவிசார் குறியீடு பெற்ற, 'ஜூடிமா' என்ற ஒருவகை மதுவானது பின்வரும் எந்த மாநிலத்தில், வீட்டிலேயே தயாரிக்கப்ப –டுகிறது?

அ) அஸ்ஸாம் ☑

ஆ) மணிப்பூர்

இ) மேகாலயா

ஈ) மேற்கு வங்காளம்



✓ அஸ்ஸாம் மாநிலத்தின் திமாசா ஹசாவ் மாவட்டத்தைச் சேர்ந்த திமாசா பழங்குடியினரால் வீட்டிலேயே தயாரிக்கப்படும் அரிசி மதுவான 'ஜூடிமா' என்ற ஒருவகை மதுவுக்கு சமீபத்தில் புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. இது வெளிர் மஞ்சள் (அ) சிவப்பு நிறத்தில் காணப்படுகிறது. மெல்லிய நறுமணத்தில் அரிசிகொண்டு தயாரிக்கப்படும் புளிக்கவைக்கப்பட்ட பானமாகும் இது. இப்பானம் அவர்களின் பாரம்பரியத்தின் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகிறது.

---

5. 2021ஆம் ஆண்டு நோபல் பரிசை வென்ற அப்துல்ரசாக் குர்னா சார்ந்த நாடு எது?

அ) இஸ்ரேல்

ஆ) தான்சானியா ☑

இ) அமெரிக்கா

ஈ) ஆஸ்திரேலியா



✓ தான்சானிய நாவலாசிரியர் அப்துல்ரசாக் குர்னா, காலனித்துவம் மற்றும் அகதிகள் மீதான தனது இலக்கியப் படைப்புகளுக்காக 2021ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசை வென்றார். 1948'இல் பிறந்த அப்துல்ரசாக் குர்னா, இந்தியப் பெருங்கடலில் உள்ள சான்சிபார் தீவில் வளர்ந்தார். 1960'களின் இறுதியில் அகதியாக இங்கிலாந்து நாட்டுக்குச் சென்றார்.

---

6. 2021 – உலக போலியோ நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Leaving No one behind

ஆ) Delivering on a Promise ☑

இ) Inclusive and Inspirational

ஈ) No Polio World

✓ போலியோ சொட்டு மருந்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், போலியோவை ஒழிக்கவுமாக ஒவ்வோராண்டும் அக்டோபர்.24 அன்று உலக போலியோ நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Delivering on a Promise" என்பது 2021ஆம் ஆண்டு உலக போலியோ நாளுக்கானக் கருப்பொருளாகும். போலியோமைலிட்டிஸுக்கு எதிரான தடுப்பூசியை உருவாக்கிய முதல் குழுவை வழிநடத்திய ஜோனாஸ் சால்க் பிறந்ததை நினைவுகூரும் வகையில், ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பால் உலக போலியோ நாள் நிறுவப்பட்டது.

---

7. ஐக்கிய நாடுகள் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) அக்டோபர் 21

ஆ) அக்டோபர் 24 ☑

இ) அக்டோபர் 25

ஈ) அக்டோபர் 27

✓ கடந்த 1945ஆம் ஆண்டில் ஐநா சாசனம் அமலுக்கு வந்ததன் நினைவாக ஒவ்வோராண்டும் அக்.24 அன்று ஐநா நாள் அனுசரிக்கப்படுகிறது. ஐநா, அதிகாரப்பூர்வமாக 24 அக்டோபர் 1945 அன்று நடைமுறைக்கு வந்தது. 2021ஆம் ஆண்டு, ஐநா'இன் 76ஆவது ஆண்டு நிறைவைக்குறிக்கிறது. ஐநா சாசனம் என்பது உலகளாவிய அமைதி மற்றும் சமத்துவத்தை நோக்கிச் செயல்பட்டு வரும் ஐநா'இன் நிறுவன ஆவணமாகும்.

---

8. 2021 – ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகளுக்கான உயரிய விருதான சாகரோவ் பரிசு, யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

அ) விளாடிமிர் புதின்

ஆ) அலெக்ஸி நவல்னி ☑

இ) கோத்தபய இராஜபக்ச

ஈ) நரேந்திர மோடி



✓ சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னிக்கு, ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகளுக்கான உயரிய விருதான சாகரோவ் பரிசு வழங்கப்பட்டுள்ளது. அபாரமான தனிப்பட்ட துணிச்சலைப்பாராட்டி, ஐரோப்பிய நாடாளுமன்றம் அவருக்கு இந்தப் பரிசை வழங்கியுள்ளது. ரஷ்யாவின் ஆளும் அரசாங்கத்தின் ஊழலுக்கு எதிராக அவர் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறார்.

---

9. தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில், 'சிறந்த திரைப்பட'த்திற்கான விருதை வென்ற திரைப்படம் எது?

அ) மரைக்காயர்: அரபிக்கடலின் சிங்கம் ☑

ஆ) சிச்சோர்

இ) அசுரன்

ஈ) கேசரி



- ✓ தில்லியிலுள்ள விஞ்ஞான் பவனில் வைத்து 67ஆவது தேசிய திரைப்பட விருதுகளை குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா வழங்கினார். சிறந்த திரைப்படத்திற்கான விருது பிரியதர்ஷனின் மலையாளத்திரைப் படமான "மரைக்காயர்: அரபிக்கடலின் சிங்கத்திற்கு" வழங்கப்பட்டது.
- ✓ மணிகர்னிகா மற்றும் பங்கா படங்களில் நடித்ததற்காக ஹிந்தி நடிகை கங்கனா ரனாவத், 'சிறந்த நடிகை'க்கான விருதை வென்றார். சிறந்த நடிகருக்கான விருதை 'போன்ஸ்லே' படத்திற்காக மனோஜ் பாஜ்பாய் மற்றும் 'அசுரன்' படத்திற்காக தனுஷ் ஆகியோர் பெற்றனர்.

---

10. 2021 – கொங்கன் சக்தி என்பது இந்தியாவிற்கும் பின்வரும் எந்நாட்டிற்கும் இடையிலான முதல் முப்படைகளின் கூட்டுப்பயிற்சி ஆகும்?

அ) இங்கிலாந்து (UK) ☑



ஆ) அமெரிக்கா

இ) பிரான்ஸ்

ஈ) ஜப்பான்

- ✓ 2021 – கொங்கன் சக்தி என்பது இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் (UK) இடையிலான முதல் முப்படைகளின் கூட்டுப் பயிற்சியாகும். ஒருவார காலம் நடக்கும் இப்பயிற்சி சமீபத்தில் தொடங்கியது. இப்பயிற்சியானது பரஸ்பர அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வெளிப்படுத்துவதற்கும் ஒரு தளமாக இருக்கும். இப்பயிற்சியின் கடல்சார் பயிற்சிப் பகுதி இந்தியாவின் மேற்கு கடற்கரையில் நடத்தப்படும் மற்றும் துறைமுகம்சார் பயிற்சி மும்பையில் நடைபெறும். இப்பயிற்சியின் தரைசார் பயிற்சி உத்தரகாண்டில் உள்ள சௌபதியாவில் நடைபெறும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மாணவர்களின் கற்றல் இடைவெளியை சரிசெய்ய ரூ.200 கோடியில் – 'இல்லம் தேடி கல்வி' திட்டம் இன்று தொடக்கம்:

'இல்லம் தேடி கல்வி' திட்டத்தை மரக்காணத்தில் முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

தமிழகத்தில் கரோனா பரவல் காரணமாக பள்ளிக்குழந்தைகளின் கற்றலில் ஏற்பட்டுள்ள இடைவெளியை சரிசெய்யும் நோக்கில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்கம் (எஸ்எஸ்ஏ) சார்பில் 'இல்லம் தேடி கல்வி' என்ற திட்டம் ₹200 கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது.

குழந்தைகளின் கற்றல் இடைவெளியை குறைக்கவும், இடைநிற்றலை தவிர்க்கவும் 'இல்லம் தேடி கல்வி' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டம்மூலம் பள்ளிக்குழந்தைகளுக்கு தினமும் மாலை வேளையில் ஆடல், பாடல், நாடகம், பொம்மலாட்டம் போன்றவைமூலம் மகிழ்ச்சியான முறையில் தன்னார்வலர்கள் கற்றுக்கொடுப்பார்கள்.

சோதனை அடிப்படையில் முதல்கட்டமாக காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, நீலகிரி, மதுரை, கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

---

2. சிறப்பாக பணியாற்றும் போலீஸாருக்கு நட்சத்திர காவலர் விருது: காவல் ஆணையர் அறிவிப்பு

சிறப்பாக பணியாற்றும் போலீஸாருக்கு இனி கூடுதலாக ஒவ்வொரு மாதமும் விருது வழங்கப்படும். கூடுதல் காவல் ஆணையர் (தலைமையிடம்) தலைமையிலான குழு, சென்னை பெருநகரகாவல் துறையில் சிறப்பான போலீஸாரை கண்டறிந்து அவர்களது பணியைமதிப்பிட்டு 'மாதத்தின் நட்சத்திர காவலர்' என்றவிருதை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

'மாதத்தின் நட்சத்திரகாவலர்' விருதை பெறதேர்ந்தெடுக்கப்படும் காவல –ருக்கு ₹5000 பண வெகுமதியுடன், தனிப்பட்ட செயல் திறன் பாராட்டு சான்றிதழ் வழங்கி கவுரவிக்கப்படும்.

---

3. அமெரிக்கா: ஹிந்து பாரம்பரிய மாதமாக அக்டோபர் அறிவிப்பு

இந்த மாதத்தை ஹிந்து பாரம்பரிய மாதமாகக் கொண்டாட அமெரிக்க ஹிந்துக்கள் முடிவு செய்துள்ளனர். இதுகுறித்து அமெரிக்க ஹிந்து அமைப்புகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அக்டோபர் மாதவாக்கில்தான் நவராத்திரி, தசரா, துர்கா பூஜை, தீபாவளி உள்ளிட்ட பண்டிகைகளை உலகம் முழுவதும் உள்ள ஹிந்துக்கள் கொண்டாடுகின்றனர். எனவே, அமெரிக்காவில் ஹிந்து பாரம்பரிய மாதமாகக் கொண்டாட அக்டோபர்தான் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று ஹிந்து அமைப்பினர் முடிவு செய்தனர்.

---

4. இந்தியாவில் அவதாரம் எடுத்துள்ள புதிய உருமாற்ற கொரோனா: அடுத்த பயங்கரமா ஏஒய் 4.2? வேகமாக பரவும் தன்மை கொண்டதால் பீதி

இங்கிலாந்தைத் தொடர்ந்து இந்தியாவில் பரவியிருக்கும் ஏஒய் 4.2 எனும் புதிய வகை டெல்டா வைரஸ், கொரோனாவின் அடுத்த ஆதிக்கம் செலுத்தும் உருமாற்ற வரிசையா என மக்கள் மத்தியில் கவலை எழுந்துள்ளது. இது குறித்து இங்கிலாந்து மருத்துவ நிபுணர்கள் விளக்கம் அளித்துள்ளனர். உலகையே வாட்டி வதக்கிய கொரோனா வைரஸ் ஒருவழியாக ஓய்ந்துவிட்டது என மக்கள் நிம்மதி அடைந்துள்ள நிலையில், இங்கிலாந்தில் ஏஒய் 4.2 எனும் புதிய வகை டெல்டா வைரஸ் சமீபத்தில் கண்டறியப்பட்டது. தற்போது அதிகளவில் இந்த வைரஸ் வேகமாக பரவி வருகிறது.

இங்கிலாந்தில் தினசரி கொரோனா பாதிப்பு தற்போது அதிகரிக்க, ஏஒய் 4.2 வைரசே காரணம் என ஆய்வு முடிவுகள் கூறி உள்ளன. இதனால் டெல்டா வைரசை போல, அதிகளவில் மக்களை தொற்றும் அடுத்த ஆதிக்கம் செலுத்தும் உருமாற்ற வகை வைரசாக ஏஒய் 4.2 இருக்குமா? என மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. தற்போது இந்தியாவிலும் இந்த வகை வைரஸ் பரவி இருக்கிறது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட மாதிரிகளில் 17 மாதிரிகள் ஏஒய் 4.2 வகை வைரஸ் பாதிப்புக்குள்ளான –வை என உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே டெல்டாவின் மற்றொரு வீரியம்மிக்க ஏஒய்–4 வகை வைரசும் பரவத் தொடங்கியிருக்கிறது. எல்லாம் முடிந்துவிட்டது என எண்ணிக் கொண்டிருக்கும் நிலையில், இந்தப் புதிய பிறழ்வுகள் குறித்து நாம் கவலைகொள்ளவேண்டுமா என்பது குறித்து இங்கிலாந்து ஆய்வாளர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

கொரோனாவின் மரபணு மாற்றங்கள் மற்றும் புதிய வகை வைரஸ்களை கண்காணிப்பதற்கான எடின்பர்க் மற்றும் ஆக்ஸ்போர்டு ஆய்வாளர்களை கொண்ட கூட்டுக் குழு கூறியதாவது:

ஏஒய் 4.2 என்பது டெல்டா வைரசின் பரம்பரையாகும். தற்போது, இதே மரபணுவில் பல்வேறு உருமாற்றங்களுடன் 75 ஏஒய் பரம்பரை வைரஸ்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் ஏஒய் 4.2 வகை வைரஸ் இங்கிலாந்தில் வேகமாக பரவி வருகிறது. கடந்த 28 நாட்களில் 63% மாதிரிகளில் ஏஒய் 4.2 வரை வைரஸ் தொற்று கண்டறியப்பட்டு உள்ளது. இந்த வைரசில் ஒய்145எச் மற்றும் ஏ222வி ஆகிய இரு மரபணு உருமாற்றங்கள் காணப்படுகின்றன.

இதில், ஒய்145எச் உருமாற்றம் நோய் எதிர்ப்பிலிருந்து தப்பித்து தாக்கக் கூடிய திறன் கொண்டது. ஆனாலும், ஏஒய் 4.2 வகை வைரஸ் இங்கிலாந்து தவிர ஜெர்மனி, அயர்லாந்து, டென்மார்க்கிலும் பரவி இருக்கிறது. அங்கு பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. இதன் பரவல் படிப்படியாக மட்டுமே இருப்பதால், இது டெல்டா வைரஸ் அளவுக்கு வீரியமிக்கதாக இருக்காது என நம்பலாம். எனவே, ஏஒய் 4.2 வகை வைரஸ் கொரோனாவின் அடுத்த பயங்கரமாக இருக்குமா என இப்போதே கணிக்க முடியாது. இதற்கு இன்னும் அதிகப்படியான ஆய்வுகள் தேவை. இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

---

5. 90,000 டன் யூரியா ஒதுக்கீடு: வேளாண்மைத் துறை தகவல்

வேளாண்மைத் துறை சார்பில் நேற்று வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் தற்போது நிலவி வரும் சாதகமான பருவமழை காரணமாக 13.75 லட்சம் ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளத் திட்டமிட்டு, இதுவரை 7.82 லட்சம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு உள்ளது. நடப்பு சம்பா (ராபி) பருவத்தில் நெல் மற்றும் இதர பயிர்களான சிறுதானியம், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், கரும்பு, பருத்தி ஆகியவற்றின் சாகுபடி ஒட்டுமொத்தமாக 24.83 லட்சம் ஹெக்டேர் பரப்பில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால் யூரியா மற்றும் டிஏபிஉள்ளிட்ட அனைத்து வகை உரங்களின் தேவை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு மத்திய ரசாயனத் துறைஅமைச்சருக்கு முதல்வர் கடிதம் எழுதினார். அதில், 20 ஆயிரம் டன்டிஏபி, 10 ஆயிரம் டன் பொட்டாஷ் உரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதையடுத்து, காரைக்கால் துறைமுகத்துக்கு வரவுள்ள 90ஆயிரம் டன் இறக்குமதி யூரியாவை, தமிழகத்துக்கு ஒதுக்கீடு செய்வதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இம்மாத இறுதிக்குள் ஸ்பிக் நிறுவனம் 10 ஆயிரம் டன், எம்எஃப்எல் உர நிறுவனம் 8,000 டன் யூரியா வழங்கத் திட்டமிட்டு உள்ளன. காரைக்கால் துறைமுகத்தில் தற்போதுள்ள 4,400 டன்யூரியா, பல்வேறு மாவட்டங்களுக்கு இரயில்மூலம் அனுப்பப்படும்.

தமிழகத்தில் தனியார் மற்றும் சில்லறை உர விற்பனை நிலையங்களில் யூரியா 64,111 டன், டிஏபி 23,654 டன், பொட்டாஷ் 35,590 டன், காம்ப்ளக்ஸ் 1,17,575 டன் உரங்கள் இருப்பில் உள்ளன. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

6. பெகாசஸ் விவகாரம்; உளவுபார்த்த குற்றச்சாட்டை விசாரிக்க வல்லுந –ர்கள் குழு அமைப்பு; மத்திய அரசிடம் தெளிவான விளக்கம் இல்லை: உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

பெகாசஸ் மென்பொருள்மூலம் பத்திரிகையாளர்கள், அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலரின் செல்போன் ஒட்டுக் கேட்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் வல்லுநர்களைக் கொண்ட விசாரணைக் குழு அமைத்து உச்ச நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

இந்த வல்லுநர்களைக் கொண்ட விசாரணைக் குழு, உச்ச நீதிமன்றத்தின் கண்காணிப்பில் செயல்படும்.

இந்த வல்லுநர்கள் குழுவுக்குத் தலைவராக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர் வி ரவிந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாக, முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி அசோக் ஜோஷி, டாக்டர் சந்தீப் ஓப்ராய், குஜராத் காந்தி நகர் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின் டீன் டாக்டர் நவீன் குமார் சவுத்ரி, கேரளாவில் உள்ள அமிர்தா விஷ்வ வித்யாபீடத்தின் பேராசிரியர் Dr பி பிரபாகரன், மும்பை ஐஐடி பேராசிரியர் Dr அஸ்வின் அனில் குப்தே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் நாட்டின் பெகாசஸ் உளவு மென்பொருள்மூலம் அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்களின் கைபேசிகள் ஒட்டுக்கேட்கப்படுவதாகத் தகவல் வெளியானது. இதுகுறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் முழுவதும் முடங்கியது.

இதனிடையே, பெகாசஸ் விவகாரம் தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் பத்திரிகையாளர் என் ராம், எடிட்டர் கில்ட் ஆஃப் இந்தியா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் எம்பி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் சார்பில் பொதுநல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என் வி ரமணா, நீதிபதிகள் சூர்யகாந்த், ஹிமா ஹோலி ஆகியோர் கொண்ட அமர்வு விசாரித்து கடந்த செப்டம்பர் 13–ம் தேதி தீர்ப்பை ஒத்திவைத்தது.

இந்த வழக்கின் வாதத்தின்போது மத்திய அரசு சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா அளித்த பிரமாணப் பத்திரத்தில், "பெகாசஸ் விவகாரத்தில் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. பெகாசஸ் ஒட்டுக் கேட்பு விவகாரம் என்பது உயர்ந்த தொழில்நுட்பம் சார்ந்த விஷயம். ஆதலால், வல்லுநர்கள் குழுவின்மூலம் ஆய்வு செய்வது அவசியம். பெகாசஸ் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஸ்வினி உபாத்யாயா ஏற்கெனவே தெளிவுபடுத்தியுள்ளார்.

மனுதாரர்கள் கோரியபடி, பிரமாணப் பத்திரத்தில் தகவல்களை வெளியிடுவது நாட்டின் பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கும். நாட்டின் பாதுகாப்பு தொடர்பான தகவல்களை வெளியிட முடியாது. பெகாசஸ் விவகாரம் தொடர்பாக விரிவான பதில் பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்ய மத்திய அரசு விரும்பவில்லை. மத்திய அரசு சார்பில் எதையும் மறைக்க விரும்பவில்லை. அதனால்தான் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்ட குழுவை அமைத்து, குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த உத்தரவிடுகிறோம்.

குறிப்பிட்ட மென்பொருளைப் பயன்படுத்தி மத்திய அரசு கண்காணிப்பில் ஈடுபட்டதா, இல்லையா என்று வெளிப்படையாக விவாதிக்க அரசு விரும்பவில்லை. இந்தத் தகவல்கள் நாட்டின் நலனுக்கும் உகந்ததாக இருக்காது. ஆனால், வல்லுநர்கள் குழு ஆய்வு செய்து அளிக்கும் அறிக்–கை உச்சநீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படும்" எனத்தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என் வி ரமணா, நீதிபதிகள் சூர்யகாந்த், ஹிமா ஹோலி ஆகியோர் கொண்ட அமர்வு இன்று தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பில் நீதிபதிகள் கூறியதாவது:

"சமூகத்தில் பல்வேறு வகையான மக்களைக் கண்காணிக்க இஸ்ரேலைச் சேர்ந்த பெகாசஸ் மென்பொருளை வைத்து மத்திய அரசு உளவு பார்த்ததாக எழுந்த குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க வல்லுநர்கள் குழுவை ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் அமைக்கிறோம்.

இந்த விவகாரத்தில் உளவு பார்க்கப்பட்டதா, இல்லையா என்பது குறித்த தெளிவான நிலைப்பாட்டை மத்திய அரசு எடுத்திருந்தால், இந்த உத்தரவை நாங்கள் பிறப்பித்திருக்க வேண்டிய கட்டாயம் இருந்திருக்காது. பெகாசஸ் குற்றச்சாட்டை மத்திய அரசு எந்தவிதத்திலும் மறுக்கவில்லை.

தேசியப் பாதுகாப்பு என்ற விஷயத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வரும் மத்திய அரசுக்கு அனைத்திலும் விலக்கு அளிக்க முடியாது. நீதித்துறை மறு ஆய்வுக்கு எதிராக தேசியப் பாதுகாப்பைக் காரணம் கூறி சாதாரணமாகத் தடை விதிக்க முடியாது. இங்கு மத்திய அரசு தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்தியிருக்க வேண்டும், நீதிமன்றத்தை வாய்மூடிப் பார்வையாளனாக ஆக்கிவிடக் கூடாது.

மக்களின் அந்தரங்க உரிமை, பேச்சு சுதந்திரம் உரிமை ஆகியவை உளவு பார்க்கும் விஷயத்தில் முழுமையாக மீறப்பட்டுள்ளன. உளவு பார்க்கப்பட்ட விவகாரம், அறிக்கை போன்றவை மற்ற நாடுகளில் தீவிரமாக எடுக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றன. மற்ற நாடுகளின் உளவு மென்பொருள் மூலம் கண்காணிப்புக்குப் பயன்படுத்துவது தேசியப் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும்.

என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை விரிவாகத் தெரிவிக்க பல வாய்ப்புகளை மத்திய அரசுக்கு நாங்கள் அளித்தோம். ஆனால், மத்திய அரசுக்கு வழங்கப்பட்ட அடுத்தடுத்த வாய்ப்புகளில் பிரமாணப் பத்திரத்தில் தெளிவான விளக்கம் இல்லை. இதைத் தெளிவுபடுத்தியிருந்தால் எங்களின் சுமை குறைந்திருக்கும்.

எந்தவிதமான விளக்கம் தராமல் மத்திய அரசு மறுப்பது என்பது போதுமானதாக இருக்காது. இந்தக் குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட வேண்டும். அதனால்தான் ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கிறோம்.

இந்த விவகாரத்தில் அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன, வெளிநாட்டு நிறுவனங்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது அதைப் பாதுகாக்காமல், தடுக்காமல் நாங்கள் இருக்க முடியாது. அந்தரங்க உரிமை என்பது விவாதிக்கப்பட வேண்டியது. அந்தரங்க உரிமை என்பது அரசியல் தலைவர்கள் பத்திரிகையாளர்ளுக்கு மட்டுமல்ல, தனிநபர்களுக்கும் உரியது. அனைத்து முடிவுகளும் அரசியலமைப்புக்கு உட்பட்டு எடுக்கப்பட்டது".

இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பில் தெரிவித்தனர்.

---

7. அக்னி–5 ஏவுகணை– இந்தியாவின் சோதனை வெற்றி!

அக்னி 5 (Agni–V) ஏவுகணை ஒலியை விட வேகமாக செல்லும் ஆற்றல் படைத்தது. நொடிக்கு 8.16 கிமீட்டர் வேகத்திலும் ஒரு மணி நேரத்துக்கு 29,401 கிலோமீட்டர் வேகத்திலும் பாயும் திறன் கொண்டது.

ஆயிரம் கிமீட்டர் தொலைவில் உள்ள இலக்கை நிலப்பரப்பில் இருந்து துல்லியமாக தாக்கக்கூடிய அக்னி–5 ஏவுகணை சோதனையை இந்தியா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

அக்னி–5 என்னும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஒடிசாவில் உள்ள அப்துல்கலாம் தீவில் இந்தியா சோதித்து பார்த்தது. 5,000 கிமீட்டர் தொலைவில் உள்ள இலக்கை நிலப்பரப்பில் இருந்து துல்லியமாக தாக்கக்கூடிய இந்த அதிநவீன ஏவுகணை சோதனை வெற்றி பெற்றுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

3 பிரிவு திடமான எரிசக்தியுடன் கூடிய என்ஜின் பொருத்தப்பட்டுள்ள இந்த ஏவுகணை இலக்கை மிக துல்லியமாக தாக்குதல் திறன் கொண்டது. கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி–5 ஏவுகணையை இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் இணைந்து உருவாக்கியுள்ளன.

சுமார் 50 ஆயிரம் கிலோ எடைகொண்ட இந்த ஏவுகணை 1.7 மீட்டர் உயரத்தையும் 2 மீட்டர் விட்டத்தையும் கொண்டுள்ளது.

---

8. முதுபெரும் காந்தியவாதி எஸ் என் சுப்பா ராவ் காலமானார்

முதுபெரும் காந்தியவாதியான எஸ் என் சுப்பா ராவ் (92), ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உயிரிழந்தார்.

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் பிறந்த சுப்பா ராவ், பள்ளிப்பருவத்தி –லேயே மகாத்மா காந்திமீது பற்றுகொண்டவர். சக மாணவர்களை ஒன்று திரட்டி வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் பங்கேற்றார். ர்களில் ஆங்கிலேய அரசுக்கு எதிரான போராட்ட வாசகங்களை எழுதியதற்காக கைது செய்யப்பட்டார். 13 வயது சிறுவன் என்பதால் அவரை பின்னர் போலீஸார் விடுவித்துவிட்டனர். எனினும், தொடர்ந்து விடுதலைப் போராட்ட கூட்டங்களில் பங்கேற்றார்.

மாணவர் காங்கிரஸில் பணியாற்றிய அவர், பின்னர் இளைஞர்களுக்கா –ன மகாத்மா காந்தி இயக்கத்தையும் நடத்தினார். சட்டப்படிப்பு முடித்த அவர், காங்கிரஸ் சேவாதளத்தில் பணியாற்றினார். ஜவாஹர்லால் நேரு, காமராஜர் உள்ளிட்ட மூத்த காங்கிரஸ் தலைவர்களுடன் நெருங்கிப் பழகியவர். எனினும், நேரடியாக அரசியலில் ஈடுபடாமல் தொடர்ந்து பல்வேறு வழிகளில் நாட்டுக்கும், சமூகத்துக்கும் சேவையாற்றி வந்தார்.

---

1. பன்றியின் சிறுநீரகத்தை மனிதனுக்கு வெற்றிகரமாக மாற்றிப் பொருத்தி சாதனை படைத்துள்ள நாடு எது?

அ) இந்தியா

ஆ) அமெரிக்கா ☑

இ) ரஷ்யா

ஈ) சீனா



✓ முதன்முதலாக, நியூயார்க்கில் அமைந்துள்ள ஒரு சுகாதார மையத்தின் மருத்துவர்கள். பன்றியின் சிறுநீரகத்தை தற்காலிகமாக மனிதனுக்கு மாற்றிப்பொருத்தினர். இது 'Xeno–transplantations' எனப்படும் விலங்கு–மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான குறிப்பிடத்தக்க படிநிலை ஆக கருதப்படுகிறது. பன்றி உயிரணுக்களில் கிளைக்கான் எனப்படும் சர்க்கரை மூலக்கூறு இருப்பதால், மனித நோயெதிர்ப்பு மண்டலம் அதனை உடனடியாக நிராகரிப்பதைத் தவிர்ப்பதற்காக, மருத்துவர்கள் பன்றியின் மரபணுக்களை மாற்றியமைத்தனர்.

---

2. நடப்பாண்டின் (2021) உலகளாவிய உணவுப் பாதுகாப்புக் குறியீட்டில், இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 62

ஆ) 71 ☑

இ) 83

ஈ) 94



✓ 2021 – உலகளாவிய உணவுப் பாதுகாப்பு குறியீட்டில், 113 நாடுகளில் 57.2 புள்ளிகளுடன் 71ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. இது, எகனாமிஸ்ட் இம்பாக்ட் மற்றும் கோர்டேவா அக்ரி–சயின்ஸ் ஆகியவற்றால் வெளியிடப்பட்ட ஓர் உலகளாவிய அறிக்கையாகும்.

✓ அயர்லாந்து, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பின்லாந்து, சுவிச்சர்லாந்து, நெதர்லாந்து, கனடா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகியவை 77.8 – 80 புள்ளிகளுடன் குறியீட்டின் முதலாவது இடத்தைப் பகிர்ந்து கொண்டன. வருமானம் மற்றும் பொருளாதார சமத்துவமின்மை உள்ளி–ட்ட 58 தனித்துவமான குறிகாட்டிகளின் அடிப்படையில் இது உள்ளது.

---


3. இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 'காவலர் நினைவு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) அக்டோபர்.21 ☑

ஆ) அக்டோபர்.23

இ) அக்டோபர்.24

ஈ) அக்டோபர்.26



✓ இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் அக்.21 அன்று 'காவலர் நினைவு நாள்' அனுசரிக்கப்படுகிறது. 1959ஆம் ஆண்டு சீனப்படைகளுடன் போரிட்டு லடாக்கில் உள்ள ஹாட் ஸ்பிரிங்ஸில் உயிரிழந்த 10 காவலர்களின் நினைவாக இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. நாடு முழுவதும் உள்ள காவல்துறை, காவல்துறை மற்றும் மத்திய ஆயுதக் காவல் படைகளைச் சார்ந்த 377 தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியது. COVID தொற்றின் போது உயிர்நீத்த வீரர்களுக்கும் அவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

---

4. 2021 – உலகளாவிய வேளாண் உற்பத்தி அறிக்கையின்படி, மொத்த காரணி உற்பத்தித்திறனின் ஆண்டு விகிதம் என்ன?

அ) 0.50 %

ஆ) 1.36 % ☑

இ) 2.50 %

ஈ) 4.00 %



✓ 2021 – உலகளாவிய வேளாண் உற்பத்தித்திறன் அறிக்கையின்படி, மொத்த காரணி உற்பத்தித்திறனானது (TFP) ஆண்டு விகிதத்தில் 1.36% வளர்ந்து வருகிறது. 2050ஆம் ஆண்டில் உணவு மற்றும் உயிர் ஆற்றலுக்கான நுகர்வோரின் தேவைகளை நிலையாகப் பூர்த்தி செய்ய, 1.73 சதவீதம் வளர்ச்சியை ஆண்டு இலக்காகக் கொண்ட உலகளாவிய வேளாண் உற்பத்தித்திறனைவிட இது குறைவாக உள்ளது.

✓ நிலம், உழைப்பு, உரம் மற்றும் இயந்திரங்கள் போன்ற வேளாண் உள்ளீடுகள் எவ்வளவு திறமையாக பயிர்கள் மற்றும் மீன் வளர்ப்பு பொருட்கள் போன்ற வெளியீடுகளாக மாற்றப்படுகின்றன என்பதை TFP கண்காணிக்கிறது.

---

5. மாற்றப்படவுள்ள வனப் பாதுகாப்புச் சட்டமானது எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது?

அ) 1972

ஆ) 1980 ☑

இ) 1992

ஈ) 2000



✓ இந்தியாவில் வன நிர்வாகத்தில் சில முக்கிய மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக வனப் பாதுகாப்புச் சட்டம் – 1980'ஐ திருத்துவது குறித்த ஆலோசனைக் கட்டுரையை மத்திய சுற்றுச்சூழல், வனம் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. வனப்பகுதிகளுக்கு வெளியிலிருந்து துளையிட்டு வனநிலப்பரப்பிற்கு அடியில், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை எடுப்பதற்கும், ஆய்வுசெய்வதற்கும் அல்லது பிரித்தெடுப்பதற்கும் தனியார் தோட்டங்களை செயல்படுத்துவதை இந்தப் புதிய சட்டம் உள்ளடக்கி உள்ளது. மாநில அரசுகள் தங்கள் கருத்துக்களை 15 நாட்களுக்குள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

---

6. பதுகம்மா என்பது எந்த இந்திய மாநிலத்தில் கொண்டாடப்படும் ஒரு மலர் திருவிழாவாகும்?

அ) கேரளா

ஆ) தெலுங்கானா ☑

இ) மேற்கு வங்காளம்

ஈ) பஞ்சாப்



✓ தெலுங்கானா மற்றும் ஆந்திராவின் சிலபகுதிகளில் கொண்டாடப்படும் மலர் திருவிழாவான பதுகம்மா 9 நாட்கள் கொண்டாடப்படுகிறது. 9 நாள் திருவிழாவின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், பெண்கள் பூக்கள் மற்றும் பத்திகள் அடங்கிய தாலிகளை ஏந்திச்செல்கின்றனர். ஒவ்வோர் ஆண்டும் அம்மன் சிலை படைக்கப்பட்டு, திருவிழாவின் 10ஆம் நாளில் உள்ளூர் நீர்நிலைகளில் கரைக்கப்படுகிறது.

---

7. இந்திய குடிமைப் பணிகளைப் பொறுத்தவரை, அக்.9ஆம் தேதி அன்று கொண்டாடப்படுகிற நாள் எது?

அ) இந்திய காவல்துறை சேவைகள் நாள்

ஆ) இந்திய நிர்வாக சேவைகள் நாள்

இ) இந்திய வெளியுறவு சேவை நாள் ☑

ஈ) இந்திய வருவாய் சேவைகள் நாள்



✓ இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் அக்.9 அன்று இந்திய வெளியுறவுச் சேவைகள் நாள் (IFS Day) அனுசரிக்கப்படுகிறது. 1946ஆம் ஆண்டு இதே தேதியில்தான், அயல்நாடுகளில், இந்தியாவின் அரசியல் ரீதியான & வணிக பிரதிநிதித்துவ நோக்கத்திற்காக இந்திய வெளியுறவுச் சேவை நிறுவப்பட்டது. IFS அதிகாரிகளின் முக்கிய பங்கை அங்கீகரிக்கும் வகையில், 2011ஆம் ஆண்டு முதல் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

---

8. 'Safe food now for a healthy tomorrow' என்பது, அக்.16 அன்று அனுசரிக்கப்பட்ட எந்த நாளின் கருப்பொருளாகும்?

அ) உலக உணவு நாள் ☑

ஆ) உலக உழவர்கள் நாள்

இ) உலக உழவு நாள்

ஈ) உலக நலவாழ்வு மற்றும் சுகாதார நாள்



✓ அனைவருக்கும் பசி மற்றும் ஆரோக்கியமான உணவுப்பழக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.16 அன்று உலக உணவு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. இது, 1979ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட உணவு & உழவு அமைப்பின் நிறுவன நாளைக்குறிக்கிறது. இந்த ஆண்டு FAO, UNHCR, ஐநா அகதிகள் நிறுவனம் மற்றும் உலக உணவுத்திட்டம்போன்ற அமைப்புகளால் கூட்டாக இது நடத்தப்படுகிறது. 'Safe food now for a healthy tomorrow' என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக உணவு நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

9. மாலேயில் நடந்த SAFF கால்பந்து சாம்பியன்ஷிப்பை வென்ற நாடு எது?

அ) நேபாளம்

ஆ) இந்தியா ☑

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்

✓ இந்தியா தனது எட்டாவது SAFF சாம்பியன்ஷிப் பட்டத்தை 3–0 என்ற கணக்கில் நேபாளத்தை தோற்கடித்து வென்றது. இப்போட்டியின்போது, சுனில் சேத்ரி தனது 80ஆவது சர்வதேச ஸ்டிரைக்மூலம் முன்னணி கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸியை சமன் செய்தார். இரண்டாவது பாதியில் சேத்ரி (49வது நிமிடம்), சுரேஷ் சிங் (50வது), சாஹல் அப்துல் சமத் (90வது) ஆகியோர் அடித்த கோல்கள் இந்தியா பட்டத்தை வெல்ல உதவியது. சர்வதேச கால்பந்தில் அதிக கோல்கள் அடித்த வீரர்களில், சேத்ரி, இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

---

10. தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் புதிய தலைவர் & நிர்வாக இயக்குநர் யார்?

அ) அமித் ரஸ்தோகி ☑



ஆ) கஸ்தூரி ரங்கன்

இ) மயில்சாமி அண்ணாதுரை

ஈ) K சிவன்

✓ தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக அமித் ரஸ்தோகி பொறுப்பேற்றார். இந்திய கடற்படையில் 34 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, அமித் ரஸ்தோகி இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். NRDC என்பது DSIR, அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஒரு நிறுவனமாகும். பல்வேறு தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களிலிருந்து தொழில்நுட்பங்களின் மேம்பாடு & பரிமாற்றத்தை மேம்படுத்துவதற்காக 1953'இல் இது நிறுவப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஆசியான் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் இந்தியா: உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தகவல்

ஆசியான் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கும், அதன் முன்னிலைக்கும் இந்தியா அதிக முக்கியத்துவம் அளிக்கிறது என்று பிரதமர் மோடி தெரிவித்தார். ஆசியான் எனப்படும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு சார்பில் 18ஆவது ஆசியான் – இந்தியா உச்சி மாநாடு காணொலி முறையில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

ஆசியான் நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான உறவானது ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்டது. நமது கலாச்சாரம், பழக்க வழக்கம், மொழிகள், எழுத்துகள், கட்டிட வடிவமைப்பு ஆகியவற்றில் இருந்தே நாம் இதனை அறிந்து கொள்ளலாம். எனவேதான், ஆசியான் நாடுகளுடனான உறவுக்கு இந்தியா முன்னுரிமை வழங்குகிறது. அதேபோல, இந்தியாவின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஆசியான் கூட்டமைப்பு பெரும் உறுதுணையாக இருந்து வருகிறது.

குறிப்பாக, இந்தியாவின் கிழக்கை நோக்கிய கொள்கைக்கு ஆசியான் கூட்டமைப்பு ஆற்றி வரும் பங்களிப்பு அளப்பரியது. அதுமட்டுமின்றி, இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் மேம்பாட்டுக்கும் அக்கூட்டமைப்பு உதவியாக உள்ளது. இதற்காக, இந்த தருணத்தில் ஆசியான் நாடுகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வரும் 2022–ம் வருடமானது ஆசியான் நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான 30–வது ஆண்டு உறவை குறிக்கிறது. அதே வேளையில், இந்தியாவும் தனது 75–வது ஆண்டு சுதந்திர தினத்தில் அடியெடுத்து வைக்கவுள்ளது. இதனை நினைவுகூரும் விதமாக, 2022–ம் ஆண்டினை ஆசியான் – இந்தியா நட்பு ஆண்டாக கொண்டாட முடிவு செய்துள்ளோம்.

தற்போது கரோனா பரவலால் எழுந்துள்ள சவால்களை நாம் அனைவரும் எதிர்கொண்டு வருகிறோம். அதே சமயத்தில், இந்தியா – ஆசியான் கூட்டமைப்புக்கு இடையேயான உறவுக்கும் கரோனா சூழல் சில சவால்களை ஏற்படுத்தியுள்ளது. இதனை நாம் ஒன்றிணைந்து வெற்றிக் கொள்ள வேண்டும். நமது உறவை எதிர்காலத்திலும் வலுப்படுத்துவற்கான நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டும். ஆசியான் நாடுகளின் ஒற்றுமைக்கும், அதன் முன்னிலைக்கும் இந்தியா அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இவ்வாறு மோடி பேசினார்.

ஆசியான் கூட்டமைப்பில் புருனே, கம்போடியா, இந்தோனேசியா, மலேசியா, மியான்மர், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட 10 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்தியா, அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா, ஜப்பான் உள்ளிட்டவை இக்கூட்டமைப்பில் நட்பு நாடுகளாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

---

2. சரக்கு கையாளுதல், வேளாண் ஏற்றுமதியை மேம்படுத்த தலைமைச் செயலர் தலைமையில் குழு: அரசாணை வெளியிட்டது தமிழக அரசு

சரக்கு கையாளுதல், வேளாண் மற்றும் சேவை ஏற்றுமதியை மேம்படுத்த மாநில அளவில் தலைமைச் செயலர் தலைமையில் புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:

2019ஆம் ஆண்டு, மாநிலத்தின் அனைத்து சரக்குகளையும் கையாளுத –ல், வேளாண் மற்றும் சேவை ஏற்றுமதி தொடர்பானவற்றை கண்கா –ணிக்கவும், வர்த்தகம் தொடர்பான விஷயங்களை ஆய்வு செய்யவும் தலைமைச் செயலர் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த செப்டம்பரில், தமிழ்நாடு ஏற்றுமதி வளர்ச்சிக் கொள்கை வெளியிடப்பட்டது. இதையடுத்து, மாநில ஏற்றுமதி வளர்ச்சிக் குழு அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தலைமைச் செயலர் வெ இறையன்பு தலைமையில் தற்போது குழு அமைக்கப் பட்டுள்ளது. இந்தக் குழுவில் தொழில், நிதி, கால்நடை பராமரிப்பு, கைத்தறி, குறு, சிறு நடுத்தரதொழில்கள், வேளாண்மை ஆகியதுறைகளின் செயலர்கள் மற்றும் ஏற்றுமதி கவுன்சில் அல்லது ஏற்றுமதியாளர்கள் சங்க பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருப்பார்கள். தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பின் மேலாண் இயக்குநர் அமைப்பாளராகவும், அயல்நாடு வர்த்தக தென்மண்டல கூடுதல் இயக்குநர் ஜெனரல் துணை அமைப்பாளராக செயல்படுவர்.

மேலும், இந்திய ஏற்றுமதி சங்கத்தின் தலைவர் ஏ சக்திவேல், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் ராஜா சண்முகம், ஆட்டோமேட்டிவ் காம்போனன்ட் தயாரிப்பாளர்கள் சங்க மண்டல தலைவர் சுபகுமார், சிஐஐ தமிழ்நாடு துணைத் தலைவர் சத்யகம் ஆர்யா, மோகிப் ஷூ நிறுவன மேலாண் இயக்குநர் முகமது மொகிபுல்லா கொட்டாய், பாக்ஸ்கான் நிறுவன மேலாண் இயக்குநர் ஜோஷ் பவுல்கர், கேவிஎம் ஏற்றுமதி நிறுவன மேலாண் இயக்குநர் கேவிவி மோகனன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக் குழுவானது குறைந்தபட்சம் 6 மாதத்துக்கு ஒருமுறை கூடி, ஏற்றுமதி கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள முன்னேற்றம்குறித்து விவாதிக்கும். தேவைப்பட்டால் வேறு துறைகளையும் இந்தஆய்வின்போது சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசுகளின் வர்த்தகம் மற்றும் ஏற்றுமதி சார்ந்த துறைகளிடையே ஏற்றுமதி தொடர்பான சிக்கல்களை பரிமாறி அவற்றுக்கு இக்குழு தீர்வு காணும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

3. வாலாஜாபாத் அருகே – 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சதி கற்கள் கண்டுபிடிப்பு: உத்திரமேரூர் வரலாற்று ஆய்வுமையத்தலைவர் தகவல்

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டத்தில் உள்ள உள்ளாவூர் கிராமத்தில், 16–ம் நூற்றாண்டைச் சேர்ந்த விஜயநகர மன்னர்கள் காலத்தை சேர்ந்த 4 சதி கற்களும், உடைந்த நிலையில் ஒரு சிலையும் உத்திரமேரூர் வரலாற்று ஆய்வு மையம் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள –ன. இதில் மூன்று சதி கற்களில் ஒரு பெண், ஓர் ஆண் உருவமும், 4ஆவது சதிகல்லில் ஓர் ஆண், மூன்று பெண் உருவங்களும் உள்ளன.

இதுகுறித்து உத்திரமேரூர் வரலாற்று ஆய்வு மையத் தலைவர் கொற்றவை ஆதன் கூறியது:

காஞ்சிபுரத்தில் இருந்து செங்கல்பட்டு செல்லும் சாலையில் உள்ளது உள்ளாவூர் கிராமம். இந்த கிராமத்தில் தீப்பாஞ்சி அம்மன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் 50 ஆண்டுகளாக வழிபாடு இல்லாமல் உள்ளது. இந்தக் கோயிலை உள்ளூர் இளைஞர்கள் உதவியுடன் சீரமைத்து பார்த்தபோது இந்த சதி கற்களைக் கண்டறிந்தோம். இவற்றில் சில கற்கள் மண்ணில் பாதி புதைந்த நிலையில் காணப்பட்டன.

ஒரு வீரன் இறந்தால் அந்த வீரனின் மனைவியும் தீயில் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொள்வார். இந்தப் பழக்கத்துக்கு சதி பழக்கம் என்று

பெயர். இதனைத் தொடர்ந்து இறந்த அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவர்கள் உருவம் பொதித்த கற்களை உருவாக்கி ஊர்பொது வெளியில் நட்டுவைத்து வழிபாடு நடத்துவர். இதற்கு 'சதிக்கல் வழிபாடு' எனறு பெயர்.

நாங்கள் கண்டறிந்த இந்த சதி கற்களில், 3 சதி கற்களில் கணவன் மனைவியும், ஒரு சதிக்கல்லில் ஒரு கணவன் 3 மனைவிமார்களும் உள்ளனர். தீயில் பார்ந்து உயிரை விட்ட இப்பெண்களின் நினைவைப் போற்றும் வகையில் தீப்பாஞ்சி அம்மனாக வழிபட்டுள்ளனர்.

இந்த கிராமத்தில் இப்படி ஒன்றுக்கும் மேற்பட்ட சதி கற்கள் உள்ளன. விஜயநகர மன்னர்கள் காலத்தில் இந்த கிராமம் முக்கிய ஊராக இருந்துள்ளது. அந்தக் காலத்தில் இந்த முறை பின்பற்றப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. கடந்த கால வரலாற்றை நிகழ்கால சமூகத்துக்கு பறைசாற்றும். இதுபோன்ற வரலாற்று ஆவணங்களைக் காப்பது காலத்தின் கட்டாயம் என்றார்.

---

4. மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலராக தமிழகத்தை சேர்ந்த எம் ரவிச்சந்திரன் நியமனம்: இயற்கை பேரிடரால் ஏற்படும் உயிரிழப்புகளை குறைக்க நடவடிக்கை

இயற்கை பேரிடர்களான மழை, வெள்ளம், புயல், சுனாமி, அதிக வெப்பத்தை கண்காணித்து மாநில அரசுகளுக்கு தெரிவித்து, இந்தப் பாதிப்புகளிலிருந்து மக்களை காக்கும் பணிகளில் மத்திய புவி அறிவியல் அமைச்சகம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த அமைச்சகத்தின் செயலராக, தமிழகத்தைச் சேர்ந்த எம் ரவிச்சந்திரனை மத்திய அரசு நியமித்துள்ளது.

தேனி மாவட்டம், பத்திரகாளிபுரத்தில் பிறந்தவர் எம் இரவிச்சந்திரன். அழகப்பா பல்கலையில் இயற்பியலில் முதுநிலை பட்டமும், புனே பல்கலையின் இந்திய வெப்பமண்டல வானிலை மையத்தில் இயற்பியலில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

அதே மையத்தில் 1988–1997 காலகட்டத்தில் விஞ்ஞானியாக பணிபுரிந்தார். பின்னர் சென்னையில் தேசிய பெருங்கடல்சார் தொழில்நுட்ப நிறுவன (NIOT) முதுநிலை திட்ட பொறியாளராகவும், இந்திய தேசிய பெருங்கடல்சார் தகவல் மையத்தில் (INCOIS) விஞ்ஞானியாகவும், தேசிய துருவம் மற்றும் பெருங்கடல்சார் ஆராய்ச்சி மைய (NCPOR) இயக்குநராகவும் பதவி வகித்துள்ளார். இந்நிலையில் இவர் மத்திய அரசின் புவி அறிவியல் அமைச்சகச் செயலராக நியமிக்கப்ப –ட்டுள்ளார்.

---

5. ஜி–20 மாநாடு: ரோம் சென்றடைந்தார் பிரதமர் மோடி

ஜி–20 மற்றும் சிஓபி–26 மாநாடுகளில் பங்கேற்பதற்காக இத்தாலி தலைநகர் ரோமிற்கு பிரதமர் மோடி இன்று சென்றடைந்தார்.

வருகிற அக்.30,31 தேதிகளில் நடைபெறும் ஜி–20 மாநாட்டில் பங்கேற்று விட்டு, கிளாஸ்கோவுக்கு சென்று உலக நாடுகளின் முக்கிய தலைவர்க –ள் பங்கேற்கும் சிஓபி–26 மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இந்தப் பயணத்தின்போது உலக நாடுகளின் முக்கியத் தலைவர்களை பிரதமர் மோடி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

முன்னதாக, பிரதமர் மோடி ரோமிற்கு புறப்படுவதற்கு முன்பு தில்லியில் நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்ட அறிவிக்கையில், 'இத்தாலி பிரதமர் மேரியோ திராகியின் அழைப்பின் பேரில் அக்டோபர் 29 முதல் 31ஆம் தேதி வரையில் ரோம் நகரத்துக்கு பிரதமர் மோடி சென்று அங்கு நடைபெறும் 16ஆவது ஜி–20 மாநாட்டில் பங்கேற்கிறார்.

அப்போது, ஜி–20 மாநாட்டு தலைவர்களுடன் கரோனா பெருந்தொற்றுக் –குப் பிறகு சர்வதேச பொருளாதாரம், சுகாதார மீட்சி, பருநிலை மாற்றம் குறித்து பிரதமர் மோடி ஆலோசனை நடத்துகிறார். கரோனா பெருந்தொ –ற்றுக்குப் பிறகு ஜி–20 மாநாட்டுத் தலைவர்கள் நேரில் பங்கேற்கும் முதல் கூட்டம் இதுவாகும். இதில் பிறநாட்டுத் தலைவர்களுடன் இந்தியா மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து இச்சந்திப்பின் போது பிரதமர் மோடி ஆலோசிப்பார்.

---

6. தமிழ் மரபு வழி வந்த கனடா நாட்டு பாதுகாப்பு அமைச்சருக்கு முதல்வர் மு க ஸ்டாலின் வாழ்த்து

தமிழ் மரபு வழி வந்த அனிதா ஆனந்த், கனடா நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டதற்கு முதல்வர் மு க ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

---

7. சென்னை வெள்ளத் தடுப்புத் திட்டங்களுக்கு ரூ.1,877 கோடி கடன்: இந்தியா–ஆசிய வளர்ச்சி வங்கி இடையே ஒப்பந்தம் கையெழுத்து

சென்னையில் வெள்ளத் தடுப்பு மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.1,877 கோடி (251 மில்லியன்டாலர்) கடனுதவி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் ஆசிய வளர்ச்சி வங்கியும் வியாழக்கிழம கையெழுத்திட்டன.

இதுகுறித்து மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பாதவது:

சென்னை நகரை வெள்ள பாதிப்பு ஏற்படுவதில் இருந்து தடுப்பதற்காக, கொசஸ்தலை ஆறு பாயும் பகுதிகளில் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட உள்ளன. இந்தத் திட்டப் பணிகளுக்கு ரூ.1,877 கோடி கடனுதவி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும், ஆசிய வளர்ச்சி வங்கியும் கையெழுத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் பொருளாதார விவகாரங்கள் துறையின் கூடுதல் செயலர் ரஜத்குமார் மிஸ்ராவும் ஆசிய வளர்ச்சி வங்கியின் இந்தியத்திட்ட இயக்குநர் டேக்கியோ கோஷினியும் கையெழுத்திட்டனர்.

சென்னையின் அசுரவேக நகரமய வளர்ச்சியால் நிலங்கள் ஆக்கிரமிக்க –ப்பட்டதால் நீர்நிலைகளில் கொள்ளளவு குறைந்துவிட்டது. இதனால், சென்னை நகரம் எளிதில் வெள்ள பாதிப்புக்குள்ளாகும் நிலையில் உள்ளது. இந்தத்திட்டத்தின்மூலம், வெள்ள பாதிப்பிலிருந்து நகரத்தைப் பாதுகாக்கும்வகையில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

8. ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயர் 'மெட்டா' என மாற்றம்

ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயர் 'மெட்டா' என மாற்றப்படுவதாக அதன் தலைமைச் செயல் அதிகாரி மார்க் ஸக்கர்பெர்க் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகம் என்பதைத் தாண்டி 'மெட்டாவெர்ஸ்' என்னும் மெய்நிகர் உலகத்தை உருவாக்குவதில் ஃபேஸ்புக் நிறுவனம் தீவிரம்காட்டி வருகிறது. அதற்கு வசதியாக நிறுவனத்தின் பெயர் 'ஃபேஸ்புக் இன்கார்ப்பரேட்டட்' என்பதிலிருந்து 'மெட்டா–Meta' என மாற்றப்படுகிறது.

இனி, ஃபேஸ்புக் சமூக வலைதளத்துடன் இன்ஸ்டாகிராம், மெசஞ்சர், அதன் குவெஸ்ட் VR ஹெட்செட், VR பிளாட்ஃபார்ம் ஆகியவை இணைக் –கப்படும். 'மெட்டா' என்ற சொல் 'அப்பால்' என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்ததாகும். இந்தப் பெயர்மாற்றம் ஃபேஸ்புக், வாட்ஸ்ஆப், இன்ஸ் –டாகிராம் போன்ற தனித்தளங்களுக்குப் பொருந்தாது. அதன் தாய் நிறுவனத்தின் பெயர் மட்டுமே மாற்றப்பட்டுள்ளது.

---

1. ஆர்டனன்ஸ் இயக்குநரகத்தின் முதல் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) S வைத்தியநாதன்

ஆ) ER ஷேக் ☑

இ) M சத்யன்

ஈ) Dr C சைலேந்திர பாபு



✓ மூத்த IOFS அதிகாரி ER ஷேக், ஆர்டனன்ஸ் இயக்குநரகத்தின் முதல் தலைமை இயக்குநராகப் பொறுப்பேற்றுள்ளார். ஆர்ட்னன்ஸ் டைரக்டரேட் என்பது ஆர்ட்னன்ஸ் ஃபேக்டரி போர்டுக்கு (OFB) பதிலாக புதிதாக உருவாக்கப்பட்ட ஓரமைப்பாகும். ER ஷேக், 1984 பேட்ச் இந்திய ஆயுதத் தொழிற்சாலை சேவை (IOFS) அதிகாரி ஆவார்; இவர் பல்வேறு ஆயுத தொழிற்சாலைகளில் பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

---

2. NITI ஆயோக், அமேசான் வெப் சர்வீசஸ் & இன்டெல் ஆகியவை கூட்டாக, பின்வரும் எந்த இடத்தில் புதிய அனுபவ ஸ்டுடியோவை நிறுவியுள்ளன?

அ) மும்பை

ஆ) சென்னை

இ) புது தில்லி ☑

ஈ) ஹைதராபாத்

✓ NITI Aayog, Amazon Web Services மற்றும் Intel ஆகியவை இணைந்து ஒரு புதிய அனுபவ ஸ்டுடியோவை உருவாக்கியுள்ளன. அது NITI Aayog Frontier Technologies Cloud Innovation Center, புது தில்லியில் அமைந்துள்ளது. அரசு, ஸ்டார்ட் அப்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கான பரிசோதனை வசதியாக இந்த வளாகம் செயல்படும். இது செயற்கை நுண்ணறிவு (AI), இயந்திர கற்றல் (ML), இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoT), ஆக்மென்டட் ரியாலிட்டி மற்றும் விர்ச்சுவல் ரியாலிட்டி போன்ற தொழில்நுட்பங்களைக் கொண்டிருக்கும்.

---

3. டேர் டு ட்ரீம் 2.0 & இளம் விஞ்ஞானிகளின் விருதுகள், எந்த நிறுவனத்தால் வழங்கப்பட்டன?

அ) ISRO

ஆ) DRDO ☑

இ) AIIMS

ஈ) BARC



✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) 'டேர் டு ட்ரீம் 2.0' போட்டியில் வெற்றி பெற்றவர்களை பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் பாராட்டினார். புத்தாக்கம் மற்றும் ஸ்டார்ட்அப்களை ஊக்குவிப்பதற்காக 'டேர் டு ட்ரீம் 3.0' ஐயும் அவர் தொடங்கினார்.

✓ டேர் டு ட்ரீம் என்பது டிஆர்டிஓவின் தேசிய அளவிலான போட்டியாகும், இது இந்திய கல்வியாளர்கள், தனிநபர்கள் மற்றும் ஸ்டார்ட்–அப்களை பாதுகாப்பு & விண்வெளி தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்காக நடத்தப்படுகிறது. டிஆர்டிஓ தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் வெற்றியாளர்களுக்கு ஆதரவை வழங்குகிறது. 2019ஆம் ஆண்டிற்கான DRDO இளம் விஞ்ஞானிகள் விருதுகள், 16 DRDO விஞ்ஞானிகளுக்கு வழங்கப்பட்டது.

---

4. 'இந்திய வான்படை நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) அக்டோபர் 2

ஆ) அக்டோபர் 4

இ) அக்டோபர் 5

ஈ) அக்டோபர் 8 ☑



✓ ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர்.8 அன்று, இந்திய வான்படை நாளாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு, இந்திய வான்படை நாளின் 89 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. 1932ஆம் ஆண்டு இதே நாளில்இந்திய வான்படை நிறுவப்பட்டதை இந்நாள் நினைவுகூருகிறது. முதல் செயல்பாட்டுப் படை, 1933 ஏப்ரலில் நிறுவப்பட்டது. இந்த நாள், 'பாரதிய வாயு சேனா' என்றும் அழைக்கப்படும் இந்திய விமானப்படை பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

5.உலகம் முழுவதும் அதிர்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்குவது எது?

அ) சாலைப் போக்குவரத்து விபத்து ☑

ஆ) இயற்கை பேரிடர்கள்

இ) இடம்பெயர்தல்

ஈ) சுற்றுச்சூழல் அபாயங்கள்



✓ ஒவ்வோர் ஆண்டும் அக்.17ஆம் தேதி உலக அதிர்ச்சி தினமாக உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. உலகெங்கிலும் இறப்பு & ஊனத்தை ஏற்படுத்தும் பெரு விபத்துக்கள் மற்றும் காயங்கள் மற்றும் அவற்றைத் தடுப்பதன் அவசியத்தை இந்த நாள் எடுத்துக்காட்டுகிறது.

✓ சாலைபோக்குவரத்து விபத்து என்பது உலகம் முழுவதும் பேரதிர்ச்சிக்கு முக்கிய காரணமாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும், உலகம் முழுவதும் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் காயங்களால் இறக்கின்றனர். இந்தியாவில் மட்டும், ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு மில்லியன் மக்கள் இறக்கின்றனர் மற்றும் 20 மில்லியன் பேர் காயங்களால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

---

6. G20 நாடுகளில் தனிநபர் அடிப்படையில் கரியமில வாயுவை (CO_2) அதிக அளவில் வெளியேற்றும் நாடு எது?

அ) இந்தியா

ஆ) சீனா

இ) சவூதி அரேபியா ☑

ஈ) ரஷ்யா



✓ உலகின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தியாளர்களுள் ஒன்றான சவூதி அரேபியா, 2060ஆம் ஆண்டுக்குள் பைங்குடில் இல்லவாயு வெளியேற்றத்தில் "நிகர சுழியத்தை" அடைவதை இலக்காகக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளது. உலகளவில் சவூதி அரேபியா 10ஆவது மிகப்பெரிய கரியமில வாயு வெளியிடும் நாடாக உள்ளது. G20 நாடுகளில் தனிநபர் அடிப்படையில் இது மிகப்பெரிய உமிழ்வாளராக உள்ளது. சவூதியின் முதல் பசுமை முன்முயற்சி மன்றத்தின் தொடக்க விழாவில், பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் இதை அறிவித்தார்.

---

7. இந்தியாவில், எந்தக் கால்நடை இனத்தின் முதல் கன்று, இன்–விட்ரோ கருத்தரிப்பைப் (IVF) பயன்படுத்தி பிறந்துள்ளது?

அ) சாகிவால்

ஆ) பண்ணி ☑

இ) ஓங்கோல்

ஈ) முர்ரா



✓ மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகம், பண்ணி எருமை இனத்தின் முதல் கன்று, இன்–விட்ரோ கருத்தரிப்பின்மூலம் பிறந்ததாக அறிவித்துள்ளது. கிர் சோம்நாத்தில், பால் பண்ணையாளருக்கு சொந்தமான பண்ணி எருமை IVF ஆண் கன்றை ஈன்றது. பால் உற்பத்தியை அதிகரிக்க, மரபணு ரீதியாக உயர் இரக எருமைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இந்தச் செயல்முறை மேற்கொள்ளப்பட்டது.

✓ குஜராத்தின் கட்ச் பகுதியில் முதன்மையாகக்காணப்படும் பண்ணி இன எருமைகள், வறட்சியான சூழலில் அதன் வாழுந்தன்மை மற்றும் அதிக பால் உற்பத்தித் திறனுக்காக பொதுவாக அறியப்படுகின்றன.

---

8. அண்மையில் 51ஆவது தாதாசாகேப் பால்கே விருது பெற்ற நடிகர் யார்?

அ) இரஜினிகாந்த் ☑

ஆ) கமலஹாசன்

இ) சத்யராஜ்

ஈ) பார்த்திபன்



✓ இந்திய திரையுலகில், 'சூப்பர் ஸ்டார்' இரஜினிகாந்த் அவர்களின் சிறந்த பங்களிப்பிற்காக அவருக்கு 51ஆவது தாதாசாகேப் பால்கே விருது வழங்–கப்பட்டுள்ளது. சமீபத்தில், புது தில்லியில் நடைபெற்ற 67ஆவது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில், குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா, இந்த விருதை வழங்கினார்.

✓ 'தாதாசாகேப் பால்கே விருது' என்பது இந்தியாவின் மிகவுயரிய திரைப்பட விருதாகக்கருதப்படுகிறது. 1969'இல் இந்திய அரசால் நிறுவப்பட்டது.

---

9. உலக உணவுத் திட்டத்தின் ஓர் அண்மைய அறிவிப்பின்படி, 'பட்டினியை நோக்கிச் சென்றுகொண்டுள்ள' நாடு எது?

அ) வெனிசுலா

ஆ) ஆப்கானிஸ்தான் ☑



இ) சிரியா

ஈ) சூடான்

✓ உலக உணவுத் திட்டத்தின் நிர்வாக இயக்குநர் டேவிட் பீஸ்லி கூறுகையில், 22.8 மில்லியன் மக்கள் (ஆப்கானிஸ்தானின் 39 மில்லிய –ன் மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள்) கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் 'பட்டினியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்". 2 மாதங்களுக்கு முன்பு, 14 மில்லியன் மக்கள் உணவு நெருக்கடியின் விளிம்பில் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

✓ உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் குழந்தைகள் உட்பட மில்லியன் கணக்கான ஆப்கானியர்கள் பட்டினியால் இறக்க நேரிடும் என்றும் அவர் அறிவித்தார். முடக்கப்பட்ட நிதியை மனிதாபிமான முயற்சி –களுக்குப் பயன்படுத்தவும் அவர் வலியுறுத்தினார்.

---

10. NIPUN பாரத் மிஷனை செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட புதிய தேசிய வழிகாட்டுதல் குழுவின் தலைவர் யார்?

அ) மத்திய கல்வி அமைச்சர் ☑



ஆ) மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சர்

இ) NITI ஆயோக் CEO

ஈ) ISRO தலைவர்

✓ பாரத் மிஷன் – NIPUN – புரிதல் மற்றும் எண்ணியல் மூலம் வாசிப்பில் நிபுணத்துவத்திற்கான தேசிய முன்முயற்சியை செயல்படுத்துவதற்காக சமீபத்தில் தேசிய வழிகாட்டுதல் குழு உருவாக்கப்பட்டது. இதற்கு மத்திய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் தலைமைதாங்குவார்.

✓ கல்வித்துறை இணையமைச்சர் அன்னபூர்ணா தேவி துணைத்தலை –வராக இருப்பார். பள்ளிக்கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையானது 2026–27ஆம் ஆண்டுக்குள் மூன்றாம் வகுப்பு முடிவதற்குள் ஒவ்வொரு குழந்தைக்கும் அடிப்படைக் கல்வியறிவு மற்றும் எண்ணியல் ஆகியவற் –றில், உலகளாவிய நிபுணத்துவம் என்ற இலக்கை அடைய 2021 ஜூலையில் இந்த மிஷன் தொடங்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்திய போர்க்கப்பல் 'துஷில்' ரஷியாவில் இயக்கம்

இந்திய கடற்படையின் 'பி1135.6' வகையைச் சேர்ந்த 7ஆவது போர்க் கப்பல், ரஷியாவின் கலினின்கிராட் நகரில் அமைந்துள்ள யந்தர் கப்பல் கட்டுமான தளத்தில் முதல்முறையாக இயக்கப்பட்டது.

ரஷியாவுக்கான இந்திய தூதர் டி பாலவெங்கடேஷ் வர்மா மற்றும் ரஷிய கூட்டமைப்பு மற்றும் இந்திய கடற்படை அதிகாரிகளின் முன்னிலையில் கப்பல் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.

'துஷில்' என்றால் சம்ஸ்கிருதத்தில் பாதுகாப்பு கவசம் என்று பொருள். கோவா கப்பல் கட்டுமான நிறுவனத்தில் 2 கப்பல்களும் ரஷியாவில் இரண்டு 1135.6 ரக கப்பல்களும் கட்டமைப்பதற்காக ஒப்பந்தம் இந்தியா–ரஷியா இடையே மேற்கொண்டது. இந்திய கடற்படையின் தேவைகளு –க்கேற்ப கட்டமைக்கப்படும் இக்கப்பல்களில் அதிநவீன வசதிகளும், ஆயுதங்களும் உள்ளன. யந்தர் கப்பல் கட்டும் தளத்தின் தலைமை இயக்குநர் இல்யா சமரின், இந்தியாவின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

---

2. அக்டோபர்.30 – உலக சிக்கன நாள்.

---

3. ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ரோம் நகருக்கு சென்றார் பிரதமர் மோடி: வாடிகனில் போப் பிரான்சிஸை சந்திக்க திட்டம்

ஜி20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி, இத்தாலி சென்றுள்ளார். வாடிகனில் போப் ஆண்டவர் பிரான்சிஸை சந்தித்து பேசவும் மோடி திட்டமிட்டுள்ளார்.

இத்தாலி தலைநகர் ரோம் நகரில் 16ஆவது ஜி20 உச்சிமாநாடு இன்றும் நாளையும் நடக்கிறது. இத்தாலி பிரதமர் மரியோ டிரகியின் அழைப்பை ஏற்று இந்த மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

ஜி20 உச்சிமாநாட்டில் பங்கேற்கும் பிரதமர் மோடி, முதல்முறையாக வாடிகனுக்கு சென்று போப் ஆண்டவர் பிரான்சிஸை சந்திக்கவும் திட்டமிட்டுள்ளார்.

பிரதமரின் பயணம் குறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

இத்தாலி தலைமையின் கீழ்நடக்கவுள்ள ஜி20 மாநாட்டில் கரோனாவுக்கு பிறகான பொருளாதார மீட்பு நடவடிக்கைகள், பருவ நிலை மாற்றம், நீடித்த வளர்ச்சி, உணவு பாதுகாப்பு உள்ளிட்ட பிரச்சினைகளில் கவனம் செலுத்தப்படும். ஜி20 மாநாட்டுக்கு இடையே இத்தாலி பிரதமர் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் பிரதமர் மோடி சந்தித்து பேச உள்ளார்.

அதன்பின், ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகருக்கு செல்லும் மோடி, அங்கு நவ.1, 2 ஆகிய தேதிகளில் நடக்கும் பருவநிலை தொடர்பான மாநாட்டில் பங்கேற்கிறார். இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனையும் சந்திக்க உள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

3. ஒரே செடியில் கத்தரிக்காய், தக்காளி

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள இந்திய காய்கறி ஆராய்ச்சி நிறுவனத் தின் வேளாண் விஞ்ஞானிகள் கலப்பின முறையில் ஒரே செடியில் கத்தரிக்காய் மற்றும் தக்காளியை வளர்த்து புதிய சாதனை செய்துள்ளனர். கத்தரிக்காயின் ஆங்கிலப் பெயரான 'பிரிஞ்சால்', தக்காளியின் ஆங்கிலப்பெயரான 'டொமாட்டோ' ஆகியவற் –றை இணைத்து இச்செடிக்கு 'பிரிமாட்டோ' என்று பெயர்வைத்துள்ளனர்.

ஒரு செடியின் பாகத்தை மற்றொரு செடியின் தண்டு அல்லது வேரில் இணைத்து வளர்க்கப்படும் முறையில் இந்தப் புதிய கலப்பின செடி வளர்க்கப்பட்டுள்ளது. 25–30 நாட்கள் ஆன கத்திரிக்காய் விதைகள், 25 நாட்களான தக்காளி விதைகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு வாரத்துக்கு கட்டுப்படுத்தப் பட்ட சீதோஷ்ண நிலையில் வளர்த்து பின்னர் மேலும் ஒரு வாரம் நிழலில் வளர்த்து அதன் பிறகு நிலத்தில் பயிரிடப்படுகிறது.

இதுபோல் நகரங்களில் சிறிய இடத்தில் கூட வளர்க்கலாம். ஒவ்வொரு செடியும் 2.3 கிலோ தக்காளி, 2.6 கிலோ கத்தரிக்காய் விளைவிக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

---

4. இந்தியா–ஐரோப்பிய யூனியன் வர்த்தக மேம்பாடு: பிரதமர் மோடி பேச்சுவார்த்தை

ஐரோப்பிய யூனியன் நாடுகளுடனான இந்தியாவின் வர்த்தக உறவை மேம்படுத்துவது தொடர்பாக ஐரோப்பிய கவுன்சில், ஐரோப்பிய ஆணையம் ஆகியவற்றின் தலைவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி கூட்டு பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஜி20 நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் மோடி இத்தாலிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். தலைநகர் ரோமில் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் சார்லஸ் மிஷெல், ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லியன் ஆகியோரை பிரதமர் மோடி சந்தித்துப்பேசினார்.

அப்போது, ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான வர்த்தகத் தொடர்பை மேம்படுத்துவது தொடர்பாக தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

15ஆவது இந்தியா–ஐரோப்பிய யூனியன் மாநாடு கடந்த ஆண்டு ஜூலையில் காணொலி வாயிலாக நடைபெற்றது. ஐரோப்பிய யூனியனின் 10ஆவது மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக இந்தியா திகழ்கிறது. ஐரோப்பிய யூனியன் நாடுகள் இறக்குமதி செய்யும் பொருள்களில் 1.8 சதவீதம் இந்தியாவைச் சேர்ந்தவையாகும்.

கடந்த ஆண்டு நிலவரப்படி ஐரோப்பிய யூனியனில் இடம்பெற்றுள்ள 27 நாடுகளுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான வர்த்தகம் சுமார் ₹5.55 லட்சம் கோடியாக இருந்தது.

---

5. ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலம் மூன்றாண்டுகள் நீட்டிப்பு

இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு மத்திய அரசு நீட்டித்துள்ளது.

ஆர்பிஐ ஆளுநராக இருந்த உர்ஜித் படேல் தனது பதவியை ராஜிநாமா செய்ததையடுத்து, கடந்த 2018ஆம் ஆண்டு ஆர்பிஐ–யின் 25ஆவது ஆளுநராக சக்திகாந்த தாஸ் நியமிக்கப்பட்டார். 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்ட அவரது பதவிக்காலம் டிச.10ஆம் தேதியுடன் நிறைவடை–வதாக இருந்தது.

இந்நிலையில், அவரது பதவிக் காலத்தை பிரதமர் மோடி தலைமையிலா–ன நியமனங்களுக்கான குழு மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது. இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், 'ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலம் டிச.10ஆம் தேதியில் இருந்து மேலும் 3 ஆண்டுகளுக்கோ அல்லது அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையோ நீட்டிக்கப்படுகிறது' எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக ஆர்பிஐ'இன் தலைமைப்பொறுப்பை 2024ஆம் ஆண்டு டிசம்பர் வரை சக்திகாந்த தாஸ் வகிக்க வழி ஏற்பட்டுள்ளது.

நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்காக மத்திய அரசு ₹12.60 லட்சம் கோடி கடன் பெறுவதிலும் அவர் முக்கியப் பங்கு வகித்தார். தமிழகப் பிரிவு இந்திய ஆட்சிப் பணி (ஐஏஎஸ்) அதிகாரியான சக்திகாந்த தாஸ் கடந்த 2017ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

கடந்த 2015ஆம் ஆண்டுமுதல் பணி ஓய்வு பெறும் வரை பொருளாதார விவகாரங்கள் துறையின் செயலராக அவர் பதவி வகித்தார். 15ஆவது நிதிக்குழுவின் உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

தனது பதவிக் காலத்தை சக்திகாந்த தாஸ் முழுமையாக நிறைவு செய்தால், நீண்ட காலம் ஆர்பிஐ ஆளுநராக இருந்த 2ஆவது நபர் என்ற சிறப்பைப் பெறுவார். இதற்கு முன்பு பெனகல் ராமா ராவ் 1949 முதல் 1957 வரை தொடர்ந்து ஆர்பிஐ ஆளுநராக இருந்தார். அவரைத் தவிர 4 ஆளுநர்கள் மட்டுமே 5 ஆண்டுகளுக்கு மேல் பதவி வகித்துள்ளனர்.

ஆர்பிஐ ஆளுநரின் பதவிக்காலத்தை பாஜக தலைமையிலான மத்திய அரசு நீட்டிப்பது இதுவே முதல் முறையாகும். கடந்த 2016ஆம் ஆண்டில் ஆளுநராக இருந்த ரகுராம் ராஜன், பதவிக்கால நீட்டிப்பை ஏற்க மறுத்துவிட்டார். அதையடுத்து பதவியேற்ற ஆளுநர் உர்ஜித் படேல் 3 ஆண்டு பதவிக்காலம் முடியும் முன்பே ராஜிநாமா செய்தார்.

---

6. ஒரே ஆண்டில் 1.53 லட்சம் பேர் தற்கொலை – தமிழ்நாடு இரண்டாம் இடம்

நாட்டில் கடந்த 2020ஆம் ஆண்டு 1.53 லட்சம் பேர் தற்கொலை செய்து கொண்டனர். இதில் மகாராஷ்டிரத்துக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் 16,000 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

இதுதொடர்பாக தேசிய குற்ற ஆவணக்காப்பகம் வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கையில் கடந்த 2019ஆம் ஆண்டு நாடு முழுவதும் 1,39,123 பேர் தற்கொலை செய்துகொண்டனர். இது கடந்த ஆண்டு 1,53,052–ஆக அதிகரித்துள்ளது. கடந்த 2019–ஆம் ஆண்டு 10.4 சதவீதமாக இருந்த தற்கொலை விகிதம், கடந்த ஆண்டு 11.3 சதவீதமாக உயர்ந்துள்ளது.

கடந்தாண்டு அதிகபட்சமாக மகாராஷ்டிரத்தில் 19,909 பேர் தற்கொலை செய்துகொண்டனர். அதற்கு அடுத்த இடங்களில் தமிழ்நாடு (16,883), மத்திய பிரதேசம் (14,578), மேற்கு வங்கம் (13,103), கர்நாடகம் (12,259) மாநிலங்கள் உள்ளன.

தற்கொலை செய்துகொண்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் 50.1 சதவீதம் பேர் இந்த 5 மாநிலங்களைச் சோந்தவர்கள். நாட்டில் அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலம் உத்தர பிரதேசம். மொத்த மக்கள் தொகையில் 16.9% பேர் அந்த மாநிலத்தில் வசிக்கின்றனர். ஆனால், அந்த மாநிலத்தில் தற்கொலை செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகப் பதிவாகியுள்ளது.

மொத்த தற்கொலை எண்ணிக்கையில் 3.1% பேர்தான் அந்த மாநிலத்–தைச் சோந்தவர்கள். யூனியன் பிரதேசங்களை பொருத்தவரை, தில்லி–யில் அதிக அளவில் தற்கொலைகள் (3,142) பதிவாகியுள்ளன. அதற்கு அடுத்த இடத்தில் புதுச்சேரி (408) உள்ளது.

நகரங்களில் அதிக தற்கொலை: நாட்டில் உள்ள 53 பெரிய நகரங்களில் 23,855 பேர் தற்கொலை செய்துகொண்டனர். நகரங்களில் தற்கொலை செய்துகொண்டவர்களின் வீதம் (14.8%) ஒட்டுமொத்தமாக இந்தியாவில் தற்கொலை செய்துகொண்டவர்களின் விகிதத்தைவிட (11.3%) அதிகம்.

மொத்த தற்கொலை எண்ணிக்கையில் 56.7% தற்கொலைகளுக்கான காரணங்களாக குடும்பப் பிரச்னைகள், திருமணம் சார்ந்த பிரச்னைகள், உடல்நல பாதிப்புகள் உள்ளன.

10,000 விவசாயிகள்: கடந்த ஆண்டு தற்கொலை செய்துகொண்ட 1.53 லட்சம் பேரில் 10,677 போ விவசாயிகள்.

இவர்களில் 5,579 பேர் சொந்தமாக நிலம் வைத்திருந்தவர்கள்; 5,098 பேர் பிறர் நிலங்களில் பணிபுரிந்த விவசாயத் தொழிலாளர்கள். மொத்த தற்கொலை எண்ணிக்கையில் இவர்களின் விகிதம் ஏழு சதவீதமாகும். ஒட்டுமொத்த தற்கொலை எண்ணிக்கையில் 70.9% பேர் ஆண்கள்; 29.1 பேர் பெண்கள்.

---

7. மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை 35% எட்டியது

மத்திய அரசின் நிதிப்பற்றாக்குறை முதல் அரையாண்டில் பட்ஜெட் இலக்கில் 35 சதவீதத்தை எட்டியுள்ளது.

இதுகுறித்து பொதுக் கணக்கு கட்டுப்பாட்டாளர் (சிஜிஏ) வெளியிட்ட புள்ளி விவரத்தில் தெரிவித்துள்ளதாவது:

2021 செப்டம்பருடன் முடிவடைந்த முதல் அரையாண்டில் மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறை ரூ.5,26,851 கோடியைத் தொட்டுள்ளது. இது, நடப்பு நிதியாண்டுக்கான பட்ஜெட் மதிப்பீட்டில் 35 சதவீதமாகும்.

இருப்பினும், கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் நிதிப் பற்றாக்குறை–யானது நடப்புநிதியாண்டில் மிகவும் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது. கடந்த நிதியாண்டில் கரோனா பேரிடரை எதிர்கொள்ள அதிக செலவிட வேண்டியிருந்ததால் நிதிப்பற்றாக்குறையானது பட்ஜெட் இலக்கை தாண்டி 114.8 சதவீதமாக அதிகரித்தது என சிஜிஏ தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் நிதிப்பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தி–யில் 6.8 சதவீதமாக (₹15,06,812 கோடி) இருக்கும் என்பது மத்திய அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது.

---

8. பிரதமரின் ஜன் தன் யோஜனா: வங்கிக் கணக்குகள் எண்ணிக்கை 44 கோடியாக அதிகரிப்பு

பிரதமரின் மக்கள் நிதி திட்டத்தின் (ஜன் தன் யோஜனா) கீழுள்ள வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை 44 கோடியாக அதிகரித்துள்ளது என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

அசோசேம் வர்த்தகக் கூட்டமைப்பு சார்பில் நிதித்துறை தொடர்பான இணையவழி கருத்தரங்கு நடந்தது. இதில் மத்திய நிதியமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொருளாதார விவகாரங்கள் துறையின் ஆலோசகர் மணீஷ் சென்சர்மா பங்கேற்று பேசுகையில், "பிரதமரின் ஜன் தன் திட்டத்தின் கீழுள்ள வங்கிக்கணக்குகளின் எண்ணிக்கை, இந்த ஆண்டு அக்டோபர் வரை இந்த சுமார் 44 கோடியாக அதிகரித்துள்ளது".

கடந்த 2014ஆம் ஆண்டு சுதந்திர தினத்தின்போது பிரதமரின் ஜன் தன் யோஜனா திட்டத்தை பிரதமர் மோடி அறிவித்தார். அந்த ஆண்டு ஆகஸ்ட் 28ஆம் தேதி அத்திட்டம் அமலுக்கு வந்தது.

பொதுமக்களுக்கு நிதிச்சேவைகள், குறிப்பாக பணப்பரிவர்த்தனை, கட–ன் பெறுதல், காப்பீடு, ஓய்வூதியம் சார்ந்த சேவைகள் எளிதில் கிடைக்க வேண்டும் என்பதை நோக்கமாகக்கொண்டு இத்திட்டம் அறிமுகப்படுத்த–ப்பட்டது.

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்









1. 'தேசிய பழங்குடியினர் நடனவிழா-2021'ஐ நடத்தவுள்ள இந்திய நகரம் எது?

அ) ராஞ்சி

ஆ) இராய்பூர் ☑

இ) விசாகப்பட்டினம்

ஈ) ஷில்லாங்



✓ தேசிய பழங்குடியினர் நடன விழாவானது அக்.28 முதல் இராய்ப்பூரில் நடக்கவுள்ளதாக சத்தீஸ்கர் மாநில சுற்றுலா வாரியம் தெரிவித்துள்ளது.

✓ இராய்ப்பூரில் நடைபெறும் மூன்று நாள் தேசிய பழங்குடியினர் நடன விழாவில், இந்தியப்பழங்குடியின களைஞர்களோடு உஸ்பெகிஸ்தான், நைஜீரியா, இலங்கை, உகாண்டா, சிரியா, மாலி உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த பழங்குடியின கலைஞர்களும் கலந்துகொள்வார்கள். தேசிய பழங்குடியினர் நடன விழாவின் முதல் பதிப்பு, கடந்த 2019ஆம் ஆண்டில் நடைபெற்றது.

---

2. போலந்து, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் வீசிய புயலின் பெயர் என்ன?

அ) அலிசா

ஆ) ஆரோர் ☑

இ) ஆப்ரோ

ஈ) பிஸாரே



✓ 'ஆரோர்' புயலானது வட ஐரோப்பாவின் சில பகுதிகளில் வீசியது. இதன் காரணமாக போலந்தில் 4 பேர் இறந்தனர் மற்றும் ஜெர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் பிற இடங்களில் அப்புயல் கடுமையான சேதத்தை ஏற்படுத்தியது. பலத்த சூறைக்காற்று மற்றும் முறிந்து விழுந்த மரங்கள் காரணமாக வடக்கு ஐரோப்பா முழுவதும் மின்சாரம் தடைப்பட்டது. பல வீடுகள் மற்றும் சொத்துக்கள் அழிவுக்கு உள்ளாகின. புயல்தாக்கம் காரணமாக இரயில்வே & விமான சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

---

3. 2021 – இந்திய சர்வதேச திரைப்பட விழா நடத்தப்படுகிற நகரம் எது?

அ) வாரணாசி

ஆ) கோவா ☑

இ) கொச்சின்

ஈ) புதுச்சேரி

✓ இந்திய சர்வதேச திரைப்பட விழாவின் (IFFI) 52ஆவது பதிப்பு நவ.20 முதல் 28 வரை கோவாவில் நடைபெறவுள்ளது. ஹாலிவுட் மூத்த நடிகர் மார்ட்டின் ஸ்கோர்செஸி மற்றும் புகழ்பெற்ற ஹங்கேரிய திரைப்படத் தயாரிப்பாளரான ஸ்டீவன் சாபோ ஆகியோருக்கு இந்த ஆண்டு (2021) திரைப்பட விழாவில் சத்யஜித் ரே வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது என மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் அறிவித்தார்.

---

4. 2021 – 'உலகளாவிய அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கை'யை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) UNICEF

ஆ) WeProtect Global Alliance ☑

இ) CRY

ஈ) உலகப் பொருளாதார மன்றம்

✓ ஓர் உலகளாவிய இயக்கமான WeProtect Global Alliance, '2021 – உலகளாவிய அச்சுறுத்தல் மதிப்பீட்டு அறிக்கை'யை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, சிறார் பாலியல் சுரண்டல் மற்றும் இணையவழி துஷ்பிரயோகத்தின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு COVID-19 பொது முடக்க காலம் பங்களித்துள்ளது.

✓ 'WeProtect Global Alliance' என்பது 200க்கும் மேற்பட்ட அரசாங்கங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் ஓர் உலகளாவிய இயக்கமாகும்.

---

5. ஜெய்நகர்-குர்தா எல்லைதாண்டிய இரயில் இணைப்பைக் குறிக்கும் வகையில், குர்தா அமைந்துள்ள நாடு எது?

அ) நேபாளம் ☑

ஆ) பூட்டான்

இ) வங்காளதேசம்

ஈ) இலங்கை



✓ ஜெய்நகரில் இருந்து குர்தா (நேபாளம்) வரை புதிதாக இயக்கப்பட்ட எல்லைதாண்டிய இரயில் பகுதியை இந்திய அரசு சார்பாக இர்கான் இன்டர்நேஷனல் நேபாள அரசிடம் ஒப்படைத்துள்ளது. இந்திய அரசின் மானிய உதவியின்கீழ், ஜெய்நகர் (இந்தியா) முதல் பர்திபாஸ் (நேபாளம்) வரையிலான இரயில் பாதைத் திட்டத்தை இர்கான் இன்டர்நேஷனல் மேற்கொண்டது. ஜெய்நகர்-குர்தா பிரிவின் முதல் கட்டம், ஜெய்நகர்-பிஜல்புரா-பார்திபாஸ் இரயில் இணைப்பின் ஒருபகுதியாகும். இது, 8.77 பில்லியன் நேபாள ரூபாய் மானிய உதவியின்கீழ் கட்டப்பட்டுள்ளது.

---

6. இந்தியாவில் நடந்த முதல் தேசிய மதங்களுக்கிடையேயான மாநாட்டை நடத்திய நகரம் எது?

அ) மும்பை

ஆ) புனே

இ) நாக்பூர் ☑

ஈ) வாரணாசி



✓ லோக்மத் ஊடக குழுமத்தால் நாக்பூரில் முதன்முறையாக தேசிய அளவிலான மதங்களுக்கிடையேயான மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

✓ அதன் நாக்பூர் பதிப்பின் பொன்விழா ஆண்டை நினைவுகூரும் வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாநாட்டின் கருப்பொருள் "வகுப்புவாத நல்லிணக்கத்திற்கான உலகளாவிய சவால்கள் மற்றும் இந்தியாவின் பங்கு" ஆகும். மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சிக்கு பல்வேறு மதங்களைச் சேர்ந்த பல ஆன்மீகத் தலைவர்கள் பேச்சாளர்களாக அழைக்கப்பட்டனர்.

---

7. ஸ்ரீநகரிலிருந்து ஷார்ஜாவிற்கு நேரடி விமானப் போக்குவரவை அறிமுகப்படுத்திய முதல் விமானப் போக்குவரத்து நிறுவனம் எது?

அ) இண்டிகோ

ஆ) கோ பர்ஸ்ட் ☑

இ) ஏர் இந்தியா

ஈ) விஸ்தாரா



✓ இந்தியாவின் குறைந்த கட்டண விமான நிறுவனமான 'கோ பர்ஸ்ட்', ஸ்ரீநகரிலிருந்து சார்ஜாவிற்கு நேரடி வான்போக்குவரவைத் தொடங்கிய முதல் விமான நிறுவனம் ஆகும். ஸ்ரீநகரில் உள்ள ஷேக் உல்-ஆலம் பன்னாட்டு வானூர்தி நிலையத்திலிருந்து ஸ்ரீநகரிலிருந்து சார்ஜாவிற்கு செல்லும் முதல் பன்னாட்டு விமான சேவையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

✓ இது, இந்தியாவுக்கும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் (UAE) இடையிலான பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'கோ பர்ஸ்ட்', ஸ்ரீநகர் மற்றும் ஷார்ஜா இடையே வாரந்தோறும் நான்கு விமானங்களை இயக்கும்.

---

8. இந்தியாவின் எந்த அண்டை நாடு, நில எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக ஒரு புதிய சட்டத்தை இயற்றியுள்ளது?

அ) நேபாளம்

ஆ) சீனா ☑

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்



✓ இந்தியாவுடனான சர்ச்சைக்குரிய எல்லையில் ராணுவ பதற்றம் நிலவி வரும் நிலையில், நில எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்த சீனா புதிய சட்டத்தை இயற்றியுள்ளது. இந்திய-சீன எல்லைப் பகுதிகளில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதோடு, சீனாவின் நில எல்லைகளின் ராணுவப் பாதுகாப்பையும் ஒருங்கிணைக்கும் சட்டத்தை இது முறைப்படுத்துகிறது. திபெத்திய கிராமவாசிகள் உள்ளிட்ட எல்லைப்

பகுதிகளில் தங்கியுள்ள பொதுமக்களுடன் நெருக்கமாக பணியாற்றுவத –ற்கான மக்கள் விடுதலை இராணுவத்தின் கொள்கையையும் இது வலுப்படுத்துகிறது.

---

9. வடிவமைத்தல் / நிறுவுதல் தொழில்நுட்ப பணியாளர்களுக்கான மாதிரி திறன்வளர்த்தல் திட்டத்திற்கு ஒப்புதலளித்துள்ள அமைச்சகம் எது?

அ) பாதுகாப்பு அமைச்சகம்

ஆ) ஜவுளி அமைச்சகம் ☑

இ) MSME அமைச்சகம்

ஈ) எஃகு அமைச்சகம்

- ✓ சாலைகள், இரயில்வே, நீர் ஆதாரங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு திட்டங்களில் புவிசார்–ஜவுளி பயன்பாட்டில் ஈடுபட்டுள்ள வடிவமைத்தல் / நிறுவுதல் தொழில்நுட்ப பணியாளர்களுக்கான மாதிரி திறன் வளர்த்தல் திட்டத்திற்கு ஜவுளி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- ✓ பெங்களூருவில் அமைந்துள்ள இந்திய அறிவியல் நிறுவனம் (IISc), சென்னை மற்றும் ரூர்கியில் அமைந்துள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனங்களால் இப்பயிற்சி வழங்கப்படும். தொடர்புடைய பொறியியல் பிரிவுகளின் ஒருங்கிணைப்பு ஆசிரியர்கள் நிறுவனத்தின் இதர மையங்கள் / அலுவலகங்களுடனான ஆலோசனைக்கு பின்னர் இந்தச் சிறப்பு பயிற்சிகள் நடத்தப்படுவதை கவனித்து கொள்வார்கள்.

---

10. 'கிரீன் டே எஹெட் மார்க்கெட்டைத்' தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) நிலக்கரி அமைச்சகம்

ஆ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

இ) புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑

ஈ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

- ✓ மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது 'Green Day Ahead Market' என்ற புதிய சந்தைப்பிரிவை அறிமுகப்படுத்தியது.
- ✓ இது மின்னுற்பத்தி மற்றும் விநியோக நிறுவனங்கள், திறந்த அணுகல் மூலம் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வாங்க அல்லது விற்க உதவும். இதன் மூலம், ஒப்பந்தம் அடிப்படையிலான நீண்டகால மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களை படிப்படியாக சந்தை அடிப்படையிலான மாதிரிகளுக்கு மாற்றுவதை இந்திய அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கார்பன் சமநிலையை அடைய இலக்கு: G20 உச்சிமாநாட்டில் முடிவு

கார்பன் சமநிலையை 2050ஆம் ஆண்டுக்குள் அடைவது என ஜி–20 நாடுகளின் உச்சிமாநாட்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

உலகின் பொருளாதார சக்திகளாகத் திகழும் இருபது நாடுகள் அங்கம் வகிக்கும் G20 அமைப்பின் 16ஆவது உச்சிமாநாடு இத்தாலி தலைநகர் ரோமில் தொடங்கியது. மாநாட்டு முடிவில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

'நிகர சுழிய' பைங்குடில் இல்ல வாயு உமிழ்வு அல்லது கார்பன் சமநிலை இலக்கை 2050ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவது என மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

வெளிநாடுகளில் நிலக்கரி மூலம் மின்னுற்பத்தி செய்யும் புதிய அனல் மின்–நிலையங்களுக்கான நிதியுதவியை 2021ஆம் ஆண்டுக்குள் நிறுத்துவது என ஜி–20 தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ஏழை நாடுகளுக்கு உதவும் வகையில் ஆண்டுதோறும் பணக்கார நாடுகள் 100 பில்லியன் டாலர் (சுமார் ₹7.5 லட்சம் கோடி) நிதியைத் திரட்டிக்கொடுக்கவேண்டும் என்ற கடந்த கால உறுதிப்பாடு மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

சர்வதேச சராசரி வெப்பநிலை உயர்வை 2°°செல்சியசுக்கும் குறைவாக வைத்திருக்க வேண்டும் என்ற பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தைப் பின்பற்றுவதற்கு ஜி20 நாடுகளின் தலைவா'கள் மீண்டும் உறுதி பூண்டனர். தொழிற்புரட்சிக்கு முந்தையகாலகட்டத்தின் வெப்பநிலையில் இருந்து 1.5° செல்சியஸுக்கும் மிகாமல் கட்டுக்குள் வைத்திருக்க முயற்சி செய்யவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர் என அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கார்பன் சமநிலை என்றால் என்ன? கார்பன் சமநிலை அல்லது நிகர பூஜ்ஜிய பசுமைஇல்ல வாயு உமிழ்வு என்பது, வளிமண்டலத்தில் பசுமைஇல்ல வாயுக்களின் வெளியேற்றம் மற்றும் அகற்றத்துக்கு இடையிலான சமநிலை ஆகும்.

வெளிநாடுகளில் புதிதாக அனல்மின் நிலையம் அமைப்பதற்கான நிதியுதவியை நிறுத்துவது என இம்மாநாடு உறுதி மேற்கொண்டாலும், உள்நாட்டில் நிலக்கரி பயன்பாட்டை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக இலக்கு எதுவும் நிர்ணயிக்கவில்லை.

மின்னுற்பத்திக்கு நிலக்கரியை பெரிதும் சார்ந்திருக்கும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு இது பலனளிக்கும். புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு முழுமையாக மாறுவதற்கான நடவடிக்கைகளை இந்த நாடுகள் படிப்படியாக மேற்கொள்ள கால அவகாசத்தை அளிக்கும்.

---

2. தொடங்கியது கிளாஸ்கோ பருவநிலை மாற்ற மாநாடு: உலக தலைவர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை

பிரிட்டனின் ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் பருவநிலை மாற்ற மாநாடு இன்று தொடங்கியது. இதில் பிரதமர் மோடி உள்ளிட்ட 120–க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இத்தாலி தலைநகர் ரோமில் ஜி–20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்ற 2 நாள் மாநாடு நேற்று நிறைவு பெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் உள்ளிட்ட பல்வேறு நாட்டு தலைவர்கள் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் 120 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர். இதில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள், அதனை எதிர் கொள்ள பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்தை தடுக்க மேற்கொண்டு வரும் முயற்சிகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

---

3. செர்பியா சர்வதேச சதுரங்கப் போட்டி கிராண்ட் மாஸ்டர் இனியன் சாம்பியன்:

செர்பியாவில் நடந்தசர்வதேச சதுரங்கப் போட்டியில் ஈரோட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் பி.இனியன் வெற்றி பெற்றார்.

ஈரோட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் பி.இனியன், சர்வதேச அளவிலான பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்று சாதனை படைத்து வருகிறார். செர்பியாவில் கடந்த 23ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை நடந்த 5ஆவது ருஜனா சோரா சதுரங்கப் போட்டியில் ஐந்து நாடுகளைச் சேர்ந்த 10 சர்வதேச வீரர்கள் பங்கேற்றனர். இந்தியாவின் சார்பில் இப்போட்டியில் இனியன் பங்கேற்றார்.

கிளாசிகல் பிரிவில் 9 சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டியில், கிராண்ட் மாஸ்டர் இனியன் 5 போட்டிகளில் வெற்றி மற்றும் 4 போட்டிகளைச் சமன் செய்து ஏழு புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். இப்போட்டியில் ரஷ்ய வீரர் மகரின் ரூடிக் இரண்டாமிடம் பெற்றார்.

---

1. வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் அமைந்துள்ள இடம் எது?

அ) மும்பை

ஆ) கொல்கத்தா

இ) புது தில்லி

ஈ) புனே ☑

✓ வெப்பமண்டல வானிலை ஆய்வு நிறுவனம் என்பது நடுவண் புவி அறிவியல் அமைச்சகத்தின்கீழ் உள்ள ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இது புனேவில் அமைந்துள்ளது. தில்லி – என்சிஆர் பகுதியில் காற்றின் தர அளவீடு மற்றும் நிர்வாகத்திற்காக, தற்போதுள்ள 'காற்றின் தர ஆரம்ப எச்சரிக்கை அமைப்பை' மேம்படுத்தும் நோக்கத்துடன், இந்த நிறுவனம் புதிய 'முடிவு ஆதரவு அமைப்பை' உருவாக்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

---

2. UNESCO'இன் 2021 – தற்காப்புக் கலைக் கல்விப் பரிசை வென்ற குங் ஃபூ கன்னியாஸ்திரிகள் சார்ந்த பௌத்த வம்சம் எது?

அ) துருக்பா ☑



ஆ) நிங்மா

இ) காக்யு

ஈ) சாக்யா

✓ பௌத்த மதத்தின் துருக்பா வம்சத்தைச் சார்ந்த உலகப் புகழ்பெற்ற குங் ஃபூ கன்னியாஸ்திரிகள் தங்கள் துணிச்சலான சேவைகளுக்காக UNESCO சர்வதேச தற்காப்புக்கலை மையத்தின் 2021ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க தற்காப்புக்கலைக்கல்விப்பரிசை வென்றுள்ளனர். தற்காப்புக் கலைகள்மூலம், இளம் பெண்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ளவும், தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவும், அவர்களின் சமூகங்களில் தலைமைப் பாத்திரங்களை ஏற்கவும் துருக்பா வம்ச கன்னியாஸ்திரிகள் வல்லமையளிக்கிறார்கள்.

---

3. இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பலின் பெயர் என்ன?

அ) அர்ஜுன்

ஆ) விக்ராந்த் ☑



இ) கட்டபொம்மன்

ஈ) பாரதி

✓ இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிப்போர்க்கப்பலான விக்ராந்த், 2022 ஆகஸ்டு மாதத்திற்குள் இந்திய கடற்படையில் சேர்க்கப்படவுள்ள இந்தக் கப்பலின் 2ஆம் கட்ட சோதனைகள் சமீபத்தில் தொடங்கின. இப்போர்க்கப்பல், MiG–29K போர் விமானங்கள், Kamov–31 ஹெலிகாப்டர்கள், MH–60R ஆகியவற்றை இயக்கும்.

---

4. கேரளாவில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணையானது பின்வரும் எந்த மாநிலத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது?

அ) தமிழ்நாடு ☑



ஆ) கர்நாடகா

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) தெலுங்கானா

✓ கேரள மாநிலத்தில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணையானது தமிழ்நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது. இது, கேரளாவில் இவ்வாறு பாயும் திசையில் வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு அச்சுறுத்தலாகவும், தமிழ்நாட்டின் 5 மாவட்டங்களில் 2 லட்சம் ஹெக்டேருக்கு மேல் பாசன வசதி வழங்கி வருவதாலும் நீண்டகாலமாக சர்ச்சைக்குரியதாக இருந்து வருகிறது. முல்லைப் பெரியாறு அணையில் நவம்பர்.10ஆம் தேதி வரை அதிகபட்ச நீர்மட்டம் 139.50 அடியாக இருக்க வேண்டும் என சமீபத்தில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகி கேரள –த்தில்பாயும் பெரியாற்றின் மேற்பகுதியில் இவ்வணை அமைந்துள்ளது.

---

5. போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் தேசிய நிதியம், பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்துடன் தொடர்புடையது?

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

இ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) சட்டம் & நீதி அமைச்சகம்

✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமானது போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் தேசிய நிதியத்தை போதை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தப் பயன்படுத்தலாம் என்று அண்மையில் பரிந்துரைத்துள்ளது. 1985ஆம் ஆண்டு போதைப்பொருள் மருந்துகள் மற்றும் மனநோய் பொருட்கள் சட்டத்தின் விதியின்படி இந்த நிதியம் உருவாக்கப்பட்டது. இதன் மொத்த மதிப்பு ₹23 கோடியாகும்.

✓ இந்நிதியானது போதைப்பொருள் கடத்தலை எதிர்த்துப் போராடுதற்கும், அடிமையானவர்களை மறுவாழ்வு செய்வதற்கும், போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் எனச் சட்டம் கூறுகிறது. இதன் நிதியானது காவல்துறை நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படு –த்தப்படுவதால், போதைப்பழக்க ஒழிப்பையும் இதனோடு சேர்த்துக் கொள்ள நடுவண் அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.

---

6. 'ஆபரேஷன் ரெட் ரோஸ்' என்பது சட்டவிரோத மதுவுக்கு எதிராக, எந்த மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிற ஒரு திட்டமாகும்?

அ) தமிழ்நாடு



ஆ) புது தில்லி

இ) பஞ்சாப் ☑

ஈ) இராஜஸ்தான்

✓ பஞ்சாபின் கலால் துறை 2020ஆம் ஆண்டில் 'ஆபரேஷன் ரெட் ரோஸ்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது சட்டவிரோத மதுபான வர்த்தகம் மற்றும் கலால் தொடர்பான குற்றங்களைத் தடுக்கிறது.

✓ சமீபகாலமாக, குளோபல் பொசிஷனிங் சிஸ்டம் (ஜிபிஎஸ்) தொழில்நுட்பம் போன்ற துல்லியமான கண்காணிப்பு அமைப்புகளைப் பயன்படுத்தி, சட்டவிரோதமாக மதுபானம் கடத்தப்படுவதை இது தடுத்து வருகிறது.

---

7. "ஆப்ஸ்கேல் அகாடமி" என்பது MeitY ஸ்டார்ட்அப் ஹப்புடன் இணைந்து பின்வரும் எத்தொழில்நுட்ப நிறுவனத்தால் எடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும்?

அ) யாஹூ

ஆ) முகநூல்

இ) ட்விட்டர்

ஈ) கூகிள் ☑

✓ தொழில்நுட்ப நிறுவனமான கூகுள், MeitY ஸ்டார்ட்அப் ஹப் உடன் இணைந்து, 'Appscale Academy'ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது உயர் தர செயலிகளை உருவாக்குவதற்கு இந்திய துளிர் நிறுவனங்களுக்கு உதவுவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. கூகுளின் இந்த முன்முயற்சி ஆனது, இந்தியாவிலுள்ள தொடக்க மற்றும் இடைநிலை துளிர் நிறுவன –ங்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் மற்றும் கேமிங், கல்வி, சமூக பாதிப்பு, சுகாதாரப் பாதுகாப்பு போன்ற களங்களில் செயலிகளை உருவாக்க அவர்களுக்கு ஆதரவளிக்கும்.

---

8. ஐநா பொதுச்சபையானது 2021ஆம் ஆண்டை எந்த ஆண்டாக அறிவித்துள்ளது?

அ) பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச ஆண்டு

ஆ) சர்வதேச சுகாதார ஆண்டு

இ) COVID'க்கு எதிரான சர்வதேச ஆண்டு

ஈ) பழங்கள் மற்றும் காய்கறிகளின் சர்வதேச ஆண்டு ☑

✓ ஐநா பொதுச்சபையானது நடப்பு 2021ஆம் ஆண்டை பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கான சர்வதேச ஆண்டாக அறிவித்துள்ளது, உணவு மற்றும் உழவு அமைப்பு (FAO), இந்த ஆண்டைக் கொண்டாடுவதற்கான முதன்மை நிறுவனமாக உள்ளது. இந்த ஆண்டு மனித ஊட்டச்சத்திலும், உணவுப் பாதுகாப்பிலும் பழங்கள் மற்றும் காய்கறிகளின் பங்கு பற்றிய விழிப்புணர்வை பரப்ப ஐநா முயற்சி செய்கிறது.

9. குஷாக்ரா ராவத் மற்றும் ஸ்ரீஹரி நடராஜ் ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) மட்டைப்பந்து

ஆ) கோல்ப்

இ) வில்வித்தை



ஈ) நீர்சார் விளையாட்டுக்கள் ☑

✓ தில்லியைச் சேர்ந்த குஷாக்ரா ராவத் மற்றும் கர்நாடகாவின் ஸ்ரீஹரி நடராஜ் ஆகியோர் 74ஆம் சீனியர் தேசிய அக்வாடிக் சாம்பியன்ஷிப்பில் முறையே 400மீ பிரீஸ்டைல் மற்றும் 100மீ பேக்ஸ்ட்ரோக் போட்டிகளில் புதிய தேசிய சாதனைகளை படைத்துள்ளனர். குஷுக்ரா ராவத் 3:53.68 வினாடிகளில் புதிய சாதனையை படைத்துள்ளார். அதே நேரத்தில் ஸ்ரீஹரி நடராஜ் 100மீ பேக் ஸ்ட்ரோக்கை 55.10 வினாடிகளில் முடித்தார்.

---

10. போதைப்பொருள் & குற்றங்களுக்கான ஐநா அலுவலகத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

அ) ஆஸ்திரியா ☑

ஆ) அமெரிக்கா

இ) ஜெர்மனி

ஈ) ஹங்கேரி

✓ போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐநா அலுவலகம் (UNODC) கடந்த 1997ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவின் வியன்னாவை தலைமையிடமாகக்கொண்டு நிறுவப்பட்டது. பாதுகாப்பு அவையின் பயங்கரவாத எதிர்ப்பு குழுவின் நிர்வாக இயக்குநரகத்துடன் இணைந்து தரவு வெளிப்படுத்தல் கட்டமைப்பை (DDF) அறிமுகப்படுத்தியதை அடுத்து, இந்நிறுவனம் சமீபத்திய செய்திகளில் இடம்பெற்றது.

✓ DDF என்பது பயங்கரவாத எதிர்ப்பு விசாரணைகளுக்காக வெளிநாட்டு குற்றவியல் நீதி அதிகாரிகளின் தரவு கோரிக்கைகளைக் கையாளவும் பதிலளிக்கவும் உருவாக்கப்பட்ட நடைமுறைகளை விவரிக்கும் ஒரு கருவியாகும்.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சேதி தெரியுமா?

அக்.23: தமிழகத்தில் கல்வி, வேலைவாய்ப்பில் சமூக நீதி சரியான முறையில் அமல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க சமூக நீதி கண்காணிப்புக் குழுவை தமிழக அரசு அமைத்தது.

அக்.23: தமிழக ரேஷன் கடைகளில் 'கற்பகம்' என்கிற பெயரில் பனை வெல்லம் விற்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

அக்.24: பிகாரின் ஜெய்நகர் – நேபாளம் குர்தா வரையிலான ரயில் இணைப்புப் பாதையை நேபாள அரசிடம் இந்திய அரசு ஒப்படைத்தது.

அக்.25: இந்திய சினிமா கலைஞர் களுக்கு வழங்கப்படும் உயரிய தாதா சாகேப் பால்கே விருது நடிகர் ரஜினிகாந்துக்கு வழங்கப்பட்டது.

அக்.26: ஐபிஎல் கிரிக்கெட்டில் அகமதாபாத் மற்றும் லக்னோ நகரங்களை மையமாகக் கொண்டு இரு புதிய அணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் IPL அணிகளின் எண்ணிக்கை 10-ஆக அதிகரித்துள்ளது.

அக்.27: நிலம் விட்டு நிலம் பாயும் 'அக்னி-5' என்ற ஏவுகணை ஒடிஷா மாநிலம் கலாம் தீவிலிருந்து வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

அக்.28: விழுப்புரம் மாவட்டம் முதலியார்குப்பத்தில் இல்லம் தேடி கல்வித் திட்டத்தை தமிழக அரசு தொடங்கியது.

அக்.29: பேரியம் கலந்து தயாரிக்கப்படும் பட்டாசுகளைத் தயாரிக்கவும் விற்கவும் உச்ச நீதிமன்றம் தடை விதித்தது.

அக்.29: இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

அக்.30: ஆண்டுதோறும் ஜூலை 18 அன்று தமிழ்நாடு தினம் கொண்டாட விரைவில் அரசாணை வெளியிடப்படும் என்று முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்தார்.

---

2. சென்னையில் வானிலை ஆய்வு மையத்தின் புதிய ரேடார் செயல்படத் தொடங்கியது

சென்னையில் வானிலை ஆய்வு மையத்தின் புதிய ரேடார் பள்ளிக்கரணையில் நேற்று செயல்படத் தொடங்கியது.

மழை மேகங்களின் தன்மை, நகர்வு, மழை அளவு போன்றவற்றை ரேடார் மூலம் கிடைக்கும் தரவுகள் மூலம் சென்னை வானிலை ஆய்வு மையம் கணித்து வருகிறது. ரேடார்களில் இருந்து செலுத்தப்படும் மின் காந்த அலைகள் மூலமாகக் கிடைக்கும் தரவுகளைக் கொண்டு, குறுகியகால வானிலை முன்னறிவிப்பு, நிகழ்நேர மழை நிலவரம் போன்றவற்றை ஆய்வு மையத்தால் வழங்க முடியும்.

இது தொடர்பான ரேடார் படங்கள் http://www.imdchennai.gov.in/ என்ற இணையதளம் மூலம் வழங்கப்படுகின்றன. இணையதள சேவை மற்றும் சமூக ஊடங்கள் வருகையால், வானிலை ஆய்வு மையம் வெளியிடும் ரேடார் படங்களை, தன்னார்வ அடிப்படையில் வானிலையைக் கணிக்கும் ஆர்வலர்கள் பயன்படுத்தி, வானிலை நிலவரங்களை முகநூல், ட்விட்டர், யூடியூப் போன்றவற்றில் வெளியிடத் தொடங்கினர். இது மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது. மேலும், இணையதளத்தில் ரேடார் படங்களை மக்களே நேரடியாகப் பார்வையிட்டு, நிகழ்நேரவானிலையை தெரிந்துகொள் வதில் ஆர்வம் காட்டினர்.

பழுதடைந்த ரேடார்

சென்னை துறைமுகக் கட்டிடத்தில் செயல்பட்டு வந்த ரேடார் 2018-ல் பழுதடைந்தது. அதற்கான உதிரி பாகங்கள் கிடைக்காததால், பழுது நீக்குவதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் மக்கள் நேரடியாக நிகழ்நேர மழை நிலவரத்தை அறியமுடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து இந்திய வானிலை ஆய்வு மைய தென் மண்டலத் தலைவர் எஸ் பாலச்சந்திரனிடம் கூறியதாவது: பழுதாகியுள்ள ரேடார் விரைவில் சீரமைக்கப்பட்டு, பயன்பாட்டுக்கு வரும். இதற்கிடையில், பள்ளிக்கரணையில் உள்ள இந்திய பெருங்கடல் சார் தொழில்நுட்ப நிறுவன (NIOT) வளாகத்தில் புதிய ரேடார் நிறுவப்பட்டுள்ளது. இது நேற்று முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. அதன் படங்கள் தற்போது வானிலை ஆய்வு மைய இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றைப் பொதுமக்கள் பார்வையிடலாம்.

பழைய ரேடார் பழுதால் வானிலை கணிப்பில் எந்த சிக்கலும் ஏற்படவில்லை. • ஸ்ரீஹரிகோட்டா, திருவனந்தபுரத்தில் இயங்கும் ISRO ரேடார்கள், காரைக்காலில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மைய ரேடார் ஆகியவற்றின் தரவுகளைப் பயன்படுத்தி வருகிறோம்.

நிகழ்நேர மழை நிலவரக் கணிப்பு ரேடார் தரவுகள் அடிப்படையில் மட்டுமின்றி, செயற்கைக்கோள் புகைப்படம், பலூன் மூலம் பறக்க விடப்படும் கருவி உள்ளிட்ட பல்வேறு வழிகளில் கிடைக்கும் தரவுகள் அடிப்படையில்தான் கணிக்கப்படுகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

---

3. அக்.31 – தேசிய ஒற்றுமை நாள்

---

4. காஷ்மீர் தால் ஏரியில் மிதக்கும் திறந்தவெளி திரையரங்கம் தொடக்கம்

காஷ்மீரின் தால் ஏரியில் இருக்கும் படகு வீடுகள் உலகப் புகழ்பெற்றவை. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் படகு வீடுகளில் தங்கி இயற்கை அழகை ரசிக்க தவறுவதில்லை. இந்நிலையில் தால் ஏரியில் உள்ள ஒரு படகு வீட்டில் திறந்தவெளி திரையரங்கை உருவாக்கியுள்ளனர். காஷ்மீரிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்ட மிதக்கும் திறந்தவெளி திரையரங்கம் இதுதான். ஜம்மு-காஷ்மீர் தலைமைச் செயலர் அருண் குமார் மேத்தா அண்மையில் இதை தொடங்கி வைத்தார். முதல் நாளில் இந்திப்படமான காஷ்மீர் கி காளி திரைப்படம் சுற்றுலாப் பயணிகளுக்கா -கவும், தால் ஏரி பகுதி மக்களுக்காகவும் திரையிடப்பட்டது.

---

5. இல்லம் தேடி கல்வி திட்டம்: சிறப்புப் பணி அதிகாரியாக கே இளம் பகவத் நியமனம்

இல்லம் தேடி கல்வி திட்டத்தின் சிறப்புப் பணி அதிகாரியாக கே இளம் பகவத் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழகத்தில் கற்றல் இடைவெளியை குறைப்பதற்காக இல்லம் தேடி கல்வித் திட்டத்தை தமிழக அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

---

6. கடலுக்கடியில் 6,000 மீட்டர் ஆழத்தில் கனிம ஆய்வு

இந்தியப் பெருங்கடலுக்கு அடியில் 6,000 மீ ஆழத்தில் கனிம ஆராய்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக சென்னை வந்துள்ள அமைச்சர் ஜிதேந்திர சிங், சென்னை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த தேசிய கடல்வளத் துறை தொழில்நுட்பக் கழகத்துக்கு சொந்தமான 'சாகர் நிதி' எனும் கப்பலை பார்வையிட்டார். அப்போது கப்பலின் தொழில்நுட்ப வசதிகளை அவர் ஆய்வு செய்தார். ஆழ்கடல் ஆராய்ச்சிக்கு மனிதர்களை அழைத்துச் செல்வதற்காக உருவாக்கப்பட்ட 'மத்யாஸா' என்ற கலன், அக் கப்பலில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. அதனையும் மத்திய அமைச்சர் ஆய்வு செய்தார்.

---

7. டேபிள் டென்னிஸ்: சத்தியன்/தேசாய் இணை சாம்பியன்

டுனீசியாவில் நடைபெற்ற உலக டேபிள் டென்னிஸ் கன்டெண்டர் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜி சத்தியன் / ஹர்மீத் தேசாய் இணை சாம்பியன் பட்டம் வென்றது. இது இந்த இணையின் முதல் சர்வதேச புரோ டூர் பட்டமாகும்.

இறுதிச்சுற்றில் சத்தியன்/ஹர்மீத் இணை 11–9, 4–11, 11–9, 11–6 என்ற செட் கணக்கில் பிரான்ஸின் இமானுவல் லெபெசான்/அலெக்ஸாண்ட்ரே காசின் இணையை தோற்கடித்தது.

---

8. சிட்டி யூனியன் வங்கிக்கு வரி வசூலிக்க அனுமதி

மத்திய அரசின் நேரடி வரிகள் வாரியம் மற்றும் மறைமுக வரிகள் வாரியத்தின் வரிகளை வசூலிக்க, சிட்டி யூனியன் வங்கிக்கு ரிசர்வ் வங்கி அங்கீகாரம் வழங்கி உள்ளது.

இதன்படி, மறைமுக வரிகள் வாரியத்தின் ஜி எஸ் டி – சுங்க வரி உட்பட, பல்வேறு மறைமுக வரிகளையும், நேரடி வரிகள் வாரியத்தின் வருமான வரியையும் சிட்டி யூனியன் வங்கி வாடிக்கையாளர்கள், அதன் வங்கி கிளைகளில் செலுத்தலாம்.

---

9. நவ.1 – உலக தாவர உணவு நாள்

---

10. INS விசாகப்பட்டினம் போர்க்கப்பல் நவ.18இல் நாட்டுக்கு அர்ப்பணிப்பு:

உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட அதிநவீன ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் போர்க்கப்பல் நவ.18 அன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. மும்பை மஸகான் கப்பல்கட்டும் தளத்தில் முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்துடன் INS விசாகப்பட்டினம் போர்க்கப்பல் தயாரிக்கப்பட்டு உள்ளது. 7,300 டன் எடை, 163 மீட்டர் நீளம் கொண்ட இந்த கப்பலில் 300 வீரர்கள் பணியாற்றுவார்கள்.

வான் இலக்கை தாக்கி அழிக்கும் ஏவுகணைகள், போர்க்கப்பல்களை தாக்கும் ஏவுகணைகள், நீர்மூழ்கிகளை தாக்கும் ஏவுகணைகள் கப்பலில் பொருத்தப்பட்டுள்ளன. இந்த போர்க்கப்பலால் ஒரே நேரத்தில் 32 வான் இலக்குகளை தாக்கி அழிக்க முடியும். அணு ஆயுத தாக்குதல், உயிரி ரசாயன தாக்குதல்களை சமாளிக்கும் தொழில்நுட்பங்கள் உள்ளன. 2 ஹெலிகாப்டர்களும் கப்பலில் நிறுத்தப்பட்டிருக்கும்.

நவ.18 அன்று மும்பையில் நடைபெறும் விழாவில் INS விசாகப்பட்டினம் போர்க்கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் விழாவுக்கு தலைமையேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் போர்க்கப்பலை தொடர்ந்து இந்த மாத இறுதியில் ஐஎன்எஸ் வேலா நீர்மூழ்கி கப்பல், கடற்படையில் சேர்க்கப்பட உள்ளது. புதிய போர்க்கப்பல், நீர்மூழ்கியால் கடற்படையின் பலம் மேலும் அதிகரிக்கும் என்று பாதுகாப்புத் துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

---

11. கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் நமாமி கங்கை திட்டம்

ஒரு மணி நேரத்தில் அதிக எண்ணிக்கையில், கையால் எழுதப்பட்ட குறிப்புகளின் படங்கள் பதிவிடப்பட்டதற்காக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் கங்கை தூய்மைக்கான தேசியத் திட்டம் (நமாமி கங்கை) இடம்பிடித்துள்ளது.

கங்கை நதித் திருவிழா திங்கள்கிழமை தொடங்கியது. அதையொட்டி, கங்கை தூய்மைக்கான தேசியத் திட்டத்தின்கீழ் சாதனை முயற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, கங்கை குறித்து கையால் எழுதப்பட்ட குறிப்புகளின் படங்களை ஒரு மணி நேரத்தில் ஃபேஸ்புக் சமூக வலைதளத்தில் பதிவிட ஏற்பாடு செய்யப்பட்டது.

அதில் பெரும்பாலானோர் கலந்துகொண்டு, கையால் எழுதப்பட்ட குறிப்புகளின் படங்களைப் பதிவிட்டனர். ஒரு மணி நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான படங்கள் பதிவிடப்பட்டதை கின்னஸ் அமைப்பு உலக சாதனையாக அறிவித்து சான்றிதழை வழங்கியது.

---

1. பொதுத்துறை தணிக்கையில் தகவல்களை பரிமாறிக்கொள்வதற்–காக, இந்தியா, எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ) இலங்கை

ஆ) சுவிச்சர்லாந்து

இ) மாலத்தீவுகள் ☑

ஈ) கெய்மன் தீவுகள்



✓ இந்திய தலைமை கணக்குத் தணிக்கையாளர் கிரிஷ் சந்திர முர்மு மற்றும் மாலத்தீவின் தலைமை கணக்குத் தணிக்கையாளர் ஹுசைன் நியாசி ஆகியோர் மாலேயில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழு–த்திட்டனர். இது இந்தியா மற்றும் மாலத்தீவுகளுக்கு இடையே பொதுத் துறை தணிக்கைதுறையில் தகவல்களை பரிமாறிக்கொள்வதை நோக்–கமாகக்கொண்டதாகும். நாடுகள் அந்தந்த நிறுவனங்களின் தொழிற் முறை திறனை வலுப்படுத்தவும், பொது நிதி தணிக்கை துறையில் முறைகளை மேம்படுத்தவும் முயற்சி செய்கின்றன.

---

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஷவ்கத் மிர்சியோயேவ், எந்த நாட்டின் அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்?

அ) ஆப்கானிஸ்தான்

ஆ) உஸ்பெகிஸ்தான் ☑

இ) சிரியா

ஈ) மாலத்தீவுகள்



✓ உஸ்பெகிஸ்தானின் அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவ், 2ஆவது 5 ஆண்டு காலத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். உஸ்பெகிஸ்தானின் மத்திய தேர்தல் ஆணையத்தின்படி, மிர்சியோயேவ் 80.1% வாக்குக –ளைப் பெற்று வெற்றி பெற்றார். 64 வயதான அவர், கடந்த 2016இல், உஸ்பெகிஸ்தானின் நீண்டகால அதிபராக இருந்த இஸ்லாம் கரிமோவ் இறந்ததைத்தொடர்ந்து அதிபராக பதவியேற்றார்.

---

3. ஐநா அவையின் ஆயுதக்குறைப்பு வாரமானது ஆண்டுதோறும் எந்த மாதத்தில் அனுசரிக்கப்படுகிறது?

அ) நவம்பர்

ஆ) அக்டோபர் ☑

இ) செப்டம்பர்

ஈ) ஆகஸ்ட்



✓ ஐநா அவையின் ஆயுதக்குறைப்பு வாரமானது ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டின் (2021) ஆயுதக்குறைப்பு வாரமானது அக்டோபர்.24 அன்று தொடங்கி அக்டோபர் 30 வரை நடைபெற்றது. இது நாடுகளில் நிராயுதபாணியாக்கம் பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சமூகத்தில் அமைதியைக் கொண்டுவர ஆயுதங்களைப் பயன்படுத்துவதை, குறிப்பாக அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைக் குறைப்பதே இந்த அனுசரிப்பின் நோக்கமாகும். ஐநா ஆயுதக்குறைப்பு ஆணையமானது 1952இல், ஐநா பாதுகாப்பு கவுன்சிலின்கீழ் அனைத்து பேரழிவு ஆயுதங்களையும் வழிப்பதற்காக உருவாக்கப்பட்டது.

---

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற இராணி ஹியோ ஹ்வாங்–ஓக் நினைவுப்பூங்கா அமைந்துள்ள நாடு எது?

அ) தென் கொரியா

ஆ) இந்தியா ☑

இ) சீனா

ஈ) தாய்லாந்து



✓ அயோத்தியில் சரயு நதிக்கரையில் அமைந்துள்ள ராம் கதா பூங்கா என்று முன்பு அழைக்கப்பட்ட பூங்கா, புதுப்பிக்கப்பட்டு வருகிறது. நவம்பர்.4ஆம் தேதி திறக்கப்பட்ட பிறகு, அந்தப் பூங்கா இராணி ஹியோ ஹ்வாங்–ஓக் நினைவுப்பூங்கா என்று அழைக்கப்படும். ஒரு கொரிய இராணியின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஒரு கொரிய இராணியான ஹியோ ஹ்வாங்–ஓக், அயோத்தி மன்னர் பத்மசென் மற்றும் இந்துமதி ஆகியோரின் மகளாகப் பிறந்த அயோத்தியின் இளவரசி சூரிரத்னா என நம்பப்படுகிறது. பத்மசென், கௌசலா இராச்சியத்தை ஆட்சி செய்தார். அது, இன்றைய உத்தரபிரதேசத்திலிருந்து ஒடிசா வரை பரவியிருந்தது.

---

5. சமீபத்தில் 'செல்வ வரி'யை முன்மொழிந்த நாடு எது?

அ) இந்தியா

ஆ) அமெரிக்கா ☑

இ) ரஷ்யா

ஈ) சுவிச்சர்லாந்து



✓ அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பெரிய நிறுவனங்கள் மற்றும் பணக்கார அமெரிக்கர்களின் வருமானத்தின் மீதான வழக்கமான முன்மொழியப்ப –ட்ட விகித உயர்வை அறிவித்துள்ளார், இது 'செல்வ வரி' போன்றது. $1 பில்லியனுக்கும் அதிகமான சொத்துக்கள் அல்லது $100 மில்லியனுக்கும் அதிகமான வருமானம் உள்ளவர்களுக்கு இந்தப் புதிய வரி மூன்று ஆண்டு காலத்திற்குப் பொருந்தும்.

---

6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மன்னார் வளைகுடா கடல் உயிர்க்கோள காப்பகம் அமைந்துள்ள மாவட்ட(ம்)ங்கள் எது/எவை?

அ) இராமநாதபுரம் & தூத்துக்குடி ☑

ஆ) திருநெல்வேலி

இ) சிவகங்கை & இராமநாதபுரம்

ஈ) கன்னியாகுமரி



✓ மன்னார் வளைகுடா கடல் உயிர்க்கோள காப்பகமானது, தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கு இடையே அமைந்துள்ள தீவுகள் மற்றும் அதனையொட்டிய பவளப்பாறைகளின் தொகுப்பாகும். ஆர்க்டிக் பகுதியிலிருந்து மன்னார் வளைகுடா கடல் உயிர்க்கோள காப்பகத்திற்கு ஆண்டுதோறும் பல பறவைகள் வலசை வருகின்றன. இப்பூங்காவிற்குள் உள்ள மனோலி தீவுகளில் ஒரு பெரிய பறவைக்கூட்டம் அண்மையில் காணப்பட்டது.

✓ அதில், ஆயிரக்கணக்கான ஆர்க்டிக் ஆலாக்கள் மற்றும் கடற்காகங்கள், நூற்றுக்கணக்கான நண்டுதின்னும் உப்புக்கொத்திகள் அடங்கும்.

---

7. 'டிஜிட்டல் 2021: அக்டோபர் குளோபல் ஸ்னாப்ஷாட்'படி, கைபேசி பயன்படுத்துவோரின் சதவீதம் எவ்வளவு?

அ) 45

ஆ) 65 ☑

இ) 75

ஈ) 80

✓ 'We Are Social' என்ற ஆராய்ச்சி நிறுவனம் 'டிஜிட்டல் 2021: அக்டோபர் குளோபல் ஸ்னாப்ஷாட்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, உலக மக்கள்தொகையில் 65%'க்கும் அதிகமானோர் கைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

✓ உலகளாவிய கைபேசி பயனர்கள் எண்ணிக்கை அக்டோபரில் 5.29 பில்லியனை எட்டியுள்ளது. 2022ஆம் ஆண்டின் முதல் பாதியில் உலக மக்கள்தொகையில் 60% பேர் சமூக ஊடக பயனர்களாக வாய்ப்புள்ளது என இவ்வறிக்கை கூறுகிறது.

---

8. தடுப்பூசியை செலுத்துவதை அதிகரிப்பதற்காக, பின்வரும் எந்த நாடு 'Knock Every Door' என்ற திட்டத்தைத் தொடங்கவுள்ளது?

அ) சீனா

ஆ) இந்தியா ☑

இ) இந்தோனேசியா

ஈ) அமெரிக்கா



✓ இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, தடுப்பூசி செலுத்து விகிதங்கள் குறைவாக உள்ள மாவட்டங்களில் 'வீடு தேடிச்சென்று தடுப்பூசி செலுத்தும்' திட்டம் விரைவில் தொடங்க திட்டமிட –ப்பட்டுள்ளது. தடுப்பூசி போடுவதற்கு மக்களை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. சுகாதார அமைச்சகத்தின் கூற்றுப்படி, நாட்டில் 10.34 கோடிக்கும் அதிகமான மக்கள் COVID–19 தடுப்பூசியின் இரண்டாவது டோஸை செலுத்தாமல் உள்ளனர்.

9. இந்திய தலைமைத் தேர்தலாணையர் சுஷில் சந்திரா, சமீபத்தில் எந்த நாட்டின் அதிபர் தேர்தலை மேற்பார்வையிட்டார்?

அ) சிங்கப்பூர்



ஆ) உஸ்பெகிஸ்தான் ☑

இ) இலங்கை

ஈ) தாய்லாந்து

- ✓ உஸ்பெகிஸ்தானின் அதிபர் தேர்தலை மேற்பார்வையிட இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா தலைமையில் 3 பேர் கொண்ட குழு ஒன்று உஸ்பெகிஸ்தானுக்குச் சென்றது. இந்த இந்திய அணி, சர்வதேச பார்வையாளராக தேர்தலை மேற்பார்வையிட்டுள்ளது.
- ✓ உஸ்பெகிஸ்தானின் அதிபர் ஷவ்கத் மிர்சியோயேவ் தேர்தலில் 80%'க்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று 2ஆவது ஐந்தாண்டு காலத்திற்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். சுஷில் சந்திரா மற்றும் ஜைனிதின் நிஜாம்கோட்ஜேவ் தலைமையிலான உஸ்பெகிஸ்தானிய தேர்தல் ஆணையம் தேர்தல் ஒத்துழைப்பு குறித்த கூட்டத்தை நடத்தியது.

---

10. 2021 – பொது விவகாரங்கள் குறியீட்டில் முதலிடம் பிடித்துள்ள இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா ☑

இ) தெலுங்கானா

ஈ) குஜராத்

- ✓ பெங்களூருவைச் சார்ந்த ஒரு இலாபநோக்கற்ற மதியுரையகமான பொது விவகாரங்கள் மையமானது ஒவ்வோர் ஆண்டும் பொது விவகாரங்கள் குறியீட்டை வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டு (2021) பொது விவகாரங்கள் குறியீட்டில் (PAI 2021), கேரளா, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகியவை நிர்வாக செயல்திறனில் பதினெட்டு பெரிய மாநிலங்களுள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன.
- ✓ சமபங்கு, வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் மாநிலங்களுக்கு மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன. COVID–19 மீண்டெழு குறியீடானது முதன்முறையாக இந்த ஆண்டு (2021) குறியீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. சிக்கிம், கோவா மற்றும் மிசோரம் ஆகியவை சிறிய மாநிலங்களுள் முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன. புதுச்சேரி, ஜம்மு & காஷ்மீர் மற்றும் சண்டிகர் ஆகியவை யூனியன் பிரதேசங்களுள் முதல் மூன்று இடங்களில் உள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நீரஜ் சோப்ரா உள்பட 12 பேருக்கு கேல் ரத்னா விருது

டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற தடகள வீரர் நீரஜ் சோப்ரா உட்பட பன்னிரண்டு பேருக்கு தயான் சந்த் கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

ரவிக்குமார், லவ்லினா, ஸ்ரீஜேஷ், அவனி லேகரா, பிரமோத் பகத், மிதாலி ராஜ், மன்பிரீத் சிங், சுனில் சேத்ரிக்கு தயான் சந்த் கேல் ரத்னா விருது வழங்கப்படுகிறது.

விளையாட்டுத் துறையில் சிறப்பான பங்களிப்பை அளித்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. தயான் சந்த் கேல் ரத்னா விருது விளையாட்டுத் துறையில் வழங்கப்படும் மிக உயரிய விருதாகும்.

அர்ஜுனா விருது:

விளையாட்டுத் துறையில் சிறப்பான பங்களிப்பை அளித்த 35 தடகள வீரர்களுக்கு அர்ஜுனா விருது வழங்குவதற்கும் விளையாட்டு விருதுகள் குழு பரிந்துரை செய்துள்ளது. அதன்படி ஷிகர் தவான், வந்தனா கட்டாரியா, பவானி தேவி, அபிஷேக் வர்மா, தீபக் புனியா, ஹர்மன் பிரீத் சிங், மன்தீப் சிங், பவினா படேல், ஷரத் குமார், வருண் குமார் உள்பட 35 பேருக்கு விருது வழங்கப்படுகிறது.

இதேபோன்று வாழ்நாள் பிரிவில் 5 பயிற்சியாளர்கள் உள்பட 10 பேருக்கு துரோணாச்சார்யா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

---

2. ஆயுதமின்றி தனித்து போராடும் வகையில் தமிழக சிறைக் காவலர்களுக்கு 'க்ரவ் மேகா' தற்காப்பு பயிற்சி

சிறைவாசிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறைக் காவலர்களுக்கு ஆயுதமின்றி தனித்துப் போராடும் 'க்ரவ் மேகா' தற்காப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

சிறைச்சாலைகள் மற்றும் சீர்திருத்தப்பள்ளிகள் குற்றவியல் நீதியமைப்பு முறையின் முக்கிய கூறாக விளங்குகின்றன. நீதிமன்றங்கள் விதிக்கும் தண்டனைகளை நிறைவேற்றுவது, கைதிகளின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பது, மனித உரிமை மீறலுக்கு இடமில்லாமல் கண்ணியத்துடன் நடத்துவது, சீர்திருத்தம், மறுவாழ்வு, திறன்சார் பயிற்சிகள் அளித்து பொறுப்பான குடிமக்களாக அவர்களை மாற்றுதல்ஆகியவை சிறைச்சாலைகளின் பணிகளாக உள்ளன.

தமிழகத்தில் சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கீழ் 142 சிறைகள் உள்ளன. இதில் மத்திய சிறைச்சாலைகள் 9, பெண்களுக்கான தனிச்சிறைகள் 5, மாவட்ட சிறைச்சாலைகள் 14, ஆண்களுக்கான கிளைச் சிறைகள் 89, பெண்களுக்கான கிளைச் சிறைகள் 7, ஆண்களுக்கான தனி கிளைச் சிறை 1, பெண்களுக்கான தனி கிளைச் சிறைகள் 2, இளம் குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப் பள்ளிகள் 12 மற்றும் திறந்தவெளி சிறைச்சாலைகள் மூன்று ஆகியவை அடங்கும்.

இந்தச் சிறைகளில் 23,592 பேருக்கு இடவசதி உள்ளது. இவர்களை கண்காணித்து வழிநடத்த 5,452 சிறைத்துறைபணியாளர்கள் உள்ளனர். பொதுவாக சிறைச்சாலைகளில் மரண தண்டனை, ஆயுள் தண்டனை, 3 மாதங்களுக்கு மேல்தண்டனை பெற்றவர்கள், பெருங் குற்றங்களுக்காக தண்டனை விதிக்கப்பட்டவர்கள், கொடுங் குற்றவாளிகள், தொடர்ந்துகுற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள், சக கைதி –களுக்கு ஊறு விளைவிக்கக்கூடியவர்கள், கடன் வாங்கி திருப்பிச் செலுத்த முடியாமல் சிறைபடும் சிறைவாசிகள், தடுப்பு காவல் மற்றும் நீதிமன்ற காவல், விசாரணை சிறைவாசிகள் என வகைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

சிறைத்துறை நன்னடத்தை அலுவலர்கள், சிறைவாசிகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்குமிடையே ஒருஇணைப்பு பாலமாக செயல்படுகின்றனர். நுண்ணறிவு மற்றும் விழிப்புப்பணி பிரிவு சிறைக்குள் கிடைக்கும் நுண்ணறிவு தகவல்களை ரகசியமாக சேகரித்து இதர புலனாய்வு அமைப்புகளுக்கு பரிமாற்றம் செய்யும்.

நீதிமன்ற வழக்குகளை நிர்வகித்து, குற்ற வழக்குகளில் தகுந்த ஆலோசனை வழங்க சட்ட ஆலோசனைப் பிரிவும், சிறைக்குள் நவீன தொழில்நுட்பத்தை கையாள தொழில்நுட்ப பிரிவும் உள்ளது.

---

3. தீவிரவாதம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க காஷ்மீரில் புதிதாக மாநில புலனாய்வு அமைப்பு:

தீவிரவாதம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க ஜம்மு–காஷ்மீரில் புதிதாக மாநில புலனாய்வு அமைப்பு (எஸ்ஐஏ) அமைக்கப்பட்டுள்ளது.

ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள தீவிரவாதம் தொடர்பான வழக்குகளை, விவகாரங்களை எஸ்ஐஏ விசாரிக்கும். வழக்குகளை விரைந்து முடிக்கவும், திறமையான முறையில் வழக்குகளை விசாரிப்பதற்கும் இந்த எஸ்ஐஏ அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) உள்ளிட்ட இதர மத்திய புலனாய்வு அமைப்புகளுக்கும் இந்த எஸ்ஐஏ உதவியாக இருக்கும் என்று ஜம்மு–காஷ்மீர் யூனியன் பிரதேச அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜம்மு–காஷ்மீரின் குற்றப்பிரிவு விசாரணை அமைப்பின் (சிஐடி) தலைவரே, எஸ்ஐஏ அமைப்பின் இயக்குநராகவும் இருப்பார் என்றும் தெரியவந்துள்ளது. தீவிரவாதம் தொடர்பான வழக்குகளில் தேவைப்படும் தகவல்களை யூனியன்பிரதேசத்தில் உள்ள அனைத்து போலீஸ் நிலைய அதிகாரிகளும் எஸ்ஐஏ இயக்குநருக்குத் தரவேண்டும்.

மேலும் போலீஸ் டிஜிபிக்குத் தெரிவித்த பின்னர் தாமாகவே முன்வந்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யும் அதிகாரமும் எஸ்ஐஏவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

---

4. 2070-க்குள் பசுமைக்குடில் வாயு மாசு பூஜ்ஜியமாகும்: ஐ.நா. பருவ நிலை மாற்ற மாநாட்டில் பிரதமர் மோடி உறுதி

இந்தியாவில் வரும் 2070ஆம் ஆண்டுக்குள் பசுமைக் குடில் வாயுக்கள் மாசு பூஜ்ஜியமாகும் என்று ஐநா மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் ஐ.நா. பருவநிலை மாற்றமாநாடு கடந்த 31-ம் தேதி தொடங்கியது. இதில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் பங்கேற்றார். அவர் பேசியதாவது:

பருவநிலை மாற்றத்தால் இந்தியா போன்ற வளரும் நாடுகள் அதிகம் பாதிக்கப்படுகின்றன. பெரும்பாலான வளரும் நாடுகளில் பருவநிலை மாற்றம் விவசாயிகளுக்கு மிகப்பெரிய சவாலாக உருவெடுத்துள்ளது. பருவமழை பொய்ப்பது, அதிக மழைப்பொழிவு, வெள்ளம் மற்றும் புயல்களால் பயிர் சாகுபடி கடுமையாக பாதிக்கப்படுகிறது.

பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ப குடிநீர் ஆதாரம், வீடுகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை கட்டமைப்பது அவசியமாகிறது. இதன்படி இந்தியாவில் குழாய் குடிநீர் திட்டம், தூய்மை இந்தியாதிட்டம், ஏழைகளுக்கு இலவச சமையல் காஸ் இணைப்பு உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் இந்தியமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. இயற்கையோடு இணைந்து வாழும் அறிவை மக்கள் பெற்றுள்ளனர்.

5 வாக்குறுதிகள்

உலக மக்கள் தொகையில் 17 சதவீதம் பேர் இந்தியாவில் வசிக்கின்றனர். எனினும் சர்வதேச கரியமில வாயு வெளியேற்றத்தில் இந்தியா 5 சதவீதம் மட்டுமே பங்கு வகிக்கிறது. பாரிஸ் உடன்பாட்டை இந்தியா உறுதியுடன் பின்பற்றி வருகிறது. இதன்படி பருவநிலை மாற்றத்தை தடுக்க இந்தியா சார்பில் 5 வாக்குறுதிகளை அளிக்கிறேன்.

வரும் 2030-ம் ஆண்டுக்குள் 500 ஜிகாவாட் அளவுக்கு புதைபடிம எரிபொருள் அல்லாத வழிகளில் மின் உற்பத்தி திறன் பெருக்கப்படும். வரும் 2030-ம் ஆண்டுக்குள் இந்தியாவின் மின்சார தேவையில் 50 சதவீதம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் பெறப்படும். இப்போது முதல் வரும் 2030-ம் ஆண்டுக்குள் கரியமிய வாயு வெளியேற்றம் 100 கோடி டன் அளவுக்கு குறைக்கப்படும்.

வரும் 2030-ம் ஆண்டுக்குள் இந்திய பொருளாதாரத்தில் கரியமில வாயு பங்களிப்பு 45% அளவுக்கு குறைக்கப்படும். இந்தியாவில் வரும் 2070-ம் ஆண்டுக்குள் பசுமைக் குடில் வாயு மாசு பூஜ்ஜியமாகும்.

கிளாஸ்கோ மாநாட்டில் எடுக்கப்படும் முடிவுகளால் எதிர்கால சந்ததியின-ருக்கு பாதுகாப்பான, வளமான எதிர்காலம் உறுதி செய்யப்படும். இவ்-வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

---

5. குஜராத் முதல் அருணாச்சல பிரதேசம் வரை 3,800 கி.மீ. தூரத்தை 9 நாளில் சைக்கிளில் பயணித்து கின்னஸ் சாதனை படைத்த ராணுவ அதிகாரி

குஜராத் முதல் அருணாச்சல பிரதேசம் வரை சைக்கிளில் குறுகிய நாட்களில் பயணம் செய்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார் ராணுவ அதிகாரி. இந்திய ராணுவத்தின் எலக்ட்ரானிக்ஸ் அன்ட் மெக்கானிக்கல் இன்ஜினீயர் பிரிவில் லெப்டினன்ட் கர்னலாக பணியாற்றி வருபவர் பாரத் பன்னு. இவர் அண்மையில் குஜராத் முதல் அருணாச்சல பிரதேசம் வரையிலான 3,800 கிமீட்டர் தூரத்தை வேகமாகக் கடந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

இந்தத் தூரத்தை கடக்க அவர் 9 நாட்கள், 7 மணி நேரம், 5 நிமிடங்கள் மட்டுமே எடுத்துக் கொண்டுள்ளார். இதையடுத்து இவரது பெயர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறவுள்ளது.

---

6. நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 10%: நீதி ஆயோக்

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 10 சதவீதமாக இருக்கும் என NITI ஆயோக் துணைத்தலைவர் ராஜீவ் தெரிவித்தார். புது தில்லியில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

பன்னாட்டு நிதியம் 2021 இல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.5 சதவீதமாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது. பன்னாட்டு நிதிய கூற்றுப்படி அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியா வேகமாக பொருளாதாரமாக மாறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இது குறைவான மதிப்பீடாகும்.

நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 10 சதவீதத்துக்கும் கூடுதலாகவே இருக்கும். 2022-23'இல் இந்த வளர்ச்சி 8 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும் என்றார் அவர்.

---

7. கிராண்ட் ஸ்விஸ் செஸ்: சசிகிரண் வெற்றி

லாத்வியாவில் நடைபெறும் ஃபிடே கிராண்ட் ஸ்விஸ் செஸ் போட்டியில் இந்திய கிராண்ட்மாஸ்டர் கே சசிகிரண் 6ஆவது சுற்றில் வெற்றி பெற்றார். இதையடுத்து தற்போதைய நிலையில் போட்டியின் முதலிடம், அவர் உள்பட 5 பேரால் பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ளது. சசிகிரண் 6ஆவது சுற்றில் ரஷியாவின் அலெக்ஸாண்டர் பிரெட்கேவை 53 நகர்வுகளில் தோற்கடித்தார். அடுத்த சுற்றில் அவர் பிரான்ஸின் மேக்ஸிம் வச்சியர் லாக்ரேவை எதிர்கொள்கிறார்.

இதர ஆடவர்களில் நிஹல் சரின் – செக் குடியரசின் டேவிட் நவாராவை தோற்கடித்து 2ஆவது இடத்தில் இருக்கிறார். பி ஹரிகிருஷ்ணா – ஜெர்மனியின் மதியாஸ் புளுபௌமுடன் டிரா செய்தார். இந்தியர்கள் இருவர் மோதிக்கொண்ட ஒரு சுற்றில் ரௌனக் சந்த்வானி – டி குகேஷிடம் தோல்விகண்டார். பிரக்னானந்தா – ரஷியாவின் அலெக்ஸாசரானாவிடமும், எஸ் பி சேதுராமன் – ரஷியாவின் ஆன்டன் டெம்சென்-கோவிடமும் தோல்வி கண்டனர். மகளிர் பிரிவில் துரோணவள்ளி ஹரிகா – ஜார்ஜியாவின் நினோ பாசிலாஷ்விலியுடன் டிரா செய்தார். அதேபோல், வைஷாலியும் டிரா செய்ய, வந்திகா அகர்வால், பத்மினி ரௌத், திவ்யா தேஷ்முக் ஆகியோர் தோல்வியை சந்தித்தனர்.

---

8. உலகின் சிறந்த விஞ்ஞானிகள் பட்டியல்: காந்திகிராம கிராமியப் பல்கலை. பேராசிரியர்கள் 5 பேர் இடம்

உலகின் 2% சிறந்த விஞ்ஞானிகள் பட்டியலில் காந்திகிராம கிராமிய நிகநிலைப் பல்கலையைச்சேர்ந்த 5 விஞ்ஞானிகள் இடம்பெற்றுள்ளனர். இதுதொடர்பாக காந்திகிராம கிராமியப் பல்கலை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

உலகத்தரம் வாய்ந்த ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகளின் ஆய்வுக்கட்டுரைகள், அதற்கான மேற்கோள்கள் தரப்படுத்தப்பட்ட ஒரு கூட்டுக்குறிகாட்டி மூலமாக ஓராண்டு கால தாக்கத்துக்கு வகைப்படுத்தப்பட்டது. மேலும், மேற்கோள்கள் இல்லாத அளவீடுகள், மேற்கோள் தாள்கள் விகிதம் ஆகியவற்றின் மூலமாக 22 அறிவியல் துறைகள் மற்றும் 126 துணைத் துறைகளில் விஞ்ஞானிகள் வகைப்படு-த்தப்பட்டிருந்தனர். குறைந்தபட்சம் ஐந்து கட்டுரைகளை வெளியிட்ட அனைத்து விஞ்ஞானிகளும், புலன் மற்றும் துணைபுலம் சார்ந்த சதவீதங்களின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டனர்.

இதில், காந்திகிராம கிராமிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ப. பாலசுப்பிரமணியம் (கணிதத் துறை), எஸ் ஆபிரகாம் ஜான் மற்றும் எஸ் மீனாட்சி (வேதியல் துறை) ஆகிய 3 பேரும் தொழில் மற்றும் நீண்ட தாக்கத்துக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், ஓராண்டு தாக்கத்துக்கான பட்டியலில், விஞ்ஞானிகள் எஸ். மீனாட்சி மற்றும் ப. பாலசுப்பிரமணியம் ஆகியோருடன், சேதுராமன் (வேதியியல் துறை), கே மாரிமுத்து (இயற்பியல் துறை) ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட உலகின் 2 சதவீத சிறந்த விஞ்ஞானிகள் பட்டியலிலும், இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ப பாலசுப்ரமணியம், கே ராமச்சந்திரன், எம் ஜி சேதுராமன், எஸ் மீனாட்சி, எஸ் ஆபிரகாம் ஜான், கே மாரிமுத்து மற்றும் ஜி சிவராமன் ஆகிய 7 பேர் இடம் பெற்றிருந்தனர்.

தற்போது இரண்டாவது முறையாக ப பாலசுப்பிரமணியம், எஸ் மீனாட்சி, எஸ் ஆபிரகாம் ஜான், கே மாரிமுத்து, எம் ஜி சேதுராமன் ஆகிய 5 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

9. கிளாஸ்கோ பருவ நிலை மாற்ற மாநாடு; பேசுவதை நிறுத்திவிட்டு செயலில் இறங்குங்கள்: உலக தலைவர்களுக்கு தமிழக சிறுமி கோரிக்கை

கிளாஸ்கோவில் நடைபெற்ற பருவ நிலை மாற்ற மாநாட்டில் பேசிய தமிழக சிறுமி வினிசா உமாசங்கர் "சுற்றுச்சூழல் விவகாரத்தில் உலகத் தலைவர்கள் பேசுவதை நிறுத்திவிட்டு செயலில் இறங்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

உலகத்தலைவர்கள் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத-தால் இன்றைய தலைமுறையினர் கோபத்திலும் விரக்தியிலும்

உள்ளனர் என்று அந்தச் சிறுமி பேசியது உலக அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்ற பருவநிலை மாற்ற மாநாட்டில் தூய்மை தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசுவதற்கு தமிழகத்தின் திருவண்ணா மலை மாவட்டத்தைச் சேர்ந்த பதினான்கு வயதான சிறுமி வினிஷா உமாசங்கருக்கு இளவரசர் வில்லியம்ஸ் அழைப்பு விடுத்திருந்தார். இவர் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் சூரிய சக்தி மூலம் இயங்கும் இஸ்திரி வண்டியை வடிவமைத்தற்காக சுற்றுச்சூழலுக்கான ஆஸ்கார் எனப்படும் 'எர்த்ஷாட்' விருதுக்குத் தேர்வானவர் ஆவார்.

இந்தியப் பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் பைடன் உட்பட 100'க்கும் மேற்பட்ட உலகத்தலைவர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் வினிஷா ஆற்றிய உரையில் கூறியதாவது:

உலகத் தலைவர்கள் அனைவரிடமும் மரியாதையுடன் கேட்டுக் கொள்கிறேன். பேசுவதை நிறுத்திவிட்டு செயலில் இறங்குங்கள். புதைப் படிவ எரிபொருள்கள், புகை மற்றும் மாசுபட்ட சூழல் ஆகியவற்றில் கட்டமைக்கப்பட்ட பொருளாதாரத் துக்குப் பதிலாக சுற்றுச் சூழலுக்கு உகந்த கண்டுபிடிப்புகள், திட்டங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இந்த விவகாரத்தில் பழைய விவாதங்களையே தொடராமல் எதிர்காலத்துக்கான புதிய சிந்தனையை முன்னெடுக்க வேண்டும்.

எர்த்ஷாட் விருது பெற்றவர்கள் மற்றும் தேர்வானவர்களின் கண்டுபிடிப்புகள், முயற்சிகளுக்கு உதவ வேண்டும். உங்களுடைய நேரம், பணம் மற்றும் முயற்சி ஆகியவற்றை வளமான எதிர்காலத்தை உருவாக்க எங்களிடம் முதலீடு செய்ய வேண்டும்.

அதேசமயம் தெளிவாக சொல்கிறேன். நீங்கள் செயல்பட தாமதமானாலும், எங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை என்றாலும் நாங்கள் நிறுத்த மாட்டோம், தொடர்ந்து பயணிப்போம். நீங்கள் கடந்த காலத்திலேயே முடங்கியிருந்தால் நாங்கள் எதிர்காலத்தை உருவாக்குவதை நோக்கி நகர்ந்துகொண்டே இருப்போம். ஆனால் தயவுசெய்து என்னுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன், அதற்காக ஒருபோதும் நீங்கள் வருந்தும்படி ஆகாது. உலகத் தலைவர்கள் தாங்கள் அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் இன்றைய தலைமுறையினர் பெரும் கோபத்திலும், விரக்தியிலும் உள்ளனர். எங்களுடைய கோபத் –தை வெளிப்படுத்த காரணங்களும் உரிமையும் உள்ளது. ஆனால் எங்களுக்கு இப்போது கோபம் கொள்ள நேரமில்லை. அதைவிட முக்கியமானது செயலாற்றுவதுதான். நான் இந்தியாவை சேர்ந்த பெண் மட்டுமல்ல. இந்த பூமியைச் சேர்ந்த பெண்ணும் கூட என்றே கருதுகிறேன். அதற்காக நான் பெருமைப்படுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

10. எழும்பூர் காவல் கட்டுப்பாட்டறைக்கு ஐஎஸ்ஓ சான்றிதழ்: டிஜிபியிடம் வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை எழும்பூர் மாநில காவல் கட்டுப்பாட்டறைக்கு வழங்கப்பட்டுள்ள ஐஎஸ்ஓ சர்வதேச தரச்சான்றிதழை தமிழக டிஜிபி சைலேந்திரபாபுவிடம் முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவ –து:

அவசர கால உதவி எண்கள்

சென்னை எழும்பூரில் அமைந்துள்ள மாநில காவல் கட்டுப்பாட்டு அறையில், அவசர கால உதவி எண்கள் 100, 112, 101 அழைப்புகள் கையாளப்படுகின்றன. இது நவீனஒருங்கிணைந்த தரவு தளம் மற்றும் இதர தொழில்நுட்ப கட்டமைப்புகளுடன் நிறுவப்பட்டுள்ளது. இந்த நவீன ஒருங்கிணைந்த தரவு தளத்தில் இதுநாள் வரை ₹1.12 கோடி அவசர கால அழைப்பு விவரங்கள் மற்றும் 14.5 லட்சம் 'காவலன்' செயலி பயன்படுத்துவோரின் தகவல்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நவீன ஒருங்கிணைந்த தரவு தளத்தின் தகவல்கள் பாதுகாப்பு அமைப்புக்கு பிரிட்டீஷ்ஸ்டாண்டர்ட்ஸ் இன்ஸ்டிடியூஷனால் ஐஎஸ்ஓ 27001:2013 சர்வதேச தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே முதல்முறையாக தமிழ்நாடு வனத்துறையின் மாநில காவல் கட்டுப்பாட்ட –றையின் செயல்பாட்டுக்கு இந்த தரச்சான்று பெறப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

11. போலீஸாருக்கு வாரத்தில் ஒருநாள் ஓய்வு: முதல்வர் உத்தரவு

தமிழக காவலர்கள் அனைவருக்கும் வாரத்தில் ஒருநாள் ஓய்வு வழங்க முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அலுவலகம் வெளியிட்ட செய்தியில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தமிழ்நாடு சட்டப்பேரவையில், கடந்த 13–9–2021 அன்று நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில், 'காவலர்கள் தங்கள் உடல் நலனைப் பேணிக் காத்திட ஏதுவாகவும், தங்களது குடும்பத்தாருடன் போதிய நேரம் செலவிடுவதற்காகவும், இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல், தலைமைக் காவலர் வரையிலான காவலர்கள் அனைவருக்கும் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு வழங்கப்படும்' என்று அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, காவலர்கள் தங்கள் உடல்நலனைப் பேணிக்காத்திட ஏதுவாகவும், தங்களது குடும்பத்தாருடன் போதிய நேரம் செலவிடுவதற்காகவும், இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல், தலைமைக்காவலர் வரையிலான காவலர்க –ள் அனைவருக்கும் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் 3–11–2021 அன்று உத்தரவிட்டுள்ளார்கள். அதற்கான அரசாணை இன்றைய தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பு, காவல் பணியில் இடையறாது ஈடுபட்டு, சவாலான பணிகளை எதிர்கொள்ளும் காவலர்களுக்கு அருமருந்தாக விளங்குவதோடு, புத்துணர்ச்சியோடும், உற்சாகத்தோடும் தங்கள் பணியினை அவர்கள் மேற்கொள்ள வழிவகுக்கும்.

---

12. பாராலிம்பிக் வீரர் மாரியப்பன் தங்கவேலுவுக்கு அரசுப் பணி: ஆணையை வழங்கினார் முதல்வர் ஸ்டாலின்

பாராலிம்பிக் வீரர் மாரியப்பன் தங்கவேலுவுக்கு அரசுப் பணி ஒதுக்கி அதற்கான பணி ஆணையை முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார். தமிழ்நாடு காகித ஆலையில் மார்க்கெட்டிங் பிரிவில் மாரியப்பன் தங்கவேலுவுக்குத் துணை மேலாளர் பணி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற பாராலிம்பிக் போட்டியில், உயரம் தாண்டுதலில் தமிழகத்தின் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு வெள்ளிப் பதக்கம் வென்றார்.

---

13. மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய விருது: தமிழகத்தில் 6 பேர் தேர்வு

மாற்றுத் திறனாளிகள் உரிமையை ஊக்குவிப்பதற்கான தேசிய விருதுக்கு, தமிழகத்தைச் சேர்ந்த ஆறு பேர் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

ஐநா சபை பிரகடனத்தின் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் டிச., 3ம் தேதி, சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்நாளில், மாற்றுத் திறனாளிகளில் சிறந்த நபர்கள் மற்றும் அவர்களுக்கு சிறந்த சேவை வழங்கியவர்களுக்கு, மாநில மற்றும் மத்திய அரசுகள் விருது வழங்கி கவுரவிக்கின்றன. அந்த வகையில், 2020ம் ஆண்டுக்கான மாற்றுத் திறனாளிகள் உரிமைக்கான தேசிய விருதுக்கு, தமிழகத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள், ஆறு பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை வேளச்சேரியை சேர்ந்த வேங்கடகிருஷ்ணன், மந்தவெளியைச் சேர்ந்த ஜோதி, திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த ஏழுமலை, காஞ்சிபுரம் மாவட்டம், கானத்தூர் ரெட்டிகுப்பத்தைச் சேர்ந்த தினேஷ். மேலும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மானஷா தண்டபாணி, நாமக்கல் மாவட்டம் பேட்டப்பாளை யத்தை சேர்ந்த பிரபாகரன் ஆகியோர், தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

மாற்றுத் திறனாளிகள் உரிமையை ஊக்குவிப்பதில், சிறந்த மாநிலமாக தமிழகம்; சிறந்த மாவட்டமாக, சேலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. டிச., 3ம் தேதி டில்லியில் நடக்க உள்ள சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்ச்சியில், இவ்விருதுகள் மத்திய அரசால் வழங்கப்பட உள்ளன. இத்தகவலை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை செயலர் லால்வேனா தெரிவித்துள்ளார்.

---

14. இந்திய நிறுவனம் தயாரித்த – கோவாக்சின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு அனுமதி:

இந்தியாவின் பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த கோவாக்சின் தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு அவசரகால அனுமதி வழங்கி உள்ளது. கரோனா வைரஸைக் கட்டுப்படுத்த இந்தியாவில் கோவிஷீல் –டு, கோவாக்சின் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 107 கோடி பேருக்கும் அதிகமாக தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே கோவிஷீல்டு தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு அனுமதி அளித்திருந்தது. ஆனால், கோவாக்சினுக்கு மட்டும் அனுமதி வழங்கப்ப –டாமலிருந்தது. இதனால் கோவாக்சின்தடுப்பூசி செலுத்திக்கொண்டவர் கள் வெளிநாடுகளுக்கு செல்வதில் சிக்கல் நிலவியது. இந்நிலையில், கோவாக்சின் தடுப்பூசியை அவசரகால பயன்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு அனுமதித்துள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், "பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சின் தடுப்பூசிக்கு அவசர கால பயன்பாட்டுக்கான அனுமதி வழங்கப்படுகிறது. உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்துள்ள கோவிட் தொற்றுக்கு எதிரான தடுப்பூசிகள் பட்டியலில் கோவாக்சினும் சேர்க்கப்படுகிறது" எனக் கூறப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசி செலுத்திக்கொண்ட இந்தியர்கள் தடையின்றியும் தனிமைப் படுத்துதல் கெடுபிடி இன்றியும் இனி வெளிநாடுகளுக்குச் செல்லலாம். கோவாக்சின் கரோனாவுக்கு எதிராக 77.8% திறன் வாய்ந்தது ஆகும்.

---

15. இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக ராகுல் திராவிட் நியமனம்:

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் கேப்டன் ராகுல் திராவிட்டை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நியமித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) அறிவித்துள்ளது.

டி20உலகக் கோப்பைப் போட்டித் தொடர் முடிந்தபின், நியூஸிலாந்து தொடரிலிருந்து இந்திய அணிக்கு பயிற்சியாளர் பணியை திராவிட் கவனிக்க உள்ளார். 2023ஆம் ஆண்டு நடக்கும் 50 ஓவர்கள் உலகக் கோப்பைப் போட்டி வரை திராவிட் இந்திய அணிக்குப் பயிற்சியாளராக இருப்பார்.

---

16. ₹169.11 கோடி மதிப்பீட்டில் பள்ளிக் கட்டிடங்களை திறந்து வைத்து 3 கற்போர் மையங்களுக்கு மாநில எழுத்தறிவு விருது: முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்

தமிழக அரசு வெளியிட்ட அறிக்கை: நபார்டு திட்டத்தின் கீழ், திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, நாகப்பட்டிணம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சேலம், திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி, இராணிப்பேட்டை, வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள 65 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ₹114 கோடியே 88 லட்சத்து 52 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. இங்கு வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர், ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் அரியலூர், மதுரை, திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், திருவள்ளூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள 45 அரசு உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 9 உண்டு உறைவிடப் பள்ளிகளில் 49 கோடியே 24 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், கழிவறைகள் மற்றும் சுற்றுச்சுவர்.

சிவகங்கை மாவட்டம், செம்பனூர், மெய்யம்மை காசி அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறை கொண்ட கட்டடம், மாவட்ட கனிமவள நிதியிலிருந்து திருப்பூர் மாவட்டம், புக்கலம், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ₹55 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 வகுப்பறைக் கட்டடம், காஞ்சிபுரம் மாவட்டம், ஊரப் பாக்கத்தில் ரூ.63 லட்சத்து 27 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிளை நூலகம், மதுரை மாவட்டம் – அவணியாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ஆசிரியர் நலநிதியிலிருந்து ₹3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மதுரை ஆசிரியர் இல்லக் கட்டடம், என மொத்தம் ரூ.169 கோடியே 11 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கல்வித் துறை கட்டடங்களை திறந்து வைத்தார்.

மேலும், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 3 மாவட்டங் –களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3 கற்போர் மையங்களுக்கு மாநில எழுத்தறிவு விருதுகளை வழங்கினார்.

---

1. 'டீப் டைவ் ஆன்லைன் பயிற்சி திட்டத்தை' அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

அ) நிதி அமைச்சகம்

ஆ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஒரு வார கால 'டீப் டைவ் ஆன்லைன் பயிற்சி' திட்டத்தை ஏற்பாடு செய்கிறது.

✓ சைபர் சுரக்ஷித் பாரத் முன்முயற்சியின்கீழ், MeitY'இல் தேசிய மின் ஆளுகைப்பிரிவினால் இப்பயிற்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சைபர் விழிப்புணர்வுக்கான முதல் பொது–தனியார் கூட்டாண்மையாக, கடந்த 2018ஆம் ஆண்டில், சைபர் சுரக்ஷித் பாரத் முன்முயற்சியை MeitY அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டம் பல்வேறு அமைச்சகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் & வங்கிகளின் IT ஊழியர்களுடன் இணைந்து தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு (CISO) பயிற்சியளிக்கிறது.

---

2. பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் தலைவர் யார்?

அ) பிபேக் தேப்ராய் ☑



ஆ) ராகேஷ் மோகன்

இ) பூனம் குப்தா

ஈ) டி டி ராம் மோகன்

✓ பிரதமர் நரேந்திர மோடி தனது பொருளாதார ஆலோசனைக் குழுவை (EAC–PM) மறுசீரமைக்க ஒப்புதல் அளித்துள்ளார். இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைவர் பிபேக் தேப்ராய், இக்கவுன்சிலின் தலைவராக உள்ளார். ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் இராகேஷ் மோகன், ஐஐஎம் அகமதாபாத் பேராசிரியர் டி டி இராம் மோகன் மற்றும் என்சிஏஇஆர்'இன் டைரக்டர் ஜெனரல் பூனம் குப்தா ஆகியோர் ஏழு உறுப்பினர்களைக்கொண்ட இக்குழுவில் இணைந்த மூன்று புதிய உறுப்பினர்களாவர். 2 வருட காலத்திற்கு இப்புதிய ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தச் சபையின் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்கள் மீண்டும் தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

---

3. காலமுறையில், 'பைங்குடில் வாயு' குறித்த அறிக்கைத்தாளை வெளியிடுகிற நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) உலக வானிலை அமைப்பு ☑

இ) உணவு மற்றும் உழவு அமைப்பு

ஈ) NABARD

✓ சமீபத்திய 'பைங்குடில் வாயு – GHG' குறித்த அறிக்கைத்தாளை உலக வானிலை அமைப்பு வெளியிட்டுள்ளது. அறிக்கையின்படி, பைங்குடில் வாயு உமிழ்வுகளின் அதிகரித்து வரும் போக்கு, 2021'இல் தொடர்ந்தது.

✓ மூன்று முக்கிய GHG'களான கார்பன் டை ஆக்சைடு (CO_2), மீத்தேன் (CH_4) & நைட்ரஸ் ஆக்சைடு (N_2O) ஆகியவையும் அதிகரித்துள்ளதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2020'இல் இதன் செறிவு அதிகமாகியுள்ளது.


✓ தற்போதைய அளவிலேயே இந்த உமிழ்வு தொடர்ந்தால், சராசரி புவி வெப்பமடைதல் நிலை, பாரிஸ் ஒப்பந்தத்தின் உலகளாவிய வெப்பநிலை இலக்கைவிடவும் அதிகமாக இருக்கும்.

---

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'AY.4.2' என்பது ___?

அ) AI இயலி

ஆ) உருமாறிய கொரோனா வைரஸ் ☑



இ) விண்கலம்

ஈ) புறக்கோள்

✓ அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'AY.4.2' என்பது ஓர் 'உருமாறிய கொரோனா வைரஸ்' ஆகும். COVID–19 பரிணாம விளக்கப்படத்தின் கிளைகளுக்கு அவற்றின் தொடர்பை விளக்குவதற்காக கொடுக்கப்பட்ட பெயர்களாகும் இவை. எடின்பர்க் மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் குழுவான பாங்கோ நெட்வொர்க்கால் இத்திரிபுக –ள் கண்காணிக்கப்படுகின்றன. அவர்கள் திரிபுகளின் பாதுகாவலர்க –ளாக செயல்படுகிறார்கள் மற்றும் புதிய பெயர்களின் ஒதுக்கீட்டைக் கையாளுகிறார்கள். இந்த AY.4.2. திரிபானது இந்த ஆண்டு ஏப்ரலில் இருந்து அறியப்படுகிறது.

---

5. 'கூட்டு புள்ளியியல் வெளியீடு–2021 மற்றும் JSP ஸ்னாப்ஷாட் 2021' என்பது எந்தப் பிராந்திய சங்கத்தின் வெளியீடுகளாகும்?

அ) ஜி–20

ஆ) ஆசியான்

இ) பிரிக்ஸ் ☑

ஈ) பிம்ஸ்டெக்

✓ BRICS நாடுகளின் தேசிய புள்ளியியல் அலுவலகங்களின் தலைவர்களி –ன் கூட்டம் இந்தியா தலைமையில் மெய்நிகர் வடிவத்தில் நடந்தது.

✓ இந்தியாவின் தலைமை புள்ளியியல் நிபுணரும், புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் செயலாளருமானவர் இக்கூட்டத்திற்கு தலைமைதாங்கினார். சந்திப்பின்போது, BRICS நாடுகளுக்கான கூட்டு புள்ளியியல் வெளியீடு–2021 மற்றும் JSP–Snapshot–2021 ஆகியவை வெளியிடப்பட்டன. "நீடித்த வளர்ச்சி இலக்குகளைக் கண்காணிப்பதில் NSO'களின் முயற்சிகள்" என்பது இக்கூட்டத்தின் கருப்பொருளாகும்.

---

6. சமீப செய்திகளில் இடம்பெற்ற குக் ஜலசந்தி உள்ள நாடு எது?

அ) நியூசிலாந்து ☑



ஆ) யூகே

இ) ஆஸ்திரேலியா

ஈ) பிரான்ஸ்

✓ குக் ஜலசந்தியானது நியூசிலாந்தின் வடக்கு மற்றும் தெற்கு தீவுகளைப் பிரிக்கிறது. இது வடமேற்கில் உள்ள டாஸ்மான் கடலை தென்கிழக்கில் தெற்கு பசிபிக் பெருங்கடலுடன் இணைக்கிறது. சமீபத்தில், எலக்ட்ரிக் ஏர் நிறுவனத்தை நிறுவிய பிரீட்மேன், மின்சார விமானத்தின்மூலம் முதல் முறையாக ஜலசந்தியைக் கடந்தார். சுமார் 40 நிமிடம் இந்தப் பயணம் நீடித்தது. 101 ஆண்டுகளுக்கு மின், வழமையான விமானத்தின்மூலம் இந்த ஜலசந்தியை ஒருவர் கடந்திருந்தார்.

---

7. காலநிலை நடவடிக்கைகளில் சரிஒப்பை மதிப்பிடுவதற்காக இந்திய காலநிலை நிபுணர்களால் தொடங்கப்பட்ட இணைய தளத்தின் பெயர் என்ன?

அ) காலநிலை சரிஒப்பு கண்காணிப்பு ☑

ஆ) பாரத் காலநிலை கண்காணிப்பு

இ) பாரத் காலநிலை தகவல் பலகை

ஈ) உலகளாவிய சிசி கண்காணிப்பு

✓ இந்தியாவைச் சேர்ந்த சுயாதீன ஆய்வாளர்கள் உலகளாவிய கால நிலைக்கொள்கையில் "காலநிலை சரிஒப்பு கண்காணிப்பு – Climate Equity Monitor" என்ற இணையவழி தகவல் பலகையை உருவாக்கி உள்ளனர். காலநிலை சரிஒப்பு கண்காணிப்பு தகவல் பலகையானது, காலநிலை நடவடிக்கை, உமிழ்வுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், உலகம் முழுவதும் உள்ள ஆற்றல் நுகர்வு மற்றும் பல்வேறு நாடுகளின் காலநிலை கொள்கைகளை மதிப்பிடுவதற்கான இணையவழி தகவல் பலகையை வழங்குகிறது.

✓ இது UNFCCC (வளர்ந்த நாடுகள்) கீழ் உள்ள இணைப்பு–I உறுப்புகளின் செயல்திறனைக் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

8. 'STRIVE' என்பது உலக வங்கியின் நிதியுதவியுடன் எந்த மத்திய அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது?

அ) திறன் மேம்பாட்டு அமைச்சகம் ☑

ஆ) கல்வி அமைச்சகம்

இ) கலாச்சார அமைச்சகம்

ஈ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம்

- ✓ Skills Strengthening for Industrial Value Enhancement (STRIVE) என்பது உலக வங்கியின் நிதியுதவியுடன் 2016ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இதன் மொத்த செலவினம் ₹2200 கோடியாகும்.
- ✓ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (MSME) தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவதற்கு தொழில் குழுமங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. கனரா தொழிற்சாலைகள் சங்கம் – தொழிற்சாலைகள் குழுமங்கள் மூலம் 'STRIVE' திட்டம் மங்களூருவில் தொடங்கப்பட்டது.

---

9. சிந்து ஆற்று ஓங்கில்களின் கணக்கெடுப்பைத் தொடங்கவுள்ள இந்திய மாநிலம் எது?

அ) மேற்கு வங்கம்



ஆ) பஞ்சாப் ☑

இ) ஹரியானா

ஈ) பீகார்

- ✓ பஞ்சாப் மாநிலம் சிந்து ஆற்று ஓங்கில்களின் (*Platanista gangetica Miner*) கணக்கெடுப்பைத் தொடங்கவுள்ளது. இது பியாஸ் ஆற்றில் காணப்படும் நன்னீர் ஓங்கில்கள் ஆகும். சிந்து ஆற்றில் வாழும் ஓங்கில்கள், இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தால் (IUCN) 'அருகிவிட்ட இனம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு, பஞ்சாபின் ஹரிகே வனவுயிரி சரணாலயத்தில் ஓங்கில்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சிந்து ஆற்று ஓங்கில், கடந்த 2019'இல் பஞ்சாபின் மாநில 'நீர்வாழ் உயிரினம்' என அறிவிக்கப்பட்டது.

---

10. புராஜெக்ட் 15B வகுப்பு டெஸ்ட்ராயர்–யார்டு 12704 (விசாகப் பட்டினம்)'இன் முதல் கப்பலை இந்திய கடற்படைக்கு வழங்கிய நிறுவனம் / அமைப்பு எது?

அ) DRDO



ஆ) மசகான் கப்பல் கட்டும் நிறுவனம் ☑

இ) கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள்

ஈ) HAL

- ✓ மசகான் கப்பல் கட்டும் நிறுவனமானது புராஜெக்ட் 15B வகுப்பு டெஸ்ட்ராயர்–யார்டு 12704 (விசாகப்பட்டினம்)'இன் முதல் கப்பலை இந்திய கடற்படைக்கு வழங்கியுள்ளது. இந்தக் கப்பல், உள்நாட்டு எஃகு DMR 249A'ஐப் பயன்படுத்தி கட்டப்பட்டதாகும். இந்தியாவில் கட்டப்பட்ட மிகப்பெரிய டெஸ்ட்ராயர்களில் இது ஒன்றாகும். இதன் மொத்த நீளம் 164 மீ ஆகும். இது 7500 டன்களுக்கு மேல் இடப்பெயர்ச்சி திறன்கொண்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மொழிவழி மாநிலம்; ஒரு பார்வை!

தமிழ்நாடு மொழிவழி மாநிலமாகப் பிரிந்து 65 ஆண்டுகள் ஆகிவிட்டன. கடந்த 2006–ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் அதன் பொன்விழா கொண்டாடப்பட்டது. சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்து சென்ற ஏனைய மாநிலங்கள் இந்த நாளை 'உதய தின' மாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன. எனவே தமிழ்நாடும் இதில் பங்கேற்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

இந்தியா பல மொழிகள் பேசும் ஒரு துணைக்கண்டம். ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை பெறுவதற்காக மக்கள், தங்கள் மொழி, இன வேறுபாடுகளை மறந்து தேசியத் தலைவர்களை நம்பியே போராடினர். மிதவாதிகள் மகாத்மா காந்தியடிகள் தலைமையிலும், தீவிரவாதிகள் திலகர் தலைமையிலும் போராடினர். இரண்டாம் உலகப் போர் வந்ததும், ஆங்கிலேயர் தங்கள் காலனி நாடுகளை விட்டு வெளியேற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்டம், வெற்றியை நெருங்கிக் கொண்டிருந்தபோது, மாநிலங்களின் பிரிவினைக்கான குரல்களும் எழுந்தன. தேசம் விடுதலை பெற்றதும் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்பதற்கான கிளர்ச்சிகளும் வெடித்துக் கிளம்பின. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு இதனை அடக்கவும், அமைதிப்படுத்தவும் கருதி, இந்தியா முழுவதையும் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கும் திட்டத்தை அறிவித்தார். அவை, தட்சிண பிரதேசம், உத்தர பிரதேசம், மேற்கு பிரதேசம், கிழக்கு பிரதேசம், மத்திய பிரதேசம் என்பவையாகும். இதில் தட்சிண பிரதேசம் என்பது தமிழகம், கர்நாடகம், கேரளம், ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்கள் அடங்கியதாகும்.

இத்திட்டத்தை மூதறிஞர் ராஜாஜி மட்டுமே வரவேற்றார்; ஈ.வெ.ரா. பெரியார் கடுமையாக எதிர்த்தார்; அண்ணாவும் கண்டனம் தெரிவித்தார். தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி.யின் பெருமுயற்சியால் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்துப் போராடின. எனவே, நேருவும் வேறு வழியில்லாமல் இத்திட்டத்தினைக் கைவிட நேர்ந்தது.

1953–ஆம் ஆண்டு வரை தமிழ்நாடும் சென்னை மாகாணத்தில் ஓர் அங்கமாகவே விளங்கியது. இந்தப் பல மொழிக் கூட்டில் சிக்கிக் கிடந்தவர்கள், தங்களுக்கு, தனியாக 'விசால ஆந்திரம்' வேண்டுமெனவும், 'ஐக்கிய கேரளம்' வேண்டுமெனவும் கோரிக்கை எழுப்பினர். இதற்காக 'ஆந்திர மகாசபை', 'கேரள சமாஜம்' போன்ற அமைப்புகளை உருவாக்கி கட்சி சார்பின்றி ஒன்றுபட்டு குரல் கொடுத்தனர்.

இதன் பிறகுதான் காங்கிரஸ் கட்சியிலிருந்து சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் முதன் முதலாக தமிழ் அரசு அடைய வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினார். மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்படும் போது வேங்கடம் முதல் குமரி வரை தமிழகம் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

சுதந்திர இந்தியாவில் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தன்னாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் புதிய தமிழ்நாடு அமைக்கப்பட வேண்டும் என விரும்பிய ம.பொ.சி., தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆதரவையும் பெற்று அறிக்கையும் வெளியிட்டார்.

1948–ஆம் ஆண்டு ஒன்றுபட்ட சென்னை மாகாண சட்டமன்றத்தில் மொழிவழி மாநிலப் பிரிப்பை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மொழிவழி மாநிலப் பிரிவினை பற்றி ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அமைக்கப்பட்ட 'தார்' குழு' 1948 செப்டம்பர் 13 அன்று சென்னைக்கு வந்தபோது தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சியினரும் அக்குழுவிடம் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

தமிழக எல்லை மாநாட்டை தமிழரசு கழகத் தலைவர் ம.பொ.சி. 1949–இல் சென்னையில் நடத்தினார். மத்திய அரசின் நிதியமைச்சராக இருந்து, பதவியைத் துறந்த டாக்டர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் தலைமை வகித்தார். சென்னை மாகாண முதலமைச்சர் பி.எஸ். குமாரசாமி ராஜாவும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார். அம்மாநாட்டு முடிவில், வடவேங்கடம் முதல் தென்குமரி வரையுள்ள தமிழகத்தை அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தனி ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக 1953–ஆம் ஆண்டு, பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார். அதன் பிறகு நேருவின் மனம் மாறியது. நாடாளுமன்றத்தில் ஆந்திர மாநிலம் அமைவதற்கான வாக்குறுதியை வழங்கினார்.

அப்போது 'சென்னை யாருக்கு' என்ற பிரச்னை எழுந்தது. சென்னை, தமிழகத்துக்கே உரியது என்பதை முடிவு செய்ய அப்போதைய முதலமைச்சர் ராஜாஜி, காங்கிரஸ் தலைவர் காமராசர், சென்னை மேயர் செங்கல்வராயன், முன்னாள் மேயர் எம். இராதாகிருஷ்ண பிள்ளை, தமிழரசு கழகத் தலைவர் ம.பொ.சி. முதலியவர்கள் கடுமையாகப் பாடுபட்டனர். அன்று மத்திய உள்துறையமைச்சராக இருந்த லால்பகதூர் சாஸ்திரியையும், பிரதமர் நேருவையும் சம்மதிக்க வைப்பதற்கு பெரும்பாடு பட்டனர்.

25.3.1953 அன்று நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு ஆந்திர மாநில அமைப்பு பற்றிய அதிகாரபூர்வ பிரகடனத்தை வெளியிட்டார். இதில் ஆந்திராவின் தலைநகரம் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிறகே தமிழர்கள் நிம்மதியடைந்தனர்.

மொழிவழி மாநிலப் போராட்டத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரை தென் எல்லை மீட்புப் போராட்டமும், வடஎல்லை மீட்புப் போராட்டமும் முக்கியமானவை. தென் எல்லைப் போராட்டம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த தமிழர்களால் நடத்தப்பட்டது. இந்த வீரஞ்செறிந்த போராட்டத்தின் விளைவாகவே தெற்கு எல்லை கன்னியாகுமரியாகவே நீடிக்கிறது. இதில் மார்ஷல் நேசமணியின் பங்கு மிகப் பெரியது.

வட எல்லைப் பாதுகாப்புக்குழு ம.பொ.சி. தலைமையில் அமைக்கப்பட்டது. கே. விநாயகம் குழுவின் செயலாளர்; மக்களை அணி திரட்ட

உதவியவர் மங்கலங் கிழார். கடுமையான போராட்டத்திற்குப் பிறகு மத்திய சட்டத்துறை அமைச்சர் ஹெச்.வி. படாஸ்கரை விசாரணை அதிகாரியாக இந்திய அரசு நியமித்தது.

படாஸ்கர் பரிந்துரையின்படி, திருத்தணி தாலுகா முழுவதும் (ஒரு கிராமம் நீங்கலாக), சித்தூர் தாலுகாவில் 20 கிராமங்கள், புத்தூர் தாலுகாவில் ஒரு கிராமம் ஆக 322 கிராமங்கள் ஆந்திரத்தில் இருந்து பிரிக்கப்பட்டு தமிழகத்துடன் சேர்க்கப்பட்டன. இந்த கிராமங்களின் மக்கள்தொகை 2,39,502. அதே போல தமிழ்நாட்டிலுள்ள திருவள்ளூர், பொன்னேரி தாலுகாக்களிலிருந்து சில கிராமங்கள் ஆந்திரத்துடன் சேர்க்கப்பட்டன.

இந்தப் பெரும் போராட்டத்தில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட தியாக மறவர்கள் ஏராளமானோர். போராட்டத்தின் உச்சகட்டமாக தனி ஆந்திர மாநிலம் அமைக்க வலியுறுத்தி 1953–இல் பொட்டி ஸ்ரீராமுலு உயிர் நீத்தார்; தமிழ்நாடு மாநிலம் கோரி உண்ணாவிரதம் இருந்து சங்கலிங்கம் 1956 அக்டோபர் 13 அன்று உயிர் துறந்தார்.

மொழிவழி மாநில அமைவுக்கு, மாநில முதலமைச்சர் பொறுப்பிலிருந்த ராஜாஜியின் பங்கும், அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜரின் பங்கும் குறிப்பிடத்தக்கவை. சென்னைதான் தலைநகர் என்று ஆந்திரர்கள் பிடிவாதமாக இருந்தபோதும் ராஜாஜி அதனை ஏற்கவில்லை. அவர் பிரதமர் நேருவிடம், 'சென்னை பட்டணத்தை ஆந்திரர்களிடம் தருவது என மத்திய அரசு முடிவு எடுக்குமானால், அதை அமல்படுத்தும் சக்தி எனக்கு இல்லை. இந்த நிலையில் வேறு முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறினார்.

பிரதமர் நேரு மனம் மாற இதுவும் ஒரு காரணம்.

மக்கள் விரும்பியபடி மாநிலம் அமைந்ததா? மாநிலப் பிரிவினை குறித்து எல்லா மாநிலங்களுக்கும் மனக்குறைகள் இருக்கின்றன. வட எல்லையான வேங்கடத்தை இழந்தது தமிழகத்திற்கு ஒரு குறையாகவே கருதப்படுகிறது. கருநாடக மாநிலத்தில் சேர்க்கப்பட்டுள்ள மராட்டியப் பகுதியான பெல்காம் மாவட்டத்தைத் திரும்பப் பெற மராட்டிய சமிதி தொடர்ந்து போராடி வருகிறது. இவ்வாறே இன்னும் பல.

இந்தச் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியதுதான். ஆனால் சில அரசியல்வாதிகள் சிக்கல்களுக்குத் தீர்வு ஏற்பட்டு விடாமல் பார்த்துக் கொள்ளுவதிலேயே கவனமாக இருக்கின்றனர். மத்திய அரசு எப்போதும் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை.

மொழி வழியான இந்தப் பிரிவினை, மாநிலங்களுக்கான பிரிவினையே தவிர மக்களுக்கானது அல்ல. மொழி என்பது பிரச்னைகளுக்கு முடிவாக இருக்க வேண்டுமே தவிர தொடர்ந்துகொண்டே இருக்கக் கூடாது. 'மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி' என்ற முழக்கம் மத்திய – மாநில அரசுகளின் இணக்கமாக இருக்க வேண்டும்.

தமிழ் இலக்கியங்களில் தமிழ்நாட்டின் எல்லைகள் பற்றிய குறிப்புகள் எங்கும் காணப்படுகின்றன. தமிழின் பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு பாயிரம் பாடிய பனம்பாரனார்,

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ்கூறு நல்லுலகத்து

என தமிழ்நாட்டு எல்லையை வரையறை செய்துள்ளார்.

இந்தியா பல மொழி, பல இன மக்கள் கூடி வாழும் கூட்டாட்சி நாடு என்பதை மொழிவழி மாநிலப் பிரிவு உறுதி செய்கிறது. இதனை மத்தியில் ஆளுவோர் அடிக்கடி மறந்து விடுகின்றனர். இந்தியையும், சம்ஸ்கிருதத்தையும் மாநிலங்களின் மீது தொடர்ந்து திணித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள 22 மாநில மொழிகளையும் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும். மாநிலப் பட்டியலில் இருந்த கல்வித்துறையை எடுத்துக் கொண்டது போல, மாநிலத் தன்னாட்சி அதிகாரங்களை எடுத்துக் கொள்ளும் போக்கை மத்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தன்னாட்சி என்பது வாழ்வது; கூட்டாட்சி என்பது வாழ வைப்பது. நாம் வாழ்வோம்; வாழ வைப்போம்.

---

2. சென்னையில் கடுமையாக உயர்ந்த காற்று மாசு : அனுமதிக்கப்பட்ட அளவைவிட தீபாவளியன்று பல மடங்கு அதிகம்

சென்னையில் தீபாவளியன்று காற்று மாசு அனுமதிக்கப்பட்ட அளவைவிட பல மடங்கு உயர்ந்து இருந்தது.

வழக்கமாக தீபாவளிக்கு முன் புகையில்லா தீபாவளி கொண்டாடுவது தொடர்பாக பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். மேலும், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் விழிப்புணர்வு ஆட்டோக்களும் இயக்கப்படும். தீபாவளியன்று போலீஸாரும் வாகன சோதனையில் ஈடுபடுவர்.

முந்தைய ஆண்டுகளைவிட இந்த ஆண்டு பட்டாசு வெடிப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றம் கடும் கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

இந்நிலையில், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் பள்ளி, பொது இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது இந்த ஆண்டு சற்று குறைவாகவே இருந்தது.

மேலும், அரசு சார்பில் பட்டாசு வெடிக்க 2 மணி நேரம் மட்டுமே அனுமதி அளித்திருந்தாலும், அதை செயல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தீபாவளியன்று சென்னை மாநகரில் அதிகாலை முதல் நள்ளிரவு 12 மணி வரையிலும் பட்டாசு வெடிக்கும் ஓசைகள், தடை செய்யப்பட்ட சரவெடி வெடிக்கும் ஓசைகள் கேட்டவண்ணமே இருந்தன. இதனால், சென்னையில் தீபாவளியன்று காற்று மாசு கடுமையாக உயர்ந்து இருந்தது. இரவு முழுவதும் புகை மூட்டமாக காணப்பட்டது. இதனால் சுவாசக்கோளாறு உள்ள சிலருக்கு, மூச்சு விடுவதிலும் சிரமம் ஏற்பட்டது.

இது தொடர்பாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னையில் பெசன்ட் நகர், தியாகராய நகர், நுங்கம்பாக்கம், திருவல்லிக்கேணி, சவுக்கார்பேட்டை ஆகிய 5 இடங்களில், தீபாவளிக்கு ஒரு வாரம் முன்பும், தீபாவளியன்றும் காற்று மாசுவின் அளவு கண்காணிக்கப்பட்டது.

இதில் தீபாவளியன்று 10 மைக்ரான் அளவு கொண்ட காற்றில் மிதக்கும் நுண்துகள்களின் அளவு (மாசு) குறைந்தபட்சமாக பெசன்ட்நகரில் 187 மைக்ரோகிராம், அதிகபட்சமாக நுங்கம்பாக்கத்தில் 283 மைக்ரோ கிராம் பதிவாகி இருந்தது. அனுமதிக்கப்பட்ட அளவு 100 மைக்ரோ கிராம் ஆகும்.

இதேபோன்று 2.5 மைக்ரான் அளவு கொண்ட காற்றில் மிதக்கும் நுண்துகள்களின் அளவு குறைந்தபட்சமாக பெசன்ட்நகரில் 175 மைக்ரோகிராம், சவுக்கார்பேட்டையில் 257 மைக்ரோகிராம் என பதிவாகியுள்ளது. இதில் அனுமதிக்கப்பட்ட அளவு 60 மைக்ரோ கிராம் ஆகும்.

காற்றுத் தரவு குறியீடுகளின்படி 385 குறியீடுகளுடன் அதிக மாசு ஏற்பட்ட பகுதியாக தியாகராய நகர் உள்ளது.

ஒலி மாசும் அதிகம்

மேலும், ஒலி மாசு அளவுகளின்படி, தீபாவளியன்று ஒலி மாசும் அதிகமாகவே இருந்தது. அதிகபட்சமாக தியாகராயநகரில் 79 டெசிபல் பதிவாகியுள்ளது.

தீபாவளியன்று நிலவிய மிகவும் குறைந்த காற்றின் வேகம், காற்றில் காணப்பட்ட அதிகப்படியான ஈரப்பதம் ஆகியவை காரணமாக, பட்டாசு வெடிப்பதன் மூலம் ஏற்பட்ட புகை மற்றும் நுண்துகள்கள் வெகுநேரம் காற்றில் மிதந்து, விரைவாக நிலத்தில் படியாமல் மாசுவில் அளவு அதிகரித்தது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

3. ஓய்வூதியர் வீடுகளுக்கே சென்று உயிர்வாழ் சான்றிதழ் வழங்கல் : அஞ்சல் துறையின் புதிய சேவை

ஓய்வூதியர்களின் வீடுகளுக்கே சென்று மின்னணு உயிர்வாழ் சான்றிதழ் அளிக்கும் சேவையை அஞ்சல் துறை தொடங்கி உள்ளது.

பயோமெட்ரிக் அடிப்படையிலான மின்னணு உயிர்வாழ் சான்றிதழ் (டிஜிட்டல் லைஃப் சர்டிபிகேட்) அளிக்கும் சேவையை இந்தியா போஸ்ட் வங்கி மூலம் ஓய்வூதியர்களுக்கு அஞ்சல் துறை தொடங்கி உள்ளது. இந்த சேவை அஞ்சல் ஊழியர்கள், கிராமப்புற அஞ்சல் சேவகர்கள் மூலம் குறைந்த கட்டணத்துடன் ஓய்வூதியர்களுக்கு வீடு தேடி வழங்கப்படுகிறது. கரோனா பெருந்தொற்று காலத்தில் மூத்த குடிமக்கள் வங்கிகள் அல்லது அலுவலகங்களுக்கு செல்வதை தவிர்க்க இச்சேவை உதவுகிறது.

சென்னை நகர வடக்கு மண்டலத்தில் உள்ள அனைத்து அஞ்சலகங்களிலும் இந்த சேவை கிடைக்கிறது. அஞ்சல் தகவல் செயலி அல்லது http://ccc.cept.gov.in/covid/request.aspx என்ற இணையதளம் மூலம் வீடு தேடி வரும் சேவைக்கான வேண்டுகோளை அனுப்பலாம். ஓய்வூதியதாரர்கள் மின்னணு முறையிலான உயிர்வாழ் சான்றிதழுக்கு

விண்ணப்பிக்க http://jeevanpramaan.gov.in/ppouser/login என்ற இணையதள இணைப்பில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இத்தகவலை சென்னை நகர வடக்கு மண்டல அஞ்சலகங்களின் முதுநிலை மேற்பார்வையாளர் தெரிவித்துள்ளார்.

---

4. தாம்பரம் மாநகராட்சிக்கான அவசர சட்டம் பிறப்பிப்பு: 5 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் இணைப்பு

தாம்பரம் மாநகராட்சி உருவாக்குவதற்கான அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதால், விரைவில் சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட உள்ளார். மேலும், 5 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் முதல் கட்டமாக இணைக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த ஆகஸ்ட் மாதம் இறுதியில் நகராட்சி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் முடிவில் துறையின் அமைச்சர் கே.என்.நேரு, தாம்பரம் மாநகராட்சி உருவாக்கம் குறித்த அறிவிப்பை வெளியிட்டார். இதையடுத்து தாம்பரம்மாநகராட்சியுடன் இணைக்கப்படும் பகுதிகள் குறித்தும், மாநகராட்சி உருவாக்கம் குறித்தும் அரசாணை வெளியிடப்பட்டது. இந்நிலையில், தற்போது தாம்பரம் மாநகராட்சிக்கான சட்டத்தை உருவாக்கி, சட்டப்பேரவை கூட்டம் இல்லாத நிலையில், ஆளுநர் ஒப்புதலை பெற்று அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர சட்டம் தமிழகஅரசின் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம், தாம்பரம் மாநகராட்சி உருவாக்கம் உடனடியாக அமலுக்கு வருகிறது. மேலும், தாம்பரம் மாநகராட்சி சட்டம், கோவை மாநகராட்சி சட்டத்தை பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாநகராட்சி மேயர், கவுன்சில், நிலைக்குழு, வார்டு குழு மற்றும் கமிஷனர் நியமனத்துக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. கவுன்சிலில் பெண்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கான ஒதுக்கீடுகளை பின்பற்ற அறிவறுத்தப்பட்டுள்ளது. தற்போது கவுன்சிலர்கள் தேர்வு செய்யப்படாத நிலையில், தாம்பரம் மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமிக்கப்படுவார். தாம்பரம் நகராட்சியில் பணியாற்றியஅலுவலர்கள், மாநகராட்சி அலுவலர்களாக மாற்றப்படுவார்கள்.

தாம்பரம் மாநகராட்சியில் தற்போதைய சூழலில் தாம்பரம், பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் ஆகிய 5 நகராட்சிகள் மற்றும் சிட்ல பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கன்காரணை, திருநீர்மலை பேரூராட்சிகள் இணைக்கப் படுகின்றன.

இவ்வாறு அரசிதழில் கூறப்பட்டுள்ளது.

---

5. அபிநந்தனுக்கு குரூப் கேப்டன் பதவி: இந்திய விமானப் படை ஒப்புதல்

கடந்த 2019-ல் பாகிஸ்தானுடன் ஏற்பட்ட வான் சண்டையில் எதிரியின் விமானத்தை சுட்டு வீழ்த்திய விங் கமாண்டர் அபிநந்தன் வர்த்தமானுக்கு குரூப் கேப்டனாக பதவி உயர்வு வழங்க இந்திய விமானப் படை ஒப்புதல் அளித்துள்ளது.

புல்வாமா தாக்குதலை தொடர்ந்து, கடந்த 2016 பிப்ரவரி 26-ம் தேதி, பாகிஸ்தானின் பாலகோட் பகுதியில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்தியா துல்லியத் தாக்குதலை நடத்தியது. மறுநாள் இதற்கு பதிலடியாக இந்திய வான் எல்லைக்குள் பாகிஸ்தான் போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்தபோது, அவற்றை இந்திய விமானப் படை விமானங்கள் விரட்டியடித்தன. அப்போது இந்திய விமானப் படையின் விங் கமாண்டராக அபிநந்தன் வர்த்தமான், பாகிஸ்தானின் போர் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்திவிட்டு பாகிஸ்தான் எல்லைக்குள் தவறிவிழுந்தார். அவரை பாகிஸ்தான் ராணுவம் சிறைப்பிடித்தது. இந்த சம்பவங்களால் இந்தியா- பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் உருவானது. பிறகு இந்தியாவின் வேண்டுகோளை ஏற்று அபிநந்தனை 3 நாட்களுக்கு பிறகு பாகிஸ்தான் விடுவித்தது.

அப்போது இந்தியர்களின் மனதில் நிஜ ஹீரோவாக அபிநந்தன் உயர்ந்தார். அவருக்கு கடந்த ஆண்டு வீர் சக்ரா விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. இந்நிலையில் அபிநந்தன் வர்த்தமானுக்கு குரூப் கேப்டன் பதவி வழங்க இந்தியா விமானப் படை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் ஒரு குறிப்பிட்ட நடைமுறை முடிந்ததும் அவர் பதவி உயர்வு பெறுவார் எனவும் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நடைமுறை குறித்து அதிகாரி ஒருவர் கூறும்போது, "எந்தவொரு அதிகாரியும் புதிய பதவிக்கான ஒப்புதல் பெற்ற பிறகு, அப்பதவிக்கான காலியிடம் ஏற்படும்போது அதைப் பெறுவார்" என்று தெரிவித்தார்.

---

6. கரோனா உயிரிழப்பை தடுக்கும் மாத்திரை கண்டுபிடிப்பு: ஃபைஸர் அறிவிப்பு

கரோனா சிகிச்சைக்காக தாங்கள் உருவாக்கியுள்ள மாத்திரை, அந்த நோயால் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் அபாயத்தையும் உயிரிழப்பு அபாயத்தையும் 90 சதவீதம் வரை குறைக்கும் என்று அமெரிக்காவின் ஃபைஸர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, நிறுவனம் வெளியிட்டுள்ள அந்த மருந்தின் ஆய்வு முடிவுகள் தெரிவிப்பதாவது:

எங்களின் கரோனா சிகிச்சை மாத்திரை 775 பெரியவர்களுக்குக் கொடுத்து சோதித்துப் பார்க்கப்பட்டது. ஆய்வில் பங்கேற்ற அனைவரும், அதற்கு முன்னர் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் ஆவர்.

அந்த ஆய்வின்போது, எங்களின் கரோனா சிகிச்சை மாத்திரையுடன் மற்றொரு தீநுண்மி எதிர்ப்பு மருந்தும் பங்கேற்பாளர்களுக்கு அளிக்கப்பட்டது.

அதில், கரோனா சிகிச்சை மாத்திரை பெற்றுக் கொண்ட குழுவினருக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய அளவுக்கு நோய் தீவிரமடையும் அபாயம் 89 சதவீதம் குறைந்தது தெரிய வந்தது. மேலும், அந்தக் குழுவில் யாரும் கரோனாவுக்கு பலியாகவில்லை. சிகிச்சை மாத்திரை அளிக்கப்பட்டவர்களில் 1 சதவீதத்துக்கும் குறைவானவர்களே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதே நேரம், எங்களின் கரோனா மாத்திரையைப் பயன்படுத்தி சிகிச்சை அளிக்கப்படாத குழுவினரில் 7 சதவீதத்தினர் மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்களில் 7 போர் கரோனா பாதிப்பால் உயிரிழந்தனர் என்று அந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து ஃபைஸர் நிறுவனத்தின் தலைமை அறிவியல் அதிகாரி மைக்கேல் டால்ஸ்டென் கூறுகையில், 'கரோனா சிகிச்சைக்காக நாங்கள் உருவாக்கியுள்ள மாத்திரை, மிக அபாரமாகச் செயல்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அந்த மாத்திரை 90 சதவீத செயல்திறனைக் கொண்டதாகவும் கரோனா மரண அபாயத்திலிருந்து 100 சதவீதம் பாதுகாப்பு அளிப்பதாகவும் இருக்கும்' என்றார்.

தங்களது கரோனா சிகிச்சை மாத்திரையை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் ஒழுங்காற்று அமைப்பிடம் விண்ணப்பித்துள்ளதாக ஃபைஸர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

7. டெங்கு: பாதிப்பின் உச்சத்தில் 12 மாநிலங்கள்!

தமிழகம், கேரளம், கர்நாடகம், உத்தரப் பிரதேசம் உள்பட நாட்டின் 12 மாநிலங்களில் டெங்கு பாதிப்பு அதி வேகமாக பரவி வருகிறது. நிகழாண்டில் நாடு முழுவதும் 1.17 லட்சம் போர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதிலும், கடந்த அக்டோபர் மாதத்தில்தான் அதிக எண்ணிக்கையில் டெங்கு பாதிப்புகள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருவ மழையே அதற்கு முக்கியக் காரணமாக கூறப்படுகிறது.

இதையடுத்து பாதிப்பு அதிகமுள்ள மாநிலங்களில் மத்திய நிபுணர் குழுவினர் விரைவில் சென்று கள ஆய்வு நடத்தவுள்ளனர். மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுக்க உள்ளனர்.

டெங்கு காய்ச்சலைப் பரப்பும் 'ஏடிஸ் - எஜிப்டை' வகை கொசுக்கள் மழை மற்றும் குளிர் காலங்களில் அதிகமாக பெருக்கமடைகின்றன. அந்த வகையில் கடந்த 2019 ஆண்டு மட்டும் நாடு முழுவதும் 1.5 லட்சம் போர் அக்காய்ச்சலுக்கு பாதிக்கப்பட்டனர்.

அதேவேளையில், 2020-இல் டெங்கு பாதிப்பு விகிதம் ஏறத்தாழ 75 சதவீதம் குறைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, அந்த ஆண்டில்,மொத்தம் 44 ஆயிரம் பேருக்கு மட்டுமே டெங்கு உறுதி செய்யப்பட்டது. அவர்கள் 99 சதவீதம் போர் குணமடைந்துவிட்டதாகவும் சுகாதாரத் துறை தெரிவித்தது.

இந்நிலையில், நிகழாண்டில் பருவ மழை காரணமாக வட மாநிலங்களிலும் சரி; தென் மாநிலங்களிலும் சரி டெங்கு பாதிப்பு அதி தீவிரமாக பரவி வருகிறது.

நாட்டிலேயே அதிகபட்சமாக உத்தரப் பிரதேசத்தில் 21,954 பேரும், அதற்கு அடுத்தபடியாக பஞ்சாபில் 16,910 பேரும், ராஜஸ்தானில் 10

ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் டெங்குவால் பாதிக்கப்பட்டிருப்பதாக மத்திய சுகாதாரத் துறை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தவிர, மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ஒடிஸா, குஜராத், கேரளம், கா'நாடகம், தெலங்கானா ஆகிய மாநிலங்களிலும் பாதிப்பு அதிகரித்துள்ளது.

தமிழகத்தைப் பொருத்தவரை 3,806 போ' டெங்கு காய்ச்சலுக்கு ஆளாகியுள்ளனா'. அவா'களில் தற்போது 495 போ' சிகிச்சையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிற மாநிலங்களை ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கை குறைவு என்றாலும், மாநிலம் முழுவதும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே, கரோனாவுக்கும், டெங்கு பாதிப்புக்கும் ஏறத்தாழ ஒரே மாதிரியான அறிகுறிகள் காணப்படுவதால், அதனை அடையாளம் கண்டு சிகிச்சையளிப்பதில் சிரமம் இருப்பதாக மருத்துவா'கள் தெரிவித்துள்ளனா'.

இதையடுத்து, அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து சம்பந்தப்பட்டவா'களுக்கு வழங்கியிருப்பதாக தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநா' டாக்டா' செல்வவிநாயகம் தெரிவித்தா'. இதுகுறித்து அவா' மேலும் கூறியதாவது:

முழுவதும் கொசுக்களை ஒழிக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. காய்ச்சல் முகாம்களில் கரோனாவுடன், டெங்கு, ஜிகா, சிக்குன் குனியா, மலேரியா உள்ளிட்ட காய்ச்சல் கண்டறியப்பட்டால் உடனடியாக தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டெங்கு தடுப்பு பணிகளில் மட்டும் 22 ஆயிரம் ஊழியா'கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனா'. டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சையளிக்கத் தேவையான மருந்துகளும், வசதிகளும் அரசிடம் உள்ளன.

மாவட்ட இணை சுகாதார இயக்குநா'களுடனான ஆய்வுக் கூட்டம் தொடா'ந்து நடத்தப்பட்டு வருகிறது. டெங்கு தடுப்பு, சிகிச்சை முறைகள், கொசு ஒழிப்பு பணிகள் குறித்து தொடா'ந்து பல்வேறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

மழை பொழிவுக்குப் பிறகு சாலைகள், தெருக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் தண்ணீா' தேங்காமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. டயா', உடைந்த மண்பாண்டங்கள், தேங்காய் சிரட்டைகள், பெயிண்ட் டப்பாக்கள், தேவையற்ற பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் கட்டுமான இடங்களில் தேங்கும் தண்ணீா' போன்றவற்றில் கொசுக்கள் உற்பதியாகக்கூடும். அதனால், அந்தப் பொருட்களை உடனடியாக அகற்றவும், கொசுப் புழு ஒழிப்பு மருந்து தெளித்தல், புகை அடித்தல் போன்ற பணிகளை நாள்தோறும் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றா' அவா'.

மத்தியக் குழு ஆய்வு: மத்திய சுகாதாரத் துறை அதிகாரிகள், எய்ம்ஸ் மருத்துவா'கள் அடங்கிய மருத்துவக் குழுவினா' அடுத்த ஓரிரு நாள்களில் தமிழகத்துக்கு வந்து ஆய்வு நடத்தவுள்ளனா'. அவா'கள் மாநிலத்தில் பாதிப்பு அதிகம் உள்ள மாவட்டங்கள் அனைத்துக்கும் நேரடியாகச் சென்று பாா'வையிடுகின்றனா'.

அதன் அடிப்படையில் மத்தியக் குழு ஆய்வு முடிவுகளையும், பரிந்துரைகளையும் வெளியிட உள்ளது. அதனை உடனடியாக செயல்படுத்த தயாராக உள்ளதாக தமிழக பொது சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனா'.

இந்திய வரைபடத்தில் பதிவிடப்பட வேண்டிய டெங்கு பாதிப்பு தகவல்கள்...

மாநிலம் – பாதிப்பு (2021) – இறப்பு (2021) – பாதிப்பு (2020) – இறப்பு (2020)

தமிழகம் – 3,806 – 3 – 2,410 – 0

உ.பி. – 21,954 – 8 – 3,715 – 6

பஞ்சாப் – 16,910 – 61 – 8,435 – 22

மகாராஷ்டிரம் – 8302 – 14 – 3,356 – 10

ராஜஸ்தான் – 10,080 – 26 – 8,435 – 22

ம.பி – 11,000 – 5 – 806 – 0

மேற்கு வங்கம் – 2,000 – 0 – 5,166 – 2

கேரளம் – 3, 027 – 1 – 4,399 – 5

கா'நாடகம் – 3,572 – 0 – 3,823 – 0

தெலங்கானா – 4,610 – 0 – 2,173 – 0

ஒடிஸா – 4,505 – 0 – 496 – 0

குஜராத் – 4,938 – 1 –1, 564 – 2

---

8. 23 வயதுக்குட்பட்டோா' உலக மல்யுத்தம்: ஷிவானிக்கு வெள்ளி, அஞ்சுவுக்கு வெண்கலம்

23 வயதுக்குட்பட்டோா' உலக மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் ஷிவானி பவாா' வெள்ளியும், அஞ்சு வெண்கலப் பதக்கத்தையும் வென்றனா'.

சொ'பியாவின் பெல்கிரேட் நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் வியாழக்கிழமை 50 கிலோ எடைப்பிரிவு இறுதிச் சுற்றில் அமெரிக்காவின் உலக ஜூனியா' சாம்பியன் எமிலி கிங்கை எதிா'கொண்டாா' ஷிவானி. இதில் தோல்வியுற்ற அவா' வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினாா'. 55 கிலோ எடைப்பிரிவு வெண்கல பதக்கப் போட்டியில் இந்தியாவின் அஞ்சு 10 புள்ளிகள் முன்னிலை அடிப்படையில் கனடாவின் விா'ஜினி கேஸை வீழ்த்தி வெண்கலம் வென்றாா'. 65 கிலோ எடைப்பிரிவில் நிஷா வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் ரெப்கேஜ் பிரிவில் மோதுகிறாா'. மோனிகா 68 கிலோ, பிபாஷா 76 கிலோ ரெப்கேஜ் பிரிவில் தோல்வி கண்டனா'.

---

1. தகவல் & ஒலிபரப்பு அமைச்சகமானது எந்த அமைச்சகத்துடன் இணைந்து, 'ஒற்றைச் சாளரத்தில் படமெடுக்கும் பொறிமுறை'யை உருவாக்கியுள்ளது?

அ) பாதுகாப்பு அமைச்சகம்

ஆ) இரயில்வே அமைச்சகம் ☑

இ) கலாச்சார அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ இரயில்வே அமைச்சகமும் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகமும் இணைந்து, ஒருங்கிணைக்கப்பட்ட ஒற்றைச் சாளர படப்பிடிப்பு பொறி முறையை உருவாக்கியுள்ளன. இரயில்வே வளாகம் முழுவதும் படப் பிடிப்பு நடத்துவதற்கு பெறப்படும் அனுமதியை எளிதாக மாற்றுவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

---

2. COP26 காலநிலை உச்சிமாநாட்டின் முதல் பெரிய ஒப்பந்தத்தில், எந்த ஆண்டுக்குள் காடழிப்பை முடிவுக்குக் கொண்டு வரவும், மாற்றியமைக்கவும் தலைவர்கள் உறுதியளித்தனர்?

அ) 2030 ☑

ஆ) 2040

இ) 2050

ஈ) 2070

✓ COP26 காலநிலை உச்சிமாநாட்டின் முதல் முதன்மை ஒப்பந்தத்தில், 110 தலைவர்கள் 2030ஆம் ஆண்டிற்குள் காடழிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் மாற்றியமைப்பதாகவும் உறுதியளித்தனர்.

✓ 'காடுகள் மற்றும் நிலப்பயன்பாடு குறித்த கிளாஸ்கோ தலைவர்களின் பிரகடனம்' என்று பெயரிடப்பட்ட இந்த உறுதிமொழியில் $12 பில்லியன் பொது நிதியும் $7.2 பில்லியன் தனியார் நிதியும் அடங்கும். கடந்த 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம், காடழிப்பைக் குறைக்கத் தவறிவிட்டது குறிப்பிடத்தக்கது.

---

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மந்தாகினி ஆறு உற்பத்தி ஆகுகின்ற மாநிலம் எது?

அ) உத்தரகாண்ட்

ஆ) உத்தர பிரதேசம்

இ) மத்திய பிரதேசம் ☑

ஈ) பீகார்



✓ யமுனையின் துணையாறான மந்தாகினி ஆறு, மத்திய பிரதேசத்தின் சத்னா மாவட்டத்தில் உற்பத்தியாகி உத்தர பிரதேச மாநிலம் சித்ரகூட் மாவட்டத்தில் யமுனையில் கலக்கிறது. இந்த ஆறு சதி அனுசுயா என்ற வற்றாத பள்ளத்தின் வழியாக பாய்கிறது, அதில் பல நீரூற்றுகள் உள்ளன. ஆக்கிரமிப்பு, காங்கிரீட், மாசு போன்றவற்றால் இவ்வாறு கடும் பாதிப்புக்கு உள்ளானதால் சமீப செய்திகளில் இது இடம்பெற்றது.

---

4. பசுமைத் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக உலக வங்கிக்கு "இந்திய பசுமை உத்தரவாதத்தை" வழங்கவுள்ள நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) யுகே ☑

இ) பிரான்ஸ்

ஈ) ஜெர்மனி



✓ இந்தியா முழுவதுமான பசுமைத் திட்டங்களுக்கு 750 மில்லியன் பவுண்டுகளை வழங்குவதற்காக, உலக வங்கிக்கு இங்கிலாந்து (UK) "இந்திய பசுமை உத்தரவாதத்தை" வழங்கும். கிளாஸ்கோவில் நடந்த COP26 உச்சிமாநாட்டில் இது அறிவிக்கப்பட்டது. பசுமை உத்தரவாத நிதியானது தூய எரிசக்தி, போக்குவரத்து மற்றும் நகர்ப்புற மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் தூய மற்றும் நெகிழ்ச்சியான உட்கட்டமைப்பை கொண்டுவரும். பிரைவேட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலப்மென்ட் குரூப் கீழ், UN காலநிலை உச்சிமாநாட்டில் 210 மில்லியன் பவுண்டுகளுக்கு மேல் UK அளித்துள்ளது.

---

5. ஓய்வூதியம் பெறுவோர்க்கு முதல், 'வீடியோ லைஃப் சர்டிபிகேட் சேவையை' அறிமுகப்படுத்திய இந்திய வங்கி எது?

அ) பஞ்சாப் நேஷனல் வங்கி

ஆ) கனரா வங்கி

இ) பாரத ஸ்டேட் வங்கி ☑

ஈ) பரோடா வங்கி



✓ பாரத ஸ்டேட் வங்கி (SBI) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முதல் 'வீடியோ லைஃப் சர்டிபிகேட் சேவை'யை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய வசதிமூலம் ஓய்வூதியம் பெறுவோர் தங்கள் வீடுகளில் இருந்தே காணொளிமூலம் தங்கள் வாழ்நாள் சான்றிதழை சமர்ப்பிக்க முடியும். SBI இன்படி, இந்த வசதி ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் மற்றும் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரரின் மனைவி இவ்வசதியைப் பயன்படுத்த முடியாது. வீடியோ வாழ்நாள் சான்றிதழின் செயல்முறை காகிதமற்றது மற்றும் இலவசமாகவும் கிடைக்கிறது.

---

6. காலநிலை மாற்றம் குறித்த NASA'இன் சமீபத்திய ஆய்வின்படி, காலநிலை மாற்றத்தால் 17% வளர்ச்சியைக் காணவுள்ள பயிர் எது?

அ) அரிசி

ஆ) கோதுமை ☑

இ) சோளம்

ஈ) பருத்தி



✓ நேச்சர் ஃபுட் என்ற இதழில் வெளியிடப்பட்ட புதிய NASA ஆய்வின்படி, பருவநிலை மாற்றமானது 2030ஆம் ஆண்டளவில் மக்காச்சோளம் மற்றும் கோதுமையின் உற்பத்தியை அதீத பைங்குடில் வாயு உமிழ்வு பாதிக்கலாம். இந்த ஆய்வின்படி, மக்காச்சோள பயிர் விளைச்சல் 24% குறையும் என்றும், கோதுமை சுமார் 17% வளர்ச்சியைக் காணக்கூடும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. வெப்பநிலையில் அதிகரிப்பு, மழைப் பொழிவு முறைகளில் மாற்றங்கள் மற்றும் பைங்குடில் வாயு உமிழ்வுகளில் CO_2 செறிவு ஆகியவை இதற்கு காரணமாகும்.

---

7. கீழ்கண்ட எந்த மாநிலத்தில், 'பெஸ்து வாரஸ்' புத்தாண்டு நாள் கொண்டாடப்படுகிறது?

அ) தமிழ்நாடு

ஆ) கர்நாடகா

இ) குஜராத் ☑

ஈ) மகாராஷ்டிரா



✓ 'பெஸ்து வாரஸ்' (அ) குஜராத்தி புத்தாண்டு ஆனது இந்து நாட்காட்டியின் கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படுகிறது. இந்த நாள் பாரம்பரியமாக 'வர்ஷா பிரதிபதா' அல்லது 'பெஸ்து வாரஸ்' என்று அழைக்கப்படுகிறது. 'சோப்டா' எனப்படும் கணக்குகளை வைத்து புதிய புத்தகங்களை தயாரித்து மக்கள் இந்த நாளை கொண்டாடுகிறார்கள். இந்த நாளில் லட்சுமி மற்றும் கிருஷ்ணரையும் அவர்கள் வழிபடுகின்றனர்.

---

8. முதலமைச்சர் அவசிய பூ–அதிகார் யோஜனா சார்ந்த மாநிலம் எது?

அ) மகாராஷ்டிரா

ஆ) ஒடிஸா

இ) ஹரியானா

ஈ) மத்திய பிரதேசம் ☑



✓ சொந்தமாக நிலம் இல்லாத மாநில மக்களுக்கு வீட்டு மனைகளை இலவசமாக வழங்குவதாக மத்திய பிரதேச அரசு அறிவித்துள்ளது. அந்த நிலத்தை மக்கள் சொந்த வீடு கட்டிக்கொள்ள பயன்படுத்தலாம். "முதலமைச்சர் அவசிய பூ–அதிகார் யோஜனா" என்ற திட்டத்தின்கீழ் இந்த இலவச மனைகள் வழங்கப்படுகிறது.

---

9. 'PMFME' திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) நிதி அமைச்சகம்

ஆ) உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகம் ☑

இ) உழவு அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ உணவு பதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சர் பிரசுபதி குமார் பராஸ், ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு திட்டத்தின் கீழ், 'தில்லி பேக்ஸ்' என்ற பேக்கரி பிராண்டைத் தொடங்கினார். முழு கோதுமை ரஸ்க் தில்லி பேக்ஸ் பிராண்டின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் தயாரிப்பு ஆகும். பிரதமர் நுண் உணவுப் பதப்படுத்தும் நிறுவனங்களின் (PMFME) திட்டத்தின்கீழ், ஒரு மாவட்டத்தில் இருந்து ஒரு பொருளை அரசாங்கம் ஊக்குவிக்கிறது. NAFED கூட்டுறவு நிறுவனத்துடன் இணைந்து இந்தத் தயாரிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

---

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'CAATSA' என்பது எந்த நாட்டுடன் தொடர்புடைய சட்டமாகும்?

அ) அமெரிக்கா ☑



ஆ) ரஷ்யா

இ) சீனா

ஈ) யுகே

✓ CAATSA – Countering America's Adversaries Through Sanctions Act என்பது கடந்த 2017ஆம் ஆண்டின் சட்டமாகும். இது ரஷ்யா உட்பட சில நாடுகளுடன் வணிகம் செய்த நாடுகளைத் தண்டிக்கும் நோக்கம் கொண்டது. ரஷ்யாவின் S400 ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை வாங்குவதற்கான தடைகளிலிருந்து இந்தியாவிற்கு விலக்களிக்கும் சட்டத்தை மூன்று குடியரசுக் கட்சி அமெரிக்க செனட்டர்கள் தாக்கல் செய்தனர். இது, 'CAATSA' விதித்த பொருளாதாரத் தடைகளில் இருந்து QUAD–ன் உறுப்பு நாடுகளான ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் இந்தியாவுக்கு பத்து ஆண்டுகள் விலக்கு அளிக்கும்.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 120 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு: அனைத்து மொழியிலும் வெளியிட மத்திய செம்மொழி நிறுவனம் தீவிரம்

மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் சார்பாக 58 பழங்குடியின மொழிகள் உட்பட 120–க்கும் மேற்பட்ட மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

மனித வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளாய் (முப்பால்) பிரித்து திருக்குறள் விளக்குகிறது. இதில் உள்ளகருத்துகள் இனம், மொழி, பாலின பேதங்களின்றி எக்காலத்துக்கும் பொருந்துவதால் திருக்குறள் 'உலகப் பொது மறை' என்றும் அழைக்கப்படுகிறது. இதன்சிறப்பை அறிந்த அறிஞர்களால் 1800–ம் ஆண்டில் இருந்தே 43மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அந்த காலத்தில் கையெழுத்துப் பிரதிகளும், அச்சுப் பிரதிகளும் குறைந்த அளவிலேயே உருவாக்கப்பட்டதால் திருக்குறள், பல மொழிகளில் முழுமையாகச் சென்றடையவில்லை.

இதனைக் கருத்தில் கொண்டுமத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம், முதற்கட்டமாக அரசமைப்பின் 21 மொழிகளில் பஞ்சாபி, மணிப்புரி, தெலுங்கு, கன்னடம், குஜராத்தி மொழிகளில்திருக்குறளை ஏற்கெனவே மொழிபெயர்த்திருந்தது. இந்நிலையில், திருக்குறளை உலகின் அனைத்துமொழிகளிலும் மொழிபெயர்க்கத் திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா சந்திரசேகரன் கூறியதாவது: உலகம் முழுவதும், திருக்குறள் சென்றடைய, மொழிபெயர்க்கும் பணியைத்தொடங்கும் முன்பாகவே, இந்திய மற்றும் சர்வதேச அளவில் 43 மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டுவிட்டன. ஆனால், அவற்றில் பல, ஒற்றைப் பிரதியாகவே உள்ளன.

மேலும், விளக்கவுரைகள் தெளிவாக இல்லை. திருக்குறள் மீதுஅதிகப்பற்றுள்ள பிரதமர் மோடி, மொழி பெயர்ப்பில் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். இதனைகருத்தில் கொண்டும், உலகப் பொதுமறையை உலகம் முழுவதும் கொண்டு செல்லும் நோக்கத்தில் தற்போது மொழி பெயர்ப்பு பணியைத் தொடங்கி உள்ளது. அதன்படி, இந்தி, மராத்தி, நேபாளி, மலையாளம், ஒடியா, உருது, அரபி, பாரசீகம், படுகு, வாக்ரிபோலி ஆகிய 10 மொழிகளில் திருக்குறள் விரைவில் வெளியாகவுள்ளது.

இதன்தொடர்ச்சியாக, பாசா, பர்மீஸ், ஃபிஜியன், ஜரிஷ், கெமர், கிரியோல், மலாய், மங்கோலியன், தாய், வியட்நாமிஸ், டேனிஷ், சிங்களம், ஜப்பானியம், கொரியன், செளராஷ்டிரா, கொங்கனி, அஸ்ஸாமி, பெங்காலி, போடோ, டோக்ரி, கொங்கணி, மைதிலி, சம்ஸ்கிருதம், சந்தாலி, சிந்தி உள்ளிட்ட 42 மொழிகளிலும் திருக்குறள் விரைவில் வெளியாகவுள்ளது.

மேலும், இந்திய அரசமைப்பில் இல்லாத 66 மொழிகளிலும் மொழிபெயர்ப்பு நடைபெற்று வருகிறது. இதில், ஆதி, அங்கமி, அவோ, படகா, இருளா, காட்டு நாயக்கர், கோடா, கொண்டா, கோயா, முண்டா, பனியா உள்ளிட்ட 58 பழங்குடியினர் மொழிகளும்அடங்கும். இதற்காகச் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் தமிழ்ப் பேராசிரியர்கள், மொழி அறிஞர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஒரு மொழியில் மொழிபெயர்க்க ரூ.1.5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பிறகு, உலகின்அதிக மொழிகளில் வெளியிடப்பட்ட நூல் என்ற இலக்கை நோக்கி, திருக்குறள் பயணிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

2. பாதுகாப்பு தொழில் வழித்தட திட்ட இயக்குநராக கிருஷ்ணமூர்த்தி நியமனம்:

தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் வழித்தட திட்ட இயக்குநராக பா கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2002'இல் குடிமையியல் பணியில் தேர்ச்சி பெற்ற கிருஷ்ண மூர்த்தி, இந்திய ஆயுத தொழிற்சாலைகளுக்கான சேவைகளுக்கு பணி நியமனம் செய்யப்பட்டவர். ஆயுத தொழிற்சாலை வாரியத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றியுள்ள கிருஷ்ணமூர்த்தி, தமிழகத்தில் ஆவடியில் உள்ள கனரக வாகன தொழிற்சாலை, அரவங்காடு கார்டைட் தொழிற்சாலை, இந்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஆயுத தொழிற்சாலை வாரியம் ஆகியவற்றில் இயக்குநராக பணியாற்றியவர். ஆயுத தொழிற்சாலை வாரியத்தில் ஆயுத்பூஷண் விருது பெற்றவர்.

---

3. உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி – இந்திய அணி பயிற்சியில் பங்கேற்க கோவில்பட்டி மாணவர் தேர்வு

உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் பங்கேற்கும், இந்திய அணிக்கான பயிற்சியில் பங்கேற்க கோவில்பட்டி கல்லூரி மாணவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கோவில்பட்டி ராமலிங்கம் தெருவைச் சேர்ந்த சக்திவேல் மகன் மாரீஸ்வரன் (21). இவர் கோவில்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2ஆம் ஆண்டு வணிகவியல் படிக்கிறார். உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டிக்கான இந்திய அணி பயிற்சியில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மாரீஸ்வரனின் தந்தை சக்திவேல் தீப்பெட்டிக்கான அட்டைப்பெட்டி தயாரிக்கும் குடிசைத் தொழில் செய்கிறார். தாய் சங்கரி இதற்கு உதவியாக இருக்கிறார். மாரீஸ்வரன் 8–ம் வகுப்பு படிக்கும்போது விளையாட்டு விடுதி வீரர்களுக்கான தேர்வில் வெற்றிபெற்று, அரியலூரில் உள்ள விளையாட்டு விடுதியில் தங்கி ஹாக்கி பயிற்சியுடன், 12–ம் வகுப்பு வரை படித்தார். தற்போது, பயிற்சியாளர் முத்துக்குமாரிடம் ஹாக்கி பயிற்சி பெற்றதுடன், கோவில்பட்டி அரசு கல்லூரியில் படிக்கிறார்.

கடந்த ஆண்டு நடந்த உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டிக்கான இந்திய அணி வீரர்கள் தேர்வில், 36 பேரில் ஒருவராக தேர்வுபெற்றார். தொடர்ந்து பெங்களூருவில் உள்ள இந்திய விளையாட்டு ஆணைய விளையாட்டு விடுதியில் தங்கி, ஓராண்டாக பயிற்சி பெற்று வருகிறார். அங்கு கடந்த மாதம் நடந்த 2ஆம்கட்ட தேர்வில் 24 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். இவர்களில் மாரீஸ்வரனும் ஒருவர் ஆவார்.

இதுகுறித்து, தூத்துக்குடி மாவட்ட ஹாக்கி கழகச் செயலாளர் செ குரு சித்திர சண்முகபாரதி கூறும்போது, "மாரீஸ்வரன் தற்போது இறுதிக்கட்ட பயிற்சி முகாமுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதில் இருந்து 20 பேர் தேர்வு செய்யப்படுவர். அவர்கள்தான் புவனேஸ்வரில் இம்மாதம் கடைசி வாரம் தொடங்கும் உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்திய அணிக்காக விளையாடுவர். தற்போது தேர்வு செய்யப்பட்ட 24

பேரில் தென் இந்தியாவில் இருந்து தேர்வானவர் மாரீஸ்வரன் மட்டுமே. தமிழகம் மற்றும் கோவில்பட்டிக்கு மாரீஸ்வரன் பெருமை சேர்த்துள்ளார்" என்றார்.

---

4. நாட்டிலேயே முதல்முறையாக தமிழகத்தில் 'கடல்பாசி திட்டம்'

இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழகத்தில் கடல்பாசி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் எல் முருகன் கூறினார்.

மக்களை வீடுவீடாகத் தேடிச் சென்று கரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டம் மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மத்திய இணையமைச்சர் எல் முருகன் கோயம்பேடு பகுதியில் சனிக்கிழமை வீடுவீடாகச் சென்று தடுப்பூசி போடுவதை ஆய்வு செய்ததுடன், தடுப்பூசியின் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

உலகிலேயே 100 கோடிக்கும் மேல் தடுப்பூசி செலுத்திய நாடு இந்தியா. தமிழகத்தில் 6 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. முதல் தவணை ஊசியை 93 சதவீதம் போர் செலுத்திக் கொண்டுள்ளனர். 2-ஆம் தவணை ஊசியையும் தமிழகத்தைச் சேர்ந்தோர் தாமதிக்காமல் போட்டுக் கொள்ள வேண்டும்.

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தில் கடல்பாசி திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த உள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. வெளிநாடுகளில் கடல்பாசிக்கு அதிக தேவை உள்ளது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் பெண்களுக்கான வேலைவாய்ப்பு அதிகரிக்கும். தமிழகத்தின் பொருளாதாரமும் வளரும். தமிழக அரசிடம் இருந்து விரிவான திட்ட அறிக்கை வரவேண்டியுள்ளது. அது வெளியானதும் கடல்பாசி திட்டம் விரைவில் தொடங்கப்படும்.

பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை மத்திய அரசு குறைத்திருப்பது மக்களுக்கு தீபாவளி பரிசாக அமைந்துள்ளது. அதைத் தொடர்ந்து புதுச்சேரி உள்பட பல்வேறு மாநிலங்கள் பெட்ரோல் டீசலுக்கான வாட் வரியைக் குறைத்துள்ளன. தமிழக அரசும் பெட்ரோல், டீசலுக்கான வாட் வரியைக் குறைக்க வேண்டும் என்றார் அமைச்சர் முருகன்.

---

5. மும்பை ஐஐடி தொழில்நுட்ப வல்லுநர்கள் தயாரிப்பில் புதிய பாம்பன் பால ரயில் பாதைக்கான வரைபடம்

மும்பை ஐஐடி தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் பாம்பன் ரயில் பாதைக்கான வரைபடம் தயாராகி வருவதாக மதுரை ரயில்வே கோட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

மதுரை ரயில்வே கோட்டத்தில் புதிய ரயில் பாதைப் பணிகள், இரட்டை ரயில் பாதைப் பணிகள், அகல ரயில் பாதைப் பணிகள், புதிய பாம்பன் பாலப் பணிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் தொடர்பாக மதுரை கோட்ட ரயில்வே அலுவலகம் வெளியிட்ட செய்தி:

அருப்புக்கோட்டை வழியாக அமைக்கப்படும் மதுரை- தூத்துக்குடி புதிய ரயில் பாதைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, தூத்துக்குடி அருகே மீளவிட்டான் முதல் மேலமருதூர் வரை ரயில் பாதைப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. இந்தப் பகுதியில் 4 பெரிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டு டிசம்பரில், இந்த 18 கிலோ மீட்டர் புதிய ரயில் பாதை ஆய்வுக்கு தயாராகி விடும். ஆய்வு முடிந்தவுடன் இந்தப் பகுதியில் உள்ள மின்சார தயாரிப்பு நிறுவனங்களுக்கு சரக்கு ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

மதுரை- தேனி ரயில் பாதை 2022 ஜனவரியில் ஆய்வு

மதுரை- போடிநாயக்கனூர் அகல ரயில் பாதைத் திட்டத்தில், ஆண்டிபட்டி - தேனி பிரிவில் புதிய அகல ரயில் பாதை அமைக்கப்பட்டு தயாராக உள்ளது. இந்த 17 கிலோ மீட்டர் தூரமுள்ள புதிய ரயில் பாதையில், தமிழக மின்வாரியத்தின் சார்பாக இரண்டு மின் வழித்தடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் முடிவடைந்தவுடன் பெங்களூர் தென் சரக பாதுகாப்பு ஆணையர் ஆய்வு நடத்தவுள்ளார்.

இந்தப் பிரிவில் மீதமுள்ள 15 கிலோ மீட்டர் தூர தேனி- போடிநாயக்கனூர் அகல ரயில் பாதைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் ரயில் பாதை அமைக்கத் தேவையான மண் எடுப்பதற்கு தேனி மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்த ரயில் பாதையில் நடைபெற்றும் வரும் 32 சிறிய பாலங்களுக்கான கட்டுமானப் பணிகள் டிசம்பரில் நிறைவடையும். 2022 ஜனவரியில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு நடத்த உள்ளார். அதன் பின்னர் இந்த ரயில் பாதை தயாராகி விடும்.

இரட்டை ரயில் பாதைப் பணிகள்:

கோவில்பட்டி - துலுக்கப்பட்டி இடையே 33 கிலோ மீட்டர் புதிய இரட்டை ரயில் பாதைப் பணிகளுக்காக நில ஆர்ஜிதப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. ரயில் பாதை அமைக்கத் தேவையான மண் அள்ளுவதற்கு மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் 6 பெரிய பாலங்கள், 41 சிறிய பாலங்கள் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. ஒரு சிறிய பாலத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மதுரை- திருமங்கலம் இடையே நடைபெற்று வரும் இரட்டை அகல ரயில் பாதைப் பணிகள் 2022 பிப்ரவரியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிகளுக்காக 17 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ரயில்வே பாதையில் 47 சிறிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 3 சிறிய பாலங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய பாம்பன் பாலம்

புதிய பாம்பன் பாலம் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. நடுவில் கப்பல்கள் சென்றுவர வசதியாக செங்குத்தாக மேலே சென்று வரும் வகையில் அமைக்கப்படும் ரயில் பாதைக்கான வரைபடம் மும்பை ஐஐடி தொழில் நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் தயாராகி வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

---

6. மத சுற்றுலாவை பிரபலப்படுத்த ராமாயண யாத்திரை சுற்றுலா:

இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் (ஐஆர்சிடிசி) நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கரோனா வைரஸின் பாதிப்பு குறைந்து வருவதால், மக்களின் தேவைக்கு ஏற்றார் போல், பல்வேறு இடங்களுக்கு ஐஆர்சிடிசி சார்பில் சுற்றுலா ரயில்கள் இயக்கப்படுகின்றன. ராமாயண காவியத்துடன் தொடர்புடைய இடங்களைக் காணும் வகையில், · ராமாயண யாத்திரை சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ரயில் பயணம் வரும் நவம்பர் 16-ம் தேதி மதுரையில் இருந்து புறப்படுகிறது. திண்டுக்கல், திருச்சி, கும்பகோணம், கடலூர், விழுப்புரம், சென்னை எழும்பூர் வழியாகச் செல்கிறது. ஹம்பி, நாசிக், சித்ரகூட், காசி, கயா, சீதாமார்ஹி, நேபாளம், ஜனக்புரியில் உள்ள சீதா ஜென்மபூமி, அயோத்தியில் ராமஜென்ம பூமி, நந்திகிராம், சிருங்க வெற்பூர், அலகாபாத் போன்ற இடங்களைக் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மொத்தம் 12 இரவுகள், 13 பகல்கள் கொண்ட இந்த சுற்றுலாவுக்கு கட்டணம் ₹14,490 ஆகும். இதில், ரயில் கட்டணம், தங்கும் வசதி, சைவ உணவு ஆகியவை அடங்கும். இதில் பங்கேற்க விரும்புவோர் 2 தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு ஐஆர்சிடிசி கூறியுள்ளது.

---

7. துப்பாக்கி சுடுதல்: மானு/ஜாவத் ஜோடிக்கு தங்கம்

போலந்தில் நடைபெற்ற சர்வதேச துப்பாக்கி சுடுதல் சம்மேளனத்தின் (ஐஎஸ்எஸ்எஃப்) பிரெசிடென்ட்'ஸ் கோப்பை போட்டியில் இந்தியாவின் மானு பாக்கர்/ஈரானின் ஜாவத் ஃபருக்கி இணை கலப்பு அணிகள் பிரிவில் தங்கம் பதக்கம் வென்றது.

முதலிடத்துக்கான போட்டியில் இந்த இந்தோ/ஈரானியோ ஜோடி 16-8 என்ற புள்ளிகள் கணக்கில் பிரான்ஸின் மெதில்டா லமோலே/ஆர்டெம் சொர்னெளசோவ் இணையை தோற்கடித்தது. தகுதிச்சுற்றில் மானு/ஜாவத் இணை முறையே 582/600 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்து அரையிறுதிக்கு தகுதிபெற்றது. பின்னர் அதில் முதலிடம் பிடித்து இறுதிச்சுற்றுக்கு முன்னேறி, அங்கு தங்கம் வென்றது.

முன்னதாக 8 ஜோடிகள் தகுதிபெற்ற அரையிறுதிச் சுற்றில் மேலும் இரு இந்தியர்கள் இடம் பெற்றிருந்தனர். இந்தியாவின் அபிஷேக் வர்மா/உக்ரைனின் ஒலெனா கொஸ்டெவிச் இணை 6-ஆம் இடமும், இந்தியாவின் சௌரவ் சௌதரி/ஸ்விட்சர்லாந்தின் ஹெய்தி கொர்டைதெல்ம் ஜோடி 7-ஆம் இடமும் பிடித்தன. இது தவிர போட்டியில் கலந்துகொண்டிருந்த இந்தியாவின் யஷஸ்வி தேஸ்வால்/ஸ்லோவேகியாவின் ஜூராஜ் டுஸின்ஸ்கி 10-ஆவது இடம் பிடித்தது.

சௌரவுக்கு வெள்ளி: ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் சௌரவ் சௌதரி வெள்ளியும், அபிஷேக் வர்மா

வெண்கலமும் வென்றனா். ஜோ்மனி வீரா் கிறிஸ்டியன் ரெய்ட்ஸ் 34 புள்ளிகளுடன் முதலிடம் பிடிக்க, சௌரவ் 24, அபிஷேக் 21 புள்ளிகளுடன் முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனா்.

---

8. யு-23 மல்யுத்த சாம்பியன்ஷிப்: இந்தியாவுக்கு மேலும் 3 வெண்கலம்

சொ்பியாவில் நடைபெறும் 23 வயதுக்கு உள்பட்டோருக்கான (யு-23) உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவுக்கு மேலும் 3 வெண்கலப் பதக்கங்கள் கிடைத்துள்ளது.

இதையடுத்து இப்போட்டியில் இந்தியா வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை 5 ஆகியுள்ளது.

மகளிருக்கான வெண்கலப் பதக்க சுற்றில் இந்தியாவின் 3 வீராங்கனைகள் வென்ன் பேரில் இந்த எண்ணிக்கை உயா்ந்துள்ளது. 62 கிலோ பிரிவில் ராதிகா 6-4 என்ற புள்ளிகள் கணக்கில் இத்தாலியின் அரோரா கேம்பாக்னாவை தோற்கடித்தாா். 65 கிலோ பிரிவில் நிஷா 10-0 என்ற புள்ளிகள் கணக்கில் லாத்வியாவின் எல்மா ஸிட்லெரெவை வீழ்த்தினாா். 72 கிலோ பிரிவில் திவ்யா கக்ரான் 6-2 என்ற புள்ளிகள் கணக்கில் அமெரிக்காவின் காய்லா மேரி மரானோவை வென்றாா்.

முன்னதாக 50 கிலோ பிரிவில் ஷிவானி வெள்ளியும், 55 கிலோ பிரிவில் அஞ்சு வெண்கலமும் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் ஆடவருக்கான ஃப்ரீஸ்டைல் பிரிவு வெண்கலப் பதக்க சுற்றில் இந்தியாவின் சௌரவ் மதுகா் - ஆா்மீனியாவின் மேனுவல் கந்த்சா்த்சியானை சந்திக்கிறாா்.

---

9. சீனாவிண்ணில் செலுத்தப்பட்ட 3 செயற்கைக்கோள்கள்

தென்மேற்கு சிசுவான் மாகாணத்தின் ஜிசாங் ஏவுதளத்திலிருந்து 3 தொலையுணா்வு செயற்கைக்கோள்களை சீனா சனிக்கிழமை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

யாவ்கான்-35 ரகத்தைச் சோ்ந்த அந்த செயற்கைக்கோள்கள், லாங் மாா்ச்-2டி ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டன. லாங் மாா்ச் ராக்கெட் மூலம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட 396-ஆவது செயற்கைக்கோள் திட்டம் இது என்று அரசுக்குச் சொந்தமான ஜின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

10. 3-ஆவது முறையாக ஷி ஜின்பிங் பதவி நீட்டிப்பு?

அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில், இதுவரை இல்லாத வகையில் அதிபா் ஷி ஜின்பிங்கின் பதவிக் காலம் 3-ஆவது முறையாக நீட்டிக்கப்படும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

68 வயதாகும் ஷி ஜின்பிங், சீன கம்யூனிஸ்ட் கட்சி, மத்திய ராணுவ ஆணையம் ஆகியவற்றின் தலைமைப் பொறுப்பையும் முப்படைகளைக் கட்டுப்படுத்தும் அதிபா் பொறுப்பையும் வகித்து வருகிறாா். இதன் மூலம், நாட்டின் 3 அதிகார பீடங்களும் அவரது கட்டுப்பாட்டில் உள்ளன.

இந்தச் சூழலில், வரும் திங்கள்கிழமை தொடங்கவிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் அவா் பங்கேற்கிறாா்.

அந்த மாநாட்டில், கட்சி அண்மைக்காலமாக ஆற்றியுள்ள வரலாற்றுச் சாதனைகளைப் பட்டியலிட்டு தீா்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாக அரசுக்குச் சொந்தமான ஜின்ஹுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

11-ஆம் தேதி வரை நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில், ஷி ஜின்பிங்கின் பதவிக் காலம் 3-ஆவது முறையாக நீட்டிக்கப்படும் என்று எதிா்பாா்க்கப்படுகிறது. மாவோ-சேதுங்குக்குப் பிறகு சீனாவின் மிக சக்தி வாய்ந்த தலைவராகக் கருதப்படும் ஷின்பிங், 3-ஆவது முறையாக மேலும் 5 ஆண்டுகளுக்கு அதிபா் பதவியில் நீடித்தால் சீன வரலாற்றில் அதுவே முதல்முறையாகும்.

சீனாவில் இதற்கு முந்தைய அதிபா்கள் அனைவரும் 2 முறை ஆட்சி செலுத்தியதற்குப் பிறகோ, தங்களுக்கு 68 வயது பூா்த்தியான பிறகோ பதவியிலிருந்து ராஜிநாமா செய்து வந்தனா். இந்தச் சூழலில், கடந்த 2018-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியல் சாசனத் திருத்தத்தில், ஒருவா் இரு முறை மட்டுமே அதிபராகத் தோ்ந்தெடுக்கப்பட முடியும் என்ற வரம்பு நீக்கப்பட்டது. இது, ஷி ஜின்பிங்கின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான முன்னேற்பாடாகக் கருதப்பட்டது.

இந்த நிலையில், முக்கிய முடிவுகளை எடுப்பதற்கான கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு அடுத்த வாரம் கூடுகிறது என்று பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

1. 'நீடித்த நகர்ப்புற குளிரூட்டும் கையேடு' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ) UNEP ☑

ஆ) FAO

இ) NITI ஆயோக்

ஈ) நபார்டு

✓ ஐநா சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP) 'நீடித்த நகர்ப்புற குளிரூட்டும் கையேடு' என்ற புதிய அறிக்கையை வெளியிட்டது. அறிக்கையின்படி, புவி வெப்பமடைதல் கட்டுப்பாடில்லாமல் தொடர்வதால் நகரங்கள் இதனால் வெகுவாக பாதிப்படையும். அதிக வெப்பமடைந்த நகரங்கள் காலநிலை மாற்ற செலவினங்களை எதிர்கொள்ளும். உலகில் உள்ள 1692 பெரிய நகரங்களின் பகுப்பாய்வின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

---

2. 2021 நவம்பர் நிலவரப்படி, பவரிங் பாஸ்ட் நிலக்கரி கூட்டணியில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன?

அ) 8

ஆ) 18

இ) 48 ☑

ஈ) 88

✓ Powering Past Coal Alliance (PPCA) என்பது நிலக்கரியை படிப்படியாக அகற்றுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு கூட்டணியாகும். COP உச்சிமாநாட்டில் 28 நாடுகள் இந்தக்கூட்டணியில் இணைந்தன. இதன் மூலம் இந்தக் கூட்டணியின் மொத்த எண்ணிக்கை 48 ஆனது.

✓ உக்ரைன், போலந்து மற்றும் சிங்கப்பூர் ஆகியவை PPCA'இன் புதிய உறுப்பினர்களுள் அடங்கும். எனினும், உலகளவில் மூன்று மிகப்பெரிய நிலக்கரி உபயோகிப்பாளர்களான சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் PPCA'இல் சேரவில்லை.

---

3. Inti tanager (*Heliothraupis oneilli*) என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பின்வரும் எந்த உயிரினமாகும்?

அ) பறவை ☑



ஆ) மீன்

இ) பாம்பு

ஈ) சிலந்தி

✓ Inti tanager (*Heliothraupis oneilli*) எனப் பெயரிடப்பட்ட, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இவ்வினம், 370'க்கும் மேற்பட்ட பாடும்பறவை இனங்களை உள்ளடக்கிய Thraupidae பெருங்குடும்பத்தைச்சேர்ந்தவை. இந்தப்பறவைகள் கிட்டத்தட்ட அமெரிக்க வெப்பமண்டலங்கள் முழுவதும் பரவியுள்ளன. இந்தக குறிப்பிட்ட பறவை பொலிவியா மற்றும் பெருவின் யுங்காஸ் பயோரிஜியனில் வாழ்கிறது.

---

4. இந்திய வான்படையுடன் இணைந்து ஸ்மார்ட் விமானத்திடல் எதிர்ப்பு ஆயுதத்தை அறிமுகப்படுத்தியுள்ள அமைப்பு எது?

அ) இஸ்ரோ

ஆ) டிஆர்டிஓ ☑

இ) BHEL

ஈ) HAL

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) மற்றும் இந்திய விமானப்படை இணைந்து உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஸ்மார்ட் விமானத்திடல் எதிர்ப்பு ஆயுதத்தின் சோதனைகளை மேற்கொண்டன. இந்த ஆயுதம் ராஜஸ்தானின் ஜெய்சால்மரில் உள்ள சந்தன் மலைத்தொடரில் இருந்து IAF விமானம்மூலம் ஏவப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த அமைப்பு அதிகபட்சமாக 100 கிமீ வரம்பு வரை செல்ல வடிவமைக்கப்பட்டுள்ளது.

---

5. நடப்பாண்டில் (2021) வரும் உலக நகரங்கள் நாளுக்கான கருப் பொருள் என்ன?

அ) Designed to Live Together

ஆ) Adapting Cities for Climate Resilience ☑

இ) Changing the world

ஈ) Promoting a better urban future

✓ உலகளாவிய நகரமயமாக்கலில் ஆர்வங்கொண்ட சர்வதேச சமூகங்களை ஊக்குவிப்பதற்காகவும் நகரமயமாக்கலில் சவால்களை எதிர்கொள்ளும் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு நல்குவதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் அக்.31 அன்று ஐநா அமைப்பின் உலக நகரங்கள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Adapting Cities for Climate Resilience" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். "Better City, Better Life" என்பது இந்நாளுக்கு வழங்கப்பெறும் பொதுவான கருப் பொருளாகும்.

---

6. உலக சிக்கன நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?

அ) அக்டோபர் 30 ☑



ஆ) அக்டோபர் 31

இ) நவம்பர் 01

ஈ) நவம்பர் 02

✓ மக்களிடம் சிக்கனத்தின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்துவத்–தையும் உணர்த்தும் நோக்கில், ஒவ்வோர் ஆண்டும் அக்.30 அன்று இந்தியாவில் (அக்டோபர்.31 அன்று உலகளவில்) உலக சிக்கன நாள் (World Thrift Day) கொண்டாடப்படுகிறது.

7.உலக சுனாமி விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) நவம்பர் 02

ஆ) நவம்பர் 03

இ) நவம்பர் 04

ஈ) நவம்பர் 05 ☑

✓ ஆழிப்பேரலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் நவ.5 அன்று உலக சுனாமி விழிப்புணர்வு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. எப்போதாவது ஒருமுறை நேரக்கூடிய ஓர் இயற்கை சீற்றந்தான் இந்த ஆழிப்பேரலை. ஆனால் இது மிகமிகக் கோரமானது. கடந்த நூறாண்டுகளில் ஏற்பட்ட 58 ஆழிப்பேரலைகளால் மட்டும் சுமார் 2,60,000 பேர் மாண்டுள்ளனர்.

---

8. நடப்பாண்டில் (2021) வரும் அமைதி மற்றும் வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Science, a Human Right

ஆ) Science for Global Understanding

இ) Celebrating Science Centres and Science Museums

ஈ) Building Climate–Ready Communities ☑

✓ பொது மக்களிடையே அறிவியலின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவ.10 அன்று உலக அமைதி மற்றும் வளர்ச்சிக்கான அறிவியல் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ நமது அன்றாட வாழ்வில் அறிவியலின் முக்கியத்துவத்தையும் இந்த நாள் சிறப்பித்துக் கூறுகிறது. நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருள், "Building Climate–Ready Communities" என்பதாகும்.

---

9. "The State of Climate Ambition" என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட அமைப்பு எது?

அ) UNGA

ஆ) UNDP ☑

இ) IMD

ஈ) WHO

✓ ஐநா வளர்ச்சித்திட்டமானது (UNDP) "The State of Climate Ambition" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- ✓ 93% குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகள், மேம்படுத்தப்பட்ட தேசிய கால நிலை உறுதிமொழிகளை சமர்ப்பித்துள்ளதாக இவ்வறிக்கை கூறியுள்ள –து. COP26 காலநிலை பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை தற்போதைய காலநிலை போக்குகளுக்கும் 2019ஆம் ஆண்டு NDC அறிக்கையில் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கும் இடையே ஓர் ஒப்பீட்டு ஆய்வை மேற்கொள்கிறது.

---

10. சமுத்ராயன் முயற்சியின்கீழ், இந்தியாவில் வடிவமைக்கப்பட்ட ஆழ்கடல் கலத்தின் பெயர் என்ன?

அ) ஜடாயு 6000

ஆ) சமுத்ரா 6000

இ) மத்ஸ்யா 6000 ☑

ஈ) மேரு 6000



- ✓ 'மத்ஸ்யா 6000' என்பது சமுத்ராயன் முயற்சியின்கீழ் வடிவமைக்கப்பட்ட ஆழ்கடல் கலமாகும். 2024 டிசம்பருக்குள் தகுதிச்சோதனைகளுக்கு இக்கலம் தயாராகிவிடும். 1000 முதல் 5500 மீட்டர் ஆழத்தில் இதனால் வேலைசெய்யவியலும். பாலி–மெட்டாலிக் மாங்கனீசு முடிச்சுகள், வாயு ஹைட்ரேட்டுகள், ஹைட்ரோ–தெர்மல் சல்பைடுகள் மற்றும் கோபால்ட் மேலோடுகள் போன்ற உயிரற்ற வளங்களின் ஆய்வுகளை மேற்கொள்–வதற்கு இந்தத் தொழில்நுட்பம் உதவும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. விவசாயப் பாதுகாப்பு செயல்திட்டம்: பருவநிலை மாநாட்டில் இந்தியா கையொப்பம்

ஸ்காட்லாந்தில் நடைபெற்று வரும் பருவநிலை மாற்ற மாநாட்டில் முன்வைக்கப்பட்ட உலகளாவிய விவசாயப் பாதுகாப்பு செயல்திட்ட உறுதிமொழி ஆவணத்தில் இந்தியா கையொப்பமிட்டுள்ளது.

இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்று வரும் ஐநா'இன் 26–ஆவது பருவநிலை மாற்ற மாநாட்டில், விவசாயப் பாதுகாப்புக்கான செயல்திட்டம் முன்வைக்கப்பட்டது. 'உழவை நீடித்து நிலைத்திருக்கச் செய்வதற்கும் உழவுத்துறையில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்வ –தற்குமான விவசாயக் கொள்கை செயல்திட்டம்' என்ற பெயரில் முன்வைக்கப்பட்ட அச்செயல்திட்டத்துக்கான உறுதிமொழி ஆவணத்தில் இந்தியா உள்ளிட்ட 27 நாடுகள் கையொப்பமிட்டன.

அந்த செயல்திட்டத்தில், நாடுகள் தங்கள் விவசாயத்தை மேம்படுத்துவதோடு, அதிக காற்று மாசுபாட்டை ஏற்படுத்தாத வகையில் விவசாயப் பணிகளில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான உறுதிமொழிகள் இடம் பெற்றுள்ளன.

பிரிட்டனின் இந்திய வம்சாவளி கேபினெட் அமைச்சரும், 26–ஆவது ஐ.நா. பருவநிலை மாற்ற மாநாட்டின் தலைவருமான அலோக் சா'மா கூறுகையில், 'புவி வெப்பமாதலைக் கட்டுப்படுத்தவும் உலகின் வெப்பநிலை தொழில் புரட்சிக்கு முன்பிருந்ததைவிட 1.5 டிகிரி செல்சியஸ் மட்டுமே அதிகமாக இருக்க வேண்டும் என்ற இலக்கை சாத்தியமாக்கவும், வேளாண் நிலத்தை முறையாகப் பயன்படுத்தி இயற்கை வளத்தை மீட்டெடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்' என்றார்'.

இந்த செயல்திட்ட உறுதிமொழி ஆவணத்தில் இந்தியா மட்டுமன்றி பிரிட்டன், ஆஸ்திரேலியா, உகாண்டா, மடகாஸ்கர், தான்ஸானியா, வியத்நாம், நைஜீரியா, லாவோஸ், இந்தோனேசியா, கினியா, கானா, ஜொ'மனி, பிலிப்பின்ஸ், எத்தியோப்பியா, கொலம்பியா, கோஸ்டாரிகா, மொராக்கோ, நெதா'லாந்து, நியூஸிலாந்து, நைஜீரியா, சியரா லியோன், ஸ்பெயின், ஸ்விட்சா'லாந்து, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகளும் கையொப்பமிட்டுள்ளன.

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் வரும் நவ.12–ஆம் தேதி வரை பருவநிலை மாற்ற மாநாடு நடைபெறுகிறது.

---

2. இந்தியாவின் சூரிய மின் உற்பத்தித் திறன் 17 மடங்கு அதிகரிப்பு

நாட்டின் சூரிய மின் உற்பத்தித் திறன் கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் 17 மடங்கு அதிகரித்துள்ளதாக ஸ்காட்லாந்தில் நடைபெற்று வரும் பருவநிலை மாநாட்டில் இந்தியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மாநாட்டில் இந்தியாவின் சார்'பில் பேசிய சுற்றுச்சூழல் துறை அமைச்சக ஆலோசகர்' ஜே.ஆர்'. பட் கூறியதாவது:

உலகின் 17 சதவீத மக்கள் இந்தியாவில் வசிக்கிறார்'கள். இருந்தபோதும், இதுவரை இந்தியாவிலிருந்து காற்றில் கலந்துள்ள பசுமைக் குடில் வாயுக்கள் மற்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் வெறும் 4 சதவீதம் மட்டுமே ஆகும்.

மேலும், இந்தியாவின் வருடாந்திர பசுமைக் குடில் வாயு வெளியேற்றமும் சுமார்' 5 சதவீதமாக மட்டுமே உள்ளது.

பசுமைக் குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை அதிகரிக்காமல் நாட்டின் பொருளாதார வளர்'ச்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்தியா தொடர்'ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சூரிய மின் உற்பத்திக்கு நாடு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கடந்த 7 ஆண்டுகளில் மட்டும் இந்தியாவின் சூரிய மின் உற்பத்தித் திறன் 17 மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டின் சூரிய மின் உற்பத்தித் திறன் 45 ஜிகாவாட்ஸாக உள்ளது என்றார்' அவர்'.

பூமியை வெப்பமாக வைத்திருப்பதற்கு உதவும் கார்'பன் டைஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற வாயுக்கள் பசுமைக் குடில் வாயுக்கள் என்றழைக்கப்படுகின்றன.

அந்த வாயுக்களும் வளிமண்டலத்தில் இருக்கும் நீராவியும்தான் சூரியனின் வெப்பத்தை உறிஞ்சி பூமியில் தாவரங்கள் உள்ளிட்ட உயிரினங்கள் நிலைத்திருப்பதற்கு உதவி செய்கின்றன.

அந்த வாயுக்கள் இல்லாவிட்டால் பூமியின் சராசரி வெப்பநிலை உறைநிலைக்குக் கீழே 18 டிகிரி செல்சியஸாக இருந்திருக்கும்.

இந்தச் சூழலில், உலகில் தொழில் புரட்சி ஏற்பட்டு தொழிற்சாலைகளும் வாகனங்களும் கார்'பன் மோனாக்ஸைடு போன்ற பசுமைக் குடில் வாயுக்களை அதிக அளவில் காற்றில் கலந்து வருவதால் அவை சூரியனிடமிருந்து வெப்பத்தை அதிகம் உறிஞ்சி புவியின் வெப்பநிலை அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக பருவநிலை மாற்றம் ஏற்பட்டு, புயல், வெள்ளம், அனல் காற்று போன்ற இயற்கைப் பேரிடர்'கள் அதிகரித்து வருகின்றன. மேலும், அண்டார்'டிகாவில் பனி மலைகள் உருகி கடலின் நீர்'மட்டம் அதிகரித்து வருவதால் உலகின் பல பகுதிகள் கடலில் மூழ்கும் அபாயத்தை எதிர்'நோக்கியுள்ளன.

---

3. உலகின் பிரபலமான தலைவர்களில் பிரதமர் மோடி தொடர்ந்து முதலிடம்

உலகின் பிரபல தலைவர்களில் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து 3–வது முறையாக முதலிடம் பிடித்துள்ளார்.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பிரபல கருத்துக் கணிப்பு நிறுவனமான 'மார்னிங் கன்சல்ட்' நிறுவனம் உலக தலைவர்களின் தலைமை குறித்து அவ்வப்போது கணக்கெடுப்பு நடத்தி அறிக்கை வெளியிட்டு வருகிறது.

இதன்படி அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், தென்கொரியா, பிரேசில், இந்தியா, மெக்ஸிகோஆகிய 13 நாடுகளின் மக்களிடம் அண்மையில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி முதலிடம் பிடித்துள்ளார். இந்தியாவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 70 சதவீதம் பேர் அவரது தலைமையை அங்கீகரித்து ஆதரவு அளித்துள்ளனர். 24 சதவீதம் பேர் மட்டும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

'மார்னிங் கன்சல்ட்' நிறுவனம், இந்த ஆண்டில் இதுவரை 3 முறை கருத்துக் கணிப்பை நடத்தியுள்ளது. இந்த 3 கருத்துக் கணிப்புகளிலும் பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடிக்கு அடுத்து மெக்ஸிகோ அதிபர் லோபஸ் ஒபரடோர் 66 சதவீத வாக்குகளை பெற்று 2–வது இடத்தைப் பிடித்துள்ளார்.

இத்தாலி பிரதமர் மரியோ திராகி (58%), ஜெர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்கெல் (54%), ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட்மோரிசன் (47%), அமெரிக்க அதிபர் ஜோ பைடன் (44%), கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ (43%), ஜப்பான் பிரதமர் புமியோ கிஷாடா (42%), தென்கொரிய அதிபர் மூன் ஜோ-இன் (41%), பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் (40%), ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் (37%), பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மெக்ரான் (36%), பிரேசில் அதிபர் ஜேர்போல்சோனரோ (35%) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளனர்.

கடந்த கருத்துக் கணிப்புகளைவிட அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர் பின்தங்கியுள்ளனர். இந்திய பிரதமர் மோடி மட்டும் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

---

4. எல்லைப் போராட்டமா, பெயர் மாற்றமா?

சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று சட்டமன்றத்தில் பெயர்மாற்றத் தீர்மானம் நிறைவேற்றிய ஜூலை 18-ம் தேதியைத் தமிழ்நாடு தினமாகச் சமீபத்தில் அறிவித்தது திமுக அரசு. மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நவ.1-ம் தேதியைக் கொண்டாடுவதுதானே முறையானது என்று வாதிடுகின்றன அதிமுகவும் அமமுகவும்.

கூட்டணிக்குள் கருத்து வேறுபாடு

அனைத்துக் கட்சித் தலைவர்களோடு தமிழறிஞர்களையும் எல்லைப் போராட்டத் தியாகிகளையும் அழைத்து ஒருமனதாக இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியுள்ளார் விசிக தலைவர் தொல் திருமாவளவன். தமிழ்நாடு தினம் மாற்றப்பட்டதை மதிமுக தலைவர் வைகோ வரவேற்றிருந்தாலும் அவர் விடுத்துள்ள விரிவான அறிக்கை எல்லைப் போராட்டத் தியாகிகளை நினைவுகூரும் வகையிலேயே அமைந்துள்ளது. நவம்பர் 1-ம் தேதியை எல்லைப் போராட்ட வீரர்கள் நினைவு தினமாகக் கொண்டாட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நவம்பர் 1-ஐ தமிழ்நாடு தினமாக அதிமுக அறிவித்தபோது வரவேற்ற சிபிஐ கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், அந்த நாளை திமுக அரசு ஜூலை 18-க்கு மாற்றியதையும் வரவேற்றுள்ளார். எல்லைப் போராட்டத்தை நினைவுகூரும் வகையில் நவம்பர் 1, பெயர் மாற்றத்தை நினைவுகூரும் ஜூலை 18 என்று இரண்டு நாட்களையும் கொண்டாடலாம் என்றொரு கருத்தைத் தெரிவித்துள்ளார் சிபிஐ(எம்) மாநிலச் செயலாளர் கே பாலகிருஷ்ணன். தமிழ்நாடு பெயர் மாற்றத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால், அவர்களிடையே இது குறித்த கருத்தொருமிப்பு இல்லை என்று தெரிகிறது.

தமிழ்நாடு தினம் ஜூலை 18-க்கு மாற்றப்பட்டதை முழு மனதோடு ஆதரித்து நிற்பது தி.க. தலைவர் கி வீரமணி மட்டும்தான். 'தாம் கேட்டுக்கொண்டதைச் சிந்தித்து முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்திருப்பதாகக்' கூறுகிறது அவரின் அக்.30 தேதியிட்ட அறிக்கை. மதுரை சென்றிருந்த முதல்வரைத் தமிழ் ஆர்வலர்கள் சிலரும் சந்தித்து இதே கோரிக்கையை விடுத்தார்கள். ஆக, இது திமுக தம் விருப்பத்தின் பெயரால், தம் கட்சியின் நிறுவனரை முன்னிறுத்துவதற்காகக் கொண்டுவந்த மாற்றமல்ல; தாய்க் கழகத்தின் வேண்டுகோளை ஏற்று, தமிழறிஞர்கள் சிலரின் கோரிக்கையைப் பரிசீலித்து எடுத்த முடிவு.

கல்குளம் துப்பாக்கிச் சூடு

1967-ல் அண்ணா தலைமையிலான திமுக அரசு 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது இந்திய வரலாற்றின் முக்கிய நிகழ்வு. ஆனால், எந்தவொரு மாநில அரசும் தனது பெயரைத் தன்னிச்சையாக மாற்றிக்கொள்வதற்கு இந்திய அரசமைப்பில் அதிகாரம் அளிக்கப்படவில்லை. சட்டமன்றத் தீர்மானம் நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே பெயர் மாற்றம் நிகழும். அவ்வாறு நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பெயர்மாற்றம் நடைமுறைக்கு வந்த நாள் 1969 ஜனவரி 14.

தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்துக்காகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே 1963-ல் நாடாளுமன்றத்தில் அத்தகையதொரு பெயர் மாற்றத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் கம்யூனிஸ்ட் தலைவர் பூபேஷ் குப்தா. பம்பாய் மாநிலத்தை மஹாராஷ்டிரம், குஜராத் என்று பிரித்த பிறகு, அம்மாநிலத்தின் பெயரை மஹாராஷ்டிரம் என்று மாற்றிய நிலையில், சென்னையிலிருந்து ஆந்திரம் பிரிந்த பிறகு, தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதுதானே முறை என்ற கேள்வியை எழுப்பினார் அவர். தமிழ்நாட்டு மக்களுக்காகப் பேசுவதற்கு உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் அவரது பேச்சின் இடையே குறுக்கிட்டதும் நாடாளுமன்ற விவாதங்களில் பதிவாகியுள்ளது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அண்ணா அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். தமிழ்நாடு பெயர் மாற்றத்தை வலியுறுத்தி சென்னை சட்டமன்றத்தில் அண்ணாவுக்கு முன்பிருந்தே பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் பேசியுள்ளனர்.

இன்றைக்கு, தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்கான சட்டமன்றத் தீர்மானத்தை மட்டுமே முதன்மையெனக் கொள்ளும்பட்சத்தில், வரலாற்றின் ஒரு பக்கத்தை மட்டும் முன்னிறுத்துபவர்கள் ஆவோம். சென்னைத் தலைநகரத்தையும் வடக்கு, தெற்கு எல்லைகளையும் காத்து நின்ற தலைவர்கள் பலரையும் நாம் நினைவுகூரத் தவறியவர் ஆகிவிடுவோம்.

ஆந்திரம் தவிர்த்த சென்னை மாநிலத்துக்குச் சென்னையே தலைநகராக இருக்க வேண்டும் என்று போராடியவர் மபொ சிவஞானம். அதற்கு ஆதரவாக அன்றைய முதல்வர் ராஜாஜியும் உறுதியாக நின்றார். ஆந்திரம் பிரிக்கப்பட்டபோது திருத்தணியை மீட்கக் காரணமாக அமைந்ததும் ம.பொ.சி. முன்னெடுத்த போராட்டங்கள்தான். திமுகவும் அவரோடு களத்தில் கைகோத்து நின்றது. அதைப்போலவே, தெற்கே திருவிதாங்கூருடன் சேர்ந்திருந்த தமிழ் பேசும் பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்ற போராட்டம் 1954-ல் தீவிரமடைந்தது. அதிலும் திமுக பங்கேற்றது. தெற்கெல்லைப் போராட்டத்தை பிஎஸ் மணியும் மார்ஷல் நேசமணியும் வழிநடத்தினார்-கள். அப்போது, கல்குளத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 10'க்கும் மேற்பட்ட தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

சங்கரலிங்கனாரின் உயிர்த்தியாகம்

ஜவாஹர்லால் நேரு முன்மொழிந்த தட்சிணப் பிரதேசத் திட்டத்தை 1956-ல் திமுக மட்டுமே எதிர்க்கவில்லை. தமிழரசுக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பிரஜா சோஷலிஸ்ட் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து எதிர்த்தன. அப்போதே தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்தை ஒரே குரலில் முன்வைத்தன. தமிழ்நாடு என்ற வார்த்தையை உச்சரிக்கும்தோறும் தியாகி சங்கரலிங்கனாரை நினைவுகூர வேண்டும். தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம் உள்ளிட்ட 12 கோரிக்கைகளுக்காக, 1956 ஜூலை 27-ல் விருதுநகர் குளக்கரை மேட்டில் தனது 61-வது வயதில் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார் அவர். கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் கமிட்டி அவரைத் தேசபந்து மைதானத்துக்கு அழைத்துவந்தது. அண்ணாவும் மபொசி'உம் அந்தத் தியாகியைச் சந்தித்து, அவரது போராட்டத்துக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். உடல்நிலை மோசமான நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சங்கரலிங்கனார் அங்கேயே இறந்தார். அவரையடுத்து தமிழ்நாடு பெயர் மாற்ற முழக்கத்தை ம.பொ.சி. இன்னும் தீவிரப்படுத்தினார். அண்ணா அந்த விருப்பத்தைத் தனது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றினார்.

சென்னையைத் தலைநகராகக் கொண்டு ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட வேண்டும் என்று 1952-ல் 58 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்த பொட்டி ஸ்ரீராமுலுவை ஆந்திரம் இன்றும் நினைவில் வைத்திருக்கிறது. சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்காக 76 நாட்கள் பட்டினி கிடந்து, உயிர்துறந்த சங்கரலிங்கனாரை நாம் மறந்துவிட்டோம். எத்தனை உயிரிழப்புகள்... எத்தனை கைதுகள்... எத்தனை தடியடிகள்... அந்த நீண்ட நெடிய போராட்டத்தின் உச்சம்தான் தமிழ்நாடு எனும் பெயர் மாற்றம். இதை நடைமுறை சாத்தியமாக ஆக்கியது அண்ணாதான் என்பது வரலாறு.

---

5. 13 ஆண்டு இடைவெளிக்கு பிறகு இந்திய நேயர்களுக்காக ஒலிபரப்பை மீண்டும் தொடங்கும் கொழும்பு வானொலி

13 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் இந்திய நேயர்களுக்காக கொழும்பு சர்வதேச வானொலி ஒலிபரப்பை தொடங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

லண்டன் பிபிசி தமிழோசை, சிங்கப்பூர் ஒலி, மலேசிய வானொலி கழகம், பாகிஸ்தான் சர்வதேச வானொலி, சீனதமிழ் வானொலி, வாய்ஸ் ஆப் அமெரிக்கா,ஜெர்மன் ரேடியோ, ஆஸ்திரேலியா ஆகிய வெளிநாட்டு வானொலி நிலையங்கள் தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பின.

இருப்பினும் முதன் முதலில் தமிழ் வானொலி ஒலிபரப்பை தொடங்கியது இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் ஆகும். 1925-ல் 'சிலோன் ரேடியோ' என்றபெயரில் நிறுவப்பட்ட இலங்கை ஒலி பரப்புக் கூட்டு ஸ்தாபனத்துக்குத்தான் உலகின் 2-வது வானொலி நிலையம் என்றபெருமையும் உண்டு. பிபிசி வானொலி 1922-ல் லண்டனில் நிறுவப்பட்டது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாப னம் தனது வர்த்தக சேவை பிரிவை 30.9.1950-ல் தொடங்கியதும் இந்திய துணைக் கண்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இமயமலை உச்சியில் கால் பதித்த எட்மண்ட் ஹிலாரி, டென்சிங் நார்கே ஆகியோர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்தின் வர்த்தக ஒலிபரப்பை முதலில் செவிமடுத்தார்கள்.

பொங்கும் பூம்புனல், நேயர் விருப்பம், நீங்கள் கேட்டவை, அன்றும் இன்றும், புது வெள்ளம், மலர்ந்தும் மலராதவை, இசைத் தேர்தல், பாட்டுக்குப் பாட்டு, இசையும் கதையும், இன்றைய நேயர், விவசாய நேயர் விருப்பம், இரவின் மடியில் எனத் தூய தமிழில் புதுமையான நிகழ்ச்சிகளை வழங்கி தமிழகத்தில் தனக்கென்று நேயர்கள் வட்டத்தை இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் உருவாக்கிக் கொண்டது.

மேலும் அதில் பணியாற்றிய ஒலிபரப்பாளர்கள் எஸ்.பி.மயில்வாகனன், கே.எஸ். ராஜா, பி.ஹெச்.அப்துல் ஹமீது, ராஜேஸ்வரி சண்முகம் ஆகியோருக்கு தமிழகத்தின் முன்னணி சினிமா நட்சத்திரங்களுக்கு இருந்த ரசிகர்களின் எண்ணிக்கையைவிட நேயர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருந்தனர்.

இன்றளவும் உலகில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழ், சிங்களம், ஆங்கிலப் பாடல்களின் இசைத் தட்டுக்களைக் கொண்டே ஒரே வானொலி நிலையம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் மட்டுமே.

இலங்கை உள்நாட்டுப் போரினால் தமிழகத்தில் ஏற்பட்ட கடும் எதிர்ப்புகளால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் தனது இந்திய நேயர்களுக்கான கொழும்பு சர்வதேச ஒலிபரப்பை கடந்த 31.5.2008 அன்று நிறுத்திக் கொண்டது. மேலும் தமிழகத்தில் பண்பலை வானொலி நிலையங்கள் பரவலாக தொடங்கப்பட்ட பிறகும்கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு தமிழகத்தில் தவழாதா என்ற ஏக்கம் பல்வேறு நேயர்களுக்கு இருந்து வருகிறது.

ராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் ஆகிய கடற்கரை மாவட்டத்தில் உள்ள வானொலி நேயர்கள் இலங்கை ஒலிபரப்பிய சக்தி, தென்றல் போன்ற பண்பலைகளை தொடர்ந்து கேட்ட வண்ணம் இருந்தனர்.

இந்நிலையில் கொழும்பு சர்வதேச வானொலி ஒலிபரப்பை மீண்டும் தொடங்க வேண்டும் என்று பல தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். இதையடுத்து ஒலிபரப்பை மீண்டும் தொடங்கஇலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கான தீர்மானம் தீபாவளி அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தகவலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்தின் தமிழ்ச் சேவைகளின் பொறுப்பாளர் வீரசிங்கம் ஜெய்சங்கர் உறுதி செய்துள்ளார்.

---

6. ஒரு கோடி சைகோவ்-டி தடுப்பூசிக்கு ஒப்பந்தம்:

நாடு முழுவதும் இதுவரை பொதுமக்களுக்கு 100 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் சைடஸ் கெடிலா நிறுவனம் உருவாக்கி உள்ள ஊசி முறை அல்லாத சைகோவ்-டி தடுப்பூசிகளை வாங்க திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக ஒரு கோடிடோஸ்களை வாங்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. உலகின் முதல் டி என் ஏ அடிப்படையிலான தடுப்பூசியாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட சைகோவ்-டி 12 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கும் செலுத்த தகுதியான தடுப்பூசி என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மூன்று தவணையாக செலுத்தப்படும் இத்தடுப்பூசிக்கு ஒப்பதல் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வழங்கப்பட்ட நிலையில் உற்பத்தி மற்றும் விநியோகத்தை சைடஸ் கெடிலா தொடங்கி உள்ளது. தற்போது மாதம் ஒரு கோடி தடுப்பூசிகள் என்ற அளவில் உற்பத்தி திறன் கொண்டுள்ளது. உற்பத்தி திறன் அடிப்படையில் இளைஞர்களுக்கு முதலில் இந்த தடுப்பூசியை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தசைகோவ்-டி தடுப்பூசி வரி உட்பட ரூ.358க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதேசமயம் பாரத் பயோடெக்கின் கோவாக்ஸின் தடுப்பூசியை, அவசர கால அடிப்படையில் மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் 2 வயது முதல் 18 வயதுவரை உள்ளவர்களுக்கு வழங்கலாம் என கரோனா சிறப்பு நிபுணர் குழு ஒப்பதல் அளித்துள்ளது.

---

7. மகாராஷ்டிரத்தில் நான்கு வழிச்சாலை மேம்பாடு: பிரதமர் இன்று அடிக்கல்

மகாராஷ்டிர மாநிலத்தில் வைணவ துறவிகள் ஞானேஷ்வர், துகாராம் ஆகியோரது நினைவிடங்களுக்கு யாத்திரை செல்வதற்கு உதவும் நான்குவழிச் தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கு பிரதமர் நரேந்திர மோடி திங்கள்கிழமை அடிக்கல் நாட்டுகிறார்.

தேசிய நெடுஞ்சாலைகளின் இருபுறங்களிலும் நினைவிடங்களுக்கு பக்தர்கள் யாத்திரை செல்வதற்கான பிரத்யேக நடைபாதைகள் கட்டப்படவுள்ளன.

இதுதவிர, பண்டார்பூருக்குப் போக்குவரத்து இணைப்பை அதிகரிப்பதற்கான பலமுனை சாலைத் திட்டங்களையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிப்பார்

பண்டர்பூருக்கு வரும் பக்தர்களுக்கு வசதி செய்யும் முயற்சியாக துறவி ஞானேஷ்வர் நினைவிடத்தின் (என் எச் 965) ஐந்து பிரிவுகளில் நான்குவழிச் சாலைக்கும், துறவி துகாராம் நினைவிடத்தின் (என் எச் 965ஜி) மூன்று பிரிவுகளுக்கும் காணொலி முறையில் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டவுள்ளார்.

221 கிலோமீட்டர் மற்றும் 130 கிலோ மீட்டர் தொலைவுக்கு முறையே ரூ.6,690 கோடி, ரூ.4,400 கோடி மதிப்பீட்டில் தேசிய நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலும் பிரத்யேக நடைபாதைகளுடன் நான்குவழிச் சாலை அமைக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியின்போது, பண்டர்பூருக்கு போக்குவரத்துத் தொடர்பை அதிகரிப்பதற்காக பல்வேறு தேசிய நெடுஞ்சாலைகளில் ரூ.1,180 கோடிக்கும் கூடுதல் மதிப்பீட்டு செலவில் கட்டப்பட்டுள்ள 223 கிலோ மீட்டருக்கும் அதிகமான, மேம்படுத்தப்பட்ட சாலைத் திட்டங்களையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிப்பார்.

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி, மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே உள்ளிட்டோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

---

8. பில்லி ஜீன் கிங் கோப்பை: ரஷியா சாம்பியன்

பில்லி ஜீன் கிங் கோப்பை டென்னிஸ் போட்டியில் ஸ்விட்சர்லாந்தை வீழ்த்தி ரஷியா முதல் முறையாக சாம்பியன் ஆனது. அணிகள் போட்டியில் ரஷியா சாம்பியன் ஆவது இது 5-ஆவது முறையாகும்.

அணியாக நடைபெறும் இந்தப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் ரஷியாவின் டரியா கசாட்கினா 6-2, 6-4 என்ற செட்களில் ஸ்விட்சர்லாந்தின் ஜில் டெய்ச்மானை வீழ்த்தினார். மற்றொரு ஆட்டத்தில் ரஷியாவின் லுட்மிலா சாம்சனோவா 3-6, 6-3, 6-4 என்ற செட்களில் நடப்பு ஒலிம்பிக் சாம்பியனான ஸ்விட்சர்லாந்தின் பெலிண்டா பென்சிச்சை தோற்கடித்தார்.

இதனிடையே, பென்சிச்சுக்கு எதிரான ஆட்டத்தில் விதிகளை மீறிய வகையில் கடைசி நேரத்தில் பாவ்லியுசென்கோவாவுக்குப் பதிலாக சாம்சனோவாவை ரஷியா களமிறக்கியதாக ஸ்விட்சர்லாந்து குற்றம்சாட்டியுள்ளது. ஆட்டம் தொடங்குவதற்கு 15 நிமிஷங்களுக்கு முன்புதான் போட்டியாளர் மாற்றப்பட்டு தங்களுக்கு தெரிவிக்கப்பட்டதாக அந்த அணி கூறியுள்ளது.

எனினும், முதலில் முழங்கால் அசௌகர்யத்தால் அவதிப்பட்டதாலேயே பாவ்லியுசென்கோவாவை ஆட்டத்திலிருந்து விலக்கி சாம்சனோவாவை ஆடச் செய்ததாக ரஷிய தரப்பு விளக்கமளித்துள்ளது.

---

1. இந்திய இரயில்வே ஆனது எந்த நகரங்களுக்கு இடையே 'கதி சக்தி சூப்பர்ஃபாஸ்ட் சிறப்பு இரயிலை' அறிமுகப்படுத்தியுள்ளது?



அ) தில்லி–பாட்னா ☑

ஆ) தில்லி–வாரணாசி

இ) வாரணாசி–கேவாடியா

ஈ) தில்லி–நைனிடால்

✓ இந்திய இரயில்வே ஆனது தில்லி மற்றும் பாட்னா இடையே 'கதி சக்தி சூப்பர்ஃபாஸ்ட் சிறப்பு இரயிலைத்' தொடங்கியுள்ளது. இந்தப் பண்டிகைக் காலத்தில் பயணிகளின் வசதிக்காக ஆனந்த் விஹார் முனையம் – பாட்னா – ஆனந்த் விஹார் முனையம் வரை இந்தக் 'கதி சக்தி சூப்பர் பாஸ்ட் சிறப்பு இரயில் இயக்கப்படுகிறது.

---

2. 2021ஆம் ஆண்டு முதல் எத்தனை ஆண்டுகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக சக்திகாந்த தாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்?



அ) இரண்டு ஆண்டுகளுக்கு

ஆ) மூன்று ஆண்டுகளுக்கு ☑

இ) நான்கு ஆண்டுகளுக்கு

ஈ) ஐந்து ஆண்டுகளுக்கு

✓ அமைச்சரவையின் நியமனக்குழு, 10.12.2021'க்குப்பிறகு அல்லது அடுத்த உத்தரவு வரும் வரையில், இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) ஆளுநரான சக்திகாந்த தாஸை 3 ஆண்டுகளுக்கு மறுநியமனம்செய்து உத்தரவிட்டு உள்ளது. ஒய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான சக்திகாந்த தாஸ், டிசம்பர் 12, 2018 முதல் ரிசர்வ் வங்கியின் 25ஆவது ஆளுநராகப் பொறுப்பேற்றார். அவர் 15ஆவது நிதிக்குழுவின் உறுப்பினராகவும் ஓர் ஆண்டு காலம் பணியாற்றினார்.

✓ ஜூலை 1, 1949 முதல் ஜனவரி 14, 1957 வரை RBI'இன் ஆளுநராகப் பணியாற்றிய பெனகல் ராமா ராவ் அவர்களே RBI வரலாற்றில் அதிக நாள் ஆளுநராகப் பணியாற்றியவர் ஆவார்.

---

3. MSME'களுக்கு உதவும் வகையில் பொதுத்துறை கொள்முதல் மற்றும் திட்ட நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை தொடங்கியுள்ள நடுவண் அமைச்சகம் எது?

वित्त मंत्रालय
MINISTRY OF
FINANCE
सत्यमेव जयते

அ) MSME அமைச்சகம்

ஆ) நிதி அமைச்சகம் ☑

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகம்

✓ நிதி அமைச்சகமானது பொது கொள்முதல் மற்றும் திட்ட நிர்வாகத்தில் சீர்திருத்தங்களைத் தொடங்கியுள்ளது. இது திட்டங்களைச் செயல்படுத்த –வும், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSME) சரியான நேரத்தில் பணஞ்செலுத்தவும் நோக்கம் கொண்டது.

✓ இப்புதிய வழிகாட்டுதல்கள் ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மாற்று வழிமுறைகளைத் தருகிறது. பழைய முறை குறைந்த வணிக ஏலத்திற்கு அதிக ஆதரவளிக்கிறது.

---

4. தற்கொலைகள் குறித்த NCRB'இன் தரவுகளின்படி, நிகழ்ந்த மொத்த தற்கொலைகளில், பின்வரும் எந்தத் துறைசார்ந்தோர் அதிக பங்கினைக் கொண்டுள்ளனர்?

அ) தினக்கூலிகள் ☑

ஆ) இல்லத்தரசிகள்

இ) வேலையற்றோர்

ஈ) உழவர் பெருமக்கள்

✓ தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகளின்படி, 2020ஆம் ஆண்டில் மொத்தம் 37,666 தினக்கூலிகள் தற்கொலை செய்துகொண்டு இறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மொத்த தற்கொலைகளில் மிகப் பெரிய பங்கைக் கொண்டுள்ளது. அவர்களைப் பின்தொடர்ந்து இல்லத்த –ரசிகளும் உழவர் பெருமக்களும் உள்ளனர். இவ்வறிக்கையின்படி, கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டு 1.53 இலட்சத்திற்கும் அதிகமான தற்கொலைகள் பதிவாகியுள்ளன.

✓ 2020ஆம் ஆண்டில், இந்தியாவில் தினமும் சராசரியாக 31 குழந்தைகள் தற்கொலை செய்துகொள்வதாகவும் அது மேற்கோளிட்டுள்ளது. 2019ஆம் ஆண்டிலிருந்து 18 சதவீதம் அதிகரித்து 2020'இல் 11,396 குழந்தைகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

---

5. தேசபக்தி கீதம் இயற்றுவதற்கான போட்டிகளை அறிவித்துள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) வெளியுறவு அமைச்சகம்

ஆ) கலாச்சார அமைச்சகம் ☑

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ ஆசாதி கா அம்ரித் மகோத்சவத்தின்கீழ் மூன்று போட்டிகளை கலாச்சார அமைச்சகம் அறிவித்துள்ளது. அவை தேசபக்தி கீதம் இயற்றுதல், இரங் –கோலி வரைதல் மற்றும் லோரி எழுதுதல் ஆகும். இந்தப் போட்டிகள் தாலுகா மட்டத்திலிருந்து தேசிய அளவில் தொடங்கப்பட்டுள்ளன. இந்த முயற்சியை பிரதமர் மோடி மான்கிபாத் நிகழ்ச்சியில் அறிவித்தார். இந்தப் போட்டி ஒரிரு மாதங்களுக்கு நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

---

6. அண்மையில் தொடங்கப்பட்ட 'டையரி சகாகர்' திட்டத்தைச் செய –ல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?



அ) உழவு மற்றும் குடும்பநல அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) கூட்டுறவு அமைச்சகம் ☑

ஈ) உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சகம்

✓ அமுலின் 75ஆவது நிறுவன ஆண்டு கொண்டாட்டத்தின்போது, குஜராத் மாநிலம் ஆனந்த் என்ற இடத்தில், மத்திய அமைச்சர் அமித் ஷா, "டையரி சகாகர்" திட்டத்தை தொடங்கி வைத்தார். கூட்டுறவு அமைச்சகத்தின்கீழ், மொத்தம் ₹5000 கோடி முதலீட்டில், என்சிடிசியால் டையரி சகாகர் திட்டம் செயல்படுத்தப்படும்.

✓ இந்தத்திட்டத்தின்கீழ், பால் கொள்முதல், பதப்படுத்துதல், தர உத்தரவாதம், மதிப்புக்கூட்டல், பிராண்டிங், பேக்கேஜிங், சந்தைப்படுத்தல், பொருட்கள் மற்றும் ஏற்றுமதிகளின் போக்குவரத்து மற்றும் சேமிப்பு போன்ற பல்வேறு நடவடிக்கைகட்கு தகுதியுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

---

7. முதன்முறையாக தும்பியினங்களை ஆவணப்படுத்தியுள்ள மாநிலம் எது?



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கர்நாடகா

✓ பூச்சியியல் வல்லுநர்கள் குழு முதன்முறையாக கேரள மாநிலத்தில் தும்பியினங்களை ஆவணப்படுத்தியுள்ளது. கேரளாவில் 181 வகையான தும்பியினங்கள் உள்ளன. இது மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்குச் சொந்தமான 68 இனங்களையும் உள்ளடக்கிய எண்ணிக்கையாகும். இந்த ஆய்வின்படி, மேற்குத்தொடர்ச்சி மலையின் தும்பியினங்கள் 207 ஆக உள்ளன; அவற்றுள் 80 இனங்கள் உள்ளூர் இனங்களாம்.

---

8. தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (NCLAT) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?



அ) அசோக் பூஷன் ☑

ஆ) AK சிக்ரி

இ) ரஞ்சன் கோகோய்

ஈ) J முகோபாதயா

✓ ஒய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதியரசரான அசோக் பூஷன், தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் புதிய தலைவராக 4 ஆண்டுகள் / அவர் 70 வயது வரை எட்டும் வரை நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ 2020 மார்ச்சில் அப்போதைய தலைவராக இருந்த நீதியரசர் S J முகோபாதயா ஓய்வுபெற்றதால், அப்பதவி காலியாக இருந்தது. மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதியரசர் இராமலிங்கம் சுதாகரை, தேசிய நிறுவன சட்டத்தீர்ப்பாயத்தின் (NCLT) தலைவராகவும் அரசாங்கம் நியமித்துள்ளது.

---

9. 'சர்தார் படேல் தலைமைத்துவ மையம்' திறக்கப்பட்டுள்ள இடம் எது?

அ) நைனிடால்

ஆ) முசோரி ☑

இ) வாரணாசி

ஈ) நாக்பூர்



✓ முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் (LBSNAA) 'சர்தார் படேல் தலைமைத்துவ மையத்தை' நாட்டிற்கு அர்ப்ப –ணித்தார் மத்திய மாநில பணியாளர்கள், பொது குறைகள், ஓய்வூதியங் –கள், டாக்டர் ஜிதேந்திர சிங். சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளைக் குறிக்கும் ராஷ்டிரிய ஏக்தா திவாஸ் விழாவில் இது திறக்கப்பட்டது.

---

10. 2021 – தேசிய ஆயுர்வேத நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Ayurveda for Poshan ☑

ஆ) Ayurveda for COVID

இ) Aatmanirbhar Ayurveda

ஈ) Amrut Ayurveda



✓ தேசிய ஆயுர்வேத நாளானது கடந்த 2016ஆம் ஆண்டு முதல் தன்வந்திரி ஜெயந்தி அன்று கொண்டாடப்படுகிறது. "Ayurveda for Poshan" என்பது இந்த ஆண்டு (2021), தேசிய ஆயுர்வேத நாளுக்கானக் கருப்பொருள் ஆகும். இமாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள பஞ்சகுலாவில் உள்ள தேசிய ஆயுர்வேத நிறுவனத்தின் துணை மையத்தின் உட்கட்டமைப் –பை விரிவுபடுத்துவதற்காக மத்திய ஆயுஷ் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் ₹260 கோடி நிதியுதவி அறிவித்தார். நல்ல ஆரோக்கியம் மற்றும் செல்வத்திற்காக தன்வந்திரி பகவான் வழிபடப்படுகிறார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 2021ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள்: குடியரசுத்தலைவர் வழங்கினார்

2021ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகளை தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

தமிழகத்திலிருந்து மறைந்த பாடகர் எஸ் பி பாலசுப்பிரமணியம் சார்பில் அவரின் மகன், பேராசிரியர் சாலமன் பாப்பையா, வடசென்னை மருத்துவர் மறைந்த திருவேங்கடம் சார்பில் அவரின் குடும்பத்தினர், 106 வயது பாப்பம்மாள் உள்ளிட்டோர் பத்ம விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

கரோனா நோய்த்தொற்றின் காரணமாக 2020ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் காலதாமதமாக கடந்த திங்கள்கிழமை வழங்கப்பட்டது.

நிகழாண்டு குடியரசு தினத்தை முன்னிட்டு அறிவிக்கப்பட்ட 2021ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் வழங்கும் விழா குடியரசுத் தலைவர் மாளிகை தர்பார் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விருது பெற்றவர்கள் விவரம் வருமாறு:

பத்ம விபூஷண்: 15 மொழிகளில் 40,000 பாடல்களைப் பாடிய மறைந்த பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்துக்கு அறிவிக்கப்பட்ட பத்மவிபூஷண் விருதை அவரின் மகன் எஸ்.பி.பி. சரண் குடியரசுத் தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

பிரபல மருத்துவர் பி எம் ஹெக்டே, அகண்ட அலைவரிசையில் ஃபைபர் ஆப்டிகல் தொழில்நுட்பத்தின் தந்தை என்று அழைக்கப்படும் மறைந்த அமெரிக்கவாழ் இந்திய விஞ்ஞானி நரேந்திர சிங் கபானி, சர்வதேச அளவில் முன்னிலையில் இருக்கும் ஒடியா சிற்பக் கலைஞர் சுதர்சன் சாகு, மறைந்த இஸ்லாமிய அறிஞர் மௌலானா வஹிதுதீன் கான், தொல்லியல் வல்லுநர் பிபி லால் உள்ளிட்ட ஏழு பேருக்கு பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.

பத்ம பூஷண் விருது: பத்ம பூஷண் விருது 10 பேருக்கு வழங்கப்பட்டது. பின்னணிப் பாடகி கே எஸ் சித்ரா, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரியும், பிரதமர் அலுவலக முதன்மைச் செயலாளராக இருந்தவருமான நிருபேந்தர மிஸ்ரா, முன்னாள் மக்களவைத் தலைவர் சுமித்ரா மகாஜன் உள்ளிட்டோர் பத்ம பூஷண் விருதைப் பெற்றனர்.

அரசியல், பொதுவாழ்க்கையில் சாதனை படைத்த மறைந்த தருண் கோகோய் (அஸ்ஸாம் முன்னாள் முதல்வர்), மறைந்த ராம்விலாஸ் பாஸ்வான் (முன்னாள் மத்திய அமைச்சர்) ஆகியோருக்கு வழங்கப்பட்ட பத்ம பூஷண் விருதை அவர்களின் குடும்பத்தினர் பெற்றனர்.

பத்மஸ்ரீ: 102 பேருக்கு பத்மஸ்ரீ வழங்கப்பட்டது. தமிழகத்தைச் சேர்ந்த தேசிய கூடைப்பந்து வீராங்கனை பி அனிதா, வில்லுப்பாட்டு கலைஞர் சுப்பு ஆறுமுகம், பேராசிரியர் சாலமன் பாப்பையா, இயற்கை விவசாயத்தில் புகழ்பெற்ற பாப்பம்மாள், கர்நாடக இசைப் பாடகி பாம்பே ஜெயஸ்ரீ ராம்நாத், லட்சக்கணக்கான மீனவக் குடும்பங்களுக்கு குறைந்த செலவில் கழிப்பறைகளை நிறுவி சுகாதாரத்தை நிலைநாட்டிய திருச்சியைச் சேர்ந்த சமூக சேவகர் மராச்சி சுப்புராமன், ஐடி துறை தொழில்முனைவோராகி, 5 கோடி பேர் பயன்படுத்தி வரும் மென்பொரு –ள்களைத் தயாரித்த ஸ்ரீதர் வேம்பு ஆகியோர் குடியரசுத் தலைவரிடம் பத்மஸ்ரீ விருதுகளைப் பெற்றனர்.

வடசென்னையில் ஐந்து ரூபாய்க்கு மருத்துவம் புரிந்து சாமானிய மக்களுக்கு தொண்டாற்றி மறைந்த மருத்துவர் திருவேங்கடம் வீரராகவன், 'சந்தமாமா' பத்திரிகையின் கார்ட்டூன் கலைஞரான மறைந்த கே சி சிவசங்கர், கியர் தயாரிப்பில் புகழ்பெற்று 'கியர்மேன்' என அழைக்கப்பட்ட கோவையைச் சேர்ந்த மறைந்த தொழிலதிபர் பி சுப்பிரமணியன் ஆகியோருக்கான பத்மஸ்ரீ விருதுகளை அவர்களின் குடும்பத்தினர் பெற்றனர்.

40 ஆண்டுகளாக சமூக, கல்வி நோக்கங்களுக்காக பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்திய புதுச்சேரி கேசவசாமியும் பத்மஸ்ரீ விருதைப் பெற்றார். பெங்களூரைச் சேர்ந்த பாரா தடகள வீரர் கே ஒய் வெங்கடேஷ் போன்றோர் பத்ம விருது பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

---

2. தஞ்சாவூர் பெரிய கோயிலில் நவ.13–ல் ராஜராஜ சோழனின் 1036வது சதய விழா

தஞ்சாவூர் பெரிய கோயிலில் ராஜராஜ சோழனின் 1036–வது சதய விழா நவ.13–ம் தேதி நடைபெற உள்ளது.

உலகமே வியக்கும் வகையில் தஞ்சாவூர் பெரிய கோயிலைக் கட்டி தமிழகத்துக்கு பெருமை சேர்த்த மாமன்னன் ராஜராஜ சோழனின் பிறந்த நாளான ஐப்பசி சதயநட்சத்திரம் அன்று, சதய விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

அதன்படி, மாமன்னன் ராஜராஜ சோழனின் 1036–வது சதய விழா நவ.13–ம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

---

3. நம்பிக்கை தரும் கரோனா மாத்திரைகள்

கரோனாவுக்கு எதிரான போரில், உலக நாடுகள் தடுப்பூசிகளைப் பேராயுதமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் வேளையில், இரண்டு வகை மாத்திரைகள் புதிய ஆயுதங்களாக வந்திருப்பது கரோனா சிகிச்சையில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மெர்க் நிறுவனம், ரிட்ஜ்பேக் பயோதெரபியூடிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்துள்ள 'EIDD 2801' மாத்திரைக்கு பிரிட்டன் அரசு அவசரகாலப் பயன்பாட்டுக்கு அனுமதி அளித்துள்ளது. இது அட்லாண்டாவில் உள்ள எமோரி பல்கலைக்கழக ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்டது.

தற்போது கரோனா தொற்றாளர்களுக்கு வழங்கப்படும் ரெம்டெசிவிர், டெக்சாமெத்தசோன், 'ஒற்றைப் படியாக்க எதிரணு மருந்து' (Monoclonal antibody) ஆகியவற்றின் வரிசையில் புதிதாக இந்த மாத்திரையும் சேர்ந்திருக்கிறது. 'மோல்னுபிரவிர்' (Molnupiravir) என்பது இதன் வணிகப் பெயர். பிரிட்டனில் இது 'லேகேவ்ரியோ' (Lagevrio) எனும் பெயரில் சந்தைப்படுத்தப்படுகிறது. முதன்முதலில் கரோனாவுக்கு எதிராக வழங்கப்படும் வாய்வழி வைரஸ் மாத்திரை என்பது இதன் தனித்துவம்.

கரோனா தடுப்பூசிக்கு முதன்முதலில் அனுமதி அளித்த நாடு பிரிட்டன். ஆனாலும், அங்கு கரோனா பெருந்தொற்றுப் பரவல் இன்னமும்

நீடிக்கிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் அந்த நாட்டுக்கு இருக்கிறது. அதனால், இந்தப் புதிய மருந்துக்கு அனுமதி அளித்திருக்கிறது. இந்த வகையில் கரோனா தொற்றுப் பரவல் ஏறுமுகத்தில் இருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உள்ளிட்ட உலக நாடுகளிடத்திலும் இது முக்கியத்துவம் பெற்றுவருகிறது. இந்தியாவில் இதைத் தயாரிக்கவும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

மோல்னுபிரவிர் மாத்திரை கரோனா தொற்றைத் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்திவிடுவதால், தொற்றாளர்களை மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் குறைப்பதிலும், அவர்களின் உயிரைக் காப்பதிலும் பெரும் பங்கு வகிக்கும் என்று வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர். இதன் மூன்று கட்ட ஆய்வுகளின்போது, மிதமான மற்றும் நடுத்தர பாதிப்பு ஏற்பட்ட கரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரை வழங்கப்பட்டது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், உடற்பருமன், இதயநோய், நீரிழிவு போன்ற துணை நோய்களில் ஏதாவது ஒன்று காணப்பட்ட கரோனா தொற்றாளர்களிடமும் ஆய்வு செய்யப்பட்டதில், இந்த மாத்திரை தொற்றாளர்களின் இறப்பு விகிதத்தை 50% குறைத்திருக்கிறது. 29 நாட்கள் அவர்களைத் தொடர்ந்து கவனித்த அளவில் இந்த மாத்திரை வழங்கப்பட்டவர்களில் யாரும் மரணமடையவில்லை எனவும், பொய் மாத்திரை (Placebo) வழங்கப்பட்டவர்களில் 8 பேர் மரணமடைந்துள்ளனர் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த வகையில் மோல்னுபிரவிர் மாத்திரையின் பாதுகாப்புத் தன்மையும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும், கரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளாத தொற்றாளர்களிடம் இது ஆய்வு செய்யப்பட்டதால், இதன் நம்பகத்தன்மையும் உறுதியாகியுள்ளது. இது கர்ப்பிணிகளிடம் ஆய்வு செய்யப்படவில்லை என்பது மட்டுமே குறை.

எப்படி வேலை செய்கிறது?

வழக்கத்தில், தொற்றாளரின் செல்களில் கரோனா வைரஸ் வேகவேகமாக நகலெடுத்துப் பெருகி வளரும் குணமுடையது. மோல்னுபிரவிர் மாத்திரை கரோனா வைரஸின் மரபணு வரிசையில் நகலெடுக்க உதவுகிற முக்கியமான நொதிகளை மாற்றியமைத்துப் பல்வேறு பிழைகளை உண்டாக்கிவிடுவதால், எப்போதும்போல் நகலெடுப்பதில் கரோனா வைரஸுக்குத் தடுமாற்றம் ஏற்படுகிறது. இதன் நகலெடுப்பு வேகம் குறைந்துவிடுகிறது. உடலில் வைரஸ் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படுகிறது. இப்படி, கரோனா தொற்று ஆரம்பத்திலேயே அடங்கிவிடுகிறது.

கரோனா வைரஸிடம் இதுவரை காணப்பட்ட காமா, டெல்டா, டெல்டா பிளஸ், மியூ என எல்லா வகை வேற்றுருவங்களின் தொற்றையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் மோல்னுபிரவிர் மாத்திரைக்கு உள்ளது என்பது கூடுதல் நன்மை. உலக அளவில் 53 லட்சம் பேரை பலிவாங்கியிருக்கும் கரோனா தொற்றை முடிவுக்குக் கொண்டுவர இது ஓர் அருமருந்தாக அமையும் என்று வல்லுநர்கள் எதிர்பார்க்கின்றனர்.

18 வயதுக்கு மேற்பட்ட, ஏதேனும் ஒரு துணைநோயுள்ள கரோனா தொற்றாளருக்கு அறிகுறிகள் தொடங்கிய 5 நாட்களுக்குள் தொற்றை உறுதிசெய்து, இந்த மாத்திரையைக் கொடுத்துவிட வேண்டும். ஒரு வேளைக்கு 800 மி.கி. வீதம் தினமும் இரண்டு வேளைகளுக்கு மொத்தம் 5 நாட்களுக்கு இதை எடுத்துக்கொள்ள வேண்டும். மருத்துவரின் மேற்பார்வையில், வீட்டில் இருந்துகொண்டே இந்தச் சிகிச்சையை மேற்கொள்ளலாம் என்பது மற்றொரு நன்மை.

பைசர் மாத்திரை

மெர்க் நிறுவனத்தைப்போலவே பைசர் நிறுவனமும் 'PF-07321332/Ritonavir' எனும் கரோனா மாத்திரையைத் தயாரித்துள்ளது. அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து ஒழுங்காற்றுக் கழகத்தின் (FDA) அனுமதிக்காக இந்த நிறுவனம் காத்திருக்கிறது. 'பேக்ஸ்லோவிட்' (Paxlovid) எனும் வணிகப் பெயரில் இது சந்தைக்கு வர இருக்கிறது; கரோனா தொற்றை ஆரம்பநிலையிலேயே தடுத்து, தொற்றாளருக்கு இறப்பு ஏற்படுவதை 89% தவிர்த்துவிடும் ஆற்றல் கொண்டது. இதைக் கர்ப்பிணிகளுக்கும் வழங்கலாம் என்பது கூடுதல் நன்மை.

இதுவும் கரோனா தொற்றின் அறிகுறிகள் தொடங்கிய 5 நாட்களுக்குள் எடுக்கப்பட வேண்டிய மாத்திரைதான். ஒரு வேளைக்கு 2 மாத்திரைகள் வீதம் தினமும் இரண்டு வேளைகளுக்கு மொத்தம் 5 நாட்களுக்கு எடுக்கப்பட வேண்டும். இது, கரோனா வைரஸ் நகலெடுக்கத் தேவையான 'புரோட்டியேஸ்' நொதியின் உற்பத்தியைத் தடுத்துவிடுவதால், தொற்றாளரிடம் இதன் எண்ணிக்கை கட்டுப்படுகிறது. தொற்று தீவிரமாவது மட்டுப்படுகிறது.

பக்கவிளைவுகள் அதிகம் இல்லாத இந்த இரண்டு வகை மாத்திரைகள் வழங்கப்படுவது நடைமுறைக்கு வரும்போது, தொற்றாளர்களுக்குச் சளிப் பரிசோதனைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியதும், பரிசோதனைகளை அதிகப்படுத்த வேண்டியதும், அறிகுறிகளை அலட்சியம் செய்யாமல் உடனே சிகிச்சை பெறவேண்டியதும் முக்கியமாகின்றன. அதற்கு அரசுகளும் சமூகமும் தயாராக வேண்டும் என்கின்றனர் வல்லுநர்கள். இது எல்லா நாடுகளுக்கும் பொருந்தும்.

அடுத்ததாக, தடுப்பூசிகள் செலுத்திக்கொண்டவர்களுக்கும் கரோனா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதால், பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த கரோனா மாத்திரைகளின் பயன்பாடு அவசரமாகத் தேவைப்படுகிறது எனவும், தடுப்பூசிகள் மிகக் குறைவான அளவில் செலுத்தப்பட்டுள்ள ஏழை மற்றும் நடுத்தர நாடுகளில் கரோனா தொற்றாளர்களுக்கு இந்த மாத்திரைகளைப் பயன்படுத்தித் தொற்றைக் கட்டுப்படுத்தலாம் எனவும் வல்லுநர்கள் யோசனை கூறியுள்ளனர். ஆக மொத்தத்தில், தடுப்பூசியுடன் இந்த மாத்திரைகளும் பயனுக்கு வந்துவிட்டால், அடுத்தடுத்த கரோனா அலைகள் எத்தனை வந்தாலும், உயிராபத்து இல்லாமல் அவற்றை எதிர்கொள்ள முடியும் எனும் நம்பிக்கை பிறந்துள்ளது.

---

4. அதிகரிக்கும் தனிநபர் கடன்கள்: பொருளாதார நிலை மோசமாவதன் அறிகுறி

வங்கிகளால் அளிக்கப்பட்டுவரும் பல்வேறு வகையான கடன்களில் தனிநபர் கடன்களின் அளவு மட்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது நாட்டின் பொருளாதார நிலைக்கு நல்ல அறிகுறியாகத் தோன்றவில்லை. நடப்பு நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் (ஜூலை-செப்டம்பர்) மற்ற கடன்களைக் காட்டிலும் தனிநபர் கடன்களே அதிகமாக உள்ளன. இதற்கு முன் எப்போதும் இப்படி தனிநபர் கடன்களின் அளவு, தொழில் துறைக் கடன்கள் உள்ளிட்ட மற்ற கடன்களின் அளவைக் கடந்ததில்லை.

ரிசர்வ் வங்கி சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இரண்டாம் காலாண்டு வரையிலும் வங்கிகளிடமிருந்து அளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ.109.5 லட்சம் கோடி எனத் தெரியவந்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடுகையில், தொழில் துறைக்கு வழங்கப்பட்ட இதுவரையிலுமான மொத்தக் கடன் ரூ.28.3 லட்சம் கோடியாகக் குறைந்துள்ளது; விகிதாச்சாரக் கணக்கில், மொத்தக் கடனளவில் 27%-லிருந்து 26%- ஆகக் குறைந்துள்ளது. அதே நேரத்தில், மொத்தத் தனிநபர் கடன்கள் ரூ.29.2 லட்சம் கோடி உயர்ந்தும் 25%-லிருந்து 27%-ஆக அதிகரித்தும் உள்ளன.

தொழில் துறையினருக்கு அளிக்கப்பட்ட கடனளவு குறைந்திருப்பதற்கு, அடிப்படைத் தொழில்களை நடத்துவோர் தாம் வழக்கமாக வாங்கும் கடன்களின் அளவைக் குறைத்துக்கொண்டிருப்பது ஒரு முக்கியமான காரணம். இரும்பு மற்றும் எஃகு, உரங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட ரசாயனங்கள் ஆகிய அடிப்படைத் தொழில் துறையினர் வாங்கும் கடன்களின் அளவு குறைந்துள்ளது. சாலைகள், துறைமுகங்கள், மின்சக்தி ஆகிய துறைகள் வாங்கும் கடனளவு அதிகரித்துள்ளது என்றாலுமேகூட அதுவும்கூட உள்கட்டமைப்புத் துறையில் நேர்மறையான கடன் வளர்ச்சியாக பார்க்கப்படவில்லை.

வழக்கமாக ஜூலை தொடங்கி செப்டம்பரில் முடியும் காலாண்டில் வங்கிகளின் கடன் வளர்ச்சி விகிதம் அதிகரிப்பது நேர்மறையாக மதிப்பிடப்படும். அடுத்த காலாண்டு, பண்டிகைக் காலம் என்பதால் தொழில் துறையில் செய்யப்படும் புதிய முதலீடுகள் வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்ற அடிப்படையில் வரவேற்கப்படும். ஆனால், நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில், பெருந்தொழில் துறையினர் வாங்கிய கடன்கள் வழக்கத்தைக் காட்டிலும் 5% குறைந்துள்ளது. தொழில் துறையின் கடன் வளர்ச்சி விகிதம் 2.3% குறைந்துள்ளது. அதற்கு மாறாக, இந்த ஆறு மாதங்களில் வீட்டுக் கடன்கள், வாகனக் கடன்கள், நகைக் கடன்கள் உள்ளிட்ட தனிநபர் கடன்களின் அளவு வழக்கத்தைக் காட்டிலும் ரூ.73,000 கோடி வரையில் அதிகரித்துள்ளது. வங்கிகளால் இதுவரை வழங்கப்பட்டுள்ள தனிநபர் கடன்கள் மொத்தம் ரூ.29.2 லட்சம் கோடியாக அதிகரித்திருப்பதற்கும் அதுவே காரணம்.

கடன் வளர்ச்சி, தொழில் துறை உற்பத்தியில் நேரடி விளைவை ஏற்படுத்துவது. கடன் வளர்ச்சி விகிதம் நிலையாக இருந்தால்தான் வட்டியும் நிலையாக இருக்கும். சேமிப்புக்கான சூழலையும் அது உருவாக்கும். தவிர, தனிநபர் கடனளவை அதிகரிப்பதால் குறுகிய கால அளவுக்குப் பணப் புழக்கத்தை ஏற்படுத்தலாமேயொழிய, அதனாலேயே பொருளாதார நிலையை மீட்டெடுத்துவிட இயலாது.

5. சேதி தெரியுமா?

அக்.29: ஃபேஸ்புக் நிறுவனத்தின் பெயர் 'மெட்டா' என்று மாற்றப்பட்டுள்–ளதாக அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகி மார்க் ஸகர்பர்க் அறிவித்துள்ளார்.

நவ.1: வன்னியர்களுக்கு 10.5% உள் இடஒதுக்கீடு வழங்கும் தமிழக அரசின் சட்டத்தை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டது.

நவ.1: இந்தியாவின் கோவேக்சின் தடுப்பூசியை அங்கீகரித்து, அவசர பயன்பாட்டுப் பட்டியலில் உலக சுகாதார அமைப்பு சேர்த்தது.

நவ.3: தற்போது விதிக்கப்பட்டுவரும் கலால் வரியிலிருந்து ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூ.5, டீசலுக்கு ரூ.10 குறைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது.

நவ.3: இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக முன்னாள் கேப்டன் ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டார். 2023 உலகக் கோப்பை வரை இப்பொறுப்பில் அவர் இருப்பார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) அறிவித்தது.

நவ.4: விங் கமாண்டர் அபிநந்தன் வர்தமானுக்கு இந்திய விமானப் படை குரூப் கேப்டனாகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

நவ.5: தாம்பரம் பகுதி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதற்கான அவசரச் சட்டத்தைத் தமிழக அரசு பிறப்பித்தது.

நவ.6: சர்வதேச ஒலிம்பிக் கமிட்டிக்கான (ஐஓசி) உறுப்பினர்கள் தேர்தல் ஆணையத்தின் தேர்வுக் குழுவில் இந்தியாவின் ஒலிம்பிக் சாம்பியன் அபினவ் பிந்த்ரா இடம்பெற்றார்.

---

6. ஆப்கன் சூழல் குறித்து ஆலோசனை: 7 நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் தில்லி வருகை

ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டில் சென்ற பின்னர் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு சூழல் குறித்து ஆலோசனை நடத்த இந்தியா ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் பங்கேற்க ரஷியா, ஈரான் மற்றும் ஐந்து மத்திய ஆசிய நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் செவ்வாய்க்கிழமை தில்லி வருகின்றனர்.

அவர்கள் அனைவரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமையில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்று ஆப்கன் நிலவரம் குறித்து ஆலோசிக்க உள்ளனர். இந்த மாநாட்டில் பங்கேற்க சீனா, பாகிஸ்தானுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், முன்கூட்டியே திட்டமிட்ட கூட்டங்கள் உள்ளதால் இக்கூட்டத்தில் பங்கேற்க முடியவில்–லை என சீனாவும், இந்தக்கூட்டத்தை புறக்கணிப்பதாக பாகிஸ்தானும் அறிவித்தன.

எனினும், இந்தக் கூட்டத்தில் கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், துர்க்மேனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்பட மொத்தம் 8 நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பங்கேற்க உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆப்கனில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் உருவாகியுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல், பாதுகாப்பு சவால்கள், ஆப்கன் மக்களுக்கு அமைதியும், ஸ்திரத்தன்மையும் ஏற்படுத்துதல் ஆகியவை குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என இந்திய தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் அனைத்து நாடுகளும் தலிபான்களை அங்கீகரிக்காத நாடுகள் என்றும், ஆப்கன் நிலைமையில் ஒருமித்த கருத்துகளை இந்த நாடுகள் கொண்டுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

7. நவ.11–இல் தில்லியில் ஆளுநர்கள் மாநாடு

குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் நவ.11ஆம் தேதி ஆளுநர்கள் மற்றும் துணைநிலை ஆளுநர்களின் 51ஆவது மாநாடு தில்லியில் உள்ள அவரது மாளிகையில் நடைபெறுகிறது.

இதில், குடியரசு துணைத்தலைவர் M வெங்கையா, பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்பட அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் ஆளுநர்கள் மற்றும் துணைநிலை ஆளுநர்கள் கலந்துகொள்கின்றனர். ராம்நாத் கோவிந்த் தலைமையில் நடக்கும் நான்காவது மாநாடு இதுவாகும்.

---

8. சர்வதேச டேபிள் டென்னிஸ்: இந்தியாவின் மனிகா–அர்ச்சனா ஜோடி 'சாம்பியன்'

உலக டேபிள் டென்னிஸ் வாய்ப்புக்கான சர்வதேச போட்டி சுலோவெனியா நாட்டின் லாஸ்கோ நகரில் நடந்தது. இதில் பெண்கள் ஒற்றையர் அரைஇறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மனிகா பத்ரா, 11–ம் நிலை வீராங்கனையான சீனாவின் வாங் யிடியிடம் மோதினார். விறுவிறுப்பான இந்த மோதலில் வாங் யிடி 11–7, 7–11, 13–11, 10–12, 11–7, 11–5 என்ற செட் கணக்கில் மனிகாவை தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். தோல்வி அடைந்த மனிகா வெண்கலப்பதக்கத்துடன் திருப்தி அடைய வேண்டியதாயிற்று.

இதைத் தொடர்ந்து நேற்று நடந்த பெண்கள் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மனிகா பத்ரா, அர்ச்சனா கமாத் ஜோடியினர் 11–3, 11–8, 12–10 என்ற நேர் செட் கணக்கில் சகோதரிகளான மெலானி டையாஸ்– அட்ரினா டையாஸ் (பியர்டோ ரிகோ) இணையை வீழ்த்தி சாம்பியன் கோப்பையை தட்டிச் சென்றனர்.

---

9. விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண்!

சீன விமானப் படை பெண் விமானியான வாங் யாபிங் (41), விண்வெளி நிலைய கட்டமைப்புப் பணிக்காக விண்வெளியில் நடந்து சாதனை புரிந்தார். இதன்மூலம் விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண் என்ற வரலாற்றை அவர் படைத்துள்ளார்.

சீனா 'தியாங்காங்' என்ற விண்வெளி நிலையத்தைக் கட்டமைத்து வருகிறது. பூமியிலிருந்து 340 கி.மீ. முதல் 450 கி.மீ. உயரத்தில் இந்த விண்வெளி நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான பாகங்களை விண்கலங்கள் மூலம் பலகட்டங்களாக சீனா கொண்டு சென்றுள்ளது. அதன் மையத் தொகுதியான 'தியான்ஹே' ஏற்கெனவே விண்வெளி நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்ஷோ–13 என்ற விண்கலம் மூலம் வாங் யாபிங் உள்ளிட்ட மூன்று விண்வெளி வீரர்கள் கடந்த அக். 16–ஆம் தேதி விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் வாங் யாபிங், ஷாய் ஷிகாங் ஆகியோர் விண்வெளி நிலையத்தின் மையத் தொகுதியான தியான்ஹேயிலிருந்து வெளியே வந்து கட்டமைப்புப் பணியில் ஈடுபட்டனர்.

பூமியின் வளிமண்டலத்துக்கு அப்பால் உள்ள விண்கலம் அல்லது விண்வெளி நிலையத்திலிருந்து அதன் பராமரிப்பு, கட்டமைப்புப் பணிக்காக வீரர்கள் வெளியே வருவது 'விண்வெளி நடை' எனப்படுகிறது.

'அந்த வகையில் இருவரும் திங்கள்கிழமை சுமார் 6.30 மணி நேரம் விண்வெளியில் நடந்து தமது பணிகளை முடித்துவிட்டு மையத் தொகுதிக்குத் திரும்பியதாக' சீன அரசு செய்தி நிறுவனமான ஷின்ஹுவா தெரிவித்துள்ளது. அப்போது மூன்றாவது விண்வெளி வீரரான யீ குவாங்ஃபு மையத் தொகுதியின் உள்ளே இருந்து அவர்களுக்கு உதவி புரிந்ததாகவும் அச்செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுவரை... இதற்கு முன்னதாக, 1984–ஆம் ஆண்டுமுதல் 2019, அக்டோபர் வரை மொத்தம் 15 பெண்கள் 42 முறை விண்வெளி நடையில் பங்கேற்றுள்ளனர். ரஷியாவை சேர்ந்த ஸ்வெட்லானா சாவிட்ஸ்கயா என்பவர்தான் விண்வெளியில் நடந்த முதல் பெண் ஆவார்.

சாதனைப் பெண்: ஷான்டாங் மாகாணத்தைச் சேர்ந்த வாங் யாபிங், 5 வயது பெண் குழந்தைக்குத் தாய் ஆவார். 1997–இல் சீன ராணுவத்தின் விமானப் படையில் விமானியாக சேர்ந்தார். பின்னர், சீன ராணுவத்தின் விண்வெளிப் பிரிவில் 2010–இல் இணைந்தார். இப்போதைய விண்வெளிப் பயணத்துக்காக அவர் 2019, டிசம்பரில் தேர்வு செய்யப்பட்டார்.

சென்ஷோ விண்கலம் மூலம் விண்வெளி நிலையத்துக்குச் சென்ற அவர், ஏற்கெனவே மையத் தொகுதிக்குள் இருந்தவாறு மாணவர்களுக்கு விரிவுரை நிகழ்த்தினார். இதை நாடு முழுவதும் உள்ள 80,000 பள்ளிகளைச் சேர்ந்த 6 கோடி மாணவர்கள் கண்டு பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'விண்வெளி நடையில் பெண்கள் பங்கேற்பது விண்வெளித் திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதிதான் என்றாலும் வாங் யாபிங்கின் துணிச்சலுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்' என சர்வதேச விண்வெளி வீரர்கள் கூட்டமைப்புக்கான போக்குவரத்துக் குழுவின் துணைத் தலைவர் யாங்

யுகுவாங் குறிப்பிட்டுள்ளதாக குளோபல் டைம்ஸ் நாளிதழ் தெரிவித்துள்ளது.

---

10. பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் 6வது முறையாக ஜோகோவிச் சாம்பியன்

பிரான்சில் நடந்த பாரிஸ் மாஸ்டர்ஸ் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில், நம்பர் 1 வீரர் நோவாக் ஜோகோவிச் 6 முறையாக சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார். இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் நடப்பு சாம்பியன் டானியல் மெட்வதேவுடன் (25 வயது, 2வது ரேங்க்) மோதிய ஜோகோவிச் (34வயது) 4–6, 6–3, 6–3 என்ற செட் கணக்கில் 2 மணி, 15 நிமிடம் போராடி வென்று பாரிஸ் மாஸ்டர்ஸ் பட்டத்தை 6வது முறையாக கைப்பற்றினார். ஏற்கனவே 2009, 2013, 2014, 2015, 2019ல் அவர் இங்கு பட்டம் வென்றிருந்தார். சமீபத்தில் நடந்த யுஎஸ் ஓபன் பைனலில் தன்னை தோற்கடித்த மெட்வதேவுக்கு நேற்றைய ஆட்டத்தின் மூலம் பதிலடி கொடுத்தார்.

மேலும், ஏடிபி மாஸ்டர்ஸ் 1000 அந்தஸ்து தொடர்களில் இது ஜோகோவிச் வெல்லும் 37வது பட்டமாகும். இந்த வரிசையில் ஸ்பெயின் நட்சத்திரம் ரபேல் நடால் (36 பட்டம்) 2வது இடத்துக்கு தள்ளப்பட்டார். அடுத்ததாக, இத்தாலியின் டுரின் நகரில் வரும் 14ம் தேதி தொடங்கும் நிட்டோ ஏடிபி பைனல்ஸ் தொடரில் ஜோகோவிச் களமிறங்குகிறார். இந்த தொடரில் பங்கேற்க தகுதி பெற்றுள்ள, சீசன் முடிவு தரவரிசையில் டாப் 8 இடங்களைப் பிடித்த வீரர்கள்: 1. ஜோகோவிச், 2. மெட்வதேவ் (நடப்பு சாம்பியன்), 3. அலெக்சாண்டர் ஸ்வெரவ் (ஜெர்மனி), 4. ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ் (கிரீஸ்), 5. ஆந்த்ரே ருப்லேவ் (ரஷ்யா), 6. மேட்டியோ பெரட்டினி, 7. ஹூபர்ட் ஹர்காக்ஸ் (போலந்து), கேஸ்பர் ரூட் (நார்வே).

---

1. 'உலக நகரங்கள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) அக்டோபர் 29

ஆ) அக்டோபர் 31 ☑

இ) நவம்பர் 1

ஈ) நவம்பர் 3



✓ உலகளாவிய நகரமயமாக்கலில் பன்னாட்டுச் சமூகத்தின் ஆர்வத்தை ஊக்குவிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் அக்.31 அன்று உலக நகரங்கள் நாள் கடைபிடிக்கப்படுகிறது. கடந்த 2013ஆம் ஆண்டு, ஐநா பொதுச்சபை தீர்மானத்தில் இந்த நாள் நிறுவப்பட்டது. கடந்த 2014ஆம் ஆண்டில் முதன்முதலாக இந்நாள் கொண்டாடப்பட்டது.

✓ "Adapting Cities for Climate Resilience" என்பது நடப்பாண்டில் (2021) வரும் உலக நகரங்கள் நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

2. 2020-21'க்கான ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) வைப்புத்தொகைக்கு நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதம் என்ன?

அ) 7.0%

ஆ) 7.5%

இ) 8.0%

ஈ) 8.5% ☑

8.5%

✓ 2020-21ஆம் ஆண்டிற்கான ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி வைப்புத்தொகையில் 8.5% வருமானத்தை வழங்க நிதி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நடவடிக்கை 6.4 கோடி சந்தாதாரர்களை சென்றடையும். 2019-20 இடைப்பட்ட காலத்திலும் இதே விகிதம்தான் இருந்தது. EPFO, தனிப்பட்ட கணக்குகளில் வட்டியை வரவு வைப்பதற்கு முன்னதாக, தொழிலாளர் அமைச்சகம் வட்டி விகிதத்தை அறிவிக்கும்.

---

3. சிறந்த பொதுப்போக்குவரத்து அமைப்புகொண்ட நகரத்திற்கான நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் விருதை வென்ற நகரம் எது?

அ) மும்பை

ஆ) சூரத் ☑

இ) காந்திநகர்

ஈ) லக்னோ



✓ மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது 2021 ஆம் ஆண்டின் நகர்ப்புற நகர்வு இந்தியா மாநாட்டின் 14ஆவது பதிப்பை நடத்தியது. சிறந்த பொதுப்போக்குவரத்து அமைப்புகொண்ட நகரத்திற்கா-ன விருதை சூரத் நகரம் வென்றது. கொச்சி நகரம் மிகவும் நிலையான போக்குவரத்து அமைப்புகொண்ட நகரமாக மதிப்பிடப்பட்டது.

✓ அர்பன் மொபிலிட்டி இந்தியா மாநாட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி விருதுகளை வழங்கினார். மெட்ரோ இரயிலுடன் கூடிய நாக்பூரின் பன்முகட்டு ஒருங்கிணைப்பு, தில்லியின் மெட்ரோ ஆகியவையும் விருதுகளை வென்றன.

---


4. மோட்டார் வாகன வரிகள் மற்றும் மின்சார வாகனங்கள் (EVகள்) மீதான பதிவுக்கட்டணங்களில் முழு விலக்களிப்பதாக அறிவித்துள்ள இந்திய மாநிலம் எது?

அ) ஒடிஸா ☑

ஆ) ஆந்திர பிரதேசம்

இ) தெலுங்கானா

ஈ) பஞ்சாப்



✓ ஒடிஸா மாநிலத்தில் மின்சார வாகனங்களுக்கான (EVகள்) மோட்டார் வாகன வரிகள் & பதிவுக்கட்டணங்களுக்கு முழு விலக்கு அளிப்பதாக ஒடிஸா மாநில அரசு அறிவித்துள்ளது. ஒடிசா மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட விலக்கு, 2025 வரை பொருந்தும்.

✓ மின்சார வாகனங்களை வாங்குபவர்கள், உற்பத்தியாளர்கள், மின் கலங்கள் மற்றும் மின்னேற்ற நிலையங்கள் ஆகியவற்றுக்கான ஊக்க-த்தொகை ஒடிஸா மின் வாகனக் கொள்கையின் கீழ் நீட்டிக்கப்பட்டு உள்ளது.

---

5. ஐநா'இன் FAO மாநாட்டில் பங்கேற்க அழைக்கப்பட்ட இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) தெலுங்கானா ☑

இ) மகாராஷ்டிரா

ஈ) அஸ்ஸாம்



✓ ஐநா உணவு மற்றும் உழவு அமைப்பின் (FAO) மெய்நிகர் மாநாட்டில் பங்கேற்க FAO'ஆல் தெலுங்கானா அரசாங்கம் அழைக்கப்பட்டுள்ளது. இத்தாலியின் ரோம் நகரத்தில் இருந்து இந்த மாநாடு நடத்தப்படுகிறது. 'தரமான விதை உற்பத்தி முறை: இந்தியாவின் வெற்றிக்கதை: விதை மையமாக தெலுங்கானா' என்ற தலைப்பில் உரையாற்ற தெலுங்கானா மாநிலத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

---

6. தொழில்துறை உறவு விதிகள், 2021'ஐ அங்கீகரித்துள்ள மாநிலம் எது?

அ) அஸ்ஸாம் ☑

ஆ) கர்நாடகா

இ) மேற்கு வங்கம்

ஈ) கேரளா



✓ பணியமர்த்துநர் மற்றும் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக்கொண்ட தொழில்துறை உறவு விதிகள், 2021'க்கு அசாம் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. COVID-19 தொற்றுநோய்களின் போது துன்பங்களை எதிர்கொண்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ரேஷன் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ தொழில்துறை உறவுகள் தொடர்பான மூன்று மத்திய தொழிலாளர் குறியீடுகளின் விதிகளை எளிமைப்படுத்த விதிகள் உருவாக்கப்பட்டு உள்ளன.

---

7. இந்தியாவில் தேசிய டிரோன் தொழில்நுட்ப மாநாட்டைத் தொடங்க முன்மொழிந்துள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம்

ஆ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

இ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஈ) கல்வி அமைச்சகம்

MeitY
Government of India

✓ இந்தியாவில் தேசிய அளவிலான டிரோன் தொழில்நுட்ப மாநாட்டை நடத்த மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் முன்மொழிந்துள்ளது. இது ஒரு வருடாந்திர நிகழ்வாக இருக்கும் என்று அவ்வமைச்சகம் தெரிவித்துள்ளது. இது பயனர்கள் மற்றும் தொழில்நுட்ப வழங்குநர்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கும். சமீபத்தில், இந்திய அரசு புதிய டிரோன் விதிகள், 2021'ஐ வெளியிட்டது.

---

8. 'Capricorn Energy PLC' எனத் தனது பெயரை மாற்றிக்கொண்ட உலகளாவிய நிறுவனம் எது?

அ) BP எண்ணெய் மற்றும் எரிவாயு

ஆ) கெய்ர்ன் எனர்ஜி PLC ☑

இ) ONGC விதேஷ்

ஈ) ரிலையன்ஸ் எனர்ஜி

Cairn

✓ பிரித்தானியாவைச் சேர்ந்த எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனமான கெய்ர்ன் எனர்ஜி PLC தனது பெயரை 'Capricorn Energy PLC' என மாற்றியுள்ளதாகவும், 2021 டிசம்பர் முதல் இப்பெயர் நடைமுறைக்கு வரலாம் என்றும் கூறியுள்ளது. இந்நிறுவனம் இந்திய அரசாங்கத்துடன் $1 பில்லியன் டாலர் முன்தேதியிட்ட வரி தகராறில் ஈடுபட்டுள்ளது. இந்த வழக்கு முடியும் தருவாயில் உள்ளது.

---

9. "பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பன்னாட்டு நாள்" அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) நவம்பர் 1



ஆ) நவம்பர் 2 ☑

இ) நவம்பர் 10

ஈ) நவம்பர் 12

✓ ஒவ்வோர் ஆண்டும், ஐநா அவை நவ.2ஆம் தேதியை "பத்திரிகையாளர்–களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பன்னாட்டு நாள்" அனுசரிக்கிறது.

✓ விசாரணை மற்றும் வழக்குத்தொடுப்பதில் பத்திரிகையாளர்களின் பாத்திரத்தை இது எடுத்துக்கூறுகிறது. ஐநா சபையின் அறிக்கையின்படி, 2006 மற்றும் 2020'க்கு இடையில் 1,200'க்கும் மேற்பட்ட ஊடகவியலா–ளர்கள் செய்திகளைத் தந்தமைக்காகவும், பொதுமக்களுக்கு தகவல்க–ளைக் கொண்டு சென்றதற்காகவும் கொல்லப்பட்டுள்ளனர்.

---

10. வாங் யாப்பிங் என்பவர் பின்வரும் எந்த நாட்டின் விண்வெளி வீராங்கனை ஆவார்?

அ) இஸ்ரேல்



ஆ) சீனா ☑

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) ஜப்பான்

✓ வாங் யாப்பிங், விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண்மணி ஆனார். அவரது குழு, தியாங்கோங் விண்வெளி நிலையத்திற்கு வெளியே ஆறு மணிநேரப்பயணத்தை நிறைவு செய்தது. "விண்ணுலக அரண்மனை" என்று பொருள்படும் தியாங்கோங், செவ்வாய் கிரகத்தில் ரோவரை தரையிறக்கியுள்ளதோடு, நிலவுக்கு ஆய்வுக்கலங்களையும் அனுப்பி உள்ளது. அதன் மையத்தொகுதியானது ஏற்கனவே விண்வெளி நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இவ்விண்வெளி நிலையம் 2022 ஆம் ஆண்டில் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 200 பாரம்பரிய விதைகளை பாதுகாக்கும் விதைத் தாய்

சுமார் 200–க்கும் மேற்பட்ட பாரம்பரிய விதைகளை மகாராஷ்டிராவை சேர்ந்த ரஹிபாய் சோமாபூபேரே பாதுகாத்து வருகிறார். விதைத் தாய் என்றழைக்கப்படும் அவருக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பத்மஸ்ரீ விருதினை வழங்கி கவுரவித்துள்ளார்.

மகாராஷ்டிர மக்கள் அவரை 'விதைத்தாய்' என்று அழைக்கின்றனர்.

---

2. ஆப்கன் விவகாரம் குறித்த ஆலோசனை – ரஷ்யா உள்ளிட்ட ஏழு நாடுகளின் தலைவர்கள் இந்தியா வருகை:

ஆப்கானிஸ்தான் விவகாரம் குறித்து ஆலோசனை நடத்துவதற்காக ரஷ்யா, ஈரான் உள்ளிட்ட 7 நாடுகளின் தலைவர்கள் நேற்று இந்தியா வந்தனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து கடந்த ஆகஸ்ட் மாதம் அமெரிக்கப் படைகள் வெளியேறின. இதையடுத்து, தலிபான்கள், அங்கு ஆட்சிப் பொறுப்பேற்று உள்ளனர். தலிபான் ஆட்சியாளர்களுக்கு சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட ஒருசில நாடுகளே ஆதரவு தெரிவித்துள்ளன. இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் தலிபான்களுக்கு ஆதரவு தரவில்லை.

இந்த சூழலில், ஆப்கானிஸ்தானில் ஆட்சி அமைத்துள்ள தலிபான்களால் ஆசிய கண்டத்தில் தீவிரவாத அச்சுறுத்தல் எழுந்துள்ளதாக பரவலாக கருத்து எழுந்துள்ளது. இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து இந்தியா தலைமையில் டெல்லியில் இன்றுஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமையில் நடைபெறும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ரஷ்யா, ஈரான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், துர்க்மேனிஸ்தான் ஆகிய 7 நாடுகளின் பாதுகாப்புத் துறை தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

---

3. அருணாச்சல பிரதேச எல்லைக்குள் சீனா உருவாக்கிய கிராமம் 1959–ல் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி: இந்திய ராணுவம் தகவல்

அருணாச்சல பிரதேச எல்லைக்குள் சீன ராணுவம் ஊடுருவியதாக பென்டகன் அறிக்கை குறிப்பிட்ட நிலையில், சர்ச்சைக்குரிய கிராமத்தை 1959–ம் ஆண்டு சீனா ஆக்கிரமித்தது என்று இந்திய ராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அருணாச்சலபிரதேசத்துக்கு சீனா அடிக்கடி உரிமை கொண்டாடி வருகிறது. அதற்கு இந்தியா தகுந்த பதிலடி கொடுத்து வருகிறது. இதனிடையே, அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன் கடந்த வாரம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த ஆண்டு அறிக்கையில், அருணாச்சல பிரதேசத்தில் சர்ச்சைக்குரிய பகுதியில் சுமார் 100 வீடுகளைக் கொண்ட கிராமத்தை சீனா உருவாக்கி உள்ளதாகவும் இந்திய பகுதிக்குள் 4.5 கி.மீ. தூரம் வரை சீனா ஊடுருவியுள்ளதாகவும் தெரிவித்தது.

இதுகுறித்து இந்திய ராணுவஅதிகாரிகள் கூறும்போது, "அருணாச்சல பிரதேசத்தில் மேல்சுபன்சிரி மாவட்டத்தில் பென்டகன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளசர்ச்சைக்குரிய பகுதி 1959–ம்ஆண்டு சீன ராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாகும். பல ஆண்டுகளாகவே அந்தப் பகுதியை ராணுவ முகாமாக சீனா பயன்படுத்தி வருவதோடு பல்வேறு கட்டுமானங்களையும் கட்டி வருகிறது. இவை குறுகிய காலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் இல்லை" என்று தெரிவித்தனர்.

---

4. திருப்பதியில் தென்மண்டல முதல்வர்கள் மாநாடு

திருப்பதியில் வரும் 14–ம் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் தென் மண்டல முதல்வர்கள் மாநாடு நடைபெற உள்ளது. திருப்பதியில் உள்ள தாஜ் நட்சத்திர ஓட்டலில் இம்மாதம் 14–ம் தேதி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில், தென் மண்டல வளர்ச்சிகுறித்து முதல்வர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இதில், ஆந்திரா, தெலங்கானா, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மாநில முதல்வர்கள் மற்றும் புதுச்சேரி, அந்தமான், நிக்கோபார், லட்சத்தீவு போன்ற யூனியன் பிரதேசங்களின் ஆளுநர்களும் பங்கேற்கின்றனர்.

இதில் தென்னிந்தியாவின் வளர்ச்சி, பிரச்னைகள் குறித்து ஆலோசனை நடத்தப்படும்.

---

5. சாலையில் பழம் விற்ற பணத்தில் பள்ளிக்கூடம் கட்டிய பெரியவர்: பத்மஸ்ரீ விருது பெற்றவருக்கு குவியும் பாராட்டுகள்

கர்நாடகாவில் சாலையில் பழம்விற்ற பணத்தில் பள்ளிக்கூடம் கட்டிய ஹரேகலா ஹாஜப்பாவுக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலம் தக்ஷின கன்னட மாவட்டம் மங்களூரு அருகேயுள்ள நியூபடப்பு கிராமத்தைச் சேர்ந்தவர் ஹரேகலா ஹாஜப்பா (68). இவர் மங்களூரு பேருந்து நிலையத்தில் ஆரஞ்சு, கொய்யா உள்ளிட்ட பழங்களை விற்று வந்தார். இதன்மூலம் நாளொன்றுக்கு ₹150 வரை சம்பாதித்தார்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் 2 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் இவரிடம் ஆரஞ்சு பழத்தின் விலையைக்கேட்டனர். அவருக்கு ஆங்கிலம் தெரியாததால் அவர்களுடன் பேச முடியவில்லை. இதனால் வருத்தம் அடைந்த ஹாஜப்பா, தன்னைப் போன்று கல்வி கற்க முடியாமல் இருக்கும் தன் கிராம மக்களுக்காக பள்ளிக்கூடம் தொடங்க வேண்டும் என நினைத்தார். இது தொடர்பாக அரசு அதிகாரிகளிடம் பல முறை மனு அளித்தார். நீண்ட காலம் காத்திருந்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. இதையடுத்து மத அமைப்புகள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோரிடம் பள்ளி தொடங்க உதவுமாறு ஹாஜப்பா கோரினார். ஆனால் யாரும் அவரது கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

இதனால், தான் பழம் விற்ற பணத்தை சிறிது சிறிதாக சேமித்து தனது கிராமத்தில் பள்ளிக்கூடம் கட்ட முடிவெடுத்தார். அதன்படி, 2001–ம் ஆண்டு தன் சேமிப்பு பணத்தில், பள்ளிக்கூடம் கட்ட நிலம் வாங்கினார். பின்னர் வங்கியில் கடன் வாங்கி நியூபடப்பு கிராமத்தில் தொடக்கப் பள்ளியை நிறுவினார். 27 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட அந்த பள்ளியில் தற்போது 178 மாணவர்கள் படிக்கின்றனர்.

ஹாஜப்பாவுக்கு பள்ளியைத் தொடர்ந்து நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டதால், 2014ஆம் ஆண்டு ஜும்மா மதராஸாவின் முஸ்லீம் கல்வி நிறுவனத்துடன் பள்ளி இணைக்கப்பட்டது. பின்னர் தொடக்கப்பள்ளி உயர்நிலை பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது.

ஹரேகலா ஹாஜப்பாவின் இச்சேவையைப்பாராட்டி குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் அவருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தார்.

---

6. முக்கிய வழக்குகளை சிபிஐ விசாரிக்க அனுமதி தர மறுக்கும் 8 மாநிலங்கள்: உச்ச நீதிமன்றம் அதிருப்தி

வங்கி மோசடி உள்ளிட்ட முக்கியவழக்குகளை விசாரிக்க சிபிஐ-க்கு அனுமதி மறுக்கும் 8 மாநிலங்கள் குறித்து உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

தில்லி சிறப்பு போலீஸ் எஸ்டாபிளிஷ்மென்ட் சட்டத்தின் 6-வது பிரிவு, பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் ஊழல், வங்கி முறைகேடு உள்ளிட்ட முக்கிய வழக்குகளை விசாரிக்க சிபிஐ-க்கு அதிகாரம் வழங்கி உள்ளது. இதற்கு அனைத்து மாநிலங்களும் பொது ஒப்புதல் வழங்குவது வழக்கம். இந்நிலையில், மேற்கு வங்கம், மகாராஷ்டிரா, கேரளா, பஞ்சாப், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் மிசோரம் ஆகிய 8 மாநிலங்கள் இத்தகைய பொது ஒப்புதலை கடந்த 2018-ம் ஆண்டு திரும்பப் பெற்றன. இதனால் குறிப்பிட்ட வழக்கு தொடர்பாக சிபிஐ விசாரிக்க வேண்டுமானால் சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலை பெற வேண்டும்.

இது தொடர்பாக சிபிஐ தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் விசாரித்து வருகிறது. வழக்கு விசாரணையில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து பதில் அளிக்குமாறு சிபிஐ-க்கு உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் உத்தரவிட்டது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் சிபிஐ தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில், "வழக்கு விசாரணைக்கான பொது ஒப்புதலை 8 மாநிலங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டதால், ஒவ்வொரு வழக்குக்கும் தனித் தனியாக அனுமதி கோர வேண்டி உள்ளது. இதன்படி, கடந்த 2018 முதல் 2021 ஜூன் மாதம் வரையிலான காலத்தில் 150-க்கும் மேற்பட்ட வழக்குகளை விசாரிக்க ஒப்புதல் வழங்குமாறு அம்மாநில அரசுகளிடம் கோரி உள்ளோம்.

இதில் மத்திய அரசு ஊழியர்கள் மீதான ஊழல் புகார் உள்ளிட்ட 18 சதவீத வழக்குகளை விசாரிக்க மட்டுமே அம்மாநிலங்கள் அனுமதி வழங்கி உள்ளன. மேலும் சிபிஐ நடத்தும் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகளுக்கு விசாரணை, உயர் நீதிமன்றங்கள் இடைக்கால தடை விதித்துள்ளதால் காலதாமதம் ஏற்படுகிறது" எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதி சஞ்சய் கிஷண் கவுல் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, "முக்கியமான வழக்குகளை விசாரிக்க சிபிஐ-க்கு ஒப்புதல் வழங்க மறுக்கும் மாநில அரசுகளின் செயல் அதிருப்தி அளிக்கிறது. சிபிஐ வழக்குகளில் நீதிமன்றங்கள் இடைக்கால தடை விதித்திருப்பதும் கவலை அளிப்பதாகஉள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்" என நீதிபதிகள் தெரிவித்தனர்.

---

7. லடாக் கிராமத்தில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் குழாய் மூலம் தண்ணீர் விநியோகம்

லடாக் யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ளது லே மாவட்டம். கடல் மட்டத்திலிருந்து 3,524 மீட்டர் (11,562 அடி) உயரத்தில் அமைந்துள்ள இந்த லே நகரமானது ஆண்டு முழுவதும் கடும் குளிரைச் சந்தித்து வருகிறது. இந்நிலையில் நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு தனித்தனி குடிநீர் குழாய் இணைப்பை வழங்கும் ஜல் ஜீவன் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

அதன்படி லே மாவட்டத்திலுள்ள 60 கிராமங்களில் தற்போது 12 கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் தனித்தனி குடிநீர் குழாய் இணைப்பை வழங்கி ஜல் ஜீவன் திட்டம் வெற்றி கண்டுள்ளது. இந்தப் பகுதியில் ஜீரோ டிகிரிக்கும் குறைவான வெப்பநிலை நிலவுகிறது. இந்த கடும் குளிரிலும் வீடுகளுக்கு வெற்றிகரமாக குடிநீர் விநியோகம் நடைபெற்று வருவதை ஜல் ஜீவன் திட்டம் உறுதி செய்துள்ளது.

இந்நிலையில், லே மாவட்டத்திலுள்ள உம்லா கிராமத்தில் ஒரு பாட்டியும், அவரது பேத்தியும் மிகுந்த மகிழ்ச்சியில் குடிநீரை குழாயிலிருந்து பிடிக்கும் புகைப்படத்தை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. தற்போது இந்த புகைப்படத்தை பலரும் பகிர்ந்து வருவதால் இது இணையத்தில் வைரலாகியுள்ளது.

இதுகுறித்து ஜல் ஜீவன் திட்டத்தின் கூடுதல் செயலரும், இயக்குநருமான பரத் லால் கூறும்போது, "மக்களின் வாழ்க் கையை மாற்றி வருகிறது ஜல் ஜீவன் திட்டம். தற்போது ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனியாக குடிநீர் இணைப்பை வழங்குவதே எங்களது திட்டம். லே மாவட்டத்தில் 12 கிராமங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பைக் கொடுத்து வெற்றி கண்டுள்ளோம். ட்விட்டரில் வெளியிட்டுள்ள புகைப்படத்தில் குடிநீரைப் பிடிக்கும் அந்தபாட்டி, பேத்தியின் மகிழ்ச்சியை வார்த்தைகளால் சொல்ல முடியாது. இதுதான் உண்மையான திருப்தி.

இந்த உம்லா கிராமத்தில் முறையான சாலை வசதி இல்லை. குக்கிராமமான இந்த உம்லாவில் போதிய அடிப்படை வசதிகள் இல்லை. மிகுந்த சிரமத்துக்கு இடையே இந்தத் திட்டத்தில் வெற்றி கண்டுள்ளோம்" என்றார்.

---

1. COP26 உச்சிமாநாட்டைக் குறிக்கும் வகையில், எந்தப் பகுதியில் அமைந்துள்ள பனிப்பாறைக்கு, 'கிளாஸ்கோ பனிப்பாறை' என்று பெயரிடப்பட்டுள்ளது?

அ) கனடா

ஆ) அண்டார்டிகா ☑

இ) அலாஸ்கா

ஈ) ஐஸ்லாந்து



✓ அண்டார்டிகாவிலுள்ள ஒரு பனிப்பாறைக்கு 'கிளாஸ்கோ பனிப்பாறை' என்று பெயரிடப்பட்டுள்ளது. அது, ஐநா காலநிலை உச்சிமாநாட்டை (COP 26) நடத்தும் நகரத்தின் நினைவாக வைக்கப்பட்டுள்ளது. லீட்ஸ் பல்கலை ஆராய்ச்சியாளர்கள் குழுவினால், COP26 நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

---

2. காசி, ஜைந்தியா மற்றும் கரோஸ் ஆகியவை எந்த மாநிலத்தின் பழங்குடியினமாகும்?

அ) தமிழ்நாடு

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

இ) கேரளா

ஈ) மேகாலயா ☑



✓ காசி, ஜைந்தியா மற்றும் கரோஸ் ஆகியோர் மேகாலயா மாநிலத்தின் முதன்மையான பழங்குடியினங்களாகும். அவர்கள், குடும்பத்தில் உள்ள இளைய மகள் குடும்ப சொத்தின் பாதுகாவலராக மாறுகின்ற ஒரு தாய் வழி பரம்பரை முறையைப் பின்பற்றுகிறார்கள். சமீபத்தில் காசி ஹில்ஸ் தன்னாட்சி மாவட்ட கவுன்சில் ஒரு மசோதாவை முன்மொழிந்துள்ளது. அது, உடன்பிறப்புகளுக்கிடையே பெற்றோரின் பூர்வீக சொத்துக்களை சமமாக பங்கிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3. இங்கிலாந்தில் நடத்தப்பட்ட புதிய ஆராய்ச்சியின்படி, எத்தடுப்பூசி, புற்றுநோயை உருவாக்கும் அபாயத்தை 62% குறைத்துள்ளது?

அ) மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி ☑

ஆ) டெட்டனஸ், டிப்தீரியா, பெர்டுசிஸ் (Td/Tdap)

இ) வெரிசெல்லா

ஈ) தட்டம்மை, தாளம்மை, ரூபெல்லா (MMR)



✓ கேன்சர் ரிசர்ச் யுகேவால் நிதியுதவி செய்யப்பட்ட ஒரு புதிய ஆராய்ச்சி, மனித பாப்பிலோமா வைரஸ் தடுப்பூசி, 14–16 வயதுக்குட்பட்ட பெண்களில் புற்றுநோயை உருவாகும் அபாயத்தை 62% குறைத்துள்ளதாக கண்டறிந்துள்ளது. பெண்களை கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோயிலிருந்து பாதுகாப்பதற்காக மனித பாப்லோமா வைரஸ் தடுப்பூசி வழங்கப்படுகிறது.

---

4. இந்திய ரிசர்வ் வங்கியின் திருத்தப்பட்ட PCA கட்டமைப்பானது எந்தத் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளது?

அ) ஜனவரி 1, 2022 ☑

ஆ) 1 மார்ச் 2022

இ) ஏப்ரல் 1, 2022

ஈ) ஜூன் 1, 2022

✓ திட்டமிடப்பட்ட வணிக வங்கிகளுக்கான திருத்தப்பட்ட உடனடி திருத்த நடவடிக்கை (PCA) கட்டமைப்பை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது. இது ஜனவரி 1, 2022 முதல் நடைமுறைக்கு வரும். மூலதனம், சொத்து தரம் மற்றும் அந்நியச் செலாவணி ஆகிய மூன்று முக்கிய பகுதிகளை ரிசர்வ் வங்கி கண்காணிக்கும் எனக் கூறியுள்ளது.

---

5. வெப்ப அலைகளால் பவளப்பாறைகள் அதிக வெப்பமுறும்போது அவை நிறத்தை இழக்கும் செயல்முறைக்கு பெயர் என்ன?

அ) பவள அழுத்தம்

ஆ) பவள வெளுப்பு ☑

இ) பவள நிறமாற்றம்

ஈ) பவள அழுத்தம்



✓ பவள வெளுப்பு என்பது வெப்ப அலைகளின்போது அதிக வெப்பமுற்ற பவளப்பாறைகளில் ஏற்படும் ஓர் எதிர்வினையாகும். இதன்சமயம் அங்கு அவை அவற்றின் நிறத்தை இழந்து உயிர்வாழ போராடுகின்றன. ஒரு புதிய ஆய்வின்படி, 2016ஆம் ஆண்டிலிருந்து எண்பது சதவீத பவளப் பாறைகள் ஒருமுறையாவது கடுமையாக வெளுத்துள்ளன.

---

6. ஆப்கானிஸ்தான் தொடர்பான பிராந்திய பாதுகாப்பு உரையாட–லை நடத்தவுள்ள இந்திய நகரம் எது?

அ) புது தில்லி ☑

ஆ) மும்பை

இ) டேராடூன்

ஈ) சண்டிகர்



✓ நவ.10 அன்று ஆப்கானிஸ்தான் தொடர்பான தில்லி பிராந்திய பாதுகாப்பு உரையாடலை இந்தியா நடத்தவுள்ளது. இதில் 7 நாடுகள் பங்கேற்கின்–றன. இதற்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தலைமை தாங்குவார். தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் / பாதுகாப்பு கவுன்சில் செயலாளர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

✓ சமீபத்திய ஊடக அறிக்கையின்படி, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டும் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் குடியரசு, ரஷ்யா, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய ஏழு நாடுகள் பங்கேற்பதை உறுதி செய்தன.

---

7. சமீபத்தில் கருத்துக்கேட்புக்காக வைக்கப்பட்ட, 'வரைவு மத்திய–ஸ்த மசோதா, 2021' உடன் தொடர்புடைய அமைச்சகம் எது?

அ) பாதுகாப்பு அமைச்சகம்

ஆ) வெளியுறவு அமைச்சகம்

இ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் ☑

ஈ) உள்துறை அமைச்சகம்



✓ சட்டம் மற்றும் நீதி அமைச்சகமானது வரைவு மத்தியஸ்த மசோதா – 2021'ஐ கருத்துக்கேட்புக்காக பொதுக்களத்தில் வைத்துள்ளது.

✓ உள்நாட்டு மற்றும் சர்வதேச மத்தியஸ்தம் தொடர்பான பிரச்சினைகளில் மத்தியஸ்தம் தொடர்பான ஒரு தனியான சட்டத்தை கொண்டுவர இம் மசோதா முன்மொழிகிறது. மத்தியஸ்தம் தொடர்பான சிங்கப்பூர் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. இந்த மசோதா 'சமரசம்' மற்றும் 'மத்தியஸ்தம்' ஆகிய சொற்களை ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தவும் எண்ணுகிறது.

---

8. 2021'இல் தனது ஆறாவது பாரிஸ் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்ற டென்னிஸ் வீரர் யார்?

அ) நோவக் ஜோகோவிச் ☑

ஆ) டேனியல் மெட்வெடேவ்

இ) ரோஜர் பெடரர்

ஈ) ரபேல் நடால்



✓ டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச் 4–6 6–3 6–3 என்ற கணக்கில் ரஷ்ய வீரர் டேனியல் மெட்வெடேவை தோற்கடித்து தனது ஆறாவது பாரிஸ் மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்றார். செர்பிய வீரர் ஜோகோவிச், ஆண்டு இறுதியில் ஏழாவது முறையாக உலக நம்பர் ஒன் இடத்தைப் பெறுவது உறுதியாகி உள்ளது.

---

9. Dr கமல் ரணதிவேவுடன் தொடர்புடைய துறை எது?

அ) கதிரியக்க பொருட்கள்

ஆ) கனரக பொறியியல்

இ) செல் உயிரியல் ☑

ஈ) ஆயுர்வேதம்



✓ டாக்டர் கமல் ரணதிவே, ஓர் இந்திய செல் உயிரியலாளராவார். அவர் புற்றுநோய் துறையில் வியத்தகு ஆராய்ச்சியை மேற்கொண்டார்.

✓ இந்திய புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் நாட்டின் முதல் திசு வளர்ப்பு ஆய்வகத்தை நிறுவுவதில் முக்கிய பங்காற்றினார். இந்தியப் பெண் விஞ்ஞானிகள் சங்கத்தை நிறுவுவதில் முக்கியப் பங்காற்றினார்.

சமீபத்தில், Dr கமல் ரணதிவேவின் 104ஆவது பிறந்தநாளை நினைவு கூரும் வகையில், கூகுள் ஒரு டூடுலை அவருக்கு அர்ப்பணித்தது.

---

10. உள்நாட்டு மத சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக IRCTCஆல் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சுற்றுலா இரயிலின் பெயர் என்ன?

அ) ஸ்ரீ இராமாயண யாத்திரை இரயில்

ஆ) மகாபாரத யாத்திரை இரயில் ☑

இ) வேளாங்கண்ணி யாத்திரை இரயில்

ஈ) தர்கா யாத்திரை இரயில்



✓ இந்திய இரயில்வே கேட்டரிங் & டூரிசம் கார்ப்பரேஷன் (IRCTC) ஆனது தில்லியிலிருந்து 'ஸ்ரீ இராமாயண யாத்திரை' ரயிலை தொடங்கியுள்ளது. தில்லி சப்தர்ஜங் இரயில் நிலையத்திலிருந்து இந்த இரயில் புறப்பட்டது.

✓ IRCTC'இன் கூற்றுப்படி, மதச்சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இது போன்ற பல இரயில்கள் இயக்கப்படும். இந்த ரயில் 17 நாட்களில் ராமரின் வாழ்க்கையுடன் தொடர்புடைய அனைத்து முக்கிய தலங்களையும் உள்ளடக்கும். சுமார் 7500 கிமீ நீளப்பயணமாகும் இது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இன்று 'பீமா லோக்பால்' தினம் – காப்பீடு தொடர்பான 1,416 புகார்களுக்கு தீர்வு:

சென்னை காப்பீட்டு குறைதீர்ப்பாளர் அலுவலகம் வெளியிட்டசெய்திக்குறிப்பு:

காப்பீடு தொடர்பான புகார்களை விரைந்து விசாரித்து தீர்வுகாண்பதற்காக, காப்பீட்டு குறைதீர்ப்பாளர் (இன்சூரன்ஸ் ஆம்புட்ஸ்மேன்) என்ற அமைப்பை மத்திய அரசு கடந்த 1998 நவ.11–ம் தேதி ஏற்படுத்தியது. இதையடுத்து, ஆண்டுதோறும் நவ.11–ல், பீமா லோக்பால் தினம் என்ற பெயரில் கொண்டாடப்பட்டு வரப்படுகிறது.

அதன்படி, பீமா லோக்பால் தினம் (நவ.11) இன்று கொண்டாடப் படுகிறது. சென்னை உட்பட நாடுமுழுவதும் 17 காப்பீட்டு குறைதீர்ப்பாளர் அலுவலகங்கள் உள்ளன.தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்காலின் ஒரு பகுதி ஆகியவை சென்னை அலுவலகத்தின்கீழ் வருகிறது.

ஆயுள், பொது மற்றும் மருத்துவக் காப்பீடு தொடர்பான புகார்களை இந்த அலுவலகம் விசாரித்துதீர்வு வழங்குகிறது. இங்கு புகார்களை அளிக்க எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

கடந்த 2020–21 நிதியாண்டில் சென்னை அலுவலகம் மூலம், காப்பீடு தொடர்பாக 1,677 புகார்கள் பெறப்பட்டு, 1,416 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இதில், 40% புகார்கள் ஆயுள் காப்பீடு, 14% பொதுக் காப்பீடு, 46% மருத்துவக் காப்பீடு தொடர்பானவை.

கரோனா காலத்திலும் காப்பீட்டுதாரர்களின் புகார்கள் காணொலி மூலம் விசாரித்து தீர்வு காணப்பட்டது. இதற்காக, கடந்த பிப்ரவரிமாதம் ஆன்லைன் மூலம் புகார்களை பதிவு செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டது.

---

2. உச்சநீதிமன்றத்தில் மத்தியஸ்த மையம்: தலைமை நீதிபதி திறந்துவைத்தார்

உச்சநீதிமன்ற வளாகத்தில் மத்தியஸ்த மையம், தேசிய சட்டப் பணிகள் ஆணைய அலுவலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா செவ்வாய்க்கிழமை திறந்துவைத்தார்.

உச்சநீதிமன்ற சட்டப் பணிகள் குழு (எஸ்எஸ்எல்எஸ்சி), மத்தியஸ்தம் மற்றும் சமரச திட்டக் குழு (எம்சிபிசி) ஆகியவற்றின் வழிகாட்டுதலில் உச்சநீதிமன்ற மத்தியஸ்த மையம் செயல்படுகிறது. உச்சநீதிமன்றம் பரிந்துரைக்கும் வழக்குகள் அந்த மையத்தில் விசாரிக்கப்படும். இதற்காக அந்த மையத்தில் பயிற்சி பெற்ற 79 மத்தியஸ்தர்கள் உள்ளனர்.

இந்நிலையில், உச்சநீதிமன்றத்தின் கூடுதல் கட்டட வளாகத்தில் புதிதாக மத்தியஸ்த மையம், தேசிய சட்டப் பணிகள் ஆணைய அலுவலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா திறந்துவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஏ.எம்.கான்வில்கர், சஞ்சய் கிஷண் கௌல், உதய் உமேஷ் லலித் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இவர்களில் ஏ.எம்.கான்வில்கர் எஸ்எஸ்எல்எஸ்சி தலைவராகவும், சஞ்சய் கிஷண் கௌல் எம்சிபிசி உறுப்பினராகவும் உள்ளனர். உதய் உமேஷ் லலித் தேசிய சட்டப் பணிகள் ஆணையத்தின் நிர்வாகத் தலைவராக பதவி வகிக்கிறார்.

---

3. ஸ்கார்ப்பியன் நீர்மூழ்கிக் கப்பல் வேலா: கடற்படையிடம் ஒப்படைப்பு

நான்காவது ஸ்கார்ப்பியன் நீர்மூழ்கிக் கப்பல் வேலா இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது.

ப்ராஜக்ட்–75 திட்டத்தின் நான்காவது நீர்மூழ்கிக் கப்பலான யார்டு 11878 இந்திய கடற்படையிடம் இன்று (09.11.2021) ஒப்படைக்கப்பட்டது. ஸ்கார்ப்பியன் வகையைச் சேர்ந்த ஆறு நீர்மூழ்கிக் கப்பல்களை கட்டுவது ப்ராஜக்ட்–75 திட்டத்தில் அடங்கும். இந்த வகை நீர்மூழ்கிக் கப்பல்கள், பிரான்ஸ் நாட்டின், திருவாளர்கள் நேவல் குரூப் ஒத்துழைப்புடன், மும்பை மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்தில் தாயரிக்கப்பட்டு வருகின்றன.

'வேலா' என்று பெயரிடப்பட்டுள்ள நீர்மூழ்கிக் கப்பல், 6, மே 2019 அன்று தனது சேவையைத் தொடங்கி, கொவிட்–19 கட்டுப்பாடுகளுக்கு இடையேயும், அனைத்து பெரிய துறைமுகங்கள் மற்றும் ஆயுதம், சென்சார் ஒத்திகை உள்ளிட்ட அனைத்துக் கடல்வழி ஒத்திகைகளையும் நிறைவு செய்துள்ளது. இந்த வகையைச் சேர்ந்த மூன்று நீர்மூழ்கிக் கப்பல்கள் ஏற்கனவே இந்திய கடற்படைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நீர்மூழ்கிக் கப்பல் கட்டுமானம் மிகவும் சிக்கலானது என்பதோடு, அனைத்து சாதனங்களையும் சிறிய அளவுடையதாக மாற்றி கடுமையான தரப்பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டியிருப்பதால், இது மிகவும் சிரமமான பணியாகும்.

இந்தியாவில் உள்ள கப்பல் கட்டும் தளத்தில் இத்தகைய நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டப்பட்டிருப்பது 'தற்சார்பு இந்தியாவை' நோக்கிய மற்றொரு நடவடிக்கையாக கருதப்படுகிறது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல், இந்திய கடற்படையில் உடனடியாக பணியில் ஈடுபடுத்தப்படுவது, இந்தியக் கடற்படையின் திறனை மேம்படுத்தும் என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

4. இந்திய கடற்படை தளபதியாக ஆர்.ஹரிகுமார் நியமனம்!

இந்திய கடற்படை தளபதியாக ஆர்.ஹரிகுமார் பதவியேற்கவுள்ளார். கரம்பீர் சிங் ஓய்வு பெறும் நிலையில் ஹரிகுமார் பதவியேற்கிறார்.

ஹரிகுமார் 1983 ஜனவரியில் கடற்படையில் சேர்ந்தார். மும்பை பல்கலைக்கழகம் மற்றும் யு.எஸ். அவர் கடற்படை போர் கல்லூரி மற்றும் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் படித்தார். இவர் தேசிய பாதுகாப்பு அகாடமியில் பட்டம் பெற்றவர்.

மேலும் ஐ.என்.எஸ் விராட் உட்பட 5 கப்பல்களுக்கு கேப்டனாக இருந்த ஹரிகுமார் பல்வேறு பதக்கங்களை பெற்றுள்ளார்.

---

5. காரீப் பருவத்தில் 209 லட்சம் டன் நெல் கொள்முதல்: மத்திய அரசு

நடப்பு காரீப் சந்தைப் பருவத்தில் 209 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்துள்ளதாக மத்திய அரசு செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நடப்பு காரீப் சந்தைப் பருவத்தில் நவம்பர் 8–ஆம் தேதி வரையிலுமாக, 209.52 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.41,066.80 கோடியாகும். இதன் மூலம், 11.57 லட்சம் விவசாயிகள் பலனடைந்துள்ளனர்.

கடந்தாண்டைப் போலவே இந்தாண்டும் நெல் கொள்முதல் சீராக நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, சண்டீகர், குஜராத், ஹரியாணா, ஹிமாசல பிரதேசம், ஜம்மு–காஷ்மீர், பஞ்சாப், உத்தர பிரதேசம், உத்தரகண்ட், தெலங்கானா, ராஜஸ்தான், கேரளம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களிலிருந்து அதிக அளவில் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

காரீப் சந்தைப் பருவம் என்பது 2021–22 அக்டோபர் முதல் செப்டம்பர் வரையிலானதாகும்.

6. இலங்கைக்கு சுற்றுலா செல்வதில் இந்தியா'கள் முதலிடம்

இலங்கைக்கு சுற்றுலா செல்வதில் இந்தியா'கள் முதலிடத்தில் உள்ளனா'. இலங்கை சுற்றுலா தொடா'பாக அந்நாட்டு அதிகாரிகள் வெளியிட்ட தகவலில் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

அதன்படி இலங்கைக்கு கடந்த அக்டோபா' மாதத்தில் 22,771 சா'வதேச சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனா'. இதன் மூலம் கரோனாவுக்குப் பிறகு இலங்கையின் சுற்றுலாத் துறையில் மேம்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தியா, பிரிட்டன், பாகிஸ்தான், ரஷியா, ஜொ'மனி ஆகிய நாடுகளில் இருந்து அதிக சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனா'. மொத்த சுற்றுலாப் பயணிகளில் 37 சதவீதம் போ' இந்தியாவைச் சோ'ந்தவா'கள். இதன் மூலம் இலங்கைக்கு சுற்றுலா வருபவா'களில் இந்தியா'கள் முதலிடம் பிடித்துள்ளனா'. பிரிட்டன், பாகிஸ்தான் பயணிகள் முறையே 10 மற்றும் 9 சதவீதம் உள்ளனா'.

அமெரிக்கா, மேற்கு, கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதும் இப்போது மேம்பட்டு வருகிறது.

இந்த ஆண்டில் அக்டோபா' மாதம் வரை 60,695 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனா'. வழக்கமாக இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடும்போது இது 88 சதவீதம் குறைவாகும்.

சுற்றுலா வருவாய் இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகித்து வருகிறது. கரோனா பிரச்னை காரணமாக சுற்றுலா வருவாய் அடியோடு சரிந்ததால் அந்நாடு மிகப்பெரிய பொருளாதாரச் சிக்கலை எதிா'கொண்டு வருகிறது.

---

7. தேசிய அளவில் பள்ளிக் கல்வியில் சாதனைக்கான ஆய்வுகள் நாளை தொடக்கம்

3, 5, 8 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் மேற்கொள்ளப்படும் தேசிய அளவில் பள்ளிக் கல்வியில் சாதனைக்கான ஆய்வுகள் திட்டம் வெள்ளிக்கிழமை (நவம்பா' –12 ஆம் தேதி) தொடங்குகிறது.

தேசிய சாதனைக்கான ஆய்வு மத்திய அரசின் கல்வித்துறை அமைச்சகத்தால் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இது மாணவா'களின் கற்றல் குறித்த தேசிய அளவிலான மிகப் பெரிய கணக்கெடுப்பாகும். பள்ளிக் கல்வியின் நிலை, அமைப்பு, செயல்திறனுக்கான பிரதிபலிப்பை இந்த ஆய்வு வழங்குகிறது.

குறிப்பாக பள்ளிக்குழந்தைகளின் திறன்களை மதிப்பீடு செய்து அதில் மேம்பாடுகளுக்கான திசையைக் கண்டறிய இந்த ஆய்வுகள் உதவுகின்றன. கடைசியாக கடந்த 2017 ஆண்டில் 3, 5, 8 வகுப்புகளில் மட்டும் மத்திய அரசால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தற்போது கூடுதலாக 10 ஆம் வகுப்பும் இணைக்கப்பட்டு இந்த திட்டம் வெள்ளிக்கிழமை (நவம்பா' 12–ஆம் தேதி) நாடு முழுவதும் தொடங்கப்படுகிறது.

கொவைட்–19 நோய்த் தொற்றின்போது கற்றல்களின் பாதிப்பு மற்றும் புதிய கற்றல் மதிப்பிட்டு தீர'வு காணும் நடவடிக்கைகளுக்கு இந்த ஆய்வு உதவும் என மத்திய கல்வித்துறை புதன்கிழமை தெரிவித்துள்ளது.

கற்றல் மூலம் மாணவா'கள் அடையும் திறன்களை அளவிட்டு மதிப்பிட தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்சிஇஆர்'டி) இதற்கான கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இந்த ஆய்வுக்கான முறை, சோதனை, தோ'வுப் பொருட்கள் போன்ற மாதிரிகளை இதில் அடக்கம்.

இருப்பினும், மாதிரி பள்ளிகளில் சோதனை அந்தந்த மாநிலங்கள், யூனியன் பிரதேச அரசுகளின் கல்வித்துறைகளுடன் மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் இணைந்து செய்யப்படும் என்றும் மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021–தேசிய சாதனைக்கான ஆய்வு, நாடு முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகள் (மத்திய அரசு மற்றும் மாநில அரசு), அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியாா' பள்ளிகளின் ஆகியவைகளையும் உள்ளடக்கியுள்ளது.

36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 733 மாவட்டங்களில் கிட்டத்தட்ட 1.23 லட்சம் பள்ளிகள், 38 லட்சம் மாணவா'கள் இந்தத் திட்டத்தில் இடம்பெறுவா' என்று எதிா'பாா'க்கப்படுகிறது.

மொழி, கணிதம், சுற்றுச்சூழல் கல்வி, அறிவியல் மற்றும் ஆங்கிலம் பாடங்களில் வகுப்புகளுக்கு தகுந்தவாறு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. தமிழ், வங்கம், கன்னடம், இந்தி உள்ளிட்ட 22 மொழிகளில் இந்த ஆய்வுத் தோ'வு நடத்தப்படும் என மத்திய கல்வி அமைச்சம் தெரிவித்துள்ளது.

---

8. ஆசிய செயிலிங்: கணபதி/வருண் இணை சாம்பியன்

ஓமனில் நடைபெற்ற ஆசிய 49 இஆர' செயிலிங் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவா' பிரிவில் இந்தியாவின் வருண் தக்கா'/கே.சி.கணபதி இணை சாம்பியன் ஆனது. ஆசிய போட்டியில் இது இந்த இணையின் 3–ஆவது பதக்கமாகும்.

4 நாள்கள் நடைபெற்ற இப்போட்டியின் முடிவில் வருண்/கணபதி இணை முதலிடம் பிடிக்க, ஓமனின் முசாப் அல் ஹாதி/வாலித் அல் கின்டி இணை வெள்ளியும், அதே நாட்டின் அகமது அல் ஹசானி/அப்துல்ரஹ்மான் அல் மஷாரி ஜோடி வெண்கலமும் வென்றது.

இதே பிரிவில் கலந்துகொண்ட மற்றொரு இந்திய ஜோடியான ஆனந்த் தாக்கா'/சத்யம் ரங்காட், 29–ஆவது இடம் பிடித்தனா'.

மகளிருக்கு 2–ஆம் இடம்: இதேபோட்டியில் மகளிா' பிரிவில் இந்தியாவின் ஹா'ஷிதா தோமா'/ஸ்வேதா ஷொ'வெகா' இணை வெள்ளிப் பதக்கம் வென்றது.

அடுத்தபடியாக, வருண்/கணபதி இணை அதே நகரில் வரும் 16–ஆம் தேதி முதல் நடைபெற இருக்கும் உலக சாம்பியன்ஷிப் போட்டியிலும் கலந்துகொள்கிறது.

---

9. பகவான் பிர்சா முண்டா பிறந்த நவம்பர் 15ம் தேதியை, ஜன்ஜாதிய கௌரவ் தினமாக அறிவிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்:

தீரமான பழங்குடியின சுதந்திர போராட்ட வீரர்களை நினைவு கூறவும், நாட்டுக்காக அவர்கள் செய்த தியாகங்களை வருங்கால தலைமுறையினர் அறியவும் நவம்பர் 15ம் தேதியை, ஜன்ஜாதிய கௌரவ் தினமாக அறிவிக்க பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தியாவின் சுதந்திர போராட்டம் சந்தால்கர்கள், தமார்கள், கோல் இனத்தவர், பில், காசி இனத்தவர் மற்றும் மிசோ இனத்தவர் உட்பட இன்னும் பல பழங்குடியின சமுதாயத்தினரால் வலுப்படுத்தப்பட்டது.

இந்த பழங்குடி இனத்தவர்கள் நடத்திய புரட்சிகர இயக்கங்கள் மற்றும் போராட்டங்கள் அவர்களின் மகத்தான தைரியம் மற்றும் உன்னத தியாகத்தால் குறிக்கப்பட்டன. ஆங்கில ஆட்சிக்கு எதிரான, நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த பழங்குடியின இயக்கங்கள், நாட்டின் சுதந்திர போராட்டத்துடன் இணைப்பை ஏற்படுத்தி கொண்டு நாடு முழுவதும் இந்தியர்களை ஊக்குவித்தன. ஆனால், அந்த பழங்குடியின நாயகர்கள் பற்றி, பொது மக்கள் பலருக்கு தெரியாது. மாண்புமிகு பிரதமரின் 2016ம் ஆண்டு சுதந்திர தின உரையை தொடர்ந்து, நாடு முழுவதும் 10 பழங்குடியின சுதந்திர போராட்ட வீரர்களின் அருங்காட்சியகம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

ஜன்ஜாதிய கௌரவ் தினம் அறிவிக்கப்பட்ட தேதி, திரு பிர்சா முண்டாவின் பிறந்த தினம். அவர் நாடு முழுவதும் உள்ள பழங்குடியின மக்களால் பகவான் என அழைக்கப்பட்டார். ஆங்கில காலனி முறையின் சுரண்டலுக்கு எதிராக பிர்சா முண்டா தைரியமாக போராடினார் மற்றும் ஆங்கிலேய அடக்குமுறைக்கு எதிராக புரட்சிக்கு அழைப்பு விடுத்தார். இந்த அறிவிப்பு, பழங்குடியின சமுதாயத்தின் பெருமையான வரலாறு மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை அங்கீகரிக்கிறது. இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும் மற்றும் பழங்குடியின கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கும் முயற்சிகள் அங்கீகரிக்கப்படும்.

ராஞ்சியில் உள்ள பழங்குடியினர் சுதந்திர அருங்காட்சியகம் அமைக்கும் இடத்தில்தான் பிர்சா முண்டா இறந்தார். இந்த அருங்காட்சியகத்தை பிரதமர் திறந்து வைப்பார். பழங்குடியின மக்களில் 75 ஆண்டு வரலாறை நினைவு கூறும் வகையில் இந்தாண்டு நவம்பர் 15ம் தேதி முதல் 22ம் தேதி வரை ஒருவார கால கொண்டாட்டத்துக்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மாநில அரசுகளுடன் இணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிகள், பழங்குடியினரின் தனித்துவமான கலாச்சார பாரம்பரியம், சுதந்திர போராட்டத்தில் அவர்களின் பங்களிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும்.

---

10. குமரியைச் சேர்ந்த தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம் : வாடிகனில் மே 15–ம் தேதி வழங்கப்படுகிறது

குமரி மாவட்டத்தைச் சேர்ந்த அருளாளர் மறை சாட்சி தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம், அடுத்த ஆண்டு மே 15–ம் தேதி வாடிகனில் வழங்கப்பட உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் நட்டாலத்தை சேர்ந்தவர் தேவசகாயம். கடந்த 1745–ம் ஆண்டு மே 14–ம் தேதி கிறிஸ்தவராக திருமுழுக்கு பெற்றார். ஆரல்வாய்மொழி காற்றாடிமலையில் 1752–ம் ஆண்டு ஜனவரி 14–ம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார். கத்தோலிக்க கிறிஸ்தவ சபையின் மறைசாட்சியாக தேவசகாயம் போற்றப்படுகிறார்.

இவரை சிறப்பிக்கும் வகையில் 2012–ம் ஆண்டு டிசம்பர் 2–ம் தேதி, தேவசகாயத்தை ₹முக்திபேறு பெற்றவர்' என வாடிகன் பேராயம் அறிவித்தது. அன்றையதினம் இதற்கான விழா நாகர்கோவில் கார்மல் பள்ளியில் நடைபெற்றது. பின்னர், 2020 பிப்ரவரி 21–ம் தேதி, ₹தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம் வழங்கலாம்' என போப் ஆண்டவர் அறிவித்தார்.

கடந்த மே மாதம் வாடிகனில் நடந்த கர்தினால்கள் கூட்டத்தில், தேவசகாயத் துக்கு புனிதர் பட்டம் வழங்கும் இடமாக, வாடிகன் புனித பீட்டர் சதுக்கம் அறிவிக்கப்பட்டது. கரோனா பரவலால் இதற்கான நாள் அறிவிக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில், அடுத்த ஆண்டு மே 15–ம் தேதி வாடிகனில் பீட்டர் சதுக்கத்தில் நடைபெறும் விழாவில், மறைசாட்சி தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம் வழங்கப்படுகிறது. இதற்கான உத்தரவு கடிதம், நாகர்கோவில் கோட்டாறு மறை மாவட்ட ஆயர் நசரேன் சூசை மற்றும் பொறுப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

வழக்கமாக சர்ச்சுடன் தொடர்புடைய பாதிரியார்கள், பிஷப்கள், கார்டினல் களுக்குத்தான் அவர்களின் அற்புதங்களைப் பொறுத்து புனிதர் பட்டம் வழங்கப்படும். ஆனால், இந்தியாவில் தமிழகத்தில் பிறந்த சாதாரண மனிதர் ஒருவருக்கு புனிதர் பட்டம் வழங்குவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

---

11. அங்கன்வாடி பணியிடங்கள்: விதவை–கணவனால் கைவிடப்பட்டோருக்கு 25 சதவீத இடங்கள்

அங்கன்வாடி, அங்கன்வாடி உதவியாளர் காலிப் பணியிடங்களில் 25 சதவீத இடங்கள் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோரைக் கொண்டு நிரப்பப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் ஷம்பு கல்லோலிகர், செவ்வாய்க்கிழமை வெளியிட்ட உத்தரவு:

அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடிப் பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் காலிப் பணியிடங்களை நிரம்பும் போது, இனசுழற்சி முறையிலான இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பணிகளுக்கு பெண்களை மட்டுமே பணியமர்த்த வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சத்துணவுத் துறை: புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப் பணியிடங்களை நிரப்பும் போது 25 சதவீத இடங்கள் விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோருக்கு ஒதுக்கப்படுகிறது.

அங்கன்வாடி ஊழியர்கள் காலிப் பணியிடங்களில் ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோருக்கு 25 சதவீத இடஒதுக்கீடு வழங்க உரிய திருத்தங்களை வெளியிட வேண்டுமென ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டார். அதன்படி, அங்கன்வாடிப் பணியாளர், குறு அங்கன்வாடி பணியாளர் மற்றும் அங்கன்வாடி உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமனங்களில் 25 சதவீத பணியிடங்கள், விதவைகள் அல்லது கணவரால் கைவிடப்பட்டோரைக் கொண்டு முன்னுரிமையின் அடிப்படையில் நிரப்பப்படும்.

---

12. 5.5 கோடி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு: ஒன்றிய அமைச்சர் தகவல்

டெல்லியில் 5வது ஐஎஸ்சி –ஐஎப்சிசிஐ துப்புரவு விருதுகள் மற்றும் இந்திய துப்புரவு மாநாடு நடைபெற்றது. இதில் ஒன்றிய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கலந்து கொண்டு பேசியதாவது: கடந்த 70 ஆண்டுகளில் 17 சதவீதம் வீடுகள் மட்டுமே குடிநீர் குழாய் இணைப்பை பெற்றன. ஆனால், கொரொனா தொற்று சூழல் காரணமாக சிக்கல்கள் இருந்த போதிலும் நாங்கள் கூடுதலாக 27 சதவீதம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பை வழங்கி இருக்கிறோம். தற்போது 8.5 கோடி பெண்கள் வீடுகளில் குடிநீர் குழாய் இணைப்பை பெற்றுள்ளனர். ஜல் ஜீவன் திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை 5.5 கோடி வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது," என்றார்.

---

1. COVID தடுப்பூசிகளை வாங்குவதற்காக $2 பில்லியன் அமெரிக்க டாலர் கடனுக்கு, இந்தியா, எந்த நிறுவனங்களிடம் விண்ணப்பித்து உள்ளது?

அ) உலக வங்கி

ஆ) ADB–AIIB ☑

இ) BRICS வங்கி

ஈ) IMF



✓ COVID தடுப்பூசிகளை வாங்குவதற்காக, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றில் (ADB) இந்தியா $2 பில்லியன் அமெரிக்க டாலர் கடனைப் பெற்றுள்ளது.

✓ மணிலாவைச் சார்ந்த ADB $1.5 பில்லியனும் மற்றும் பெய்ஜிங்கைச் சார்ந்த AIIB $500 மில்லியனும் வழங்க பரிசீலித்து வருகின்றன. சுமார் 667 மில்லியன் டோஸ் கோவிட் தடுப்பூசிகள், கடன்மூலம் வாங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

2. இந்தியாவும் எந்த நாடும் பசுமை ஹைட்ரஜனை ஆராயவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வழித்தடங்களை அமைக்கவும், இயற்கை எரிவாயு துறையில் திட்டங்களை அமைக்கவும் ஒப்புக்கொண்டன?

அ) அமெரிக்கா

ஆ) ஜெர்மனி

இ) இத்தாலி ☑

ஈ) ரஷ்யா



✓ இந்தியாவும் இத்தாலியும் பசுமை ஹைட்ரஜனின் வளர்ச்சி, புதுப்பிக்கத்த–க்க எரிசக்தி வழித்தடங்கள் மற்றும் இயற்கை எரிவாயு துறையில் திட்டங்களை அமைக்க ஒப்புக்கொண்டுள்ளன. ரோமில் நடைபெற்ற ஜி 20 உச்சிமாநாட்டையொட்டி, பிரதமர் மோடி, இத்தாலிய பிரதமர் மரியோ டிராகியுடன் நேரில் சந்தித்துப் பேசிய பிறகு, அதுகுறித்த கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. இந்தியா மற்றும் இத்தாலி இடையே (2020–2024) மேம்படுத்தப்பட்ட கூட்டாண்மைக்கான செயல் திட்டம் கடந்த 2020'இல் கையெழுத்தானது.

---

3. 'Don't Choose Extinction' என்பது சமீபத்தில் எந்த நிறுவனத்தால் தொடங்கப்பட்ட ஒரு பரப்புரையாகும்?

அ) UNDP ☑

ஆ) UNEP

இ) FAO

ஈ) WWF

✓ ஐநா வளர்ச்சித்திட்டமானது (UNDP), சமீபத்தில் 'அழிவைத் தேர்ந்தெடுக்க வேண்டாம்' என்ற தலைப்பில் ஒரு காணொலிப் பரப்புரையை தொடங்கியது. பருவநிலை மாற்றத்திற்கு எதிரான உலகளாவிய நடவடிக்கைகளை எடுத்துரைக்க அனைவரையும் வலியுறுத்துதற்காக, 'ஃபிரான்கி தி டைனோ' என்ற டைனோசரை அதன் சின்னமாக அறிவித்தது. காணொலிப் பரப்புரையுடன், இந்த முயற்சிக்கு ஆதரவாக 'Don't Choose Extinction' என்ற இணையதளத்தையும் அந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியது. மேலும், ஃபிரான்கிக்காக டுவிட்டர் கணக்கு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

---

4. பண்டைய பேரரசுகளான தாதன் மற்றும் லிஹ்யானை தற்போது அகழாய்வு செய்துவருகிற நாடு எது?

அ) சௌதி அரேபியா ☑

ஆ) நேபாளம்

இ) வங்காளதேசம்

ஈ) இஸ்ரேல்



✓ சௌதி அரேபியாவில் உள்ள தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பண்டையகால பேரரசுகளான தாதன் மற்றும் லிஹ்யான் குறித்த அகழ்வாராய்ச்சிகளை ஐந்து இடங்களில் மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பேரரசுகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு செழித்து வளர்ந்த முக்கியமான பிராந்திய ஆற்றல்களாக இருந்தன. இந்தத் திட்டம் சௌதி–பிரெஞ்சு கூட்டாண்மைத் திட்டமாகும்.

---

5. 'பஞ்சாமிர்த கலவை'யுடன் தொடர்புடையது எது?

அ) பருவநிலை மாற்றம் ☑

ஆ) உட்கட்டமைப்பு மேம்பாடு

இ) துறைமுக கட்டுமானம்

ஈ) இந்தியா மற்றும் பூட்டான் இடையே இருதரப்பு உறவுகள்



✓ 'பஞ்சாமிர்த கலவை' என்பது கிளாஸ்கோவில் நடைபெற்ற CoP26 மாநாட்டின்போது இந்தியப் பிரதமரால் முன்மொழியப்பட்ட 5 மடி உத்தி ஆகும். இந்த உத்தி, 2030ஆம் ஆண்டளவில் உலகம் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய உதவுகிறது.

✓ பஞ்சாமிர்த கலவையில் 2030'க்குள் 500 GW புதைபடிவமற்ற ஆற்றல் திறன், 2030'க்குள் 50% புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன், 2030'க்குள் 1 பில்லியன் டன் கரியமில உமிழ்வைக் குறைத்தல், கார்பன் தீவிரத்தை 2030'இல் 45% ஆக குறைத்தல், 2030'இல் நிகர சுழியத்தை அடைதல் ஆகியவை உள்ளடங்கும்.

---

6. 3 முக்கியமான இயற்கை பாதுகாப்பு பணிகளை நிர்வகிப்பதற்கு SPV'ஐ முதன்முதலில் அமைத்த இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு ☑

ஆ) கேரளா

இ) ஒடிஸா

ஈ) குஜராத்



✓ மூன்று முக்கியமான இயற்கை பாதுகாப்பு பணிகளை தொழில்ரீதியாக நிர்வகிப்பதற்காக, 'தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்' என்ற பெயரில் முதன்முறையாக சிறப்பு நோக்கம் கொண்ட நிறுவனத்தை (SPV) தமிழ்நாடு அமைத்துள்ளது.

✓ இந்நிறுவனம் தமிழ்நாடு பருவநிலை மாற்றம், தமிழ்நாடு பசுமை மற்றும் தமிழ்நாடு ஈரநிலப்பணிகள் ஆகியவற்றை நிர்வகிக்கும். இதன் அங்கீகரி–க்கப்பட்ட மூலதனம் ₹5 கோடி ஆகும். மாநில சுற்றுச்சூழல் செயலாளர் இந்த நிறுவனத்தின் தலைவர் மற்றும் MDஆக உள்ளார்.

---

7. சமீபத்தில் திறந்து வைக்கப்பட்ட கருட் சட்டி பாலம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) உத்தரகாண்ட் ☑

இ) மத்திய பிரதேசம்

ஈ) உத்தர பிரதேசம்



✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் ₹1 கோடி மதிப்பிலான பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். மந்தாகினி ஆற்றின் கருட் சட்டி பாலம் உட்பட கேதார்நாத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அவர் நாட்டுக்கு அர்ப்பணித்தார். அவர் ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் சமாதி மற்றும் சிலையை திறந்து வைத்தார்.

---

8. 'பொது விவகாரங்கள்' பிரிவின்கீழ், 2020ஆம் ஆண்டுக்கான 'பத்ம விபூஷன்' விருதை வென்றவர் யார்?

அ) ஷின்சோ அபே ☑

ஆ) கோத்தபய இராஜபக்ச

இ) ஷேக் ஹசீனா

ஈ) K P சர்மா ஒலி



✓ பத்ம விருதுகள், 2021'இல் 119 நபர்களுக்கு வழங்கப்பட்டன. COVID–19 தொற்று காரணமாக விருது பெற்றவர்களைக் கௌரவிக்கும் விழாவை 2020'இல் நடத்த முடியவில்லை. இந்தப் பட்டியலில் 7 'பத்ம விபூஷன்', 10 'பத்ம பூஷன்' மற்றும் 102 'பத்மஸ்ரீ' விருது பெற்றவர்கள் உள்ளனர்.

✓ இதில் 16 விருதுகள் மரணத்திற்குப்பின் வழங்கப்பட்டுள்ளன. இவ்விருது பெற்றவர்களின் பட்டியலில் 29 பெண்களும் 1 திருநங்கையும் அடங்குவ–ர். முன்னாள் ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபேவு, 'பொது விவகாரங்கள்' பிரிவின்கீழ் இவ்விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

9. PMJDY மற்றும் குறைக்கப்பட்ட குற்றங்கள் குறித்த மதிப்பீட்டை எந்த வங்கியின் ஆராய்ச்சித் துறை வெளியிட்டது?

அ) RBI

ஆ) SBI ☑

இ) PNB

ஈ) கனரா வங்கி

✓ பாரத ஸ்டேட் வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் துறையின்படி, அதிக பிரதமர் ஜன் தன் யோஜனா (PMJDY) கணக்கு இருப்புகளைக் கொண்ட மாநிலங்களில் குற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளன. அத்தகைய மாநிலங்களில் மதுபானம் மற்றும் புகையிலைப் பொருட்கள் போன்ற போதைப்பொருட்களின் நுகர்வு புள்ளிவிவர ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் கண்டுள்ளன.

10."திசுவளர்ப்பு அடிப்படையிலான விதை உருளை விதிகள்", எந்த இந்திய மாநிலத்தின் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன?

அ) கேரளா

ஆ) அஸ்ஸாம்

இ) மத்திய பிரதேசம்

ஈ) பஞ்சாப் ☑



✓ பஞ்சாப் அமைச்சரவை 'பஞ்சாப் திசுவளர்ப்பு அடிப்படையிலான விதை உருளைக்கிழங்கு விதிகள்–2021'க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்விதிகள் பஞ்சாப் மாநிலத்தை நிலையான உருளைக்கிழங்கு விதை மையமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இதன்மூலம் பஞ்சாப் மாநிலத்தில் உருளைக்கிழங்கு சாகுபடி அதிகரிக்கு –ம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விதிகளின் மூலம், திசு வளர்ப்பு அடிப்படையிலான சான்றிதழ் வசதியைப் பெற்ற நாட்டின் முதல் மாநிலம் ஆக பஞ்சாப் மாநிலம் இருக்கும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நிலநடுக்கத்தை துல்லியமாக அறிய சென்னை ஐஐடியில் புதிய தொழில்நுட்பம் கண்டுபிடிப்பு

சென்னை ஐஐடியில் நிலநடுக்கங்களைத் துல்லியமாக கண்டறிவதற்கான புதிய தொழில் நுட்பத்தை உருவாக்கியுள்ளனர்.

நிலநடுக்க சமிக்ஞைகளில் முதல் அதிர்வலைகளை துல்லியமாகக் கண்டறிந்து, மிகக் குறைந்த நேரத்தில் உயிர்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்தத் தொழில்நுட்பம் பயன்படும் எனவும் கண்டறிந்த வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

சென்னை ஐஐடியின் புதிய தொழில் நுட்பம், நிலநடுக்க அதிர்வலைகளின் துல்லியமான நேரத்தை மதிப்பிடுவது, ஒரு வலுவான ஆரம்ப எச்சரிக்கை அமைப்பை உருவாக்குவதுடன், சுமார் 30 விநாடிகள் முதல் 2 நிமிஷங்கள் வரை தற்காத்துக் கொள்வதற்குத் தயார் செய்து கொள்ள நேரத்தையும் வழங்குகிறது.

பூமியின் மேற்பரப்பு வரை அலைகள் தாக்குவதற்கு முன் கிடைக்கும் இந்த நேரம் மிகவும் பயனளிக்கக்கூடியது. நிலநடுக்கத்தைக் கண்டறிந்து தெரிவிப்பதற்கான நேரம் குறைவானதாகத் தோன்றினாலும், அணு உலைகள், மெட்ரோ போன்ற போக்குவரத்து, உயர் கட்டடங்களில் உள்ள லிப்ட்கள் ஆகியவற்றை நிறுத்தவும் எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றவும் இந்த காலம் போதுமானது.

சென்னை ஐஐடியின் கெமிக்கல் பொறியியல் துறை பேராசிரியர் அருண் கே தங்கிராலா வழிகாட்டுதலில், ஆராய்ச்சி மாணவி காஞ்சன் அகர்வால் இதற்கான ஆய்வுகளை மேற்கொண்டார். இந்த ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் புகழ்பெற்ற சக மதிப்பாய்வு செய்யப்பட்ட அறிவியல் இதழான 'பிளாஸ் ஒன்' –இல் வெளியிடப்பட்டுள்ளன. இதுகுறித்து சென்னை ஐஐடி ஆராய்ச்சி மாணவி காஞ்சன் அகர்வால் கூறியது: 'பி–அலை வருகை குறித்த தகவல், நிலநடுக்கத்தின் அளவு, ஆழம் மற்றும் மையப்புள்ளி, இடம் போன்ற பிற மூல அளவு உருக்களைத் தீர்மானிப்பதில் முக்கியமானது. எனவே, பி–அலை கண்டறிதல் சிக்கலுக்கு உறுதியான, துல்லியமான தீர்வாக அமையும். நிலநடுக்க விவரங்களைச் சரியாக மதிப்பிடுவதற்கும், நிலநடுக்கம் அல்லது பிற தூண்டப்பட்ட நிகழ்வுகளால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கும் அவசியம்' எனத் தெரிவித்துள்ளார்.

நில அதிர்வு சமிக்ஞைகள்: முக்கியமாக கடலில் அலைகள், பூமியின் மேலோட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள், வளிமண்டல மாறுபாடுகள் மற்றும் மனிதச் செயல்பாடுகள் காரணமாக நிலம் தொடர்ந்து அதிர்வடைகிறது.நில அதிர்வு சமிக்ஞைகள் இயற்கையான (நிலநடுக்கங்கள், எரிமலை வெடிப்புகள், சுனாமி போன்றவை) அல்லது மனிதனால் உருவாக்கப்பட்ட (அதிக போக்குவரத்து, அணு வெடிப்புகள், சுரங்க நடவடிக்கைகள் போன்றவை) மூலங்களிலிருந்து உருவாக்கப்படலாம்.

அனைத்து நில அதிர்வு நிகழ்வுகளும் அவற்றின் அளவிற்கு விகிதாசாரமான ஆற்றலை வெளியிடுகின்றன. வெளியிடப்பட்ட இந்த ஆற்றல், ஒரு அலையாக அனைத்து திசைகளிலும் நகர்ந்து, ஒரு நில அதிர்வு அளவி மூலம் நில அதிர்வு சமிக்ஞையாகப் பதிவு செய்யப்படுகிறது. சீஸ்மோகிராம்கள் என்பது நில அதிர்வு இயக்கத்தினை பதிவு செய்யும் வரைபடங்களாகும்.

முக்கியப் பயன்கள்: இந்த நில அதிர்வு வரைபடங்களின் பகுப்பாய்வு, பூமியின் செயல்பாட்டைப் புரிந்துகொள்வதற்கும், நிலநடுக்கங்களுக்கான முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்புகளை அமைப்பதற்கும், மூல இடங்களைத் தீர்மானிப்பதற்கும் , பிற நில அதிர்வு நிகழ்வுகளின் மூலத்தைக் கண்டறிவதற்கும் இன்றியமையாதது. நிலநடுக்கத்தின் சேதப் பகுதியைக் கண்டறிவது அல்லது கணிப்பது உயிர்களைப் பாதுகாப்பதிலும் சொத்து இழப்பைத் தடுப்பதிலும் பெரும் பங்கு வகிக்கிறது.

---

2. கோவா 52–ஆவது சர்வதேச திரைப்பட விழா: விருதுப் போட்டியில் 15 திரைப்படங்கள்

கோவாவில் இந்தமாத இறுதியில் நடைபெற உள்ள 52–ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் தங்க மயில் உள்ளிட்ட விருதுகளுக்கு இரு மராத்தி படங்கள் உள்பட 15 சர்வதேச படங்கள் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலை மத்திய தகவல், ஒலிபரப்புத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு: தேர்வு செய்யப்பட்டுள்ள திரைப்படங்களில் பின்லாந்து நாட்டின் எனி டே நவ் , அமெரிக்கா – நியூமெக்சிகோ படமான லேண்ட் ஆப் ட்ரிம்ஸ் , பராகுவேயின் சார்லட், ரோமானியாவின் இன்ட்ரகோல்ட், போலந்து நாட்டின் லீடர், ரஷியாவின் மாஸ்கோ டஸ் நாட் ஹேபன் மற்றும் தி டார்ம், வங்கதேசத்தின் நோ கிரவுண்ட் பினத் த ஃபீட் , ஜப்பானின் ரிங் வாண்ட ரிங், செக் குடியரசின் சேவிங் ஒன் ஹூ வாஸ் டெட், பிரேசிலின் தி பார்ஸ்ட் ஃபாலன் போன்ற வெளிநாட்டு படங்களும், இந்திய அளவில் கோதாவரி (மராத்தி), மே வசந்த்ராவ் (மராத்தி) ; செம்கோர் (டிமாசா–திபெத் மொழி) போன்ற படங்களும் போட்டிக்குத் தேர்வாகியுள்ளன.

தங்க மயில் விருது ரூ.40 லட்சம்: தேர்வு செய்யப்படும் சிறந்த திரைப்படத்துக்கான தங்க மயில் விருது ரூ.40,00,000 ரோக்கப் பரிசு, சான்றிதழ் அடங்கும். சிறந்த இயக்குநருக்கான படத்திற்கு வெள்ளி மயில் விருது ரூ.15,00,000 ரொக்கம், சான்றிதழ் அடங்கும். சிறந்த நடிகர், நடிகைகளுக்கான வெள்ளி மயில் விருது, தலா ரூ.10,00,000 லட்சம் ரொக்கம், சான்றிதழ் அடங்கும்.

சிறப்பு நடுவர் விருது: நடுவர் தேர்வு செய்யும் படத்துக்கு, அந்தப் படத்தின் இயக்குநருக்கு வெள்ளி மயில் விருதாக சான்றிதழ், ரூ.15,00,000 ரொக்கம் வழங்கப்படுகிறது. 52–ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா வரும் நவம்பர் 20 முதல் 28–ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த விழாவில் உள்நாடு மற்றும் சர்வதேச பார்வையாளர்களுக்கு 45 திரைபடங்கள் திரையிடப்பட உள்ளன.

---

3. கிராம சுற்றுலா: மத்திய பிரதேசமாநிலத்துக்கு சர்வதேச விருது

மத்திய பிரதேச சுற்றுலா வாரியத்தின் கிராப்புற சுற்றுலாத் திட்டத்துக்கு 'வோல்ட் டிராவல் மார்ட்' அமைப்பின் சிறந்த சுற்றுலாத் திட்டத்துக்கான விருது கிடைத்துள்ளது.

கரோனாவுக்கு பின் சுற்றுலா மேம்படுத்தப்பட்ட இடங்களைக் கணக்கில்கொண்டு இந்த விருது அளிக்கப்பட்டது. இதே கிராம சுற்றுலா பிரிவில் பிராந்திய அளவிலான ஸ்வர்ண புரஸ்கார் விருதும் மத்திய பிரதேச சுற்றுலாத் துறைக்கு கிடைத்துள்ளது. இது தவிர பெண்களுக்கு பாதுகாப்பான சுற்றுலா தலங்கள் பிரிவிலும் மத்திய பிரதேசத்துக்கு விருது கிடைத்துள்ளது.

இது தொடர்பாக மத்திய பிரதேச மாநில சுற்றுலாத் துறை முதன்மைச் செயலாளர் சேகர் சுக்லா கூறுகையில், 'சர்வதேச அளவில் சுற்றுலாத் துறையில் மத்திய பிரதேசத்துக்கு விருதுகள் கிடைத்துள்ளது மாநிலத்துக்கு மட்டுமல்ல நமது தேசத்துக்கே பெருமை சேர்க்கும் விஷயமாகும். மத்திய பிரதேசத்தை சுற்றுலாத் துறையில் சிறப்பிடத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று மாநில முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் மேற்கொண்ட முயற்சியும் இதற்கு முக்கியக் காரணம். லண்டனில் கடந்த வாரம் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருதை மாநில சுற்றுலாத் துறை அதிகாரிகள் பெற்றுக் கொண்டனர்.

கிராம சுற்றுலாத் திட்டத்தின்கீழ் மத்திய பிரதேசத்தில் 100 கிராமங்கள் உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற பாரம்பரிய உணவு, நாட்டுப் புற இசை, கிராமப்புற விளையாட்டு, உள்ளூர் கலைகள், கைவினைப் பொருள்கள், இளைஞர்களின் திறன் மேம்பாடு ஆகிவற்றுக்கு முக்கியத்துவம் அளித்ததன் மூலம் இந்த விருதுகள் சாத்தியமாகியுள்ளன' என்றார்.

---

4. ரிசர்வ் வங்கியின் இரு திட்டங்கள் இன்று துவக்குகிறார் பிரதமர் மோடி

ரிசர்வ் வங்கியின் வாடிக்கையாளர் சார்ந்த இரு திட்டங்களை, பிரதமர் மோடி இன்று 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக துவக்கி வைக்கிறார்.

இது குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

'ஆர்.பி.ஐ., ரீடெய்ல் டைரக்ட் ஸ்கீம்' மற்றும் வங்கி வாடிக்கையாளர்களின் குறைகள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரும், 'மத்தியஸ்த தீர்ப்பாயம்' என்ற இரு திட்டங்களை பிரதமர் மோடி இன்று துவக்கி வைக்கிறார்.

ஆர்.பி.ஐ., ரீடெய்ல் டைரக்ட் திட்டத்தில், சில்லரை முதலீட்டாளர்கள் ரிசர்வ் வங்கியின் வாயிலாக, மத்திய – மாநில அரசுகள் வெளியிடும் கடன் பத்திரங்களை தரகு கட்டணமுன்றி வாங்கலாம்.

இதனால், சிறு முதலீட்டாளர்களும் சுலபமாக அரசு கடன் பத்திரங்களில் முதலீடு செய்ய முடியும்.மத்திய அரசு, 'ஒரே தேசம் – ஒரே மத்தியஸ்த தீர்ப்பாயம்' என்ற கொள்கைப்படி ஒரே வலைதளம், ஒரே மின்னஞ்சல், ஒரே முகவரியில் வங்கி வாடிக்கையாளர்கள் புகார் தெரிவிக்கும் வசதியை ஏற்படுத்தியுள்ளது.

இதன்படி மத்தியஸ்த தீர்ப்பாயம் என்ற மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் குறை தீர்க்கும் திட்டத்தையும் மோடி துவக்கி வைக்கிறார். இதனால், ரிசர்வ் வங்கியின் கீழ் உள்ள அனைத்து வங்கிகளைச் சேர்ந்த வாடிக்கையாளர்களும், தங்கள் குறைகளை ஒருங்கிணைந்த ஒரே வலைதளத்தில் தெரிவித்து, தீர்வு காணும் வசதி கிடைக்கும்.

மேலும், இரு மொழிகளில் புகார் தெரிவிப்பதற்கான உதவியும், குறை தீர்வு தொடர்பான அனைத்து விபரங்களையும் பெற, கட்டணமில்லா தொலைபேசி எண்ணையும் மோடி அறிமுகப்படுத்த உள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

5. மல்யுத்தம்: நிஷா சாம்பியன்

தேசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் 65 கிலோ பிரிவில், ரயில்வே வீராங்கனை நிஷா தாஹியா சாம்பியன் ஆனார்.

முன்னதாக, ஹரியாணா மாநில மல்யுத்த பயிற்சி மையத்தில் நிஷா தாஹியா சுட்டுக் கொல்லப்பட்டதாக புதன்கிழமை தகவல் வெளியாகி அனைவருக்கும் அதிர்ச்சி ஏற்படுத்தியது. எனினும், சிறிது நேரத்திலேயே அது தாம் இல்லை என்று கூறி நிஷா மறுப்பு விடியோ வெளியிட்டார். பின்னர், கொல்லப்பட்ட நிஷா புதிதாக மல்யுத்தத்தில் இணைந்த வேறொரு வீராங்கனை எனத் தெரியவந்தது.

இத்தகைய நிகழ்வு புதன்கிழமை நிகழ்ந்த நிலையில், வியாழக்கிழமை நடைபெற்ற இறுதிச்சுற்றில் நிஷா 30 விநாடிகளில் தனது எதிராளியான பஞ்சாபைச் சேர்ந்த ஜஸ்பிரீத் கௌரை வீழ்த்தி சாம்பியன் ஆனார்.

---

6. செயிலிங்: நேத்ரா சாம்பியன்

ஸ்பெயினில் நடைபெற்ற செயிலிங் சாம்பியன்ஷிப் போட்டியில் லேசர் ரேடியல் பிரிவில் இந்தியாவின் நேத்ரா குமணன் தங்கப் பதக்கம் வென்றார்.

ஐரோப்பிய பிராந்திய ஓபன் போட்டியாக நடைபெற்ற இந்த கிரான் கேனாரியா சாம்பியன்ஷிப் போட்டியில் நேத்ரா, ஐஎல்சிஏ 6 பிரிவில் நடைபெற்ற 6 பந்தயங்களில் 3-இல் முதலாவதாக வந்து 10 நெட் புள்ளிகளுடன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். அதே பிரிவில் ஸ்பெயினைச் சேர்ந்த பெனிடோ லாஞ்சோ, மார்டினா ரெய்னோ காச்சோ முறையே 2 மற்றும் 3-ஆம் இடங்களைப் பிடித்தனர். இந்தப் போட்டியில் 3 நாடுகளைச் சேர்ந்த 20 போட்டியாளர்கள் பங்கேற்றனர். அதில் நேத்ரா உள்பட 3 போர் டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்றவர்களாவர்.

விஷ்ணுவுக்கு வெண்கலம்: இதனிடையே, ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் நடைபெற்ற ஐஎல்சிஏ உலக செயிலிங் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் விஷ்ணு 25-ஆவது இடம் பிடித்தார். மற்றொரு இந்தியரான மோகித் 106-ஆவதாக வந்தார். இந்தப் போட்டியில் மொத்தம் 135 போர் பங்கேற்றனர். போட்டியாளர்களிலேயே மிக இளம் வயது வீரர், உலக சாம்பியன்ஷிப்பில் 25-ஆவது இடம் பிடித்த முதல் ஆசிய வீரர் என்ற பெருமைகளை விஷ்ணு பெற்றார்.

---

7. தமிழகத்தில் இயல்பை விட 54 சதவீதம் மழை அதிகம்

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை காலம் தொடங்கியதில் இருந்து அனைத்து பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. அந்த வகையில் பருவமழை தொடங்கிய அக்டோபர் மாதம் முதல் நேற்று வரை தமிழகத்தில் 26 செ.மீ. மழை பதிவாகி இருக்க வேண்டும். ஆனால் தொடர் மழை காரணமாக தற்போது 40 செ.மீ. வரை மழை பெய்து இருக்கிறது. இது இயல்பை விட 54 சதவீதம் அதிகம். இதில் அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டத்தில் 122 சதவீதம் அதிகமாக மழை பதிவாகியுள்ளது.

அதற்கடுத்தபடியாக திருவாரூர் மாவட்டத்தில் 110 சதவீதமும், கோவையில் 103 சதவீதமும், அரியலூரில் 95 சதவீதமும் அதிகமாக மழை பெய்திருக்கிறது.

சென்னையை பொறுத்தவரையில் இந்த பருவமழை காலத்தில் 77 சதவீதம் அதிகமாக மழை பதிவாகியுள்ளது. மேலும், கிருஷ்ணகிரி, மதுரை, விருதுநகர் மாவட்டங்களை தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் இயல்பை விட அதிகமாகவே மழை பெய்து இருக்கிறது என்று வானிலை ஆய்வு மையத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து தமிழகத்தில் பரவலாக தொடர் மழை பெய்து வருவதால், கடந்த 10 நாட்களில் மட்டும் தமிழகத்தில் சராசரியாக 18 செ.மீ. மழை பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

1. 'போர் மற்றும் ஆயுத மோதலில் சுற்றுச்சூழலைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கான பன்னாட்டு நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) நவம்பர் 4



ஆ) நவம்பர் 6 ☑

இ) நவம்பர் 8

ஈ) நவம்பர் 10

✓ 2001ஆம் ஆண்டில், ஐநா பொதுச்சபை ஒவ்வோர் ஆண்டும் நவ.6ஆம் தேதியை 'போர் மற்றும் ஆயுதமோதலில் சுற்றுச்சூழலை சுரண்டுவதை தடுப்பதற்கான பன்னாட்டு நாளாக' அறிவித்தது. ஐநா சுற்றுச்சூழல் பேரவை, 2016'இல் ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது; அது ஆயுத மோதலின் நிகழ்தகவைக் குறைப்பதில் ஆரோக்கியமான சூழல் முக்கிய பங்கு வகிக்கிறது என்று அறிவித்தது. சுற்றுச்சூழலில் மோதல்கள் மற்றும் போர்களின் விளைவுகளைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

---

2. முதன்முதலில் 'ஸ்டார் காலேஜ் மென்டர்சிப் திட்டத்தை' அறிவித்த மத்திய அமைச்சகம் எது?

அ) கல்வி அமைச்சகம்

ஆ) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

இ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஈ) திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம்

✓ இந்திய விடுதலையின் 75ஆவது ஆண்டை முன்னிட்டு இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கான முதல் வழிகாட்டல் திட்டத்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் தொடங்கியது.

✓ 'DBT–ஸ்டார் காலேஜ் மென்டர்ஷிப் புரோகிராம்' என்று பெயரிடப்பட்ட இது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழுள்ள உயிரித் தொழில்நுட்பத்துறையின் (DBT) ஆதரவுடன் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு 'நட்சத்திரக்கல்லூரி'யை தேர்ந்தெடுப்பதை நோக்க –மாகக் கொண்டுள்ளது. இது ஒவ்வொரு மாதமும் பயிலரங்குகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்வதையும், குறிப்பாக கிராமப்புறங்களில் கல்லூரிகளை நடத்துவது மற்றும் அரசுப் பள்ளிகளுடன் தொடர்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3. இந்தியாவின் 27ஆம் மாநிலமாக நவ.9 அன்று உருவாக்கப்பட்ட மாநிலம் எது?

அ) ஜார்க்கண்ட்



ஆ) உத்தரகாண்ட் ☑

இ) சத்தீஸ்கர்

ஈ) தெலுங்கானா

✓ இந்தியாவின் 27ஆவது மாநிலம் உருவானதைக் கொண்டாடும் வகை –யில் ஆண்டுதோறும் நவ.9ஆம் தேதி உத்தரகாண்ட் நிறுவன நாள் அனுசரிக்கப்படுகிறது. உத்தரபிரதேச மாநிலத்தின் வடமேற்குப்பகுதியில் இருந்தும், இமயமலைத் தொடரின் ஒருபகுதியிலிருந்தும் பல மாவட்டங் –களை இணைத்து கடந்த 2000ஆம் ஆண்டு உத்தரகாண்ட் மாநிலம் உருவாக்கப்பட்டது. இது முன்னர் உத்தராஞ்சல் என்று அழைக்கப்பட்டது. 2007ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் என மறுபெயரிடப்பட்டது.

---

4. எந்தத் தலைவரின் நினைவாக நவ.11ஆம் தேதி தேசிய கல்வி நாள் அனுசரிக்கப்படுகிறது?

அ) APJ அப்துல் கலாம்

ஆ) வல்லபாய் படேல்

இ) அன்னை தெரசா

ஈ) மௌலானா அபுல் கலாம் ஆசாத் ☑

✓ ஒவ்வோர் ஆண்டும், மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில், இந்தியாவில் நவம்பர்.11ஆம் தேதி தேசிய கல்வி நாளாக அனுசரிக்கப்படுகிறது. அவர் சுதந்திரப் போராட்ட வீரரும், சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரும் ஆவார். அவர் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில்தான் UGC, AICTE, கரக்பூர் உயர்கல்வி நிறுவனம் போன்றவை நிறுவப்பட்டன.

---

5. 'ஒனகே ஒபவ்வா ஜெயந்தி'யைக் கொண்டாடுகிற மாநிலம் எது?

அ) கர்நாடகா ☑



ஆ) ஒடிஸா

இ) மேற்கு வங்கம்

ஈ) பஞ்சாப்

✓ இந்த ஆண்டு முதல் நவம்பர் 11ஆம் தேதி 'ஒனகே ஒபவ்வா ஜெயந்தி' கொண்டாட கர்நாடக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 18ஆம் நூற்றாண்டில் சித்ரதுர்காவில் ஹைதர் அலியின் படைகளுக்கு எதிராகப் போரிட்ட புகழ்பெற்ற பெண்–சிப்பாய்தான் ஒனகே ஒபவ்வா. அவரின் பிறந்தநாளை ஆண்டுதோறும் கொண்டாட கன்னட கலாசாரத்துறை முன்மொழிந்தது.

---

6. இந்தியாவில் உள்ள வானூர்தி நிலையங்கள் எந்தச் சட்டத்தின் விதிமுறைகளின்படி "முதன்மை வானூர்தி நிலையங்கள்" என்று அறிவிக்கப்படுகின்றன?

அ) இந்திய வானூர்தி நிலைய ஆணையச் சட்டம்



ஆ) வானூர்தி நிலைய ஒழுங்குமுறை சட்டம்

இ) சிவில் வானூர்தி போக்குவரத்து சட்டம்

ஈ) வானூர்தி நிலைய பொருளாதார ஒழுங்குமுறை ஆணைய சட்டம் ☑

✓ வானூர்தி நிலைய பொருளாதார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம், 2008'இன்கீழ், மகராஷ்டிராவில் உள்ள வீரடி வானூர்தி நிலையத்தை ஒரு பெரிய வானூர்தி நிலையமாக இந்திய அரசு அறிவித்துள்ளது. சட்டத்தின் 13ஆவது பிரிவின்கீழ், வானூர்தி நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையம் (AERA) வானூர்தி சேவைகள் தொடர்பான கட்டணத்தை நிர்ணயிக்கும்.

---

7. எந்த விண்வெளி முகமையின் ஏவுகலம், விண்வெளிக்கு சென்ற 600ஆவது நபரைத் தாங்கி சென்றது?

அ) ஜாக்ஸா

ஆ) ESA

இ) இஸ்ரோ



ஈ) ஸ்பேஸ் எக்ஸ் ☑

✓ அமெரிக்க தனியார் விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் அதன் விண்கலமான குரூ டிராகன் என்டூரன்ஸில் 4 விண்வெளி வீரர்களை பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு தாங்கிசென்றது. கடந்த 60 ஆண்டுகளில் விண்வெளியை அடைந்த 600ஆம் நபரும் இதிலடக்கம்.

✓ ஸ்பேஸ் எக்ஸ் ஃபால்கன் 9 ஏவுகலத்தைப் பயன்படுத்தி இவ்விண்கலம் ஏவப்பட்டது. ஸ்பேஸ் எக்ஸின் தலைமையகம் கலிபோர்னியாவின் ஹாவ்தோர்னில் அமைந்துள்ளது. கடந்த 2002ஆம் ஆண்டில் எலோன் மஸ்க் என்பவரால் இது நிறுவப்பட்டது.

---

8. இராஜ்யசபாவின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) PC மோடி ☑



ஆ) சஞ்சய் ஜெய்ஸ்வால்

இ) அமித் ஷா

ஈ) ராஜ்நாத் சிங்

✓ மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் முன்னாள் தலைவரும், இந்திய வருவாய் சேவை அதிகாரியுமான PC மோடி, மாநிலங்களவையின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஐ ஆர் எஸ் அதிகாரி ஒருவர் பொதுச்செயலாளராக நியமிக்கப்படுவதால், பாரம்பரியமாக ஐ ஏ எஸ் அதிகாரிகள் பதவி வகித்து வந்த இந்தப் பதவி அரிதான நியமனங்களில் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

---

9. உயிரியல் ரீதியாக இறந்ததாக அறிவிக்கப்பட்ட உலகின் எந்தப் புகழ்பெற்ற ஆற்றில் கடல் குதிரைகள், விலாங்குகள், கடல் நாய்கள் மற்றும் சுறாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

அ) கங்கை ஆ) யமுனை

இ) நைல் **ஈ) தேம்ஸ் ☑**



- ✓ கடல் குதிரைகள், ஈல்கள், கடல் நாய்கள் மற்றும் சுறாக்கள் போன்ற எதுவும் இல்லாத காரணத்தால், இலண்டனில் உள்ள தேம்ஸ் ஆறு, ஒரு காலத்தில் "உயிரியல் ரீதியாக இறந்ததாக" அறிவிக்கப்பட்டது.
- ✓ இலண்டனின் விலங்கியல் சங்கம் நடத்திய ஆய்வில், முவ்வகையான சுறாக்கள் காணப்பட்டதாகவும், 115 வகையான மீன்கள் மற்றும் வனவுயி –ரிகள் காணப்பட்டதாகவும் கூறியது.

---

10. 'ரெசாங் லா' என்ற மலைப்பாதை அமைந்துள்ள இடம் எது?

அ) லடாக் ☑



ஆ) ஜம்மு காஷ்மீர்

இ) உத்தரகாண்ட்

ஈ) அருணாச்சல பிரதேசம்

- ✓ ரெசாங் லா, கிழக்கு லடாக்கில் அமைந்துள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் உள்ள ஒரு மலைப்பாதையாகும். 1962ஆம் ஆண்டு நடந்த போரின் ஒருபகுதியாக, இந்திய இராணுவத்தின் குமாவோன் படைப் பிரிவின் 13 துருப்புக்கள் 16,000 அடி உயரத்தில் சீன இராணுவத்தை தோற்கடித்த ரெசாங் லா போருக்காக இது அறியப்படுகிறது. போரின் நினைவாக ரெசாங் லாவில் புதுப்பிக்கப்பட்ட போர் நினைவிடத்தை பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் திறந்து வைக்கவுள்ளார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. டாக்டர் சுதா சேஷய்யனுக்கு பிரிட்டனின் கவுரவ பட்டம்

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவ பல்கலை துணைவேந்தர் சுதா சேஷய்யனுக்கு, பிரிட்டனின், 'ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ் ஆப் எடின்பரோ' சார்பில் கவுரவ பட்டம் வழங்கப்பட்டது.

உலகிலேயே அறுவை சிகிச்சை மருத்துவ கல்லூரிகளில் தொன்மையானதாகவும், முதன்மையானதாகவும், ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ் கருதப்படுகிறது. 500 ஆண்டுகள் பழமையான அக்கல்லூரி, 'பெலோஷிப் ஆப் ராயல் காலேஜ் ஆப் சர்ஜன்ஸ்' என்ற எப்.ஆர்.சி.எஸ்., பட்டத்தை, தகுதியானவர்களுக்கு வழங்குகிறது.

இதில், மருத்துவ துறையில் ஆற்றிவரும் பணிகள், ஆராய்ச்சி நடவடிக்கைகள், புதிய பங்களிப்புகள் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில், 'பெலோஷில் அட் ஹொமினேம்' என்ற கவுரவ பட்டத்தை, ராயல் கல்லூரியே விருப்பப்பட்டு தகுதியானவர்களுக்கு அளிக்கும்.அந்த வகையில், இம்முறை கவுரவ பட்டத்துக்கு, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவ பல்கலை துணைவேந்தர் டாக்டர் சுதா சேஷய்யனின் பெயர் முன்மொழியப்பட்டது.

இதை ராயல் கல்லூரியின் எப்.ஆர்.சி.எஸ்., தேர்வு குழுவின் கவுன்சில் உறுப்பினர்கள் ஒருமனதாக ஏற்றனர்.இதற்கு முன், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்., மருத்துவ பல்கலை துணைவேந்தராக இருந்த கேப்டன் ராஜாவுக்கு இந்த கவுவரம் கிடைத்தது. அதன்பின், தற்போது சுதா சேஷய்யனுக்கு அப்பட்டம் கிடைத்துள்ளது.

இந்த கவுரவ பட்டம், பிரிட்டனில் அவருக்கு அளிக்கப்பட்டது. பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்திராக பங்கேற்று, சுதாசேஷய்யன் தலைமை உரையாற்றினார். இந்தியாவில் இருந்து எந்த பெண்ணுக்கும் கிடைக்காத, இந்த கவுரவம் சுதா சேஷய்யனுக்கு கிடைத்துள்ளது.

---

2. கோவேக்ஸின் தடுப்பூசியின் செயல்திறன் 77.8%

கரோனா தொற்றுக்கு எதிராக கோவேக்ஸின் தடுப்பூசி 77.8 சதவீத செயல்திறன் கொண்டுள்ளதாக லான்செட் மருத்துவ இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரோனா தொற்றுக்கு எதிராக முழுவதும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பூசி கோவேக்ஸின். ஹைதராபாதைச் சோ்ந்த பாரத் பயோடெக் நிறுவனம் அத்தடுப்பூசியைத் தயாரித்தது. அத்தடுப்பூசியின் அவசரகால பயன்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு அண்மையில் ஒப்புதல் வழங்கியது.

இந்நிலையில், கோவேக்ஸின் தடுப்பூசியின் 3–ஆம் கட்ட ஆய்வு தொடா்பான இடைக்கால முடிவுகள் 'தி லான்செட்' மருத்துவ இதழில் வெளியிடப்பட்டன. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கரோனா தொற்றுக்கு எதிரான நோய்எதிா்பொருளை கோவேக்ஸின் தடுப்பூசி தீவிர பக்கவிளைவுகள் ஏதுமின்றி உருவாக்குகிறது. அத்தடுப்பூசியை செலுத்திக் கொண்டு பரிசோதனையில் பங்கேற்றவா்கள் எவருக்கும் தீவிர பக்கவிளைவுகள் ஏற்படவில்லை. தலைவலி, காய்ச்சல், தடுப்பூசி செலுத்திய இடத்தில் வலி உள்ளிட்ட சிறிய அளவிலான பக்கவிளைவுகள் மட்டுமே ஏற்பட்டன.

பரிசோதனையில் பங்கேற்ற எவரும் உயிரிழக்கவில்லை. கடந்த ஆண்டு நவம்பா் 16–ஆம் தேதி முதல் கடந்த மே 17–ஆம் தேதி வரை இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன. கரோனா தொற்றுக்கு எதிராக கோவேக்ஸின் தடுப்பூசி 77.8 சதவீத செயல்திறன் கொண்டுள்ளது. அதாவது, நூற்றில் சுமாா் 78 பேருக்கு தடுப்பூசி செலுத்திக் கொண்ட பிறகு கரோனா தொற்று பாதிப்பு ஏற்படவில்லை.

தொடா் ஆய்வுகள்: இந்த ஆய்வு முடிவுகள் ஆரம்பநிலையைச் சோ்ந்தவை. கரோனா தொற்றின் தீவிர பாதிப்பு, மருத்துவமனையில் சிகிச்சை பெறத் தேவையில்லாத வகையிலான பாதுகாப்பு ஆகியவை குறித்து தொடா்ந்து ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

60 வயதைக் கடந்த 2,750 பேரிடமும், இதய நோய், நீரிழிவு, உடல் பருமன் உள்ளிட்ட இணைநோய் கொண்ட 5,724 பேரிடமும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள 25 மருத்துவமனைகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

பெரிய மாற்றமில்லை: தடுப்பூசியின் 2–ஆம் தவணை செலுத்திய ஒரு மாதத்துக்குப் பிறகு உடலில் வலுவான நோய்எதிா்பொருள் உருவாகிறது. ஆல்ஃபா வகை கரோனா தொற்றுக்கு எதிராக கோவேக்ஸின் தடுப்பூசியின் செயல்திறன் குறையவில்லை. டெல்டா, காமா வகை கரோனா தொற்றுக்கு எதிராக செயல்திறன் சற்று குறைவாக (65 சதவீதம்) உள்ளது.

வெவ்வேறு வயதினருக்கிடையே நோய்எதிா்பொருள் உருவாவதில் பெரிய அளவிலான மாற்றங்கள் காணப்படவில்லை என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகத் தரத்திலானது: ஆய்வு முடிவு தொடா்பாக பாரத் பயோடெக் தலைவா் கிருஷ்ணா எல்லா வெளியிட்ட அறிக்கையில், 'கோவேக்ஸின் தடுப்பூசி உலகத் தரம் வாய்ந்ததாக உள்ளதை லான்செட் ஆய்விதழ் உறுதி செய்துள்ளது. கோவேக்ஸின் தடுப்பூசியின் ஆய்வுகள், இதுவரை முக்கியத்துவம் வாய்ந்த 10 மருத்துவ இதழ்களில் வெளியாகியுள்ளன' என்று குறிப்பிட்டுள்ளாா்.

---

3. இளைஞரை மீட்ட காவல் ஆய்வாளருக்கு முதல்வர், நீதிபதி பாராட்டு

இளைஞரை தோளில் சுமந்து மருத்துவமனையில் அனுமதித்த பெண் காவல் ஆய்வாளர் ராஜேஸ்வரியை நேரில் அழைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டி வெள்ளிக்கிழமை சான்றிதழ் வழங்கினாா்.

நீதிபதி பாராட்டு: காவல் ஆய்வாளர் ராஜேஸ்வரியை சென்னை உயா்நீதிமன்றத்துக்கு நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ்

அழைத்து அவரின் செயலைப் பாராட்டினாா். மேலும், நீதிபதி தனது பாராட்டு கடிதத்தையும் ஆய்வாளரிடம் வழங்கினாா்.

முதல்வர் ஸ்டாலின் அளித்த சான்றிதழில் கூறியிருப்பதாவது: இது மக்களின் நலன் காக்கும் அரசு என்ற எண்ணத்தை மனதில் பதிய வைத்து, அரசு நிா்வாகத்தைச் சோ்ந்த ஒவ்வொருவரும் அா்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் நிலையில், அதற்கு மகுடம் சூட்டுவது போன்று பருவமழைக் காலத்துப் பேரிடா் நேரத்தில் மனித உயிா் காக்கச் செயல்பட்ட மகத்தான பணிக்கு எனது மனமாா்ந்த பாராட்டுகள்; வாழ்த்துகள். சென்னை கீழ்ப்பாக்கம் கல்லறையில் சுயநினைவின்றிக் கிடந்த உதயா என்ற இளைஞரை மீட்டு தோளில் சுமந்து பின்னா் ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளீா்கள். தங்களது அா்ப்பணிப்பு மிக்க கடமையுணா்வும், சீருடைப் பணியாளா்களுக்குரிய ஈர இதயத்தின் வெளிப்பாடும் போற்றுதலுக்கு உரியவை.

தடகளப் போட்டிகளில் சிறந்த வீராங்கனையாக சாதனைகள் பல புரிந்து, 1992 கும்பகோணம் மகாமகத்தில் ஏற்பட்ட நெரிசலின்போது தாங்கள் ஆற்றிய பணி எப்போதும் நினைவுகூரத்தக்கது. காவல் பணியில் எளிய மக்களின் துயா் துடைக்கும் கரங்களாக தங்களுடைய செயல்பாடு பலமுறை அமைந்துள்ளது. தங்களது மனிதாபிமான செயல்பாடு,

தங்களைப் போன்ற மனிதாபிமானம் கொண்ட தமிழ்நாடு காவல் துறையினா் அனைவருக்கும் பெருமை சோ்க்கும் வகையில் அமைந்துள்ளது.

காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதல்வா' என்ற முறையிலும், மழைக்காலப் பேரிடா' நேரத்தில் தொடா'ச்சியாகப் பொதுமக்களை நேரில் சந்தித்து அவா'களின் தேவைகளைக் கேட்டறிந்தவன் என்ற முறையிலும் தங்களது மனிதாபிமானமிக்க உயிா'க் காப்புப் பணிக்கு எனது மனப்பூா'வமான வாழ்த்துகள்.

காவல் துறை உங்கள் நண்பன் என்பதற்கேற்ப கம்பீரமாகவும், கருணை உள்ளத்துடனும் தாங்கள் மேற்கொண்ட பணி, காவல் துறையில் உள்ள அனைவருக்கும் பெருமையையும் ஊக்கத்தையும் அளிக்கக் கூடியது. தங்களது சேவைக்கு வாழ்த்துகள். சட்டத்தையும், மக்களையும் காக்கின்ற பணி தொடரட்டும் என வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளாா'.

இளைஞா' சாவு: சென்னை டி.பி.சத்திரத்தில் பெண் காவல் ஆய்வாளா' தோளில் சுமந்து மீட்ட இளைஞா', மருத்துவமனையில் வெள்ளிக்கிழமை உயிரிழந்தாா'.

சென்னை டி.பி. சத்திரம் காவல் நிலைய ஆய்வாளா' ராஜேஸ்வரி. கீழ்பாக்கம் கல்லறைத் தோட்டத்தில் இளைஞா' ஒருவா' மரக்கிளை ஒடிந்து விழுந்து சடலமாக கிடக்கிறாா' என ராஜேஸ்வரிக்குத் தகவல் கிடைத்தது. அங்கு சென்ற ராஜேஸ்வரி, கல்லறைகளுக்கு நடுவே அசைவற்றுக் கிடந்த இளைஞருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தபோது, அவருக்கு உயிா' இருப்பது தெரியவந்தது.

இதைப் பாா'த்த ராஜேஸ்வரி, சற்றும் தாமதிக்காமல் இளைஞரை தனது தோளில் தூக்கிச் சென்று அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி கீழ்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாா'. போலீஸாரின் விசாரணையில், மயங்கிக் கிடந்தவா' சென்னை ஷெனாய் நகரைச் சோ'ந்த உதயா (25) என்பதும், அந்தக் கல்லறைத் தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்து வருவதும் தெரியவந்தது.

போலீஸாரால் மீட்கப்பட்ட உதயாவுக்கு கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த சூழ்நிலையில், மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்த உதயா, வெள்ளிக்கிழமை உயிரிழந்தாா'.

நீதிபதி பாராட்டு: ஆய்வாளா' ராஜேஸ்வரியை சென்னை உயா'நீதிமன்றத்துக்கு அழைத்து நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ், அவரது செயலைப் பாராட்டினாா'. மேலும், நீதிபதி தனது பாராட்டு கடிதத்தையும் ஆய்வாளரிடம் வழங்கினாா'.

---

4. திருப்பதியில் தலவிருட்சமாக சம்பங்கி மரம் தேர்வு: தேவஸ்தானம் அறிவிப்பு

திருப்பதி ஏழுமலையான் கோயில் தல விருட்சமாக சம்பங்கி மரத்தை தேர்வு செய்து தேவஸ்தானம் அறிவித்துள்ளது. திருப்பதி தேவஸ்தானம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஏழுமலையானுக்கு நடத்தப்படும் அனைத்து விதமான பூஜைகளில் பயன்படுத்தப்படும் மலர்களின் அடிப்படையில் சம்பங்கி மரம் ஏழுமலையான் கோயில் தலவிருட்சமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேவஸ்தான செயல் அதிகாரி ஜவகர் உத்தரவின்படி புராணங்களில் கூறப்பட்டுள்ள பல்வேறு வகையான மலர் செடிகளைக் கொண்ட பூந்தோட்டம் திருமலையில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் ஏழுமலையானுக்கு தினமும் நடத்தப்படும் பூஜைகளில் சம்பங்கி குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்று வருகிறது.

பவிஷ்யோத்ர புராணம் 13வது பாகம் 33 மற்றும் 34வது சுலோகங்களில் அப்போதைய அரசர் தொண்டமான் சக்கரவர்த்தியிடம் தனக்கான கோயிலை கட்டும்போது கட்டுமானத்திற்காக தேர்வு செய்யப்பட்ட பகுதியில் இருக்கும் சம்பங்கி தோட்டத்தை அகற்ற வேண்டாம் என்று கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழுமலையான் கோயலில் உள்ள ஒருபகுதி தற்போதும் சம்பங்கி பிரகாரம் என்று அழைக்கப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால் சம்பங்கி மரம் ஏழுமலையானின் தலவிருட்சமாக தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

5. 'முதல்வரின் முகவரி' : தமிழக அரசு அரசாணை வெளியீடு

முதல்–அமைச்சரின் குறைதீர்ப்பு துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, முதல்வரின் முகவரி என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. உங்கள் தொகுதியில் முதல்–அமைச்சர், முதல்–அமைச்சர் உதவி மையம், குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு ஒருங்கிணைப்பு ஆகிய துறைகள் ஒன்றிணைந்து 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் முதல்வரின் முகவரி என்ற புதிய துறை சிறப்பு அலுவலராக ஷில்பா பிரபாகர் சதீஷ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது. முதல்வரின் முகவரி துறையில் மனுக்கல் தீர்வுக்காண ஒற்றை இணையதள முகப்பு பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடா'பாக தலைமைச் செயலாளா' இறையன்பு வெளியிட்ட அரசாணையில், முதல்–அமைச்சரின் தனிப்பிரிவு, முதல்–அமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்'ப்பு மேலாண்மை அமைப்பு (ஐஜிஜிசிஎம்எஸ்), உங்கள் தொகுதியில் முதல்–அமைச்சர் துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை உருவாக்கப்படுகிறது.

முதல்–அமைச்சர் முகவரி துறையின் மனுக்களுக்குத் தீர்'வு காண முதல்வரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்'ப்பு மேலாண்மை அமைப்பின் உதவி எண் மாநிலம் முழுவதும் ஒற்றை இணையதள முகப்பாகப் பயன்படுத்தப்படும். இது முதல்வரின் முகவரி துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும். உங்கள் தொகுதியில் முதல்–அமைச்சர் துறையின் சிறப்பு அலுவலா' ஷில்பா பிரபாகா' சதிஷ், முதல்வரின் முகவரி துறையின் சிறப்பு அலுவலராக நியமிக்கப்படுகிறாா'" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

---

6. ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி திருப்புகழ் தலைமையில் பெருநகர வெள்ள இடர் தணிப்பு, மேலாண்மைக்கான குழு: தமிழக அரசு ஆணை பிறப்பித்தது

சென்னை பெருநகர வெள்ள இடர் தணிப்பு மற்றும் மேலாண்மைக்கான அறிவுரைக் குழுவை, ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி வெ.திருப்புகழ் தலைமையில் அமைத்து தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.

இந்த அரசாணையில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது, "சென்னையில் ஏற்படும் வெள்ள பாதிப்புகளைக் குறைக்கும் வகையில், வெள்ள கட்டுப்பாடு நடவடிக்கைகள் மற்றும் மழைநீர் கால்வாய்களை வடிவமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக சுற்றுச்சூழல், நகர்ப்புற திட்டமிடல், பேரிடர் மேலாண்மை வல்லுநர்கள் அடங்கிய சென்னை பெருநகர வெள்ள மேலாண்மை குழு அமைக்கப்படும்' ' என்று அறிவித்தார்.

இதையடுத்து, மாநகராட்சி ஆணையர் அரசுக்கு அனுப்பிய கடிதத்தில், '₹கடற்கரை நகரமான சென்னை, புயல் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்களால் அதிக அளவில் பாதிக்கப்படும் பகுதியாகவும், மிகுந்த ஈரம் மற்றும் வறட்சியான பருவநிலை கொண்ட பகுதியாகவும் உள்ளது. மேலும், சென்னையின் பெரும்பாலான பகுதிகள் கடல்மட்டத்தில் இருந்து 2 மீட்டர் உயரமாகவும், சில பகுதிகள் கடல் மட்டத்தைவிட தாழ்வானதாகவும் உள்ளன. சென்னையைச் சுற்றியுள்ள திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 2,500 ஏரிகள், குளங்கள் உள்ளன.

இங்கிருந்து வெளியேறும் நீர் முழுவதும் அடையாறு, கூவம், கோவளம், கொசஸ்தலை ஆறுகள்வழியாகச் செல்கிறது. இதனால்,மழைக்காலங்களில் தண்ணீரால் ஏற்படும் பாதிப்புகள் அதிகரிக்கின்றன. எனவே, ஆளுநர் அறிவித்தபடி குழுவை அமைக்க வேண்டும்' ' என்று தெரிவித்திருந்தார்.

இதன் முதல்கட்டமாக கடந்த செப்.14–ம் தேதி ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில். மாநகராட்சி ஆணையர், சென்னை குடிநீர் வாரிய மேலாண் இயக்குநர், சுற்றுச்சூழல் துறை இயக்குநர் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கொள்கை மற்றும்திட்டப் பிரிவு கூடுதல் செயலராக இருந்த, ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி வெ.திருப்புகழ் ஆகியோர் பங்கேற்றனர்.

இதில், சென்னை மாநகரில் வெள்ளப் பாதிப்பு தடுப்பு மற்றும் மேலாண்மை தொடர்பான பல்வேறு விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டன. கூட்டத்தைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சி ஆணையர் அனுப்பிய பரிந்துரையின் அடிப்படையில் ₹சென்னை பெருநகர வெள்ள இடர் தணிப்பு மற்றும் மேலாண்மைக்கான அறிவுரைக் குழுவை' தமிழக அரசு அமைத்துள்ளது.

இடம்பெற்றுள்ள அதிகாரிகள்

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி வெ.திருப்புகழ் தலைமையிலான இக்குழுவில், டெல்லி நகர் மற்றும் ஊரமைப்பு நிறுவன தலைமை திட்டஅலுவலர், காலநிலை பின்னடைவு பயிற்சி உலக வள நிறுவன

இயக்குநர் நம்பி அப்பாதுரை, சென்னை வளர்ச்சி கல்வி நிறுவனப் பேராசிரியர் ஜானகிராமன், மும்பை ஐஐடிகட்டுமானப் பொறியியல் துறை பேராசிரியர் கபில் குப்தா, சென்னை அண்ணா பல்கலைக்கழக மனித குடியமர்வு மைய இயக்குநர் பிரதீப்மோசஸ், ஐதராபாத்தில் உள்ள தேசிய ரிமோட் சென்சிங் துறையின் பிரதிநிதி, அண்ணா பல்கலைக்கழக ரிமேட் சென்சிங் நிறுவனப் பேராசிரியர் திருமலைவாசன், ஐஐடி கட்டுமானப் பொறியியல் துறை தலைவர் பாலாஜி நரசிம்மன், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும தலைமை திட்ட அதிகாரி, சென்னை மண்டல நீர்வளத் துறைதலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர், சுற்றுச்சூழல் துறை இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

சென்னை மாநகராட்சியின் மழைநீர் வடிகால் துறை தலைமைப் பொறியாளர் இக்குழுவின் உறுப்பினர்–செயலராக இருப்பார். இந்த குழு, சென்னையில் வெள்ளப் பாதிப்பை குறைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கும்.

இவ்வாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைச் செயலரின் சகோதரர்

குஜராத் மாநிலப் பிரிவு ஐஏஎஸ் அதிகாரியான வெ.திருப்புகழ், தமிழக தலைமைச் செயலர் வெ.இறையன்புவின் மூத்த சகோதரர். குஜராத் முதல்வராக நரேந்திர மோடி இருந்தபோதும், அவர் பிரதமரானபோதும் திருப்புகழ் அவரின் கீழ் பணியாற்றினார். மேலும், பேரிடர் மேலாண்மை ஆணையத்தில் இருந்தபோது, தமிழகத்தில் புயல் பாதிப்பு மற்றும் வறட்சிப் பாதிப்புகளை பார்வையிடும் குழுவின் தலைவராக தமிழகத்துக்கு வந்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.

---

7. 5 முக்கிய சேவைகளின் அடிப்படையில் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்றது திருப்பதி தேவஸ்தானம்

'வேர்ல்ட் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' நிறுவனம் லண்டனை தலைமையகமாகக் கொண்டு செயல்படுகிறது. இந்தப் புத்தகத்தில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இடம்பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் இந்திய பிரிவு தலைவர்சந்தோஷ் சுக்லா சார்பில், அதன் துணைச் செயலாளர் உல்லா ஜிஇதற்கான சான்றிதழை திருமலையில் தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி.சுப்பா ரெட்டியிடம் நேற்று வழங்கினார்.

திருமலை திருப்பதியில் அதிகமானோர் தலை முடி காணிக்கை செலுத்துவது, அதிக லட்டு பிரசாதம் விநியோகம், தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு இலவசமாக அன்ன பிரசாதம் வழங்கல்,பக்தர்களுக்காக நெருக்கடி இல்லாத வரிசைகளை ஏற்பாடு செய்தது, திருப்பதியிலிருந்து திருமலைக்கு அமைக்கப்பட்டிருக்கும் நடைபாதை மற்றும் பக்தர்களுக்கு செய்யும் சேவை ஆகியவற்றால் தேவஸ்தானம், இந்த சாதனை புத்தகத்தில் இடம்பெற்றதாக துணைசெயலர் உல்லா ஜி தெரிவித் தார்.

இவையெல்லாம் தேவஸ்தான ஊழியர்களின் கடின உழைப்பால் சாத்தியமானது என அறங்காவலர் குழு தலைவர் ஒய்.வி. சுப்பாரெட்டி தெரிவித்தார்.

---

8. நீரஜ் சோப்ரா, ரவி குமார், லவ்லினா, பி.ஆர். ஸ்ரீஜேஷ் உள்ளிட்டோருக்கு தேசிய விளையாட்டு விருதுகளை வழங்கினார் குடியரசுத் தலைவர்

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் தேசிய விளையாட்டு விருதுகளை வீரர், வீராங்கனைகளுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கி கவுரவித்தார்.

தேசிய விளையாட்டு விருதுகள் ஒவ்வொருஆண்டும் விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரித்து வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இதில் நீரஜ் சோப்ரா (தடகளம்), ரவி குமார் (மல்யுத்தம்), லவ்லினா போர்கோஹெய்ன் (குத்துச்சண்டை), பி.ஆர்.ஸ்ரீஜேஷ் (ஹாக்கி), அவனி லெகாரா (பாரா துப்பாக்கி சுடுதல்), சுமித் அன்டில் (பாரா தடகளம்), பிரமோத் பகத் (பாரா பாட்மிண்டன்), கிருஷ்ணா நாகர் (பாரா பாட்மிண்டன்), மணீஷ் நர்வால் (பாரா துப்பாக்கி சுடுதல்), மிதாலி ராஜ் (கிரிக்கெட்), சுனில் சேத்ரி (கால்பந்து), மன்பிரீத் சிங் (ஹாக்கி)ஆகிய 12 பேருக்கு தயான்சந்த் கேல் ரத்னா விருதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்வழங்கினார்.

விழாவில் அர்பிந்தர் சிங் (தடகளம்), சிம்ரன்ஜித் கவுர் (குத்துச்சண்டை), ஷிகர் தவன் (கிரிக்கெட்), சி.ஏ.பவானி தேவி (வாள்வீச்சு), மோனிகா(ஹாக்கி), வந்தனா கட்டாரியா (ஹாக்கி), சந்தீப் நர்வால் (கபடி), ஹிமானி உத்தம் (மல்லர் கம்பம்), அபிஷேக் வர்மா (துப்பாக்கி சுடுதல்), அங்கிதா ரெய்னா (டென்னிஸ்), தீபக்புனியா (மல்யுத்தம்), தில்பிரீத் சிங், ஹர்மன்பிரீத் சிங், ரூபிந்தர் பால் சிங், சுரேந்தர் குமார், அமித் ரோஹிதாஸ், வீரேந்திர லக்ரா, சுமித், நீலகண்ட சர்மா, ஹார்திக் சிங், விவேக் சாகர் பிரசாத், குர்ஜந்த் சிங், மன்தீப் சிங், ஷம்ஷேர் சிங், லலித் குமார் உபாத்யாய் (ஹாக்கி), வருண் குமார், சிம்ரன்ஜித் சிங் (ஹாக்கி), யோகேஷ் கதுனியா (பாரா தடகளம்), நிஷாத் குமார் (பாரா தடகளம்), பிரவீன் குமார் (பாராதடகளம்), சுஹாஸ் யதிராஜ் (பாரா பாட்மிண்டன்), சிங்கராஜ் அதானா (பாரா துப்பாக்கி சுடுதல்), பவினா படேல் (பாரா டேபிள் டென்னிஸ்), ஹர்விந்தர் சிங் (பாரா வில்வித்தை), சரத் குமார் (பாரா தடகளம்) உள்ளிட்ட 35 பேருக்கு அர்ஜுனா விருது வழங்கப்பட்டது.

வாழ்நாள் பிரிவில் துரோணாச்சார்யா விருது டி.பி.ஓ஝ப், சர்கார் தல்வார், சர்பால் சிங், அஷன் குமார், தபன் குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

வழக்கமான பிரிவில் துரோணாச்சார்யா விருது ராதாகிருஷ்ணன் நாயர் பி, சந்தியா குருங், ப்ரீதம் சிவாச், ஜெய் பிரகாஷ் நௌடியல் மற்றும் சுப்பிரமணியன் ராமன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

வாழ்நாள் சாதனைக்கான தயான் சந்த் விருது லேகா கே.சி., அபிஜீத் குந்தே, டேவிந்தர் சிங் கார்ச்சா, விகாஸ் குமார் மற்றும் சஜ்ஜன் சிங் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. பஞ்சாப் பல்கலைக்கழகம் (சண்டிகர்) 2021–ம்ஆண்டுக்கான மௌலானா அபுல் கலாம் ஆசாத் கோப்பையை பெற்றது.

---

9. 'டெலி–லா' செயலி: கிரண் ரிஜிஜு அறிமுகப்படுத்தினார்

மக்களுக்கான 'டெலி–லா' கைப்பேசி செயலியை மத்திய சட்டம்– நீதித் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு சனிக்கிழமை அறிமுகப்படுத்தினார்.

தில்லியில் நடைபெற்ற அறிமுக நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது:

'எண்ம இந்தியா' என்ற பிரதமரின் தொலைநோக்குப் பார்வை மூலம் புதிய இந்தியா உருவாகிறது. எண்ம இந்தியா திட்டத்தின் கீழ் டெலி–லா செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இது வழக்கு விசாரணைக்கு முந்தைய செயல்முறையை வலுப்படுத்துவதற்கான தளமாகும். இந்திய விடுதலையின் 'அம்ருத் மஹோத்ஸவம்' கொண்டாடும் இவ்வேளையில், பொது மக்கள் சுயசார்புடையவர்களாகவும், நீதியை எளிதில் அணுகக் கூடியவர்களாகவும் இருக்கும் வகையில் ஒன்றிணைய வேண்டும்.

இந்தியாவின் 75 ஆண்டுகால சுதந்திர கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய 75,000 கிராம ஊராட்சிகளில் டெலி–லா செயலி விரிவாக்கம் செய்யப்படும்.

வழக்கறிஞர்கள் டெலி–லா இயக்கத்தில் சேர்ந்து சட்ட உதவி சேவைகளுக்கான சட்ட வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் சட்டம் – நீதித்துறை இணை அமைச்சர் எஸ்.பி.சிங் பகேல் கலந்து கொண்டார்.

---

10. பருவநிலை மாற்ற மாநாடு இறுதி அறிக்கை: நாடுகளிடையே தொடர் பேச்சுவார்த்தை

பருவநிலை மாற்ற மாநாடு தொடர்பான இறுதி அறிக்கையைத் தயாரிக்கும் விவகாரத்தில் நாடுகளிடையே தொடர் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

ஸ்காட்லாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் 26–ஆவது பருவநிலை மாற்ற மாநாடு நடைபெற்றது. இரு வாரங்களாக நடைபெற்ற மாநாடு கடந்த 12–ஆம் தேதி நிறைவடைந்தது. எனினும், மாநாட்டின் இறுதி அறிக்கையைத் தயாரிப்பது தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஐ.நா.வின் அனைத்து உறுப்பு நாடுகளும் வரைவு அறிக்கையில் இடம்பெற்றுள்ள அனைத்து விவகாரங்களுக்கும் ஒப்புதல் அளித்தால் மட்டுமே அந்த அறிக்கை இறுதி வடிவம் பெறும். அறிக்கையை இறுதி

செய்வது தொடர்பான பேச்சுவார்த்தை கிளாஸ்கோ நகரில் சனிக்கிழமை நடைபெற்றது.

அமெரிக்கா, பிரிட்டன், சீனா உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் அந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். நிலக்கரி அடிப்படையிலான எரிசக்தி உற்பத்தியை நிரந்தரமாக நிறுத்துவதற்கான இலக்கை நிர்ணயிப்பது குறித்து பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மரபுசாரா எரிசக்திக்கு நாடுகள் படிப்படியாக முடிவுகட்ட வேண்டும் என்று வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக, வளர்ச்சியடைந்த நாடுகள் மற்ற நாடுகளுக்கு நிதியளித்து உதவ வேண்டும் என்று வரைவு அறிக்கையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. எனினும், இந்த விவகாரத்தில் அனைத்து நாடுகளிடையேயும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை.

பாரீஸ் ஒப்பந்தத்தின்படி வெப்பநிலை உயர்வை 2100-க்குள் 1.5 டிகிரி செல்சியஸுக்குக் கீழ் கட்டுப்படுத்த வேண்டுமெனில், கரியமில வாயு வெளியேற்றத்தை 2010-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 45 சதவீதத்தை 2030-க்குள் குறைக்க வேண்டுமென அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏழை நாடுகளும், வளர்ந்து வரும் நாடுகளும் வளர்ச்சியடைந்த நாடுகளிடமிருந்து நிதியுதவியைக் கோரியுள்ளன. இந்த விவகாரத்தில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் உடன்படாததால் ஒருமித்த கருத்து இன்னும் எட்டப்படவில்லை.

இறுதி அறிக்கையைத் தயாரிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், வரைவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்குப் போதுமானதாக இல்லை என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இன்னும் உறுதியான நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

---

11. குரூஸ் பர்னாந்தீஸ்க்கு மணிமண்டபம் :

₹தூத்துக்குடி மாநகர மக்களின் தந்தை' என்று அழைக்கப்படும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ்க்கு மணிமண்டபம் அமைக்கப்படும்' என்று, தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து, அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: தூத்துக்குடி மாநகர மக்களின் நலன் காக்க தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ். ஏறத்தாழ 30 ஆண்டுகள் நகர்மன்ற உறுப்பினராகவும், 5 முறை நகர்மன்ற தலைவராகவும் இருந்த காலத்தில் ஜாதிமத பேதமின்றி தூத்துக்குடி மக்களின் அடிப்படைக்கல்வி மேம்பாடு, குடிசை வீடுகள் மேம்பாடு, தீண்டாமை எதிர்ப்பு, கூட்டுறவு வங்கிக்கடனுதவி, சுகாதார மையங்கள், சனிக்கிழமைச் சந்தை, அங்காடிகள், பொதுவான கல்லறைத் தோட்டம் என பல திட்டங்களை செயல்படுத்தி சாதனை படைத்தார். குறிப்பாக 1927-ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம் மிகக் கடுமையான குடிநீர் பஞ்சத்தில் சிக்கித் தவித்த போது, மிகுந்த தொலைநோக்குப் பார்வையுடன் நெல்லை தாமிரபரணி ஆற்றில் இருந்து குழாய் மூலம் நீர் கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்தி வெற்றி கண்டார். தன்னலமற்ற தனது தியாகத்தால் அம்மாவட்ட மக்களின் மனங்களில் இன்றும் உயர்ந்து நிற்கும் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸின் நினைவினை போற்றிடும் வகையில், அவரின் பிறந்த நாளை நவம்பர் 15-ம் தேதி அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

திமுக அரசு பொறுப்பேற்றதும் ராவ் பகதூர் பர்னாந்தீஸ்க்கு நினைவு மண்டபம் கட்டப்படும் என்று தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, அவருடைய பிறந்த நாளில் அவரின் புகழுக்கு மென்மேலும் பெருமை சேர்க்கும் வகையில், தூத்துக்குடியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று தமிழக அரசின்சார்பில் அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

12. 163 நாடுகள் ஆதரித்து ஓட்டு உலக சட்ட ஆணையம் உறுப்பினர் தேர்தலில் கொடி நாட்டிய இந்தியா: சீனாவை பின்னுக்கு தள்ளி வெற்றி

ஐநா.வின் சர்வதேச சட்ட ஆணையம் 1947ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சர்வதேச சட்டங்கள் மற்றும் அதன் விதி தொகுப்புகளை மேம்படுத்தி, பரிந்துரை வழங்குவதும், ஊக்குவிப்பதும் இதன் முக்கிய பணியாகும். இதன் உறுப்பினர் பதவிக்கு எப்போதும் கடும் போட்டி நிலவும். இந்நிலையில், இந்த ஆணையத்தின் உறுப்பினர் பதவிக்கு இந்தியாவின் ராஷ்டிரிய ரக்ஷா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரும், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசனை குழுவின் உறுப்பினருமான பிமல் படேல் தேர்வாகி உள்ளார். ஐநா.வின் மொத்தமுள்ள 192 உறுப்பினர் நாடுகள் வாக்களித்த இந்த தேர்தலில், சீனா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட ஆசியா-பசிபிக் குழுவில் இடம் பெற்றுள்ள 11 நாடுகள், 8 இடங்களை குறி வைத்து போட்டியிட்டன.

இதனால், கடும் போட்டிய நிலவிய நிலையில், பிமல் படேல் 163 வாக்குகளைப் பெற்று தேர்வு செய்யப்பட்டார். இவர் அடுத்தாண்டு ஜனவரி 1ம் தேதி பொறுப்பேற்பார். இவரது பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். படேலை தொடர்ந்து தாய்லாந்து 162, ஜப்பான் 154, வியட்நாம் 145, சீனா 142 வாக்குகள் பெற்றன. இதற்கு முன்பு, பிமல் படேல் நெதர்லாந்தின் ஹேக் நகரில் செயல்படும் ஐநா.வின் இளைஞர்கள் மற்றும் ரசாயன ஆயுதங்கள் தடை அமைப்பில் 15 ஆண்டுகளாக பணியாற்றி உள்ளார். சர்வதேச சட்ட ஆணையத்தின் உறுப்பினராக பிமல் படேல் தேர்வானதற்கு ஐநா.வுக்கான இந்தியாவின் நிரந்தர தூதர் டிஎஸ். திருமூர்த்தி டிவிட்டரில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பலம் சேர்க்கும்

* ஆசியா-பசிபிக் பகுதியில் தென் சீன கடல் உள்ளிட்ட பகுதிகளில் சீனா சட்ட விரோதமாக ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும் நிலையில், சர்வதேச சட்ட ஆணையத்துக்கு பிமல் படேல் தேர்வாகி இருப்பது, இந்தியாவுக்கு பலம் சேர்த்துள்ளது.

* சர்வதேச சட்ட ஆணையத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 34. இதற்கு தேர்வு செய்யப்படுபவர்கள், சர்வதேச சட்டத்தில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும்.

* ஒவ்வொரு நாட்டு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நபர்களே, ஐநா.வில் நடக்கும் சர்வதேச சட்ட ஆணைய உறுப்பினர் தேர்தலில் போட்டியிட முடியும்.

---

1. கர்நாடக மாநிலத்தில் உள்ள ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய மும்பை–கர்நாடக பகுதியின் புதிய பெயர் என்ன?

அ) கல்யாண–கர்நாடகா



ஆ) கித்தூர்–கர்நாடகா ☑

இ) பெலகாவி–கர்நாடகா

ஈ) ராணி–கர்நாடகா

✓ 7 மாவட்டங்களை உள்ளடக்கிய மும்பை–கர்நாடகா பகுதிக்கு 'கித்தூர் கர்நாடகா' எனப் பெயர் மாற்ற கர்நாடக மாநில அரசு முடிவு செய்துள்ளது.

✓ மும்பை–கர்நாடக பகுதி உத்தர கன்னடா, பெலகாவி, தார்வாட், விஜய புரா, பாகல்கோட், கடக் மற்றும் ஹாவேரி மாவட்டங்களைக்கொண்டுள்–ளது. கித்தூர் என்பது பெலகாவி மாவட்டத்தில் உள்ள ஒரு வரலாற்று சிறப்புமிக்க தாலுக்கா ஆகும். இது ராணி சென்னம்மாவால் ஆளப்பட்டது. கடந்த 2019ஆம் ஆண்டில், ஹைதராபாத்–கர்நாடகா பகுதி "கல்யாண்–கர்நாடகா" என மறுபெயரிடப்பட்டது.

---

2. முதல் உலகளாவிய மருந்துக் கொள்கைக் குறியீடு – 2021'இல் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) 10



ஆ) 18 ☑

இ) 25

ஈ) 30

✓ தீங்கு குறைப்பு கூட்டமைப்பினால் முதல் உலகளாவிய மருந்துக் கொள்கைக் குறியீடு சமீபத்தில் வெளியிடப்பட்டது. நார்வே, நியூசிலாந்து, போர்ச்சுகல், இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை மனிதாபி–மான மற்றும் ஆரோக்கியம் சார்ந்த மருந்துக் கொள்கைகளில் முதல் 5 இடங்களில் உள்ளன. 74/100 மதிப்பெண்களுடன் 30 நாடுகளில் இந்தியா 18ஆவது இடத்தில் உள்ளது.

✓ பிரேசில், உகாண்டா, இந்தோனேசியா, கென்யா மற்றும் மெக்சிகோ ஆகியவை கடைசி ஐந்து இடங்களில் உள்ளன. இந்தக்குறியீடு மருந்துக் கொள்கையின் 75 குறிகாட்டிகளைக் கொண்டுள்ளது.

---

3. ஒவ்வொரு நவம்பரிலும் நிகழும் புகழ்பெற்ற எரிகல் பொழிவின் பெயர் என்ன?

அ) லியோனிட்ஸ் விண்கல் மழை ☑



ஆ) பெர்சீட் விண்கல் மழை

இ) ஓரியானிட்ஸ் விண்கல் மழை

ஈ) டெம்பல் விண்கல் மழை

✓ முதலில் 1833'இல் கண்டுபிடிக்கப்பட்ட லியோனிட்ஸ் எரிகல் பொழிவு, ஒவ்வொரு நவம்பர் மாதமும் நிகழ்கிறது. இந்த எரிகல் பொழிவு, இந்த ஆண்டு நவ.6ஆம் தேதி தொடங்கியது. நவ.30 வரை இது நிகழும். இதனை வெறுங்கண்ணால் பார்க்க முடியும்.

✓ பூமியின் வளிமண்டலத்தில் நுழையும் 55P/Tempel–Tuttle வால்மீன் விட்டுச்சென்ற குப்பைகளை இந்த எரிகல் பொழிவு கொண்டுள்ளது. இக் குப்பை பொருட்கள் விண்கற்கள் என்று அழைக்கப்படுகின்றன.

---

4. COVID'க்கு சிகிச்சையளிப்பதற்கான உலகின் முதல் பிளாஸ்மிட் DNA தடுப்பூசியின் பெயர் என்ன?

அ) ZyCoV–D ☑



ஆ) மாடர்னா

இ) ஸ்புட்னிக் வி

ஈ) கோவாக்சின்

✓ சைடஸ் கேடில்லாவின் ZyCoV–D என்பது உலகின் முதல் பிளாஸ்மிட் DNA தடுப்பூசியாகும். ஊசி இல்லாத அப்ளிகேட்டரைப் பயன்படுத்தி செலுத்தக்கூடிய முதல் COVID தடுப்பூசி இதுவாகும். 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பெரியவர்கள் மற்றும் குழந்தைகளின் அவசரகால பயன்பாட்டிற்காக இந்திய தலைமை மருந்துக் கட்டுப்பாட்டாளரால் (DCGI) இதன் 3–டோஸ் ஷாட் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

---

5. கனிமச்சலுகை விதிகள், 2021'இல் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய திருத்தங்களின்படி, சொந்த சுரங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கனிமத்தில் எவ்வளவு சதவீதம் வரை விற்க முடியும்?

அ) 25



ஆ) 50 ☑

இ) 75

ஈ) 100

✓ கனிம விதிகளில் திருத்தம் செய்து புதிய விதிமுறைகளை மத்திய கனிமங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ளது. சொந்த குத்தகையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் 50% கனிமத்தை விற்பனை செய்யும் நடை முறை புதிய விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது. சுரங்கங்களை எந்தவித கட்டணமும் இன்றி இடமாற்றம் செய்வதற்கு இது உதவுகிறது. சுரங்க குத்தகை வழங்குவதற்கான குறைந்தபட்ச பகுதி 5 ஹெக்டேரில் இருந்து 4 ஹெக்டேராக திருத்தப்பட்டுள்ளது.

---

6. எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய சாதனை ஆய்வு நடத்தப்படுகிறது?

அ) இரண்டு ஆண்டுகள்



ஆ) மூன்று ஆண்டுகள் ☑

இ) ஐந்து ஆண்டுகள்

ஈ) ஆறு ஆண்டுகள்

✓ தேசிய சாதனை ஆய்வானது (NAS) மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. கடைசியாக 2017'இல் இது நடத்தப்பட்டது. 2020'இல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. COVID–19 நிலைமை காரணமாக, அது இந்த ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டது.

✓ 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 1,23,000 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 3.8 மில்லியன் மாணவர்கள் தேசிய சாதனை ஆய்வு – 2021'இல் பங்கேற்பார்கள். 3, 5 மற்றும் 8ஆம் வகுப்பு மாணவர்களின் திறன்களை இது மதிப்பிடுகிறது. தனியார் பள்ளிகள் இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும்.

---

7. 5 மாவட்டங்களில் மெட்ரோ வசதிகள்கொண்ட ஒரே மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) மேற்கு வங்கம்

ஆ) புது தில்லி



இ) உத்தர பிரதேசம் ☑

ஈ) கேரளா

✓ உத்தர பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் சமீபத்தில் கான்பூர் மெட்ரோ இரயிலின் சோதனை ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். கான்பூர் மெட்ரோவின் பணி நவம்பர் 15, 2019 அன்று தொடங்கியது. உத்தர பிரதேச மாநிலத்தில் தற்போது காசியாபாத், நொய்டா, கிரேட்டர் நொய்டா மற்றும் லக்னோவில் மெட்ரோ இரயில் சேவை செயல்பட்டு வருகிறது.

✓ கான்பூர் மெட்ரோ இரயில் தொடங்கப்பட்ட பிறகு, ஐந்து மாவட்டங்களில் மெட்ரோ வசதிகள் உள்ள ஒரே மாநிலமாக உத்தர பிரதேசம் இருக்கும்.

---

8. சமீபத்தில் எந்த நாட்டின் இராணுவ தளபதிக்கு இந்திய இராணு–வத்தின் கௌரவ ஜெனரல் பதவி வழங்கப்பட்டது?

அ) நேபாளம் ☑



ஆ) இலங்கை

இ) வங்காளதேசம்

ஈ) பூடான்

✓ நேபாள இராணுவ தளபதி ஜெனரல் பிரபு ராம் சர்மாவுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இந்திய ராணுவத்தின் கௌரவ ஜெனரல் பதவியை வழங்கினார். இருநாடுகளும் பரஸ்பர இராணுவ தளபதிகளு–க்கு ஜெனரல் பதவியை வழங்குவது வழக்கமாகும். ஜெனரல் ஷர்மா, 2021 செப்டம்பரில் இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றார். அவர் இந்தியாவில் உள்ள தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பட்டம் பெற்றவர்.

---

9. பின்வரும் எந்தத் திட்டத்தின் கீழ், 'தூய்மையான பசுமை கிராம வாரம்' அனுசரிக்கப்பட்டது?

அ) DDU-GKY

ஆ) MGNREGS ☑

இ) DAY-NRLM

ஈ) DAY-NULM



✓ ஆசாதி கா அம்ரித் மகோத்சவின் ஒருபகுதியாக, மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் MGNREG திட்டத்தின்கீழ், 2021 அக்.29 முதல் நவ.4 வரை ஒருவாரகால 'தூய்மை பசுமை கிராம' செயல்பாடுகளை மேற்கொண்டு உள்ளன. தூய்மை பசுமை கிராம வாரத்தின்போது, கழிவு நீர்ப்போக்குக் குழிகளை அடையாளங்கண்டு நிர்மாணிப்பதில் கவனஞ்செலுத்தப்பட்ட-து. மண்புழு உரம்/NADEP குழி மற்றும் புழு உரமாக்கல், கழிவுப்பொரு-ட்களின் மறுபயன்பாடு, மக்காத குப்பைகளை மறுசுழற்சி செய்தல் போன்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

---

10. "சில்லறை விற்பனை நேரடித்திட்டம்" மற்றும் "ஒருங்கிணைந்த குறைதீர்க்கும் திட்டம்" ஆகியவற்றை தொடங்கிய அமைப்பு எது?

அ) இந்திய ரிசர்வ் வங்கி ☑

ஆ) ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை & மேம்பாட்டு ஆணையம்

இ) காப்பீட்டு ஒழுங்குமுறை & மேம்பாட்டு ஆணையம்

ஈ) பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம்

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் "சில்லறை விற்பனை நேரடித்திட்டம்" மற்றும் "ஒருங்கிணைந்த குறைதீர்க்கும் திட்டம்" ஆகியவை பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்டு நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

✓ சில்லறை நேரடித்திட்டத்தின்கீழ், சில்லறை முதலீட்டாளர்கள் அரசாங்கப் பத்திரங்களை இணையத்தில் வாங்கலாம் மற்றும் விற்கலாம். ஒருங்கி-ணைந்த ஒம்புட்ஸ்மேன் திட்டமானது வாடிக்கையாளர் புகார்களில் குறைதீர்க்கும் பொறிமுறையை மேம்படுத்த உதவுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'முதல்வரின் முகவரி': தமிழக அரசு அரசாணை வெளியீடு

முதல்-அமைச்சரின் குறைதீர்ப்பு துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு, முதல்வரின் முகவரி என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர், முதல்-அமைச்சர் உதவி மையம், குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு ஒருங்கிணைப்பு ஆகிய துறைகள் ஒன்றிணைந்து 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் முதல்வரின் முகவரி என்ற புதிய துறை சிறப்பு அலுவலராக ஷில்பா பிரபாகர் சதீஷ் அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது. முதல்வரின் முகவரி துறையில் மனுக்கல் தீர்வுக்காண ஒற்றை இணையதள முகப்பு பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தலைமைச் செயலாளர் இறையன்பு வெளியிட்ட அரசாணையில், முதல்-அமைச்சரின் தனிப்பிரிவு, முதல்-அமைச்சரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு (ஐஜிஜிசிஎம்எஸ்), உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர் துறை ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு, 'முதல்வரின் முகவரி' என்ற புதிய துறை உருவாக்கப்படுகிறது.

முதல்-அமைச்சர் முகவரி துறையின் மனுக்களுக்குத் தீர்வு காண முதல்வரின் உதவி மையம் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பின் உதவி எண் மாநிலம் முழுவதும் ஒற்றை இணையதள முகப்பாகப் பயன்படுத்தப்படும். இது முதல்வரின் முகவரி துறையின் கட்டுப்பாட்டில் இருக்கும். உங்கள் தொகுதியில் முதல்-அமைச்சர் துறையின் சிறப்பு அலுவலர் ஷில்பா பிரபாகர் சதிஷ், முதல்வரின் முகவரி துறையின் சிறப்பு அலுவலராக நியமிக்கப்படுகிறார்'" என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

---

2. கரோனா காலத்துக்கும் நேருவின் அறிவியல்

உலகப் பேரிடராக கரோனா தொற்று மாறியிருக்கும் சூழலில், ஜவாஹர்லால் நேருவின் அன்றைய அறிவியல்பூர்வமான பார்வையும் ஒரு அறிவியல் சமுதாயத்தை உருவாக்குவதில் அவர் மேற்கொண்ட முயற்சிகள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் பொருத்தமாகவும் இருக்கின்றன. நேருவின் கூற்றுப்படி, அறிவியல் என்பது மனித மனதின் முக்கியமான வெற்றியாகும். இது, மனித குலத்தை நோய், தேவை, துயரம் போன்றவற்றிலிருந்து விடுவிக்கும்.

தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அறிவியலின் பங்களிப்பை நேரு புரிந்துகொண்டிருந்தார். இது குறித்து நேரு எழுதும்போது, உண்மையையும் புதிய அறிவையும் தேடுதல், சோதனையின்றி எதையும் ஏற்க மறுத்தல், புதிய சான்றுகளின் அடிப்படையில் முந்தைய முடிவுகளை மாற்றும் திறன், உண்மைகளை நம்புதல், முந்தைய கோட்பாட்டைத் தொடராமல் இருத்தல், கடினமான ஒழுக்கம் கொண்ட மனம் இருத்தல் அவசியம் என்கிறார். கேம்ப்ரிட்ஜ் சயின்ஸ் டிரிபோஸ், ஜேம்ஸ் ஜீன்ஸ், ஆர்தர் எடிங்டன் மற்றும் பிரிட்டனின் முன்னணி அறிவியலர்களுடன் தொடர்பில் இருந்ததன் மூலம் நேருவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆர்வத்தை அறியலாம்.

இந்தியாவில் உயர் தரமான கல்வி நிறுவனங்களை அமைக்க வேண்டும் என்பதே நேருவின் திட்டமாக இருந்தது. அமெரிக்கப் பயணத்தின்போது, அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் நாட்டுக்குத் தொழில்நுட்ப, அறிவியல் முன்னேற்றத்தை வழங்குவதைப் புரிந்துகொண்டார். 1949-ல் மாசசூசிட்ஸ் தொழில்நுட்பக் கழகத்துக்கு அவர் சென்றதுதான் 1950-ல் காரக்பூரிலும், 1958-ல் பம்பாயிலும், 1959-ல் சென்னை, டெல்லியிலும் ஐஐடி எனப்படும் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களை உருவாக்க வழிவகுத்தது.

அறிவியல் கற்றலுக்கும் ஆராய்ச்சிக்குமான நிறுவனங்களை நடத்திய விக்ரம் சாராபாய், சர் சி.வி.ராமன், ஹோமி ஜே.பாபா, சதீஷ் தவான், எஸ்.எஸ்.பட்நாகர் போன்ற பல அறிவியலர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் திறமையை நேரு பெற்றிருந்தார்.

அறிவியலுக்குச் சமூகத்தின் ஏற்பும் அரசின் ஆதரவும் நிலைத்திருக்க வேண்டும் என்ற உண்மையை நேரு முழுமையாக அறிந்திருந்தார். இதனால்தான் 1954-ல் அணுசக்தித் துறை, பாபா அணு ஆராய்ச்சி மையம், 1949-ல் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம், 1952-ல் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் ஆகியவற்றைத் தொடங்கி, அறிவியல் முன்னேற்றத்தின் அதிகாரத்துவ இயந்திரங்களாக மாற்றினார்.

நேருவுக்கு எதிரிகள் அன்றும் இருந்தார்கள், இன்றும் இருக்கிறார்கள். அவரது அறிவியல் பணியைத் தடுக்கப் போலி தேசியவாதம் தூண்டப்பட்டது. அறிவியலுக்கு எல்லைகள் இல்லை. ஆங்கில அறிவியல், பிரெஞ்சு அறிவியல் என்றெல்லாம் பேச முடியாது. தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அறிவியலின் பங்கு முக்கியமானது என்பதை நேரு புரிந்து வைத்திருந்தார்.

சுதந்திரத்துக்குப் பிறகு, நாட்டின் மக்கள்தொகையில் பாதிப் பேருக்கு மலேரியா பாதிப்பு ஏற்பட்டது. 1953-ல் மலேரியா பெரிய அளவில் கட்டுப்படுத்தப்பட்டது. 1951-ல் பெரியம்மை பாதிப்பால் இறந்தவர்கள் எண்ணிக்கை 1 லட்சத்து 48 ஆயிரமாக இருந்தது. அடுத்த 10 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 300 ஆகக் குறைக்கப்பட்டது. மக்களைப் பாதிக்கும் இது போன்ற நோய்களிடம் போராட ஒவ்வொரு 5 ஆண்டுக்கும் திட்டம் வகுக்கப்பட்டது.

1950-களில் பாலியல் நோய்கள், தொழுநோய், டைஃபாய்டு, கக்குவான் இருமல், நிமோனியா, மூளைக்காய்ச்சல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டன. மருத்துவம், பரவலான தடுப்பூசித் திட்டங்கள் மூலம் இந்த நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டன. 1940-களில் பரவிய பிளேக் நோயால், நாட்டு மக்கள்தொகையில் 3% பேர் இறந்துபோனார்கள். கடுமையாகப் போராடி 1950-களில் பிளேக் நோய் முற்றிலும் அழிக்கப்பட்டது.

தொற்றுநோய்களை எதிர்த்துப் போராடுவதற்குப் பெருமளவு நிதி ஒதுக்கீடுகளுடன், அதிக எண்ணிக்கையிலான மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டன. அதற்காகப் புதிய மருத்துவக் கல்லூரிகள் கட்டும் பணியும், இருக்கும் மருத்துவக் கல்லூரிகளை மேம்படுத்தும் பணியும் நடைபெற்றன. 1946-ல் 15 மருத்துவக் கல்லூரிகள் இருந்தன. இந்த எண்ணிக்கை 1965-ல் 81 ஆக உயர்ந்தது. 1951-ல் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 1,200. இது 1961-ல் 10 ஆயிரமாக உயர்ந்தது.

கரோனா என்ற கொடிய தொற்றுநோயை எதிர்த்துப் போராடும்போது, கடந்த கால நோய்களுக்கு எதிரான நேருவின் போராட்டத்தை நினைவில்கொள்வது அவசியம். சீனா, தைவான், வியட்நாம், சிங்கப்பூர், கியூபா போன்ற நாடுகளில் மலிவாக மருத்துவம் கிடைப்பதால்தான், மற்ற பெரிய பணக்கார நாடுகளைவிட கரோனா தொற்றை இந்த நாடுகள் எளிதாக எதிர்கொள்ள முடிந்தது.

பிளேக், காலரா நோய்களை அறிவியல்பூர்வமாக முறியடித்ததைக் குறிப்பிட்டு, மகள் இந்திராவுக்கு நேரு எழுதிய கடிதத்தில் சுகாதாரம், ஆரோக்கியம், சில நோய்களின் மீதான வெற்றி போன்றவை அறிவியலைப் பொறுத்தது என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

தான் கட்டமைத்த நிறுவனங்கள் மூலம் கரோனா பரவல் காலத்திலும் நேரு வாழ்ந்துகொண்டிருக்கிறார். 1952-லேயே பூனாவில் நிறுவப்பட்ட நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் வைராலஜி நிறுவனம், கரோனா காலத்தில் பெருமளவில் பயன்படுவதை மறக்க முடியாது.

மனிதர்களின் அறிவியல் தேடல் குறித்த நேருவின் நம்பிக்கை, கரோனா பரவல் இருக்கும் இந்தக் காலத்திலும் பொருந்தும். அறிவியலின் மீது நேரு வைத்திருந்த இந்த நம்பிக்கையும், மனிதர்களின் திறமையுடன் அவர் உருவாக்கிய அறிவியல் நிறுவனங்களும்தான், இந்த அழிவுகரமான உலகப் பேரிடரிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறது.

---

3. உரம் தயாரிக்க பசுவின் சாணம் வாங்க முடிவு: மத்திய பிரதேச முதல்வர் சவுகான் அறிவிப்பு

மத்திய பிரதேச தலைநகர் போபாலில் நேற்று இந்திய கால்நடை மருத்துவ சங்கம் ஏற்பாடு செய்திருந்த பெண் கால் நடை மருத்துவர்கள் மாநாட்டில் முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் கலந்துகொண்டார். விழாவில் அவர் பேசியதாவது:

பசுக்கள், மாடுகள் இல்லாமல் பல வேலைகள் நடப்பதில்லை. எனவே, அவை மிகவும் முக்கிய மானவை. முறையான அமைப்பை ஏற்படுத்தினால், பசுக்கள் மற்றும் அவற்றின் சாணம், சிறுநீர் ஆகியவை, மாநிலம் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உதவும். இந்த துறையில் பெண்களின் பங்களிப் புடன் நாம் வெற்றி பெறுவோம் என்று நம்புகிறேன். பசுவின் சாணம் மற்றும் சிறுநீரில் இருந்து, பூச்சிக்கொல்லிகள் முதல் மருந் துகள் வரை பல முக்கிய பொருட் களை தயாரிக்கலாம்.

மத்தியபிரதேச மாநிலத்தில் பெருமளவில் உரம் தயாரிப்பதற்கு பசுவின் சாணம் தேவைப்படுகிறது. எனவே அந்த பசுவின் சாணத்தை விலை கொடுத்து வாங்க அரசு முடிவு செய்துள்ளது. இதுதொடர்பான பூர்வாங்க வேலைகளில் அரசு ஈடுபட்டுள் ளது. விரைவில் இதுதொடர்பான அறிவிப்பை வெளியிடுவோம்.

பொதுமக்களின் அவசர மருத்துவ உதவிக்காக 108 என்ற ஆம்புலன்ஸ் சேவை உள்ளது. அதைப் போலவே, கால்நடைகளைப் பாதுகாக்கவும், அவற்றுக்கு அவசர மருத்துவ சிகிச்சை அளிக்கவும் 109 என்ற ஹெல்ப்லைன் சேவையை தொடங்க அரசு பரிசீலித்து வருகிறது. அவசர சிகிச்சை தேவைப்படும் கால்நடைகள் தொடர்பாக 109 என்ற தொலை பேசி எண்ணுக்கு போன் செய் தால் கால்நடைகள் இருக்கும் இடத்துக்கே மருத்துவர்கள் வந்து சிகிச்சை வழங்குவர்.

இவ்வாறு அவர் பேசினார்.

பாஜக ஆளும் ம.பி.யில், பசுக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பசுக்களைப் பாதுகாப்பதற்கும், பசுஉற்பத்தியை மேம்படுத்துவதற்கும் 6 துறைகளின் அமைச்சர்களைக் கொண்ட பசு அமைச்சரவை உருவாக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

---

4. எஸ்.400 ஏவுகணை அமைப்புகளை இந்தியாவுக்கு விநியோகிக்க தொடங்கியது ரஷ்யா

ரஷ்யாவிடம் இருந்து எஸ் 400 ஏவுகணைகள் வாங்க இந்தியா ஒப்பந்தம் மேற்கொண்டது. 5.5 பில்லியன் டாலர் மதிப்பில் 2019-ல் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த எஸ் 400 ஏவுகணைகள், தரையிலிருந்து வானில் வரும் இலக்குகளைக்கூட மிகத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டது.

இதனால் முதல் கட்டமாக 800 -மில்லியன் டாலரை இந்தியா ரஷ்யாவிடம் 2019-லேயே கொடுத்துவிட்டது. ஆனால் இன்னும் ஏவுகணைகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படவில்லை. இந்த நிலையில், திட்டமிட்டபடி இந்தியாவுக்கு எஸ் 400- ஏவுகணை அமைப்புகளை விநியோகிக்கும் பணி தொடங்கியதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

5. 2019-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது - 2020-ல் சிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றம் 400% உயர்வு :

கடந்த 2019-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2020-ல் சிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் 400% அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தில் உள்ள தரவுகளில் கூறியிருப்பதாவது:

நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு, கடந்த 2020-ம் ஆண்டுசிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் பல மடங்கு அதிகரித்திருக்கிறது. சிறார்களை வைத்து எடுக்கப்படும் ஆபாசப் படங்களை வெளியிடுதல், ஆன்லைன் மூலம் பாலியல் தொல்லை கொடுத்தல் உள்ளிட்ட குற்றங்கள் இதில் அடங்கும்.

கடந்த 2019-ம் ஆண்டு சிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் தொடர்பாக 164 வழக்குகள் பதிவாகின. இதுவே 2018, 2017-ம் ஆண்டுகளில் முறையே 117, 79 ஆக இருந்தது. ஆனால், 2020-ம் ஆண்டில் சிறார்களுக்கு எதிரான இணையவழி குற்றம் தொடர்பாக 842 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது 2019-ம் ஆண்டில் பதிவான வழக்குகளை விட 400 சதவீதம் அதிகம் ஆகும். இவற்றில் 738 வழக்குகள் சிறார் ஆபாசப் படங்களை வெளியிடுதல் தொடர்பானவை.

கரோனா பரவல்..

இதுகுறித்து குழந்தைகள் உரிமை அமைப்பின் (க்ரை) தலைவர் பூஜா மர்வாஹா கூறும்போது, "கரோனா பரவலை தடுப்பதற்காக நாடு முழுவதும் பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டன. ஆன்லைன் மூலமாக வகுப்புகள் நடைபெற்றன. இதனால் கிட்டத்தட்ட பெரும்பாலான சிறார்களுக்கு ஸ்மார்ட் போன்கள் கிடைத்துவிட்டன. அதிக நேரம் ஆன்லைனில் செலவிடுவதால், சில சமயங்களில் ஆபாச இணையதளங்களால் அவர்கள் கவரப்பட வாய்ப்பு உருவானது. இதுவே இதுதொடர்பான இணையவழி குற்றங்களுக்கு ஆரம்பப் புள்ளி ஆகும். இதனால்தான், 2020-ம் ஆண்டு சிறார்களுக்கு எதிராக அதிக அளவில் இணையவழி குற்றங்கள் அரங்கேறியுள்ளன" என்றார். - பிடிஐ

---

6. சென்னையில் வெள்ள தடுப்புக்கு அறிவுரைக் குழு

சென்னையில் வெள்ளத் தடுப்புக்கான அறிவுரைக் குழு ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் தில்லி நகர் மற்றும் ஊரமைப்பு நிறுவன தலைமை திட்ட அலுவலர், காலநிலை பின்னடைவு பயிற்சி உலக வள நிறுவன இயக்குநர் நம்பி அப்பாதுரை, சென்னை வளர்ச்சி கல்வி நிறுவனப் பேராசிரியர் ஜானகிராமன், மும்பை ஐஐடி கட்டுமானப் பொறியியல் துறை பேராசிரியர் கபில் குப்தா, சென்னை அண்ணா பல்கலைக்கழக மனித குடியமர்வு மைய இயக்குநர் பிரதீப் மோசஸ், ஹைதராபாத் தேசிய ரிமோட் சென்சிங் துறையின் பிரதிநிதி , அண்ணா பல்கலைக்கழக ரிமோட் சென்சிங் நிறுவன பேராசிரியர் திருமலைவாசன், ஐஐடி கட்டுமானப் பொறியியல் துறை தலைவர் பாலாஜி நரசிம்மன், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும தலைமை திட்ட அதிகாரி, சென்னை மண்டல நீர்வளத் துறை தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர், சுற்றுச்சூழல் துறை இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர். இந்தக் குழுவானது வெள்ளத்தை தடுக்கும் வழிமுறைகளையும், வெள்ளத்தின் பாதிப்பைக் குறைக்கும் வகையில் மழைநீர் வடிகால்களை அமைக்கவும் உரிய அறிவுறுத்தல்களை அரசுக்கு வழங்கும்.

---

7. நிர்வாகத் திறனை மேம்படுத்த மத்திய அமைச்சரவை 8 குழுக்களாகப் பிரிப்பு

மத்திய அரசின் நிர்வாகத் திறனை மேம்படுத்தும் வகையில் எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகளை கண்காணிக்க மத்திய அமைச்சரவை எட்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவையில் 77 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். தொழில்நுட்பம் சார்ந்த வளங்களை மேம்படுத்துவது, தொழில் நிபுணர்கள் அடங்கிய தொகுப்பை

உருவாக்குவது ஆகியவற்றுக்காக அமைச்சா்கள் எட்டு குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளனா். நிா்வாகத்தில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவரவும், மத்திய அரசின் செயல்திறனை மேம்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு முன்பாக பிரதமா் நரேந்திர மோடி தலைமையில் ஐந்து ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு கூட்டமும் சுமாா் 5 மணி நேரம் நடைபெற்றது.

தனிப்பட்ட திறன், கவனத்துடன் கூடிய அமலாக்கம், அமைச்சரவை செயல்பாடு, பணிகளில் ஒத்துழைப்பு மற்றும் திறன்வாய்ந்த தகவல் தொடா்பு, நாடாளுமன்ற நடவடிக்கைகள் ஆகிய 5 தலைப்புகளில் இந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடா்பான ஆலோசனைக் கூட்டத்தில் மக்களவைத் தலைவா் ஓம் பிா்லாவும், மாநிலங்களவைத் தலைவா் எம்.வெங்கையா நாயுடுவும் பங்கேற்றனா்.

இந்தக் கூட்டங்கள் அனைத்தும் மத்திய அரசின் நிா்வாகத் திறனை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டன. இந்த நோக்கில் அடுத்தகட்ட நடவடிக்கையாகவே அமைச்சரவைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குழுக்கள் ஒவ்வொன்றிலும் 9 முதல் 10 அமைச்சா்கள் இருப்பாா்கள். ஓா் அமைச்சா் குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருப்பாா்.

ஒவ்வொரு அமைச்சரின் அலுவலகத்துக்கும் ஒரு இணையதளம் உருவாக்கப்படும். அதில் மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் தொடா்பான அமலாக்கம் குறித்த தகவல்கள் இடம்பெறும். சம்பந்தப்பட்ட அமைச்சா்கள் எடுக்கும் முடிவுகள் தொடா்பாக தகவல் பலகை உருவாக்கப்படும். கூட்டங்களை நடத்துதல் கடிதத் தொடா்பை நிா்வகிப்பது ஆகியவையும் மேற்கொள்ளப்படும். இவற்றை இந்த எட்டு குழுக்களும் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்கள், மாநிலங்கள் மற்றும் மாநில அமைச்சகங்களுடன் இந்தக் குழுக்கள் இணைந்து செயல்படும்.

இந்தக் குழுக்களில் ஒரு குழுவானது, ஆராய்ச்சி, தகவல் தொடா்பு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற குறைந்தபட்சம் மூன்று தொழில் நிபுணா்களைக் கொண்ட குழுவை உருவாக்க வேண்டும்.

அதேபோல் ஓய்வு பெற்ற ஊழியா்களின் பின்னூட்டங்கள் மற்றும் அனுபவங்களை பராமரிக்க ஓா் இணையதளத்தை உருவாக்கும் பொறுப்பு ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

எட்டு குழுக்களின் ஒருங்கிணைப்பாளா்களாக மத்திய அமைச்சா்கள் ஹா்தீப் சிங் புரி, நரேந்திர சிங் தோமா், பியூஷ் கோயல், தா்மேந்திர பிரதான், ஸ்மிருதி இரானி, அனுராத் தாக்குா் உள்ளிட்டோா் இருப்பாா்கள்.

இந்த அமைச்சா்கள் தங்கள் அலுவலகங்களின் சிறந்த நடைமுறைகள் தொடா்பாக தங்கள் அமைச்சரவை சகாக்களுடன் பகிா்ந்து கொள்வாா்கள்.

---

8. நெக்ஸ்ட் ஜென் ஏடிபி ஃபைனல்ஸ்: கோப்பை வென்றாா் காா்லோஸ்

இத்தாலியில் நடைபெற்ற நெக்ஸ்ட் ஜென் ஏடிபி ஃபைனல்ஸ் டென்னிஸ் போட்டியில் ஸ்பெயின் வீரா் காா்லோஸ் அல்கராஸ் காா்ஃபியா சாம்பியன் ஆனாா்.

உலகின் 32-ஆம் நிலை வீரராக இருக்கும் காா்லோஸ் இறுதிச்சுற்றில் 4-3 (7/5), 4-2, 4-2 என்ற நேரி் செட்களில் அமெரிக்கரும், உலகின் 39-ஆம் நிலை வீரருமான செபாஸ்டியன் கோா்டாவை தோற்கடித்தாா். இந்த ஆட்டத்தில் முதல் இரு செட்களில் மட்டும் சற்று தடுமாற்றம் காட்டிய காா்லோஸ், அதன் பிறகு ஆட்டத்தை முற்றிலுமாக தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தாா்.

---

9. நவ.15 – பழங்குடியினர் கௌரவ தினம்.

---

10. மனிதர்களுக்கு 108 இருப்பதுபோல் கால்நடைகளுக்கு '109 ஆம்புலன்ஸ்' : மபி அரசு புதுமை திட்டம்

நோய் பாதிப்புகள், விபத்தில் காயமடைவது போன்றவற்றால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிகிச்சை அளிக்க, '108 ஆம்புலன்ஸ்' சேவை நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டு உள்ளது. ஒன்றிய அரசின் நிதியில், மாநில அரசுகள் இந்த சேவையை அமல்படுத்தி வருகின்றன. இந்நிலையில், மனிதர்களே போலவே நோய்களால் அவதிப்படும் கால்நடைகளுக்கும் உடனடியாக சிகிச்சை அளிப்பதற்காக, '109 ஆம்புலன்ஸ்' சேவை திட்டத்தை அமல்படுத்த, மத்திய பிரதேச அரசு திட்டமிட்டுள்ளது.

இம்மாநில தலைநகர் போபாலில், 'இந்திய கால்நடை சங்கம்' சார்பாக பெண் கால்நடை மருத்துவர்களுக்கான, 'சக்தி-2021' என்ற தலைப்பில் மாநாடு நடைபெற்றது.

இதில், இம்மாநில முதல்வர் சிவ்ராஜ் சிங் சவுகான் பங்கேற்று பேசுகையில், '109 என்ற உதவி மைய எண் மூலமாக கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கான ஆம்புலன்ஸ் சேவை தொடங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. இதன் மூலம், கால்நடைகளை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டிய அவசியமில்லை. மாட்டு சாணம், கோமியத்தில் இருந்து உரங்கள், பூச்சிக்கொல்லி, மருந்துகள் உட்பட பல்வேறு பொருட்களை தயாரிக்கப்படுகிறது. எனவே, இந்த தயாரிப்புகளுக்காக மாட்டு சாணத்தை அரசே கொள்முதல் செய்யவும் திட்டமிட்டுள்ளது. மாட்டு சாணம், கோமியத்தால் நாட்டின் பொருளாதாரமே உயரும்," என்றார்.

---

1. தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?



அ) நவம்பர் 7 ☑

ஆ) நவம்பர் 8

இ) நவம்பர் 10

ஈ) நவம்பர் 12

✓ இந்தியாவில், தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவ.7 அன்று அனுசரிக்கப்படுகிறது. புற்றுநோயை முன்கூட்டி –யே கண்டறிந்து குணப்படுத்துவது குறித்து மக்களுக்குக் கற்பிப்பதே இச்சிறப்பு நாளின் முக்கிய குறிக்கோளாகும். நாட்டில் சுமார் 2.9 மில்லிய –ன் பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 1.1 மில்லியன் புதிய பாதிப்புகள் பதிவாகின்றன.

---

2. தேசிய சட்ட சேவைகள் நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?



அ) நவம்பர் 7

ஆ) நவம்பர் 9 ☑

இ) நவம்பர் 11


ஈ) நவம்பர் 13

✓ 'தேசிய சட்ட சேவைகள் நாளானது' ஆண்டுதோறும் நவ.9 அன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது சட்ட சேவைகள் ஆணையச்சட்டம் இயற்றப்பட்டதை நினைவுகூருவதோடு சட்டம் தொடர்பான விதிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இந்தியாவில், 1987ஆம் ஆண்டில் சட்ட சேவைகள் ஆணையச் சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1995 நவ.9'இல் நடைமுறைக்கு வந்தது.

---

3. உலக நிமோனியா நாள் அனுசரிக்கப்பட்ட தேதி எது?



அ) நவம்பர் 10

ஆ) நவம்பர் 12 ☑

இ) நவம்பர் 14

ஈ) நவம்பர் 16

✓ உலக நிமோனியா நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 12 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவத –ற்காக, 2009ஆம் ஆண்டில் 'ஸ்டாப் நிமோனியா' முன்முயற்சியால் இந்த நாள் நிறுவப்பட்டது. உலகெங்கிலும், குழந்தைகளில் இறப்புகளை ஏற்படுத்தும் முக்கிய நோயாக நிமோனியா கருதப்படுகிறது.

✓ 'Stop Pneumonia' முயற்சி மற்றும் 'Every Breath Counts' கூட்டணி ஆகியவை இணைந்து இந்நோயைக் கையாள்வது குறித்து மக்களை அணிதிரட்டுகின்றன.

---

4. உலக கருணை நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?



அ) நவம்பர் 13 ☑

ஆ) நவம்பர் 14

இ) நவம்பர் 15

ஈ) நவம்பர் 16

✓ உலக கருணை நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 13 அன்று கொண்டாடப்படுகிறது. இது சமூகத்தில் நற்செயல்களை முன்னிலைப்ப –டுத்துகிறது. இது நேர்மறையான ஆற்றல் மற்றும் நம்மை பிணைக்கும் கருணையின் பொதுவான இழையில் கவனம் செலுத்துகிறது. இனம், அரசியல், பாலினம் உள்ளிட்ட பிளவுகளை இணைக்கும் மனிதத்தின் அடிப்படைப் பகுதியாக கருணை உள்ளது. கடந்த 1998ஆம் ஆண்டில், பல்வேறு நாடுகளின் கருணை தன்னார்வ தொண்டு நிறுவனங்களான உலக கருணை இயக்கத்தால் இந்த நாள் அறிமுகப்படுத்தப்பட்டது.

---

5. உலக நீரழிவு நோய் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) நவம்பர் 10

ஆ) நவம்பர் 12

இ) நவம்பர் 14 ☑

ஈ) நவம்பர் 16

✓ நவ.14ஆம் தேதி உலக நீரழிவு நோய் நாளாக அனுசரிக்கப்படுகிறது. இது உலக சுகாதார அமைப்பு மற்றும் சர்வதேச நீரழிவு கூட்டமைப்பு ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்படுகிறது. உலக நீரழிவு நாளின் சின்னமானது ஒரு நீல வட்டத்தினால் குறிக்கப்படுகிறது. அது, வாழ்க்கை மற்றும் நலத்தைக் குறிக்கிறது. நவம்பர்.14, இன்சுலினைக் கண்டுபிடித்தவரான பிரடெரிக் பான்டிங்கின் பிறந்தநாளைக் குறிக்கிறது.

✓ "Access to Diabetes Care – If Not Now, When?" என்பது 2021–2023 வரையிலான உலக நீரிழிவு நாளிற்கான கருப்பொருளாகும்.

---

6. தேசிய குழந்தைகள் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?



அ) நவம்பர் 12

ஆ) நவம்பர் 13

இ) நவம்பர் 14 ☑

ஈ) நவம்பர் 15

✓ இந்தியாவில் குழந்தைகள் நாள் நவ.14 அன்று கொண்டாடப்படுகிறது. இந்த நாள் குழந்தைகளின் உரிமைகள், பராமரிப்பு மற்றும் கல்விபற்றிய விழிப்புணர்வை மக்களிடையே அதிகரிக்கிறது. குழந்தைகள் நாட்டின் எதிர்காலம். இந்த நாள், இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக உள்ளது.

---

7. உலக சகிப்புத்தன்மை நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?



அ) நவம்பர் 16 ☑

ஆ) நவம்பர் 14


இ) நவம்பர் 12

ஈ) நவம்பர் 10

✓ சமுதாயத்தில் சகிப்புத்தன்மையின் அவசியத்தைப்பற்றி மக்களுக்குக் கற்பிப்பதற்கும், சகிப்புத்தன்மையின் எதிர்மறையான விளைவுகளைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுவதற்குமாக ஐநா அவையின் உலக சகிப்புத்தன்மை நாள் ஆண்டுதோறும் நவ.16 அன்று கடைப்பிடிக்கப்படு –கிறது. இந்நாள் உலகளாவிய சகிப்புத்தன்மையின் முக்கியத்துவத்தை பற்றி மக்களுக்குக் கற்பிக்கிறது.

---

8. தேசிய கால்–கை வலிப்பு நோய் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) நவம்பர் 17 ☑

ஆ) நவம்பர் 16

இ) நவம்பர் 13

ஈ) நவம்பர் 14

✓ இந்தியாவில், கால்–கை வலிப்பு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத் –துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.17ஆம் தேதி தேசிய கால்–கை வலிப்புநோய் நாள் அனுசரிக்கப்படுகிறது. கால்–கை வலிப்பு என்பது மூளையில் ஏற்படும் ஒரு நாள்பட்ட கோளாறு ஆகும்.

✓ வலிப்புகள் நியூரான்களில் (மூளை செல்கள்) திடீர், அதிகப்படியான மின் வெளியேற்றங்களின் விளைவாக ஏற்படுகின்றன. இந்த நிலை எந்த வயதினரையும் பாதிக்கலாம்.

---

9. அண்மையில் பணிக்கு சேர்க்கப்பட்ட 'ICGS சர்தக்' என்ற புதிய உள்நாட்டுக்கப்பல், எந்த மாநிலத்தில் பணியமர்த்தப்படவுள்ளது?



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

இ) குஜராத் ☑

ஈ) மகாராஷ்டிரா

✓ கோவாவில் 'சர்தக்' என்ற பெயரிலான புதிய உள்நாட்டுக்கப்பல் அண்மையில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. 'ICGS சர்தக்', குஜராத்தில் உள்ள போர்பந்தரை மையமாகக் கொண்டு இந்தியாவின் மேற்குக் கடற்பரப்பில் பணியாற்றும். இது கடலோர காவல்படை பிராந்தியத்தின் (வடமேற்கு) தளபதியின் செயல்பாட்டு மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயக்கப்படும்.

✓ இந்திய கடலோர காவல்படைக்காக கோவா ஷிப்யார்ட் லிமிடெட்மூலம் உள்நாட்டில் கட்டப்பட்டு வரும் ஐந்து கடற்புற ரோந்து கப்பல்களின் வரிசையில் 'ICGS சர்தக்' நான்காவதாக உள்ளது.


---

10. எதிர்வரும் 2022'இல் ஐநா காலநிலை மாற்ற மாநாடு–COP27'ஐ நடத்தவுள்ள நாடு எது?

அ) இந்தியா

ஆ) சீனா

இ) அமெரிக்கா



ஈ) எகிப்து ☑

✓ ஐநா காலநிலை மாற்ற மாநாடு – COP27'ஐ எகிப்து 2022'இல் நடத்தும் மற்றும் COP28'ஐ ஐக்கிய அரபு அமீரகம் (UAE) 2023'இல் நடத்தும். COP என்பது காலநிலை மாற்றம் தொடர்பான ஐநா கட்டமைப்பின் முடிவெடுக்–கும் அமைப்பாகும். இந்தக் கட்டமைப்பில் 197 நாடுகள் உள்ளன. கால நிலை மாற்றம் குறித்த 2015 பாரிஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைய அந்நாடுகள் பாடுபடுகின்றன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி மேகாலயாவுக்கு மாற்றம்: குடியரசுத் தலைவர் உத்தரவு

கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாகப் பதவி வகித்த சஞ்ஜிப் பானர்ஜி, கடந்த ஜன.4–ம் தேதி சென்னை உயர் நீதிமன்றத்தின் 50–வது தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றார்.

இந்நிலையில், இவரை மேகாலயா உயர் நீதிமன்றத்துக்கு தலைமை நீதிபதியாக இடமாற்றம் செய்ய, உச்ச நீதிமன்ற தலைமைநீதிபதி அடங்கிய கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. இதற்கிடையே, 75 நீதிபதிகள் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான சஞ்ஜிப் பானர்ஜியை, 3 நீதிபதிகள் கொண்ட மேகாலயா உயர் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்ய எதிர்ப்பு தெரிவித்தும், இடமாற்றத்தை மறுபரிசீலனை செய்யவும் கோரி, சென்னை உயர் நீதிமன்றமூத்த வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்கள் சங்கத்தினர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கும், உச்ச நீதிமன்ற கொலீஜியத்துக்கும் கடிதம் அனுப்பியிருந்தனர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் நேற்று மவுன ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இந்நிலையில், உச்ச நீதிமன்ற கொலீஜியத்தின் பரிந்துரையை ஏற்று, தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜியை மேகாலயா உயர் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்து குடியரசுத் தலைவர் ராம்நாத்கோவிந்த், நேற்று உத்தரவிட்டார்.

---

2. நவ.15 பழங்குடியினர் பெருமை தினம் – பிரதமருக்கு ஆளுநர் நன்றி :

பகவான் பிர்சா முண்டாவின் பிறந்த தினமான நவ.15–ம் தேதியை பழங்குடியினர் பெருமை தினமாக அறிவித்தமைக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய விடுதலைப் போரில் அதிமான பங்களிப்பை பழங்குடியினர் வழங்கியுள்ளனர். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவி வாழும் அவர்கள், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கடும் துயரங்களை அனுபவித்தனர். பகவான் மிர்சா முண்டா, இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களில் முக்கியமானவர். துணிச்சலுடன் போராடிய தலைவரான அவர், ஆங்கிலேயேருடன் ஏற்பட்ட போராட்டத்தில் இளம் வயதிலேயே மரணத்தைத் தழுவினார். இந்நிலையில், பகவான் மிர்சா முண்டாவின் பிறந்த தினமான நவம்பர் 15–ம் தேதியை பழங்குடியினர் பெருமை தினமாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

பழங்குடியினரின் தியாகங்களைப் போற்றும் வகையில் இந்த அறிவிப்பை வெளியிட்டமைக்காக, பிரதமர் மோடிக்கு தமிழகம் சார்பில் ஆளுநர் ஆர்.என்.ரவி நன்றி தெரிவித்துள்ளார். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. வெளிநாடுகளில் படிக்க விரும்பும் இந்திய மாணவர்களின் முதல் தேர்வு அமெரிக்கா

சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

இந்த ஆண்டு சர்வதேச கல்வி நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையின்படி, இந்தியா உட்பட 200–க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 9 லட்சத்து 14 ஆயிரம் மாணவர்கள் அமெரிக்காவில் உயர் கல்வி பயில்கின்றனர். இதில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை தோராயமாக 20 சதவீதம். 2020–2021–ம் கல்வி ஆண்டில் மட்டும் 1 லட்சத்து 67,582 இந்திய மாணவர்கள் அமெரிக்க கல்வி நிறுவனங்களில் படிக்கிறார்கள். வெளிநாடுகளில் மேற்படிப்பு படிக்க விரும்பும் இந்திய மாணவர்களின் முதல் தேர்வாக அமெரிக்கா இருக்கிறது.

கடந்த ஆண்டு கரோனா பெருந்தொற்று சூழலில் வெளிநாட்டு மாணவர்களின் கல்வி நலனை பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்க அரசும் அமெரிக்க உயர்கல்வி நிறுவனங்களும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன. எந்த வகையிலும் படிப்பு பாதிக்காமல் இருக்க இணையவழி உள்ளிட்ட மாற்று ஏற்பாடுகள் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டன.

அமெரிக்காவில் உயர்கல்வி பயில விரும்பும் வெளிநாட்டு மாணவர்கள் அதுதொடர்பான அனைத்து தகவல்களையும் உதவிகளையும் பெறுவதற்கு Education USA India என்ற மொபைல் செயலியை இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இந்த செயலி மூலம் அமெரிக்க கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கை நடைமுறை குறித்த அனைத்து தகவல்களையும் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

4. பணிக்காலத்தின்போது உயிரிழக்கும் பத்திரிகையாளர்களுக்கான குடும்ப நல நிதியை ரூ.5 லட்சமாக உயர்த்தி அரசாணை வெளியீடு: பணிபுரிந்த ஆண்டுகள் அடிப்படையில் நிதி வழங்கப்படும்

பணிக் காலத்தின்போது உயிரிழக்கும் பத்திரிகையாளர் குடும்ப நலநிதியை ரூ.5 லட்சமாக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட அரசாணை:

தமிழகத்தில் உள்ள பத்திரிகைதுறையில் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக் கலைஞர்கள், பிழை திருத்துபவர்கள் ஆகியோர் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்துக்கு முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து கடந்த 2018–ம் ஆண்டுமுதல் குடும்ப நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர் 20 ஆண்டுகள் பணியாற்றி வரும் நிலையில் இறந்தால் ரூ.3 லட்சம், 15 ஆண்டுகள் எனில்ரூ.2.25 லட்சம், 10 ஆண்டுகளுக்கு ரூ.1.50 லட்சம், 5 ஆண்டுகளுக்கு ரூ.75 ஆயிரம் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், சட்டப்பேரவையில் 2021–22 ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன்,"பத்திரிகை துறையில் ஆசிரியர்,உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக் கலைஞர், பிழை திருத்துபவர் ஆகியோர் பணிக் காலத்தில் இயற்கை எய்தினால், அவர்களது குடும்பத்துக்கு முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து தற்போது ரூ.3 லட்சம் வரை வழங்கப்படும் குடும்ப நிதியுதவி ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும்' ' என்று அறிவித்தார்.

அரசின் கவனமான பரிசீலனைக்குப் பிறகு, பத்திரிகையாளர் 20 ஆண்டுகள் பணியாற்றி இறந்தால் ரூ.5 லட்சம், 15 ஆண்டுகள் எனில் ரூ.3.75 லட்சம், 10 ஆண்டுகளுக்கு ரூ.2.50 லட்சம், 5 ஆண்டுகளுக்கு ரூ.1.25 லட்சம்என, நடைமுறையில் உள்ள விதிகளின்படி குடும்ப நிதியுதவி உயர்த்தி வழங்கப்படும்.

இந்த உதவியை பெற, உரிய சான்றிதழ்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் வாயிலாக மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை பெற்று, செய்தித் துறை இயக்குநருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஓய்வூதிய பரிசீலனைக் குழு இந்தவிண்ணப்பங்களை பரிசீலித்து, பரிந்துரை அடிப்படையில் உத்தரவு வெளியிடப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

5. இந்தியாவிலேயே முதன்முறையாக தஞ்சாவூரில் ரூ.1.1 கோடியில் உணவு அருங்காட்சியகம்: மத்திய அமைச்சர் பியூஷ்கோயல் காணொலி மூலம் திறந்து வைத்தார்

இந்தியாவிலேயே முதன்முறையாக இந்திய உணவுக் கழகம்சார்பில் தஞ்சாவூரில் ரூ.1.1 கோடி மதிப்பீட்டில் உணவு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இதை மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் காணொலி மூலம் நேற்று திறந்து வைத்தார்.

இந்திய உணவுக் கழகம் தஞ்சாவூரில் 1965–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தஞ்சாவூர் நிர்மலா நகரில் உள்ள இந்நிறுவனத்தின் மண்டல அலுவலகத்தில் உணவு அருங்காட்சியகம் அமைக்க திட்டமிடப்பட்டது. அதன்படி, 2,500 சதுரஅடி பரப்பளவில் உணவு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.

பெங்களூருவில் உள்ளவிஸ்வேஸ்வரய்யா தொழில்நுட்பஅருங்காட்சியகத்தின் உதவியுடன், 13 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் உணவுக்காக எப்படி வேட்டையாட தொடங்கினான் என்பதில் தொடங்கி, உழவு கருவிகள், விவசாயம், உலகில் உள்ள தானிய களஞ்சியங்கள், உலகளவில் உணவு உற்பத்தியின் சவால்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள், இந்தியாவில் உள்ள உணவு முறைகள், பொதுவிநியோகத் திட்டம், விவசாயத்தில் உழவுப்பணி, நாற்றங்கால், நடவு, களை எடுப்பு, அறுவடை, கொள்முதல், அரைவை, மக்களுக்கு அரிசிவிநியோகம் வரை உள்ள பணிகள் மெழுகு பொம்மைகளாகதத்ரூபமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அருங்காட்சியகத்தை நேற்று பொதுமக்கள் பார்வைக்காக மத்திய உணவு மற்றும் பொதுவிநியோகத் துறை அமைச்சர் பியூஸ்கோயல் மும்பையில் இருந்தவாறு காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

பின்னர் அவர் பேசும்போது, "இந்தியாவின் 75–வது ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக, இந்தியாவிலேயே முதன்முறையாக தஞ்சாவூரில் உணவு அருங்காட்சியகம் அமைக்கஏற்பாடுகளை செய்த இந்திய உணவுக் கழகத்தினருக்கு பாராட்டுகள். இறக்குமதியாளர் முதல் ஏற்றுமதியாளர் வரை உணவுப் பாதுகாப்பின் மூலம் தேசத்தில் விவசாயப் புரட்சியை இந்திய உணவு கழகம் ஏற்படுத்தி வருகிறது. சமூகத்தில் ஏழைகள் மற்றும் சலுகைகள் கிடைக்காத பிற பிரிவினருக்கு இந்திய உணவுக் கழகம் தொடர்ந்து சேவை செய்ய வேண்டும்" என தெரிவித்தார்.

இதையடுத்து, தஞ்சாவூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தென்மண்டல செயல் இயக்குநர் டல்ஜித்சிங், முதன்மைப் பொது மேலாளர் சஞ்சீவ்குமார் கவுதம், தமிழக பொது மேலாளர் பி.என்.சிங், தஞ்சாவூர் மண்டல மேலாளர் தேவேந்திர சிங் மார்டோலியா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த அருங்காட்சியகத்தை அலுவலக வேலை நாட்களில் காலை 11 மணி முதல் மாலை 5மணி வரை பொதுமக்கள் இலவசமாக பார்வையிடலாம். இந்த அருங்காட்சியகம் ப்ரொஜெக்ஷன் மேப்பிங், டச் ஸ்கிரீன் கியோஸ்க், ப்ராக்ஸிமிட்டி சென்சார்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களை கொண்டுள்ளது. மேலும், இந்திய உணவுக் கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

---

6. உ.பி.யில் மாடுகளுக்காக ஆம்புலன்ஸ், அழைப்பு மையங்கள்: மாநில அமைச்சர் அறிவிப்பு

உத்தர பிரதேசத்தில் மாடுகளுக் காக ஆம்புலன்ஸ் சேவை மற்றும்உதவிகளுக்கான அழைப்பு மையங்களின் சேவை துவக்கப்பட உள்ளது.

பாஜக ஆளும் உ.பி.யின் முதல்வர் ஆதித்யநாத் ஆட்சியில் மாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இதற்கு இந்துக்கள் இடையே பசுமாடுகள் புனிதமாகக் கருதப்படுவது காரணம். இதனால், மனிதர்களுக்கானதை போல், மாடுகளுக்கும் சிகிச்சை வசதிகள் அளிக்க ஆம்புலன்ஸ் மற்றும் அழைப்பு மையங்கள் சேவை உ.பி.யில் டிசம்பர் முதல் துவக்கப்படுகிறது.

இது குறித்து மதுராவில் செய்தியாளர்களிடம் தனது அறிவிப்பை வெளியிட்ட அமைச்சர் நாராயண் சவுத்ரி, "24 மணி நேரங்களுக்கான இந்த ஆம்புலன்ஸ் சேவைக்கானஎண் 115 மற்றும் உதவிகளுக்கான அழைப்பு மையங்கள் எண் 112ஆகும். மாநில அளவில் ஒருங்கிணைந்த அழைப்பு மையம் தலைநகர் லக்னோவில் அமைக்கப்படும். ஒவ்வொரு ஆம்புலன்ஸிலும் ஒரு கால்நடை மருத்துவரும், இரண்டு உதவியாளர்களும் இருப்பார்கள். அழைப்பு வந்த சுமார் 20 நிமிடங்களுக்குள் சேவை கிடைக்கும்' ' எனத் தெரிவித்தார்.

இதுபோன்ற கால்நடைகளுக்கான சேவை வேறு எந்த மாநிலங்களிலும் இல்லை எனக் கருதப்படுகிறது. இத்துடன் இலவசமாக உயரிய வகைப் பசு மாடுகளுக்கான இன உற்பத்தி நிலையமும், அனைத்து பசுக்களையும் அதிகபால் தருவதாக மாற்றும் தொழில்நுட்பமும் துவக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இவை துவக்கக் கட்டமாகசோதனை அடிப்படையில் மதுரா உள்ளிட்ட உத்தர பிரதேச மாநிலத்தின் எட்டு மாவட் டங்களில் துவக்கப்படுவதாகவும் அமைச்சர் நாராயண் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

---

7. சேதி தெரியுமா?

நவ.7: இந்திய கடற்படை தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் நவம்பர் 30–ஆம் தேதியுடன் ஓய்வு பெறுவதையொட்டி, புதிய தளபதியாக ஆர்.ஹரிகுமார் நியமிக்கப்பட்டார்.

நவ.8: விண்வெளியில் நடந்த முதல் சீனப் பெண் என்ற வரலாற்றை வாங் யாபிங் (41) படைத்தார். விண்வெளி நிலைய கட்டமைப்புப் பணிக்காக விண்வெளியில் நடந்து இச்சாதனையைப் புரிந்தார்.

நவ.8: யுனெஸ்கோ அமைப்பின் படைப்பாற்றல் கொண்ட நகரங்களின் பட்டியலில் காஷ்மீரில் உள்ள ஸ்ரீ நகர் இணைந்தது. உலகம் முழுவதும் 49 நகரங்கள் இப்பட்டியலில் உள்ளன.

நவ.9: குளிர்பதன பெட்டியில் வைக்க அவசியமில்லாத புதிய கரோனா தடுப்பூசியை அமெரிக்காவின் பாஸ்டன் நகர் குழந்தைகள் மருத்துவமனை ஆராய்ச்சி குழுவினர் உருவாக்கியுள்ளனர். அறை வெப்பநிலையில் 7 நாட்கள் வரை வைத்து இதைப் பயன்படுத்தலாம்.

நவ.9: சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜியை மேகாலயாவுக்கு இடமாற்றம் செய்ய உச்ச நீதிமன்ற கொலிஜியம் பரிந்துரை செய்தது.

நவ.9: ஈஃபிள் கோபுரம் அளவிலான '4660 நெரியஸ்' என்று பெயரிடப்பட்ட குறுங்கோள் டிசம்பர் மாதத்தில் புவியை நோக்கி நகரும் என்று அமெரிக்காவின் நாசா அறிவித்தது.

நவ.10: இந்திய டி20 கிரிக்கெட் அணியின் தலைவராக ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டார். டி20 கேப்டன் பதவியிலிருந்து விராட் கோலி விலகியதை அடுத்து இப்பொறுப்புக்கு அவர் நியமிக்கப்பட்டார்.

நவ.10,11: ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற டி20 உலகக் கோப்பை அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி நியூசிலாந்தும், பாகிஸ்தானை வீழ்த்தி ஆஸ்திரேலியாவும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. ஆஸ்திரேலியா கோப்பையை வென்றது.

நவ.11: வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னை அருகே கரையைக் கடந்தது. இதன் காரணமாக பெய்த மழையால் சென்னை மாநகரம் வெள்ளக்காடானது.

நவ. 12: சர்வதேச துப்பாக்கிச் சுடும் விளையாட்டு கூட்டமைப்பு சார்பில் போலந்தில் நடைபெற்ற பிரசிடெண்ட்ஸ் கோப்பைக்கான போட்டியில் இந்திய அணி 2 தங்கம், 2 வெள்ளி, 1 வெண்கலம் என 5 பதக்கங்களை வென்றது.

---

1. "மாநில பொது நிர்வாக நிறுவனங்களை வலுப்படுத்துதல்" என்ற தலைப்பில் 2 நாள் மண்டல மாநாடு நடைபெற்ற இடம் எது?

அ) மும்பை

ஆ) தில்லி

இ) அகமதாபாத்

ஈ) லக்னோ ☑



✓ இந்திய அரசின் நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறை தீர்ப்பு துறையும், உத்தர பிரதேச மாநில அரசும் இணைந்து லக்னோவில் "மாநில பொது நிர்வாக நிறுவனங்களை வலுப்படுத்துதல்" என்ற தலைப்பில் இரண்டு நாள் மண்டல மாநாட்டை ஏற்பாடு செய்தது. நிர்வாக மற்றும் நிர்வாகப் பயிற்சியில் சிறந்த நடைமுறைகள் மற்றும் தேவைகளைப் பகிர்ந்து கொள்ள பல்வேறு பயிற்சி நிறுவனங்களை ஒரே தளத்தில் கொண்டு வருவது இம்மாநாட்டின் நோக்கமாகும்.

---

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற "வரலாற்றுத் தீர்மானம்" என்பதுடன் தொடர்புடைய நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) ஜப்பான்

இ) சீனா ☑

ஈ) நியூசிலாந்து



✓ சீனப் பொதுவுடைமை கட்சி பொதுவாக "வரலாற்றுத் தீர்மானம்" என்று அழைக்கப்படும் ஒரு முக்கிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. இது, ஆளும் அதிபர் ஜி ஜின்பிங்கை அடுத்த ஆண்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மூன்றாவது முறையாக பதவியில் அமர்த்தவும் மற்றும் அவரது வாழ்நாள் முழுவதும் சீனாவை ஆட்சி செய்யவும் உதவும்.

✓ இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம், அவர் மாவோ சேதுங் மற்றும் டெங் சியோபிங் ஆகியோருக்கு இணையாக வைக்கப்படுவார். மேலும், ஒரு வரலாற்றுத் தீர்மானத்தைக் கொண்ட மூன்றாவது சீனத் தலைவராகவும் ஆனார்.

---

3. 'டிஜிட்டல் 2021: அக்டோபர் குளோபல் ஸ்னாப்ஷாட்'படி, கைபேசி பயன்படுத்துவோரின் சதவீதம் எவ்வளவு?

அ) 45

ஆ) 65 ☑

இ) 75

ஈ) 80



✓ 'We Are Social' என்ற ஆராய்ச்சி நிறுவனம் 'டிஜிட்டல் 2021: அக்டோபர் குளோபல் ஸ்னாப்ஷாட்' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, உலக மக்கள்தொகையில் 65%'க்கும் அதிகமானோர் கைபேசியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

✓ உலகளாவிய கைபேசி பயனர்கள் எண்ணிக்கை அக்டோபரில் 5.29 பில்லியனை எட்டியுள்ளது. 2022ஆம் ஆண்டின் முதல் பாதியில் உலக மக்கள்தொகையில் 60% பேர் சமூக ஊடக பயனர்களாக வாய்ப்புள்ளது என இவ்வறிக்கை கூறுகிறது.

---

4. நியூயார்க்கில் நடைபெற்ற தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான உச்சிமாநாட்டில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தியவர் யார்?

அ) நரேந்திர மோடி

ஆ) அனுராக் தாக்கூர் ☑

இ) பியூஷ் கோயல்

ஈ) நிர்மலா சீதாராமன்



✓ ஐநா பொதுச்சபை கூட்டத்தையொட்டி நியூயார்க்கில் உள்ள பிரான்ஸ் தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான உச்சிமாநாட்டில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் அனுராக் தாக்கூர் உரையாற்றினார். 'தகவல் மற்றும் ஜனநாயகத்திற்கான சர்வதேச கூட்டணி' நியூயார்க்கில் கடந்த 2019ஆம் ஆண்டு செப்.26 அன்று தொடங்கப்பட்டது. இது கருத்து மற்றும் கருத்து சுதந்திரம் மற்றும் இலவச, பன்மை மற்றும் நம்பகமான தகவல்களுக்கான அணுகலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கூட்டாண்மையில் இன்றுவரை 43 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

---

5. சர்வதேச அணுசக்தி முகமையின் வெளியக தணிக்கையாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் யார்?

அ) வினோத் ராய்

ஆ) சஷி காந்த் சர்மா

இ) ராஜீவ் மெஹ்ரிஷி

ஈ) ஜி சி முர்மு ☑



✓ இந்தியாவின் கன்ட்ரோலர் மற்றும் ஆடிட்டர் ஜெனரலான ஜி சி முர்மு பன்னாட்டு அணுசக்தி முகமையின் (IAEA) வெளியக தணிக்கையாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். IAEA என்பது ஒரு மதிப்புமிக்க பன்னாட்டு நிறுவனமாகும். இது அமைதியான அணுவாற்றல் பயன்பாட்டை ஊக்கு–விக்கிறது. மத்திய வெளியுறவு அமைச்சகத்தின்படி, அவரது வேட்புமனு IAEA பொது மாநாட்டின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றது. அவரது பதவிக்காலம் 2022 முதல் 2027 வரை ஆறு ஆண்டுகள் இருக்கும்.

6.சமீப செய்திகளில் இடம்பெற்ற டிஜிசக்ஷம் திட்டத்தைத் தொடங்கிய மத்திய அமைச்சகம் எது?

அ) MSME அமைச்சகம்

ஆ) நிதி அமைச்சகம்

இ) தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சகம் ☑

ஈ) ஜவுளி அமைச்சகம்



✓ மத்திய தொழிலாளர் & வேலைவாய்ப்பு அமைச்சரான பூபேந்திர யாதவ், மைக்ரோசாப்ட் இந்தியாவுடன் இணைந்து 'டிஜிசக்ஷம்' திட்டத்தை அறிமுகப்படுத்தினார். 'டிஜிசக்ஷம்' திட்டத்தின்மூலம், பதிவுசெய்யப்பட்ட 10 மில்லியன் வேலைதேடுவோர், தேசிய தொழில் சேவை வலைதளத்–தில் கணினி மற்றும் கணினி அறிவியல் பயிற்சி உள்ளிட்ட பயிற்சியை பெறமுடியும். நிரலாக்க மொழிகள், தரவு பகுப்பாய்வு, மென்பொருள் வளர்–ச்சிபோன்ற பாடங்களில் பயிற்சி அளிப்பதன்மூலம் முதலாம் ஆண்டில் 3,00,000 வேலை தேடுவோரை இது பயிற்றுவிக்கும்.

---

7. உலக சகிப்புத்தன்மை நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ) நவம்பர் 16 ☑

ஆ) நவம்பர் 14

இ) நவம்பர் 12

ஈ) நவம்பர் 10



✓ சமுதாயத்தில் சகிப்புத்தன்மையின் அவசியத்தைப்பற்றி மக்களுக்குக் கற்பிப்பதற்கும், சகிப்புத்தன்மையின் எதிர்மறையான விளைவுகளைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுவதற்குமாக ஐநா அவையின் உலக சகிப்புத்தன்மை நாள் ஆண்டுதோறும் நவ.16 அன்று கடைப்பிடிக்கப்படு–கிறது. இந்நாள் உலகளாவிய சகிப்புத்தன்மையின் முக்கியத்துவத்தை பற்றி மக்களுக்குக் கற்பிக்கிறது.

---

8. "ஊட்டச்சத்து ஸ்மார்ட் கிராமம்" திட்டத்தை தொடங்கவுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) வேளாண்மை & விவசாயிகள் நல அமைச்சகம் ☑

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ) உணவு பதப்படுத்தும் தொழில் அமைச்சகம்

✓ விவசாயம் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம், போஷன் அபியானை வலுப்படுத்த, "ஊட்டச்சத்து ஸ்மார்ட் கிராமம்" என்ற திட்டத்தை தொடங்க உள்ளது. இந்த திட்டம் ஆசாதி கா அம்ரித் மகோத்சவின் ஒருபகுதியாகும். இந்த முயற்சி இந்தியா முழுவதும் உள்ள 75 கிராமங்களைச் சென்றடைவதை நோக்கமாகக் கொண்டது.

✓ கிராமப்புறங்களில் ஊட்டச்சத்து விழிப்புணர்வு, கல்வி மற்றும் நடத்தை மாற்றத்தை ஊக்குவித்தல், ஊட்டச்சத்து குறைபாட்டை சமாளிக்க உள்ளூர் செய்முறையைப் பயன்படுத்துதல் மற்றும் ஊட்டச்சத்து உணர் திறன்கொண்ட விவசாயத்தை செயல்படுத்துதல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

9. அண்மையில் எந்த நாடு, இந்தியாவுடன் நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தை உருவாக்கியது?

அ) இலங்கை ☑



ஆ) நேபாளம்

இ) பங்களாதேஷ்

ஈ) ஜப்பான்

- ✓ இந்தியாவுடனான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்காக இலங்கை நாடாளுமன்றத்தின் மூத்த உறுப்பினர்களைக்கொண்ட இந்தியா–இலங்கை நாடாளுமன்ற நட்புறவுக் குழுவை இலங்கை உருவாக்கியது. சீனாவின் உரச் சரக்குகளை நிராகரித்ததையடுத்து, இந்தியாவிடமிருந்து உரத்தை வாங்குவதற்கு இலங்கை முன்னர் தீர்மானித்திருந்தது.
- ✓ இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்திற்கான இந்திய – இலங்கை நாடாளுமன்ற நட்புறவு சங்கம் அண்மையில் நிறுவப்பட்டது.

---

10. பின்வரும் எக்கண்டத்தில் அமைந்துள்ள சகேல் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து ஐநா அமைதி காக்கும் தலைவர் எச்சரித்துள்ளார்?

அ) ஆப்பிரிக்கா ☑



ஆ) ஆசியா

இ) ஐரோப்பா

ஈ) ஆஸ்திரேலியா

- ✓ ஐநா அமைதிகாக்கும் தலைவரானவர் ஆப்பிரிக்க கண்டத்தின் சகேல் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து எச்சரித்துள்ளார்.
- ✓ இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டி உள்ளார். மேலும், குழந்தைகளுக்கு பள்ளி செல்ல முடியாத நிலை, மக்களுக்கு ஆரம்ப சுகாதார வசதி இல்லாதது குறித்தும் எச்சரித்தார். ஜி5 சகேல் படை தொடர்பான ஐநா பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் அவர் பேசினார். சாட், மாலி, புர்கினா பாசோ, நைஜர் மற்றும் மொரிடானியா ஆகிய ஐந்து ஆப்பிரிக்க நாடுகளால் 2017'இல் சகேல் பிராந்தியத்தில் பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடுவதற்காக இது அமைக்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உயர்தர ஸ்டீல் அலாய் கண்டுபிடிப்பு: ஐஐடி மெட்ராஸ்

வாகனங்களின் எடையை குறைக்க ஆட்டோமொபைல் தொழிற்சாலைகளில் பயன்படுத்தக் கூடிய உயர்தர ஸ்டீல் அலாயை, ஐஐடி மெட்ராஸ் கண்டுபிடித்துள்ளது.

வாகனங்களின் எரிபொருள் நுகர்வு, அதன் எடையை பொறுத்து அமைகிறது என்பதால், விஞ்ஞானிகள் இலகு ரக உலோகத்தை கண்டுபிடிக்கத் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர். பொதுவாக கார் உள்ளிட்ட வாகனங்களை ஸ்டீலில் தயாரித்து வருகின்றனர். விபத்துச் ம்பவங்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்தாமல் இருப்பதற்காக, ஸ்டீலில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக எரிபொருளும் அதிகமாகத் தேவைப்படுகிறது.

பெட்ரோல், டீசல் விலைகள் இப்போது அதிகரித்து வரும் நிலையில், எடைகுறைவான இலகு ரக உலோகம் கண்டுபிடிக்கப்பட்டால், மக்களுக்கு அது பணத்தை மிச்சப்படுத்த உதவும். இதையடுத்து கடந்த சில வருடங்களாக அதற்கான முயற்சிகளில் விஞ்ஞானிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்,

இந்நிலையில், மெட்ராஸ் ஐஐடி–யின் உலோகவியல் துறை பேராசிரியர் சுப்பிரமணிய சர்மா வட்லமணி மற்றும் அவர் குழுவினர் ஆட்டோ மொபைல் தொழிற்சாலைகளில் பயன்படுத்தக் கூடிய உயர்தர ஸ்டீல் அலாயை கண்டுபிடித்துள்ளனர். மாங்கனீஸ், கார்பன், அலுமினியம், சிலிகான், நிக்கல், நியோபியம் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் எஃகுடன் கலந்து இந்த ஸ்டீல் அலாயை கண்டுபிடித்துள்ளனர். தங்கள் ஆராய்ச்சி முடிவுகளின் படி, இதை வணிகப் பயன்பாட்டுக்கு கொண்டு வர இந்தக் குழு முடிவு செய்துள்ளது. இதற்காக எஃகு மற்றும் வாகனத் தொழில்துறையினருடன் பேசி வருவதாகக் கூறப்படுகிறது.

---

2. நவ.16 – தேசிய பத்திரிகையாளர் தினம்

---

3. தமிழகத்தில் மாவட்டம்தோறும் – சூரியசக்தி மின்சார பூங்கா: இடம் தேர்வுப் பணியில் மின்வாரியம் தீவிரம்

மாவட்டம்தோறும் சூரிய மின்சக்திபூங்கா அமைக்கப்படும். முதல்கட்டமாக 4 ஆயிரம் மெகாவாட் திறனுள்ள சூரியசக்தி மின்நிலையம் அமைக்கப்படும் என சட்டப் பேரவையில் மின்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, மாவட்டம்தோறும் சூரியசக்தி மின்சார பூங்காஅமைப்பதற்கான இடங்களை தேர்வு செய்யும் பணியை மின்வாரியம் மேற்கொண்டுள்ளது.

ஒரு மெகாவாட் சூரியசக்தி மின்நிலையம் அமைக்க குறைந்தபட்சம் 5 ஏக்கர் நிலம் தேவை. மாநகராட்சி, நகராட்சி இல்லாத மாவட்டங்களில் 75 முதல் 100 மெகாவாட் திறனில் பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, துணைமின் நிலையங்களுக்கு அருகில் உள்ள அரசு நிலங்களை கையப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான பணி விரைவில் தொடங்கும்.

முதலாவது பூங்கா திருவாரூர் மாவட்டத்தில் அமைக்கப்பட உள்ளது என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

3. இந்திய சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த இரண்டரை வயது தமிழக சிறுவன்

சென்னை எண்ணூரைச் சேர்ந்த திபின் – திவ்யா தம்பதியரின் இரண்டரை வயது மகன் ரித்தின்கலிகோட், 'இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' புத்தகத்தில் இடம் பிடித்துள்ளான்.

பெங்களூருவில் வசித்து வரும் இந்த தம்பதியரின் மகன் ரித்தின் கலிகோட், சிறுவர்களுக்கான கதைபுத்தகங்கள், கார்ட்டூன் திரைப்படங்களில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்கள், அவை செய்யும் தொழில்கள் ஆகியவற்றை மனப்பாடமாக கூறியிருக்கிறான்.

இதையடுத்து, பல்வேறு நாடுகளின் தேசியக் கொடிகள், கிரகங்கள், காட்டு விலங்குகள், வடிவங்கள், நிறங்கள் உள்ளிட்டவற்றை பெற்றோர் சொல்லிக் கொடுத்தனர்.

இந்த பயிற்சியின் காரணமாக தற்போது சிறுவன் ரித்தின், ஒன்று முதல் முப்பது வரையிலான எண்கள், 10 வகை நிறங்கள், 20 நாடுகளின் தேசியக் கொடிகள், 9 கிரகங்கள், 40 வீட்டு உபயோகப் பொருட்கள், 18 உடல் பாகங்கள், 20 வனவிலங்குகள், 10 வீட்டு விலங்குகள், 18 வடிவங்கள், 20 மலர்கள், 24 காய்கறிகள், 18 தொழில்கள், 20வாகனங்கள் ஆகியவற்றை துல்லியமாக அடையாளம் கண்டு சொல்கிறான். அதுமட்டுமின்றி, 4 குழந்தைப் பாடல்கள், ஆங்கில உயிர் எழுத்துகள் ஆகியவற்றையும் மனப்பாடமாக கூறுகிறான்.

இந்நிலையில், இதுகுறித்து அறிந்த 'இந்தியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' நிர்வாகிகள், ரித்தினின்இந்த திறமைகளை ஆய்வு செய்தனர். அப்போது, இந்தியாவிலேயே இரண்டரை வயதில் இவ்வளவு விஷயங்களை இதுவரை யாரும் கூறியதில்லை என்பதை அவர்கள் உறுதி செய்தனர். இதன்தொடர்ச்சியாக, இந்திய சாதனைப் புத்தகத்தில் சிறுவன் ரித்தினின் பெயர் இடம்பெற்றுள்ளது.

---

4. டெல்லி வர்த்தக பொருட்காட்சியில் தமிழ்நாடு நாள் விழா: தமிழக செய்தித் துறை அமைச்சர் சாமிநாதன் தொடங்கி வைத்தார்

டெல்லியில் நடைபெறும் இந்திய பன்னாட்டு வர்த்தக பொருட்காட்சியில் தமிழ்நாடு நாள் விழாவை செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்தார்.

டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி நவ. 14முதல் 27–ம் தேதி வரை 14 நாட்கள் நடைபெறுகிறது. இந்த ஆண்டு 'சுயசார்புஇந்தியா' என்ற கருப்பொருளில் நடைபெறும் 40–வது இந்தியப் பன்னாட்டுவர்த்தகப் பொருட்காட்சியை மத்தியஅமைச்சர் பியூஷ்கோயல் கடந்த 14–ம்தேதி தொடங்கி வைத்தார்.

இதில், தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள அரங்கில், செய்தி, சுற்றுலா, வேளாண்மை, தோட்டக்கலை, தொழில்,மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தொழில்வளர்ச்சி நிறுவனம், கைத்தறி துறை, தொழில் முன்னேற்ற நிறுவனம், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் உள்ளிட்ட அரசு, அரசு சார்பு துறைகள் பங்கேற்றுதங்கள் வளர்ச்சித் திட்டங்களை

காட்சிப்படுத்தியுள்ளன. செய்தித் துறை சார்பில்அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் குறித்த புகைப்படங்கள், உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. கீழடி அகழ்வாராய்ச்சி குறித்த மாதிரி வடிவம் மக்களை மிகவும் கவர்ந்தது.

இந்த வர்த்தகப் பொருட்காட்சியின் தமிழ்நாடு அரங்கில் விடுதலைப் போரில்ஈடுபட்ட தமிழக பெண் தியாகிகளின்புகைப்படங்கள், முக்கிய தியாக சீலர்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கண்காட்சியை பார்வையிட்ட அமைச்சர் சாமிநாதன், "தமிழக முதல்வரால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டில் புதிய தொழில் தொடங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படுகிறது. இதன் மூலம் தமிழகம் பல்வேறு வகையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது" என்றார்.

இப்பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும் தங்கள் மாநில நாள் விழாவை கொண்டாடி வருகின்றன. அந்த வகையில், தமிழ்நாடு நாள் விழா நேற்று பிரகதி மைதானத்தில் உள்ள லால்சவுக் அரங்கத்தில் நடைபெற்றது. இவ்விழாவை அமைச்சர் சாமிநாதன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், டெல்லி சிறப்புபிரதிநிதி ஏகேஎஸ் விஜயன், செய்தித் துறை செயலர் மகேசன் காசிராஜன், உள்ளுறை ஆணையர் ஆசிஷ் சட்டர்ஜி, செய்தித் துறை இயக்குனர் வீ.ப.ஜெயசீலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

5. மறைந்த கன்னட நடிகர் புனித் ராஜ்குமாருக்கு 'கர்நாடக ரத்னா' விருது அறிவிப்பு

கன்னட திரையுலகின் பவர் ஸ்டார் என்று ரசிகர்களால் அழைக்கப்பட்டவர் புனித் ராஜ்குமார். 46 வயதான இவர் கடந்த மாதம் (அக்டோபர்) 29-ந்தேதி மாரடைப்பால் உயிரிழந்தார். அவரது மறைவு குடும்பத்தினரை மட்டுமின்றி ரசிகர்கள் மற்றும் கன்னட மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

புனித் ராஜ்குமார் ஆதரவற்றோருக்கும், ஏழை-எளியோருக்கும் ஏராளமான உதவிகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வந்துள்ளார். இதனால் அவர் மறைந்தாலும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளார். அவரது நினைவிடம் அமைந்துள்ள கன்டீரவா ஸ்டூடியோவுக்கு கடந்த 16 நாட்களாக ரசிகர்கள் கூட்டம், கூட்டமாக வந்து அஞ்சலி செலுத்து வருகிறார்கள்.

இந்த நிலையில் கன்னட திரைப்பட வர்த்தக சபை சார்பில் மறைந்த நடிகர் புனித் ராஜ்குமாருக்கு புகழஞ்சலி கூட்டம் பெங்களூரு அரண்மனை மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் முதல்-மந்திரி பசவராஜ் பொம்மை கலந்துகொண்டு புனித் ராஜ்குமாரின் உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் நிகழ்ச்சியில் பேசிய முதல்-மந்திரி பசவராஜ் பொம்மை புனித் ராஜ்குமாருக்கு கர்நாடக ரத்னா விருது வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

---

6. 2025-இல் பாகிஸ்தானில் சாம்பியன்ஸ் கோப்பை போட்டி

2025-ஆம் ஆண்டு சாம்பியன்ஸ் கோப்பை போட்டியை நடத்தும் வாய்ப்பை பாகிஸ்தானுக்கு வழங்கியுள்ளது ஐசிசி. இதையடுத்து சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்நாட்டில் ஐசிசியின் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

ஐசிசி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பின்படி, ஐசிசி போட்டிகளுக்கான அடுத்த சைக்கிளில் இந்தியாவுக்கு 3 போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2026-இல் டி20 உலகக் கோப்பை போட்டியையும், 2029-இல் சாம்பியன்ஸ் கோப்பை போட்டியையும் நடத்த இருக்கும் இந்தியா, 2031-இல் 50 ஓவர் உலகக் கோப்பை போட்டியை இலங்கை மற்றும் வங்கதேசத்துடன் இணைந்து நடத்துகிறது.

2024-ஆம் ஆண்டு டி20 உலகக் கோப்பை போட்டியை அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் இணைந்து நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வட அமெரிக்காவில் நடத்தப்பட இருக்கும் முதல் சர்வதேச போட்டி இதுவாகும்.

பாகிஸ்தான் கடைசியாக 1996-இல் உலகக் கோப்பை போட்டியை இந்தியா மற்றும் இலங்கையுடன் இணைந்து நடத்தியிருந்தது. 2009-இல் பாகிஸ்தான் வந்த இலங்கை கிரிக்கெட் அணி மீது நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு அந்த நாட்டில் ஐசிசியின் சர்வதேச போட்டிகள் நடைபெறவில்லை என்பது நினைவுகூரத்தக்கது.

சாம்பியன்ஸ் கோப்பை போட்டியானது கடைசியாக கடந்த 2017-இல் இங்கிலாந்தில் நடைபெற்றது. 8 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நடத்தப்படும் இந்தப் போட்டி, முதல் முறையாக பாகிஸ்தானில் நடைபெறுகிறது.

ஐசிசியில் தற்போது இருக்கும் 14 உறுப்பு நாடுகள், வரும் 2023 முதல் 2031 வரை ஆடவருக்கான ஐசிசி போட்டிகளை நடத்தவுள்ளன. இதில் அமெரிக்கா மற்றும் நமீபியாவுக்கு ஐசிசி போட்டிகளை நடத்தும் வாய்ப்பு முதல் முறையாக வழங்கப்படுகிறது.

---

1. உலக நிமோனியா நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) நவம்பர் 12 ☑

ஆ) நவம்பர் 14

இ) நவம்பர் 16

ஈ) நவம்பர் 18

✓ உலக நிமோனியா நாளானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.12 அன்று அனுசரிக்கப்படுகிறது. முதல் உலக நிமோனியா நாளை நடத்துதற்காக 100'க்கும் மேற்பட்ட குழந்தைகள் அமைப்புகள் குழந்தைகளில் ஏற்படும் நிமோனியாவுக்கு எதிரான உலகளாவிய கூட்டணியில் இணைந்தன.

✓ உலகளாவிய நோய்த்தடுப்புத் திட்டத்தின்கீழ், நிமோகாக்கல் காஞ்சுகேட் தடுப்பூசி (PCV) திட்டம் இந்தியாவில் தொடங்கப்பட்டது. நிமோனியாவால் குழந்தைகளிடையே ஏற்படும் இறப்பு மற்றும் நோயுற்ற தன்மையைக் குறைப்பது மற்றும் அந்நோய் குறித்த விழிப்புணர்வை பரப்புவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தியாவில், 5 ஆண்டுகளுக்கு முன் 1.2 மில்லியன் குழந்தைகள் இறந்ததாகவும், அதில் 15.9% இறப்புகள் நிமோனியாவால் ஏற்பட்டதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

---

2. 'பழங்குடியினர் பெருமைதின மகாசம்மேளனத்தை' நடத்தவுள்ள இந்திய மாநிலம் எது?



அ) குஜராத்

ஆ) மத்திய பிரதேசம் ☑

இ) சிக்கிம்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ பழங்குடியினர் பெருமை தின மகாசம்மேளனமானது நவ.15ஆம் தேதி அன்று மத்தியபிரதேச மாநிலம் ஜம்பூரி மைதானம் போபாலில் நடந்தது. பிர்சா முண்டா பிரபுவின் பிறந்தநாளில் இம்மகாசம்மேளனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆண்டு (2021), பழங்குடியின பெருமை தின மகாசம்மேளனத்தில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

3.'HARBINGER-2021' என்பது பின்வரும் எந்த இந்திய அமைப்பால் அறிவிக்கப்பட்ட ஓர் உலகளாவிய ஹேக்கத்தான் ஆகும்?



அ) NITI ஆயோக்

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑

இ) இந்திய உச்ச நீதிமன்றம்

ஈ) இந்திய தேர்தல் ஆணையம்

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) தனது முதல் 'HARBINGER 2021 – Innovation for Transformation' என்ற ஹேக்கத்தானை 'ஸ்மார்ட்டர் டிஜிட்டல் பேமெண்ட்ஸ்' என்ற கருப்பொருளின் கீழ் அறிவித்தது.

✓ ஹேக்கத்தானுக்கான பதிவு நவ.15 முதல் தொடங்குகிறது. அனைவரும் டிஜிட்டல் பேமெண்ட்டுகளை அணுகும் வகையிலான தீர்வுகளை உருவாக்குதற்கு பங்கேற்பாளர்களை இந்த ஹேகத்தான் அழைக்கிறது.

---

4. வளரும் நாடுகளின் ஒத்த எண்ணம் கொண்ட குழுவில் (LMDCs) எத்தனை நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன?



அ) 12

ஆ) 18

இ) 24 ☑

ஈ) 36

✓ 24 நாடுகள், ஒத்த எண்ணம் கொண்ட வளரும் நாடுகளின் குழுவில் (LMDCs) உறுப்பினர்களாக உள்ளன. அவர்கள் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக வர்த்தக அமைப்பு போன்ற சர்வதேச நிறுவனங்களில் பேச்சுவார்த்தையாளர்களாக பணியாற்றுகின்றனர். இதில் சீனா, இந்தியா, இலங்கை மற்றும் மலேசியா உள்ளிட்டவை அடங்கும்.

✓ சமீபத்தில் LMDC'களும் ஆப்பிரிக்க நாடுகளும், 2030 – COP 26 உச்சி மாநாட்டில் தொடங்கி, காலநிலை நிதியாக உலக செல்வந்த நாடுகள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் $1.3 டிரில்லியன் டாலர்கள் தரவேண்டும் எனக் கோரியுள்ளன.

---

5. 'Shuttler's Flick: Making every match count' என்பது யாரின் சுய சரிதை ஆகும்?



அ) கோபி சந்த் ☑

ஆ) P V சிந்து

இ) கரோலினா மரின்

ஈ) சாய்னா நேவால்

✓ இந்திய தலைமை தேசிய பேட்மிண்டன் பயிற்சியாளரான பி கோபி சந்த் தனது சுயசரிதையான 'Shuttler's Flick: Making every match count'ஐ முறைப்படி வெளியிட்டார். இந்நூலை பிரியா குமாருடன் இணைந்து அவர் எழுதியுள்ளார். பேட்மிண்டனில் ஒரு வீரராக, பயிற்சியாளராக அவர் மேற்கொண்ட பயணத்தையும், ஒலிம்பிக் பதக்கம் வென்ற சாய்னா நேவால், P V சிந்து உட்பட சிறந்த வீரர்களை உருவாக்குவதில் அவர் எதிர்கொண்ட சவால்களையும் இந்நூல் விவரிக்கிறது.

---

6. இறுதி கிளாஸ்கோ COP 26 ஒப்பந்தம் புவி வெப்பமடைதலை __டிகிரி செல்சியஸில் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.



அ) 1

ஆ) 1.5 ☑

இ) 2.0

ஈ) 3.0

✓ ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்ற ஐநா காலநிலை உச்சி மாநாடு, புவி வெப்பமடைதலை 1.5° செல்சியஸாகக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட ஓர் உலகளாவிய ஒப்பந்தத்துடன் முடிவடைந்து உள்ளது. இந்த கிளாஸ்கோ ஒப்பந்தம், பைங்குடில் வாயுக்களை மிக மோசமான அளவில் வெளியிடும் புதைபடிவ எரிபொருளான நிலக்கரி பயன்பாட்டைக் குறைப்பதற்கு வெளிப்படையாகத் திட்டமிடும் முதல் காலநிலை ஒப்பந்தமாகும்.

7.'ஆசாதிகா அம்ரித் மகோத்சவ்' நிகழ்வுகளுக்காக ஒருங்கிணைந்த திறன்பேசி செயலியை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) வெளியுறவு அமைச்சகம்

ஆ) கலாச்சார அமைச்சகம் ☑

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) சுற்றுலா அமைச்சகம்

✓ கொண்டாட்டங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் அணுகும் வகையில், கலாச்சார அமைச்சகம் 'ஆசாதிகா அம்ரித் மகோத்சவ்' நிகழ்வுகளுக்காக ஓர் ஒருங்கிணைந்த திறன்பேசி செயலியை அறிமுகம் செய்துள்ளது. 'ஆசாதிகா அம்ரித் மகோத்சவ்' என்பது இந்தியா விடுதலை அடைந்த 75ஆவது ஆண்டாகும். இந்தச் செயலியில் 'டிஜிட்டல் மாவட்ட களஞ்சியம்' மற்றும் 'ஹிஸ்டரி கார்னர்' கீழ் 'பாடப்படாத நாயகர்கள்' போன்ற பிரிவுகளுக்கான இணைப்புகள் உள்ளன.

---

8. 'DAVINCI' என்பது வெள்ளிக்கோளை ஆராய்வதற்கான எந்த விண்வெளி நிறுவனத்தின் திட்டமாகும்?



அ) NASA ☑

ஆ) ISRO

இ) JAXA

ஈ) ESA

✓ 2030'களின் முற்பகுதியில் **VERITAS**, (கோளைச் சுற்றி வர) மற்றும் **DAVINCI** – **D**eep **A**tmosphere **V**enus **I**nvestigation of **N**oble gases, **C**hemistry, and **I**maging ஆகிய இரண்டு திட்டங்களை தொடங்குவதன் மூலம் வெள்ளிக்கோளை ஆராய NASA திட்டமிட்டுள்ளது.

✓ NASA, வரும் 2029'இல் தொடங்கப்படவுள்ள '**DAVINCI**' திட்டம் பற்றிய வீடியோவை அண்மையில் வெளியிட்டது. அது, நீர் உள்ளதா என்பது உட்பட பல்வேறு அளவுருக்களை கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வெள்ளிக் கோளின் தோற்றம், பரிணாமம் மற்றும் கலவை பற்றிய அடிப்படை கேள்விகளுக்கான பதில்களையும் கண்டறியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

9. 'கைசர்-இ-ஹிந்த்'ஐ மாநில பட்டாம்பூச்சியாக அங்கீகரித்துள்ள மாநிலம் எது?

அ) அஸ்ஸாம்

ஆ) சிக்கிம்



இ) அருணாச்சல பிரதேசம் ☑

ஈ) ஒடிசா

✓ முதல்வர் பேமா கந்து தலைமையிலான அருணாச்சல பிரதேச மாநில அமைச்சரவை, பெரியதும், பிரகாசமான நிறமுள்ளதுமான 'கைசர்-இ-ஹிந்தை' மாநில வண்ணத்துப்பூச்சியாக அங்கீகரித்தது.

✓ முதல்முறையாக பாக்கே புலிகள் காப்பகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. 'கைசர்-இ-ஹிந்த்' (*Teinopalpus imperialis*) என்றால் 'இந்தியாவின் பேரரசர்' என்று பொருள். 90-120 மிமீ இறக்கைகள் கொண்ட இந்த வண்ணத்துப்பூச்சி ஆறு மாநிலங்களில் காணப்படுகிறது.

---

10. ஞாயிறு, புவி மற்றும் திங்கள் ஆகியவை ஒரு சரியான நேர்க் கோட்டில் நின்று, திங்கள் புவியின் நிழலில் நகரும் நிகழ்வுக்குப் பெயர் என்ன?

அ) சூரிய கிரகணம்



ஆ) சந்திர கிரகணம் ☑

இ) கோடைகால சங்கிராந்தி

ஈ) குளிர்கால சங்கிராந்தி

✓ ஞாயிறு, புவி மற்றும் திங்கள் ஆகியவை ஒரு சரியான நேர்க்கோட்டில் நின்று, திங்கள் புவியின் நிழலில் நகரும் நிகழ்வு 'சந்திர கிரகணம்' என்று அழைக்கப்படுகிறது. NASA'இன் கூற்றுப்படி, 580 ஆண்டுகளில் மிகநீளமான பகுதி சந்திர கிரகணத்தை 2021 நவ.17 அன்று அமெரிக்கா காணும். இந்தக் கிரகணம் மூன்று மணி நேரம் 28 நிமிடங்கள் நீடிக்கும் என NASA தெரிவித்துள்ளது.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சாலை விபத்தில் பாதிப்பு: 48 மணி நேர உயர் சிகிச்சையை அரசே அளிக்கும்

சாலை விபத்தில் பாதிக்கப்படுவோருக்கு முதல் 48 மணி நேரத்துக்கான உயர் சிகிச்சையை அரசே அளிக்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சாலை பாதுகாப்பு குறித்து ஆய்வுக் கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அரசு வெளியிட்ட செய்தி:-

ஒரு லட்சம் மக்கள் தொகையில் சாலை விபத்துகளின் இறப்பு விகிதம் 23.9 என்ற அளவில் உள்ளது. இது குறைக்கப்பட வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தினார். மேலும் பல்துறை நிபுணர்களை உள்ளடக்கிய சாலைப் பாதுகாப்பு ஆணையம் என்ற ஒருங்கிணைந்த அமைப்பு உருவாக்கப்படும். சாலைப் பாதுகாப்பு திட்டங்களையும், வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தத் தேவையான நிர்வாக, நிதி ஆதாரங்களுடன் அது செயல்படும்.

48 மணி நேர சிகிச்சை: சாலை விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு முதல் 48 மணி நேரத்துக்கான அவசர மருத்துவ கவனிப்பை அரசே மேற்கொள்ளும். இதற்காக 'நம்மை காக்கும் 48' என்ற திட்டம் செயல்படுத்தப்படும். விபத்தில் பாதித்தோருக்கு முதல் 48 மணி நேர அவசர உயிர் காக்கும் உயர் சிகிச்சையை அரசே இலவசமாக அளிக்கும்.

சாலையோரங்களில் உள்ள தனியார் மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் என மொத்தம் 609 மருத்துவமனைகள் இதற்கென கண்டறியப்பட்டுள்ளன. முதல்வரின் மருத்துவக் காப்பீடு அட்டை இல்லாதோருக்கும் பிற மாநிலத்தவர், வேற்று நாட்டவருக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் மருத்துவம் செய்யப்படும். இந்தத் திட்டத்துக்கென ரூ.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நபருக்கு ரூ.1 லட்சம் வரம்புக்குள் 81 தோ்ந்தெடுக்கப்பட்ட மருத்துவ முறைகள் செயல்படுத்தப்பட உள்ளன.

அவசர மருத்துவ சேவைகள் சட்டம்: விபத்து நோ்ந்தவுடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கும் வகையில் தமிழ்நாடு அவசர மருத்துவ சேவைகள் சட்டம் இயற்றப்பட உள்ளது. அதன்படி, விரைவாக அணுகுதல், உயிர் மீட்பு சிகிச்சை, பாதிப்பை கட்டுப்படுத்தும் அறுவை சிகிச்சைகள், இயல்பு வாழ்க்கையை மீட்டெடுத்தல், மறுவாழ்வு சிகிச்சை ஆகிய கூறுகளை அந்தச் சட்டம் கொண்டிருக்கும்.

சாலைப் பாதுகாப்பு மக்கள் இயக்கமாக மாற பள்ளி, கல்லூரி மாணவர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு உருவாக்கப்படும். சீரான சாலைகள், நம்மைக் காக்கும் 48 மணி நேரம், அவசர மருத்துவ சேவைகள் சட்டம் ஆகியவற்றை உள்ளடக்கி 'இன்னுயிரை காப்போம்' என்ற திட்டம் வகுக்கப்படும். சாலை விபத்தில் சிக்கியோரை மீட்டு உயிரைக் காப்பதே இன்னுயிர் காப்போம் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

2. அரசுப் பணியில் விளையாட்டு வீரர்களுக்கான 3% இட ஒதுக்கீட்டில் சிலம்பம் சேர்ப்பு

தமிழக அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனப் பணியிடங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டில் சிலம்பம் விளையாட்டைச் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்துத் தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

"முதல்வரது ஆணையின்படி, தமிழக அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனப் பணியிடங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டில் சிலம்பம் விளையாட்டைச் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்களில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீடு தற்போது நடைமுறையில் உள்ளது. அதன்படி, சி.ஏ.பவானிதேவி (வாள் சண்டை), எ.தருண் (தடகளம்), லஷ்மண் ரோஹித் மரடாப்பா (படகோட்டுதல்), தனலட்சுமி, (தடகளம்), வி.சுபா (தடகளம்) மற்றும் டி.மாரியப்பன் ஆகியோருக்குத் தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மேற்படி திட்டத்தின் கீழ் ரோலர் ஸ்கேட்டிங், ஸ்குவாஷ், கபடி உள்ளிட்ட விளையாட்டுகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், தமிழ்நாட்டின் பாரம்பரிய மற்றும் வரலாற்றுக்கு முந்தைய இந்திய தற்காப்புக் கலைகளில் ஒன்றான சிலம்பம் விளையாட்டு 3 விழுக்காடு விளையாட்டு இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கப்பட்டு, அதற்கான அரசாணை (நிலை) எண்.46, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள்.29.10.2021-ன் மூலம் ஆணையிட்டுள்ளது.

மேலும், முதல்வரது சீரிய முயற்சியின் கீழ், மத்திய அரசின் கேலோ இந்தியா திட்டத்தில் சிலம்பம் விளையாட்டு ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள சிலம்ப விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பெருமளவில் பயன்பெறுவர். இதனால் தமிழினத்தின் பழங்காலத் தற்காப்புக் கலைகளில் சிறப்புமிக்க சிலம்பம் விளையாட்டிற்கு மாபெரும் அங்கீகாரம் கிடைத்துள்ளது".

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

3. அமலாக்கத் துறை இயக்குநரின் பதவிக் காலம் ஓராண்டு நீட்டிப்பு

அமலாக்கத் துறை இயக்குநர் சஞ்சய் குமார் மிஸ்ராவின் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு மத்திய அரசு நீட்டித்துள்ளது.

சிபிஐ, அமலாக்கத் துறை இயக்குநர் ஆகியோரின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்க ஏதுவான அவசரச் சட்டத்தை மத்திய அரசு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டு வந்தது.

1984- பிரிவைச் சோ்ந்த இந்திய வருவாய்ப் பணி அதிகாரியான சஞ்சய் குமார் மிஸ்ராவுக்கு ஏற்கெனவே நீட்டிக்கப்பட்ட அமலாக்கத் துறை இயக்குநருக்கான பதவிக் காலம் வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. இந்நிலையில், மத்திய நிதி அமைச்சகம் புதன்கிழமை வெளியிட்ட அறிவிப்பில், 'சஞ்சய் குமார் மிஸ்ராவின் பதிவிக் காலத்தை 2022, நவம்பர் 11-ஆம் தேதி வரை நீட்டிக்க குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

61 வயதாகும் சஞ்சய் குமார் மிஸ்ரா, அமலாக்கத் துறை இயக்குநராக முதல் முறையாக 2018, நவம்பர் 19-ஆம் தேதி இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டார். 2020-இல் அவரது முந்தைய இரண்டு ஆண்டுகள் பணி நியமன உத்தரவு மூன்று ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடுக்கப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், 'சஞ்சய் குமார் மிஸ்ராவுக்கு மேலும் பணி நீட்டிப்பு செய்யக் கூடாது' என்று கூறியது.

இந்நிலையில், மத்திய அரசு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டு வந்த இரண்டு அவசரச் சட்டங்களில், சிபிஐ மற்றும் அமலாக்கத் துறை இயக்குநர்களின் இரண்டு ஆண்டு பதவிக் காலம் நீட்டிப்புக்கு பிறகு மீண்டும் மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பணி நியமனக் குழுக்களின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்றும் அவசரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்த அவசரச் சட்டங்களுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

---

4. கையூட்டு அபாயம்: தரவரிசையில் 82-ஆவது இடத்தில் இந்தியா!

நிறுவனங்கள் அரசு அதிகாரிகளுக்கு கையூட்டு அளிக்க வேண்டிய அபாயம் குறைவாக உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 77-ஆவது இடத்திலிருந்து 82-ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது.

ஊழலுக்கு எதிரான தர நிர்ணய அமைப்பான டிரேஸ், இதுகுறித்து வெளியிட்டுள்ள இந்த ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தொழில்முனைவோரும் நிறுவனங்களும் அரசு அதிகாரிகள் மற்றும் பிறருக்கு கையூட்டு அளிக்க வேண்டிய அபாயத்துக்கான தரவரிசைப் பட்டியலில், கடந்த ஆண்டு இந்தியா 77-ஆவது இடத்தில் இருந்தது.

இந்த நிலையில், நடப்பாண்டுக்கான இந்தப் பட்டியலில் 44 புள்ளிகளைப் பெற்று இந்தியா 82-ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது.

எனினும், அண்டை நாடுகளான பாகிஸ்தான், சீனா, நேபாளம், வங்கதேசம் ஆகிய நாடுகளைவிட இந்தியா அதிக புள்ளிகளைப் பெற்றுள்ளது.

மற்றோர் அண்டை நாடான பூடான் இந்தத் தரவரிசையில் 62-ஆவது இடத்தில் உள்ளது.

சர்வதேச அளவில் வடகொரியா, துருக்மெனிஸ்தான், வெனிசூலா, எரித்ரியா ஆகிய நாடுகளில் தொழிலுக்காக கையூட்டு செலுத்த வேண்டிய அபாயம் அதிக அளவில் உள்ளது.

ஆனால், டென்மார்க், நார்வே, ஃபின்லாந்து, ஸ்வீடன், நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் இந்த அபாயம் மிகக் குறைவாக உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடையிலான தகவல் பரிமாற்றங்கள், ஊழல் தடுப்பு அமைப்புகள் செயலாற்றும் திறன், அரசு சேவைகளின் வெளிப்படைத்தன்மை, ஊடகம் உள்ளிட்ட சமூக அமைப்புகளின் செயலாற்றல் ஆகிய 4 அம்சங்களின் அடிப்படையில் இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

---

5. சைபர் பாதுகாப்பு: பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா-நியூஸிலாந்து முடிவு

சைபர் பாதுகாப்பு, சைபர் குற்றம் மற்றும் திறன் கட்டமைப்பை மேம்படுத்துவதில் இந்தியாவும், நியூஸிலாந்தும் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தி, இணைந்து செயல்படுவது என முடிவு எடுத்திருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இணையவழியில் இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான முடிவு புதன்கிழமையுடன் நிறைவடைந்த 2 நாள்கள் காணொலி பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்டது.

இந்தியா- நியூஸிலாந்து இடையிலான 2-ஆம் கட்ட சைபர் பேச்சுவார்த்தையின்போது, சைபர் வெளியில் நிலவும் ஒத்துழைப்பு குறித்தும், அதை மேற்கொண்டு நீட்டிப்பது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும், சைபர் பாதுகாப்பு, சைபர் குற்றம் மற்றும் திறன் கட்டமைப்பில் இரு நாடுகளும் பரஸ்பரம் நெருங்கி செயல்படுவது எனவும் முடிவு எடுக்கப்பட்டதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு, இந்திய தரப்பில் வெளியுறவு அமைச்சக இணைச் செயலர் அடுல் மல்ஹரி தலைமை வகித்தார். நியூஸிலாந்து பிரதிநிதிகள் குழுவுக்கு அந்நாட்டின் தேசிய பாதுகாப்புக் கொள்கை இயக்குநர் டேன் ஈட்டனும், பாதுகாப்பு விவகார தற்காலிக மேலாளர் ஜார்ஜினியா சார்கிஷனும் தலைமை வகித்தனர்.

இரு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு அமைச்சக, துறைகளின் மூத்த அதிகாரிகள் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.

---

6. உருவாகிறது சென்னை ட்ரோன் காவல் பிரிவு

சென்னையில் பொது மக்கள் அதிகமாகக் கூடும் கடற்கரை அல்லது சந்தைப் பகுதியில் மாநகரக் காவல் துறையின் ட்ரோன் காவல் பிரிவு அமைக்கப்பட உள்ளது. இதற்காக ரூ.3.60 கோடி நிதி ஒதுக்கி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

சட்டப் பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பில், சென்னை பெருநகர காவலில் கூட்டமான இடங்களையும், நீண்ட தூர சாலைகளையும் கண்காணிக்க ரூ.3.60 கோடி செலவில் நடமாடும் ட்ரோன் காவல் பிரிவு ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தார். இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையிலான உத்தரவை மாநில அரசு பிறப்பித்துள்ளது.

ட்ரோன் காவல் பிரிவை உருவாக்குவதற்கான கடிதத்தை பெருநகர சென்னை காவல் ஆணையர் சார்பில் அரசுக்கு அனுப்பப்பட்டது. அதில், பொது மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பணியாற்றக் கூடிய காவல் அதிகாரிகளுக்கு உதவிட ட்ரோன் காவல் பிரிவை ஏற்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார். மேலும், முக்கிய பிரமுகர்கள் செல்லும் சாலைகள், குற்றச் செயல்கள் அதிகம் நடைபெறும் இடங்கள், மக்களைக் காப்பாற்றக் கூடிய வகையில் கடற்கரைகள் போன்ற இடங்களில் நடமாடும் ட்ரோன் பிரிவை ஏற்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார். மேலும், இந்தத் திட்டத்துக்கென மூன்று வகையான ட்ரோன்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக ட்ரோன் காவல் பிரிவானது, மெரீனா கடற்கரை அருகேயுள்ள காந்தி சிலை அல்லது எலியட்ஸ் கடற்கரை அல்லது பாண்டிபஜார் பகுதியில் அமைத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது. நடமாடும் ட்ரோன் பிரிவானது தற்காலிக கன்டெய்னர் வடிவில் உருவாக்கப்படும். இது 40 அடி நீளமும், 10 அடி அகலமும் கொண்டிருக்கும். இது தரை மற்றும் முதல் தளம் என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு இருக்கும். தரை தளம் கட்டுப்பாட்டு அறையாகப் பயன்படுத்தப்படும். மேலே உள்ள தளம் ட்ரோன் இயக்கத்துக்காக உபயோகப்படுத்தப்படும்.

மூன்று வகையான ட்ரோன்கள்: ஒவ்வொரு நடமாடும் ட்ரோன் காவல் பிரிவும் ஒன்பது ட்ரோன்களைக் கொண்டிருக்கும். எச்.டி. தரமுடைய கேமிரா, இரவிலும் படம் பிடிக்கும் வசதி, நேரலையாக ஒளிபரப்பு செய்வது, பொது அறிவிப்புக்கான ஸ்பீக்கர் வசதி, 2 கிலோமீட்டர் தூரம் பறக்கக் கூடிய திறன், 30 நிமிடங்கள் விடாமல் பறக்கும் திறன் என தனித்துவம் வாய்ந்த 6 ட்ரோன்கள் வாங்கப்பட உள்ளன.

நீண்ட தொலைவுக்குக் கண்காணிக்கும் திறனுடைய ட்ரோன்கள் 2 வாங்கப்பட உள்ளன. இது உயர் ரகமானது. 100 நிமிடங்கள் மற்றும் 30 கிலோமீட்டர் தூரத்துக்கு தொடர்ச்சியாகப் பறக்கும் திறன் படைத்தது. உயிர் காக்கும் ட்ரோன் என்ற பெயரிலான ட்ரோன் ஒன்று வாங்கப்பட உள்ளது. அதிக எடையுள்ள பொருள்களைத் தூக்கும் திறனை இந்த ட்ரோன் பெற்றுள்ளது. ஒரு கிலோமீட்டர் தூரத்துக்கு பறக்கும் திறனுடைய இந்த ட்ரோனின் மொத்த எடை 12 கிலோகிராம்.

இந்த ட்ரோன் பிரிவுகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதியான ரூ.3.60 கோடியை ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்படுகிறது.

---

7. பெங்களூரு தொழில்நுட்ப மாநாட்டில் இன்று பிரதமர் நரேந்திர மோடி உரை:

பெங்களூருவில் 24-வது தொழில்நுட்ப மாநாட்டை, குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு நேற்று தொடங்கி வைத்தார். இதில் கர்நாடக ஆளுநர் தாவர்சந்த் கெலாட், முதல்வர் பசவராஜ் பொம்மை, தொழிலதிபர் கிரண் மஜும்தர் ஷா உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மாரிசன், இஸ்ரேல் பிரதமர் நஃப்தாலி பென்னட் உள்ளிட்டோர் இணைய வழியில் பங்கேற்று உரையாற்றினர்.

நாளை வரை 3 நாட்கள் நடக்கும் இந்த மாநாட்டில் 30-க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய தொழில் முனைவோர் பங்கேற்கும் அரங்க நிகழ்வுகளில், 300 தொழில்நுட்ப வல்லுநர்கள் உரையாற்றுகின்றனர்.

தொடக்க நிகழ்ச்சியில் வெங்கையா நாயுடு பேசுகையில், "நாட்டுக்கும் மக்களின் முன்னேற்றத்துக்கு பலன் தரும் பல புதிய திட்டங்கள் இந்த மாநாட்டின் மூலம் ஆரம்பமாக இருக்கிறது" என்றார்.

மாநாட்டின் 2-வது நாளான இன்று, சிட்னி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி ஆற்றும் உரை இணைய வழியாக ஒளிபரப்பாகிறது. இதே போல இந்திய – அமெரிக்க புத்தாக்க கூட்டணி மாநாட்டில் இடம்பெறும் மோடியின் உரையும் இந்த மாநாட்டிலும் ஒளிபரப்பாகிறது.

---

8. ஹரியாணா மாநிலம் குருகிராமில் நாட்டிலேயே முதல் முறையாக மீன்வளத் தொழில் முனைவோர் பயிற்சி நிலையம்

நாட்டில் முதல் முறையாக மீன்வளத் தொழில் முனைவோருக்கானப் பயிற்சி நிலையம், ஹரியாணா மாநிலம் குருகிராமில் தொடங்கப் பட்டுள்ளது.

'லினாக்-என்சிடிசி ஃபிஷ்வுரிஸ் இன்குபேஷன் சென்டர் (எல்ஜஎப்ஜசி)' எனும் பெயரிலான இந்தப் பயிற்சி நிலையத்தை மத்திய மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை அமைச்சர் புருஷோத்தம் ரூபாலா திறந்து வைத்தார். கடந்த ஆண்டு பிரதமர் மோடியால் தொடங்கி வைக்கப்பட்ட பிரதமர் மீன் வளத் திட்டத்தின் (பிஎம்எம்எஸ்ஒய்) கீழ் ரூ.3.23 கோடி செலவில் இது அமைக்கப்பட்டுள்ளது. மத்திய கூட்டுறவு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம் (என்சிடிசி) இதனை நிர்வகிக்கிறது.

விழாவில் மத்திய அமைச்சர் ரூபாலா பேசும்போது, "மீன் வளர்ப்பு முதல் அதன் விற்பனை வரை பயிற்சி, ஆலோசனை, தொழில் முதலீட்டுக் கடன் உள்ளிட்ட அனைத்தும் எல்ஜஎப்ஜசி சார்பில் வழங்கப்படும்" என்றார்.

நிகழ்ச்சிக்கு மத்திய மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் தலைமை வகித்தார். அவர் பேசும்போது, "மீன்வளத் துறை நம் நாட்டில் ஆண்டுக்கு 7 சதவீத வளர்ச்சி பெறுகிறது. நம் நாட்டின் மீன் உற்பத்தி தற்போது 130 லட்சம் டன்னாகவும் அதன் ஏற்றுமதி மதிப்பு ரூ.46,000 கோடியாகவும் உள்ளது. 2025-ம் ஆண்டில் மீன் உற்பத்தியை 22 மில்லியன் டன்களாகவும் ஏற்றுமதி மதிப்பை ரூ.1 லட்சம் கோடியாகவும் உயர்த்த பிரதமர் இலக்கு நிர்ணயித்துள்ளார்.

---

9. உலகின் சுத்தமான ஆற்றில் ஒரு படகு பயணம்: ட்விட்டரில் வைரலாகும் புகைப்படம்

ஆற்றில் படகு செல்வது போன்ற ஒரு புகைப்படத்தை மத்திய ஜல்சக்தி அமைச்சகம் ட்விட்டரில் பகிர்ந்துள்ளது. இது வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் ஆற்றில் பயணிக்கும் படகு வானத்தில் மிதப்பது போல தோன்றுகிறது. அந்த அளவுக்கு அந்த ஆற்று நீர் அவ்வளவு சுத்தமாக உள்ளது. ஆற்றின் அடியில் உள்ள தாவரங்கள், கற்கள் ஆகியவை கண்ணாடி மூலம் பார்ப்பது போல தெள்ளத் தெளிவாக தெரிகின்றன.

இந்தப் படத்தை ட்விட்டரில் பகிர்ந்துள்ள மத்திய ஜல் சக்தி அமைச்சகம், "மேகாலயா மாநிலத்தில் ஓடும் உம்காட் ஆற்றில்தான் இந்தப் படகு செல்கிறது. தலைநகர் ஷில்லாங்கிலிருந்து 100 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்த ஆறு, உலகிலேயே சுத்தமான ஆறுகளில் ஒன்றாக திகழ்கிறது. இதை சுத்தமாக வைத்திருக்கும் அம்மாநில மக்களுக்கு நன்றி. நாட்டில் உள்ள அனைத்துஆறுகளும் இதுபோல சுத்தமாகஇருக்க வேண்டும் என விரும்புகிறோம். மேகாலயா மக்களுக்கு தலை வணங்குகிறோம்" என பதிவிடப்பட்டுள்ளது.

இந்த புகைப்படத்தை 19 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் லைக் செய்துள்ளனர். 3 ஆயிரம் பேர் கருத்து தெரிவித்துள்ளனர்.

---

10. தமிழக பெண் ஐபிஎஸ் அதிகாரி சிபிஐ இணை இயக்குநராக வித்யா ஜெயந்த் நியமனம்

தமிழக பெண் ஐபிஎஸ் அதிகாரி வித்யா ஜெயந்த் குல்கர்னி உட்பட 3 ஐபிஎஸ் அதிகாரிகளை சிபிஐ இணை இயக்குநர்களாக நியமித்து ஒன்றிய பணியாளர் நல அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. தமிழக காவல் துறையில் ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை இணை இயக்குநராக இருப்பவர் வித்யா ஜெயந்த் குல்கர்னி. இவரை சிபிஐ இணை இயக்குநராக நியமித்து ஒன்றிய பணியாளர் நலத்துறை அமைச்சகம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. 1998ம் ஆண்டு பிரிவு ஐபிஎஸ் அதிகாரியான வித்யா ஜெயந்த் 5 ஆண்டுகளுக்கு சிபிஐ இணை இயக்குநராக பணியாற்றுவார். அதன் பின் அவர் மீண்டும் தமிழக காவல் துறைக்கு திரும்புவார். ஒடிசா ஐபிஎஸ் அதிகாரி ஞான்வியாம், மகாராஷ்டிரா நாவல் பஜாஜ் ஆகியோரும் இணை இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

11. யுனெஸ்கோ செயற்குழுவில் இந்தியாவுக்கு மீண்டும் இடம்

ஐ.நா. கல்வி, அறிவியல், கலாசார அமைப்பு யுனெஸ்கோ ஆகும். இந்த அமைப்பின் செயற்குழுவில் இந்தியா மீண்டும் இணைந்து செயல்படுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஓட்டெடுப்பில இந்தியாவுக்கு 164 ஓட்டுகள் கிடைத்தன. 2021-2025 ஆண்டுகள், பதவிக்காலம் ஆகும்.

---

12. உலக பெண்கள் டென்னிஸ்: ஸ்பெயின் வீராங்கனை முகுருஜா 'சாம்பியன்'

டாப்-8 வீராங்கனைகள் பங்கேற்ற டபிள்யூ.டி.ஏ. இறுதி சுற்று எனப்படும் உலக பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி மெக்சிகோவில் உள்ள குவாடலஜரா நகரில் நடந்தது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த இறுதிஆட்டத்தில் 2 கிராண்ட்ஸ்லாம் வென்றவரும், முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனையுயான ஸ்பெயினின் கார்பின் முகுருஜா, 8-ம் நிலை வீராங்கனையான அனெட் கோன்டாவெய்ட்டை (எஸ்தோனியா) எதிர்கொண்டார்.

1 மணி 38 நிமிடம் நடந்த இந்த ஆட்டத்தில் முகுருஜா 6-3, 7-5 என்ற நேர்செட்டில் கோன்டாவெய்ட்டை சாய்த்து சாம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார். இதன் மூலம் 49 ஆண்டு கால பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் வரலாற்றில் மகுடம் சூடிய முதல் ஸ்பெயின் வீராங்கனை என்ற பெருமையை பெற்றார். ஒட்டுமொத்தத்தில் அவரது 10-வது சர்வதேச பட்டம் இதுவாகும்.

---

13. லக்னோ: போலீஸ் டி.ஜி.பி.க்கள் மாநாட்டில் மோடி பங்கேற்பு

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரேதசங்களின் போலீஸ் டி.ஜி.பி.க்கள், மத்திய ஆயுதப்படைகளின் இயக்குனர்கள் மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட உயர் போலீஸ் அதிகாரிகளின் 3 நாள் மாநாடு உத்தரபிரதேச தலைநகர் லக்னோவில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் போலீஸ் டி.ஜி.பி.க்கள் மற்றும் மத்திய ஆயுதப்படைகளின் இயக்குனர்கள் நேரடியாகவும், உளவுத்துறை அதிகாரிகள் மற்றும் மூத்த போலீஸ் அதிகாரிகள் என 350-க்கும் மேற்பட்ட அதிகாரிகள் காணொலி முறையிலும் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டின் 2-வது நாளான நேற்று உள்நாட்டு பாதுகாப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப்பாக மாவோயிஸ்டு வன்முறை, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், சைபர் குற்றங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

டி.ஜி.பி.க்கள் மாநாட்டின் நேற்றைய அமர்வில் பிரதமர் மோடி பங்கேற்றார். இதில் வெறும் அடையாள பங்கேற்பை வெளிப்படுத்தாமல், மொத்த அமர்விலும் பங்கேற்று நாட்டின் உள்நாட்டு பாதுகாப்பில் தனக்கு இருக்கும் அக்கறையை அவர் வெளிப்படுத்தினார்.

கடந்த 2014-ம் ஆண்டு முதலே போலீஸ் டி.ஜி.பி.க்களின் மாநாட்டில் முழுமையாக பங்கேற்பதை பிரதமர் வழக்கமாக கொண்டுள்ளார். வெறும் பங்கேற்புடன் நில்லாமல், போலீஸ் அதிகாரிகள் தன்னுடன் நேரடியாக கலந்துரையாடவும் வாய்ப்பு வழங்கி வருகிறார்.

வழக்கமாக டெல்லியில் நடைபெறும் இந்த மாநாடு, மோடியின் அறிவுறுத்தலின்பேரில் கடந்த 2014-ம் ஆண்டுக்குப்பிறகு டெல்லிக்கு வெளியே நடத்தப்பட்டு வருகிறது. கொரோனா பரவல் காரணமாக கடந்த ஆண்டு மட்டுமே டெல்லியில் இருந்து காணொலி முறையில் நடத்தப்பட்டது. இதைப்போல 2014-ம் ஆண்டு முதல் மாநாட்டின் வடிவம், அமர்வுகளுக்கான தலைப்புகள் உள்ளிட்டவற்றிலும் அதிகமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

---

14. ஆசிய வில்வித்தையில் தங்கம் வென்றார் ஜோதி சுரேகா

ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் ஜோதி சுரேகா தங்கப் பதக்கம் வென்றார்.

வங்கதேசத்தின் டாக்கா நகரில்ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான காம்பவுண்ட் பிரிவு இறுதி சுற்றில் இந்தியாவின் ஜோதிசுரேகா, முன்னாள் உலக சாம்பியனான கொரியாவின் ஓ யூஹ்யூனை எதிர்த்து விளையாடினார். இதில் ஜோதி சுரேகா 146–145 என்ற கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

முன்னதாக நடைபெற்ற காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் ரிஷப் யாதவுடன் இணைந்து வெள்ளிப் பதக்கம் கைப்பற்றினார் ஜோதி சுரேகா. இறுதி சுற்றில் இந்திய ஜோடி 154–155 என்ற கணக்கில் கொரியாவின் கிம் யுன்ஹீ, சோய் யோங்கி ஜோடியிடம் தோல்வி கண்டது.

---

15. நவம்பர்.19 – உலக கழிவறை நாள்

---

1. 'வறட்சிக்குத் தகவமைப்பதற்கான பிராந்திய நடவடிக்கைத் திட்டம்' என்பதுடன் தொடர்புடைய நிறுவனம் எது?

அ) ஜி-20

ஆ) பிரிக்ஸ்

இ) ஆசியான் ☑

ஈ) பிம்ஸ்டெக்

✓ ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஐநா பொருளாதாரம் மற்றும் சமூக ஆணையம் (ESCAP) வறட்சியை தழுவுவதற்கான ஆசியான் பிராந்திய நடவடிக்கை திட்டத்தை (ARPA-AD) அறிமுகப்படுத்தியது. செயல்கள் 26 துணைச் செயல்களாகவும், 2021-2025'ஐ உள்ளடக்கிய செயல்படு-த்தல் திட்டமாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. வறட்சிக்கு ஏற்ப தொழில்நுட்ப பணிக்குழுவை உருவாக்குவது முக்கிய பரிந்துரைகளுள் ஒன்றாகும்.

✓ வறட்சி மேலாண்மை சுழற்சி மற்றும் பிராந்திய மற்றும் தேசிய அளவில் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒன்பது குழுக்களின் செயல்திட்டம் இத்திட்டத்தில் உள்ளது.

---

2. 2021 உலக நீரழிவு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Access to Diabetes Care ☑

ஆ) Leaving None behind

இ) Importance of Insulin sensitisers

ஈ) Respect to Sir Frederick Banting

✓ கடந்த 1922'இல் சார்லஸ் ஹெர்பர்ட் பெஸ்டுடன் இணைந்து இன்சுலின் ஹார்மோனைக் கண்டுபிடித்த சர் ஃபிரடெரிக் பான்டிங்கின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர்.14 அன்று உலக நீரழிவு நாள் கொண்டாடப்படுகிறது.

✓ நிபுணர்களின் கூற்றுப்படி, உலகளவில் 463 மில்லியன் மக்கள் நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர்; 90 சதவீதத்தினர் டைப்-2 நீரிழிவு நோயால் (இன்சுலின்கொண்டு சிகிச்சையளிக்கப்பட வேண்டும்) பாதிக்-கப்பட்டுள்ளனர். 2021-23 உலக நீரழிவு நாளுக்கானக் கருப்பொருள் "Access to Diabetes Care – If Not Now, When?" என்பதாகும்.

3.சாவ் பாலோ (பிரேசிலியன்) கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வென்ற பந்தய ஓட்டுநர் யார்?

அ) லூயிஸ் ஹாமில்டன் ☑

ஆ) மேக்ஸ் வெர்ஸ்டாப்பன்

இ) சார்லஸ் லெக்லெர்க்

ஈ) வால்டேரி போட்டாஸ்



✓ ஏழு முறை உலக சாம்பியனான லூயிஸ் ஹாமில்டன், பிரேசிலிய சாவ் பாலோ கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் மேக்ஸ் வெர்ஸ்டாப்பனை வீழ்த்தி அசத்தலான வெற்றியைப் பெற்றார். ஹாமில்டன் பெனால்டி காரணமாக 10ஆவது இடத்திலிருந்து தொடங்கினாலும், அவர் பந்தயத்தில் முதலிடம் பிடித்தார். இப்போட்டியில் வால்டேரி போட்டாஸ் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

---

4. 'பகவான் பிர்சா முண்டா ஸ்மிருதி உத்யன் மற்றும் சுதந்திரப் போராளிகள் அருங்காட்சியகம்' சமீபத்தில் எந்த இந்திய மாநிலத்தில் திறக்கப்பட்டது?

அ) ஒடிசா

ஆ) ஜார்கண்ட் ☑

இ) மேற்கு வங்கம்

ஈ) சத்தீஸ்கர்



✓ இராஞ்சியில் உள்ள பகவான் பிர்சா முண்டா ஸ்மிருதி உத்யன் மற்றும் சுதந்திரப் போராளிகள் அருங்காட்சியகத்தை பிரதமர் நரேந்திர மோடி காணொளிக் காட்சிமூலம் திறந்து வைத்தார்., 2000 நவம்பர்.15 அன்று 19ஆம் நூற்றாண்டின் விடுதலைப் போராட்ட வீரரும் பழங்குடியினத் தலைவருமான பிர்சா முண்டாவின் பிறந்தநாளில் ஜார்கண்ட் மாநிலம் பீகாரிலிருந்து பிரிக்கப்பட்டது. அம்மாநிலத்தின் நிறுவன நாளைக் குறிக்கும் வகையில், மாநிலத்தின் முதலமைச்சர் ஹேமந்த் சோரன், விளிம்புநிலை மக்களுக்கான உலகளாவிய ஓய்வூதியத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

---

5. சமீபத்தில் காலமான பாபாசாகேப் புரந்தரேவுடன் தொடர்புடைய தொழில் எது?

அ) விளையாட்டு வீரர்

ஆ) வரலாற்றாசிரியர் ☑

இ) தொழிலதிபர்

ஈ) அரசியல்வாதி



✓ புகழ்பெற்ற வரலாற்றாசிரியரும் எழுத்தாளருமான பாபாசாகேப் புரந்தரே முதுமை மற்றும் நிமோனிடிஸ் தொடர்பான நோய்களால் தனது 99ஆம் வயதில் காலமானார். புகழ்பெற்ற எழுத்தாளரும் நாடக ஆளுமையுமான புரந்தரே, சத்ரபதி சிவாஜி மகாராஜின் வரலாறு குறித்த தனது பணிக்காக அறியப்பட்டவர். அவர் சிவாஜி, அவரது நிர்வாக பாணி, அத்துடன் அந்தக் காலகட்டத்தின் கோட்டைகள் குறித்தும் பல நூல்களை எழுதியுள்ளார்.

---

6. 2021 T20 உலகக்கோப்பையை வென்ற நாடு எது?

அ) நியூசிலாந்து

ஆ) ஆஸ்திரேலியா ☑

இ) இங்கிலாந்து

ஈ) தென்னாப்பிரிக்கா



✓ 14 ஆண்டு காத்திருப்புக்குப் பிறகு, ஆஸ்திரேலியா தனது முதல் T20 உலகக்கோப்பை கோப்பையை அண்மையில் வென்றது. நியூசிலாந்து நிர்ணயித்த 173 இரன்கள் இலக்கை கேன் வில்லியம்சனின் 85 இரன்களால் ஆஸ்திரேலியா துரத்தியது.

✓ ஆஸ்திரேலியா, 2010'இல் இறுதிப்போட்டியை எட்டியது; ஆனால் அதன் பிறகு அந்த அணி இறுதிப்போட்டியை எட்டவில்லை. ஆஸ்திரேலியா 7 பந்துகள் மீதமிருந்த நிலையில் 173 ரன்களை எட்டியதால், அதிகபட்ச வெற்றிகரமான 'ரன் சேஸ்' என்ற புதிய சாதனையையும் படைத்தது.

---

7. 2016'க்குப் பிறகு முதல் பழங்குடி நாடுகளின் உச்சிமாநாட்டை நடத்தவுள்ள நாடு எது?

அ) இந்தியா

ஆ) அமெரிக்கா ☑

இ) ஜப்பான்

ஈ) ரஷ்யா



✓ கடந்த 2016ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் பழங்குடி நாடுகளின் உச்சி மாநாட்டை அமெரிக்கா நடத்தவுள்ளது. இவ்வுச்சிமாநாட்டின்போது பூர்வீக அமெரிக்கர்களுக்கான பொது பாதுகாப்பு மற்றும் நீதியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிபர் ஜோபிடன் அறிவிப்பார்.

✓ அமெரிக்காவில் உள்ள 570'க்கும் மேற்பட்ட பழங்குடியினத்தைச்சேர்ந்த தலைவர்கள் இந்த இரண்டு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளனர். பூர்வீக அமெரிக்கர்கள் மற்றும் பூர்வீக அலாஸ்கா மக்களை பெரிதும் பாதித்துள்ள COVID-19 தொற்றுநோய் காரணமாக இந்த உச்சிமாநாடு மெய்நிகராக நடத்தப்படுகிறது.

---

8. அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற செக்மேட் என்ற புதிய ரகசிய போர் விமானம் உருவாக்கப்பட்டு வருகிற நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா ☑

இ) சீனா

ஈ) இஸ்ரேல்



✓ இரட்டை எஞ்சின்கொண்ட Su-57 ஃபெலோனுக்குப்பிறகு ரஷ்யா தனது இரண்டாவது இரகசிய போர் விமானத்தை உருவாக்கி வருகிறது. 'Su-75 Checkmate', என்ற பெயரிலான இப்புதிய இரகசிய விமானம் இலகு இரக உத்திசார் விமானம் என்றும் அழைக்கப்படுகிறது.

✓ இவ்விமானத்தை யுனைடெட் ஏர்கிராப்ட் நிறுவனம் உருவாக்கியுள்ளது. இது, மாநில பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப நிறுவனமான ரோஸ்டெக் நிறுவனத்தின் ஒருபகுதியாகும். செக்மேட் என்பது ஐந்தாம் தலைமுறை

இலகுரக போர்விமானமாகும். அது 2023ஆம் ஆண்டில் தனது முதல் பணியைத் தொடங்கும்.

---

9. 2023ஆம் ஆண்டிற்குள் படிக்கவும், பணியாற்றவும் மற்றும் துளிர் நிறுவனங்களை நிறுவவும் உலகளவில் 30000 திறமையாளர்க –ளை ஈர்க்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ள நாடு எது?

அ) ஜெர்மனி

ஆ) பின்லாந்து ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) நார்வே

✓ பின்லாந்து அண்மையில் 'ஃபியூச்சர் இஸ் மேட் இன் பின்லாந்து' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதன்கீழ் வரும் 2023ஆம் ஆண்டுக்குள் படிக்கவும், பணி செய்யவும் மற்றும் நாட்டில் துளிர் நிறுவனங்களை நிறுவவும் இந்தியா உட்பட உலகளவில் 30,000 திறமையாளர்களை ஈர்க்க அந்நாடு திட்டமிட்டுள்ளது.

✓ நான்காவது ஆண்டாக உலகின் மகிழ்ச்சியான நாடாக பின்லாந்து இடம் பிடித்துள்ளது. 2019–2023 பின்லாந்து அரசாங்கத் திட்டத்தின் அடிப்ப –டையில், ஆண்டுதோறும் 10,000 திறமையாளர்களை பின்லாந்துக்கு ஈர்ப்பதை அந்நாடு இலக்காகக் கொண்டுள்ளது.

---

10. 'ஸ்வவலம்பன் சவால் நிதியத்தைத்' தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ) நபார்டு

ஆ) SIDBI ☑

இ) செபி

ஈ) ஆர்பிஐ

✓ இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியானது (SIDBI) ஸ்வவலம்பன் சவால் நிதியத்தின் இரண்டாவது சாளரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நிதியத்தின் கருப்பொருள் 'பசுமை பாரதம்' ஆகும். பசுமை மற்றும் தூய்மையான காலநிலை மாற்றத்தை பூர்த்தி செய்யும் புதுமையான திட்டங்களில் இந்த நிதியத்தின் கவனம் உள்ளது.

✓ நிலையான வாழ்வாதாரம், நிதி உள்ளடக்கம் மற்றும் நிதி சேவைகளுக் –கான அணுகல் மற்றும் தொழில்முனைவோர் கலாசாரத்தை மேம்படுத் தல் ஆகியன இதன் பிற கருப்பொருள்களாம். ஒரு சவால் நிதி என்பது நிறுவனங்களுக்கிடையிலான போட்டியைப் பயன்படுத்தி குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நிதிகளை ஒதுக்குவதற்கான ஒரு நிதியியல் பொறி முறையாகும். ஸ்வவலம்பன் சவால் நிதியத்தின் முதல் சாளரம் இந்த ஆண்டு (2021) ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஆதிச்சநல்லூரில் திறக்கப்பட்ட – முதுமக்கள் தாழிக்குள் மனித மண்டை ஓடு, எலும்பு:

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் கனிமொழி முன்னிலையில் திறக்கப்பட்ட முதுமக்கள் தாழியில், மனிதனின் மண்டை ஓடு மற்றும் எலும்புகள் இருந்தன.

ஆதிச்சநல்லூரில் மத்திய தொல்லியல் துறை சார்பில் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த அக்.10–ம் தேதி மீண்டும் அகழாய்வுப் பணிகள் தொடங்கின. இந்த அகழாய்வில் ஏற்கெனவே 12 முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. சுமார் 2,500 ஆண்டுகள் பழமையான முதுமக்கள் தாழி ஒன்று கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த தாழியைத் திறந்து, உள்ளிருக்கும் பொருட்களை ஆய்வு செய்ய தொல்லியல் துறையினர் ஏற்பாடு செய்தனர்.

நேற்று அந்தத் தாழி திறக்கப்பட்டது. அதற்குள் மனிதமண்டை ஓடு, கால் எலும்பு, சிறுபானைகள் இருந்தன. தாழிக்குள் இருந்த பானைகளில் தானியங்களும், ஆயுதங்களும் இருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக மத்திய தொல்லியல் துறை திருச்சி மண்டல இயக்குநர் தெரிவித்தார்.

---

2. மோசமான காவல் துறையில் முன்னிலை வகிக்கும் பிஹார், உ.பி. மாநிலங்கள்; தென் மாநில போலீஸார் சிறப்பான செயல்பாடு: இந்தியன் போலீஸ் பவுண்டேஷன் ஆய்வில் தகவல்

மோசமான காவல்துறையில் பிஹார், உத்தரபிரதேச மாநிலங்கள் முன்னிலை வகிப்பதாகவும், தென் மாநிலங்கள் சிறப்பாக செயல்படுவதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் காவல் துறை யினரின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது என்பதை இந்தியன் போலீஸ் பவுண்டேஷன் (ஐபிஎஃப்) அமைப்பு ஆய்வு செய்துள்ளது. இதற்காக நாடு முழுவதும் உள்ள மாநிலங்களின் காவல் துறை குறித்து ஒரு ஆய்வை அந்த அமைப்பு நடத்தியுள்ளது. பொதுமக்களின் பிரச்சினைகளை அணுகுவது, குற்றங் களை கையாளும் முறை உட்பட பல அம்சங்கள் ஆய்வில் இடம் பெறுகின்றன.

அந்த வகையில் பிஹார், உத்தர பிரதேச மாநில காவல்துறை யின் செயல்பாடுகள் மோசமாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள ஒட்டுமொத்த காவல்துறையின் செயல்பாடு 69 சதவீதம் திருப்தி கரமாக உள்ளதாக அந்த ஆய்வுகள் முடிவுகள் தெரிவிக்கின்றன.

மோசமான காவல்துறை செயல் பாடுகள் உள்ள மாநிலங்களாக பிஹார், உத்தரபிரதேசம், சத்தீஸ் கர், ஜார்க்கண்ட், பஞ்சாப் ஆகியமாநிலங்கள் உள்ளன. இந்த மாநிலங்கள் மோசமான காவல்துறை பட்டியலில் கடைசி இடங்களில் உள்ளன.

அதே நேரத்தில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் தென்இந்தியாவைச் சேர்ந்த 3 மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வரிசையில் முதலிடத்தில் ஆந்திராவும், 2–ம் இடத்தில் தெலங்கானாவும், 3–ம் இடத்தில் அசாமும், 4–ம் இடத்தில் கேரளாவும், 5–ம் இடத்தில் ஒடிஷாவும் உள்ளன.

இதுகுறித்து இந்தியன் போலீஸ் பவுண்டேஷன் அமைப்பின் சேர்மனும், முன்னாள் உ.பி. போலீஸ் டிஜிபியுமான பிரகாஷ் சிங் கூறும்போது, "பிரதமரின் நவீன போலீஸ் முன்னெடுப்பு திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு மாநில போலீஸாரின் செயல்பாட்டை ஆய்வு செய்தோம். நாட்டில் ஒட்டுமொத்த போலீஸாரின் செயல்பாடு 69 சதவீதம் திருப்தி அளிப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பட்டியலில் கடைசியில்உள்ள மாநிலங்கள் சிறப்பாக செயல்படுவதற்கான முயற்சிகளை நாங்கள் முன்னெடுத்து வருகிறோம். அதற்குத் தேவையான பயிற்சிகள் அந்த மாநில போலீஸாருக்கு வழங்கப்படும்" என்றார்.

ஐபிஎஃப் தலைவரும், ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரியுமான என்.ராமச்சந்திரன் கூறும்போது, "நாடு முழுவதும் 1.61 லட்சம் பேரிடம் இந்த ஆய்வை நடத்தினோம். ஆன்–லைன் மூலமாகவும், நேரடியாகச் சென்றும் கடந்த 5 மாதங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன" என்றார். –பிடிஐ

நாட்டில் ஒட்டுமொத்த போலீஸாரின் செயல்பாடு 69 சதவீதம் திருப்தி அளிப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர்,

---

3. ரேடாரை செயலிழக்க செய்யும் நவீன கருவி கடற்படையிடம் பிரதமர் மோடி ஒப்படைப்பு:

எதிரி நாட்டு ரேடார்களை துல்லியமாக கண்காணித்து அவற்றை செயலிழக்க செய்யும் வகையிலான 'சக்தி' என்ற பெயரிலான எலக்ட்ரானிக் போர்முறைக் கருவியை (எலக்ட்ரானிக் வார்ஃபேர் சிஸ்டம்) டிஆர்டிஓ நிறுவனம் அண்மையில் வடிவமைத்தது. இந்தக் கருவிகளை பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. ரூ.1,805 கோடி செலவில் 12 கருவிகள் தயாரிக்கப்பட்டு வந்த சூழலில், சமீபத்தில் 2 கருவிகளின் வடிவமைப்பு முழுவதுமாக நிறைவடைந்துள்ளது.

இதையடுத்து, இந்தக் கருவிகளை இந்தியக் கடற்படையிடம் பிரதமர் நரேந்திர மோடி நேற்று ஒப்படைத்தார். உத்தரபிரதேச மாநிலம் ஜான்சியில் உள்ள கடற்படை தளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்தக் கருவியை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

---

4. வேளாண் சட்டங்கள் போராட்டம்: ஒரு கண்ணோட்டம்

மத்திய அரசு கொண்டுவந்துள்ள 3 புதிய வேளாண் சட்டங்களை வாபஸ் பெற முடிவு செய்துள்ள தாகவும், இது தொடர்பாக வரும்நாடாளுமன்ற கூட்டத்தொடரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்றும் பிரதமர் மோடி நேற்று அறிவித்துள்ளார்.

வேளாண் சட்டங்கள் போராட்டம் தொடர்பான கண்ணோட்டம் வருமாறு:

ஜூன் 5, 2020: 3 புதிய வேளாண் சட்டங்களைக் கொண்டு வருவ தற்கான அவசரச் சட்டங்களை மத்திய அரசு பிறப்பித்தது.

ஜூன் 6, 2020: அவசரச் சட்டங்களைஎதிர்த்து பஞ்சாபில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் தொடக்கம்.

செப். 14, 2020: நாடாளுமன்றத்தில் 3 புதிய வேளாண் அவசரச் சட்டங்கள் தாக்கல்.

செப். 17, 2020: அவசரச் சட்டங்கள் மக்களவையில் நிறைவேற்றம்.

செப். 20, 2020: குரல் வாக்கெடுப்பு மூலம் மாநிலங்களவையில் அவசரச் சட்டங்கள் நிறை வேற்றம்.

செப். 23, 2020: சட்டங்களுக்கு எதிராக ஒன்றாக இணைந்து போராட 31 விவசாய அமைப்பு கள் முடிவு.

செப். 27, 2020: 3 விவசாய மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல்.

அக். 8, 2020: விவசாயிகளுடன் பேச்சு நடத்த 8 உறுப்பினர்கள் கொண்ட குழுவை மத்திய அரசு அறிவித்தது.

நவ. 23, 2020: டெல்லி சலோ போராட்டத்தை அறிவித்தது விவசாயிகள் சங்கம்.

டிச. 3, 2020: விவசாய அமைப்புகள், மத்திய அரசுடன் முதல் சுற்று பேச்சுவார்த்தை.

டிச. 8, 2020: நாடு தழுவிய பந்த் நடத்த விவசாயிகள் அமைப்பு அழைப்பு.

டிச. 9, 2020: மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் விவசாயத் தலைவர்கள் சந்திப்பு.

டிச. 16, 2020: பிரச்சினையைத் தீர்க்க குழு அமைக்கலாம் என உச்ச நீதிமன்றம் யோசனை.

டிச. 21, 2020: 24 மணி நேர தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை விவசாயிகள் அறிவித்தனர்.

ஜன. 7, 2021: குடியரசு தினத்தில் டெல்லியில் டிராக்டர் பேரணி நடத்தப் போவதாக விவசாயிகள் அறிவிப்பு.

ஜன. 11, 2021: விவசாயிகள் போராட்டத்தைத் தவறாக கையாள்வதாக மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கண்டனம்.

ஜன. 12, 2021: வேளாண் சட்டங்களுக்கு காலவரையற்ற தடையை உச்ச நீதிமன்றம் அறிவித்தது. மேலும் 4 பேர் கொண்ட உச்ச நீதிமன்றக் குழுவை அமைப்பதாகவும் அறிவித்தது.

ஜன. 22, 2021: தோல்வியில் முடிந்தது விவசாயிகள், மத்திய அரசு இடையிலான 11–வது சுற்று பேச்சுவார்த்தை.

ஜன. 26, 2021: டெல்லியில் நுழைந்த விவசாயிகள் போலீஸாருடன் மோதல், செங்கோட்டையில் கொடியேற்றி ஆர்ப்பாட்டம்.

ஜன. 28, 2021: காஸிப்பூர் போராட்டத்தின்போது பாரதீயகிஸான் யூனியன் தலைவர் ராக்கேஷ் டிகைத் உணர்ச்சி கரமான வகையில் பேச்சு.

ஜன. 29, 2021: முஸாபர்நகரில் நடைபெற்ற மகாபஞ்சாயத்தில் ஆயிரக்கணக்கான விவசாயி கள் பங்கேற்பு.

பிப். 3, 2021: விவசாயிகள் போராட்டத்துக்கு பருவநிலை மாறுபாட்டு ஆர்வலர் கிரேட்டா தன்பர்க் ஆதரவு, டூல் கிட்டையும் வெளியிட்டார்.

பிப். 13, 2021: டூல்கிட் விவகாரத்தில் பெங்களூருவைச் சேர்ந்த திஷா ரவியை டெல்லி போலீஸார் கைது செய்தனர்.

பிப். 18, 2021: நாடு தழுவிய ரயில் மறியல் போராட்டத்தை அறிவித்தது சம்யுக்தா கிஸான் மோர்ச்சா (எஸ்கேஎம்).

பிப். 23, 2021: திஷா ரவிக்கு டெல்லி செஷன்ஸ் நீதிமன்றம் ஜாமீன்.

மார்ச் 5, 2021: நிபந்தனையற்ற முறையில் சட்டங்களை மத்திய அரசு வாபஸ் பெறவேண்டும் என பஞ்சாப் சட்டப் பேரவையில் தீர்மானம்.

மார்ச் 6, 2021: டெல்லி எல்லையில் விவசாயிகள் போராட்டம் 100–வது நாளை எட்டியது.

மே 27, 2021: போராட்டம் தொடங்கி 6 மாதங்கள் நிறை வடைந்ததையொட்டி கருப்பு தினத்தை அனுஷ்டித்த விவசாயிகள்.

ஆக. 7, 2021: டெல்லி ஜந்தர் மந்தரில் நடைபெறும் கிஸான்சன்சத் (விவசாயிகள் நாடாளு மன்றம்) நிகழ்ச்சியில் பங்கேற்க 14 எதிர்க்கட்சித் தலைவர்கள் முடிவு.

நவ. 19, 2021: விவசாய சட்டங்களை வாபஸ் பெறுவதாக பிரதமர் மோடி அறிவிப்பு.

---

5. ஆசிய வில்வித்தை: இறுதி நாளில் இந்தியாவுக்கு 3 பதக்கம்

ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதி நாளான வெள்ளிக்கிழமை இந்தியா 2 வெள்ளி, 1 வெண்கலம் என 3 பதக்கங்களை வென்றது.

வங்கதேச தலைநகர் டாக்காவில் ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டிகள் நடைபெற்று வந்தன. இறுதி நாளான வெள்ளிக்கிழமை மகளிர், ஆடவர் ரெக்கர்வ் பிரிவில் பலம் வாய்ந்த கொரிய அணியை எதிர்கொண்டது இந்தியா.

இறுதிச் சுற்றில் இந்திய அணிகள் தோல்வி கண்டன. ஆடவர் பிரிவில் ஒலிம்பியன் பிரவீன் ஜாதவ், தேசிய சாம்பியன் பரத் சலுன்கே, கபில் ஆகியோர் இடங்கிய இந்திய அணி 2–6 என்ற புள்ளிக் கணக்கில் கொரிய ஆடவரிடம் தோல்வி கண்டு வெள்ளியை வென்றது.

மகளிர் பிரிவில் அங்கிதா பகத், மதுவேத்வான், ரிதி ஆகியோர் கொண்ட இந்திய அணி 0–6 என்ற புள்ளிக் கணக்கில் கொரியாவிடம் தோற்று வெள்ளி வென்றனர்.

மேலும் கலப்பு ரெக்கர்வ் பிரிவில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் உஸ்பெகிஸ்தான் அணியை 6–0 என்ற புள்ளிக் கணக்கில் அங்கிதா பகத்–கபில் இணை வீழ்த்தி வெண்கலம் வென்றது.

இப்போட்டியில் ஜோதி சுரேகா தங்கம் வென்றார். 1 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது இந்தியா.

---

6. 'பாடப் புத்தகங்களில் பள்ளிக் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு'

பாடப் புத்தகங்களிலும் பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு தகவல், தொடர்பு எண் உள்ளிட்டவை இடம்பெறும் என்றார் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

சர்வதேச குழந்தைகளுக்கு எதிரான வன்முறை தடுப்பு தினத்தை முன்னிட்டு திருச்சி பிஷப் ஹீபர் பள்ளியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குழந்தைகளின் பாதுகாப்பு விழிப்புணர்வுப் பயிற்சி பணிமனையை தொடங்கி வைத்த அமைச்சர் மேலும் கூறியது:

தமிழகத்தில் முதல்கட்டமாக திருச்சியில் இந்தப் பயிற்சி 316 பேருக்கு அளிக்கப்படுகிறது. தொடர்ந்து சென்னையில் நாளொன்றுக்கு 400 போர் பயன்பெறும் வகையில் பயிலரங்கு நடைபெறும். பின்னர், அனைத்து மாவட்டங்களிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள், பள்ளி நிர்வாகக் குழுவினர் முன்மாதிரி அலுவலர்களாகச் செயல்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்துவர்.

தமிழகம் முழுவதும் உள்ள 2.87 லட்சம் வகுப்பறைகளிலும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு சுவரொட்டி இடம்பெறச் செய்யப்படும். மேலும், போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வு, குழந்தைகள் உதவி பெற 14417 என்ற கட்டணமில்லா தொலைபேசி குறித்தும் பாடப்புத்தகங்களில் முதல் பக்கத்திலேயே வெளியிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

மாணவர்கள் அளிக்கும் புகார்களின் உண்மை தன்மை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். நிலுவையில் உள்ள புகார்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பள்ளிகளில் மாணவர்கள் புகார் அளிப்பது வெளியே தெரிந்தால் பள்ளிக்கு அவப்பெயர் ஏற்படுகிறது எனக் கருதி அதை மூடி மறைக்க தனியார் பள்ளி நிர்வாகங்கள் முயற்சிக்கின்றன. அதற்காக பிரச்னைகளை விசாரிக்காமல் விட்டு விடக் கூடாது. மாணவர்களின் நலன் கருதி கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பணம் செலுத்தவில்லை என்பதற்காக தனியார் பள்ளி ஆன்லைன் வகுப்புகளில் மாணவர்களைப் புறக்கணிப்பதோ, பள்ளித் தேர்வு வினாத்தாள், விடைத்தாள் வழங்காமலோ, இதர கல்விச் சேவை அளிக்காமலோ புறக்கணித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு பள்ளிகளுக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2021–2022 ஆம் கல்வியாண்டில் 5 லட்சம் மாணவர்கள் புதிதாக அரசுப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். இதன்மூலம் தற்போது ஏறத்தாழ 71 லட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் பயில்கின்றனர் என்றார்.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநிலத் திட்ட இயக்குநர் ஆர். சுதன் பேசுகையில், பள்ளி ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள், முதல்வர்கள், பள்ளி நிர்வாகத்தினர், பள்ளி மேலாண்மைக் குழுவினர், ஆசிரியரல்லாத பணியாளர்கள், பெற்றோர் என அனைத்துத் தரப்பும் ஒன்றிணைந்து குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றார்.

---

7. நிதி தொழில்நுட்ப ஆட்சிமன்றக் குழு அமைப்பு: தமிழக அரசு உத்தரவு

வர்த்தக மேம்பாடு, சந்தைப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளக் கூடிய நிதி தொழில்நுட்பப் பணிகளுக்கென தனி ஆட்சிமன்றக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக தொழில் துறை அமைச்சர் இருப்பார் என அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் வெளியிட்ட உத்தரவு:–

நிதிதொழில்நுட்பத்துக்கான ஆட்சிமன்றக் குழுவின் தலைவராக தொழில் துறை அமைச்சரும், துணைத் தலைவராக தலைமைச் செயலாளரும் செயல்படுவர். மேலும் தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் முதன்மைச் செயலாளர், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை செயலாளர், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் உள்ளிட்டோர் உறுப்பினர்களாக இருப்பர். அவர்களுடன் நிதி சார்ந்த துறைகளில் வல்லுநர்களான பாலாஜி நூதலபாடி, சுந்தர் கண்ணன், ராம்குமார் ராமமூர்த்தி ஆகியோரும் உறுப்பினர்களாகச் செயல்படுவர்.

நிதிதொழில்நுட்பம் மற்றும் அதுசார்ந்த துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள், முன்னெடுப்புகள் ஆகியவற்றை இந்த ஆட்சிமன்றக் குழு தீவிரமாக கண்காணிக்கும். சந்தைப்படுத்துதல் மற்றும் முத்திரைப்படுத்துதல், வணிக மேம்பாடு, கூட்டாண்மைகள், கல்வி, முதலீடுகள் போன்ற துறைகளில் கொள்கைகளை வகுக்க துணைக் குழுக்களை ஏற்படுத்தும் பணிகளை ஆட்சிமன்றக் குழு செய்யும். மேலும், துறைகளில் நிபுணத்துவம் பெற்றோர்களின் ஆலோசனைகளும் ஆட்சிமன்றக் குழுவால் கோரப்படும். இந்தக் குழுவானது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடி விவாதிக்கும் என அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

8. 'தமிழ்நாடு குழந்தைகளுக்கான கொள்கை 2021': முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், "தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021"–ஐ இன்று வெளியிட்டார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (20.11.2021) தலைமைச் செயலகத்தில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தமிழகத்தில் குழந்தைகள் பாதுகாப்புடன் வாழவும், ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் உரிமைகள் பெறவும் தனித்துவம் வாய்ந்த "தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021" வெளியிட்டார். மேலும், நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் 1,148 குழந்தைகளுக்கு நிதியுதவியும், கருணை அடிப்படையில் 15 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்.

தமிழகத்தில் குழந்தைகள் பாதுகாப்புடன் வாழவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றி ஒருங்கிணைந்த வளர்ச்சியை பெறவும், குழந்தைகளின் உரிமைகள் எவ்வித தடையுமின்றி கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யவும் மாநில அளவில் குழந்தைகளுக்கான கொள்கையை வடிவமைத்தல் இன்றியமையாதது ஆகும்.

இதனைக் கருத்தில் கொண்டு அவர்களின் வளர்ச்சிப் படிநிலைகளுக்கான இலக்கினை அடைந்திடவும், குழந்தைகளின் ஊட்டச்சத்து, கல்வி, மருத்துவம், பாலியல் பாகுபாடின்மை, பாதுகாப்பு இவை அனைத்திற்குமான தனித்துவம் வாய்ந்த கொள்கையாக "தமிழ்நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021" வடிவமைக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் மேல் மாறாத அன்பும் அவர்களின் நலனில் மிகுந்த அக்கறையும் கொண்டுள்ள தமிழக முதல்வர், கோவிட்–19 நோய் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு, பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு பல்வேறு உதவி திட்டங்களையும் நிவாரண நிதி உதவிகளையும் வழங்குவதற்கு 29.05.2021 அன்று பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

அவ்வறிப்பினை தொடர்ந்து, இத்திட்டத்தின் கீழ் இதுநாள்வரையில் கோவிட்–19 நோய் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோர்களை இழந்த 256 குழந்தைகளுக்கு ரூ.12.80 கோடி மற்றும் ஒரு பெற்றோரை இழந்த 6,493 குழந்தைகளுக்கு ரூ.194.79 கோடி, என மொத்தம் 6,749 குழந்தைகளுக்கு ரூ.207.59 கோடி தமிழ்நாடு அரசால் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் 2021–22ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், பெற்றோர் இருந்தும் வறுமை நிலை காரணமாக, பராமரிக்க இயலாது குழந்தைகளை நிறுவனங்களில் வைத்து பராமரிப்பதற்கு மாற்றாக குடும்பங்களில் வைத்து பராமரிப்பதை ஊக்குவிக்கும் வண்ணம், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நிதி ஆதரவுத் திட்டத்தின் காத்திருப்பு பட்டியலில் உள்ள 1,148 குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 வீதம் 3 ஆண்டுகளுக்கு மாநில அரசின் முழு பங்களிப்புடன் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இத்திட்டத்திற்காக நடப்பு நிதி ஆண்டில் ரூ.1,37,76,000/– நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் 10 குழந்தைகளுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின், நிதியுதவிக்கான காசோலைகளை வழங்கினார்.

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் சமூகநல இயக்குநரக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அலுவலகங்களில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 15 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் ஆகிய பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக ஸ்டாலின், 7 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

---

8. தூய்மை நகரங்கள் பட்டியலில் சென்னை மாநகராட்சிக்கு 43–வது இடம்

தூய்மை நகரங்கள் பட்டியலில் இந்த ஆண்டு சென்னை மாநகராட்சிக்கு 43–வது இடம் கிடைத்துள்ளது. மாணவர்களுக்கு 'சுகாதார தூதர்' அட்டை வழங்கியதை பாராட்டி, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் விருது வழங்கி கவுரவித்துள்ளது.

மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும்நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் சார்பில், தூய்மை இந்தியா இயக்கம்கடந்த 2014–ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன்கீழ் கடந்த 2016–ம் ஆண்டுமுதல் தேசிய அளவில் தூய்மை நகர கணக்கெடுப்பு நடத்தி, தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படுகிறது. தூய்மைப் பணியில் சிறந்து விளங்கும் நகர்ப்புற உள்ளாட்சிக்கு விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

2021–ம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் நேற்று நடைபெற்றது. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பங்கேற்று தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு, நாட்டிலேயே தூய்மையான நகரங்கள் பட்டியலில் முதலிடம் பிடித்த இந்தூர், 2–ம் இடம் பிடித்த சூரத், 3–ம் இடம் பிடித்த விஜயவாடா ஆகிய நகரங்களுக்கு விருதுகளை வழங்கினார்.

தூய்மை நகரங்கள் பட்டியலில் சென்னை மாநகராட்சி 43–வது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஆண்டில், சென்னை 45–வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில், 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட 48 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பங்கேற்றிருந்தன. இதில் சென்னை மாநகராட்சிக்கு 43–வது இடம் கிடைத்துள்ளது. இத்தரவரிசையில் தமிழ்நாட்டில் இருந்து பங்கு பெற்ற சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில், சென்னை முதலிடத்தில் உள்ளது.

இந்த ஆண்டுக்கான 'திடக்கழிவு மேலாண்மையில் புதுமை படைத்தல் மற்றும் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுதல்' என்ற பிரிவின்கீழ் சென்னைமாநகராட்சிக்கு விருது கிடைத்துள்ளது. இந்த விருதை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை செயலர் துர்கா சங்கர் மிஸ்ரா வழங்க, சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) எஸ்.மனீஷ் பெற்றுக்கொண்டார்.

சென்னை மாநகராட்சியின் சுகாதாரக் கல்வித்துறை சார்பில் திடக்கழிவுமேலாண்மை, மக்கும் குப்பைகள் மூலம் வீட்டிலேயே இயற்கை உரம் தயாரித்தல் உள்ளிட்டவை குறித்து பள்ளி மாணவ,

மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாணவ, மாணவியும் மாநகராட்சியின் சுகாதாரத் தூதராக செயல்பட்டு, மாநகர தூய்மையை உறுதிப்படுத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து, உறுதிமொழி எடுத்தல் மற்றும் "சுகாதார தூதர்" அடையாள அட்டைகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கி கவுரவிக்கும் பணிகளையும் மாநகராட்சி சுகாதாரக் கல்வித்துறை மேற்கொண்டு வருகிறது.

இப்பணியை பாராட்டியே இந்த ஆண்டு, மத்திய அரசு சார்பில் திடக்கழிவு மேலாண்மையில் "புதுமை படைத்தல் மற்றும் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுதல்" என்ற விருது சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

9. இந்திய தொழில் கூட்டமைப்பின் 'கனெக்ட் 2021' மாநாடு– நவ.26–ல் முதல்வர் தொடங்கி வைக்கிறார்

தமிழக அரசுடன் இணைந்து இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ)நடத்தும், தகவல் தொடர்புத் துறை குறித்த 'கனெக்ட் 2021' சர்வதேச மாநாடு மற்றும் கண்காட்சியை வரும் நவம்பர் 26–ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இம்மாநாடு, ஒரு நிலையான ஆழமான தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதை கருப்பொருளாக கொண்டு நடத்தப்படுகிறது.

மாநாட்டை தொடங்கிவைக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், கனெக்ட்2021 விருதுகளை வழங்கி, தமிழகஅரசின் தகவல் தொழில்நுட்பத்துறையின் பல்வேறு கொள்கைகளை அறிமுகப்படுத்துகிறார். இந்த மாநாடு தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக பேசும்போது, "தமிழக அரசும்இந்திய தொழில் கூட்டமைப்பும் இணைந்து கடந்த 2000–ம் ஆண்டுமுதல் நடத்தும் கனெக்ட் மாநாடு மூலம் தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாக மாறி வருகிறது. இந்தமாநாடு மூலம் தகவல் தொழில்நுட்பத்துறையில் புதிய முதலீடுகள் தமிழகத்துக்கு வரவேண்டும். 2030–க்குள் தமிழகம் ஒரு ட்ரில்லியன் டாலர் அளவில் பொருளாதார உற்பத்தியை அடைவதற்கு இந்தமாநாடு உதவுவதாக அமையவேண்டும்'' என்றார்.

சிஐஐ தமிழ்நாடு தலைவர் டாக்டர் எஸ். சந்திரகுமார் கூறும்போது, "கடந்த 20 ஆண்டுகளில் கனெக்ட் மாநாடு தொழில்நுட்ப தளங்கள் உருவாக்கம், ஐசிடி அகாடமி, சிறப்பு தொழில்நுட்ப பூங்காக்கள், விண்வெளி தொழில் பூங்காவில் புதிய மேம்பாடுகள், திறன் மேம்பாட்டிற்கான தகவல் தொழில்நுட்ப கூட்டமைப்பு உள்ளிட்டவற்றில் பல்வேறு சாதனை முயற்சிகளை உருவாக்கி உள்ளது'' என்றார்.

சிஐஐ கனெக்ட் 2021 தலைவர் ஜோஷ் பவுல்கர் பேசும்போது, "இந்த மாநாடு தற்போது அனைத்துதொழில்நுட்ப வழங்குநர்களையும் தொழில்நுட்ப நுகர்வு தொழில்களையும் இணைத்து, எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி மற்றும் ஒட்டுமொத்த சேவைகள் துறையில் சிறப்பு கவனம் செலுத்தும் விதமாக மாறி உள்ளது'' என்றார்.

---

10. ரூ.44.30 கோடியில் காவல்துறை கட்டிடம் திறப்பு – தடய அறிவியல் துறைக்காக 'மரபணு தேடல் மென்பொருள்' : முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்

தமிழ்நாடு தடய அறிவியல் துறையால் நாட்டில் முதல் முறையாக உருவாக்கப்பட்டுள்ள 'தடய மரபணு தேடல் மென்பொருளை' முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டு, காவல்துறை கட்டிடங்களையும் திறந்துவைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு தடய அறிவியல் துறையின் டிஎன்ஏ பிரிவில் தடய மரபணுதேடல் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே முதல் மாநிலம்

இதன்மூலம் இத்தொழில்நுட்பத்தை நாட்டில் அறிமுகப்படுத்துவதில் முதல் மாநிலமாக தமிழகம்திகழ்கிறது. இந்த தேடல் மென்பொருளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

இப்புதிய தடய மரபணு தேடல் மென்பொருள் மூலமாக, கடத்தப்பட்ட குழந்தைகள் மற்றும் காணாமல் போன குழந்தைகளை மரபணு ஒப்பீடு ஆய்வு மூலம் உரிய பெற்றோருடன் ஒப்படைத்தல், மாநிலங்களுக்கு இடையில் செயல்படும் குற்றவாளிகளின் தொடர்பை கண்டறிதல், கரையோரம் ஒதுங்கும் அடையாளம் தெரியாத உடல்கள் மற்றும் மனித எலும்புகளை மரபணு ஆய்வு மூலம் அடையாளம் காணுதல், தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கண்டறிதல், இயற்கை பேரிடர்களால் உயிரிழந்தவர்களை கண்டறிதல் போன்ற பணிகளை எளிதாகவும், துரிதமாகவும் மேற்கொள்ள முடியும்.

---

11. தமிழகத்தில் முதல்முறையாக கரூரில் – கருத்தடை செய்யும் ஆண்களுக்கு 'தங்கத் தந்தை' விருது : மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தார்

தமிழகத்திலேயே முதல்முறையாக, கரூர் மாவட்டத்தில் கருத்தடை செய்துகொள்ளும் ஆண்களுக்கு ரூ.5,000 ஊக்கத் தொகையுடன் 'தங்கத் தந்தை' விருது அல்லது இலவச வீட்டுமனைப் பட்டா போன்ற ஏதேனும் ஒருஅரசுத் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் த.பிரபுசங்கர் தெரிவித்தார்.

கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஆண்களுக்கு அரசு சார்பில் ரூ.1,100 ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தமிழகத்திலேயே முதன்முறையாக, கரூர் மாவட்டத்தில் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ள முன்வரும் ஆண்களை ஊக்குவித்து கவுரவிக்கும் வகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் ரூ.5,000 ஊக்கத் தொகையுடன் தங்கத் தந்தை விருது வழங்கும் திட்ட தொடக்க விழா அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் த.பிரபு சங்கர் திட்டத்தை தொடங்கி வைத்து, கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆண்களுக்கு தங்கத் தந்தை விருது வழங்கினார்.

பின்னர் ஆட்சியர் த.பிரபுசங்கர் பேசியது: ஆண்கள் கருத்தடை செய்து கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் ரூ.5,000 ஊக்கத் தொகையுடன் தங்கத் தந்தை விருது வழங்கப்படும். அல்லது இலவச வீட்டு மனைப்பட்டா, வீட்டில் உள்ள முதியவர் ஒருவருக்கு மாதாந்திர உதவித் தொகை, விலையில்லா கறவை மாடு, சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் தொடங்கரூ.10 லட்சம் வரை பிணையில்லா வங்கிக் கடனுதவி, சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசனம் அமைத்து தருதல், தோட்டக்கலைத் துறைமூலமாக தென்னையில் பல அடுக்கு பயிர் திட்டத்தின் மூலம்ஒரு ஹெக்டேருக்கு ரூ.40,000 வரைமானியம் வழங்குதல் போன்ற ஏதேனும் ஒரு அரசுத் திட்டத்தில் முன்னுரிமை அளித்து நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என்றார்.

முதல்நாளில் 21 பேர்

நேற்று நடந்த முகாமில் 21க்கும் மேற்பட்ட ஆண்கள் பங்கேற்று கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்டனர். அவர்களுக்கு ஊக்கத் தொகையுடன், தங்கத் தந்தை விருது வழங்கப்பட்டது.

---

12. கரோனா அறிகுறி உள்ளவர்களுக்கான ஆயுஷ்–64 மாத்திரை தயாரிப்பு 46 நிறுவனங்களுக்கு அனுமதி: மத்திய ஆயுஷ் அமைச்சகம் ஒப்புதல்

கரோனா அறிகுறி உள்ளவர்களை குணப்படுத்த உதவும் ஆயுஷ்–64 மாத்திரை தயாரிப்புக்கான தொழில்நுட்பத்தை 46 நிறுவனங்களுக்கு அளிக்க மத்திய ஆயுஷ்அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

கரோனா வைரஸ் தடுப்பில் அதாவது ஏ சிம்டம் மற்றும் குறைந்த அளவு நோய் தொற்றுஅறிகுறி உள்ளவர்களை குணப்படுத்துவதற்கு ஆயுஷ்–64 மாத்திரை மிகவும் உதவியாக உள்ளது. இதுவரை 7 நிறுவனங்கள் மட்டுமே இந்த மாத்திரையைத் தயாரிப்பதற்கான உரிமத்தைப் பெற்றிருந்தன. தற்போதுஇந்த மாத்திரையின் தேவையைக் கருத்தில் கொண்டு அதிகஅளவிலான நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் மலேரியா நோய்க்கான மாத்திரையாக ஆயுஷ்–64 பரிந்துரைக்கப்பட்டு வந்தது. நாட்டில் கரோனா வைரஸ்பரவியபோது குறைந்த அளவிலான பாதிப்பு உள்ளவர்களுக்கு இது மிகச் சிறந்த தீர்வாக இருந்தது. கரோனா வைரஸ் தொற்றில் பாதிக்கப்பட்டு வீட்டில் சிகிச்சை பெற்றுவந்த 63 ஆயிரம் பேர் இந்த மாத்திரையை சாப்பிட்டு விரைவாக குணமடைந் துள்ளனர்.

இதைத் தொடர்ந்து ஆயுஷ்–64 மாத்திரைக்கான தேவை அதிகரித்தது. இது உடலில் நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்க உதவியதோடு, காய்ச்சலின் தீவிரத்தை குறைக்க உதவியது. கரோனா முதல் அலை தீவிரமடைந்தபோது பலருக்கும் இது மிகவும் உதவியாக இருந்தது.

இந்த மாத்திரையின் செயல் பாடு குறித்து 8 தனித்தனி மருத்துவ சோதனைகள் நடத்தப்பட்டன. இது மிகச் சிறந்த பலனை அளித்துள்ளது.

மேலும் எவ்வித பக்க விளைவுகளையும் இந்த மாத்திரை ஏற்படுத்தவில்லை என்பதும் இதன் தனிச் சிறப்பாகும். – பிடிஐ

---

13. உள்நாட்டில் தயாரான போர்க்கப்பல் – ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் இன்று நாட்டுக்கு அர்ப்பணிப்பு:

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர்க்கப்பலான ஐஎன்எஸ்விசாகப்பட்டினம், இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

இந்திய கடற்படையில் போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிகள், ரோந்துகப்பல்கள் என 130 கப்பல்கள் உள்ளன. வரும் 2027–ம் ஆண்டுக்குள் கடற்படை கப்பல்களின் எண்ணிக்கையை 170 ஆக உயர்த்ததிட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வரிசையில் ஐஎன்எஸ்விசாகப்பட்டினம் போர்க்கப்பல் இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கப் படுகிறது. மும்பையில் நடைபெறும் விழாவில் இந்த போர்க்கப்பல் கடற்படையில் சேர்க்கப்படுகிறது. மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் விழாவுக்கு தலைமை வகிக்கிறார்.

மத்திய பாதுகாப்புத் துறையின் 15 பி திட்டத்தின் கீழ் 4 அதிநவீன போர்க்கப்பல்கள் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. இதில் முதல் போர்க்கப்பலான ஐஎன்எஸ்விசாகப்பட்டினம் மும்பை கட்டுமான தளத்தில் தயாரிக்கப்பட்டு அனைத்து சோதனைகளையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

7,400 டன் எடை கொண்டது

இதைத் தொடர்ந்தே அந்த போர்க்கப்பல் கடற்படையில் இணைகிறது. இது 7,400 டன் எடை கொண்டது. நிர்பய், பிரம்மோஸ், பாரக் உள்ளிட்ட அதிநவீனஏவுகணைகள், அதிநவீன ரேடார்கள் கப்பலில் பொருத்தப்பட் டுள்ளன. இதில் 2 ஹெலிகாப் டர்களை நிறுத்தி வைக்கும் வசதியும் உள்ளது. 50 அதிகாரி களும் 250 வீரர்களும் கப்பலில் பணியாற்ற உள்ளனர்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஐஎன்எஸ் வேலா நீர்மூழ்கி கப்பல் வரும் 28–ம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. இதுபிரான்ஸ் தொழில்நுட்பத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள் ளது. 1,775 டன் எடை கொண்டஇந்த நீர்மூழ்கியில், போர்க்கப் பல்களை தாக்கி அழிக்கும் அதிநவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன.

---

14. உலகின் முதல் மின்சார தானியங்கி கார்கோ கப்பல்: நார்வேயின் யாரா இன்டர்நேஷனல் அறிமுகம்

நார்வேயின் பிரபல உரத் தயாரிப்பு நிறுவனமான யாரா இன்டர்நேஷனல் உலகின் முதல் மின்சார தானியங்கி சரக்கு கப்பலை அறிமுகம் செய்துள்ளது.

யாரா பிர்க்லேண்ட் என்று பெயரிடப்பட்டுள்ள 80 மீட்டர் நீளமுள்ள இந்த எலெக்ட்ரிக் தானியங்கி சரக்கு கப்பல் தெற்கு நார்வேயின் போர்ஸ்கிரன்னில் உள்ள உற்பத்தி ஆலையிலிருந்து 14 கிமீ தொலைவில் பிரெவிக்கில் உள்ள ஏற்றுமதி துறைமுக முனையம் வரையிலான சரக்கு போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட உள்ளது.

முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் இந்தக் கப்பல் இந்நிறுவனத்தின் 40,000 டீசல் லாரி போக்குவரத்துக்கு மாற்றாக விளங்கும். இதனால் ஆண்டுக்கு 1000 டன் கார்பன் வெளியேற்றம் குறையும். இதன்மூலம் நாட்டின் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் முயற்சியில் யாரா நிறுவனத்தின் இக்கப்பல் பெரும்பங்கு வகிக்கும் என்று அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்வெய்ன் தோர் ஹோல்ஸ்தர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறும்போது, "மின்சார மற்றும் தானியங்கி தொழில்நுட்பம் மூலம் இயங்கும் கப்பலை உலகிலேயே முதன்முறையாக அறிமுகம் செய்வதன்மூலம் மிகப்பெரிய மாற்றத்தின் முதல் அடியை எடுத்து வைத்துள்ளோம். இங்கு மட்டுமல்லாமல் உலகின் பல நீர்வழித்தடங்களில் இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் சாத்தியங்கள் உள்ளன. அவற்றை முழுமையாக பயன்படுத்தினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம்" என்றார்.

இந்த கப்பல் முழுமையாகமின்சாரத்தில் இயங்குவது மட்டுமல்லாமல் கண்டெய்னர்களை ஏற்றுவது இறக்குவது, ரிசார்ஜ் செய்வது, சரியான வழித்தடத்தில் பாதுகாப்பாக கப்பலை செலுத்து வது என அனைத்தையும் தானி யங்கி தொழில்நுட்பம் மூலம் செயல்படுத்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

---

15. நாட்டின் தூய்மையான நகரமாக 5–வது முறையாக இந்தூர் தேர்வு :

மத்திய அரசின் வருடாந்திர தூய்மையான நகரங்கள் கணக்கெடுப்பில் 5–வது முறையாக மத்தியபிரதேசத்தைச் சேர்ந்த இந்தூர் முதலிடம் பிடித்துள்ளது.

நாட்டில் தூய்மையை பராமரிக்கும் நோக்கத்தில் தூய்மை இந்தியா திட்டத்தை மத்திய அரசு தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. தூய்மைப் பணியை சிறப்பாக மேற்கொள்ளும் நகரங்களுக்கு மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை சார்பில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டு விருதுக்கான நகரங்கள் அறிவிக்கப்பட்டுஉள்ளன.

இதில் நாட்டில் மிகவும் தூய்மையான நகரமாக மத்தியபிரதேசத்தை சேர்ந்த இந்தூர், தொடர்ந்து 5–வது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்தின் சூரத், ஆந்திர மாநிலத்தின் விஜயவாடா ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தை பிடித்துள்ளன.

கங்கைக் கரையில் அமைந்துள்ள மிகவும் தூய்மையான நகரமாக (தூய்மையான கங்கை நகர்) வாரணாசி தேர்வு செய்யப்பட்டுள்ளது. நாட்டில் மிகவும் தூய்மையான மாநிலமாக சத்தீஸ்கர் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவிப்புகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை நேற்று அறிவித்தது. விருதுகளை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இன்று (நவ. 21) வழங்குகிறார்.

---

16. நாட்டின் சிறந்த காவல் நிலையங்களில் தொட்டியம் காவல் நிலையம் 8 ஆம் இடம்

இந்தியாவின் சிறந்த 10 காவல் நிலையங்களில் தொட்டியம் காவல் நிலையம் 8 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

நாட்டிலுள்ள காவல் நிலையங்களில் தரவுப் பகுப்பாய்வு, நேரடிக் கண்காணிப்பு, பொதுமக்களின் பின்னோட்டத்தைக் கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் இந்தியாவிலுள்ள காவல் நிலையங்களில் 10 சிறந்த காவல் நிலையங்கள் தோ'ந்தெடுக்கப்படுகின்றன.

அதன்படி உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள இந்திய அளவிலான 10 சிறந்த காவல் நிலையங்களின் பட்டியலில் தமிழகத்தில் உள்ள தொட்டியம் காவல் நிலையம் 8 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தக் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளா' மோகன்ராஜ், 2 காவல் உதவி ஆய்வாளா'கள், ஒரு சிறப்பு காவல் உதவி ஆய்வாளா', 3 தலைமைக் காவலா'கள், 7 பெண் காவலா'கள் உள்ளிட்ட 30 போ' பணிபுரிகின்றனா'.

மாவட்ட எஸ்பி ஆய்வு: இந்நிலையில், திருச்சி மாவட்டக் காவல் கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்ற சுஜித்குமா', காட்டுப்புத்தூா', தொட்டியம் காவல் நிலையங்களை ஆய்வு செய்து தொட்டியம் காவல் நிலையம் பெற்ற சிறப்பைத் தக்க வைக்க அறிவுறுத்தி, வாழ்த்தினாா'. தொட்டியம் காவல் நிலையமானது மாவட்டக் காவல் கண்காணிப்பாளா' தலைமையில் முசிறி கோட்டக் காவல் துணைக் கண்காணிப்பாளா' மேற்பா'வையில் செயல்படுகிறது.

---

1. அண்மையில் காலமான மன்னு பண்டாரியுடன் தொடர்புடைய துறை எது?

அ) விளையாட்டு



ஆ) இலக்கியம் ☑

இ) அரசியல்

ஈ) வணிகம்

✓ ஹிந்தி இலக்கியத்தில் புகழ்பெற்ற எழுத்தாளரான மன்னு பண்டாரி, அண்மையில் தனது 90ஆவது வயதில் காலமானார். அவர் 'மகாபோஜ்' மற்றும் 'ஆப்கா பூந்தி' போன்ற உன்னதமான படைப்புகளை எழுதியவர். அவர் தனது சுயசரிதையை – 'ஏக் கஹானி யே' என்ற தலைப்பில் வெளியிட்டார். வியாஸ் சம்மன் உட்பட பல்வேறு இலக்கிய விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

---

2. இ-ஷ்ரம் இணையதளத்தில் உள்ள தரவுகளின்படி, முறைசாரா தொழிலாளர்களிடமிருந்து எந்தத் தொழில்துறைக்கு அதிக பதிவுகள் பெறப்பட்டுள்ளன?

அ) கட்டுமானம்



ஆ) வேளாண்மை ☑

இ) வீட்டுப்பணியாட்கள்

ஈ) மேற்கூறிய எதுவும் இல்லை

✓ இ-ஷ்ரம் இணையதளம் என்பது ஆதாருடன் இணைக்கப்பட்ட அமைப்பு சாரா தொழிலாளர்களின் நாட்டின் முதல் மையப்படுத்தப்பட்ட தரவுத்தளம் ஆகும். தொழில்வாரியான பதிவுத்தரவுகளில், உழவுத்துறையில் (53.6%) அதிகப்பட்சப் பதிவுகள் காணப்பட்டுள்ளன.

✓ அதைத்தொடர்ந்து கட்டுமானப்பிரிவும் (12.2%) வீட்டுப் பணியாளர்கள் (8.71%) பிரிவும் உள்ளன. இந்தத் தரவுத்தளத்தில் உள்ள 7.86 கோடி பதிவுகளில், 40.5 சதவீதம் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், 27.4 சதவீதம் பொதுப்பிரிவினரும், 23.7 சதவீதம் பட்டியல் சாதியினரும், 8.3 சதவீதம் பழங்குடியினரும் உள்ளனர்.

---

3. இந்தியப்பெருங்கடல் விளிம்பில் உள்ள நாடுகளின் சங்கத்தின் (IORA) வருடாந்திர அமைச்சர்கள் கூட்டம் சமீபத்தில் எந்த நகரத்தில் நடைபெற்றது?

அ) புது தில்லி

ஆ) டாக்கா ☑

இ) கொழும்பு

ஈ) மாலே

✓ இந்தியப்பெருங்கடல் விளிம்பில் உள்ள நாடுகளின் சங்கத்தின் (IORA) 21ஆவது வருடாந்திர அமைச்சர்கள் கூட்டம் டாக்காவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்தியா மெய்நிகராக பங்கேற்றது. இக்கூட்டத்தின் முடிவில் டாக்கா அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✓ IORA'இன் தலைமைப் பொறுப்பை ஏற்றதற்காக வங்காளதேசத்துக்கு இந்தியா வாழ்த்து தெரிவித்ததோடு, IORA'இன் புதிய பேச்சுவார்த்தை கூட்டாளராக ரஷ்ய கூட்டமைப்பையும் வரவேற்றது. IORA'இன் அடுத்த பொதுச்செயலராக தூதர் சல்மான் அல்-பாரிசி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

4. பிரதமர் கிராம் சதக் யோஜனா திட்டத்தைச் செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம் ☑

இ) வேளாண்மை & விவசாயிகள் நல அமைச்சகம்

ஈ) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

✓ ₹33,822 கோடி செலவில் பிரதமர் கிராம் சதக் யோஜனா-I மற்றும் II'ஐ 2022 செப்டம்பர் வரை தொடர பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஊரக வளர்ச்சி அமைச்சகம் PMGSY திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட உட்பட பழங்குடியினர் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் 32,152 கிமீ சாலைகள் அமைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான சாலை இணைப்புத் திட்டத்தை 2023 மார்ச் வரை தொடரவும் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

---

5. சமீப செய்திகளில் இடம்பெற்ற Universal Service Obligation Fund உடன் தொடர்புடைய துறை எது?

அ) நிலக்கரிச்சுரங்கம்



ஆ) தொலைத்தொடர்பு ☑

இ) ஆட்டோமொபைல்

ஈ) ஜவுளி

✓ இந்திய தந்தி (திருத்தம்) சட்டம், 2003 யுனிவர்சல் சர்வீஸ் ஒப்லிகேஷன் ஃபண்டுக்கு சட்டபூர்வமான தகுதியை வழங்கியுள்ளது. இது அனைத்து தொலைத்தொடர்பு நிதி ஆபரேட்டர்களிடமிருந்து அவர்களின் சரிசெய்யப்-பட்ட மொத்த வருவாயில் வசூலிக்கப்படும் வரியால் உருவாக்கப்பட்ட நிதிகளின் தொகுப்பாகும்.

✓ யுனிவர்சல் சர்வீஸ் ஒப்லிகேஷன் ஃபண்ட் மூலம் 5 மாநிலங்களின் 44 முன்னேற விரும்பும் மாவட்டங்களில் உள்ள 7,287 உள்ளடக்கப்படாத கிராமங்களில் மொபைல் சேவை வழங்குவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஆந்திரம், சத்தீஸ்கர், ஜார்கண்ட், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா ஆகியவை அவ்வைந்து மாநிலங்களாம்.

---

6. எந்த மத்திய அமைச்சகத்தின்கீழ் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் வளத்துறை செயல்படுகிறது?

அ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்



ஆ) மீன்பிடி, கால்நடை பராமரிப்பு & பால்வள அமைச்சகம் ☑

இ) உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத்துறை (DAHD) மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் அமைச்சகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது. DAHD மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்படுகிறது.

✓ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையின் பல்வேறு திட்டங்களை ஒன்றிணைப்பதன்மூலம் பால் உற்பத்தியாளர்களுக்கு நன்மைகளை நீட்டிக்க உதவும்.

---

7. உலக அளவில் காலணி மற்றும் தோல் ஆடைகள் உற்பத்தியில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) முதலாவது



ஆ) இரண்டாவது ☑

இ) நான்காவது

ஈ) பத்தாவது

✓ உலக அளவில் காலணி மற்றும் தோல் ஆடை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. 2020-21'இல் (ஏப்ரல் முதல் பிப்ரவரி வரை) தோல், காலணி மற்றும் தோல் பொருட்கள் ஏற்றுமதி $3.67 பில்லியன் டாலர்களை எட்டியது. தோல் ஏற்றுமதி கவுன்சிலின் தேசிய ஏற்றுமதி சிறப்பு விருதுகள் வழங்கும் விழாவில் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் உரையாற்றினார்.

---

8. ஐநா பொதுச்சபையானது 2021ஆம் ஆண்டை எந்த ஆண்டாக அறிவித்துள்ளது?

அ) பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச ஆண்டு

ஆ) சர்வதேச சுகாதார ஆண்டு

இ) கோவிட்க்கு எதிரான சர்வதேச ஆண்டு

ஈ) பழங்கள் மற்றும் காய்கறிகளின் சர்வதேச ஆண்டு ☑

✓ ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை 2021ஆம் ஆண்டை பழங்கள் மற்றும் காய்கறிகளின் சர்வதேச ஆண்டாக அறிவித்துள்ளது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) இந்த ஆண்டைக் கொண்டாடுவதற்கான முன்னணி நிறுவனமாக உள்ளது.

- ✓ இந்த ஆண்டு மனித ஊட்டச்சத்திலும், உணவுப் பாதுகாப்பிலும் பழங்கள் மற்றும் காய்கறிகளின் பங்கு பற்றிய விழிப்புணர்வை பரப்ப முயல்கிறது.

---

9. "Mission 2070: A Green New Deal for a Net Zero India" **என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) FAO

ஆ) WEF ☑

இ) IMF

ஈ) NITI ஆயோக்

- ✓ உலகப்பொருளாதார மன்றம் "Mission 2070: A Green New Deal for a Net Zero India" என்ற தலைப்பில் ஓர் ஆய்வு அறிக்கையை Kearney மற்றும் Observer Research Foundation உடன் இணைந்து வெளியிட்டது.
- ✓ ஓர் அண்மைய ஆராய்ச்சி அறிக்கையில், உலகப் பொருளாதார மன்றம், இந்தியாவுக்கான பசுமை புதிய ஒப்பந்தம் 2070'க்குள் $15 டிரில்லியன் பொருளாதார வாய்ப்பைக் கொண்டு வரக்கூடும் எனக் காட்டியுள்ளது.

---

10. இந்தியாவில் 'தேசிய சட்ட சேவைகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) 9 நவம்பர் ☑



ஆ) 11 நவம்பர்

இ) 13 நவம்பர்

ஈ) 15 நவம்பர்

- ✓ 'தேசிய சட்ட சேவைகள் நாள்' ஆண்டுதோறும் நவம்பர் 9 அன்று நாடு முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது சட்ட சேவைகள் ஆணைய சட்டம் இயற்றப்பட்டதை நினைவுகூருவதோடு சட்டம் தொடர்பான விதிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ இந்தியாவில் ஒரே மாதிரியான முறையில், "சட்ட உதவி திட்டங்களுக்கு சட்டப்பூர்வ அடிப்படையை" வழங்குவதற்காக 1987ஆம் ஆண்டு சட்ட சேவைகள் ஆணைய சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1995 நவ.9 அன்று நடைமுறைக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் நோக்கம், நாட்டில் விளிம்புநிலை சமூக–பொருளாதார சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்கு தகுதியான மற்றும் இலவச சட்ட உதவிகளை வழங்குவதாகும்.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மாற்றுத்திறனாளி வீரர்களின் மறுவாழ்வுக்காக நிதி திரட்ட 4,500 கிலோ மீட்டர் ஓடும் 61 வயதான மாரத்தான் வீரர்

மகாராஷ்டிராவில் உள்ள பழங்குடியினர் பள்ளிகளை தரம் உயர்த்துவதற்கும் மாற்றுத் திறனாளி ராணுவ வீரர்களின் மறுவாழ்வுக்கு ஆதரவளிப்பதற்கும் நிதி திரட்டுவதற்காக 61 வயதான அஜ்வானி குமார் மாரத்தான் ஓட்டத்தை தொடங்கியுள்ளார்.

கடந்த 19–ம் தேதி காஷ்மீரின் பாட்னிடாப்பில் இருந்து ஓட்டத்தை தொடங்கிய அஜ்வானி குமார், அடுத்த ஆண்டு பிப்ரவரி 3–ம் தேதி கன்னியாகுமரியில் நிறைவு செய்கிறார். 4,444 கி.மீ. தூரத்தை 77 நாட்களில் முடிக்க திட்டமிட்டுள்ளார். அஜ்வானி குமார், ஓட்டப்பந்தய வீரர்களின் குழுவால் தொடங்கப்பட்ட எஃப்ஏபி அறக்கட்டளையின் நிறுவனர்–இயக்குநர் ஆவார். இந்தக் குழுவினர் ஓடுவதில் உள்ள ஆர்வத்தையும் சமூகத்திற்கு உதவ வேண்டும் என்ற விருப்பத்தையும் ஒருங்கிணைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அஜ்வானி குமார் சமூக காரணங்களுக்காக பல நகரங்களுக்கு இடையேயான மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான மராத்தான்களை நடத்தியுள்ளார். இதன்மூலம் திரட்டப்பட்ட நிதியை ஏழைகளுக்கு வழங்கி வருகிறார்.

இதுகுறித்து அஜ்வானி குமார் கூறும்போது, "நாங்கள் சில காரணங்களுக்காக ஓடுகிறோம். 100 சதவீத பணத்தை பெறவேண்டும் என்பதே எங்கள் முக்கிய நோக்கம். இப்போது நாங்கள் பழங்குடியினர் பள்ளிகளை மேம்படுத்த முயற்சிக்கிறோம். ஒரு குடிமகனாக, எங்கள் குழு ராணுவத்திற்கு ஏதாவது செய்ய விரும்புகிறது" என்றார்.

மாரத்தான் ஓட்டத்தை தொடங்கிய அஜ்வானி குமாரை, கார்கில் போர் நினைவுச்சின்னமான உதம்பூரில் முன்னாள் ராணுவ வீரர்கள் வரவேற்றனர்.

2. பாரா பாட்மிண்டனில் தங்கம் வென்றார் சுகந்த்

உகாண்டாவின் கம்பலா நகரில் பாரா பாட்மிண்டன் சர்வதேச போட்டி நடைபெற்று வந்தது. இந்தத் தொடரின் கடைசி நாளான நேற்று, ஆடவருக்கான எஸ்எல் 4 பிரிவு இறுதிச் சுற்றில் உலகத் தரவரிசையில் 5–வது இடத்தில் உள்ள இந்தியாவின் சுகந்த் கதம் சகநாட்டைச் சேர்ந்த நிலேஷ் பாலுவை எதிர்த்து விளையாடினார். இதில் சுகந்த் 21–16, 17–21, 21–10 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

எஸ்எல் 3 பிரிவு இறுதிச் சுற்றில் டோக்கியோ பாராலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற இந்தியாவின் பிரமோத் பகத், சகநாட்டின் மனோஜ் சர்காரை எதிர்கொண்டார். இதில் பிரமோத் 19–21, 16–21 என்ற நேர் செட்டில் தோல்வியடைந்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத், மனோஜ் சர்கார் ஜோடி 21–10, 20–22, 15–21 என்ற செட் கணக்கில் சகாட்டின் மொகமது அர்வாஸ் அன்சாரி, தீப் ரன்ஜன் பிஸோயி ஜோடியிடம் தோல்வி கண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றது. எஸ்எல் 3, எஸ்யு 5 கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் பிரமோத் பகத், பாலக் ஜோஷி ஜோடி இறுதிச் சுற்றில் 19–21, 16–21 என்ற செட் கணக்கில் மற்றொரு இந்திய ஜோடியான ருத்திக் ரகுபதி, மானஷி கிரிசந்திரா ஜோஷியிடம் வீழ்ந்தது.

இந்தத் தொடரில் இந்தியா 16 தங்கம், 14 வெள்ளி, 17 வெண்கலம் என மொத்தம் 47 பதக்கங்களை குவித்தது.

---

3. விவசாயிகள் ஸ்மார்ட்போன் வாங்க ரூ.1,500 நிதியுதவி: குஜராத் அரசு அறிவிப்பு

குஜராத்தில் உள்ள விவசாயிகள் ஸ்மார்ட்போன் வாங்குவதற்காக அம்மாநில அரசு ரூ.1,500 வரை நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளது.

இதன்படி, ஸ்மார்ட்போன் விலையில் 10 சதவீதம் அல்லது ரூ.1,500 இவற்றில் எது குறைவோ அந்த தொகை நிதியுதவியாக வழங்கப்படும். இதற்கான பிரத்யேக இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

நிலம் வைத்துள்ள அனைத்து விவசாயிகளும் இதில் பலனடையலாம். ஆனால், கூட்டாக விவசாயம் செய்பவர்களில், தலா ஒருவருக்கு மட்டுமே நிதியுதவி அளிக்கப்படும். ஸ்மார்ட்போனை தவிர, இயர்போன், பவர் பேங்க், சார்ஜர் போன்ற சாதனங்கள் வாங்க இத்திட்டம் பொருந்தாது.

விவசாயிகளின் விண்ணப்பத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன், ஸ்மார்ட்போன் வாங்கிய ரசீதின் நகல், போனின் ஐ.எம்.இ.ஐ. எண், ரத்து செய்யப்பட்ட காசோலை ஆகியவற்றை விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டும். அதன்பிறகு நிதியுதவி அளிக்கப்படும்.

விவசாயிகளுக்கான நலத்திட்டங்களுக்கு விண்ணப்பித்தல், வானிலை தகவல்கள், பூச்சி மருந்து விவரங்கள், நவீன பண்ணை தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றை அறிந்துகொள்ள விவசாயிகள் ஸ்மார்ட்போன் வாங்குவது நல்லது என்று மாநில வேளாண்துறை தெரிவித்துள்ளது.

---

4. மீன்வளத்துறை ஏற்றுமதி இலக்கு ₹1 லட்சம் கோடி: மத்திய அமைச்சர் தகவல்

வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் மீன் வளத் துறையில் ஏராளமாக உள்ளதாகவும் 2024–25–ம் ஆண்டுக்குள் ரூ.1 லட்சம் கோடி ஏற்றுமதி இலக்கை இத்துறை எட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாகவும் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா கூறினார்.

ஒடிஸா மாநிலம், புவனேசுவரத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உலக மீன்வள தின கொண்டாட்ட நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் ரூபாலா, 'மாநிலங்கள் ஒன்றுக்கொன்று ஊக்கம் பெற்று கடல்சார் துறையின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஆராய வேண்டும். விவசாயிகள் கடன் அட்டை குறித்த விழிப்புணர்வு பெரிய அளவில் உருவாக வேண்டும். கடல்சார் துறைக்கான அனைத்து ஆதரவையும் பிரதமர் நரேந்திர மோடி வழங்கி வருகிறார். விவசாய கடன் அட்டை மீனவர்களுக்காக ஏற்கனவே நீட்டிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விழிப்புணர்வை பெரிய அளவில் உருவாக்குவதற்கான மாபெரும் பிரசாரம் ஒன்றை அரசு விரைவில் தொடங்கும்' என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளம் இணை அமைச்சர் எல்.முருகன் பேசியதாவது: மீன்வளத் துறைக்காக ஒரு தனி அமைச்சகத்தை பிரதமர் நரேந்திர மோடி உருவாக்கியதிலிருந்து குறுகிய காலத்திற்குள் இத்துறை மேம்படுத்தப்பட்டு, ஒரு லட்சம் கோடி ரூபாய் ஏற்றுமதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்ஸ்ய சம்பதா யோஜனா எனும் திட்டத்தின் வாயிலாக மீன்வளத் துறைக்கு ரூ.20,000 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடற்பாசி விவசாயத்தின் மீதும் அரசு கவனம் செலுத்தி வருகிறது. மீனவ சமுதாயத்தை சோ்ந்த பெண்களுக்கு அதிகாரமளித்து இத்துறையில் தொழில்முனைதலை ஊக்குவிப்பதிலும் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது என்றாா்.

---

5. சா்வதேச பாரா பாட்மின்டன்: இந்தியாவுக்கு 47 பதக்கங்கள்

உகாண்டாவில் நடைபெற்ற சா்வதேச பாரா பாட்மின்டன் போட்டியில் இந்தியா 16 தங்கம், 14 வெள்ளி, 17 வெண்கலம் என 47 பதக்கங்கள் வென்று அசத்தியுள்ளது.

கடந்த 16-ஆம் தேதி தொடங்கி ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த இந்தப் போட்டியில் இந்திய போட்டியாளா்களே பிரதானமாக இருந்தனா்.

இதில், டோக்கியோ பாராலிம்பிக்கில் தங்கம் வென்றவரும், உலகின் முதல்நிலை வீரருமான பிரமோத் பகத் 3 வெள்ளிப் பதக்கங்கள் வென்றாா். அவா் தனிநபா் பிரிவிலும், ஆடவா் இரட்டையா் மற்றும் கலப்பு இரட்டையா் ஆகிய பிரிவுகளிலும் பதக்கம் வென்றுள்ளாா்.

ஆடவா் ஒற்றையா் எஸ்எல்3 பிரிவு இறுதிச் சுற்றில் பிரமோத் 19-21, 16-21 என்ற செட்களில் சக இந்தியரான மனோஜ் சா்காரிடம் தோல்வி கண்டாா். ஆடவா் இரட்டையா் பிரிவில் மனோஜுடன் இணைந்தே பிரமோத் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தாா்.

அந்தப் பிரிவில் பிரமோத்/மனோஜ் இணை 21-10, 20-22, 15-21 என்ற செட்களில் சக இந்திய ஜோடியான முகமது அா்வாஸ் அன்சாரி/தீப் ரஞ்சன் பிசோயீ இணையிடம் தங்கத்தை இழந்தது. பின்னா் கலப்பு இரட்டையா் எஸ்எல்3-எஸ்யு5 பிரிவில் பிரமோத்/பாலக் கோலி இணை 19-21, 16-21 என்ற செட்களில் மற்றொரு இந்திய ஜோடியான ருதிக் ரகுபதி/மானசி கிரிஷ் சந்திர ஜோஷி ஜோடியிடம் தோற்று வெள்ளிப் பதக்கம் பெற்றது.

வீராங்கனைகளில் பிரதானமானவரான பாலக் கோலி தனி நபா் மற்றும் மகளிா் இரட்டையா் பிரிவில் தங்கமும், கலப்பு இரட்டையரில் வெள்ளியும் வென்றாா். உலகின் 5-ஆம் நிலை வீரராக இருக்கும் சுகந்த் கடம் எஸ்எல்4 பிரிவில் 21-16, 17-21, 21-10 என்ற செட்களில் 38 நிமிஷங்களில் சக இந்தியரான நிலேஷ் பாலு கெய்க்வாட்டை வீழ்த்தி தங்கம் வென்றாா். சுகந்த் 2 ஆண்டுகளுக்குப் பிறகு சா்வதேச போட்டியில் தங்கம் வென்றிருக்கிறாா்.

---

1. இந்தியாவின் முதல் 'Laser Interferometer Gravitational–Wave Observatory (LIGO)' திட்டம் வரவுள்ள மாநிலம் எது?

அ) குஜராத்

ஆ) தமிழ்நாடு

இ) மகாராஷ்டிரா ☑

ஈ) மத்திய பிரதேசம்



✓ 2016ஆம் ஆண்டில், ஈர்ப்பு அலைகள் பற்றிய ஆராய்ச்சிக்கான LIGO – இந்திய மெகா அறிவியல் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் 'கொள்கை அளவில்' ஒப்புதல் அளித்தது. இந்தியாவின் லேசர் இன்டர்ஃபெரோமீட்டர் கிராவிடேஷனல்–வேவ் அப்சர்வேட்டரி திட்ட வசதி மகாராஷ்டிராவில் வரவுள்ளது. சமீபத்தில், ஹிங்கோலி வருவாய் துறை இத்திட்டத்திற்காக 225 ஹெக்டேர் நிலத்தை ஒப்படைத்துள்ளது.

---

2. இந்தியாவின் முதல் மீன்வள வணிக காப்பகமான – 'LINAC–NCDC மீன்வள வணிக அடைவு மையம்' திறக்கப்பட்டுள்ள நகரம் எது?

அ) விசாகப்பட்டினம்

ஆ) கொச்சின்

இ) குருகிராம் ☑

ஈ) காந்திநகர்



✓ மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா, குருகிராமில் LINAC–NCDC மீன்வள வணிக அடைவு மையம் (LIFIC) எனப்படும் இந்தியாவின் முதல் மீன்வள வணிக காப்பகத்தை திறந்து வைத்தார்.

✓ தன்னம்பிக்கையை நோக்கி நகர்வதற்கு மீன்பிடித் துறையில் அவர்களு –க்கு ஆதரவளிக்கும் முயற்சிகளை தொழில்முனைவோர் மத்தியில் ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அடைவின் விலை ₹3.23 கோடி. மீன்வளத்துறையில் மொத்தம் 30,000 கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

---

3. 2021 – உலக ஆண்டிமைக்ரோபியல் விழிப்புணர்வு வாரத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரத்தின் கருப்பொருள் என்ன?

அ) Infection control

ஆ) Go Blue ☑

இ) Overusing antimicrobials

ஈ) Antimicrobial surveillance



✓ உலக சுகாதார அமைப்பு நுண்ணுயிர்க்கொல்லி தடுப்பாற்றலை முதல் 10 உலகளாவிய சுகாதார அச்சுறுத்தல்களுள் ஒன்றாக அறிவித்துள்ளது. இந்த ஆண்டு உலக நுண்ணுயிர்க்கொல்லி விழிப்புணர்வு வாரத்தில் (நவம்பர் 18–24), 'Go Blue' பிரச்சாரம் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ பாக்டீரியா, வைரஸ்கள், பூஞ்சைகள் மற்றும் ஒட்டுண்ணிகள் போன்ற நுண்ணுயிரிகள் மருந்துகளுக்கு பதிலளிக்காதபோது நுண்ணுயிர்க் கொல்லி தடுப்பாற்றல் ஏற்படுகிறது. இது நோய்த்தொற்றுகளுக்கு சிகிச் –சையளிப்பதை கடினமாக்குகிறது.

---

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற "Stop Soros" சட்டத்தை நிறைவேற்றிய நாடு எது?

அ) இத்தாலி

ஆ) ஹங்கேரி ☑

இ) ஆஸ்திரேலியா

ஈ) அமெரிக்கா



✓ "ஸ்டாப் சொரோஸ்" சட்டமானது கடந்த 2018 ஜூனில் ஹங்கேரிய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமாகும்.

✓ சட்டவிரோதமாக குடியேறியவர்களுக்கு நாட்டிற்குள் வசிப்பிடத்திற்காக விண்ணப்பிக்க உதவுவது ஓராண்டு வரை சிறைத்தண்டனையுடன் கூடிய குற்றம் என இந்தச்சட்டம் கூறுகிறது. இந்தச் சட்டத்தை பிரதமர் விக்டர் ஓர்பன் மற்றும் அவரது ஆளும் கட்சியான ஃபிடெஸ் ஆதரித்தது.

✓ அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்நீதிமன்றம், புகலிட வேண்டுவோர்க்கு ஆதரவளிப்பதைக் குற்றமாக்கும் ஹங்கேரியின் சட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டத்தை மீறுவதாக தீர்ப்பளித்தது.

---

5. மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்காக, 'Mother on Campus' என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) அஸ்ஸாம்

ஆ) திரிபுரா ☑

இ) குஜராத்

ஈ) ஒடிஸா



✓ மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்காக, திரிபுரா கல்வித் துறை, 'வளாகத்தில் தாய்' என்ற முயற்சியைத் தொடங்கியுள்ளது. இங்கு, சொந்த அல்லது சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுடன் கல்வி வளாகத்தில் தங்கலாம். குழந்தைகளிடையே பாதுகாப்புணர்வை இது தூண்டலாம் மற்றும் குழந்தைகளின் கல்வித் திறனுக்கு இது பயனளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. திரிபுராவில் அரசு நடத்தும் விடுதிகள் மற்றும் உறைவிடப் பள்ளிகளில் தங்கும் குழந்தைகளின் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுடன் தங்கலாம்.

---

6. மத்திய ப்ளீஸ்டோசீன் காலத்தில் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த மனித மூதாதைய இனங்களுக்கு வழங்கப்பட்ட புதிய பெயரென்ன?

அ) ஹோமோ போடோயென்சிஸ் ☑

ஆ) ஹோமோ ஆப்பிரிக்கன்

இ) ஹோமோ சிபானியன்

ஈ) ஹோமோ நியாண்டர்தால்கள்



✓ சுமார் அரை மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, தற்போது சிபானியன் என்றழைக்கப்படும் மத்திய ப்ளீஸ்டோசீன் காலத்தில் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த 'ஹோமோ போடோயென்சிஸ்' என்ற மனித மூதாதையர்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். எத்தியோப்பியாவின் போடோ டி'ஆரில் கண்டுபிடிக்கப்பட்ட மண்டையோட்டினால் 'போடோயென்சிஸ்' என அழைக்கப்படுகிறது

7.பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழுவின் தலைவர் யார்?

அ) பிபேக் டெப்ராய் ☑

ஆ) ராகேஷ் மோகன்

இ) பூனம் குப்தா

ஈ) டி டி ராம் மோகன்



✓ பிரதமர் மோடி தனது பொருளாதார ஆலோசனைக் குழுவை (EAC–PM) மறுசீரமைக்க ஒப்புதலளித்துள்ளார். இந்திய புள்ளியியல் நிறுவனத்தின் தலைவர் பிபேக் டெப்ராய் அக்கவுன்சிலின் தலைவராக உள்ளார். ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் இராகேஷ் மோகன், ஐஐஎம் அகமதாபாத் பேராசிரியர் டி டி ராம் மோகன் மற்றும் என்சிஏஇஆர்–ன் டைரக்டர் ஜெனரல் பூனம் குப்தா ஆகியோர் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழுவில் இணைந்த மூன்று புதிய உறுப்பினர்கள் ஆவார்.

✓ ஈராண்டு காலத்திற்கு இப்புதிய ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டுள்ள –து. இந்த அவையின் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்கள் அவ்வாறே தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

---

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற வில்வாத்ரி கால்நடைகள், எந்த மாநிலத்தில், 'மரபணு ரீதியாக வேறுபட்டவை – Genetically Divergent' என அறிவிக்கப்பட்டன?

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஒடிஸா



✓ கேரளாவின் திருச்சூர் மாவட்டத்தின் பூர்வீக வில்வாத்ரி கால்நடைகள், மாநிலத்தில் உள்ள மற்ற கால்நடைகளிலிருந்து 'மரபணு ரீதியாக வேறுபட்டவை' ஆகும். விலங்கு மரபியல் மற்றும் இனப்பெருக்கத்தில் மேம்பட்ட ஆய்வுகளுக்கான மையத்தின் அறிவியலாளர்கள் குழுவால் அதன் மரபணு வேறுபாடு ஆய்வுசெய்யப்பட்டது.

✓ பாலக்காடு–திருச்சூர் எல்லையில் காணப்படும் வில்வாத்ரி கால்நடைக –ள், மாநிலத்தின் பிற பூர்வீகக்கால்நடைகளைப்போலவே திமிலுடைய –வை, ஆனால் அவை நீளமான கொம்புகளுடன் பெரியதாக இருக்கும். உள்நாட்டு இனங்கள் நோயெதிர்ப்பு சக்தி கொண்டவை மற்றும் அதிக வெப்பநிலையை தாங்கும் திறன்கொண்டவை.

---

9. அறிகுறியுடைய COVID சிகிச்சைக்காக 'மோல்னுபிராவிர்' என்ற வாய்வழி உட்கொள்ளும் மாத்திரையை அங்கீகரித்துள்ள உலகின் முதல் நாடு எது?



அ) அமெரிக்கா

ஆ) UK ☑

இ) ஆஸ்திரேலியா


ஈ) சீனா

✓ அறிகுறியுடைய COVID–19 சிகிச்சைக்காக வடிவமைக்கப்பட்ட முதல் வைரஸ் தடுப்பு மாத்திரையை UK மருந்து கட்டுப்பாட்டாளர் சமீபத்தில் அங்கீகரித்துள்ளார். 'மோல்னுபிராவிர்' என்ற அம்மாத்திரையானது, சமீபத்தில் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஒரு நாளைக்கு இருமுறை வழங்கப்படுகிறது.

✓ காய்ச்சலுக்கு சிகிச்சையளிப்பதற்காக முதலில் உருவாக்கப்பட்ட இந்த மாத்திரை, மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவது அல்லது இறப்பு அபாயத்தை பாதியாகக் குறைப்பதாகக் கூறப்படுகிறது.

---

10. "பெகபெகா–டூ–ரோவா" என்ற நீண்டவால்கொண்ட வௌவால் சார்ந்த நாடு எது?



அ) ஆஸ்திரேலியா

ஆ) நியூசிலாந்து ☑

இ) ஜப்பான்

ஈ) சீனா

✓ நியூசிலாந்தைச்சார் பெகபெகா–டூ–ரோவா என்ற நீண்டவால்கொண்ட வௌவால் 2021 ஆம் ஆண்டின் 'சிறந்த பறவை' விருதை பெற்றுள்ளது/ இது அந்த நாட்டின் தன்னாட்சிமிக்க அமைப்பான "ஃபாரஸ்ட் அண்ட் பேர்ட்" ஆல் வழங்கப்பட்டது. இவ்விருது ஒரு வகையான போட்டியாகும், இதன்கீழ் நியூசிலாந்தர்கள் தங்களுக்கு பிடித்த பறவைகளை நாட்டின் பூர்வீக இனங்கள் வாரியாக தரவரிசைப்படுத்துகிறார்கள், இது அவர்களி –ன் சுற்றுச்சூழல் அவலநிலைபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'துல்லிய தாக்குதல் ஹீரோ' – அபிநந்தனுக்கு வீர் சக்ரா விருது:

பாகிஸ்தானுக்கு எதிரான துல்லிய தாக்குதலின்போது தீரத்துடன் போராடிய தமிழகத்தைச் சேர்ந்த கமாண்டர் அபிநந்தனுக்கு இன்று வீர் சக்ரா விருது வழங்கி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கவுரவிக்கிறார்.

தமிழகத்தைச் சேர்ந்த அபிநந்தன், இந்திய விமானப்படையில் விங் கமாண்டராக பணியாற்றி வருகிறார். கடந்த 2019–ம் ஆண்டு ஆரம்பத்தில் காஷ்மீரில் புல்வாமா மாவட்டத்தில் தீவிரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக இந்திய போர் விமானங்கள் பாகிஸ்தான் பகுதிக்குள் ஊடுருவி தீவிரவாத முகாம்களை அழித்தன. 2019–ம் ஆண்டு பிப்ரவரி 27– தேதி இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் போர் விமானத்தை வீரர் அபிநந்தன் மிக் 21 ரக விமானத்தில் விரட்டிச் சென்று சுட்டு வீழ்த்தினார்.

இந்த தாக்குதலின்போது பாகிஸ்தான் பகுதிக்குள் அபிநந்தன் சென்ற விமானம் விழுந்தது. பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட அபிநந்தன் பின்னர், மத்திய அரசின் முயற்சியால் உலக நாடுகள் பாகிஸ்தானுக்கு கொடுத்த அழுத்தம் காரணமாக விடுவிக்கப்பட்டார். பாகிஸ்தான் தாக்குதலை முறியடித்து அந்நாட்டின் போர் விமானத்தை சுட்டு வீழ்த்தியதற்காக அபிநந்தன் இடம்பெற்றுள்ள விமானப்படையின் 51–வது படைப்பிரிவை பாராட்டி குழு விருது வழங்கப்பட்டது.

இதையடுத்து அபிநந்தனுக்கு அவரது வீரத்தை பாராட்டி வீர் சக்ரா விருது வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. மேலும் ராணுவ கமாண்டர் அபிநந்தன், குழு கேப்டனாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இந்தநிலையில் அவருக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அபிநந்தனுக்கு இன்று வீர் சக்ரா விருது வழங்கி கவுரவிக்கிறார்.

இதுமட்டுமின்றி ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளை முறியடித்ததற்காக, இந்திய விமானப்படையின் மூத்த அதிகாரி பிரகாஷ் ஜாதவுக்கு, இரண்டாவது மிக உயர்ந்த வீர விருதான கீர்த்தி சக்ரா (மரணத்திற்குப் பின்) வழங்கப்படுகிறது.

---

2. பிஎம்சி வங்கியை கையகப்படுத்துவதற்கான வரைவு திட்டம்: ரிசர்வ் வங்கி வெளியீடு

பஞ்சாப் & மகராஷ்டிரா கூட்டுறவு (பிஎம்சி) வங்கியை தில்லியைச் சேர்ந்த யுனிட்டி ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி (யுஎஸ்எஃப்பி) கையகப்படுத்துவதற்கான வரைவு திட்டத்தை ரிசர்வ் வங்கி திங்கள்கிழமை அறிவித்தது.

இதுகுறித்து ரிசர்வ் வங்கி மேலும் கூறியுள்ளதாவது:

இந்த வரைவுத் திட்டம் பிஎம்சி வங்கியின் சொத்துகள், டெபாசிட் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளையும் யுஎஸ்எஃப்பி எடுத்துக் கொள்ள வகை செய்கிறது. இதனால், டெபாசிட்தாரர்களுக்கு கூடுதல் அளவிலான பாதுகாப்பு கிடைக்கும் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

ரியல் எஸ்டேட் துறையைச் சேர்ந்த ஹெச்டிஐஎல் நிறுவனத்துக்கு அதிக அளவிலான கடன் கொடுத்து அதனை மறைக்க முற்பட்டதையடுத்து பிஎம்பிசி வங்கி நிதி நெருக்கடியில் சிக்கியது.

பிஎம்சி வங்கி நிதி மோசடியில் ஈடுபட்டது உறுதியானதையடுத்து கடந்த 2019 செப்டம்பரில் அந்த வங்கியை ரிசர்வ் வங்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதையடுத்து, அதன் வாடிக்கையாளர்கள் பணத்தை திரும்பப் பெறுவது உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், யுஎஸ்எஃப்பி நிறுவனம் வங்கியாக செயல்படுவதற்கான உரிமம் 2021 அக்டோபரில் வழங்கப்பட்டது. நவம்பர் 1–ஆம் தேதியிலிருந்து யுஎஸ்எஃப்பி தனது செயல்பாடுகளை தொடங்கிய நிலையில், தற்போது பிஎம்சி வங்கியை இணைத்துக் கொள்வதற்கான வரைவு திட்டத்தை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

---

3. இன்று தொடங்குகிறது உலக டேபிள் டென்னிஸ்

உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் செவ்வாய்க்கிழமை தொடங்குகிறது.

வரும் 29–ஆம் தேதி வரை நடைபெறும் இந்தப் போட்டியில் இந்தியாவிலிருந்து 4 வீரர்கள், 5 வீராங்கனைகள் என 9 போ் அணி பங்கேற்கிறது. இவர்கள் தனிநபர், இரட்டையர் மற்றும் கலப்பு அணிகள் பிரிவுகளில் விளையாடவுள்ளனர்.

ஆடவர் பிரிவில் அந்தோணி அமல்ராஜ், ஹர்மீத் தேசாய், சத்தியன் ஞானசேகரன், சரத் கமல் ஆகியோரும், மகளிர் பிரிவில் அர்ச்சனா காமத், அஹிகா முகர்ஜி, மதுரிகா பட்கர், மணிகா பத்ரா, சுதிர்தா முகர்ஜி ஆகியோரும் களம் காண்கின்றனர்.

---

4. 23 நவம்பர் 2021 – 'உவமைக் கவிஞர்' சுரதா அவர்களின் 101ஆவது பிறந்தநாள்.

---

5. சேதி தெரியுமா?

நவ.14: ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற எட்டாவது டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் நியூசிலாந்தை வீழ்த்தி ஆஸ்திரேலியா முதன்முறையாகக் கோப்பையை வென்றது.

நவ.15: உலகில் 60 சதவீத வருவாய் உள்ள 10 நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி சீனா முதலிடம் பிடித்தது.

நவ.16: 2024ஆம் ஆண்டு டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை முதன்முறையாக மேற்கிந்திய தீவுகளுடன் இணைந்து அமெரிக்கா நடத்துகிறது. 29 ஆண்டுகளுக்குப் பிறகு 2025இல் பாகிஸ்தானில் ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி போட்டி நடைபெறுகிறது. 2024

– 2031 காலகட்டத்தில் இந்தியா மூன்று ஜசிசி தொடர்களை நடத்த உள்ளது.

நவ.17: சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக முனீஸ்வர்நாத் பண்டாரி நியமிக்கப்பட்டார். அவர் பொறுப்பேற்கும் வரை அப்பொறுப்பை மூத்த நீதிபதி துரைசாமி வகிப்பார் என்று குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார்.

நவ.17–18: இமாச்சல பிரதேச மாநிலம் சிம்லாவில் அனைத்திந்திய சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாடு நடைபெற்றது. அனைத்திந்திய சட்டப்பேரவைத் தலைவர்கள் மாநாட்டின் நூற்றாண்டைக் கொண்டாடும்விதமாக இம்மாநாடு நடைபெற்றது.

நவ.18: தமிழகத்தில் விளையாட்டு வீரர்களுக்கான மூன்று சதவீத இட ஒதுக்கீட்டில் சிலம்பாட்டம் விளையாட்டைச் சேர்த்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

நவ.18: மயானங்களில் பணிபுரியும் ஊழியர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்து தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

நவ.19: மத்திய அரசு கொண்டு வந்த மூன்று வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறுவதாகப் பிரதமர் மோடி அறிவித்தார்.

நவ.19: அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கு முழு உடல் பரிசோதனையில் மயக்க மருந்து கொடுக்கப்பட்டதால், சில மணி நேரங்களுக்குத் தற்காலிக அதிபர் பொறுப்பை கமலா ஹாரிஸ் ஏற்றார். அமெரிக்க வரலாற்றில் பெண் ஒருவர் அதிபர் அதிகாரங்களை ஏற்றது இதுவே முதன்முறை.

நவ.19: 580 ஆண்டுகளுக்குப் பின்பு வானில் நீண்ட சந்திர கிரகணம் நிகழ்ந்தது. இதற்கு முன்பு நீண்ட சந்திர கிரகணம் 1440ஆம் ஆண்டு பிப்ரவரி 18 அன்று நிகழ்ந்தது.

---

6. சையது முஷ்டாக் அலி கோப்பையை – 3–வது முறையாக வென்றது தமிழக அணி:

சையது முஷ்டாக் அலி டி 20 தொடரின் இறுதிப் போட்டியில் கர்நாடகாவுக்கு எதிராக கடைசி பந்தில் ஷாருக்கான் சிக்ஸர் விளாச தமிழக அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் சாம்பியன் பட்டம் வென்றது.

டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் பேட்செய்த கர்நாடகா 7 விக்கெட்கள் இழப்புக்கு 151 ரன்கள்குவித்தது. 152 ரன்கள் இலக்குடன் பேட் செய்த தமிழக அணிக்கு பிரதீக் ஜெயின் வீசிய கடைசி ஓவரில் 16 ரன்கள் தேவைப்பட்டது. ஷாருக்கான், ஷாய் கிஷோர் களத்தில் இருந்தனர். முதல் பந்தில் ஷாய் கிஷோர் பவுண்டரி அடித்தார். அடுத்த 4 பந்துகளில் மேற்கொண்டு 7 ரன்கள் சேர்க்கப்பட்டது. இதில் 2 உதிரிகளும் அடங்கும்.

கடைசி பந்தில் 5 ரன்கள்தேவைப்பட்ட நிலையில்ஷாருக்கான், டீப் பந்தை ஸ்கொயர் லெக் திசையில் சிக்ஸருக்கு விளாச தமிழக அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 153 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஷாருக்கான் 15 பந்துகளில், 3 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரியுடன் 33 ரன்கள் விளாசினார். ஷாய் கிஷோர் 6 ரன்கள் சேர்த்தார். முன்னதாக நாராணயன் ஜெகதீசன் 41, ஹரி நிஷாந்த் 23, விஜய் சங்கர்18 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

சையது முஷ்டாக் அலிகோப்பையை தமிழக அணி வெல்வது இது 3–வது முறையாகும். இதற்கு முன்னர் 2006 மற்றும் 2020–ம் ஆண்டும் தமிழக அணி கோப்பையை வென்றிருந்தது.

---

7. கோவையில் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு தொடங்கியது

கோவையில் முதல்வர் மு க ஸ்டாலின் தலைமையில் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு 2021 தொடங்கியது.

திமுக அரசு, ஆட்சிக்கு வந்த முதல் மாதத்திலேயே சென்னை கிண்டியில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தியது. தொடர்ந்து 2–வதாக சென்னை கலைவாணர் அரங்கில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. இவ்விரு மாநாடுகளிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக ரூ.21 ஆயிரம் கோடிக்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சூழலில், அடுத்த கட்டமாக 3–வது முதலீட்டாளர்கள் மாநாடு கோவையில் இன்று தொடங்கியுள்ளது. கோவை கொடிசியா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தொழித்துறை கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார். முதல்வர் தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில், 40 முதல் 45 வெளிநாடு மற்றும் உள்நாட்டின் முன்னணி நிறுவனங்கள் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட உள்ளன.

---

1. எந்த ஆண்டுக்குள் யமுனையை முழுமையாக தூய்மைப்படுத்த ஆறு அம்ச செயல் திட்டத்தை தில்லி அரசு அறிவித்துள்ளது?

அ) 2022

ஆ) 2025 ☑

இ) 2030

ஈ) 2035



✓ தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், 2025ஆம் ஆண்டுக்குள் யமுனையை முழுவதுமாக தூய்மைப்படுத்துவதற்கான ஆறு அம்ச செயல்திட்டத்தை அறிவித்தார். புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், ஏற்கனவே உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் திறனை அதிகரிப்பது மற்றும் யமுனைக்குள் மாசுக்கள் வெளியேறாமல் இருக்க புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் ஆகியவை இந்தச் செயல் திட்டத்தில் அடங்கும்.

---

2. 2022 ஜனவரி முதல் துணிகள், ஆடைகள் மற்றும் பாதணிகள் மீதான சீரான சரக்கு மற்றும் சேவை வரி (GST) விகிதம் என்ன?

அ) 5

ஆ) 8

இ) 12 ☑

ஈ) 18



✓ மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் துணிகள், ஆடைகள் மற்றும் பாதணிகளுக்கு ஒரே மாதிரியான சீரான சரக்கு மற்றும் சேவை வரி விகிதத்தை (12 சதவீதமாக) அறிவித்துள்ளது. இப்புதிய விகிதமானது தலைகீழ் வரி கட்டமைப்பை சரிசெய்வதை நோக்கமாகக்கொண்டு உள்ளது. இந்தச் சரி செய்யப்பட்ட விகிதங்கள் 2022 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வரும். முன்னதாக, ஆடைகளுக்கு ₹1000 வரையிலான விற்பனை மதிப்புக்கு 5 சதவீதமாகவும், பாதணிகளில் ஒரு ஜோடிக்கான GST விகிதம் 5 சதவீதமாகவும் இருந்தது.

3.இந்திய காவல் அறக்கட்டளையின் ஸ்மார்ட் போலிசிங் குறியீட்டில் முதல் இடத்தைப் பிடித்துள்ள இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) தெலுங்கானா

இ) ஆந்திர பிரதேசம் ☑

ஈ) குஜராத்



✓ இந்திய காவல் அறக்கட்டளையானது 2021ஆம் ஆண்டுக்கான ஸ்மார்ட் போலிசிங் குறியீட்டை வெளியிட்டுள்ளது. ஆறு திறன் அடிப்படையிலான பரிமாணங்களையும் 3 மதிப்புகள் அடிப்படையிலான நம்பிக்கையையும் இக்குறியீடு பயன்படுத்தியது. இது பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் குடிமக்களின் திருப்தியை அளவிடுகிறது.

✓ ஆந்திர பிரதேசம் (8.11), தெலுங்கானா (8.10), அஸ்ஸாம் (7.89) ஆகிய மாநிலங்களிலுள்ள காவல்துறையின் தரம் திருப்தியளிக்கும் அளவுக்கு உள்ளது. அம்மாநிலங்களைத் தொடர்ந்து கேரளா, சிக்கிம், மிசோரம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

---

4. COVID தொற்றை கையாள்வதற்காக சமீபத்தில் $490 பில்லியன் மதிப்பிலான ஊக்கப்பொதிக்கு ஒப்புதல் அளித்த ஆசிய நாடு எது?

அ) சீனா

ஆ) ஜப்பான் ☑

இ) இந்தியா

ஈ) பாகிஸ்தான்



✓ COVID தொற்றால் பொருளாதாரம் மோசமடைந்ததற்கு உதவ ஜப்பானின் அமைச்சரவை சாதனை அளவாக ¥56 டிரில்லியன் ($490 பில்லியன்) மதிப்பிலான ஊக்கப்பொதிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இந்தத் திட்டத்தில் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு பண உதவியாக தலா $880 வழங்குவது COVID-19 நடவடிக்கைகளால் விற்பனை மந்தமான வணிகங்களுக்கு நிதியுதவி வழங்குவது ஆகியன அடங்கும். பிரதம மந்திரி புமியோ கிஷிடா இந்தத் திட்டத்தை அறிவித்தார்.

---

5. 2021 – உலக கழிப்பறை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Valuing Toilets ☑

ஆ) Importance of Sanitation

இ) Global Sanitation Crisis

ஈ) Collective Action



✓ ஐநா அவையால் ஆண்டுதோறும் நவம்பர்.19ஆம் தேதி அன்று 'உலக கழிப்பறை நாள்' கடைப்பிடிக்கப்படுகிறது. தூய்மையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உலகளாவிய சுகாதார நெருக்க –டியைச் சமாளிக்க கூட்டு நடவடிக்கையை உறுதிப்படுத்தவும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Valuing Toilets" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

6. டிஜிட்டல் வர்த்தகத்திற்காக முன்மொழியப்பட்ட திறந்த வலை–அமைப்பு திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைத்த நிறுவனம் எது?

அ) இந்திய தர கவுன்சில் ☑

ஆ) இந்திய தேசிய கொடுப்பனவு கழகம்

இ) இந்திய ரிசர்வ் வங்கி

ஈ) நாஸ்காம்



✓ இந்தியத் தர கவுன்சிலானது (QCI) டிஜிட்டல் வர்த்தகத்திற்கான திறந்த வலையமைப்பு என்றவொரு (Open Network for Digital Commerce) முன் மொழியப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ஒரு நிபுணர் குழுவை நிறுவியுள்ளது. வணிகம் & தொழிற்துறை அமைச்சகத்தின்படி, பல சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஒரு திட்டத்தைச் செயல்படுத்த தன்னார்வத் தொண்டர்களாக உள்வாங்கப்பட்டுள்ளன.

✓ தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான துறை மின்னணு வர்த்தகத்தை பொதுமைப்படுத்துவதற்காக, தளம் ஒன்றை மையமாகக்கொண்ட மாதிரியிலிருந்து திறந்த வலையமைப்பி –ற்கு நகர்த்தி இந்தத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

---


7. COVID–19 தடுப்பூசிகளை வாங்குவதற்காக $2 பில்லியன் கடன் வேண்டி, இந்தியா, எந்த நிறுவனத்திடம் விண்ணப்பித்துள்ளது?

அ) உலக வங்கி

ஆ) ADB–AIIB ☑

இ) BRICS வங்கி

ஈ) IMF



✓ COVID–19 தடுப்பூசிகளை வாங்குவதற்காக, ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) ஆகிய இரு வங்கிகளிடமிருந்து $2 பில்லியன் கடனைப்பெற இந்தியா விண்ணப்பம் செய்துள்ளது. மணிலாவைச் சார்ந்த ADB $1.5 பில்லியனும் பீஜிங்கைச் சார்ந்த AIIB $500 மில்லியனும் வழங்க பரிசீலித்து வருகின்றன. சுமார் 667 மில்லியன் டோஸ் COVID தடுப்பூசிகள் கடன்மூலம் வாங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

---

8. COP26 உச்சிமாநாட்டில் தீவுகளின் நிலையை மீட்டெடுப்பது (IRIS) குறித்த முன்முயற்சியைத் தொடங்கிய நாடு எது?

அ) UK

ஆ) அமெரிக்கா

இ) இந்தியா ☑

ஈ) ஆஸ்திரேலியா



✓ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி, சிறு தீவுநாடுகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான முன்முயற்சியை (Initiative for the Resilient Island States (IRIS)) தொடங்கினார். சிறிய வளரும் தீவு நாடுகள் காலநிலை மாற்றத்தால் மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொள்வதாக பிரதமர் கூறினார். இந்திய விண்வெளி நிறுவனமான ISRO அவற்றுக்கு புயல்கள், பவளப்பாறை கண்காணிப்பு, கடலோர கண்காணிப்பு பற்றிய தகவல்களை செயற்கைக்கோள்மூலம் வழங்குவதற்காக ஒரு சிறப்பு தரவு சாளரத்தை உருவாக்கவுள்ளது.

---

9. 2021 – ஜெய் பீம் முதலமைச்சர் பிரதிபா விகாஸ் யோஜனாவைத் தொடங்கியுள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) மகாராஷ்டிரா

இ) ஆந்திர பிரதேசம்



ஈ) தில்லி ☑

✓ தில்லி அரசு 2021 – ஜெய் பீம் முதலமைச்சர் பிரதிபா விகாஸ் யோஜனா என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

✓ இது பட்டியலினத்தவர், பழங்குடியினர் & பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் நலனுக்காக தில்லி அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் UPSC, CDS, NEET, JEE முதன்மைத் தேர்வுகளுக்குத் தயாராகும் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

---

10. Inti tanager (*Heliothraupis oneilli*) என்பது அண்மையில் கண்டுபி –டிக்கப்பட்ட எவ்வகை உயிரினமாகும்?

அ) பறவை ☑



ஆ) மீன்

இ) பாம்பு

ஈ) சிலந்தி

✓ Inti tanager (*Heliothraupis oneilli*) எனப் பெயர் சூட்டப்பட்டுள்ள புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பறவையினம், 37'Oக்கும் மேற்பட்ட பாடும் பற –வையினங்களை உள்ளடக்கிய Thraupidae'இன் பெருங்குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். அப்பறவைகள் அமெரிக்க வெப்பமண்டலங்களைச் சார்ந்தவையாகும். இந்தக் குறிப்பிட்ட பறவையினம் பொலிவியா மற்றும் பெருவின் யுங்காஸ் பயோரிஜியனில் வாழ்கின்றது.

செய்த்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வீரமரணமடைந்த ஹவில்தார் பழனிக்கு வீர் சக்ரா விருது; மனைவி பெற்றுக்கொண்டார்

கல்வான் பள்ளத்தாக்கில் சீன வீரர்கள் அத்துமீறி தாக்குதல் நடத்திய போது மோதலில் உயிரிழந்த தமிழகத்தை சேர்ந்த ஹவில்தார் பழனிக்கு வீர் சக்ரா விருதினை அவரது மனைவியிடம் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 15–ம் தேதி லடாக் எல்லையில் இந்தியாவுக்கு உட்பட்ட கல்வான் பகுதியில் சீனப் படையினர் அத்துமீறி நுழைந்தனர். அவர்களை இந்திய வீரரர்கள் தடுத்து நிறுத்தினர். அப்போது இருதரப்புக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதில் இந்திய தரப்பில் 20 வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். இவர்களில் தெலங்கானா –வைச் சேர்ந்த கர்னல் சந்தோஷ் பாபுவும் ஒருவர்.

கர்னல் சந்தோஷ் பாபு

உயிரிழந்த 20 பேரில் ராமநாதபுரம் மாவட்டம் கடுக்கலூரைச் சேர்ந்த ஹவில்தார் பழனியும் ஒருவர். வீரர் பழனியின் உடல் சொந்த கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டு மத்திய, மாநில அரசுகள் சார்பில் ராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

ஹவில்தார் பழனி

உயிரிழந்த வீரர்களுக்கு ராணுவ விருதுகள் அறிவிக்கப்பட்டன. கர்னல் சந்தோஷ் பாபுவுக்கு மகாவீர் சக்ரா விருது அறிவிக்கப்பட்டது. தமிழகத்தை சேர்ந்த ஹவில்தார் பழனிக்கான வீர் சக்ரா விருத அறிவிக்கப்பட்டது.

---

2. சுற்றுலாவை ஊக்குவிக்க 'பாரத் கௌரவ்' தனியார் ரயில் திட்டம்

சரக்கு, பயணிகள் ரயில்களுக்கு அடுத்தபடியாக சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கவும் இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தை பறைசாற்றவும், கௌரவ் ரயில்கள் என்ற பெயரில் 190 ரயில்கள் இயக்கப்படும் என்றும் இதை தனியாரும் நிர்வகிப்பர் என்றும் மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

---

3. கரோனா ஊரடங்கு காலத்தில் புத்தகம் எழுதி வெளியிட்ட 11 வயது காஷ்மீர் சிறுமி

கரோனா ஊரடங்கு காலத்தில் புத்தகம் எழுதி இளம் எழுத்தாளராக உருவெடுத்துள்ளார் 11 வயது காஷ்மீர் சிறுமி.

கரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக கடந்தஆண்டு மார்ச் மாதம் நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இதனால் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன. இணையவழியில் பாடங்கள் நடத்தப்பட்டன.

இந்த ஊரடங்கு காலத்தை சில மாணவர்கள் பயனுள்ள வகையில் மாற்றிக் கொண்டனர். அந்த வகையில், தெற்கு காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பாட்டெங்கூ கிராமத்தைச் சேர்ந்த11 வயது சிறுமி அதீபா ரியாஸ், இளம் எழுத்தாளராக உருவெடுத்துள்ளார்.

தனியார் பள்ளியில் 7ஆம் வகுப்பு படிக்கும் அவர், ஊரடங்கின்போது தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருந்தபோது ஏற்பட்ட எண்ணங்கள், கருத்துகள், உணர்வுகளை எழுதியுள்ளார். இது 'ஜீல் ஆப் பென்' என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக கடந்த செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்டது. 96 பக்கங்களைக் கொண்டுள்ள இந்தப் புத்தகம் அமேசானில் கிடைக்கிறது.

---

4. தனியார் கிரிப்டோகரன்சிக்கு தடை விதிக்கும் மசோதா வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளதாக தகவல்

தனியார் கிரிப்டோகரன்சிக்கு தடை விதிக்கும் மசோதா, வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளது. ரிசர்வ் வங்கியின் மூலம் இந்தியாவின் பிரத்தியேக டிஜிட்டல் பணம் பகிர்வதற்கும் சட்டமசோதா வழி வகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிரிப்டோகரன்சி எனப்படும் மெய்நிகர் நாணயம் பல நாடுகளில் பிரபலமடைந்து வருகிறது. பிட்காயின், எத்தீரியம், லைட்காயின், டீத்தர், சொலானா போன்ற கிரிப்டோகரன்சிகளில் அதிகளவில் பரிவர்த்தனை செய்கின்றனர். ஒரு பிட்காயின் மதிப்பு தற்போதைய நிலவரப்படி 42 லட்சத்து 83 ஆயிரம் ரூபாயாகும்.

டிஜிட்டல் நாணயங்களில் முதலீடு தொடர்பான விளம்பரங்களால் ஈர்க்கப்பட்டு ஏராளமானோர் முதலீடு செய்வதால், கிரிப்டோகரன்சி பொருளாதார ரீதியாக புதிய சவாலை ஏற்படுத்தி வருகிறது.

பிரதமர் மோடி தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில், தனியார் கிரிப்டோகரன்சியால் நிதிமோசடிகள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதி செல்லும் அபாயம் உள்ளதாக அச்சம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் 2 கோடி கிரிப்டோ முதலீட்டாளர்கள் இருப்பதாகவும், 40 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. தனியார் டிஜிட்டல் கரன்சிக்குத் தடை விதிக்கப்பட்டால் இந்நிறுவனங்கள் பேரிழப்பை சந்திக்க நேரிடும் என்றும் கூறப்படுகிறது.

கிரிப்டோ கரன்சியை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றனர். ரிசர்வ் வங்கி மத்திய அரசுக்கு அளித்த பரிந்துரையில், கிரிப்டோகரன்சி நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கிரிப்டோ கரன்சியை முறைப்படுத்தும் மசோதாவை மத்திய அரசு நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது. தனியார் கிரிப்டோகரன்சிக்கள் அனைத்தையும் தடை செய்ய கிரிப்டோகரன்சி மற்றும் அதிகாரப்பூர்வ டிஜிட்டல் நாணய கட்டுபாடு மசோதா–2021 வகை செய்கிறது. அதேநேரம் ரிசர்வ் வங்கியால் அதிகாரப்பூர்வமான மின்னணு கரன்சியை அறிமுகம் செய்யவும் வழிவகை செய்யப்படும் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

---

5. போட்டித்தேர்வு, வேலைவாய்ப்பு தகவல்களை அறிய செயலி: அமைச்சர் தொடக்கிவைத்தார்

போட்டித்தேர்வு மற்றும் வேலைவாய்ப்புக்குரிய தகவல்களை அறிந்து கொள்வதற்கான இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி ஆகியவற்றை, பள்ளிக் கல்வித்துறை அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடக்கிவைத்தார்.

இதற்கான நிகழ்ச்சி, சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது. இதில், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் கன்னிமாரா பொது நூலகத்தில் பணியாற்றி திறம்பட செயல்பட்டு வரும் 33 நூலகர்களுக்கு 'Dr SR அரங்கநாதன் விருது' வழங்கி, அமைச்சர் பாராட்டினார்.

தொடர்ந்து, போட்டித்தேர்வுக்குத் தயாராகும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள், மத்திய, மாநில அரசுகளின் போட்டித்தேர்வுகள் மற்றும் வேலைவாய்ப்புபற்றிய தகவல்களை அறிய 'உங்கள் நூலகம் உள்ளங்கையில்' (TN Employment News) என்ற திறன்பேசி செயலியை –யும், www.tnemployment.in இணையதளத்தையும், 19,684 நூல்கள் மற்றும் 2 லட்சத்து 54,694 ஓலைச்சுவடி பக்கங்களை மின்னுருவாக்கம் செய்து, வடிவமைக்கப்பட்ட மின்நூலகத்தையும் அமைச்சர் தொடக்கி வைத்தார். இதனை www.tamilnadupubliclibraries.org என்ற இணைய தளம் வழியாகப் பயன்படுத்தலாம்.

---

6. நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை செயல்படுத்துவதில் சிம்லாவுக்கு முதலிடம்

ஐநா'இன் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை சிறப்பாகச்செயல்படுத்தும் நகரங்களில் ஹிமாசல் தலைநகர் சிம்லா முதலிடம் பிடித்துள்ளது.

இந்தப் பட்டியலில் தமிழகத்தின் கோவை நகரம் இரண்டாமிடத்தையும், திருச்சி நகரம் 8ஆம் இடத்தையும் பிடித்துள்ளது.

நீடித்த வளர்ச்சியை உறுதிசெய்வதற்காக 17 இலக்குகளை ஐநா நிர்ண –யித்துள்ளது. வறுமை ஒழிப்பு, பசி ஒழிப்பு, சிறந்த சுகாதாரம், சிறந்த கல்வி, பாலின சமத்துவம், சுத்தமான குடிநீர், மலிவான–தூய்மை எரிசக்தி, ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், பருவநிலை மாற்றத்தைத் தடுத்தல் உள்ளிட்ட இலக்குகள் அதில் இடம்பெற்றுள்ளன. அந்த இலக்குகளை 2030ஆம் ஆண்டுக்குள் எட்ட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஐநா நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதில் இந்திய நகரங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது குறித்து NITI ஆயோக், ஜெர்மனியின் ஜிஐஇசட் நிறுவனம் ஆகியவை இணைந்து ஆய்வு நடத்தின. நாட்டில் உள்ள 56 நகரங்களில் அந்த ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வுக்குறியீட்டையும், அதுசார்ந்த தகவல் தளத்தையும் NITI ஆயோக் துணைத்தலைவர் இராஜீவ் குமார் வெளியிட்டார். ஆய்வுக்குறியீட்டில் சிம்லா, கோவை, சண்டீகர் ஆகிய நகரங்கள் முதல் மூவிடங்களைப் பிடித்துள்ளன. தன்பாத், மீரட், இடாநகர் ஆகியவை கடைசி இடங்களைப் பிடித்துள்ளன. இதுதொடர்பாக இராஜீவ் குமார் கூறுகையில், "வளர்ச்சியின் இயந்திரமாக நகரங்கள் வேகமாக உருவெடுத்து வருகின்றன. இந்தியா–ஜெர்மனி ஒத்துழைப்புடன் தற்போது வெளியிடப் –பட்டுள்ள ஆய்வுக்குறியீடும், தகவல் தளமும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதில் நகரங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க உதவும்" என்றார்.

இந்த ஆய்வுக் குறியீட்டில் மதிப்பெண்களின் அடிப்படையில் நகரங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. 100 மதிப்பெண் என்பது அனைத்து இலக்குகளையும் அடைந்துவிட்டதைக் குறிக்கும். ஆனால், எந்த நகரமும் 80 மதிப்பெண்களுக்கு அதிகமாகப் பெறவில்லை.

---

7. ஜூனியர் உலக கோப்பை ஆக்கி போட்டி இன்று தொடக்கம்

12ஆம் ஜூனியர் உலக கோப்பை ஆக்கி போட்டி (21 வயதுக்குட்பட்டோர்) ஒடிஸா மாநில தலைநகரம் புவனேஸ்வரத்தில் உள்ள கலிங்கா அரங்க –த்தில் ஸ்டேடியத்தில் இன்று முதல் வருகிற 5–ந்தேதி வரை நடக்கிறது. இதில் பங்கேற்கும் 16 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 'ஏ' பிரிவில் பெல்ஜியம், சிலி, மலேசியா, தென்ஆப்பிரிக்கா, 'பி' ரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பிரான்ஸ், போலந்து, கனடா, 'சி' பிரிவில் ஸ்பெயின், நெதர்லாந்து, தென் கொரியா, அமெரிக்கா, 'டி' பிரிவில் ஜெர்மனி, அர்ஜென்டினா, பாகிஸ்தான், எகிப்து ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவிலுள்ள மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும்.

லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் டாப்–2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு தகுதிபெறும். கொரோனா பயணக்கட்டுப்பாடுக –ளை காரணம் காட்டி ஆஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகள் விலகி விட்டன. ஆறு முறை சாம்பியனான ஜெர்மனி, இருமுறை சாம்பியனான இந்தியா மற்றும் பெல்ஜியம், நெதர்லாந்து அணிகள் கோப்பையை வெல்லும் வாய்ப்பில் முன்னணியில் உள்ளன.

இந்திய அணி விவேக் சாகர் பிரசாத் தலைமையில் களம் இறங்குகிறது. இவர் டோக்கியோ ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்று வரலாறு படைத்த இந்திய சீனியர் அணியில் இடம்பிடித்தவராவார். 2016ஆம் ஆண்டு பெல்ஜியத்தை தோற்கடித்து வாகை சூடிய இந்திய அணி பட்டத்தை தக்க வைக்கும் முனைப்புடன் ஆயத்தமாகி வருகிறது. உள்ளூர் சூழல் இந்திய அணிக்கு சாதகமான அம்சமாகும். ஆனால் கொரோனா தடுப்பு பாதுகாப்பு நடைமுறை காரணமாக ரசிகர்களுக்கு அனுமதி இல்லை.

---

8. தமிழகத்துக்கான மத்திய தணிக்கை குழு: ஆலோசகர்களாக அசோக்வரதன் ஷெட்டி, ஜாங்கிட் நியமனம்: நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் முதல் கூட்டம்

தமிழகத்துக்கான மத்திய தணிக்கை குழுவின் ஆலோசகர்களாக முன்னாள் அதிகாரிகள் அசோக்வரதன் ஷெட்டி, ஜாங்கிட் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இந்த குழுவின் முதல் கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது. மத்திய, மாநில அரசுகளின் செலவுகள், திட்டங்கள் குறித்து மத்திய தணிக்கை குழு ஆய்வு செய்யும். இந்தக் குழு அனைத்து துறைகளிலும் உள்ள திட்டங்களை ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை அளிக்கும். இந்த அறிக்கையில்தான் எந்தெந்த துறையில் வீணாக செலவு செய்யப்பட்டுள்ளது. முறைகேடுகள் எந்த துறைகளில், எந்த திட்டங்களில் நடந்துள்ளது என்பதை விரிவாக தெரிவிப்பார்கள்.

கடந்த அதிமுக ஆட்சியில் மின்சார துறையில் பல நூறு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சமீபத்தில் தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. அதில் மத்திய அரசின் திட்டங்களை ஆய்வு செய்ய மத்தியில் தனியாக தணிக்கை குழுவும், மாநில அரசின் திட்டங்களை ஆய்வு தனியாக மாநிலக் குழுவும் உள்ளது.

தற்போது தமிழகத்தில் தணிக்கை குழு அதிகாரியாக அம்பலவாணன் உள்ளார். இந்தநிலையில், தற்போது இந்த குழுவில் எந்தெந்த துறைகளில் எப்படி திட்டங்களை ஆய்வு செய்வது, எந்த திட்டங்களை ஆய்வு செய்வது என்பது குறித்து ஆலோசனை வழங்க, தற்போது புதிதாக 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி அசோக் வரதன் ஷெட்டி, முன்னாள் டிஜிபி ஜாங்கிட், வருமான வரித்துறை முன்னாள் தலைமை ஆணையர் ராஜேந்திரன், மேற்கு வங்க முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி பாலச்சந்திரன், இஸ்ரோவின் முன்னாள் தலைவர் மயில்சாமி அண்ணாதுரை உள்ளிட்ட 7 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த குழுவின் முதல் கூட்டம் சென்னையில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு தமிழக நிதி அமைச்சர் PTR பழனிவேல் தியாகராஜன், தணிக்கை குழுவின் அதிகாரி அம்பல வாணன் மற்றும் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

9. நகர முன்னேற்றத்தை மதிப்பிடும் 'NITI ஆயோக்' திட்ட மதிப்பீட்டில் இந்திய அளவில் கோவைக்கு 2ஆம் இடம்

நிதி ஆயோக்கின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் திட்டத்தில் 2021–ம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் குறித்தஅறிக்கையில் நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் கோவை 2ஆம் இடம்பெற்றுள்ளது.

நாட்டில் நிலையான வளர்ச்சி இலக்குகள் பின்பற்றப்படுவதைக் கண்காணிப்பது, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இடையே ஒத்துழைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பது ஆகிய முக்கியப் பணிகளை மத்திய அரசின் 'நிதி ஆயோக்' மேற்கொள்கிறது. அந்த வகையில் முக்கிய நகரங்களின் முன்னேற்றத்தை மதிப்பிடும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் திட்டத்தில், 2021ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளை ஜெர்மனியைச் சேர்ந்த வளர்ச்சி நிறுவனம் ஒன்றுடன் இணைந்து நிதி ஆயோக் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

சுகாதாரம், கல்வி, பாலினம், பொருளாதார வளர்ச்சி, நிறுவனங்கள், பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு இலக்குகளில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வளர்ச்சியை அளவிடும் அளவுகோலாக இந்த மதிப்பீடு பார்க்கப்படுகிறது.

இவ்வாறு வெளியிடப்பட்ட மதிப்பீட்டில் ஒட்டுமொத்த அடிப்படையில் கோவை நகரம் 73.29 மதிப்பெண் பெற்று நாட்டில் 2–ம் இடம் பெற்றுள்ளது. முதலிடத்தை 75.50 மதிப்பெண்கள் பெற்று சிம்லா பிடித்துள்ளது. திருச்சி நகரம் 70 மதிப்பெண்களுடன் 8–வது இடத்தையும், சென்னை நகரம் 69.36 மதிப்பெண்களுடன் 11–வது இடத்தையும், மதுரை 65.86 மதிப்பெண்களுடன் 26–வது இடத்தையும் பெற்றுள்ளன. மொத்தமாக 56 இந்திய நகரங்கள் இந்த மதிப்பீட்டுக்கான பட்டியலில் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வறுமை ஒழிப்பில் முதலிடம்

அதே நேரத்தில், 'வறுமை ஒழிப்பு' என்ற பிரிவில் 87 மதிப்பெண்கள் பெற்று கோவை முதலிடத்தில் உள்ளது. 80 மதிப்பெண்களுடன் திருச்சி,

மதுரை நகரங்கள் 2–வது இடங்களில் உள்ளன. சென்னை 65 மதிப்பெண்களுடன் 10–வது இடத்தில் உள்ளது.

'உடல் நலம் பேணுதல்' என்ற பிரிவில் 71 மதிப்பெண்களுடன் கோவை 5ஆவது இடத்தில் உள்ளது. தரமான கல்வி என்ற பிரிவில் 88 மதிப்பெண்களுடன் கோவை 3ஆம் இடத்தைப் பிடித்துள்ளது. முதல் இரு இடங்களைக் கேரள மாநிலம் திருவனந்தபுரம், கொச்சி நகரங்கள் பிடித்துள்ளன. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள், பெண்களுக்கு எதிராக கணவர் அல்லது உறவினர்களால் ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்கள் மற்றும் கொடுமைகள், பெண் கல்வி, பாலின பிறப்பு உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு அடையாளப்படுத்தப்படும் 'பாலின சமன்பாடு' பிரிவில் 87 மதிப்பெண்க –ளுடன் சென்னை 9ஆவது இடத்திலும், 86 மதிப்பெண்களுடன் திருச்சி 11ஆவது இடத்திலும், 82 மதிப்பெண்களுடன் கோவை 16ஆவது இடத்தி –லும், 71 மதிப்பெண்களுடன் மதுரை 41ஆவது இடத்திலும் உள்ளன.

இயற்கை பேரிடர் பாதிப்புகளால் ஏற்படும் உயிரிழப்புகள், காற்றின் தரம், மத்திய அரசின் திட்டத்தின்கீழ் LED மின் விளக்குகளை விநியோகித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுச்சூழல் நடவடிக்கைகளில் சென்னை, கோவை, மதுரை ஆகிய 3 நகரங்களும் 67 மதிப்பெண்களுடன் 18–வது இடத்தில் உள்ளன.

தொழில், உள்கட்டமைப்பு

தொழில், கண்டுபிடிப்புகள் மற்றும் உள்கட்டமைப்புப் பிரிவில் 70 மதிப்பெண்களுடன் கோவை நகரம் 4ஆம் இடத்தில் உள்ளது. இவ்வாறு பல்வேறு பிரிவுகளில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நகரங்களின் 'ரேங்க்' பட்டியலிடப்பட்டுள்ளது.

---

10. கிரிப்டோ கரன்சியை அறிமுகம் செய்கிறது ஆர்பிஐ: தனியார் கரன்சியை தடை செய்ய புதிய மசோதா தயார்

புதிய கிரிப்டோ கரன்சியை ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அறிமுகம் செய்யவும் தனியார் கரன்சியை தடை செய்யவும் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பான மசோதா மத்திய அமைச்சரவை ஒப்புதலுக்குத் தயாராக உள்ளது.

மெய்நிகர் கரன்சி எனப்படும் கிரிப்டோ கரன்சி வர்த்தகத்துக்கு மத்திய அரசு அங்கீகாரம் அளிக்கவில்லை. ஆனால் இதை முறைப்படுத்துமாறு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியது. இதைத்தொடர்ந்து இது தொடர்பான புதிய மசோதாவை தயார் செய்துள்ளது.

கிரிப்டோ கரன்சி மற்றும் முறைப்படுத்தல் மற்றும் அதிகாரப்பூர்வ டிஜிட்டல் கரன்சி மசோதா 2021, என பெயரிடப்பட்டுள்ள இந்தமசோதா மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்கு தயாராக உள்ளது. இதற்கு ஒப்புதல் கிடைத்தால் வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகிறது.

இதன்படி, ரிசர்வ் வங்கி பிரத்யேகமாக கிரிப்டோ கரன்சியை அறிமுகம் செய்யும் எனத் தெரிகிறது. இது தொடர்பாக சோதனை ரீதியில்டிஜிட்டல் கரன்சியை ரிசர்வ் வங்கிவிரைவில் அறிமுகம் செய்யும் என தெரிகிறது. அத்துடன் அனைத்துதனியார் கிரிப்டோ கரன்சி பரிவர்த்தனையும் தடை செய்யப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

அதே சமயம் கிரிப்டோ கரன்சி வர்த்தகம் மற்றும் அதன் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் சில நிபந்தனைகளுடன் குறிப்பிட்டவர்த்தகத்துக்கு அனுமதிப்பதுஎன்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து மக்களவை செய்திக்குறிப்பில் இம்மசோதா தாக்கலாகலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதேபோல மாநிலங்களவையின் அலுவல் நேரத்திலும் இது இடம்பெற்றுள்ளது.

இந்த மசோதா குறித்த விவரம் எதுவும் பொது தளத்தில் வெளியிடப்படவில்லை. அத்துடன் இது தொடர்பாக பொது மக்களிடம் கருத்துகளும் கேட்கப்படவில்லை.

கிரிப்டோ கரன்சி முதலீடு குறித்து விரிவான விளம்பரங்கள் வெளியாகின்றன. இதில் பலரும் முதலீடு செய்து அதிக நஷ்டத்தை எதிர்கொண்டுள்ளனர். இதற்கு யாரை பொறுப்பாக்குவது என்ற கேள்விக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

இம்மாதம் 13–ம் தேதி பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கிரிப்டோ கரன்சி வர்த்தகம் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நிதி அமைச்சகம் மற்றும் உள்துறை அமைச்சகத்தின் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். முறையற்ற கிரிப்டோ கரன்சி வர்த்தகம் அந்நியச் செலாவணி மோசடிக்கும், தீவிரவாத குழுக்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கும் பயன்படும் என்று கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் இது குறித்து தீவிரமான உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம் என்ற கருத்தும் வெளியிடப்பட்டது.

கடந்த வாரம் நாடாளுமன்ற நிதித்துறை நிலைக்குழு, கிரிப்டோ கரன்சி குறித்து இத்துறை வல்லுநர்களுடன் ஆலோசனை நடத்தியது. அப்போது கிரிப்டோ வர்த்தகம் தொடர்பாக கருத்துகள் கேட்கப்பட்டது. அத்துடன் இந்த வர்த்தகத்தை முறைப்படுத்துவது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது. – பிடிஐ

---

11. முகேஷ் அம்பானியை பின்னுக்கு தள்ளி ஆசிய பணக்காரர் பட்டியலில் அதானி முதலிடம்

ஆசிய பணக்காரர்கள் பட்டியலில் 2015–ம் ஆண்டிலிருந்து முதலிடத்தில் இருந்து வந்த ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி தற்போது இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். அதானி குழுமத்தின் தலைவர் கவுதம் அதானி தற்போது முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

அதானி குழுமத்தின் சொத்து மதிப்பு, அதன் பங்கு விலை உயர்ந்ததைத் தொடர்ந்து கவுதம் அதானிமுதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். புளூம்பர்க் கோடீஸ்வரர்கள் பட்டியலில் நவம்பர் 23–ம் தேதி நிலவரப்படி முகேஷ் அம்பானி சொத்து மதிப்பு 9,100 கோடி டாலராக இருந்தது. அதானியின் சொத்து மதிப்பு 8,880 கோடி டாலராக இருந்தது. நேற்று ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பங்கு விலைகள் 1.72 சதவீதம் சரிந்தன. இதனால் கவுதம் அதானியின் சொத்து மதிப்பு உயர்ந்து முதலிடத்துக்கு முன்னேற வழியேற்படுத்தியது.

அதானி என்டர்பிரைஸஸ் பங்கு விலை 2.34% உயர்ந்தன. அதானி துறைமுகம் மற்றும் சிறப்பு பொருளாதார மண்டல பங்கு விலை 4 % அதிகரித்தது. இதனால் சந்தை மதிப்பு ரூ.3.5 லட்சம் கோடி லாபம் ஈட்டியது. அதேநேரம் அதானி டிரான்ஸ்மிஷன் சந்தை மதிப்பு ரூ.2.13 லட்சம் கோடி சரிந்தது. அதேபோல அதானி பவர் சந்தை மதிப்பு ரூ.41 ஆயிரம் கோடி நஷ்டத்தை சந்தித்தது. இதேபோல அதானி கிரீன் மற்றும் அதானி டோட்டல் கேஸ் பங்கு விலைகள் 1 % சரிந்தன.

செவ்வாய்க்கிழமை நிலவரப்படி கவுதம் அதானியின் சொத்துமதிப்பு இந்த ஆண்டில் மட்டும்5,500 கோடி டாலர் அதிகரித்துள்ளது. அதேநேரம் முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு இந்த ஆண்டில் 1,430 கோடி டாலர் அதிகரித்துள்ளது. 2021–ம் ஆண்டில் அதானியின் சொத்து மதிப்பு உலகின் மற்ற 10 முன்னணி கோடீஸ்வரர்களை விட அதிகமாகும். கூகுள் நிறுவனர்களான லாரி பேஜ் சொத்து மதிப்பு 4,720 கோடி டாலரும் செர்கி பிரினின் சொத்து மதிப்பு 4,490 கோடி டாலரும் உயர்ந்தது.

---

12. காஞ்சிபுரத்தில் தகவல் மையம் – லார்சன் அண்ட் டுப்ரோ தமிழக அரசுடன் ஒப்பந்தம்:

லார்சன் அண்ட் டுப்ரோ நிறுவனம் காஞ்சிபுரத்தில் மிகப் பெரிய தகவல் மையத்தை (டேட்டா சென்டர்) உருவாக்க தமிழக அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இது 90 மெகாவாட் திறன் கொண்டதாகும். இது சார்ந்த பிற யூனிட்டுகளும் இங்கு அடுத்த 5 ஆண்டுகளில் ஏற்படுத்தப்படும். இதனால் 1,100 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இதில் 600 பேர் நேரடி வேலைவாய்ப்பையும், 500 பேர் மறைமுகவேலைவாய்ப்பையும் பெறுவ –ர் என நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசுடன் ஒப்பந்தம் செய்தது தொடர்பான அறிக்கையை மும்பை பங்குச் சந்தைக்கு தாக்கல் செய்த கடிதத்தில் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மையம் அமைப்பதற்குத் தேவையான தடையற்ற மின்சாரத்தை தமிழக அரசு வழங்கும். அத்துடன் மையம் அமைப்பதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளையும் செய்து தரும்.

---

13. தில்லி அரசின் சுற்றுலாத் திட்டத்தில் விரைவில் 'வேளாங்கண்ணி தேவாலயம்' கேஜரிவால் அறிவிப்பு

தில்லி அரசின் மூத்த குடிமக்களுக்கான இலவச புனித யாத்திரை திட்டத்தின்கீழ் இடம்பெற்றுள்ள புனித யாத்திரை இடங்கள் பட்டியலில் தமிழகத்தில் உள்ள வேளாங்கண்ணி தேவாலயமும் விரைவில் சேர்க்கப்பட உள்ளதாக முதல்வர் அரவிந்த் கேஜரிவால் அறிவித்துள்ளார்.

கரோனா நோய்த்தொற்று காரணமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'முக்கிய மந்திரி தீர்த்த யாத்திரை திட்ட'த்தை தில்லி அரசு டிசம்பர் 3ஆம் தேதி மீண்டும் தொடங்க உள்ளதாகவும், அப்போது மூத்த குடிமக்கள் யாத்ரீகர்கள் பயணம் செய்வார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தில்லி அரசின் மூத்த குடிமக்களுக்கான புனித யாத்திரை திட்டத்தில் உத்தர பிரதேசத்தில் உள்ள அயோத்தி நகரத்தையும் சேர்ப்பதற்கு தில்லி அமைச்சரவை கடந்த மாதம் ஒப்புதல் அளித்திருந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் 1,000 மூத்த யாத்ரீகர்கள் அயோத்திக்கு ரயிலில் டிசம்பர் 3ஆம் தேதி தில்லியில் இருந்து புறப்பட்ட உள்ளனர் என்று தில்லி அரசின் தீர்த்த யாத்ரா விகாஷ் சமிதியின் தலைவர் கமல் பன்ஸல் தெரிவித்தார்.

---

14. சுகாதார உள்கட்டமைப்பு மேம்பாடு: இந்தியாவுக்கு ரூ.2,236 கோடி கடன்

இந்தியாவில் 13 மாநிலங்களில் சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து ரூ.2,236 கோடி கடன் பெறுவதற்கான ஒப்பந்தத்தை மத்திய அரசு மேற்கொண்டது.

இதன்மூலம் நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதிகளில் வசிக்கும் 5.1 கோடி பேர் உள்பட மொத்தம் 25.6 கோடி பேர் பயன்பெறுவர் என மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. மத்திய அரசின் சார்பில், நிதி அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்கள் பிரிவு கூடுதல் செயலர் ரஜத் குமார் மிஷ்ராவும், ஆசிய வளர்ச்சி வங்கி சார்பில், அதன் பிராந்திய இயக்குநர் தெகியோ கோனிஷியும் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

மத்திய அரசின் முக்கியத் திட்டங்களை நகர்ப்புறங்களில் விரிவுபடுத்தி, எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்கள் தரமான ஆரம்ப சுகாதார சேவைகளைப் பெறுவதற்கு இந்த ஒப்பந்தம் உதவும் என ரஜத் குமார் மிஷ்ரா தெரிவித்தார். மேலும், இந்தியாவின் சுகாதாரக் கட்டமைப்பில் பெருந்தொற்று ஏற்படுத்திய சவால்களுக்கு மத்தியில், ஆரம்ப சுகாதார வசதிகளை உறுதிப்படுத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் மத்திய அரசின் பிரதமர் ஆரோக்கிய தற்சார்பு இந்தியா திட்டத்துக்கு கூடுதல் நிதியுதவி கிடைக்கவுள்ளது. கரோனா தொற்றுப்பரவலுக்கு இடையே, எதிர்காலத்தில் பெருந்தொற்று பரவல் உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ளும் வகையில், சுகாதார உள்கட்டமைப்பு வசதியை வலுப்படுத்தும் வகையில், மத்திய அரசு கடந்த அக்டோபரில் இத்திட்டத்தை தொடங்கியது. இத்திட்டம் தமிழகம், தெலங்கானா, மேற்கு வங்கம், ஆந்திரம், அஸ்ஸாம், சத்தீஸ்கர், ஹரியாணா, ஜார்க்கண்ட், கர்நாடகம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

---

15. 50 சதவீதத்துக்கு மேற்பட்ட பெண்கள், குழந்தைகளுக்கு ரத்தசோகை பாதிப்பு

நாட்டில் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட பெண்கள், குழந்தைகள் ரத்தசோகை குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருப்பது அண்மையில் நடத்தப்பட்ட தேசிய குடும்ப சுகாதார ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த விகிதாசாரம் கடந்த முறையைவிட அதிகம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் மக்கள்தொகை, இனப்பெருக்கம், குழந்தைகள் நலன், குடும்ப நலன்கள், ஊட்டச்சத்து மற்றும் பிற ஆரோக்கியம் சார்ந்த ஆய்வுகளை, 'தேசிய குடும்ப சுகாதார ஆய்வு (NFH சர்வே)' என்ற பெயரில் மத்திய குடும்ப நல அமைச்சகம் ஒவ்வொரு முறையும் மேற்கொண்டு வருகிறது.

அதன்படி NFH சர்வே-5'இன் முதல் கட்ட ஆய்வு முடிவுகள் கடந்த 2020, டிசம்பரில் வெளியிடப்பட்டன. அதில் 22 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் கட்ட (NFH சர்வே-5) ஆய்வு முடிவுகளை குடும்பநல அமைச்சகம் வெளியிட்டது.

அதன் விவரம் வருமாறு: அருணாசல பிரதேசம், சண்டீகர், சத்தீஸ்கர், ஹரியாணா, ஜார்க்கண்ட், மத்திய பிரதேசம், தில்லி, ஒடிஸா, புதுச்சேரி, பஞ்சாப், ராஜஸ்தான், தமிழகம், உத்தர பிரதேசம், உத்தரகண்ட் ஆகிய 14 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இந்த முடிவுகளை முதல் கட்ட ஆய்வுடன் ஒப்பிடுகையில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஊட்டச்சத்து விகித குறைபாடு 38-இலிருந்து 36 சதவீதமாகவும், உணவை வீணாக்குவது 21-சதவீதத்திலிருந்து 19 சதவீதமாகவும் குறைந்துள்ளது. குறைந்த எடை கொண்ட குழந்தைகளின் விகிதம் 36-இலிருந்து 32 சதவீதமாகக் குறைந்துள்ளது.

14 மாநிலங்களில் பாதிக்கும் மேற்பட்ட கர்ப்பிணிகள் உள்பட பெண்கள், குழந்தைகள் ரத்தசோகை குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. கர்ப்பிணிகளுக்கு 180 நாள்களுக்கும் மேலாக இரும்புச்சத்து மாத்திரைகள் (அயர்ன் ஃபோலிக் ஆசிட் மாத்திரைகள்) வழங்கப்பட்டபோதும் இந்தப் பாதிப்பு குறையவில்லை. இந்திய அளவிலும் இது பாதியாகும்.

6 மாதங்களுக்கு உள்பட்ட குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்குவது 2015-16-இல் 55 சதவீதமாக இருந்தது. அந்த விகிதம் 2019-21-இல் 64 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த முன்னேற்றம் இரண்டு கட்டங்களில் நடத்தப்பட்ட ஆய்விலும் தெரியவந்துள்ளது.

குழந்தை பிறப்பு விகிதம்: மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறப்பு விகிதம் 79 சதவீதத்திலிருந்து 89 சதவீதமாக உயர்ந்துள்ளது. புதுச்சேரியிலும், தமிழகத்திலும் மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறப்பு 100 சதவீதத்தைத் தொட்டுள்ளது. 7 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இந்த விகிதாசாரம் 90 சதவீதத்தை எட்டியுள்ளது.

மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறப்பு விகிதத்தில் அறுவை சிகிச்சை மூலம் குழந்தைகள் பிறப்பு விகிதம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. குறிப்பாக தனியார் மருத்துவமனைகளில் இந்த விகிதாசாரம் அதிகம்.

குடும்ப நல அறுவை சிகிச்சைகள் 13 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாக குறைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஆய்வு நடத்தப்பட்ட அனைத்து மாநிலங்களிலும் 12 முதல் 23 மாதங்களுக்கு உள்பட்ட குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி விகிதம் 62 சதவீதத்திலிருந்து 76-ஆக அதிகரித்துள்ளது. 11 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இந்த விகிதாசாரம் அதிகம் உள்ளது. குறிப்பாக, ஒடிஸாவில் குழந்தைகள் நோய் எதிர்ப்பு சக்தியை 90 சதவீதம் பெற்றுள்ளன. குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தி கடந்த நான்கு ஆண்டுகளில் அதிகரித்துள்ளதற்கு மத்திய அரசின் "இந்திர தனுஷ் மிஷன்' திட்டம் தொடங்கப்பட்டது முக்கியக் காரணமாகும்.

ஒரு பெண்ணின் சராசரி கருத்தரிப்பு எண்ணிக்கையின் அடிப்படையில் பெண்களின் கருத்தரிப்பு விகிதாசாரம் மொத்தமாக 2.2 சதவீதத்திலிருந்து 2.0 ஆக குறைந்துள்ளது. இதில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், உத்தரபிரதேசம் மாநிலங்களைத் தவிர ஏனைய மாநிலங்களில் இந்த விகிதம் 2.1 சதவீதம் என்ற இலக்கை அடைந்துள்ளது.

கருத்தடை செய்வதில் பஞ்சாப் மாநிலத்தைத் தவிர ஏனைய மாநிலங்களில் ஒட்டுமொத்த கருத்தடை செய்யப்படும் விகிதம் 54 சதவீதத்திலிருந்து 67 சதவீதமாக உயர்ந்துள்ளது. கருத்தடை செய்வதற்கு நவீன முறைகளைக் கையாள்வதும் அதிகரித்துள்ளது.

NFHS-4 மற்றும் NFHS-5 உடன் ஒப்பிடுகையில் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் வங்கிக்கணக்குகளை பெண்கள் கையாளு -தல் ஆகியவை 53 சதவீதத்திலிருந்து 79 சதவீதமாக அதிகரித்துள்ளன.

மத்திய பிரதேசத்தில் இந்த விகிதாசாரம் 37 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக அதிகரித்துள்ள நிலையில் ஏனைய மாநிலங்களில் ஏற்கெனவே 70% பெண்கள் வங்கிக்கணக்குகளை கையாளுகின்றன -ர் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் நடத்தப்படும் இந்த ஆய்வுகள் நாட்டில் ஆரோக்கியம் மற்றும் குடும்பநலம்சார்ந்த உண்மைக -ளைத் தெரிந்துகொள்ளவும், தரவுகளை ஒப்பிடவும் உதவுகிறது.

---

16. முதல்முதலாக அன்டார்டிகாவில் தரையிறங்கியது ஏ340 விமானம்

அமெரிக்காவின் ஏர்பஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் ஏ340 வகை விமானமொன்று அன்டார்டிகாவில் முதல்முறையாகத் தரையிறங்கியது.

இதுகுறித்து சிஎன்என் தொலைக்காட்சி தெரிவித்துள்ளதாவது:

அன்டார்டிகா கண்டத்தில் ஏர்பஸ் ஏ340 விமானம் முதல்முறையாக தரையிறங்கியுள்ளது. போர்சுகலில் தலைமையகத்தைக் கொண்டுள்ள ஹை ஃபிளை நிறுவனத்துக்குத் சொந்தமான அந்த விமானம், தென் ஆப்பிரிக்காவின் கேப்டவுன் நகரிலிருந்து புறப்பட்டு அன்டார்டிகா வந்தது.

இந்தப் பனி கண்டத்துக்கு முதல்முறையாக லாகீட் வேகா-1 வகை விமானம் கடந்த 1928-ஆம் ஆண்டில் தரையிறங்கியது. அதனைத் தொடர்ந்து அங்கு பல்வேறு விமானங்கள் தரையிறங்கினாலும்,

அன்டார்டிகா செல்வதற்கு பெரும்பாலும் கப்பல்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தச் சூழலில், அங்கு ஏ340 விமானம் முதல்முறையாகத் தரையிறங்கியிருப்பது, இதே போன்ற பயணங்கள் இனி அதிகம் நிகழும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது என்று CNN தெரிவித்துள்ளது.

---

17. அமெரிக்கா தலைமையில் நடக்கும் ஜனநாயக உச்சி மாநாட்டுக்கு சீனா, ரஷியாவுக்கு அழைப்பு இல்லை

உலகின் இருபெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவுகிறது. முன்னெப்போதும் இல்லாத வகையில் இருநாடுகளின் உறவு மோசமடைந்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், சீன அதிபர் ஜின்பிங்கும் முதல் முறையாக காணொலி காட்சி வாயிலாக அண்மையில் சந்தித்து பேசினர். இதன் மூலம் இருநாடுகளின் உறவில் இணக்கமான சூழல் உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதே போல் அமெரிக்க அரசு துறைகள் மீது நடத்தப்பட்ட சைபர் தாக்குதல், உக்ரைனை ஆக்கிரமிக்கும் முயற்சி போன்ற விவகாரங்களில் ரஷியா மற்றும் அமெரிக்கா இடையே உரசல் போக்கு நீடித்து வருகிறது.

இந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும், ரஷியா அதிபர் புதினும் விரைவில் நேரில் சந்தித்து பேச முடிவு செய்து, அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

அமெரிக்கா கொடி

இந்த நிலையில் ஜனநாயகம் தொடர்பாக அமெரிக்கா தலைமையில் நடக்கும் சர்வதேச உச்சி மாநாட்டில் சீனா மற்றும் ரஷியாவுக்கு அழைப்பு விடுக்கப்படாதது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

'ஜனநாயக உச்சி மாநாடு' என்கிற பெயரில் அடுத்த மாதம் (டிசம்பர்) 9,10 ஆகிய தேதிகளில் காணொலி காட்சி வாயிலாக அமெரிக்கா இந்த மாநாட்டை நடத்துகிறது. முதல் முறையாக நடைபெறும் இந்த மாநாட்டில் பங்கேற்க இந்தியா, பாகிஸ்தான் உள்பட 110 நாடுகளுக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. அதன்படி ஜனாதிபதி ஜோ பைடனின் தலைமையில் நடக்கும் இந்த 2 நாள் மாநாட்டில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு ஜனநாயக நாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றின் வாய்ப்புகள் குறித்து இந்த உச்சிமாநாடு கவனம் செலுத்தும்.

மாநாட்டில் பங்கேற்கும் நாடுகளின் தலைவர்கள் தங்கள் நாட்டில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்த தனிப்பட்ட மற்றும் கூட்டு அர்ப்பணிப்புகள், சீர்திருத்தங்கள் மற்றும் முன்முயற்சிகளை அறிவிக்க வாய்ப்புள்ளது.

இதனிடையே ஜனநாயகம் தொடர்பாக நடக்கும் இந்த முதல் உச்சி மாநாட்டில் பங்கேற்க சீனாவையும், ரஷியாவையும் அமெரிக்கா அழைக்கவில்லை. அந்த இரு நாடுகளிலும் ஜனநாயக அச்சுறுத்தல்கள் இருப்பதாக அமெரிக்க தொடர்ந்து குற்றம் சாட்டி வரும் நிலையில், அந்த நாடுகளை அமெரிக்கா புறக்கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இது ஒரு புறம் இருக்க மாநாட்டில் பங்கேற்க சீனாவை அழைக்காத அமெரிக்கா, தைவானுக்கு அழைப்பு விடுத்துள்ளது. தீவு நாடான தைவானை தனது நாட்டின் ஒரு பகுதி என சீனா கூறி வரும் நிலையில், அமெரிக்கா அதற்கு எதிர்ப்பு தெரிவித்து தைவானை ஆதரித்து வருகிறது.

இந்த சூழலில் ஜனநாயக மாநாட்டில் சீனாவை புறக்கணித்து விட்டு, தைவானை அமெரிக்கா அழைத்திருப்பது சீனாவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

---

18. தமிழகத்தில் நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 19% ஆக உயர்த்த மத்திய அமைச்சர் ஒப்புதல்: அமைச்சர் சக்கரபாணி

தமிழகத்தில் நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 19% ஆக உயர்த்த மத்திய அமைச்சர் ஒப்புதல் அளித்துள்ளதாக உணவுத்துறை அமைச்சர் சக்கர பாணி பேட்டியளித்தார். 17%லிருந்து 20%ஆக உயர்த்த வேண்டும் என கோரிக்கை வைத்த நிலையில் 19%ஆக உயர்த்த ஒப்பதல் வழங்கப்பட்டு உள்ளது எனக் கூறினார்.

---

1. பிரேசிலின் ஆண்டறிக்கையின்படி, அமேசான் மழைக்காடுகளில், காடழிப்பு, ஓராண்டில் எத்தனை சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது?

அ) 2



ஆ) 22 ☑

இ) 42

ஈ) 62

✓ பிரேசில் அரசாங்கத்தின் ஆண்டறிக்கையின்படி, அமேசான் மழைக் காடுகளில் காடழிப்பு ஓராண்டில் 22% அதிகரித்துள்ளது. இது 2006ஆம் ஆண்டிற்குப் பிறகு மிகவுயர்ந்த அதிகரிப்பாகும். தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் 'PRODES' கண்காணிப்பு அமைப்பு, அமேசான் 13,235 சகிமீட்டர் மழைக்காடுகளை இழந்ததாகக் சுட்டிக்காட்டுகிறது.

✓ கிளாஸ்கோவில் நடந்த ஐநா காலநிலை உச்சிமாநாட்டின்போது பிரேசில் அரசு 2028'க்குள் சட்டவிரோத காடழிப்பைத்தடுப்பதாக அறிவித்தது.

---

2. "Ex-சக்தி 2021" என்ற இந்தோ-பிரான்ஸ் கூட்டு இராணுவப் பயிற்சி தொடங்கிய இடம் எது?

அ) அந்தமான் & நிக்கோபார் தீவுகள்

ஆ) டி.ஃபென்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் அட்வான்ஸ்டு டெக்னாலஜி, புனே

இ) டிராகுய்னனின் இராணுவப் பள்ளி, பிரான்ஸ் ☑

ஈ) விசாகப்பட்டினம்

✓ இந்தோ-பிரான்ஸ் கூட்டு இராணுவப் பயிற்சியின் ஆறாவது பதிப்பு "Ex-சக்தி-2021" என்ற பெயரில் பிரான்சின் டிராகுய்னனின் இராணுவப் பள்ளியில் தொடங்கியது. இந்தப் பயிற்சியில் செயல்பாடுகளின் நடத்தை பற்றிய பரஸ்பர புரிதல் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு சூழலில் கூட்டாக செயல்பட தேவையான ஒருங்கிணைப்பு அம்சங்களை அடையாளம் காணுதல் ஆகியவை அடங்கும்.

---

3. சர்வதேச உத்திசார் ஆய்வுகள் நிறுவனமானது ஆண்டுதோறும் எந்த நாட்டில் சர்வதேச உரையாடலை நடத்துகிறது?

அ) பஹ்ரைன் ☑

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

இ) ரஷ்யா

ஈ) UK

✓ சர்வதேச உத்திசார் ஆய்வுகள் நிறுவனம் (IISS) மனமா உரையாடலை பஹ்ரைனில் உள்ள மனமாவில் நடத்துகிறது. 2021ஆம் ஆண்டின் உச்சி மாநாடு நவம்பர்.19-21'க்கு இடையில் நடைபெற்றது. மத்திய கிழக்கில் நிலவும் முக்கியமான பாதுகாப்பு சவால்களைப் பற்றி விவாதிக்கும் IISS மனமா உரையாடல் என்பது அரசாங்க அமைச்சர்கள், வல்லுநர்கள் மற்றும் வணிக சமூகங்களுக்கான ஒரு தனித்துவமான மன்றமாகும்.

✓ 2002ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் சிங்கப்பூரில் ஆண்டுதோறும் IISS ஷாங்ரி-லா உரையாடலை நடத்துகிறது. IISS 'தி மிலிட்டரி பேலன்ஸ்' வெளியிடுகிறது. இது நாடுகளின் இராணுவ திறன்களின் வருடாந்திர மதிப்பீடாகும்.

---

4. எந்த நாட்டின் தேசிய இளையோர் மற்றும் குழந்தைகள் இசைக் குழுவான "El Sistema", உலகின் மிகப்பெரிய இசைக்குழுவிற்கான கின்னஸ் சாதனையை படைத்துள்ளது?

அ) ரஷ்யா



ஆ) வெனிசுலா ☑

இ) இஸ்ரேல்

ஈ) பிரான்ஸ்

✓ வெனிசுலாவின் "எல் சிஸ்டெமா" என அழைக்கப்படும் தேசிய இளை-யோர் மற்றும் குழந்தைகள் இசைக்குழுவானது உலகின் மிகப்பெரிய இசைக்குழுவிற்கான புதிய கின்னஸ் சாதனையை படைத்துள்ளது.

✓ 8,573 இசைக்கலைஞர்கள் பியோட்ர் சாய்கோவ்ஸ்கியின் லா மார்ச்சே ஸ்லேவை ஐந்து நிமிடங்களுக்கும் மேலாக வாசித்தனர். இதற்குமுன் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில், 8097 இசைக்கலைஞர்கள் இணைந்து இசைத்ததே சாதனையாக இருந்தது.

---

5. 2021 – உலக கழிப்பறை நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Valuing Toilets ☑

ஆ) Importance of Sanitation

இ) Global Sanitation Crisis

ஈ) Collective Action

✓ ஐநா அவையால் ஆண்டுதோறும் நவம்பர்.19ஆம் தேதி அன்று 'உலக கழிப்பறை நாள்' கடைப்பிடிக்கப்படுகிறது. தூய்மையின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உலகளாவிய சுகாதார நெருக்க-டியைச் சமாளிக்க கூட்டு நடவடிக்கையை உறுதிப்படுத்தவும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "Valuing Toilets" என்பது நடப்பாண்டு (2021) வரும் இந்நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

6. CAATSA என்பது எந்த நாட்டுடன் தொடர்புடைய செயலாகும்?

அ) அமெரிக்கா ☑



ஆ) ரஷ்யா

இ) சீனா

ஈ) UK

✓ CAATSA-Countering America's Adversaries Through Sanctions Act (அமெரிக்க எதிரிகளை பொருளாதாரத்தடைச்சட்டம்மூலம் எதிர்கொள்வ-து என்பது 2017ஆம் ஆண்டின் சட்டமாகும். இது ரஷ்யா உட்பட சில நாடுகளுடன் வணிகம் மேற்கொண்ட நாடுகளைத் தண்டிப்பதை நோக்கமாகக்கொண்டது.

✓ ரஷ்யாவின் S400 ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை வாங்குவதற்கான தடைகளிலிருந்து இந்தியாவிற்கு விலக்கு அளிக்கும் சட்டத்தை மூன்று குடியரசுக் கட்சி அமெரிக்க செனட்டர்கள் தாக்கல் செய்தனர். இது CAATSA விதித்த பொருளாதாரத் தடைகளிலிருந்து QUADஇன் உறுப்பு நாடுகளான ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் இந்தியாவுக்கு 10 ஆண்டு வரை விலக்கு அளிக்கும்.

---

7. தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (NCLAT) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) அசோக் பூஷன் ☑



ஆ) A K சிக்ரி

இ) ரஞ்சன் கோகோய்

ஈ) J முகோபாதயா

✓ ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அசோக் பூசன், தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் (NCLAT) புதிய தலைவராக நான்கு ஆண்டுகள் அல்லது அவர் 70 வயது எய்தும்வரை நியமிக்கப்பட்டுள்ளார்.

✓ 2020 மார்ச்சில் அப்போதைய தலைவரான S J முகோபாதயா ஓய்வு பெற்றதிலிருந்து அந்தப்பதவி காலியாகவே இருந்தது. மணிப்பூர் உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி ராமலிங்கம் சுதாகரையும் தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் தலைவராக அரசாங்கம் நியமித்தது.

---

8. சமீப செய்திகளில் இடம்பெற்ற லேண்ட்சாட் 9'ஐ ஏவிய அமைப்பு எது?

அ) இஸ்ரோ



ஆ) NASA ☑

இ) ஸ்பேஸ் X

ஈ) புளூ ஆர்ஜின்

✓ NASA'இன் புவியைக் கண்காணிக்கும் செயற்கைக்கோள் லேண்ட்சாட் 9 செப்.27 அன்று ஏவப்பட்டது. இது NASA மற்றும் அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் ஆகியவற்றின் கூட்டுப்பணியாகும். இச்செயற்கைக்கோள் புவியின் முதல் ஒளிப்படங்களைச்சேகரித்தது. காலநிலை நெருக்கடியை புரிந்துகொள்ளவும், வேளாண்மை நடைமுறைகளை நிர்வகிக்கவும், வளங்களைப் பாதுகாக்கவும் மற்றும் இயற்கைப் பேரிடர்களுக்கு பதிலளிக்கவும் இந்தப் படங்கள் உதவும்.

---

9. பந்தி சோர் திவாஸுடன் (விடுதலை நாள்) தொடர்புடைய மதம் எது?

அ) இந்து மதம்

ஆ) இஸ்லாம்

இ) சீக்கியம் ☑

ஈ) சமணம்



- ✓ தீபாவளி நாளோடு ஒத்துப்போகும் பந்தி சோர் திவாஸ் (விடுதலை நாள்) சீக்கியர்களின் கொண்டாட்ட நாளாகும். குவாலியர் கோட்டையிலுள்ள முகலாய சிறையிலிருந்து குரு ஹர்கோவிந்த்ஜி விடுவிக்கப்பட்ட நாளை இது நினைவுபடுத்துகிறது. முகலாய பேரரசர் ஜஹாங்கீர், இஸ்லாம் மதத்திற்கு மாறமறுத்ததற்காக ஹர்கோவிந்த்ஜியின் தந்தை குரு அர்ஜன் தேவ்ஜியைக் கொன்று ஆறாவது குரு ஹர்கோவிந்த்ஜியை சிறையில் அடைத்தார்.
- ✓ தீபாவளி நாளன்று, குரு ஹர்கோவிந்த்ஜி விடுவிக்கப்படுவார் என்று முடிவெடுக்கப்பட்டபோது, அவரைப் போல் தவறாக நடத்தப்பட்ட 52 மன்னர்களும் விடுதலையாக வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். "பந்தி" என்றால் அரசியல் காரணங்களுக்காக சிறையிலடைக்கப்பட்ட "கைதி" என்று பொருள்.

---

10. சமீப செய்திகளில் இடம்பெற்ற பார்க்கர் சோலார் ஆய்வூர்தியை ஏவிய நாடு எது?

அ) இந்தியா

ஆ) அமெரிக்கா ☑

இ) சீனா

ஈ) ரஷ்யா



- ✓ சூரியனை ஆய்வு செய்வதற்காக கடந்த 2018ஆம் ஆண்டில் NASA'இன் அதிவேக விண்கலமான பார்க்கர் சோலார் ஆய்வூர்தி ஏவப்பட்டது. இந்த விண்கலம் மற்ற விண்கலங்களைக் காட்டிலும் சூரியனுக்கு மிக அண்மையில் சென்றுள்ளது. மிக அதிவேகத்தில் நகரும் வகையிலும், அதிக வெப்பநிலையைத் தாங்கும் வகையிலும் இந்த விண்கலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✓ சமீபத்தில், அதிவேக தூசி தாக்கங்கள் பார்க்கர் சோலார் ஆய்வூர்தியில் பிளாஸ்மா வெடிப்புகளுக்கு வழிவகுத்தது எனக் கண்டறியப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஆசியாவின் மிகப்பெரிய விமான நிலையத்துக்கு பிரதமர் மோடி அடிக்கல்: உத்தர பிரதேசத்தில் அமைக்கப்படுகிறது

ஆசியாவின் மிகப்பெரிய விமான நிலையங்களில் ஒன்றாக அமையவுள்ள நொய்டா சர்வதேச விமான நிலையத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

3 ஆண்டுகளில்: 1330 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் அமைக்கப்படும் நொய்டா சர்வதேச விமான நிலையம் 2024ஆம் ஆண்டு செப்டம்பரில் கட்டி முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிலையில் ஆண்டுக்கு 1.2 கோடி பயணிகளைக் கையாளும் வகையில் விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது.

---

2. கொரோனா தடுப்பூசி கொள்முதலுக்கு ADB ₹11,000 கோடி கடனுதவி

கொரோனா தடுப்பூசி மருந்தை கொள்முதல் செய்வதற்காக, இந்தியாவுக்கு 11 ஆயிரத்து 185 கோடி ரூபாய் கடன் வழங்க ஆசிய வளர்ச்சி வங்கியான, ADB ஒப்புதல் வழங்கியுள்ளது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இயங்கி வரும் ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு கடன் வழங்குகிறது. கடந்த ஆண்டு இந்த வங்கி இந்திய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தவும், எதிர்கால தொற்று நோய் தாக்குதல்களை தடுக்கவும் 2,250 கோடி ரூபாய் கடன் வழங்கியது.

இதைத் தொடர்ந்து இந்தியாவுக்கு கொரோனா தடுப்பூசி மருந்தை கொள்முதல் செய்வதற்காக 11 ஆயிரத்து 185 கோடி ரூபாய் கடன் வழங்க ADB ஒப்புதல் அளித்துள்ளது.

---

3. யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழுவின் உறுப்பினரானது இந்தியா

யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழுவின் உறுப்பினராக நான்கு ஆண்டுகளுக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இடத்தை உலக பாரம்பரிய சின்னமாக அறிவிப்பது தொடர்பாக பாரம்பரிய குழுவே இறுதி முடிவெடுக்கும். ஏற்கனவே பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட இடம் முறையாகப் பராமரிக்கப்படுவதை ஆராய்வது, அதுதொடர்பான நிதியை ஒதுக்குவது, சம்பந்தப்பட்ட நாடுகளு–க்கு வலியுறுத்தல்களை வழங்குவது உள்ளிட்டவற்றையும் அந்தக் குழு மேற்கொள்ளும். ஆண்டுக்கு ஒருமுறை கூடி முக்கிய முடிவுகளை யுனெஸ்கோ பாரம்பரிய குழு மேற்கொள்ளும். 2025ஆம் ஆண்டு வரை அக்குழுவின் உறுப்பினராக இந்தியா செயல்படவுள்ளது.

யுனெஸ்கோ நிர்வாகக் குழுவின் உறுப்பினராகக் கடந்த 17ஆம் தேதி இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

4. இந்தியாவில் ஆண்களைவிட பெண்கள் எண்ணிக்கை அதிகரிப்பு; தேசிய குடும்பநல சர்வேயில் தகவல்: பெரும்பாலான மாநிலங்களில் பெண்கள் எண்ணிக்கை அதிகம்

இந்தியாவில் ஆண்கள் எண்ணிக்கையைவிட பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக 5–வது தேசிய குடும்ப நல சர்வே (NFHS) தெரிவித்துள்ளது.

கடந்த 1992ம் ஆண்டு சர்வே தொடங்கப்பட்டதிலிருந்து முதல்முறையாக ஆண்கள் எண்ணிக்கைவிட பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதாவது 1,000 ஆண்களுக்கு, 1,020 பெண்கள் உள்ளனர். கடைசியாக 2015–16ம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் 1,000 ஆண்களுக்கு 991 பெண்கள் என்ற ரீதியில் இருந்தனர்.

இந்தியாவில் மக்கள் தொகை எவ்வாறு இருக்கிறது, எந்த வீதத்தில் இருக்கிறது என்பதை பரவலாக அறிந்து கொள்ள தேசிய குடும்ப நல சர்வே பயன்படுகிறது. நாடுமுழுவதும் 707 மாவட்டங்களில் இருந்து 6.1 லட்சம் வீடுகளில் இருந்துமாதிரிகள் திரட்டப்பட்டன.

ஆனால், இந்த சர்வே பரந்த அளவில் நடத்தப்படாமல் மாவட்ட அளவில் நடத்தப்பட்டும். ஆனால், எதிர்காலசூழலை அறிய காரணியாக இருக்கும்.

கடந்த 5 ஆண்டுகளில் அதாவது கடந்த 2015–16ம் ஆண்டில் பாலின விகிதத்தில் ஆண் குழந்தைகள் பிறப்பு என்பது ஆயிரத்தில் 919 என்ற விகித்திலிருந்து 929 ஆக அதிகரித்துள்ளது.

பிறக்கும் குழந்தைகளில் நோய் உள்ளிட்ட பிற சிக்கல்களில் இருந்து மீண்டும் உயிர்பிழைத்திருப்பதில் பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகள் சிறப்பாக இருக்கிறார்கள்.

பெரும்பாலான மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் ஆண்கள் எண்ணிக்கையைவிட பெண்கள் எண்ணிக்கையே அதிகரித்துள்ளது என்று தேசிய குடும்ப நல சர்வே–5 தெரிவிக்கிறது. குஜராத், மகாராஷ்டிரா, அருணாச்சலப் பிரதேசம், ஹரியானா, மத்தியப் பிரதேசம், பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், சண்டிகர், டெல்லி, அந்தமான் நிகோபர் தீவுகள், தாத்ரா நாகர் ஹவேலி, லடாக் போன்ற யூனியன் பிரதேசங்களில் ஆண்களைவிட பெண்கள் எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது. ஒட்டு மொத்தமாகப்பார்க்கும்போது, பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மாநிலங்கள் அடிப்படையில் மொத்த கருவுறுதல் விகிதம் (டிஎப்ஆர்) என்பது 2க்கும் குறைவாக இருக்கிறது. இதன்மூலம் இந்தியா மக்கள் தொகையை நிலைப்படுத்தி வருகிறது. அதாவது மொத்த கருவுறுதல் விகிதம் 2.1'க்கு குறைவாக இருந்தாலே பெண்கள் சராசரியாக தங்கள் வாழ்நாளில் குறைந்தபட்சம் இரு குழந்தைகளைப் பெற்றெடுப்பார்கள் என்பது கணக்காகும்.

அதேநேரம் 2 க்கும் குறைவாகச் சரியும்போது, மக்கள் தொகையும் சரியத் தொடங்கும். ஆனால், இந்தியாவில் பிஹார், மேகாலயா, மணிப்பூர், ஜார்க்கண்ட், உத்தரப்பிரதேசம் ஆகியவற்றில் மட்டும்தான் மொத்த கருவுருதல் 2 க்கும் அதிகமாக இருக்கிறது.

உலகிலேயே அதிகமான மக்கள் தொகை கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தியா இருந்து வருகிறது. 2040 முதல் 2050ம் ஆண்டுகளுக்கு இடையே இந்தியாவின் மக்கள் தொகை 160 கோடி முதல் 180 கோடியை எட்டும் எனக்கணிக்கப்பட்டுள்ளது. வரும் 2031ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள்தொகை சீனாவை முந்தும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

இதில் கேரளா மட்டுமே விதிவிலக்காக இருக்கிறது. கேரளாவில் கடந்த 4–வது சர்வேயில் ஆயிரம் ஆண்களுக்கு 1,049 பெண் குழந்தைகள் என இருந்த நிலையில் தற்போது 1,121 பெண்கள் என அதிகரித்துள்ளது.

கேரளாவில் மொத்த கருவுருதல் விகிதமும் 1.6 லிருந்து 1.8 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளின் பாலின விகிதத்தைப் பொறுத்தவரை பெண் குழந்தைகள் பிறப்பு குறைந்துள்ளது. அதாவது, 2015–16ல் 1,000 ஆண்களுக்கு 1,047 பெண்கள் இருந்த நிலையில் தற்போது 1,000 ஆண்களுக்கு 951 ஆக குறைந்துள்ளது.

---

5. துறைமுக இணைப்புக்கு 101 புதிய திட்டங்கள்

டெல்லியில் தொழில்துறை கூட்டமைப்புகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழித்துறை அமைச்சரான சர்பானந்தா சோனோவால் பேசுகையில், "நாட்டில் 24 மாநிலங்களில் பரவியுள்ள 111 நீர்வழிகள் தேசிய நீர்வழிப் பாதைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. தளவாட செலவுகளை குறைப்பது இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானது. நாடு முழுவதும் தளவாட சூழலை வலுப்படுத்த கதி சக்தி தேசிய மாஸ்டர் திட்டத்தை பிரதமர் மோடி அறிமுகம் செய்துவைத்தார். எனவே, இத்திட்டத்தின் கீழ் நுகர்வு மற்றும் உற்பத்தி மையங்களுடன் துறைமுக இணைப்பை மேம்படுத்த 101 திட்டங்களை அடையாளம் கண்டுள்ளோம். ஒன்றிய அரசின் உள்கட்டமைப்பு திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் உள்ளன" என்றார்.

---

6. 100% முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்ட மாவட்டம் காஞ்சிபுரம்

தமிழகத்தில் 100 சதவீதம் முதல் தவணை கரோனா தடுப்பூசி செலுத்திய மாவட்டமாக காஞ்சிபுரம் உருவெடுத்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதற்கு அடுத்தபடியாக கோவையில் 90 சதவீதம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டிருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். அதுபோன்ற நிலையை மாநிலம் முழுவதும் உருவாக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவிஷீல்ட் மற்றும் கோவேக்ஸின் தடுப்பூசிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழகத்தில் 18 வயதைக் கடந்த அனைவருக்கும் கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இதுவரை 76 சதவீதத்துக்கும் மேற்பட்டோருக்கு முதல் தவணை தடுப்பூசியும், 40% பேருக்கு இரண்டு தவணை தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுள்ளன. சுகாதாரத் துறை தகவல்படி மொத்தம் 6.47 கோடி பேருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாவட்ட வாரியாக தடுப்பூசி செலுத்தப்பட்ட விகிதத்தை பொது சுகாதாரத் துறை வெளியிட்டுள்ளது. அதில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 72 லட்சத்து 61 ஆயிரம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் வாயிலாக 100 சதவீதம் முதல் தவணை செலுத்திய மாவட்டமாக அது உருவெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அடுத்தபடியாக கோவையில் 90.81 சதவீதம் பேரும், சென்னையில் 82 சதவீதம் பேரும், கரூர் 82.50 சதவீதம் பேரும், நீலகிரி 85.53 சதவீதம் பேரும், திருப்பூர் 85.65 சதவீதம் பேரும், கடலூர் 86.06 சதவீதம் பேரும் முதல் தவணை செலுத்தியிருப்பதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தெரிவித்துள்ளது.

அரியலூரில் 88.70 சதவீதம், திருப்பத்தூரில் 60.33 சதவீதம், ராணிப்பேட்டை 60.69 சதவீதம் என மாநிலம் முழுவதும் 76.03 சதவீதம் பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இரண்டு தவணையும் செலுத்தப்பட்ட மாவட்டங்களில் முதன்மையாக நீலகிரி உள்ளது. அங்கு மொத்தம் 71.32 சதவீதம் பேருக்கு இரு தவணை கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. அதற்கு அடுத்தபடியாக கோவையில் 54.95 சதவீதமும், சென்னையில் 54.29 சதவீதமும் இரு தவணை தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

---

7. ஐஎன்எஸ் வேலா நீர்மூழ்கிக் கப்பல் கடற்படையில் இணைப்பு

கடல்சார் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஐஎன்எஸ் வேலா நீர்மூழ்கிக் கப்பல் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டது.

ஐஎன்எஸ் விசாகப்பட்டினம் போர்க்கப்பல் கடந்த 21–ஆம் தேதி இந்தியக் கடற்படையுடன் இணைக்கப்பட்ட நிலையில், தற்போது ஒரே வாரத்துக்குள் INS வேலா நீர்மூழ்கிக் கப்பல் இணைக்கப்பட்டுள்ளது.

'புராஜெக்ட் 75' திட்டத்தின் கீழ் ஸ்கார்பீன் இரக நீர்மூழ்கிக் கப்பல் வடிவமைப்பில், முற்றிலும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட நான்காவது நீர்மூழ்கிக் கப்பல் INS வேலா. பிரான்ஸ் நிறுவனத்துடன் இணைந்து மஸகான் டாக் கப்பல்கட்டும் நிறுவனம் வேலா நீர்மூழ்கிக் கப்பலை உருவாக்கியது.

அக்கப்பலை கடற்படையில் இணைப்பதற்கான நிகழ்ச்சி மும்பையில் வியாழக்கிழமை நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் பங்கேற்ற இந்திய கடற்படை தலைமைத் தளபதி கரம்வீர் சிங் பேசியதாவது:

'புராஜெக்ட் 75' திட்டத்தின் வாயிலாக இந்திய கடற்படையின் தாக்குதல் திறன் வரும் காலங்களில் அதிக அளவில் அதிகரிக்கும். நீர்மூழ்கிக் கப்பல் கட்டுமானத்தில் தன்னிறைவு அடைவதற்கான நடவடிக்கைகள் அத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டின் கப்பல்கட்டும் திறன்: கடலுக்கடியில் அனைத்துவிதமான பாதுகாப்புசார் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் திறன் ஐஎன்எஸ் வேலாவுக்கு உள்ளது. நாட்டின் தற்போதைய பாதுகாப்புச் சூழலை ஆராயும்போது, வேலாவின் தாக்குதல் திறன், நாடு எதிர்கொள்ளும் கடல்சார் அச்சுறுத்தலைத் திறம்பட எதிர்கொள்ள உதவும்.

இந்திய பெருங்கடல் பகுதியின் பாதுகாப்பை உறுதிசெய்வதில் ஐஎன்எஸ் வேலா முக்கியப் பங்கு வகிக்கும். இந்தியாவின் நீர்மூழ்கிக் கப்பல்கட்டும் திறனை INS வேலா உலகுக்கு எடுத்துக்காட்டியுள்ளது. நீர்மூழ்கிக் கப்பலை இறக்குமதி செய்யும் நாடு என்ற நிலையில் இருந்து அவற்றைக் கட்டும் நாடு என்ற நிலைக்கு இந்தியா உயர்ந்துள்ளது என்றார் அவர்.

ஏவுகணைகளும் கருவிகளும்: ஐஎன்எஸ் வேலா குறித்து இந்திய கடற்படை வெளியிட்ட அறிக்கையில், 'இந்திய கடற்படையின் மேற்குப் பிரிவில் இணைந்து ஐஎன்எஸ் வேலா செயல்படும். நீண்ட தொலைவு சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகளும், போர்க் கப்பல்களைத் தாக்கி அழிக்கக் கூடிய ஏவுகணைகளும் ஐஎன்எஸ் வேலாவில் இணைக்கப்பட்டுள்ளன.

ஒலியின் மூலமாக கடலுக்கடியில் உள்ள பொருள்களின் தொலைவைக் கண்டறிவதற்காகப் பொருத்தப்பட்டுள்ள 'சோனார்' கருவி, முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது. மேலும், பல நவீன கருவிகளும் உணர்விகளும் (சென்சார்) வேலாவில் பொருத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த அமைப்பு: கப்பலில் பொருத்தப்பட்டுள்ள அனைத்துக் கருவிகளும் 'சப்டிக்ஸ்' என்ற அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. எதிரிகளின் இலக்குகளைக் கண்டறிந்த பிறகு, அவற்றின் மீது எவ்வாறு தாக்குதல் நடத்துவது என்பதை அந்த அமைப்பு முடிவு செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'புராஜெக்ட் 75' திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட ஐஎன்எஸ் கல்வரி, ஐஎன்எஸ் கண்டேரி, ஐஎன்எஸ் கரஞ்ஜ் ஆகிய மூன்று நீர்மூழ்கிக் கப்பல்கள் ஏற்கெனவே இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

8. இந்தியாவில் முதன் முறையாக பெண்கள் கருவுறுதல் 2.1க்கும் கீழ் குறைவு: ஆண்– பெண் விகிதம் பாதிக்கும் அபாயம்

கடந்த 2019–2020ம் ஆண்டுக்கான தேசிய குடும்ப நல சுகாதார கணக்கெடுப்பு குறித்த 2வது கட்ட தரவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

பெண்களின் மொத்த கருவுறுதல் விகிதம் தற்போது 2.1 என்ற சராசரிக்கும் கீழ் சரிந்துள்ளது. இந்தியாவில் 3 மாநிலங்கள் மட்டுமே கருவுறுதல் வீதம் அதிகம் கொண்டவையாக காணப்படுகின்றன. பீகார் (3.0), உத்தர பிரதேசம் (2.4), ஜார்க்கண்ட் (2.3) என்ற அளவில் உள்ளன.

கடந்த 2005–2006ம் ஆண்டு எடுக்கப்பட்ட 3வது தேசிய குடும்ப நல சுகாதார கணக்கெடுப்பின்படி மொத்த கருவுறுதல் சதவீதம் 2.7 ஆக இருந்தது. இது, 2015–2016ம் ஆண்டில் 2.2 ஆக குறைந்தது. தற்போது, 2.1 என்ற சராசரி அடிப்படையில் உள்ளது. 3வது தேசிய குடும்பநல சுகாதார கணக்கெடுப்பு மற்றும் தற்போது எடுக்கப்பட்ட 5வது சுகாதார கணக்கெடுப்பின்படி பல மாநிலங்களில் பெண்களின் கருவுறும் விகிதம் கணிசமாக குறைந்துள்ளது. இதற்கு, கருத்தடை மருந்துகள், சாதனங்களை பயன்படுத்தும் விகிதம் அதிகமாகி இருப்பதே முக்கிய காரணம். 2.1 என்ற விகிதத்துக்கு கீழ் மக்கள் தொகை மாற்று கருவுறுதல் விகிதம் குறைந்தால், இந்த நிலையில், பெண்கள் கருவுறும் விகிதம் குறைந்து இருப்பதால், இந்த பாலின சமன்பாட்டில் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளதாக" கூறப்பட்டுள்ளது.

---

1. உலக தொலைக்காட்சி நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) நவம்பர் 18



ஆ) நவம்பர் 21 ☑

இ) நவம்பர் 23

ஈ) நவம்பர் 25

✓ சமகால உலகில் தொலைக்காட்சியின் தாக்கத்தைக்குறிக்கும் வகையில் நவம்பர்.21ஆம் தேதி உலக தொலைக்காட்சி நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. 1996ஆம் ஆண்டு நவம்பர் 21–22 தேதிகளில் முதல் உலக தொலைக்காட்சி மன்றம் நடத்தப்பட்டதிலிருந்து நவ.21ஆம் தேதியை உலகத் தொலைக்காட்சி நாளாகக் கொண்டாட ஐநா பொதுச் சபை முடிவு செய்தது.

---

2. ABU – UNESCO அமைதி ஊடக விருதுகள் – 2021'ஐ வென்ற 'DEAFinitely Leading the Way' என்பது எவ்வூடகத்தின் திட்டமாகும்?

அ) தூர்தர்ஷன் ☑



ஆ) என்டிடிவி

இ) டைம்ஸ் நௌ

ஈ) ஜீ டிவி

✓ ஆசிய பசிபிக் பிராட்காஸ்டிங் யூனியன் (ABU) – UNESCO Peace Media Awards 2021'இல், தூர்தர்ஷனின் 'DEAFinitely Leading the Way' 'Living Well with Super Diversity' பிரிவில் விருதை வென்றது. அகில இந்திய வானொலியின் 'Living on the edge – The coastal lives' என்ற நிகழ்ச்சியானது 'Ethical & Sustainable Relationship with Nature' பிரிவில் விருதைவென்றது. மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் இதன் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

---

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற 'ஜிக்யாசா நிகழ்ச்சி', எந்தத் துறையுடன் தொடர்புடையதாகும்?

அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ☑



ஆ) பொருளாதாரம்

இ) விளையாட்டு

ஈ) ஊட்டச்சத்து

✓ 'CSIR ஜிக்யாசா' திட்டத்தின்கீழ் குழந்தைகளுக்கான இந்தியாவின் முதல் மெய்நிகர் அறிவியல் ஆய்வகம் சமீபத்தில் மத்திய அறிவியல் & தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஜிதேந்திர சிங்கால் தொடங்கப்பட்டது.

✓ பள்ளி மாணவர்களுக்கான ஆய்வக ஆராய்ச்சியுடன் கூடிய வகுப்பறை கற்றலை செயல்படுத்தும் 'CSIR ஜிக்யாசா' திட்டத்தின்கீழ் மெய்நிகர் ஆய்வகத்தை உருவாக்க CSIR, ஐஐடி பாம்பேயுடன் கூட்டு சேர்ந்துள்ளது. மெய்நிகர் ஆய்வகத்திற்கான இலக்கு 6–12 வகுப்பு மாணவர்கள் ஆகும்.

---

4. தனிநபர் தரவுப்பாதுகாப்பு மசோதா–2019'க்கான நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் தலைவர் யார்?

அ) V முரளீதரன்



ஆ) N இரவி

இ) P P சௌத்ரி ☑

ஈ) S ஜெய்சங்கர்

✓ தனிநபர் தரவுப்பாதுகாப்பு மசோதா–2019'க்கான நாடாளுமன்றக் கூட்டு குழுவானது, அரசாங்கத்தின் எந்தவொரு நிறுவனத்தையும் சட்டத்தின் எல்லைக்கு வெளியே வைத்திருக்க அனுமதிக்கும் சர்ச்சைக்குரிய விலக்கு விதியை ஆதரித்துள்ளது. P P சௌத்ரி தலைமையிலான குழு, சிறிய மாற்றத்துடன் இந்தச் சரத்தை தக்கவைத்துள்ளது. அந்த அறிக்கை இப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

---

5. கனக தாசா என்பவர் எந்த மாநிலத்தைச் சார்ந்த பதினைந்தாம் நூற்றாண்டின் கவி, துறவி மற்றும் சமூக சீர்திருத்தவாதியாவார்?

அ) தமிழ்நாடு



ஆ) கர்நாடகா ☑

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) ஒடிஸா

✓ 15ஆம் நூற்றாண்டின் கவிஞர், துறவி மற்றும் சமூக சீர்திருத்தவாதி கனகதாசருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 'கனகதாச ஜெயந்தி' கர்நாடகாவில் கொண்டாடப்படுகிறது.

✓ புனித கனக தாசரின் பிறந்த இடமான காகினேலே, பொதுமக்களின் வருகைக்காக அரசாங்கத்தால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கனகதாசா மற்றும் புராணதாசா, விஜயதாசா & கோபாலதாசா உள்ளிட்ட பக்தி இயக்கத்தின் பிற தாசர்கள் பாடிய கீர்த்தனைகள் கன்னட இலக்கியத்தில் 'தாச சாகித்தியம்' மற்றும் 'தேவரநாமங்கள்' என்று அழைக்கப்படுகின்றன.

---

6. அமெரிக்கா & இங்கிலாந்துடனான அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பல் கூட்டணியில், முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடு எது?

அ) பிரான்ஸ்



ஆ) ஆஸ்திரேலியா ☑

இ) இத்தாலி

ஈ) இஸ்ரேல்

✓ அமெரிக்கா & இங்கிலாந்துடன் ஆஸ்திரேலியா ஒப்பந்தம் புரிந்துள்ளது. இம்முத்தரப்பு ஒப்பந்தம் ஆஸ்திரேலியாவுக்கு அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக்கப்பல் தொழில்நுட்பத்தை வழங்குகிறது. மூன்று நாடுகளும் AUKUS என்ற பாதுகாப்புக் கூட்டணியை உருவாக்குவதாக அறிவித்த பிறகு, தொழில்நுட்பத்தில் வெளிப்படையாக கையெழுத்திடப்பட்ட முதல் ஒப்பந்தம் இதுவாகும்.

---

7. 'கர்நாடகா ராஜ்யோத்சவா' மற்றும் 'கேரள பிறவி நாள்' ஆகியன ஒவ்வோர் ஆண்டும் எந்த நாளில் கொண்டாடப்படுகின்றன?

அ) அக்டோபர் 3



ஆ) நவம்பர் 1 ☑

இ) நவம்பர் 3

ஈ) நவம்பர் 5

✓ கேரளா, கர்நாடகா மத்திய பிரதேசம், ஹரியானா, சத்தீஸ்கர் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் நவ.1 அன்று மாநில நாளைக் கொண்டாடுகின்றன. கேரளாவில் இந்நாள் 'கேரள பிறவி நாள்' என்றும், கர்நாடக மாநிலத்தில் இந்த நாள் 'கர்நாடக இராஜ்யோத்சவா' என்றும் கொண்டாடப்படுகிறது.

---

8. COP26 மாநாட்டில் 'சோலார் காம்பஸ்' இதழைத் தொடங்கிய பன்னாட்டு அமைப்பு எது?

அ) பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி ☑



ஆ) பன்னாட்டு ஆற்றல் நிறுவனம்

இ) பன்னாட்டு அணுசக்தி நிறுவனம்

ஈ) பன்னாட்டு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நிறுவனம்

✓ பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி (ISA) மற்றும் நெதர்லாந்தைச் சார்ந்த வெளியீட்டு நிறுவனமான 'எல்செவியர்' COP26 காலநிலை மாநாட்டில் தூதர் ஸ்டீபன் குரூஸுடன் இணைந்து 'சோலார் காம்பஸ்' என்ற இதழைத்தொடங்கின. ISA என்பது இந்தியாவால் தொடங்கப்பட்ட பன்னாட்டு அரசுகளுக்கிடையேயான ஒப்பந்த அடிப்படையிலான ஒரு பன்னாட்டு அமைப்பாகும். பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியின் தலைமை இயக்குநர் அஜய் மாத்தூர், உலகெகுமுள்ள ஆசிரியர்களுக்கு ஆவணங்களுக்கான முதல் அதிகாரப்பூர்வ அழைப்பை வெளியிட்டார்.

---

9. சட்ட ஆலோசனைகள் வழங்குவதற்காக மத்திய சட்டம் & நீதித் துறை அமைச்சரால் அறிமுகப்படுத்தப்பட்ட திறன்பேசிச் செயலியின் பெயர் என்ன?

அ) Citizen's Tele–Law ☑



ஆ) Bharat Tele–Law

இ) Atmanirbhar Nyayalay

ஈ) Nyay For All

✓ மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு 'சிட்டிசன் டெலி–லா' திறன்பேசிச் செயலியை வெளியிட்டார். இந்தச் செயலி அதன்

பயனாளிகளை நேரடியாக சட்ட ஆலோசனை வழங்கும் வழக்கறிஞர்க –ளுடன் இணைக்கும். அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய 75,000 கிராமப் பஞ்சாயத்துகளில் டெலி–லாவை விரிவுபடுத்தவுள்ளதாகவும் கிரண் ரிஜிஜு அறிவித்துள்ளார்.

---

10. இந்தியாவின் முதல் உணவு அருங்காட்சியகம் தொடங்கப்பட்ட இடம் எது?

அ) வாரணாசி

ஆ) காசியாபாத்

இ) புனே



ஈ) தஞ்சாவூர் ☑

✓ மத்திய வணிகம், தொழிற்துறை, உணவு மற்றும் பொதுவழங்கல் துறை அமைச்சர் பியூஷ் கோயல், இந்தியாவின் முதல் உணவு அருங்காட்சியக –த்தை தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் திறந்து வைத்தார். இந்திய உணவுக் கழகமும் விஸ்வேஸ்வரய்யா தொழில் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சி –யகங்களும் இணைந்து ₹1.10 கோடி திட்ட மதிப்பீட்டில் இந்த அருங்காட் –சியகத்தை உருவாக்கியுள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வெண்மைப் புரட்சியின் தந்தை என்று போற்றப்படும் வர்கீஸ் குரியன் பிறந்தநாள் நூற்றாண்டு விழா

'இந்தியாவின் பால் மனிதர்' என்றுபோற்றப்படும் Dr வர்கீஸ் குரியனின் பிறந்தநாள் நூற்றாண்டைக் கொண்டாடும் விதமாக ஆவின் நிறுவனம் தனது பால் பாக்கெட்களில் அவரது படத்தை அச்சிட்டு, பெருமைப்படுத்தி உள்ளது.

வர்கீஸ் குரியன் கேரள மாநிலம் கோழிக்கோட்டில் 1926ஆம் ஆண்டு நவ.26ஆம் தேதி பிறந்தார். சென்னை லயோலா கல்லூரியில் இயற்பியல் துறையில் பட்டம் பெற்ற பிறகு, கிண்டி பொறியியல் கல்லூரியில் எந்திரவியல் துறையில் பட்டம் பெற்றார். பின்னர், அரசு உதவித் தொகையில் அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலப் பல்கலைக்கழகத்தில் எந்திரவியல் பொறியியலில் எம் எஸ் பட்டம் பெற்றார்.

இதையடுத்து, இந்தியா திரும்பிய குரியன், 1949ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தின் ஆனந்த் அரசு பால்பண்ணையில் பொறியாளராக பணியில் சேர்ந்தார். அந்தச் சமயத்தில், புதிதாக தொடங்கப்பட்ட கூட்டுறவு பால் பண்ணைகள், குஜராத் மாநில கைரா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் பெரும் வீழ்ச்சியை சந்தித்து வந்தன. அப்போது, கைராபால் சங்கத்தலைவர் திரிபுவன்தாஸ் படேலுக்கு, பால் பதப்படுத்தும் ஆலையை நிறுவத் தேவையான உதவிகளை செய்ய முன்வந்தார் குரியன். இதுதான் இந்தியாவில் புகழ்பெற்ற அமுல் பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு நிறுவனம் உருவாக காரணமாக அமைந்தது.

நவீன பால் உற்பத்தி குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார் குரியன். பன்னாட்டு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்ட ஏழை பால் கூட்டுறவு சங்கத்தை, ஆசியாவிலேயே மிகப்பெரிய, வெற்றிக –ரமான நிறுவனமாக உயர்திய பெருமை வர்கீஸ் குரியனையே சாரும்.

அமுலின் வெற்றி திட்டத்தை நாடு முழுவதும் கொண்டு செல்லும் விதமாக, 'Operation Flood' என்ற பெயரிலான திட்டத்தை 3 கட்டங்களில் செயல்படுத்த மத்தியஅரசு முன்வந்தது. அதுவே புகழ்மிக்க வெண்மைப் புரட்சியானது. தமிழக அரசு நிறுவனமான ஆவினும் வெண்மைப் புரட்சியின் வழித் தோன்றல்தான். வெண்மைப் புரட்சியின் தந்தையான வர்கீஸ் குரியன் பிறந்தநாளை ஆண்டுதோறும் நவம்பர் 26ஆம் தேதி தேசிய பால் நாளாக மத்திய கால்நடை பராமரிப்பு, பால்வளத்துறை சிறப்பாக கொண்டாடி வருகிறது. அந்த வகையில், அவரது நூற்றாண்டு பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி, அவரை பெருமைப்படுத்தும் விதமாக ஆவின் பால் நிறுவனம் தனது பால் பாக்கெட்களில் 'சேவையே வாழ்க்கை' என்ற வரிகளுடன் Dr வர்கீஸ் குரியனின் புகைப்படத்தையும் வெளியிட்டு பெருமைப்படுத்தியுள்ளது.

வர்கீஸ் குரியனின் வெண்மைப்புரட்சி, நாட்டு மாடுகளின் அழிவுக்குக் காரணம் என்று ஒரு தரப்பில் கூறப்பட்டு வந்தாலும், இந்தியாவில் பால் உற்பத்தி குறைவாக இருந்ததால், பால் பவுடர்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. பால், பவுடர் ரேஷன் முறையில் வழங்கப்பட்ட முறையை மாற்றி, இன்று எங்கும், எப்போதும் பால் வாங்கும் நிலைக்கு நாம் முன்னேறியுள்ளதற்கு வர்கீஸ் குரியனின் புரட்சிதான் காரணம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

---

2. அரசின் கொள்கைகளால் சர்வதேச தகவல் தொழில்நுட்ப மையமாக தமிழகம் மாறும்: 'கனெக்ட் 2021' கருத்தரங்கை தொடங்கிவைத்து முதல்வர் மு க ஸ்டாலின் உறுதி

மத்திய மின்னணு, தகவல் தொழில்நுட்பத் துறை, தமிழக அரசின் எல்காட் நிறுவனம், இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) இணைந்து நடத்தும் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான 'கனெக்ட் 2021' என்ற இரண்டு நாள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி சென்னை கிண்டியில் உள்ள ஐடிசி சோழா ஓட்டலில் நேற்று தொடங்கியது. இதை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்து பேசியதாவது:

1996'க்கு முன்பு தமிழகத்தில் 34 மென்பொருள் நிறுவனங்கள் இருந்த நிலையில், அந்த எண்ணிக்கையை திமுக அரசுதான் 666 ஆக மாற்றியது. ஒரு மாநிலத்துக்கு மிகப்பெரிய முன்னேற்றம், முதலீடுகளை கொண்டு வருவதில் தகவல் தொழில்நுட்பத் துறை முன்னணி வகிக்கிறது. தகவல் தொழில்நுட்பத் துறையில் நாட்டின் முன்னணி மாநிலமாக, உலக அளவில் கவனம் ஈர்க்கக்கூடிய மாநிலமாக தமிழகம் உள்ளது. நாட்டிலேயே மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யும் முக்கிய மாநிலங்களில் தமிழகமும் ஒன்று.

கணினி, மின்னணுவியல், ஆப்டிகல் தயாரிப்புகள் தயாரிப்பில் நாட்டில் 2ஆம் இடத்திலும், எலெக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியில் 3ஆம் இடத்திலும் உள்ளோம். தகவல் தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகளை பயன்படுத்தி, முதல் இடத்தை தக்கவைக்க தமிழக அரசு முயற்சித்து வருகிறது.

தரவு மையங்களை அமைப்பதில் தமிழகம் சிறந்து விளங்கும்நிலையில், அதில் முதலீடுகளை ஈர்க்க ஒரு கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. அதேபோல, தரவுகளை அடிப்படையாக கொண்ட கொள்கை வடிவமைத்தலில், மாநிலத்தின் திறனை மேம்படுத்தும் நோக்கில், சென்னை கணிதவியல் கழகத்துடன் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

தொழிற்துறை, நகர்ப்புற வளர்ச்சிக்கு ஏற்ப மாநிலத்தின் உட்கட்டமைப் –பை மேம்படுத்த, புறவழிச் சாலைகள், சென்னை மெட்ரோ இரயில் விரிவாக்கம், புதிய விமான நிலையம் போன்ற குறிப்பிடத்தக்க உட்கட்டமைப்பு திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகிறது.

தகவல் தொழில்நுட்பத்துறைகளில் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களை தமிழகத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும். தொழில்களுக்கு தேவையான முழு ஆதரவை தமிழக அரசு வழங்கும் என்று உறுதி அளிக்கிறேன். நவீன ஒற்றைச் சாளர முறை மூலம், எளிதாக வணிகம் செய்வதை மேம்படுத்த அரசு பல சீர்திருத்தங்களை செய்து வருகிறது.

எங்களது புதிய கொள்கைகள், முன்முயற்சிகள் தமிழகத்தை சர்வதேச தகவல் தொழில்நுட்ப மையமாக மாற்றும். மாநிலத்தின் பொருளாதாரம், தொழில் துறை வளர்ச்சிக்கு தடையாக உள்ள அனைத்து பிரச்சினைக –ளுக்கும் தீர்வு காண்பதில் தொழில் துறையுடன் இணைந்து செயல்படு –வோம். தகவல் தொழில்நுட்பத் துறை நமது லட்சியமான 1 லட்சம் கோடி டாலர் இலக்கை அடைய உதவும். இவ்வாறு முதல்வர் கூறினார்.

---

3. ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்தின் – 2 சுரங்கங்களுக்கு 5 நட்சத்திர அந்தஸ்து:

ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்தின் இரண்டு சுண்ணாம்புக்கல் சுரங்கங்களுக்கு மத்திய அரசின் 5 நட்சத்திர அந்தஸ்து கிடைத்துள்ளது.

இதுகுறித்து ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நாடு முழுவதுமுள்ள 1,029 சுரங்கங்கள் ஆன்லைனில் சுயமதிப்பீட்டை தாக்கல் செய்தன. பின்னர் அவை இந்திய சுரங்க பணியகத்தால் 2019–20–ம் ஆண்டுக்கான 5 நட்சத்திர விருதுக்கு பரிசீலிக்கப்பட்டன. இதில் 40 சுரங்கங்கள் (பல்வேறு உலோகங்கள் மற்றும் கனிமங்கள்) 5 நட்சத்திர விருதுக்கு தேர்வு செய்யப்பட்டன.

ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்தின் மேலவெங்கடேஸ்வரபுரம், புதுப் பாளையம் & பெரியங்களூர் சுண்ணாம்புக்கல் சுரங்கங்களுக்கு மத்திய அரசின் 5 நட்சத்திர அந்தஸ்து கிடைத்துள்ளது.

---

4. 2070'க்குள் ஆலைக் கழிவு வெளியேற்றம் பூஜ்ய நிலையை அடைய அரசு இலக்கு:

சர்வதேச பருவநிலை கவுன்சில் கூட்டத்தில் காணொலி வாயிலாக நடத்திய ஆலோசனையின் போது மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் பேசியதாவது:

நாடு முழுவதும் 2070ஆம் ஆண்டுக்குள் வளிமண்டலத்தை பாதிக்காத கழிவுகளை வெளியேற்றாத ஆலைகள் உள்ள நாடாக உருவாக வேண்டும். அந்த இலக்கை எட்டுவதற்கான நடவடிக்கைகளை தொழில் நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும். வளிமண்டல பாதிப்பு என்பது யுகத்தின் அடிப்படையிலானது அல்ல என்பதை தற்போது கால நிலைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் நமக்கு உணர்த்தி வருகின்றன.

எதிர்பாரா வறட்சி, பெரு வெள்ளம், புயல், நீடித்திருக்கும் அனல் காற்று, மாறிவரும் பருவ சூழல் ஆகிய பாதிப்புகளை நாம் சந்தித்து வருகிறோம். பருவ நிலை மாறுபாட்டில் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதில் தொழில் நிறுவனங்களுக்கு மிக முக்கிய பங்குண்டு. அதை உணர்ந்து செயல்பட வேண்டும். இந்தியத்தொழில்நிறுவனங்கள் மிகவும் இக்கட்டான தருணங்களில் பல சாதனைகளைப் புரிந்துள்ளது.

அதேபோல நமது புவியைக் காப்பதிலும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். பருவமழை மாறுபாடு, காடுகளில் தீ, அதிக அளவிலான வெள்ளப்பெருக்கு, சூறாவளி உள்ளிட்ட பருவ நிலை மாறுபாடுகள் நம்மைச் சுற்றி நிகழ்வதை நாம் புறந்தள்ளிவிட முடியாது. இவ்வாறு பூபேந்தர் யாதவ் கூறினார். – பிடிஐ

---

5. பிஹார், உபி, ஜார்க்கண்ட் ஏழை மாநிலமாக அறிவிப்பு: நிதி ஆயோக் ஆய்வில் தகவல்

நிதி ஆயோக் அமைப்பு இந்திய மாநிலங்களின் பொருளாதார நிலையை பன்முக ஏழ்மை குறியீட்டெண் அடிப்படையில் ஆய்வு செய்துள்ளது. சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி மற்றும் வாழ்க்கை தரம் உள்ளிட்ட 12 காரணிகளைக் கணக்கில் கொண்டு நிதி ஆயோக் தயாரித் துள்ள மாநிலங்களின் ஏழ்மை குறியீட்டெண் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பிஹார், ஜார்க்கண்ட், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முதல் 3 ஏழை மாநிலங்களாக உள்ளன. பிஹார் மக்கள் தொகையில் 51.91 சதவீதத்தினரும், ஜார்க்கண்டில் 42.16 சதவீதத்தினரும், உபியில் 37.79 சதவீதத்தினரும் ஏழ்மையில் உள்ளனர். மபியில் 36.65, மேகாலயாவில் 32.67 சதவீதம் ஏழை மக்கள் உள்ளனர். பட்டியலில் கடைசி ஐந்து இடங்களில் கேரளா (0.71%), கோவா (3.76%), சிக்கிம் (3.82%), தமிழ்நாடு (4.89%), பஞ்சாப் (5.59%) மாநிலங்கள் உள்ளன.

NITI ஆயோக்கின் இந்த ஏழ்மை குறியீட்டெண் அறிக்கை சர்வதேச அளவில் அங்கீகரிக் கப்பட்ட ஆக்ஸ்போர்ட் ஏழ்மை மற்றும் மனிதவள மேம்பாட்டு திட்டம் மற்றும் ஐநா வளர்ச்சித் திட்டம் ஆகியன இணைந்து உருவாக்கிய ஆய்வுமுறையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

---

6. 'இன்டர்போல்' நிர்வாக குழுவுக்கு சிபிஐ சிறப்பு இயக்குநர் தேர்வு

'இன்டர்போல்' எனப்படும் சர்வதேச போலீஸ் அமைப்பின் நிர்வாகக் குழுவுக்கு இந்தியாவின் சார்பில் போட்டியிட்ட சிபிஐ சிறப்பு இயக்குநர் பிரவீன் சின்கா தேர்வு செய்யப்பட்டார்.

சர்வதேச போலீஸ் அமைப்பான 'இன்டர்போல்' சர்வதேச அளவில் தீவிரவாதம், போதை கடத்தல், இணையதள குற்றங்களுக்கு எதிராக செயல்படுகிறது. 'இன்டர்போல்' அமைப்பின் 89ஆவது பொதுச்சபை கூட்டம் துருக்கியின் இஸ்தான்புல்லில் நடந்து வருகிறது.

'இன்டர்போல்' அமைப்பின் நிர்வாகக் குழுவுக்கு ஆசியாவில் இருந்து தேர்ந் தெடுக்கப்படும் 2 உறுப்பினர்கள் இடங்களுக்கு தேர்தல் நடந்தது. இதில் இந்தியா, சிங்கப்பூர், சீனா, கொரியா, ஜோர்டான் நாடுகளிடையே போட்டி நிலவி யது. இந்தியாவின் சார்பில் போட்டியிட்ட சிபிஐ சிறப்பு இயக்குநர் பிரவீன் சின்கா நிர்வாக குழு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

பிரவீன் சின்காவுக்கு பல்வேறு நாடுகள் ஆதரவு அளித்தன. இதற்காக பல்வேறு நாடுகளின் தூதரகங்களை இந்திய அதிகாரிகள் தொடர்பு கொண்டு ஆதரவு திரட்டினர். உலக அளவில் ஒருங்கிணைந்த இந்தியாவின் தீவிர பிரச்சாரத்துக்கு வெற்றி கிடைத்துள்ளதாக வெளியுறவு அதிகாரிகள் தெரிவித்தனர். குஜராத் ஐபிஎஸ் அதிகாரியான பிரவீன் சின்கா தற்போது சிபிஐ சிறப்பு இயக்குநராக பணியாற்றி வருகிறார். பிரவீன் சின்கா தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதன் மூலம் சர்வதேச அளவிலான குற்றங்களைத் தடுக்கும் 'இன்டர்போல்' அமைப்பின் முயற்சியில் இந்தியா மேலும் தீவிர பங்காற்றும் என்று வெளியுறவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

6. அவசர அவசியம்! | இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது குறித்த தலையங்கம்

அசீம் பிரேம்ஜி பல்கலைக்கழகம் நடத்திய கொவைட் கால இந்தியாவின் நிலை குறித்த ஆய்வின்படி, 23 கோடி இந்தியர்கள் அந்த காலகட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழே தள்ளப்பட்டிருக்கிறார்கள். அக்டோபர் 2021 நிலவரப்படி, வேலைவாய்ப்பின்மை 7.7% அளவுக்கு அதிகரித்திருக்கிறது. தானியங்கி இயந்திரங்களின் உதவியுடன் நிறுவப்படும் பிரம்மாண்டமான தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பின்மை அதிகரிப்பதற்கான இன்னொரு காரணம்.

இந்திய தொழில்துறையினரின் கூட்டமைப்பு (சிஐஐ) வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரப்படி, இந்தியாவில் 6.34 கோடி குறு, சிறு நடுத்தர தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஏறத்தாழ 12 கோடி தொழிலாளர்கள் அவற்றில் பணியாற்றுகிறார்கள். மொத்த உற்பத்திப் பொருள்களில் 33.4% அங்குதான் தயாரிக்கப்படுகின்றன. இந்திய உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஆய்வின்படி, அவற்றில் மூன்றில் ஒரு பங்கு தொழிற்சாலைகளும், சுயதொழில் செய்பவர்களும் பொதுமுடக்கத்தைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டு தொழில் இழந்திருக்கிறார்கள். அரசின் பல்வேறு திட்டங்களாலும், நிதியுதவிகளாலும்கூட அவர்களால் மீண்டெழ முடியவில்லை.

உற்பத்தித் துறைக்கு அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்தும்கூட கடந்த ஐந்து ஆண்டுகளில் ஜிடிபியில் உற்பத்தித் துறையின் பங்கு 17% என்பதைத் தாண்டி உயரவில்லை. அதுமட்டுமல்லாமல், 2016–17– இல் உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்பு பெற்றிருந்தோரின் எண்ணிக்கை 5.1 கோடி என்றால், 2020–21–இல் அது 2.73 கோடியாகக் குறைந்திருக்கிறது. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது நமது பொருளாதார அணுகுமுறையை மாற்ற வேண்டிய அவசியம் தெரிகிறது.

அதிநவீன தொழிற்சாலைகளையும், மிகப்பெரிய இயந்திரமய அமைப்புகளையும் ஊக்குவிப்பதற்குப் பதிலாக, நம்முடைய கவனம் குறு, சிறு நடுத்தரத் தொழிற்சாலைகளையும், சுய தொழில்களையும் ஊக்குவிப்பதில்தான் இருக்க வேண்டும். தொழில்நுட்ப உதவி, போதுமான முதலீடு ஆகியவற்றை வழங்கி வேலையில்லா பொறியியல் பட்டதாரிகள் சுய தொழில் செய்வதற்கும், பலருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் வழிவகை செய்வது இப்போதைய அவசியத் தேவை.

அதிகரித்து வரும் வேலைவாய்ப்பின்மைக்கு தொழில்நுட்ப மாற்றங்கள் காரணமாக இருக்கும் என்பதை வரலாறு பலமுறை உணர்த்தியிருக்கிறது. மோட்டார் வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து குதிரை வண்டி, மாட்டு வண்டி ஓட்டியவர்கள் வேலைவாய்ப்பிழந்தார்கள். மோட்டார் வாகனங்கள் ஓடுவதற்காக சாலைகள் போடப்பட்டபோது அதன்மூலம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாயின. மோட்டார் வாகன பழுது பார்த்தல் தொழில் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கியது. அவை அதிகரித்த வளர்ச்சியையும் வேலைவாய்ப்பையும் உருவாக்கியதுபோல, எல்லா தொழில்நுட்ப அறிமுகமும் முதலில் வேலைவாய்ப்பிழப்பையும், பிறகு புதிய வகையிலான அதிகரித்த வேலைவாய்ப்பையும் உருவாக்குவதை நாம் பார்க்கிறோம்.

அதிகரித்த வளர்ச்சி விகிதம், குறைந்த அளவு வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்கு வழிகோலுகிறது என்கிற கருத்தை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த இருபது ஆண்டுகளில் கைப்பேசி பழுதுபார்த்தல், வாடகை கார் ஓட்டுதல், ஹோட்டல் தொழில், சுற்றுலா தொழில், சுய தொழில்கள் உள்ளிட்டவை பெரிய அளவில் வேலைவாய்ப்பை உருவாக்கியிருக்கின்றன. வேலைவாய்ப்பு இழத்தலைவிட அதிக அளவில் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஏற்படுமேயானால் அது வளர்ச்சியின் அடையாளம்.

மத்திய அரசின் ஆய்வறிக்கை ஒன்றின்படி, 2012–2018–க்கு இடையே நகர்ப்புற வேலைவாய்ப்பின்மை மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது. 2018–இல் 15 வயதுக்கும் 24 வயதுக்கும் இடையேயானவர்களில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 28.5%. அதே காலகட்டத்தில் 'ஊதிய விகிதம்' குறைந்திருக்கிறது.

ஊதியத்தைவிட விலைவாசி கூடுதலாக அதிகரிக்கும்போது அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்களே தவிர பயனடைவதில்லை.

இப்போதைய நிலையில், ஆண்டுதோறும் 1.2 கோடி பேர் வேலைவாய்ப்பு தேடுபவர்கள் பட்டியலில் இணைகிறார்கள். அவர்களில் சுமார் 70 லட்சம் பேருக்குத்தான் வேலைவாய்ப்பு உருவாகிறது. இது

ஆபத்தான போக்கு. உடனடியாக நாம் வேலைவாய்ப்பு குறித்து சிந்தித்தாக வேண்டும்.

அதற்கு நமது கல்வி முறையில் சீர்திருத்தம் அவசியத் தேவை. இப்போது பெரும்பாலான இளைஞர்களும் அரசுப் பணி கிடைப்பதற்காக படிப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கும் ஊதியம், தனியார் துறையில் திறன் சார்ந்த செவிலியர்களுக்கோ கணினி தொழில்நுட்பம் தெரிந்தவர்களுக்கோ தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கோ கிடைப்பதில்லை. நமது கல்வி முறை அரசுப் பணியை ஊக்குவிப்பதாக இருக்கும் நிலை மாற வேண்டும்.

அடுத்ததாக, தொழிலாளர் நலச் சட்டங்களில் மாற்றம் அவசியம். தொழிலாளர் நலச் சட்டங்கள் கடுமையாக இருப்பதால், ஒருவர் திறன் குறைந்தவராக இருந்தாலும், முறையாகச் செயல்படாமல் இருந்தாலும் அவரை எளிதில் பணி நீக்கம் செய்ய முடிவதில்லை. அதனால் எல்லா நிறுவனங்களும் மனித சக்தியைக் குறைத்து தானியங்கி இயந்திரங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றன. கூடுதல் மக்கள்தொகையுள்ள இந்தியா போன்ற நாடுகளில், வேலைவாய்ப்பை அதிகரித்தாக வேண்டும். அதேநேரத்தில், உற்பத்தித் துறையும் பலவீனப்பட்டுவிடக் கூடாது.

ஆண்டொன்றுக்கு 12 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குவதுதான் மத்திய – மாநில அரசுகளின் இலக்காக இருக்க வேண்டும். அதற்கு நமது கல்வி முறையிலும், தொழிலாளர் நலச் சட்டங்களிலும் மாற்றம் அவசியம்!

---

7. தேசிய பாதுகாப்பு நலனின் அடிப்படையிலேயே ராணுவ கொள்முதல்: வெளியுறவு அமைச்சகம்

ரஷியாவிடமிருந்து எஸ்–400 ரக ஏவுகணை தொகுப்புகளை கொள்முதல் செய்யும் விவகாரத்தில் அமெரிக்காவின் ஒப்புதல் குறித்து ஐயப்பாடு நிலவி வரும் நிலையில், 'இந்தியா சுதந்திரமான வெளியுறவு கொள்கையைக் கொண்டுள்ளது. மேலும், தேசிய பாதுகாப்பு நலனின் அடிப்படையிலேயே ராணுவ கொள்முதலை மேற்கொள்கிறது' என்று மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காணொலி வழியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ரஷியா – இந்தியா – சீனா ஆகிய 3 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்ற ஆர்'ஐசி மாநாட்டில், எஸ்–400 ஏவுகணை தொகுப்பு கொள்முதல் விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டதா என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் அரிந்தம் பாக்சி இப்பதிலை தெரிவித்தார். மேலும், 'இந்தியாவும் அமெரிக்காவும் விரிவான சர்வதேச பாதுகாப்பு துறை சார்ந்த கூட்டுறவை கொண்டுள்ளன.

அதுபோல, ரஷியாவுடன் சிறப்புவாய்ந்த சுதந்திரமான ராணுவ கூட்டுறவை இந்தியா கொண்டுள்ளது. மேலும், இந்தியா சுதந்திரமான வெளியுறவு கொள்கையைக் கொண்டுள்ளது. அந்த வகையில், தேசிய பாதுகாப்பு நலனின் அடிப்படையிலேயே பாதுகாப்புத்துறைசார் கொள் முதல்களை இந்தியா மேற்கொள்கிறது' என்றும் அவர் பதிலளித்தார்.

ரஷியாவிடம் இருந்து 5 பில்லியன் டாலர்கள் (சுமார் ₹37,172 கோடி) மதிப்பில் அதிநவீன எஸ்–400 ரக ஏவுகணைத் தொகுப்புகளைக் கொள்முதல் செய்வதற்கு அந்நாட்டுடன் இந்தியா கடந்த 2018ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்தது. இதற்கிடையே ரஷியாவுடனான ஆயுதக் கொள்முதலைக் கைவிடுமாறு அனைத்து நட்பு நாடுகளுக்கும் அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ரஷியாவிடமிருந்து பாதுகாப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்வதில் இந்தியாவுக்கு விலக்கு அளிப்பது குறித்து அமெரிக்கா இன்னும் முடிவெடுக்கவில்லை. இருந்தபோதிலும், இந்தியாவுக்கு எஸ்–400 ரக ஏவுகணைத் தொகுப்புகளை விநியோகிக்கும் பணிகள் தொடங்கியுள்ளதாக, ரஷிய ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு சேவை அமைப்பின் இயக்குநர் கடந்த வாரம் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி மற்றும் ரஷிய வெளியுறவு அமைச்சர் செர்கேய் லாவ்ரோவ் ஆகியோர் பங்கேற்ற ஆர்ஜசி மாநாட்டில், 'ஐநா பாதுகாப்புகவுன்சில் வரையறையை மீறி ஒருதலைபட்சமான ஒப்புதல்களை அளிப்பதும், அதிகார வரம்பை நீட்டிக்க முயற்சிப்பதும் சர்வதேச சட்ட கொள்கைகளுக்கு முரணான –வை' என்று மூன்று நாடுகள் சார்பிலும் ஏற்றுக்கொள்ளப்படதாகவும் அவர் தெரிவித்தார்.

---

8. இந்தியா–பிரான்ஸ் கூட்டு ராணுவப் பயிற்சி நிறைவு

இந்தியா–பிரான்ஸ் ராணுவம் இணைந்து நடத்திய 12 நாள் கூட்டுப் பயிற்சி நிறைவடைந்தது.

பிரான்ஸில் நடைபெற்ற இந்தப் பயிற்சியில் கூட்டுத் திட்டமிடல், செயல்பாடுகளின் பரஸ்பர புரிதல், ஐநா சபையின் சாசனத்தின் கீழ் பயங்கரவாத எதிர்ப்புச் சூழலில் கூட்டாகச் செயல்படுவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு அம்சங்களை அடையாளம் காண்பது ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

களப்பயிற்சி, கடினப்பணிச்சூழல்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றில் வீரர்கள் ஈடுபட்டனர். இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட பயிற்சியின் போது இருதரப்பு வீரர்களும் தங்களது சிறந்த செயல்முறைகள் மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இரு நாட்டு படைகளின் பயிற்சிகளில் ஈடுபட்டதோடு மட்டுமல்லாமல் விளை –யாட்டு மற்றும் கலாசார நடவடிக்கைகளிலும் இணைந்து ஈடுபட்டு நட்புறவை வளர்த்தனர். பயிற்சி குறித்து நாட்டு ராணுவப் பிரிவுகளும் திருப்தியை வெளிப்படுத்தின. பயங்கரவாதம் இல்லாத உலகத்தை உறுதி செய்யும் பயணத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இந்தப் பயிற்சி விளங்கியது என்று மத்திய செய்தி தகவல் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

9. தில்லி திகார் சிறையில் திருவள்ளுவர் சிலை திறப்பு

தில்லி திகார் சிறையின் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் எட்டாவது பட்டாலியன் கமாண்டட் அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலையை சிறப்பு ஆயுதப்படை காவல்துறை கூடுதல் இயக்குநர் ஜெனரல் அபய்குமார்சிங் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

மேலும், அரசியலமைப்பு சட்ட நாளையொட்டி கமாண்டன்ட் டி செந்தில் குமார் முன்னிலையில் அதிகாரிகள், காவலர்கள் இந்திய அரசியலமைப்பு முகப்புரையை வாசித்து உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இந்தத் திருவள்ளுவர் சிலையை வடிவமைத்த காவலர் சி விஷ்ணு சங்கர்.

---

10. ₹1302 கோடியில் 15.60 லட்சம் தணிக்கை மறுப்புகள் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளதால் அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருந்த தணிக்கை பிரிவு நிதித்துறையின் கட்டுப்பாட்டில் தனித்துறையாக இயங்கும்: தமிழக அரசு உத்தரவு

அறநிலையத்துறை கட்டுபாட்டில் இருந்த தணிக்கை பிரிவு நிதித் துறையின் கட்டுபாட்டில் தனித்துறையாக செயல்படும் என்று தமிழக அரசு உத்தரவிட்டு அரசாணை வெளியிட்டுள்ளது. இது குறித்து தமிழக அரசின் அறநிலையத்துறை முதன்மை செயலாளர் சந்தரமோகன் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

கோயில்களின் தணிக்கைக்கென இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது கட்டுப்பாட்டின் கீழ் இந்து சமய அறநிலையத்துறையின் தணிக்கைப் பிரிவானது உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிலிருந்து பிரித்து, ஏற்படுத்தப்பட்டது. தற்போது சமய அறநிறுவனங்களின் தணிக்கையினை மேற்கொள்ள தணிக்கைப் பிரிவானது 19 மண்டலங் –களாக பிரிக்கப்பட்டு 4 துணைத் தலைமை தணிக்கை அலுவலர் அலுவலகங்களும், 15 மண்டல தணிக்கை அலுவலர் அலுவலகங்களும் இவர்களுக்கு உதவியாக 27 உதவி தணிக்கை அலுவலர் அலுவலகங்களும் செயல்பட்டு வருகிறது.

தணிக்கை மற்றும் மேலாய்வு பணிகளை மேற்கொள்ள 295 தணிக்கை பணியிடங்களில் தணிக்கை பிரிவின் அலுவலக பணிகள் மேற்கொள்ளும் பணியாளர்களை தவிர்த்து உள்ள 274 தணிக்கை பணியிடங்களில் காலி பணியிடங்கள் போக 235 தணிக்கை பணியாளர்கள் தணிக்கை பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்து சமய அறநிலையத்துறையின் தணிக்கையாளர்களைக் கொண்டு கோயில்களின் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கைகள் மீது நடவடிக்கைகள் மேற்கொண்டு தீர்வு செய்யப்பட வேண்டிய தணிக்கை தடைகள் கடந்த 31.3.2021 அன்று நிலவரப்படி ரூ.1302 கோடி உள்ளடக்கிய 15,60,574 தணிக்கை மறுப்புகள் தீர்வு செய்யப்படாமல் நிலுவையாக உள்ளது.

இந்து சமய அறநிலையத் துறை ஆணையரது கட்டுப்பாட்டின் கீழ் நிர்வாகப் பிரிவு மற்றும் தணிக்கைப் பிரிவுகள் செயல்பட்டு வருவதால், தணிக்கைப் பணி தனித்துவமாக நடைபெறவில்லை. இந்து சமய அறநிலையத்துறை தணிக்கைப்பிரிவினை இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து, தணிக்கைப் பணி

மேற்கொள்வதுடன் தணிக்கைத் தடைகள் மீது அளிக்கப்படும் பதிலறிக்கைகள் பரிசீலித்து, இந்து சமய அறநிலையத்துறை தணிக்கை பிரிவினை விடுவித்து தனியாக அறநிலையங்களின் தணிக்கைத் துறை ஒன்றினை நிதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் வகையில் ஏற்படுத்த இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறையில் உள்ள தணிக்கை பிரிவினை நிதித்துறையின் கீழ் செயல்படும் தனித்துறையாக்கும் பட்சத்தில் மேற்கண்ட சட்ட விதிகளுக்கு திருத்தம் மேற்கொள்ள தனியாக அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்படவுள்ளது. இந்து சமய அறநிறுவனங்களில் தணிக்கை மேற்கொள்வதற்கு அறநிலையய கொடைகள் சட்டம் 1959, சட்டப்பிரிவு 92(2)'இன்படி உரிய விகிதத்தில் தணிக்கை கட்டணங்கள் சம்பந்தப்பட்ட அறநிறுவனங்களால் அரசுக்கு ஈடுசெய்யப்படும் என்ற விவரமும் இதனால், அரசுக்கு கூடுதல் செலவினங்கள் எதுவும் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று ஆணையர் தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை ஆணையரது செயல்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், கோயில்களின் தணிக்கைக்கென இந்து சமய உள்ளாட்சி தணிக்கை துறையிலிருந்து பிரித்து தோற்றுவிக்கப்பட்ட இந்து சமய அறநிலையத் துறைக்கான தணிக்கை பிரிவினை அறநிலையத்துறையின் கட்டுபாட்டி –லிருந்து விடுவித்து, அறநிலையங்களின் தணிக்கை துறை ஒன்றினை நிதித்துறையின் கட்டுபாட்டின்கீழ் தனித்துறையாக செயல்படும் வகையில் அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

1. "குளோபல் ஸ்டேட் ஆப் டெமாக்ரசி 2021" அறிக்கையின்படி, எந்த நாடு முதன்முறையாக "பின்சறுக்கும்" மக்களாட்சி நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது?

அ) இந்தியா

ஆ) அமெரிக்கா ☑

இ) பிரேசில்

ஈ) UK



✓ மக்களாட்சி மற்றும் தேர்தல் உதவிக்கான சர்வதேச நிறுவனம் (IDEA) தனது அறிக்கையை "குளோபல் ஸ்டேட் ஆப் டெமாக்ரசி 2021" என்ற தலைப்பில் வெளியிட்டது. அது முதன்முறையாக அமெரிக்காவை அதன் ஆண்டுப்பட்டியலில் "பின்சறுக்கிச்செல்லும்" மக்களாட்சி நாடுகளின் பட்டியலில் சேர்த்துள்ளது. இந்தப் பின்னடைவு, 2019'இல் தொடங்கியது என்று தரவு தெரிவிக்கிறது.

✓ 2021ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகில் 98 மக்களாட்சிக் குடியரசுகள் உள்ளன. இந்தியா, பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்கா போன்ற சில நாடுகள் மக்களாட்சிக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை விதித்தன.

---

2. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'மடோசின்கோஸ் மேனிபெஸ்டோ', எந்த விண்வெளி நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது?

அ) ISRO

ஆ) NASA

இ) ESA ☑

ஈ) JAXA

✓ ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) கவுன்சில், ஐரோப்பாவில் விண்வெளிப் பயன்பாட்டை விரைவுபடுத்துவதற்காக 'Matosinhos Manifesto'க்கு ஒப்புதல் அளித்தது. ESA'இன் 22 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் கையொப்பமிட்ட புதிய ஆவணம் "முடுக்கிகள்" என்ற மூன்று அவசர முயற்சிகளை கோடிட்டுக் காட்டுகிறது.

✓ விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கும், வியாழனின் உறைந்த நிலவு என்செலடஸை ஆய்வு செய்வதற்கும் ESA'இன் சொந்த அமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட இரு திட்டங்களிலும் அவர்கள் கையெழுத்திட்டனர்.

---

3. கங்கை–பிரம்மபுத்ரா–மேக்னா ஆற்றுப்படுகைகள் குறித்த WMO கூட்டம் நடைபெறுகிற இடம் எது?

அ) வாரணாசி

ஆ) புது தில்லி ☑

இ) பாட்னா

ஈ) லக்னோ



✓ உலக வானிலை அமைப்பு (WMO), புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் இந்திய வானிலை ஆய்வுத்துறை ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த கங்கை–பிரம்மபுத்ரா–மேக்னா (GBM) ஆற்றுப்படுகைகள்குறித்த கூட்டம் சமீபத்தில் புது தில்லியில் தொடங்கியது. நேபாளம், வங்கதேசம், பூடான், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறிவியலாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

✓ இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும் எல்லைக்குட்பட்ட GBM ஆற்றுப் படுகைகளைப் பகிர்ந்துகொள்வது, நீர்த்தேக்கங்கள், ஆறுகள் மற்றும் அணைநீர்பற்றிய தரவுகளைப் பகிர்ந்துகொள்ளும் ஓர் அமைப்பான ஹைட்ராலஜிக்கல் SOS அமைப்பை உருவாக்கத்திட்டமிட்டுள்ளன.

---

4. சமீப செய்திகளில் இடம்பெற்ற தாந்தியா மாமா, எந்த மாநிலத்தின் பழங்குடியினத் தலைவராவார்?

அ) கர்நாடகா

ஆ) மகாராஷ்டிரா

இ) மத்திய பிரதேசம் ☑

ஈ) ஜார்கண்ட்



✓ மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், இந்தூரில் உள்ள பதல்பானி ரயில் நிலையம், 'தாந்தியா மாமா இரயில் நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என்று அறிவித்தார். தாந்தியா, மத்திய பிரதேச மாநிலத்தில் பிறந்த பழங்குடி ஆதிவாசி சமூகமான பில் பழங்குடி இனத்தைச்சேர்ந்தவர். பில்லின் மாமா தாந்தியா, டிச.4ஆம் தேதி அன்று ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டார்.

---

5. 12 மணி நேரத்திற்குள் பதவியை ராஜினாமா செய்த "மக்டலேனா ஆண்டர்சன்", எந்த நாட்டின் முதல் பெண் பிரதமராவார்?

அ) டென்மார்க்

ஆ) ஆஸ்திரேலியா

இ) சுவீடன் ☑

ஈ) அயர்லாந்து



✓ சமூக மக்களாட்சிக் கட்சியைச் சேர்ந்த மக்டலேனா ஆண்டர்சன் சுவீடனின் முதல் பெண் பிரதமராவார். அவர் சமீபத்தில் பன்னிரண்டு மணிநேரத்திற்குள் அந்தப் பதவியில் இருந்து விலகினார். கூட்டணியில் சிறுபான்மையாக இருந்த பசுமைக்கட்சி விலகியதை அடுத்து, கூட்டணி –யின் பலம் குறைந்ததால் அவர் பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

6.அனைத்து NFSA பயனாளிகளுக்கும் நபர் ஒன்றுக்கு மாதம் 5 கிகி தானியத்தை இலவசமாக வழங்கும் திட்டத்தின் பெயரென்ன?

அ) PM – KVY

ஆ) PM – JDY

இ) PM – FBY

ஈ) PM – GKAY ☑



✓ COVID தொடர்பான இடையூறுகள் மற்றும் பொதுமுடக்கங்களை அடுத்து இந்திய அரசாங்கத்தால் "பிரதமர் கரிப் கல்யாண் அன்ன யோஜனா" தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் அனைத்து NFSA பயனாளிகளுக்கும் நபர் ஒன்றுக்கு மாதம் ஐந்து கிலோ தானியங்களை இலவசமாக வழங்க முற்படுகிறது. சமீபத்தில், இந்தத் திட்டத்தை 2021 டிசம்பர் முதல் 2022 மார்ச் வரை நீட்டிப்பதாக இந்திய அரசு அறிவித்தது.

---

7. தேசிய குடும்பம் மற்றும் சுகாதார ஆய்வின்படி (NFHS–5), 2019–2021'இல் நாட்டில் 1000 ஆண்களுக்கு எத்தனை பெண்கள் உள்ளனர்?

அ) 1000

ஆ) 941

இ) 1020 ☑

ஈ) 916

1020

✓ இந்திய அரசின் மத்திய சுகாதார அமைச்சகம், 2019 மற்றும் 2021'க்கு இடையில் இரண்டு கட்டங்களாக நடத்தப்பட்ட தேசிய குடும்பம் மற்றும் சுகாதார ஆய்வின் (NFHS–5) ஐந்தாவது சுற்று முடிவுகளை சமீபத்தில் வெளியிட்டது. இந்த ஆய்வின்படி, 2019–2021'இல், நாட்டில் ஆயிரம் ஆண்களுக்கு ஆயிரத்து இருபது பெண்கள் உள்ளனர். மேலும், மொத்த கருவுறுதல் விகிதம் இரண்டு சதவீதமாக குறைந்துள்ளது.

---

8. புராஜெக்ட் 75'இன்கீழ், அண்மையில் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்ட நான்காவது மறைந்திருந்து தாக்கும் ஸ்கார்பீன் வகுப்பு நீர்மூழ்கிக்கப்பல் எது?

அ) INS சக்ரா

ஆ) INS ஹம்சா

இ) INS ஹம்லா

ஈ) INS வேலா ☑



✓ புராஜெக்ட் 75'இன்கீழ் கட்டப்பட்ட இந்தியாவின் 4ஆவது மறைந்திருந்து தாக்கும் ஸ்கார்பீன் வகுப்பு நீர்மூழ்கிக்கப்பலான INS வேலா இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பலை பிரான்ஸின் கடற்படைக் குழுவுடன் இணைந்து மசகான் கப்பல்கட்டும் நிறுவனம் உருவாக்கியுள்ளது. ஐஎன்எஸ் கல்வாரி, கந்தேரி, கரஞ்ச் ஆகிய மூன்று ஸ்கார்பீன் வகை நீர்மூழ்கிக் கப்பல்கள் உருவாக்கப்பட்டு கடற்படையில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளன.

---

9. 50,000 டன் கோதுமை மற்றும் உயிர்க்காக்கும் மருந்துகளை எந்த நாட்டுக்கு கொண்டுசெல்வதற்கு பாகிஸ்தான் இந்தியாவை அனுமதித்துள்ளது?

அ) துர்க்மெனிஸ்தான்



ஆ) ஈரான்

இ) ஆப்கானிஸ்தான் ☑

ஈ) தஜிகிஸ்தான்

✓ இந்தியாவிலிருந்து 50,000 டன் கோதுமை மற்றும் உயிர்க்காக்கும் மருந்துகளை வாகா எல்லை வழியாக ஆப்கானிஸ்தானுக்கு கொண்டு செல்ல பாகிஸ்தான் அரசு அதிகாரப்பூர்வமாக அனுமதி அளித்துள்ளது.

✓ இந்த அனுமதி ஆப்கானிஸ்தானுக்கு ஒரு நல்லெண்ண முறையாக அளிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு மனிதாபிமான அடிப்படையில் கோதுமை மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை வழங்க இந்தியா முன்வந்துள்ளது. ஆனால், ஆப்கானிஸ்தானுக்கு எந்த விமானப் போக்கு வரத்துமில்லாத காரணத்தாலும், பாகிஸ்தானின் அனுமதி நிலுவையில் இருந்த காரணத்தாலும் விநியோகம் செய்யப்படாமல் இருந்தது.

---

10. ஐநா பொது அவையின் சமீபத்திய தீர்மானத்தின்படி, வங்காள தேசமும் நேபாளமும் எப்புதிய வகையின்கீழ் வைக்கப்பட்டுள்ளன?

அ) குறைந்த வளர்ச்சியடைந்த நாடு



ஆ) வளரும் நாடு ☑

இ) ஏழை நாடு

ஈ) நடுத்தர வருமானம் கொண்ட நாடு

✓ வங்காளதேசம், நேபாளம் உள்ளிட்ட மூன்று நாடுகளை, "குறைந்த வளர்ச்சியடைந்த நாடு'கள் என்ற வகையிலிருந்து 'வளரும் நாடு' என்ற வகையில் வைப்பதற்கான தீர்மானத்தை ஐநா பொது அவை ஏற்றுக் கொண்டது. வங்காளதேசம், நேபாளம் மற்றும் லாவோ மக்களாட்சிக் குடியரசு உள்ளிட்ட 3 நாடுகளுக்கு இந்தத் தகுதியை வழங்கிய UNGA 76ஆவது அமர்வில் இத்தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அமைச்சர் மா சுப்பிரமணியனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

உலக தமிழ் நிறுவனம் சார்பில் லண்டன் 4ஆவது சர்வதேச மருத்துவ சிறப்பு விருதுகள் வழங்கும் விழா, பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிரமணியனுக்கு கொரோனா பேரிடர் பெருந்தொற்று காலத்தில் திறம்பட செயல்பட்டதற்காக வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

---

2. கங்கை நதி புனரமைப்புத் திட்டம்: பிரிட்டனில் 4 குழுக்கள் தொடக்கம்

கங்கை நதி புனரமைப்புத் திட்டத்தின் பகுதியாக தேசிய கங்கை நதி தூய்மை அமைப்பும், பிரிட்டனில் உள்ள இந்திய தூதரகமும் இணைந்து அந்நாட்டில் 4 குழுக்களை தொடங்கியுள்ளன. லண்டன், மிட்லேண்ட்ஸ், ஸ்காட்லாந்து மற்றும் வேல்ஸ் பகுதிகளில் நான்கு கங்கை இணைப்பு குழுக்கள் தொடங்கப்பட்டன.

ஒவ்வொரு குழுவிலும் ஒருங்கிணைப்பாளர்கள் இருப்பர். அவர்கள் கங்கை நதியை தூய்மைப்படுத்தும் திட்டத்தில் ஆர்வமுள்ள விஞ்ஞானி –கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் உள்பட பல்வேறு தரப்பினரை ஒருங்கிணைப்பர். அவர்கள்மூலம் கங்கை நதியை புனர –மைக்கும் முயற்சிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்படும்.

---

3. சென்னையில் நவம்பரில் அதிகபட்ச மழை: 200 ஆண்டுகளில் 3ஆவது முறையாக பதிவு

வடகிழக்குப் பருவமழை தமிழகத்தில் தீவிரமடைந்துள்ளநிலையில், 200 ஆண்டுகளில் 3ஆவது முறையாக சென்னையில் நவம்பர் மாதத்தில் அதிகபட்ச மழைஅளவு (1000 மிமீ மழை அளவு தாண்டி) பதிவாகியுள்ளது.

வடகிழக்குப் பருவமழை தமிழகத்தில் தற்போது மிகத் தீவிரமாகியுள்ளது. பெரும்பாலான மாவட்டங்களில் கடந்த ஒருவாரமாக பரவலாக மழை பெய்துவருகிறது. அதிலும், சென்னையில் கடந்த சில நாள்களாக மிதமானது முதல் பலத்தமழை வரை பெய்து வருகிறது. ஓரிரு இடங்களில் மிகப்பலத்தமழையும் பெய்து வருகிறது.

இந்நிலையில், சென்னையில் நவம்பர் மாதத்தில், 200 ஆண்டுகளில் 3ஆவது முறையாக அதிகபட்ச மழை அளவு (1000 மிமீ) தற்போது பதிவாகியுள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்தில் (அக்.1 முதல் நவ.27) சென்னையில் சராசரி மழை அளவு 600.2 மிமீ ஆகும். தற்போது வரை 1064.2 மிமீ பெய்துள்ளது. இது 77% அதிகம். மேலும், சென்னையில் 200 ஆண்டுகளில் நவம்பரில் அதிகபட்ச மழை அளவு பொருத்தவரை, 3ஆம் முறையாக, நிகழாண்டில் 1000 மிமீ மழை அளவைத் தாண்டியுள்ளது.

கடந்த 1918ஆம் ஆண்டு நவம்பரில் 1088 மிமீ மழை அளவும், 2005ஆம் ஆண்டு அக்டோபரில் 1078 மிமீ மழை அளவும், 2015ஆம் ஆண்டு நவம்பரில் 1049 மிமீ மழை அளவும் பதிவாகியது. 2021ஆம் ஆண்டு நவ.27'இல் 1064 மிமீ மழையும் பதிவாகியுள்ளது. 200 ஆண்டுகளில் நவம்பரில் 3ஆவது முறையாகவும், மற்ற மாதங்களைப் பொருத்தவரை 4ஆவது முறையாகவும் ஆயிரம் மிமீ மழை அளவைத் தாண்டியுள்ளது.

---

4. பிளாஸ்டிக் பயன்பாட்டை தடுக்கும் வகையில் 'மீண்டும் மஞ்சப்பை' என்ற இயக்கத்தை முன்னெடுக்க முடிவு

மக்கள் பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தடுத்து துணிப்பைகளை உபயோகிக்கும் வகையில் 'மீண்டும் மஞ்சப்பை' என்ற இயக்கத்தை தமிழக அரசு முன்னெடுக்க இருக்கிறது.

இதுகுறித்து சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மை செயலாளர் சுப்ரியா சாகு வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டிருப்பதாவது:

பிளாஸ்டிக் தீங்கு

பிளாஸ்டிக்கால் இந்த உலகம் மிகப்பெரிய பிரச்சினையை சந்தித்து வருகிறது. ஒருமுறை உபயோகித்து வீசப்படும் பிளாஸ்டிக்குகள் 40 சதவீதம் உலகளவில் தயார் செய்யப்படுகின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கையில் அவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவை தூக்கி வீசப்பட்ட பிறகு சுற்றுச்சூழலில் பல ஆயிரம் ஆண்டுகள் தங்கி விடுகின்றன. இவற்றால் மண், ஆறுகள், கடல்களில் மிகப்பெரிய பிரச்சினைகள் உருவாகின்றன. குறிப்பிட்ட அளவு பிளாஸ்டிக்குகள் எரிக்கப்படும்போது, அவற்றில் இருந்து வரும் புகை கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இந்த பிளாஸ்டிக்கினால் ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான மிருகங்கள் பலியாகின்றன.

பிளாஸ்டிக் கழிவுகள்

சர்வதேச இயற்கை பாதுகாப்பு அமைப்பு, ஆண்டுதோறும் உலகளவில் 14 மில்லியன் டன் பிளாஸ்டிக்குகள் கடலில் சென்று சேருவதாக ஒரு புள்ளி விவரத்தை கூறுகிறது.

மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தகவலின்படி 2019–20–ம் ஆண்டில் 34 லட்சத்து 69 ஆயிரத்து 780 டன் பிளாஸ்டிக் கழிவுகள் இந்தியாவில் தேக்கமடைந்தன. தமிழ்நாட்டில் மட்டும் 4 லட்சத்து 31 ஆயிரத்து 472 டன் பிளாஸ்டிக் கழிவுகள் அந்த ஆண்டில் தேங்கியிருந்தன.

பிளாஸ்டிக்குக்கு எதிரான மக்கள் இயக்கம்

எனவே ஒரு முறை பயன்படுத்தி வீசப்படும் பிளாஸ்டிக்குகளை தயாரிப்பது, சேமித்து வைப்பது, வினியோகம் செய்வது, போக்குவரத்துக்கு கொண்டுசெல்வது, விற்பனை செய்வது போன்றவற்றை 25.6.2018–ல் இருந்து தடை செய்தது. ஒருமுறை உபயோகித்து வீசப்படும் பிளாஸ்டிக்குகளான உணவை பொட்டலம் போடும் பிளாஸ்டிக், சாப்பாடு மேஜையில் விரிக்கும் பிளாஸ்டிக், பிளாஸ்டிக் பிளேட்டுகள், டீ கப்புகள், டம்ளர்கள், தண்ணீர் ஊற்றி வைக்கும் பிளாஸ்டிக்குகள், ஸ்டிரா, கேரி பேக், பிளாஸ்டிக் கொடிகள் போன்றவை இதில் அடங்குகின்றன. இந்த தடை உத்தரவு 1.1.2019–ல் இருந்து நடைமுறைக்கு வந்தது. இந்த தடை உத்தரவு அமல்படுத்துவதை கண்காணிப்பதற்கு மாநில அளவிலான குழு ஒன்றையும் அரசு அமைத்திருந்தது.

இந்தநிலையில் சட்டசபையில் கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் 3.9.2021 அன்று தூக்கி வீசப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு எதிரான மக்கள் இயக்கத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் அமல்படுத்துவது என்று அறிவிக்கப்பட்டது. இந்த இயக்கத்தில் வர்த்தக சங்கங்கள், சமூக நல அமைப்புகள், வியாபாரிகள் சங்கங்கள், உள்ளாட்சி

அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோரை இணைத்து அமல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி மாவட்ட கலெக்டர்களின் வழிகாட்டுதலின்படி பிளாஸ்டிக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது. இதை 4 வகைகளாக பிரித்து அரசு அமல்படுத்தும்.

'மீண்டும் மஞ்சப்பை'

இந்த பிளாஸ்டிக்குகளுக்கு எதிரான மக்கள் இயக்கத்தை அரசு ஆதரிக்கும். மாநிலம் முழுவதும் பிளாஸ்டிக் தடை உத்தரவு அமல்படுத்துவதை கண்காணிப்பதற்கான வழிமுறைகள் வகுக்கப்படும்.

இந்த பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாக மிகப்பெரிய அளவில் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை தயாரிப்பதற்கு குறு–சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் அரசு இணைந்து செயல்படும். அதன்படி 'மீண்டும் மஞ்சப்பை' என்ற தலைப்பில் மாநில அளவில் பிரசாரம் மேற்கொள்ளப்படும். மஞ்சப்பை என்பது தமிழக கலாசாரத்தில் இணைந்த ஒன்றாகும்.

ஜெர்மன் நாட்டின் அமைப்புடன் இணைந்து...

இந்த மஞ்சப்பை பிரசாரத்தின் மூலம் மக்கள் பிளாஸ்டிக் பைகளை புறக்கணித்து துணிப்பைகளை மீண்டும் பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இந்த திட்டத்தை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், ஜெர்மன் நாட்டின் அமைப்புடன் இணைந்து செயல்படுத்தும். பொட்டலம் போடுவதற்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்கள் அடையாளம் காணப்படும்.

பள்ளி–கல்லூரிகளில் இந்த பிரசாரம் முன்னெடுக்கப்படும். இளைஞர்கள் இந்த பிரசாரத்துக்காக பயன்படுத்தப்படுவார்கள். இதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவிலான பணிக்குழுக்கள் அமைக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

1. காலின்ஸ் அகராதியின்படி '2021ஆம் ஆண்டின் சொல்' என்ன?

அ) கிரிப்டோ–கரன்ஸி

ஆ) பிட்காயின்

இ) NFT ☑

ஈ) டி–ஃபை

✓ காலின்ஸ் அகராதி 'NFT' (Non–fungible Token என்பதன் சுருக்கம்) என்ற சொல்லை 2021ஆம் ஆண்டின் சொல்லாகத் தேர்ந்தெடுத்துள்ளது. காலின்ஸின் கூற்றுப்படி, இந்தச்சொல்லின் பயன்பாடு 11,000 சதவீதம் அதிகரித்துள்ளது. மில்லியன் கணக்கான டாலர்களுக்கு விற்கக்கூடிய டிஜிட்டல் டோக்கன்களில் ஆர்வம் உயர்ந்து வருவதை இது காட்டுகிறது.

---

2. வாகனங்களுக்கு பசுமை வரி விதிப்பதற்காக, 'மோட்டார் வாகன வரி (திருத்த) மசோதா–2021'ஐ நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) ஆந்திர பிரதேசம் ☑

இ) தெலுங்கானா

ஈ) ஒடிஸா

✓ ஆந்திர பிரதேச மாநில சட்டமன்றம், வாகனங்களுக்கு பசுமை வரி விதிப்பதற்காக AP மோட்டார் வாகன வரி (திருத்தம்) மசோதா – 2021'ஐ நிறைவேற்றியுள்ளது. மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ ரிக்ஷாக்கள் தவிர அனைத்து வாகனங்களுக்கும் பசுமை வரி விதிக்கப்படவுள்ளது.

---

3. காலநிலை மாற்றத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைக –ளுக்கு உதவுவதற்காக €1.2 பில்லியன் நிதியுதவியை அறிவித்து உள்ள நாடு எது?

அ) பிரான்ஸ்



ஆ) ஜெர்மனி ☑

இ) இத்தாலி

ஈ) UK

✓ காலநிலை மாற்றத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கும் தூய எரிசக்தியில் ஒத்துழைப்பு நல்குவதற்கும் ஜெர்மனி €1.2 பில்லியனுக்கும் அதிகமான (சுமார் ₹10,025 கோடி) புதிய வாக்குறு –திகளை அறிவித்துள்ளது. 1990ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2045 ஆம் ஆண்டிற்குள் காலநிலை நடுநிலையை எய்தவும், எரிசக்தி மற்றும் தொழிற்துறைகளில் உமிழ்வுகளை 77 & 58% குறைக்கவும் ஜெர்மனி தனது இலக்கை அறிவித்துள்ளது. உலகளாவிய பைங்குடில் வாயுவில் இந்தியாவும் ஜெர்மனியும் கிட்டத்தட்ட 9% பங்கைக் கொண்டுள்ளன.

---

4. தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு சைபர் கிரைம் பற்றிய விழிப்புணர்வை உறுதிசெய்வதற்கான மின்னணு & தகவல் தொழினுட்ப அமைச்சகத்தின் முதல் PPP முயற்சியின் பெயரென்ன?

அ) சைபர் சுரக்ஷித் பாரத் முன்னெடுப்பு ☑

ஆ) சுரக்ஷித் பாரத்; ஸ்வஸ்த் பாரத்

இ) சுரக்ஷித் CISO'க்கள்

ஈ) பாதுகாப்பான CISOகள்

✓ 'சைபர் சுரக்ஷித் பாரத் முன்னெடுப்பு' என்பது மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் முதல் PPP முயற்சியாகும். இது 2018 ஜனவரியில் தொடங்கப்பட்டது. இது தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு சைபர் கிரைம் பற்றிய விழிப்புணர்வை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ MeITY'இன் கீழுள்ள தேசிய மின்–ஆளுகைப் பிரிவு, தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரிகள் (CISO'க்கள்) மற்றும் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகள், மத்திய மற்றும் மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றின் முன்னணி தகவல் தொழில் நுட்ப அதிகாரிகளுக்கு 6 நாள் பயிற்சித் திட்டத்தை நடத்துகிறது.

---

5. எந்தத் தலைவரின் நினைவு நாள், 'மகாபரிநிர்வான் திவாஸ்' என அனுசரிக்கப்படுகிறது?

அ) Dr B R அம்பேத்கர் ☑



ஆ) சர்தார் வல்லபாய் படேல்

இ) ஜோதிராவ் பூலே


ஈ) தயானந்த சரஸ்வதி

✓ பாபாசாகேப் டாக்டர் பி ஆர் அம்பேத்கரின் நினைவு நாள் ஒவ்வோர் ஆண்டும் டிச.6 அன்று 'மகாபரிநிர்வான் திவாஸ்' என அனுசரிக்கப்படுகி –றது. மும்பையில் அமைந்துள்ள அவரது நினைவிடமான சைத்ய பூமியில் அவரது ஆதரவாளர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக கூடினர். இந்த ஆண்டு, இந்திய பிரதமர் மோடி காணொளிக்காட்சிமூலம் சைத்ய பூமிக்கு வந்திருந்த ஆதரவாளர்களோடு உரையாடுகிறார்.

---

6. Lunar Polar Exploration Mission (LUPEX) என்பது நிலவிற்கான ஒரு கூட்டுத் திட்டமாகும். இதில் எந்த இரு நாடுகள் உள்ளன?

அ) இந்தியா–இஸ்ரேல்



ஆ) இந்தியா–பிரான்ஸ்

இ) இந்தியா–ஜப்பான் ☑

ஈ) இந்தியா–ரஷ்யா

✓ நிலவின் துருவப்பகுதியை ஆராய்வதற்காக, இந்திய மற்றும் ஜப்பானிய விண்வெளி முகமைகள் இணைந்து நிலவுக்கான ஒரு திட்டத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளன. Lunar Polar Exploration Mission (LUPEX) என அழைக்கப்படும் இந்தத் திட்டம், இந்திய நிலவு தரையிறங்கி மற்றும் ஜப்பானிய ஆய்வூர்தி ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

✓ ஜப்பானிய விண்வெளி ஆய்வுநிறுவனம் (JAXA) சிட்னி உரையாடலின் போது இந்தத் திட்டம் குறித்து வெளிப்படுத்தியது.

---

7. நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் 'சிறந்த பொது போக்குவரத்து அமைப்புகொண்ட நகரத்திற்கான' விருதை வென்ற நகரம் எது?

அ) மும்பை



ஆ) சூரத் ☑

இ) காந்திநகர்

ஈ) லக்னோ

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் 2021ஆம் ஆண்டின் நகர்ப்புற போக்குவரவு இந்தியா (UMI) மாநாட்டின் 14ஆவது பதிப்பை நடத்தியது. 'சிறந்த பொது போக்குவரத்து அமைப்புகொண்ட நகரத்திற்கான' விருதை சூரத் நகரம் வென்றது.

✓ மேலும், 'கொச்சி' மிகவும் நிலையான போக்குவரத்து அமைப்புகொண்ட நகரமாக மதிப்பிடப்பட்டது. UMI மாநாட்டில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி விருதுகளை வழங்கினார். நாக்பூரின் மெட்ரோ இரயிலுடன் கூடிய பன்முறை ஒருங்கிணைப்பும் தில்லியின் மெட்ரோவும் விருதுகளை வென்றன.

---

8. சமீப செய்திகளில் இடம்பெற்ற சங்கப் குப்தாவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) சதுரங்கம் ☑



ஆ) கால்பந்து

இ) டேபிள் டென்னிஸ்

ஈ) நீச்சல்

✓ நாக்பூரைச் சேர்ந்த 18 வயதான சங்கல்ப் குப்தா, இந்தியாவின் 71ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆனார். அரண்ஞ்செலோவாக்கில் நடந்த GM Ask 3 ரவுண்ட்–ராபின் நிகழ்வில் மூன்றாவது மற்றும் இறுதி விதிமுறையை நிறைவுசெய்த பிறகு அவர் இச்சாதனையை அடைந்தார். தேவைப்பட்ட மூன்று GM நெறிமுறைகளையும் 24 நாட்களில் தொடர்ந்து விளையாடி சங்கல்ப் குப்தா வாங்கினார்.

---

9. சட்ட அளவியல் (அடைக்கப்பட்ட பொருட்கள்) விதிகள் – 2011'இல் திருத்தங்களை அறிவித்த மத்திய அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் ☑

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) உணவு பதப்படுத்தும் தொழிலகங்கள் அமைச்சகம்

- ✓ நடுவண் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகமானது சட்ட அளவியல் (அடைக்கப்பட்ட பொருட்கள்) விதிகள் – 2011'இல் திருத்தம் செய்துள்ளது. இத்திருத்தங்கள் 2022 ஏப்ரல்.1 முதல் நடைமுறைக்கு வரும்.
- ✓ அடைக்கப்பட்ட பொருட்களின் அலகு விற்பனை விலையைக் குறிக்கும் புதிய விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. விளக்கப்படம் ஏதுமின்றி MRP குறித்த தகவலை வழங்குவது, அனைத்து வரிகளையும் உள்ளடக்கி இந்திய நாணய மதிப்பில் (₹) MRP'ஐ தெரிவிப்பது உள்ளிட்டவை இந்தத் திருத்தங்களுள் அடங்கும்.

---

10. UNESCO கிரியேட்டிவ் சிட்டிஸ் நெட்வொர்க்கின் (UCCN) ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள நகரம் எது?

அ) புனே

ஆ) கொச்சின்

இ) ஸ்ரீநகர் ☑

ஈ) கொல்கத்தா



- ✓ ஐநா கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) ஸ்ரீநகரை UNESCO கிரியேட்டிவ் சிட்டிஸ் நெட்வொர்க்கின் (UCCN) ஒருபகுதியாக அறிவித்துள்ளது. மும்பை, சென்னை, ஹைதராபாத், வாரணாசி மற்றும் ஜெய்ப்பூர் ஆகிய நகரங்களுக்குப் பிறகு, இந்த பெருமையைப் பெறும் ஆறாவது இந்திய நகரமாக ஸ்ரீநகர் உள்ளது. ஜம்மு மற்றும் காஷ்மீரின் தலைநகரமான இந்த நகரம், உலகெங்கிலும் உள்ள 295 கிரியேட்டிவ் சிட்டிஸ் வலையமைப்பிற்குள் நுழைந்துள்ளது.


செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வ


டிசம்பர் 2021

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்









1. Dr கமல் ரணதிவேவுடன் தொடர்புடைய துறை எது?

அ) கதிரியக்க பொருட்கள்



ஆ) கனரக பொறியியல்

இ) செல் உயிரியல் ☑

ஈ) ஆயுர்வேதம்

✓ Dr கமல் ரணதிவே ஓர் இந்திய செல் உயிரியலாளராவார். அவர் புற்றுநோய் துறையில் ஆராய்ச்சியை மேற்கொண்–டார். இந்திய புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் நாட்டின் முதல் திசு வளர்ப்பு ஆய்வகத்தை நிறுவுவதில் முக்கிய அவர் பங்காற்றினார். இந்தியப் பெண் அறிவியலாளர்கள் சங்கத்தை நிறுவுவதில் அவர் முக்கியப் பங்காற்றினார்.

✓ அண்மையில், Dr கமல் ரணதிவேவின் 104ஆவது பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் கூகுள் ஒரு டூடுலை அவருக்காக அர்ப்பணித்தது.

---

2. உலகின் 2ஆவது பெரிய நிலக்கரித்தொகுதியான தியோச்சா பச்சமி ஹரின்சிங்க தேவாங்கஞ்ச் அமைந்து உள்ள இந்திய மாநிலம் எது?

அ) ஜார்கண்ட்



ஆ) மேற்கு வங்கம் ☑

இ) சத்தீஸ்கர்

ஈ) ஒடிஸா

✓ உலகின் 2ஆவது பெரிய நிலக்கரி சுரங்கமான தியோச்சா பச்சமி ஹரின்சிங்க தேவாங்கஞ்ச் மத்திய அரசால் மேற்கு வங்க மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

✓ மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி சமீபத்தில் பிர்பூம் மாவட்டத்தில் உள்ள தியோச்சா–பச்சாமி நிலக்கரி சுரங்கத் திட்டத்தால் இடம்பெயர்ந்து அல்லது பாதிக்கப்படும் மக்களுக்கு ₹10,000 கோடி இழப்பீடு வழங்குவதாக அறிவித்தார்.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற வருண் தாக்கர் மற்றும் K C கணபதி ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) கிரிக்கெட்



ஆ) கபாடி

இ) படகோட்டம் ☑

ஈ) கோல்ப்

✓ இந்திய படகோட்டிகள் வருண் தாக்கரும் KC கணபதியும் ஓமனில் நடந்த ஆசிய 49er படகோட்ட சாம்பியன்ஷிப் 2021'இல் தங்கப்பதக்கம் வென்றுள்ளனர்.

✓ இவ்வெற்றியின்மூலம், அவர்கள் 2021 நவம்பரில் நடக்கும் உலக சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் சார்பாக பங்கேற்–கவுள்ளனர். இவ்விரட்டையர் அணி நிகழ்வை 10ஆவது இடத்தில் முடித்தது. முதல் 10 இடங்களுக்குள் இருக்கும் ஒரே ஆசிய அணியாக இது உள்ளது.

---

4. இந்தியக் கடற்படைக் கப்பல் கார்முக், இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையே நடைபெறும் 32ஆம் CORPAT பயிற்சியில் பங்கேற்கிறது?

அ) இலங்கை



ஆ) பிரான்ஸ்

இ) தாய்லாந்து ☑

ஈ) ஓமன்

✓ இந்திய கடற்படைக்கும் இராயல் தாய்லாந்து கடற்படைக்–கும் இடையிலான இந்தியா–தாய்லாந்து ஒருங்கிணைந்–த ரோந்துப் பயிற்சியின் (இந்தோ–தாய் CORPAT) 32வது பதிப்பு 2021 நவம்பர் 12 முதல் 14 வரை நடத்தப்படுகிறது.

✓ இந்தியக் கடற்படைக் கப்பல் (INS) கார்முக், உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ஏவுகணை கார்வெட் மற்றும் தாய்லாந்தின் HTMS தயான்சோன், இரு கடற்படைகளின் கடற்புற ரோந்து விமானங்கள் ஆகியவை இப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இரு கடற்படைகளும் 2005 ஆம் ஆண்டு முதல் தங்கள் பன்னாட்டு கடல் எல்லைக் கோட்டில் (IMBL) CORPAT'ஐ ஆண்டுக்கு இருமுறை நடத்துகின்றன.

---

5. குர்பச்சன் சிங் ரந்தாவாவின் வாழ்க்கை வரலாறு சமீபத்தில் வெளியிடப்பட்டது. அவர் சார்ந்த துறை எது?

அ) விளையாட்டு ☑



ஆ) வணிகம்

இ) அரசியல்

ஈ) சமூக சேவை

✓ பஞ்சாப் விளையாட்டு மற்றும் உயர்கல்வி அமைச்சர் பர்கத் சிங், ஒலிம்பிய தடகள வீரர் குர்பச்சன் சிங் ரந்தாவாவின் வாழ்க்கை வரலாறான 'உத்னா பாஸ்' என்ற நூலை வெளியிட்டார். இந்நூலை விளையாட்டுத் துறை எழுத்தாளர் நவ்தீப் சிங் கில் எழுதியுள்ளார்.

✓ அர்ஜுனா விருது பெற்ற முதல் தடகள வீரர் குர்பச்சன் சிங் ரந்தாவா, 1964ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய அணியின் கொடியை ஏந்தியவர். அவருக்கு 1961'இல் 'அர்ஜுனா' விருதும், 2005'இல் 'பத்மஸ்ரீ' விருதும் வழங்கப்பட்டது.

---

6. கீழ்கண்ட எந்த அச்சு ஊடக நிறுவனத்திற்கு, 2021ஆம் ஆண்டிற்கான "செய்தித்தாள்களுக்கான SIREN திட்ட விருது" வழங்கப்பட்டுள்ளது?

அ) இந்தியா டுடே

ஆ) தி இந்து ☑

இ) டைம்ஸ் ஆப் இந்தியா

ஈ) தி ஹிந்துஸ்தான் டைம்ஸ்

✓ முன்னணி தேசிய நாளிதழான – 'தி இந்து'வுக்கு 2021ஆம் ஆண்டிற்கான "செய்தித்தாள்களுக்கான SIREN திட்ட விருது" வழங்கப்பட்டுள்ளது.

✓ SIREN'இன் மதிப்பெண் அட்டையில் நிலையான உயர் செயல்திறன் பெற்றமைக்காக இவ்விருது வழங்கப்பட்டு உள்ளது. மனநலச்சட்டம் மற்றும் கொள்கை மையத்தின் கீழ் இந்திய மனநலக் கண்காணிப்பகத்தால் SIREN

திட்டம் தொடங்கப்பட்டது. இது தற்கொலைபற்றிய ஊடக அறிக்கைகளைக் கண்காணித்து மதிப்பீடு செய்கிறது.

---

7. ஐநா அவையால், "ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் நாள்" அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) 20 நவம்பர் ☑



ஆ) 22 நவம்பர்

இ) 23 நவம்பர்

ஈ) 25 நவம்பர்

✓ ஒவ்வோர் ஆண்டும், நவ.20ஆம் தேதியை "ஆப்பிரிக்கா தொழில்மயமாக்கல் நாளாக" ஐநா அவை அனுசரிக்கிறது.

✓ மேலும் இந்த நாளில் ஆப்பிரிக்காவின் தொழில்மயமாக்க –லின் முக்கியத்துவம் மற்றும் இது தொடர்பான சவால்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு நிகழ்வுகள் உலகம் முழுவதும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்நாள் 1989ஆம் ஆண்டில் ஐநா'ஆல் ஆப்பிரிக்காவிற்கான 2ஆம் தொழிற்துறை வளர்ச்சி பத்தாண்டு (1991–2000) என்ற கட்டமைப்பின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

8. போர் தயார்நிலையை சோதிப்பதற்காக கட்சில் இந்தியா மேற்கொண்ட பிரம்மாண்ட இராணுவப் பயிற்சியின் பெயர் என்ன?

அ) ஆத்மநிர்பார் ஜவான்



ஆ) சாகர் சக்தி ☑

இ) இந்தியா சக்தி

ஈ) தீவிர சக்தி

✓ போர் தயார்நிலையை சோதிப்பதற்காக இந்தியாவால் 'சாகர் சக்தி' என்ற பிரம்மாண்ட இராணுவப் பயிற்சி சமீபத்தில் கட்சில் நடத்தப்பட்டது. கட்ச் தீபகற்பத்தின் கிரீக் செக்டரில் நடத்தப்பட்ட நான்கு நாள் அதி தீவிர இராணுவப் பயிற்சியில் இந்திய ராணுவம், இந்திய கடற்படை, இந்திய விமானப்படை, இந்திய கடலோர காவல்படை, எல்லைப் பாதுகாப்புப் படை, குஜராத் காவல்துறை மற்றும் கடற்புற காவல் படை ஆகியவை பங்கேற்றன. இந்தப் பயிற்சியை இந்திய இராணுவத்தின் தென்படை ஏற்பாடு செய்தது.

---

9. நிதிநிலைப்புத்தன்மை வாரியத்தின்படி, அமைப்பு ரீதியாக உலகின் முக்கியமான வங்கி எது?

அ) JP மோர்கன் சேஸ் ☑

ஆ) மோர்கன் ஸ்டான்லி



இ) கோல்ட்மேன் சாக்ஸ்

ஈ) பேங்க் ஆப் அமெரிக்கா

✓ நிதிநிலைப்புத்தன்மை வாரியத்தின் (FSB) ஒரு சமீபத்திய வருடாந்திர தரவரிசையின்படி, JP மோர்கன் சேஸ் உலகின் மிக முக்கியமான வங்கியாக மாறியுள்ளது.

✓ FSB, G20 நாடுகளின் ஒழுங்காற்றுநர்களால் ஆனதாகும். அது உலகின் முக்கியமான 30 வங்கிகளின் பட்டியலை சமீபத்தில் வெளியிட்டது. BNP பரிபாஸ் மற்றும் கோல்டு மேன் சாக்ஸ் ஆகியவையும் மிகவும் முக்கியமான வங்கியாக கருதப்படுகிறது.

10. 'தோஸ்தி' என்பது இந்தியாவிற்கும் எந்த நாடு / நாடுகளுக்கு இடையேயான ஒரு கடற்பயிற்சியாகும்?

அ) இலங்கை



ஆ) மாலத்தீவுகள் & இலங்கை ☑

இ) நேபாளம்

ஈ) வங்காளதேசம் & ஜப்பான்

✓ 'தோஸ்தி' என்பது இந்தியா, மாலத்தீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் கடலோரக் காவல்படையினருக்கு இடையே இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் முத்தரப்பு கடற்சார் பயிற்சியாகும். இந்த ஆண்டு 'தோஸ்தி' பயிற்சியின் 15ஆவது பதிப்பு மாலத்தீவில் நவ.20–24 வரை நடத்தப்பட்டது. இந்தியக் கடலோரக் காவல்படை கப்பல்களான ICGS வஜ்ரா மற்றும் ICGS அபூர்வா இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 2020–ல் ஊரடங்கு அமலான முதல் 3 மாதங்களில் – அமைப்புசார் துறையில் வேலைவாய்ப்பு 7.5% சரிவு:

கரோனா ஊரடங்கு காரணமாக 2020–ம் நிதி யாண்டின் முதல் காலாண்டில் அமைப்புசார் துறைகளில் வேலைவாய்ப்பு 7.5 சதவீதம் சரிந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தியாவில் கரோனா பரவல் வேகமெடுக்கத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து மார்ச் இறுதி வாரத்தில் நாடு தழுவிய ஊரடங்கை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியது. இதனால், பல கோடி மக்கள் வேலையிழந்தனர்.

இந்நிலையில், ஊரடங்கின் காரணமாக ஏற்பட்ட வேலையிழப்பு தொடர்பாக மக்களவையில் பாஜக உறுப்பினர் பிரிஜேந்திர சிங் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளிக்கும் விதமாக, திங்கள்கிழமை அன்று நாடாளுமன்றத்தில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், 2020–2021 நிதி ஆண்டின் முதல் காலண்டின் வேலைவாய்ப்பு தொடர்பான அறிக்கையைக் குறிப்பிட்டுக் காட்டியது.

உற்பத்தி, கட்டுமானம், போக்குவரத்து உள்ளிட்ட 9 துறைகளில் வேலைவாய்ப்புப் பெற்றிருந்த இருந்த ஆண்களின் எண்ணிக்கை, சென்ற நிதி ஆண்டின் முதல் காலாண்டில் 2.1 கோடியிலிருந்து 2 கோடியாகவும், பெண்களின் எண்ணிக்கை 90 லட்சத்திலிருந்து 83 லட்சமாகவும் குறைந்துள்ளது என்று மத்திய வேலைவாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், ஜூன் மாதத்துக்குப் பிறகு ஏற்பட்ட வேலையிழப்பு தொடர்பான தகவல் இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையானது அமைப்புசார் வேலைகளை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது. இந்தியாவில் வெறும் 6.5 சதவீதம் மக்கள் மட்டுமே அமைப்புசார் வேலைகளில் உள்ளனர். 80 சதவீதத்துக்கு மேலான மக்கள் அமைப்புசாரா துறைகளிலே வேலைவாய்ப்பு பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2. இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட்டது: இஸ்ரேலின் அதிநவீன உளவு விமானம்

இஸ்ரேலின் அதிநவீன ஹெரோன் உளவு விமானங்கள் இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட்டு உள்ளன.

ஆளில்லா உளவு விமானங்களை தயாரிப்பதில் அமெரிக்காவும் இஸ்ரேலும் முன்னோடிகளாக உள்ளன. இந்திய ராணுவத்தில் இஸ்ரேலின் ஹெரோன் உளவு விமானங்கள் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. இவை லடாக் எல்லையில் உளவு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

இந்த சூழலில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன ஹெரோன் உளவு விமானங்களை இஸ்ரேலிடம் இருந்து மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வாங்கியுள்ளது. இதன்படி 4 ஹெரோன்கள் இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. சீனராணுவ அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் இவை லடாக் எல்லையில் பறக்க விடப்படவுள்ளன.

நவீன ஹெரோன் உளவு விமானங்கள் 35,000 அடி உயரத்தில் தொடர்ந்து 52 மணி நேரம் பறக்கும் தன்மை கொண்டவை. தற்போது இவை உளவு பணிக்காக மட்டுமே பயன்படுத்தப்பட உள்ளன. நாளடவையில் இந்த உளவு விமானங்கள் மூலம் தாக்குதலும் நடத்தப்படும் என்று ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் பிரிடேட்டர் வகையை சேர்ந்த 2 உளவு விமானங்களை இந்திய கடற்படை குத்தகைக்கு எடுத்து பயன்படுத்தி வருகிறது. இந்த வகையை சேர்ந்த 30 உளவு விமானங்களை வாங்க அமெரிக்காவுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அமெரிக்க உளவு விமானங்கள் முப்படைகளிலும் சேர்க்கப்படும் என்று பாதுகாப்புத் துறை வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

---

3. பலோன் டி'ஆர் விருதை 7–ம் முறை வென்றார் மெஸ்ஸி:

கால்பந்தின் கவுரமான விருதான பலோன் டி' ஆர் விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் பிரான்ஸ் தலைநகரான பாரீஸ் நகரில் நடைபெற்றது. இதில் அர்ஜென்டினா அணியின் நட்சத்திர வீரரான 34 வயதான லயோனஸ் மெஸ்ஸி சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது. பலோன் டி' ஆர் விருதை மெஸ்ஸி வெல்வது இது 7–வது முறையாகும். இதற்கு முன்னர் 2009, 2010, 2011, 2012 மற்றும் 2015–ம் ஆண்டுகளிலும் அவர் விருதை பெற்றிருந்தார்.

இம்முறை விருதுக்கான இறுதித் தேர்வு வாக்களிப்பின் போது மெஸ்ஸிக்கு வலுவான போட்டியாளராக போலந்து நாட்டின் ராபர்ட் லெவன்டோவ்ஸ்கி திகழ்ந்தார். இவர்களுக்கு அடுத்த இடங்களில் ஜோர்ஜின்ஹோ, கரீம் பென்சிமா, என்'கோலோ காண்டே, கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோர் இருந்தனர்.

பார்சிலோனா கால்பந்து கிளப்புடன் தனது கால்பந்து வாழ்க்கையை தொடங்கிய மெஸ்ஸி கடந்த ஆகஸ்ட் மாதம் அந்த அணியில் இருந்து விலகி பிரான்ஸில் உள்ள பிஎஸ்ஜி அணியில் இணைந்திருந்தார். மெஸ்ஸி தலைமையிலான அர்ஜென்டினா அணி இந்த ஆண்டில் கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் சாம்பியன் பட்டம் வென்றிருந்தது. பார்சிலோனா கிளப்பில் மெஸ்ஸி தனது இறுதி சீசனில் 48 ஆட்டங்களில் 38 கோல்கள் அடித்திருந்தார்.

---

3. உயர் பிரிவினருக்கான 10 சதவீத இடஒதுக்கீட்டை ஆய்வு செய்ய 3 பேர் குழு

பொருளாதாரத்தில் பின்தங்கிய உயர் பிரிவினருக்கு கல்வி, வேலை வாய்ப்பில் ஒன்றிய அரசு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கியுள்ளது. இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்து வரும் உச்ச நீதிமன்றம், 'பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கான இடஒதுக்கீடு எந்த அடிப்படையில் அளிக்கப்பட்டது? எந்த அடிப்படையில் அவர்களுக்கான வருமான உச்ச வரம்பு (ஆண்டுக்கு ரூ.8 லட்சம்) நிர்ணயம் செய்யப்பட்டது?' என்று கேள்வி எழுப்பியது. இது பற்றி மறுஆய்வு செய்வதாக உச்ச நீதிமன்றத்தில் கடந்த வாரம் ஒன்றிய அரசு தெரிவித்தது. இந்நிலையில், இது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக ஒன்றிய அரசு நேற்று குழு அமைத்தது. இதில், ஒன்றிய நிதித்துறை முன்னாள் செயலாளர் அஜய் பூஷன் பாண்டே, இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சிலின் உறுப்பினர் செயலாளர் வி.கே.மல்கோத்ரா, ஒன்றிய அரசுக்கான முதன்மை பொருளாதார ஆலோசகர் சஞ்சய் சன்யால் இடம் பெற்றுள்ளனர். தனது அறிக்கையை 3 வாரங்களில் சமர்ப்பிக்கும்படி இக்குழுவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

---

4. இந்து சமய அறநிலையத்துறை சார்பில் – ஒட்டன்சத்திரம், விளாத்திகுளம், திருச்செங்கோட்டில் 3 புதிய கலை கல்லூரிகள்

2021–22–ம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை மானிய கோரிக்கையில், 10 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை கொளத்தூர், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், தூத்துக்குடி மாவட்டம் விளாத்திக்குளம் ஆகிய 4 இடங்களில் பி.காம்., பி.பி.ஏ., பி.சி.ஏ., பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்ஸ் ஆகிய 4 பாடப்பிரிவுகளுடன் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கிட உயர்கல்வித்துறையால் அனுமதி அளிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது.

முதற்கட்டமாக சென்னை கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை 2.11.2021 அன்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

அதன் தொடர்ச்சியாக பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் நிர்வாகத்தின் சார்பாக ஒட்டன்சத்திரம் சின்னயகவுண்டன்வலசில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைக்கப்பட்டு அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல்

கல்லூரி சமய வகுப்புகளுடன் தற்காலிக கட்டிடத்தில் தொடங்கப்பட்டு இருக்கிறது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் சார்பாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைக்கப்பட்ட விளாத்திக்குளம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு சொந்தமான கட்டிடத்தில் சமய வகுப்புகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோவில் நிர்வாகத்தின் சார்பாக பெரியார் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைக்கப்பட்ட அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதுப்புளியம்பட்டி கிராமத்தில் தற்காலிக கட்டிடத்தில் சமய வகுப்புகளுடன் தொடங்கப்பட்டு இருக்கிறது.

மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

மேற்சொன்ன 3 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை சென்னை தலைமை செயலகத்தில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். கிராமப்புற மாணவ–மாணவிகள் உயர்கல்வி பெறுவதற்காகவும், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் இந்த கல்லூரிகள் பெரிதும் உதவியாக அமையும்.

---

5. நவம்பர் மாத ஜிஎஸ்டி வசூல் ரூ.1.31 லட்சம் கோடி:

சரக்கு மற்றும் சேவை வரியாக (ஜிஎஸ்டி) நவம்பர் மாதத்தில் ரூ.1,31,526 கோடி வசூலாகி உள்ளது.

இறக்குமதி பொருட்கள் மீதானசுங்க வரி வசூல் 43% அதிகரித்துள்ளது. ஜிஎஸ்டி வசூல் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் சூழலில்இப்போது வசூலாகியுள்ள தொகைஎதிர்பார்த்ததைவிட குறைவு என்றுஇக்ரா நிறுவன பொருளாதார நிபுணர் அதிதி நாயர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரலில் ஒட்டுமொத்த மாக வசூலான ஜிஎஸ்டி தொகை ரூ.1,41,384 கோடி. ஆனால் திருத்திய மதிப்பீட்டில் ரூ.1,676 கோடி குறைந்து வசூலான நிகர தொகை ரூ.1,39,708 கோடியாக இருந்தது. அதற்குப் பிறகு 2–வது முறையாக நவம்பர் மாதத்தில் ரூ.1.30 லட்சம் கோடியை ஜிஎஸ்டி வசூல் கடந்துள்ளது.

ஜிஎஸ்டி வசூல் தொகை ரூ.1.3 லட்சம் கோடியைக் கடந்துள்ளபோதிலும் இதில் ரிட்டர்ன் தொகை காலாண்டு முடிவில்தான்கணக்கிடப்பட்டு திருப்பித் தரப்படும். அப்போது வசூலான தொகை குறையும் என நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. வரி வசூல் அதிகரிப்பு பொருளாதாரம் மீண்டு வருவதன் அறிகுறி என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

---

6. சென்னை–மும்பை அதிவிரைவு ரயிலின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம்

சென்னை–மும்பை அதிவிரைவு ரயிலின் (22159–60) நூற்றாண்டு விழா சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் புதன்கிழமை கொண்டாடப்பட்டது. இந்த பிரபலமான ரயில் சேவையானது, 1921–ஆம் ஆண்டு டிச.1–ஆம் தேதி இதே நாளில் மெட்ராஸ்–பம்பாய் விரைவு பாசஞ்சா் ரயிலாக, முதல் இயக்கத்தைத் தொடங்கியது. இந்தப் பயணிகள் ரயில் சேவை கடந்த 1930–ஆம் ஆண்டு மாா்ச் 1–ஆம் தேதியில் இருந்து விரைவு ரயில் சேவையாக மாற்றப்பட்டது. தற்போது, இந்த ரயில் மும்பை சத்ரபதி சிவாஜி மகாராஜ் முனையம்–சென்னை சென்ட்ரல் அதி விரைவு ரயில் என்ற பெயரில் இயக்கப்படுகிறது. இந்த அதிவிரைவு ரயில் 1,284 கி.மீ. தொலைவை கடக்கிறது. சென்னை–மும்பை இடையே 31 ரயில்நிலையங்கள் வழியாக இந்த ரயில் இயக்கப்படுகிறது.

இந்த பிரபல ரயில் சேவையின் நூற்றாண்டு விழா சென்னை சென்ட்ரல் ரயில்நிலையத்தில் புதன்கிழமை கொண்டாடப்பட்டது. சென்னை சென்ட்ரலில் இருந்து மும்பை சிஎஸ்எம்டி–க்கு புறப்பட தயாராக இருந்த ரயிலின் என்ஜின் மற்றும் கடைசி இரண்டு பெட்டிகள் அலங்கரிக்கப்பட்டன. இதையடுத்து, சென்னை ரயில்வே கோட்ட கூடுதல் மேலாளா்கள் ஆா்.ஆனந்த், சச்சின் புனிதா, எஸ்.சுப்ரமணியன் ஆகியோா் முன்னிலையில், ரயில் பயணிகளால் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. தொடா்ந்து, ரயில் பயணிகளுக்கு கேக் வழங்கப்பட்டது.

நூற்றாண்டு ரயிலின் முதல் பயணத்தை குறிப்பிடும் வகையில், மூத்த ஊழியா்கள் கொடியசைத்தனா். நிகழ்ச்சியில், ரயில்வே அதிகாரிகள், ஊழியா்கள் மற்றும் பயணிகள் கலந்து கொண்டனா்.

---

7. தமிழகத்தில் எய்ட்ஸ் தாக்கம் 0.18 சதவீதமாக குறைந்தது: மா. சுப்பிரமணியன் பேச்சு

தமிழகத்தில் 1.13 சதவீதமாக இருந்த எய்ட்ஸ் தாக்கம் தற்போது 0.18 சதவீதமாக குறைந்துள்ளது என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை எழும்பூரில் நடந்த உலக எய்ட்ஸ் தின நிகழ்வில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

" தமிழக முதல்வா் வழிகாட்டுதலின்படி, மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் எச்.ஐ.வி /எயட்ஸ் பற்றிய விழிப்புணர்வு திட்டங்கள் கடைநிலை மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றது. மேலும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றுள்ளோரை புறக்கணிக்காமல் அரவணைத்துச் செல்லும் நோக்கத்திலும் பல நல திட்டங்கள் தமிழக அரசின் மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் 1.13 சதவீதமாக இருந்த எய்ட்ஸ் தாக்கம் தற்போது 0.18 சதவீதமாக குறைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை 1988 முதல் டிசம்பர் மாதம் முதல் தேதியை உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்க வேண்டுமென்று முடிவெடுத்து உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் முதல் நாள் உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்த

ஆண்டின் உலக எய்ட்ஸ் தின மையக் கருத்து எச்.ஐ.வி / எயட்ஸுடன்

வாழும் மக்களுக்கு ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை முடிவுக்குக் கொண்டு வருவோம்.

இந்திய திருநாட்டின் 75–வது சுதந்திர தின பொன்விழாவினை முன்னிட்டு – 9 மற்றும் 11 வகுப்பு பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணாவை

ஏற்படுத்தும் வகையில் "புதிய இந்தியா ஏ0 75" என்ற தலைப்பில் ஓவியம், இணையதள வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் எச்.ஐ.வி. தொற்றை கண்டறிய அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் வட்டார சுகாதார மையங்களில் 2953 நம்பிக்கை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு எச்.ஐ.வி. இலவச பரிசோதனைகள் செய்யப்பட்டு,எயட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவாகளுக்கு இலவசமாக மருந்து வழங்கிட 55 கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் 174 இணை கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் இயங்கி வருகின்றன.

தாயிடமிருந்து குழந்தைகளைக்கு எய்ட்ஸ் தொற்று பரவுதலை தடுக்கும் பொருட்டு – தேசிய சுகாதார திட்டத்தின் (1/1) கீழ் இனப்பெருக்கம் மற்றும் குழந்தை நலத்திட்டத்துடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

எய்ட்ஸ் தொற்று ஏற்பட அதிகம் வாய்ப்புள்ளவார்கள் கண்டறிந்து தடுப்பு நடவடிக்கை மற்றும் சிகிச்சை அளிக்க "85 இலக்கு பணிகளுக்கான திட்டங்கள்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பெண் பாலியல் தொழிலாளர்கள், ஒரினச்சேர்க்கையாளர்கள், போதை ஊசி பயன்படுத்துவோர், தொலைதூர லாரி ஒட்டுநர்கள் என பல்வேறு வகையில் கண்டறிந்து விழிப்புணாவு மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எயட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் புறக்கணிக்கப்படக்கூடாது என்ற உயரிய நோக்கில் தமிழக அரசு இக்குழந்தைகளுக்கு உதவி செய்யும் வகையில் – 25கோடி வைப்பு நிதியுடன் தமிழ்நாடு அரசின் அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டு, நிதியிலிருந்து பெறப்படும் வட்டித்தொகையைக் கொண்டு, பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு – மருந்து, ஊட்டச்சத்து, கல்வித்தொகை வழங்கப்படுகிறது, மேலும் எய்ட்ஸ் பாதிக்கப்பட்டோருக்கு, இலவச பஸ் பாஸ், விதவைகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது' ' என்று தெரிவித்தார்.

இந்நிகிழ்ச்சியில் எழும்பூர் சட்டப்பேரவை உறுப்பினா் இ.பரந்தாமன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் முதன்மைச் செயலாளர் மரு.இராதாகிருஷ்ணன்,தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க இயக்குநர் ஹரிஹரன், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.எஸ்.குருநாதன் மற்றும் உயர் அலுவலா்கள் கலந்து கொண்டனர்.

1. மத்திய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் முதலீடுகள் திரும்பப் பெறப்படவுள்ளன. இது எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ் உள்ள CPSE ஆகும்?

அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

ஆ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

இ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

ஈ) மின்சார அமைச்சகம்

✓ போட்டி ஏலச்செயல்முறைக்குப்பிறகு, மத்திய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் முதலீடுகளைத் திரும்பப் பெற மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ மத்திய எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் என்பது அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி துறையின், அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள CPSE ஆகும்.

---

2. தேசிய தொழிற்துறை வழித்தட மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக எந்த நிறுவனம் இந்தியாவுடனான $250 மில்லியன் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ) ஐஎம்எப்

ஆ) ஏடிபி ☑

இ) ஏஐஐபி

ஈ) பிரிக்ஸ் வங்கி

✓ ஆசிய வளர்ச்சி வங்கியும் (ஏடிபி) இந்திய அரசாங்கமும் தேசிய தொழிற்துறை வழித்தட மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதற்காக $250 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இத்திட்டம் உலகத் தரம் வாய்ந்த தொழிற்துறை முனையங்களை மேம்படுத்துவதையும், உயர்தர வேலைவாய்ப்பை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ) சுப்பிரமணியன் சுவாமி

ஆ) சம்பித் பத்ரா ☑



இ) லால் சிங் ஆர்யா

ஈ) ஜமால் சித்திக்

✓ பாஜக செய்தித்தொடர்பாளர் சம்பித் பத்ரா, இந்திய சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் தலைவராக அமைச்சரவை நியமனக்குழுவால் நியமிக்கப்பட்டார்.

✓ இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பதவியை தலைவர், ITDC மற்றும் நிர்வாக இயக்குநர், ITDC எனப் பிரிப்பதற்கான சுற்றுலா அமைச்சகத்தின் முன்மொழிவுக்கு ACC ஒப்புதல் அளித்து உள்ளது. ஐஏஎஸ் அதிகாரியான ஜிகேவி ராவ் ஐடிடிசியின் நிர்வாக இயக்குநராக பதவி வகிப்பார்.

---

4. பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினம் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) நவம்பர் 27

ஆ) நவம்பர் 29 ☑

இ) நவம்பர் 30

ஈ) டிசம்பர் 1

✓ ஐநா அவை 1978ஆம் ஆண்டு முதல் நவ.29ஆம் தேதியை பாலஸ்தீன மக்களுடனான சர்வதேச ஒற்றுமை தினமாக கடைபிடிக்கிறது. பாலஸ்தீனத்தை இரண்டு நாடுகளாக பிரிப்பதற்கான ஐநா தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதை குறிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

5. 'ஃபின்டெக் குறித்த சிந்தனை தலைமை மன்றத்தை' இந்தியாவில் நடத்துகிற நிறுவனம் எது?

அ) RBI

ஆ) NITI ஆயோக்

இ) IFSCA ☑

ஈ) SEBI

✓ ஃபின்டெக் குறித்த சிந்தனை தலைமைத்துவ மன்றத்தை பிரதமர் மோடி மெய்நிகராக தொடங்கி வைக்கிறார். GIFT நகரம் மற்றும் புளூம்பெர்க் உடன் இணைந்து சர்வதேச நிதிச்சேவை மையங்கள் ஆணையம் (IFSCA) இந்த 2 நாள் நிகழ்வை நடத்துகிறது.

✓ இந்த மன்றத்தின் முதல் பதிப்பில் இந்தோனேஷியா, தென்னாப்பிரிக்கா மற்றும் UK ஆகியவை பங்குதாரர் நாடுகளாக உள்ளன.

---

6. உலகின் சிறந்த 300 கூட்டுறவு நிறுவனங்களில் 'நம்பர் ஒன் கூட்டுறவு' தரநிலையில் உள்ள கூட்டுறவு நிறுவனம் எது?

அ) இந்திய தேசிய கூட்டுறவு ஒன்றியம் லிமிடெட்

ஆ) இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு லிமிடெட் ☑

இ) தேசிய கூட்டுறவு நில மேம்பாட்டு வங்கிகள் கூட்டமைப்பு லிமிடெட்

ஈ) இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு லிமிடெட்

✓ இந்திய விவசாயிகள் உரக் கூட்டுறவு லிமிடெட் (IFFCO) உலகின் முதல் 300 கூட்டுறவு நிறுவனங்களில் 'நம்பர் 1 கூட்டுறவு' என அறிவிக்கப்பட்டுள்ளது. IFFCO நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்து வருகிறது என்பதை இந்தத் தரவரிசை குறிக்கிறது.

---

7. ஆண்டுதோறும் இந்திய கடற்படை தினம் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) டிசம்பர் 1

ஆ) டிசம்பர் 4 ☑



இ) டிசம்பர் 10

ஈ) டிசம்பர் 14

✓ 1971ஆம் ஆண்டு இந்தியா–பாகிஸ்தான் போரின்போது 'ஆபரேஷன் ட்ரைடென்ட்' நடவடிக்கையில் இந்திய கடற்படையின் எதிர்த்தாக்குதலுக்கு மதிப்பளிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் டிச.4ஆம் தேதி இந்திய கடற்படை தினமாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு "ஸ்வர்னிம் விஜய் வர்ஷ்" என்ற கருப்பொருளின்கீழ் கடற்படை விழாவை கொண்டாடியது.

---

8. பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சியின் ஒருபகுதியாக சீனா எந்த நாட்டுடன் முதல் எல்லை தாண்டிய ரயில் போக்குவரத்தை தொடங்கியது?

அ) லாவோஸ் ☑



ஆ) ரஷ்யா

இ) பாகிஸ்தான்


ஈ) மலேசியா

✓ பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சி, ஒரு பெல்ட் ஒன் ரோடு முன்முயற்சி என்றும் அழைக்கப்படுகிறது, இது சீனாவின் உள்கட்டமைப்பு மேம்பாட்டு உத்தி ஆகும், இது 2013 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமீபத்தில், பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சியின் ஒரு பகுதியாக சீனா முதல் எல்லை தாண்டிய ரயில் போக்குவரத்தை தொடங்கியது. சீனாவையும் நிலத்தால் சூழப்பட்ட தென்கிழக்கு நாடு லாவோஸையும் இது இணைக்கிறது.

---

9. 'சென்ட்ரி–II – சிறுகோள் தாக்க கண்காணிப்பு அமைப்பை' உருவாக்கியுள்ள விண்வெளி நிறுவனம் எது?

அ) ISRO



ஆ) NASA ☑

இ) ESA

ஈ) JAXA

✓ NASA வானியலாளர்கள் சமீபத்தில் சென்ட்ரி–II எனப்படும் அடுத்த தலைமுறை தாக்க கண்காணிப்பு அல்காரிதத்தை உருவாக்கியுள்ளனர். இது பூமிக்கு அருகில் உள்ள சிறுகோள்கள் தாக்க நிகழ்தகவுகளை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இப்புதிய அமைப்பு NASA JPL'இன் 'பூமிக்கு அருகில் உள்ள பொருள் ஆய்வுகளுக்கான மையத்தின்' திறன்களை மேம்படுத்துகிறது. இது நமது கிரகத்திற்கு அருகில் வரக்கூடிய சிறுகோள்களின் தாக்க அபாயத்தை மதிப்பிடுகிறது.

---

10. 'நை மன்சில்', 'சீகோ அவுர் கமாவோ' மற்றும் USTTAD ஆகிய திட்டங்களை செயல்படுத்துகின்ற மத்திய அமைச்சகம் எது?

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஆ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ☑

இ) சமூக நீதி அமைச்சகம்

ஈ) கல்வி அமைச்சகம்

✓ 'நை மன்சில்', 'சீகோ அவுர் கமாவ்' மற்றும் யுஎஸ்டிடிஏடி உள்ளிட்ட பல்வேறு திறன் மேம்பாட்டுத் திட்டங்களை 'மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம்' செயல்படுத்தி வருகிறது. அவ்வமைச்சகத்தின் கூற்றுப்படி, சிறுபான்மையினருக்கான திறன்மேம்பாட்டு மையத்தின் திட்டங்களின்கீழ் இதுவரை 6.5 இலட்சம் இளைஞர்கள் பயிற்சிபெற்றுள்ளனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஓட்டுநர் உரிமம், குடும்ப அட்டை எண்ம முறையில் பெற புதிய வசதி

ஓட்டுநர் உரிமம், குடும்ப அட்டை ஆகியவற்றின் நகல்களை எண்ம முறையில் பெறும் வசதி செயல்படுத்தப்பட உள்ளது.

இது தொடர்பாக தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் நீரஜ் மிட்டல் வெளியிட்ட உத்தரவு விவரம்:

எண்ம லாக்கர் முறையை அறிமுகப்படுத்துவது தொடர்பாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இயக்குநர் தரப்பில் இருந்து அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை எண்ம முறைப்படி வழங்கவும், அவற்றைப் பார்வையிட்டு சரிபார்த்திடவும் வகை செய்வதே எண்ம (டிஜிட்டல்) லாக்கர் முறையாகும். சான்றிதழ்களை வழங்குநர் என்ற அடிப்படையில் எண்ம லாக்கர் முறையைப் பதிவு செய்து கொள்ளலாம். உதாரணத்துக்கு, வாகன ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, மதிப்பெண் சான்றிதழ்கள் ஆகியவற்றின் மின்னணு நகல்களை மக்களுக்கு இந்த எண்ம லாக்கர் முறையின் மூலமாக வழங்கிடலாம். இதனை பொது மக்களின் எண்ம லாக்கருக்கு நேரடியாக அனுப்பும் போது அது மிகவும் பாதுகாப்பான முறையில் இருக்கும் என மின் ஆளுமை முகமையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அரசுத் துறைகளிடம் பொது மக்கள் அளிக்கும் இணைய விண்ணப்பங்களை எண்ம லாக்கர் முறையுடன் ஒருங்கிணைக்கலாம். இதன்மூலம் குடிமக்கள் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கும் போது அதற்குத் தேவையான ஆதார ஆவணங்களை எண்ம லாக்கர் வசதியில் இருந்தே எடுத்து இணைத்துக் கொள்ளலாம். இதைக் கருத்தில் கொண்டு அனைத்து அரசுத் துறைகளும் எண்ம லாக்கர் முறையைப் பின்பற்ற உத்தரவிட வேண்டுமென அரசினை மின்ஆளுமை முகமை இயக்குநர் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவரது இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, தமிழக அரசின் அனைத்துத் துறைகளும் எண்ம லாக்கர் முறையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதன்மூலம், எண்ம முறையிலான சான்று ஆவணங்களைப் பொது மக்களுக்கு வழங்கிட முடியும். மேலும், நடைமுறையில் உள்ள, வருங்காலத்தில் பயன்படுத்தப்பட வேண்டிய மென்பொருள்களையும் எண்ம லாக்கர் முறையுடன் இணைக்கலாம். எனவே, நடப்பிலுள்ள அனைத்து மென்பொருள்களையும் எண்ம

லாக்கா' முறையுடன் இணைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இந்தப் பணிக்கான உரிய உதவிகளை தமிழக அரசின் அனைத்துத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், தன்னாட்சி பெற்ற அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு வழங்கிட வேண்டுமென மின் ஆளுமை முகமை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

---

2. டேராடூனில் ரூ.18,000 கோடி திட்டங்கள்: டிச.4–இல் பிரதமா' தொடங்கி வைக்கிறாா'

உத்தரகண்ட் மாநிலம், டேராடூனில் ரூ.18,000 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமா' நரேந்திர மோடி டிசம்பா' 4–ஆம் தேதி தொடங்கி வைக்க இருக்கிறாா'.

ஒரு காலத்தில் மிகவும் தொலைவில் உள்ளவை என்று கருதப்பட்ட பகுதிகளுக்கு போக்குவரத்துத் தொடா'பை அதிகப்படுத்தவும் எளிதாக சென்றடைவதை விரிவுபடுத்தவுமான பிரதமரின் தொலைநோக்குப் பாா'வையின் அடிப்படையில் இந்தத் திட்டங்கள் அமைகின்றன. இதில் தில்லி–டேராடூன் பொருளாதார வழித்தடம் பயண நேரத்தை இரண்டரை மணி நேரமாகக் குறைக்கும்; வன விலங்குகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தாத வகையில் ஆசியாவிலேயே மிகப்பெரிய உயா'மட்ட பாதையாக இது இருக்கும்.

சாா'தாம் உள்ளிட்ட பகுதிகளுக்குத் தடையில்லாப் போக்குவரத்தை அளிப்பதாக சாலைத் திட்டங்கள் தொடங்கப்படுவது சுற்றுலாத் துறையை ஊக்கப்படுத்தும். அடிக்கடி மண்சரிவு ஏற்படும் பகுதியான லம்பாகட் மண்சரிவை கட்டுப்படுத்தும் திட்டம் பயணத்தை சுமுகமாகவும், பாதுகாப்பாகவும் மாற்றும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. காகிதமில்லா நிர்வாகத்தை உருவாக்க அனைத்து அரசு துறைகளும் 'டிஜிலாக்கர்' முறையை பயன்படுத்த வேண்டும்

தகவல் தொழில்நுட்பத்துறை முதன்மைச் செயலாளர் நீரஜ் மிட்டல் வெளியிட்ட அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

மக்களுக்கு ஆவணங்கள், சான்றிதழ்களை மின்னணு (டிஜிட்டல்) முறையில் வழங்குவதற்கும், அதன் மூலம் அரசு அலுவலகங்களில் காகிதத்தின் உபயோகத்தை நீக்குவதற்கும் 'டிஜிலாக்கர்' என்ற புதிய முறையை மத்திய அரசு கடந்த ஆண்டு மார்ச் மாதம் தொடங்கியது.

மின்னணு முறையில் ஆவணங்களையும், சான்றிதழ்களையும் எந்த இடத்தில் இருந்தாலும் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும். அதுபோல அவற்றை மின்னணு முறையில் சரிபார்க்கவும் முடியும். இதன் மூலம் காகித சான்றிதழ்கள், ஆவணங்களை தூக்கிக்கொண்டு செல்வது தவிர்க்கப்படும்.

இந்த புதிய முறை மூலம் அரசுத்துறைகள் வழங்கும் ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, மதிப்பெண் சான்றிதழ்கள், ரேஷன் அட்டைகள், பல்வேறு உரிமங்கள் போன்றவை குடிமக்களின் 'டிஜிலாக்கர்' கணக்கில் சேர்ந்துவிடும்.

இந்த நிலையில் இதுகுறித்து தமிழக அரசுக்கு மின்னாளுமை முகமையின் தலைமை செயல் அதிகாரி கடிதம் எழுதினார். அதில், அனைத்து அரசு துறைகளும் காகிதமில்லா நிர்வாகத்தை முன்னெடுப்பதற்காக 'டிஜிலாக்கர்' முறையை பின்பற்றுவதற்கான அரசாணையை வெளியிட வேண்டும் என்று கோரியுள்ளார்.

மத்திய அரசின் இந்த வேண்டுகோளை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதைத்தொடர்ந்து தமிழக அரசின் அனைத்து துறைகள் மற்றும் அதன் கீழ் வரும் முகமைகளும் 'டிஜிலாக்கரை' பயன்படுத்த உத்தரவிடப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

4. செயற்கை கருத்தரிப்பு மையங்களை ஒழுங்குபடுத்தும் மசோதா நாடாளுமன்றத்தில் தாக்கல்

செயற்கை கருத்தரிப்பு மையங்களை ஒழுங்குபடுத்தும் மசோதா, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. முறைகேடுகளில் ஈடுபடுபவர்களுக்கு 12 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்க இம்மசோதா வகை செய்கிறது.

மேலும், நாடு முழுவதும் உள்ள செயற்கை கருத்தரிப்பு மையங்களை ஒழுங்குபடுத்தவும், மேற்பார்வையிடவும் அந்த மையங்களுக்கும், இத்துறை சார்ந்த மருத்துவ நிபுணர்களுக்கும் தேசிய பதிவு ஆணையம் அமைக்க இந்த மசோதா வழி வகுக்கிறது.

மசோதாவை தாக்கல் செய்து மத்திய சுகாதார மந்திரி மன்சுக் மாண்டவியா பேசியதாவது, "நாடு முழுவதும் ஏராளமான செயற்கை கருத்தரிப்பு மையங்கள், எவ்வித ஒழுங்கு விதிகளுக்கும் உட்படாமல் இயங்கி வருகின்றன. செயற்கை கருத்தரிப்புக்கு வரும் தம்பதிகளின் உடல்நிலையில் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே, இத்தகைய மசோதாவை கொண்டு வருவது அவசியம் ஆகிறது.

இந்த மசோதா, கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்டது. நிலைக்குழு பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. நிலைக்குழு பல்வேறு சிபாரிசுகளை தெரிவித்தது. மத்திய அரசு அவற்றை பரிசீலித்து, இறுதியாக இம்மசோதாவை உருவாக்கி இருக்கிறது"

இவ்வாறு அவர் பேசினார்.

இதுகுறித்து பா.ஜனதா எம்.பி. ஹீனா கேவிட் பேசியதாவது, "80 சதவீத செயற்கை கருத்தரிப்பு மையங்கள் பதிவு செய்யப்படவில்லை. செயற்கை கருத்தரிப்பு மையங்களுக்கும், கருமுட்டை, விந்தணு வங்கிகளுக்கும் குறைந்தபட்ச நன்னடத்தை விதிமுறைகள், இம்மசோதாவில் இடம்பெற்றுள்ளன.

செயற்கை கருத்தரிப்புக்கு வரும் தம்பதிகளின் விவரங்கள் ரகசியமாக வைக்கப்படும். கருமுட்டை

தானமாக வழங்குபவர்கள், அதை பெறுபவர்களும் மசோதாவின் வரம்புக்குள் கொண்டுவரப்படுவார்கள்.

கருமுட்டை விற்பனையில் ஈடுபடுபவர்கள், முதல் தடவை தவறு செய்திருந்தால் ரூ.10 லட்சம் அபராதம் விதிக்கப்படும். மறுபடியும் பிடிபட்டால், அவர்களுக்கு 12 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்கும்".

---

5. 1975ம் ஆண்டு வரையிலான வில்லங்கச் சான்றுகளை ஆன்லைனில் பெறலாம்

பொதுமக்கள் நேரில் சென்று விண்ணப்பம் அளிப்பதில் உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டு 1975ம் ஆண்டு வரையிலான வில்லங்க சான்றுகளை ஆன்லைன் மூலம் பெறும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. தமிழக அரசின் வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஜோதி நிர்மலாசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி வழிகாட்டுதலின்படி பதிவுத்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக அத்துறையில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது 1975ம் ஆண்டு முதல் நாளது தேதி வரையிலான காலத்திற்கான வில்லங்கச் சான்றுகள் விரைவுக்குறியீடு மற்றும் சார்பதிவாளரின் மின்கையொப்பமிட்டு அலுவலகம் வராமல் ஆன்லைன் வழி வழங்கப்பட்டு வருகிறது.

ஆவணத்தில் உள்ள விவரத்திற்கும் வில்லங்கச்சான்றில் உள்ள விவரத்திற்கும் ஏதேனும் மாறுபாடுகள் இருக்கும் பட்சத்தில் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு நேரில் சென்று உரிய சான்றுகளுடன் விண்ணப்பங்களை அளிக்கும் நடைமுறை தற்போது உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு காலவிரயமும் சிரமமும் ஏற்படுகிறது. நேரில் சென்று விண்ணப்பம் அளிப்பதில் உள்ள சிரமத்தை கருத்தில் கொண்டு வில்லங்கச்சான்றில் உள்ள விவரங்களில் திருத்தங்கள் செய்ய ஆன்லைன் வழி விண்ணப்பிக்கும் புதிய நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. வில்லங்கச்சான்றில் உள்ள விவரங்களில் திருத்தங்கள் செய்ய பதிவுத்துறையின் இணையதளத்தில் 'அட்டவணை தரவு திருத்தம்' என்பதன் வழி சென்று ஆன்லைன் வழி விண்ணப்பிக்க பொதுமக்கள் கோரப்படுகிறார்கள். விண்ணப்பங்கள் ஆன்லைன் வழி பெறப்பட்டு சார்பதிவாளரால் சரி பார்க்கப்பட்டு மாவட்டப்பதிவாளரின் ஒப்புதலுடன் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

---

6. ஓய்வு பெற்றார் கோன்டா

இங்கிலாந்து டென்னிஸ் வீராங்கனை ஜோகன்னா கோன்டா (30), தொழில்முறை டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்துள்ளார். காயம், அறுவை சிகிச்சை காரணமாக போட்டிகளில் பங்கேற்பதில் சிரமப்பட்டு வந்ததால் உலக தரவரிசையில் 4வது இடத்தில் இருந்து 113வது இடத்துக்கு தள்ளப்பட்டார். பிரிட்டனின் முன்னாள் நம்பர் 1 வீராங்கனையான கோன்டா, 4 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளிலும் தலா ஒருமுறை அரையிறுதி வரை முன்னேறியுள்ளார். டபுள்யூடிஏ தொடர்களில் 4 முறை சாம்பியன் பட்டங்களை வென்றுள்ளார்.

---

7. உலகின் செலவு மிக்க நகரம் முதலிடத்தில் இஸ்ரேலின் டெல் அவிவ்

இஸ்ரேலின் கடற்கரை நகரமான டெல் அவிவ், மக்களின் அன்றாட வாழ்விற்கு அதிகம் செலவிட வேண்டிய நகரமாக மாறியுள்ளதாக ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.மத்திய கிழக்கு நாடான இஸ்ரேலின், 'எக்கனாமிஸ்ட்' என்ற பத்திரிகையின் பொருளாதார புலனாய்வு பிரிவு ஆய்வு அறிக்கையை சமீபத்தில் சமர்ப்பித்தது.

அதன் விபரம்:இஸ்ரேலின் கடற்கரை நகரமான டெல் அவிவ், வாழ்வதற்கு மிகவும் அதிகமாக செலவிட வேண்டிய நகரமாக மாறி வருகிறது. இந்த பட்டியலில் உலக அளவில் ஐந்தாவது இடத்தில் இருந்த டெல் அவிவ், தற்போது முதல் இடத்துக்கு வந்துள்ளது. பிரான்சின் பாரிஸ், சிங்கப்பூர் உள்ளிட்ட நகரங்களை விட டெல் அவிவில் அனைத்து பொருட்களின் விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது.

அமெரிக்க டாலருக்கு எதிரான இஸ்ரேலின் கரன்சியான ஷெகல் உயர்ந்து வருவதே இந்த விலை உயர்வுக்கு காரணம்.மளிகை மற்றும் போக்குவரத்து செலவுகள் இந்த நகரில் மிகவும் விலை உயர்ந்ததாக உள்ளது. இங்கு வசிப்பவர்கள் வீட்டு வாடகை செலுத்தி எளிமையான வாழ்க்கை வாழ்வதே கடும் சிரமமாக மாறி வருகிறது. இஸ்ரேலின் பொருளாதார மற்றும் கலாசார மையமான டெல் அவிவ் மாறி வருவதால், மிகப் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் இங்கு உள்ளன.அழகிய நீண்ட கடற்கரை, உலக தரம் வாய்ந்த உணவகங்கள் இங்கு உள்ளன.

இதனால், இந்த நகரில் வசிப்பதை மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். ஷெகலின் மதிப்பு உயர்ந்து வருவதால், வெளிநாட்டு முதலீடும் இஸ்ரேலில் அதிகரிக்க துவங்கி உள்ளன. இதன் காரணமாக அதிநவீன நகரமாக டெல் அவிவ் மாறி உள்ளது.டெல் அவிவ் நகரில் வீடு வாங்குவது, இஸ்ரேல் மக்களால் முடியாத காரியமாகி வருகிறது. இங்கு, வீட்டின் விலை சராசரியாக 9 கோடி ரூபாய் வரை உள்ளன.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

---

1. 2021இல் சர்வதேச அம்பேத்கர் மாநாட்டை நடத்துகிற நகரம் எது?

அ) புனே



ஆ) புது தில்லி ☑

இ) வாரணாசி

ஈ) சென்னை

✓ சர்வதேச அம்பேத்கர் மாநாடு, இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தால் சமீபத்தில் புது தில்லியில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மாநாட்டை எஸ்சி மற்றும் எஸ்டி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மன்றமும் Dr அம்பேத்கர் வர்த்தக சபையும் ஏற்பாடு செய்துள்ளது.

---

2. IMF'இன் முதல் துணை நிர்வாக இயக்குநராக நியமிக்கப்படவுள்ள இந்தியப் பொருளாதார நிபுணர் யார்?

அ) உர்ஜித் படேல்



ஆ) ரகுராம் ராஜன்

இ) கீதா கோபிநாத் ☑

ஈ) உஷா தோரத்

✓ இந்தியாவில் பிறந்த, சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) முதல் பெண் தலைமைப் பொருளாதார நிபுணர் கீதா கோபிநாத், முதல் துணை நிர்வாக இயக்குநராக பொறுப்பேற்க உள்ளார். அவர் ஜெஃப்ரி ஒகமோட்டோவின் பாத்திரத்தை ஏற்கவுள்ளார்.

---

3. விமான நிலையங்களில் பயன்படுத்தப்படவுள்ள இந்தியாவின் முதல் பயோமெட்ரிக்ஸ் அடிப்படையிலான டிஜிட்டல் செயலாக்க அமைப்பின் பெயர் என்ன?

அ) டெக் யாத்ரா



ஆ) டிஜி யாத்ரா ☑

இ) டெக்னோ போர்டிங்

ஈ) டிஜி போர்டிங்

✓ இந்திய விமான நிலையங்கள் ஆணையம் (AAI) நாட்டின் முதல் முக அங்கீகார தொழில்நுட்பம் சார்ந்த பயோமெட்ரிக் போர்டிங் சிஸ்டத்தில் செயல்பட்டு வருவதாக உள்நாட்டு விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் வி கே சிங் அறிவித்தார். வாரணாசி, புனே, கொல்கத்தா & விஜயவாடா விமான நிலையங்களில் பயணிகளுக்காக இது சோதனை முறையில் செயல்படுத்தப்பட உள்ளது.

✓ இந்த பயோமெட்ரிக் போர்டிங் சிஸ்டம் 'டிஜி யாத்ரா' திட்டத்தின் முதல் கட்டத்தின் ஒருபகுதியாகும். இந்த அமைப்பு வரும் 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்படவுள்ளது.

---

4. பின்வரும் எந்த மத்திய அமைச்சகத்தால், 'SRESHTA' திட்டம் தொடங்கப்பட உள்ளது?

அ) கல்வி அமைச்சகம்

ஆ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

இ) பழங்குடியினர் விவகார அமைச்சகம்

ஈ) சிறுபான்மை விவகார அமைச்சகம்

✓ சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் இலக்குப் பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கான குடியிருப்புக்கல்வி (SRESHTA) திட்டத்தைத் தொடங்க உள்ளது.

✓ இந்தத் திட்டம், பட்டியல் சாதி மாணவர்களின் சமூக–பொருளாதார மேம்பாடு மற்றும் ஒட்டுமொத்த மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

---

5. 'நிஜாமுதீன் பஸ்தி' என்பது எந்த இந்திய மாநிலம் / யூனியன் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாதுகாப்புத் திட்டமாகும்?

அ) உத்தர பிரதேசம்



ஆ) புது தில்லி ☑

இ) பீகார்

ஈ) ஜம்மு காஷ்மீர்

✓ இந்திய தலைநகரத்தில் உள்ள 'நிஜாமுதீன் பஸ்தி'யில் பாதுகாப்பு முன்னெடுப்புகளுக்காக UNESCO சிறப்பு மற்றும் நிலையான வளர்ச்சிக்கான சிறப்பு அங்கீகார விருதை வழங்கியுள்ளது. நிஜாமுதீன் பகுதி ஹஸ்ரத் நிஜாமுதீன் பஸ்தியில் உள்ள பல நூற்றாண்டுகள் பழைமையான ஹுமாயூன் கல்லறை உள்ளிட்ட உலக பாரம்பரிய தளத்தை உள்ளடக்கியதாகும்.

---

6. உலக எய்ட்ஸ் நாள் கடைப்பிடிக்கப்படும் தேதி எது?

அ) டிசம்பர் 01 ☑



ஆ) டிசம்பர் 02

இ) டிசம்பர் 03

ஈ) டிசம்பர் 04

✓ உலகின் மிகக்கொடிய நோய்களுள் ஒன்றான **AIDS** (**A**cquired **I**mmune **D**eficiency **S**yndrome) **HIV** (**H**uman **I**mm uno–deficiency **V**irus) என்னும் வைரஸால் ஏற்படுகிறது. இது மனித உடலின் வெள்ளை இரத்தவணுக்களை அழிக்கிறது. பின் நோயெதிர்ப்பு மண்டலத்தை தாக்கி, நோய்க்கெதிராக உடல் போராடமுடியாத நிலையை உண்டாக்குகிறது. இறுதியில் மரணத்தை நிகழ்த்துகிறது.

✓ இந்த நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் டிச.1 அன்று உலக எய்ட்ஸ் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. "End Inequalities, End AIDS" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப்பொருளாகும்.

---

7. சர்வதேச அடிமைமுறை ஒழிப்பு நாள் அனுசரிக்கப்படும் தேதி எது?

அ) டிசம்பர் 01



ஆ) டிசம்பர் 02 ☑

இ) டிசம்பர் 10

ஈ) டிசம்பர் 14

✓ சர்வதேச அடிமைமுறை ஒழிப்பு நாள் (International Day for the Abolition of Slavery) ஐநா பொது அவையால்

அறிவிக்கப்பட்டு ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.2 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த நாள் முதன்முதலில், கடந்த 1986ஆம் ஆண்டு கடைப்பிடிக்கப்பட்டது.

---

8. இந்தியாவில் தேசிய பால் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ) நவம்பர் 26 ☑



ஆ) நவம்பர் 30

இ) டிசம்பர் 15

ஈ) டிசம்பர் 26

✓ இந்திய 'வெண்மைப்புரட்சியின் தந்தை'யான Dr வர்கீஸ் குரியனின் பிறந்தநாளைக்குறிக்கும் வகையில் ஆண்டு தோறும் நவ.26 அன்று தேசிய பால் நாள் கொண்டாடப் –படுகிறது. பால் உற்பத்தியில் உலகளவில் ஐம்பதாவது இடத்திலிருந்த இந்தியாவை, சில பத்தாண்டுகளிலேயே மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக மாற்றிய உலகின் மிகப்பெரிய பால் வளர்ச்சித்திட்டமான 'Operation Flood'ஐ உருவாக்கியவர் Dr வர்கீஸ் குரியன் ஆவார்.

---

9. நடப்பாண்டில் (2021) வரும் சர்வதேச மாற்றுத்திறனா –ளிகள் நாளுக்கான கருப்பொருள் என்ன?

அ) Empowering persons with disabilities

ஆ) Leadership and participation of persons with disabilities toward an inclusive, accessible and sustainable post–COVID–19 world ☑

இ) Transformation towards sustainable and resilient society for all

ஈ) Ensuring inclusiveness and equality

✓ மக்கள் அனைவரும் மாற்றுத்திறனாளிகளின் பிரச்சனைகளைப் புரிந்துகொள்வதற்கும், அவர்களுக்கு மேன்மையும், உரிமைகளும் வழங்கப்படவேண்டும் என்ற நோக்கத்துக்குமாக ஐநா அவை ஆண்டுதோறும் டிச.3 அன்று சர்வதேச மாற்றுத்திறனாளிகள் நாளை அனுசரிக்கிறது. 1992ஆம் ஆண்டு டிச.3 அன்று ஐநா இந்நாளை அறிவித்தது.

✓ நடப்பாண்டில் (2021) வரும் இந்த நாளுக்கான கருப் பொருள், "Leadership and participation of persons with disabilities toward an inclusive, accessible and sustainable post–COVID–19 world" என்பதாகும்.

---

10. தேசிய மாணவர் படையின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

அ) மும்பை

ஆ) புது தில்லி ☑



இ) முசோரி

ஈ) அகமதாபாத்

✓ தேசிய மாணவர் படை (NCC) என்பது இந்தியாவின் புது தில்லியில் தலைமையகத்தைக் கொண்டுள்ள இந்திய ஆயுதப்படைகளின் இளைஞர் பிரிவு ஆகும். NCC என்பது உலகின் மிகப்பெரிய சீருடை அணிந்த இளைஞர் அமைப்பாகும். இது சமீபத்தில் அதன் 73ஆவது ஆண்டு நிறைவை நவ.28 அன்று அனுசரித்தது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வங்கக் கடலில் உருவானது ஜாவத் புயல்!

வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்தது. அந்தமான் அருகே நிலைகொண்டிருந்த இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமானது புயலாக வலுப்பெறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியிருந்தது. இந்த புயலுக்கு ஜாவத் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்தப் புயலுக்கான பெயரை சவூதி அரேபியா வழங்கியுள்ளது.

இந்த நிலையில், மத்திய மேற்கு வங்கக்கடலில் ஜாவத் புயல் உருவானதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஜாவத் புயல் மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ளதாகவும், டிசம்பர் 5 ஆம் தேதி வடக்கு ஆந்திரா – ஒடிசா இடையே கரையைக் கடக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புயல் கரையைக் கடக்கும் போது மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசும் எனவும், கனமழை பெய்யும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

---

2. 14–வது சர்வதேச மெஷின் டூல்ஸ் கண்காட்சி

அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத்தில் 14–வது சர்வதேச மெஷின் டூல்ஸ் கண்காட்சியை அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இதுகுறித்து தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

"சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று (9.12.2021) அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் ACMEE 2021 14–வது சர்வதேச மெஷின் டூல்ஸ் கண்காட்சி நடைபெற்றது.

இதில் தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டு கண்காட்சியைத் தொடங்கி வைத்தனர். மேலும் கண்காட்சியில் இடம்பெற்று இருந்த பொருட்களைப் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வில், அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்."

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

3. இந்திய கலாசார திட்டத்துக்கு யுனெஸ்கோவின் இரட்டை விருது

தில்லியின் நிஜாமுதீன் பஸ்தி சமூகத்தினரின் கலாசார மரபுப் பாதுகாப்புத் திட்டத்துக்கு யுனெஸ்கோவின் 2 விருதுகள் கிடைத்துள்ளன.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சிறப்பான மரபுப் பாதுகாப்புத் திட்டம், நீடித்த வளர்ச்சிக்கான திட்டம் ஆகிய இரு பிரிவுகளின் கீழ் இந்தத் திட்டத்துக்கு யுனெஸ்கோவின் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மக்கள் – அரசு – தனியார் கூட்டணியின் மூலம் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் அபார வெற்றியடைந்துள்ள நிஜாமுதீன் பஸ்தி பாதுகாப்புத் திட்டம் யுனெஸ்கோ நடுவர்களை மிகவும் கவர்ந்துள்ளது.

மிகப் பெரிய சமூக–பொருளாதார சவால்களை எதிர்கொண்டாலும், பெண்கள், இளைஞர்கள் உள்ளிட்ட நிஜாமுதின் பஸ்தி சமூகத்தினரின் சுகாதாரம், கல்வி, நல்வாழ்வு ஆகியவற்றை இந்தத் திட்டம் மேம்படுத்தியிருக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லியில் பல நூற்றாண்டுகளாக வசித்து வரும் நிஜாமுதீன் பஸ்தி சமூகத்தினரின் கலாசார மரபைப் பாதுகாப்பதுடன், அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்காக பல்வேறு தன்னார்வ அமைப்புகளும் நகர நிர்வாகம், தொல்லியல் துறை ஆகியவையும் இணைந்து கடந்த 2007–ஆம் ஆண்டிலிருந்து இந்த திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

---

4. உதவித் தொகைகள், நலத் திட்ட உதவிகள் வழங்கும் வகையில் பத்திரிகை நல வாரியம் உருவாக்கம்: செய்தி துறை அமைச்சர் சாமிநாதன் தலைமையில் குழு அமைப்பு

பத்திரிகையாளர்களின் நலன் காக்கும் வகையில் பத்திரிகையாளர்நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் குழுவையும் அமைத்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தித் துறை செயலர் மகேசன் காசிராஜன் வெளியிட்ட அரசாணையில் கூறியிருப்பதாவது:

'உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதுடன், நல வாரிய உதவித் தொகைகள், நலத்திட்ட உதவிகள் அளிக்கும் வகையில் பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும்' என்று சட்டப்பேரவையில் செய்தித் துறை அமைச்சர் கடந்த செப்.6–ம் தேதி அறிவித்தார்.இதையடுத்து, பத்திரிகையாளர் நல வாரியம் அமைத்து ஆணையிடப்படுகிறது. நலிவுற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகளுடன், பின்வரும் நலத்திட்ட உதவிகள் நல வாரியம் மூலம் வழங்கப்படும். குறிப்பாக கல்வி உதவித் தொகையாக 10–ம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகள், 10–ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற ஆண், பெண் குழந்தைகள், 11–ம்வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகளுக்கு ரூ.1,000 வழங்கப்படும்.

மேலும், 12–ம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தைகள், 12–ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன், மகள், முறையான பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூ.1,500, விடுதியில் தங்கி பட்டப்படிப்பு படிப்பவர்களுக்கு ரூ,1,750,முறையான பட்ட மேற்படிப்பு பயில்பவர்களுக்கு ரூ.2,000, விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு ரூ.3,000, தொழில்நுட்ப பட்டப் படிப்புக்கு ரூ.2,000, விடுதியில் தங்கிப் படிப்பவர்களுக்கு ரூ.4,000, தொழில்நுட்ப பட்ட மேற்படிப்பு படித்தால் ரூ.4,000, விடுதியில் தங்கிப் படித்தால் ரூ.6,000, ஐடிஐ, பாலிடெக்னிக் படிப்பவர்களுக்கு ரூ.1,000,விடுதியில் தங்கி படித்தால் ரூ.1,200வழங்கப்படும்.

திருமண உதவித் தொகை

இதுதவிர, திருமணத்துக்கு ரூ.2,000, மகப்பேறுக்கு ரூ.6,000,கருக்கலைப்பு, கருச்சிதைவுக்கு ரூ.3,000, கண் கண்ணாடிக்குரூ.500, இயற்கை மறைவு உதவித்தொகையாக ரூ.50 ஆயிரம், ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.5ஆயிரம் வழங்கப்படும்.

மேலும், பத்திரிகையாளர் நல வாரிய உதவித் திட்டங்களை பரிசீலித்து செயல்படுத்த செய்தித் துறை அமைச்சரை தலைவராகவும், 7 பேரை அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும்,6 பேரை அலுவல் சாரா உறுப்பினர்களாகவும் கொண்ட குழுஅமைக்கப்படும்.

விளம்பரக் கட்டணத்தில்..

நல வாரியத்துக்கு நிதி ஆதாரம் திரட்ட, அரசு விளம்பரங்களுக்கான விளம்பர கட்டணத்தில் 1 சதவீத தொகை, நல வாரியத்துக்கு வழங்கப்படும். நடைமுறையில் உள்ள பத்திகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழு கலைக்கப்பட்டு, நல வாரிய உதவித் திட்டங்களுக்கு அமைக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்டு புதிய பரிசீலனைக் குழு அமைக்கப்படும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் நீதிமன்ற உத்தரவின்படி, அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு ஊடக மன்றத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

5. சிபிஐ, அமலாக்க துறைகளின் – இயக்குநர் பதவிக் காலத்தை 5 ஆண்டாக நீட்டிக்கும் மசோதா :

மத்திய புலனாய்வு அமைப்பு களான சிபிஐ, அமலாக்கத் துறை இயக்குநர்களின் பதவிக் காலம் 2 ஆண்டுகளாக இருந்தது. அந்த பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாக நீட்டிக்க கடந்த நவம்பர் 14–ம் தேதி அவசர சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன.

இந்த அவசர சட்டங்களுக்கு மாற்றாக மசோதாக்கள் மக்கள வையில் நேற்று அறிமுகம் செய்யப் பட்டது. மத்திய பணியாளர் நலத் துறை இணை யமைச்சர் ஜிதேந்திர சிங் இரு மசோதாக்களையும் தாக்கல் செய்தார்.

இந்த மசோதாக்களுக்கு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். காங்கிரஸ் எம்.பி. சசி தரூர் கூறும்போது, "உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மீறி சிபிஐ, அமலாக்கத் துறை இயக்குநர்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது" என்று குற்றம் சாட்டினார்.

திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. சவுகதா ராய் கூறும்போது, சிபிஐ, அமலாக்கத் துறையை மத்திய அரசு கைப்பாவையாக பயன்படுத்தி வருகிறது. இரு அமைப்புகளையும் ஏவி எதிர்க்கட்சி களை மத்திய அரசு பழிவாங்கி வருகிறது. இதன் ஒரு பகுதியாக இயக்குநர்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது" என்று குற்றம் சாட்டினார்.

மேலும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.பி.க்கள் சுரேஷ், ஆதிர் ரஞ்சன் சவுத்ரி உள்ளிட்டோரும் மசோதாக் களுக்கு எதிராக பேசினர். –பிடிஐ

---

6. முன்மாதிரி முயற்சியாக ஆளில்லா விமான கழகம்: அரசாணை வெளியீடு

தமிழகத்தில் ஆளில்லா விமான (ட்ரோன்) கழகம் தொடங்குவதற்கான அரசாணையை உயர்கல்வித்துறை முதன்மைச் செயலர் டி.கார்த்திகேயன் பிறப்பித்துள்ளார்.

தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் 2021–2022–ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் உரையில், புதிய முன்மாதிரி முயற்சியாக 'ஆளில்லா விமானங்களுக்கென (ட்ரோன்), தமிழ்நாடு 'ஆளில்லா விமான கழகம்' ஒன்று அண்ணாபல்கலைகழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனம் (எம்ஐடி) உடன் இணைந்து தொடங்கப்படும். இந்த நிறுவனம், தமிழ்நாடு மட்டுமல்லாது, பிற மாநிலங்களிலும் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த முகமைகள் ஆளில்லாத விமானங்களை பயன்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும்' எனத் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், ஆளில்லா விமான கழகம் தொடங்குவதற்கான அரசாணையை உயர்கல்வித்துறை முதன்மைச் செயலர் டி.கார்த்திகேயன் பிறப்பித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது: அண்ணாபல்கலைகழகத்தின் சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் (எம்ஐடி) இணைந்து தமிழகத்தை ட்ரோன் தலைநகராக மாற்ற ஆளில்லா விமான கழகம் உருவாக்கப்படுகிறது.

இந்த கழகத்தின் தலைவராக உயர்கல்வித்துறை செயலர் செயல்படுவார். மேலாண்மை இயக்குனராக ஐஏஎஸ் அதிகாரி ஒருவரும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, குடிநீர் வழங்கல் துறை, நகராட்சி நிர்வாகம், தொழில்நுட்ப கல்வி இயக்குநர், உட்பட 8 போர் உறுப்பினர்களா இருப்பர். முதல்கட்டமாக, ஆளில்லா விமான கழகத்துக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

7. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவை– தமிழகத்திற்கு விருது வழங்கினார் ஜனாதிபதி

மாற்றுத்திறனாளிகள் அதிகாரம் பெற சிறப்பாகப் பணியாற்றிய தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் மாநில/மாவட்ட நிர்வாகங்கள் போன்றவற்றிற்கு மத்திய அரசின் விருதுகள் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் 2020ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கும் விழா இன்று டெல்லியில் நடைபெற்றது.

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கான அதிகாரமளிப்புத் துறை சார்பில் டெல்லி விக்யான் பவனில் நடைபெற்ற 'சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின' சிறப்பு நிகழ்ச்சியில் இந்த விருதுகளை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

இந்தியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை வழங்கியமைக்காக தமிழகம் முதல் மாநிலமாக தேர்வு செய்யப்பட்டு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் விருது வழங்கினார். விருதினை தமிழக அரசு சார்பில் அமைச்சர் பி.கீதா ஜீவன் பெற்றுக்கொண்டார்.

மாற்றுத் திறனாளிகள் உரிமையேற்றத்திற்கான தேசிய விருதுகள் தமிழகத்தை சேர்ந்த 6 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டன. மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு சேவைகளை வழங்குவதில் சிறந்த மாவட்டமாக சேலம் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்பட்டது.

விழாவில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் வீரேந்திர குமார் மற்றும் இணை அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

1. மீன்வள அமைச்சகத்தின் அண்மைய தரவுகளின்படி, 1990–2018 வரை கடற்கரையோரத்தில் 41% அரிப்புக்கு உட்பட்ட மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) குஜராத்



இ) கேரளா ☑

ஈ) மகாராஷ்டிரா

✓ 1990–2018ஆம் ஆண்டு வரையிலான செயற்கைக்கோள் தரவுகளின்படி, கேரளாவின் 41 சதவீத கடலோரப்பகுதி பல்வேறு அளவிலான அரிப்புக்கு உட்பட்டுள்ளது. இந்தத் தகவலை மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபாலா மக்களவை –யில் தெரிவித்தார்.

---

2. '2021 – இந்தியப்பெருங்கடல் மாநாட்டை' நடத்தவுள்ள நகரம் எது?

அ) புது தில்லி

ஆ) கொழும்பு



இ) அபுதாபி ☑

ஈ) டோக்கியோ

✓ ஐந்தாவது இந்தியப்பெருங்கடல் மாநாடு – 2021 டிச.4–5 ஆகிய தேதிகளில் அபுதாபியில் நடைபெறவுள்ளது.

✓ வெளியுறவு அமைச்சர் S ஜெய்சங்கர் இந்த மாநாட்டில் உரையாற்றுகிறார். இந்தியப் பெருங்கடல் மாநாட்டின் கருப்பொருள் "Indian Ocean: Ecology, Economy, Epidemic". தொடக்கவுரையை இலங்கை அதிபர் கோத்தபய ராஜபக்ச ஆற்றுவார். மாலத்தீவுகள், பிஜி மற்றும் பிற நாடுகளின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

---

3. பொலிவுறு நகர திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான புதிய காலக்கெடு என்ன?

அ) 2022



ஆ) 2023 ☑

இ) 2025

ஈ) 2026

✓ COVID தொற்றுநோய் மற்றும் பிற காரணங்களால் மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகம் பொலிவுறு நகர திட்டத்தைச்செயல்படுத்துவதற்கான காலக்கெடுவை 2023 ஜூன் வரை நீட்டித்துள்ளது.

✓ முந்தைய காலக்கெடுவின்படி, நகரங்கள் பொலிவுறு நகர திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் தங்கள் திட்டங்களை முடிக்க எதிர்பார்க்கப்பட்டது. 2016 ஜனவரி முதல் 2018 ஜூன் வரை 4 சுற்று போட்டிகள் மூலம் நூறு ஸ்மார்ட் நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

---

4. அண்மையில் வெடித்துச் சிதறிய செமேரு எரிமலை உள்ள நாடு எது?

அ) ஜப்பான் **ஆ) இந்தோனேசியா ☑**

இ) பிலிப்பைன்ஸ் ஈ) ஆஸ்திரேலியா

✓ இந்தோனேசியாவின் ஜாவா தீவில் உள்ள செமரு மலை, சமீபத்தில் வெடித்துச்சிதறியது. இவ்வெரிமலை வெடித்துச் சிதறியதில் குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்துள்ளனர்.

---

5. மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகமானது உள்ளூர் வணிகங்கள் மற்றும் சுய உதவிக்குழுக்களை மேம்படுத்த எந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

அ) அமேசான்

ஆ) பிளிப்கார்ட் ☑



இ) ஸ்னாப்டீல்

ஈ) ஜியோமார்ட்

✓ பெண்கள் தலைமையிலான உள்ளூர் வணிகங்கள் மற்றும் சுயஉதவி குழுக்களை மேம்படுத்துவதற்காக பிளிப்கார்ட் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

✓ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் சிறு வணிக பிரிவுகள் மற்றும் சுய உதவிக்குழுக்களை இ–காமர்ஸ் பகுதிக்குள் கொண்டுவர எண்ணுகிறது. இந்த ஒப்பந்தம் தீனதயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கம் – DAY–NRLM உடன் இணைக்கப்பட்டுள்ளது.

---

6. நிதி அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, நாடு முழுவதும் உள்ள ATM'களின் எண்ணிக்கை என்ன?

அ) 50000

ஆ) 1.1 லட்சம்



இ) 2 .1 லட்சம் ☑

ஈ) 5.1 லட்சம்

✓ 2021 செப்டம்பர் இறுதி வரை நாடு முழுவதும் உள்ள ATM'களின் எண்ணிக்கை 2.13 லட்சத்துக்கும் அதிகமாக இருப்பதாக மத்திய நிதி அமைச்சகம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தது. 47 சதவீதத்திற்கும் அதிகமான ஏடிஎம்கள் கிராமப்புற மற்றும் புறநகர்ப்புறங்களில் உள்ளன.

✓ ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, திட்டமிடப்பட்ட வணிக வங்கிகள் 2021 செப்டம்பர் வரை 2.13 லட்சம் ATM'களை நிறுவியுள்ளன. இதுதவிர, 27,837 ஒயிட் லேபிள் ATM'களும் நிறுவப்பட்டுள்ளன.

---

7. ஆத்மநிர்பார் கிரிஷக் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ள மாநிலம் எது?

அ) குஜராத்



ஆ) உத்தர பிரதேசம் ☑

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ உத்தர பிரதேச அரசு 2021–22 முதல் மாநிலத்தில் ஆத்ம நிர்பார் கிரிஷக் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இத்திட்டத்தின்கீழ் அடுத்த 3 ஆண்டுகளில் மாநிலத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் 1475 உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் உருவாக்கப்படும்.

---

8. 'இ-சவாரி இந்தியா எலக்ட்ரிக் பேருந்து கூட்டணி'யை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) NITI ஆயோக் ☑

ஆ) NHAI

இ) எரிசக்தி திறன் சேவைகள் லிட்

ஈ) NTPC லிட்



✓ அரசாங்க மதியுரையகமான NITI ஆயோக், இந்தியாவில் இ-பேருந்து பற்றிய அறிவைப் பகிர்ந்துகொள்வதற்காக, 'e-Sawaari India Electric Bus Coalition'ஐ அறிமுகப்படுத்துவதாக சமீபத்தில் அறிவித்தது.

✓ கன்வர்ஜென்ஸ் எனர்ஜி சர்வீஸ் லிமிடெட் (CESL) மற்றும் உலக வளங்கள் நிறுவனம், இந்தியா ஆகியவற்றுடன் இணைந்து, டிரான்ஸ்ஃபார்மேடிவ் அர்பன் மொபிலிட்டி இனிஷியேட்டிவ் ஆதரவுடன் கூட்டணி தொடங்கப்பட்டது.

---

9. நடப்பாண்டுக்கான மனித உரிமைகள் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Equality, Reducing Inequalities, Advancing Human Rights ☑

ஆ) The ABCs of L.G.B.T.Q.I.A.+

இ) What are Human Rights

ஈ) Advocates- Torchbearers of human rights

✓ மனித உரிமைகள் நாளானது ஒவ்வோர் ஆண்டும் டிச.10 அன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான (2021) கருப்பொருள் "Equality, Reducing Inequalities, Advancing Human Rights" என்பதாகும். ஐநா பொதுச்சபை 1948'இல் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது.

✓ மக்களின் சமூக, கலாச்சார மற்றும் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அனைவரின் நலனை உறுதிசெய்யவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது.

---

10. FIDE உலக சாம்பியன்ஷிப்பை வென்ற செஸ் வீரர் யார்?

அ) மேக்னஸ் கார்ல்சன் ☑

ஆ) விஸ்வநாதன் ஆனந்த்

இ) கோனேரு ஹம்பி

ஈ) நெபோம்னியாச்சி



✓ தற்போதைய உலக செஸ் சாம்பியனான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் தனது பட்டத்தை தக்கவைத்து துபாயில் நடந்த FIDE உலக சாம்பியன்ஷிப்பை வென்றார்.

✓ ஐக்கிய அரபு அமீரகத்தில் நடந்த துபாய் எக்ஸ்போ 2020 இல் நடந்த உலகளாவிய போட்டியை வெல்வதற்காக ஏழு புள்ளிகளைக் கடந்து ரஷ்யாவின் இயன் நெபோம்னியாச்-சியை கார்ல்சன் தோற்கடித்தார். இதன்மூலம் கார்ல்சன் தனது 5ஆம் உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அஞ்சு பாபி ஜார்ஜுக்கு உலக தடகள ஆண்டின் சிறந்த வீராங்கனை விருது

உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலம் வென்ற இந்திய வீராங்கனை அஞ்சு பாபி ஜார்ஜுக்கு உலக தடகள சம்மேளனம் சார்பில் ஆண்டின் சிறந்த வீராங்கனை விருது வழங்கப்பட்டுள்ளது.

இரண்டு முறை ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற அஞ்சு பாபி ஜார்ஜ் கடந்த 2003-இல் பாரிஸில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் நீளம் தாண்டுதலில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

இந்நிலையில் தடகளத்தில் அவர் ஆற்றிய சேவைக்காகவும், இந்தியாவில் இளம்பெண்கள் அதிகளவில் தடகளத்தில் ஈடுபட செய்தமைக்காவும், அவருக்கு ஆண்டு சிறந்த வீராங்கனை விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதைப் பெறும் இரண்டாவது வீராங்கனை அஞ்சு ஆவார். எத்தியோப்பாவின் டேரட்டு டுலு கடந்த 2019-இல் இவ்விருதைப் பெற்றார்.

தற்போது இந்திய தடகள சம்மேளனம் (ஏஎஃப்ஐ)-இன் மூத்த துணைத் தலைவராக பதவி வகித்து வருகிறார். கடந்த 2016-இல் அஞ்சு பாபி ஜார்ஜ் தடகள பவுண்டேஷனை தொடங்கி 13 இளம் சிறுமிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறார். இவர்களில் நீளம் தாண்டுதலில் வைஷலி சிங் 20 வயதுக்குட்பட்டோர் உலக தடகளத்தில் வெள்ளி வென்றார்.

இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டது மிகவும் மகிழ்ச்சி தருகிறது. இதன் மூலம் மகளிர் தடகளத்துக்கு மேலும் சேவை புரிய ஊக்கம் கிடைத்துள்ளது என்றார்.

---

2. அதிக கோல்கள்: ரொனால்டோ சாதனை

கால்பந்து விளையாட்டில் 800 கோல்கள் அடித்த முதல் வீரர் என்கிற சாதனையைப் படைத்துள்ளார் மான்செஸ்டர் யுனைடெட் கிளப்பைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ.

போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாடி வருகிறார். லண்டனில் நடைபெற்ற பிரீமியர் லீக் போட்டி ஒன்றில் ஆர்சனல் அணிக்கு எதிராக விளையாடி இரு கோல்கள் அடித்து 3-2 என தன்னுடைய அணி வெற்றி பெற உதவினார்.

இதன்மூலம் தன்னுடைய நாட்டுக்காகவும் கிளப்புக்காவும் விளையாடிய ஆட்டங்களில் 800 கோல்கள் அடித்து சாதனை படைத்துள்ளார். இந்த இலக்கை அடைந்த முதல் வீரர் என்கிற பெருமையை ரொனால்டோ பெற்றுள்ளார். 1095 ஆட்டங்களில் 801 கோல்களை அடித்துள்ளார் 36 வயது ரொனால்டோ. சர்வதேச ஆட்டங்களில் 115 கோல்களுடன் அதிக கோல்கள் அடித்த வீரர்களின் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளார்.

---

3. டிசம்பர்.5 – சர்வதேச தன்னார்வலர் தினம் மற்றும் உலக மண் தினம்.

---

4. தேசிய அளவில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துக்கு 4–வது இடம்

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக தரவரிசையில், தேசிய அளவிலான மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில், கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 4–வது இடத்தை பிடித்துள்ளது.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கடந்த 2020–ம் ஆண்டுக்கான இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகதரவரிசையில் 8–வது இடத்தைபெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம், நாட்டில் உள்ள 67 வேளாண் நிறுவனங்களில் 8–வது இடத்தையும், தேசிய அளவிலான மாநில வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் 4–வது இடத்தையும், தென்னிந்திய வேளாண்மைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே 2–வது இடத்தையும் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக பல்கலைக்கழக துணைவேந்தர் (பொறுப்பு) அ.சு.கிருஷ்ணமூர்த்தி கூறியது:

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சீரிய பயிற்சி வகுப்புகள் மூலம், மாணவர்கள் அளவிலான இளநிலை, முதுநிலை ஆராய்ச்சி ஊக்கத்தொகை எண்ணிக்கையைப் பெற்றதன் வாயிலாக கல்விப் பரிமாணத்தில் அதிக மதிப்பெண் பெற முடிந்தது. பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், இதை ஒரு சவாலாக ஏற்று ஆராய்ச்சிக் கட்டுரைகளை சீரிய முயற்சிகள் மற்றும் திட்டமிடல் மூலம் அதிகளவில் பிரசுரித்து நிதி ஆதாரங்களையும் பெருக்கியதன் மூலம் ஆராய்ச்சிப் பரிமாணத்தில் குறிப்பிட்ட மதிப்பெண் பெற முடிந்தது. இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு, பல்வேறு விருதுகளைப் பெற தீவிர ஊக்குவிப்பு அளிக்கப்பட்டது.

மேலும், வேளாண் விரிவாக்கத்தில் அதிகளவிலான செயல் விளக்கங்கள், வானொலி உரைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வழங்கப்பட்டன. இடுபொருள் வணிகர்கள், அரசு சாரா அமைப்பினர், தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியோருக்கு அதிக பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதிகளவிலான சர்வதேச மாணவர்களை ஈர்த்ததன் மூலம், மாணவர்களின் பன்முகத் தன்மையை அதிகரித்து, மதிப்பெண்களைக் கூட்ட முடிந்தது.

இந்த தரவரிசை மூலம் பல்கலைக்கழகம் நிதிகளை ஈர்ப்பதற்காகவும், இன்னும் கூடுதலாக சர்வதேச மாணவர்கள் சேர்க்கைக்காகவும், கூட்டு ஆராய்ச்சிக்கான கூடுதல் வழிகளுக்காகவும் உலக அரங்கில் தன்நிலையை மேம்படுத்தவும் முடியும். இனிவரும் நாட்களில் பல்கலைக்கழகம் முதல் 3 இடங்களில் இடம்பிடிக்க முனைப்புடன் செயல்பட்டு உச்சத்தை எட்டும்" என்றார்.

---

5. ரோபோக்கள் இனிமேல் குழந்தைகளை பெற்றெடுக்கும்: உலகின் முதல் உயிருள்ள ரோபோக்களை உருவாக்கி அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை

உலகின் முதல் உயிருள்ள ரோபோவை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்த ரோபோக்கள் தங்களை போன்றே குழந்தைகளை பெற்றெடுக்கின்றன. அமெரிக்காவின் வெர்மாண்ட், டப்ட்ஸ்,ஹார்வர்டு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் பல ஆண்டுகளாக உயிரி ரோபோ ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2020–ம் ஆண்டில் உலகின் முதல் உயிருள்ள ரோபோவை அவர்கள் உருவாக்கினர்.

ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஜீனோபஸ் லேவிஸ் என்ற தவளை இனத்தின் ஸ்டெம் செல்களில் இருந்து உருவாக்கியதால் இதற்கு 'ஜீனோபாட்ஸ் 1.0' என்று பெயரிடப்பட்டது. இவை ஒரு மில்லி மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்டவை. பேக் மேன் வடிவிலான இந்த ரோபோக்களால் நகர முடியும். நீந்த முடியும்.

தொடர் ஆராய்ச்சியின் பலனாக கடந்த மே மாதம் ஜீனோபாட்ஸ் 2.0 ரோபோ உருவாக்கப்பட்டது. சில நாட்களுக்கு முன்பு ஜீனோபாட்ஸ் 3.0 ரோபோ குறித்த ஆய்வறிக்கையை அமெரிக்க விஞ்ஞானிகள் வெளியிட்டனர். அதில் கூறியிருப்பதாவது:

உலகின் பல்வேறு நாடுகளில் இரும்பு, பிளாஸ்டிக்கால் ரோபோக்கள் தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் இருந்து வேறுபட்டு உயிரி ரோபோக்களை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றிருக்கிறோம். இப்போது ஜீனோபாட்ஸ் 3.0 ரோபாவை உருவாக்கியுள்ளோம். இவற்றால் தங்களைப் போன்றே குழந்தைகளை பெற்றெடுக்க முடியும். இந்த ரோபோ ஆராய்ச்சியின் மூலம் விபத்தில் படுகாயமடைந்த மனிதர்களை குணப்படுத்த முடியும். பிறவி குறைபாடுகள், புற்றுநோயை குணப்படுத்த முடியும். முதுமை பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் என்று நம்புகிறோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஜீனோபாட்ஸ் 3.0 ரோபாவை உருவாக்கியவிஞ்ஞானிகள் குழுவில் இடம்பெற்றுள்ள டப்ட்ஸ்பல்கலைக்கழக விஞ்ஞானி பிளாகிஸ்தான் கூறும்போது, "ஆய்வகத்தில் ஒரு ஜீனோபாட்ஸ் ரோபோ குழந்தையை பெற்றெடுக்க 5 நாட்கள் ஆகிறது. இதுவும் அச்சு, அசல் ஜீனோபாட்ஸ் ரோபோ போன்றே இருக்கிறது. எதிர்காலத்தில் அணுக் கழிவு, கடலில் சேகரமாகும் மைக்ரோபிளாஸ்டிக் கழிவு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு ஜீனோபாட்ஸ் ரோபோவை பயன்படுத்த முடியும்" என்றார்

ஆபத்தான ரோபோ?

அமெரிக்காவின் டூக் பல்கலைக்கழக பேராசிரியர் நிடா பாராஹனி கூறும்போது, "ஜீனோபாட்ஸ் ரோபோவால் தன்னைப் போன்றே குழந்தையை பெற்றெடுக்க முடியும் என்றால் அது ஆபத்தானது. இவை ஆய்வகத்தில் இருந்து தப்பி பூமியில் பல்கிப் பெருக வாய்ப்புள்ளது. எதிர்காலத்தில் இவற்றின் இனப்பெருக்கம், செயல்பாடுகள் எவ்வாறு இருக்கும் என்பதை கணிக்க முடியாது. செயற்கையாக உருவாக்கப்பட்ட உயிரி ரோபாவால் மனித குலத்துக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே ஆபத்தான ஆராய்ச்சியை

நிறுத்த வேண்டும். மனித குலத்தின் நன்மைக்காக அனைத்து உயிரி ரோபோக்களையும் அழித்துவிட வேண்டும்" என்றார்.

---

6. பாரதியார் நினைவு நூற்றாண்டு: திருவல்லிக்கேணியில் 44 வாரங்களுக்கு தொடர் நிகழ்ச்சி

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

பாரதியார் மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளை போற்றிடும் வகையில் 14 அறிவிப்புகளை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். ஓராண்டுக்கு சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித்துறையின் சார்பில் நடத்தப்படும் என்றும் அறிவித்தார்.

இதனை செயல்படுத்தும்விதமாக சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில் 4–ந் தேதி (இன்று) தொடங்கி 44 வாரங்களுக்கு தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, பள்ளிக்கல்வித்துறை, வானவில் பண்பாட்டு மையம் மற்றும் பாரதி புகழ் பாடும் பல்வேறு தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து தொடர்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இந்த நிகழ்ச்சி தொடங்கி நடைபெறும்.

முதல் நிகழ்ச்சியான தமிழ்நாடு இசைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் பாரதியின் புகழ்பாடும் நாதஸ்வர இசை நிகழ்ச்சியை 4–ந் தேதி (இன்று) மாலை 5 மணிக்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைக்கிறார்.

---

1. அமலாக்க நிறுவனமான வருவாய் புலனாய்வு இயக்குநரகம், பின்வரும் எந்த அமைப்பின்கீழ் உள்ளது?

அ) மத்திய மறைமுக வரிகள் & சுங்க வாரியம் ☑

ஆ) செபி

இ) அமலாக்க இயக்குநரகம்

ஈ) மத்திய நேரடி வரிகள் வாரியம்

✓ வருவாய் புலனாய்வு இயக்குநரகம் என்பது மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) கீழ், கடத்தல் எதிர்ப்பு விஷயங்களில் இந்திய அரசாங்கத்தின் உளவுத்துறை மற்றும் அமலாக்க நிறுவனம் ஆகும்.

✓ மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், 64ஆவது 'வருவாய் புலனாய்வு இயக்குநரகம் நிறுவன நாளில்' உரையாற்றினார். 2020-21ஆம் ஆண்டில் மத்திய கிழக்கிலிருந்து மியான்மருக்கு தங்கக்கடத்தல் நடந்ததாக DRI அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

---

2. 2021'இல் டேவிஸ் கோப்பையை வென்ற நாடு எது?

அ) ஸ்பெயின்

ஆ) ரஷ்யா ☑

இ) குரோஷியா

ஈ) செர்பியா



✓ டேனியல் மெட்வெடேவின் சிறப்பான ஆட்டத்திற்குப்பிறகு, குரோஷியாவை வீழ்த்தி 2021'இல் ரஷ்யா டேவிஸ் கோப்பை பட்டத்தை வென்றது. 25 வயதான அவர், மரின் சிலிக்கை இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் தோற்கடித்து, 2006ஆம் ஆண்டுக்குப் பிறகு ரஷ்யாவுக்கு டேவிஸ் கோப்பையை முதன்முறையாக வென்று தந்து உள்ளார். ரஷ்யா தனது முதல் டேவிஸ் கோப்பையை கடந்த 2002இல் வென்றது.

---

3. 'கிரேட்டர் திப்ராலாந்து' என்ற பெயரில் பழங்குடியின சமூகங்களுக்கு தனி மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்று எந்த மாநிலத்தில் உள்ள பழங்குடி அமைப்புகள் கோரி வருகின்றன?

அ) சிக்கிம்

ஆ) திரிபுரா ☑

இ) நாகாலாந்து

ஈ) அருணாச்சல பிரதேசம்



✓ திரிபுரா மாநிலத்திலுள்ள பல பழங்குடியின அமைப்புகள் இப்பகுதியில் உள்ள பழங்குடியினருக்கு தனி மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கும் நோக்கில் இணைந்துள்ளன. அரசியலமைப்பின் இரண்டு மற்றும் மூன்றாவது பிரிவின்கீழ் திரிபுராவில் உள்ள பழங்குடியின சமூகத்தினருக்காக 'கிரேட்டர் திப்ராலாந்து' என்ற தனி மாநிலத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

✓ திரிபுரா மாநிலத்தில் அறிவிக்கப்பட்ட 19 பழங்குடியினரில், திரிபுரிஸ் (திப்ரா & திப்ராசா என்றும் அறியப்படுகிறது) மிகப்பெரிய பழங்குடியினமாகும்.

---

4. நாடாளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழு தொடங்கி எத்தனை ஆண்டுகள் நிறைவாகியுள்ளன?

அ) 50

ஆ) 60

இ) 75

ஈ) 100 ☑



✓ நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவின் நூற்றாண்டு விழாவில் மேதகு குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் உரையாற்றினார். மக்கள் மன்றத்திற்கு நிர்வாகப் பொறுப்புடையவர்களாக அதிகாரிகள் இருப்பதை பொதுக் கணக்குக் குழு உள்ளிட்ட நாடாளுமன்றக் குழுக்கள் உறுதி செய்கின்றன என்று குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கூறினார்.

---

5. ஐந்து பேர் கொண்ட மத்திய விஸ்டா மேற்பார்வைக் குழுவின் தலைவர் யார்?

அ) ரத்தன் பி வாடல் ☑

ஆ) விவேக் சிங்

இ) அஜய் பாண்டே

ஈ) சுபாஷ் சந்திர கார்க்



✓ 20,000 கோடி மதிப்பிலான இந்தத் திட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நேரடியாகக் கண்காணிப்பதற்காக மத்திய விஸ்டா மேற்பார்வைக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின்படி, ஐந்து பேர் கொண்ட மத்திய விஸ்டா மேற்பார்வைக் குழுவின் தலைவராக முன்னாள் நிதிச் செயலர் ரத்தன் பி வாடல் நியமிக்கப்பட்டுள்ளார். இணைச் செயலாளர், MoHUA அக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.

---

6. BRICS திரைப்பட விழாவில் "சிறந்த நடிகர்" விருது பெற்றவர் யார்?

அ) ரஜினிகாந்த்

ஆ) தனுஷ் ☑

இ) குரு சோமசுந்தரம்

ஈ) சிவகார்த்திகேயன்



✓ வெற்றிமாறன் இயக்கிய தமிழ்த் திரைப்படமான 'அசுரன்' படத்தில் நடித்ததற்காக இந்திய நடிகர் தனுஷ் BRICS திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான (ஆண்) விருது பெற்றார். இந்த ஆண்டு (2021) அதே படத்திற்காக சிறந்த நடிகருக்கான தேசிய விருதையும் அவர் வென்றார்.

✓ இத்திரைப்படம் இதுவரை மூன்று தேசிய விருதுகளை வென்றுள்ளது. பிரேசிலிய திரைப்படமான 'ஆன் வீல்ஸ்' திரைப்படத்தில் நடித்ததற்காக லாரா போல்டோரினி சிறந்த நடிகருக்கான (பெண்) விருது பெற்றார்.

---

7. 'வித்யா தீவேனா' என்னும் கல்வி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிற மாநிலம் எது?

அ) குஜராத்



ஆ) ஆந்திர பிரதேசம் ☑

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ ஜெகன் அண்ணா வித்யா தீவேனா திட்டத்தின் கீழ், பட்டியலினத்தவர், பழங்குடியினர் மற்றும் பிற சிறுபான்மை பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் கல்விக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படுகிறது.

✓ 'ஜெகனண்ணா வித்யா தீவேனா' கல்வி உதவித் திட்டத்தின் மூன்றாவது தவணையாக ஆந்திர பிரதேச மாநில அரசு ₹686 கோடியை வழங்கியுள்ளது. 11 லட்சம் மாணவர்களின் தாய்மார்களின் கணக்கில் இத்தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது.

---

8. ஹிந்தி நடிகர் சஞ்சய் தத்தை அதன் பொன்விழா கொண்டாட்டங்களுக்கான விளம்பரத்தூதராக நியமனம் செய்துள்ள மாநிலம் எது?

அ) சிக்கிம்



ஆ) அருணாச்சல பிரதேசம் ☑

இ) குஜராத்

ஈ) அஸ்ஸாம்

✓ அருணாச்சல பிரதேசத்தின் 50வது ஆண்டை குறிக்கும் பொன்விழா கொண்டாட்டங்களுக்கான விளம்பரத் தூதராக ஹிந்தி நடிகர் சஞ்சய் தத்தை அருணாச்சல பிரதேச மாநில அரசு அறிவித்துள்ளது.

✓ திரைப்படத் தயாரிப்பாளரான ராகுல் மித்ராவை தனது விளம்பர ஆலோசகராக அம்மாநிலம் அறிவித்துள்ளது. இதற்கான அறிவிப்பை அருணாச்சல பிரதேச மாநில முதலமைச்சர் பேமா கந்து வெளியிட்டார்.

---

9. வங்காளதேசம் கீழ்காணும் எந்நாட்டுடன் இணைந்து வருடாந்திர "Cooperation Afloat Readiness and Training (CARAT)" என்ற கடல்சார் பயிற்சியை மேற்கொள்கிறது?

அ) அமெரிக்கா ☑



ஆ) இந்தியா

இ) ஜப்பான்

ஈ) சீனா

✓ வங்காளதேச கடற்படை மற்றும் அமெரிக்க இராணுவ வீரர்கள் ஆண்டுதோறும் வருடாந்திர "Cooperation Afloat Readiness and Training (CARAT)" என்ற கடல்சார் பயிற்சியைத் தொடங்கினர். இந்தப் பயிற்சி வழக்கமாக வங்காள விரிகுடாவில் மேற்கொள்ளப்படுகிறது.

✓ வங்காளதேச கடற்படை 2011 முதல் CARAT பயிற்சியில் பங்கேற்று வருகிறது. இது பகிரப்பட்ட கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய கடற்படைகளுக்கு இடையிலான கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

10. பின்வரும் எவ்வாண்டில் G20 தலைமைப்பொறுப்பை இந்தியா ஏற்கவுள்ளது?

அ) 2022



ஆ) 2023 ☑

இ) 2032

ஈ) 2033

✓ இந்தியா சமீபத்தில் இந்தோனேசியா, இத்தாலி மற்றும் இந்தியாவை உள்ளடக்கிய 'G20 Troika'இல் இணைந்தது.

✓ G20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இந்தோனேஷியா, 2022 அக்.30–31 ஆகிய தேதிகளில் நடைபெறும் G20 தலைவர்கள் உச்சிமாநாடு முடிவடைந்தபின் ஆண்டுமுழுவதும் G20 கூட்டங்களைக் கூட்டவுள்ளது.

✓ "Recover Together Recover Stronger" என்பது இந்த ஆண்டு உச்சிமாநாட்டின் கருப்பொருள் ஆகும். இந்தியா இந்தோனேசியாவிடமிருந்து G20'இன் தலைமைப் பொறுப்பை ஏற்றபின் 2023ஆம் ஆண்டில் இந்தியாவில் முதல்முறையாக G20 தலைவர்கள் உச்சி மாநாடு நடைபெறும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சென்னை வீரர் சபரி டபிள்யூபிசி சாம்பியன்

உலக குத்துச்சண்டை கவுன்சில் (டபிள்யூபிசி) முதல் முறையாக நடத்திய டபிள்யூபிசி இந்தியா வெல்டர்வெயிட் சாம்பியன்ஷிப் போட்டியில் சென்னை வீரர் சபரி (24) சாம்பியன் ஆனார்.

தொழில்முறை ரீதியிலான இப்போட்டியில் 8 சுற்றுகள் கொண்ட இறுதிச் சுற்றில் அவர் சண்டீகரைச் சேர்ந்த அனுபவமிக்க வீரரான ஆகாஷ்தீப் சிங்கை (27) வீழ்த்தினார். போட்டி முடிவானது 76–76, 79–73, 79–73 என்ற பெரும்பான்மை புள்ளிகள் அடிப்படையில் அவருக்கு சாதகமாக அமைந்தது. தற்போது சாம்பியன் ஆகியிருக்கும் சபரி, அவ்வப்போது இந்தியாவின் இதர போட்டியாளர்களுடன் மோதி தனக்கான பட்டத்தை தக்க வைக்க வேண்டும்.

கடந்த ஆண்டு ஜனவரியில் தனது தொழில்முறை குத்துச்சண்டையை தொடங்கிய சபரி, முந்தைய மோதல்களில் 4 வெற்றிகளையும், 1 தோல்வியையும் பதிவு செய்துள்ளார். அவருடன் மோதி தோல்வியை சந்தித்த ஆகாஷ்தீப் கடந்த 3 ஆண்டுகளில் 8 வெற்றிகள், 1 தோல்வியை பதிவு செய்துள்ளவர்.

இதேபோட்டியில் ஆசிய சில்வர் லைட்வெயிட் பட்டத்துக்கான பிரிவில் இந்தியாவின் கார்த்திக் சதீஷ் குமார் – இந்தோனேசியாவின் ஹீரோ டிடோவை தோற்கடித்து பட்டம் வென்றார். இதில் அவர் 80–72, 79–73, 79–73 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றார். இத்துடன் 8 ஆட்டங்களில் பங்கேற்றுள்ள கார்த்திக், அனைத்திலும் வெற்றியை பதிவு செய்துள்ளார். டபிள்யூபிசி ரேங்கிங்கில் தற்போது 4–ஆவது இடத்தில்

இருக்கும் அவருக்கு இந்த வெற்றி முன்னேற்றத்தை அளிக்கும்.

---

2. அந்நிய செலாவணி கையிருப்பில் இந்தியா 4–ம் இடம் :

அந்நிய செலாவணி தொடர்பான கேள்விக்கு மத்திய நிதித் துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி நேற்று மக்களவையில் கூறியதாவது.

கடந்த நவம்பர் 19–ம் தேதி நிலவரப்படி இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 640.4 பில்லியன் டாலராக உள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பை அதிகம் கொண்டிருக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 4–ம்இடத்தில் உள்ளது. சீனா, ஜப்பான்சுவிட்சர்லாந்து ஆகியவை முதல் 3 இடங்களில் உள்ளன.

2014–15 முதல் 2020–21 வரையிலான ஏழு ஆண்டுகளில் பெட்ரோலியப் பொருட்கள் மூலம் ரூ.16.7 லட்சம் கோடி கலால் வரி பெறப்பட்டுள்ளது. 2013–14–ல் பெட்ரோல் மீதான கலால் வரி லிட்டருக்கு ரூ.9.2, டீசலுக்கு ரூ.3.46 ஆக இருந்தது. தற்போது இது முறையே ரூ.27.9,ரூ.21.80 ஆக உள்ளது என அவர் தெரிவித்தார்.

---

1. எந்த மாநிலத்தின் சுற்றுலாத் துறையானது STREET (Sustainable, Tangible, Responsible, Experiential, Ethnic, Tourism) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது?

அ) தமிழ்நாடு

ஆ) கோவா

இ) கேரளா ☑

ஈ) சிக்கிம்

✓ கேரள மாநில சுற்றுலாத்துறை அண்மையில் அதன் 7 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் STREET (Sustainable, Tangible, Responsible, Experiential, Ethnic, Tourism) திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டமானது பார்வையாளர்களுக்கு இந்த இடங்களில் கிடைக்கும் பல்வேறு வகையான சலுகைகளை அனுபவிக்க உதவும்.

✓ முதற்கட்டமாக கோழிக்கோடு கடலுண்டி, பாலக்காட்டில் திரிதாலா, பட்டிதாரா, கண்ணூரில் பினராயி, அஞ்சரக்கண்டி, கோட்டயத்தில் மறவந்துருத்து, மஞ்சிரா, காசர்கோட்டில் வலியபரம்பா, இடுக்கியில் காந்தளூர், வயநாட்டில் சேக்காடி ஆகிய இடங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

---

2. "காற்றுத்தரம் & வானிலை முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு" (SAFAR) என்பது எந்த நடுவண் அமைச்சகத்தின் முன்முயற்சியாகும்?

அ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

ஆ) புவி அறிவியல் அமைச்சகம் ☑

இ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

✓ புவி அறிவியல் அமைச்சகமானது "SAFAR" எனப்படும் "காற்றின் தரம் மற்றும் வானிலை முன்னறிவிப்பு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு" என்ற ஒரு பெரிய தேசிய முயற்சியை அறிமுகப்படுத்தியது. இது இந்தியாவின் பெருநகர நகரங்களுக்கு காற்றின் தரம் குறித்த குறிப்பிட்ட இருப்பிடத் தகவலை வழங்க உதவுகிறது.

✓ SAFAR'இன்படி, தேசிய தலைநகரில் ஒட்டுமொத்த காற்றுத்தரக்குறியீடு 'மிகவும் மோசமான' பிரிவில் 372 ஆக உள்ளது. சுழியத்திற்கும் 50க்கும் இடைப்பட்ட மதிப்பெண் 'நல்லது' எனவும், 51–100க்கு இடையிலான மதிப்பெண் 'திருப்திகரமானது' எனவும், 101 மற்றும் 200 இடையிலான மதிப்பெண் 'மிதமானது', 201 மற்றும் 300 இடையிலான மதிப்பெண் 'மோசமானது' எனவும், 301 மற்றும் 400 இடையிலான மதிப்பெண் 'மிகவும் மோசமானது' எனவும் மற்றும் 401 மற்றும் 500 இடையிலான மதிப்பெண் 'கடுமையானது' எனவும் கருதப்படுகிறது.

---

3. தேசிய சுகாதார கணக்குகள் (NHA) மதிப்பீட்டின்படி, 2017–18'இல் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசின் சுகாதார செலவினத்தின் பங்கு என்ன?

அ) 1.2%

ஆ) 1.35% ☑

இ) 1.75%

ஈ) 2.5%



✓ 2017–18ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் தேசிய சுகாதார கணக்குகளின் (NHA) மதிப்பீட்டின்படி, 2013–14'இல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.15% ஆக இருந்த அரசின் சுகாதார செலவினங்களின் பங்கு 2017–18'இல் 1.35% ஆக அதிகரித்துள்ளது.

✓ 2013–14 மற்றும் 2017–18'க்கு இடையில் சுகாதாரத்திற்கான அரசின் செலவினம் 3.78%'இலிருந்து 5.12% ஆக அதிகரித்துள்ளதாகவும் இந்தக் கண்டறிவுகள் காட்டுகின்றன. தனிநபர் OOPE'ஐப் பொறுத்தவரை, 2013–14 மற்றும் 2017–18'க்கு இடையில் ₹2,336 இலிருந்து ₹2,097ஆகக் குறைந்துள்ளது.

---

4. 'The India Young Water Professional' திட்டமானது பின்வரும் எந்த நாட்டுடன் இணைந்து முதன்முறையாக தொடங்கப்பட்டுள்ளது?

அ) அமெரிக்கா ஆ) ரஷ்யா

இ) ஆஸ்திரேலியா ☑ ஈ) ஜப்பான்



✓ இந்திய இளம் நீர் நிபுணத்துவ திட்டத்தின் முதல் பதிப்பு தேசிய நீரியல் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய நீர் கூட்டாண்மை –யின் ஆதரவில் இது உள்ளது. இது நீர்வளம், ஆற்று மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர் துறையின் திட்டமாகும். தேசிய நீரியல் திட்டத்தின் மத்திய மற்றும் மாநில அமலாக்க முகவர்களிடமிருந்து மொத்தம் இருபது பங்கேற்பாளர்கள் (10 ஆண்கள் & 10 பெண்கள்) இந்தத் திட்டத்தின் முதல் பதிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

---

5. இந்தியாவின் முதல் சான்றளிக்கப்பட்ட ஆர்கானிக் பழம் எது?

அ) ஆப்பிள்

ஆ) ஸ்ட்ராபெர்ரி

இ) கிவி ☑

ஈ) வாழை



✓ இந்தியாவின் முதல் சான்றளிக்கப்பட்ட ஆர்கானிக் பழமாக அருணாச்சல பிரதேச மாநிலத்தின் கிவிப் பழங்களை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு அறிமுகப்படுத்தினார். வடகிழக்கு பிராந்தியத்திற்கான மிஷன் ஆர்கானி –க் வேல்யூ செயின் டெவலப்மெண்ட் திட்டத்தின்கீழ் கிவிப்பழத்திற்கு ஆர்கானிக் சான்றிதழைப் பெற்ற முதல் இந்திய மாநிலமாக அருணாச்சல பிரதேசம் ஆனது.

---

6. அண்மையில், 'கிரந்தி சூரிய கௌரவ் கலச' யாத்திரையைத் தொடங்கிய மாநிலம் எது?

அ) மகாராஷ்டிரா

ஆ) குஜராத்

இ) மத்திய பிரதேசம் ☑

ஈ) பீகார்



✓ சுதந்திரப் போராட்ட வீரர் ஜனநாயக் தந்தியா மாமாவின் பிறந்த இடமான பரோட் அகிர் கிராமத்திலிருந்து 'கிரந்தி சூரிய கௌரவ் கலச யாத்ரா'வை மத்திய பிரதேசம் தொடங்கியது. இந்த யாத்திரையில் பொதுமக்கள் பங்கேற்க வேண்டும் என்று முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் அழைப்பு விடுத்துள்ளார். டிச.4 அன்று இந்தூரில் ஜனநாயக் தந்தியா மாமாவின் நினைவு நாளையொட்டி ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்யவுள்ளதாகவும் அம்மாநில அரசு அறிவித்திருந்தது.

---

7. ஜீரோ டி.ஃபெக்ட், ஜீரோ எ.ஃபெக்ட் (ZED) என்பது எந்த மத்திய அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்ட திட்டம்?

அ) வேளாண்மை & விவசாயிகள் நல அமைச்சகம்

ஆ) MSME அமைச்சகம் ☑

இ) வர்த்தகம் & தொழில்துறை அமைச்சகம்

ஈ) எ.ஃகு அமைச்சகம்

✓ MSME அமைச்சகம் ஜீரோ டி.ஃபெக்ட், ஜீரோ எ.ஃபெக்ட் (ZED) திட்டத்தை செயல்படுத்துகிறது. இது கடந்த 2016ஆம் ஆண்டு பிரதமர் மோடியால் தொடங்கப்பட்ட MSME சான்றிதழ் திட்டமாகும். இது MSME'கள் எந்த விதமான குறைபாடுகளும் இல்லாமல் மேலும் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல் பொருட்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கிறது.

✓ MSME அமைச்சர் நாராயண் ராணே, ராஜ்யசபாவில் பகிர்ந்துகொண்ட தரவுகளின்படி, இந்தத் திட்டம் சுமார் 25,000 MSME பதிவுகளைப் பதிவு செய்துள்ளது. மேலும் MSMEகள் பயனடைவதற்காக FY19'இல் இந்தத் திட்டம் உயர்த்தப்பட்டது.

---

8. 'சமூக ஊடக (அடிப்படை எதிர்பார்ப்புகள் & அவதூறு) மசோதா – 2021'ஐ முன்மொழிந்த நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) ஆஸ்திரேலியா ☑

இ) சீனா

ஈ) இந்தியா



✓ ஆஸ்திரேலிய அரசாங்கம் 'சமூக ஊடக (அடிப்படை எதிர்பார்ப்புகள் மற்றும் அவதூறு) மசோதா – 2021'இன் வரைவை வெளியிட்டது. சமூக ஊடக நிறுவனங்கள் தங்கள் தளங்களில் இடுகையிடப்பட்ட உள்ளடக்கத்திற்கு பொறுப்பேற்பது மற்றும் பயனர்கள் கேலிக்கு

உள்ளாக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பதை இம்மசோதா நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

9. இந்தியாவின் முதல் தனியாரால் உருவாக்கப்பட்ட முழு கிரை –யோஜெனிக் ஏவுகலமான தவான்–1, பின்வரும் எந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டதாகும்?

அ) ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் ☑

ஆ) ஸ்கந்தா ஏரோஸ்பேஸ்

இ) துருவ் ஸ்பேஸ்

ஈ) காலின்ஸ் ஏரோஸ்பேஸ்

✓ ஹைதராபாத்தைச்சார்ந்த விண்வெளி தொழில்நுட்ப துளிர் நிறுவனமா –ன ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ், இந்தியாவின் முதல் தனியாரால் உருவா –க்கப்பட்ட முழு கிரையோஜெனிக் ஏவுகல எஞ்சினை பரிசோதனை செய்துள்ளது. இந்திய ஏவுகல விஞ்ஞானி சதீஷ் தவானின் நினைவாக இந்த எஞ்சினுக்கு தவான்–1 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

✓ இது 3D பிரிண்டிங் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டது திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் திரவ ஆக்ஸிஜனை இது தனது எரிபொருளாக பயன்படுத்தும்.

---

10. வருவாய் புலனாய்வு இயக்குநரகமானது எந்த அமைப்பின்கீழ் அமலாக்க முகமையாக உள்ளது?

அ) மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் ☑

ஆ) செக்யூரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆஃப் இந்தியா

இ) அமலாக்க இயக்குநரகம்

ஈ) மத்திய நேரடி வரிகள் வாரியம்

✓ வருவாய் புலனாய்வு இயக்குநரகமானது, மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (CBIC) கீழ், கடத்தல் எதிர்ப்பு விஷயங்களில் இந்திய அரசாங்கத்தின் உளவுத்துறை மற்றும் அமலாக்க நிறுவனமாக உள்ளது. மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தின் 64ஆவது நிறுவன நாளில் உரை நிகழ்த்தினார். 2020–21ஆம் ஆண்டில் மத்திய கிழக்கிலிருந்து மியான் –மருக்கு தங்கக்கடத்தல் நிகழ்ந்ததாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பறவைகள் சரணாலயமாகிறது 'கழுவேலி ஈரநிலம்': அரசாணை வெளியீடு

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கழுவேலி ஈரநிலத்தை பறவைகள் சரணாலயமாக அறிவித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாநிலத்தின் 16ஆவது பறவைகள் சரணாலயமாக கழு வேலி ஈரநிலம் உருவெடுத்துள்ளது. இதற்கான அறிவிக்கை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விரைவில் அரசிதழில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, பறவைகள் சரணாலயமாக மாற்றப்பட வேண்டிய பகுதிகளின் வரையறைகள் மற்றும் வரம்புகளை அரசு வெளியிட்டுள்ளது. அதன்படி, மொத்தம் 5151.60 ஹெக்டேர் நிலப் பரப்பில் அந்தச் சரணாலயம் அமையவுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் வானூர் மற்றும் மரக்காணம் தாலூகா பகுதிகளில் அமைந்துள்ளது கழுவேலி உவர்நீர் ஈரநிலம். இந்தியா மட்டுமல்லாது பல்வேறு நாடுகளிலிருந்தும் ஆண்டுதோறும் அரிய பறவைகள் இங்கு வலசை வருவது வழக்கம். அதன் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் உயிரியல் முக்கியத்துவத்தை உணர்ந்து அவ்விடத்தை பறவைகள் சரணாலயமாக மாற்ற முடிவு செய்யப்பட்டு தற்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

---

2. இந்தியா–ரஷியா இடையே ₹5,000 கோடி பாதுகாப்பு ஒப்பந்தம் கையொப்பம்

₹5,000 கோடி மதிப்பில் ஏகே–203 ரக துப்பாக்கிகளை இணைந்து தயாரிப்பது உள்ளிட்ட பாதுகாப்பு துறைசார்ந்த 4 ஒப்பந்தங்கள் இந்தியா–ரஷியா இடையே கையொப்பமாகின. இவைதவிர, 24 ஒப்பந்தங்கள் கையொப்பமாகின.

இந்தியா–ரஷியா ராணுவம் மற்றும் ராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆணையத்தின் 20ஆவது கூட்டம் தில்லியில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ரஷிய பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்கேய் ஷொய்கு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தின்போது நான்கு முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. உத்தர பிரதேச மாநிலத்தின் அமேதியில் 6,01,427 ஏகே–203 ரக தாக்குதல் துப்பாக்கிகளைத் தயாரிப்பதற்கு சுமார் ₹5,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் கையொப்பமானது.

இந்திய வீரர்கள் பயன்படுத்துவதற்கான இந்தத் துப்பாக்கிகளின் தொழில்நுட்பத்தை ரஷியா பகிர்ந்து கொள்கிறது. இந்தியாவுக்கும் ரஷியாவுக்கும் இடையேயான ராணுவ ஒத்துழைப்பை மேலும் 10 ஆண்டுகளுக்கு (2021–2031) நீட்டிப்பதற்கான ஒப்பந்தமும் கூட்டத்தின்போது கையொப்பமானது.

'கலாஷ்னிகோவ்' ரக சிறிய ரக ஆயுதங்களைத் தயாரிப்பதற்காக இரு நாடுகளுக்கிடையே கடந்த 2019–ஆம் ஆண்டில் கையொப்பமான ஒப்பந்தத்தில் தற்போது சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியா–ரஷியா ராணுவம் மற்றும் ராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஆணையத்தின் 20ஆவது கூட்டம் தொடர்பான வழிமுறைகள் குறித்த ஓர் ஒப்பந்தமும் கையொப்பமானது.

மொத்தம் உடன்பாடுகளில் ஒன்பது இரு நாட்டு அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டங்கள் தொடர்பானவை. மீதமுள்ள 19 ஒப்பந்தங்கள் பல்வேறு துறைகளில் வணிக ரீதியிலான ஒத்துழைப்பு தொடர்பானவை.

---

3. மானிய விலையில் மாடித் தோட்ட விதைகள்: புதிய திட்டத்தைத் தொடக்கி வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

மானிய விலையில் மாடித்தோட்டத்துக்கான விதைகள் மற்றும் செடிகளை வழங்கும் திட்டத்தை முதல்வர் முக ஸ்டாலின் தொடங்கி வைத்தார். முதலமைச்சரின் ஊட்டந்தரும் காய்கறி தோட்டத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று வேளாண்மைத் துறைக்கான தனி நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் மானிய விலையில் மாடித் தோட்ட விதைகள், செடிகள் வழங்கப்பட உள்ளன. ஆறு வகையான காய்கறி விதைகள், 6 எண்ணிக்கையிலான செடி வளர்க்கும் பைகள், 6 எண்ணிக்கையிலான இரண்டு கிலோ அளவிலான தென்னை நார் கட்டிகள், 400 கிராம் உயிர் உரங்கள், 200 கிராம் உயிரி கட்டுப்பாட்டு காரணி, 100 மில்லி லிட்டர் இயற்கை பூச்சிக்கொல்லி மருந்து மற்றும் சாகுபடி முறைக்கான கையேடு ஆகியன ₹225 விலையில் மக்களுக்கு வழங்கப்பட உள்ளன. இதன் சந்தை விலை நகரப் பகுதிகளில் ₹900 ஆகும். நகரப்பகுதியைச்சேர்ந்த ஒருவருக்கு அதிகபட்சமாக இரண்டு மாடித்தோட்ட விதைகள் மற்றும் செடிகள் வரை வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகள்: ஊரகப் பகுதிகளில் காய்கறி தோட்டம் அமைப்பதை ஊக்குவிக்க கத்திரி, மிளகாய், வெண்டை, தக்காளி, அவரை, பீர்க்கன், புடலை, பாகல், சுரைக்காய், கொத்தவரை, சாம்பல்பூசணி, கீரைகள் ஆகிய பன்னிரு வகை காய்கறி விதைகளை வழங்கப்பட உள்ளன. ஒருவருக்கு இரண்டு தொகுப்புகள் அளிக்கப்படும்.

நோய் எதிர்ப்பு சக்தி: காய்கறிகளுடன், நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் வகையில் மூலிகைச் செடிகள், நோய் எதிர்ப்பு சக்தியுடைய பழங்கள் மற்றும் காய்கறிகளும் வழங்கப்படும். அதன்படி, பப்பாளி, எலுமிச்சை, முருங்கை, கறிவேப்பிலை, திப்பிலி, கற்பூரவல்லி, புதினா, சோற்று கற்றாழை ஆகிய எட்டுச் செடிகள் அடங்கிய தொகுப்பு ₹25 விலையில் வழங்கப்படும். ஒரு குடும்பத்துக்கு அதிகபட்சமாக ஒரு தொகுப்பு அளிக்கப்படும்.

---

4. நாட்டில் 2.13 லட்சம் ஏடிஎம்'கள்!

இந்த ஆண்டு செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் நாட்டில் உள்ள மொத்த ஏடிஎம்களின் (தானியங்கி பணப்பட்டுவாடா இயந்திரங்கள்) எண்ணிக்கை 2.13 லட்சத்துக்கு மேல் உள்ளதாக நாடாளுமன்றத்தில் திங்கள்கிழமை தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான கேள்விக்கு மத்திய நிதித்துறை இணையமைச்சர் பாகவத் கராட் எழுத்துமூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

இந்திய ரிசர்வ் வங்கி அளித்த தகவலின்படி நாட்டில் உள்ள வங்கிகள் 2021 செப்டம்பர் வரை 2,13,145 ஏடிஎம்களை நிறுவியுள்ளன. இதில் 47.4 சதவீத ஏடிஎம்'கள் கிராமப்புறங்கள் மற்றும் வளர்ந்துவரும் சிறிய

ஊர்களில் உள்ளன. இவைதவிர வங்கிகள் அல்லாத நிதி நிறுவனங்களின்கீழ் 27,837 ஏடிஎம்'கள் உள்ளன.

ஆண்டுதோறும் குறைந்தபட்சம் புதிதாக 1,000 ஏடிஎம்களை நிறுவும் நோக்குடன் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்போதைய சூழ்நிலையில் பெருநகரங்களைவிட கிராமப்புறங்களில் ஏடிஎம்களை அமைக்க முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

---

5. அந்நியச் செலாவணி கையிருப்பில் இந்தியாவுக்கு 4ஆவது இடம்

அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகம் வைத்துள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 4ஆவது இடத்தில் உள்ளது. மக்களவையில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌதரி எழுத்துமூலம் திங்கள்கிழமை அளித்த பதிலில் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பான கேள்விகளுக்கான பதிலில் அவர் மேலும் கூறியதாவது:

நவம்பர் 19-ஆம் தேதி நிலவரப்படி அந்நியச் செலாவணி கையிருப்பு 640.4 பில்லியன் அமெரிக்க டாலராக (₹48.28 லட்சம் கோடி) இருந்தது. கடந்த 7 நிதியாண்டுகளில் பெட்ரோலியப் பொருள்கள் மீதான கலால் வரி, செஸ் வரியாக ₹16.7 லட்சம் கோடி வசூலாகியுள்ளது.

2013-14'இல் பெட்ரோல் மீதான கலால் வரி ஒரு லிட்டருக்கு ₹9.2-ஆக இருந்தது. டீசல் மீது ஒரு லிட்டருக்கு ₹3.46-ஆக இருந்தது. அது இப்போது ஒரு லிட்டர் பெட்ரோல் மீது ₹27.9 ஆகவும், ஒரு லிட்டர் டீசல் மீது ₹21.9 ஆகவும் அதிகரித்துவிட்டது.

இதன்மூலம் கிடைக்கும் வருவாய் பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கும், வளர்ச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. பங்கேற்பு ஆவணங்கள்மூலம் மூதலீடு செய்பவர்கள், அதன்மூலம் பயனடைபவர்கள் ஆகியோரின் விவரம் கருப்புப் பணத்தைத் தடுக்கும் விதிகளின்கீழ் கண்காணிக்கப்படுகிறது. இந்தியப் பங்குச் சந்தைகளில் நேரடியாக முதலீடும் செய்யும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் விவரம் மாதந்தோறும் இந்தியப் பங்குப் பரிவர்த்தனை வாரியத்திடம் (செபி) அறிக்கையாக அளிக்கப்படுகிறது என்று கூறியுள்ளார்.

---

6. டேவிஸ் கோப்பை: ரஷியா சாம்பியன்

டேவிஸ் கோப்பை இறுதிச் சுற்றில் குரோஷிய அணியை 2-0 என்ற கணக்கில் வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது ரஷியா.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் இறுதி ஆட்டம் நடைபெற்றது. முதல் ஒற்றையர் ஆட்டத்தில் ரஷியாவின் ஆன்ட்ரெ ரூப்லேவும்-குரோஷிய வீரர் போர்னா கோஜோவும் மோதினர்.

இதில் முதல் 6-4 என கைப்பற்றினார் ரூப்லேவ். இரண்டாவது செட்டில் 4-4 என சமநிலை ஏற்பட்ட போதிலும், சுதாரித்து ஆடிய ரூப்லே 7-6 என்ற செட் கணக்கில் போர்னாவை வென்றார். 2ஆவது ஒற்றையர் ஆட்டத்தில் டேனில் மெத்வதேவும்-மரின் சிலிக்கும் மோதினர். முதல் செட்டை டை பிரேக்கரில் 7-6 என வென்றார் மெத்வதேவ்.

தொடர்ந்து இரண்டாவது செட்டை எவ்வித எதிர்ப்பும் இன்றி 6-2 என கைப்பற்றினார். இதன்மூலம் 2-0 என வென்ற ரஷிய அணி 3ஆவது முறையாக டேவிஸ் கோப்பை சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

---

1. 2021ஆம் ஆண்டு சர்வதேச தன்னார்வலர் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Volunteer now for our common future ☑

ஆ) World needs Volunteers

இ) Volunteering during Pandemic

ஈ) Welcoming Volunteers



✓ ஆண்டுதோறும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்காக தேசிய மற்றும் சர்வதேச அளவில் தன்னார்வலர்களின் பங்கை ஊக்குவிப்பதற்காக டிசம்பர் 5 அன்று சர்வதேச தன்னார்வலர்கள் நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் உலகெங்கிலும் உள்ள தன்னார்வலர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கிறது. UNGA, கடந்த 2001 ஆம் ஆண்டை சர்வதேச தன்னார்வலர்களின் ஆண்டாக குறித்தது.

✓ "Volunteer now for our common future" என்பது இந்த ஆண்டுக்கான (2021) 'சர்வதேச தன்னார்வலர்கள் நாளுக்கானக் கருப்பொருள் ஆகும்.

---

2. உலக மண் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) டிசம்பர் 3

ஆ) டிசம்பர் 5 ☑

இ) டிசம்பர் 7

ஈ) டிசம்பர் 9



✓ மண்ணின் முக்கியத்துவம் மற்றும் அதன் நிலையான மேலாண்மை குறித்து மக்களின் கவனத்தை குவிப்பதற்காக, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 5ஆம் தேதி உலக மண் நாள் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு பிரச்சாரமானது "Halt soil salinization, boost soil productivity" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

✓ நலமான சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பராமரிப்பதன் முக்கியத்துவம் மற்றும் மனித நல்வாழ்வைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. கடந்த 2002'இல் சர்வதேச மண் அறிவியல் சங்கத்தால் (IUSS) இந்நாள் பரிந்துரைக்கப்பட்டது.

---

3. 'சிப்ரியன் ஃபோயாஸ் பரிசு'டன் தொடர்புடைய துறை எது?

அ) விண்வெளி அறிவியல்

ஆ) கணிதம் ☑

இ) வைராலஜி

ஈ) வணிகம்



✓ புகழ்பெற்ற இந்திய–அமெரிக்க கணிதவியலாளரான நிகில் ஸ்ரீவஸ்தவா, முதன் முறையாக வழங்கப்படும் $5,000 டாலர் மதிப்புடைய சிப்ரியன் ஃபோயாஸ் பரிசுக்கு கூட்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆபரேட்டர் தியரியில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக அமெரிக்க கணித சங்கம் அவருக்கு இவ்விருதை வழங்குகிறது. பெர்க்லியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஸ்ரீவஸ்தவாவுடன், ஆடம் மார்கஸ் மற்றும் டேனியல் ஸ்பீல்மேன் ஆகிய இருவரும் இவ்விருது பெற்றனர்.

---

4. முதலாவது 'இந்தியா–ரஷ்யா 2+2' பேச்சுவார்த்தையை நடத்தும் நகரம் எது?

அ) மாஸ்கோ

ஆ) புது தில்லி ☑

இ) அகமதாபாத்

ஈ) புனித பீட்டர்ஸ்பர்க்



✓ முதல் '2+2' அமைச்சர்கள் பேச்சுவார்த்தையானது தில்லியில் நடைபெற உள்ளது. வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெறும் இது "பரஸ்பர நலன்சார்ந்த அரசியல் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களை" உள்ளடக்கும். இதுவரை அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாற்கர பாதுகாப்பு பேச்சுவார்த்தையின் (குவாட்) உறுப்பு நாடுகளுடன் இந்தியா '2+2' வடிவ சந்திப்புகளை நடத்தியது.

✓ முன்னதாக, பிரதமர் மோடி மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இடையேயான 21ஆவது இந்தியா–ரஷ்யா ஆண்டு உச்சிமாநாடு, 2021 டிச.6 அன்று புது தில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் நடந்தது.

---

5. அண்மையில் ஒரு இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளை வீழ்த்திய அஜாஸ் படேல், எந்த நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரராவார்?

அ) இங்கிலாந்து

ஆ) நியூசிலாந்து ☑

இ) வங்காளதேசம்

ஈ) தென்னாப்பிரிக்கா



✓ நியூசிலாந்தின் இடது கை சுழற்பந்து வீச்சாளரான அஜாஸ் படேல், 144 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே இனிங்சில் அனைத்து 10 விக்கெட்டுகளையும் வீழ்த்திய மூன்றாவது பந்துவீச்சாளர் ஆனார்.

✓ இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது போட்டியின் 2ஆவது நாளில் அவர் இந்தச் சாதனையைப் படைத்தார். இங்கிலாந்தின் ஜிம் லேக்கர் மற்றும் இந்தியாவின் அனில் கும்ப்ளே ஆகியோர் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்தக் குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்துள்ளனர். 33 வயதான அவர் தனது 11ஆவது டெஸ்டில் விளையாண்டு வருகிறார்.

6.சமீப செய்திகளில் இடம்பெற்ற 'HAECHI–II' என்பது பின்வரும் எந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாகும்?

அ) மத்திய புலனாய்வுப் பணியகம்

ஆ) இன்டர்போல் ☑

இ) ஃபெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்

ஈ) பன்னாட்டுச் செலவாணி நிதியம்

✓ 'HAECHI–II' என்ற குறியீட்டுப் பெயரில் INTERPOL மேற்கொண்ட சமீப நடவடிக்கையின்கீழ், 20'க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள அமலாக்க முகவர்கள் 1000'க்கும் மேற்பட்ட நபர்களைக் கைது செய்து, சுமார் $27 மில்லியன் சட்டவிரோத நிதியைக் கைப்பற்றியுள்ளனர். இந்தத் திட்டம் சைபர் அடிப்படையான நிதிக் குற்றங்களை ஒடுக்கும் நடவடிக்கையின் ஒருபகுதியாகும். இந்த உலகளாவிய நடவடிக்கையில் இந்திய நாடும் பங்கேற்றது. காதல் மோசடிகள், முதலீட்டு மோசடி மற்றும் சட்டவிரோத ஆன்லைன் சூதாட்டத்துடன் தொடர்புடைய பணமோசடி போன்ற குறிப்பிட்ட வகையான ஆன்லைன் மோசடிகளை இது தனது இலக்காகக் கொண்டு செயல்பட்டது.

---

7. சமீபத்தில் எந்த இந்திய கிரிக்கெட் வீரர், டெஸ்டில் அதிக விக்கெட் வீழ்த்திய மூன்றாவது கிரிக்கெட் வீரர் ஆனார்?

அ) ரவீந்திர ஜடேஜா

ஆ) R அஸ்வின் ☑

இ) இஷாந்த் சர்மா

ஈ) முகமது ஷமி



✓ R அஸ்வின், சமீபத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய மூன்றாவது இந்திய கிரிக்கெட் வீரர் ஆனார். 35 வயதான அவர் நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 418 ஆவது விக்கெட்டை வீழ்த்தி, மற்றொரு இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கின் சாதனையை முறியடித்தார்.

✓ அனில் கும்ப்ளே (619), கபில்தேவ் (434) ஆகியோர் மட்டுமே அஸ்வினை விட அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர்.

---

8. பீட்டர் ஃபியாலா, எந்த நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்?

அ) ஆஸ்திரேலியா

ஆ) இத்தாலி

இ) கிரீஸ்

ஈ) செக் குடியரசு ☑



✓ செக் குடியரசின் குடிமை ஜனநாயக கட்சியின் தலைவரான பீட்டர் ஃபியாலா அந்நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். 200 இடங்களைக் கொண்ட அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் ஐந்து கட்சிக் கூட்டணியானது 108 வாக்குகள் பெரும்பான்மையைப் பெற்றதை அடுத்து அவர் பிரதமராக நியமனம் செய்யப்பட்டார். முன்னர் 2012 முதல் 2013 வரை அந்த நாட்டின் கல்வி, இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சராக பணியாற்றிய பீட்டர் ஃபியாலா 2014 முதல் குடிமை ஜனநாயகக் கட்சியின் தலைவராகவும் இருந்து வருகிறார்.

---

9. கீழ்காணும் எந்த சர்வதேச அமைப்பின் தலைவராக அல் ரைசி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்?

அ) ஐக்கிய நாடுகள்

ஆ) சர்வதேச நாணய நிதியம்



இ) இன்டர்போல் ☑

ஈ) யுனிசெஃப்

✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் உள்துறை அமைச்சகத்தின் காவல்துறைத் தலைவரான அல் ரைசி, 3 சுற்று வாக்கெடுப்புக்குப் பிறகு, இன்டர்போல் அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். உறுப்புநாடுகள் அளித்த வாக்குகளில் 68.9% வாக்குகளை அவர் பெற்றார். பொதுவாக 'INTERPOL' என அழைக்கப்படுகிற பன்னாட்டுக் காவலகம், உலகளாவிய காவல் துறை ஒத்துழைப்பில் உதவுகிறது. இதன் தலைமையகம் பிரான்சின் லியோனில் உள்ளது.

---

10. சமீபத்தில் தனது முதல் சேலஞ்சர் நிலை ஒற்றையர் பட்டத்தை வென்ற இராம்குமார் ராமநாதனுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) டென்னிஸ் ☑



ஆ) டேபிள்–டென்னிஸ்

இ) பூப்பந்து

ஈ) வில்வித்தை

✓ இந்திய டென்னிஸ் வீரர் ராம்குமார் ராமநாதன் தனது முதல் சேலஞ்சர் நிலை ஒற்றையர் பட்டத்தை, ATP80 மனமா நிகழ்வின் இறுதி நிகழ்வில் வென்றார். ஆறாம் நிலை வீரரும், உலகத் தரவரிசையில் 222ஆவது இடத்திலுள்ளவருமான 27 வயதான இராம்குமார் இராமநாதன் தனது ரஷ்ய போட்டியாளரை 6–1 6–4 என்ற கணக்கில் 68 நிமிடங்களில் வீழ்த்தினார். இவர் இதற்கு முன்பு தனது வாழ்க்கையில் ஆறு சேலஞ்சர் இறுதிப்போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'டான்ஜெட்கோ'வுக்கு மத்திய அரசு ₹26,428 கோடி கடனுதவி

கரோனா தொற்று காரணமாக எழுந்த பணப்புழக்கச் சிக்கல்களைத் தீர்க்கும் வகையில், தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான நிறுவனத்துக்கு (டான்ஜெட்கோ) ரூ. 26,428 கோடி நீண்ட கால கடன் அளிக்கப்பட்டதாக மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் ஆர்.கே.சிங் மாநிலங்களவையில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான நிறுவனத்துக்கு மாநில அரசு கோரிய நிதியுதவியை மத்திய அரசு வழங்கியதா? அதன்விவரம், தமிழகம் உள்ளிட்டு நாடு முழுவதும் மின் நிறுவனங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்க மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன? ஆகியவை குறித்து மாநிலங்களவை திமுக உறுப்பினர் பி.வில்சன் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்து மத்திய மின்சாரம், மரபுசாரா எரிசக்தித் துறை அமைச்சர் ஆர்.கே.சிங் கூறியதாவது:

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான நிறுவனத்தின் திட்டங்களின் தகுதியைக் கருத்தில் கொண்டு கடன் அளிக்கப்படுகிறது. கடந்த நவம்பர் 30–ஆம் தேதி வரை மத்திய அரசின் நிறுவனமான பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் லிட். (பிஎஃப்சி) நிறுவனம் ரூ. 34,936.64 கோடியும், ரூரல் எலெக்ட்ரிஃபிகேஷன் கார்ப்பரேஷன் லிட். (ஆர்இசி) ரூ. 36,970 கோடி வரையிலும் கடன் அளித்துள்ளது. இந்த வகையில் மொத்தம் ரூ. 71,906.64 கோடி கடன் நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில், தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மான நிறுவனத்துக்கு கரோனா தொற்று காரணமாக எழுந்த பணப்புழக்கச் சிக்கல்களைத் தீர்க்க, நீண்ட காலக் கடனுதவித் திட்டத்தின் கீழ், பிஎஃப்சி, ஆர்இசி மூலம் ரூ.26,428 கோடி வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

மேலும், மற்றோரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தமிழகத்தில் சூரிய எரிசக்தி உற்பத்தியில் 2019–20–இல் 6,447 மெகாவாட்டாக இருந்தது. இது, 2020–21–இல் 5,457 மெகாவாட்டாகக் குறைந்துள்ளது. இதேபோல், காற்றாலை மின் உற்பத்தியிலும் 2019–20–ஆம் ஆண்டை விட 2020–21–இல் 32 MW மின் உற்பத்தி குறைந்துள்ளது என்றார்.

---

2. தமிழகத்தில் முழு கொள்ளளவை எட்டிய 8,690 ஏரிகள்

தமிழகத்தில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள 14,138 ஏரிகளில் இதுவரை 8,690 ஏரிகள் 100 சதவீதம் நிரம்பின.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால் தமிழகத்தில் உள்ள பெருவாரியான அணைகள், நீர்த்தேக்கங்கள், பாசன ஏரிகள், குளங்கள் நிரம்பி வருகின்றன. இதன் காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்தநிலையில் பாசன ஏரிகள் குறித்து பொதுப்பணித்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள 14,138 ஏரிகளில் இதுவரை 8,690 ஏரிகள் 100 சதவீதம் நிரம்பின. 2,989 ஏரிகளில் 75 சதவீதம் நீர் நிரம்பியுள்ளது. 90 நீர்த்தேக்கங்களில் 212 டி.எம்.சி. அளவுக்கு தண்ணீர் இருப்பில் உள்ளது. இது முழு கொள்ளளவில் 94.5 சதவீதமாகும்.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம் ஏரியில் 89சதவீதமும், புழல் ஏரியில் 90 சதவீதமும் நீர் நிரம்பி உள்ளது.

பூண்டி ஏரியில் 92 சதவீதம், சோழவரம் ஏரியில் 75 சதவீதம், தோர்வாய் கண்டிகை ஏரியில் 100 சதவீதம் நீர் நிரம்பியுள்ளது. அதேபோன்று மேட்டூர் அணையில் 100 சதவீதமும், பவானிசாகரில் 99 சதவீதமும், வைகையில் 96 சதவீதமும் நீர் நிரம்பியுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. மாநிலத்துக்கு வெளியே வாழும் தமிழர் நலனுக்கு தனி இணையம்

மாநிலத்துக்கு வெளியே வாழும் தமிழர்களின் நலனுக்கென தனி இணையதளத்தை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தொடக்கி வைத்தார். தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை அவர் புதிய இணையதளத்தை தொடக்கினார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள், மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்பை சிறப்பிக்கும் வகையில் இனி ஆண்டுதோறும் புலம்பெயர்ந்த உலகத் தமிழர் நாளாகக் கொண்டாடப்பட உள்ளது. இதற்கான அறிவிப்பை சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அதன்படி, எதிர்வரும் ஜனவரி 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் புலம்பெயர்ந்த உலகத் தமிழர் நாள், சென்னை கலைவாணர் அரங்கத்தில் கொண்டாடப்பட உள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் தங்களது பெயர்களைப் பதிவு செய்யலாம் என தமிழக அரசு அழைப்பு வெளியிட்டுள்ளது. மேலும், புலம் பெயர்ந்த தமிழர்களுக்காக முன்னெடுக்கப்படும் நலத் திட்டங்கள், அவர்களது பிரச்னைகளுக்கான தீர்வுகள் போன்றவற்றை அறிந்து கொள்ளும் வகையில் தனி இணையதளத்தை (www.nrttamils.tn.gov.in) வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தொடக்கி வைத்தார்.

---

4. கிளாஸ்கோ ஒப்பந்தத்துக்கு இந்தியா உடன்படாதது ஏன்? அமைச்சர் விளக்கம்

பருவநிலை மாற்றத்திற்கான கிளாஸ்கோ உச்சிமாநாட்டில், காடுகள், நிலம் ஆகியவற்றின் பயன்பாடுகளை வர்த்தகத்துடன் இணைத்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டதால், இந்தியா அந்த ஒப்பந்தத்துக்கு உடன்படவில்லை என மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றத் துறைக்கான இணையமைச்சர் அஸ்வினி குமார் சௌபே மக்களவையில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். மேலும், இந்திய வனம், காடுகளின் பரப்பளவு 24.56 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுகுறித்து மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு செவ்வாய்க்கிழமை கேள்வி எழுப்பினார். இதற்கு மத்திய இணையமைச்சர் அஸ்வினி குமார் சௌபே அளித்த பதில்: கிளாஸ்கோ நகர் பருவநிலை மாற்றத்திற்கான உச்சிமாநாட்டு ஒப்பந்தத்தில், காடுகள் மற்றும் நிலத்தின் பயன்பாடுகளை வர்த்தகத்துடன் இணைத்து ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. இதை மத்திய அரசு ஏற்கவில்லை.

1988–ஆம் ஆண்டின் தேசிய காடுகள் கொள்கையின்படி, நாட்டின் மொத்த பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு பரப்பளவில் வனத்தைப் பெருக்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டேராடூன் இந்திய வனவள நில அளவை அறிக்கையின்படி தற்போது 8,07,276 சதுர கிலோ மீட்டரில் சுமார் 24.56 சதவீதம் அளவுக்கு வனநிலங்களின் பரப்பளவு

அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 2015-ஆம் ஆண்டை விட 13,209 சதுர கி.மீட்டர் பரப்பளவு வனம் அதிகரித்துள்ளது.

பருவநிலை மாற்றத்திற்கான பாரீஸ் ஒப்பந்தத்தின்படி, 300 கோடி டன் கரியமில வாயுவை மூழ்கடிக்கத் தேவையான மரங்களுடன் கூடிய காடுகளின் பரப்பளவை, 2030-ஆம் ஆண்டுக்குள் அதிகரிக்க இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, இதற்கான பல்வேறு திட்டங்களை மாநிலங்களுக்கு மத்திய சுற்றுச்சூழல், காடுகள், பருவநிலை மாற்றத் துறை அளித்தது என்றார் அமைச்சர்.

---

5. சுகோய் போர் விமானம் மூலம் பிரமோஸ் ஏவுகணை சோதனை வெற்றி

ஒடிஸா மாநிலம் சண்டிபூர் பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணையை சுகோய் 30 எம்கே-1 போர் விமானம் மூலம் செலுத்தி புதன்கிழமை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

பிரமோஸ் திட்டத்தில் இது ஒரு மிகப்பெரிய மைல்கல் என்று கூறியுள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) அதிகாரிகள், புதன்கிழமை காலை 10.30 மணிக்கு சுகோய் 30 எம்கே-1 போர் விமானத்தின் வாயிலாக இந்த ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் எதிர்காலத்தில் பிரமோஸ் ஏவுகணைகளை விண்ணில் செலுத்துவதற்கு இந்த சோதனை வழிவகுக்கும் எனவும் அவர்கள் கூறினர். இந்த ஏவுகணை சோதனையில் ஈடுபட்ட அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்த டிஆர்டிஓ தலைவரும், பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டுத் துறை செயலாளருமான சதீஷ் ரெட்டி, கல்வி நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்கள், இந்திய விமானப் படை ஆகியன இந்தப் பணியில் ஈடுபட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ராஜ்நாத் சிங் பாராட்டு: இதனிடையே, பிரமோஸ் ஏவுகணை சோதனை வெற்றிக்கு டிஆர்டிஓ, விமானப் படை அதிகாரிகளுக்கு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்தார். சூப்பர்சோனிக் ஏவுகணைகள் தயாரிப்பு, சந்தைப்படுத்துதல், மேம்பாடு ஆகியவற்றுக்காக இந்தியாவும் ரஷ்யாவும் பிரமோஸ் திட்டத்தை கூட்டாக முன்னெடுத்து வருகின்றன.

இந்தியக் கடற்படையின் தாக்குதல் திறனை அதிகரிக்கும் பொருட்டு நிலத்தில் இருந்து வானில் குறைந்த தொலைவில் உள்ள இலக்கைத் துல்லியமாக தாக்கி அழிக்கும் விஎல்-எஸ்ஆர்எஸ்ஏம் ஏவுகணையை டிஆர்டிஓ செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக பரிசோதித்தது குறிப்பிடத்தக்கது.

---

6. ரூ.2,000 கரன்சி புழக்கம் 1.75% மட்டுமே: மத்திய அரசு

நாட்டில் புழக்கத்தில் உள்ள மொத்த ரூபாய் நோட்டுகளில் ரூ.2,000 நோட்டுகளின் பங்கு வெறும் 1.75 சதவீதமே என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பரில் ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது 2,000 ரூபாய் நோட்டுகள் மற்றும் புதிய ரூ.500 நோட்டுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இது தொடர்பான கேள்விக்கு மத்திய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌதரி எழுத்து மூலம் மாநிலங்களவையில் அளித்த பதிலில் மேலும் கூறியதாவது:

2018 மார்ச் மாதத்தில் நாட்டில் 336.3 கோடி என்ற எண்ணிக்கையில் 2,000 ரூபாய் நோட்டுகள் இருந்தன. இது அப்போது புழக்கத்தில் இருந்த ரூபாய் நோட்டுகளின் எண்ணிக்கையில் 3.27 சதவீதமாகும். ஆனால், இந்த ஆண்டு நவம்பரில் 223.3 கோடி என்ற எண்ணிக்கையில்தான் 2,000 ரூபாய் நோட்டுகள் உள்ளன. இது இப்போது புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளின் எண்ணிக்கையில் 1.75 சதவீதம் மட்டுமே ஆகும்.

பொதுமக்களின் தேவை மற்றும் புழக்கத்துக்கு ஏற்ப இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஆலோசித்து மத்திய அரசு முடிவெடுப்பது வழக்கம்.

2018-19-ஆம் ஆண்டில் இருந்து புதிதாக ரூ.2,000 நோட்டுகள் அச்சிடப்படவில்லை. எனவே, புழக்கத்தில் இருந்து அந்த நோட்டுகள் குறைந்துள்ளன. அதிகம் சிதைந்துவிடுவது, அழுக்காகிவிடுவது போன்ற காரணங்களால் வங்கிகளுக்கு வரும் பழைய நோட்டுகள் மீண்டும் புழக்கத்துக்கு விடப்படுவதில்லை என்றார்.

புதிதாக அச்சிடப்படாததும், பழைய நோட்டுகள் மீண்டும் புழக்கத்துக்கு வராததும் இப்போது மக்கள் கையில் அதிகஅளவில் ரூ.2,000 நோட்டு கிடைக்காமல் இருப்பதற்குக் காரணமாகும்.

---

7. ஆசிய வளர்ச்சி வங்கியுடன் ரூ.2,074 கோடி கடன் ஒப்பந்தம்

தமிழகம், உத்தரகண்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய வளர்ச்சி வங்கியுடன் (ஏடிபி) ரூ.2,074 கோடி மதிப்பிலான இரு கடன் ஒப்பந்தங்களில் மத்திய அரசு கையொப்பமிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், 'தமிழகத்தின் நகரப் பகுதிகளில் வசிக்கும் ஏழைகளுக்கு வீடுகளைக் கட்டித் தருவதற்காக சுமார் ரூ.1,132 கோடி மதிப்பிலான கடன் ஒப்பந்தம் ஆசிய வளர்ச்சி வங்கியுடன் கையொப்பமாகியுள்ளது.

நகரப்பகுதிகளை மேம்படுத்தும் நோக்கில் பிரதமரின் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. அத்திட்டத்துக்கான இலக்குகளை நிறைவேற்றும் வகையில் இந்த ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது.

தமிழகத்தின் 7.2 கோடி மக்கள்தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் நகரப் பகுதிகளில் வசிக்கின்றனர். தமிழகத்தின் பொருளாதாரம் வளர்ந்து வருவதும், நகரமயமாக்கல் அதிகரித்து வருவதும் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு வீடுகளுக்கான தேவையை அதிகரித்துள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த ஒப்பந்தமானது, தமிழகத்தின் நகரப்பகுதிகளில் வசிக்கும் ஏழைகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய வீடுகளை கட்டித் தர உதவும். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தின் 9 இடங்களில் வீடுகள் கட்டப்படவுள்ளன.

உத்தரகண்டில் வளர்ச்சித் திட்டங்கள்: உத்தரகண்டின் டேராடூன், நைனிடால் நகர்ப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வசதியை ஏற்படுத்தவும், சுகாதார சேவைகளை மேம்படுத்தவும் சுமார் ரூ.942 கோடி மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் மத்திய அரசு கையொப்பமிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தமானது மாநிலத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களாகத் திகழும் டேராடூன், நைனிடால் ஆகிய நகரங்களை மேம்படுத்த உதவும். சுகாதார சேவைகள் மேம்படுத்தப்படுவதால், எதிர்காலத்தில் தோன்ற வாய்ப்புள்ள நோய்களின் தாக்குதலில் இருந்து நகரப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும்.

இத்திட்டத்தின் கீழ் டேராடூனில் 136 கி.மீ.-க்கு குடிநீர் குழாய் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் 40,000 போர் பலனடைவர். குடிநீரின் பயன்பாட்டை அளப்பதற்கான கருவிகள் 5,400 வீடுகளில் பொருத்தப்படவுள்ளன. மேலும், 256 கி.மீ.-க்கு நிலத்தடி கழிவுநீர் அமைப்பு, 117 கி.மீ.-க்கு மழைநீர் வடிகால் வசதி ஆகியவையும் அமைக்கப்படவுள்ளன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

8. சென்னை வீரர் சபரி டபிள்யூபிசி சாம்பியன்

உலக குத்துச்சண்டை கவுன்சில் (டபிள்யூபிசி) முதல் முறையாக நடத்திய டபிள்யூபிசி இந்தியா வெல்டர்வெயிட் சாம்பியன்ஷிப் போட்டியில் சென்னை வீரர் சபரி (24) சாம்பியன் ஆனார்.

தொழில்முறை ரீதியிலான இப்போட்டியில் 8 சுற்றுகள் கொண்ட இறுதிச் சுற்றில் அவர் சண்டீகரைச் சேர்ந்த அனுபவமிக்க வீரரான ஆகாஷ்தீப் சிங்கை (27) வீழ்த்தினார். போட்டி முடிவானது 76-76, 79-73, 79-73 என்ற பெரும்பான்மை புள்ளிகள் அடிப்படையில் அவருக்கு சாதகமாக அமைந்தது. தற்போது சாம்பியன் ஆகியிருக்கும் சபரி, அவ்வப்போது இந்தியாவின் இதர போட்டியாளர்களுடன் மோதி தனக்கான பட்டத்தை தக்க வைக்க வேண்டும்.

கடந்த ஆண்டு ஜனவரியில் தனது தொழில்முறை குத்துச்சண்டையை தொடங்கிய சபரி, முந்தைய மோதல்களில் 4 வெற்றிகளையும், 1 தோல்வியையும் பதிவு செய்துள்ளார். அவருடன் மோதி தோல்வியை சந்தித்த ஆகாஷ்தீப் கடந்த 3 ஆண்டுகளில் 8 வெற்றிகள், 1 தோல்வியை பதிவு செய்துள்ளவர்.

இதேபோட்டியில் ஆசிய சில்வர் லைட்வெயிட் பட்டத்துக்கான பிரிவில் இந்தியாவின் கார்த்திக் சதீஷ் குமார் – இந்தோனேசியாவின் ஹீரோ டிடோவை தோற்கடித்து பட்டம் வென்றார். இதில் அவர் 80-72, 79-73, 79-73 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றார். இத்துடன் 8 ஆட்டங்களில் பங்கேற்றுள்ள கார்த்திக், அனைத்திலும் வெற்றியை

பதிவு செய்துள்ளார். டபிள்யுபிசி ரேங்கிங்கில் தற்போது 4-ஆவது இடத்தில் இருக்கும் அவருக்கு இந்த வெற்றி முன்னேற்றத்தை அளிக்கும்.

---

9. ஆசிய இளையோர் பாரா போட்டி: இந்தியா 41 பதக்கங்களுடன் நிறைவு

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் பாரா விளையாட்டுப் போட்டியில் இந்தியா மொத்தமாக 12 தங்கம், 16 வெள்ளி, 13 வெண்கலம் என 41 பதக்கங்கள் வென்று நிறைவு செய்துள்ளது.

இதில் அதிகபட்சமாக தடகள பிரிவில் 22 பதக்கங்கள் (8 தங்கம், 7 வெள்ளி, 7 வெண்கலம்) வென்று தந்துள்ளனர் இந்திய போட்டியாளர்கள். அடுத்தபடியாக பாட்மின்டனில் 16 பதக்கங்கள் (4 தங்கம், 7 வெள்ளி, 5 வெண்கலம்), நீச்சலில் 3 பதக்கங்கள் (1 வெள்ளி, 2 வெண்கலம்), பவர் லிஃப்டிங்கில் 1 வெள்ளியும் இந்தியாவுக்கு கிடைத்துள்ளன.

கடந்த 2-ஆம் தேதி தொடங்கி, திங்கள்கிழமையுடன் நிறைவடைந்த இப்போட்டியில் சுமார் 30 நாடுகளில் இருந்து 700-க்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டியில், மாற்றுத் திறனின் வகைப்படுத்துதல் அடிப்படையில் ஒரே விளையாட்டில் பல பிரிவுகளில் பந்தயங்கள், ஆட்டங்கள் நடைபெற்றன.

இந்திய விளையாட்டு ஆணையம் வெளியிட்ட தகவல்படி, தடகள விளையாட்டில் உயரம் தாண்டுதலில் பிரவீண் குமார் தங்கமும், ராகுல் வெள்ளியும் வென்றனர். நீளம் தாண்டுதலில் கரன்தீப் குமார் முதலிடமும், பிரவீண் குமார், தர்ஷ் சோனி 2-ஆம் இடமும் பெற்றனர். ஓட்டத்தில் 100 மீட்டர் பிரிவில் மீட் ததானி தங்கமும், தர்ஷ் சோனி வெண்கலமும் வென்றனர். 200 மீட்டரிலும் மீட் ததானி தங்கம் வெல்ல, 400 மீட்டரில் மாஃபி வெள்ளியும், பிஜு பென்னட் ஜார்ஜ் வெண்கலமும் பெற்றனர்.

ஈட்டி எறிதலில் விக்ரம் சிங் முதலிடம் பிடிக்க, சித்தார்த் 2-ஆம் இடம், லக்ஸித் 3-ஆம் இடம் பிடித்தனர். வட்டு எறிதலில் விகாஷ் பாட்டிவால் முதலிடமும், கார்திக் எம்.கிருஷ்ணா 3-ஆம் இடமும் பெற்றனர். குண்டு எறிதலில் விகாஷ் பாட்டிவால், அனன்யா பன்சால் ஆகியோர் வெள்ளி வெல்ல, மேதா ஜெயந்த், லக்ஸித், சஞ்ஜய் ஆர்.நீலம் ஆகியோர் வெண்கலம் வென்றனர்.

கிளப் எறிதலில் காஷிஷ் லக்ரா தங்கம் வெல்ல, நீச்சலில் தேவான்ஷி சதிஜா 1 வெள்ளியும், 2 வெண்கலமும் வென்றார். பவர் லிஃப்டிங்கில் ராகுல் ஜோக்ராஜ்யா வெள்ளி பெற்றார். பாட்மின்டனில் நித்யா, சஞ்ஜனா, பாலக் - சஞ்ஜனா ஜோடி, நேஹல் - அபிஜீத் ஜோடி ஆகியோர் தங்கம் வென்றனர்.

ஜோதி (2 பதக்கம்), நவீன், ஹார்திக் மக்கார், கரன் - ருதிக் இணை, நித்யா - ஆதித்யா இணை, ஹார்திக் - சஞ்ஜனா இணை ஆகியோர் வெள்ளி பெற்றனர். பாலக், நவீன் - ஹார்திக் இணை, சந்தியா, நேஹல் - பாலக் இணை வெண்கலம் பெற்றுள்ளனர்.

---

1. 22ஆவது ஏவுகலக்கப்பற்படை (கில்லர் ஸ்குவாட்ரன்) முறையாக எங்கு நிறுவப்பட்டது?



அ) மும்பை ☑

ஆ) விசாகப்பட்டினம்

இ) கோவா

ஈ) கொச்சின்

✓ 22ஆவது ஏவுகலக் கப்பற்படையானது 1999 அக்டோபரில் மும்பையில் முறையாக நிறுவப்பட்டது. இந்திய குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், 'கில்லர் ஸ்குவாட்ரான்' என்றும் அழைக்கப்படும் 22ஆவது ஏவுகலக் கப்பற்படைக்கு குடியரசுத்தலைவரின் தரத்தை வழங்குவார். குடியரசுத்தலைவரின் தரமானது சிறிய இராணுவப் பிரிவுக்கு வழங்கப்ப –டும் குடியரசுத்தலைவரின் வண்ண விருதைப்போன்ற கௌரவமாகும்.

---

2. ஆத்ம நிர்பார் கிரிஷக் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ள மாநிலம் எது?



அ) குஜராத்

ஆ) உத்தரப்பிரதேசம் ☑

இ) மத்திய பிரதேசம்

ஈ) மகாராஷ்டிரா

✓ உத்தரப்பிரதேச மாநில அரசானது 2021–22 முதல் மாநிலத்தில் ஆத்ம நிர்பார் கிரிஷக் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் அடுத்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தின் ஒவ்வொரு தொகுதியிலும் 1475 உழவர் உற்பத்தியாளர்க –ள் அமைப்புகள் உருவாக்கப்படும். மேலும், வேளாண் உள்கட்டமைப்பு நிதியின்கீழ் மத்திய அரசு ஒதுக்கியுள்ள ₹1000 கோடியை பயன்படுத்து –வதற்கான இலக்கை அடைவதற்கு இது உதவும்.

---

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கொன்யாக்குகள் என்போர், எந்த இந்திய மாநிலத்தின் மிகப்பெரிய பழங்குடியினத்தவராவர்?



அ) அசாம்

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

இ) நாகாலாந்து ☑

ஈ) மத்திய பிரதேசம்

✓ நாகாலாந்தின் ஓட்டிங் கிராமத்தில் இந்திய ஆயுதப்படையின் துப்பாக்கிச் சூட்டில் 14 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; இதில் மாநிலத்தின் மிகப்பெரிய பழங்குடியினரான கொன்யாக்களும் அடங்குவர். அவர்கள் நாகாலாந்தில் வாழும் கடுமையான போர்முறை பழங்குடியினராக அறியப்படுகிறார்கள். 1980ஆம் ஆண்டு வாக்கில், அவர்கள் எதிரிகளின் தலையைக் கொய்யும் பழக்கத்தைக் கைவிட்டனர். சுமார் 3 இலட்சம் மக்கள்தொகையுடன், அருணாச்சல பிரதேசம் மற்றும் மியான்மரின் சில பகுதிகளிலும் கொன்யாக்கள் வசித்து வருகின்றனர்.

---

4. இந்திய கடற்படையால் அண்மையில் தொடங்கப்பட்ட 'சந்தாயக்' என்றால் என்ன?



அ) ஆய்வுக்கப்பல் ☑

ஆ) ஏவுகல ஏவல் கப்பல்

இ) ஆம்பிபியஸ் போர் கப்பல்

ஈ) விமானந்தாங்கிக் கப்பல்

✓ இந்திய கடற்படை பயன்பாட்டுக்காக தயாரிக்கப்பட்ட 'சந்தாயக்' என்ற புதிய சர்வே கப்பல், ஹூக்ளி ஆற்று நீரில் இறக்கப்பட்டது. இந்திய கடற்படை பயன்பாட்டுக்காக நான்கு மிகப் பெரிய சர்வே கப்பல்களை கட்டுவதற்கான ஒப்பந்தம் பாதுகாப்புத்துறை அமைச்சகம் மற்றும் கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் & இன்ஜினியர்ஸ் ₹2,435 கோடி மதிப்பில் கடந்த 2018ஆம் ஆண்டு கையெழுத்தானது.

✓ இந்த ஆய்வுக் கப்பல்களின் முதன்மைப் பணியானது துறைமுகங்கள் பற்றிய முழு அளவிலான கடலோர மற்றும் ஆழ்கடல் ஆய்வுகளை மேற்கொள்வதாகும்.

---

5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற மின்ஸ்க் ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய நாடு எது?



அ) இஸ்ரேல்

ஆ) ஈரான்

இ) உக்ரைன் ☑

ஈ) ஆப்கானிஸ்தான்

✓ உக்ரைன் மீது படையெடுக்க வேண்டாம் என்று அமெரிக்கா சமீபத்தில் ரஷ்யாவை எச்சரித்துள்ளது. மேலும், கிழக்கு உக்ரைனில் ரஷ்ய மொழி பேசுபவர்களால் பிரிவினைவாத போரை முடிவுக்கு கொண்டுவர வடிவ –மைக்கப்பட்ட ஒப்பந்தங்களுக்கு இருநாடுகளும் திரும்ப வேண்டும் என்றும் அது வலியுறுத்தியது. 2014'இல், உக்ரைனும் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளும் பெலாரஸின் தலைநகரமான மின்ஸ்கில் 12 அம்ச போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டனர்.

✓ ரஷ்யா, உக்ரைன், OSCE ஆகியவற்றின் பிரதிநிதிகள் மற்றும் இரண்டு ரஷ்ய சார்பு பிரிவினைவாத பிராந்தியங்களின் தலைவர்கள் மின்ஸ்கில் 2015'இல் 13 அம்ச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இவை மின்ஸ்க் ஒப்பந்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

---

6. உறுப்பு தானம் மற்றும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான உலகளாவிய கண்காணிப்பு அமைப்பின்படி, உறுப்பு தானத்தில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ) முதலாவது

ஆ) மூன்றாவது ☑

இ) ஐந்தாவது

ஈ) ஏழாவது

✓ 'இந்திய உறுப்புதான நாள்' கொண்டாட்டம் தேசிய உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (NOTTO) மூலம் புது தில்லியில் நவம்பர் 27 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. நாட்டில், ஓராண்டுக்கு செய்யப்பட்ட உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை 2013'இல் 4990 ஆக இருந்து 2019'இல் 12746 ஆக அதிகரித்துள்ளது. தானம் மற்றும் மாற்று அறுவை சிகிச்சைக்கான உலகளாவிய கண்காணிப்பு (GODT) இணைய தளத்தில் உள்ள தரவுகளின்படி, அமெரிக்கா மற்றும் சீனாவிற்குப் பிறகு இந்தியா, உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

---

7. சவுரவ் கோசலுடன் தொடர்புடைய விளையாட்டு எது?



அ) சதுரங்கம்

ஆ) ஸ்குவாஷ் ☑

இ) மட்டைப்பந்து

ஈ) குத்துச்சண்டை

✓ இந்திய தொழிற்முறை ஸ்குவாஷ் வீரர் சவுரவ் கோசல் மலேசிய ஓபன் பட்டத்தை வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இறுதிப்போட்டியில், உலகின் முன்னாள் நெ:4 வீரரான கொலம்பியாவின் மிகுவல் ரோட்ரிகஸை வீழ்த்தி சவுரவ் கோசல் அந்தப் பட்டத்தை வென்றார். பல்வேறு சந்தர்ப்பங்களில், இரண்டு வீரர்களும் ஒன்றாக விளையாடியுள்ளனர். டேவிட் பால்மரால் இருவரும் பயிற்சி அளிக்கப் பெற்றுள்ளனர்.

---

8. மக்டலினா ஆண்டர்சன் என்பார் எந்த நாட்டின் முதல் பெண் பிரதமரானார்?



அ) ஐஸ்லாந்து

ஆ) ஸ்வீடன் ☑

இ) சுவிட்சர்லாந்து

ஈ) ஆஸ்திரேலியா

✓ மத்திய–இடதுசாரி சமூக ஜனநாயகக்கட்சியின் தலைவரான மக்டலினா ஆண்டர்சன் ஸ்வீடன் நாட்டின் முதல் பெண் பிரதமரானார். ஆனால், எதிர்க்கட்சியால் முன்மொழியப்பட்ட ஒருவருக்கு ஆதரவாக அவரது வரவுசெலவுத்திட்டம் நிராகரிக்கப்பட்டதையடுத்து, பிரதமரான சில மணி நேரங்களிலேயே அவர் இராஜினாமா செய்தார். தற்போது மக்டலினா ஆண்டர்சன் மீண்டும் அந்நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

9. 'வேதிப்போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான நினைவுநாள்' ஆனது ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) நவம்பர் 28



ஆ) நவம்பர் 30 ☑

இ) டிசம்பர் 2

ஈ) டிசம்பர் 4

✓ 'வேதிப்போரில் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான நினைவுநாளானது' நவ.30 அன்று ஐநா அவையால் அனுசரிக்கப்படுகிறது. வேதிப்போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்தச் சிறப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. இரசாயன ஆயுதங்களின் அச்சுறுத்தலை ஒழிப்பத –ற்காக இரசாயன ஆயுதங்களை தடைசெய்வதற்கான அமைப்பு (OPCW) எடுத்த உறுதிமொழியையும் இந்த நாள் சிறப்பித்துக் காட்டுகிறது.

10.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற அலிபூர் விலங்கியல் பூங்கா அமைந்துள்ள இந்திய மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) மத்திய பிரதேசம்



ஆ) பீகார்

இ) மேற்கு வங்கம் ☑

ஈ) உத்தர பிரதேசம்

✓ கொல்கத்தாவில் உள்ள அலிபூர் விலங்கியல் பூங்கா, விலங்குகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒரு மாத காலம் விலங்குகளைத் தத்தெடுக்கும் செயல்முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. விலங்கியல் பூங்காக்களில் நடைமுறையில் ஓராண்டு காலம் வரை விலங்குகளைத் தத்தெடுக்கும் செயல்முறை இருந்து வருகிறது.

✓ விலங்கியல் பூங்கா அதிகாரிகளின் கூற்றுப்படி, தத்தெடுப்பு கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மான்கள், புலிகள் மற்றும் சிம்பன்சிகள் போன்ற பிரபலமான விலங்குகள் தவிர, பிரபலமற்ற பறவைகள் மற்றும் விலங்குகளை தத்தெடுக்கவும் ஊக்குவிக்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. முப்படைத் தலைமைத் தளபதி விபின் ராவத், 12 பேர் பலி: குன்னூர் அருகே ராணுவ ஹெலிகாப்டர் விபத்து

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே நிகழ்ந்த இராணுவ ஹெலிகாப்டர் விபத்தில் முப்படைகளின் தலைமைத் தளபதி விபின் ராவத் (63), அவரின் மனைவி மதுலிகா உள்பட 13 பேர் டிச.8 அன்று உயிரிழந்தனர்.

விபத்து நடந்த ஆறு மணி நேரத்துக்குப் பிறகு இந்த விவரம், இந்திய விமானப் படைத் தரப்பில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

சூலூர் விமானப் படைத்தளத்திலிருந்து எம்ஐ17வி5 ரக ஹெலிகாப்டரில் விபின் ராவத், அவரின் மனைவி மதுலிகா ராவத், இராணுவ உயர் அதிகாரிகள் எல் எஸ் லிடர், ஹர்ஜிந்தர் சிங், குருசேவக் சிங், ஜிதேந்திர குமார், விவேக் குமார், சாய் தேஜா, ஹவில்தார் சத்பால், பிரித்விராஜ் எஸ் சௌஹான், தாஸ், பிரதீப் ஏ, கே சிங், வருண் சிங் ஆகிய 14 பேர் பயணித்தனர்.

மரத்தில் மோதிய ஹெலிகாப்டர்: சூலூரில் இருந்து புறப்பட்ட இந்த ஹெலிகாப்டர் வெலிங்டனை அடைய திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலையில், குன்னூர் அருகேயுள்ள காட்டேரி மலைப் பாதையை ஒட்டி அமைந்துள்ள நஞ்சப்பசத்திரம் பகுதி மேலே பறந்து கொண்டிருந்த போது திடீரென கட்டுப்பாட்டை இழந்து அங்கிருந்த மலைப்பகுதியில் இருந்த மரத்தில் ஹெலிகாப்டர் மோதி தீ விபத்துக்குள்ளானது.

குரூப் கேப்டன் வருண் சிங் 80% தீக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார். அவருக்கு வெலிங்டன் ராணுவ மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

---

2. 6 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை: உரிமைத் தொகைகளை அளித்தார் முதல்வர்

ஆறு தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கி அதற்கான உரிமைத் தொகைகளை குடும்பத்தினரிடம் முதல்வர் மு க ஸ்டாலின் அளித்தார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

தமிழ் வளர்ச்சித்துறைக்கான மானியக்கோரிக்கையில் தமிழ் அறிஞர்கள் சிலம்பொலி சு செல்லப்பன், முனைவர் தொ பரமசிவன், புலவர் இளங்குமரனார், முருகேசபாகவதர், சங்கரவள்ளி நாயகம், செ ராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு நூலுரிமைத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

---

3. தந்தையின் வழியில் பணியைத் தொடங்கிய விபின் ராவத்!

ஹெலிகாப்டர் விபத்தில் பலியான முப்படை தலைமைத் தளபதி விபின் ராவத், தந்தையின் பிரிவிலேயே ராணுவப் பணியைத் 1978–ஆம் ஆண்டு தொடங்கினார்.

பணியைத் தொடங்கிய ராவத்:

விபின் ராவத்தின் முழுப் பெயர் விபின் லக்ஷ்மண் சிங் ராவத் ஆகும். தேசிய பாதுகாப்பு அகாதெமி மற்றும் இந்திய ராணுவ அகாதெமியில் பட்டம் பெற்ற பிறகு, 1978–இல் இந்திய ராணுவத்தில் விபின் பணியில் சேர்ந்தார். 11–ஆவது கோர்க்கா ரை.ஃபிள்ஸின் 5–ஆவது பட்டாலியனாக அவருடைய தந்தை லக்ஷ்மண் சிங் ராவத் இருந்த நிலையில், அதே பிரிவில் விபின் ராவத்தும் சேர்க்கப்பட்டார்.

ராணுவத்தில் 40 ஆண்டு காலம் பணியில் பிரிகேட் கமாண்டர், ராணுவ தெற்கு படைப் பிரிவின் தலைமை அதிகாரி, ராணுவ நடவடிக்கை இயக்குநரக கிரேடு–2 அதிகாரி, ராணுவ செயலக பிரிவில் ராணுவச் செயலர், ராணுவ துணைச் செயலர், இளநிலை கமாண்ட் பிரிவில் முதுநிலை பயிற்றுவிப்பாளர் உள்ளிட்ட முக்கியப் பதவிகளை விபின் ராவத் வகித்துள்ளார்.

ஐநா அமைதி காக்கும் படையின் ஒருங்கிணைந்த பகுதியில் ஓர் உறுப்பினராகவும், காங்கோ ஜனநாயகக் குடியரசில் பன்னாட்டுப் படை அணிக்கு தலைமையும் வகித்துள்ளார். 2016–ஆம் ஆண்டு டிசம்பர் 17–ஆம் தேதி ஜெனரல் தல்பீர் சிங் சுஹாக்குக்குப் பிறகு நாட்டின் 27–ஆவது ராணுவத் தலைமைத் தளபதியாக பதவியேற்றார். அந்த பணியில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில், இந்தியாவின் முப்படைகளையும் ஒருங்கிணைக்கும் நோக்கத்தில் கடந்த 2019–ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட முப்படைகளின் தலைமைத் தளபதி பதவியில் நியமிகப்பட்டார்.

முக்கிய ராணுவ நடவடிக்கைகள்: இவருடைய தலைமையில் தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய ராணுவம் மிக முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறிப்பாக, இந்திய – பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தானின் அத்துமீறல்களுக்கு எதிரான இந்திய ராணுவம் கடும் நடவடிக்கைகளை எடுத்ததுடன், கடந்த 2019–ஆம் ஆண்டு இந்திய விமானப்படை பாகிஸ்தானின் பாலாகோட் பகுதியில் அதிரடித் தாக்குதலை நடத்தியது.

அதுபோல, டோக்லாம் எல்லைப் பகுதியில் சீனாவின் அத்துமீறலையும் இவருடைய தலைமையிலான இந்திய ராணுவம் திறம்படக் கையாண்டது. ராணுவ அதிகாரிகளிடையேயான தொடர் பேச்சுவார்த்தைகள் மூலமாக இந்திய – சீன ராணுவத்தினரிடையே நல்லுறவு ஏற்படுத்துதற்கான தீவிர முயற்சிகளை விபின் ராவத் எடுத்ததோடு, கூட்டு போர்ப் பயிற்சிகளையும் மேற்கொள்ள வழி வகுத்தார். இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளில் மாவோயிஸ்டுகளின் நடவடிக்கைகளைக் குறைப்பதில் முக்கியப் பங்காற்றினார்.

கடந்த 2016–ஆம் ஆண்டில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிக்குள் இந்திய ராணுவம் நடத்திய துல்லியத் தாக்குதலுக்கான திட்டமிடலிலும் விபின் ராவத் முக்கியப் பங்காற்றினார்.

சென்னைப் பல்கலையில் எம் பில்:

உத்தரகண்ட் மாநிலம் பௌரியில் 1958 ஆம் ஆண்டு மார்ச் 16–ஆம் தேதி பிறந்த விபின் ராவத், தேசிய பாதுகாப்பு அகாதெமி மற்றும் இந்திய ராணுவ அகாதெமியில் பட்டங்களைப் பெற்றதுடன், சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கல்வியில் எம் பில் படிப்பையும், மீரட் சௌத்ரி சரண் சிங் பல்கலைக்கழகத்தில் பிஎச் டி (ஆராய்ச்சி) படிப்பையும் முடித்துள்ளார். மேலாண்மை, கணினி துறைகளில் பட்டயப் படிப்புகளையும் மேற்கொண்டார்.

---

4. கோயில்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு திருமணம் இலவசம்: புதிய திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடக்கி வைத்தார்

கோயில்கள், அவற்றுக்குச் சொந்தமான மண்டபங்களில் மாற்றுத் திறனாளிகள் கட்டணம் இல்லாமல் திருமணம் செய்யும் புதிய திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை மானியக்கோரிக்கையில், மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருந்தால் அவர்களிடம் திருமணத்துக் –கான கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது எனவும், கோயிலுக்குச் சொந்தமான மண்டபத்தில் திருமணம் நடந்தால் பராமரிப்புக் கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், புதிய திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின், தொடக்கி வைத்தார். சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளி திருமணத் –துக்கு கட்டணம் இல்லை என்பதற்கான உத்தரவை முதல்வர் மு க ஸ்டாலின் அளித்தார். மேலும், திருமண வாழ்த்துகளுடன் பரிசுப் பொருள்களையும் அளித்தார்.

ஆறு மாற்றுத் திறனாளிகள் விருது: சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை ஒட்டி, தேசிய அளவிலான விருதினை தமிழகத்தைச் சேர்ந்த ஏ எம் வேங்கடகிருஷ்ணன், எஸ் ஏழுமலை, கே தினேஷ், மானகஷ்மா தண்டபாணி, கே ஜோதி, டி பிரபாகரன் ஆகியோருக்கு குடியரசுத் தலைவரால் தேசிய விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை முதல்வரிடம் காண்பித்து அவர்கள் வாழ்த்துப்பெற்றனர்.

1. அடல் வயோ அபியுதயா யோஜனா என்ற திட்டத்தைச் செயல்படுத்–துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்



ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) சிறுபான்மை விவகார அமைச்சகம்

✓ சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகமானது அடல் வயோ அபியுதயா யோஜனா (AVYAY) என்ற திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் நாடு முழுவதும் உள்ள மூத்த குடிமக்களின் நலனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ராஷ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனா, SACRED, IPSrC, SAPSrC போன்ற பல கூறுகளைக் கொண்டுள்ளது.

---

2. COVID சமயத்தில் தடையற்ற விமானப் பயணத்திற்காக சிவில் வான் போக்குவரத்து அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட இணைய தளத்தின் பெயர் என்ன?

அ) ஏர் சுவிதா ☑



ஆ) பாரத் டிராவல்

இ) பிரதான் மந்திரி ஏவியேஷன்

ஈ) வெல்கம் இந்தியா

✓ COVID காலத்தின்போது தடையற்ற விமானப் பயணத்திற்காக சிவில் வான் போக்குவரத்து அமைச்சகம் 2020 ஆகஸ்டில் 'ஏர் சுவிதா' என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியது. அண்மையில், ஓமைக்ரான் அச்சுறுத்தலை அடுத்து இந்தியாவிற்கு வரும் சர்வதேச பயணிகளுக்கு வசதியளிக்கும் நோக்கில், 'ஏர் சுவிதா' தளத்தில் தொடர்பில்லா சுய அறிவிப்பை விமானப் போக்குவரத்து அமைச்சகமும் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமும் கட்டாயமாக்கியுள்ளன. இந்தியாவிற்கு வரும் அனைத்து சர்வதேச பயணிகளுக்கும் தொந்தரவு இல்லாத, வரிசை இல்லாத மற்றும் வசதியான விமானப் பயணத்தை வழங்குவதை ஏர் சுவிதாவின் அமலாக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

3. அதன் 'Laser Communications Relay Demonstration (LCRD)'ஐ அறிமுகப்படுத்திய விண்வெளி நிறுவனம் எது?

அ) இஸ்ரோ



ஆ) NASA ☑

இ) புளூ ஆர்ஜின்

ஈ) ஸ்பேஸ் எக்ஸ்

✓ டிசம்பர் 7 அன்று, NASA தனது புதிய லேசர் கம்யூனிகேஷன்ஸ் ரிலே டெமான்ஸ்ட்ரேஷனை அறிமுகப்படுத்தியது. கேப் கனாவெரல் விண்வெளிப்படை நிலையத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட இது NASA'இன் முதல் லேசர் தகவல் தொடர்பு அமைப்பாகும்.

✓ LCRD ஆனது விண்வெளியில் ஒளியியல் தொடர்பைப் பரிசோதிக்க NASA'விற்கு உதவும். தற்போது, பெரும்பாலான NASA விண்கலங்கள் தரவுகளை அனுப்புவதற்கு ரேடியோ அலைவரிசை தொடர்புகளைப் பயன்படுத்துகின்றன. LCRD இரண்டு ஒளிசார் முனையங்களைக் கொண்டுள்ளது. ஒன்று பயனர் விண்கலத்திலிருந்து தரவைப் பெறுவது, மற்றொன்று தரை நிலையங்களுக்கு தரவை அனுப்புவது ஆகும்.

---

4. சர்வதேச 'IDEA'இன் ஆலோசகர் குழுவில் சேர அழைக்கப்பட்ட இந்திய அதிகாரி யார்?

அ) சுனில் அரோரா ☑



ஆ) P ராவத்

இ) A K ஜோதி

ஈ) நசிம் ஜைதி

✓ மக்களாட்சி மற்றும் தேர்தல் உதவிக்கான பன்னாட்டு நிறுவனத்தின் ஆலோசகர் குழுவில் சேர முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் சுனில் அரோராவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் சர்வதேச 'IDEA' என்றும் அழைக்கப்படுகிறது. இது நிலையான ஜனநாயகத்தை ஆதரிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

✓ கடந்த 1995'இல் நிறுவப்பட்ட இது, ஸ்வீடனின் ஸ்டாக்ஹோமில் உள்ள ஓர் அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். சர்வதேச 'IDEA'இல் தற்போது 34 உறுப்புநாடுகள் உள்ளன.

---

5. 'உலக மலேரியா அறிக்கை – 2021'இன்படி, கடந்த 2020'இல் மதிப்பிடப்பட்ட மலேரியா இறப்புகளின் எண்ணிக்கை என்ன?

அ) 1.27 இலட்சம்



ஆ) 2.27 இலட்சம்

இ) 4.27 இலட்சம்

ஈ) 6.27 இலட்சம் ☑

✓ உலக மலேரியா அறிக்கை 2021 உலக சுகாதார நிறுவனத்தால் (WHO) வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, 2020ஆம் ஆண்டில் மலேரியாவைக் கையாளுவதற்கான உலகளாவிய முயற்சிகள் COVID –19 காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டன. கடந்த 2020'இல் 627,000 மலேரியா இறப்புகள் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது, இது 2019'ஐவிட 12% அதிகமாகும். விரைவான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், உலகம் (குறிப்பாக ஆப்பிரிக்காவில்) இந்நோயின் உடனடி பரவலைக் காணும் என இந்த அறிக்கை எச்சரிக்கிறது.

---

6. 'உணவு & உழவின் நிலை (SOFA) 2021' என்ற அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) உணவு & உழவு அமைப்பு ☑

ஆ) நபார்டு

இ) NITI ஆயோக்

ஈ) உலக வங்கி

✓ உணவு & உழவு அமைப்பானது 'உணவு மற்றும் வேளாண்மை நிலை – 2021' என்ற அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, முக்கியமான போக்குவரத்து இணைப்புகளுக்கு இடையூறு ஏற்பட்டால், 845 மில்லியன் மக்களுக்கான உணவு செலவுகள் அதிகரிக்கும். உணவுப்பாதுகாப்பை பூர்த்தி செய்ய வேளாண் உணவு முறைகளை நெகிழ வைக்க வேண்டியதன் அவசியத்தையும் இது எடுத்துக்காட்டியது.

---

7. Y–8Q நீர்மூழ்கி எதிர்ப்பு போர் விமானத்தை காட்சிப்படுத்திய நாடு எது?

அ) இஸ்ரேல்



ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

இ) சீனா ☑

ஈ) ரஷ்யா

✓ சீனா அண்மையில் Y–8Q நீர்மூழ்கி எதிர்ப்பு போர் விமானத்தை காட்சிப்படுத்தியது. மக்கள் விடுதலை இராணுவக் (PLA) கடற்படையின் Y–8Q விமானம் KQ–200 என்றும் அழைக்கப்படுகிறது.

✓ தைவானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஆழமான ஈடுபாட்டின் மத்தியில் இது அறிமுகப்படுத்தப்பட்டது. குறைந்தபட்சம் ஐந்து சீன போர் விமானங்கள் அதன் வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்தில் (AIDZ) நுழைந்ததாக தைவான் தெரிவித்துள்ளது.

---

8. இந்திய வான் படையின் இராணுவ விமானங்களில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள 'பயோ–ஜெட்' எரிபொருளை உருவாக்கிய நிறுவனம் எது?

அ) இந்திய பெட்ரோலிய நிறுவனம் ☑

ஆ) இந்திய மண் & நீர் பாதுகாப்பு நிறுவனம்

இ) இந்திய தொலையுணரி நிறுவனம்

ஈ) பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிட்

✓ இந்திய பெட்ரோலிய நிறுவனம் (CSIR–IIP), அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி கவுன்சிலின் ஓர் அங்கமான இவ்வாய்வகமானது 'பயோ–ஜெட்' எரிபொருளை உருவாக்கியுள்ளது. இந்திய வான்படையின் இராணுவ விமானங்களில் பயன்படுத்துவதற்கு இராணுவ விமானத்தகுதி மற்றும் சான்றிதழுக்கான மையத்தால் (CEMILAC) இது முறையாக அங்கீகரிக்க –ப்பட்டுள்ளது. இது DRDO'இன்கீழுள்ள ஓர் ஒழுங்குமுறை அமைப்பாகும்.

---

9. 2021 – இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் வெள்ளிப் பதக்கம் பெற்ற 'ஹுனார் ஹாத்'தை ஏற்பாடு செய்த அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் ☑

இ) பாதுகாப்பு அமைச்சகம்

ஈ) திறன் மேம்பாட்டு அமைச்சகம்

✓ 'ஹுனார் ஹாத்' என்பது இந்திய கைவினைஞர்களின் நிபுணத்துவத்தை வெளிப்படுத்துவதற்கும், "பாரம்பரிய கலைகள் / கைவினைகளுக்கான திறன்களை மேம்படுத்துதல் மற்றும் மேம்பாட்டுக்கான பயிற்சி (USTAAD)" என்பதன்கீழ் வேலைவாய்ப்புகளை ஆராய்வதற்கும் மத்திய சிறுபான்மை விவகார அமைச்சகத்தால் நடத்தப்படும் ஒரு தளமாகும்.

✓ சமீபத்தில், தில்லியில் 33ஆவது 'ஹுனார் ஹாத்' ஏற்பாடு செய்யப்பட்டது. அது, 2021ஆம் ஆண்டின் இந்திய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் வெள்ளிப்பதக்கம் வென்றது.

---

10. 2021 டிசம்பர்.10 முதல் இந்திய சர்வதேச அறிவியல் விழா எங்கு நடைபெறவுள்ளது?

அ) மும்பை

ஆ) லக்னோ

இ) வாரணாசி

ஈ) கோவா ☑

✓ 2021 – இந்திய சர்வதேச அறிவியல் விழாவானது, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், மத்திய புவி அறிவியல் அமைச்சகம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனமான விஞ்ஞான பாரதி ஆகியவற்றால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டு, 2021 டிசம்பர் 10 முதல் 4 நாட்களுக்கு கோவாவில் நடைபெறவுள்ளது. இந்த ஆண்டுக்கான (2021) விழாவில் அறிவியல் திரைப்பட விழா, அறிவியல் இலக்கிய விழா, பொறியியல் மாணவர் விழா, கிராமிய விழா போன்றவை இடம்பெறும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அணைப் பாதுகாப்பு மசோதா நிறைவேற்றியதன் மூலம் அணைகள் பாராமரிப்புக்கு உலக வங்கியின் நிதியுதவி கிடைக்கும்

அணை பாதுகாப்பு மசோதா நிறைவேற்றியதன் மூலம், உலக வங்கி மூலம் நிதியுதவி கிடைக்கும். இதன் மூலம் அணை மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் (டிஆர்ஐபி) கீழ் தமிழகம் உள்பட நாட்டிலுள்ள அணைகளில் புரனமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் மக்களவையில் வியாழக்கிழமை தெரிவித்தார்.

மேலும், இந்த புரனமைப்பில் நீரியல் பாதுகாப்பு, ஹைட்ரோ–மெக்கானிக்–கல் நடவடிக்கைகள், நீர்க்கசிவு குறைப்பு, கட்டமைப்பு நிலைத் தன்மை–யை மேம்படுத்துதல் போன்ற பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதில் அணைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்கு புதிய கட்டுமானப் பொருள்கள் வழங்கப்படுவதோடு அணைகளைக் கண்காணிக்க பல நவீன கருவிகளும் வழங்கப்படுகிறது என்று அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

மக்களவை பாஜக உறுப்பினர் ஹீனா காவித் உள்ளிட்டோர் நதிகள் இணைப்பு குறித்த கேள்விக்கு அமைச்சர் ஷெகாவத் பதிலளித்த போது நீலகிரி மக்களவைத் திமுக உறுப்பினர் ஆ ராசா துணைக் கேள்வி எழுப்பினர்.

திமுக உள்ளிட்ட கட்சிகளின் எதிர்ப்புகளுக்கிடையே நாடாளுமன்ற அணைப்பாதுகாப்பு மசோதா இரு அவையிலும் நிறைவேற்றப்பட்டது. இது தவறோ, சரியோ, ஆனால் மசோதா நிறைவேற்றத்தின் போது நடைபெற்ற விவாதத்தில் அமைச்சர் முக்கியமான விஷயம் ஒன்றை குறிப்பிட்டார். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம், அணை மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி அளிக்கும் என்றார். இதில் தமிழகத்திற்கு எவ்வளவு கிடைக்கும் எந்தெந்த தமிழக அணைகளுக்குத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது என்று ராசா கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் பேசுகையில், 'அணை மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் முதற் கட்டப் பணிகள் தொடங்கியுள்ளன. அணைகளை புரனமைக்க ஒத்துக்கொண்ட மாநிலங்களில் உள்ள அணைகளில் இரண்டாம், மூன்றாம் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கு உலக வங்கியின் நிதியுதவி கிடைக்கும். இந்த நிதியுதவி மூலம் நாட்டில் உள்ள 700 அணைகளுக்கு ₹10,000 கோடி வரை செலவிட திட்டமிடப்ப–ட்டுள்ளது என்பது ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழக அணைகளும் இடம்பெற்றுள்ளன. இது குறித்த விவரங்கள் உடனடியாக இல்லை. நிச்சியமாக பின்னர் தெரிவிக்கப்படும்' என்றார் அமைச்சர்.

---

2. தமிழகத்தில் 53 சதவீத திடக்கழிவுகள் மறுசுழற்சி

தமிழகத்தில் 53% திடக்கழிவுகள் மறுசுழற்சிக்கு பயன்படுத்தப்படுவதாக மக்களவையில் நகர்ப்புற வீட்டு வசதித்துறை இணையமைச்சர் கௌசல் கிஷோர் எழுத்துமூலம் அளித்த பதிலில் தெரிவித்தார்.

இது தொடர்பான பதிலில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

நகர்ப்புறங்களின் திறந்தவெளிக் கழிப்பிடம் இல்லாத நிலையை உருவாக்குவது, திடக்கழிவுகளை மறுசுழற்சிக்குப் பயன்படுத்தப்படுவது ஆகிய நோக்கத்திற்காக 2014 அக்டோபர்.2ஆம் தேதி தொடங்கப்பட்டது தூய்மை இந்தியா நகர்ப்புறத் திட்டம். இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் உள்ள 4,372 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், 4,371 (மேற்கு வங்க மாநிலம் புருலியா தவிர) திறந்த வெளிக்கழிப்பிடம் இல்லாத அமைப்புகளாக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு 18 சதவீதமாக இருந்த நகர்ப்புற திடக்கழிவு மறுசுழற்சி தற்போது 70 சதவீதமாக அதிகரித்துள்ளது. சண்டிகர், சத்தீஸ்கர், ஹிமாசலப்பிரதேசம், ஆகிய மாநிலங்களில் இது 100 சதவீதமாக உள்ளது.

---

3. நகர்ப்புற வசதிகளை மேம்படுத்த ₹2,645 கோடி கடன்: ஆசிய வங்கி ஒப்புதல்

நகர்ப்புற வசதிகளை மேம்படுத்த உதவியாக இந்தியாவுக்கு ₹2,644.85 கோடி மதிப்பிலான கடனை வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளதாக ஆசிய மேம்பாட்டு வங்கி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த வங்கி வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:

இந்தியாவில் நகர்ப்புற வசதிகளை மேம்படுத்த ஏதுவாக 35 கோடி டாலர் (₹2,645 கோடி) கடன் உதவி அளிக்கும் திட்டத்துக்கு ஆசிய வங்கி அனுமதியை வழங்கியுள்ளது. குழாய்மூலம் குடிநீர் விநியோகிப்பது, சுகாதார கட்டமைப்புகளை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவது உள்ளிட்ட நகர்ப்புறங்களில் செயல்படுத்த திட்டமிட்டுள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் கொள்கைகளுக்கு இந்தக் கடன் உதவிகரமாக இருக்கும்.

மேலும், புலம்பெயர்ந்து வந்த தொழிலாளர்கள், ஏழைகள் உள்ளிட்ட அனைவருக்கும் வீட்டு வசதியை ஏற்படுத்தி தருவது, நகர்ப்புற மாறத்துக்கான அம்ருத் 2.0 ஆகிய திட்டங்களை செயல்படுத்துவதும் இக்கடனுதவி திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். பொருளாதாரத்தில் பின்தங்கியோர், குறைந்த வருமான பிரிவினர் உள்ளிட்ட நகர்ப்புற ஏழைகள் இந்தத் திட்டத்தால் பெரிதும் பயனடைவர்.

இந்தியாவின் நகர்ப்புற மக்கள் தொகை தற்போது 46 கோடியாக உள்ளது. இது, உலகின் இரண்டாவது மிகப்பெரிய எண்ணிக்கையாகும். ஆண்டு வளர்ச்சி விகிதம் 2 சதவீதம் என்பதன் அடிப்படையில் வரும் 2030ஆம் ஆண்டுக்குள் இந்திய நகர்ப்புற மக்கள்தொகை 60 கோடியை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக ஏடிபி தெரிவித்துள்ளது.

---

4. நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலை விபத்துகளில் 48,000 பேர் உயிரிழப்பு:

நாடு முழுவதும் கடந்த ஆண்டு தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்பட்ட சாலை விபத்துகளில் 48,000 பேர் உயிரிழந்ததாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் இந்த தகவல்களை ஒன்றிய சாலை போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்கரி வெளியிட்டார்.

விரைவு சாலைகள் உள்பட தேசிய நெடுஞ்சாலைகளில் நிகழ்ந்துள்ள சாலை விபத்துகளுக்கான பல்வேறு காரணங்களையும் அவர் பட்டியலிட்டுள்ளார். கேள்வி ஒன்றிற்கு அவர் அளித்துள்ள எழுத்துப்பூர்வ பதிலில், வாகனங்களின் வடிவமைப்பு, சாலை அமைக்கப்பட்ட பொறியியல் காரணங்கள், மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியது, போதை பொருள் உட்கொண்டது, அதிவேகம், தவறான பக்கத்தில் வாகனத்தை ஓட்டி சென்றது, சிவப்பு விளக்கை எரியவிட்டதில் ஏற்பட்ட

தவறு உள்ளிட்ட காரணங்களால் சாலை விபத்துகள் நேரிட்டதாக நிதின் கட்கரி கூறியுள்ளார்.

2019ம் ஆண்டு விரைவு சாலைகள் உள்பட, தேசிய நெடுஞ்சாலைகளில் நிகழ்ந்த சாலை விபத்துகளில் 53,872 பேர் மரணமடைந்ததாக அவர் தெரிவித்திருக்கிறார். விபத்துகளை தவிர்க்கவும், சாலை பாதுகாப்புகளை மேம்படுத்தவும், வாகனங்கள் வடிவமைப்பு முதல் பல்வேறு கட்டங்களில் தணிக்கை செய்வது குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கப்பட இருப்பதாக நிதின் கட்கரி கூறியுள்ளார். இதற்காக தனியார் வல்லுனர்களின் உதவி நாடப்பட்டுள்ளதாக நிதின் கட்கரி கூறியுள்ளார்.

---

5. சுயசரிதையை வெளியிட்ட உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய்

அஸ்ஸாம் மாநிலம், திப்ரூகரைச் சேர்ந்த ரஞ்சன் கோகோய், உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக கடந்த 2018, அக்.3ஆம் தேதி முதல் 2019, நவ.17ஆம் தேதி வரை பதவி வகித்தார். பதவிக்காலம் முடிவதற்கு சில நாள்களுக்கு முன் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அயோத்தி நில வழக்கில் தீர்ப்பளித்தார். தற்போது மாநிலங்களவை உறுப்பினராக உள்ளார். இவர் 'ஜஸ்டிஸ் ஃபார் தி ஜட்ஜ்' என்ற தனது சுயசரிதையை வெளியிட்டுள்ளார்.

---

6. காமன்வெல்த் பளுதூக்குதல்: ஜிலி தலபெஹராவுக்கு வெள்ளி

உஸ்பெகிஸ்தானில் நடைபெறும் காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிருக்கான 49 கிலோ பிரிவில் இந்தியாவின் ஜிலி தலபெஹரா வெள்ளிப் பதக்கம் வென்றார். அவர் ஸ்னாட்ச் பிரிவில் 73 கிலோ, கிளீன் & ஜெர்க் பிரிவில் 94 கிலோ என மொத்தமாக 167 கிலோ எடையைத் தூக்கி 2ஆம் இடம்பிடித்தார். ஜிலி ஒரு கிலோ எடை வித்தியாசத்தில் தங்கப்பதக்கத்தை தவறவிட்டார். அவரது பிரிவில் நைஜீரிய வீராங்கனை பீட்டர் ஸ்டெல்லா கிங்ஸ்லி 168 கிலோ (72+96) எடையைத் தூக்கி முதலிடம் பிடித்தார்.

முன்னதாக, டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற சாய்கோம் மீராபாய் சானு இந்த எடைப்பிரிவில் இந்தியாவின் சார்பில் பங்கேற்க இருந்தார். எனினும், இந்தப்போட்டியையொட்டி உலக சாம்பிய –ன்ஷிப்பும் நடைபெறுவதால், அதில் பங்கேற்பதற்காக இந்தப் போட்டியிலிருந்து சானு விலகினார். இதையடுத்து அந்த எடைப் பிரிவில் ஜிலி களம் கண்டு வெள்ளி வென்றுள்ளார்.

இந்த காமன்வெல்த் சாம்பியன்ஷிப்பானது, அடுத்த ஆண்டு பிர்மிங்ஹாம் நகரில் நடைபெற இருக்கும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்கு தகுதிபெறுவதற்கான போட்டியாக உள்ளது. இந்தப் போட்டியில் தங்கப்பதக்கம் வெல்வோர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்கு நேரடியாகத் தகுதிபெறுவார்கள். இதர போட்டியாளர்கள் காமன்வெல்த் ரேங்கிங் அடிப்படையில் தகுதிபெறுவர். காமன்வெல்த் ரேங்கிங்கில் தற்போது முதலிடத்தில் இருக்கும் சானு, காமன்வெல்த் போட்டிக்கு நேரடியாகத் தகுதிபெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

1. இந்தியாவில் ESG அறிக்கையை வெளியிட்ட முதல் வானூர்தி சேவை நிறுவனம் எது?

அ) ஏர் இந்தியா

ஆ) ஸ்பைஸ் ஜெட்

இ) இண்டிகோ ☑

ஈ) விஸ்தாரா

✓ ESG அறிக்கையை வெளியிட்ட இந்தியாவின் முதல் விமான நிறுவனம் இண்டிகோ ஆகும். இந்தியாவிலும் உலகெங்கிலும் நிலையான விமான எரிபொருளை பயன்படுத்துவதில் கைகோர்ப்பதற்காக டேராடூனின் CSIR–இந்திய பெட்ரோலிய நிறுவனத்துடனான (CSIR–IIP) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக IndiGo அறிவித்துள்ளது.

✓ இந்தக் கூட்டாண்மையின்கீழ், IndiGo மற்றும் CSIR–IIP ஆகியவை தொழில்நுட்ப–வணிக சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் SAF'க்கான திட்டங்களுக்கான ஏற்பாடுகளைத் தொடங்கும். சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றிலும் அவர்கள் கவனஞ்செலுத்துவார்கள்.

---

2. 2021ஆம் ஆண்டு நிலவரப்படி உலகின் மிகவும் மதிப்புமிக்க கல்வி தொழில்நுட்ப நிறுவனம் எது?

அ) டியோலிங்கோ

ஆ) பைஜூ'ஸ் ☑

இ) டிரைபல்–லேனிங்

ஈ) கோர்ஸெரா

✓ பெங்களூரைச்சார்ந்த பைஜூ'ஸ் ஒரு இந்திய பன்னாட்டு கல்வி தொழில் நுட்ப (ed–tech) நிறுவனமாகும். இது $18 பில்லியன் சந்தை முதலீட்டுடன் உலகின் மிகவும் மதிப்புமிக்க கல்வி தொழில் நுட்ப நிறுவனமாக உள்ளது. பைஜூ'ஸ் ஆஸ்திரியாவை தலைமையிடமாகக் கொண்ட ஜியோஜிப்ராவை சுமார் $100 மில்லியன் மதிப்பிற்கு வாங்கியது. Geo Gebra என்பது ஒரு அளவளாவும் கணிதக் கற்றல் கருவியாகும். இது பைஜூஸின் ஒன்பதாவது பெரிய கையகப்படுத்தல் ஆகும்.

3.கீழ்காணும் எந்த நகரத்தில், டிசம்பர் 8, 1985 அன்று சார்க் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது?

அ) புது தில்லி

ஆ) டாக்கா ☑

இ) காத்மாண்டு

ஈ) கொழும்பு

✓ பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (சார்க்) பட்டய நாள் ஒவ்வோர் ஆண்டும் டிச.8 அன்று அனுசரிக்கப்படுகிறது. 1985'இல் இதே நாளில், அக்குழுவின் முதல் உச்சிமாநாட்டின்போது, டாக்காவில் 'சார்க் சாசனம்' ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு, மண்டலக் குழுவின் 37ஆவது ஆண்டு விழாவும் கொண்டாடப்படுகிறது. 1985 முதல் 18 உச்சி மாநாடுகளை சார்க் ஏற்பாடு செய்துள்ளது.

---

4. பிரதமர் ஆவாஸ் யோஜனா (கிராமப்புறம்) திட்டத்தை 2021 முதல் எந்த ஆண்டு வரை தொடருவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

அ) 2023

ஆ) 2024 ☑

இ) 2025

ஈ) 2030

✓ மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் கருத்துருவான பிரதமர் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தை (PMAY–G) 2021 மார்ச்சுக்கு பின்னர் 2024 மார்ச் வரை தொடர்ந்து செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளிக்கப் –பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் முடிக்கப்பட வேண்டிய 2.95 கோடி வீடுகள் இலக்கை எட்டுவதற்கு ஏற்றவகையில் இந்தத்திட்டம் நீட்டிப்பு செய்யப்படுகிறது. அனைத்து கிராமப்புற பகுதிகளிலும் வீட்டுவசதியை உறுதி செய்ய இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

---

5. குனோ தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?

அ) உத்தரப்பிரதேசம்

ஆ) அருணாச்சல பிரதேசம்

இ) ஹரியானா

ஈ) மத்திய பிரதேசம் ☑



✓ உலகின் மிகப்பெரிய கண்டங்களுக்கு இடையேயான விலங்கு இட மாற்றம் ஒன்றில், மத்திய பிரதேச மாநிலத்தின் குனோ தேசியப்பூங்கா 2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 13 ஆப்பிரிக்க சிறுத்தைகளைப் பெறவுள்ளது. கடந்த 1952ஆம் ஆண்டில் கடைசியாக எஞ்சியிருந்த ஒரு சிறுத்தையும் சத்தீஸ்கரில் வேட்டையாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

---

6. மெரியம்–வெப்ஸ்டரால் "நடப்பு 2021ஆம் ஆண்டின் சொல்லாக" தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் எது?

அ) Vaccine (தடுப்பூசி) ☑

ஆ) Quarantine (தனிமைப்படுத்துதல்)

இ) Infection (தொற்று)

ஈ) Isolation (தனித்திருத்தல்)



✓ மெரியம்–வெப்ஸ்டர் என்பது பார்வையங்களை குறிப்பாக அகராதிகளை வெளியிடுகிற ஓர் அமெரிக்க நிறுவனமாகும். இந்நிறுவனம் அமெரிக்க நாட்டின் பழமையான அகராதி வெளியீட்டாளர்களுள் ஒன்றாகும்.

✓ மெரியம்–வெப்ஸ்டர் 'Vaccine' என்ற சொல்லை 2021ஆம் ஆண்டின் சொல்லாகத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்தச்சொல், 2021ஆம் ஆண்டில் மிக அதிகமாக தேடப்பட்ட சொல்லாகும்.

---

7. 'டிரேட் எமர்ஜ்' என்பது எந்த வங்கியின் ஆன்லைன் தளமாகும்?

அ) எஸ் பி ஐ

ஆ) ஐசிஐசிஐ ☑

இ) ஆக்சிஸ் வங்கி

ஈ) யூனியன் பேங்க் ஆப் இந்தியா

✓ ஐசிஐசிஐ வங்கி 'டிரேட் எமர்ஜ்' என்ற ஆன்லைன் தளத்தை அறிமுகம் செய்துள்ளது. இது இந்தியா முழுவதுமுள்ள ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு வங்கி மற்றும் பிற டிஜிட்டல் சேவைகளை வழங்குகிறது. இந்த இயங்குதளமானது எல்லைதாண்டிய வர்த்தகத்தை தொந்தரவு இல்லாததாகவும் வசதியாகவும் ஆக்குகிறது மற்றும் பல்வேறு ஏற்றுமதி – இறக்குமதி சேவைகளுக்கான ஒரு தொடர்புப் புள்ளியாக செயல்படுகிறது.

---

8. அதன் புகழ்பெற்ற செர்ரிப்பூக்கள் விழாவை சமீபத்தில் நடத்திய இந்திய மாநிலம் எது?

அ) அருணாச்சல பிரதேசம்

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

இ) மேகாலயா ☑

ஈ) மேற்கு வங்காளம்



✓ ஷில்லாங்கின் புகழ்பெற்ற செர்ரிப்பூக்கள் திருவிழா இவ்வாண்டு நவ.25 –27 வரை நடைபெற்றது. கடந்த ஆண்டு COVID தொற்று காரணமாக இத்திருவிழா ரத்து செய்யப்பட்டது. மேகாலயா முதல்வர் கார்னாட் சங்மா டுவிட்டரில் இந்தத் திருவிழா குறித்து அறிவித்தார். மேகாலயாவின் தலைநகரமான ஷில்லாங்கில் பல செர்ரிப்பூக்கள் காணப்படுகின்றன. இத்திருவிழாவில் பல்வேறு போட்டிகள், நிகழ்ச்சிகள் மற்றும் பிற கலை நிகழ்வுகளும் நடத்தப்படுகின்றன.

---

9. 'சர்ச்சைக்குரிய தீர்ப்பின் எதிர்காலத்தை வடிவமைத்தல்' என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) NALSA

ஆ) NITI ஆயோக் ☑

இ) NHRC

ஈ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

- ✓ "Designing the future of dispute Resolution: the ODR Policy Plan for India" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை NITI ஆயோக் வெளியிட்டது. ODR'ஐ ஏற்றுக்கொள்வதில் உள்ள சவால்களை எதிர்கொள்ள மூன்று நிலைகளிலான நடவடிக்கைகளை NITI ஆயோக் முன்மொழிந்தது.
- ✓ டிஜிட்டல் உட்கட்டமைப்பு, கட்டட திறன், ஒழுங்குமுறை கட்டமைப்பு, ஆன்லைன் ஆவண எழுத்துப்பதிவு அனுமதி உள்ளிட்டவற்றை அதிகரி –ப்பதை இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

---

10. சமீப செய்திகளில் இடம்பெற்ற APICA திட்டத்துடன் தொடர்புடை –ய துறை எது?

அ) பனி ஆய்வு ☑

ஆ) விண்வெளி ஆய்வு

இ) செயற்கை நுண்ணறிவு

ஈ) கிரிப்டோகரன்சி



- ✓ European Project for Ice Coring in Antarctica (EPICA) என்பது ஐரோப்பிய ஆணையத்தால் நிதியளிக்கப்பட்ட மிகப்பழமையான பனி ஆய்வு திட்டம் ஆகும். இது Cnrஇன் துருவ அறிவியல் நிறுவனம் (இத்தாலியின் தேசிய ஆராய்ச்சி கவுன்சில்) & பிரிட்டிஷ் அண்டார்டிக் சர்வே ஆகியவற்றால் மேற்கொள்ளப்படுகிறது.
- ✓ அண்டார்டிகாவில் உள்ள மிகப் பழைமையான தொடர்ச்சியான பனிக் கட்டியை சேகரிப்பதை இந்தத்திட்டம் நோக்கமாகக்கொண்டுள்ளது. இது, 1.5 மில்லியன் ஆண்டு காலநிலை குறித்த பதிவை வழங்குகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பாரதி ஆய்வாளர்'கள் ஆறு பேருக்கு விருதுகள்:

பாரதி ஆய்வாளர்' சீனி.விசுவநாதன் உள்பட பாரதியார்' குறித்த ஆய்வுப் பணிகளைச் செய்த 6 பேருக்கு விருதுகளை முதல்வர்' மு.க.ஸ்டாலின் வழங்கினார்'. தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், பாரதி ஆய்வாளர்'களுக்கு விருதுகளை அவர்' அளித்தார்'.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:

மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் பற்றியும் ஆய்வு செய்த மூத்த ஆய்வாளர்'களான சீனி.விசுவநாதன், பேராசிரியர்' ய.மணிகண்டன் ஆகியோருக்கும், மறைந்த ஆய்வாளர்'கள் பெரியசாமித் தூரன், ரா.அ.பத்மநாபன், தொ.மு.சி.ரகுநாதன், இளசை மணியன் ஆகியோரின் நினைவாக அவரது குடும்பத்தினருக்கும் தலா ரூ.3 லட்சமும், விருதும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என முதல்வர்' மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே அறிவித்திருந்தார்'. இந்த அறிவிப்பின்படி, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சீனி விசுவநாதன், ய.மணிகண்டன் ஆகியோர்' தலா ரூ.3 லட்சம் காசோலை மற்றும் பாரதி நினைவு நூற்றாண்டு விருதுகளைப் பெற்றனர்'.

---

2. 11 டிசம்பர் 2021 – 'மகாகவி' பாரதியாரின் 140 ஆவது பிறந்தநாள்.

---

3. ரூ.20 கோடி மதிப்பீட்டில் பள்ளிக்கரணை சதுப்புநில சூழலியல் பூங்கா: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்

ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சென்னை பள்ளிக்கரணை சதுப்புநில சூழலியல் பூங்காவை முதல்வர் ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இதுகுறித்துத் தமிழக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

"முதல்வர் ஸ்டாலின் இன்று (10.12.2021) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் சென்னை, பள்ளிக்கரணையில் 2.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சதுப்புநில சூழலியல் பூங்காவைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

சதுப்பு நிலம் என்பது ஆண்டு முழுவதும் ஈரப்பதத்துடன் கூடிய நிலங்களில் சிறு குறு தாவரங்களும், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் பறவைகள் வசிக்கக்கூடிய பகுதியாகும். இச்சதுப்பு நிலம் வெள்ளத்தைத் தணித்தல், நிலத்தடி நீர் சேமிப்பை மேம்படுத்துதல், கரிபொருள் வரிசைப்படுத்துதலுக்கு உதவுதல், உயரிய பல்லுயிர்களை ஆதரித்தல், பொழுதுபோக்கு, கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவுதல் போன்ற பணிகளுக்கு உதவுகிறது.

தமிழ்நாடு வனத்துறையின் கட்டுப்பாட்டில் 700 ஹெக்டர் பரப்பளவில் பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதி சென்னை மாநகரின் இடையே இயற்கை அழகுடன் காணப்படுகிறது. சென்னை மாநகரத்தில் பெருமழைக் காலத்தில் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் வெள்ளநீர் வடிகால் பகுதியாக இருந்து வருகிறது. இச்சதுப்புநிலம் சுமார் 231 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள நீரை ஒக்கியமடுவு மற்றும் கோவளம் ஆகிய இரண்டு நீர் வெளியேற்றும் கால்வாய் மூலம் வங்காள விரிகுடாவில் கலக்க உதவுகிறது.

இச்சதுப்பு நிலப் பகுதியில் 176 வகையான பறவையினங்கள், 10 வகையான பாலூட்டிகள், 21 வகையான ஊர்வன இனங்கள், 10 வகையான நிலநீர் வாழ்வினங்கள், 50 வகையான மீன் இனங்கள், 9 வகையான நத்தையினங்கள், 5 வகையான ஒட்டுமீன் இனங்கள் மற்றும் 14 வகையான வண்ணத்துப் பூச்சிகள் ஆகிய உயிரினங்களின் வாழ்விடமாகவும், ஒட்டுமொத்தமாக 459 வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பரவலுக்கு உதவிகரமாக அமைந்துள்ளது.

2019–20ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,65,313 பறவைகள் இச்சதுப்பு நிலப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளன. பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தின் வடமேற்குப் பகுதியில் பள்ளிக்கரணை சதுப்புநில சூழலியல் பூங்கா அமைத்திட தமிழக அரசால் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இச்சதுப்பு நிலத்தினைப் பாதுகாத்திட சுமார் 1,700 மீட்டர் தூரத்திற்கு பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டதுடன், பொதுமக்கள் பார்வைக்காகவும் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதின் நோக்கத்திற்காகவும் பசுமையான பொது இடம் (PUBLIC GREEN SPACE) அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பயன்பெறும் வகையில், பார்வையாளர்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு நடைபாதை, சதுப்பு நிலத்தின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் விவரம், மீன் இனங்கள் பட்டாம்பூச்சி வகை, பறவையினங்கள், பல்லுயிர்ப் பரவல் மற்றும் அதன் வளம் குறித்த விவரங்களை விளக்கும் வகையில் கருத்தியல் அடையாளங்கள் மற்றும் மாதிரிகள், சூழலியல் பூங்காவில் அழகியலை மேம்படுத்த வேங்கை, அரசு, செஞ்சந்தனம், சந்தனம், குமிழ், மகாகனி, வேம்பு, நீர்மருது இலுப்பை போன்ற மண்சார்ந்த 5,000 மரக்கன்றுகள் நடைப்பாதையின் இருபுறமும் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் வெள்ளத் தடுப்புப் பணிக்காக தற்போது சுமார் 64 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேலும், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தினை "ராம்சார் சாசனத்தின்" படி ஈரநிலமாக அறிவிக்கை செய்ய மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுதோறும் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு வருகை தரும் வெளிநாடு மற்றும் உள்ளூர் வலசை பறவையினங்களின் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையைக் கருத்தில் கொண்டு பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தினைப் பறவைகள் சரணாலயமாக அறிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் ராமச்சந்திரன், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மெய்யநாதன், தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு, காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் சுப்ரியா சாஹு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்."

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

4. வரலாற்று சிறப்பு மிக்க முடிவாக ஐக்கிய நாடுகள் அமைப்பு சர்வதேச சூரியசக்தி கூட்டணிக்கு பார்வையாளர் அந்தஸ்து வழங்கியது.

சர்வதேச சூரியசக்தி கூட்டணிக்கு பார்வையாளர் அந்தஸ்தை ஐக்கிய நாடுகள் சபை வழங்கியுள்ளது. "ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே மின்சாரத் தொகுப்பு" – கொள்கைக்கு இது ஊக்கம் தரும். சமமான எரிசக்தி தீர்வுகளை உலகத்திற்கு வழங்க இது உதவும்.

சர்வதேச சூரியசக்தி கூட்டணிக்கு பார்வையாளர் அந்தஸ்தை ஐக்கிய நாடுகள் சபை வழங்கியுள்ள வரலாற்று சிறப்பு மிக்க முடிவு மாண்புமிகு பிரதமரின் ஒரே சூரியன், ஒரே உலகம், ஒரே மின்சார தொகுப்பு எனும் லட்சியத்தை நோக்கிய படிக்கல்லாக இருக்கும் என்று மத்திய மின்சாரம்,

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு ஆர் கே சிங் தமது வாழ்த்து டிவிட்டர் பதிவு ஒன்றில் கூறியுள்ளார்.

சூரிய சக்தி பயன்பாட்டின் மூலம் நியாயமான மற்றும் சமமான எரிசக்தி தீர்வுகளை வழங்குவதற்கான முன்முயற்சிக்கு மிகப்பெரும் உத்வேகத்தை இது வழங்கும் என்று திரு சிங் கூறியுள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்பின் மூலம் நிகர பூஜ்ஜிய கரிம உமிழ்வு எனும் இலக்கை எட்டுவதற்கும் இது பெரியளவில் உதவும் என்று கூறியுள்ள அவர், இந்த லட்சியத்திற்கு இந்தியா பெரிதும் பங்காற்றி வருவதாக கூறினார்.

---

5. இந்தியாவில் 37% ரயில்கள் மட்டுமே டீசலில் இயக்கம்: அமைச்சர் தகவல்

இந்தியாவில் 37 சதவீத ரயில்கள் மட்டுமே டீசல் என்ஜினில் இயக்கப்படுகின்றன; மீதி 63 சதவீதம் மின்சாரத்தில் இயங்குகின்றன என்று ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இது தொடர்பான கேள்விக்கு மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை எழுத்துமூலம் அளித்த பதிலில் அவர் மேலும் கூறியதாவது:

2019–20 ஆண்டு அறிக்கைப்படி டீசல் ரயில் என்ஜின்களுக்கு 23,706 லிட்டர் டீசல் செலவிடப்பட்டுள்ளது. நாள்தோறும் சராசரியாக 64.9 லட்சம் லிட்டர் செலவாகியுள்ளது.

அதே ஆண்டில் 1,38,547 லட்சம் கிலோ வாட் மின்சாரம், ரயில்களை இயக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தினசரி சராசரியாக 379 லட்சம் கிலோ வாட் மின்சாரம் செலவாகியுள்ளது. சராசரியாக தினமும் 13,555 பயணிகள், சரக்கு ரயில்கள் இயக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு கேள்விக்கு அளித்த பதிலில், 'ரயில்வேயை நவீனமயமாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக பாரம்பரியமாக இயக்கப்படும் ரயில் பெட்டிகளுக்குப் பதிலாக, தொழில்நுட்ப ரீதியில் அதிநவீன, பாதுகாப்பு மிகுந்த பெட்டிகளை மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு முதல் இத்தகைய நவீனரகப் பெட்டிகளை இந்திய ரயில்வே தயாரித்து வருகிறது. 2021 நவம்பர் வரை 575 ஜோடி ரயில்களில் இந்தப்பெட்டிகள் மாற்றப்பட்டுள்ளன.

ரயில் பெட்டிகள் கிடைப்பதற்கு ஏற்ற வகையில், படிப்படியாக இந்தப் பெட்டிகள் ரயில்களில் சோ்க்கப்படும். மேலும், வந்தே பாரத் நவீன பெட்டிகள் தயாரிக்கப்பட்டு சோ்க்கப்பட்டு வருகின்றன' என்று அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

---

6. தேசிய துப்பாக்கி சுடுதல்: அங்குர் மிட்டலுக்கு பட்டம்

தேசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் ஷாட் கன் பிரிவில் ஓஎன்ஜிசி வீரர் அங்குர் மிட்டல் தங்கப் பதக்கம் வென்றார்.

அந்தப் பிரிவில் அவர் 43 புள்ளிகளுடன் முதலிடம் பிடிக்க, ராஜஸ்தான் வீரர் ஆதித்யா பரத்வாஜ் 40 புள்ளிகளுடன் வெள்ளியும், உத்தர பிரதேசத்தின் ரயான் ரிஸ்வி 33 புள்ளிகளுடன் வெண்கலமும் வென்றனர்.

இதனிடையே, போபாலில் நடைபெறும் ரைஃபிள் பிரிவு போட்டியில் மத்திய பிரதேசத்தின் பாந்த்வி சிங் 50 மீட்டர் புரோன் பிரிவில் 626 புள்ளிகளுடன் தங்கம் வென்றார். அவர் சீனியர், ஜூனியர் என இரு பிரிவுகளிலுமே முதலிடம் பிடித்தார்.

அதே போட்டியில் ஆடவர் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் திவ்யான்ஷ் பன்வார் 250 புள்ளிகளுடன் தங்கம் வென்றார். மகாராஷ்டிரத்தின் ருத்ராங்க்ஷ் பாலாசாஹேப் 249.3 புள்ளிகளுடன் 2–ஆம் இடமும், அஸ்ஸாமின் ஹிருதய் ஹஸாரிகா 228.2 புள்ளிகளுடன் 3–ஆம் இடமும் பிடித்தனர். ஜூனியர் பிரிவிலும் திவ்யான்ஷ் முதலிடமும், ருத்ராங்க்ஷ் 2–ஆம் இடமும், தில்லியின் பார்த் மகிஜா 3–ஆம் இடமும் பிடித்தனர்.

கலப்பு அணிகள் டிராப் பிரிவில் மத்திய பிரதேசம் தங்கமும், ஹரியாணா வெள்ளியும், தமிழகம் வெண்கலமும் வென்றது.

---

7. மேம்படுத்தப்பட்ட பினாகா ராக்கெட் அமைப்பு வெற்றிகரமாக சோதனை

தொலைவு நீட்டிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்ட பினாகா பல்முனை ராக்கெட்டுகள் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) அளித்த தொழில்நுட்ப பரிமாற்ற உதவியுடன் ஒரு தனியார் நிறுவனம் இந்த பினாகா ராக்கெட்டுகளை தயாரித்துள்ளது.

இந்த ராக்கெட்டுகள், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பொக்ரான் சோதனை மையத்தில் கடந்த 3 தினங்களாக பரிசோதிக்கப்பட்டன. ராணுவ உயரதிகாரிகளுடன் இணைந்து டிஆர்டிஓ அதிகாரிகள் இந்தச் சோதனைகளை நடத்தினர். வெவ்வேறு தொலைவுகளை நிர்ணயித்து, வெவ்வேறு ராக்கெட்டுகள் 24 முறை பரிசோதிக்கப்பட்டன. அனைத்துச் சோதனைகளிலும் ராக்கெட்டுகளின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்த என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பினாகா எம்.கே.–1 ராக்கெட் அமைப்பு 40 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கையும், பினாகா எம்.கே.–2 ராக்கெட் அமைப்பு 60 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கையும் தாக்கும் திறன் கொண்டவை. பினாகா எம்.கே.–3 ராக்கெட் அமைப்பின் இலக்கு அறிவிக்கப்படவில்லை.

இந்த ராக்கெட் அமைப்புகளை டிஆர்டிஓவின் ஆய்வகங்களான புணேயில் உள்ள கனரக ஆயுதங்கள் ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனம் (ஏஆர்டிஈ), உயர் ஆற்றல் பொருள்கள் ஆராய்ச்சி ஆய்வகம் (எச்ஈஎம்ஆர்எல்) ஆகியவை இணைந்து வடிவமைத்துள்ளன.

பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை வெற்றிகரமாக சோதனை: உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஹெலிகாப்டரில் இருந்து ஏவக்கூடிய 'சந்த்' எனப்படும் தொலைவில் இருந்து தாக்கும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இந்த ஏவுகணையை டிஆர்டிஓ, இந்திய விமானப் படை இணைந்து பொக்ரானில் சனிக்கிழமை பரிசோதித்துள்ளன. அதிநவீன மில்லி மீட்டர் அலை ரேடார் தேடும் கருவி பொருத்தப்பட்டுள்ள இந்த ஏவுகணை, அதிக துல்லியமான தாக்கும் திறனை கொண்டுள்ளது. 10 கி.மீ. தொலைவு வரையிலான இலக்குகளை இந்த ஆயுதம் தாக்கும்.

டிஆர்டிஓவின் இதர ஆய்வகங்கள் மற்றும் தொழில்துறையுடன் இணைந்து ஹைதராபாதைச் சோ்ந்த ஆராய்ச்சி மையம் இமாரத், இந்த ஏவுகணையை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. தற்சார்பு இந்தியாவை நோக்கிய முக்கிய முன்னேற்றமாக இது கருதப்படுகிறது. இந்தப் பணிகளுடன் தொடர்புடைய குழுவுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

---

8. உலகத் தமிழர் பொருளாதார மாநாடு: சென்னையில் டிச.27–இல் தொடக்கம்

எட்டாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு சென்னையில் வரும் டிச.27–ஆம் தேதி முதல் 29–ஆம் தேதி வரை தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.

இது குறித்து உலகத் தமிழர் பொருளாதார மையத்தின் தலைவரும் மாநாட்டு அமைப்பாளருமான வி.ஆர்.எஸ்.சம்பத், விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் வி.ஜி.சந்தோஷம், ஓய்வு பெற்ற நீதிபதி டி.என்.வள்ளிநாயகம், பேராசிரியர் உலகநாயகி பழனி ஆகியோர் சென்னையில் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: உலகெங்கும் உள்ள தமிழ் தொழிலதிபர்கள், தொழில்முனைவோரை ஒருங்கிணைக்கும் வகையில் துபை, தென்னாப்பிரிக்கா, புதுச்சேரி உள்ளிட்ட இடங்களில் 7 இதுவரை ஏழு முறை உலகத் தமிழர் பொருளாதார மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தற்போது எட்டாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு சென்னை கிண்டியில் உள்ள லீ மெரிடியன் ஹோட்டலில் டிச.27–ஆம் தேதி முதல் 29–ஆம் தேதி வரை தொடர்ந்து மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் உலகம் முழுவதுமிருந்து 500–க்கும் மேற்பட்ட தமிழ் தொழிலதிபர்களும், தொழில்முனைவோர்களும் பங்கேற்கவுள்ளனர்.

தமிழகத்தில் விஐடி வேந்தர் ஜி.விசுவநாதன், பாரத் நிகர்நிலை பல்கலை. வேந்தர் ஜெகத்ரட்சகன், தொழிலதிபர்கள் ஜெம் ஆர்.வீரமணி, விஜிபி குழுமங்களின் தலைவர் வி.ஜி.சந்தோஷம், பழனி ஜி.பெரியசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளனர். தமிழக அரசின் சார்பில் அமைச்சர்கள் துரைமுருகன், தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன் மற்றும் அரசு செயலர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றவுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து கயானா நாட்டின் முன்னாள் பிரதமர் மோசஸ் வீராசாமி நாகமுத்து, மோரீஷஸ் முன்னாள் குடியரசுத் தலைவர் பரமசிவம் பிள்ளை வையாபுரி, இலங்கை முன்னாள் அமைச்சர்

ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் இணையவழியில் உரையாற்றவுள்ளனர். தமிழகத்தில் தொழில் தொடங்கவும், வணிக வாய்ப்புகள் குறித்து விவாதிக்கவும் தனி அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தினமும் மாலை வேளையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இந்த மாநாடு உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் பொருளாதாரம், பண்பாடு, கலை, சமூக நலன், திறன் மேம்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்க ஊக்குவிப்பாக அமையும். மாநாட்டின் இறுதி நாளில் சிறந்த 10 தமிழர்வலர்களுக்கு 'உலகத் தமிழ் மாமணி விருது' வழங்கப்படவுள்ளது.

---

1. அண்மையில் பறவைக் காய்ச்சல் பாதிப்பால் 12000 வாத்துகளை கொன்றொழித்த இந்திய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு

ஆ) அஸ்ஸாம்

இ) கேரளா ☑

ஈ) பீகார்



✓ கேரளாவின் ஆலப்புழா மாவட்டத்தில் அண்மையில் பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ளன. மேலும் தகழி கிராமத்தில் மொத்தம் 12,000 வாத்துகள் இதன் காரணமாக கொன்றொழிக்கப்பட்டன. அப்பகுதி கட்டுப்பாட்டு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு பகுதிகளில் இருந்து பெறப்பட்ட கூடுதல் மாதிரிகள் போபாலில் உள்ள ICAR–National Institute of High Security Animal Diseases நிறுவனத்துக்கு பரிசோதனை –க்காகவும் பறவைக்காய்ச்சல் பாதிப்புகளைக் கண்டறிவதற்காகவும் அனுப்பப்பட்டுள்ளன.

---

2. அண்மையில் ஓரினச்சேர்க்கை திருமணத்தை அனுமதிக்கும் சட்டத்தை அங்கீகரித்த தென்னமெரிக்க நாடு எது?

அ) அர்ஜென்டினா

ஆ) சிலி ☑

இ) பெரு

ஈ) பொலிவியா



✓ சிலி அதிபர் செபாஸ்டியன் பினேரா அண்மையில் ஓரினச்சேர்க்கை தம்பதிகளை திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கும் சட்டத்தில் கையெழுத்திட்டார். இந்த விழாவில் LGBT மற்றும் பரந்த மனித உரிமைகளுக்கான ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

✓ அந்த நாட்டைப்பொறுத்தவரை, சட்டம் 'இரு நபர்களுக்கு இடையிலான அனைத்து காதல் உறவுகளையும் சமமான நிலையில் வைக்கிறது'.

---

3. 2021'இல் இந்தியாவில் கூகுளில் அதிகம் தேடப்பட்ட ஆளுமை யார்?

அ) நீரஜ் சோப்ரா ☑

ஆ) எலோன் மஸ்க்

இ) P V சிந்து

ஈ) மீராபாய் சானு



✓ கூகுள் தனது '2021ஆம் ஆண்டின் தேடல்' பட்டியலை வெளியிட்டது, இது உலகம் முழுவதும் அதன் தேடுபொறியில் அதிகம் தேடப்பட்டதைக் காட்டுகிறது. ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா, 2021'இல் இந்தியாவில் அதிகம் தேடப்பட்ட ஆளுமை ஆனார்.

✓ 2021'இல் இந்தியாவில் கூகுளில் அதிகம் தேடப்பட்ட தலைப்புகளில், ICC T20 உலகக்கோப்பை மற்றும் இந்தியன் பிரீமியர் லீக், CoWin, Euro Cup, மற்றும் Tokyo Olympics ஆகியவை இடம் பெற்றுள்ளன.

---

4. நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட NIPER (திருத்தம்) மசோதா, 'தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம்' அந்தஸ்தை ____ எதற்கு வழங்க முனைகிறது?

அ) மருந்து கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ☑

ஆ) பெட்ரோலிய ஆராய்ச்சி நிறுவனங்கள்

இ) உடற்கல்வி நிறுவனங்கள்

ஈ) தத்துவ ஆராய்ச்சி நிறுவனங்கள்

✓ தேசிய மருந்துக் கல்வி & ஆராய்ச்சி நிறுவன (திருத்தம்) மசோதாவை நாடாளுமன்றம் அண்மையில் நிறைவேற்றியது. அகமதாபாத், ஹாஜிபூர், ஹைதராபாத், கொல்கத்தா, கௌகாத்தி மற்றும் ரேபரேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மேலும் ஆறு மருந்துக் கல்வி & ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு 'தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம்' என்ற அந்தஸ்தை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. அவற்றுக் –கான ஆலோசனைக் குழுவை அமைப்பதும் இதன் நோக்கமாகும்.

---

5. எந்த மாநிலம் / யூனியன் பிரதேசத்தில் 1,000 அடல் டிங்கரிங் ஆய்வகங்களை நிறுவப்போவதாக NITI ஆயோக் அறிவித்தது?

அ) ஜம்மு காஷ்மீர் ☑

ஆ) கோவா

இ) சிக்கிம்

ஈ) அருணாச்சல பிரதேசம்



✓ ஜம்மு–காஷ்மீரில் 1,000 அடல் டிங்கரிங் ஆய்வகங்களை நிறுவ உள்ளதாக NITI ஆயோக் அறிவித்துள்ளது. அவற்றில், 187 நிறுவனங்கள் இந்த நிதியாண்டின் இறுதிக்குள் நிறுவப்படும். ATL என்பது, அறிவியல் கருத்துக்களைப் பரிசோதித்து, புரிந்துகொள்வதற்கான வழிகளை உருவாக்குவதன்மூலம் குழந்தைகளின் அறிவாற்றல் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான NITI ஆயோக்கின் ஒரு முன்னெடுப்பாகும்.

---

6. எந்த மாநில காவல்துறை, இடரில் இருக்கும் குடிமக்களை காவல் துறையுடன் இணைப்பதற்காக, 'Call your Cop' என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியது?

அ) நாகாலாந்து ☑

ஆ) மேற்கு வங்கம்

இ) கேரளா

ஈ) ஒடிஸா



✓ நாகாலாந்து காவல்துறை அண்மையில் 'Call your Cop' என்ற திறன் பேசி செயலியை அறிமுகப்படுத்தியது. இது மாநிலத்தின் அனைத்து குடிமக்களும் மற்றும் இடரில் உள்ளவர்களும் ஒரு நொடியில் காவல் துறையை தொடர்பு கொள்ள உதவுகிறது. இந்தச் செயலியில் உள்ள அம்சங்களில் அடைவு, எச்சரிக்கைகள், சுற்றுலா குறிப்புகள், SOS, அருகிலுள்ள காவல் நிலையம் மற்றும் தேடல் ஆகியவையும் அடங்கும்.

---

7. 'ஹனுக்கா'வை கொண்டாடுகிற மக்கள் யார்?

அ) யூதர்கள் ☑

ஆ) கிறிஸ்தவர்கள்

இ) முஸ்லிம்கள்

ஈ) சீக்கியர்கள்



✓ 'விளக்குகளின் திருவிழா' என்றும் அழைக்கப்படுகிற 'ஹனுக்கா', ஒரு கொடுங்கோல் மன்னருக்கு எதிரான யூதர்களின் வெற்றியைக் கொண்டாடும் ஒரு யூதத்திருவிழாவாகும். ஹனுக்கா – எட்டு நாள் யூத கொண்டாட்டம் ஆபிரகாம் உடன்படிக்கைக்குப் பிறகு தொடர்ச்சியாக 2ஆவது ஆண்டாக, நவம்பர் 28 மற்றும் டிசம்பர் 5 ஞாயிற்றுக்கிழமை வரை UAE முழுவதும் நடத்தப்படுகிறது.

---

8. சில சமயங்களில் செய்திகளில் இடம்பெற்ற காவேரி திட்டத்துடன் தொடர்புடைய துறை எது?

அ) நதி மேலாண்மை

ஆ) உள்நாட்டு இயந்திரங்களின் வளர்ச்சி ☑

இ) மொழியைப் பாதுகாத்தல்

ஈ) பருவநிலை மாற்றம்



✓ பாதுகாப்புக்கான கேபினட் கமிட்டி (CCS) 1989'இல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட காவேரி எஞ்சின் திட்டத்திற்கு அனுமதி அளித்தது. 30 ஆண்டுகள் ஓடிய இத்திட்டம் ₹2035.56 கோடி செலவில் ஒன்பது முழு முன்மாதிரி இயந்திரங்கள் மற்றும் நான்கு முக்கிய இயந்திரங்களை உருவாக்கியது. சமீபத்தில், லைட் காம்பட் ஏர்கிராப்ட் (எல்சிஏ) தேஜாஸ் தற்போது இறக்குமதி செய்யப்பட்ட எஞ்சினுடன் ஒருங்கிணைக்கப்பட்டு –ள்ளதாக அறிவிக்கப்பட்டது. மேலும் எதிர்காலத்தில் எல்சிஏ வகைகள் மற்றும் அட்வான்ஸ்டு மீடியம் காம்பட் ஏர்கிராப்ட்போன்ற விமானங்க –ளை இயக்குவதற்கு உள்நாட்டு இயந்திரங்களை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

---

9. நடப்பு 2021ஆம் ஆண்டுக்கான பெண்கள் பலோன் டி'ஓர் விருதை வென்ற அலெக்ஸியா புட்டெல்லாஸ் சார்ந்த நாடு எது?

அ) பிரான்ஸ்



ஆ) ஸ்பெயின் ☑

இ) UK

ஈ) அர்ஜென்டினா

- ✓ 2021 பலோன் டி'ஓர் பிரான்ஸ் கால்பந்து விருதின்போது 2021ஆம் ஆண்டிற்கான பெண்கள் பலோன் டி'ஓர் விருதை ஸ்பானிஷ் கால்பந்து வீராங்கனை அலெக்ஸியா புட்டெல்லாஸ் பெற்றுள்ளார்.
- ✓ FC பார்சிலோனாவின் மிட்பீல்டர் அலெக்சியா புடெல், அடா ஹெகர்பெர்க் மற்றும் மேகன் இராபினோவுக்குப் பிறகு பரிசை வென்ற மூன்றாவது பெண் வீராங்கனை ஆவார். லியோனல் மெஸ்ஸி ஏழாவது முறையாக பலோன் டி'ஓர் விருதை வென்றுள்ளார். 21 வயதுக்குட்பட்ட சிறந்த வீரருக்கான கோபா டிராபியை பார்சிலோனாவின் 19 வயதான பெட்ரி வென்றார்.

---

10. NSO'இன் GDP மதிப்பீட்டின்படி, 2021–22ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நிலையான விலையில் GDP என்ன?

அ) 5.6



ஆ) 6.4

இ) 8.4 ☑

ஈ) 9.8

- ✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO), புள்ளியியல் & திட்ட அமலாக்க அமைச்சகம் 2021–22 (Q2 2021–22) இரண்டாம் காலாண்டிற்கான (ஜூலை–செப்டம்பர்) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) மதிப்பீடுகளை வெளியிட்டது. Q2 2021–22'இல் நிலையான விலையில் GDP ₹35.73 லட்சம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 2020–21ஆம் காலாண்டில் ₹32.97 லட்சம் கோடியாக இருந்தது.
- ✓ இது 2020–21ஆம் காலாண்டில் நிலவிய 7.4 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடும்போது 8.4 சதவீத வளர்ச்சியுடன் உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ரூ.339 கோடியில் புதுப்பிக்கப்பட்ட காசி விஸ்வநாதர் கோயில் வளாகம்

காசி விஸ்வநாதர் கோயில் வளாகம் ரூ.339 கோடி செலவில் 3 ஆயிரம் ச.அ'இலிந்து 5 லட்சம் சதுர அடியாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. புதுப்பிக்கப்பட்ட கோயிலை பிரதமர் நரேந்திர மோடி நேற்று நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் உலக பிரசித்தி பெற்ற காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலுக்கு வரும் பக்தர்கள் கங்கையில் நீராடி, புனித நீரை எடுத்துச் சென்று கோயிலில் வழங்குவது வழக்கமாகும். காசி கோயிலுக்கு வரும் பக்தர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதனால், நெரிசல் மிகுந்த தெருக்கள், மோசமான சுற்றுப்புறத்தை கடந்து பக்தர்கள் கோயிலுக்கு செல்ல வேண்டிய நிலை இருந்தது.

இந்த பிரச்சினைக்கு தீர்வு காண விஸ்வநாதர் கோயிலையும் கங்கை நதியின் கரைகளையும் இணைக்கும் வகையில் விரிவான பாதையை அமைக்க பிரதமர் நரேந்திர மோடி திட்டமிட்டார். இதன்படி, கடந்த 2019–ம் ஆண்டு மார்ச் 8–ம் தேதி கோயில் வளாகத்தை விரிவாக்கம் செய்யும் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இதற்காக கோயிலை சுற்றியிருந்த 300–க்கும் மேற்பட்ட சொத்துகள் கையகப்படுத்தப்பட்டன.

இந்த திட்டத்தில் அதிக ஆர்வம் காட்டிய பிரதமர், அடிக்கடி வாரணாசிக்கு வந்து ஆலோசனைகளை வழங்கினார். அவரது ஆலோசனையின்படி மாற்றுத் திறனாளிகளும் எளிதில் வந்து செல்லும் வகையில் சாய்தளங்கள், நகரும் படிக்கட்டுகள் உள்ளிட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. சுற்றுலா வசதி மையம், வேத மையம், அருங்காட்சிய –கம், பார்வையாளர் மாடம், உணவு விடுதிகள் உள்ளிட்ட வசதிகளும் செய்யப்பட்டன.

பழைய கட்டிடங்களை இடிக்கும்போது 40–க்கும் மேற்பட்ட பழமையான கோயில்கள் கண்டறியப்பட்டன. அவை பாதுகாக்கப்பட்டு அழகுபடுத்தப்ப –ட்டன. விஸ்வநாதர் கோயில் வளாகத்தில் ஆதி சங்கராச்சாரியார், பாரத மாதா, ராணி அகில்யாபாய் ஹோல்கர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. சுமார் 3 ஆயிரம் சதுர அடியாக இருந்த கோயில் வளாகம், ரூ.339 கோடி செலவில் 5 லட்சம் சதுர அடி அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

---

2. ஆசிய பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்தும் நாடுகள் பட்டியல்: இந்தியாவுக்கு 4–ஆவது இடம்; அமெரிக்கா முதலிடம்

ஆசிய பிராந்தியத்தில் அதிகமாக ஆதிக்கம் செலுத்தும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 4–ஆவது இடத்தில் உள்ளது.

வட அமெரிக்க கண்டத்தைச் சோ'ந்த நாடாக இருந்தாலும், ஆசியாவில் அதிக செல்வாக்கு கொண்ட நாடாக அமெரிக்கா உள்ளது.

ஆசிய பிராந்தியத்தில் செல்வாக்கு கொண்ட நாடுகள் குறித்து ஆஸ்திரேலியாவைச் சோ'ந்த லோவி நிறுவனம் ஆண்டுதோறும் ஆய்வு நடத்தி வருகிறது. நடப்பாண்டுக்கான ஆய்வறிக்கையை அந்நிறுவனம் அண்மையில் வெளியிட்டது.

அதில், சீனாவை பின்னுக்குத் தள்ளி, ஆசிய பிராந்தியத்தில் அதிகம் ஆதிக்கம் செலுத்தும் நாடாக அமெரிக்கா உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பட்டியலில் சீனா 2–ஆவது இடத்திலும், ஜப்பான் 3–ஆவது இடத்திலும், இந்தியா 4–ஆவது இடத்திலும் உள்ளன. ரஷியா, ஆஸ்திரேலியா, தென் கொரியா, சிங்கப்பூ', இந்தோனேசியா, தாய்லாந்து ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, ரஷியா ஆகிய நாடுகள் ஆசிய பிராந்தியத்தில் தங்கள் செல்வாக்கை இழந்துள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் சீனாவும் ஜப்பானும் அதிக அளவில் தங்கள் செல்வாக்கை இழந்துள்ளன. அதே வேளையில், அமெரிக்காவின் செல்வாக்கு சற்று உயா'ந்துள்ளது.

தூதரகத் தொடா'பு, கலாசார ஆதிக்கம், பொருளாதார உறவு, எதிா'கால வளங்கள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் சீனா தனது ஆதிக்கத்தை இழந்ததாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தூதரகத் தொடா'பு, பொருளாதார உறவு ஆகிய மதிப்பீடுகளில் இந்தியா தனது செல்வாக்கை இழந்துள்ளது.

அதிபா' ஜோ பைடன் தலைமையிலான நிா'வாகம் ஆசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் தூதரக உறவை வலுப்படுத்தியதால், அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கரோனா தடுப்பூசியை அதிக எண்ணிக்கையில் செலுத்தி பொருளாதார பாதிப்பில் இருந்து விரைவில் மீண்டதும் அமெரிக்காவின் செல்வாக்கு அதிகரிப்புக்கு முக்கியக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில், அண்டை நாடுகளான பாகிஸ்தான் (15–ஆவது இடம்), வங்கதேசம் (19–ஆவது இடம்), இலங்கை (20–ஆவது இடம்), மியான்மா' (21–ஆவது இடம்), நேபாளம் (25–ஆவது இடம்) ஆகியவை இந்தியாவைவிடப் பின்தங்கியே உள்ளன.

---

3. மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் சார்பில் சங்க இலக்கிய நூல்கள் முதல்முறையாக கன்னடத்தில் மொழிபெயர்ப்பு: 8 ஆயிரம் பக்கங்களில் 9 நூல்களாக வெளியீடு

மத்திய செம்மொழி தமிழாய்வுநிறுவனம் சார்பில் சங்க இலக்கிய நூல்கள் முதல்முறையாககன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் செவ்வியலின் சிறப்பை உலகம் முழுவதும் கொண்டும் செல்லும் நோக்கில், மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. அதன்படி, ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை காப்பியம் சீனம், ஜப்பானீஸ், கொரியன் உள்ளிட்ட 23 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. அதேபோல, திருக்குறளை 58 பழங்குடியினர் மொழிகள் உட்பட 120–க்கும்மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியை செம்மொழி தமிழாய்வு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், 9 சங்கஇலக்கிய நூல்கள் முதல்முறையாக கன்னட மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து செம்மொழி தமிழாய்வு நிறுவன இயக்குநர் பேராசிரியர் இரா சந்திரசேகரன் கூறியதாவது:

கிமு.300 – கிபி. 300 வரையிலான காலகட்டத்தில் எழுந்த பாடல்களின் தொகுப்பாக சங்க இலக்கியம் அமைகிறது. அதன்படி, எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்கஇலக்கியமாகும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' , 'அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத் தமியர் உண்டலும் இலர்' , 'செல்வத்துப் பயனே ஈதல்' உள்ளிட்ட ஏராளமான உயரிய கோட்பாடுகளை சங்க இலக்கியம் கொண்டுள்ளது.

இதை உலக மக்களிடையே கொண்டும் செல்லும் நோக்கில் மொழிபெயர்க்கும் பணியை தமிழாய்வு நிறுவனம் சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது. முதல்கட்டமாக, கன்னட மொழியில் சங்க இலக்கியங்களை மொழிபெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பத்துப்பாட்டு, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்க இலக்கியங்கள் சுமார் 8 ஆயிரம் பக்கங்களை கொண்ட 9 நூல்களாக உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், கன்னடத்தில் இல்லாத அகப் புறக்கோட்பாடுகள் அந்த மொழிக்குகிடைப்பதோடு, தமிழுக்கே உரியபிற கோட்பாடுகளையும், சொற்சிறப்பினையும் அம்மொழி வாயிலாகவே உயர்த்த முடியும்.

இரு மொழிகளின் இலக்கியத்தை ஒப்பீட்டாய்வு செய்வதன்மூலம் மொழி அறிஞர்களுக்கு மிகப்பெரிய ஆய்வுத் தளத்தை உருவாக்க முடியும். மொழி அறிஞர்கள் ஒன்றிணைந்தால், இரு மாநிலங்களுக்கும் இடையே நல்லுறவும் வலுப்பெறும்.

மொழிபெயர்க்கப்பட்ட நூல்களுக்கு கன்னட மொழி அறிஞர்கள்மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த மொழிபெயர்ப்பு பணியில் பெங்களூரு தமிழ்ச் சங்கத்தின் பேராசிரியர் இரா.சீனிவாசன் ஒருங்கிணைப்பில், பேராசிரியர்கள் தா.கிருஷ்ணமூர்த்தி, கே.மலர்விழி, ஏ.சங்கரி, ஜி.சுப்பிரமணியன், மா.அரங்கசாமி, கே.வனஜா குல்கர்னி, நா.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் ஈடுபட்டனர். சங்க இலக்கியங்களை பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

---

1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கேத்தரின் ரஸ்ஸல், எந்த உலகளாவிய நிறுவனத்தின் புதிய தலைவராக உள்ளார்?

அ) உலக வங்கி

ஆ) உலக பொருளாதார மன்றம்

இ) UNICEF ☑

ஈ) IMF



✓ ஐநா அவையின் குழந்தைகள் நல அமைப்பான UNICEF'இன் அடுத்த தலைவராக அமெரிக்க அதிபர் ஜோபிடனின் உதவியாளரான கேத்தரின் ரஸல் நியமிக்கப்பட்டுள்ளார். ஜூலை மாதம் பதவி விலகிய ஹென்ரிட்டா ஃபோர்க்கு அடுத்தபடியாக ரஸ்ஸல் வருவார் என்று பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் அறிவித்தார்.

---

2. மர்மோசாவின் (mouse opossums) பூர்வீகம் எது?

அ) அமெரிக்கா ☑

ஆ) அண்டார்டிகா

இ) ஐரோப்பா

ஈ) ஆசியா



✓ மௌஸ் ஓபோஸம்கள் நியோட்ரோபிகல் மார்சுபியல் குடும்பமான டிடெல்பிடேயிலேயே ஒப்பீட்டளவில் மிகச்சிறிய உறுப்பினர்களாகும். அவை அமெரிக்காவை, குறிப்பாக தென்னமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவையாகும். அண்மையில் புதிதாக இனங்காணப்பட்ட இனம்,

✓ அட்லரின் மவுஸ் ஓபோசம் (மர்மோசா அட்லெரி) என்று பெயரிடப்பட்டது. அது மிகச்சிறிய துணைப்பிரிவான மைகோரியஸில் ஒன்றாகும். இது ஆராய்ச்சியாளர் கிரெக் அட்லரின் பெயரால் அழைக்கப்படுகிறது.

---

3. COVID-19 மற்றும் டெங்கு ஆகிய இரண்டின் கலவையான கோவிடெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இந்திய மாநிலம் எது?

அ) கேரளா

ஆ) தெலுங்கானா ☑

இ) மத்திய பிரதேசம்

ஈ) குஜராத்



✓ கோவிட்-19 நோயாளி டெங்கு வைரஸால் பாதிக்கப்படும்போது ஏற்படும் கோவிடெங்குக் காய்ச்சல் பாதிப்பை தற்போது தெலுங்கானா மாநிலம் கண்டுவருகிறது. தெலுங்கானாவில் 8க்கும் மேற்பட்டோர் கோவிடெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தக் கலவை நோய்த்தொற்றின் அறிகுறிகளில் "உடல் அழுத்தம், மூச்சுத்திணறல், குளிர், உடல் வலிகள் மற்றும் மூட்டு வலிகள்" ஆகியவை அடங்கும். COVID-19 மற்றும் டெங்குவுக்கு ஒரே மாதிரியான அறிகுறிகள் உள்ளன.

---

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற "பிரைட்'ஸ் திமிங்கலத்தின்" நிலை என்ன?

அ) அற்றுவிட்ட இனம்

ஆ) அருகிவிட்ட இனம் ☑

இ) தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்

ஈ) அச்சுறு நிலையை அண்மித்த இனம்



✓ மெக்சிகோ வளைகுடா "பிரைட்'ஸ் திமிங்கலங்கள்" அருகிவிட்ட உயிரி-னங்கள் சட்டத்தின்கீழ் "அருகிவிட்ட இனம்" என வகைப்படுத்தப்பட்டுள்-ளன. அவை, மெக்ஸிகோ வளைகுடாவில் வசிக்கும் ஒரே பல்லற்ற திமிங்கலங்களாகும். நூற்றுக்கும் குறைவான திமிங்கலங்கள் மட்டுமே தற்போதுள்ளன. ஒடிஸாவின் பூரி மற்றும் கஞ்சம் மாவட்ட எல்லைக்கு அருகே அழிந்துவரும் பிரைட் திமிங்கலம் இறந்து கரை ஒதுங்கியது.

---

5. காமன்வெல்த் சாம்பியன்ஷிப்பில் தங்கப்பதக்கம் வென்ற ஜில்லி தலபெஹெராவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) வில்வித்தை

ஆ) துப்பாக்கிச்சுடுதல்

இ) பளு தூக்குதல் ☑

ஈ) குத்துச்சண்டை



✓ உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நடைபெற்றுவரும் காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில் பெண்களுக்கான 49 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீராங்கனை ஜில்லி தலபெஹெரா தங்கப் பதக்கம் வென்றார். முன்னதாக, ஆண்களுக்கான 55 கிலோ 'ஸ்னாட்ச்' பிரிவில் சங்கேத் மகாதேவ் சர்கார் தங்கப்பதக்கம் வென்றதோடு, புதிய 'ஸ்னாட்ச்' தேசிய சாதனையையும் படைத்தார். காமன்வெல்த் பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் மற்றும் உலக பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் ஆகிய இரண்டிலும் இந்தியா போட்டியிடுகிறது.

---

6. அண்மையில் காலமான பேராசிரியர் ரபிகுல் இஸ்லாம், எந்த நாட்டின் அறிஞர் மற்றும் கலாச்சார ஆர்வலராவார்?

அ) இந்தியா

ஆ) வங்காளதேசம் ☑

இ) பாகிஸ்தான்

ஈ) ஆப்கானிஸ்தான்



✓ தேசிய பேராசிரியர் ரபிகுல் இஸ்லாம், வங்காளதேசத்தைச் சேர்ந்த ஓர் அறிஞர் மற்றும் கலாச்சார ஆர்வலர் ஆவார். அவர் சமீபத்தில் தனது 87 ஆம் வயதில் காலமானார். மொழியியலாளரான இவர் 1952'இல் மொழி இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார். மேலும் 2018'இல் அரசாங்கத்தால் தேசிய பேராசிரியராக நியமிக்கப்பட்டார். அவர் சுதந்திர விருது, எகுஷே பதக் மற்றும் பங்களா அகாடமி இலக்கிய விருது ஆகியவற்றைப் பெற்றார். அவருக்கு சர்வதேச தாய்மொழி விருதும் வழங்கப்பட்டது.

---

7. உலகின் புதிய குடியரசாக மாறிய பார்படாஸின் முதல் குடியரசுத் தலைவர் யார்?

அ) டேம் சாண்ட்ரா மேசன் ☑

ஆ) மக்டலேனா ஆண்டர்சன்

இ) கேட்ரின் ஜாகோப்ஸ்டோட்டிர்

ஈ) சன்னா மரின்



✓ பிரிட்டிஷ் காலனியாக மாறி 396 ஆண்டுகளுக்குப் பிறகு, கரீபியன் தீவு நாடான பார்படாஸ் சமீபத்தில் உலகின் புதிய குடியரசாக மாறியுள்ளது. அந்நாடு, இராணி இரண்டாம் எலிசபெத்தை அரச தலைவர் பதவியில் இருந்து நீக்கியது. நாட்டின் தலைமை நீதிபதி, டேம் சாண்ட்ரா மேசனை குடியரசுத் தலைவராக பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். பார்பேடியன் பாடகி ரிஹானா தேசிய வீராங்கனையாக அறிவிக்கப்பட்டார்.

---

8. 2021 நவம்பரில் வசூல் செய்யப்பட்ட மொத்த GST எவ்வளவு?

அ) ₹0.75 லட்சம் கோடி

ஆ) ₹0.95 லட்சம் கோடி

இ) ₹1 லட்சம் கோடி

ஈ) ₹1.3 லட்சம் கோடி ☑



✓ மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலின்படி, GST வருவாய் தொடர்ந்து இரண்டாவது மாதமாக ₹1,31,526 கோடியாக உலாளது. இது கடந்த ஆண்டு இதே மாதத்தின் GST வருவாயைவிட 25% அதிகமாகும். மேலும், 2019ஐ ஒப்பிடும்போது 27% அதிகமாகும். இதுவரை இல்லாத அளவுக்கு GST வசூல், ஏப்ரலில் ₹1,41,384 கோடியாக பதிவாகியுள்ளது. தொடர்ந்து 5ஆம் மாதமாக வசூல் ₹1 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.

---

9. இந்திய ஆயுதப்படைகளுக்கு அதிநவீன ஹெரான் டிரோன்களை வழங்கிய நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) இஸ்ரேல் ☑

இ) பிரான்ஸ்

ஈ) ரஷ்யா



✓ அதிநவீன ஹெரான் டிரோன்களை இந்திய ஆயுதப்படைகளுக்கு இஸ்ரேல் வழங்கியுள்ளது. அவை தற்போதுள்ள ஹெரான்களை விடவும் அதிநவீன ஆண்டி-ஜாமிங் திறன்கொண்டவை. இந்திய அரசாங்கம் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கிய அவசரகால நிதி அதிகாரத்தின்கீழ் இந்த டிரோன்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

- ✓ இதன்கீழ் அவர்கள் தங்கள் இராணுவத் திறனை மேம்படுத்துவதற்காக ₹500 கோடி மதிப்பிலான உபகரணங்கள் மற்றும் அமைப்புகளை வாங்கவியலும்.

---

10. சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, கடந்த 10 ஆண்டுகளில் எத்தனை யானைகள் கொல்லப்பட்டுள்ளன?

அ) 160

ஆ) 360

இ) 660

ஈ) 1160 ☑



- ✓ காட்டு யானைகள் இறப்பு தொடர்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்த தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆர்வலர் ஒருவர் தகவல் கோரியிருந்ததை அடுத்து, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் 'யானைகள் திட்ட' பிரிவால் அளிக்கப்பட்ட பதிலில் கடந்த பத்து ஆண்டுகளில் 1160 காட்டு யானைகள் கொல்லப்பட்டிருப்பது தெரியவந்தது.
- ✓ 2020 டிசம்பர் மாதம் வரை கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் இரயில்களில் அடிபட்டு, மின்சாரம் தாக்கி, வேட்டையாடுதல் போன்ற பல்வேறு காரணங்களால் 1160 காட்டு யானைகள் இறந்துள்ளன.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பாரதி பாடலை மேற்கோள் காட்டிய பிரதமர்

'காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான்

காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்' –

இது 'பாரத தேசம்' என்ற தலைப்பில் மகாகவி பாரதியார் எழுதிய பாடலில் வரும் வரிகள். வாராணசியில் திங்கள்கிழமை நடைபெற்ற விழாவில், பாரதியின் மேற்கண்ட பாடலை தமிழிலேயே மேற்கோள்காட்டி ஹிந்தியில் விளக்கமளித்தார் பிரதமர் மோடி.

---

2. பிரிட்டனில் ஒமைக்ரானுக்கு முதல் உயிரிழப்பு

பிரிட்டனில் ஒமைக்ரான் வைரஸ் தொற்றுக்கு முதல் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. இதை பிரதமர் போரிஸ்ஜான்சன் உறுதி செய்துள்ளார்.

---

3. சென்னையில் 7500 இடங்களில் செயற்கை நுண்ணறிவு கேமராக்கள்

சென்னையில் 7,500 இடங்களில் செயற்கை நுண்ணறிவு கேமராக்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறும் இடங்கள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் அமைக்கப்படுகின்றன.

சென்னையில் மாநகரில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கடந்த 2017-இல் 'மூன்றாவது கண்' என்ற பெயரில் கண்காணிப்பு கேமரா பொருத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அப்போதைய சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் ஏ கே விசுவநாதன், தனியார் மற்றும் பொதுமக்கள் உதவியுடன் கேமராக்களை பொருத்தும் பணியை தீவிரப்படுத்தினார். மூன்றாவது கண் திட்டத்துக்கு முன்பு வரை சில ஆயிரம் கேமராக்கள் மட்டும் இருந்த சென்னையில் இப்போது 50 மீட்டருக்கு ஒன்று வீதம் சுமார் 2.80 லட்சம் கேமராக்கள் உள்ளன.

80 சதவீத வழக்குகளில் துப்பு:

சென்னையில் கண்காணிப்பு கேமராக்கள் குறைவாக இருந்த காலகட்டத்தில் சாட்சிகள், தடயங்கள் அடிப்படையில் மட்டுமே குற்ற வழக்குகள் துப்பு துலக்கப்பட்டன. இதனால் எப்போதும் போலீஸாருக்கு சவாலாகவே இருந்தது.

ஆனால் மூன்றாவது கண் திட்டத்துக்கு பின்னர், கேமராக்களின் உதவியோடு குற்ற வழக்குகளில் போலீஸார் எளிதாக துப்பு துலக்குகின்றனர்.

சுமார் 80 சதவீத வழக்குகளில் துப்பு துலக்குவதற்கு கண்காணிப்பு கேமராக்களே காவல்துறைக்கு உதவுகின்றன. சென்னையில் கடந்த காலங்களை விட தங்கச் சங்கிலி பறிப்பு 50 சதவீதம், கொள்ளை 24 சதவீதம், அடிதடி மற்றும் மோதல் 11 சதவீதம் குறைந்திருப்பதாக காவல்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேபோல பிற குற்றங்களும் கணிசமாக குறைந்துள்ளன.

செயற்கை நுண்ணறிவு கேமரா:

தற்போது கண்காணிப்பு கேமராக்களை விட அதிக திறன் கொண்ட ஏஎன்பிஆர் கேமரா, முக அடையாளம் காணும் கேமரா ஆகியவை நகரின் முக்கியமான பகுதிகளில் பொருத்தப்பட்டு வருகின்றன. இதன் அடுத்தகட்ட நடவடிக்கையாக செயற்கை நுண்ணறிவு கேமராக்கள் சென்னையில் பொருத்தப்பட உள்ளன.

சென்னை காவல்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.150 கோடி நிர்பயா நிதி இதற்காக பயன்படுத்தப்படுகிறது. சாதாரண கேமராக்களை விட பல்வேறு புதிய திறன்களையும், காட்சிகளின் அடிப்படையில் எச்சரிக்கை விடுக்கும் வசதியும் கொண்ட இந்த கேமராக்கள் பொருத்தப்பட்டால், பொதுமக்களின் பாதுகாப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும்.

ஏனெனில் இந்த கேமராக்கள் வெறும் காட்சிகளை மட்டுமல்லாது ஒருவரது உணர்வுகளையும் அறியும் வசதி கொண்டது. குற்றச் சம்பவம் நிகழ்வதற்குரிய சூழல் ஓரிடத்தில் ஏற்பட்டால், அதை முன்னரே கண்டறிந்து எச்சரிக்கும் திறனும் இவற்றுக்கு உண்டு.

பெண்கள் பாதுகாப்புக்கு முக்கியத்துவம்:

பெண்களுக்கு எதிராக குற்றங்கள் நடைபெறும் இடங்கள், பாலியல் தொந்தரவு சம்பவங்கள் ஏற்பட்ட இடங்கள், பெண்கள் அதிகமாக கூடும் இடங்கள் மற்றும் கோயில்கள், கடற்கரைகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்களை அடையாளம் கண்டு, அங்கு இக்கேமராக்கள் பொருத்தப்படுகின்றன.

இவற்றுக்கான கட்டுப்பாட்டு அறை வேப்பேரியில் உள்ள சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தில் புதிதாக ரூ.60 கோடியில் கட்டப்படும் கட்டடத்தில் இரு தளங்களில் அமைக்கப்படுகிறது. இந்த கேமராக்களை கையாளுவது தொடர்பாக கட்டுப்பாட்டு அறை காவலர்களுக்கு பிரத்யேகமான பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஏற்கெனவே இந்த வகை கேமராக்கள், நாட்டில் பெண்களுக்கு எதிராக அதிகமாக குற்றம் நடைபெறும் நகரங்களான தில்லி, மும்பை, லக்னௌ, பெங்களூரு ஆகிய நகரங்களில் பொருத்தப்பட்டுள்ளன. சென்னையில் இக்கேமராக்களை பொருத்துவதற்குரிய ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்டு, பணி தொடங்கியுள்ளது. இந்த கேமராக்கள் பொருத்தும் பணி 2022 ஜூன் மாதம் முடிவடைந்து, முழுமையாக இயங்கத் தொடங்கும் என சென்னை காவல்துறை உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கேமராக்கள் மூலம் போலீஸாரின் பணி எளிமைப்படுத்தப்படுவதோடு, காவல் பணி இன்னும் திறனுடனும், வலிமையுடனும் இருக்கும் என கூறப்படுகிறது. அதோடு குற்றவாளிகளின் மீதான காவல்துறையின் பார்வை இன்னும் ஆழமாக பதியும்.

எப்படி செயல்படும்?

சாதாரண கேமராக்கள் பதிவு செய்யும் காட்சிகளை நேரலையில் காண மட்டும் முடியும். ஆனால் செயற்கை நுண்ணறிவு கேமரா, ஒரு காட்சியை பதிவு செய்வது மட்டும் இல்லாமல் கேமராவின் காட்சியில் ஒருவரது நடவடிக்கையையும் கண்காணிக்கும். அவரது நடவடிக்கையில் வழக்கத்துக்கு மாறாக வித்தியாசமாகத் தோன்றினால், உடனடியாக அது குறித்து எச்சரிக்கும், கட்டுப்பாட்டு அறையில் உள்ள திரையில் உடனடியாக அந்தக் காட்சி ஒளிரும்.

முக்கியமாக ஒரு குற்றம் நடைபெறுவதற்கு முன்னேரே ஒரு இடத்தில் உள்ள மனிதர்களின் நடவடிக்கையையும், அவரது உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு அங்கு அசம்பாவித சம்பவம் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளதா என்பதைக் கண்டறிந்து எச்சரிக்கும். ஒருவரது அச்ச உணர்வு, கோபம், ஆத்திரம் உள்ளிட்ட உணர்வுகளையும் கண்டறியும். அதேபோல ஒரு நபர், துப்பாக்கி, கத்தி,அரிவாள், வெடிபொருள் போன்ற ஆயுதங்களுடன் இருந்தால் அதையும் அறிந்து எச்சரிக்கும்.

இதைத் தவிர்த்து இந்த கேமராவில் ஒரு இடத்தில் எத்தனை போர் உள்ளனர், பாதுகாப்புப் பகுதியில் வைக்கப்பட்ட பொருள் திருடப்பட்டால் எச்சரிப்பது, வாகனங்களின் பதிவு எண்ணை அடையாளம் காண்பது, குரல் மூலம் ஒருவரை கண்டறிவது, முகம் அடையாளம் மூலம் ஒருவரை கண்டறிவது, வெடி பொருளை கண்டறிந்து எச்சரிப்பது உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளன.

சாதாரண கேமராவில் ஒரு மனிதனின் முக அடையாளத்தை வைத்து மட்டுமே குற்றவாளியை அடையாளம் காண முடியும். ஆனால் இந்த கேமராவில் ஒருவரது நடவடிக்கை, உணர்வுகளை ஆகியவற்றின்

அடிப்படையில் ஒருவரை அடையாளம் கண்டு எச்சரிக்கும் தொழில்நுட்பம் உள்ளது. இதற்காக அந்த கேமராவிலும், அதனுடன் பொருத்தப்பட்டிருக்கும் சா'வரிலும் அதற்குரிய பிரத்யேக மென்பொருள் பொருத்தப்பட்டிருக்கும்.

நகா' முழுவதும் பொருத்தப்பட்டிருக்கும் இத்தகைய கேமராக்களில் குற்றத் தொடா'புடைய மற்றும் வழக்கத்துக்கு மாறான காட்சிகளை தோ'வு செய்து, அதை மட்டும் கட்டுப்பாட்டு அறை திரையில் ஒளிபரப்பி, எச்சரிக்கை விடுக்கும்.

இதனால் போலீஸாா', 7,500 கேமராக்களில் பதிவாகும் காட்சிகளையும் காண வேண்டிய தேவையில்லை. செயற்கை நுண்ணறிவு கேமரா தோ'வு செய்து அளிக்கும் காட்சிகளை மட்டும் பா'த்தாலே போதுமானது என காவல்துறை உயா' அதிகாரிகள் தெரிவித்தனா'.

---

4. தமிழகத்தில் 22% பெண்களுக்கு மனஅழுத்த நோய்: அமைச்சர் அதிர்ச்சி தகவல்

சென்னை ஓமந்தூராா் அரசு மருத்துவ கல்லூாி மருத்துவமனையில், முதியோர் மற்றும் மன நலம் குன்றியோருக்கான பிரத்யேக ஐந்து சிகிச்சை பிரிவுகளை, அமைச்சர்கள் சுப்பிரமணியன், சேகர்பாபு ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இதன்பின்பு, அமைச்சர் சுப்பிரமணியன் அளித்த பேட்டியில், இந்த மருத்துவமனையில், மனநலம் குன்றிய நோயாளிகளுக்கான மீட்பு சேவை மையம் துவங்கப்பட்டுள்ளது. இதேபோல், 22 அரசு மருத்துவ கல்லூாி மருத்துவமனைகளிலும் துவங்கப்படும்.

இதற்காக, தலா 10 படுக்கைகள் அமைக்கப்பட்டு, சிகிச்சை மற்றும் உணவு, உடை இலவசமாக வழங்கப்படும். பிரசவித்த பெண்களில் 22 சதவீதம் பேருக்கு மனநிலை மாற்றம் ஏற்பட்டு, மன அழுத்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு தாழ்வு மனப்பான்மை, உடல் பலவீனம், பசியின்மை, தூக்கமின்மை போன்ற பிரச்னைகள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கி, தங்களையும், குடும்பத்தினரையும் எப்படி பார்த்து கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் என கூறியுள்ளார்.

---

5. நீதிபதிகள் ஓய்வூதியத்தை உயர்த்தும் மசோதா...நிறைவேறியது!

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வூதியத்தை உயர்த்தும் நோக்கில் நீதிபதிகளுக்கான ஊதியம் மற்றும் சேவை நிபந்தனை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் மசோதா ராஜ்யசபாவில் நேற்று நிறைவேறியது. அனைத்து கட்சிகளும் ஒருமித்த கருத்துடன் ஆதரவு அளித்தன.

உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வூதியத்தை உயர்த்துவதற்கான ஊதியம் மற்றும் சேவை நிபந்தனை சட்ட திருத்த மசோதா லோக்சபாவில் சமீபத்தில் நிறைவேறியது. இந்நிலையில் இந்த மசோதா ராஜ்யசபாவில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

கோரிக்கை

மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு மசோதாவை தாக்கல் செய்து பேசியதாவது:சில வரையறுக்கப்பட்ட காரணங்களுக்காக இந்த மசோதாவை தாக்கல் செய்துள்ளோம். இது, நீதிபதிகளின் ஊதியத்தில் எவ்வித பாதிப்புகளையும் ஏற்படுத்தாது.உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வூதியத்தை கணிசமாக அதிகரிக்கவே இந்த மசோதா தாக்கல் செய்யப்படுகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.மசோதா மீது விவாதம் நடத்த ராஜ்யசபா துணை தலைவர் ஹரிவன்ஷ் நாராயண் சிங் அழைப்புவிடுத்தார்.'சஸ்பெண்ட்' செய்யப்பட்ட 12 எம்.பி.,க்கள் விவகாரத்தில் முதலில் முடிவை அறிவிக்கும்படி, காங்., எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கோரிக்கை விடுத்தார். இதற்கு தி.மு.க., உறுப்பினர்கள் சிவா உட்பட பல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிலையில் காங்., – எம்.பி., அமீ யாஜ்னிக் பேசுகையில், "உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளின் காலி பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன."இதனால் ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த காலி இடங்களை நிரப்புவதில் மத்திய அரசுக்கு அக்கறை உள்ளதா?" என கேள்வி எழுப்பினார்.தி.மு.க., உறுப்பினர் வில்சன் பேசியதாவது:உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது தற்போது முறையே 62 மற்றும் 65 ஆக உள்ளன. இவற்றை 65 மற்றும் 70 ஆக உயர்த்த வேண்டும். இந்த வயதில் நீதித்துறையில் அவர்கள் பெற்றுள்ள அனுபவம், நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிக்க உதவும்.

75 ஆயிரம் வழக்குகள்

உயர் நீதிமன்றங்களில் 57 லட்சம் வழக்குகளும், உச்ச நீதிமன்றத்தில் 75 ஆயிரம் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. நீதிபதிகள் நியமனம் போதுமான அளவில் இல்லை. உயர் நீதிமன்றங்களில் 402 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன. அமெரிக்காவில் நீதிபதிகள் தங்கள் வாழ்நாள் முழுக்க பணியாற்ற சட்டம் இடம் அளிக்கிறது. பிரிட்டனில் நீதிபதிகளின் ஓய்வு வயது 70 ஆக உள்ளது. அதை 75 ஆக உயர்த்த திட்டமிட்டுள்ளனர். நம் நாட்டில் நீதிபதிகள் ஓய்வு பெற்ற பின்னும் வழக்கறிஞர்களாக பணியாற்றுகின்றனர். மத்தியஸ்தங்களில் ஈடுபடுகின்றனர். ஓய்வூதியத்தை மட்டும் நம்பியே வாழ்கின்றனர். அது அவர்களின் வாழ்வாதாரத்திற்கு போதுமானதாக இல்லை.

உச்ச நீதிமன்ற நீதிபதியின் ஒரு மாத சம்பளம், அவர் விசாரிக்கும் வழக்கில் ஆஜராகும் முன்னணி வழக்கறிஞர்களின் ஒரு நாள் கட்டணத்தை விட குறைவு. நீதிபதிகளின் சம்பளத்தை மறுவரையறை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இதையடுத்து மசோதா தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் காரசாரமாக விவாதித்தனர். விவாதத்தின் இறுதியில், அனைத்து கட்சி உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவுடன் மசோதா நிறைவேறியது."அரசியல் பாரபட்சம் இன்றி மசோதா நிறைவேற ஒத்துழைப்பு அளித்த அனைத்து கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றி," என, அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

---

6. தமிழகத்தில் பழங்குடியினர் கல்வியறிவு விகிதம் தேசிய சராசரிக்கும்கீழ் சரிவு!

பழங்குடியின மக்களின் கல்வி நிலையில் இந்திய சராசரியை விட, தமிழ்நாட்டின் சராசரி குறைவாக இருப்பதாக இன்று (டிச. 13) நாடாளுமன்றத்தில் விசிக உறுப்பினர் ரவிக்குமார் எழுப்பிய கேள்விக்கு, மத்திய அரசு பதிலளித்தது. இன்று ரவிக்குமார் இதுகுறித்து எழுப்பிய கேள்விகளுக்கு, மத்திய பழங்குடியினர் நலத் துறை இணை அமைச்சர் ரேணுகா சிங் சருட்டா எழுத்துபூர்வமாக பதில் அளித்துள்ளார். அதன் விவரம் வருமாறு:

பழங்குடியினப் பெண்களின் கல்வியறிவு விகிதத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?, 2020–ம் ஆண்டில் பழங்குடியின (ST) கல்வியறிவு குறித்த மாநில வாரியான தரவு விவரம் என்ன?, பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி ஆகிய இரண்டிலும் பழங்குடி மக்களின் மொத்த சேர்க்கை விகிதம் (GER) என்ன?, GER–ஐ அதிகரிக்க அரசாங்கம் ஏதேனும் சிறப்பு முயற்சிகளை எடுக்கிறதா?, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என்ற கேள்விகளை ரவிக்குமார் எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு, பழங்குடியினர் நலத் துறை இணை அமைச்சர் ரேணுகா சிங் சருட்டா அளித்துள்ள எழுத்துபூர்வமான பதிலில், 'அட்டவணையில் 2011–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி அனைத்திந்திய அளவில் பழங்குடியின ஆண்களின் படிப்பறிவு 59% ஆக இருக்கிறது, பெண்களின் படிப்பறிவு 49.4% ஆக உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பழங்குடியின ஆண்களின் கல்வியறிவு 54.3% ஆகவும், பெண்களின் கல்வியறிவு 46.8% ஆகவும் இருக்கிறது. அதாவது, ஆண் கல்வியில் 4.7 சதவீதமும் பெண் கல்வியில் 2.6 சதவீதமும் தேசிய சராசரியைவிட தமிழ்நாட்டில் குறைவாக உள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைச் சுட்டிக்காட்டி காமதேனு இணையதள செய்திப் பிரிவிடம் பேசிய ரவிக்குமார், "பொதுவாக படிப்பறிவு பெற்றோர் சதவீதத்தில் இந்தியாவில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இருக்கும் தமிழ்நாட்டில், பழங்குடியினர் கல்வியறிவு நிலை மட்டும் இப்படி பின்னடைவாக இருப்பது வேதனையளிக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் பழங்குடியினர் கல்வியறிவு சதவீதத்தை உயர்த்த தமிழக முதல்வர் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார்.

---

7. பளுதூக்குதல்: இந்தியாவுக்கு 3–ஆவது தங்கம்

காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அஜய் சிங் ஆடவருக்கான 81 கிலோ பிரிவில் தங்கம் வென்றாா். இப்போட்டியில் இந்தியாவுக்கு இது 3–ஆவது தங்கப் பதக்கமாகும்.

அஜய் சிங் தனது எடைப் பிரிவில் ஸ்னாட்ச்சில் 147 கிலோ, கிளீன் & ஜொ'க்கில் 175 கிலோ என மொத்தமாக 322 கிலோ எடையைத் தூக்கி

முதலிடம் பிடித்தார். இதில் அவர் ஸ்னாட்ச் பிரிவில் தூக்கிய எடை தேசிய சாதனையாகும்.

ஏற்கெனவே இப்போட்டியில் தங்கம் வென்ற ஜெரிமி லால்ரினுன்கா (67 கிலோ), அசிந்தா ஷியுலி (73 கிலோ) ஆகியோருடன் இணைந்து அஜய் சிங்கும் தற்போது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிக்கு நேரடியாகத் தகுதிபெற்றார்.

இதனிடையே, இந்தப் போட்டியில் மகளிருக்கான 59 கிலோ பிரிவில் இந்தியாவின் பாப்பி ஹஸாரிகா ஸ்னாட்ச் பிரிவில் 84 கிலோ, கிளீன் & ஜெர்க் பிரிவில் 105 கிலோ என மொத்தமாக 189 கிலோ எடையைத் தூக்கி 2-ஆம் இடம் பிடித்து வெள்ளி வென்றார்.

---

8. 20 ஆண்டுகளுக்கு பிறகு 'பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்ற' இந்திய பெண்...!

இஸ்ரேலின் சுற்றுலாத்தளமான எய்லட் நகரில் பிரபஞ்ச அழகிக்கான போட்டி நடைபெற்றது. இதில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 80 அழகிகள் மிஸ் யுனிவர்ஸ் பட்டத்திற்காக பங்கேற்றனர்.

இந்நிலையில், இந்தியா சார்பில் பங்கேற்ற இளம்பெண் ஹர்னாஸ் கவுர் பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு முன்னாள் பிரபஞ்ச அழகி மெக்சிகோவை சேர்ந்த ஆண்ட்ரியா மெசா வாகையை சூட்டினார். ஹர்னாஸ் கவுர் கடந்த 2017-ம் ஆண்டு மிஸ் சண்டிகராக தேர்வு செய்யப்பட்டார். மேலும் பல்வேறு அழகிப் போட்டிகளில் பங்கேற்று பட்டங்களையும் வென்றுள்ளார்.

இந்தியா சார்பில் லாரா தத்தா 2000-ம் ஆண்டில் மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை வென்றிருந்தார். அதன்பிறகு 20 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியப் பெண் பிரபஞ்ச அழகியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

1. 2021 – உலகளாவிய சுகாதார காப்பீட்டு நாளுக்கானக் கருப் பொருள் என்ன?

அ) Sustainable Health Coverage

ஆ) Leave No One's Health Behind: Invest in Health Systems for All ☑

இ) Universal access to Healthcare

ஈ) Equitable and healthy society

✓ ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.12 அன்று உலக நலவாழ்வு அமைப்பால் உலகளாவிய சுகாதார காப்பீடு நாளாக அனுசரிக்கப்படுகிறது.

✓ எந்தவொரு பணநெருக்கடியும் இல்லாமல் அனைத்து மக்களும் தரமான நலவாழ்வுச் சேவைகளைப் பெறுவதை இந்நாள் உறுதிசெய்கிறது. உலகளாவிய நலவாழ்வுக் காப்பீடு ஐநா அவையால் நீடித்த வளர்ச்சி இலக்குகளாக சேர்க்கப்பட்டுள்ளது. "Leave No One's Health Behind: Invest in Health Systems for All" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

2. நியூ கலிடோனியாவின் தீவுப்பகுதி சமீபத்தில் எந்த நாட்டின் ஒரு பகுதியாக இருக்க வாக்களித்தது?

அ) பிரான்ஸ் ☑



ஆ) அமெரிக்கா

இ) ஜப்பான்

ஈ) ரஷ்யா

✓ பிரெஞ்சு தீவுப் பிரதேசமான புதிய கலிடோனியாவில் உள்ள வாக்காளர்கள், பிரான்ஸ் நாட்டின் ஒரு பகுதியாக இருப்பதற்கு வாக்குச் செலுத்தினர். தென் மாகாண பிராந்தியத்தின் தலைவர் சோனியா பேக்ஸ், இதன் முடிவுகளை அறிவித்தார். இதில் பங்கேற்றவர்களில் 96 சதவீதத்தினர் பிரான்சுடன் இருப்பதைத் தேர்ந்தெடுத்தனர். வாக்கெடுப்பு ஐநா மற்றும் பிராந்திய ஆற்றல்களால் கண்காணிக்கப்பட்டது.

---

3. 'Commercial Space Astronaut Wings' திட்டத்துடன் தொடர்புடைய நாடு எது?

அ) அமெரிக்கா ☑



ஆ) சீனா

இ) ரஷ்யா

ஈ) ஆஸ்திரேலியா

✓ 'Commercial Space Astronaut' திட்டம் US Federal Aviation Administration (FAA) மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1984ஆம் ஆண்டின் வணிக விண்வெளி வெளியீட்டுச் சட்டத்தின்கீழ் வருகிறது மற்றும் விமானிகள் மற்றும் விமானக் குழுவினரை அங்கீகரிப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில், FAA ஆனது, விண்வெளியைச் சேரும் நபர்களுக்கு வழங்கப்படும் கமர்ஷியல் ஸ்பேஸ் அஸ்ட்ரோனாட் விங்ஸை இனி வெளியிடப்போவதில்லை என அறிவித்தது.

---

4. புதுப்பிக்கப்பட்ட DICGC சட்டத்தின்படி, கணக்கு வைத்திருப்பவர் –கள் தாங்கள் காப்பீடு செய்யப்பட்ட வைப்புத்தொகையை ____ நாட்களுக்குள் அணுகலாம்?

அ) 30

ஆ) 45

இ) 90 ☑



ஈ) 180

✓ கணக்கு வைத்திருப்பவர்கள் தாங்கள் காப்பீடு செய்த வைப்புத்தொகை –யை 90 நாட்களுக்குள் அணுகுவதை உறுதிசெய்வதற்காக இந்திய அரசு வைப்புத்தொகை காப்பீடு மற்றும் கடன் உத்தரவாத கார்ப்பரேஷன் சட்டத்தில் ஒரு திருத்தத்தை நிறைவேற்றியது.

✓ வங்கி டெபாசிட் காப்பீட்டு நிகழ்வில் பிரதமர் மோடி கலந்து கொண்டு, வங்கிகள் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட டெபாசிட்தாரர்களுக்கு ₹1,300 கோடி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அத்தகைய கணக்குகளில் சிக்கியுள்ள மூன்று லட்சம் டெபாசிட்தாரர்கள் நிதியைப் பெறவுள்ளனர்.

---

5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பக்ஸா புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) மேற்கு வங்கம் ☑



ஆ) ஆந்திர பிரதேசம்

இ) பீகார்

ஈ) மேகாலயா

✓ மேற்கு வங்கத்தில் உள்ள பக்ஸா புலிகள் காப்பகத்தில் குறைந்தது 23 ஆண்டுகளுக்குப்பிறகு இராயல் வங்கப்புலி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு –ள்ளதாக மேற்கு வங்க மாநில அரசு தெரிவித்துள்ளது. பக்ஸா புலிகள் காப்பகத்தின் கிழக்கு தாமன்பூர் காட்டிலுள்ள கண்காணிப்பு கேமராவில் அப்புலியின் படம் பதிவாகியுள்ளது. இதற்கு முன்பு 1998ஆம் ஆண்டில், இராயல் வங்கப்புலியின் படங்கள் அக்காப்பகத்தில் பதிவாகின. தேசிய வனவுயிரி வாரியத்திடமிருந்து புலிகள் காப்பகம் என்ற அடையாளத்தை இந்தக் காப்பகம் இழந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

---

6. உலகின் மிகவுயரமான ரயில்வே பாலத்தூண் கட்டப்பட்டு வரும் நோனி பள்ளத்தாக்கு அமைந்துள்ள மாநிலம்/யூடி எது?

அ) சிக்கிம்



ஆ) உத்தரகாண்ட்

இ) மணிப்பூர் ☑

ஈ) லடாக்

✓ மணிப்பூர் மாநிலத்தில் உள்ள நோனி பள்ளத்தாக்கில் 141 மீ உயரத்தில் உலகின் மிகவுயரமான ரயில்வே பாலத்தூணை ரயில்வே நிர்வாகம் நிர்மாணித்து வருகிறது. இது 111 கி.மீ நீளமுள்ள ஜிரிபாம்–இம்பால் ரயில் பாதையின் ஒருபகுதியாக உள்ளது. இது மணிப்பூரின் தலைநகரத்தை நாட்டின் அகலப்பாதை நெட்வொர்க்குடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நோனி பள்ளத்தாக்கிலுள்ள இப்பாலம், ஐரோப்பாவின் மாண்டினீக்ரோவில் அமைந்துள்ள மாலா – ரிஜேகா வையாடக்ட்டின் தற்போதைய 139 மீ உயர சாதனையை முறியடிக்கும்.

---

7. 'இருவாச்சி திருவிழா' என்பது பின்வரும் எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் கொண்டாடப்படும் ஒரு கலாச்சார விழாவாகும்?

அ) அஸ்ஸாம்



ஆ) நாகாலாந்து ☑

இ) மேற்கு வங்கம்

ஈ) பீகார்

✓ நாகாலாந்து மாநிலத்தின் தனித்துவம்மிக்க 'இருவாச்சி திருவிழா', "திருவிழாக்களின் திருவிழா" என அழைக்கப்படுகிறது. அதன் பாரம்பரிய முறையில் டிச.1ஆம் தேதி அந்தத் திருவிழா தொடங்கியது. இந்த ஆண்டு (2021) திருவிழாவின் 22ஆவது பதிப்பு ஆகும். கடந்த ஆண்டு, COVID தொற்றுகாரணமாக மெய்நிகர் முறையில் இத்திருவிழா நடத்தப்பட்டது. 10 நாள் நடைபெறும் இவ்விழா, ஆண்டுதோறும் டிசம்பர் தொடக்கத்தில் தொடங்கி நாகாலாந்தின் மாநில தினத்துடன் ஒத்திசைந்து நடக்கிறது.

---

8. உலக பாரம்பரிய தளமான லியாங்சு நகரத்தின் தொல்பொருள் இடிபாடுகள் உள்ள நாடு எது?

அ) ஜப்பான்



ஆ) சீனா ☑

இ) கிரேக்கம்

ஈ) தென் கொரியா

✓ லியாங்சு நகரத்தின் தொல்பொருள் இடிபாடுகள் ஓர் உலக பாரம்பரிய தளமாகும். யாங்சே நதி டெல்டாவில் உள்ள லியாங்சு கலாச்சாரத்தின் மர்மத்திற்கு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தீர்வு கண்டுள்ளனர். இது உலகின் மிகவும் மேம்பட்ட கற்கால கலாச்சாரங்களில் ஒன்றாக இருந்தது. சமீபத்திய ஆராய்ச்சியில், இக்களிமண் அடுக்கு நாகரிகத்தின் அழிவுக்கு யாங்சே ஆற்றின் வெள்ளம் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

---

9. "Naoroji: Pioneer of Indian Nationalism" என்ற நூலை எழுதியவர் யார்?

அ) தின்யார் படேல் ☑



ஆ) மிலன் வைஷ்ணவ்

இ) ஓர்னிட் சனி

ஈ) ஜெய்ராம் ரமேஷ்

✓ எழுத்தாளர் தின்யார் படேல் தனது "Naoroji: Pioneer of Indian Nationalism" என்ற நூலிற்காக 2021ஆம் ஆண்டுக்கான மதிப்புமிக்க கமலாதேவி சட்டோபாத்யாய் NIF புத்தகப்பரிசை வென்றார். கமலாதேவி சட்டோபாத்யாய் NIF புத்தகப்பரிசானது கடந்த 2018'இல் நிறுவப்பட்டது. இது அனைத்து தேசிய எழுத்தாளர்களின் புனைகதை அல்லாத இலக்கி –யங்களை கௌரவிக்கின்றது. இந்நூல் இந்திய தேசிய காங்கிரஸை நிறுவிய 19ஆம் நூற்றாண்டின் தலைவரான நௌரோஜியின் வாழ்க்கை வரலாறு ஆகும். அவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினாராவார்.

---

10. அண்மையில் நிறைவேற்றப்பட்ட 'அணை பாதுகாப்பு மசோதா, 2019' உடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம்

ஆ) ஜல் சக்தி அமைச்சகம் ☑

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

✓ அண்மையில் மாநிலங்களவையில் அணை பாதுகாப்பு மசோதா – 2019 நிறைவேற்றப்பட்டது. மத்திய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், இந்த மசோதா மாநிலங்களின் நீர், அணை உரிமை அல்லது பராமரிப்பு, அல்லது மின்சாரம்போன்ற வளங்கள் மீதான மாநிலங்களின் உரிமைகளைக் கைக்கொள்ளும் நோக்கத்தை கொண்டிருக்கவில்லை என்று தெளிவுபடுத்தினார்.

✓ நாடு முழுவதும் உள்ள அணைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யவும், உயிர் மற்றும் உடைமைகளுக்கு பேரிழப்பை ஏற்படுத்தும் அணைகள் தொடர்பான பேரிடர்களைத் தடுக்கவும் இந்த மசோதா வகை செய்கிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பருவநிலை மாறுபாடு தொடர்பான ஐ.நா. வரைவு தீர்மானத்துக்கு இந்தியா எதிர்ப்பு

பருவநிலை மாறுபாடு தொடர்பான ஐ.நா. சபை வரைவு தீர்மானத்துக்கு எதிராக இந்தியா வாக்களித்தது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தரமற்ற உறுப்பு நாடாக இடம்பெற்றுள்ளது. இந்த சூழலில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் பருவநிலை மாறுபாடு தொடர்பான வரைவு தீர்மானம் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானத்தை 12 நாடுகள் ஆதரித்தன. இந்தியாவும் ரஷ்யாவும் எதிர்த்து வாக்களித்தன. சீனா வாக்கெடுப்பில் பங்கேற்க வில்லை. நிரந்தர உறுப்பு நாடான ரஷ்யா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியதால் தீர்மானம் ரத்து செய்யப்பட்டது.

வாக்கெடுப்பின்போது ஐ.நா.வுக்கான இந்திய தூதர் திருமூர்த்தி பேசியதாவது:

பருவநிலை மாறுபாட்டை தடுக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. அதேநேரம் பருவநிலை மாறுபாடு தொடர்பாக ஐ.நா. சபையின் 197 நாடுகளும் ஆலோசித்து தீர்மானிக்க வேண்டும். ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 15 நாடுகள் மட்டும் தீர்மானிக்க முடியாது. இந்த அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் முடிவு எடுக்கும் அதிகாரம் சில நாடுகளின் கைகளுக்கு செல்லும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

புவி வெப்பம் அதிகரிப்பதற்கு அமெரிக்கா, சீனா மற்றும் வளர்ச்சி அடைந்த மேற்கத்திய நாடுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த நாடுகள் பருவநிலை மாறுபாட்டை தடுக்க அதிக நிதி ஒதுக்க வேண்டும். வளரும் நாடுகள், பின்தங்கிய நாடுகள் மீது கட்டுப்பாடுகளை திணிக்கக்கூடாது என்று இந்தியா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

---

2. 7.56 லட்சம் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.2,750 கோடியில் நலத்திட்ட உதவிகள்: திருத்தணியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்

திருத்தணியில் இன்று நடைபெறும் விழாவில், 7.56 லட்சம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.2,750 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார்.

தமிழகம் முழுவதும் 7.22 லட்சம் சுய உதவிக்குழுக்கள் உள்ளன. இவற்றில் 1 கோடியே 6 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் நகர்ப்புறத்தில் 36 லட்சம் பேரும், கிராமப்புறத்தில் 70 லட்சம் உறுப்பினர்களும் உள்ளனர்.

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.5,500 கோடி கரோனா சிறப்புக் கடன் உட்பட ரூ.20 ஆயிரம் கோடி கடன் உறுதி செய்யப்படும், 36,218 சுய உதவிக்குழுக்கள் பயன்பெறும் வகையில் ரூ.809.71 கோடியில் ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பன போன்ற அறிவிப்புகள் சட்டப்பேரவையில், வெளியிடப்பட்டன.

தற்போது இந்த அறிவிப்புகளை செயல்படுத்தும் நோக்கில், தமிழகம் முழுவதும் 58,463 சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 7,56,142 உறுப்பினர்களுக்கு ரூ.2,749.85 கோடி மதிப்பிலான கடன் உதவிகள், நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்குகிறார். திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி பட்டாபிராம் பகுதியில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் இந்த விழாவில், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன், நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்போது, இதே நேரத்தில் இதர மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு அமைச்சர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்குவர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் திருவள்ளூர் மாவட்டத்தில் விழா நடைபெறும் இடத்தை அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், சா.மு.நாசர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

---

3. தடுப்பூசி செலுத்திக் கொண்டவா'களில் 48%–க்கு மேல் பெண்கள்: மாநிலங்களவையில் தகவல்

நாட்டில் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவா'களில் 48.70 சதவீதம் போ' பெண்கள் என்று மாநிலங்களவையில் செவ்வாய்க்கிழமை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடா'பான கேள்விக்கு மத்திய சுகாதாரத் துறை இணைமைச்சா' பாரதி பிரவீண் பவா' எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

போதிய விழிப்புணா'வு இல்லாத காரணத்தால் பெண்கள் கரோன் தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் விகிதம் சற்று குறைவாகவே உள்ளது. கா'ப்பிணிகள், பாலூட்டும் தாய்மா'களுக்கும் கரோனா தடுப்பூசி செலுத்துவதில் தயக்கம் உள்ளது. எனினும் கடந்த மே 19–ஆம் தேதி முதல், பாலூட்டும் தாய்மா'களும், ஜூலை 2 முதல் கா'ப்பிணிகளும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது உரிய மருத்துவ வல்லுநா'களுடன் ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவாகும்.

டிசம்பா' 8–ஆம் தேதி நிலவரப்படி கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவா'களில் 48.70 சதவீதம் பெண்கள் ஆவா'. கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்வது மற்றும் கரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பது தொடா'பாக பெண்கள் மத்தியில் விழிப்புணா'வு ஏற்படுத்த சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

4. 2022–இல் வருகிறது இந்திய செஸ் லீக்

அடுத்த ஆண்டு ஜூன் மாதம் 'இந்திய செஸ் லீக்' என்ற பெயரில் செஸ் போட்டியை நடத்த இருப்பதாக அகில இந்திய செஸ் சம்மேளனம் செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

கிரிக்கெட், பாட்மின்டன், கால்பந்து போட்டிகளில் இருப்பதைப் போன்று செஸ் விளையாட்டிலும் இத்தகைய லீக் போட்டி முறையை இந்திய சம்மேளனம் முன்னெடுக்கிறது.

இப்போட்டியில் மொத்தம் 6 அணிகள் இருக்கும் என்றும், அதில் ஒவ்வொரு அணியிலும் இரு சூப்பா' கிராண்ட்மாஸ்டா'கள், இரு இந்திய கிராண்ட்மாஸ்டா'கள், இரு மகளிா' கிராண்ட்மாஸ்டா'கள், ஒரு ஜூனியா' ஆடவா', ஒரு ஜூனியா' மகளிா' என 8 போ' இருப்பா'கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டபுள் ரவுண்ட் ராபின் முறையில் இரு வாரங்கள் நடைபெற இருக்கும் இப்போட்டியின் குரூப் சுற்று முடிவில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிச் சுற்றில் மோதும். போட்டியை இரு நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. சா'வதசே அளவிலான சிறந்த வீரா', வீராங்கனைகளை இந்தியாவுக்கு அழைத்து வருவதுடன், உள்நாட்டில் இருக்கும் சிறந்த வீரா', வீராங்கனைகளுக்கு நல்லதொரு களத்தை அமைத்துக் கொடுப்பதே இந்தப் போட்டியின் நோக்கமென சம்மேளனம் தெரிவித்துள்ளது. போட்டி தொடா'பான இதர அறிவிப்புகள் அடுத்தடுத்து வெளியாகும் எனத் தெரிகிறது.

1. OECD'இன் சமீபத்திய பொருளாதாரக் கண்ணோட்டத்–தின்படி, இந்த ஆண்டுக்கான உலகளாவிய GDP வளர்ச்சி விகிதம் என்ன?

அ) 9.5%



ஆ) 8%

இ) 5.6% ☑

ஈ) 2.3%

✓ OECD அதன் சமீபத்திய பொருளாதாரக் கண்ணோட்டத்தில் உலக வளர்ச்சி இந்த ஆண்டு 5.6%ஆக இருக்கும் என்று கூறியுள்ளது. உலகளாவிய GDP வளர்ச்சி 2022'இல் 4.5%ஆகவும், 2023'இல் 3.2%ஆகவும் இருக்கும் என்பதையும் அது சிறப்பித்துக்கூறியுள்ளது.

---

2. அண்மையில் நிறைவேற்றப்பட்ட 'அணை பாதுகாப்பு மசோதா, 2019' உடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?

அ) உள்துறை அமைச்சகம்



ஆ) ஜல் சக்தி அமைச்சகம் ☑

இ) உழவு அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல், வன அமைச்சகம்

✓ அண்மையில் மாநிலங்களவையில், 'அணை பாதுகாப்பு மசோதா, 2019' நிறைவேற்றப்பட்டது. மத்திய ஜல் சக்தி அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத், இந்த மசோதா நீர், அணை உரிமை அல்லது பராமரிப்பு, அல்லது மின்சாரம் போன்ற வளங்கள் மீதான மாநிலங்களின் உரிமைகளை கைக்கொள்ளும் நோக்கத்தை கொண்டிருக்கவில்லை என்று தெளிவுபடுத்தினார்.

✓ நாடு முழுவதுமுள்ள அணைகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், அணைகள் தொடர்பான பேரிடர்களை தடுக்கவும் இந்த மசோதா வகை செய்கிறது.

---

3. "State Finances: A Study of Budgets of 2021–22" என்ற தலைப்பில் ஆய்வை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) நிதி அமைச்சகம்

இ) ஆர்பிஐ ☑

ஈ) ஏடிபி

✓ ரிசர்வ் வங்கியின் வருடாந்திர வெளியீடு, "State Finances: A Study of Budgets of 2021–22" என்ற தலைப்பில் அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையின்படி, மாநிலங்களின் ஒருங்கிணைந்த கடன்–ஜிடிபி விகிதம் 2022 மார்ச் இறுதிக்குள் 31 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது 2022–23ல் (FY23) அடைய வேண்டிய இலக்கான 20 சதவீதத்தைவிட அதிகமாகும்.

---

4. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட 'GJ 367 b' என்பது ஒரு .....?

அ) கருந்துளை

ஆ) புறக்கோள் ☑



இ) சிறுகோள்

ஈ) விண்கல்

✓ புதன் கோள் போன்று 8 மணிநேரத்தை ஓராண்டாகக் கொண்ட புறக்கோள் 'GJ 367 b'ஐ அறிவியலாளர்கள் சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர். இது புதன் போன்று பாறைக்கோள் என்றும் பூமியின் பாதி நிறை கொண்டது என்றும் கருதப்படுகிறது.

✓ 'GJ 367 b' ஆனது 24 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் தங்கள் நட்சத்திரத்தை சுற்றிவரும் புறக் கோள்கள் குழுவிற்கு உரியதாகும். இதனை ஜெர்மன் விண்வெளி மையத்தின் கோள் ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

---

5. எந்நிறுவனம் / குழுமத்தின் 75ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், இந்திய அரசு நினைவு அஞ்சல்தலை வெளியிட்டுள்ளது?

அ) டாடா குழுமம்

ஆ) ரிலையன்ஸ் குழுமம்

இ) மஹிந்திரா மற்றும் மஹிந்திரா குழுமம் ☑

ஈ) கோத்ரேஜ் குழுமம்

✓ மஹிந்திரா மற்றும் மஹிந்திரா குழுமத்தின் 75 ஆண்டு நிறைவை முன்னிட்டு, இந்திய அரசு நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட்டுள்ளது. 1945ஆம் ஆண்டு KC மஹிந்திரா மற்றும் அவரது சகோதரர் JC மஹிந்திரா ஆகியோரால் நிறுவப்பட்டதுதான் மஹிந்திரா மற்றும் மஹிந்திரா குழுமம். கடந்த 1947'இல், வில்லிஸ் ஜீப்களை அந்த நிறுவனம் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

---

6. 2021 – உலக எய்ட்ஸ் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ) Know your Status



ஆ) Communities Make the Difference

இ) Global Solidarity Shared Responsibility

ஈ) End inequalities. End Aids. End pandemics ☑

✓ 'உலக எய்ட்ஸ் நாள்' ஒவ்வோர் ஆண்டும் டிச.1 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது முதன் முதலில் 1988'இல் அனுசரிக்கப்பட்டது. "End inequalities. End Aids. End pandemics" என்பது இந்த ஆண்டுக்கான உலக எய்ட்ஸ் நாளின் கருப்பொருளாகும்.

---

7. 2021 – 'சர்வதேச தன்னார்வலர் நாளுக்கானக்' கருப்பொருள் என்ன?

அ) Volunteer now for our common future ☑

ஆ) World needs Volunteers

இ) Volunteering during Pandemic

ஈ) Welcoming Volunteers

✓ ஆண்டுதோறும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்காக தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் தன்னார்வலர்களின் பங்கை ஊக்குவிப்பதற்காக டிச.5 அன்று சர்வதேச தன்னார்வலர்கள் நாள் அனுசரிக்கப்படு–கிறது. இந்நாள் உலகெங்குமுள்ள தன்னார்வலர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கிறது.

✓ UNGA, 2001'ஐ சர்வதேச தன்னார்வலர்களின் ஆண்டாக குறித்தது. "Volunteer now for our common future" என்பது இந்த ஆண்டுக்கான 'சர்வதேச தன்னார்வலர் நாளின்' கருப்பொருளாகும்.

---

8. உலக மண் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) டிசம்பர் 3

ஆ) டிசம்பர் 5 ☑

இ) டிசம்பர் 7

ஈ) டிசம்பர் 9

✓ மண்ணின் முக்கியத்துவம் மற்றும் அதன் நிலையான மேலாண்மை குறித்து மக்களின் கவனத்தைக் குவிப்பதற்காக, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 5ஆம் தேதி உலக மண் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு பிரச்சாரமானது "Halt soil salinization, boost soil productivity" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டது.

---

9. 'சிப்ரியன் போயாஸ் பரிசுடன்' தொடர்புடைய துறை எது?

அ) விண்வெளி அறிவியல்



ஆ) கணிதம் ☑

இ) வைராலஜி

ஈ) வணிகம்

✓ புகழ்பெற்ற இந்திய–அமெரிக்க கணிதவியலாளர் நிகில் ஸ்ரீவஸ்தவா, முதன் முறையாக வழங்கப்பட்டும் $5,000 மதிப்புடைய சிப்ரியன் போயாஸ் பரிசுக்கு கூட்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆபரேட்டர் தியரியில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக அமெரிக்க கணித சங்கம் அவருக்கு இவ்விருதை வழங்குகிறது.

---

10. 'Public Service Ethics – A Quest for Naitik Bharat' என்ற நூலை எழுதியவர் யார்?

அ) பிரபாத் குமார் ☑



ஆ) விஜய் குமார்

இ) இறையன்பு

ஈ) அஜய் பூஷன் பாண்டே

✓ ஜார்கண்ட் மாநிலத்தின் முன்னாள் ஆளுநரும், இந்திய அரசின் முன்னாள் கேபினட் செயலாளருமான பிரபாத் குமார் எழுதிய, 'Public Service Ethics – A Quest for Naitik Bharat' என்ற நூலை குடியரசுத் துணைத் தலைவர் வெளியிட்டார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. எண்ம பணப் பரிமாற்றத்தை ஊக்குவிக்க ரூ.1,300 கோடி மத்திய அமைச்சரவை ஒப்புதல்

யுபிஐ, ரூபே டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எண்ம பணப் பரிமாற்றத்தை ஊக்குவிக்க ரூ.1,300 கோடி திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை மத்திய மின்னணு, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் விவரித்தார். அவர், "எண்ம பரிமாற்றத்தை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக ரூ.1,300 கோடி முதலீடு செய்யப்படும்' என்றார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

எண்ம வழியில் பணப் பரிமாற்றங்கள் செய்யும்போது அந்தத் தொகைக்கு ஏற்ப பரிமாற்றக் கட்டணம் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தப் பரிமாற்றக் கட்டணத்தை திருப்பிச் செலுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதாவது, இந்தத் திட்டத்தின் கீழ் பீம்}யுபிஐ, ரூபே டெபிட் கார்டுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ரூ.2,000 வரையிலான எண்ம பரிவர்த்தனைகளில், பரிவர்த்தனைக் கட்டணம் திருப்பி அளிக்கப்படும். மேலும், பீம்}யுபிஐ, ரூபே டெபிட் கார்டுகள் மூலமாக நடைபெறும் எண்ம பரிவர்த்தனைகளில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஊக்கத்தொகையாக வங்கிகளுக்கு அரசு அளிக்கும். இதனால், வங்கிகள் எண்ம பரிவர்த்தனைகளை ஊக்குவிக்கும். அதிகமானோர் எண்ம பரிமாற்றத்துக்கு மாறுவார்கள்.

இந்தத் திட்டத்துக்காக, கடந்த ஏப்ரல் 1}ஆம் தேதியில் இருந்து ஓராண்டுக்கு ரூ. ரூ.1,300 கோடியை மத்திய அரசு முதலீடு செய்யவுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செமிகண்டக்டர், மின்னணு திரை உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.76,000 கோடி: செமி கண்டக்டர், மின்னணு சாதனங்களில் பயன்படுத்தப்படும் திரைகள் ஆகியவற்றின் உற்பத்தியை ஊக்குவிக்க ரூ.76,000 கோடி மதிப்பிலான திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறுகையில், "நம் அன்றாட வாழ்வில் மின்னணு சாதனங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மின்னணு உபகரணங்களில் செமிகண்டக்டர் உதிரிபாகங்கள் முக்கியமானவை.

பிரதமர் மோடி வரவேற்பு: அமைச்சரவை முடிவுகள் தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்ட ட்விட்டர் பதிவில், "செமி கண்டக்டர் உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு முடிவெடுத்திருப்பது, அந்தத் துறையில் புதுமைக் கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சியை ஊக்குவிக்கும். உற்பத்தியும் அதிகரிக்கும். மத்திய அரசின் சுயசார்பு இந்தியா திட்டத்துக்கு இது வலுசேர்க்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் அட்டை – ஆதார் இணைக்கப்படும்

தேர்தல் சீர்திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மசோதாவின்படி, வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைக்கப்படும்.

இதனால், ஒருவர் பல வாக்காளர் அடையாள அட்டையைப் பயன்படுத்துவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

தற்போது ஜனவரி 1}ஆம் தேதியை அடிப்படையாகக் கொண்டு புதிய வாக்காளர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆண்டுக்கு நான்கு தேதிகளை அடிப்படையாகக் கொண்டு புதிதாக வாக்காளர்கள் சேர்ப்பதற்கு மசோதா வழிவகுக்கிறது. தற்போதைய நிலையில், பணிசார்ந்து ராணுவ வீரர் வெளியூர் சென்றுவிட்டால் அவருக்குப் பதிலாக அவருடைய மனைவி வாக்களிக்க முடியும். ஆனால், பெண் ராணுவ அலுவலர் ஊரில் இல்லாவிட்டால் அவருடைய கணவரால் வாக்களிக்க முடியாது. எனவே, கணவரும் வாக்களிக்கும் வகையில், இதுதொடர்பான சட்டப் பிரிவில் "மனைவி' என்ற வார்த்தைக்குப் பதிலாக "வாழ்க்கைத் துணைவர்' என்ற வார்த்தையை சேர்ப்பதற்கு மசோதா வழிவகுக்கிறது.

---

2. ராணி மேரி கல்லூரியின் 5,500 மாணவிகள் சுகாதாரத் தூதுவர்களாக நியமனம்: அமைச்சர் மா. சுப்பிரமணியன்

ராணி மேரி கல்லூரியில் பயிலும் 5,500 மாணவிகள் கரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தும் சுகாதாரத் தூதுவர்களாக நியமிக்கப்படுவதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இன்று அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

"ராணி மேரி கல்லூரி மாணவிகளுக்கு நடைபெறும் கரோனா தடுப்பூசி சிறப்பு முகாமில் கலந்து கொள்வதிலும், இங்கு மாணவிகளின் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகளின் மூலம் கரோனா குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கு பெற்றதிலும் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இக்கல்லூரி மாணவிகளின் ஆர்வத்தைப் பாராட்டும் வகையிலும், அவர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் இங்கு பயிலும் 5,500 மாணவிகள் கரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தும் சுகாதாரத் தூதுவர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கு சுகாதாரத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அடையாள அட்டை வழங்கப்படும். இந்த மாணவிகள் தங்கள் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் மற்றும் உறவினர்களுக்கு கரோனா பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும், கோவிட் தடுப்பூசி செலுத்திக்கொள்ளும் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்துவார்கள்.

இந்தக் கல்லூரியில் பயிலும் 5,500 மாணவிகளில் 3800 மாணவிகள் இரண்டு தவணை தடுப்பூசியும், 800 மாணவிகள் முதல் தவணை தடுப்பூசியும் செலுத்திக் கொண்டுள்ளனர். 900 மாணவிகள் மட்டுமே தடுப்பூசி செலுத்தாமல் உள்ளனர். அவர்களும் இந்தத் தடுப்பூசி முகாமில் கலந்துகொண்டு ஆர்வமாகத் தடுப்பூசி செலுத்திக் கொண்டு வருகின்றனர். 100 சதவீதம் தடுப்பூசி செலுத்திய கல்லூரி என்கிற நிலையை ராணி மேரி கல்லூரி ஓரிரு நாட்களில் அடைந்துவிடும். இதற்காக கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகளுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நைஜீரியா நாட்டிலிருந்து சென்னை வந்த ஒரு நபருக்கு கரோனா தொற்று கண்டறியப்பட்டு, அதில் மரபியல் மாற்றம் இருந்தது. அவருடன் தொடர்புடைய உறவினர்களுக்குப் பரிசோதனை மேற்கொண்டதில் 6 நபர்களுக்கு கரோனா தொற்றும், அதில் மரபியல் மாற்றமும் கண்டறியப்பட்டதால் இந்த 7 நபர்களின் தடயவியல் மாதிரிகள் ஒமைக்ரான் வகை தொற்றா எனக் கண்டறிய பெங்களூருக்கு ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளது. 7 நபர்களும் சென்னை கிங்ஸ் நிறுவன மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களின் உடல்நிலை சீரான நிலையில் உள்ளது.

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய பன்னாட்டு விமான நிலையங்களில் வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அதிக பாதிப்புள்ள 12 நாடுகளிலிருந்து வரும் பயணிகள் முழுமையாகப் பரிசோதனை செய்யப்படுகின்றனர். அதன்படி, இதுவரை 12,039 நபர்களுக்கு கோவிட் தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதிப்பு குறைவாக உள்ள நாடுகளிலிருந்து 63,411 பயணிகள் தமிழகத்திற்கு வருகை புரிந்துள்ளனர். இவர்களில் 2 சதவீதம் நபர்களுக்கு, அதாவது 1,834 நபர்களுக்கு கரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களில் 40 பேருக்கு கரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதில் 36 நபர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களின் சளி மாதிரிகள் மீண்டும் ஆய்வு செய்வதற்காக பெங்களூருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பு மரபியல் மாற்றம் அடைந்த ஒமைக்ரான் வைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவக்கூடியது எனத் தெரிவித்துள்ளது. மேலும் இந்த வகை வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முகக்கவசம் அணிவதும், இரண்டு தவணை தடுப்பூசி செலுத்துவதுமே நிரந்தரத் தீர்வு எனத் தெரிவித்துள்ளது. தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கும் தொற்று பாதிப்பு ஏற்பட்டாலும், ஆக்சிஜன் சுவாச உதவி போன்ற தீவிர பாதிப்பு இன்றி லேசான அறிகுறிகளுடன் உயிர்ப் பாதுகாப்பு உள்ளது.

பாதிப்பு குறைவாக உள்ள நாடுகளிலிருந்து வரும் நபர்களில் 2% நபர்களுக்கு மட்டும் தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டாலும், விமான நிலையத்திலிருந்து வெளிவரும்போது வெப்பநிலை பரிசோதனை மற்றும் மருத்துவக் குழுவால் பரிசோதிக்கப்படும்போது ஏதேனும் அறிகுறிகள் இருப்பின் அவர்களுக்கும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதிக பாதிப்புள்ள நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு பரிசோதனை எடுக்கப்பட்டு தொற்று பாதிப்பு இல்லை என உறுதி செய்யப்பட்டாலும் அவர்கள் வீட்டுத் தணிமையில் 8 நாட்களுக்கு இருக்க அறிவுறுத்தப்பட்டு மீண்டும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தொற்று பாதிப்பு இல்லை என உறுதி செய்யப்பட்ட பின்னரே வெளியில் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். வெளிநாடுகளிலிருந்து

வரும் பயணிகள் சுகாதாரத்துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் காவல் துறையின் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

மூன்றாம் தவணை தடுப்பூசி செலுத்துவது மற்றும் 18 வயதிற்குக் கீழ் உள்ள நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவது குறித்து மத்திய அரசின் முடிவினைப் பொறுத்து முறையான வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்'' .

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

---

3. வேளாண் விளைபொருள் பட்டியலில் இருந்து பருத்தி நீக்கம்: விவசாயிகள் அதிர்ச்சி

நெல், நிலக்கடலைக்கு அடுத்தபடியாக அதிக சந்தைக் கட்டணம் வசூலித்துக் கொடுத்த பருத்தியை, வேளாண் விளைபொருள் பட்டியலில் இருந்து நீக்கம் செய்து தமிழக அரசு பிறப்பித்துள்ள உத்தரவு விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் அறிவிக்கை செய்யப்பட்ட வேளாண்மை மற்றும் தோட்டக்கலை விளைபொருள்களுக்கு 1 சதவீத சந்தைக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் அதிகம் விளையும் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை அல்லது அந்த உற்பத்திப் பொருளுக்கு தகுந்த விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக குறிப்பிட்ட பயிர்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலிருந்து சுமார் 16 கி.மீட்டர் சுற்றளவிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில், விற்பனைக்கு வரும் விளைபொருள்களுக்கு வியாபாரிகளிடம் சந்தைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதேபோல் வெளியிடங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வரும் விளைபொருள்களையும் வெளிப்படையாகத் தெரிவித்து 1 சதவீத சந்தைக் கட்டணத்தை வியாபாரிகள் செலுத்தி வருகின்றனர். இதனை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அந்தந்தப் பகுதியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள ஜிஎஸ்டி வரியை செலுத்தும் வியாபாரிகள், 1 சதவீத சந்தைக் கட்டணத்தை செலுத்துவதற்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.20 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டி தந்து கொண்டிருந்த பருத்தியை, தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்திலிருந்து நீக்கம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

வியாபாரிகளுக்கு மட்டுமே சாதகமான இந்த சட்டத் திருத்தம், விவசாயிகள் மட்டுமின்றி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அதிகாரிகள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2 மாத இடைவெளியில் முழு விலக்கு: தமிழகத்தில் திருப்பூர், கோவை, திண்டுக்கல், ஈரோடு, சேலம், தருமபுரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் பருத்தி உற்பத்தியில் முன்னிலை வகித்து வருகின்றன.

அதேபோல், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களும் பருத்தி சாகுபடியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இந்த மாவட்டங்களில் தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ், நூலிழைகள் என்ற பிரிவின் கீழ் பருத்திக்கு கபாஸ், லின்ட், கழிவு என்ற 3 பிரிவுகளில் சந்தைக் கட்டணமாக 1 சதவீதம் வசூலிக்கப்பட்டு வந்தது. நாளொன்றுக்கு 50 கிலோவுக்கு கூடுதலான பருத்திப் பஞ்சையும், 100 கிலோவுக்கு கூடுதலான கழிவுப் பஞ்சையும், 150 கிலோவுக்கு கூடுதலான கபாஸ் (விதை நீக்காத பருத்தி) எடுத்துச் செல்லும்போதும் இந்த 1 சதவீத கட்டணம் வசூலிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், லின்ட் (விதை நீக்கப்பட்ட பஞ்சு), கழிவு (கழிவு பஞ்சு) ஆகியவற்றுக்கு சந்தைக் கட்டணத்திலிருந்து கடந்த செப்டம்பர் மாதம் விலக்கு அளித்து தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. அதன்தொடர்ச்சியாக 2 மாத இடைவெளியில், பருத்திக்கும் (கபாஸ்) சந்தைக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்து கடந்த 20 நாள்களுக்கு முன்பு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

பருத்தி வேளாண் விளைபொருள் இல்லையா?: தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் நூலிழைகள் என்ற பிரிவில் இடம் பெற்றிருந்த பருத்தியை நீக்கம் செய்து உத்தரவிடப்பட்டதன் மூலம், பருத்தி இனி வேளாண் விளைபொருள் கிடையாதா என்ற சந்தேகம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

நெல், நிலக்கடலைக்கு அடுத்தப்படியாக பருத்தி மூலமாக மட்டுமே தமிழக அரசுக்கு அதிக வருவாய் கிடைத்து வரும் நிலையில், வியாபாரிகளின் நலனுக்காக விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். வேளாண் விளைபொருள் பட்டியலில் இருந்து பருத்தி நீக்கப்பட்டிருப்பது விவசாயிகளுக்கு எதிர்காலத்தில் பெரும் இழப்பை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது.

இது தொடர்பாக அகில இந்திய விவசாயிகள் சங்க மத்தியக் குழு உறுப்பினர் இரா.சச்சிதானந்தம் கூறியதாவது:

மகாராஷ்டிரம், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து பருத்தியை கொள்முதல் செய்வதற்கு வியாபாரிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால் தமிழகத்தில் பருத்தி சாகுபடி பரப்பு தொடர்ந்து சரிவடைந்து வருகிறது. இதுபோன்ற சூழலில், பருத்திக்கு சந்தைக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது, விவசாயிகளுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் முடிவாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் குறைவான உற்பத்தி இருந்தாலும் கூட, சந்தைக் கட்டண வசூல் அமலில் இருந்தால் மட்டுமே விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை கிடைக்கும்; இல்லாத நிலையில், வியாபாரிகள் சின்டிகேட் அமைத்து

குறைந்த விலைக்கு கொள்முதல் செய்வார்கள். இதனைத் தடுக்கும் வகையில் பருத்திக்கு விலக்கு அளிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அரசாணையைத் திரும்பப் பெற வேண்டும். விவசாயிகள் வருமானம் ஈட்டக் கூடிய பணப் பயிராக உள்ள பருத்திக்கு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் நியாயமான விலை கிடைப்பதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்என்றார்.

---

4. பன்னாட்டு நிறுவன தலைவா்கள் பட்டியலில் இந்தியா வம்சாவளி பெண்

மகாராஷ்டிர மாநிலம், கோலாப்பூரில் பிறந்து வளா்ந்த இந்திய வம்சாவளியைச் சோ்ந்த லீனா நாயா் பன்னாட்டு நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி பொறுப்பேற்கவுள்ளாா்.

இந்திய வம்சவாளியான லீனா நாயா் (52), யுனிலீவா் நிறுவனத்தில் தலைமை மனிதவள அதிகாரியாக பணியாற்றினாா். அந்தப் பதவியை வகித்த முதல் பெண் அவா் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், லீனா யுனிலீவா் நிறுவனத்திலிருந்து விலகி பிரெஞ்ச் லக்ஸரி குழுமத்தில் இணைந்தாா்.

தற்போது அந்தக் குழுமத்தின் லக்ஸரி ஃபேஷன் ஹவுஸ் சேனலின் தலைமைச் செயல் அதிகாரியாக லீனா நாயா் அடுத்த மாதம் பொறுப்பேற்கவுள்ளாா்.

இதன்மூலம், பன்னாட்டு நிறுவனங்களில் தலைமைப் பொறுப்பை வகிக்கும் இந்திய வம்சாவளியினா் பட்டியலில் உள்ள சுந்தா் பிச்சை, பராக் அக்ரவால், சத்யா நாதெள்ளா வரிசையில் லீனா நாயரும் இணையவுள்ளாா்.

---

5. மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்கள்!

2018-ஆம் ஆண்டுமுதல் 2020-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்கள் தொடா்பாக இந்தியா முழுவதும் 76,947 வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்த வழக்குகள் தொடா்பாக 78,217 போ் கைது செய்யப்பட்டுள்ளனா். 7,113 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சா் வீரேந்திர குமாா் செவ்வாய்க்கிழமை எழுத்துபூா்வமாக தாக்கல் செய்த பதிலில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய குற்ற ஆவணக் காப்பகம் இத்தகவலை வழங்கியுள்ளது. மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்களுக்கான காரணங்களை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் பராமரிக்கவில்லை.

'இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, பொது ஒழுங்கானது மாநிலம் தொடா்புடைய விஷயம். மூத்த குடிமக்களின் பாதுகாப்புக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இதுதொடா்பாக இரண்டு விரிவான அறிவுறுத்தல்களை அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு கடந்த 2008 மற்றும் 2013-ஆம் ஆண்டுகளில் மத்திய உள்துறை அமைச்சகம் வழங்கியுள்ளது. அதில் மூத்த குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக' அமைச்சா் தெரிவித்துள்ளாா்.

தமிழகம்: மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்களில் இந்தியா முழுவதும் 3 ஆண்டுகளில் தண்டனை விதிக்கப்பட்ட மொத்த நபா்கள் 7,113. இதில், அதிகபட்சமாக தமிழகத்தில் 2018-இல் 955 போ், 2019-இல் 1030 போ், 2020-இல் 201 போ் என மொத்தம் 2,186 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகம்

இந்தியா முழுவதும் 3 ஆண்டுகளில் 7,113 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சமாக தமிழகத்தில் 2018}இல் 955 பேர், 2019}இல் 1,030 பேர், 2020}இல் 201 பேர் என மொத்தம் 2,186 பேர் தண்டனை பெற்றுள்ளனர்.

---

6. சூரியனைத் 'தொட்ட' நாசா விண்கலம்!

இதுவரை இல்லாத நெருக்கத்தில் சென்று சூரியனில் ஆய்வு மேற்கொள்வதற்காக அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் அனுப்பியுள்ள 'பாா்க்கா' விண்கலம், முதல்முறையாக சூரியனின் வளிமண்டலத்தில் நுழைந்து சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்து நாசா வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வரலாற்றில் முதல்முறையாக ஒரு விண்கலம் சூரியனைத் 'தொட்டுள்ளது' . நாசாவின் பாா்க்கா விண்கலம் சூரிய வளிமண்டலத்தில் மேல்பகுதியில் நுழைந்து பல்வேறு புதிய தகவல்களை சேகரித்துள்ளது.

நிலவில் முதல்முறையாக மனிதா்கள் தரையிறங்கிய பிறகுதான் அதனைக் குறித்த பல விவரங்கள் அறிவியல் உலகுக்குத் தெரியவந்தது. அதே போல், சூரியனின் வளிமண்டலத்துக்குள் பாா்க்கா விண்கலம் நுழைந்துள்ளது இதுதொடா்பான ஆய்வில் மிகப் பெரிய முன்னேற்றத்தை அளித்துள்ளது.

நீண்ட தொலைவிலிருந்து மற்ற விண்கலன்களால் தெரிந்து கொள்ள முடியாத உண்மைகளை பாா்க்கா விண்கலம் சூரியனின் வளிமண்டலத்துக்குள் நுழைந்து கண்டறிந்துள்ளது என்று நாசா வலைதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூரியனில் இதுவரை கண்டறியப்படாத உண்மைகளைக் கண்டறியும் முயற்சியாக, அதற்கு மிக நெருக்கத்தில் விண்கலத்தை அனுப்பி ஆய்வு செய்யும் திட்டத்தை நாசா கடந்த 2009-ஆம் ஆண்டு அறிவித்தது.

அந்த விண்கலத்தை மேரிலாண்ட் மாகாணம், பால்டிமோா் நகரிலுள்ள ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் ஆய்கவகம் வடிவமைத்தது.

கடந்த 2015-ஆம் ஆண்டே இந்த விண்கலத்தை விண்ணில் ஏவ திட்டமிடப்பட்டாலும், பல்வேறு காரணங்களால் அந்தத் திட்டம் தள்ளிவைக்கப்பட்டது.

இந்தச் சூழலில், ஃப்ளோரிடா மாகாணம், கேப் கான்வினல் பகுதியிலுள்ள ராக்கெட் ஏவுதளத்திலிருந்து சக்தி வாய்ந்த அலையன்ஸ் டெல்ட்டா 4 வகை கனரக ராக்கெட்கள்

மூலம் பார்க்கர் விண்கலம் கடந்த 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

அதன் பிறகு 3 ஆண்டுகளாக சூரியனை சுற்றி வரும் அந்த விண்கலம், அதன் நெருக்கத்தில் செல்லும்போது பல தகவல்களை சேகரித்து அனுப்பியது.

இந்த நிலையில் தற்போது சூரியனின் காற்றுமண்டலத்துக்குள் முதல் முறையாக நுழைந்து பார்க்கர் விண்கலம் ஆய்வு மேற்கொண்டுள்ளது. இந்தப் பகுதியில்தான், பூமியில் தாக்கங்களை ஏற்படுத்தும் பல்வேறு உண்மைகள் பொதிந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அந்தப் பகுதியில் பார்க்கர் விண்கலம் மேற்கொண்டுள்ள ஆய்வு, சூரியனைக் குறித்தும், பிரபஞ்சத்தைக் குறித்தும் பல மர்ம முடிச்சுகளை அவிழ்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

7 ஆண்டுகளில் இந்த விண்கலம் சூரியனை 24 முறை நீள்வட்டப்பாதையில் வலம் வரும் எனவும், மிகவும் குறைந்தபட்சமாக சூரியனுக்கு 61.2 லட்சம் கி.மீ. நெருக்கத்தில் வரும் 2025-ஆம் ஆண்டு கடந்து செல்லும் எனவும் கூறப்படுகிறது.

சூரியனின் வளிமண்டலத்துக்குள் நுழைந்த முதல் விண்கலம் என்பது மட்டுமன்றி, மனிதர்களால் உருவாக்கப்பட்டு, வரலாற்றில் இதுவரை இல்லாத அளவு அதிவேகத்தில் பாய்ந்து செல்லும் பொருள் என்ற சிறப்பும் பார்க்கர் விண்கலத்துக்கு உள்ளது.

அதுமட்டுமன்றி, உயிரோடிருக்கும் விஞ்ஞானியின் பெயர் சூட்டப்பட்டுள்ள முதல் விண்வெளி ஆய்வுக் கலம் என்பதும் பார்க்கரின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

சூரியக் காற்று குறித்த உண்மைகளை கடந்த 1958-ஆம் ஆண்டு கண்டறிந்து சொன்ன விஞ்ஞானி யுஜீன் பார்க்கரின் (91) பெயர் இந்த விண்கலத்துக்குச் சூட்டப்பட்டுள்ளது.

பார்க்கர் – ஒரு பார்வை..

2025-ஆம் ஆண்டு வரை வலம் வரும்

சூரியனை 24 முறை நெருங்கிக் கடக்கும்

அதிகபட்சமாக சூரியனுக்கு 61.2 லட்சம் கி.மீ. நெருக்கத்தில் செல்லும்

1,300 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தைத் தாங்கும்

மணிக்கு 7 லட்சம் கி.மீ. வேகம் (நொடிக்கு 190 கி.மீ.)

1. 2021ஆம் ஆண்டிற்கான ஆசிய ஆற்றல் குறியீட்டில் முதலிடம் வகிக்கிற நாடு எது?

அ) சீனா

ஆ) இந்தியா



இ) அமெரிக்கா ☑

ஈ) ரஷ்யா

✓ ஆசிய ஆற்றல் குறியீட்டை சிட்னியின் லோவி நிறுவனம் தயாரித்துள்ளது. சமீபத்தில் வெளியிடப்பட்ட 2021ஆம் ஆண்டிற்கான குறியீட்டில், அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. ஆசிய கண்டத்தில் உள்ள 26 நாடுகள் மற்றும் பிரதேசங்களை வரிசைப்படுத்தும் இந்தக் குறியீடு, இந்தியாவை 4ஆவது ஆற்றல்மிகு நாடாக தரவரிசைப்படுத்துகிறது.

✓ பொருளாதாரத் திறன், இராணுவத் திறன் மற்றும் கலாச்சார செல்வாக்கு போன்ற பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் இந்தியா தனது 4ஆவது இடத்தைத் தக்க வைத்துக்கொண்டுள்ளது.

---

2. முற்றிலும் காகித பயன்பாடற்ற உலகின் முதல் அரசாக மாறியுள்ள நகரம் எது?

அ) மாஸ்கோ



ஆ) துபாய் ☑

இ) நியூயார்க்

ஈ) அபுதாபி

✓ முற்றிலும் காகித பயன்பாடற்ற அரசாக மாறிய உலகின் முதல் அரசு துபாய் என்று அமீரகத்தின் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷித் அல் மக்தூம் தெரிவித்தார். இதனால் ஆண்டுக்கு 2,650 கோடி ரூபாய் நிதியும், பணியாளர்களின் 1 கோடியே 40 லட்சம் மணி நேர பணி நேரமும் சேமிக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். 5 கட்டங்களாக பிரித்து இந்தத் திட்டத்தின் இலக்கு எட்டப்பட்டுள்ளது. துபாயில் 45 அரசு நிறுவனங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.

---

3. ஆண்டுதோறும் 'நுபி லால் நாள்' அனுசரிக்கப்படுகிற மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ) அஸ்ஸாம்



ஆ) மணிப்பூர் ☑

இ) அருணாச்சல பிரதேசம்

ஈ) சிக்கிம்

✓ ஆங்கிலேய அரசுக்கு எதிராக நீதிக்காகப் போராடிய மணிப்பூரின் வீரமிகு பெண்களுக்கு மரியாதைசெலுத்தும் வகையில் 'நூபி லால் நாள்' அனுசரிக்கப்படுகிறது. இது ஆண்டுதோறும் டிசம்பர்.12 அன்று அனுசரிக்கப்படுகிறது.

---

4. ஒளி–உணர்திறன் மருந்தைப் பயன்படுத்துவதை உள்ளடக்கிய சிகிச்சையின் பெயர் என்ன?

அ) போட்டோடைனமிக் சிகிச்சை ☑



ஆ) ஒளிமின்னழுத்த சிகிச்சை

இ) ஒளிக்கதிர் சிகிச்சை

ஈ) ஒளியியல்

✓ போட்டோடைனமிக் சிகிச்சையானது ஒளி–உணர்திறன் மருந்தைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது; இது ஒளி மூலத்தால் செயல்படுத்தப்படுகிறது. இச்சிகிச்சையானது சில புற்றுநோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது. இச்சிகிச்சையின் காரணமாக பக்கவிளைவுகள் உண்டாவதாக நோயாளிகள் புகாரளிக்கின்றனர்.

✓ பலர் இதன் காரணமாக இரவில் சிறந்த பார்வைத் திறனும் இருளில் அசாதாரண வடிவங்கள் தெரிவதாகவும் கூறுகின்றனர். விழித்திரையில் காணப்படும் ஒளியுணர் திறன் புரதமான ரோடப்சின், இப்புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் ஒளிச்சேர்க்கையான குளோரின் e6 உடன் தொடர்புகொள்வதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

---

5. சமீப செய்திகளில் இடம்பெற்ற செய்ன் ஆறு பாயும் நாடு எது?

அ) ரஷ்யா



ஆ) பிரான்ஸ் ☑

இ) ஆஸ்திரேலியா


ஈ) சீனா

✓ செய்ன் என்பது பிரான்சின் வடபகுதியில் 777 கிமீட்டர் நீளம் பாயும் ஓர் ஆறாகும். பாரிஸ் ஒலிம்பிக்கின் தொடக்க விழா, 2024 ஜூலை 26 அன்று செய்ன் ஆற்றங்கரையில் நடைபெறும். 200'க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் அதிகாரிகள் பாரிஸில் உள்ள Pont d'Austerlitz மற்றும் Pont d'lena பாலங்களுக்கு இடையில் கிட்டத்தட்ட 6 கிமீ பயணம் செய்வார்கள்.

---

6. சமீப செய்திகளில் இடம்பெற்ற யூதூ–2 என்ற நிலவு ஆய்வூர்தியை ஏவிய நாடு எது?

அ) ஜப்பான்



ஆ) சீனா ☑

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) இஸ்ரேல்

✓ Yutu–2 என்பது ஒரு ரோபோட்டிக் லூனார் ரோவர் ஆகும், இது கடந்த 2018'இல் நிலவுக்கு சாங்'இ–4 திட்டத்தின் ஒரு பகுதியாக ஏவப்பட்டது. சந்திரனின் மேற்பரப்பில் ஒரு விசித்திரமான, கனசதுர வடிவிலான பொருளை இந்த ஆய்வூர்தி சமீபத்தில் கண்டறிந்துள்ளது.

✓ நிலவின் தொலைவில் உள்ள வான் கர்மன் பள்ளத்தைக் கடக்கும்போது இந்த ரோவர் அப்பொருளைக் கண்டது. இப்பொருளுக்கு "மர்ம வீடு" என்று பெயரிடப்பட்டுள்ளது.

---

7. நிலையான வானூர்தி எரிபொருளை முதன்முதலாக பயன்படுத்தவுள்ள வானூர்தி நிறுவனம் எது?

அ) பிரிட்டிஷ் ஏர்வேஸ் ☑

ஆ) ஏர் இந்தியா

இ) குவாண்டாஸ்

ஈ) ஏர் எமிரேட்ஸ்

- ✓ பிலிப்ஸ் 66 லிட் உடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு, 'பிரிட்டிஷ் ஏர்வேஸ்' இங்கிலாந்தில் வணிக ரீதியாக தயாரிக்கப்பட்ட நிலையான வானூர்தி எரிபொருளைப் (Sustainable Aviation Fuel) பயன்படுத்தும் முதல் விமான நிறுவனமாக மாறும்.
- ✓ நிலையான வானூர்தி எரிபொருள் என்பது குறைந்த கார்பன் கொண்ட எரிபொருளாகும்; இது கழிவு தாவர எண்ணெய்கள், கொழுப்புகள் மற்றும் கிரீஸ்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க தீவனங்களிலிருந்து உற்பத்தி செய்யப்–டுகின்றது.

---

8. விண்ணறிவியலைப் பொறுத்தவரை, 'லியோனார்ட்' என்றால் என்ன?

அ) சிறுகோள்



ஆ) வால் நட்சத்திரம் ☑

இ) புறக்கோள்

ஈ) செயற்கைக்கோள்

- ✓ வட விண்ணில் ஒரு பிரகாசமான வால் நட்சத்திரம் இந்த ஆண்டு நவம்பர் மாதம் காணப்பட்டது. இது வால்மீன் சி/2021 ஏ1, 'லியோனார்ட்' என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வால் நட்சத்திரம் முதன்முதலில் 2021 ஜனவரியில் வியாழனைச் சுற்றி கண்டுபிடிக்கப்பட்டது.
- ✓ இந்த வால்மீன் 'வேல் கேலக்ஸி' என்றும் அழைக்கப்படும் NGC 4631'இன் மையத்தில் பச்சை நிற கோமாவுடன் காணப்பட்டது. 'லியோனார்ட்' வால் நட்சத்திரம் டிசம்பர் மாதத்தில் பிரகாசமாக வளரும்.

---

9. கொடி நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) டிசம்பர் 7 ☑



ஆ) டிசம்பர் 8

இ) டிசம்பர் 10

ஈ) டிசம்பர் 15

- ✓ ஆண்டுதோறும் டிசம்பர்.7ஆம் தேதி அன்று 'கொடி நாள்' அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள் தியாகிகள் மற்றும் இந்த நாட்டிற்கு சேவை செய்யும் துணிச்சலான வீரர்களை கௌரவிக்கும் ஒரு நாளாகும். இது இந்தியாவின் 'கொடி நாள்' என்றும் அழைக்கப்படுகிறது மற்றும் இந்திய இராணுவத்தின் நலனுக்காக இந்திய குடிகளிடமிருந்து நிதி திரட்டுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்தியா, 1949 ஆகஸ்ட் முதல் ஒவ்வோர் ஆண்டும் இந்த நாளைக் கொண்டாடுகிறது.

---

10. பல நாடுகளின் பேரிடர் மேலாண்மை பயிற்சியான 'PANEX–21'ஐ நடத்தவுள்ள நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) இந்தியா ☑

இ) ஜப்பான்

ஈ) சீனா

- ✓ இந்திய இராணுவம் 'PANEX–21' எனவழைக்கப்படும் பல நாடுகளின் பேரிடர் மேலாண்மை பயிற்சியை ஏற்பாடு செய்கிறது. இப்பயிற்சி BIMSTEC நாடுகளான வங்காள தேசம், பூட்டான், நேபாளம், இலங்கை, மியான்மர், தாய்லாந்து மற்றும் இந்தியாவை உள்ளடக்கும். COVID–19 தொற்றுநோயின் பின்னணியில் நிவாரணத்தில் சிறப்பு கவனஞ்செலுத்தி, PANEX–21 பயிற்சி டிச.20–22 வரை புனேவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பெண்ணின் திருமண வயதை 21 ஆக உயர்த்தும் பரிந்துரை: மத்திய அமைச்சரவை ஒப்புதல்

பெண்ணின் திருமண வயதை 18ல் இருந்து 21 ஆக உயர்த்தும் யோசனைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக கடந்த சுதந்திர தின உரையின் போது பிரதமர் நரேந்திர மோடி, பெண்ணின் திருமண வயதை 21 ஆக உயர்த்துவது குறித்து பேசினார்.

அவர் பேசுகையில், இந்த அரசாங்கம் எப்போது தேசத்தின் மகள்கள், சகோதரிகளின் உடல்நலனில் அக்கறை கொண்டுள்ளது. ஊட்டச்சத்துக் குறைபாட்டில் இருந்து பெண்களைக் காக்க, அவர்கள் சரியான வயதில் திருமணம் செய்து கொள்வதை உறுதி செய்வது அவசியம். இப்போது நாட்டில் ஆணின் திருமண வயது 21 ஆகவும், பெண்ணின் திருமண வயது 18 ஆகவும் உள்ளது. அரசாங்கம், குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் மற்றும் இந்து திருமணச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. அவ்வாறு திருத்தம் மேற்கொண்டு பெண்ணின் திருமண வயது 21 ஆக உயர்த்தப்படும் என்று கூறியிருந்தார்.

முன்னதாக, பெண்ணின் திருமண வயதை அதிகரிக்க நிதி ஆயோக் செயற்குழுவை அமைத்திருந்தது. அதற்கு ஜெயா ஜேட்லி தலைமை வகிக்கிறார். நிதி ஆயோக் நிபுணர் மருத்துவர் வி.கே.பால், சுகாதார அமைச்சகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் ஆகியனவற்றின் உறுப்பினர்கள் இந்த செயற்குழுவில் இடம்பெற்றிருந்தனர். அந்தக் குழுவின் பரிந்துரைகளின்படியே பிரதமரும் பெண்ணின் திருமண வயதினை உயர்த்துவது தொடர்பாக உறுதியளித்திருந்தார். இந்நிலையில், பெண்ணின் திருமண வயதை 18ல் இருந்து 21 ஆக உயர்த்தும் யோசனைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இனி இது நாடாளுமன்றத்தில் சட்ட மசோதாவாக தாக்கல் செய்யப்பட்டு சட்ட வடிவம் பெறும்.

இதற்கான பரிர்ந்துரையை டிசம்பர் தொடக்கத்தில் செயற்குழு சமர்ப்பித்ததாகத் தெரிகிறது. அதில், பெண்ணின் திருமண வயதை அதிகரிப்பதால் அவளின் பொருளாதார, சமூக, ஆரோக்கிய மேம்பாடு உறுதி செய்யப்படும் அது குடும்பம், சமூகம், குழந்தைகள் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

---

2. இந்தியா – பாகிஸ்தான் போரின் பொன்விழா கொண்டாட்டம்

வெற்றி தினத்தின் பொன்விழாவை முன்னிட்டு சென்னையில் உள்ள போர் வீரர்கள் நினைவுச் சின்னத்தில் முதல்வர் மு க ஸ்டாலின் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

பாகிஸ்தானுடன் கடந்த 1971–ம் ஆண்டு நடந்த போரில் இந்தியா வெற்றி பெற்றது. இந்த போரில் 93 ஆயிரம் பாகிஸ்தான் வீரர்கள் இந்தியாவிடம் சரணடைந்தனர். இப்போரின் விளைவாக வங்கதேசம் விடுதலை அடைந்தது. இதையடுத்து, ஆண்டுதோறும் டிச.16–ம்தேதி வெற்றி தினமாக கொண்டாடப் பட்டு வருகிறது.

போரில் இந்தியா வெற்றி பெற்று 50 ஆண்டுகள் ஆனதை முன்னிட்டு, வெற்றி தினத்தின் பொன் விழா கொண்டாடப்படுகிறது.

---

3. அகில இந்திய மேயர்கள் மாநாடு – பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்

நகர்ப்புறத்தில் உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் குறைப்பாட்டுப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண மத்திய அரசு பலவகையான திட்டங்களைத் தொடங்கியுள்ளது. இதற்காக சமீப காலங்களில் பல்வேறு புதிய முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த முயற்சிகளுக்கு உத்தரப்பிரதேச மாநிலத்தில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளில் உத்தரப்பிரதேச மாநிலம் நகர்ப்புற உள்கட்டமைப்பில் வெகுவான முன்னேற்றம் அடைந்துள்ளது.

இந்த நிலையில் உத்தரப்பிரதேசம், வாரணாசியில் நடைபெறும் அகில இந்திய மேயர்கள் மாநாட்டை பிரதமர் மோடி காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைக்கிறார். மேலும் இந்த மாநாட்டில் "புதிய நகர்ப்புற இந்தியா " என்ற மையப்பொருளில் பிரதமர் மோடி உரையாற்ற உள்ளார்.

நகர்ப்புற வளர்ச்சியில் மத்திய அரசு மற்றும் உத்தரப்பிரதேச அரசின் முக்கிய சாதனைகளை எடுத்துக்காட்டும் கண்காட்சி ஒன்றுக்கும் டிசம்பர் 17 முதல் 19 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

---

4. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.1,895 கோடி செலவு: மத்திய அரசு

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.1,894.85 கோடி செலவிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு வியாழக்கிழமை தெரிவித்தது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தூய்மை இந்தியா திட்டம் குறித்து பரவலான விழிப்புணா்வை ஏற்படுத்தி தகவல், கல்வி மற்றும் தொலைத்தொடா்பு (ஐஇசி) வியூகம் மூலம் விரும்பும் இலக்கை அடைய வியூகம் வகுக்கப்பட்டது. இந்த ஐஇசி வியூகத்துக்காக 2014–2015 முதல் 2021–22–ஆம் நிதியாண்டு வரையில் ரூ.1,894.85 கோடி செலவிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தூய்மை இந்தியா திட்டத்தை மத்திய அரசு கடந்த 2014–ஆம் ஆண்டு அக்டோபா் 2–ஆம் தேதி தொடக்கி வைத்தது. 2019 அக்டோபா் 2–க்குள் அனைத்து கிராமங்களிலும் கழிப்பறை வசதியை ஏற்படுத்தி தருவதன் மூலம் திறந்த வெளியில் அசுத்தம் இல்லாத நாடாக உருவெடுக்கச் செய்வதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

5.புதுச்சேரியில் சர்வதேச ஆவணப்பட, குறும்பட திருவிழா

புதுச்சேரியில் சர்வதேச ஆவணப்படம் மற்றும் குறும்பட திருவிழா இன்று தொடங்கி 3 நாட்கள் நடக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக புதுச்சேரியில் முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மத்திய பல்கலைக்கழகத்துடன் இணைந்து சர்வதேச ஆவணப்பட, குறும்பட திருவிழாவை நடத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக புதுச்சேரி திரை இயக்கம், அலையன்ஸ் பிரான்சிஸ், மத்திய திரைப்பட பிரிவு, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் இணைந்து இந்திய திரையுலக மேதை சத்யஜித் ரே நூற்றாண்டு திருவிழாவை நடத்த திட்டமிட்டுள்ளது.

இத்திருவிழா இன்று (17ம் தேதி) தொடங்கி 19ம் தேதி வரை 3 நாட்கள் அலையன்ஸ் பிரான்சிஸ் திரையரங்கில் நடக்கிறது. இத்திருவிழாவில் சத்யஜித் ரே உருவாக்கிய உலகளவில் இந்திய சினிமாவுக்கு பெருமை சேர்த்து, பல விருதுகள் பெற்ற 9 திரைப்படங்களும், ஷியாம் பெனகல் உருவாக்கிய சத்யஜித் ரே ஆவணப்படமும் திரையிடப்பட உள்ளது. தொடக்க நிகழ்ச்சி இன்று மாலை 5 மணிக்கு நடக்கிறது. சத்யஜித் ரேயின் முதல்படமான உலகளவில் அனைத்து திரைப்பட விழாக்களிலும் திரையிடப்பட்ட 'பதேர் பாஞ்சாலி' திரையிடப்படுகிறது. பொதுமக்களுக்கு அனுமதி இலவசம்.

---

6. 81 நிமிடத்தில் உருவான திரைப்படம்

கே பாக்கியராஜ் நடிப்பில் 81 நிமிடம் தொடர்ச்சியாக படப்பிடிப்பு நடத்தி திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது.

81 நிமிட படப்பிடிப்பு

தமிழ் திரையுலகில் புதிய இயக்குனரான சிவ மாதவ் இயக்கத்தில் இயக்குநரும், நடிகருமான கே பாக்யராஜ் கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் '3.6.9'. இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் பிளாக் பாண்டி, அஜய் கண்ணன், சுகைல், சத்தி மகேந்திரா மற்றும் வில்லன் கதாபாத்திரத்தில் படத்தின் தயாரிப்பாளர் பி ஜி எஸ் நடித்துள்ளார். மாரிஸ்வரன் ஒளிப்பதிவு செய்துள்ள இந்த படத்துக்கு கார்த்திக் ஹர்ஷா இசை அமைத்துள்ளனர்.

உலக சினிமா வரலாற்றில் 81 நிமிடங்கள் தொடர்ச்சியாக படப்பிடிப்பு நடத்தி முடிக்கப்பட்டு உள்ளது. இந்த படத்தின் படிப்பிடிப்பு புதுச்சேரி பிள்ளையார் குப்பத்தில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் நேற்று நடந்தது. காலை 11.40 மணிக்கு தொடங்கிய படப்பிடிப்பு மதியம் 1.01 மணிக்கு முடிந்தது. ஒரே நேரத்தில், ஒரு களத்தில் 24 கேமராக்கள், 150–க்கும் மேற்பட்ட நடிகர், நடிகைகள், 450 பணியாளர்களை கொண்டு படமாக்கப்பட்டது.

---

1. 'உலக சமத்துவமின்மை அறிக்கை – 2022'இன்படி, வயதுவந்த இந்தியரின் சராசரி தேசியவருமானம் என்ன?

அ) ₹1.04 லட்சம்



ஆ) ₹2.04 லட்சம் ☑

இ) ₹4.04 லட்சம்

ஈ) ₹6.04 லட்சம்

✓ அண்மையில் வெளியிடப்பட்ட 'உலக சமத்துவமின்மை அறிக்கை – 2022', லூகாஸ் சான்சலால் எழுதப்பட்டு புகழ் பெற்ற பொருளாதார நிபுணர்களான தாமஸ் பிகெட்டி, இம்மானுவேல் சாஸ் மற்றும் கேப்ரியல் ஜூக்மான் ஆகியோரால் தொகுக்கப்பட்டுள்ளது.

✓ இவ்வறிக்கையின்படி, அதிகரித்துவரும் வறுமை மற்றும் வசதியான உயரடுக்கினரைக்கொண்ட உலகின் மிகவும் சமத்துவமற்ற நாடுகளுள் ஒன்றாக இந்தியா உள்ளது. இந்தியாவில் உள்ள முதல் 10% மற்றும் முதல் 1% மக்கள் மொத்த தேசிய வருமானத்தில் முறையே 57% மற்றும் 22 சதவீதத்தை கொண்டுள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.

---

2. அண்மையில் எட்டாவது இந்தியப் பெருங்கடல் பேச்சுவார்த்தையை நடத்திய நாடு எது?

அ) இலங்கை



ஆ) இந்தியா ☑

இ) மியான்மர்

ஈ) பிலிப்பைன்ஸ்

✓ இந்திய வெளியுறவு அமைச்சகம், இந்திய உலக விவகார கவுன்சில் இணைந்து எட்டாவது இந்தியப் பெருங்கடல் பேச்சுவார்த்தையை நடத்தியது. இந்த ஆண்டு பதிப்பின் கருப்பொருள் "Leveraging Digital Technologies for Health, Education, Development, and Trade in Indian Ocean Rim Association Member States" என்பதாகும்.

---

3. கொலம்பியா ஜர்னலிசம் பள்ளியின் 2022ஆம் ஆண்டு –க்கான முன்னாள் மாணவர் விருது வென்ற இந்தியப் பத்திரிகையாளர் யார்?

அ) N இராம்



ஆ) மாலினி பார்த்தசாரதி ☑

இ) ராஜா மோகன்

ஈ) சோலி ஜே. சொராப்ஜி

✓ 'தி ஹிந்து' வெளியீட்ட குழுமத்தின் தலைவரான மாலினி பார்த்தசாரதி, அமெரிக்காவின் கொலம்பியா ஜர்னலிசம் பள்ளியின் 2022ஆம் ஆண்டுக்கான முன்னாள் மாணவர் விருது வென்ற நான்கு மூத்த பத்திரிகையாளர்களுள் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

✓ எரிக் மார்கஸ், "மேக்கிங் கே ஹிஸ்டரி" போட்காஸ்டின் நிறுவனர் மற்றும் தொகுப்பாளர், ஸ்டுவர்ட் ஸ்கீயர், அமெரிக்க யூத உலக சேவை மற்றும் தாமஸ் மேயர், புலனாய்வு பத்திரிகையாளர் ஆகியோர் பிற வெற்றியாளர் –களுள் அடங்குவர். வெண்டி லு (ஹஃப்போஸ்ட்) மற்றும் முக்தார் இப்ராஹிம் (சஹான் ஜர்னல்) ஆகியோர் கூட்டாக இணைந்து முதல் தசாப்த விருதைப் பெற்றனர்.

4. குற்றவியல் விஷயங்களில் பரஸ்பர சட்ட உதவிக்காக எந்த நாட்டுடனான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

அ) சுவிட்சர்லாந்து

ஆ) போலந்து ☑



இ) அமெரிக்கா

ஈ) ரஷ்யா

✓ குற்ற விஷயங்களில் பரஸ்பரம் சட்ட உதவி தொடர்பாக இந்தியா – போலந்து இடையேயான உடன்பாட்டிற்கு பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பரஸ்பர சட்ட உதவியின்மூலம் பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களுக்காக வழக்குத் தொடுத்தல் புலனாய்வு ஆகியவற்றில் இருநாடுகளின் திறனையும், தீவிரத் தன்மையையும் விரிவுப்படுத்துவது இதன் நோக்கமாகும்.

✓ போலந்து சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களைக் கையாள்வ –தில் இந்தியாவின் செயல்திறனையும் இது அதிகரிக்கும்.

---

5. உலக வர்த்தக அமைப்பின் (WTO) குழுமம் எந்த நாடு சர்க்கரை துறையில் மானியங்களை திரும்பப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது?

அ) ஆஸ்திரேலியா

ஆ) இந்தியா ☑

இ) அமெரிக்கா

ஈ) சீனா

✓ உலக வர்த்தக அமைப்பின் (WTO) குழு, 'உற்பத்தி உதவி, தாங்கிருப்பு மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் போக்குவரவு திட்டங்களின்'கீழ் இந்தியா தனது மானியங்களை திரும்பப்பெறுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

✓ ஆஸ்திரேலியா, பிரேசில் மற்றும் குவாத்தமாலா ஆகியவை கடந்த 2019ஆம் ஆண்டில் WTOஇடம் சர்க்கரை துறையில் இந்தியாவின் கொள்கை நடவடிக்கைகள் குறித்து இந்தியாவுக்கு எதிராக புகார்களை எழுப்பின. வேளாண் ஒப்பந்தம் மற்றும் SCM ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா தனது கடமைகளுக்கு இணங்குமாறு WTO அதனிடம் கேட்டுக்கொண்டது.

---

6. சமீப செய்திகளில் இடம்பெற்ற மனோகரி கோல்ட் டீ உடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) கேரளா

இ) அஸ்ஸாம் ☑

ஈ) மேற்கு வங்காளம்

✓ அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள அரிய வகை தேயிலையான மனோகரி கோல்டு டீ சமீபத்தில் கவுகாத்தி தேயிலை ஏல மையத்தில் கிலோ ₹1 லட்சத்துக்கு விற்கப்பட்டு வரலாறு படைத்துள்ளது. தேயிலை ஒரு கிலோ ₹75,000'க்கு ஏலம் போனபோது, 2020'ல் இத்தேயிலை வகை அதன் சொந்த சாதனையை முறியடித்தது.

✓ வடகிழக்கு தேயிலைச் சங்கம் இத்தகைய தேயிலை உற்பத்தியை அதிகரிக்க திட்டமிட்டு வெண் தேயிலை, பசுந்தேயிலை, மஞ்சள் தேயிலை என பல்வேறு வகையான தேயிலைகளை தயாரிக்க ஆரம்பித்துள்ளது.

---

7. "உணவு மற்றும் உழவிற்கான உலகின் நிலம் மற்றும் நீர்வளங்களின் நிலை" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ) IMF

ஆ) FAO ☑

இ) உலக வங்கி

ஈ) WEF

✓ உணவு மற்றும் உழவிற்கான உலகின் நிலம் மற்றும் நீர் வளங்களின் நிலை (SOLAW 2021) என்ற அறிக்கை ஐநா உணவு மற்றும் உழவு அமைப்புமூலம் வெளியிடப்பட்டது. ஐநாவின் உணவு மற்றும் உழவு (FAO) அமைப்பால் 2021 டிச.8–9 வரை, நிலம் & நீர் நாட்கள் நடத்தப்படுகின்றன. "Systems at breaking point" என்பது 'SOLAW–2021'இன் கருப்பொருளாகும்.

---

8. "டிராக்கிங் யுனிவர்சல் கவரேஜ் – 2021 உலகளாவிய கண்காணிப்பு" என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

அ) WTO

ஆ) WHO ☑

இ) FAO

ஈ) WEF

✓ உலக சுகாதார நிறுவனமானது அண்மையில் "டிராக்கிங் யுனிவர்சல் கவரேஜ் – 2021 உலகளாவிய கண்காணிப்பு" என்ற அறிக்கையை வெளியிட்டது. யுனிவர்சல் ஹெல்த் கவரேஜ் தினத்தை முன்னிட்டு, உலக வங்கி "உடல்நலம் 2021'இல் நிதிப்பாதுகாப்பு குறித்த உலகளாவிய கண்காணிப்பு" அறிக்கையை வெளியிட்டது.

✓ யுனிவர்சல் ஹெல்த் கவரேஜை நோக்கிய உலகளாவிய முன்னேற்றத்தை COVID தொற்று 20 ஆண்டுகளுக்கு நிறுத்தக்கூடும் என்று இவ்வறிக்கை காட்டுகிறது.

---

9. பரோடா வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட 'பாப் வேல்ட் வேவ்' என்பது ஒரு _____?

அ) உலகளாவிய பற்றட்டை

ஆ) அணியக்கூடிய சாதனம் ☑

இ) AI இயலி

ஈ) முதலீட்டு தளம்



✓ பரோடா வங்கியானது எண்ம வங்கியியல் கொடுப்பனவு –களுக்காக 'bob World Wave' என்றவொரு அணியக் கூடிய சாதனத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ இது வாடிக்கையாளர்களின் SpO2, உடல் வெப்பநிலை, இதயத்துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் ஆகியவற்றைக் கண்காணிக்கின்றது. அணியக்கூடிய சாதனத்துடன் கூடிய கட்டண செயல்முறையை வழங்குவதற்காக NPCI உடன் பரோடா வங்கி கூட்டு சேர்ந்துள்ளது.

---

10. எந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், ஓமிக்ரான் திரிபைக் கண்டறிவதற்காக RT–PCR அடிப்படையிலான கருவியை உருவாக்கியுள்ளனர்?

அ) IISc

ஆ) IIT – தில்லி ☑

இ) NIV

ஈ) AIIMS

✓ IIT தில்லியின் குசுமா உயிரியல் அறிவியல் பள்ளியின் ஆராய்ச்சியாளர்கள், SARS–CoV–2'இன் ஓமிக்ரான் (B.1.1.529.1) திரிபைக் கண்டறிவதற்காக RT–PCR அடிப்படையிலான கருவியை உருவாக்கியுள்ளனர்.

✓ இச்சோதனை முறை ஓமிக்ரான் திரிபில் உள்ள மற்றும் SARS–CoV–2'இல் இல்லாத ஒரு குறிப்பிட்ட திரிபுகளைக் கண்டறிவதை அடிப்படையாகக்கொண்டது. உலகளவில், ஓமிக்ரான் திரிபைக் கண்டறிவதற்கு 3 நாட்களுக்கு மேல் தேவைப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழ்த்தாய் வாழ்த்து அரசின் மாநிலப் பாடல்: முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவு

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் தமிழக அரசின் மாநிலப் பாடலாக அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்தார். தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டின் அனைத்து விழாக்களிலும் மனோன்மணீயம் சுந்தரனார் எழுதிய 'நீராரும் கடலுடுத்த' என்ற பாடல் பாடப்பட வேண்டும் என்ற கோரிக்கை 1913–ஆம் ஆண்டில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டறிக்கையில் இடம்பெற்றது. இந்தப் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாக 1914–ஆம் ஆண்டு முதல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாக்களிலும் பாடி வந்துள்ளனர்.

1970–இல் அறிவிப்பு: தமிழறிஞர்கள், ஆர்வலர்கள், பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று 1970–ஆம் ஆண்டு மார்ச் 17–ஆம் தேதியன்று நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்த்தாய் பாடல் குறித்த அறிவிப்பை அப்போதைய முதல்வர் கருணாநிதி வெளியிட்டார். தமிழக அரசின் நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் இருக்கும் என அறிவித்தார். அதன்படி, அரசு நிகழ்ச்சிகளில் 'நீராருங் கடலுடுத்த' என்ற பாடல் பாடப்பட்டு வருகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படுவது குறித்து, சில வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டிய சூழல் காரணமாக, அதற்கான உத்தரவை தமிழ் வளர்ச்சித் துறை அண்மையில் வெளியிட்டது. அதன்படி, தமிழ்த்தாய்

வாழ்த்துப் பாடலை பயிற்சி பெற்றவா்களைக் கொண்டு நிகழ்ச்சியில் பாட வைக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடா்ந்து சில வழிமுறைகளைப் பின்பற்றவும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. அதன்படி, மனோன்மணீயம் சுந்தரனாா் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல், தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும், நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு தமிழ்த்தாய் வாழ்த்து கட்டாயம் பாடப்பட வேண்டும். தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும் போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்க வேண்டும்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாடப்படும் போது எழுந்து நிற்பதில் இருந்து மாற்றுத் திறனாளிகளுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. பொது நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்தை ஒலிபெருக்கிகளில் ஒலிக்கச் செய்வதைத் தவிா்த்து, பயிற்சி பெற்றவா்களால் வாய்ப்பாட்டாக பாடப்பட வேண்டும். அன்னைத் தமிழின் பெருமையை உலகறியச் செய்வதிலும்,

இளம்தலைமுறையினருக்குக் கொண்டு சோ்ப்பதிலும், பொதுமக்களும், தனியாா் அமைப்புகளும் பெரும் பங்காற்ற முடியும். தமிழ்நாட்டில் தனியாா் அமைப்புகள் நடத்தும் கலை, இலக்கிய மற்றும் பொது நிகழ்வுகளின் தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படுவது ஊக்குவிக்கப்படும் என்று தமிழக அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

2. வாடகைத் தாய் ஒழுங்குமுறை மசோதா மக்களவையில் நிறைவேற்றம்: மேலும் 3 மசோதாக்கள் அறிமுகம்

மக்களவையில் எதிா்க்கட்சிகளின் அமளிக்கு இடையே வாடகைத் தாய் ஒழுங்குமுறை மசோதா வெள்ளிக்கிழமை நிறைவேறியது. அத்துடன் மேலும் 3 மசோதாக்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

மக்களவை வெள்ளிக்கிழமை காலை கூடியதும், லக்கீம்பூா் கெரி வன்முறை சம்பவம் தொடா்பாக மத்திய உள்துறை இணையமைச்சா் அஜய் மிஸ்ராவை பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தி எதிா்க்கட்சி உறுப்பினா்கள் அமளியில் ஈடுபட்டனா். இதனால், கேள்வி நேரத்தின்போது 4 கேள்விகள் மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. தொடா்ந்து எதிா்க்கட்சி உறுப்பினா்கள் அமளியில் ஈடுபட்டதால் அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

உணவு இடைவேளைக்குப் பிறகு பாஜக உறுப்பினா் ராஜேந்திர அக்ரவால் தலைமையில் மக்களவை கூடியதும் தேசிய ஊக்க மருந்து தடுப்பு மசோதா–2021, கானுயிா் பாதுகாப்புச் சட்டத் திருத்த மசோதா–2021, பட்டயக் கணக்காளா், கம்பெனி செயலாளா் சட்டத் திருத்த மசோதா–2021 ஆகியவை தாக்கல் செய்யப்பட்டன.

அதைத் தொடா்ந்து, வாடகைத் தாய் ஒழுங்குமுறை மசோதாவை சுகாதாரத் துறை இணையமைச்சா் பாரதி பிரவீண் பவாா் அறிமுகம் செய்து வைத்தாா்.

இந்த மசோதா, ஏற்கெனவே கடந்த 2019–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5–ஆம் தேதி மக்களவையில் நிறைவேற்றப்பட்டு மாநிலங்களவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கு மசோதாவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டு மீண்டும் கடந்த 14–ஆம் தேதி மக்களவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

எதிா்க்கட்சி உறுப்பினா்களின் அமளிக்கு இடையே இந்த திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடா்ந்து அவையை திங்கள்கிழமைக்கு ராஜேந்திர அக்ரவால் ஒத்திவைத்தாா்.

வாடகைத் தாய் முறையை ஒழுங்குபடுத்த அதிகாரிகளை நியமிக்க வேண்டும்; தேசிய அளவிலும் மாநில அளவிலும் வாடகைத் தாய் ஒழுங்காற்று வாரியம் அமைக்கப்பட வேண்டும்; சட்டப்படி திருமணம் செய்துகொண்டு 5 ஆண்டுகள் வாழ்ந்த இந்திய தம்பதி மட்டுமே வாடகைத் தாய் முறையில் குழந்தை பெற முடியும் என்றும் அந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டது.

மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைப்பு: எதிா்க்கட்சி உறுப்பினா்களின் அமளியால் மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. 12 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்ட விவகாரத்தில் அரசுக்கும் எதிா்க்கட்சிகளுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட வேண்டும் என்று மாநிலங்களவைத் தலைவா் வெங்கையா நாயுடு கூறினாா்.

கடந்த மழைக்கால கூட்டத்தொடரின் கடைசி நாளன்று எதிா்க்கட்சிகளைச் சோ்ந்த உறுப்பினா்கள் 12 போ் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக, நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடா் முழுவதும் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனா்.

அவா்கள் மீதான நடவடிக்கையைத் திரும்பப் பெற வேண்டும் என்று குளிா்கால கூட்டத் தொடரின் முதல் நாளில் இருந்து எதிா்க்கட்சி உறுப்பினா்கள் வலியுறுத்தி வருகின்றனா். இதனால் கடந்த சில நாள்களாக மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்படுகிறது.

மாநிலங்களவை வெள்ளிக்கிழமை காலை கூடியதும் அவைத் தலைவா் வெங்கையா நாயுடு உறுப்பினா்கள் மத்தியில் பேசினாா். அவா், 'மாநிலங்களவை பாஜக தலைவா் பியூஷ் கோயல், எதிா்க்கட்சிகளைச் சோ்ந்த சில மூத்த உறுப்பினா்களைச் சந்தித்துப் பேசினேன். அவை அலுவல்கள் சுமுகமாக நடைபெறுவதற்கு உறுப்பினா்களுக்கு இடையே உடன்பாடு ஏற்பட வேண்டும் என்று அவா்களிடம் வலியுறுத்தினேன். இதே கோரிக்கையை உங்கள் ஒவ்வொருவரிடமும் முன்வைக்கிறேன். மாநிலங்களவை திங்கள்கிழமை வரை ஒத்திவைக்கப்படுகிறது' என்றாா்.

---

3. பிரதமர் மோடிக்கு பூடான் அரசின் மிக உயர்ந்த விருது

பிரதமர் மோடிக்கு பூடான் அரசின் குடிமகனுக்கான மிக உயரிய விருதான நடாக் பெல் கி கோர்லோ விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

பூடான் நாட்டின் தேசிய நாளான இன்று பிரதமர் மோடிக்கு இந்த விருதை பூடான் பிரதமர் லோடே ஷெரிங் அறிவித்தார்.

---

4. பளுதூக்குதல்: பூர்ணிமாவுக்கு 'தங்கம்'

காமன்வெல்த் பளுதூக்குதலில் தங்கம் வென்றார் பூர்ணிமா.

உஸ்பெகிஸ்தானில் 'சீனியர்' காமன்வெல்த் சாம்பியன்ஷிப், உலக பளுதூக்குதல் தொடர்கள் ஒரே நேரத்தில் நடக்கின்றன. இதன் பெண்கள் +87 கிலோ பிரிவில் இந்தியா சார்பில் பூர்ணிமா களமிறங்கினார். 'ஸ்னாட்ச்' பிரிவில் 102 கிலோ தூக்கிய பூர்ணிமா, 'கிளீன் அண்டு ஜெர்க்' பிரிவில் 127 கிலோ தூக்கினார். ஒட்டுமொத்தமாக 229 கிலோ தூக்கி, முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் தட்டிச் சென்றார்.

இதையடுத்து 'ஸ்னாட்ச்' பிரிவில் இரண்டு, 'கிளீன் அண்டு ஜெர்க்' பிரிவில் தலா 3 என ஒட்டுமொத்தமாக 8 தேசிய சாதனை படைத்தார் பூர்ணிமா. தவிர இந்திய வீரர்கள் ஜெரீமி லால்ரின்னுங்கா, அசிந்தா சியுலி, அஜய் சிங்கிற்கு அடுத்து 2022, பர்மிங்ஹாம் காமன்வெல்த் விளையாட்டுக்கு தகுதி பெற்ற நான்காவது இந்தியர் ஆனார்.

இதே பிரிவில் பங்கேற்ற மற்றொரு இந்திய வீராங்கனை அனுராதா பவுன்ராஜ், 195 கிலோ தூக்கி வெண்கலப்பதக்கம் பெற்றார். ஆண்கள் 109 கிலோ பிரிவில் இந்தியாவின் லவ்பிரீத் சிங், 348 கிலோ தூக்கி வெள்ளிப்பதக்கம் கைப்பற்றினார்.

---

5. 'இன்னுயிர் காப்போம்' திட்டம் தொடக்கம்

தமிழகத்தில் சாலை விபத்துகளில் சிக்கி உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்க 'இன்னுயிர் காப்போம்; நம்மை காக்கும் 48' என்ற புதிய மருத்துவ அவசர உதவி திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த உள்ளது.

விபத்து ஏற்படும் சமயங்களில் உயிரிழப்பைத் தடுக்க 'இன்னுயிர் காப்போம்; நம்மை காக்கும் 48' என்ற புதிய திட்டத்தை, நாளை மேல்மருவத்தூரில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார்.

இதுகுறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்திருப்பதாவது: தமிழகத்தில் நடைபெறும் சாலை விபத்துகளில் அதிகப்படியான உயிரிழப்புகள் ஏற்படக் காரணம், அவர்களை உடனடியாக மருத்துவமனைகளில் சேர்த்து உரிய சிகிச்சை அளிக்காததுதான். இதைத் தடுக்கவும், விபத்தில் சிக்குவோரின் சிகிச்சைக்காக உதவும் வகையிலும் 'இன்னுயிர் காப்போம்; நம்மை காக்கும் 48' என்ற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்த உள்ளார்.

இதற்காக தமிழகம் முழுதும் 610 மருத்துவமனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் விபத்து நடந்தாலும் விபத்து நடந்த பகுதியில் விபத்துக்கு உள்ளானவரை மருத்துவமனையில் சேர்க்கும் நபருக்கு ரூ.5 ஆயிரம் ஊக்கத் தொகையும், விபத்தில் சிக்கியவருக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் சிகிச்சையும் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய திட்டத்தை மேல்மருவத்தூரில் உள்ள மருத்துவக் கல்லூரி மைதானத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் நாளை(டிச.18) தொடங்கி வைத்துப் பேசுகிறார் என்று தெரிவித்துள்ளார்.

---

6. உ.பி.யில் 594 கி.மீ. கங்கை விரைவுப் பாதை திட்டம்: பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்

உத்தர பிரதேச மாநிலம், ஷாஜஹான்பூரில் 594 கி.மீ. தொலைவு கொண்ட கங்கை விரைவு நெடுஞ்சாலைத் திட்டத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமை அடிக்கல் நாட்டினார்.

உத்தர பிரதேசத்தில் அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில் தேர்தலைச் சந்திக்கப்போவதாக பாஜக ஏற்கெனவே அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஷாஜஹான்பூரில் 594 கி.மீ. தொலைவு கொண்ட கங்கை விரைவுப் பாதைக்கு பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமை அடிக்கல் நாட்டினார். மாநிலத்தின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளை இணைக்கும் வகையில் ரூ.36,230 கோடி செலவில் இந்தப் பாதை அமைக்கப்படவுள்ளது. இந்தப் பாதைக்கு அடிக்கல் நாட்டிய பிறகு பிரதமர் மோடி பேசியதாவது:

உத்தர பிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசு ஆட்சியமைப்பதற்கு முன்பிருந்த சட்டம்–ஒழுங்கு சூழ்நிலை குறித்து நன்கு அறிவீர்கள். முன்பெல்லாம் பொழுது சாய்ந்ததும் மக்களைத் துன்புறுத்துவதற்காக, சிலர் நாட்டுத் துப்பாக்கிகளுடன் வீதிகளில் நடமாடத் தொடங்கிவிடுவார்கள். மாநிலத்தில் யோகி ஆதித்யநாத் ஆட்சி அமைந்ததும் அந்தத் துப்பாக்கி கலாசாரம் முடிவுக்கு வந்துவிட்டது.

மாஃபியா கும்பல்களுக்கு எதிராக யோகி ஆதித்யநாத் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளார். மாஃபியா கும்பல்கள் சட்டவிரோதமாகக் கட்டியிருந்த கட்டடங்களை இயந்திரங்களைக் கொண்டு இடித்துத் தள்ளினார். அவருடைய இந்த நடவடிக்கை, மாஃபியா கும்பல்களை ஆதரிப்பவர்களுக்கு வலியைக் கொடுத்துள்ளது. உத்தர பிரதேசமும் யோகி ஆதித்யநாத்தும் சேர்ந்தால் நல்லது நடக்கிறது.

நாட்டின் பாரம்பரியத்தைக் காப்பதிலும், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதிலும் இங்குள்ள சில அரசியல் கட்சிகளுக்கு சிக்கல் உள்ளது. ஏனெனில் அவர்கள் வாக்கு வங்கியைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள். அவர்கள் மீது சாமானியர்களும் ஏழைகளும் வைத்திருந்த நம்பிக்கை நாளுக்குநாள் குறைந்து வருகிறது. அவர்கள் கங்கையைச் சுத்தம் செய்வதில்லை.

இவர்கள்தான் பயங்கரவாதிகள் மீது ராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்புகிறார்கள்; இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட கரோனா தடுப்பூசியை சந்தேகிக்கிறார்கள்.

5 ஆண்டுகளுக்கு முன்பு, மாநிலத்தின் சில பகுதிகளைத் தவிர மற்ற பகுதிகளில் மின்சாரத்தைக் காண முடியாது. ஆனால், மாநிலத்தில் பாஜக ஆட்சி அமைந்த பிறகு 80 லட்சம் வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி மாநிலத்துக்கு முன்பைவிட கூடுதலாக மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. 30 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள தகுதியானவா்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித்தரப்படும்.

புதிதாக அமைக்கப்படும் கங்கை விரைவுப் பாதையால் தொழில் வளா்ச்சி, வா்த்தகம், விவசாயம், சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஊக்கம் பெறும். சமூகத்தில் பின்தங்கியிருப்பவா்களை வலுப்படுத்தி, அவா்களுக்கு அரசின் சலுகைகள் கிடைக்கச் செய்வதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது என்றாா் பிரதமா் மோடி.

---

7. வரலாற்று வெள்ளி வென்றார் ஸ்ரீகாந்த்: உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவில் உச்சம் தொட்ட முதல் இந்தியர்!

ஸ்பெயின் நாட்டின் ஹூயெல்வா நகரில் உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் பிரிவுப் போட்டியில் இந்திய வீரர் ஸ்ரீகாந்த் கிடாம்பி வெள்ளி வென்றார்.

உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவு போட்டியின் இறுதிக்குள் நுழைந்த முதல் இந்திய வீரர் என்ற மகத்தான சரித்திரத்தைப் படைத்த ஸ்ரீகாந்த் கிடாம்பி போராடி தங்கப் பதக்கத்தைப் போராடி பறிகொடுத்தார்.

இருப்பினும், உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவு போட்டியில் வெள்ளி வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையுடன் அவர் தேசம் திரும்ப இருக்கிறார்.

45 நிமிடங்கள் நடந்த இறுதிப் போட்டி: உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிக்கு நுழைந்த ஸ்ரீகாந்த், களத்தில் சிங்கப்பூர் வீரர் லோ கியான் யூவை எதிர்கொண்டார். சுமார் 45 நிமிடங்கள் இந்தப் போட்டி நீடித்தது. ஆரம்பம் முதலே லோ கியான் வூ ஆதிக்கம் செலுத்த முதல் செட் கிடாம்பிக்கு மிகவும் சவாலானதாக அமைந்தது. இரண்டாவது சுற்றில் சற்றே தாக்குப்பிடித்த கிடாம்பி போராடித் தோற்றார்.

இறுதியில் 21–15, 22–20 என்ற நேர் செட் கணக்கில் போராடித் தோற்றார் ஸ்ரீகாந்த் கிடாம்பி.

சக வீரரை வீழ்த்திய வேகம்: முன்னதாக, ஆடவர் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், சக நாட்டவரான லக்ஷ்யா சென்னுடன் மோதினார். அந்தப் போட்டியில் இந்திய வீரர் ஸ்ரீகாந்த் கிடாம்பி வரலாற்றுச் சாதனை படைத்தார். சர்வதேச தரவரிசைப் பட்டியலில் 12–வது இடத்தில் உள்ள கிடாம்பி சக வீரரான லக்ஷ்யா சென்னை 17–21, 21–14, 21–17 என்ற செட் கணக்கில் வீழ்த்தினர். 1 மணி நேரம் 9 நிமிடங்களில் அவர் வெற்றிக் கனியைப் பறித்துவிட்டார்.

இதன்மூலம், உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த முதல் இந்திய வீரர் என்ற சரித்திர பெருமையைப் பெற்றார் ஸ்ரீகாந்த். இப்போது உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெள்ளி வென்று சரித்தரித்தில் இன்னொரு மைல்கல்லையும் அவர் தொட்டுவிட்டார்.

அவருக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

---

8. பிலிப்பின்ஸ் : கடும் சூறாவளியால் 208 பேர் பலி

பிலிப்பின்ஸில் ஏற்பட்ட பலத்த சூறாவளிக்கு பலியானவா்களின் எண்ணிக்கை 208–ஆக அதிகரித்துள்ளது.

பிலிப்பின்ஸ் நாட்டில் கடந்த வியாழக்கிழமை உருவான ராய் சூறாவளி மற்றும் கனமழை காரணமாக நேற்று(டிச.19) 146 பேர் பலியாகியிருந்த நிலையில் தற்போது பலியானவர்களின் எண்ணிக்கை 208 ஆக அதிகரித்திருப்பதாக அந்நாட்டு சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடும் சூறாவளியின் தாக்கத்தால் 239 பேர் காயமடைந்திருக்கிறார்கள். 52 பேர் மாயமாகியிருக்கிறார்கள். மேலும், 3 லட்சத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமாகியிருப்பதாகவும் பலர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் மீட்புப்படையினர் தெரிவித்தனர்.

கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கும் ராய் சூறாவளி இந்த ஆண்டில் பதிவான மோசமான சூறாவளியாக மாறியிருக்கிறது.

---

1. இந்தியா சமீபத்தில் அறிமுகப்படுத்திய சூப்பர்சோனிக் ஏவுகணை அடிப்படையிலான டார்பிடோ அமைப்பை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?

அ) DRDO ☑

ஆ) ISRO

இ) NSIL

ஈ) BHEL

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) உருவாக்கிய சூப்பர்சோனிக் ஏவுகணை அடிப்படையிலா –ன டார்பிடோ அமைப்பை இந்தியா அறிமுகப்படுத்தியது. இந்த அடுத்த தலைமுறை ஏவுகணை அடிப்படையிலான ஸ்டாண்ட்ஆஃப் டார்பிடோ டெலிவரி சிஸ்டம், ஒடிஸாவில் உள்ள வீலர் தீவிலிருந்து ஏவப்பட்டது.

---

2. இணையஞ்சார்ந்த தளமான 'VIHANGAM' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ) சுரங்கப் பணி ☑



ஆ) கலால் வரி

இ) ஜிஎஸ்டி வசூல்

ஈ) செமிகண்டக்டர் உற்பத்தி

✓ மகாநதி நிலக்கரி வயல்கள் நிறுவனத்தில் "Remotely Piloted Aircraft System" உடன் ஒருங்கிணைக்கப்பட்ட 'VIHANGAM' என்ற இணையதளம் திறக்கப்பட்டுள்ளது.

✓ இந்த அமைப்பு சுரங்கப்பணிகளின் வான்வழி காணொளி –களை சுரங்கங்களிலிருந்து நேரலையாக இந்தத் தளத்திற்கு பரிமாறும். அதனை 'VIHANGAM' தளம்மூலம் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் அணுகலாம்.

---

3. The Indus Entrepreneurs (TiE) வழங்கும் 'ஆண்டின் சிறந்த தொழில்முனைவோர் விருதை' வென்றவர் யார்?

அ) ரத்தன் டாடா



ஆ) குமார் மங்கலம் பிர்லா ☑

இ) உதய் கோடக்

ஈ) ஆதி கோத்ரெஜ்

✓ சிந்து தொழில்முனைவோர் (TiE) ஆதித்ய பிர்லா குழுமத் தலைவர் குமார் மங்கலம் பிர்லாவை, COVID தொற்று நோய்களின்போது தலைமைதாங்கியதற்காக, 'வணிக மாற்றத்தில் ஆண்டின் உலகளாவிய தொழில்முனைவோராக' அறிவித்துள்ளது. இவ்விருதைப் பெறும் முதல் இந்திய தொழிலதிபர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு.

✓ எலோன் மஸ்க் (ஆண்டின் உலகளாவிய தொழில்முனை வோர்–புலம்பெயர் தொழில்முனைவோர்), ஜெப் பெசோஸ் (ஆண்டின் உலகளாவிய தொழில்முனைவோர் – முதல் தலைமுறை) மற்றும் சத்யா நாதெல்லா (ஆண்டின் உலகளாவிய தொழில்முனைவோர் – தொழில்முனை –வோர் CEO) ஆகியோர் பிற விருதாளர்களாவர்.

---

4. COVID–19 நெருக்கடியைக் கையாளுவதற்காக ஏழை நாடுகளுக்கு உதவும் நோக்கில் $93 பில்லியன் டாலர் மதிப்பிலான தொகுப்பை அறிவித்த நிறுவனம் எது?

அ) ஏடிபி

ஆ) உலக வங்கி ☑



இ) IMF

ஈ) ஏஐஐபி

✓ COVID தொற்றால் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்கவும், பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கவும் ஏழை நாடுகளுக்கு உதவுவதற்காக, பன்னாட்டு வளர்ச்சி சங்கத்தின் $93 பில்லியன் டாலர் தொகுப்பை உலக வங்கி அறிவித்துள்ளது. இச்சமீபத்திய உறுதிமொழியில் 48 உயர் மற்றும் நடுத்தர வருமான நாடுகளின் மூல தனச் சந்தைகள், திருப்பிச் செலுத்துதல்கள் மற்றும் உலக வங்கியின் சொந்த பங்களிப்புகள் உள்ளிட்டவை சேர்ந்த $23.5 பில்லியன் பங்களிப்புகளும் அடங்கும்.

---

5. பாராலிம்பிக் விளையாட்டு விருதுகளில் 'சிறந்த அறிமுக வீராங்கனை' விருதை வென்ற அவனி லெகாராவுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ) டென்னிஸ்



ஆ) உயரந்தாண்டுதல்

இ) துப்பாக்கிச் சுடுதல் ☑

ஈ) டேபிள்–டென்னிஸ்


✓ டோக்கியோ பாராலிம்பிக்ஸ் சாம்பியனான அவனி லெகாரா, 2021 பாராலிம்பிக் விளையாட்டு விருதுகளில் 'சிறந்த அறிமுக வீராங்கனை' விருதை வென்றார். செக் குடியரசின் போசியா வீரர் ஆடம் பெஸ்கா 'சிறந்த அறிமுக வீரர்' விருதை வென்றார்.

✓ இந்திய துப்பாக்கி சுடுதல் பாரா விளையாட்டு வீராங்க –னை அவனி லெகாரா, இந்தியாவிலிருந்து பாராலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற முதல் பெண்மணி ஆவார். பாராலிம்பிக்கில் 2 பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

---

6. சமீபத்தில் பிலிப்பைன்ஸைத் தாக்கிய சூறாவளியின் பெயர் என்ன?

அ) ராய் ☑



ஆ) பாய்

இ) நோர்டே

ஈ) சியர்கோவ்


✓ 'ராய்' எனப்பெயரிடப்பட்ட சூறாவளி அண்மையில் பிலிப் –பைன்ஸைத் தாக்கியது. 5ஆம் வகை புயலாக வேகமாக தீவிரமடைந்து தெற்கு பிலிப்பைன்ஸில் அது கரையைக் கடந்தது. இந்த ஆண்டில் பிலிப்பைன்ஸைத் தாக்கும் 15ஆவது புயல் 'ராய்' ஆகும். இது மணிக்கு 195 கிமீ (121 மைல்) வேகத்தில் பலத்தகாற்றுடன் சியார்கோவ் தீவைத் தாக்கியது. இந்த ஆண்டில் பிலிப்பைன்ஸைத் தாக்கிய இரண்டாவது சக்திவாய்ந்த சூறாவளி இதுவாகும்.

---

7. அதன் 'Laser Communications Relay Demonstration' அறிமுகப்படுத்திய விண்வெளி நிறுவனம் எது?

அ) ISRO

ஆ) NASA ☑



இ) JAXA

ஈ) ESA

✓ டிச.7 அன்று, NASA தனது புதிய லேசர் கம்யூனிகேசன்ஸ் ரிலே டெமான்ஸ்ட்ரேஷனை (LCRD) அறிமுகப்படுத்தியது. கேப் கனாவெரல் விண்வெளிப்படை நிலையத்தின் முதல் லேசர் தகவல் தொடர்பு அமைப்பு இதுவாகும். LCRD ஆனது விண்வெளியில் ஒளியியல் தொடர்பைச் சோதிக்க NASAவுக்கு உதவும். தற்போது, பெரும்பாலான NASA விண்கலங்கள் தரவுகளை அனுப்புவதற்கு ரேடியோ அலைவரிசை தொடர்புகளைப் பயன்படுத்துகின்றன.

---

8. முதன்முறையாக 4.5 நாட்கள் கொண்ட அலுவல் வாரத்தை அறிவித்த நாடு எது?

அ) சுவீடன்

ஆ) ஆஸ்திரேலியா

இ) ஐக்கிய அரபு அமீரகம் ☑

ஈ) ஆஸ்திரியா

✓ ஐக்கிய அரபு அமீரகமானது வெள்ளி மதியம், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அரசாங்க ஊழியர்களுக்கு விடுப்பு அளித்து புதிய 4.5 நாட்கள் கொண்ட அலுவல் வாரத்தை அறிவித்துள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தில் தற்போது வெள்ளி–சனி வாரயிறுதியாக உள்ளது.

✓ உலகளாவிய 5 நாள் அலுவல் வாரத்தைவிட குறைவான தேசிய அலுவல் வாரத்தை அறிமுகப்படுத்திய உலகின் முதல் நாடு ஐக்கிய அரபு அமீரகம் ஆகும்.

---

9. 'She is a Changemaker' என்னும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ) NITI ஆயோக்

ஆ) தேசிய பெண்கள் ஆணையம் ☑

இ) இந்திய ரிசர்வ் வங்கி

ஈ) அறிவியல் & தொழிலக ஆய்வுக்கழகம்

✓ தேசிய பெண்கள் ஆணையம் 'She is a Changemaker' என்ற திறன் மேம்பாட்டுத் திட்டத்தை இந்தியா முழுவதும் அறிமுகப்படுத்தியது. அனைத்து மட்டங்களிலும் (கிராமப் பஞ்சாயத்து முதல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை) மற்றும் அரசியல் பணியாற்றும் பெண் பிரதிநிதிகளுக்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

✓ இது பெண் அரசியல் தலைமைகளின் தலைமைத்துவ திறன், முடிவெடுக்கும் திறன் மற்றும் தகவல் தொடர்பு திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

10. "சர்வதேச ஊழல் எதிர்ப்பு நாளை" ஏற்பாடு செய்கிற ஐநா அமைப்பு எது?

அ) UNCTAD

ஆ) UNDP ☑



இ) UNESCO

ஈ) UNICEF

✓ "சர்வதேச ஊழல் எதிர்ப்பு நாள்" ஒவ்வோர் ஆண்டும் டிச. 9 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இது ஐநா வளர்ச்சித் திட்டத்தால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

✓ நீடித்த வளர்ச்சி இலக்குகளை நோக்கி முன்னேறுவதை தடுக்கும் ஊழலை ஒழிப்பதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஊழலுக்கு எதிரான ஐநா'இன் தீர்மானம் UNCAC, கடந்த 2003'இல் உருவாக்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. வரலாற்று வெள்ளி வென்றார் ஸ்ரீகாந்த்: உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவில் உச்சம் தொட்ட முதல் இந்தியர்!

ஸ்பெயின் நாட்டின் ஹூயெல்வா நகரில் உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் பிரிவுப் போட்டியில் இந்திய வீரர் ஸ்ரீகாந்த் கிடாம்பி வெள்ளி வென்றார்.

உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவு போட்டியின் இறுதிக்குள் நுழைந்த முதல் இந்திய வீரர் என்ற மகத்தான சரித்திரத்தைப் படைத்த ஸ்ரீகாந்த் கிடாம்பி போராடி தங்கப் பதக்கத்தைப் போராடி பறிகொடுத்தார்.

இருப்பினும், உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் ஆடவர் பிரிவு போட்டியில் வெள்ளி வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையுடன் அவர் தேசம் திரும்ப இருக்கிறார்.

45 நிமிடங்கள் நடந்த இறுதிப் போட்டி: உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிக்கு நுழைந்த ஸ்ரீகாந்த், களத்தில் சிங்கப்பூர் வீரர் லோ கியான் யூவை எதிர்கொண்டார். சுமார் 45 நிமிடங்கள் இந்தப் போட்டி நீடித்தது. ஆரம்பம் முதலே லோ கியான் வூ ஆதிக்கம் செலுத்த முதல் செட் கிடாம்பிக்கு மிகவும் சவாலானதாக அமைந்தது. இரண்டாவது சுற்றில் சற்றே தாக்குப்பிடித்த கிடாம்பி போராடித் தோற்றார்.

இறுதியில் 21–15, 22–20 என்ற நேர் செட் கணக்கில் போராடித் தோற்றார் ஸ்ரீகாந்த் கிடாம்பி.

சக வீரரை வீழ்த்திய வேகம்: முன்னதாக, ஆடவர் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், சக நாட்டவரான லக்ஷ்யா சென்னுடன் மோதினார். அந்தப் போட்டியில் இந்திய வீரர் ஸ்ரீகாந்த் கிடாம்பி வரலாற்றுச் சாதனை படைத்தார். சர்வதேச தரவரிசைப் பட்டியலில் 12–வது இடத்தில் உள்ள கிடாம்பி சக வீரரான லக்ஷ்யா சென்னை 17–21, 21–14, 21–17 என்ற செட் கணக்கில் வீழ்த்தினர். 1 மணி நேரம் 9 நிமிடங்களில் அவர் வெற்றிக் கனியைப் பறித்துவிட்டார்.

இதன்மூலம், உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குள் நுழைந்த முதல் இந்திய வீரர் என்ற சரித்திர பெருமையைப் பெற்றார் ஸ்ரீகாந்த். இப்போது உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் வெள்ளி வென்று சரித்தரித்தில் இன்னொரு மைல்கல்லையும் அவர் தொட்டுவிட்டார்.

அவருக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

---

2. பயணிகள் வசதிக்காக 543 ரெயில் நிலையங்களில் வை.ஃபை வசதி

தெற்கு ரெயில்வே மண்டலத்தில் 543 முக்கிய ரயில் நிலையங்களில் Wi-fi வசதி ஏற்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. ரெயில் பயணிகளுக்கு இணையதள சேவை வசதிகளை வழங்க ரயில் நிலையங்களில் வை.ஃபை அறிமுகப்படுத்த திட்டம் தீட்டி வருவதாகவும் இதன் மூலம் முதல் ½ மணிநேரத்திற்கு பயணிகள் இலவசமாக Wi-fi வசதியை பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை – 135, திருச்சி – 105, சேலம் – 79, மதுரை – 95, பாலக்காடு – 59, திருவனந்தபுரம் – 70 என மொத்தம் 543 ரயில் நிலையங்களில் Wi-fi வசதி ஏற்படுத்த தெற்கு ரயில்வே திட்டமிட்டுள்ளது. தெற்கு ரயில்வே மண்டலத்தில் இதுவரை 5,087 கிமீ தூரத்துக்கு ஒளியிழை வட தொடர்பு அமைப்பு என்றும் கூறப்படுகிறது.

---

3. தேர்தல் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் தாக்கல்

ஒரே நபர் வெவ்வேறு இடங்களில் வாக்களிப்பதைத் தடுப்பதற்காக, வாக்காளர் பட்டியலில் ஆதார் எண்ணை இணைக்க வகை செய்யும் தேர்தல் சட்டத்திருத்த மசோதா, மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

தேர்தல் சட்டத் திருத்த மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்து பேசிய மத்திய சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜு, இந்த சட்டத்திருத்தம்மூலம், வாக்களிப்பதில் நடக்கும் முறைகேடு தடுக்கப்பட்டு, நாட்டில் தேர்தல் நியாயமாக நடப்பது உறுதிசெய்யப்படும் என தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்க்க விரும்புவோரிடம் அவர்களின் ஆதார் எண்ணைத்தேர்தல் அதிகாரிகள் கேட்பதற்கு இந்த மசோதா அனுமதி அளிக்கிறது. மேலும், ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்திருந்தாலும் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தவும், வெவ்வேறு தொகுதிகளில் உள்ள வாக்காளர் பட்டியலில் அல்லது அதே தொகுதியில் வெவ்வேறு இடங்களில் உள்ள வாக்காளர் பட்டியலில் அவர்களின் பெயர் இடம்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்தவும் ஆதார் எண்ணை அதிகாரிகள் கேட்க முடியும்.

அதேசமயம், ஆதார் எண்ணைத் தர இயலாத நிலையில் இருப்பவர்களை வாக்காளர்களாக சேர்த்துக்கொள்ள மறுக்கக் கூடாது என்றும் அந்த மசோதா கூறுகிறது. ஏற்கெனவே வாக்காளர் பட்டியலில் இருப்பவர்களின் பெயரையும் நீக்கக்கூடாது; அவர்கள் அடையாளச் சான்றாக வேறு ஏதேனும் ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்கலாம் என்று அந்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே நபருக்கு பல்வேறு இடங்களில் வாக்குகள் இருப்பதைத் தடுப்பதற்காக, வாக்காளர் பட்டியலில் ஆதார் எண் இணைக்கப்படுகிறது. அதற்காக, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1950-இன் 23-ஆவது பிரிவில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்சமயம், ஜனவரி 1-ஆம் தேதி அல்லது அதற்கு முன்பு 18 வயதை அடைபவர்கள் புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்யலாம். அதன் பிறகு 18 வயதை அடைந்தால், அடுத்த ஜனவரி 1-ஆம் தேதி வரை காத்திருக்க வேண்டும். இந்த பிரச்னையை முடிவுக்கு கொண்டு வர ஜனவரி 1, ஏப்ரல் 1, ஜூலை 1, அக்.1 ஆகிய தேதிகளைத் தகுதிநாள்களாகக் கொண்டு வாக்காளர் பட்டியலைத் தயார் செய்யும் வகையில், ஆர்.பி. சட்டத்தின் 14-ஆவது பிரிவில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போதைய நிலையில், பணிசார்ந்து ராணுவ வீரர் வெளியூர் சென்றுவிட்டால் அவருக்குப் பதிலாக அவருடைய மனைவி வாக்களிக்க முடியும். ஆனால், பெண் ராணுவ அலுவலர் ஊரில் இல்லாவிட்டால் அவருடைய கணவரால் வாக்களிக்க முடியாது. எனவே, கணவரும் வாக்களிக்கும் வகையில், இதுதொடர்பான சட்டப்பிரிவில் 'மனைவி' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'வாழ்க்கைத்துணைவர்' என்ற சொல்லைச்சேர்ப்பதற்காக ஆர் பி சட்டம், 1950-இன் 20-ஆவது பிரிவு, ஆர் பி சட்டம், 1951-இன் 60-ஆவது பிரிவுகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

4. உலக பாட்மின்டன்: அகேன் எமகுச்சி, லோ கீன் யீவ் சாம்பியன்கள்; ஸ்ரீகாந்த்துக்கு வெள்ளி

WBA உலக பாட்மின்டன் போட்டியில் மகளிர் பிரிவில் ஜப்பானின் அகேன் எமகுச்சியும், ஆடவர் பிரிவில் சிங்கப்பூரின் லோ கீன் யீவும் சாம்பியன் பட்டம் வென்றனர். இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் ஸ்ரீகாந்த்-லோ கீன் யீவ் மோதினர். இளம் வீரரான லோ கீன் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி ஆடினார். முதல் கேமில் ஸ்ரீகாந்த் 9-3 என முன்னிலை பெற்ற நிலையில், லோ கீன் தொடர்ந்து புள்ளிகளை குவித்தார். முதல் கேமை 21-15 என கைப்பற்றிய லோ கீன், இரண்டாவது கேமில் ஸ்ரீகாந்த்தின் கடும் சவாலை எதிர்கொள்ள நேரிட்டது.

14-14, 20-20 என ஸ்கோர் சமநிலை ஏற்பட்டாலும், 2வது கேமில் 22-20 என வென்ற லோ கீன் முதன்முறையாக உலக சாம்பியன் பட்டத்தையும் கைப்பற்றினார்.

ஸ்ரீகாந்த்துக்கு வெள்ளி:

கிடாம்பி ஸ்ரீகாந்த் வெள்ளிப் பதக்கம் வென்றார். உலக பாட்மின்டன் போட்டி ஆடவர் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சிறப்பையும் பெற்றார் அவர். ஏற்கெனவே 1983-இல் பிரகாஷ் பதுகோன், 2019-இல் பிரணாய் ஆகியோர் வெண்கலம் வென்றிருந்தனர்.

---

1. இந்தியா, அண்மையில் பிரம்மோஸின் ஏர் பதிப்பை பரிசோதனை செய்தது. இது ஒரு____?

அ) சூப்பர்சோனிக் சீர்வேக ஏவுகணை ☑

ஆ) பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை

இ) கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை

ஈ) வழிகாட்டப்பட்ட ஏவுகணை அமைப்பு

✓ வானிலிருந்து வான் இலக்கைத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை ஒடிஸா கடற்கரைக்கு அப்பால் சந்திப்பூர் ஒருங்கிணைந்த பரிசோதனைப் பகுதியில் இருந்து சுகோய் 30 எம்கே–I சூப்பர் சோனிக் போர் விமானம்மூலம் பரிசோதனை செய்யப்பட்டது.

✓ பிரம்மோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணை மேம்பாடு, உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவதில் இந்தியாவும் (DRDO), ரஷ்யாவும் கூட்டு முயற்சியில் உள்ளன.

---

2. பாக்யாங் & சோரெங் ஆகிய இரு புதிய மாவட்டங்கள், கீழ்கண்ட எந்த மாநிலத்தில் உருவாக்கப்படவுள்ளன?

அ) அருணாச்சல பிரதேசம்

ஆ) சிக்கிம் ☑

இ) அஸ்ஸாம்

ஈ) நாகாலாந்து

✓ சிக்கிம் மாநில சட்டமன்றமானது சிக்கிம் (மாவட்டங்களை மறுசீரமைத்தல்) மசோதா, 2021 மசோதாவை பாக்யாங் & சோரெங் என்ற 2 மாவட்டங்களை உருவாக்குவதற்கான மசோதாவை நிறைவேற்றியது.

✓ ஆளுநர் கங்கா பிரசாத், இம்மசோதாவுக்கு ஒப்புதலளித்த பிறகு சிக்கிம் மாநிலத்தில் ஆறு மாவட்டங்கள் இருக்கும். சிக்கிம் மாநில பல்கலைக்கழகத்திற்கு மக்களின் காவல் தெய்வமான கஞ்சஞ்சங்கா மலையின் பெயரை சூட்டுவத –ற்கான திருத்த மசோதாவையும் அது நிறைவேற்றியது.

---

3. சமீபத்திய பணவியல் கொள்கையில், ரெப்போ மற்றும் ரிவர்ஸ் ரெப்போ விகிதங்கள் முறையே ..... மற்றும் ..... என நிர்ணயிக்கப்பட்டன.

அ) 4 சதவீதம் மற்றும் 3.35 சதவீதம் ☑



ஆ) 4.75 சதவீதம் மற்றும் 4 சதவீதம்

இ) 5 சதவீதம் மற்றும் 4.5 சதவீதம்

ஈ) 5 சதவீதம் மற்றும் 4.75 சதவீதம்

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ், பணவியல் கொள்கைக்குழுவானது வட்டி விகிதங்களை மாற்றாமல் வைத்திருக்க முடிவு செய்துள்ளதாக அறிவித்தார். இதன்மூலம் ரெப்போ மற்றும் ரிவர்ஸ் ரெப்போ விகிதங்கள் தற்போது முறையே 4% மற்றும் 3.35 சதவீதமாக உள்ளது.

✓ இது ஒன்பதாவது கொள்கைக் கூட்டம் ஆகும். FY22'இல் மெய்யான GDP வளர்ச்சிக்கான கணிப்பு 9.5% ஆகவும், CPI பணவீக்கம் 5.3% ஆகவும் உள்ளது.

---

4. சீனாவில் நடக்கும் 2022 – குளிர்கால ஒலிம்பிக்கை அரசியல் ரீதியாக புறக்கணிப்பதாக அறிவித்த நாடு எது?

அ) அமெரிக்கா ☑

ஆ) இந்தியா

இ) ஜப்பான்

ஈ) ஆஸ்திரேலியா

✓ 2022ஆம் ஆண்டு சீனாவில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை அரசியல்ரீதியாக புறக்கணிப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

✓ சீனாவின் மனித உரிமை மீறல்கள் குறித்த அச்சுறுத்தல் காரணமாக, விளையாட்டுப் போட்டிகளுக்கு அதிகாரபூர்வ பிரதிநிதிகள் யாரும் அனுப்பப்பட மாட்டார்கள் என்று வெள்ளை மாளிகை அறிவித்தது.

✓ மேலும் அமெரிக்க நாட்டு விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளலாம் என்றும், அரசின் முழு ஆதரவும் கிடைக்கும் என்றும் கூறியுள்ளது. இந்நடவடிக்கையை 'தன்னியக்க அரசியல் கேலிக்கூத்து' என்று சீனா அழைக்கிறது.

---

5. 2021'இல் 'உலக பெட்ரோலிய மாநாட்டை' நடத்தும் நாடு எது?

அ) அமெரிக்கா ☑

ஆ) ஐக்கிய அரபு அமீரகம்

இ) UK

ஈ) உஸ்பெகிஸ்தான்

✓ தொழிற்துறையின் மிகப்பெரிய மாநாடாகக் கருதப்படும் 'உலக பெட்ரோலிய மாநாடு' தென்–மத்திய அமெரிக்க மாநிலமான டெக்சாஸின் பெருநகரமான ஹூஸ்டனில் தொடங்கியது. சுமார் 70 நாடுகள் & பிராந்தியங்களில் இருந்து 300'க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் இந்நிகழ்ச்சி மற்றும் தொழில்நுட்ப மன்றங்களில் பங்கேற்க உள்ளனர்.

✓ உலக பெட்ரோலிய மாநாடானது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 65 உறுப்பு நாடுகளை உள்ளடக்கிய லண்டனைச் சார்ந்த உலக பெட்ரோலிய கவுன்சிலால் நடத்தப்படுகிறது.

---

6. முதலாம் சுவுதி அரேபிய கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் வெற்றி பெற்ற பந்தய ஓட்டுநர் யார்?

அ) லூயிஸ் ஹாமில்டன் ☑



ஆ) வால்டேரி போட்டாஸ்

இ) டேனியல் ரிச்சியார்டோ

ஈ) மேக்ஸ் வெர்ஸ்டாப்பன்

✓ 36 வயதான சிறந்த பிரிட்டிஷ் பந்தய ஓட்டுநர் லூயிஸ் ஹாமில்டன் சவுதி அரேபிய கிராண்ட்பிரிக்ஸ் போட்டியின் முதல் போட்டியில் வென்றார். ஜெட்டாவில் உள்ள 30 கிமீ நீள சுற்றில் நடந்த பந்தயத்தில் ஆறு சுற்றுகள் மீதமுள்ள நிலையில் அவர் மேக்ஸ் வெர்ஸ்டாப்பனை முந்தினார். இந்த வெற்றியின்மூலம், ரெட்புல் ஓட்டுநர் மேக்ஸ் வெர்ஸ்டாப்பனின் புள்ளிகளை ஹாமில்டன் சமன் செய்தார்.

---

7. கோவாவாக்ஸ், எந்தத் தடுப்பூசியின் உரிமத்தின்கீழ் சீரம் நிறுவனத்தால் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது?

அ) பைசர்–பயோஎன்டெக் தடுப்பூசி



ஆ) மாடர்னா COVID–19 தடுப்பூசி

இ) ஜான்சன் & ஜான்சன் தடுப்பூசி

ஈ) நோவாவாக்ஸ் தடுப்பூசி ☑

✓ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO) இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பூசி 'Covovax' –க்கு அவசர அனுமதி வழங்கியுள்ளது.

✓ அமெரிக்காவைச் சார்ந்த நோவாவாக்ஸின் உரிமத்தின் கீழ் இந்தத் தடுப்பூசியை சீரம் நிறுவனம் இந்தியாவில் தயாரித்து வருகிறது. அவசரகால பயன்பாட்டிற்கான 9ஆவது COVID–19 தடுப்பூசியாக கோவோவாக்ஸை WHO அறிவித்துள்ளது.

---

8. இந்திய போட்டி ஆணையமானது (CCI) சமீபத்தில் எந்த நிறுவனத்திற்கு ₹202 கோடி அபராதம் விதித்துள்ளது?

அ) பிளிப்கார்ட்

ஆ) அமேசான் ☑

இ) ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

ஈ) டி–மார்ட்


✓ சில்லறை விற்பனையாளரான பியூச்சர் கூப்பன்ஸ் லிட் நிறுவனத்தில் பங்குகளை வாங்குவதற்கான அமேசானின் ஒப்பந்தத்திற்கு இந்திய போட்டி ஆணையம் தடை விதித்துள்ளது. 2019ஆம் ஆண்டில் ஒழுங்குமுறை அனுமதிகளை கோரும்போது உண்மைகளை மறைத்து தவறான அறிக்கைகளை வெளியிட்டதற்காக அமெரிக்காவைச் சார்ந்த இ–காமர்ஸ் நிறுவனத்திற்கு CCI ₹202 கோடி அபராதம் விதித்தது.

✓ 2019ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மேற்கோள்காட்டி, ரிலைய –ன்ஸ் உடனான பியூச்சர் கூப்பன்ஸின் ஒப்பந்தத்திற்கு அமேசான் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

---

9. பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பிற்கு (NATO) வரைவு ஒப்பந்தத்தை வெளியிட்டுள்ள நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) ரஷ்யா ☑

இ) யுகே

ஈ) பிரான்ஸ்

✓ வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பிற்கு (NATO) இருதரப்பு பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்த வரைவு ஒப்பந்தத்தை ரசியா முன்மொழிந்துள்ளது. ரஷ்யாவும் நேட்டோவும் ஒன்றையொன்று எதிரிகளாகக் கருதவில்லை என்பதை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும் என்று அது பரிந்துரைத்தது.

✓ நேட்டோ அமைப்பை மேலும் விரிவுபடுத்துதல், உக்ரைன் நுழைவை நிறுத்துதல், உக்ரைன் & கீழை ஐரோப்பா, தெற்கு காகசஸ் மற்றும் மத்திய ஆசியாவில் உள்ள பிற நாடுகளில் எந்தவொரு இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபடாமல் இருக்குமாறு ரஷ்யா NATO'விடம் கேட்டுக் கொண்டுள்ளது.

---

10. தமிழ்நாட்டின் மாநிலப் பாடலாக அறிவிக்கப்பட்ட 'தமிழ்த்தாய் வாழ்த்து'ப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) சுப்ரமணிய பாரதி



ஆ) பாரதிதாசன்

இ) 'மனோன்மணியம்' சுந்தரனார் ☑

ஈ) உ வே சுவாமிநாதர்

✓ தமிழ்நாடு அரசு, 'தமிழ்த்தாய் வாழ்த்து'ப்பாடலை, அரசு ஆணை பிறப்பித்து, மாநிலப் பாடலாக அறிவித்துள்ளது. இது பொதுவாக அனைத்து கல்வி நிறுவனங்களிலும், பொது நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும் பாடப்படுகிறது.

✓ சுந்தரனார் எழுதிய 'மனோன்மணியம்' என்ற புகழ்பெற்ற தமிழ் நாடகத்திலிருந்து எடுக்கப்பட்ட பாடலாகும் இது. பாடல் ஒலிபரப்பின்போது மாற்றுத்திறனாளிகளைத் தவிர கலந்துகொண்ட அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் என அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஒமைக்ரான் பாதிப்பை கண்டறியும் கருவி: ICMR உருவாக்கியது

உருமாறிய கரோனா வகையான ஒமைக்ரான் பாதிப்பைக் கண்டறியும் பரிசோதனை கருவியை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) உருவாக்கியுள்ளது. இந்தத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் பரிசோதனை கருவிகளை உருவாக்க தனியார் நிறுவனங்களுக்கு ICMR அழைப்பு விடுத்துள்ளது.

வடகிழக்கு மாநிலம், திப்ரூகரில் உள்ள ICMR கிளை இந்தப்புதிய தொழில்நுட்பக் கருவியை உருவாக்கியுள்ளது. கரோனாவை கண்டறிய உதவும் RT–PCR கருவியைப் போலவே ஒமைக்ரானை கண்டறியும் கருவியும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ICMR வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'இந்தப் புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்கு ICMR–தான் உரிமையாளராக இருக்கும். இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பரிசோதனை கருவிகளை உருவாக்க தனியார் நிறுவனங்களுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்வரும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு வர்த்தக ரீதியில் கருவிகள் தயாரிக்கப்படும்.

இந்தக் கருவிக்கு சந்தையில் மிகுந்த தேவை உள்ளதால், இதன் உற்பத்தியை அதிகரிக்க பல தயாரிப்பு நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். தயாரிப்பு உரிமைக்கான செலவை ICMR'க்கு அந்த நிறுவனங்கள் அளிக்கும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.₹3.73 லட்சம் கோடி துணைநிலை மானிய கோரிக்கை மசோதா: மக்களவை ஒப்புதல்

நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் ரூ.3.73 லட்சம் கோடி துணைநிலை மானியம் கோரிய மசோதாவுக்கு மக்களவை ஒப்புதல் அளித்தது.

தொகுப்பு நிதியில் இருந்து துணைநிலை மானியம் கோரும் 2–ஆவது தொகுதி மசோதா மீதான விவாதம் மக்களவையில் திங்கள்கிழமை நடைபெற்றது. அப்போது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியதாவது:

கூடுதல் செலவுக்காகப் பெறப்படும் தொகையில் ரூ.62,057 கோடியானது ஏர் இந்தியாவின் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும். எம்.பி.க்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டத்துக்காக ரூ.1,153 கோடி வழங்கப்படும். பாதுகாப்புத் துறைக்கு ரூ.5,000 கோடியும், மத்திய உள்துறைக்கு ரூ.4,000 கோடியும் கூடுதலாக வழங்கப்படும்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்துக்கு ரூ.14,000 கோடி வழங்கப்படவுள்ளது. உரங்களுக்கான கூடுதல் மானியமாக ரூ.58,430 கோடியும், நிலுவையில் உள்ள ஏற்றுமதி ஊக்கத்தொகையை வழங்க ரூ.53,123 கோடியும், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட நிதிக்கு ரூ.22,039 கோடியும் வழங்கப்படவுள்ளது. உணவு–பொது விநியோகத் துறைக்குக் கூடுதலாக ரூ.49,805 கோடியும், வர்த்தகத் துறைக்கு ரூ.2,400 கோடியும் வழங்கப்படவுள்ளது.

சமையல் எண்ணெய், அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றின் விலையைக் கட்டுக்குள் வைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். வங்கிகளில் கடன்களைத் திருப்பிச் செலுத்தாமல் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற விஜய் மல்லையா, நீரவ் மோடி, மெஹுல் சோக்ஸி உள்ளிட்டோரிடம் இருந்து ரூ.13,109 கோடியை வங்கிகள் மீட்டுள்ளன என்றார் அவர்.

எதிர்க்கட்சிகளின் அமளிக்கிடையே துணைநிலை மானியக் கோரிக்கை மசோதா மீது நடத்தப்பட்ட குரல் வாக்கெடுப்பில் பெரும்பாலான எம்.பி.க்கள் அதற்கு ஆதரவு தெரிவித்தனர். மக்களவை ஒப்புதல் அளித்த மசோதா, மாநிலங்களவைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

செலவினம் அதிகரிப்பு: நடப்பு நிதியாண்டில் மத்திய அரசின் செலவினம் ரூ.34.83 லட்சம் கோடியாக இருக்கும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கடந்த மழைக்காலக் கூட்டத்தொடரின்போது தாக்கல் செய்யப்பட்ட முதல் தொகுதி துணைநிலை மானிய கோரிக்கை மசோதாவின் மூலமாக ரூ.23,675 கோடியை மத்திய அரசு பெற்றது.

தற்போது இரண்டாவது தொகுதி மசோதாவின் மூலமாக ரூ.3.73 லட்சம் கோடியை மத்திய அரசு பெறவுள்ளது. இதன் காரணமாக நடப்பு நிதியாண்டில் மத்திய அரசின் செலவினம், நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிகரிக்கும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

---

3. நகர்ப்புற சேவைகளை மேம்படுத்த இந்தியாவுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி ரூ.2,655 கோடி கடனுதவி

இந்தியாவில் நகர்ப்புற சேவைகளை மேம்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கி 350 மில்லியன் டாலர்கள் (சுமார் ரூ.2,655 கோடி) கடனுதவி அளிக்கவுள்ளது.

இதுதொடர்பாக அந்த வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நீடித்த நகர்ப்புற வளர்ச்சி மற்றும் சேவை விநியோகத் திட்டத்தின் கீழ் இந்தியாவில் நகர்ப்புற சேவைகளை மேம்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கி 350 மில்லியன் டாலர்கள் கடனுதவி அளிக்கவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள முதல் துணைத் திட்ட ஒப்பந்தத்தில் இந்திய நிதியமைச்சக கூடுதல் செயலர் ரஜத் குமார் மிஸ்ரா, ஆசிய வளர்ச்சி வங்கியின் மூத்த அதிகாரி டக்கியோ கொனிஷி ஆகியோர் கையொப்பமிட்டனர்.

முதல் துணைத் திட்டம் மூலம் தேசிய அளவில் நகர்ப்புற சீர்திருத்தங்களுக்கான முக்கிய கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் செயல்படுத்தப்படும். அதனைத்தொடர்ந்து இரண்டாவது துணைத் திட்டத்தின் கீழ் மாநிலங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் மற்றும் திட்டப் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும்.

நகர்ப்புற சேவைகளை மேம்படுத்துவதற்கான திட்ட அமலாக்கத்தில் இந்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்துக்கு ஆசிய வளர்ச்சி வங்கி ஆலோசனைகள் வழங்கும்.

குறிப்பாக கொள்கைரீதியான சீர்திருத்தங்களை அமல்படுத்த வேண்டிய குறைந்த வருவாய் கொண்ட மாநிலங்களை தேர்வு செய்தல், முதலீட்டு திட்டங்களைத் தயாரித்தல், பருவநிலை மாற்றம், பாலின சமத்துவம் போன்ற விவகாரங்களில் பரிந்துரைகள் வழங்குதல் உள்ளிட்டவற்றில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆசிய வளர்ச்சி வங்கி உதவும்.

நகரமயமாக்கல் அதிகரித்து வரும் நிலையில், இந்தியாவின் பொருளாதார நடவடிக்கையை அதிகரிக்க, வேலைவாய்ப்புகளை உருவாக்க, நகர்ப்புறங்களில் கண்ணியமான வாழ்க்கையைப் பெற, சுற்றுச்சூழலை பாதுகாக்க வளர்ச்சியின் வலிமையான சக்தியாக நகரங்கள் உருவெடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

---

4. டாவோஸ் உலக பொருளாதார மாநாடு ஒத்திவைப்பு

ஒமைக்ரான் பாதிப்பு அதிகரிப்பு எதிரொலியால் டாவோஸில் அடுத்த ஆண்டு நடைபெற இருந்த உலக பொருளாதார கூட்டமைப்பின் ஆண்டு மாநாடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

உலக பொருளாதார கூட்டமைப்பின் மாநாடு ஸ்விட்ஸர்லாந்திலுள்ள டாவோஸில் ஜனவரி 17 முதல் 21–ஆம் தேதி வரையில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆண்டுதோறும் நடைபெறும்

இந்த மாநாட்டில் உலகின் முன்னணி தலைவா்கள் பங்கேற்பதாக இருந்தது.

உலகின் பல்வேறு நாடுகளில் உருமாறிய கரோனா தீநுண்மியான ஒமைக்ரானின் பரவல் அதிகரித்து வருவதால் இந்த ஆண்டு மாநாட்டை சிங்கப்பூருக்கு மாற்ற திட்டமிடப்பட்டது.

இந்நிலையில், இந்த மாநாட்டில் பங்கேற்பவா்களின் உடல் நல பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து மாநாட்டை ஒத்தி வைப்பதாக உலக பொருளாதார கூட்டமைப்பு திங்கள்கிழமை அறிவித்தது.

இந்தியா உள்பட 100-க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவா்கள் இந்த மாநாட்டில் பங்கேற்பதை உறுதி செய்திருந்தனா்.

---

5. கோவையில் புதிய தொழில்நுட்பப் பயிற்சி மையம்: மக்களவையில் மத்திய அமைச்சா் தகவல்

நாட்டில் 18 புதிய தொழில் நுட்பப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளதாகவும், இதில் ஒன்று கோவையில் தொடங்கப்படும் என்றும் மத்திய திறன் மேம்பாடு, தொழில் முனைவு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சா் ராஜீவ் சந்திரசேகா் மக்களவையில் திங்கள்கிழமை கேள்வி நேரத்தில் தெரிவித்தாா். கோவையில் அமைய இருக்கும் இந்த மையத்திற்கான நிலத்தை மாநில அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் இது விரைவாக அமைக்கப்படும் என்றும் அமைச்சா் தெரிவித்தாா்.

மாா்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மக்களவைத் தொகுதி உறுப்பினா் பி.ஆா்.நடராஜன், மாறி வரும் தொழில்நுட்பங்கள் அடிப்படையிலும் அந்நிய உற்பத்தி நிறுவனங்களின் போட்டியை சமாளிக்கும் விதமாக நாட்டில் தொடங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப பயிற்சி மையங்கள் குறித்தும் திறன்களை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் குறிப்பாக கோவையில் தொழில் பயிற்சி மையங்கள் தொடங்கும் முடிவு உள்ளதா என்பது குறித்து கேள்வி எழுப்பினாா்.

இதற்கு மத்திய திறன் மேம்பாடுத்துறை இணையமைச்சா் ராஜீவ் சந்திரசேகா் மக்களவையில் கேள்வி நேரத்தில் அளித்த பதில் வருமாறு: திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோா் அமைச்சகத்தின் கீழ் இது வரை தொழில்நுட்பப் பயிற்சி மையங்கள் எதுவும் இல்லை. அதே சமயத்தில் பிரதான் மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா திட்டம், கைவினைஞா் பயிற்சித் திட்டம் போன்றவற்றின் கீழ் அரசு மற்றும் தனியாா் ஐடிஐக்கள் (தொழில்துறை பயிற்சி நிறுவனங்கள்) மூலம் 22 பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நாடு முழுக்க 3,178 அரசு ஐடிஐக்கள் உள்பட 14,711 ஐடிஐக்கள் உள்ளன. இதில் தமிழகத்தில் 84 அரசு ஐடிஐக்கள் உள்பட 494 ஐடிஐக்கள் உள்ளன.

இதில் கோவையில் உள்ள 3 அரசு ஐடிஐக்கள் உள்பட 19 ஐடிஐக்களில் 32 பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இது தவிர கோயம்புத்தூா் மாவட்ட சிறுதொழில் சங்கம்(கொடிசியா) தொழில் குழுமமாக (கிளஸ்டா்) உள்ளது. இதற்கு ரூ.40 லட்சம் வழங்கப்பட்டுள்ளது என்றாா் அமைச்சா்.

இந்த பதிலில் பி.ஆா். நடராஜன் அதிருப்தியடைந்து துணைக் கேள்வி எழுப்பினாா். அப்போது, இந்த ரூ.40 லட்சம் 2008- ஆம் ஆண்டு மத்திய அரசால் வழங்கப்பட்டது. தற்போது, பாதுகாப்பு, ஜூவல்லரி போன்ற தொழில் வழித்தடங்கள் அமைய உள்ள நிலையில் புதிய தொழில்நுட்ப பயிற்சிகளுக்கு மத்திய அரசு எடுத்த நடவடிக்கை என்ன? எனவும் கேள்வி எழுப்பினாா். இதற்கு பதிலளித்த அமைச்சா் ராஜீவ் சந்திரசேகா், 'வெளிநாட்டு உற்பத்தியாளா்களுடன் போட்டியிட. நாடு முழுவதும் 18 புதிய தொழில்நுட்பப் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இதில் மாநில அரசின் இடத்தில் கோவையில் ஒன்று தொடங்கப்படும்' என்றாா்.

---

6. சீனாவுக்கான புதிய தூதா் பிரதீப்குமாா் ராவத்

சீனாவுக்கான இந்தியாவின் அடுத்த தூதராக பிரதீப்குமாா் ராவத் நியமிக்கப்பட்டுள்ளாா்.

1990-ஆம் ஆண்டு பிரிவு ஐஎஃப்எஸ் அதிகாரியான ராவத், இப்போது நெதா்லாந்து தூதராகப் பணியாற்றி வருகிறாா். அவா் விரைவில் புதிய பொறுப்பை ஏற்றுக் கொள்வாா் என்று வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராவத் ஏற்கெனவே பெய்ஜிங் மற்றும் ஹாங்காங்கில் பணியாற்றிய அனுபவம் உள்ளவா். இந்தோனேசிய தூதராகவும் பணியாற்றியுள்ள அவா், சீன மொழியில் சரளமாகப் பேசும் திறனுள்ளவா் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது சீன தூதராக உள்ள விக்ரம் மிஸ்ரியைத் தொடா்ந்து பிரதீப்குமாா் ராவத் அந்தப் பொறுப்பை ஏற்க இருக்கிறாா். சீனாவுடன் கிழக்கு லடாக் எல்லைப் பிரச்னை உள்பட பல்வேறு விஷயங்களில் பிரச்னைகள் உள்ள நிலையில் இந்தப் புதிய நியமனம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

---

1. டிச.18 அன்று எந்த மொழி நாள் அனுசரிக்கப்படுகிறது?

அ) பிரஞ்சு

ஆ) கிரேக்கம்

இ) அரபு ☑

ஈ) உருது

✓ உலகளவில் 400 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப்படும் மொழியைக் கௌரவிக்கும் வகையில் டிச.18 அன்று உலக அரபு மொழி நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ ஐநா அவையின் ஆறாவது அலுவல் மொழியாக அரபு மொழியை ஐநா பொது அவை ஏற்றுக்கொண்டதைக் குறிக்கும் வகையில், கடந்த 2012ஆம் ஆண்டு முதல் இந்த நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. "Arabic Language, a bridge between civilisations" என்பது இந்த ஆண்டு, உலக அரபு மொழி நாளுக்கானக் கருப்பொருளாகும்.

---

2. பிரதமர் ஆவாஸ் யோஜனா (கிராமப்புறம்) திட்டத்தை 2021ஆம் ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது?

அ) 2022

ஆ) 2023

இ) 2024 ☑

ஈ) 2025

✓ பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில், மத்திய ஊரக வளர்ச்சித் துறையின் கருத்துருவான பிரதமர் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தை (PMAY-G) 2021 மார்ச்சுக்கு பின்னர் 2024 மார்ச் மாதம் வரை தொடர்ந்து செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

✓ இந்தத் திட்டத்தின்கீழ் முடிக்கப்பட வேண்டிய 2.95 கோடி வீடுகள் இலக்கை எட்டுவதற்கு ஏற்றவகையில் இந்தத் திட்டம் நீட்டிக்கப்படுகிறது. எஞ்சிய 155.75 இலட்சம் வீடுகளை கட்டி முடிக்க இந்த நீட்டிப்பு உதவும்.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற குன்னூர், தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

அ) நீலகிரி ☑



ஆ) கோயம்புத்தூர்

இ) திண்டுக்கல்

ஈ) தேனி

✓ தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள குன்னூரில் இராணுவ தலைமை தளபதி ஜெனரல் பிபின் ராவத் சென்ற இந்திய வான்படை உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானது. இச்சம்பவத்தில் 13 பேர் உயிரிழந்த செய்தி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 'சௌர்ய சக்ரா' விருதுபெற்ற, விபத்திலிருந்து உயிர்பிழைத்த குரூப் கேப்டன் வருண் சிங்கின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது.

---

4. இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹியூமன் பிராண்ட்ஸ் (IIHB) பவர் கப்பிள் தரவரிசை-2021'இன்படி, முதலிடம் பிடித்த ஜோடி எது?

அ) தீபிகா படுகோன் – ரன்வீர் சிங்



ஆ) விராட் கோலி – அனுஷ்கா சர்மா

இ) விக்னேஷ் சிவன் – நயன்தாரா

ஈ) முகேஷ் அம்பானி– நீதா அம்பானி ☑

✓ இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹியூமன் பிராண்ட்ஸால் (IIHB) ஆண்டுதோறும் வெளியிடப்படும் பவர் ஜோடி தரவரிசையில் இந்திய கோடீஸ்வரர் முகேஷ் அம்பானி – அவரது மனைவி நீதா அம்பானி முதலிடம் பிடித்துள்ளனர். இந்தியா முழுவதும் 25-40 வயதுக்குட்பட்ட 1000'க்கும் மேற்பட்டவர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

✓ இந்த ஜோடியை தொடர்ந்து தீபிகா படுகோனே – ரன்வீர் சிங் இரண்டாவது இடத்திலும், கிரிக்கெட் கேப்டன் விராட் கோலி மற்றும் அவரது மனைவி அனுஷ்கா ஷர்மா இணை மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

---

5. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற Olaf Scholz, எந்த நாட்டின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?

அ) ஆஸ்திரேலியா



ஆ) ஜெர்மனி ☑

இ) நியூசிலாந்து

ஈ) ஸ்பெயின்

✓ 16 ஆண்டுகள் வரலாற்று சிறப்புற ஆட்சி புரிந்த ஏஞ்சலா மேர்க்கெலை தொடர்ந்து Olaf Scholz ஜெர்மனியின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளார். 63 வயதான அவர் சமூக ஜனநாயகக் கட்சியினை செப்டம்பரில் தேர்தல் வெற்றிக்கு வழிநடத்தினார். அவர், துணைவேந்தர் பொறுப்பில் ஏஞ்சலா அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

---

6. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'சரயு தேசிய கால்வாய் திட்டம்' அமைக்கப்படவுள்ள மாநிலம் எது?

அ) குஜராத்



ஆ) உத்தர பிரதேசம் ☑

இ) பீகார்

ஈ) மத்திய பிரதேசம்

✓ உத்தர பிரதேச மாநிலம் பலராம்பூர் மாவட்டத்தில் ₹9,802 கோடி மதிப்பிலான 'சரயு தேசிய கால்வாய் திட்டத்தை' பிரதமர் மோடி தொடங்கிவைக்கவுள்ளார். உத்தரபிரதேச மாநிலத்தின் மிகப்பெரிய திட்டமான இது, காக்ரா, சரயு, ரப்தி, பங்கங்கா மற்றும் ரோகின் ஆகிய ஐந்து ஆறுகளை இணைக்கிறது.

✓ 6,600 கிமீ நீளமுள்ள பல துணை கால்வாய்கள் 318 கிமீ நீளமுள்ள பிரதான கால்வாயுடன் இணைக்கப்பட்டுள்ளன.

---

7. 56ஆவது ஞானபீட விருதை வென்ற நீலமணி பூகன் ஜூனியர், கீழ்காணும் எந்த மொழிசார் கவிஞராவார்?

அ) தமிழ்



ஆ) மலையாளம்

இ) அஸ்ஸாமி ☑

ஈ) குஜராத்தி

✓ அஸ்ஸாமிய கவிஞர் நீலமணி பூகன் ஜூனியர், 56ஆவது ஞானபீட விருதை வென்றுள்ளார். அவர் கடந்த 1990'இல் 'பத்மஸ்ரீ' விருது மற்றும் 2002'இல் சாகித்திய அகாதமி பெல்லோஷிப் பெற்றுள்ளார். கொங்கனி நாவலாசிரியர் தாமோதர் மௌசோ 57ஆவது ஞானபீட விருதை வென்றுள்ளார். 1983ஆம் ஆண்டு தனது கார்மெலின் நாவலுக்காக சாகித்திய அகாதமி விருதை அவர் பெற்றார்.

---

8. மக்களவையில் நிறைவேற்றப்பட்ட சமீபத்திய மசோதா–க்களின்படி, ED & CBI தலைவர்களின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம்?

அ) மூன்று

ஆ) நான்கு

இ) ஐந்து ☑

ஈ) ஆறு

5

✓ மத்திய ஊழல் விழிப்புணர்வு ஆணையம் (திருத்த) மசோதா, 2021 மற்றும் தில்லி சிறப்பு காவல்பிரிவு நிறுவல் (திருத்த) மசோதா, 2021 ஆகியவற்றை பரிசீலித்தல் & நிறைவேற்றலுக்காக மக்களவை நிறைவேற்றியது.

✓ இந்த மசோதாக்கள் அமலாக்க இயக்குநரகம் (ED) மற்றும் மத்திய புலனாய்வுப் பணியகம் (CBI) ஆகியவற்றில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு ஐந்து ஆண்டுகள் வரை பதவிக்கால நீட்டிப்பு வழங்க அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கும். தற்போது, இந்த இரு அதிகாரிகளுக்கும் 2 ஆண்டுகள் பதவிக்கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

---

9. "ஆற்றல் பாதுகாப்பு வாரம்" ஒவ்வோர் ஆண்டும் எந்த மாதத்தில் அனுசரிக்கப்படுகிறது?

அ) அக்டோபர்



ஆ) நவம்பர்

இ) டிசம்பர் ☑

ஈ) ஜனவரி

✓ 2021 டிச.8 முதல் 14 வரை ஆற்றல் பாதுகாப்பு வாரத்தை எரிசக்தி அமைச்சகம் கொண்டாடுகிறது.

✓ எரிசக்தி திறன் பணியகத்தால் இந்தக் கொண்டாட்டம் நடத்தப்படுகிறது. இது தொழிலகங்களுக்கு தேசிய ஆற்றல் பாதுகாப்பு விருதுகளையும் புதுமையான ஆற்றல் திறன் தொழில்நுட்பங்களை அங்கீகரிக்க தேசிய ஆற்றல் திறன் கண்டுபிடிப்பு விருதுகளையும் வழங்குகிறது.

---

10. 2021'ஆம் ஆண்டில் 'ஜனநாயகத்திற்கான உச்சி மாநாடு' நடத்திய நாடு எது?

அ) அமெரிக்கா ☑



ஆ) இந்தியா

இ) சுவிச்சர்லாந்து

ஈ) ஆஸ்திரேலியா

✓ அமெரிக்க அதிபர் ஜோ பிடன், வெள்ளை மாளிகையில் ஜனநாயகத்திற்கான முதல் உச்சிமாநாட்டை தொடங்கி வைத்தார். இது இரண்டு நாள் மெய்நிகர் உச்சிமாநாடாக தொடங்கப்பட்டது. அமெரிக்க அதிபர் பிடன், உலக அளவில் ஜனநாயக வீழ்ந்து வருவதாக எச்சரித்தார்.

✓ அரசாங்கங்கள், சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை தலைவர்கள் உள்ளிட்ட 100'க்கும் மேற்பட்டோர் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்றனர்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அரசுத் துறைகளின் செயல்பாடுகளை கண்காணிக்கும் எண்ம பலகைத் திட்டம்:

தமிழக அரசுத் துறைகளின் செயல்பாடுகளை கண்காணிக்கும் எண்ம பலகைத் திட்டத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை தொடக்கிவைக்கிறார். இதற்கான நிகழ்ச்சி சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறுகிறது.

தமிழக அரசில் 42 துறைகள் உள்ளன. இந்தத் துறைகளில் உள்ள நலத் திட்டங்கள், செயல்பாடுகள் ஒரு இடத்தில் மட்டுமே இருந்து கண்காணிக்கும் வகையிலான எண்ம பலகைத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதனை முதல்வர் மு.க.ஸ்டாலின், வியாழக்கிழமை தொடக்கிவைக்கிறார்.

அரசின் செயல்பாடுகள், திட்டங்கள் கடைக்கோடியில் உள்ள கிராமங்களுக்கும் சென்று அடைந்துள்ளதா என்பதைக் கண்காணிக்கும் வகையில் இந்த பலகைத் திட்டம் அமைந்திடும் என அரசுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

2. தேவைதான் திருத்தம்! | பெண்களின் திருமண வயதை குறித்த தலையங்கம்

பெண்களின் திருமண வயதை 21–ஆக உயர்த்துவதற்கான சிறார் திருமணச் சட்டம் 2006–இல் திருத்தம் கொண்டுவரப்படுவதற்கான திருத்த மசோதா சில எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு கொண்டுவரும் எந்தவொரு மசோதாவையும் எதிர்ப்பது, தடுப்பது என்கிற மனோபாவம் ஆக்கபூர்வமானதல்ல.

ஒவ்வொரு துறையிலும் பாலின சமத்துவமும் பாலின பேதமின்றி அதிகாரமும் வேண்டும் என்கிற கோரிக்கை நீண்ட நாள்களாகவே இருந்து வருகிறது. ஆனால்,

பெண்களின் திருமண வயது 18–ஆகவும், ஆண்களின் மண வயது 21–ஆகவும் இதுவரை இருந்துவரும் முரண் புதிய சட்டத்திருத்தத்தால் அகற்றப்படும்.

சமதா கட்சியின் தலைவா் ஜெயா ஜேட்லி தலைமையில் சட்டபூா்வ திருமண வயதை உயா்த்துவது குறித்து ஆய்வு செய்ய 10 போ் கொண்ட குழு 2020 ஜூன் மாதம் அமைக்கப்பட்டது. அந்தக் குழு 2020 டிசம்பா் மாதம் தனது அறிக்கையை பிரதமா் அலுவலகத்துக்கும், மத்திய மகளிா் – குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்துக்கும் வழங்கியது. அதனடிப்படையில்தான் 2006 சிறாா் திருமணச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

குழந்தைத் திருமணம் என்பது நீண்டகாலமாக இந்திய சமுதாயத்தில் காணப்பட்ட மிகப் பெரிய குறைபாடு. இது சட்டபூா்வமாக தடை செய்யப்பட்டிருந்தாலும்கூட இந்தியாவின் சில மாநிலங்களில் இன்னும்கூட அவ்வப்போது 'பால்ய விவாகம்' என்று அறியப்படும் குழந்தைத் திருமண முறை காணப்படும் அவலம் தொடா்கிறது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சிகளில் சிறாா் திருமண தடைச்சட்டமும், இப்போது கொண்டுவரப்படும் சட்டத் திருத்தமும் அடங்கும்.

தேசிய குடும்ப சுகாதார ஆய்வின்படி, இந்தியாவில் நான்கு பெண்களில் ஒருவா் 18 வயது பூா்த்தியாவதற்கு முன்னால் திருமணம் செய்துகொள்கிறாா்கள். 56% பெண்கள் 21 வயதை எட்டுவதற்கு முன்பு திருமணம் செய்து கொள்கிறாா்கள். அடித்தட்டு மக்கள் மத்தியில் அதுவே 75% ஆகும். பெரும்பாலான பெண் குழந்தைகளுக்கு, பள்ளிப் படிப்பு முடிந்ததும் திருமணமாகி விடுவதால் கல்லூரி சென்று படிக்கும் வாய்ப்பு அவா்களுக்கு மறுக்கப்படுகிறது. அதைப் போக்கும் வகையில்தான் ஆண்களுக்கு நிகராக பெண்களின் திருமண வயதை உயா்த்த வேண்டும் என்று ஜெயா ஜேட்லி குழு பரிந்துரை செய்தது.

1955 ஹிந்து திருமணச் சட்டம், 1872 இந்திய கிறிஸ்தவ திருமணச் சட்டம் இரண்டுமே பெண்களுக்கு 18 வயதையும், ஆண்களுக்கு 21 வயதையும் திருமண வயதாக வரையறுக்கின்றன. 1954–இல் அமல்படுத்தப்பட்ட வெவ்வேறு மதங்களுக்கு இடையேயான சிறப்புத் திருமண சட்டத்தின்படியும், பெண்களுக்கு 18 வயதும், ஆண்களுக்கு 21 வயதும் அனுமதிக்கப்படுகிறது. 1937 இஸ்லாமிய தனியுரிமை சட்டத்தின்படி (ஷரியத்), ஆணும் பெண்ணும் வயதுக்கு வந்தால் மணவாழ்க்கையில் ஈடுபட தகுதியுடையவா்கள் என்று கூறப்படுகிறது.

சமூக சீா்திருத்தங்களுக்கு அடிப்படையாக இருப்பது ஆண் – பெண் இருபாலரின் கல்வி. குறிப்பாக, கல்வி, பெண்களுக்கு விழிப்புணா்வை ஏற்படுத்தி, காலங்காலமாக அவா்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை நீக்கி, மறுக்கப்பட்ட வாய்ப்புகளைப் பெற்றுத்தருகிறது. திருமண வயதை உயா்த்துவது என்கிற முடிவுக்கு பெண்களின் கல்வி முக்கியமான காரணம்.

18 வயது என்பது பெண்கள் பிளஸ் 2 முடித்திருக்கும் பருவம். அந்தக் கல்வித் தகுதியின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க வேலைவாய்ப்பையோ பொருளாதார சுதந்திரத்தையோ பெற முடியாது. திருமண வயதை மேலும் மூன்று ஆண்டுகள் நீட்டிக்கும்போது அவா்களது கல்லூரிக் கல்விக்கான வாய்ப்பு அதிகரிக்கிறது. அவா்களது எண்ணம் விரிவடைந்து வருங்கால இலக்கை நிா்ணயித்துக் கொள்ளவும், வாழ்க்கை குறித்த முக்கியமான முடிவுகளை எடுக்கவும் உதவும் என்பதுதான் ஜெயா ஜேட்லி குழுவின் கருத்து.

இந்தியாவில் திருமணம் என்பது தனிப்பட்ட முடிவாக இல்லாமல், சமுதாய வழிமுறையாகவும் இருப்பதால் பெண்களின் படிப்பு முடிந்ததும், அவா்களின் திருமணத்தை உறுதிப்படுத்துவது பெற்றோரின் கடமையாகக் கருதப்படுகிறது. 18 வயதிலேயே கல்லூரி அளவிலான கல்வித் தகுதியும், தங்களது வாழ்க்கையை நிா்ணயித்துக்கொள்ளும் பொருளாதாரத் தகுதியும் பெண்களுக்கு வாய்ப்பதில்லை. அதனால் திருமணமும் குழந்தைப் பேறும் கட்டாயமாகிறது.

21 வயதில் திருமணம் செய்துகொள்ளும்போது தங்களது ஆரோக்கியம் குறித்தும், பொருளாதாரம் குறித்தும் தெளிவாக சிந்திக்கும் பக்குவம் ஏற்படுவதால் சுகாதார பிரச்னைகள் குறையும் என்று அக்குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது. பிரசவ கால, சிசு மரண விகிதம் குறைவது மட்டுமல்லாமல் ஊட்டச்சத்து குறைவு உள்ளிட்ட பிரச்னைகளுக்கும் 21 வயது வரம்பு உதவக்கூடும் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

18 வயதானவா்கள் வாக்களிக்கலாம்; வாகனம் ஓட்டலாம்; கல்லூரிக்குச் செல்லலாம்; போட்டித் தோ்வுகளில் கலந்துகொள்ளலாம்; விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு தேசத்தைப் பிரதிநிதித்துவம் செய்யலாம் எனும்போது, திருமண வயதை 21–ஆக அதிகரிக்க வேண்டிய அவசியம்தான் என்ன என்கிற கேள்வி எழாமல் இல்லை. பெண்களின் திருமண வயதை உயா்த்துவதால் மட்டும் குழந்தைத் திருமணங்கள் குறைந்துவிடுமா என்கிற கேள்விக்கு பதிலும் இல்லை.

ஆண்களுக்கு நிகராக பெண்களின் மண வயதை உயா்த்தும் அதே வேளையில், மக்கள் மத்தியில் காணப்படும் பெண்கள் குறித்தான மனநிலையில் மாற்றமும், அவா்களுக்கான பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதும் முக்கியம். புதிய சட்டத் திருத்தத்தின் பயனாக பெண்களின் கல்வி இடைநிற்றல் குறையுமானால் அதுவேகூட மிகப் பெரிய வெற்றிதான்!

---

3. பெண்கள் திருமண வயது 21: மக்களவையில் மசோதா தாக்கல்

பெண்களின் திருமண வயதை 21–ஆக உயா்த்த வகை செய்யும் மசோதா மக்களவையில் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. எதிா்க்கட்சி உறுப்பினா்களின் எதிா்ப்பைத் தொடா்ந்து இந்த மசோதாவை நிலைக் குழுவுக்கு அனுப்ப மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சா் ஸ்மிருதி இரானி அவைத் தலைவரை கேட்டுக்கொண்டாா். அதன்படி, அந்த மசோதா நிலைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது.

பெண்களின் சட்டபூர்வமான திருமண வயதை 18-இலிருந்து 21-ஆக உயர்த்த வகை செய்யும் குழந்தை திருமண தடுப்பு திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்தது. இதையடுத்து, இந்த மசோதாவை மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி மக்களவையில் தாக்கல் செய்தார். இந்த மசோதாவானது இந்திய கிறிஸ்தவ திருமணச் சட்டம், பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், முஸ்லிம் தனிநபர் (ஷரியத்) சட்டம், சிறப்புத் திருமண சட்டம், ஹிந்து திருமணச் சட்டம், வெளிநாட்டு திருமணச் சட்டம் ஆகிய தனிநபர் சட்டங்களில் திருத்தங்களைச் செய்வதற்கு வகை செய்கிறது.

மசோதாவை அறிமுகம் செய்து பேசிய அமைச்சர் ஸ்மிருதி இரானி, 'நாட்டின் வரலாற்றில் இது ஒரு தீர்க்கமான நடவடிக்கை' என்றார்.

சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசிக்காமல் அவசரகதியில் இந்த மசோதாவை மத்திய அரசு தாக்கல் செய்வதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மக்களவை காங்கிரஸ் தலைவர் அதீர் ரஞ்சன் சௌதரி பேசுகையில், 'இந்த மசோதா அறிமுகம் செய்யப்பட்ட விதமானது எந்த ஆலோசனையும் நடத்தாத அரசின் தவறான நோக்கங்களை பிரதிபலிக்கிறது' என்றார்.

காங்கிரஸ் துணைத் தலைவர் கௌரவ் கோகோய், 'ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான திருமண வயதாக 18 என நிர்ணயிக்க வேண்டும் என்ற சட்ட ஆணையத்தின் பரிந்துரைக்கு முரண்பாடாக இந்த மசோதாவின் ஷரத்துகள் உள்ளன' என்றார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் இ.டி.முகமது பஷீர், 'இந்த மசோதா தேவையற்றது, சட்டவிரோதமானது, அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 25-ஐ மீறுவதாக உள்ளது. தனிநபர் சட்டங்கள் மற்றும் அடிப்படை உரிமைகள் மீதான தாக்குதலாகும்' என்றார்.

அகில இந்திய மஜ்லீஸ் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைசி, '18 வயதில் ஒரு பெண் பிரதமரைத் தேர்ந்தெடுக்க முடியும் எனும்போது, அந்தப் பெண்ணின் திருமண உரிமையை நீங்கள் மறுக்கிறீர்கள்' என்றார்.

தேசியவாத காங்கிரஸ் உறுப்பினர் சுப்ரியா சுலே, திமுக உறுப்பினர் கனிமொழி ஆகியோர் இந்த மசோதாவை நிலைக்குழுவுக்கு அனுப்ப வேண்டுமென வலியுறுத்தினர்.

புரட்சிகர சோஷலிச கட்சி உறுப்பினர் என்.கே.பிரேமசந்திரன், 'இந்தச் சட்டத்தை அமல்படுத்துவது குறித்த திட்டத்தை அரசு விளக்க வேண்டும்' என்றார்.

அமைச்சர் பதில்: எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் பதிலளித்து அமைச்சர் ஸ்மிருதி இரானி பேசியதாவது: ஒரு ஜனநாயக நாடாக, திருமணம் செய்வதற்கான வயதில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வழங்குவதில் 75 ஆண்டுகள் பின்தங்கியுள்ளோம். நாட்டில் 15-18 வயதுக்குட்பட்ட சிறுமிகளில் 7 சதவீத போர் காய்ப்பமடைவதாகவும், 23 சதவீத சிறுமிகள் 18 வயதுக்குள் திருமணம் செய்துவைக்கப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது. வளரிளம் பருவத்தில் கர்ப்பமாதலை தடுப்பதும் முக்கியமானது; வளரிளம் பருவ கர்ப்பமானது பெண்களின் உடல்நலத்துக்கு தீங்கு விளைவிப்பது மட்டுமின்றி, கருச்சிதைவுக்கும், குழந்தைகள் இறந்து பிறப்பதற்கும் வழிவகுக்கிறது. மகப்பேறு இறப்பு விகிதம், சிசு இறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அத்துடன் குழந்தை பிறக்கும்போது ஊட்டச்சத்து அளவு, பாலின விகிதத்தை மேம்படுத்துவதும் முக்கியம்' என்றார்.

இதைத் தொடர்ந்து, மசோதாவை நிலைக்குழுவின் ஆலோசனைக்கு அனுப்ப அவைத் தலைவரை அமைச்சர் கேட்டுக்கொண்டார். அதன்படி, அந்த மசோதா நிலைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது.

---

4. ஐ.நா. உலக உணவுத் திட்ட ஆராய்ச்சி: நீதி ஆயோக் கையொப்பம்

ஐ.நா.வின் உலக உணவுத் திட்டத்துடன் ஆராய்ச்சிக்கான உடன்பாட்டில் நீதி ஆயோக் கையொப்பமிட்டது. 2023-ஆம் ஆண்டு சிறு தானியங்களுக்கான சர்வதேச ஆண்டாக இருக்கும் நிலையில், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உலகளவில் அறிவு பரிமாற்றம் செய்வதில் தலைமையேற்க இந்தியாவிற்கு உதவ இந்த ஒப்பந்தம் வழிவகை செய்யும்.

மேலும் சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கான வாழ்வாதாரங்களை உறுதியாகக் கட்டமைப்பதையும் பருவநிலை மாற்றத்திற்கான திறன்களை பயன்படுத்துவதையும் உணவு முறைகளில் மாற்றம் செய்வதையும் இது நோக்கமாக கொண்டுள்ளது.

இந்தியாவில் விரிவடைந்த உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கு பருவநிலையைத் தாக்குப் பிடிக்கும் வேளாண்மையை பலப்படுத்துவதற்கு உக்திகள் வகுத்தல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கு இந்த உடன்பாடு கவனம் செலுத்தும். இது கடந்த டிச.20-ஆம் தேதி கையொப்பமானது.

மத்திய அரசின் அமைச்சகங்கள், மாநில அரசுகளில் உள்ள சம்பந்தப்பட்ட துறைகள், தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள், சிறு தானியங்களை ஊக்கப்படுத்துவதற்கான துறையில் செயல்படும் அமைப்புகள் ஆகியவற்றுடன் இரு தரப்பினரும் கூட்டாக தேசிய அளவில் கலந்தாலோசனை நடத்த இந்த உடன்பாடு வகை செய்கிறது.

மத்திய செய்தி தகவல் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

5. ஊக்கமருந்து தடுப்பு விதிமீறல்: உலக அளவில் இந்தியா 3-ஆம் இடம்

கடந்த 2019-ஆம் ஆண்டில் ஊக்கமருந்து தடுப்பு விதிமுறைகளை மீறியது தொடர்பான ஆண்டறிக்கையில் உலக நாடுகளில் இந்தியா 3-ஆவது இடத்தில் இருக்கிறது. விளையாட்டுத் துறையில் ஊக்கமருந்து பயன்பாட்டை தடுப்பதற்காக இருக்கும் உலக அமைப்பு (டபிள்யூஏடிஏ) இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஊக்கமருந்து பயன்பாடு தடுப்பு விதிகளை மீறியதாக கடந்த 2019-ஆம் ஆண்டில் இந்தியாவில் மொத்தம் 152 நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. பட்டியலில் முதலிரு இடங்களில் ரஷியா (167), இத்தாலி (157) உள்ளன. 4 மற்றும் 5-ஆவது இடங்களில் பிரேஸில் (78), ஈரான் (70) நாடுகள் உள்ளன.

இந்தியாவில் அதிகபட்சமாக உடற்கட்டமைப்பு (பாடி பில்டிங்) பிரிவில் 57 விதிமீறல்கள் பதிவாகியுள்ளன. ஒலிம்பிக் விளையாட்டுகளில் முதன்மையாக, பளுதூக்குதலில் 25 விதிமீறல்களும், தடகளத்தில் 20 விதிமீறல்களும், மல்யுத்தத்தில் 10 விதிமீறல்களும் நிகழ்ந்துள்ளன. குத்துச்சண்டை மற்றும் ஜூடோவில் தலா 4 விதிமீறல்கள் இருக்கின்றன. இதுதவிர, கிரிக்கெட்டிலும் 4 விதிமீறல்கள் நிகழ்ந்துள்ளன.

கடந்த 2018-இல் வெளியான அறிக்கையில் இந்தியா மொத்தம் 107 விதிமீறல்களுடன் 4-ஆவது இடத்தில் இருந்தது. அதிலும் அதிகபட்சமாக பளுதூக்குதலில் 22 விதிமீறல்களும், அடுத்தபடியாக தடகளத்தில் 16 மீறல்களும் இருந்திருக்கின்றன.

இந்த அறிக்கையானது, சம்மந்தப்பட்ட விளையாட்டு போட்டியாளர்களிடம் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அதில் சோதனை நடத்தி விதிமீறல் உறுதி செய்யப்பட்டு, அவர்களுக்கான தடையும் விதிக்கப்பட்டதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும்.

2019-இல் உலக அளவில் மொத்தம் 2,78,047 மாதிரிகள் ஊக்கமருந்து பயன்பாடு தொடர்பாக சேகரிக்கப்பட்டன. அதில் 2,701 மாதிரிகளில் (1 சதவீதம்) விதிமீறல்களுக்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரிந்தது.

ஆய்வு முடிவில் 1,535 மாதிரிகளில் விதிமீறல்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. உலக அளவிலான எண்ணிக்கையில் உடற்கட்டமைப்பில் தான் அதிக விதிமீறல்கள் (227) உள்ளன. அடுத்து தடகளத்திலும் (227), பளுதூக்குதலிலும் (160) அதிகமாக உள்ளன.

1. ரிப்போர்ட்டர்ஸ் வித்தௌட் பார்டர்ஸின் ஒரு சமீபத்திய அறிக்கையின்படி, உலக அளவில் பத்திரிகையாளர்களை அதிகம் சிறைபிடிக்கும் நாடு எது?

அ) இந்தியா

ஆ) வட கொரியா

இ) சீனா ☑

ஈ) பாகிஸ்தான்

✓ ரிப்போர்ட்டர்ஸ் வித்தவுட் பார்டர்சின் சமீபத்திய அறிக்கை, தற்போது குறைந்தபட்சம் 127 நிருபர்கள் தடை செய்து வைக்கப்பட்டுள்ள நிலையில், உலக அளவில் பத்திரிகை –யாளர்களை அதிகம் சிறைபிடிக்கும் நாடு சீனா எனக் கூறியுள்ளது. 'The Great Leap Backwards of Journalism in China' என்ற தலைப்பிலான அவ்வறிக்கை, கருத்து மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான சீனாவின் மீறல்களை வெளிப்படுத்துகிறது.

✓ COVID–19 நெருக்கடியைப் பற்றி மக்களுக்குத் தெரிவித்த –தற்காக 2020இல் குறைந்தது 10 பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

---

2. BWF உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் இந்திய பேட்மிண்டன் வீரர் யார்?

அ) K ஸ்ரீகாந்த் ☑



ஆ) பருப்பள்ளி காஷ்யப்

இ) சாய் பிரனீத்

ஈ) நந்து நடேகர்

✓ இந்திய பேட்மிண்டன் சாம்பியனான கே ஸ்ரீகாந்த், BWF உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்பின் இறுதிப்போட்டி வரை சென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். ஆனால் கெடுவாய்ப்பாக, கே ஸ்ரீகாந்த் இறுதிப்போட்டியில் சிங்கப்பூரின் லோ கீன் யூவிடம் தோல்வியடைந்து வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

✓ கே ஸ்ரீகாந்த், கடந்த 2018 ஏப்ரலில் BWF தரவரிசையில் உலகின் நம்பர்.1 இடத்தைப் பிடித்தார். மேலும் 2015'இல் அர்ஜுனா விருது மற்றும் 2018'இல் பத்மஸ்ரீ விருதுகளைப் பெற்றுள்ளார்.

---

3. சமீபத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு முதல் தனியார் பயணியான யுசாகு மேசாவாவை அனுப்பிய விண்வெளி அமைப்பு எது?

அ) NASA



ஆ) ISRO

இ) ROSCOSMOS ☑

ஈ) ESA

✓ ஜப்பானிய கோடீசுவரரான யுசாகு மேசாவா, இரஷ்ய விண்வெளி நிறுவனமான ROSCOSMOSமூலம் டிச.8 அன்று சோயுஸ் விண்கலத்தில் பன்னாட்டு விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்டார். பன்னாட்டு விண்வெளி நிலையத்தில் 12 நாட்கள் தங்கியிருந்த பின் அவர் பூமிக்கு திரும்பியுள்ளார். எலோன் மஸ்க்கின் ஸ்பேஸ்X உடன் 2023ஆம் ஆண்டு நிலவுக்குச்செல்லும் அவரது பயணத்தி –ற்கான வெற்றிகரமான பரிசோதனை ஓட்டமாகும் இது.

---

4. 2021 டிச.20–25 வரையிலான வாரம் இந்தியாவில் என்னவாக கடைப்பிடிக்கப்படுகிறது?

அ) நல்லாட்சி வாரம் ☑



ஆ) ஊழலுக்கு எதிரான வாரம்

இ) வங்கி விழிப்புணர்வு வாரம்

ஈ) பஞ்சாயத்து ராஜ் வாரம்

✓ இந்திய அரசு 2021 டிச.20–25 வரையிலான தேதிகளை 'நல்லாட்சி வார'மாகக் கொண்டாடுகிறது.

✓ நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது குறைதீர்ப்புத் துறை, பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்களுடன் இணைந்து, 'நல்லாட்சி'பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு நிகழ்வுகளை நடத்துகிறது. மேலும், 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக 'பிரஷாஷன் கௌன் கி ஔர்' என்ற பெயரில் ஒரு பிரச்சாரம் திட்டமிடப்பட்டுள்ளது. இது சேவை வழங்கலை மேம்படுத்துதல் & பொதுமக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது.

---

5. 2021 நதி உத்சவமானது இந்தியாவில் எத்தனை கருப் பொருள்களின்கீழ் கொண்டாடப்படுகிறது?

அ) இரண்டு

ஆ) மூன்று

இ) நான்கு ☑

ஈ) ஆறு

✓ நதி உத்சவம் (ஆறு திருவிழா) இந்தியாவில் உத்தரகாசி முதல் கேரளா வரை பதினாறு மாநிலங்கள் மற்றும் 41 மாவட்டங்களில் தூய்மை, தேசபக்தி, இயற்கை மற்றும் சுற்றுச்சூழல், பக்தி மற்றும் ஆன்மீகம் ஆகிய நான்கு கருப்பொருள்களின்கீழ் கொண்டாடப்படுகிறது.

✓ 2021 டிசம்பர்.16–23 வரை இந்த விழா நடத்தப்படுகிறது. நதிகளுக்கு அருகில் வசிக்கும் மக்கள் அனைவரும் ஆண்டுக்கு ஒருமுறையாவது ஆற்றுத்திருவிழாவைக் கொண்டாட வேண்டும் என்று பிரதமர் 'மான் கி பாத்'தில் ஆற்றிய உரைக்கு இணங்க இது அமைந்துள்ளது.

---

6. கேப்ரியல் போரிக், எந்த நாட்டின் இளவயது அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார்?

அ) சிலி ☑



ஆ) அர்ஜென்டினா

இ) நியூசிலாந்து

ஈ) இஸ்ரேல்

✓ 35 வயதான இடதுசாரி மில்லினியல் கேப்ரியல் போரிக் சிலியின் இளம் அதிபரானார். எல் சால்வடாரின் நயிப் புக்கேலுக்குப் பிறகு லத்தீன் அமெரிக்காவில் தலைமை தாங்கும் இரண்டாவது மில்லினியல் ஆவார் இவர்.

---

7. மனிதர்களுக்கு பாதிப்பற்ற ஆனால் பாக்டீரியாவைக் கொல்லும் வைரஸ்களைப் பயன்படுத்தும் சிகிச்சையின் பெயர் என்ன?

அ) பேஜ் சிகிச்சை ☑



ஆ) வைரஸ் சிகிச்சை

இ) ஆண்டிபயாடிக் சிகிச்சை

ஈ) நுண்ணுயிர் சிகிச்சை

✓ 'பேஜ் சிகிச்சை' என்பது மனிதர்களுக்கு பாதிப்பற்ற ஆனால் பாக்டீரியாவைக் கொல்லும் வைரஸ்களை (பேஜ் என அறியப்படுகிறது) பயன்படுத்துவதாகும்.

✓ புதியதோர் ஆராய்ச்சியின்படி, இச்சிகிச்சையானது நோய்த் தொற்றுகளை மிகவும் திறம்பட குணப்படுத்துவதற்காக நுண்ணுயிர் எதிர்ப்பிகளுடன் இணைந்து பயன்படுத்தப்ப –டலாம். இது எதிருயிரி எதிர்ப்புத் தன்மையின் அச்சுறுத்த –லைக் குறைக்கும்.

---

8. சுய–உதவி குழுக்களுக்கு சமூக முதலீட்டு நிதியை வழங்கும் திட்டம் எது?

அ) பிரதமர் ஸ்வச் பாரத் அபியான்

ஆ) தீனதயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய கிராமப் புற வாழ்வாதார இயக்கம் ☑

இ) PM கதி சக்தி யோஜனா

ஈ) PM SHG சம்ரித்தி அபியான்

✓ தீனதயாள் அந்தியோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY–NRLM) கீழ், சுய உதவி குழுக்கள் சமூக முதலீட்டு நிதியைப் பெறுகின்றன.

✓ சமீபத்தில், சுமார் 16 இலட்சம் பெண்கள் பயன்பெறும் வகையில், பிரதமர் மோடி ₹1,000 கோடியை சுய–உதவி குழுக்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைத்தார். இது DAY–NRLM திட்டத்தின் கீழ் செய்யப்படுகிறது.

---

9. 'முக்கிய மந்திரி கன்யா சுமங்கலா திட்டம்' என்பது எந்த மாநிலத்தால் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும்?

அ) பீகார்



ஆ) குஜராத்

இ) மத்திய பிரதேசம்

ஈ) உத்தர பிரதேசம் ☑

✓ 'முக்கிய மந்திரி கன்யா சுமங்கலா திட்டம்' உத்தர பிரதேச மாநிலத்தால் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் ஒரு பெண் குழந்தைக்கு அவளது வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் ₹15,000 நிதியுதவியை நிபந்தனையுடன் வழங்குகிறது. ₹15,000 தொகையானது ஒரு பயனாளிக்கு அவர் பிறக்கும்போது, ஓராண்டு முழுமையான தடுப்பூசி செலுத்தப்பட்டவுடன், வகுப்பு–I, வகுப்பு–VI மற்றும் வகுப்பு–IX சேர்க்கையின்போது, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பிறகு XII அல்லது ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (அ) டிப்ளமோ படிப்பில் சேரும்போது எனப் பல்வேறு நிலைகளில் வழங்கப்படுகிறது.

---

10. Tseminyu, Niuland மற்றும் Chumukedima ஆகியவை கீழ்காணும் எந்த மாநிலத்தில் உருவாக்கப்பட்ட புதிய மாவட்டங்கள் ஆகும்?

அ) அஸ்ஸாம்



ஆ) சிக்கிம்

இ) நாகாலாந்து ☑

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ நாகாலாந்து மாநில அரசாங்கம் சேமின்யு, நியுலாந்து மற்றும் சுமுகேதிமா என மூன்று புதிய மாவட்டங்களை உருவாக்கியுள்ளது. இதன்மூலம் அம்மாநிலத்தின் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 15ஆக மாறியுள்ளது.

✓ நாகாலாந்து மாநில ஆளுநர் ஜகதீஷ் முகி, கோஹிமா மாவட்டத்தின்கீழ் சேமின்யு உட்பிரிவு, திமாபூர் மாவட்டத் –தின்கீழ் நியுலாந்து உட்பிரிவு மற்றும் சுமுகேதிமா துணைப்பிரிவு ஆகியவற்றை அறிவித்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. தமிழகத்தில் 'மீண்டும் மஞ்சப்பை' திட்டம் – மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்

ஒரு பிளாஸ்டிக் பை மக்களால் சராசரியாக பயன்படுத்தப்படும் நேரம் வெறும் 20 நிமிடங்கள் மட்டுமே, ஆனால், அவை மட்குவதற்கு எடுத்துக்கொள்ளும் காலம் பல நூறு ஆண்டுகள் ஆகும். அதிகப்படியான இந்த பிளாஸ்டிக் மாசுபாட்டினால் நமது பூமி தீவிரமாக பாதிப்படைந்துள்ளது. மேலும், கடல்வாழ் உயிரினங்கள் உள்பட நமது சுற்றுச்சூழல் அமைப்பில் பேரழிவையும் மற்றும் நமது குழந்தைகளின் ஆரோக்கியத்தில் பாதகமான விளைவுகளையும் இந்த பிளாஸ்டிக் மாசுபாடு ஏற்படுத்தி வருகிறது.

இதனை கருத்தில்கொண்டு ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் 14 வகை பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டு கடுமையான நடவடிக்கைகளை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. கொரோனா பரவும் சூழல் கருதி தடையை நடைமுறைப்படுத்தும் வகையில் தேக்கம் ஏற்பட்டது. தற்போதைய தமிழக அரசு இந்த தடையை மீண்டும் நடைமுறைப்படுத்த மிகவும் தீவிரமாக பணிகளைத் தொடங்கியுள்ளது. பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டை தவிர்க்கும் விழிப்புணர்வையும், அதற்கு மாற்றான துணிப்பைகளையும் நாமே உபயோகிக்கும் பழக்கத்தை பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்பதே "மீண்டும் மஞ்சப்பை" பரப்புரையின் நோக்கம்.

தமிழக அரசின் "மீண்டும் மஞ்சப்பை" பரப்புரைக்கான நிகழ்ச்சி, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் 23–ந் தேதி (இன்று) தொடங்கி வைக்கிறார். இதில் மாநிலத்தின் முக்கிய பிரமுகர்கள் பலரும் பங்கேற்கிறார்கள்.

மேலும் இந்த நிகழ்ச்சியில், தடை விதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு (பைகள் உள்பட) மாற்றுப்பொருட்களை தயாரிக்கும் தயாரிப்பாளர்களின் விளக்கப்பட கண்காட்சி

பொதுமக்களின் பார்வைக்காக சென்னை வாலாஜா சாலையில் அமைந்துள்ள "கலைவானர் அரங்கத்தில்" இன்று வைக்கப்பட உள்ளது. எனவே, பிளாஸ்டிக் மாற்றுப்பொருட்களுக்கான கண்காட்சியை இன்று மாலை 7 மணி வரை பொதுமக்கள் பார்வையிட்டு, அதனை தங்களுடைய வாழ்விலும் உபயோகித்து சுற்றுச்சூழலை பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

2. இந்தியா அபார சாதனை: யுனிகார்ன் ஸ்டார்ட்அப்பில் உலக அளவில் 3-வது இடம்; பிரிட்டனை முந்தியது

54 யுனிகார்ன் ஸ்டார்ட்அப் நிறுவனங்களுடன் பிரிட்டனை முந்தி இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது.

1 பில்லியன் டாலர் அதாவது 100 கோடி டாலர்களுக்கு மேல் மதிப்பைக் கொண்டிருக்கும் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் யுனிகார்ன் என அழைக்கப்படுகின்றன. 2021-ல் அக்டோபர் மாதம் வரையில் மட்டும் இந்தியாவில் 30 நிறுவனங்கள் யுனிகார்ன் பட்டியலில் இணைந்துள்ளன. 2011-2014 வரையில் இந்தியாவில் ஆண்டுக்கு ஒரு நிறுவனம் யுனிகார்ன் பட்டியலில் இணைந்தது. 2015-ல் அந்த எண்ணிக்கை நான்காக ஆனது.

2018-க்குப் பிறகு யுனிகார்ன் பட்டியலில் இணையும் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. 2018-ல் 8, 2019-ல், 9, 2020-ல் 10 நிறுவனங்கள் யுனிகார்ன் பட்டியலில் இணைந்தன. இந்த ஆண்டு 30 நிறுவனங்கள் யுனிகார்ன் பட்டியலில் இணைந்திருக்கின்றன.

இதன் மூலம் இந்தியாவில் ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கான தொழில் வாய்ப்புகள் மீது உலகின் கவனத்தை ஈர்க்கச் செய்திருக்கிறது.

இதுகுறித்து ஹுரூன் இந்தியா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

54 யுனிகார்ன்களுடன் பிரிட்டனை முந்தி இந்தியா மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவில் தற்போது 54 யுனிகார்ன்கள் உள்ளன. 2020 இல் இருந்ததை விட 33 யுனிகார்ன்கள் அதிகம். அதே நேரத்தில் இங்கிலாந்தில் தற்போது 39 யுனிகார்ன்கள் உள்ளன, இது ஒரு வருடத்திற்கு முந்தையதை விட 15 அதிகமாகும்.

யுனிகார்ன் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை அதிகம் கொண்டிருக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. அமெரிக்கா 396 யுனிகார்ன் ஸ்டார்ட்அப் நிறுவனங்களைக் கொண்டு முதல் இடத்திலும், சீனா 277 நிறுவனங்களைக் கொண்டு இரண்டாவது இடத்திலும் உள்ளன. இங்கிலாந்து (32) நான்காவது இடத்திலும், ஜெர்மனி (18) ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

பணப்பரிவர்த்தனை சேவை வழங்கும் நிறுவனங்களில் பேடிஎம், போன்பே, இகாமர்ஸில் பிளிப்கார்ட், ஸ்னாப்டீல், மீஸோ, கல்வித் துறையில் பைஜூஸ், அன்அகாடமி, போக்குவரத்து சேவையில் ஓலா கேப்ஸ், விடுதி சேவையில் ஓயோ, கேமிங்கில் டீரீம் 11 என கடந்த பத்தாண்டுகளில் யுனிகார்ன் பட்டியலில் இணைந்துள்ளன.

இதில் பைஜூஸ் மற்றும் பேடிஎம் 15 பில்லியன் டாலருக்கு மேல் மதிப்பு கொண்ட நிறுவனங்களாக மாறியுள்ளன. பைஜூஸ் இப்போது உலகின் 15 வது மிகவும் மதிப்புமிக்க யுனிகார்ன் ஆகும், அதே நேரத்தில் இன்மோபி 28 வது மிகவும் மதிப்புமிக்க யுனிகார்ன் ஆகும். இது நாட்டின் மூன்றாவது மிகவும் மதிப்புமிக்க தொடக்கமாகும்.

உலகளவில் யுனிகார்ன்களின் வரலாற்றில் 2021 ஆம் ஆண்டு மிகவும் வெற்றிகரமான ஆண்டாக உள்ளது. 2020 ஆம் ஆண்டில் யுனிகார்ன்களின் எண்ணிக்கை வெறும் 568 இல் இருந்து 1,058 ஆக உயர்ந்துள்ளது. 2020 இல் 79% இல் இருந்து 74% ஆகக் குறைந்துள்ளது. இது உலகின் இரண்டு பெரிய பொருளாதாரங்களுக்கு வெளியே உள்ள நாடுகளில் உள்ள நிறுவனங்களின் நிதி சேகரிப்பு வேகத்தை அதிகரித்து வருகிறது.

இந்தியாவில் பெங்களூரில் யுனிகார்ன் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் உருவாகின்றன. அதற்கு அடுத்த இடத்தில் மும்பை இருக்கிறது. இந்த ஆண்டு யுனிகார்ன் பட்டியலில் இணைந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்களில் 9 நிறுவனங்கள் பெங்களூரையும் 7 நிறுவனங்கள் மும்பையையும் தலைமையிடமாகக் கொண்டவை. பாஸ்டன், பாலோ ஆல்டோ, பாரிஸ், பெர்லின், சிகாகோ போன்ற நகரங்களை விட பெங்களூரில் அதிக யுனிகார்ன்கள் இருக்கின்றன.

இதுமட்டுமின்றி இந்தியர்கள் வெளிநாடுகளிலும் யுனிகார்ன் நிறுவனங்களை தொடங்கி சாதனை படைத்து வருகின்றனர்.

சீனா, இஸ்ரேல் மற்றும் ரஷ்யா. அறிக்கையின்படி, போஸ்ட்மேன், இன்னோவாக்கர், ஐசெர்டிஸ், மோக்லிக்ஸ் உள்ளிட்ட 65 யுனிகார்ன்களை இந்தியாவுக்கு வெளியே இந்தியர்கள் நிறுவியுள்ளனர்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. சேதி தெரியுமா?

டிச.12: பிரான்ஸ் நாட்டின் ஆளுகையிலிருந்து விடுதலை பெறுவது தொடர்பாக பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நியூ காலிடோனியாவில் பொது வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில், பிரான்ஸின் அங்கமாகத் தொடர மக்கள் ஆதரவளித்தனர்.

டிச.14: பர்மிங்ஹாமில் நடைபெற்ற காமன்வெல்த் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அஜய் சிங் 81 கிலோ பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார்.

டிச.15: நைஜீரியாவில் இருந்து தோகா வழியாக தமிழகம் வந்த 47 வயதுடைய நபருக்கு ஒமைக்ரான் தொற்று உறுதியானதாக தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அறிவித்தது.

டிச.15: குன்னூர் ஹெலிகாப்டர் விபத்தில் காயத்துடன் தப்பிய குரூப் கேப்டன் வருண் சிங் சிகிச்சை பலனின்றி

பெங்களூருவில் காலமானார். இதன்மூலம் விபத்தில் பலினானோர் எண்ணிக்கை 14ஆக அதிகரித்தது.

டிச.16: 1971-ஆம் ஆண்டு வங்கதேசத்தைப் பிரிக்கும் வகையில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான போரில் வெற்றி அடைந்ததன் 50-ஆம் ஆண்டு பொன்விழா கொண்டாடப்பட்டது.

டிச.16: பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 18 வயதிலிருந்து 21 ஆக உயர்த்தும் அரசின் முடிவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

டிச.16: மேற்கு வங்கத் தலைநகர் கொல்கத்தாவில் பிரசித்திபெற்ற திருவிழாக்களில் ஒன்றான துர்கா பூஜைக்கு யுனெஸ்கோவின் பாரம்பரிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

டிச.17: சூரியனை ஆய்வுசெய்ய முதன் முறையாக அமெரிக்காவின் நாசா அனுப்பிய பார்க்கர் சோலார் விண்கலம் சூரியனின் மேற்பரப்பில் நுழைந்து புதிய அத்தியாயம் படைத்திருக்கிறது.

டிச.17: 'நீராருங் கடலுடுத்த' எனத் தொடங்கும் மனோன்மணீயம் சுந்தரனார் இயற்றிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை தமிழ்நாடு அரசின் மாநிலப் பாடலாக அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டது.

---

4. 'ப்ரலே' ஏவுகணை வெற்றிகரமாக சோதனை

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து செலுத்தக்கூடிய 'ப்ரலே' ஏவுகணையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) முதன்முறையாக செலுத்தி வெற்றிகரமாக பரிசோதித்தது.

ஒடிஸா கடற்கரைப் பகுதியில் உள்ள அப்துல் கலாம் தீவிலிருந்து முதன்முறையாக இந்த ஏவுகணை செலுத்தப்பட்டு வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

இந்தச் சோதனை அதன் அனைத்து இலக்குகளையும் எட்டியது. இந்தப் புதிய ஏவுகணை அதன் திட்டமிட்ட இலக்கை துல்லியமாக தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஏவுகணை திட எரிபொருள் ராக்கெட் மோட்டார் மற்றும் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் அடிப்படையில் இயங்கக் கூடியது. இது 150 முதல் 500 கிலோ மீட்டர் வரை பாய்ந்து சென்று தாக்கக் கூடியது என்பதோடு நடமாடும் சாதனத்திலிருந்து செலுத்தக் கூடியதாகும்.

விஞ்ஞானிகளின் இந்தச் சாதனைக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

---

5. ஆசிய ஹாக்கி: இந்தியாவுக்கு வெண்கலம்: பாகிஸ்தானை வீழ்த்தி பதக்கம் பெற்றது

ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா 4-3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றது.

நடப்புச் சாம்பியனான இந்தியா கடந்த செவ்வாய்க்கிழமை தனது அரையிறுதியில் ஜப்பானிடம் 3-5 என்ற கணக்கில் தோல்வியடைந்த நிலையில், 3-ஆவது இடத்துக்காக பாகிஸ்தானை புதன்கிழமை சந்தித்தது.

முன்னதாக பாகிஸ்தானும் தனது அரையிறுதியில் தென் கொரியாவிடம் 5-6 என்ற கணக்கில் தோற்று இந்த ஆட்டத்துக்கு வந்திருந்தது. இந்தியா தனது லீக் ஆட்டத்திலேயே பாகிஸ்தானை வீழ்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

எனினும் அந்த ஆட்டத்துடன் ஒப்பிடுகையில், வெண்கலப் பதக்கத்துக்கான இந்த ஆட்டத்தில் இந்தியா கடுமையாகப் போராடும் நிலை இருந்தது. அணிக்கு 11 பெனால்டி கார்னர் வாய்ப்புகள் கிடைத்தும், அதில் இரண்டையே இந்தியாவால் கோலாக மாற்ற முடிந்தது.

தொடக்கத்திலிருந்தே பாகிஸ்தான் தடுப்பாட்டத்துக்கு நெருக்கடி கொடுத்தது இந்தியா. அதன் பலனாக முதல் நிமிஷத்திலேயே வரிசையாக 4 பெனால்டி கார்னர் வாய்ப்புகள் கிடைத்தன. அதில் கடைசி வாய்ப்பில் கோலடித்து அணியின் கணக்கை தொடங்கினார் துணை கேப்டன் ஹர்மன்பிரீத் சிங்.

தொடர்ந்து பாகிஸ்தானின் பாதுகாப்பு வளையத்தை பலமுறை ஊடுருவிச் சென்றாலும், துல்லியமான கோல் வாய்ப்பை இந்திய அணியால் உருவாக்க முடியாத நிலை இருந்தது. நேரம் செல்லச் செல்ல தனது ஆட்டத்தை தொடங்கிய பாகிஸ்தான், 10-ஆவது நிமிஷத்தில் ஆட்டத்தை சமன் செய்தது.

இந்தியாவின் தடுப்பாட்டத்தில் ஹர்மன்பிரீத் செய்த சிறு தவறை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட பாகிஸ்தான் வீரர் அஃப்ராஸ், இந்திய கோல்கீப்பர் கிருஷண் பகதூர் பாதக்கை கடந்து கோலடித்தார். சிறிது நேரத்திலேயே இந்தியாவுக்கு 5-ஆவது பெனால்டி கார்னர் வாய்ப்பு கிடைத்தாலும், அதில் ஹர்மன்பிரீத் மேற்கொண்ட கோல் முயற்சியை பாகிஸ்தான் தடுப்பாட்ட வீரர்கள் தடுத்தனர்.

14-ஆவது நிமிஷத்தில் பாகிஸ்தானுக்கு கிடைத்த முதல் பெனால்டி கார்னர் வாய்ப்பை கோலாக மாற விடாமல் முறியடித்தார் கோல்கீப்பர் கிருஷன் பகதூர். 2-ஆவது கால்மணி நேர ஆட்டம் மிகவும் பரபரப்பாக இருந்தது. இந்தியாவின் பல கோல் முயற்சிகளுக்கு பாகிஸ்தானின் மாற்று கோல்கீப்பராக வந்த அம்ஜத் அலி அணை போட்டார்.

22-ஆவது நிமிஷத்தில் இந்தியாவுக்கான பெனால்டி கார்னர் வாய்ப்பில் ஹர்மன்பிரீத் கோலடிக்க முயல, அம்ஜத் அலி அதை தடுத்தார். 4 நிமிஷங்களுக்குப் பிறகு ஆகாஷ் தீப் சிங் ரிவர்ஸ் ஹிட் முறையில் ஒரு கோல் வாய்ப்புக்கு முயற்சிக்க, அதுவும் அம்ஜத் அலியை கடக்க முடியாமல் போனது. பின்னர் இந்தியாவின் 7-ஆவது பெனால்டி கார்னர் வாய்ப்பிலும் ஹர்மன்பிரீத் சிங்கை கோலடிக்க விடாமல் செய்தார் அம்ஜத்.

இவ்வாறாக முதல் பாதி ஆட்டம் சமனிலையில் முடிந்தது. 33-ஆவது நிமிஷத்தில் பாகிஸ்தானின் 2-ஆவது பெனால்டி கார்னர் வாய்ப்பில் அப்துல் ராணா கோலடிக்க, அந்த அணி முன்னிலை பெற்றது. அதே நிமிஷத்தில் அப்துல் ராணா ஒரு ஃபீல்டு கோலுக்கும் முயற்சிக்க, அது கோல்போஸ்டில் பட்டு வீணானது.

இந்நிலையில், ஆட்டத்தின் 45-ஆவது நிமிஷத்தில் குர்சாஹிப்ஜித் சிங் அருமையாக ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க, அதில் தவறாமல் கோலடித்த சுமித்,

ஆட்டத்தை 2–2 என சமன் செய்தார். இதனால் ஆட்டம் விறுவிறுப்பானது. இந்தியாவுக்கு அதிக கோல் வாய்ப்புகள் கிடைத்தும் பாகிஸ்தான் அதில் பலன் கிடைக்க விடாமல் தடுத்தது.

எனினும் 53–ஆவது நிமிஷத்தில் கிடைத்த இரு பெனால்டி கார்னர் வாய்ப்புகளில் ஒன்றை வருண் குமார் கோலாக மாற்ற, இந்தியா முன்னிலை பெற்றது. தொடர்ந்து பாகிஸ்தானுக்கும் இரு பெனால்டி கார்னர் வாய்ப்புகள் கிடைத்தாலும் அதை இந்திய கேப்டன் மன்பிரீத் சிங் திறம்படத் தடுத்தார்.

57–ஆவது நிமிஷத்தில் லலித் யாதவ் பாஸ் செய்த பந்தை ஆகாஷ்தீப் சிங் கோலடிக்க இந்தியா 4–2 என முன்னேறியது. ஆனால், அதே நிமிஷத்தில் பாகிஸ்தான் வீரர் அகமது நதீமும் கோலடிக்க, அந்த அணி 3–4 என நெருங்கியது. எஞ்சிய நேரத்தில் பாகிஸ்தான் ஸ்கோர் செய்ய முடியாததால், இறுதியில் இந்தியா 4–3 என்ற கோல் கணக்கில் த்ரில் வெற்றி கண்டது.

ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஜப்பானை வீழ்த்தி தென் கொரிய அணி சாம்பியன் ஆனது. முன்னதாக அந்த இரு அணிகள் மோதிய இறுதி ஆட்டம் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் முடிவில் 3}3 என சமநிலையில் இருந்தது. இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்க நடத்தப்பட்ட "ஷூட் அவுட்' முறையில் தென் கொரியா 4}2 என்ற கோல் கணக்கில் வென்றது.

முன்னதாக லீக் சுற்றில் தனது அனைத்து ஆட்டங்களிலும் வெற்றியை பதிவு செய்திருந்த இந்தியா, தென் கொரியாவுக்கு எதிரான முதல் ஆட்டத்தை மட்டும் சமன் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

---

1. மருத்துவ உயிர்வளி (O_2) வீணாவதைத்தடுக்க 'தேசிய உயிர்வளி பொறுப்புத்திட்டத்தை'த் தொடங்கியுள்ள நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) இந்தியா ☑

இ) UK

ஈ) வங்காளதேசம்

✓ மருத்துவ உயிர்வளியை வீணாவதைத் தடுப்பதற்காக, இந்திய அரசு, மருத்துவ உயிர்வளியை பகுத்தறிவுடன் பயன்படுத்துவதில், சுகாதாரப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக, 'தேசிய உயிர்வளி பொறுப்புத் திட்டத்தை' அறிமுகப்படுத்தியது.

✓ இத்திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஓர் உயிர்வளி பொறுப்பா–ளர் கண்டறியப்பட்டு அவருக்கு பயிற்சி அளிக்கப்படும் என மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. உயிர்வளி இருப்புபற்றிய தகவல்களை வெளியிடுதற்காக 'ஆக்ஸிகேர்' என்ற தகவல் பலகையும் அமைக்கப்பட்டது.

---

2. இந்தியாவில் 'வெர்னாகுலர் இன்னோவேஷன்' திட்டத்தைத் தொடங்கிய நிறுவனம் எது?

அ) ISRO



ஆ) NITI ஆயோக் ☑

இ) BARC

ஈ) NSIL

✓ NITI ஆயோக்கின் அடல் புத்தாக்க இயக்கம், 22 தாய்மொழி–களில் புதுமையான சூழலை அணுகுவதற்கு தொழில் முனைவோருக்கு உதவும் வட்டாரமொழி புத்தாக்க திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அடல் புத்தாக்க திட்டம், 22 அட்டவணைப்படுத்தப்பட்ட மொழிகள் ஒவ்வொன்றிலு–ம் ஒரு வட்டார மொழி பணிக்குழுவிற்கு பயிற்சியளிக்கும்.

✓ ஒவ்வொரு பணிக்குழுவும் வட்டார மொழி ஆசிரியர்கள், பாட வல்லுநர்கள், தொழில்நுட்ப எழுத்தாளர்கள் மற்றும் பிராந்திய அடல் அடைவு மையங்களின் தலைமை ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

---

3. இந்தியாவில் மசாலாப் பொருட்களின் உற்பத்தியின் வருடாந்திர வளர்ச்சி விகிதம் 2014–2020 வரை ___?

அ) முன்னோக்கி ☑



ஆ) பின்னோக்கி

இ) கோணல்மாணல்

ஈ) ஒரேபோன்ற

✓ "வாசனைத் திரவிய புள்ளிவிவரங்கள் ஒருபார்வை 2021" என்ற நூலை வேளாண் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் வெளியிட்டார்.

✓ இந்நூலில் வாசனைத்திரவியங்கள் சாகுபடி செய்யப்படும் இடம், அவற்றின் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி, விலை & நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு வாசனைத் திரவியங்களின் மதிப்புபற்றிய விவரங்கள் இடம்பெற்றுள்ளன. மத்திய வேளாண் & விவசாயிகள் நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் பாக்கு மற்றும் வாசனைத்திரவிய வளர்ச்சித்துறை இயக்ககம் இந்த நூலை வெளியிட்டுள்ளது.

✓ நாட்டில், 2014–15இல் 67.64 இலட்சம் டன்னாக இருந்த வாசனைத்திரவியப் பொருட்கள் உற்பத்தி 2020–21இல் 106.79 லட்சம் டன்னாக மாறியுள்ளது. ஆண்டு வளர்ச்சி விகிதம் 7.9%ஆக உள்ளது.

---

4. குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்கும் செயற்–பாட்டில், உழவர்களின் குறைந்தபட்ச இலாபம் என்ன?

அ) 20%



ஆ) 25%

இ) 50% ☑

ஈ) 75%

✓ வேளாண் செலவுகள் மற்றும் விலைகளுக்கான ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இது விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் 50% இலாபத்தை உறுதிசெய்கிறது. அரவை கொப்பரைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ₹255/–உம், பந்து கொப்பரைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ₹400/ம் உயர்த்துவதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

---

5. ஆபரணங்களில் பயன்படுத்தப்படும் 'ஜேட்' கனிமத்தை அதிகம் உற்பத்தி செய்யும் நாடு எது?

அ) வங்காளதேசம்



ஆ) மியான்மர் ☑

இ) நேபாளம்

ஈ) லாவோஸ்

✓ முன்னர் 'பர்மா' என்றழைக்கப்பட்ட மியான்மர், உலகின் மிகப்பெரிய 'ஜேட்' உற்பத்தியாளராகும். இது நகைகளில் பயன்படுத்தப்படும் பச்சை நிறக் கனிமமாகும். சமீபத்தில், மியான்மரில் உள்ள ஒரு 'ஜேட்' சுரங்கத்தில் நிலச்சரிவு ஏற்பட்டதில், நூற்றுக்கும் மேற்பட்டோர் புதைந்தனர். அதில் ஒருவர் இறந்தது உறுதி செய்யப்பட்டது.

---

6. "பாதுகாப்பான மற்றும் பொறுப்பான புலம்பெயர்வு" என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ) ஜார்கண்ட் ☑

ஆ) ஒடிஸா

இ) உத்தர பிரதேசம்

ஈ) பீகார்

✓ ஜார்கண்ட் மாநிலம் "பாதுகாப்பான மற்றும் பொறுப்பான புலம்பெயர்வு" என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது. புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தாங்கள் வாழும் மற்றும் செல்லும் மாவட்டங்கள் குறித்து முறையாக பதிவு செய்ய இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ மக்கள் நடமாட்டத்தை முறையான கட்டமைப்பின்மூலம் ஆய்வு செய்வதற்கு இந்தத்திட்டம் அரசுக்கு உதவும். லடாக் மற்றும் கேரளாவில் இரண்டு "தொழிலாளர் துணை தூதரகங்களை" அமைக்கவும் ஜார்கண்ட் மாநில அரசு முடிவுசெய்துள்ளது.

---

7. எந்த மாநிலம் / யூடியில் ரிஷிஹூட் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டுள்ளது?

அ) குஜராத்

ஆ) உத்தரகாண்ட்



இ) புது தில்லி ☑

ஈ) புதுச்சேரி

✓ குடியரசுத்துணைத்தலைவர் வெங்கையா, புதுதில்லியில் உள்ள அறிவியல் பவனில் ரிஷிஹூட் பல்கலைக்கழகத்–தை திறந்து வைத்தார். மாநிலங்களவை எம்பி'உம், ரிஷிஹூட் பல்கலையின் நிறுவனரும், வேந்தருமான சுரேஷ் பிரபுவும் இந்நிகழ்ச்சியில் உடனிருந்தார்.

✓ நீர் மையம், ஆட்சியில் புதுமை மையம் போன்ற சமூக தாக்கத்தை மேம்படுத்துதற்கான பல்வேறு முயற்சிகளை அப்பல்கலைக்கழகம் தொடங்கியுள்ளது.

---

8. சூரத் மெட்ரோ இரயில் திட்டத்திற்காக இந்தியா எந்த வங்கியுடனான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது?

அ) ADB



ஆ) KFW ☑

இ) AIIB

ஈ) World Bank

✓ சூரத் மெட்ரோ ரயில் திட்டத்திற்காக இந்திய அரசாங்கமும் ஜெர்மனி மேம்பாட்டு வங்கி – KFWஉம் (Kreditanstalt für Wiederaufbau) 442.26 மில்லியன் யூரோ மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இத்திட்டத்தின் மொத்த செலவு யூரோ 1.50 பில்லியன் (₹12,020 கோடி) என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் KFW வங்கி யூரோ 442.26 மில்லியன் நிதியுதவி செய்கிறது.

✓ சூரத் மெட்ரோ ரயில் திட்டம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கப்பட்டது. இந்தத்திட்டத்திற்கு பிரெஞ்சு மேம்பாட்டு முகமை AFD மூலம் இணை நிதியுதவி வழங்கப்படுகிறது.

---

9. எந்த மாநிலத்தில், DRDE நவீன உயிரியல் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் (ABDRC) அமைக்கப்படவுள்ளது?

அ) பீகார்



ஆ) குஜராத்

இ) மத்திய பிரதேசம் ☑

ஈ) உத்தர பிரதேசம்

✓ மத்திய பிரதேச மாநிலம் குவாலியரில், மனிதர்களுக்கு ஆபத்தான வைரஸ்களைப் பற்றி ஆய்வுசெய்வதற்கான மேம்பட்ட உயிரியல் பாதுகாப்பு ஆய்வகத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் (DRDE) அமைக்கவுள்ளது.

✓ இந்த ஆராய்ச்சி மையம் (ABDRC) ஆபத்தான வைரஸ்கள், மனிதர்கள் மீது அவற்றின் தாக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. மேலும் இம்மையம் அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான உபகரணங்களை உருவாக்கும்.

---

10. 'அடிப்படை எழுத்தறிவு & எண்ணியல் குறியீட்டில்' முதலிடம் பிடித்த மாநிலம் எது?

அ) அஸ்ஸாம்



ஆ) சிக்கிம்

இ) மேற்கு வங்காளம் ☑

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கல்வியறிவுக்கான குறிகாட்டியான 'அடிப்படை எழுத்தறிவு & எண்ணியல் பற்றிய குறியீடு' பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவால் வெளியிடப்பட்டது.

✓ இக்குறியீட்டை போட்டிக் கழகம் தயாரித்துள்ளது. இந்தத் தரவரிசையில் மேற்கு வங்கம் (58.95) முதலிடத்தையும் பீகார் 'பெரிய மாநிலங்கள்' பிரிவில் கடைசி இடத்தையும் பிடித்தது. 'சிறிய மாநிலங்கள்' பிரிவில் கேரளா (67.95) முதலிடத்தைப் பிடித்தது. UT மற்றும் வடகிழக்கு மாநிலப் பிரிவில் முறையே லட்சத்தீவு (52.69) மற்றும் மிசோரம் (51.64) அதிக மதிப்பெண்களைப் பெற்ற பகுதிகளாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஆயுள் தண்டனை கைதிகள் முன் விடுதலை: ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் 6 பேர் கொண்ட குழு அமைப்பு

ஆயுள் தண்டனை கைதிகளை முன் கூட்டியே விடுதலை செய்ய ஓய்வுபெற்ற நீதிபதி ஆதிநாதன் தலைமையில் 6 பேர் கொண்ட குழு அமைத்து முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

ஆயுள்தண்டனை கைதி முன்விடுதலை தொடர்பாக ஆய்வுசெய்து ஆதிநாதன் தலைமையிலான குழு பரிந்துரை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறையில் இருபதாண்டுகள்தண்டனை முடிந்தும் விடுதலை ஆகாத சிறைவாசிகள் விடுதலை குறித்து குழு ஆய்வு செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

2. தொல்காப்பியத்தின் ஹிந்தி மொழிபெயர்ப்பு வெளியீடு

தொல்காப்பியத்தின் ஹிந்தி மொழி பெயர்ப்பு, செம்மொழி தமிழ் இலக்கியத்தின் 9 கன்னட மொழி பெயர்ப்பு புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் இயக்குநர் இரா சந்திரசேகரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழ் மொழியின் வளரர்ச்சிக்காக இந்தியக் கல்வி அமைச்சகத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஓர் ஆய்வு நிறுவனமாகும். இதன் மூலமாக தமிழ் பழங்கால இலக்கணத்தை பிற இந்திய மொழிகளிலும், வெளிநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி தற்போது செம்மொழி நிறுவனம் தயாரித்து உள்ள தொல்காப்பியம் நூலின் ஹிந்தி மொழிபெயர்ப்பு மற்றும் கன்னடத்தில் தொல்காப்பியம் மற்றும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் மொழிபெயர்ப்பு நூல்களை தில்லியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் கல்வித்துறை இணை அமைச்சர் சுபாஷ் சர்கார் வெளியிட்டுள்ளார். கன்னடத்தில் மட்டும் 9 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

---

3. ஃபிஃபா பட்டியலில் 18 இந்திய நடுவர்கள்

ஃபிஃபா தயாரித்துள்ள 2022-ஆம் ஆண்டுக்கான சர்வதேச கால்பந்து நடுவர்கள் பட்டியலில் இந்தியாவிலிருந்து 18 பேர் இடம்பெற்றுள்ளனர்.

அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் தகவல்படி, இதில் 14 ஆண் நடுவர்களும், 4 பெண் நடுவர்களும் அடங்குவர். இந்த நடுவர்கள், 2022-இல் நடைபெறும் சர்வதேச அளவிலான கால்பந்து போட்டிகளிலும் நடுவராகப் பணியாற்ற தகுதியுடையவர்களாகின்றனர். அத்துடன், ஆண்டு முழுவதும் ஃபிஃபாவின் அதிகாரப்பூர்வ பேட்ஜை சீருடையில் அணிந்துகொள்ளும் அனுமதியும் இவர்களுக்கு உண்டு.

இந்திய நடுவர்களின் விவரம் வருமாறு:

ஆண் நடுவர்கள்:

தேஜஸ் நக்வென்கர், C R ஸ்ரீகிருஷ்ணா, ரோவன் ஆறுமு-கன், கிரிஸ்டல் ஜான், பிராஞ்சல் பானர்ஜி, வெங்கடேஷ் ராமச்சந்திரன். (உதவி நடுவர்கள் தனி)

பெண் நடுவர்கள்: ரஞ்சிதா தேவி டெக்சாம், கனிகா பர்மான். (உதவி நடுவர்கள் தனி)

---

4. தமிழகத்தின் வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை

தமிழகத்தின் வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என வனத் துறை அமைச்சர் கா ராமச்சந்திரன் தெரிவித்தார்.

---

5. மாமல்லபுரத்தில் 29ஆம் ஆண்டு இந்திய நாட்டிய விழா தொடங்கியது

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் கடற்கரை கோயில் வளாகத்தில் 29-ஆம் ஆண்டு இந்திய நாட்டிய விழா வியாழக்கிழமை தொடங்கியது.

ஜன.23ஆம் தேதி வரை நடைபெறும் நாட்டிய விழாவில் நாள்தோறும் மாலை பிரசித்தி பெற்ற உள்நாட்டு நாட்டியக் கலைஞர்கள் பங்கேற்று, மின்னொளியில் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை வழங்கவுள்ளனர்.

---

6. ஒமைக்ரான் Vs டெல்மைக்ரான்: வேறுபாடுகளும் தாக்கமும் - சில அடிப்படைத் தகவல்கள்கரோனா வைரஸின் உருமாற்றமான ஒமைக்ரானுக்கு உலக நாடுகள் அஞ்சிவரும் நிலையில், மேற்கத்திய நாடுகளையும், அமெரிக்காவையும் டெல்மைக்ரான் வைரஸ் மிரட்டி வருகிறது. அதென்ன... ஒமைக்ரான் வைரஸ் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். இதென்ன 'டெல்மைக்ரான்' வைரஸ்? ஒமைக்ரானிலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கிறது, பாதிப்பு எப்படி இருக்கும்? - அடிப்படைக் கேள்விகளுக்கான பதில்கள் இதோ...

டெல்மைக்ரான் என்றால் என்ன? - கரோனா வைரஸின் இரட்டை திரிபுதான் 'டெல்மைக்ரான்' வைரஸ். ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் வேகமாக டெல்மைக்ரான் வைரஸ் பரவிவருகிறது. அதாவது, கரோனா வைரஸின் உருமாற்றமான டெல்டா வைரஸ், ஒமைக்ரான் வைரஸ் ஆகிய இரு குணங்களையும் கொண்டதுதான் 'டெல்மைக்ரான்' வைரஸ்.

மகாராஷ்டிரா கோவிட் தடுப்பு குழுவின் மருத்துவர் ஷசாங் ஜோஷி கூறுகையில் "ஐரோப்பிய நாடுகளிலும், அமெரி'க்காவிலும் டெல்டா, ஒமைக்ரான் வைரஸ் குணங்களைக் கொண்ட டெல்மைக்ரான் வைரஸ் பரவிவருகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

டெல்மைக்ரான் எங்கு பரவுகிறது? - டெல்மைக்ரான் வைரஸ் இரட்டை திரிபுநிலை கொண்டதால், ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் வேகமாகப் பரவி வருகிறது. தற்போது டெல்டா வைரஸ், ஒமைக்ரான் வைரஸ் ஆகிய இரு வைரஸ்களும் உலகம் முழுவதும் வந்துவி'ட்டது. இரு வைரஸ்களின் இணைப்புதான் டெல்மைக்ரான். இந்த வைரஸின் தாக்கத்தால்தன் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்காவில் மீ'ண்டும் கோவிட் தொற்று வேகமெடுத்துள்ளது.

யாரை டெல்மைக்ரான் தாக்க வாய்ப்பு? - உடலில் குறைவான நோய் எதிர்ப்புச் சக்தி இருப்போர், முதியோர், இணை நோய்கள் இருப்பவர்கள், தடுப்பூசி செலுத்தாமல் இருக்கும் தனிநபர்களுக்கு டெல்மைக்ரான் வைரஸ் தாக்கும் வாய்ப்புள்ளது. இரு வைரஸின் குணங்களின் இணைவு என்பது சூப்பர் ஸ்ட்ரைனாக மாறிவிடும் என்று நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் வைராலஜிஸ்ட் பீட்டர் வொய்ட் தெரிவித்துள்ளார்.

டெல்மைக்ரான் தாக்கம் இந்தியாவில் இருக்குமா? - மகாராஷ்டிரா கோவிட் தடுப்பு குழுவின் மருத்துவர் ஷசாங் ஜோஷி கூறுகையில் "இ'ந்தியாவில் பெரும்பாலும் டெல்டா வைரஸ் பாதிப்புதான் தீவிரமாக இருக்கிறது, டெல்டா வைரஸ் பரவிய வேகத்தைவிட ஒமைக்ரான் வேகமாக உலகம் முழுவதும் பரவிவருகிறது. ஆனால் டெல்டா, ஒமைக்ரான் கூட்டிணைவு எவ்வாறு செயல்படும் என்பதை கணிக்க முடியவில்லை. மும்பையில் செரோ சர்வேயில் 90 சதவீதம் மக்களுக்கு கரோனா பாதித்துவிட்டது தெரியவந்துள்ளது; 88 சதவீத மக்கள் முதல் டோஸ் தடுப்பூசி ெசலுத்திவிட்டார்கள்" எனத் தெரிவித்தார்

டெல்மைக்ரான் அறிகுறிகள் என்ன? - டெல்டா, ஒமைக்ரான் பாதிப்பில் இருக்கும் அதே அறிகுறிகள்தான் டெல்மைக்ரானிலும் இருக்கும். அதிகமான காய்ச்சல், தொடர் இருமல், சுவை, மணம் அறிதலில் மாற்றம், தலைவலி, மூச்சில் நீர்வடிதல், தொண்டை வலி, கட்டிக்கொள்ளுதல், கரகரப்பு போன்றவை இருக்கும்.

உலக சுகாதார அமைப்பு என்ன சொல்கிறது? - டெல்மைக்ரான் வைரஸ் குறித்து உலக சுகாதார அமைப்பு இதுவரை அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. தற்போது

ஒமைக்ரான் பாதிப்பின் புள்ளிவிவரங்களையும், டெல்டா புள்ளிவிவரத்தையும் ஆய்வு செய்து வருகிறது.

---

7. இசை கற்போர் பயிற்சி பள்ளி மாணவர்களுக்கு ₹3 ஆயிரம் உதவித்தொகை:

திருக்கோயில் தவில், நாதஸ்வர பயிற்சி பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்கள் பயன்பெறும் வகையில், உயர்த்தப்பட்ட உதவித்தொகையான ₹3,000 வழங்கும் திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

தமிழக அரசு வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

முதல்வர் மு க ஸ்டாலின் வெள்ளிக்கிழமை காலை தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் அர்ச்சகர், ஓதுவார், பிரபந்த விண்ணப்பர், வேதபாராயணர் மற்றும் இசை கற்போர் (தவில், நாதஸ்வரம்) ஆகிய பயிற்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.1000 ஊக்கத் தொகையை ரூ.3 ஆயிரமாக உயர்த்தி வழங்கும் திட்டத்தை, 18 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி, முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் 20210–22 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், அர்ச்சகர், ஓதுவார், பிரபந்த விண்ணப்பர், வேதபாராயணர் மற்றும் இசை கற்போர் (தவில், நாதஸ்வரம்) ஆகியோருக்கு பயிற்சிக் காலத்தில் ஏற்கனவே ரூ. 1,000 ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, அந்த ஊக்கத்தொகை ரூ.3 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மற்றும் மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் வேதபாராயணர் பள்ளிகளில் பயின்று வரும் 18 மாணவர்கள், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயில் ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் பயின்று வரும் 24 மாணவர்கள் மற்றும் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தவில், நாதஸ்வர பயிற்சி பள்ளிகளில் பயின்று வரும் 25 மாணவர்கள், என மொத்தம் 67 மாணவர்கள் பயன்பெறும் வகையில், உயர்த்தப்பட்ட உதவித்தொகையான ரூ. 3 ஆயிரத்தை 18 மாணவர்களுக்கு முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கி தொடங்கி வைத்தார்.

---

8. 'வந்தே பாரத்' சொகுசு ரயில்கள் அடுத்த ஆண்டு முதல் தயாரிப்பு:

வந்தே பாரத் அதிவிரைவு சொகுசு ரயில்கள் அடுத்த ஆண்டு முதல் தயாரிக்கப்படும் என்று ஒருங்கிணைந்த ரயில் இணைப்பு பெட்டி தொழிற்சாலை (ICF) பொதுமேலாளர் A K அகர்வால் கூறினார்.

சென்னை ICF வளாகத்தில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரங்கில் நேற்று முன்தினம் 66–வது ரயில்வேவார விழா நடைபெற்றது.

தெற்கு ரயில்வே முன்னாள் பொதுமேலாளர் வசிஷ்ட ஜோகிரி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, கடந்த ஆண்டு சிறப்பாகப் பணியாற்றிய 298 ஊழியர்கள், அதிகாரிகளுக்கு பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு வழங்கினார்.

இதில், ICF பொதுமேலாளர் A K அகர்வால் பேசும்போது, "கடந்த ஆண்டு கரோனா பேரிடர் காலத்தில் பல்வேறு சவால்கள் இருந்தும் ICF ஊழியர்கள் சிறப்பாகப் பணியாற்றி, சுமார் 2,000 ரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளனர்.

அவற்றில், இலங்கை ரயில்வேக்கான ஏற்றுமதி ரயில் பெட்டிகள், நீலகிரி மலை ரயிலுக்கான புதிய வடிவமைப்புடன் கூடிய பெட்டிகள், எல்எஃச்பி வடிவமைப்பிலான புதிய விஸ்டடோம் சுற்றுலாப் பயணிகள் ரயில் பெட்டி, மும்பை புறநகர் ரயில் சேவைக்கான குளிர்சாதன வசதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகள் போன்றவை அடங்கும்.

மேலும், இலங்கை ரயில்வேயில் இருந்து ரூ.106 கோடி மதிப்பிலான, குளிர்சாதன வசதி செய்யப்பட்ட டீசல்புறநகர் ரயில் மின் தொடர்களை ஏற்றுமதி செய்யவும் ஆர்டர் கிடைத்துள்ளது.

இத்தாலி தரச் சான்றிதழ்

இந்திய ரயில்வேயின் உற்பத்தித் தொழிற்சாலைகளில் முதல்முறையாக, இத்தாலியின் இன்டெர்டெக் ஸ்பா அமைப்பிடம் இருந்து, ரயில்பெட்டிகள்மற்றும் பாகங்களுக்கான வெல்டிங் தொழில்நுட்பத்துக்கு தரச் சான்றிதழ் கிடைத்துள்ளது.

அடுத்த ஆண்டு செப்டம்பர் முதல் ஒரு மாதத்துக்கு 4 முதல் 5 'வந்தே பாரத்' அதிவிரைவு சொகுசு ரயில்கள் தயாரித்து அனுப்பப்பட உள்ளன. அதேபோல, அடுத்த ஆண்டு தொடக்கத்தில் மேம்படுத்தப்பட்ட வந்தே பாரத் ரயில் உற்பத்தி தொடங்கும்" என்றார்.

---

9. ராணுவத்திற்குள் தகவல் பகிர்வுக்கான புதிய செயலி; இந்திய ராணுவம் அறிமுகம்

அசிக்மா (பாதுகாப்பான முறையில் ராணுவத்திற்குள் செய்தியிடல் செயலி) எனும் புதிய தலைமுறை, நவீன, இணைய அடிப்படையிலான செயலியை இந்திய ராணுவம் இன்று அறிமுகப்படுத்தியது. ராணுவத்தின் கார்ப்ஸ் ஆஃப் சிக்னல்ஸ் அதிகாரிகள் குழுவால் முழுக்க உள்நாட்டிலேயே இது உருவாக்கப்பட்டது.

கடந்த 15 ஆண்டுகளாக சேவையில் உள்ள ராணுவ வைட் ஏரியா நெட்வொர்க் தகவல் முறைக்கு பதிலாக ராணுவத்தின் உள் மட்டங்களில் இந்தப் செயலி பயன்படுத்தப்படுகிறது. ராணுவத்திற்கு சொந்தமான வன்பொருளில் இது களமிறக்கப்பட்டுள்ளதோடு எதிர்கால மேம்படுத்தல்களுக்கான வாழ்நாள் ஆதரவோடு திகழ்கிறது.

அனைத்து எதிர்கால தகவல் பகிர்வு தேவைகளையும் இது பூர்த்தி செய்வதோடு மேம்பட்ட பயனர் அனுபவத்தை வழங்குகிறது. பல நிலை பாதுகாப்பு, தகவல் முன்னுரிமை

மற்றும் கண்காணிப்பு உள்ளிட்ட பல்வேறு சமகால அம்சங்களை இந்த செயலி கொண்டுள்ளது.

எதிர்காலத்திற்கு தயாராக இருக்கும் இந்த செயலி, ராணுவத்தின் உடனடி தரவு பரிமாற்றம் மற்றும் தகவல் பரிமாற்ற தேவைகளை பூர்த்தி செய்யும். குறிப்பாக, தற்போதைய புவிசார் அரசியல் பாதுகாப்பு சூழலின் பின்னணியில் இந்திய அரசின் மேக் இன் இந்தியா முயற்சிக்கு இணங்க இது உள்ளது.

குறிப்பாக கொவிட்–19 பரவலுக்குப் பிறகு தானியங்கி முறையை ஒரு முக்கிய முயற்சியாக இந்திய ராணுவம் முன்னெடுத்துள்ளதோடு, காகிதமில்லாத செயல்பாட்டை நோக்கி கணிசமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளை அசிக்மா மேலும் மேம்படுத்தும்.

---

10. 32 ஆண்டுகால தேச சேவைக்குப் பிறகு விடைபெற்ற ஐஎன்எஸ் குக்ரி கப்பல்

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதலாவது ஏவுகணை தாங்கி கப்பலான ஐஎன்எஸ் குக்ரி, நாட்டிற்கு 32 ஆண்டுகாலம் ஆற்றிய சிறப்புமிகு சேவைக்குப் பிறகு வியாழக்கிழமை 23 டிசம்பர் 2021 அன்று பணியிலிருந்து விடைபெற்றது. இதையொட்டி விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல், பிஸ்வஜித் தாஸ் குப்தா சிறப்பு விருந்தினராக கொண்டார். இந்தக் கப்பலின் இன்னாள், முன்னாள் கமாண்டிங் அதிகாரிகளும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

மஸகான் கப்பல் கட்டும் தளத்தில், 23 ஆகஸ்ட் 1982 அன்று கட்டப்பட்ட இந்தக் கப்பல், அப்போதைய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு கே சி பந்த் மற்றும் காலஞ்சென்ற கேப்டன் மகேந்திரநாத் முல்லாவின் மனைவி திருமதி சுதா முல்லா ஆகியோரால் தேச சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்தக் கப்பல் மேற்கு மற்றும் கிழக்குப் பிராந்திய கடற்படைகளில் சேவையாற்றிய பெருமை உடையதாகும்.

---

11. பத்திரப்பதிவில் மூத்த குடிமக்களுக்கு முன்னுரிமை! ஜனவரி 1–ம் தேதி முதல் அமல்

பத்திரப்பதிவில் மூத்த குடிமக்களுக்கு முன்னுரிமை வழங்கும் நடைமுறை ஜனவரி 1–ம் தேதி முதல் அமலுக்கு வருவதாக அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.

பதிவுத்துறையின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக இணையதளம் மூலம் பதிவு செய்து, ஒன்றன் பின் ஒருவராக பதிவு செய்யும் வகையில் ஒதுக்கீடு நடைபெற்று வருகிறது. இதனால், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு தவிர்க்கப்படுகிறது. சாதாரண மக்களும் குறிப்பிட்ட நேரத்தில் பத்திரப்பதிவு செய்து வருகின்றனர். ஆனால், இந்த நடவடிக்கையால், மூத்த குடிமக்கள் காத்திருக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. இதை தடுக்கும் பொருட்டு, தற்போது சில திருத்தங்கள் செய்யப்பட்டு உள்ளன.

மூத்த குடிமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இனி வரும் காலத்தில் எழுதிக்கொடுப்பவர் அல்லது எழுதி வாங்குபவரில் யாரேனும் ஒருவர் எழுபது (70) வயதைக் கடந்தவராக இருக்கும் பட்சத்தில் அவர்கள் தங்களின் வரிசை எண்ணுக்காக காத்திருக்காமல் அலுவலகம் வந்தவுடன் உடனடியாக பதிவு செய்யும் வண்ணம் மென்பொருளில் உரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பான பதிவுகளை ஆதார் அடையாள அட்டை அல்லது உரிய அடையாள அட்டையின் உதவியுடன் வயது சரிபார்த்து, அவர்கள் 70 வயதுக்கு மேற்பட்டவராக இருப்பின், பதிவு நாளன்று அவர்களுக்கு எந்த வரிசையில் டோக்கன் செய்திருந்தாலும் அவர்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்த உடனேயே, பத்திரப்பதிவை செய்ய அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து உடனடியாக ஆவணம் பதிவு செய்யப்படும்.

இந்த அறிவிப்பு எதிர்வரும் 01.01.2022 முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

1. 'சிவப்புக்குடை' என்பது எவ்வகை தொழிலாளர்களின் உரிமைகளைக் குறிக்கும் சின்னமாகும்?

அ) பாலியல் தொழிலாளர்கள் ☑



ஆ) LGBT ஆர்வலர்கள்

இ) சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்

ஈ) விலங்கு ஆர்வலர்கள்

✓ பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பன்னாட்டு நாள் ஒவ்வோர் ஆண்டும் டிச.17 அன்று அனுசரிக்கப்படுகிறது. இது உலகெங்கிலும் உள்ள பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வெறுப்பு குற்றங்களை முன்னிலைப்படுத்த முயல்கிறது.

✓ 'சிவப்புக்குடை' என்பது பாலியல் தொழிலாளர்களின் உரிமைகளுக்கான முக்கிய அடையாளமாகும். அது டிச.17 அன்று நடைபெறும் நிகழ்வுகளில் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் 'சிவப்புக்குடை' சின்னம் முதன்முதலில் கடந்த 2001ஆம் ஆண்டில், இத்தாலியின் வெனிஸில் பாலியல் தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டது.

---

2. அண்மையில் குழந்தைத் தொழிலாளர் (தடை மற்றும் கட்டுப்பாடு) (திருத்தம்) விதிகள் – 2021'ஐ வெளியிட்ட மாநிலம் எது?

அ) தமிழ்நாடு



ஆ) தெலுங்கானா ☑

இ) மேற்கு வங்காளம்

ஈ) ஒடிஸா

✓ தெலுங்கானா மாநில அரசானது தெலுங்கானா குழந்தைத் தொழிலாளர் (தடை & கட்டுப்பாடு) (திருத்தம்) விதிகள் – 2021'ஐ வெளியிட்டுள்ளது.

✓ இது குழந்தைகளை வெவ்வேறு வேலைகளில் பணி அமர்த்துபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை –யைத் தொடங்க எண்ணுகிறது. இதன் விதிகளின்படி, குழந்தைகள் பள்ளி நேரங்களிலும், இரவு 7 மணி முதல் மறுநாள் காலை 8 மணி வரையிலும் எந்தப் பணியையும் செய்யமாட்டார்கள்.

3.பெண்களுக்கான சட்டப்பூர்வ திருமண வயதை__ஆக உயர்த்தும் திட்டத்தை மத்திய அமைச்சரவை நிறைவேற்றியது.

அ) 19 ஆ) 20

இ) 21 ☑ ஈ) 25

21

✓ பெண்களுக்கான சட்டப்பூர்வ திருமண வயதை ஆண்களுக்கு நிகராக 18இல் இருந்து 21ஆக உயர்த்தும் பரிந்துரையை மத்திய அமைச்சரவை நிறைவேற்றி உள்ளது. ஜெயா ஜெட்லி தலைமையிலான பணிக்குழு கடந்த 2020 டிசம்பரில் NITI ஆயோக்கிற்குச் சமர்ப்பித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

---

4. UNESCO பாரம்பரிய பட்டியலில் கீழ்காணும் எந்த மொழியின் 'சித்திர மொழி' சேர்க்கப்பட்டுள்ளது?

அ) தமிழ்



ஆ) அரபு ☑

இ) உருது

ஈ) ஜப்பானிய மொழி

✓ 'அரபி சித்திர மொழி: அறிவு, திறன்கள் & நடைமுறைகள்' என்பது UNESCO'இன் மனிதகுலத்தின் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரிய பட்டியலில் அதிகாரபூர்வமாக சேர்க்கப்பட்டுள்ளது. இது அரபு கல்வி கூடமைப்பு, கலாசார மற்றும் அறிவியல் அமைப்பின் மேற்பார்வையின்கீழ் சவூதி அரேபியா தலைமையிலான 15 அரபு நாடுகளின் ஒத்துழைப்பில் மேற்கொள்ளப்பட்டது.

---

5. தேசிய காசநோய் மாநாட்டை நடத்திய நகரம் எது?

அ) சென்னை



ஆ) புது தில்லி ☑

இ) பாட்னா

ஈ) வாரணாசி

✓ பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தேசிய காசநோய் மாநாட்டை புது தில்லி அறிவியல் அரங்கில் ஏற்பாடு செய்துள்ளது. துணைக் குடியரசுத் தலைவர் M வெங்கையா தலைமை விருந்தினராகவும், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி இரானியும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவும் கலந்துகொண்டனர்.

✓ 2030ஆம் ஆண்டின் SDG காலவரிசைக்கு முன்னதாக, 2025ஆம் ஆண்டளவில் காசநோயை ஒழிப்பதற்கான அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையை இந்தியப் பிரதமர் அறிவித்தார்.

---

6. எந்த வெளியீட்டு நிறுவனம்/ இணையதளம் 'Allyship' என்பதை ஆண்டின் சொல்லாகக் குறிப்பிட்டுள்ளது?

அ) டிக்ஷனரி.காம் ☑



ஆ) காலின்ஸ்

இ) ஆக்ஸ்போர்டு

ஈ) ரென் & மார்ட்டின்

✓ Dictionary.com 'Allyship' என்பதை 'ஆண்டின் சொல்'லாக அறிவித்துள்ளது. இது சமீபத்திய ஆண்டுகளில் மீண்டும் புதிதாக உருவாக்கப்பட்ட பழைய பெயர்ச்சொல்லாகும்.

✓ இவ்வலைத்தளத்தின்படி, 1800'களின் இடைப்பகுதியில் "Allyship" சொல் முதன்முதலில் வெளிவந்தாலும், கடந்த சில தசாப்தங்களில், இந்தச் சொல் ஒரு நுணுக்கமான மற்றும் ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தை கொடுக்கும் வகையில் உருவாகியுள்ளது.

---

7. கீழ்காணும் எந்த நாட்டிலிருந்து 6 இலட்சம் AK-203 துப்பாக்கிகளை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?

அ) ரஷ்யா ☑



ஆ) பிரான்ஸ்

இ) இஸ்ரேல்

ஈ) அமெரிக்கா

✓ 6,01,427 ஏகே-203 அசால்டட் ரைபில்கள் கொள்முதல் செய்வதற்கான உடன்பாடு கையெழுத்தானது. பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் இந்தியா-ரஷ்யா இடையே கூட்டு முயற்சி பாதுகாப்பு தொழில்துறை நிறுவனங்கள் இதில் கையெழுத்திட்டுள்ளன. இந்நிறுவனங்களில் முறையே 50.5% மற்றும் 49.5% பங்குகள் உள்ளன. இந்த ரைபில்கள் உத்தர பிரதேசத்தின் கோர்வாவில் உள்ள IRRPL தொழிற்சாலையில் தயாரிக்கப்படவுள்ளன.

8.சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, 2009 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் மின்சாரம் தாக்கி யானைகள் அதிக அளவில் இறந்த மாநிலம் எது?

அ) ஒடிஸா ☑



ஆ) மகாராஷ்டிரா

இ) மேற்கு வங்காளம்

ஈ) குஜராத்

✓ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் அளித்த தரவுகளின்படி, 2009-2019 வரை நாடு முழுவதும் மின்சாரம் தாக்கி 600 யானைகள் இறந்துள்ளன. இதில் ஒடிஸாவில் 117, கர்நாடகாவில் 116, அஸ்ஸாமில் 105 யானைகள் உயிரிழந்துள்ளன.

✓ அருணாச்சல பிரதேசம், திரிபுரா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் மட்டும் மின்சாரம் தாக்கி எந்த யானையும் இறக்கவில்லை.

---

9. 'சக்தி குற்றவியல் சட்ட மசோதாவுடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ) பீகார்



ஆ) குஜராத்

இ) மகாராஷ்டிரா ☑

ஈ) உத்தர பிரதேசம்

✓ மகாராஷ்டிர மாநில அரசு, சக்தி மசோதாவில் திருத்தம் செய்வதற்காக, கூட்டுத் தேர்வுக் குழுவின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை தாக்கல் செய்தது. மகாராஷ்டிர அரசாங்கத்தின் சக்தி குற்றவியல் சட்டங்கள் (மகாராஷ்டிர திருத்தம்) மசோதா-2020, பாலியல் வன்புணர்வு, அமில வீச்சு போன்ற குற்றங்களுக்கான தண்டனையை அதிகரிக்க முன்மொழிகிறது.

---

10. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'Paxlovid' என்பது எந்த நோய்க்கு எதிரான முதல் அங்கீகரிக்கப்பட்ட மாத்திரை?

அ) COVID-19 ☑



ஆ) நிமோகாக்கல் நோய்

இ) இருதய நோய்

ஈ) எய்ட்ஸ்

✓ COVID-19'க்கு எதிரான முதல் மாத்திரையை அமெரிக்க சுகாதார கட்டுப்பாட்டாளர்கள் அங்கீகரித்துள்ளனர்.

✓ 'பாக்ஸ்லோவிட்' எனப் பெயரிடப்பட்ட இது உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஃபைசர் மருந்து. பாசிட்டிவ் COVID உடன் வீட்டிலிருக்கும் பெரியவர்கள் மற்றும் 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சிறார்களுக்கு இந்த மருந்து அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. அனைத்து கிரிக்கெட்டில் இருந்தும் ஹர்பஜன் சிங் ஓய்வு: முடிவுக்கு வந்த 23 ஆண்டு கால ஆடுகள வாழ்க்கை

இந்திய அணியின் சுழற்பந்துவீச்சாளரும், பாஜி என்று அழைக்கப்படுவரான ஹர்பஜன் சிங் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக இன்று ட்விட்டரில் அறிவித்தார். 1998-ம் ஆண்டு இந்திய அணிக்குள் அறிமுகமான ஹர்பஜன் சிங் ஏறக்குறைய 23 ஆண்டுகள் இந்திய கிரிக்கெட்டோடு இணைபிரியாமல் பயணித்தார். அவரின் இந்த நீண்ட பயணம் இன்றுடன் முடிவுக்கு வந்தது.

ஹர்பஜன் சிங் கடந்த 1998-ம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பெங்களூரு டெஸ்டில் இந்திய அணியில் தனது 17 வயதில் அறிமுகமாகினார். ஒருநாள் போட்டியில் அதே ஆண்டில் ஏப்ரல் மாதம் ஷார்ஜாவில் நடந்த போட்டியில் நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் ஹர்பஜன் சிங் அறிமுகமாகினார். டி20 போட்டியில் 2006ம் ஆண்டு டிசம்பர் 1ம் தேதி ஜோகன்னஸ்பர்க் நகரில் தென் ஆப்பிரி'க்காவுக்கு எதிரான டி20 தொடரில் முதல்முறையாக ஹர்பஜன் அறிமுகமாகினார்.

டெஸ்ட் போட்டிகளில் 100 போட்டிகளுக்கு மேல் விளையாடிய 4-வது இந்திய வீரர் என்ற பெயரெடுத்த ஹர்பஜன் சிங் 103 போட்டிகளில் 417 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 236 ஒருநாள் போட்டிகளில் ஆடிய பாஜி 269 விக்கெட்டுகளையும், 28 டி20 போட்டிகளில் ஆடி 25 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். டெஸ்ட் போட்டியில் 2,224 ரன்களையும் அடித்துள்ளார்; இதில் 2 சதங்கள், 9 அரைசதங்கள் அடங்கும். ஒருநாள் போட்டியில் 1237 ரன்களை ஹர்பஜன் சேர்த்துள்ளார்.

பஞ்சாப் ரஞ்சிக் கோப்பை அணிக்கு கேப்டனாக இருந்துள்ள ஹர்பஜன் சிங், சாம்பியன்ஸ்லீக் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கும் கேப்டனாக இருந்துள்ளார். இவரின் தலைமையில்தான் 2011 சாம்பியன்ஸ் லீக்கை மும்பை இந்தியன்ஸ் அணி வென்றது. ஐபிஎல் தொடரில் மும்பை இந்தியன்ஸ்,

கொல்கத்தா நைட் ரைடர்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் ஆகிய அணிகளில் ஹர்பஜன் விளையாடியுள்ளார்.

கடந்த 1998-ம் ஆண்டு இந்திய அணியில் அறிமுகமாகினாலும் 2001-ம்ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்தான் ஹர்பஜன் சிங்கை நிமிர்ந்து பார்க்க வைத்தது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டிகளில் 32 விக்கெட்டுகளை ஹர்பஜன் சிங் கைப்பற்றினார்.

2001-ம் ஆண்டு கும்ப்ளே காயத்தால் அவதிப்பட்டபோது, இந்திய அணியில் இருந்த சிறந்த சுழற்பந்துவீச்சாளராக ஹர்பஜன் இருந்தார். டெஸ்ட் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்திய முதல் இந்திய சுழற்பந்துவீச்சாளர் என்ற பெருமையையும் ஹர்பஜன் பெற்றார். 2001-ம் ஆண்டு ஹர்பஜன் சிங்கின் ஆட்டத்தைப் பார்த்த பஞ்சாப் அரசு இவருக்கு காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவி வழங்கியது.

2007-ம் ஆண்டு தோனி தலைமையில் இந்திய அணி டி20 உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியிலும், 2011-ம் ஆண்டு ஒருநாள் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியிலும் ஹர்பஜன் சிங் இடம் பெற்றிருந்தார்.

ஹர்பஜன் சிங் என்றாலே சர்ச்சை என்பதையும் மறக்க முடியாது. 2008-ம் ஆண்டில் ஆஸ்திரேலிய வீரர் சைமண்ட்ஸுடன் மோதலில் இனவெறியுடன் பேசியதாக குற்றம்சாட்டப்பட்ட நிலையில், தடையிலிருந்து ஹர்பஜன் சிங் தப்பித்தார். அதன்பின் ஐபிஎல் தொடரில் ஸ்ரீசாந்தை கன்னத்தில் அறை ஐபிஎல் தொடர்முழுவதும் விளையாட ஹர்பஜன் சிங்கிற்கு தடை விதிக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

---

2. புதிய வகை ரோஜா பூவுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் பெயர்

இந்தியாவின் முன்னணி தோட்டக்கலை நிபுணரான கொடைக்கானலைச் சேர்ந்த எம்.எஸ்.வீரராகவன், புதிய வகை ரோஜா ஒன்றைவளர்த்துள்ளார். இதற்கு, வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனை கவுரவிக்கும் வகையில் அவரது பெயரை சூட்டியுள்ளார்.

இந்த வகை ரோஜாவானது, மெஜந்தா ஊதா நிறத்தை கொண்டுள்ளது. மேலும் மிகுந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்டதாகும். கரும் பச்சை இலைகளுடன் காணப்படும் இதன் செடி, 4 முதல் 5 அடி வரை வளரக்கூடிதாகும்.

உணவுப்பயிர் சாகுபடியில் புதிய அணுகுமுறைகளை கொண்டுவருவதில் பேராசிரியர் சுவாமிநாதன் முன்னோடியாக திகழ்ந்தார். இது உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்து இந்தியாவை தன்னிறைவு அடையச் செய்தது. இந்திய பசுமைப் புரட்சியின் தந்தை என்றும் அவர் அழைக்கப்படுகிறார். இந்நிலையில் பெங்களூருவில் உள்ள நர்சரி ஒன்றில் மற்றொருவகை ரோஜாவை கே.எஸ்.ஜி.சோன் என்பவர் உருவாக்கியுள்ளார். பளபளக்கும் இளஞ்சிவப்பு நிறத்திலான இந்த ரோஜாவுக்கு 'மான்கொம்பு ரோஜா' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த 2 ரோஜாக்களையும் டெல்லியைச் சேர்ந்த மலர் வளர்ப்பு விஞ்ஞானியும் மத்திய அரசின் தோட்டக்கலை துறை முன்னாள் இயக்குநருமான நரேந்திர தத்லானி, சென்னையில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் இல்லத்தில் அவரை சந்தித்து வழங்கினார்.

---

3. மு.க.ஸ்டாலினுக்கு அம்பேத்கர் சுடர் விருது

விசிகவின் அம்பேத்கர் சுடர் விருது முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அம்பேத்கர் சுடர் விருதும், மதிமுக பொதுச்செயலாளர் வைகோவுக்கு பெரியார் விருதும் வழங்கப்பட்டது. இவ்விருதினை விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் வழங்கினார்.

மேலும் பேச்சாளர் நெல்லை கண்ணனுக்கு காமராஜர் விருதும், பி.வி.கரியமாலுக்கு அயோத்திதாசர் ஆதவன் விருதும் அல்ஹாஜ் மு. பஷீர் அகமதுக்கு காயிதேமில்லத் பிறை விருதும், க.இராமசாமிக்கு செம்மொழி ஞாயிறு விருதும் வழங்கப்பட்டுள்ளது.

---

4. இணைய வழக்குகளில் விரைவாக துப்புதுலக்க வசதி; தமிழகத்தில் முதல்முறையாக சென்னையில் 'சைபர் தடய ஆய்வகம்' – அடுத்த மாதம் பயன்பாட்டுக்கு வருகிறது

இணைய குற்ற வழக்குகளில் விரைவாகவும், துல்லியமாகவும் துப்புதுலக்கும் வகையில் தமிழகத்தில் முதல்முறையாக சென்னையில் அதிநவீன சைபர் தடய ஆய்வகம் உருவாக்கப்பட்டுள்ளது. இது அடுத்த மாதம் பயன்பாட்டுக்கு வர உள்ளது.

தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மோசடி செய்தல், தகவல் தொழில்நுட்ப சேவைகளை முறைகேடாகப் பயன்படுத்தல், இணையம் மூலம் ஏமாற்றுதல், கணினிமற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களிலிருந்து தகவல்களைத் திருடுதல், மற்றவர்களின்தகவல்களையோ, புகைப்படங்களையோ தவறாகப் பயன்படுத்துவது, மின்னஞ்சல் மற்றும் இன்டர்நெட் கால் மூலம் மிரட்டுவது, இணையவழி பொருளாதாரக் குற்றங்களில் ஈடுபடுவது உள்ளிட்ட சைபர் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

மேலும், வாட்ஸ்அப், பேஸ்புக், ட்விட்டர் உள்ளிட்ட சமூக வலைதளதங்களில் அவதூறு பரப்பும் செயல்களும் அதிகமாகி விட்டன.வங்கியிலிருந்து மேலாளர் பேசுவதாகக்கூறி, விவரங்களைப் பெற்று, வாடிக்கையாளர்களின் பணத்தை திருடுதல், பேஸ்புக் மூலம் பணம் மோசடி செய்தல்,வெளிநாட்டில் இருந்து பேசுவதாகக் கூறி, திருமணம் செய்து கொள்வதாக பெண்களுடன் நெருங்கிப் பழகி, அவர்களது புகைப்படங்களை சமூக வலைதளங்களில் வெளியிடுவதாக மிரட்டி பணம் பறிப்பது உள்ளிட்ட குற்றங்களும் அதிகரித்துள்ளன. இது தொடர்பாக காவல் நிலையங்களில் தினமும் புகார்கள் அளிக்கப்படுகின்றன.

2020-ல் இந்தியாவில் சைபர்க்ரைம் தொடர்பாக 50 ஆயிரம்வழக்குகள் பதிவு செய்யப்பட்டுஉள்ளன. முந்தைய ஆண்டைக் காட்டிலும் இது 11.8 சதவீதம் அதிகமாகும்.

ஆன்லைன் மூலம் பெறப்படும் சைபர் க்ரைம் தொடர்பான புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கவும், சமூக வலைதளக் குற்றங்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை

எடுக்கவும் வசதியாக, சென்னை போலீஸாருக்கு கணினித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

எனினும், சைபர் குற்ற வழக்குகளில் துப்பு துலக்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், சைபர் குற்றங்கள் தொடர்பான வழக்கில் விரைந்து புலன்விசாரணை மேற்கொள்ளவும், சந்தேகமின்றி துல்லியமாக குற்றம்புரிந்த நபர்களை அடையாளம் காணும் வகையிலும் சென்னையில் 'சைபர் தடயங்கள் ஆய்வகம்' அமைக்கப்பட்டுள்ளது.

வேப்பேரியில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்தில் உள்ள இந்த ஆய்வகம் அடுத்த மாதம் பயன்பாட்டுக்கு வர உள்ளதாக காவல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்வகத்தில் தடய அறிவியல் துறையினர், காவல் துறையினர் மட்டுமின்றி, தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் தனியார் துறையைச் சேர்ந்த இருவரும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

5. பூஸ்டர் டோஸ், சிறார்களுக்கான தடுப்பூசி: வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு

சிறார்களுக்கான தடுப்பூசி மற்றும் பூஸ்டர் டோஸ் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய சுகாதாரத்துறை திங்கள்கிழமை வெளியிட்டுள்ளது.

நாடு முழுவதும் ஒமைக்ரான் வேகமாக பரவி வரும் நிலையில், முன்களப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இணை நோயால் பாதிக்கப்பட்டுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸ் தடுப்பூசியும், 15 முதல் 18 வரையிலான குழந்தைகளுக்கு தடுப்பூசியும் ஜனவரி 3ஆம் தேதி முதல் செலுத்தப்படும் என மத்திய அரசு அறிவித்திருந்தது.

இந்நிலையில் மத்திய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறையில் கூறியிருப்பது:

முன்களம், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இணை நோயுள்ள 60 வயதுக்கு மேற்பட்டோர்:

முன்பே பதிவு செய்யப்பட்டுள்ள கோவின் கணக்கு மூலம் தான் பூஸ்டர் டோஸ் செலுத்தப்படும்.

இரண்டாம் தவணை செலுத்தப்பட்டு 39 வாரங்கள் அல்லது 9 மாதங்களை கடந்தவர்களுக்கு மட்டுமே பூஸ்டர் டோஸ் போடப்படும்.

முன்பு செலுத்தப்பட்ட தடுப்பூசியே பூஸ்டர் டோஸாக ஜனவரி 10ஆம் தேதி முதல் செலுத்தப்படும்.

பூஸ்டர் டோஸ் செலுத்தப்பட்டவுடன் கோவின் சான்றிதழில் மாற்றம் செய்யப்படும்.

ஆன்லைன் மற்றும் தடுப்பூசி மையங்களில் நேரடியாக சென்று பதிவு செய்து பூஸ்டர் டோஸ் செலுத்திக் கொள்ளலாம்.

15 – 18 வரையிலான சிறார்:

2007 அல்லது அதற்கு முன்பு பிறந்தவர்களுக்கு மட்டுமே கரோனா தடுப்பூசி செலுத்தப்படும்.

ஜனவரி 1 முதல் கோவின் இணையதளத்தில் முன்பதிவு செய்யப்படும்.

ஜனவரி 3 முதல் சிறார்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும்.

சிறார்களுக்கு கோவேக்ஸின் தடுப்பூசி மட்டுமே போடப்படும்.

ஆன்லைன் மற்றும் தடுப்பூசி மையங்களில் நேரடியாக சென்று பதிவு செய்து தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம்.

இந்த வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்தும் ஜனவரி 3, 2022 முதல் அமலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

6. ஏ.ஓ. ஹியூம்: இந்தியர்களின் உரிமைக் குரலை எதிரொலித்த ஆங்கிலேயர்

பம்பாய் மாகாணத்தில் பம்பாய் அசோசியேஷன், பூனா சர்வோஜனிக் சபா, வங்காளத்தில் இந்தியன் அசோசியேஷன், சென்னையில் மெட்ராஸ் மகாஜன சபா என இந்தியா முழுக்க தனித் தனியாக இந்தியர்களுக்கான உரிமைக் குழுக்கள் இயங்கிவந்த வேளை அது. இந்த அமைப்புகளின் சக்தியை ஒன்றாகத் திரட்டுவதன் மூலம்தான் இந்திய மக்களின் உரிமைக்கான குரல் வலுப்பெறும் என அனைவரையும் 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்று ஒரே குடைக்குள் திரட்டியவர் ஆலன் ஆக்டேவியன் ஹியூம்.

1829-ல் ஸ்காட்லாந்தில் பிறந்து, இந்தியன் சிவில் சர்வீஸ் பணிக்காக இந்தியா வந்தவர் ஹியூம். 1885-ல், மும்பை நகரின் கோவாலியா குளக்கரையில் உள்ள பள்ளிக்கூடத்தில் டிசம்பர் 28-ல் அவரால் இந்திய தேசிய காங்கிரஸ் தொடங்கப்பட்டது. உலக அளவில் பழமையானதும், இன்று வரை நிலைத்திருக்கக்கூடியதுமான ஒருசில அமைப்புகளுள் இந்திய தேசிய காங்கிரஸும் முக்கியமான ஒன்று. ஆங்கிலேயரின் நடவடிக்கைகளை எதிர்த்துப் புரட்சிகள் எழுந்துவிடாமல் தணிக்கும் 'பாதுகாப்பு வால்வு' போல அமைந்திருப்பதாகத்தான் காங்கிரஸ் அமைப்பின் தொடக்கத்தை இந்தியர்கள் சந்தேகத்துடன் பார்த்தார்கள். ஆங்கில ஆட்சியாளர்களும் ஆரம்பத்தில் அப்படியான மனநிலையில்தான் காங்கிரஸை வரவேற்றனர். ஆனால், அந்த அமைப்புதான் பின்னாளில் ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பெரும் தலைவலியாகி, இந்திய விடுதலைக்கு வித்திட்டு இன்று வரை 146 வருடங்களாக நிலைத்திருக்கிறது.

மாவட்ட அதிகாரியாக இருந்தபோதே, மக்கள் முன்னேற்றத்துக்குக் கல்விதான் அடிப்படைத் தேவை என்பதால், தொடக்கக் கல்வி கிடைப்பதில் பல முன்னெடுப்புகளை எடுத்தார் ஹியூம். ஆங்கிலம் தாண்டி தாய்மொழிக் கல்வியை முன்வைத்தார். இந்திய மொழிகளில் சர்வதேசத் தகவல்களை மேம்படுத்த 'லோகமித்ரா' என்ற இந்தி பத்திரிகையையும், 'முகிப்-இ-ரியா' (Muhib-i-riaya) என்ற உருதுப் பத்திரிகையையும் தொடங்கினார். மேல்படிப்புக்கு உதவித்தொகை பெறும் திட்டத்தைக் கொண்டுவந்தார். அப்போது, வைசிராயாக இருந்த மாயோ, ஹியூமின் மக்கள் நல முன்னெடுப்புகளுக்கு உறுதுணையாக இருந்தார்.

செயலாளராக ஹியூம் பதவி உயர்வு பெற்றவுடன், இந்திய விவசாயிகள் முன்னேற்றத்தில் அதிக ஈடுபாடு கொண்டார். விவசாயிகள், தங்கள் நிலத்தை அடமானம் வைத்து, விவசாயம் செய்து அதிகப்படியான வட்டியைக் கட்ட முடியாமல் தவித்த சூழலில், பெரும் வியாபாரிகள் மட்டுமே பயன்பெறும் வகையில் இருந்த வங்கிகளை அரசு வங்கிகளாக மாற்றி, விவசாயிகளுக்கு உதவத் திட்டம் வகுத்தார். அதற்கு எதிர்ப்புகள் கிளம்பவே கூட்டுறவு வங்கித் திட்டத்தை விவசாயிகளுக்காகக் கொண்டுவந்தார்.

இந்திய விவசாய முன்னேற்றத்தில், பருவமழையும், தட்பவெப்பச் சூழலும் முக்கியப் பங்காற்றுகிறது என்று உணர்ந்த ஹியூம், பருவநிலை சார்ந்த தரவுகளை முறையாகத் தயார்செய்து, பருவநிலையை முன்னதாகவே கணித்து, அதற்கேற்ப விவசாயம் செய்ய வேண்டும் என்ற முடிவை முன்வைத்தார். இன்று வரை செயல்பட்டு வரும் 'இந்திய வானிலைத் துறை' (Indian Meteorological Department) உருவாக்கத்துக்கு 1875-ல் கையெழுத்திட்டவர் ஹியூம். மாதிரிப் பண்ணையை மாவட்டம்தோறும் அமைக்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.

மாயோவுக்கு அடுத்து வந்த வைசிராய் நார்த் புரூக், அதற்கடுத்து வந்த லிட்டன் இருவருக்குமே ஹியூமின் திட்டங்களின் மீது கடும் அதிருப்தி இருந்தது. வைசிராய்கள் மீது ஏற்படும் கருத்து வேறுபாட்டையும் ஹியூம் வெளிப்படையாக முன்வைக்கத் தயங்கவில்லை. லிட்டனின் பொருளாதார நிர்வாகத்தில் உள்ள குறையை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டிய ஹியூமைப் பதவிக் குறைப்பு செய்து, செயலாளர் பதவியிலிருந்து நீக்கினார் லிட்டன். தொடர்ந்து, 1882-ல் சிவில் சர்வீஸ் பணியை ராஜினாமா செய்த ஹியூம், இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்புக்கான கருத்துருவை வளர்த்தெடுத்தார்.

பெண்களுக்கான திருமண வயதை 10-லிருந்து 12 ஆக உயர்த்த சட்டம் கொண்டுவருவதை ஹியூம் ஆதரித்தபோது, அவர் தொடங்கிய காங்கிரஸ் அமைப்புக்குள்ளேயே பலர் அதை எதிர்த்தனர். அதே காலகட்டத்தில் பெருநிலவுடைமையாளர்கள் காங்கிரஸ் அமைப்பில் இருந்துகொண்டே, ஜனநாயகத்தை ஆதரிக்காத நிலையில் இருந்தனர்.

ஒரு கட்டத்தில், ஹியூம் காங்கிரஸ் மீது நம்பிக்கையிழந்து லண்டனுக்கே திரும்பிவிட்டார். எனினும், இந்தியர்கள் மீது அவர் கொண்ட பற்று போகவில்லை. 'இந்தியன் டெலிகிராப் யூனியன்' தொடங்கி ஆங்கிலேயர்களால் முடக்கப்படும் இந்திய மக்களின் செய்திகளை இங்கிலாந்து, ஸ்காட்லாந்து நாளிதழ்களில் வெளிக்கொணர வழிசெய்தார். சமூகச் சீர்திருத்தம் தொடர்பில் முரண்பாடுகளைக் கொண்டிருந்த காங்கிரஸ், பின்னாளில் தன்னைத் தானே வளர்த்துக்கொண்டது. அனைத்து மக்களுக்குமான சுதந்திரத்தை முன்வைக்கும் வலுவான அமைப்பாக உருவெடுத்தது.

டிசம்பர் 28: இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவன தினம்

---

7. கான்பூர் மாநாடு: விடுதலைப் போரின் புரட்சிமுகம்

இந்தியாவில் செயல்படும் பழமையான அரசியல் கட்சி என்றால் 1885-ல் தொடங்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ். அதற்கடுத்த நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சி கொண்ட அரசியல் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. அது தனது 97-வது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு இந்திய விடுதலைப் போராளிகள் பலர் இந்திய விடுதலைக்கான, உறுதியான சாத்தியங்கள் குறித்துக் கனவு காண ஆரம்பித்தனர்.

இதன் வழியே நடைபெற்ற புரட்சிகரமான பல எழுச்சிகளுக்குப் பிறகு, இந்தியாவின் பல இடங்களில் கம்யூனிஸ்ட் குழுக்கள் செயல்பட ஆரம்பித்தன. அவற்றைத் தடுக்கும் நோக்கத்துடன் 1924-ல் எஸ்.ஏ.டாங்கே, முசாபர் அகமது, நளினி குப்தா, உஸ்மானி ஆகிய நான்கு பேருக்கும் நான்காண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. கான்பூர் சதி வழக்குப் போடப்பட்டு, கம்யூனிஸ்ட்டுகளை ஒழித்துவிட்டோம் என்று வெற்றிக் களிப்பில் மிதந்தது ஆங்கிலேய அரசு. பிறக்காத கம்யூனிஸ்ட் கட்சியின் மீது தடையும் விதித்திருந்தது. இந்தத் தடையையும் மீறித்தான் அந்தக் கட்சி பிறந்தது.

புகழ்பெற்ற கவிஞரும், விடுதலைப் போராட்ட வீரருமான ஹஸ்ரத் மொஹானி வரவேற்புக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்க, தென்னகத்தின் முதல் கம்யூனிஸ்ட் மா.சிங்காரவேலர் தலைமை உரையுடன் அமைப்பின் முதல் மாநாடு தலைமறைவாக கான்பூர் நகரில் நடந்தேறியது. பலர் சதி வழக்குகளால் சிறைச்சாலையில் வாடிவந்த நிலையில், போர்க்குணமிக்க புரட்சியாளர்களும், தேசபக்தர்களும் இணைந்து உருவாக்கியதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. ஈடு இணையற்ற தியாகங்களால் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போராடிய தேசபக்தர்கள் புதிய வழியைக் காண இக்கட்சியில் சங்கமித்தனர்.

புகழ்பெற்ற கதார் கட்சியை (கதார் என்றால் புரட்சி என்று பொருள்) சார்ந்த லாலா ஹர்தயால், சர்தார் சிங், ராஷ்பிகாரி போஸ், சோகன்சிங் பாக்னா ஆகியோர் இந்தக் கட்சியில் இணைந்தனர். இந்தியாவை ஆயுதப் போராட்டம் மூலம் கைப்பற்றுவதற்காக வெளிநாட்டிலிருந்து காமகட்டமாரு கப்பல் மூலம் 1915-ல் பிப்ரவரி 15 அன்று வருகைதந்த போராளிகள் பலர் கொல்லப்பட்டனர், அவர்களில் எஞ்சியவர்களும் இந்தக் கட்சியில் இணைந்தனர்.

1922-லிருந்து 1924 வரை இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் நுழைந்த முஹாஜிர்கள் எனப்படும் இஸ்லாமியப் புரட்சியாளர்கள் மீது நான்கு பெஷாவர் சதி வழக்குகள் போடப்பட்டன. இதிலிருந்து பலர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். நவஜவான் சோஷலிஸ்ட் படையை நடத்திய பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்ட பிறகு அவருடைய தோழர்கள் அஜய்கோஷ், ஷிவ்வர்மா, சோஹன் சிங் கோஷ் முதலானோர் இக்கட்சியில் இணைந்தனர். சிட்டகாங் ஆயுதக் கிடங்கு தாக்குதலால் பிரபலமான சூரியா சென்னின் சீடர்களும், புரட்சிப் போராளிகளுமான

கணேஷ் கோஷ் மற்றும் கல்பனா தத் ஆகியோரும் இக்கட்சியில் இணைந்தனர்.

ஒத்துழையாமை இயக்கத்துக்கு காந்தி அறைகூவல் விடுத்தபோது, சத்தியாகிரகிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்த, கார்வால் ஆயுதப்படை சார்ஜன்ட் சந்திரசிங் கார்வாலி சிறைத் தண்டனைக்குப் பிறகு வெளியே வந்தவுடன் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். காலனியாதிக்கத்துக்கு எதிராக வெகுண்டெழுந்து போராடிய மணிப்பூர் ஜன நேத்தா (மக்கள் தலைவர்) ராபோர்ட் சிங் சிறை வாசத்தின்போதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்.

விடுதலைப் போராட்டப் புரட்சியின் பல்கலைக்கழகங்களாக விளங்கிய அந்தமான், தியோலி, பக்ஸா, ஹிஜ்லி மற்றும் பிற சிறைகளிலிருந்து விடுதலை அடைந்தவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். இவர்கள் மீது வாசிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் பிரிட்டிஷ் இந்திய இறையாண்மையைப் பேரரசிடமிருந்து பறித்துக்கொள்ள இந்தியாவிலிருந்து தங்களுக்குத் தெரிந்த, தெரியாத ஒவ்வொருவருடனும் சேர்ந்து சதி செய்ததாக ஆங்கிலேயர்களின் காவல் துறை குற்றம் சுமத்தியது.

கல்வி கற்க வெளிநாட்டுக்குச் சென்ற எம்.என்.ராய், அபானி முகர்ஜி, வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, டாக்டர் பூபேந்திரநாத் தத்தா (சுவாமி விவேகானந்தரின் தம்பி), எம்.பி.டி.ஆச்சார்யா எனும் திருமலாச்சாரி (சோவியத் நாட்டில் லெனினை நேரில் சந்தித்தவர்களில் இவரும் ஒருவர்) ஆகியோருடன் மேலும் சிலர் மாஸ்கோவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை 1920-ல் நிறுவினர். ஆனால், ஒன்றுபட்ட கட்சி வெளிநாட்டில் கட்சி உருவானதை ஒருமனதாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுடன், அதை ஒரு தொடக்க கால முயற்சியாக மட்டுமே எடுத்துக்கொண்டது. 1925 டிசம்பர் 26-தான் கட்சி அமைக்கப்பட்ட தினமாக அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

டிசம்பர் 26: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிறுவன தினம்

---

8. நல்லாட்சி பட்டியல்: நாட்டில் குஜராத் முதலிடம்; நீதி, பொதுப் பாதுகாப்பில் தமிழகம் முதலிடம்

மத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை தயாரித்த 2021-ம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டில், நீதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை தயாரித்த 2021-ம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டை, நல்லாட்சி தினத்தையொட்டி புதுடெல்லி விஞ்ஞான் பவனில் மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவு அமைச்சர் அமித் ஷா இன்று (சனிக்கிழமை) வெளியிட்டார்.

நல்லாட்சி குறியீடு பத்து துறைகள் மற்றும் 58 குறிகாட்டிகளை உள்ளடக்கியது ஆகும். நல்லாட்சி குறியீடு 10 துறைகள் மற்றும் 58 குறிகாட்டிகளை உள்ளடக்கியது. அவை: 1)விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள், 2) வணிகம் & தொழில்கள், 3) மனித வள மேம்பாடு, 4) பொது சுகாதாரம், 5.) பொது உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாடுகள், 6) பொருளாதார நிர்வாகம், 7) சமூக நலன் & மேம்பாடு, 8) நீதித்துறை மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு, 9) சுற்றுச்சூழல் மற்றும் 10) குடிமக்களை மையப்படுத்திய ஆளுகை. இதில் நீதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவில் ஏ குழுவில் உள்ள மாநிலங்களில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

மற்ற பிரிவுகளின் முதலிடம் பிடித்த மாநிலங்கள்: விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் – ஆந்திரப் பிரதேசம்; வணிகம் & தொழில்கள் – தெலங்கானா; மனித வள மேம்பாடு – பஞ்சாப்; பொது சுகாதாரம் – கேரளா; பொது உள்கட்டமைப்பு மற்றும் பயன்பாடுகள் – கோவா; பொருளாதார நிர்வாகம் – குஜராத்; சமூக நலன் & மேம்பாடு – தெலங்கானா; சுற்றுச்சூழல் – கேரளா; குடிமக்களை மையப்படுத்திய ஆளுகை – ஹரியானா.

---

9. அறிவியல் அதிசயங்களை அறிய உதவும் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா ஜேம்ஸ் வெப் என்ற விண்வெளி தொலைநோக்கியை நேற்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

பூமியிலிருந்து விண்ணில் உள்ள பல நட்சத்திரங்களை அறிவதற்காக விண்வெளியில் தொலைநோக்கியை நிலைநிறுத்த ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டனர். அதன்படி ஹப்பிள் என்ற தொலைநோக்கி பூமிக்கு வெளியே விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது. அந்த விண்வெளி தொலைநோக்கி மனிதனுக்கு இதுவரை தெரிந்திடாத பல அரிய விண்வெளி தகவல்களை தெரிந்துகொள்ள வழி வகுத்தது.

அதன் அடிப்படையில் நாசா ஆராய்ச்சியாளர்கள் ஜேம்ஸ் வெப் என்ற விண்வெளி தொலைநோக்கியை விண்ணில் செலுத்த திட்டமிட்டனர். 1989-ல் தொடங்கப்பட்ட, ரூ.75 ஆயிரம் கோடி மதிப்பிலான இந்த திட்டம், தற்போதுதான் நிறைவேறியுள்ளது.

இந்நிலையில், இந்த விண்வெளி தொலைநோக்கி அதிநவீன ராக்கெட் மூலம், பிரெஞ்சு கயானாவில் உள்ள ராக்கெட் ஏவுதளத்தில் இருந்து நேற்று விண்ணில் செலுத்தப்பட்டது. பூமியிலிருந்து புறப்பட்ட சில நிமிடங்களுக்குள் இது சுமார் 9,30,000 கிலோமீட்டர் தொலைவில் நிலைநிறுத்தப்பட்டதாக நாசா அறிவித்தது. ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி விண்ணில் ஏவப்படும் காட்சியை ட்விட்டரில் வெளியிட்டுள்ளது நாசா.

1960-களில் நாசாவின் பல விண்வெளி செயல்பாடுகளுக்கு காரணமான முக்கிய விஞ்ஞானியான ஜேம்ஸ் இ வெப்பின் நினைவாக புதிய தொலைநோக்கிக்கு ஜேம்ஸ் வெப் என பெயரிடப்பட்டுள்ளது. தற்போது இந்த தொலைநோக்கி வெற்றிகரமாக விண்வெளியில் செலுத்தப்பட்டுள்ளதால் பிரபஞ்ச ரகசியங்கள், நெபுலாக்கள், நட்சத்திரங்கள் உருவாக்கம், பூமி உருவான விதம் உள்ளிட்ட அரிய தகவல்களை விஞ்ஞானிகளால் பெற முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

10. 'சம்யுக்த சமாஜ் மோர்ச்சா': பஞ்சாபில் 22 விவசாய அமைப்புகள் இணைந்து அரசியல் அணி தொடக்கம்

மத்திய அரசின் மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட பஞ்சாபின் 22 விவசாய அமைப்புகள் இணைந்து 'சம்யுக்த சமாஜ் மோர்ச்சா' என்ற பெயரில் புதிதாக அரசியல் அணியைத் தொடங்கியுள்ளன.

கடந்த ஆண்டு மத்திய அரசு நிறைவேற்றிய 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக தில்லி எல்லைகளில் 'சம்யுக்த சமாஜ் மோர்ச்சா' உழவர்கள் கூட்டமைப்பு போராட்டத்தில் ஈடுபட்டது. இந்தக் கூட்டமைப்பில் இடம்பெற்றிருந்த பஞ்சாபின் 22 விவசாய அமைப்புகள் இணைந்து 'சம்யுக்த சமாஜ் மோர்ச்சா' என்ற பெயரில் புதிய அரசியல் அணியைத் தொடங்கியுள்ளன.

இந்த அணியின் தலைவராக பாரதிய கிஸான் யூனியன் (ராஜேவால்) அமைப்பின் தலைவர் பல்பீர் சிங் ராஜேவால் பொறுப்பு வகிக்கவுள்ளார்.

---

11. இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருக்கு 'சிறந்த தென் ஆப்பிரிக்கர்' விருது

இந்திய வம்வசாவளியைச் சோ்ந்த இம்தியாஸ் சூலிமானுக்கு இந்த ஆண்டுக்கான 'சிறந்த தென் ஆப்பிரிக்கர்' விருது வழங்கப்பட்டுள்ளது.

தென் ஆப்பிரிக்காவைச்சேர்ந்தவர் மருத்துவர் இம்தியாஸ் சூலிமான். இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர், 'கிஃப்ட் ஆப் தி கிவர்ஸ்' என்ற தன்னார்வ அமைப்பைத் தொடங்கி நடத்தி வருகிறார். இந்த அமைப்பின் மூலம் நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட 44க்கும் மேற்பட்ட நாடுகள், போரால் பாதிக்கப்பட்ட நாடுகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய கிழக்கு, கிழக்கு ஐரோப்பா, ஆப்பிரிக்க நாடுகள் மட்டுமின்றி இந்தியா, பாகிஸ்தானிலும் இயற்கைப் பேரிடர்களின்போது அந்த அமைப்பு உதவி புரிந்துள்ளது.

இந்நிலையில் தென் ஆப்பிரிக்காவின் தினசரி இணையவழி நாளிதழான 'டெய்லி மேவ்ரிக்' இம்தியாஸ் சூலிமானுக்கு இந்த ஆண்டுக்கான 'சிறந்த தென் ஆப்பிரிக்கர்' விருது வழங்கி கௌரவித்துள்ளது.

தென் ஆப்பிரிக்காவில் குடிமக்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதும் இம்தியாஸுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

12. இந்திய இளம் எழுத்தாளர்களுக்கான போட்டி- 3 தமிழ் இளம் எழுத்தாளர்கள் தேர்வு

மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய புத்தக அறக்கட்டளை, விடுதலையின் அமிர்தப் பெருவிழாவின் ஒரு பகுதியாக, பிரதம மந்திரி இளைய எழுத்தாளர் வழிகாட்டுதல் திட்டத்தின்கீழ், 'இந்திய தேசிய இயக்கம்' என்னும் கருப்பொருளில் நடைபெற்ற அகில இந்திய போட்டியின் முடிவுகளை அறிவித்துள்ளது.

உதவித்தொகையுடன் கூடிய இந்த வழிகாட்டுதல் திட்டத்தின்படி, 30 வயதுக்கு குறைந்த 75 இளம் எழுத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அகில இந்திய போட்டி கடந்த ஜூன் 1-ம்தேதி முதல் ஜூலை 31 முடிய 'மைகவ்' இணைய தளத்தின் மூலம் நடைபெற்றது. நாடு முழுவதிலும் உள்ள எழுத்தாளர்களிடமிருந்தும், வெளி நாட்டு இந்தியர்களிடம் இருந்தும், 22 அலுவல் மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் சுமார் 16,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பல்வேறு குழுக்களைச் சேர்ந்த நிபுணர்கள் போட்டிக்கு வந்த நூல்களை ஆய்வு செய்தனர்.

தேர்வு செய்யப்பட்டுள்ள 75 எழுத்தாளர்களில், 38 பேர் ஆண்கள், 37பேர் பெண்கள்.

இரண்டு பேர் 15 வயதுக்கும் குறைவானவர்கள். 16 எழுத்தாளர்கள் 15-20 வயதுக்கு இடைப்பட்டவர்கள். 21-25 வரம்பில் 32 பேரும், 26-30 வயது வரம்பில் 25 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வு செய்யப்பட்ட எழுத்தாளர்கள் ஆறு மாத கால வழிகாட்டுதல் பயிற்சி பெறுவார்கள். தேசியப் புத்தக அறக்கட்டளைமூலம் பிரபல எழுத்தாளர்கள் மற்றும் ஆசிரியர் குழுவின் வழிகாட்டுதலில், ஆராய்ச்சி மற்றும் பிரதித் திருத்த ஆதரவு வழங்கப்படும். எழுத்தாளர்களின் நூல்கள் பின்னர் மற்ற இந்திய மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படும்.

தேர்வு செய்யப்பட்டவர்கள் மாதம்தோறும் ₹50,000 வீதம் ஆறு மாதங்களுக்கு உதவித்தொகை பெறுவார்கள். மேலும் சிறந்த, வெற்றிகரமான பிரசுரங்களுக்கு 10 சதவீத ராயல்டி தொகையும் வழங்கப்படும். தமிழில் நூல்களை எழுதிய ஜே யு சுகானா, ஜி சரவணன், கே கீதா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

---

13. நெல்சன் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறை சாவி ஏலம் விட முடிவு

தென் ஆப்பிரிக்க நாட்டின் முதல் அதிபரான நெல்சன் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறை அறையின் சாவியை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிற வெறிக்கு எதிராகப் போராடியவரும், அந்நாட்டின் முதல் அதிபருமான நெல்சன் மண்டேலா வாழ்வில் 27 ஆண்டுகளை சிறையிலேயே செலவிட்டார். ராபன் தீவுகளில் உள்ள சிறைச்சாலையில் நெல்சன் மண்டேலா 18 ஆண்டுகள் அடைக்கப்பட்டிருந்தார்.

அங்கு சிறைக்காவலராக இருந்தவரும், மண்டேலாவின் நெருங்கிய நண்பருமான கிறிஸ்டோ பிராண்ட், நெலசன் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறை அறையின் சாவியை ஏலம் விட முடிவு செய்துள்ளார். இந்நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்த தென்ஆப்பிரிக்க அரசு, "இந்த சாவி தென்னாப்பிரிக்க மக்களுக்குச் சொந்தமானது" என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

14. 2004 டிசம்பர்.26 – தமிழகத்தில் சுனாமி தாக்கிய நாள்

---

15. நிறவெறிக்கு எதிராக போராடிய பிஷப் டெஸ்மண்ட் மறைவு: பிரதமர் மோடி இரங்கல்

எமெரிட்டஸ் ஆர்ச்பிஷப் டெஸ்மண்ட் டுட்டு மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கலைத்

தெரிவித்துக் கொண்டுள்ளார். நிறவெறிக்கு எதிராகப் போராடிய தென்னாப்பிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் டுட்டு இன்று காலமானார். அவருக்கு வயது 90. நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பின அதிபராக பதவியேற்றபோது வானவில் தேசம் என்ற சொல்லாடலை உருவாக்கி பிரபலப்படுத்தியவர் டுட்டு.

வெள்ளையர்களின் ஆட்சியை எதிர்த்து அமைதி வழியில் போராடியதால், 1984 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு டெஸ்மண்ட் டுட்டுவுக்கு வழங்கப்பட்டது.

---

16. விஜய் ஹஸாரே: ஹிமாசல் சாம்பியன்: 'விஜேடி' முறையில் வென்றது

விஜய் ஹஸாரே கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஹிமாசல பிரதேசம் 11 ரன்கள் வித்தியாசத்தில் 'விஜேடி' முறையில் தமிழகத்தை வீழ்த்தி முதல் முறையாக சாம்பியன் ஆனது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஹிமாசல் வெற்றிக்கு 15 பந்துகளில் 16 ரன்கள் தேவை இருந்த நிலையில், மோசமான வானிலை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. பின்னா் 'விஜேடி' முறையில் அந்த அணி வென்ாக அறிவிக்கப்பட்டது.

அந்த அணி இன்னிங்ஸில் சதம் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்த ஷுபம் அரோரா ஆட்டநாயகன் ஆனாா்.

முன்னதாக டாஸ் வென்ற ஹிமாசல பிரதேசம் ஃபீல்டிங்கை தோ்வு செய்தது. பேட் செய்த தமிழகம் 49.4 ஓவா்களில் 314 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அதிகபட்சமாக விக்கெட் கீப்பா் தினேஷ் கா்த்திக் 8 பவுண்டரிகள், 7 சிக்ஸா்களுடன் 116 ரன்கள் விளாசினாா்.

பாபா இந்திரஜித் 8 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 80, ஷாருக் கான் 3 பவுண்டரிகள், 3 சிக்ஸா்களுடன் 42 ரன்கள் சோ்த்து உதவ, கேப்டன் விஜய் சங்கா் 22, சாய் கிஷோா் 18, ஜெகதீசன் 9, முருகன் அஸ்வின் 7, பாபா அபராஜித் 2, வாஷிங்டன் சுந்தா் 1, சிலம்பரசன் 1 ரன்கள் சோ்த்தனா். சந்தீப் வாரியா் 3 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தாா்.

ஹிமாசல் பௌலிங்கில் பங்கஜ் ஜஸ்வால் 4, ரிஷி தவன் 3, வினய் கலேதியா, சித்தா்த் சா்மா, திக்விஜய் ரங்கி ஆகியோா் தலா 1 விக்கெட் வீழ்த்தினா்.

பின்னா் ஹிமாசல் இன்னிங்ஸில் மோசமான வானிலை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது அந்த அணி 47.3 ஓவா்களில் 4 விக்கெட் இழப்புக்கு 299 ரன்கள் அடித்திருந்தது.

ஷுபம் அரோரா 13 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 136, கேப்டன் ரிஷி தவன் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 42 ரன்கள் சோ்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனா். முன்னதாக அமித் குமாா் 6 பவுண்டரிகளுடன் 74, பிரசாந்த் சோப்ரா 21, நிகில் கங்தா 18 ரன்கள் சோ்த்தனா்.

இறுதியில், விஜேடி முறையில் அந்த அணியின் வெற்றிக்கு 47.3 ஓவா்களில் 289 ரன்கள் வெற்றி இலக்காக நிா்ணயிக்கப்பட்ட நிலையில், அந்த அணி 299 ரன்கள் அடித்திருந்ததால், 11 ரன்கள் வித்தியாசத்தில் ஹிமாசல் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

---

17. சேதி தெரியுமா?

டிச.20: டெல்டா, ஒமைக்ரான் வரிசையில் 'டெல்மைக்ரான்' என்கிற புதிய வேற்றுருவ கரோனா வைரஸ் கண்டறியப்பட்டது.

டிச.21: வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்க வழி வகை செய்யும் தேர்தல் சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

டிச.22: எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக பெண்களின் குறைந்தபட்ச திருமண வயதை 18-லிருந்து 21-ஆக உயர்த்தும் சட்ட மசோதா நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது.

டிச.23: பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தடுக்க தமிழகத்தில் 'மீண்டும் மஞ்சப்பை' திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

டிச.23: 'பேக்ஸ்லோவிட்' என்கிற பெயரில் பைசர் நிறுவனம் உருவாக்கியுள்ள கரோனா மாத்திரையை அவசரப் பயன்பாட்டுக்கு அமெரிக்கா அங்கீகரித்தது.

டிச.23: கர்நாடக சட்டப்பேரவையில் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் அமளிக்கு இடையே நிறைவேற்றப்பட்டது.

டிச.24: வங்கதேசத் தலைநகர் தாக்காவில் நடைபெற்ற ஐந்து நாடுகள் பங்கேற்ற ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை 4 - 3 என்கிற கோல் கணக்கில் தோற்கடித்தது.

டிச.24: 15 வயதுக்குட்பட்ட ஜூனியர் அமெரிக்க ஸ்குவாஷ் ஓபன் கோப்பையில் இந்தியாவைச் சேர்ந்த 13 வயது சிறுமி அனாஹட் சிங் வென்றார். இத்தொடரை வெல்லும் முதல் இந்திய பதின்பருவச் சிறுமி இவர்.

டிச.25: ஜனவரி 3-ஆம் தேதி முதல் 15 -18 வயதுள்ள சிறார்களுக்குத் தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடங்கப்படும் எனப் பிரதமர் மோடி அறிவித்தார். மேலும், முன்களப் பணியாளர்களுக்கு ஜனவரி 10 முதல் கூடுதல் தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் அறிவித்தார்.

---

18. நீதி ஆயோக் சுகாதாரக் குறியீட்டில் கேரளம் முதலிடம்

நீதி ஆயோக் வெளியிட்ட சுகாதாரக் குறியீட்டில் கேரளம் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அந்தப் பட்டியலில் தமிழ்நாடு இரண்டாமிடத்தையும், உத்தர பிரதேசம் கடைசி இடத்தையும் பிடித்துள்ளன.

மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குவதில் சிறந்து விளங்கும் மாநிலங்கள் தொடர்பான குறியீட்டை மத்திய அரசின் கொள்கை வகுப்பு அமைப்பான நீதி ஆயோக் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அந்த அமைப்பு 4-ஆவது சுகாதாரக் குறியீட்டுப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

கடந்த 2019-20-ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்ட ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்கான பட்டியலில் பெரிய மாநிலங்கள் பிரிவில், கேரளம் முதலிடத்தையும் தமிழ்நாடு, தெலங்கானா ஆகியவை அடுத்தடுத்த

இடங்களையும் பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில் உத்தர பிரதேசம், பிகார், மத்திய பிரதேசம் ஆகியவை கடைசி 3 இடங்களில் உள்ளன.

சிறிய மாநிலங்கள் பிரிவில் மிஸோரம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. திரிபுரா, சிக்கிம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. யூனியன் பிரதேசங்களில் தாத்ரா-நகர் ஹவேலி & டாமன்-டையு முதலிடத்திலும், சண்டீகர் இரண்டாவது இடத்திலும், லட்சத்தீவுகள் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

ஓராண்டில் சுகாதார சேவைகளை சிறப்பாக மேம்படுத்திய பெரிய மாநிலங்களுக்கான பட்டியலில் உத்தர பிரதேசம் முதலிடத்திலும், அஸ்ஸாம் இரண்டாவது இடத்திலும், தெலங்கானா மூன்றாவது இடத்திலும் உள்ளன. சிறிய மாநிலங்களுக்கான பட்டியலில் மிஸோரம், மேகாலயம், நாகாலாந்து ஆகியவை முன்னணியில் உள்ளன.

நீதி ஆயோக் ஒட்டுமொத்த சுகாதாரக் குறியீட்டில் கேரளம் தொடர்ந்து 4-ஆவது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வின்போது 24 காரணிகள் ஆராயப்பட்டதாக நீதி ஆயோக் தெரிவித்துள்ளது. மத்திய சுகாதார அமைச்சகம், உலக வங்கி ஆகியவற்றுடன் இணைந்து இந்தக் குறியீட்டை நீதி ஆயோக் தயாரித்துள்ளது.

சுகாதார சேவைகளை வழங்குவதற்கான திட்டங்களை வகுக்கும்போது இந்தப் பட்டியலை மாநில அரசுகள் முன்மாதிரியாகக் கொண்டு செயல்படலாம் என நீதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார் தெரிவித்துள்ளார்.

---

19. சுகாதார துறை செயல்பாட்டில் கேரளா முதலிடம், தமிழகம் 2-ம் இடம்: உத்தரபிரதேச மாநிலத்துக்கு கடைசி இடம்

தேசிய அளவிலான சுகாதார துறை செயல்பாட்டில் கேரளா முதலிடத்தைப் பிடித்துள்ளது. தமிழகம், தெலங்கானா அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

மத்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பு கடந்த 2017-ம் ஆண்டு முதல் சுகாதாரத் துறையில் சிறந்து விளங்கும் மாநிலங்கள் குறித்து ஆய்வு செய்து தரவரிசை பட்டியலை வெளியிட்டு வருகிறது. அதன்படி 2019-20-ம் ஆண்டுக்கான சுகாதார குறியீடு டெல்லியில் நேற்று வெளியிடப்பட்டது.

நிதி ஆயோக் துணைத் தலைவர் ராஜீவ் குமார், தலைமை நிர்வாக அதிகாரி அமிதாப் காந்த், கூடுதல் செயலாளர் ராகேஷ் சர்வால், உலக வங்கியின் மூத்த அதிகாரி ஷீனா சாப்ரா ஆகியோர் சுகாதார குறியீட்டை வெளியிட்டனர்.

நிதி ஆயோக், மத்திய சுகாதாரத் துறை, உலக வங்கி ஆகியவை இணைந்து தயாரித்துள்ள சுகாதார குறியீட்டில் பெரிய மாநிலங்கள், சிறிய மாநிலங்கள், யூனியன்பிரதேசங்கள் என 3 பிரிவுகளில்தரவரிசைப் பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.

பெரிய மாநிலங்களின் பட்டியலில் 19 மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் கேரளா முதலிடத்தைப் பிடித்துள்ளது. 4-வது முறையாக அந்த மாநிலம்முதலிடத்தை தக்க வைத்திருக்கிறது. தமிழகம் 2-வது இடத்தையும், தெலங்கானா 3-வது இடத்தையும் பெற்றுள்ளன. ஆந்திரா, மகாராஷ்டிரா, குஜராத், இமாச்சல பிரதேசம்,பஞ்சாப், கர்நாடகா, சத்தீஸ்கர், ஹரியாணா, அசாம், ஜார்க்கண்ட், ஒடிசா, உத்தராகண்ட், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், பிஹார்ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. உத்தரபிரதேசம் கடைசி இடத்தில் உள்ளது.

சிறிய மாநிலங்கள் பட்டியலில் 8 மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் மிசோரம் மாநிலம்முதலிடத்தைப் பிடித்துள்ளது. திரிபுரா, சிக்கிம், கோவா, மேகாலயா, மணிப்பூர், அருணாச்சல பிரதேசம், நாகாலாந்து ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

யூனியன் பிரதேசதங்களில் தாத்ரா- நாகர் ஹவேலி மற்றும் டையு-டாமன் முதலிடத்தைப் பிடித்துள்ளது. சண்டிகர், லட்சத்தீவு, புதுச்சேரி, டெல்லி, ஜம்மு-காஷ்மீர், அந்தமான் - நிகோபர் அடுத்தடுத்த இடங்களில்உள்ளன.- பிடிஐ

---

20. ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி திட்டத்தில் பணியாற்றிய இந்திய பெண் விஞ்ஞானி

ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி திட்டத்தில் இந்திய பெண் விஞ்ஞானி ஒருவர் பணியாற்றியுள்ள விவரம் தற்போது தெரியவந்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா, ஐரோப்பா விண்வெளி ஆராய்ச்சிமையம், கனடா ஆராய்ச்சி மையம் ஆகியவை இணைந்து ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியை (ஜேடபிள்யூஎஸ்டி) உருவாக்கி உள்ளது.

தென் அமெரிக்காவின் பிரெஞ்சு கயானாவிலுள்ள கொரு விண்வெளி தளத்திலிருந்து ஏரியன்-5 ராக்கெட் மூலம் இந்த தொலைநோக்கி கடந்த சனிக்கிழமை விண்ணில் வெற்றிகரமாக ஏவப்பட்டு உள்ளது. ரூ.75 ஆயிரம்கோடி செலவில் இந்தத் தொலைநோக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலகம் தோன்றியது எப்படி என்பது உட்பட பல்வேறு அறிவியல் அதிசயங்களை இந்த தொலைநோக்கி மூலம் கண்டுபிடிக்க முடியும் என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக நட்சத்திரங்கள் இறந்தாலும் பல ஒளி ஆண்டுகள் தொலைவில் இருப்பதால் அதன் ஒளி நமக்கு கிடைத்துக்கொண்டே இருக்கும். அந்த நட்சத்திரம் இறந்தாலும் அதன் ஒளியை வைத்து அதனை ஆராய முடியும். இப்படி பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இறந்த நட்சத்திரங்கள் குறித்தும் இந்த ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி ஆராயவுள்ளது.

இந்த விண்வெளி தொலைநோக்கி திட்டத்தில் ஏராளமானவிஞ்ஞானிகள் பணியாற்றியுள்ளனர். இதில் இந்திய விஞ்ஞானி டாக்டர் ஹஷிமா ஹசனும் ஒருவர்.

இந்தியா உட்பட 7 நாடுகளின் விஞ்ஞானிகள் இந்தத் திட்டத்தில் பங்கேற்று இருந்தனர். உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் பிறந்த ஹஷிமா ஹசன், இந்தத் திட்டத்தில் பங்கேற்று இந்தியர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இதுகுறித்து டாக்டர் ஹஷிமா கூறும்போது, "ரஷ்யாவின் சார்பில்ஸ்புட்னிக் விண்கலம் ஏவப்பட்டபோது எனது பாட்டி உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவரும் கண்டு ரசித்தனர். அப்போதே எனக்கு விண்வெளி துறை மீது ஆர்வம் வந்துவிட்டது. நிலவில் மனிதர்கள் இறங்கியபோது நானும் ஒரு நாள் நாசாவில் பணிபுரிவேன் என்று கனவு கண்டேன். அந்தக் கனவு நிறைவேறியுள்ளது. விண்வெளித் துறையில் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள விரும்புகிறேன்" என்றார்.

மும்பையிலுள்ள டாடா இன்ஸ்டிடியூட் ஃபார் ஃபண்டமண்டல் ரிசர்ச் (டிஐஎஃப்ஆர்) நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த ஹஷிமா, பின்னர் லண்டன் சென்று ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் அணு அறிவியலில் டாக்டரேட் படிப்பைமுடித்தார். பின்னர் அமெரிக்கா சென்று 1994-ல் நாசாவில் விஞ்ஞானியாக சேர்ந்தார். தற்போது விண்வெளி தொலைநோக்கி திட்டத்தில் இணைந்து இந்தியாவுக்கு பெருமை தேடித் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

21. 2022-இல் மாநகரங்களில் 5ஜி சேவை: தொலைத்தொடர்பு துறை

அடுத்த ஆண்டு முதல் சென்னை, குருகிராம், பெங்களூரு, கொல்கத்தா, மும்பை, சண்டீகர், தில்லி, ஜம்நகர், ஆமதாபாத், ஹைதராபாத், லக்னௌ, புணே, காந்திநகர் போன்ற மாநகரங்கள் மற்றும் பெரு நகரங்களில் 5ஜி அலைக்கற்றை சேவை முதல் கட்டமாக அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்கள் இந்த மாநகரங்கள் மற்றும் பெரு நகரங்களில் 5ஜி சோதனை மையங்களை அமைத்திருப்பதன் மூலம் இந்த புதிய தொழில்நுட்பம் அறிமுகமாக உள்ளது.

இதுகுறித்து தொலைத்தொடர்புத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

5ஜி அலைக்கற்றை ஏலம் மற்றும் அதற்கான அடிப்படை விலை, ஏலம் விடப்பட வேண்டிய அளவு, ஏல வழிமுறை ஆகியவற்றில் உள்ள பல்வேறு நடைமுறைகளுக்கு அனுமதி கேட்டு இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்காற்று ஆணையத்திடம் (டிராய்) கடந்த செப்டம்பரில் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அனுமதி கிடைத்ததும், தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்களுக்கு அலைக்கற்றை ஒதுக்கீடு நடைமுறைகள் விரைந்து மேற்கொள்ளப்படும்.

அந்த வகையில், ஏர்டெல், ரிலையன்ஸ் ஜியோ, வோடஃபோன் ஆகிய தொலைத்தொடர்பு நிறுவனங்கள் சென்னை, குருகிராம், பெங்களூரு, கொல்கத்தா, மும்பை, சண்டீகர், தில்லி, ஜாம்நகர், ஆமதாபாத், ஹைதராபாத், லக்னௌ, புணே, காந்திநகர் ஆகிய நகரங்களில் 5ஜி சோதனை மையங்களை அமைத்திருக்கின்றன. அதன் மூலம், இந்த மாநகரங்கள் மற்றும் பெரு நகரங்களில் அடுத்த ஆண்டு 5ஜி தொழில்நுட்பம் முதல்கட்டமாக அறிமுகமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

22. கலை பண்பாட்டுத் துறை சார்பாக சென்னையில் ஜன.14 முதல் 'நம்ம ஊரு திருவிழா'

தமிழக கலைப் பண்பாட்டுத் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 'நம்ம ஊரு திருவிழா' என்ற தலைப்பின் தமிழக பாரம்பரியமான கிராமியக் கலைகளை வெளிப்படுத்தும் 500-க்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு சென்னையில் 7 இடங்களில் ஜன. 14, 15, 16-ம் தேதிகளில் கலை விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 7 வெளி மாநில கிராமியக் கலைக் குழுவினரும் பங்கு கொள்ளவுள்ளனர்.

கலை விழாவைச் சிறப்பாக நடத்துவது தொடர்பாகத் தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் அதிகாரிகளுடன் தலைமைச் செயலகத்தில் நேற்று ஆலோசனை நடத்தப்பட்டது.

இதில், சென்னையில் நடத்தப்படும் கலை நிகழ்ச்சியைப் போல, மதுரை, திருச்சி, கோவை ஆகிய இடங்களிலும் நடத்த ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

23. பெண்களின் தற்காப்புக்காக "அன்மியூட்" இயக்கம் ஐ.ஐ.டி. மாணவர்கள் தொடங்கினர்

சென்னை ஐ.ஐ.டி. மாணவர்கள் சமூக நல இயக்கம் ஒன்றை தொடங்கியுள்ளனர். "அன்மியூட்" என்று அழைக்கப்படும் அந்த திட்டத்தில் மாதவிலக்கின்போது சுத்தமாக இருத்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கைகள் பற்றி கவனம் செலுத்தப்படுகிறது. இந்த முன்முயற்சியின் மூலமாக, பெண்களை குரல் எழுப்பும்படி தூண்டுவது மாணவர்களின் நோக்கமாகும். மேலும், விழிப்புணர்வு பிரசாரங்களையும் மாணவர்கள் நடத்திட முனைந்துள்ளனர். ஆண்டுதோறும் சென்னை ஐ.ஐ.டி. நடத்தும் 'சாஸ்த்ரா-2022' என்னும் தொழில்நுட்ப திருவிழாவின் ஒரு பகுதியாக தொடங்கப்பட்டுள்ள இந்த இயக்கத்தில் சுடர், கோ ஹைஜீன், கிரை, சாக்யா, ஸ்வயம் போன்ற அரசு சாரா அமைப்புகளுடன் மாணவர்கள் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள் கடந்த அக்டோபர் 16-ந்தேதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் சாஸ்த்ரா குழுவினர் ஒரு சமூகநல பிரச்சினையை கையில் எடுத்து, அதை சமாளிப்பதற்கான முன்முயற்சியில் ஈடுபடுகின்றனர். இந்த ஆண்டில் சாஸ்த்ரா-2022 என்னும் திட்டத்தின் கீழ், "அன்மியூட்" இயக்கம் ஒன்றை தொடங்கியுள்ளனர். இந்த "அன்மியூட்" இயக்கம் கடந்த அக்டோபர் 24-ந்தேதியன்று நடிகர்

ஆஹ்ஸாஸ் சன்னா முன்னிலையில் காணொலி நிகழ்ச்சியாக தொடங்கப்பட்டது.

---

24. 'தி இந்து' பத்திரிகையாளருக்கு கோயங்கா விருது

'தி இந்து' பத்திரிகையின் செய்தியாளர் சிவ் சஹாய் சிங், ராம்நாத் கோயங்கா விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

'தி இந்து' பத்திரிகையின் மேற்கு வங்க மாநிலப் பிரிவில் செய்தியாளராக பணிபுரிபவர் சிவ் சஹாய் சிங். இவர் 2019-ல்ஜார்க்கண்ட் மாநில அரசின் டிஜிட்டல் பொது விநியோக முறைத் திட்டத்தால் அடித்தட்டு மக்கள் ரேஷன் பொருட்களை இழந்தது தொடர்பாக ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்.

ஆதார் அட்டைகளை ரேஷன் அட்டைகளுடன் இணைக்க முடியாததாலும், ஆதார் அட்டை இல்லாதவர்களும் ரேஷன் பொருட்களை வாங்க முடியாத நிலை ஏற்பட்டதை இந்த கட்டுரை விளக்கியது. பெரும்பாலும் பழங்குடி இனத்தவர் இந்த புதிய டிஜிட்டல்மயமாக்கத் திட்டத்தால் பாதிக்கப்பட்டதை கட்டுரை எடுத்துக்காட்டியிருந்தது.

இந்த கட்டுரைக்காக சிவ்சஹாய் சிங், ராம்நாத் கோயங்காவிருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

'கண்ணுக்கு தெரியாத இந்தியாவை வெளிக்கொணர்தல்' என்ற பிரிவின் கீழ் விருதுக்கு சிவ் சஹாய் சிங் தேர்வு செய்யப் பட்டுள்ளார்.

---

1. குஜராத் மாநில முதலமைச்சர் எந்த நுண்–வலைப்பூ தளத்தின் குஜராத்தி பதிப்பைத் தொடங்கினார்?

அ) டுவிட்டர்

ஆ) கூ ☑

இ) சிங்காரி

ஈ) ரெடிட்



✓ இந்திய பன்மொழி நுண்–வலைப்பூ தளமான 'கூ'வின் குஜராத்தி பதிப்பை குஜராத் மாநில முதல்வர் பூபேந்திர படேல் தொடங்கி வைத்தார். இச்செயலி மக்கள் தங்கள் தாய்மொழியைப் பயன்படுத்தி உள்ளடக்கத்தைப் பகிரவும் மற்றவர்களுடன் இணைக்கவும் உதவுகிறது.

✓ குஜராத்தி பதிப்புடன் 'கூ' இப்போது தமிழ், ஹிந்தி, மராத்தி, கன்னடம், தெலுங்கு, அஸ்ஸாமி, பஞ்சாபி, பெங்காலி & ஆங்கிலம் உள்ளிட்ட பத்து மொழிகளில் கிடைக்கிறது.

---

2. 'சில்வர்லைன்' என்ற பகுதி அதிவேக இரயில் திட்டம் அமைக்கப்படுகிற மாநிலம் எது?

அ) கர்நாடகா

ஆ) கேரளா ☑

இ) குஜராத்

ஈ) ஒடிசா



✓ 'சில்வர்லைன்' என்பது கேரள மாநிலத்தில் கட்டப்பட்டு வரும் பகுதி அதிவேக இரயில் திட்டமாகும். இத்திட்டத்தில் மாநிலத்தின் வட மற்றும் தென் முனைகளுக்கு இடையே மணிக்கு 200 கிமீ வேகத்தில் இரயில்களை இயக்குவது அடங்கும். கேரள ரயில் மேம்பாட்டுக்கழகம் செயற்படுத்தும் 'சில்வர்லைன்' திட்டத்துக்கு எதிராக கேரளா முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

✓ இதன் திட்ட மதிப்பீடு ₹63,940 கோடி. இந்தத் திட்டத்தின் காலக்கெடு 2025ஆம் ஆண்டு ஆகும்.

---

3. சமீப செய்திகளில் இடம்பெற்ற, "அவமானத்தின் தூண்" நினைவுச்சின்னம் அமைந்துள்ள நாடு / பிராந்தியம் எது?

அ) அமெரிக்கா

ஆ) ஹாங்காங் ☑

இ) தைவான்

ஈ) ரஷ்யா



✓ "அவமானத்தின் தூண்" என்பது பெய்ஜிங்கின் தியனன்மென் சதுக்கத்தில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் ஒரு நினைவுச்சின்னமாக்கும். இது 1997 முதல் ஹாங்காங் பல்கலை வளாகத்தில் அமைந்துள்ள 8 மீட்டர் உயரச்சிலையாகும். இந்த நினைவுச்சின்னத்தில் ஐம்பது துயரம் தோய்ந்த முகங்களும் சித்திரவதைக்கு உடல்களும் செதுக்கப்பட்டுள்ளன.

✓ 1989ஆம் ஆண்டில் தியனன்மென் சதுக்கத்தைச் சுற்றி சீன துருப்புக்களால் கொல்லப்பட்ட ஜனநாயக எதிர்ப்பாளர்–களை நினைவுகூரும் வகையில் இந்தத்தூண் உள்ளது. இச்சிலையை இரவோடு இரவாக கரைக்கும் நடவடிக்கையை ஹாங்காங் பல்கலை மேற்கொண்டது.

---

4. 'பெண்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தை' நிறைவேற்றிய நாடு எது?

அ) இந்தியா

ஆ) சீனா ☑

இ) ரஷ்யா

ஈ) சவூதி அரேபியா



✓ தேசிய மக்கள் காங்கிரஸின் சீனாவின் நிலைக்குழு, 'பெண்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின்' வரைவு திருத்தத்தை அறிவித்தது. பணியிடத்திலும் வீட்டிலும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது இச்சட்டத்தின் நோக்கமாகும்.

---

5. திவால் மற்றும் நொடிப்பு நிலை குறியீட்டை செயல்படு–த்துகிற மத்திய அமைச்சகம் எது?

அ) நிதி அமைச்சகம்

ஆ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் ☑

இ) வெளியுறவு அமைச்சகம்

ஈ) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

✓ பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் (MCA) திவால் மற்றும் நொடிப்புநிலை (IBC) குறியீட்டில் சில கடுமையான விதிமுறைகளை முன்மொழிந்துள்ளது. ஒரு தீர்மானத் திட்டத்தை அங்கீகரிக்க அல்லது நிராகரிக்க, திவால் தீர்ப்பளிக்கும் அதிகாரியை IBC முப்பது நாட்களுக்குள் நியமனம் செய்ய வேண்டும் என்று MCA முன்மொழிந்தது.

✓ ஜன.13ஆம் தேதிக்குள் இத்திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை அரசாங்கம் கோரியுள்ளது.

---

6. இந்திய ரிசர்வ் வங்கி (RBI) சமீபத்தில் எந்தத் தேதி வரை அடையாளக்குறியாக்க விதிகளை நீட்டித்துள்ளது?

அ) ஜனவரி 1, 2022

ஆ) ஏப்ரல் 1, 2022

இ) ஜூன் 30, 2022 ☑

ஈ) செப்டம்பர் 30, 2022



✓ இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் அடையாளக்குறியாக்க விதிகளை 2022 ஜூன்.30 வரை நீட்டித்துள்ளது.

✓ வணிகத் தளங்களில் அட்டை தரவை அழித்துவிட்டு அடையாளக்குறியாக்கத்தைப் பயன்படுத்துவதற்கான காலக்கெடு மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

✓ வணிகர்கள் மற்றும் பணம் செலுத்தும் நிறுவனங்கள் 2021 டிச.31'க்கு முந்தைய காலக்கெடுவை பூர்த்தி செய்ய இயலாமையை வெளிப்படுத்தியதால், மத்திய வங்கியால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வணிக தளத்தில் அட்டை தரவைப் பதிவுசெய்ய, கோப்பு அடையாளக்குறியாக்க அட்டை பயன்படுத்தப்படுகிறது.

---

7. இந்தியாவில், 'தேசிய நுகர்வோர் உரிமைகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ) டிசம்பர் 20

ஆ) டிசம்பர் 22

இ) டிசம்பர் 24 ☑

ஈ) டிசம்பர் 25



✓ இந்தியா முழுவதும் ஆண்டுதோறும் டிசம்பர்.24ஆம் தேதி தேசிய நுகர்வோர் உரிமைகள் நாளாக கொண்டாடப்படுகிறது. இது தேசிய நுகர்வோர் நாள் என்றும் அழைக்கப்படுகிறது.

✓ நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமானது இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற தேதியான 1986 டிச.24 இந்நாளில் நினைவுகூரப்படுகிறது.

✓ நுகர்வோரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கம். உலக நுகர்வோர் உரிமை நாள் ஆண்டுதோறும் மார்ச்.15 அன்று கொண்டாடப்படுகிறது.

---

8. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தை (PMEGP) செயல்படுத்துகிற நிறுவனம் எது?

அ) KVIC ☑

ஆ) NSIC

இ) NABARD

ஈ) SIDBI

✓ காதி மற்றும் கிராமப்புறத் தொழில்கள் ஆணையம் (KVIC) பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்க திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. சமீபத்தில். KVIC, உத்தர பிரதேச மாநிலத்தின் பண்டேல்கண்ட் பகுதியில் சுயதொழில் நடவடிக்கைகளைத் தொடங்கியது.

✓ ஜான்சி மாவட்டம் மற்றும் புந்தேல்கண்ட் பகுதியின் சில பகுதிகளில் உள்ள கிராமப்புற கைவினைஞர்களுக்கு பானை வனையும் மின்சார சக்கரம், தேனீ வளர்ப்பு பெட்டி மற்றும் அகர்பத்தி எந்திரம் ஆகியவற்றை MSME இணை அமைச்சர் வழங்கினார்.

---

9. சத்தீஸ்கர் மற்றும் தில்லிக்குப் பிறகு தனது ஆரம்பப் பள்ளிகளில் 'மகிழ்ச்சி பாடத்திட்ட'த்தைத் தொடங்கவுள்ள மாநில அரசு எது?

அ) பீகார்

ஆ) குஜராத்

இ) மகாராஷ்டிரா

ஈ) உத்தர பிரதேசம் ☑



✓ உத்தர பிரதேசத்தில் உள்ள 150 தொடக்கப் பள்ளிகளில் ஒரு சோதனைத் திட்டமாக 'மகிழ்ச்சி பாடத்திட்ட'த்தைத் தொடங்க உத்தர பிரதேச மாநில அரசு முடிவு செய்துள்ளது. இது மாணவர்களை இயற்கை, சமூகம் மற்றும் நாட்டின் மீது அதிக ஈடுபாடு கொண்டவர்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ சத்தீஸ்கர் மற்றும் தில்லிக்கு அடுத்தபடியாக நாட்டின் மூன்றாவது மாநிலமாக உத்தர பிரதேசம் 'மகிழ்ச்சி பாடத் திட்டத்தை செயல்படுத்தும். 1–8ஆம் வகுப்பு மாணவர்களு –க்கு இந்தப் பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

---

10. திரைப்படங்கள்மீதான தணிக்கையை நிறுத்துவதாக சமீபத்தில் அறிவித்த நாடு எது?

அ) ஐக்கிய அரபு அமீரகம் ☑

ஆ) பஹ்ரைன்

இ) ஓமான்

ஈ) ஈரான்



✓ இனி திரையரங்குகளில் வெளியாகும் திரைப்படங்களை தணிக்கை செய்ய மாட்டோம் என ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது. வெளிநாட்டினரை ஈர்க்கும் ஒரு தாராளவாத மையமாக நாட்டை உயர்த்துவதற்கான ஒரு முயற்சியாக இது பார்க்கப்படுகிறது.

✓ அதிகாரிகளின் கூற்றுப்படி, "படங்கள் அவற்றின் சர்வதேச பதிப்பின்படி திரையரங்குகளில் திரையிடப்படும்".

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மேலும் 2 கொரோனா தடுப்பூசிகளுக்கு மத்திய அரசு அனுமதி

கரோனா தொற்றுக்கு எதிரான போராட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் கோர்பிவேக்ஸ், கோவோவேக்ஸ் ஆகிய தடுப்பூசிகளின் அவசரகாலப் பயன்பாட்டுக்கு இந்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (டிசிஜிஐ) அனுமதி அளித்துள்ளது.

கரோனா தொற்று சிகிச்சைக்கான மால்னுபிராவிர் மாத்திரையின் அவசரகாலப் பயன்பாட்டுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த நோவோவேக்ஸ் நிறுவனம் கோவோவேக்ஸ் கரோனா தடுப்பூசியைத் தயாரித்தது. அத்தடுப்பூசியை அதிக எண்ணிக்கையில் தயாரித்து, குறைந்த, நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு விநியோகிப்பதற்காக சீரம் நிறுவனத்துடன் நோவோவேக்ஸ் கடந்த ஆண்டு ஆகஸ்டில் ஒப்பந்தம் மேற்கொண்டது. அத்தடுப்பூசியின் அவசரகாலப் பயன்பாட்டுக்கு உலக சுகாதார அமைப்பு கடந்த 17–ஆம் தேதி ஒப்புதல் வழங்கியிருந்தது.

ஹைதராபாதைச் சேர்ந்த பயாலஜிகல்–இ நிறுவனம், கோர்பிவேக்ஸ் தடுப்பூசியை மத்திய உயிரி தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து தயாரித்தது. இது முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 3–ஆவது கரோனா தடுப்பூசியாகும். அமெரிக்காவைச் சேர்ந்த மொர்க் நிறுவனம், கரோனா தொற்றால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை அளிப்பதற்காக மால்னுபிராவிர் மாத்திரையைத் தயாரித்தது.

பரிந்துரையும் அனுமதியும்: கோவோவேக்ஸ், கோர்பிவேக்ஸ் ஆகிய தடுப்பூசிகளையும், மால்னுபிராவிர் மாத்திரையையும் இந்தியாவில் பயன்படுத்த அனுமதி அளிக்குமாறு மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு

அமைப்பின் (சிடிஎஸ்சிஓ) தடுப்பூசி நிபுணர்கள் குழு மத்திய அரசுக்குப் பரிந்துரை வழங்கியிருந்தது.

அப்பரிந்துரையை டிசிஜிஐ ஏற்றுக் கொண்டு, 3 மருந்துகளின் அவசரகாலப் பயன்பாட்டுக்கும் செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியது. இது தொடர்பாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், "ஒரே நாளில் 3 மருந்துகளின் அவசரகாலப் பயன்பாட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கோர்பிவேக்ஸ், கோவோவேக்ஸ் தடுப்பூசிகளையும், மால்னுபிராவிர் மாத்திரையையும் கட்டுப்பாடுகளுடன் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியானது கரோனா தொற்றுக்கு எதிரான உலகின் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தும். அப்போராட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி முன்னின்று நடத்தி வருகிறார். இந்தியாவின் மருந்து நிறுவனங்கள் ஒட்டுமொத்த உலகுக்கும் பலனளிப்பவையாக உள்ளன.

'ஹாட்ரிக்' தடுப்பூசி: ஆர்பிடி புரதப் பிரிவை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் கரோனா தடுப்பூசி, கோர்பிவேக்ஸ். உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 3-ஆவது தடுப்பூசியாக அது விளங்குகிறது. நானோபார்டிகல் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட கோவோவேக்ஸ் தடுப்பூசியை சீரம் நிறுவனம் உற்பத்தி செய்யவுள்ளது.

மால்னுபிராவிர் மாத்திரையானது 18 வயதைக் கடந்தவர்களுக்கான கரோனா சிகிச்சையிலும், அத்தொற்றின் பாதிப்பு தீவிரமடைய வாய்ப்புள்ளவர்களுக்கான சிகிச்சையிலும் பயன்படுத்தப்படவுள்ளது. அந்த மாத்திரையை இந்தியாவில் 13 நிறுவனங்கள் தயாரித்து விநியோகிக்கவுள்ளன' ' என்று குறிப்பிட்டுள்ளார்.

பயன்பாட்டு முறைகள்: கோர்பிவேக்ஸ் தடுப்பூசியை 28 நாள்கள் இடைவெளியில் இரு தவணைகளாகச் செலுத்த வேண்டும். கோவோவேக்ஸ் தடுப்பூசியை 21 நாள்கள் இடைவெளியில் இரு தவணைகளைச் செலுத்த வேண்டும். இரு தடுப்பூசிகளையும் 2 முதல் 8 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலையில் சேமித்துவைக்க வேண்டும்.

மால்னுபிராவிர் மாத்திரையை மருத்துவர்கள் பரிந்துரைத்தால் மட்டுமே பயன்படுத்த வேண்டும். 18 வயதைக் கடந்தவர்களுக்கு மட்டுமே அந்த மாத்திரை பரிந்துரைக்கப்பட வேண்டும். நாளொன்றுக்கு இரு மாத்திரைகளை எடுத்துக் கொள்ளலாம். தொடர்ந்து 5 நாள்களுக்கு மேல் அந்த மாத்திரையைப் பயன்படுத்தக் கூடாது.

அனுமதிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள்: நாட்டில் கோவிஷீல்ட், கோவேக்ஸின், ஸ்புட்னிக்-வி ஆகிய கரோனா தடுப்பூசிகள் ஏற்கெனவே மக்களுக்குச் செலுத்தப்பட்டு வருகின்றன. மாடர்னா, ஜான்சன்&ஜான்சன், சைகோவ்-டி ஆகிய தடுப்பூசிகளின் அவசரகாலப் பயன்பாட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தாலும் அவை இன்னும் பயன்பாட்டுக்கு வரவில்லை.

தடுப்பூசிகள் வரிசையில் கோர்பிவேக்ஸ், கோவோவேக்ஸ் ஆகியவை இணைந்துள்ள நிலையில், நாட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ள கரோனா தடுப்பூசிகளின் எண்ணிக்கை 8-ஆக அதிகரித்துள்ளது.

---

2. தேசிய அளவிலான மீன் பிடிப்பில் தமிழகம் முதலிடம்

தமிழகம் முழுவதும் 5,500 விசைப்படகுகள், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தேசிய அளவிலான மீன்பிடியில் கடந்தாண்டு குஜராத் முதலிடத்தில் இருந்தது. ஒன்றிய கடல் மீன் ஆராய்ச்சி கூட கணக்கெடுப்பின்படி, நடப்பாண்டு மீன் பிடிப்பில் தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது.

தமிழக கடற்கரையின் நீளம் 1,071 கி.மீ. இதில் ராமநாதபுரம் மாவட்ட கடற்கரையின் நீளம் 237 கி.மீ. மாவட்டத்தில் 1,600க்கும் மேற்பட்ட விசைப்படகுகள், 5,700க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகளில் மீன்பிடி தொழில் நடந்து வருகிறது. கடந்த 2018ல் தமிழகத்தில் 7.18 லட்சம் டன், 2019ல் 7.75 லட்சம் டன் மீன்கள் பிடிபட்டன. 2020-21ல் 10 லட்சம் டன் மீன்கள் பிடித்து குஜராத் மாநிலத்தை பின்னுக்கு தள்ளி தமிழகம் முதலிடம் பிடித்துள்ளது. ராமநாதபுரம் மாவட்டம் 2.64 லட்சம் டன் மீன்கள் பிடித்து மாநிலத்தில் முதலிடத்தில் உள்ளது.

---

3. பாபே, அலெக்ஸியாவுக்கு விருது

துபை உலக கால்பந்து விருதுகளின் 12-ஆவது எடிஷனில், 2021-ஆம் ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீரராக பிரான்ஸின் கிலியன் பாபே, சிறந்த வீராங்கனையாக ஸ்பெயினின் அலெக்ஸியா புடெலாஸ் தேர்வாகினர்.

துபையில் உள்ள புர்ஜ் கலிஃபாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆண்டின் சிறந்த கோல் ஸ்கோரர் மற்றும் ரசிகர்கள் வரவேற்பை பெற்ற வீரருக்கான மாரடோனா விருதை போலந்தின் ராபர்ட் லெவாண்டோவ்ஸ்கி பெற்றார். அதிக கோலடித்த வீரருக்கான விருது போர்ச்சுகலின் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு வழங்கப்பட்டது.

ஆடவர் பிரிவில் சிறந்த கிளப்பாக செல்சியும், மகளிர் பிரிவில் சிறந்த கிளப்பாக பார்சிலோனாவும் தேர்வாகின. சிறந்த தேசிய அணியாக இத்தாலி விருது பெற்றது. சிறந்த தடுப்பாட்ட வீரராக லியோனார்டோ போனுச்சி (இத்தாலி), சிறந்த கோல்கீப்பராக கியான்லுகி டோனாருமா (இத்தாலி), சிறந்த பயிற்சியாளராக ராபர்டோ மான்சினி (இத்தாலி) தேர்வாகினர்.

---

1. INS கேசரி, சமீபத்தில் எந்த நாட்டுக்கு உணவு உதவி மற்றும் பாதுகாப்பு உதவிகளை வழங்கியது?

அ) மடகாஸ்கர்



ஆ) மொசாம்பிக் ☑

இ) மாலத்தீவுகள்

ஈ) மியான்மர்

✓ சாகர் திட்டத்தின் கீழ், இந்திய கடற்படையின் INS கேசரி போர்க்கப்பல், மொசாம்பிக் நாட்டின் மபுடோ துறைமுகத்து –க்கு 500 டன் உணவு பொருட்கள் மற்றும் உதவிப்பொரு –ட்களை கொண்டுசென்றது.

✓ அதோடு, மொசாம்பிக் இராணுவத்துக்கு அளிக்க இரண்டு அதிவிரைவு படகுகள் மற்றும் தற்காப்பு பாதுகாப்பு தளவாடங்களையும் கொண்டுசென்றது. முன்னதாக INS கேசரி மாலத்தீவுகள், மொரிசியஸ், சீஷெல்ஸ், மடகாஸ்கர் மற்றும் கொமோரோசு ஆகிய நாடுகளுக்கு மனிதாபிமான மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கியது.

---

2. அண்மையில் குடியரசுத்தலைவரால் PN பணிக்கரின் சிலை திறந்து வைக்கப்பட்டது. அவருடன் தொடர்புடைய இயக்கம் எது?

அ) பெண்கள் அதிகாரமளித்தல்



ஆ) எழுத்தறிவு மற்றும் நூலகம் ☑

இ) குழந்தை வளர்ச்சி

ஈ) சுத்தமான தண்ணீர்

✓ கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள P N பணிக்கர் சிலையை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் திறந்துவைத்தார். P N பணிக்கர் கேரளத்தில் எழுத்தறிவியக்கம் & நூலகங்களை மேம்படுத்துதற்காக 1945'இல் 'கிரந்தசாலா சங்கம்' தொடங்கினார்.

✓ "வாசித்து வளர்ச்சியடைவீர்" என்று பொருள்படும் "வாயிச்சு வளர்க" என்ற செய்திக்காக அவர் புகழ்பெற்றார். எழுத்தறிவு இயக்கத்தை ஒரு பிரபலமான சமூக–கலாசார இயக்கமாக மாற்றினார்.

---

3. மிகவும் தீவிரமான காந்தப்புலம்கொண்ட சிதைந்த நியூட்ரான் நட்சத்திரத்தின் பெயர் என்ன?

அ) மீட்டியோர்



ஆ) மேக்னடார் ☑

இ) பிளேசர்

ஈ) குவாசர்

✓ ராட்சத நட்சத்திரங்கள் வீழ்ச்சியடையும் போது, அவை நியூட்ரான் நட்சத்திரங்களை உருவாக்குகின்றன. மேலும் இந்த நியூட்ரான் நட்சத்திரங்களில் சில, காந்தப்புலங்கள் எனப்படும் மிகவும் தீவிரமான காந்தப்புலத்துடன் ஒரு சிறிய குழுவை உருவாக்குகின்றன.

✓ இன்ஸ்டிடியூட் ஆஃப் ஆஸ்ட்ரோபிசிக்ஸ் தலைமையில், வானியலாளர்கள் சமீபத்தில் 'GRB2001415' என்றவொரு திடீர் ஒளியை ஆய்வுசெய்தனர். 2020 ஏப்ரல்.15 அன்று நிகழ்ந்த அது ஒரு வினாடியில் பத்தில் ஒரு பங்கு மட்டுமே நீடித்தது. ஓர் ஆய்வின்படி, வெளியிடப்பட்ட அந்த ஆற்றல் நமது சூரியன் 1,00,000 ஆண்டுகளில் வெளியிடும் கதிர்வீச்சு ஆற்றலுக்குச் சமமாகும்.

---

4. 'குப்பைகளற்ற நகரங்களுக்கான நட்சத்திர மதிப்பீடு வழிமுறை – கருவித்தொகுப்பு 2022'ஐ வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑

இ) விவசாய அமைச்சகம்

ஈ) வனம், சுற்றுச்சூழல் அமைச்சகம்

✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் குப்பைகளற்ற நகரங்களுக்கான நட்சத்திர மதிப்பீடு வழிமுறை – கருவித்தொகுப்பு 2022'ஐ வெளியிட்டது.

✓ 2021 அக்டோபர்.1 அன்று "குப்பைகளற்ற நகரங்களை" உருவாக்குவதற்காக, ஸ்வச் பாரத் மிஷன்–அர்பன் 2.0'ஐ பிரதமர் மோடி தொடங்கிவைத்தார். நட்சத்திர மதிப்பீடு வழிமுறையின்படி ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பையும் குறைந்தபட்சம் மூன்று நட்சத்திர குப்பை இல்லா நகரமாக மாற்றுவதே இதன் நோக்கமாகும்.

---

5. அண்மையில், 'சிர்கான் ஹைப்பர்சோனிக் ஏவுகணை அமைப்பை' அறிமுகப்படுத்திய நாடு எது?

அ) சீனா



ஆ) இரஷ்யா ☑

இ) UK

ஈ) இஸ்ரேல்

✓ கடற்புற மற்றும் தரைசார் இலக்குகளை தாக்கக்கூடிய 'சிர்கான் ஹைப்பர்சோனிக் ஏவுகணை அமைப்பை' ரஷ்யாவின் தற்காப்புப் படை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. உக்ரைன் எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவிவரும் நிலையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.

---

6. எந்த மாநிலத்தின் விளம்பரத் தூதராக இந்திய கிரிக்கெட் வீரர் ரிஷப் பந்த் நியமிக்கப்பட்டுள்ளார்?

அ) உத்தரகாண்ட் ☑



ஆ) உத்தர பிரதேசம்

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்

✓ இந்திய கிரிக்கெட் வீரர் ரிஷப் பந்த் உத்தரகாண்ட் மாநிலத்தின் விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டு, விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், மாநில இளையோர் இடையே மனநல விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உள்ளார். இது தொடர்பாக உத்தரகாண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி அறிவித்துள்ளார். 24 வயதான அவர் உத்தரகாண்ட் மாநிலத்தின் ஹரித்துவார் மாவட்டத்தில் பிறந்தவர்.

---

7. சமீப செய்திகளில் இடம்பெற்ற பரலான் தீவுகள் தேசிய வனவுயிரி புகலிடம் அமைந்துள்ள நாடு எது?



அ) அமெரிக்கா ☑

ஆ) ரஷ்யா

இ) ஜப்பான்

ஈ) இத்தாலி

✓ அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரை ஆணையம், பாரலன் தீவுகளின் தேசிய வனவுயிரி புகலிடத்தில் எலி விஷத்தை காற்றில் விடுவதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தீவுகளில் எலிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதன்மூலம் அரிய கடற்பறவைகளைக் காக்–கும் முயற்சியாக இது பார்க்கப்படுகிறது.

---

8. சர்வதேச புலம்பெயர்ந்தோர் நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) டிசம்பர் 18 ☑

ஆ) டிசம்பர் 21

இ) டிசம்பர் 24

ஈ) டிசம்பர் 27

✓ உலகளாவிய குடியேற்றத்தின் பிரச்சனை & சவால்களை சமாளிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.18 அன்று சர்வதேச புலம்பெயர்ந்தோர் நாள் அனுசரிக்கப்படுகிறது.

✓ ஐநா பொதுச்சபையானது 1999ஆம் ஆண்டில் அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு சர்வதேச தீர்மானத்தை உருவாக்கியது. "Harnessing the potential of human mobility" என்பது நடப்பு 2021ஆம் ஆண்டில் வரும் இந்நாளிற்கான கருப்பொருளாகும்.

---

9. 1 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்துகளை ஐநாடுகள் அவையின் ஆதரவுபெற்ற COVAX திட்டத்திற்கு நன்கொடையாக வழங்குவதாக அறிவித்துள்ள நாடு எது?

அ) ரஷ்யா

ஆ) இஸ்ரேல் ☑

இ) இந்தியா

ஈ) பிரான்ஸ்

✓ ஐநாடுகள் அவையின் ஆதரவுபெற்ற COVAX திட்டத்திற்கு 1 மில்லியன் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை வழங்குவதாக இஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

✓ அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் வரும்வாரங்களில் வழங்கப்படும் என இத்தாலியின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆப்பிரிக்க நாடுகளுடன் இஸ்ரேலின் உறவுகளை வலுப்படுத்தும் ஒரு பகுதியாக இந்த முடிவு பார்க்கப்படுகிறது.

✓ கென்யா, உகாண்டா மற்றும் ருவாண்டா உட்பட பல ஆப்பிரிக்க நாடுகளுடன் இஸ்ரேல் நெருங்கிய உறவைக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டு சூடானுடனான உறவை இஸ்ரேல் ஏற்படுத்தியது.

---

10. UNESCO கலாசார பாரம்பரிய பட்டியலில் ஆசியாவில் இருந்து முதன்முறையாக சேர்க்கப்பட்ட திருவிழா எது?

அ) தைவான் ஒளிவிளக்குத் திருவிழா

ஆ) ஆருத்ரா தரிசனம், தில்லை நடராஜர் கோவில்

இ) ஓணம் பண்டிகை



ஈ) துர்கா பூஜை ☑

✓ UNESCO தனது 'மனிதகுலத்தின் தொட்டுணரமுடியா கலாசார பாரம்பரியங்கள் பட்டியலில்' துர்கா பூஜையை சேர்த்துள்ளது. UNESCO'இன் பதினாறாவது குழுவானது பாரிஸில் நடைபெற்ற தொட்டுணரமுடியா கலாசார பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான அதன் கூட்டத்தில், கொல்கத்தாவில் உள்ள துர்கா பூஜையை அப்பட்டியலில் சேர்த்தது. இது, ஆசியாவிலிருந்து இந்த மதிப்புமிக்க பட்டியலில் சேர்க்கப்பட்ட முதல் திருவிழாவாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான 'அடல்' தரவரிசை பட்டியல் வெளியீடு: தமிழகத்தைச் சேர்ந்த 13 கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றன

உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள், ஆசிரியர்களின் கண்டுபிடிப்பு திறன், தொழில்முனைவோரை உருவாக்கும் திறன், ஸ்டார்ட் அப் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, 'புதுமை கண்டுபிடிப்பில் சாதனை படைத்த கல்வி நிறுவனங்களுக்கான அடல் தரவரிசை' என்ற திட்டத்தை மத்தியகல்வித் துறை, அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் மூலம் செயல்படுத்தி வருகிறது.

கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமைக்கு பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை, புதுமை தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கான சிறப்புக் கட்டமைப்பு வசதி போன்ற அம்சங்கள் தரவரிசைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

2021–ம் ஆண்டுக்கான தரவரிசைக்கு 1,438 கல்வி நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன. வழக்கமாக, தொழில்நுட்பம் சார்ந்த கல்விநிறுவனங்களுக்கு மட்டுமே 5 பிரிவாக தரவரிசை வெளியிடப்படும். ஆனால், நடப்பாண்டு முதல் தொழில்நுட்பம் சாராத கல்வி நிறுவனங்கள் 2 பிரிவாக இணைக்கப்பட்டு, மொத்தம் 7 பிரிவுகளாக தரவரிசை பட்டியல் தயாரிக்கப்பட்டது. இப்பட்டியலை மத்திய கல்வித் துறை இணையமைச்சர் சுபாஷ் சர்கார் நேற்று வெளியிட்டார்.

அதன்படி, சிறந்த மத்திய கல்வி நிறுவனங்கள் பட்டியலில் சென்னை ஐஐடி தொடர்ந்து 3–வது முறையாக முதல் இடத்தைப் பிடித்துள்ளது. 2–வது இடத்தை மும்பை ஐஐடி, 3–வது இடத்தை டெல்லி ஐஐடி பிடித்தன.

மாநில பல்கலைக்கழக பிரிவில் பஞ்சாப் பல்கலைக்கழகம் முதல் இடத்தையும், கோவையில் உள்ள அவினாசிலிங்கம் பல்கலை. 5–வது இடத்தையும், சேலம்

பெரியார்பல்கலைக்கழகம் 10–வது இடத்தையும் பிடித்துள்ளன.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகள் பிரிவில் 2–வது இடத்தில் பிஎஸ்ஜி தொழில்நுட்பக் கல்லூரியும், 4–வது இடத்தில் தியாகராஜர் பொறியியல் கல்லூரியும் உள்ளன. தனியார் நிகர்நிலை பல்கலை. பிரிவில் எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (4–வது இடம்), கலசலிங்கம் ஆராய்ச்சி கல்வி நிறுவனம் (6), வேலூர் விஐடி (8) ஆகியவை இடம் பெற்றுள்ளன.

தனியார் கல்லூரிப் பிரிவில் ஆர்.எம்.கே. பொறியியல் கல்லூரி2–வது இடத்தையும், ஸ்ரீகிருஷ்ணாபொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி 3–வது இடத்தையும் பிடித்துள்ளன. அதேபோல, தொழில்நுட்பம் சாராத கல்வி நிறுவனங்களின் பிரிவில் பிஎஸ்ஜி கலை, அறிவியல் கல்லூரி 4–வது இடத்திலும், திருச்சி ஹோலிகிராஸ் கல்லூரி 5–வது இடத்திலும் உள்ளன.

---

2. சுற்றுலா ஆலோசனைக் குழு பெயர் மாற்றம்: தமிழக அரசு உத்தரவு

தமிழ்நாடு சுற்றுலா ஆலோசனைக் குழு சீரமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவானது, தமிழ்நாடு சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக் குழு என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவு விவரம்:–

மறுசீரமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக் குழுவின் துணைத் தலைவராக, அரசு முதன்மைச் செயலாளரும், உறுப்பினர் செயலாளராக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்திய சுற்றுலா முகவர்கள் சங்கம், இந்திய சுற்றுலா சேவை நிறுவன சங்கம், தமிழ்நாடு சுற்றுலா சந்தை, தென்னிந்திய ஹோட்டல்கள், உணவகங்கள் சங்கம், தமிழ்நாடு சுற்றுலா சுற்றுப் பயணம் விருந்தோம்பல் சங்கம், இந்திய தொழில் வர்த்தக சபைகளின் கூட்டமைப்பு, இந்திய தொழில் கூட்டமைப்பு, தென்னிந்திய தொழில் வர்த்தக சபை, தென்னிந்திய கூட்டங்கள், சலுகைகள், மாநாடுகள், கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் சங்கம் உள்ளிட்ட சுற்றுலா மையப்படுத்திய சங்கங்கள் இடம்பெற்றிருக்கும்.

சுற்றுலா மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கும் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும் என்று தமிழக அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. சிபிஐ இணை இயக்குநராக வித்யா குல்கர்னி நியமனம்

சென்னை மண்டல சிபிஐ இணை இயக்குநராக வித்யா குல்கர்னியை நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழகக் காவல் துறையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை ஐஜியாகப் பணியாற்றியவர் வித்யா குல்கர்னி. இந்நிலையில், அவர் கடந்த நவம்பரில் மத்திய அரசு பணிக்குச் சென்றார். இதற்கிடையே அவரை சென்னை மண்டல சிபிஐ இணை இயக்குநராக நியமித்து மத்திய பணியாளர் தேர்வாணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இவருடன் ஒடிசா காவல்துறை ஐபிஎஸ் அதிகாரி ஞான்சிஷியாம் உபாத்யா, மகாராஷ்டிரா காவல்துறை ஐபிஎஸ் அதிகாரி நாவல் பஜாஜ் ஆகியோரும் சிபிஐ இணை இயக்குநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

4. உயர் நீதிமன்ற அரசு வழக்கறிஞருக்கு 2021ம் ஆண்டுக்கான சிறந்த புவிசார் குறியீடு விருது

புவிசார் குறியீடு பதிவில் வழக்கறிஞர் சஞ்சய் காந்தி முக்கிய பங்கு வகித்துள்ளார். தஞ்சாவூர் தட்டு, காஞ்சிபுரம் பட்டு உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற்றுத் தந்துள்ளார். சென்னை ஐகோர்ட்டில் அரசு வக்கீலாக பதவி வகித்து வரும் இவருக்கு தஞ்சாவூரில் நடைபெற்ற இந்திய ஏற்றுமதி பொருட்களில் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற அரசு விழாவில் இதற்கான விருதை தஞ்சாவூர் மாவட்ட கலைத்தட்டு தயாரிப்பாளர்கள் சங்கம் வழங்கியது. இவர் அறிவுசார் சொத்துரிமை சங்கத்தின் தலைவராக பதவி வகித்து வருகிறார். இந்த நிகழ்ச்சியில் புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் 500க்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பயனாளிகள், கைவினை மற்றும் கைத்தறி துறை கலைஞர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

---

1. கீச்சன் செவெல், எந்த நாட்டுக் காவல்துறையின் முதல் பெண் தலைவராக ஆனார்?

அ) ஆஸ்திரேலியா

ஆ) ஜெர்மனி



இ) அமெரிக்கா ☑

ஈ) பின்லாந்து

✓ நியூயார்க் நகரத்தின் அடுத்த காவல்துறை ஆணையராக கீச்சன்ட் செவெல் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் அமெரிக்காவின் காவல்துறைக்கு தலைமைதாங்கும் முதல் பெண்மணி என்ற பெருமையை அவர் பெற்றார்.

✓ கீச்சன் செவெல், நீள் தீவு காவல் அதிகாரியாவார். 49 வயதான அவர் நியூயார்க் காவல்துறை ஆணையராக பணியாற்றும் மூன்றாவது கறுப்பினத்தவர் ஆவார்.

---

2. YouGov மேற்கொண்ட சர்வதேச ஆய்வின்படி, உலகில் அதிகம் போற்றப்படும் மனிதர் யார்?

அ) எலோன் மஸ்க்

ஆ) இரஜினிகாந்த்

இ) நரேந்திர மோடி



ஈ) பராக் ஒபாமா ☑

✓ YouGov மேற்கொண்ட சர்வதேச ஆய்வின்படி, அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, உலகின் மிகவும் போற்ற –ப்படும் மனிதர்களில் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

✓ இந்த ஆய்வுக்காக, முப்பத்தெட்டு நாடுகளைச் சேர்ந்த 42,000 பேரிடம் யாரை அதிகம் போற்றுகிறீர்கள்? என்று கேட்கப்பட்டது. ஆடவர் பட்டியலில் பில் கேட்ஸ் 2ஆவது இடத்திலும், சீன அதிபர் ஜி ஜின்பிங் 3ஆவது இடத்திலும் உள்ளனர். இந்தியப் பிரதமர் மோடி மிகவும் போற்றப்படும் மனிதர்கள் பட்டியலில் எட்டாவது இடம் பிடித்துள்ளார். மகளிருள் மிச்செல் ஒபாமா முதலிடம் பிடித்துள்ளார்.

---

3. பிரதமர் கிருஷி சிஞ்சாயி யோஜனா என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் முதன்மைத் திட்டமாகும்?

அ) ஜல் சக்தி அமைச்சகம் ☑

ஆ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

இ) உணவு பதப்படுத்துதல் அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

Government of India
Ministry of Jal Shakti
Department of Water Resources, River Development & Ganga Rejuvenation

✓ ₹93,068 கோடி செலவில் 2021–26ஆம் ஆண்டிற்கான பிரதம மந்திரி கிருஷி சிஞ்சாய் யோஜனாவை (PMKSY) செயல்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 2015–16'இல் PMKSY தொடங்கப்பட்டது.

✓ துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பயன் திட்டம், ஹர் கெத் கோ பானி மற்றும் நீர்நிலை மேம்பாட்டுக் கூறுகள் ஆகிய 3 கூறுகள் 2021–26'இல் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட் –டுள்ளன. துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பயன் திட்டம் ஜல் சக்தி அமைச்சகத்தாலும் ஒரு சொட்டு – அதிக பயிர் திட்டம் மற்றும் நுண்ணீர் பாசனத்திட்டம் வேளாண் அமைச்சகத்தாலும் நீர்நிலை மேம்பாட்டுத் திட்டம் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தாலும் செயல்படுத்தப்படுகிறது.

4. லக்வார் பல்நோக்கு திட்டம் அமையவுள்ள மாநிலம் எது?

அ) உத்தரப்பிரதேசம்



ஆ) உத்தரகாண்ட் ☑

இ) ஹிமாச்சல பிரதேசம்

ஈ) பஞ்சாப்

✓ இந்தியப்பிரதமர் மோடி தலைமையிலான நடுவண் அமைச்சரவை உத்தரகாண்ட் மாநிலத்தில் யமுனை ஆற்றில் லக்வார் பல்நோக்குத் திட்டத்தைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. உத்தரகாண்ட் ஜல் வித்யுத் நிகாம் லிட்மூலம் கட்டப்படும் அணை மற்றும் நிலத்தடி மின் நிலைய கட்டுமானம் இந்தத் திட்டத்தில் அடங்கும். இந்தத் திட்டம் உத்தரகாண்ட், தில்லி, இராஜஸ்தான், ஹரியானா மற்றும் ஹிமாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு மிகுந்த பயனளிக்கும்.

---

5. ஜெனரல் பிபின் இராவத்தின் மறைவைத் தொடர்ந்து, பணியாளர்கள் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ) M M நரவனே ☑



ஆ) கரம்பீர் சிங்

இ) R K S பதௌரியா

ஈ) விஜய் குமார் சிங்

✓ ஜெனரல் பிபின் இராவத்தின் மறைவைத் தொடர்ந்து, இந்திய ராணுவத்தளபதி மனோஜ் முகுந்த் நரவனேவை, ராணுவப் பணியாளர்கள் குழுவின் தலைவராக இந்திய அரசு நியமித்தது.

---

6. ஆறு அணு உலைகள் அமைக்கப்படவுள்ள ஜெய்தாபூர் அமைந்துள்ள மாநிலம் எது?

அ) மகாராஷ்டிரா ☑



ஆ) உத்தர பிரதேசம்

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்

✓ மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள ஜெய்தாபூரில் ஆறு அணு உலைகளை அமைக்க மத்திய அரசு 'கொள்கை அளவில்' ஒப்புதல் அளித்துள்ளது. தலா 1,650 MW திறன்கொண்ட ஆறு அணுமின் உலைகள் பிரான்சின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் நிறுவப்படும். இது 9,900 மெகாவாட் (MW) திறன்கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய அணுசக்தி உற்பத்தி தளமாக இருக்கும்.

---

7. 2021'இல் "அனைத்திந்திய மேயர்கள் மாநாட்டை" நடத்திய நகரம் எது?

அ) சென்னை



ஆ) திருவனந்தபுரம்

இ) வாரணாசி ☑

ஈ) நாக்பூர்

✓ வாரணாசியில் நடந்த "அகில இந்திய மேயர் மாநாட்டை" இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி காணொலிக்காட்சி மூலம் தொடங்கி வைத்தார். "புதிய நகர்ப்புற இந்தியா" என்ற கருப்பொருளின் கீழ் நடத்தப்பட்ட இந்த மாநாட்டில், நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 120 மேயர்கள் பங்கேற்றனர்.

---

8. உலகின் முதல் 'AI வழக்கறிஞரை' உருவாக்கிய நாடு எது?

அ) அமெரிக்கா



ஆ) சீனா ☑

இ) ரஷ்யா

ஈ) இந்தியா

✓ செயற்கை நுண்ணறிவைப் (AI) பயன்படுத்தி வாதாடக் கூடிய உலகின் முதல் எந்திரத்தை சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். அவ்விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, இந்த "AI வழக்கறிஞரால்" 97 சதவீதத்திற்கும் மேலான துல்லியத்துடன் மக்களைத் தண்டிக்க முடியும். இது வாய் மொழி விளக்கமும் அளிக்கும்.

---

9. "இந்தியா ஔட்" பிரச்சாரத்துடன் தொடர்புடைய நாடு எது?

அ) இலங்கை

ஆ) மியான்மர்



இ) மாலத்தீவுகள் ☑

ஈ) நேபாளம்


✓ மாலத்தீவின் முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீன் தலைமையில் "இந்தியா ஔட்" பிரச்சாரம் நடைபெற்றது. சமீபத்தில், மாலத்தீவில் உள்ள அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்சாரத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தன. "இந்தியா ஔட்" என்ற முழக்கம் கடந்த மூன்று ஆண்டுகளாக சமூக ஊடகங்களில் காணப்படுகிறது.

✓ 'இந்தியா ஔட்' பிரச்சாரமானது மாலத்தீவில் தற்போதைய பாதுகாப்பு ஒத்துழைப்பின்மூலம் ஒரு இராணுவ தளத்தை நிறுவ இந்தியா எண்ணுகிறது என்ற குற்றச்சாட்டுகளை மையமாகக் கொண்டுள்ளது.

---

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற "சைக் திட்டம்" உருவாக்கப்பட்டு வருகிற நாடு எது?

அ) அமெரிக்கா ☑



ஆ) UK

இ) ரஷ்யா

ஈ) இஸ்ரேல்

✓ 2022ஆம் ஆண்டில் ஏவப்படவுள்ள 'சைக் திட்டத்தில்' NASA செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் இலக்கு செவ்வாய் மற்றும் வியாழன் இடையே உள்ள முக்கிய பட்டையில் உள்ள 'சைக்' என்றும் அழைக்கப்படும் உலோகம் நிறைந்த சிறுகோள் ஆகும். இந்த இடத்திற்கு இதுவரை வேறு எந்த விண்கலமும் சென்றதில்லை.

✓ இவ்விண்கலம் 2026ஆம் ஆண்டில் சிறுகோள் இருக்கும் பட்டையைச் சென்றடையும். ரேடார் தரவுகளில் இருந்து, அச்சிறுகோள் உருளைக்கிழங்கு வடிவில் இருப்பதும், அது அதன் பக்கத்தில் சுழல்வதும் கவனிக்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பிரதமர் மோடி பெயரில் சிக்கிமில் புதிய சாலை திறப்பு

சிக்கிமில் பிரதமர் நரேந்திர மோடி பெயரில் புதிய சாலை புதன்கிழமை திறக்கப்பட்டது. அந்த மாநில ஆளுநர் கங்கா பிரசாத் இந்தச் சாலையைத் திறந்துவைத்தார்.

சோம்கோ ஏரி, நாதுலா எல்லைப் பகுதி ஆகியவற்றை சிக்கிம் தலைநகர் காங்டாக்குடன் இந்தச் சாலை இணைக்கிறது. இதற்கு முன்பு இதே பகுதிகளுக்கு இடையிலான சாலை ஜவாஹர்லால் நேரு சாலை என்று அழைக்கப்பட்டு வந்தது.

இப்போது அந்தப் பகுதிகளுக்குச் செல்ல புதிய இருவழிச் சாலை உருவாக்கப்பட்டு, அதற்கு 'நரேந்திர மோடி மார்க்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்தச் சாலை மூலம் காங்டாக்–சோம்கோ ஏரி இடையிலான பயணத் தொலைவு 15 கி.மீ. குறைந்துள்ளது.

---

2. அம்பைக்கு சாகித்ய அகாடமி விருது; பால புரஸ்கார் விருதுக்கு மு.முருகேஷ் தேர்வு

தமிழின் முக்கியமான பெண் எழுத்தாளர் அம்பைக்கு இந்த ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. குழந்தை இலக்கியப் பிரிவில் வழங்கப்படும் பால புரஸ்கார் விருது இந்த ஆண்டு கவிஞர் மு.முருகேஷுக்கு வழங்கப்படுகிறது.

நாட்டின் 24 மொழிகளில் இலக்கியத்தில் சிறந்த பங்களிப்பு செய்துவரும் படைப்பாளிகளுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் சாகித்ய அகாடமி விருதுகளை வழங்கி கவுரவித்து வருகிறது. 2021–ம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெறும் எழுத்தாளர்களின் பட்டியலை மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த சிறுகதை எழுத்தாளர் அம்பைக்கு இந்த ஆண்டு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. அம்பை எழுதிய 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' என்ற சிறுகதை தொகுப்புக்காக இந்த விருது வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழில் பெண்ணியம் சார்ந்து படைப்புகளை எழுதி வருபவர்களில் முக்கியமானவர் அம்பை. தமிழில் இயங்கிவரும் எத்தனையோ பெண் படைப்பாளிகள் மத்தியில் சமரசமில்லாத பெண்ணியக் கோட்பாட்டைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். தனது படைப்புகளின் மூலம் பெண்ணியம் சார்ந்த வலிமிகுந்த உணர்வுகளை கூர்மையோடும் அழகியலோடும் வெளிப்படுத்திய வகையில் அம்பையே முதல் இடத்திலும் முன்னோடியாகவும் நிற்கிறார். அவரது 'அம்மா ஒரு கொலை செய்தாள்', 'காட்டில் ஒரு மான்', 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை', 'சிறகுகள் முறியும்' போன்ற படைப்புகள் வாழ்க்கையில் பெண்ணுக்கான இடத்தையும்

வெளியில் சொல்ல இயலாத மன இயல்புகளையும் ஆழ்ந்த சிரத்தையோடு வெளிப்படுத்தியுள்ளன.

அம்பை, மு.முருகேஷ் நூல்கள்விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அம்பையின் நூல் 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' அம்பையின் ஏழாவது சிறுகதைத் தொகுப்பாகும். இந்நூலை காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

பால புரஸ்கார் விருது: ஜப்பானியக் கவிதை வடிவமான ஹைக்கூ தளத்தில் நீண்டகாலமாக இயங்கி தனக்கென்று ஒரு இடத்தைத் தக்கவைத்துக்கொண்டிருப்பவர் கவிஞர் மு.முருகேஷ். பின்னர் சிறுவர்களுக்கான நூல்களைப் படைப்பதிலும் ஈடுபடத் தொடங்கினார்.

'பூவின் நிழல்' உள்ளிட்ட 8 கவிதை நூல்களும், 'விரல் நுனியில் வானம்' எனத் தொடங்கி 'குக்கூவென...' வரை 11 ஹைக்கூ நூல்களையும், 'இருளில் மறையும் நிழல்கள்' என்ற சிறுகதை நூலையும் முருகேஷ் படைத்துள்ளார். இதுமட்டுமின்றி, 'பெரிய வயிறு குருவி' தொடங்கி 'சின்னச் சிறகுகளால் வானம் அளப்போம்' வரை 18 குழந்தைகளுக்கான நூல்களைப் படைத்துள்ளார். மேலும் பிற நூல்கள் வரிசையில் 20 என ஏராளமான நூல்களின் ஆசிரியராக முருகேஷ் திகழ்கிறார்.

மு.முருகேஷ், 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' என்ற குழந்தை இலக்கிய நூலுக்காக இம்முறை பால புரஸ்கார் விருது பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

---

3. திருப்புமுனை தினம்! | இந்திய விடுதலைப் போராட்டத்தின் திருப்புமுனை தினம் குறித்த தலையங்கம்

பல முக்கியமான வரலாற்று நிகழ்வுகளை நினைவுகூர்வதன் மூலம்தான் நமது இளைய தலைமுறையினருக்கு தேசப்பற்றையும் தேசிய உணர்வையும் ஊட்ட முடியும். இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தின் பல நிகழ்வுகள், சுதந்திர இந்தியாவில் சரித்திரப் புத்தகங்களுடன் நின்றுவிடுகின்றன. பள்ளிக்கூடங்களில்கூட அவை குறித்த பதிவுகள் இல்லாமல் இருப்பது பெரும் அவலம்.

இன்றைய டிசம்பர் 31-ம் தேதிக்கு, இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிக முக்கியமான இடம் உண்டு என்பது பலருக்கும் தெரிந்திருக்காது. அப்படியே தெரிந்திருந்தாலும் அவர்கள் அதை அநேகமாக மறந்துபோயிருப்பார்கள்.

இந்தியா விடுதலை பெற்ற ஆகஸ்ட் 15-ஆம் தேதிக்கு இருப்பது போன்ற முக்கியத்துவம் டிசம்பர் 31-ஆம் தேதிக்கும் உண்டு. உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஆழ்ந்த அந்த நாளை, வரலாற்று ஆய்வாளர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தின் திருப்புமுனை தினமாகவே கருதுவார்கள்.

1929 டிசம்பர் 31-ம் தேதி லாகூர் ராவி நதிக்கரையில் பெரும்திரளாகக்கூடிய தொண்டர் கூட்டத்துக்கு நடுவில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட இருந்த பண்டித ஜவாஹர்லால் நேரு மூவர்ணக் கொடியை ஏற்றிய நிகழ்வு மறந்து விடக்கூடியதா என்ன? அதற்கு முன்பும் பின்பும் நடந்த சம்பவங்களின் நீட்சியாகத்தான் 1947 ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தை நாம் பார்க்க வேண்டும்.

1927-இல் இந்திய அரசியல் கட்சிகளை கலந்தாலோசிக்காமல் பிரிட்டிஷ் காலனிய அரசு ஜான் சைமன் குழுவை அமைத்தது. அந்த சைமன் குழுவுக்கு எதிராக இந்தியா முழுவதும் மக்கள் பெரும் திரளாக எதிர்ப்பு தெரிவித்தனர். அந்தப் போராட்டத்தின்போது லாலா லஜபதி ராய் மீது போலீஸ் தடியடி நடத்தியதில் அவர் பலத்த காயமடைந்தது மக்களின் ஆத்திரத்தை மேலும் அதிகரித்தது.

இர்வின் பிரபு இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவதாக அறிவித்தார். அதை இந்தியத் தலைவர்கள் பலர் வரவேற்றனர். ஆனால் பிரிட்டனில் அதற்கு எதிர்ப்பு அதிகரித்ததால் தனது முடிவை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் அவருக்கு ஏற்பட்டது.

இதற்கிடையில் 'முழுமையான சுதந்திரம்' என்கிற அறைகூவலை பகத் சிங் விடுத்திருந்தார். பண்டித நேருவும், நேதாஜி சுபாஷ் சந்திர போஸும் அதை ஆதரித்தனர். லாகூரில் கூட இருந்த காங்கிரஸ் மாநாட்டில் பூர்ண சுதந்திரம் கோரிக்கையை நிறைவேற்றுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டுக்கு லாகூர் நகரம் தயாராகிக் கொண்டிருந்தது. அப்போது லாகூரிலுள்ள பார்ஸ்டல் சிறையில் பகத் சிங், ராஜ குரு, சுக தேவ் ஆகியோர் அடைக்கப்பட்டிருந்தனர். லாலா லஜபதி ராயை தாக்கியதற்கு பழிவாங்கும் நோக்கில் நடத்திய கொலைக்காக அவர்கள் மரண தண்டனை கைதிகளாக அடைக்கப்பட்டிருந்தனர். 1929 டிசம்பர் மாதம் அதே பார்ஸ்டல் சிறையில் இன்னும் பல விடுதலைப் போராளிகளும் அடைக்கப்பட்டிருந்தனர்.

சிறையில் இருந்த விடுதலைப் போராளிகள் லாகூர் மாநாட்டில் நிறைவேற்றப்பட இருக்கும் பரிபூரண சுதந்திரம் தீர்மானத்தால் உற்சாகம் அடைந்திருந்தனர். கடுமையான தடையுத்தரவுகளையும் மீறி லாகூர் நகரம் காங்கிரஸ் மாநாட்டுக்காகவும், அதில் நிறைவேற்றப்பட இருக்கும் பூர்ண ஸ்வராஜ் தீர்மானத்தை ஆதரித்தும் மகிழ்ச்சியில் திளைத்திருந்ததாக பல வரலாற்று ஆய்வாளர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

டிசம்பர் 30 நள்ளிரவில், ராவி நதிக்கரையில் ஜவாஹர்லால் நேரு மூவர்ணக் கொடியை ஏற்றுவதாக இருக்கிறார் என்கிற செய்தியும், அங்கிருந்தபடி பூர்ண ஸ்சுவராஜ் கோஷத்தை அவர் முன்வைப்பார் என்கிற தகவலும் பார்ஸ்டல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த விடுதலைப் போராட்ட போராளிகளை எட்டியதும் அவர்கள் ஒரு முடிவெடுத்தனர். தண்டனைக் கைதி ஒருவர் மூலம் பகத் சிங்கிடம் தொடர்பு கொண்டார் ஒரு போராளி. அன்று நள்ளிரவில் ஜவாஹர்லால் நேரு ராவி நதிக்கரையில் மூவர்ணக் கொடியை ஏற்றும்போது பார்ஸ்டல் சிறைச்சாலையில் உள்ள விடுதலைப் போராளிகள் அனைவரும் அதை வரவேற்றுக் கொண்டாட வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை பகத் சிங்கும் வரவேற்றார். சிறைச்சாலையில் இருந்த போராளிகள் அனைவருக்கும் தகவல் பரவியது.

நள்ளிரவு 12 மணி, ராவி நதிக்கரையில் பெருந்திரளான மக்கள் கூட்டத்துக்கு நடுவே காங்கிரஸ் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட இருந்த ஜவாஹர்லால் நேரு மூவர்ணக் கொடியை ஏற்றினார். அதே நேரத்தில் பார்ஸ்டல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த அத்தனை விடுதலைப் போராளிகளும் ஒரே குரலில் "வந்தே மாதரம், வந்தே மாதரம்' என்று முழங்கத் தொடங்கினர். அங்கிருந்த காவலர்கள் அவர்களை அமைதியாக இருக்கும்படி கெஞ்சிப் பார்த்தும் விண்ணைப் பிளக்கும் அந்த கோஷம் அடுத்த அரை மணி நேரத்துக்கு ஒலித்தது.

ஆச்சர்யம் அதுவல்ல. லாகூர் பார்ஸ்டல் சிறைச்சாலையைப் போலவே, மேற்கு வங்கத்து அலிப்பூர் சிறைச்சாலையிலும், இந்தியாவின் தென்கோடியிலுள்ள கண்ணனூர் சிறையிலும், ஏனைய பல சிறைகளிலும் 1929 டிசம்பர் 31–ம் தேதி அதேபோல வந்தே மாதரம் கோஷம் எழுப்பப்பட்டதே, எப்படி? யார் சொல்லி அவர்களுக்குத் தகவல் போனது?

இப்போதுபோல தகவல் தொடர்புகள் இல்லாத, ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட அந்த காலத்தில் விடுதலை வேட்கையும் தேசிய உணர்வும் அவர்களை இணைத்திருக்க வேண்டும்.

மகாகவி பாரதி கூறிய,

'முப்பது கோடி முகம்உடையாள் – உயிர்

மொய்ம்புற ஒன்று உடையாள் – இவள்

செப்பு மொழி பதினெட்டுடையாள், எனில்

சிந்தனை ஒன்று உடையாள்'

என்பதன் பொருள் விளங்குகிறது!

---

4. பிரமோஸ் ஏவுகணை விற்பனை: இந்தியா–பிலிப்பின்ஸ் விரைவில் ஒப்பந்தம்

பிலிப்பின்ஸ் நாட்டுக்கு அதிநவீன பிரமோஸ் ஏவுகணைகளைத் தயாரித்து வழங்குவதற்காக, அந்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் இடையே விரைவில் ஒப்பந்தம் இறுதியாகவுள்ளது.

இந்த ஒப்பந்தம், இந்தியா–பிலிப்பின்ஸ் இடையேயான உறவில் மிகப்பெரிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

தென்சீனக் கடலில் ஆதிக்கம் செலுத்தும் வரும் சீனாவை எதிர்கொள்வதற்காக பிலிப்பின்ஸ் அரசு தனது கடற்படையின் பலத்தை அதிகரிக்க முடிவு செய்துள்ளது. இதற்காக, இந்தியாவிடம் இருந்து சூப்பர்சானிக் வகை பிரமோஸ் ஏவுகணைகளை அந்நாட்டு அரசு கொள்முதல் செய்யவுள்ளது.

இதுகுறித்து தகவலறிந்த வட்டாரங்கள் வியாழக்கிழமை தெரிவித்ததாவது: பிரமோஸ் ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வதற்காக, பிலிப்பின்ஸ் அரசின் பட்ஜெட் மேலாண்மைத் துறை சிறப்பு நிதியாக ரூ.189 கோடி, ரூ.224 கோடி ஆகியவற்றைத் தனித்தனியே ஒதுக்கீடு செய்துள்ளது. இது, பிலிப்பின்ஸ் கடற்படைக்குத் தேவையான தளவாடங்களைக் கொள்முதல் செய்வதற்கான முதல்கட்ட நிதியாக இருக்கும்.

ஏவுகணை கொள்முதல் தொடர்பாக, இரு நாட்டு அரசுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. அடுத்த சில வாரங்களில் அதிகாரபூர்வமாக ஒப்பந்தம் இறுதியாகும் என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய– ரஷிய கூட்டு நிறுவனமான பிரமோஸ் ஏரோஸ்பேஸ், சூப்பர்சானிக் வகை பிரமோஸ் ஏவுகணைகளைத் தயாரித்து வருகிறது. ஒலியைவிட கிட்டத்தட்ட 3 மடங்கு வேகத்தில் செல்லும் இந்த ஏவுகணைகளை கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள் மற்றும் நிலப்பரப்பில் இருந்து செலுத்த முடியும்.

---

5. கனடா: 3 இந்திய வம்சாவளியினருக்கு தேசிய விருது

கனடாவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 3 பேர் அந்த நாட்டின் இரண்டாவது மிகப் பெரிய தேசிய விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:

இந்திய வம்சவளியைச் சேர்ந்த விஞ்ஞானி வைகுண்டம் ஐயர் லக்ஷ்மணன், தொழிலதிபர் பாப் சிங் தில்லான், மருத்துவர் பிரதீப் மொர்ச்சண்ட் ஆகியோர் கனடாவின் இரண்டாவது பெரிய தேசிய விருதான 'ஆர்டர் ஆஃப் கனடா' வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டுக்கான விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 135 பேரின் பட்டியலில் அவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

தங்களது துறைகளில் அவர்கள் ஆற்றி வரும் சாதனைகள், ஆர்ப்பணிப்பு உணர்வு, நாட்டு முன்னேற்றத்துக்கு அளிக்கும் பங்களிப்பு, இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே பாலமாகச் செயல்படுவது போன்ற காரணங்களுக்காக அவர்களுக்கு அந்த விருது வழங்கப்படுவதாக தேர்வுக் குழு தெரிவித்துள்ளது.

இவர்களில் வைகுண்டம் ஐயர் லக்ஷ்மணன் புகழ்பெற்ற விஞ்ஞானியும் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி வருபவரும் ஆவார்.

நவ்ஜீத் சிங் தில்லான் என்றும் அழைக்கப்படும் பிரபல மனைவணிக தொழிலதிபர் பாப் சிங் தில்லான், சமூக சேவைகளுக்கு நன்கொடைகள் அளித்து வருகிறார்.

குழந்தைகள் மருத்துவத்தில் பிரதீப் மொர்ச்சண்ட் மிகவும் பிரபலமாக செயல்பட்டு வருகிறார் என்று பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

1. சமீப செய்திகளில் இடம்பெற்ற 'ரேணுகாஜி அணை திட்டம்' அமையவுள்ள மாநிலம் எது?

அ) மகாராஷ்டிரா



ஆ) ஹிமாச்சல பிரதேசம் ☑

இ) குஜராத்

ஈ) பீகார்

✓ ₹6,700 கோடி மதிப்பிலான 'ரேணுகாஜி அணை திட்ட'த்திற்கு ஹிமாச்சல பிரதேசத்தின் மண்டியிலிருந்து பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். கிரி ஆற்றின் திட்டம் நிறைவேறியதும், 40 MW மின்னுற்பத்தி நிலையத்தில் 200 மில்லியன் அலகு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ அணையின் நீர்த்தேக்கக் கொள்ளளவு 498 மில்லியன் கன மீட்டராக இருக்கும், இது, தில்லியின் குடிநீர்த் தேவையில் 40 சதவீதத்தை பூர்த்தி செய்யும்.

---

2. எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ், 'போதைப்பொருள் தடுப்புப் பிரிவு' செயல்படுகிறது?

அ) மத்திய நிதி அமைச்சகம்

ஆ) மத்திய உள்துறை அமைச்சகம் ☑

இ) மத்திய வெளியுறவு அமைச்சகம்

ஈ) மத்திய பாதுகாப்பு அமைச்சகம்

✓ நாட்டிலிருந்து போதைப்பொருளை ஒழித்தற்கு அனைத்து மாநிலங்களும் அந்தந்த அதிகார வரம்புகளில் பிரத்யேக போதைப்பொருள் தடுப்பு பணிக்குழுவை உருவாக்கி அறிவிக்குமாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கேட்டுக்கொண்டுள்ளார். அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, இப்பணிக்குழு மாநில அளவில் நார்கோ ஒருங்கிணைப்பு மைய செயலகமாக செயல்பட முடியும்.

---

3. சாஹிப்சாதா திவாஸ் கொண்டாடப்படும் இந்தியாவின் முதல் மாநிலம் எது?

அ) உத்தர பிரதேசம் ☑



ஆ) மத்திய பிரதேசம்

இ) அஸ்ஸாம்

ஈ) நாகாலாந்து

✓ உத்தரபிரதேச மாநிலம் சமீபத்தில் குருகோவிந்த் சிங்கின் 4 மகன்களின் (சாகிப்சாதாஸ்) தியாகத்தின் நினைவாக சாகிப்சாதா நாளை அனுசரித்தது. சீக்கிய குருக்களின் தியாகம் பள்ளிப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்த 2020ஆம் ஆண்டு முதல் சாகிப்சாதா திவாஸ் அனுசரிக்கப் –படும் இந்தியாவின் முதல் மாநிலமாக உபி ஆனது.

---

4. இந்திராவதி புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடமெது?

அ) கர்நாடகா



ஆ) சத்தீஸ்கர் ☑

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்

✓ சத்தீஸ்கர் மாநிலத்தில் இந்திராவதி புலிகள் காப்பகம் சுமார் 2799.08 சதுர கிமீ பரப்பளவில் அமைந்துள்ளது.

✓ சமீபத்தில், 400 சகிமீட்டருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட இந்தக் காப்பகத்தில் புலிகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. சமீபத்திய தரவுகளின்படி, அக்காப்பகத்தில் 3 புலிகள் இருந்தன.

5.சமீப செய்திகளில் இடம்பெற்ற எட்வர்ட் ஓ வில்சன் யார்?

அ) உயிரியலாளர் ☑



ஆ) விண்வெளி வீரர்

இ) கிரிக்கெட் வீரர்

ஈ) நடனமாடுபவர்

✓ 'எறும்பு மனிதன்' என்று அன்புடன் அழைக்கப்படும் எட்வர்ட் ஓ வில்சன், ஹார்வர்ட் உயிரியலாளர் மற்றும் பூச்சியியல் வல்லுநர் ஆவார். அவர் சமீபத்தில் தனது 92 ஆம் வயதில் இறந்தார். உயிரியலாளரான இவர் இரண்டு முறை புலிட்சர் பரிசு பெற்ற எழுத்தாளர் ஆவார். 1975'இல் வெளியிடப்பட்ட "Sociobiology: The New Synthesis" என்ற நூலிற்காக உலகம் முழுவதும் கவனத்தைப் பெற்றார்.

---

6. எத்தனை ஐரோப்பிய நாடுகளைச் சாராத நாடுகள் Europol'இல் உறுப்பினராக உள்ளன?

அ) 0

ஆ) 10 ☑

இ) 20

ஈ) 30

✓ தென் கொரியா அண்மையில் ஐரோப்பாவிற்கு வெளியே யூரோபோலில் இணைந்த 10ஆவது நாடாக மாறியுள்ளது. இது பயங்கரவாதம் மற்றும் பிற சர்வதேச குற்றங்களை எதிர்த்துப் போராடும் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) சட்ட அமலாக்க ஒத்துழைப்பு நிறுவனமாகும்.

✓ தென் கொரியாவின் தேசிய காவல்துறை முகமை (NPA) இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன்மூலம் யூரோபோலுடன் இணைந்தது. அது 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

---

7. அண்மையில் ஒடிஸா கடற்கரையில் பரிசோதனை செய்யப்பட்ட 'பிரலே' என்றால் என்ன?

அ) குறுகிய தூரம் செல்லும் எறிகணை ☑



ஆ) கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை

இ) வான்வழி ஏவப்படும் எறிகணை

ஈ) கப்பவழி ஏவப்படும் எறிகணை

✓ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (DRDO) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தரையிலிருந்து செலுத்தக்கூடிய 'பிரலே' எறிகணை, ஒடிஸா கடற்கரைப் பகுதியில் உள்ள Dr ஏ பி ஜே அப்துல் கலாம் தீவிலிருந்து வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

✓ இந்த ஏவுகணை திட எரிபொருள் ராக்கெட் மோட்டார் மற்றும் பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள் அடிப்படையில் இயங்கக் கூடியது. இது 150 முதல் 500 கிமீ தொலைவு

வரை பாய்ந்துசென்று தாக்கக்கூடியது என்பதோடு நடமா –டும் சாதனத்திலிருந்து செலுத்தக் கூடியதாகும்.

---

8. போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐநா அலுவலகத்தின்படி, அபின் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள நாடு எது?



அ) ஆப்கானிஸ்தான் ☑

ஆ) இலங்கை

இ) இஸ்ரேல்

ஈ) ஈரான்

✓ போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐநா அலுவலகத்தின்படி, அபின் உற்பத்தியில் ஆப்கானிசுதான் முதலிடத்தில் உள்ளது.

✓ நடப்பு 2021ஆம் ஆண்டில், உலகளவில் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்பட்ட ஹெராயினில் 90 சதவீதத்துக்கும் அதிகமானது ஆப்கானிஸ்தானுடையதாகும். இதன்மூலம் 2001 முதல், உலகின் மிகப்பெரிய சட்டவிரோத போதைப் பொருள் உற்பத்தியாளராக ஆப்கானிஸ்தான் உள்ளது.

---

9. கலகக்காரர்களிடமிருந்தே சேதமடைடைந்த சொத்துக் –களுக்கான பணத்தை வசூலிக்கும் மசோதாவை சமீபத்தில் நிறைவேற்றிய மாநிலம் எது?



அ) குஜராத்

ஆ) மத்திய பிரதேசம் ☑

இ) உத்தர பிரதேசம்

ஈ) பஞ்சாப்

✓ கலகக்காரர்களிடமிருந்தே சேதமடைடைந்த சொத்துக்க –ளுக்கான பணத்தை வசூலிக்கும் மசோதாவை மத்திய பிரதேச மாநில அரசு சமீபத்தில் நிறைவேற்றியது.

✓ கலவரங்கள் அல்லது மக்கள் போராட்டங்களின்போது ஏற்படும் சொத்துசேதம் தொடர்பான வழக்கை விசாரிக்கும் தீர்ப்பாயம் அமைப்பதற்கும் இம்மசோதா வகை செய்கிறது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) இடஒதுக்கீடு இல்லாமல் பஞ்சாயத்து தேர்தல் நடத்தப்படாது என்று அம்மாநில சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

10. "ரேடியோ உஜாலா பஞ்சாப்" என்பது எந்த மத்திய சிறையின் பண்பலையாகும்?



அ) பாட்டியாலா மத்திய சிறை

ஆ) லூதியானா மத்திய சிறை ☑

இ) அமிர்தசரஸ் மத்திய சிறை

ஈ) ஜலந்தர் மத்திய சிறை

✓ பஞ்சாபின் லூதியானா மத்திய சிறை தற்போது தனது சொந்த வானொலி அலைவரிசையான "ரேடியோ உஜாலா பஞ்சாப்பைத்" தொடங்கியுள்ளது. இச்சிறையில் உள்ள சிறைவாசிகள் மட்டுமே இந்த ரேடியோ சேனலை நடத்துவார்கள். மேலும் வானொலி நிகழ்ச்சி தொகுப்பாளர் –களாக பணிபுரியும் சிறைவாசிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

✓ இந்தத் திட்டம் கைதிகளுக்கு மறுவாழ்வு மற்றும் நலன்புரி வாய்ப்புகளை வழங்குவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 2021–இல் இந்தியாவில் 126 புலிகள் உயிரிழப்பு

இந்தியாவில் நடப்பு ஆண்டில் 126 புலிகள் உயிரிழந்துள்ளதாக தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடா்பாக அந்த ஆணைய அதிகாரிகள் மேலும் கூறியுள்ளதாவது:

கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிக எண்ணிக்கையில் புலிகள் உயிரிழந்துள்ளன. இதற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. வனப் பகுதிகளில் கண்காணிப்பை அதிகரிப்பது, புலிகளை வேட்டையாடுபவா்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்வது உள்ளிட்டவை மூலம் புலிகளைக் காக்க கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மத்திய பிரதேசத்தில் இந்த ஆண்டில் அதிகபட்சமாக 44 புலிகள் உயிரிழந்துள்ளன. இதில் விஷம் வைத்துக் கொல்லப்பட்டது போன்ற சம்பவங்களும் நிகழ்ந்ததாக குற்றச்சாட்டு உள்ளது. ஆனால், அதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. எனினும், இந்தக் குற்றச்சாட்டு தொடா்பாக ஆய்வு நடைபெறுகிறது.

புலிகள் உயிரிழப்பு தொடா்பாக சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையமும் தனித்தனியாக விசாரணை நடத்துவது வழக்கம். நாட்டில் உள்ள மொத்த புலிகளில் 30 சதவீதம் புலிகள் சரணாலயங்களுக்கு வெளியே உள்ளன. இதனால், அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்வதில் பல்வேறு சிரமங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மத்திய பிரதேசத்துக்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரத்தில் 26 புலிகளும், கா்நாடகத்தில் 16 புலிகளும் இந்த ஆண்டில் உயிரிழந்தன என்று அதிகாரிகள் தெரிவித்தனா்.

---

2. உருக்கு துறை செயலராக சஞ்சய் குமார் சிங் பொறுப்பேற்பு

மத்திய உருக்குத் துறை செயலராக சஞ்சய் குமாா் சிங் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளாா்.

இதுகுறித்து மத்திய உருக்குத் துறை அமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

உருக்கு அமைச்சக துறையின்புதிய செயலராக சஞ்சய் குமாா் சிங் இன்று (டிச.30) பொறுப்பேற்றுக் கொண்டாா். இவா் இதற்கு முன்பாக, நிா்வாகம் மறுசீரமைப்பு & பொது குறைதீா், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியா் நலத் துறையின் செயலராக பொறுப்பு வகித்தவா்.

மத்திய பிரதேசத்தைச் சோ'ந்த சஞ்சய் குமார் சிங், 1987–ஆம் ஆண்டு ஐஏஎஸ் பணிக்கு தோ'வானவர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. தமிழ்த்தாய் வாழ்த்து இனி அரசின் மாநில பாடல்!

அப்படி தமிழர்களின் சுவாசமாக திகழும் ஒப்புயர்வற்ற உயர்தனி செம்மொழியாம் இலக்கண, இலக்கிய வளங்கள் நிறைந்த தமிழ் மொழியை தாயாக போற்றும் தமிழர்கள், உள்ளம் மகிழ தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை பாடுவது வழக்கம்.

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தை கெழிலொழுகும், சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில், தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும், தக்கசிறு பிறைநுதலும் தரித்தனறும் திலகமுமே, அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற, எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே, தமிழணங்கே, உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து, வாழ்த்துதுமே, வாழ்த்துதுமே, வாழ்த்துதுமே, " என்ற பாடலை பாடும்போது தமிழர்களின் நாடி நரம்புகளில் எல்லாம் தமிழ் உணர்வுகள் தழைக்கும்.

இந்த தமிழ்த்தாய் வாழ்த்துக்கு 100 ஆண்டுகளுக்கு மேல் வரலாறு உண்டு. 1913–ம் ஆண்டு கரந்தை தமிழ்ச்சங்கத்தின் 3–ம் ஆண்டு அறிக்கையில் நீராரும் கடலுடுத்த என்ற தமிழ்த்தாய் வாழ்த்து பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது. 1914–ம் ஆண்டு முதல், கரந்தை தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு விழாக்களில் எந்த நிகழ்ச்சிகள் என்றாலும் சரி தொடக்கத்தில் இந்த பாடலை பாடியே மகிழ்ந்தார்கள். 1967–ல் மறைந்த பேரறிஞர் அண்ணா முதல்–அமைச்சராக பொறுப்பு ஏற்ற நேரத்தில், கரந்தை தமிழ்ச்சங்க நிர்வாகிகள் அண்ணாவிடம் இதை மாநில பாடலாக அறிவிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அண்ணா இதுகுறித்து பரிசீலனை செய்து ஆணை பிறப்பிக்கும் முன்பே மறைந்தார். தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மறைந்த முதல்–அமைச்சர் கருணாநிதி பதவி ஏற்றவுடன், 1970–ம் ஆண்டு நவம்பர் 23–ந்தேதி இந்த பாடலை அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும் பாடும் வாழ்த்து பாடலாக அமையும் என்று கூறி, தொடர்ந்து மெல்லிசை மன்னர் விஸ்வநாதன் இசை அமைக்க, பின்னணி பாடகர்கள் டி.எம்.சவுந்தரராஜன், பி.சுசீலா ஆகியோர் பாடும் 'நீராரும் கடலுடுத்த' என்ற தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் இசை தட்டுகளாக வெளியிடப்பட்டு, அரசு விழாக்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய இந்த பாடல் அன்று முதல் எல்லா அரசு நிகழ்ச்சிகளிலும் இசை தட்டுகள் மூலம் ஒலிபரப்பப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் சமீபத்தில் ஐகோர்ட்டில் தொடரப்பட்ட ஒரு வழக்கில் நீதிபதி, "தமிழ்த்தாய் வாழ்த்து ஒரு இறைவணக்க பாடல் தான். தேசிய கீதம் அல்ல. இந்த பாடலை பாடும்போது அனைவரும் எழுந்து நிற்கவேண்டும் என்று எந்தவித சட்டமோ, நிர்வாக உத்தரவோ இல்லை" என்று கூறினார். இந்த உத்தரவு வந்த உடனேயே, தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும்போது அனைவரும் எழுந்து நிற்கவேண்டும் என்ற வகையில், ஒரு அரசாணை வெளியிட முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். இந்த உத்தரவில், "நீராரும் கடலுடுத்த" தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் தமிழக அரசின் மாநில பாடலாக அறிவிக்கப்படுகிறது. 55 வினாடிகளில் முல்லைப்பாணியில் (மோகன ராகத்தில்) இந்த பாடல் பாடப்படவேண்டும்.

தமிழ்நாட்டில் அமைந்திருக்கும் அனைத்து கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படவேண்டும். இதில் முக்கியமாக, இந்த வாழ்த்து பாடலை இசை தட்டுக்கள் கொண்டு இசைக்கப்படுவதை தவிர்த்து, பயிற்சி பெற்றவர்களால் வாய்ப்பாட்டாக பாடவேண்டும். இந்த பாடல் பாடப்படும்போது அனைவரும் தவறாமல் எழுந்து நிற்கவேண்டும் என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணாவிடம் வைத்த கோரிக்கை மு.க.ஸ்டாலினால் நிறைவேற்றப்பட்டுள்ளது மிகவும் வாழ்த்துக்குரியது. வரவேற்புக்குரியது. தமிழ் மக்கள் நெஞ்சில் தாய்மொழி உணர்வை தட்டி எழுப்ப இந்த உத்தரவு வழிதிறந்துவிட்டது. இந்த பாடலை ஏதோ ஓரிருவர் மட்டுமல்லாமல் அனைத்து விழாக்களிலும் கலந்துகொள்பவர்கள் ஒருசேர பாடினால்தான் போற்றுதலுக்குரியதாக இருக்கும்.

---

4. புத்தாண்டில் முதன்முதலாக சிறிய ரக எஸ்.எஸ்.எல்.வி. ராக்கெட்டை விண்ணில் செலுத்துகிறது, இஸ்ரோ

கொரோனா வைரஸ் தொற்றால் நடப்பு 2021–ம் ஆண்டில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம், இஸ்ரோவின் விண்வெளி திட்டங்களும் பாதித்துள்ளன. இதன் காரணமாக புத்தாண்டில் புதிய வேகம் காட்டுவதில் இஸ்ரோ முழு முனைப்பாக உள்ளது.

விண்வெளிக்கு வீரர்களை அனுப்பி வைக்கும் ககன்யான் திட்டம், புத்தாண்டில் குறிப்பிடத்தக்க திட்டமாக உள்ளது. முற்றிலும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விண்கலத்தில் விண்வெளிக்கு வீரர்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வீரர்களை அனுப்புவதற்கு முன்பாக புத்தாண்டில் ஜூன் மாதத்துக்கு பின்னும், ஆண்டின் இறுதியிலும் என 2 முறை ஆள் இல்லாத விண்கலத்தை விண்ணில் செலுத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

அதன்பின்னர், விண்வெளி வீரர்கள் (இந்திய விமானப்படையின் 3 அதிகாரிகள்) விண்கலம் மூலம் 2023–ம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இதன் மூலம் புத்தாண்டில் ககன்யான் திட்டம் சிறகுகளை விரிக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. .

ககன்யான் திட்டப்பணிக்காக 4 இந்திய விமானப்படை அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது பயிற்சியில் உள்ளனர். அவர்களைப் பற்றிய விவரங்கள் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. இந்திய ஏவுகணை வாகனத்தில் விண்வெளி வீரர்களை குறைந்த புவி சுற்றுப்பாதைக்கு அனுப்பி அவர்களைப் பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பக்கொண்டு வரும் திறனை

அடைவதுதான் ககன்யான் கனவு திட்டத்தின் நோக்கம் ஆகும்.

சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்–1 என்ற திட்டத்தை இஸ்ரோ கையில் வைத்துள்ளது. கொரோனாவால் தாமதமாகி வந்த இந்த திட்டமும் புத்தாண்டில் தொடங்கப்படும். ஆதித்யா–எல்1 திட்டம், பூமியிலிருந்து 15 லட்சம் கிலோ மீட்டர் தொலைவில் உள்ள லாக்ரேஞ்ச் பாயிண்ட்– 1 (எல்–1) –ஐச் சுற்றி ஒரு ஒளிவட்டப் பாதையில் செருகப்படும். இது இஸ்ரோவின் 2–வது உயர்நிலை விண்வெளி இலக்குப் பணியாகும்.

புத்தாண்டின் 3–வது காலாண்டு அதாவது செப்டம்பர் மாதத்திற்கு பிறகு சந்திரயான்–3 திட்டத்தை இஸ்ரோ தொடங்க இருக்கிறது. ஏற்கனவே சந்திரயான் 1 திட்டத்தின் மூலம் நிலவின் மேற்பரப்பில் நீர் இருப்பதற்கான ஆதாரங்களைக் கண்டறிவது உட்பட முக்கிய கண்டுபிடிப்புகள் அரங்கேறின.

சந்திரயான் 2 திட்டத்தில், நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் கருவியான லேண்டர் மற்றும் ரோவர் விபத்துக்குள்ளான நிலையில், ஆர்பிட்டர் மட்டும் நிலவின் மேல்பரப்பில் சுற்றி வட்டமிட்டு ஆய்வு செய்து வருகிறது. அதை சந்திரயான்–3 திட்டத்தில் பயன்படுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. அதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு உள்ளனர். இது சந்திரயான்–2 போன்ற கட்டமைப்பு தான், ஆனால் அதில் ஆர்பிட்டர் இருக்காது. சந்திரயான்–2–ன் போது ஏவப்பட்ட ஆர்பிட்டர் சந்திரயான்–3–க்கு பயன்படுத்தப்படும். சந்திரயான்–3 திட்டம் 2022–ம் ஆண்டு செயல்படுத்தப்படும்.

குறைந்த புவி சுற்றுப்பாதைக்கு செயற்கைகோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்துவதில் முன்னோடியாக விளங்கும் இஸ்ரோ, சிறிய செயற்கைகோள்களை எளிதாக விண்ணில் செலுத்துவதற்காக எஸ்.எஸ்.எல்.வி. என்ற சிறிய வகை ராக்கெட்டை உருவாக்கி வருகிறது.

இதனை புத்தாண்டின் முதல் காலாண்டில் விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. எஸ்.எஸ்.எல்.வி. வகை ராக்கெட்டை பொறுத்தவரையில் 500 கிலோ மீட்டர் தூர சுற்றுப்பாதையில் 500 கிலோகிராம் எடை கொண்ட செயற்கைகோளை சுமந்து செல்லும் திறன் கொண்டதாகும்.

நானோ மற்றும் மைக்ரோ செயற்கைகோள்களை சுமந்து செல்லும் வகையில், மூன்று நிலைகளுடன் அனைத்து திட வாகனமாக எஸ்.எஸ்.எல்.வி. ரக ராக்கெட்டை உருவாக்க ரூ.169 கோடி ஒதுக்கப்பட்டு பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. புத்தாண்டில் இஸ்ரோ புதிய சகாப்தங்களை படைக்கும்.

மேற்கண்ட தகவல்களை இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

---

5. பிரபல நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ஓய்வு அறிவிப்பு

பிரபல நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ராஸ் டெய்லர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

வரும் சனிக்கிழமை தொடங்கவுள்ள வங்கதேச அணிக்கு எதிரான நியூசிலாந்தின் டெஸ்ட் தொடருக்கு பிறகு டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாகவும், அடுத்த ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள ஆஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கு எதிரான நியூசிலாந்தின் ஒருநாள் தொடருக்கு பிறகு ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்துள்ளார்.

37 வயதாகும் ராஸ் டெய்லர் இதுவரை 445 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார். 18,074 ரன்கள் எடுத்த அவர் 40 சதங்களை விளாசியுள்ளார். மூன்று வகை சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலும் 100 ஆட்டங்களுக்கு மேல் விளையாடிய முதல் சர்வதேச வீரர் என்ற பெருமையையும் ராஸ் டெய்லர் பெற்றுள்ளார்.
